# THE VIVEKA CHINTAMANI

## A Monthly Tamil Magazine and Popular New Review

Devoted to the Diffusion of Practical Truth and Knowledge, to Educational and Social Topics and to the "Children's Educational Movement."

**Dealing with the Problems of Child Education, Social Service, Self-culture, and Ethics. Adapted for Use in Homes and Schools and approved by Authority as suitable for use in all the Elementary, Training and Secondary Schools.**

**God is Love : Knowledge is Power : AUM.**
**"Live and Learn"—"ஓதுவதொழியேல்."**
SATYAMEVA JAYATE.


**Vol. XXV.**

*(For the Tamil Year Pingala.)*

***April 1917-March 1918.***


# விவேகசிந்தாமணி

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

அறிவுடையாரெல்லாமுடையார் அறிவிலா
ரென்னுடையரேனுமிலர்.—திருக்குறள்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.—திருக்குறள்.


**25-ம் புத்தகம்.**

(பிங்களஇல)
**1917**ஆ எப்ரல்மீ முதல் **1918**ஆ மார்ச்சுமீ வரை.

PUBLISHED BY
**THE SECRETARY, DIFFUSION OF KNOWLEDGE AGENCY,**
**For The Lalita Publishing Co. (Sole Agents and Managers),**
**Lalitalaya, 19, Adam Street, Mylapore, Madras, S.**
**1917-1918.**



*All Rights Registered.*

**Back Vol (Unbound) Rs. 6 nett.**
**" (Calico Bound) Rs 7 nett.**
**Current Vol. if paid strictly in advance: Rs. 5 per Vol. or one month's credit at Rs 6 per Vol. nett.**

**The copyright of every article first published in this volume is vested solely in the Editor and registered in his name.**

162035
600 008

# TABLE OF CONTENTS.

## (Vol. XXV April 1917-March 1918.)

### No. 1. For APRIL 1917. (Tamil: CHITRA)

PAGE.

*Business "Terms" and General Notice to Subscribers* ... ... ... 1
1. *The Public Services Commission Report* ... ... ... ... 2 & 3
2. The Revolution in Russia ... ... ... ... ... 4
3. The Indian War Loan ... ... ... ... ... ... 8
4. Habits to be cultivated in Children ... ... ... ... ... 10
5. On the Ideals of Indian Women ... ... ... ... ... 13
6. Character Sketch : The Early Days and Training of H. M. Queen Victoria ... ... 15
7. Short Story : Kamalabai ... ... ... ... ... 19
8. Lessons in Civics ... ... ... ... ... ... 23
9. Children's Page : The Evils of Ambition ... ... ... ... ... 25
10. Health Notes ... ... ... ... ... ... 29
11. Events of the Month ... ... ... ... ... ... 30
12. Poem : Motherland ... ... ... ... ... ... 32

### 1917ளு ஏப்ரல்மீ 1-வது சஞ்சிகை. (சித்திரைமீ)

பக்கம்.

*சந்தா விவரம் : சந்தாதாரர்க்கு அறிக்கை* ... ... ... 1
1. பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் ரிபோர்ட்டு ... ... ... 2 & 3
2. ருஷியாவில் ராஜாங்கப்புரட்சி ... ... ... 4
3. இந்தியா யுத்தக்கடன் ... ... ... ... 8
4. பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்தவேண்டிய நடவடிக்கைகள் ... ... 10
5. இந்திய ஸ்திரீகளின் லக்ஷியங்கள் ... ... ... 13
6. குணவலி விளக்கம் : மாகஷிமைதங்கிய இந்திய சக்கிரவர்த்தினியாகிய விக்டோரியா மஹாராணியாரவர்களின் இளமைப் பருவமும் கல்விப் பயிற்சியும் ... ... 15
7. சிறு கதை : கமலாபாய் ... ... ... ... 19
8. நகரியல் முறை பாடங்கள் (Civics) ... ... ... 23
9. சிறுவர்க்கான பக்கம்: "பேராசை பெருங்கேடு" ... ... ... 25
10. சுகாதாரக் குறிப்புகள் ... ... ... ... 29
11. மாத விசேஷங்கள் ... ... ... ... 30
12. பாட்டு : தமிழகம் ... ... ... ... 32

### No. 2. For MAY 1917. (Tamil: VAIKASI)

*Business "Terms" and General Notice to Subscribers* ... ... ... .. 33
*Frontispiece: Sir Thomas Munro.*
1. "Hitch Your Wagon to a Star": Ideals for Young Men ... ... ... 34 & 35
2. A Plea for Instruction of the Sciences through the Media of Vernaculars ... ... 37
3. On the Characteristics of Teachers ... ... ... ... ... 39
4. Proverbs as Aids to Child-study ... ... ... ... ... 44
5. Character Sketch : Sir Thomas Munro (Continued) ... ... ... ... 49
6. On Debt ... ... ... ... ... ... 53
7. Poems: "Psalm of Life" and "Every Friend that Flatters Thee is not a Friend in Misery" ... 56
8. Travel and Description : Agra ... ... ... ... ... 57
9. Children's Page : Three Warnings ... ... ... ... ... 62



### 1917ளு மேமீ 2-வது சஞ்சிகை. (வைகாசிமீ)

*முகப்பு படம் : ஸர் தாமஸ் மன்ரோ.*
*சந்தா விவரம் : சந்தாதாரர்க்கு அறிக்கை* ... ... ... 33
1. "இலக்ஷியத்தில் கண்ணுயிரு": சிறுவர்க்கான இலக்ஷியங்கள் ... ... 34 & 35
2. சுதேச பாஷைகள் மூலமாக ஜனங்களுக்கு சாஸ்திர ஞானமுண்டாக்க வேண்டுமென்பதைப்பற்றி ... ... ... ... 37
3. உபாத்தியாயருக்கு இருக்கவேண்டிய இலக்ஷியங்கள் ... ... 39
4. பாலபோத சாதனம் : பழமொழி விளக்கம் ... ... ... 44
5. குணவலி விளக்கம் : ஸர் தாமஸ் மன்ரோ பதுமையும் அவர் ஜீவ்ய வரலாறும். (தொடரும்) 49
6. கடன் ... .. ... ... ... 53
7. பாட்டுகள் : கீர்த்தனம் "வாழ்வு" "கின்னைப் புகழ்பவன்." ... ... 56
8. யாத்திரை க்ஷேத்திரவர்ணனை : பிரயாகை ... ... ... 57
9. சிறுவர்க்கான பக்கம் : மூன்று எச்சரிக்கைகள் ... ... ... 62

### No. 3. For JUNE 1917. (Tamil: AUNI)

*Business "Terms" and General Notice to Subscribers* ... ... ... ... 65
1. *The Need "To be Inspired by Ideals Richly and Nobly Expressed."—"The Fetish of the School and the Ideal to be Aimed At." (A Teacher on our Educational System.)* ... 66 & 67
2. Advice to the Young ... ... ... ... ... ... 70
3. Aryan Morals in Kummi Songs ... ... ... ... ... 72
4. The Essence of Mahabharata ... ... ... ... ... 74
5. Gleanings for an Indian Kindergartner ... ... ... ... ... 81
6. Character Sketch : Sir Thomas Munro (Concluded) ... ... ... ... 84
7. On Debt ... ... ... ... ... ... 88
8. Lessons in Nature Study : Swallow ... ... ... ... ... 91
9. Poem :—Shiva and His Consort ... ... ... ... ... 94
10. Children's Page : Lakshmi and Saneeswara ... ... ... ... 95

### 1917ளு ஜூன்மீ 3-வது சஞ்சிகை. (ஆனிமீ)

*சந்தா விவரம் : சந்தாதாரர்க்கு அறிக்கை* ... ... ... 65
1. உயர் லக்ஷியமின்றி உத்தம லக்ஷணமில்லை : நமது வித்தியாப்பியாச முறையைப்பற்றி ஒரு போதகாசிரியர் அனுபவ சித்தாந்தம் ... ... ... 66 & 67
2. பாலர்க்கு ஹிதோபதேசம் ... ... ... ... 70
3. நீதிமார்க்க கும்மி ... ... ... ... 72
4. பாரத சாரம் ... ... ... ... 74
5. சிறு குழந்தைகளுக்குச் சொல்லும் சிறு கதைகள் ... ... ... 81
6. குணவலி விளக்கம் : ஸர் தாமஸ் மன்ரோ (முடிவு) ... ... ... 84
7. கடன் ... ... ... ... ... 88
8. பிரகிருதி வித்யாப்யஸம் : தூக்கணங்குருவி ... ... ... 91
9. பாட்டு : சிவனும் உமையும் ... ... ... ... 94
10. சிறுவர்க்கான பக்கம் : லக்ஷ்மியும் சனிபகவானும் ... ... ... 95

### No. 4. For JULY 1917. (Tamil: AUDI)

*Business "Terms" and General Notice to Subscribers* ... ... ... ... 97
1. The Fundamental Basis of Primary Education ... ... ... ... 98 & 99
2. On the First Teaching of Literature to Children ... ... ... ... 102
3. The Story of the Famous Chola King of Tiruvarur (*From a classic source of dramatisation—"Tiruvarur-Kuravanji"* ... ... ... ... 106
4. The Hindu Woman's Ideal ... ... ... ... ... 108
5. On Animal Intelligence (Continued) ... ... ... ... ... 109
6. The Merchant of Venice: In Easy Tamil Verse ... ... ... ... 113
7. Some Details of the Kindergarten Method ... ... ... ... 115
8. Death of Dadabhai Naoroji—India's Grand Old Man ... ... ... ... 117
9. On the Educational Needs of Women ... ... ... ... ... 120
10. The Goal of Man ... ... ... ... ... ... 123
11. Events of the Month ... ... ... ... ... ... 128
12. Extract: Patna University Bill ... ...

## 1917௵ ஜூலை௴ 4-வது சஞ்சிகை. (ஆடி௴)


சந்தா விவரம் : சந்தாதாரர்க்கு அறிக்கை ... ... ... 97
1. பிரதம வித்யாசிக்ஷை லக்ஷியம் ... ... ... ... 98 & 99
2. சிறுவர்களுக்குக் கற்பிக்கவேண்டிய பிரதம போதனுமுறை ... ... 102
3. "மனுநெறிகண்ட சோழன் கதை"—"திருவாரூர்க் குறவஞ்சி" ... ... 106
4. ஹிந்துமாதர் லக்ஷியம் ... ... ... ... 108
5. ஜீவராசிகளின் புத்திவலிமை (தொடரும்) ... ... .. 109
6. வெனீஸ் வர்த்தகன் சரித்திரக் கவிகள் ... ... ... 113
7. கிண்டர்கார்டனைப்பற்றிப் பின்னும் சில விவரங்கள் ... ... ... 115
8. ஸ்ரீ மஹான் தாதாபாய் நௌரோஜியின் தேஹ வியோகம் ... ... 117
9. நமது தேசஸ்திரீ ஜனங்களின் கல்வி சம்பந்தமான தேவைகள் ... ... 120
10. மாதர் லக்ஷியம் ... ... ... ... 123
11. மாத விசேஷங்கள் ... ... ... ... 123
12. பாட்டு யூனிவர்ஸிடி மசோதா ... ... ... 125


## No. 5. For AUGUST 1917. (Tamil: AVANI)

*"The Educational Salvation of the Country must begin at Home."*


*Business "Terms" and General Notice to Subscribers* ... ... ... ... 129
1. The Educational Salvation of the Country ... ... ... ...130 & 131
2. Practical Effects of Education (From Smiles) ... ... ... ... 135
3. Morals and Maxims in Songs : (*Suitable for use in the Kindergarten*) ... ... 138
4. Character Sketch : Sir Francis Chantre ... ... ... ... 141
5. On Animal Intelligence (Concluded) ... ... ... ... ... 146
6. The Greatness of the Home ... ... ... ... ... 151
7. The Wit and Humour of Poets ... ... ... ... ... 151
8. Some Curious Ways of Killing Wild Animals ... ... ... ... 155
9 Extract : The Greatness of Electricity ... ... ... ... ... 157
10. Children's Page: Anger disfigureth face ... ... ... ... 158
11. Some Figure Puzzle and Strange Arithmetical Problems ... ... ... 159


## 1917௵ ஆகஸ்டு௴ 5-வது சஞ்சிகை. (ஆவணி௴)


சந்தா விவரம் : சந்தாதாரர்க்கு அறிக்கை ... ... ... 129
1. தேசம் வித்யாசிக்ஷையினுல் கடைத்தேறுவ தெப்படி ? ... 130 & 131
2. காரியத்தக்குதவும் கல்விப் பயிற்சி ... ... ... 135
3. நீதிக்கதைகளும் ஸஜ்ஜபோதமும், (கிண்டர்கார்டனில் உபயோகிக்கத்தக்க பாட்டுகள் ... 138
4. குணவலி விளக்கம் ஸர் ப்ரான்ஸிஸ் சான்ட்ரி ... ... ... 141
5. ஜீவராசிகளின் புத்திவலிமை (முடிவு) ... ... ... 146
6. "இல்லதென் இல்லவள் மாண்பானல்" ... ... ... 151
7. கவிகளின் சாதுர்ய சமத்காரங்கள் ... ... ... 151
8. கொடிய பிராணிகளைப் பிடித்துக் கொல்லும் சில விநோதமான வழிகள். ... 155
9. மின்சாரத்தின் பிரபாவம் ... ... ... ... 157
10. சிறுவர்க்கான பக்கம் ; கோபம் வந்தால் கோரம் வரும் ... ... 158
11. சில விநோதமான தொகைகள் ... ... ... ... 159


## No. 6. For SEPTEMBER 1917. (Tamil: PURATTASI)


*Business "Terms" and General Notice to Subscribers* ... ... ... ... 161
Important Notice ... ... ... ... ... ... 162
1. Talks to Teachers and Students by Professor W. James ... ... ... 162 & 163
2. True Knowledge ... ... ... ... ... ... 165
3. Sports and Pastimes as Aids to Child-Education ... ... ... ... 168
4. True Courage ... ... ... ... ... ... 170
5. Methods of Teaching Geography to Children ... ... ... ... 171
6. The Planetary and Terrestrial Worlds Comparatively Considered ... ... ... 176
7. Selections : On The Superiority of Riches ... ... ... ... 178
8. The Story of Varaguna Pandya or The Traditional Sancity of Madhiarjunam ... ... 180
9. Valmiki Ramayanam : A Review ... ... ... ... ... 182
10. Short Story : Doraiswamy ... ... ... ... ... 186
11. Universal Prayer ... ... ... ... ... ... 190
12. Children's Page : The Shepherd and the Philosopher ... ... ... ... 191
13. Our Puzzle Corner ... ... ... ... ... ... 192




## 1917௵ செப்டெம்பர்௴ 6-வது சஞ்சிகை. (புரட்டாசி௴)


சந்தா விவரம் : சந்தாதாரர்க்கு அறிக்கை ... ... ... 161
முக்கிய அறிக்கை ... ... ... ... 162
1. படிப்பைப் பற்றிய ஓர் பெரியவர் பிரஸ்தாபம் ... ... 162 & 163
2. மெய்யறிவு ... ... ... ... ... 165
3. விளையாட்டுகளினுலுண்டாகும் வித்தியாப்பியாசத்துக் கனுகூலமான பயன். ... 168
4. உண்மையான தைரியம் ... ... ... ... 170
5. சிறுவர்களுக்கு பிரத்தியக்ஷரூபமாக பூமி சாஸ்திரம் போதிக்கும் முறை ... ... 171
6. பூமண்டலத்தையும் கிரகங்களையும் அகில ப்ரபஞ்சத்தோ டொப்பிட்டு நோக்கி ஆராய்வது ... 176
7. செல்வத்தினுயர்ச்சி ... ... ... ... 178
8. வரகுணபாண்டியர் சரித்திரம் : மத்தியார்ச்சுன மான்மியம். ... ... 180
9. வால்மீக ராமாயணம் ... ... ... ... 182
10. துரைசாமி : ஒரு சிறு கதை ... ... ... ... 186
11. பிரார்த்தனைப் பத்து ... ... ... ... 190
12. சிறுவர்க்கான பக்கம் : இடையனும் பண்டிதரும் ... ... ... 191
13. விடு கதைகள் ... ... ... ... 192


## No. 7. For OCTOBER 1917 (Tamil: AIPPASI)


*Business "Terms" and General Notice to Subscribers* ... .. ... ... 193
1. The Improvement of Rural Education in India ... ... ... 194 & 195
2. Education in England : A Comparison and a Contrast ... ... ... ... 197
3. Child Nature as Aid to Education ... ... ... ... ... 198
4. On the Choice of Books ... ... ... ... ... 200
5. Village Life—An Ideal Picture ... ... ... ... ... 203
6. Character Sketch : Sir Rabindra Nath Tagore ... ... ... ... 204
7. On Mind ... ... ... ... ... ... 205
8. On the Use of Words ... ... ... ... ... 209
9. Social Service : On Devotion and Love ... ... ... ... 210
10. True Story : "A Faith of Reason which postulates a God to Realise it" (Continued) ... ... 214
11. Nature Study : On Elephant and its Characteristics (Continued) ... ... ... 218
12. Poem : Rama and the Squirrel ... ... ... ... ... 220
13. Children's Page : Soundarananda ... ... ... ... ... 222
14. Some Interesting Items ... ... ... ... ... 223
15. Our Puzzle Corner ... ... ... ... ... ... 224


## 1917௵ அக்டோபர்௴ 7-வது சஞ்சிகை. (ஐப்பசி௴)


சந்தா விவரம் : சந்தாதாரர்க்கு அறிக்கை ... ... ... 193
1. இந்தியாவில் நாட்டுப்புறப்படிப்பு விருத்தி ... ... 194 & 195
2. இங்கிலாந்தில் படிப்பு விருத்தி : இதையும் அதையும் ஒத்துப்பாருங்கள்... ... 197
3. பிள்ளைகளின் இயற்கையினுலுண்டாகும் வித்தியாப்பியாசத்துக் கனுகூலமான பயன் ... 198
4. "நூல்களும் நூலாராய்ச்சியும்" ... ... ... 200
5. நாட்டுப்புறவாசமும் அதன் உயர்தர லக்ஷியமும் ... ... ... 203
6. குணவலி விளக்கம் : ஸர். ரவீந்திரநாத் தாகூர் ... ... ... 204
7. மனது என்றால் என்ன ? ... ... ... ... 205
8. வார்த்தைகளின் உபயோகம் ... ... ... ... 209
9. சமஷ்டிசேவை சாதனம் : பக்தி சிரத்தை ... ... ... 210
10. உண்மைக்கதை : புத்திக்கெட்டாதது பக்திக் கெட்டும் : நாரதர் கலகம் (தொடரும்) ... 214
11. பிரகிருதி வித்யாம்சம் : யானையும் அதன் குணாதிசயங்களும் (தொடரும்) ... 218
12. பாட்டு : இராமனும் அணிலும் ... ... ... ... 220
13. சிறுவர்க்கான பக்கம் : சௌந்தரானந்த ... ... ... 222
14. சில விநோத விஷயங்கள் ... ... ... ... 223
15. விடுகதைகள் ... ... ... ... ... 224

## No. 8. For NOVEMBER 1917. (Tamil: KARTIKI)


*Business "Terms" and General Notice to Subscribers* ... ... ... ... 225
1. Mr. Montagu's Deputation to India ... ... ... 226 & 227
2. The Duties and Responsibilities of the Teacher (By the late Rev. H. W. Kellet) ... ... 229
3. On the Indispensability of Knowledge ... ... ... ... ... 232
4. On the Chief Characteristics of Students (Continued) ... ... ... ... 236
5. On the Choice of Books ... ... ... ... ... 237
6. Social Service : On the Cultivation of Mental Happiness (Continued) ... ... ... 240
7. Mumukshutaraka, or "The Way to Salvation" (Continued) ... ... ... 242
8. True Story : "A Faith of Reason which postulates a God to realise it." (Concluded) ... 244
9. Nature Study : On Elephants and its Characteristics (Concluded) ... ... ... 246
10. Poem : Sri Ramavataram ... ... ... ... ... 249
11. Sanitation Column : On Personal Hygiene ... ... ... ... 250
12. Children's Page : The Soldier's Reprieve ... ... ... ... 252
13 Extract : On the Educational Needs of Children ... ... ... ... 256


## 1917௵ நவம்பர்௴ 8-வது சஞ்சிகை. (கார்த்திகை௴)


*சந்தா விவரம் : சந்தாதாரர்க்கு அறிக்கை* ... ... ... 225
1. மிஸ்டர் மாண்டேகு விஜயம் ... ... ... 226 & 227
2. உபாத்தியாயர் தொழிலின் மகிமையும் அவர் கடமையும் ... ... 229
3. அறிவு இன்றியமையாததென்பது ... ... ... 232
4. மாணாக்கர்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய லக்ஷணங்கள் (தொடரும்)... ... 236
5. "நூல்களும் நூலாராய்ச்சியும்" ... ... ... ... 237
6. சமஷ்டிசேவை சாதனம் : அகமகிழ் பயிற்சி (தொடரும்) ... ... 240
7. முமுக்ஷுதாரகம் அல்லது "பஜகோவிந்தம்" (தொடரும்) ... ... 242
8. உண்மைக்கதை : புத்திக்கெட்டாதது பக்திக்கெட்டும் (முடிவு) ... ... 244
9. பிரகிருதி வித்தியாம்சம் : யானையும் அதன் குணவிசயங்களும் (முடிவு) ... ... 246
10. பாட்டு : ஸ்ரீ ராமாவதாரம் ... ... ... ... 249
11. சுகாதார விஷயம் : தேகாரோக்கியம் ... ... ... 250
12. சிறுவர்க்கான பக்கம் : ஒரு போர்வீரன் மரணதண்டனையினின்று மன்னிக்கப்பட்டது ... 252
13. பாலர்களின் கல்விச்சம்பந்தமான தேவைகள் ... ... ... 256


## No. 9. For DECEMBER 1917. (Tamil: MARGHAZHI)


*Business "Terms" and General Notice to Subscribers* ... ... ... ... 257
1. "Land of our birth we pledge to thee": A Children's Hymn ... ... 258 & 259
2. The Kindergarten Method of Teaching, by Mrs. I. Brander ... ... ... 262
3. On the Chief Characteristics of Students (Concluded) ... ... ... ... 266
4. On Respectability ... ... ... ... ... ... 269
5. On Conduct, Culture and Knowledge ... ... ... ... ... 270
6. The Ten Root Principles of Life ... ... ... ... ... 272
7. Social Service : On the Cultivation of Mental Happiness (Concluded) ... ... ... 274
8. Mumukshutaraka, or "The Way to Salvation" (Continued) ... ... ... 277
9. Nature Study : Discourse on Birds ... ... ... ... ... 279
10. A Glance at Sri Krishna ... ... ... ... ... 281
11. Poem : Shiva and the Squirrel ... ... ... ... ... 283
12. Children's Page : From Grimm's Fairy Tales ... ... ... ... 284
13. Our Puzzle Corner ... ... ... ... ... ... 288




## 1917௵ டிஸம்பர்௴ 9-வது சஞ்சிகை. (மார்கழி௴)


*சந்தா விவரம் : சந்தாதாரர்க்கு அறிக்கை* ... ... ... 257
1. "உய்யவேண்டும் பரதக்கண்டம் உலகெல்லாம் வாழவேண்டும்" :—பாலபோத கீதம் 258 & 259
2. "கிண்டர்கார்டன் போதனுமுறை" ... ... ... 262
3. மாணாக்கர்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய லக்ஷணங்கள் (முடிவு) ... ... 266
4. அந்தஸ்தைப்பற்றி ... ... ... ... 269
5. ஒழுக்கம், கல்வி, புத்தி ... ... ... ... 270
6. தசமூலக் கொள்கைகள் ... ... ... ... 273
7. சமஷ்டிசேவை சாதனம் : அகமகிழ் பயிற்சி (முடிவு) ... ... 274
8. முமுக்ஷுதாரகம் அல்லது "பஜகோவிந்தம்" (தொடரும்) ... ... 279
9. பிரகிருதி வித்தியாம்சம் : பக்ஷிகளைப்பற்றி ... ... ... 277
10. ஸ்ரீ கிருஷ்ண பிரபாவம் ... ... ... ... 281
11. பாட்டு : சிவனும் அணிலும் ... ... ... ... 283
12. சிறுவர்க்கான பக்கம் : மேற்றிசைக் கூளிக்கதைகள் ... ... ... 284
13. விடு கதைகள் ... ... ... ... 288


## No. 10. For JANUARY 1918. (Tamil: THAI)


*Business "Terms" and General Notice to Subscribers* ... ... ... ... 289
1. India's Prayer (By Sir Rabindra Nath Tagore) ... ... ... 290 & 2 1
2. Arudradarisanam ... ... ... ... ... 293
3. The True Basis of Morals ... ... ... ... 295
4. On Primary Education ... ... ... ... ... 297
5. Advice to Young Men (By The Hon'ble Mr. F A. Nicholson) ... ... ... 301
6. The Festival of Lamps ... ... ... ... ... 306
7. Character Sketch: Palissy the Potter (Continued) (From Smiles) ... ... ... 309
8. Social Service: "Enjoyments of this World not Real" ... ... ... ... 312
9 Mumukshutaraka, or "The Way to Salvation" (Concluded) ... ... ... 315
10. On the Geographical Distribution of Animals ... ... ... ... 317
11. Selection: Against Drink ... ... ... ... ... 319
12. Children's Page: Worldly Life, An Ocean Full of Sorrow ... ... ... 320


## 1918௵ ஜனவரி௴ 10-வது சஞ்சிகை. (தை௴)


*சந்தா விவரம் : சந்தாதாரர்க்கு அறிக்கை* ... ... ... 289
1. இந்தியாவின் பிரார்த்தனை (ஸர் ரவீந்திரநாத் தாகூர் இயற்றியது) ... 290 & 291
2. ஆருத்ரா தரிசனம் ... ... ... ... 293
3. "சத்தியமின்றிச் சன்மார்க்கமில்லை" ... ... ... 295
4. பாலபோதம் ... ... ... ... ... 297
5. மாணவர்களுக்கு புத்திபோதனை ... ... ... ... 301
6. கார்த்திகை தீபம் ... ... ... ... 306
7. குணவலி விளக்கம் : பெயர்பெற்ற குலாலர் பலிஸ்ஸியின் சரித்திரம் (தொடரும்) ... 309
8. சமஷ்டிசேவை சாதனம்: "லௌகிகப் பொருள்களால் உண்டாகும் இன்பம் பூரண இன்பமல்ல". 312
9. முமுக்ஷுதாரகம் அல்லது "பஜகோவிந்தம்" (முடிவு) ... ... 315
10. உலகத்தில் ஜீவஜெந்துக்கள் பரவி இருக்கும் வகை ... ... ... 317
11. கள்ளுண்ணமை ... ... ... ... 319
12. சிறுவர்க்கான பக்கம் : "ஸம்ஸாரம் ஸாகரம் துக்கம்" ... ... 320

## No. 11. For FEBRUARY 1918. (Tamil: MASI)


*Business "Terms" and General Notice to Subscribers* ... ... ... 321 & 352
1. The Cultivation of the Experimental Sciences by Hindus ... ... 322 & 323
2. Advice to Young Men (By the late Raja Sir T. Madhava Rao, C. I. E.) ... ... 326
3. Physical Exercise (Continued) ... ... ... ... ... 330
4. Redeemed by Love or The Story of Pundareeka ... ... ... ... 335
5. Character Sketch : Palissy the Potter (Continued) (From Smiles) ... ... ... 338
6. Social Service : "Persevere in Goodness" ... ... ... .. 342
7. Poem : Of Grace Divine ... ... ... ... ... 345
8. Alfred the Great ... ... ... ... ... ... 346
9. Using the Eyes (From Smiles) ... ... ... ... 348
10. Children's Page : Influence of Environment ... ... ... ... 349
11. Our Puzzle Corner ... ... ... ... ... ... 352
12. Notice to Subscribers ... ... ... ... ... ... 352


## 1918ஆ பிப்ரவரிமீ 11-வது சஞ்சிகை. (மாசிமீ)


*சந்தா விவரம்: சந்தாதாரர்க்கு அறிக்கை* ... ... 321 & 352
1. அப்பியாஸ வித்தை ... ... ... 322 & 323
2. மாணவர்களுக்குப் புத்திமதி ... ... ... 326
3. தேகாப்பியாசம் (தொடரும்) ... ... ... ... 330
4. அன்பு வழிப்பட்டு ஆத்மரக்ஷை யடைந்தது அல்லது புண்டரீகபக்தன் சரித்திரம் ... 335
5. குணவலி விளக்கம் : பெயர்பெற்ற குலாலர் பலிஸ்ஸி என்பவர் சரித்திரம் (தொடரும்) ... 338
6. சமஷ்டிசேவை சாதனம் "நன்மைக் கடைப்பிடி" ... ... ... 342
7. பாட்டு : பரசிவ வெள்ளம் ... ... ... ... 345
8. ஆல்பிரட் அரசர் ... ... ... ... 346
9. உற்றுப்பார்த்தலினாலுடையும் பயன் ... ... ... 348
10. சிறுவர்க்கான பக்கம் : சகவாச தோஷம் ... ... ... 349
11. விடு கதைகள் ... ... ... ... ... 352
12. சந்தாதாரர்களுக்கு அறிக்கை ... ... ... ... 352


## No. 12. For MARCH 1918. (Tamil: PANGUNI.)


Title page and Cotents for Vol. 25 (i—viii).
*Business "Terms" and General Notice to Subscribers* ... ... ... ... 353
1. "Learn to Live and Live to Learn" ... ... ... ... 354 & 355
2. "The Soul as it is and how to deal with it" ... ... ... ... 357
3. Practical Vedanta (By Swami Vivekananda) ... ... ... ... 359
4. Physical Exercise (Concluded) ... ... ... ... ... 362
5. Character Sketch : Palissy the Potter (Concluded) (From Smiles) ... ... ... 367
6. The Story of Savithri ... ... ... ... ... ... 371


## 1918ஆ மார்ச்சுமீ 12-வது சஞ்சிகை. (பங்குனிமீ.)


25-வது புஸ்தகத்தின் பேரேடும் பொருளடக்கமும் (1—8).
*சந்தா விவரம்: சந்தாதாரர்க்கு அறிக்கை* ... ... ... 353
1. "ஒப்புர வொழுகு: ஓதுவதொழியேல்" ... ... 354 & 355
2. ஆத்மசக்தியும் பலாத்காரமும் ... ... ... ... 357
3. அநுபவ வேதாந்தம் ... ... ... ... 359
4. தேகாப்பியாசம் (முடிவு) ... ... ... ... 362
5. குணவலி விளக்கம் : பெயர் பெற்ற குலாலர் பலிஸ்ஸி சரித்திரம் (முடிவு) ... 367
6. சாவித்திரி சரித்திரம் ... ... ... ... 371


*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."*
*" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

"பஞ்சவிம்சதிபாக்கியம்"] ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.** ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."




*அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.*] [God is Love : Knowledge is Power : *Aum*

**"New Series"** ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். 25.] பிங்கள௵ சித்திரைமீ, 1917௵ எப்பிரல்மீ. [சஞ்சிகை 1.

### Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our "terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *One month's credit at the arrears rate* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of a/cs. or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued †in the middle of a Vol.
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

### General Notice.

i. The *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to "fluctuations" and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor*);
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, "VIVEKACHINTAMANI,"
*Novr.* 1916.] *Lalitalaya,* 19, *Adam Street, Mylapore.*

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.*

†Notice of discontinuance to have effect must be given in time in writing before a New Volume begins in April and after all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say "that every effort will be made to trace them." "If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed" continues the same high authority, "I shall be glad if you will let me know without delay, giving me the fullest particulars possible." Addresses should invariably give the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## THE PUBLIC SERVICES COMMISSION REPORT.

*(The Indian Social Reformer.)*

"The Islington Commission divide the Services for which recruitment is at present made in whole or in part in England, into three classes. In the first class they place the Indian Civil Service and the Police Department, "*in both of which the nature af British responsibility for the good governance of India requires the employment in the higher ranks of a preponderating proportion of British officers.*" In other words, so long as British rule exists in this country, the Civil Service and the higher ranks of the Police department must be filled to a preponderating extent by Englishmen. This is a new and revolutionary doctrine which, if it is endorsed by Government, cannot but have the effect of giving a powerful impetus to revolutionary political movements. To tell the Indian subjects of the King-Emperor that they must be content permanently to occupy an insignificant proportion of the higher appointments in the Civil Service and in the Police, is *not merely to trample on the Queen's Proclamation and Acts of Parliament which have assured Indian subjects of His Majesty that they are entitled to equal rights with all other subjects*, provided only that they qualify themselves for them, but it is also to instigate the more violent spirits among our political reformers to persevere in their campaign of discrediting the constitutional party in Indian politics. We are surprised that the Hon. Mr. Chaubal, in his minute with much of which we are in agreement, expresses his approval of the Commission's classification of the Services. Mr. Justice Abdur Rahim, we are glad to see, has been quick to seize the constitutional bearings of the question, and has exposed the fallacy underlying the classification with considerable force. "If it is meant," he says in his minority report, "that the connection of the British people with the Government of India necessarily implies the perpetuation of British officers in certain civil services of the country, like the Indian Civil Service and the Police, *the theory mixes up the government of a country with its administrative personnel.* Further I can well understand the British people deciding in the best interests of both the countries to retain the government of India and gradually relinquishing all share in the civil administration. In fact, this is understood by the Indian public to be the legitimate goal of the policy underlying the proclamations and the statutes which declare that Indians shall suffer no disabilities and limitations in the public service of their country." The Commissioners who sign the Report have, in fact, taken it upon themselves *to reverse the policy of British rule in this country.* Beside this monstrous doctrine which they have laid down, the detailed recommendations which they have made sink into insignificance. The Indian people will be giving away the birthright of unborn generations of India's children, if they do not promptly, emphatically and unanimously protest against this doctrine so entirely subversive of the basic principles of British rule as we have understood them all these years. The doctrine would have been objectionable at any time. Now, when Englishmen and Indians are vying with each other as to who should sacrifice and suffer most in the cause of our common Empire, it is outrageous."

## "HAD THAT BEEN DONE!"

General Sir O'Moore Creagh, the Ex-Commander-in-Chief of India, referring to the cause of the breakdown of the military operations in Mesopotamia in the beginning of the campaign, writes in the course of a letter to the *Weekly Despatch* as follows :—

"As far back as 1911 it was agreed that the only possible solution of the difficulty (of governing India) would appear to be gradually 'to give the provinces a larger measure of self-government until at last India would consist of a number of administrations, autonomous in all provincial affairs, with the Government of India above them all and possessing the power to interfere in cases of misgovernment, but ordinarily restricting their functions to matters of imperial concern.' Had that been done, India to-day could with infinitely greater case have met the calls of the war. But nothing was done, and the paralysis of activity, especially on the military side, which was sadly illustrated in Mesopotamia, has given rise to the grim joke that in this war India is absolutely neutral."

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-1.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

பிங்கள௵ சித்திரை௴ } விவேக சிந்தாமணி { April-May. 1917.

FIRST ESTABLISHED, 1892. OUR JUBILEE YEAR, 1917.

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## THE PUBLIC SERVICES COMMISSION REPORT.

## பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் ரிபோர்ட்டு.

இந்தியாவில் உத்தியோக ஸ்தானங்களுக்கு நியமனம்செய்யும் முறைகளைப்பற்றி விசாரிக்க ஏற்படுத்திய ராயல்கமிஷன் சபையார் அவர்களுடைய ரிபோர்ட்டு இப்பொழுது பிரசுரமாயிருக்கிறதென்று முன்னமே தெரிவித்துள்ளோம். அந்த ரிபோர்ட்டைப்பற்றி கவர்ன்மெண்டார் சீக்கிரத்தில் அவர்களுடைய அபிப்பிராயத்தை வெளியிட வேண்டுமென்று இந்தியா மந்திரியவர்கள் உத்தரவு செய்திருக்கிறார். அப்படியே இந்தியா கவர்ன்மெண்டாரும் அதைப்பற்றி அவசரமாய் ஆலோசிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தியா சட்டநிரூபணசபையில் கனம். பண்டித் மாலவியா அவர்கள் பிரேரேபணையின்பேரில் இந்திய ஜனப்பிரதிநிதிகள் அவர்கள் அபிப்பிராயத்தை வெளியிடப்போந்த சமயம் முந்துமுன் அதைப்பற்றி கவர்ன்மெண்டார் ஒருவித முடிவான தீர்மானமும் செய்கிறதில்லையென்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். யூனைடெட் ப்ராவின்ஸ் கவர்ன்மெண்டார் சட்டநிரூபண சபை மெம்பர்களும் ஜனசங்கத்தாரும் அந்த ரிபோர்ட்டைப்பற்றிய தங்களுடைய அபிப்பிராயத்தை மேயீ 15உக்குள் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படியே இதர இராஜதானி கவர்ன்மெண்டாரும் ஜனப்பிரதிநிதிகள் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு ஆலோசனைசெய்வது உசிதமாயிருக்குமென்று நினைக்கிறோம். அதில் கனம் மிஸ்டர் அப்தர் ராஹிம் அவர்கள் ஒருவர்மட்டும் உண்மையை உள்ளபடியோர்ந்து தனியாக இந்தியர்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் ரிபோர்ட்டு ஒன்று எழுதியிருக்கிறார். மற்றவர்களெல்லாரும் சேர்ந்து செய்திருக்கும் ரிபோர்ட்டு மிகவும் அதிர்ப்திகரமாயிருக்கிறதென்று எல்லாரும் முறையிடுகிறார்கள்.

இதுவரையில் விக்டோரியா மஹாராணியார் அவர்கள் இந்தியர்களுக்கு அளித்த வாக்குறுதியை அவருடைய ராஜவிளம்பரத்தில் கண்டு மகிழ்ந்தவர்கள் அதையே இந்தியர்களுடைய ஸ்வதந்திர உரிமைப் பத்திரமாகப் பாராட்டி வந்தார்கள். அப்படியே 1833-ம் வருஷத்துப் பார்லிமெந்து ஆக்ட்டிலும் கண்டிருக்கிறது. இப்பொழுது இந்தக் கமிஷன் சபையார் இந்தியாவில் உத்யோகஸ்தானங்களுக்கு நியமனம்செய்வதில் அவ்வுத்தியோக ஸ்தானங்களை மூவகுப்பாகப்பிரித்து முதல் வகுப்பான இந்தியன் ஸிவில் ஸெர்விஸ், போலீஸ் உத்தியோகங்களிற்கு நியமனம் செய்வது பிரிடிஷ் ஆட்சி செல்லவேண்டியதின் பொருட்டு அவ்விருவகை உத்தியோகங்களுக்கும் நியமிக்கப்படுகிறவர்கள் பெரும்பான்மையும் ஐரோப்பியர்களாகவே யிருக்கவேண்டு

மென்று புதிதாக ஓரு கோட்பாடு பிரேரேபித்திருக்கிறார்கள். இதை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்வதாயிருந்தால் மஹாராணியார் அளித்த வாக்குத்தத்தமும் பார்லிமெண்டு ஆக்ட்டுகளின் நிபந்தனைகளும் தலைகவிழ்க்கப்பட்டதாகும். "பிள்ளை வரத்துக்குப்போய்ப் புருஷனையிழந்தவள் கதியாக" இந்தியர்கள் அதிக சுதந்திரம்வேண்டி உள்ளதையும் அடியோடு இழந்தவர்களாவார்கள் என்று எல்லாரும் அபிப்பிராயப்படுகிறார்கள். இதுவிஷயமாய் "இந்தியன் ஸோஷியல் ரிபார்மர்" பத்திராசிரியர் ஜன அபிப்பிராயத்தை நன்குணர்ந்து எழுதியிருப்பதை முகட்டில் எடுத்து அச்சிட்டிருக்கிறோம். அவர் அபிப்பிராயப்படுகிறபடியே எல்லாரும் இந்த நவீன கொள்கைக்கு இடங்கொடுக்கக் கூடாதென்று அபிப்பிராயப்படுகிறார்கள். இக்காலத்தார் 'ஏனோதானோ' வென்றிருந்தால் இந்தியாவில் பிறக்கும் குழந்தைகளது உரிமைகளையெல்லாம் தாரை வார்த்தவர்களாவார்களென்றும் அதற்கு நம்மவர்கள் ஒருபோதும் உடன்படலாகாதென்றும் இந்தியா பிரமுகர்கள் எல்லாரும் வற்புறுத்திக் கூறுகிறார்கள். மூலக்கொள்கைகளில் விட்டுக்கொடுப்பது எப்போதும் ஆபத்துவிளைக்கும். இந்த ராயல் கமிஷனர்கள் பிரிடிஷ் அரசாட்சி இந்தியாவில் நிலைபெறுவதற்கான மூலக்கொள்கைகளையே வேரோடு பிடுங்கியெறிந்து ரிபோர்ட்டு எழுதியிருப்பது விந்தையிலும் விந்தையே. இராஜாங்க காரியங்களில் தலையிட்டுக்கொள்வது இப்பத்திரிகையின் வழக்கமில்லை. ஆனால் இது அரசியல் தர்மத்துக் கடுத்ததாகவும் அந்த தர்மவிருத்த முண்டுபண்ணுவதாயுமிருப்பதால் அதிலுள்ள கோளாறை நாமும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அக்கடமையை ஒட்டி இது சங்கதியை இங்கு குறிப்பிடலானோம்.

## THE REVOLUTION IN RUSSIA.

## ருஷியாவில் ராஜாங்கப்புரட்சி.

ஐரோப்பிய வல்லரசுகளுக்குள் (Great Powers of Europe) ருஷியாதேசமும் ஒன்று. ருஷிய ஏகாதிபத்தியத்தின் சக்கிரவர்த்தியாகிய ஜார்நிகலஸ் அரசாக்ஷியினின்றும், விலகும்படிச் செய்யப்பட்டாரென்று, மார்ச்சு மாதம் 15-ந்தேதி, பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் அறிவிக்கப்பட்டது. ருஷியாவின் தலைநகராகிய பிட்ரோகிராட் (Petrograd) டினின்று, கிடைத்த தந்திகளால், தலைநகரில் ஜனங்கள் பசியால் பீடிக்கப்பட்டு சில தினங்களாய் கலகஞ்செய்ததாகவும், அக்கலகம் சாமான்யமானதாயிராமல், ராஜாங்க விஷயங்களில் ஜனசுதந்திரங்கள், அடைவதற்காக ஆரம்பிக்கப்பட்ட, பெரிய (Revolution) புரட்சியாய் மாறிற்று என்றும் தெரிகிறது. இந்தப் புரட்சிக்கு ஜனப்பிரதிநிதிகளடங்கிய டூமா (Duma) என்னும் சபை, பிரதானமாயிருந்திருக்கிறது. ஜனப்பிரதிநிதிகளின் லக்ஷியங்களும் விருப்பங்களும் நிறைவேற்றப் படவேண்டுமென்று டூமா சபை அடிக்கடி கவர்ன்மெண்டை கேட்டுவந்தும், கவர்ன்மெண்டு அதிகாரிகள் தாங்கள் இதுவரையில் செலுத்திவந்த பழைய அதிகாரங்களைவிட்டுவிடச் சம்மதமில்லாதவர்களாயிருந்தார்கள். ருஷிய சக்கிரவர்த்தியும், அதிகாரிகளுடைய செல்வாக்குக்கு உட்பட்டிருப்பதாயும் அதனால் அதிகாரிகள் ஜனசுதந்திரங்களின் விருத்திக்கு கடுமையான விரோதம் பாராட்டி, தேசநிர்வாகத்தை திறமையின்றி நடத்துகிறார்கள் என்றும் ஜனப்பிரதிநிதிகள் கவர்ன்மெண்டினிடத்தில் மிகவிரோதம் பாராட்டி வந்தார்கள். இதுவரையிலுமிருந்த கவர்ன்மெண்டைவிட திறமையாயும் ஜனாபிமானம்கொண்டதாயுமுள்ள ஒரு கவர்ன்மெண்டை ஸ்தாபித்து இந்த யுத்தத்தை சீக்கிரத்தில் வெற்றியுடன் முடிக்கும் நோக்கத்துடன் இந்தப்புரட்சி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது நடக்கும் யுத்தத்தை போதுமான திறமையுடன் நடத்தவில்லை என்றே கவர்ன்மெண்டினிடத்தில் ஜனங்களுக்கு வெறுப்பு உண்டாயிற்றென்று காமன்ஸ் சபையில் சொல்லப்பட்டது. பிட்ரோகிராட்டில் ராணுவ அதிகாரிகளும், கடற்படை அதிகாரிகளும், புரட்சிகாரர்களுக்கு உட்பட்டிருக்க சம்மதித்திருக்கிறார்கள். காகேஷஸ் போர்முனையில் ருஷியசேனைத் தலைவராயுள்ள ஜெனரல் அலக்ஸீயும், ருஷிய சேனைத் தலைவராயுள்ள கிராண்ட் டியூக் நிக்கலஸும் புதிய கவர்ன்மெண்டின் ஸ்தாபனத்திற் கிணங்கியிருக்கிறார்கள். மாஜி சக்கிரவர்த்தியாகிய ஜார் நிகலஸ் அரசாக்ஷியை, தனது 12-வயதுள்ள புத்திரருக்கும் வேண்டாமென்று, தனது சகோதரராகிய கிராண்ட் டியூக் மைக்கேல் அலெக்ஸாண்டிராவிச் என்பவருக்கு பட்டமளித்தும், அவர், யுத்தம் முடிந்தபிறகு, ஜனப்பிரதிகள் சபைகூடி, மனப்பூர்வமாய் அளிக்கும்வரையில், தனக்கு அரசாக்ஷி வேண்டாமென்று மறுத்துவிட்டார். ஜனங்களுக்கும் ருஷியாவை அரசில்லாத குடியரசு நாடாகச்செய்வதில் ஆவல் என்று தெரிகிறது. தற்காலம் குடியரசு நாடாகத்தான் இருக்கிறது. முன்னிருந்த கவர்ன்மெண்ட் அதிகாரிகள் வேலைகளினின்றும் தள்ளப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். மாஜி சக்கிரவர்த்தி அவர்கள் குடும்பத்துடன், புரட்சிக்காரர்களின் பாதுகாப்பிலிருக்கிறார். ஜனப்பிரதிநிதிகளின் சபையார் ஆதரவுபெற்று, ஜனங்களுக்கு அங்கீகாரமான அதிகாரிகளால் இப்பொழுது ராஜாங்கம் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வளவு புரட்சியும் இரண்டு நாட்களுக்குள்ளாகவே நடந்தேறியது. இது பலர்க்கு மிகவும் ஆச்சரியமாய்த் தோன்றினபோதிலும், ஜனாபிமானம்பெற்ற ஆட்சிபெறும் பொருட்டு, சென்ற எழுபது வருஷங்களாய், முயற்சிகள் நடந்து வந்திருக்கின்றன. இதன் பொருட்டு, தங்கள்வாழ்வை விணாக்கிக்கொண்டு, கேள்வி முறையில்லாமல் கஷ்டப்பட்டவர்களுக்கு அளவில்லை. ருஷியதேசத்தில் ஸைபேரியா, என்று அநேக வருஷமுழுமையிலும், பனிக்கட்டிகளால் நிறைந்து, மிகவும் குளிர்பொருந்திய நாடு இருக்கிறது. ருஷிய சக்கிரவர்த்தியின் அதிகாரிகள் அவர்களை அண்டினவர்கள் முதலியவர்களிடமுள்ள ஒரு குற்றம் குறையை வாய்விட்டுச் சொன்னாலும் அதை ஒரு பெரிய ராஜத்துரோகமாக பாவித்து அப்படிச் சொன்னவர்களை ஸைபேரியாவில், வாழ்நாள் முழுமையும் கஷ்டப்பட்டு மாளும்படி விசாரணையின்றி அனுப்பிவிடுவது வழக்கம். அப்படி அநீதமாக மாண்ட வம்சங்களின் கணக்கிற்களவில்லை. அவர்கள் உண்மையில் தேசாபிவிருத்தியைக் கோறினதே அவர்கள்செய்த பெருங்குற்றமாம். அவர்கள் மனது உருகி உருகி, அங்கலாய்த்துக் கதறியதே, திரண்டு உருண்டு உருவெடுத்து, இப்புரட்சியை உண்டாக்கியதுபோலும். எத்தனையோ மன்னர்கள் கிரீடத்தை இழந்த பொழுதிலும், ருஷிய ஏகாதிபத்தியத்தில், சக்கிரவர்த்தியை விலக்கி ஜனோபகாரம்பொருந்திய கவர்ன்மெண்டை ஸ்தாபித்தது மிகப்பிரமாதமான சம்பவமென்றே இந்த யுத்தகாலத்தில் நினைக்கவேண்டும். இப்புரட்சியின் சங்கதி, இங்கு தெரியவந்ததும், ஒரு முக்கியமான தினசரிப் பத்திரிகையில் இதைப்பற்றி பிரசுரமானதின் சாராம்சத்தைக் கீழ்பிரசுரிக்கிறோம். இந்த அற்புதமான ராஜாங்கப்புரட்சியில் முடிந்த காரியங்களை சரித்திரபூர்வமாய் அதில் ஒருவாறு காரிய காரணதோரணை விளங்கக் கூறியிருக்கிறதை நம்மவர் எல்லாரும் உற்றுநோக்கி யுணரவேண்டி அதை இங்கே யெடுத்தாள்கிறோம்.

"யுத்தகாலத்தில் பொது ஜனங்களுடைய அதிகாரமும் சுதந்திரங்களும் அதிகரிப்பது இயல்பே; ஏனெனில் கவர்ன்மெண்டார் தங்களுடைய சத்துருக்களை எதிர்க்கும் பொருட்டு சாமான்ய ஜனங்களுடைய உதவியைக் கோர வேண்டியிருக்கிறது. தங்கள் தேசத்தைக்

காக்கும் பொறுப்பை உணர்ந்து ஏற்றுக் கொள்ளுகிற ஜனங்கள் அதற்கு ஏற்றவாறு அரசாட்சியை நடத்துவதிலும் சுதந்திரங்களை வேண்டுமென் றுவிரும்புவார்கள். ருஷிய ஜப்பானிய யுத்தத்தின்போது ருஷிய ஜனங்கள் தங்களுடைய ராஜீய சுதந்திரங்களுக்காக கலகஞ் செய்யவே, அந்த யுத்தத்தின் முடிவில் டூமா என்ற ஜனப்பிரதிநிதி சபையை ருஷ்யச்சக்ரவர்த்தியாகிய நிகலஸ் ஸ்தாபித்தார். ஆனால் அந்த சபைக்கு உண்மையான அதிகாரம் கொடுக்கப்படாமல், சக்ரவர்த்தியும் மந்திரிகளும், மற்ற கவர்ன்மெண்ட் அதிகாரிகளும், செல்வம்படைத்த நிலச்சுவான்தார்களும், மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் நடத்திவந்தார்கள். ஆயினும் ருஷிய கவர்ன்மெண்டார் எவ்வளவு தூரம் தங்களுடைய இச்சைக்குற்றவாறு அரசு செலுத்தி வந்தபோதிலும், யுத்த காலத்தில் போர்புரிவதற்கும் தளவாடங்கள் செய்வதற்கும் சாமான்ய ஜனங்களுடைய மனப்பூர்வமான உதவி கவர்ன்மெண்டுக்குக் கிடைப்பது அவசியமாகும். ஆகையால் இந்த மகாயுத்தம் தொடங்கியபோதே, வெகு காலமாய் கடுமையான ருஷிய ஆட்சிக்கு உட்பட்டு வந்த போலண்டு மாகாணத்தினருக்கு சுய ஆட்சி கொடுப்பதாகவும் யூதர்கள், பின்ஸ் முதலிய ஜாதியினருக்கும் சில சுதந்திரங்கள் அளிப்பதாகவும் கவர்ன்மெண்டார் வாக்களித்தது நேயர்களுக்குத் தெரியும். முக்கியமாய் ஜனசுதந்திரத்துக்காக நடத்தப்படுகிற இந்த மகாயுத்தத்தில் ருஷிய ஜனங்கள் தங்களுடைய தேசகாப்புக்காக உயிர்கொடுக்கும்போது தேச நிர்வாகத்தில் பொறுப்பும் வகிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாருடன் ஓயாமல் போராடிவந்தது ஆச்சரியமல்ல. இதை உத்தேசித்து, சேனைத்தலைவர்களிலும், மந்திரிமார்களிலும் அடிக்கடி மாறுதல்கள் செய்து ஜனாபிமானமுள்ளவர்களை நியமிக்க முயற்சி செய்யப்பட்டதை நேயர்கள் அறிவார்கள் ஆயினும் தேவையான திருத்தங்களை கவர்ன்மெண்டார் செய்யவில்லையென்று ஜனப் பிரதிநிதிகளடங்கிய டூமா சபையார் அதிருப்திகொண்டிருந்தார்கள்.

இந்த நிலைமையில், மகாயுத்தத்தினால் எல்லா தேசங்களுக்கும் நேரிட்டுள்ள கஷ்டங்கள் ருஷ்யாவிலும் உண்டாயின. ஆனால் ருஷ்யா தேசம் ஜனசஞ்சாரமற்ற விஸ்தாரமான பிரதேசங்களை யுடையதாயும் சொற்ப ரயில்பாதைகளையும் ரோட்டுகளையும் பெற்றதாயுமிருப்பதால், அங்கு உணவுப் பொருள்களை ஒழுங்காய் எல்லா இடங்களுக்கும் வினியோகஞ் செய்ய சாத்தியப்படவில்லை ; அதோடு கவர்ன்மெண்ட்டின் நிர்வாகத்தில் ஊழல்களும் கவனக்குறைவும் அந்த ஆகாரப்பஞ்சத்துக்கு காரணமாயிருந்திருக்கவேண்டும். ஆகையால் ருஷியாவின் தலைநகரமாகிய பீட்ரோகிராட்டில், ஜனங்கள் கூட்டங்கூட்டமாய் பசியால் வருந்தி முறையிடுகையில், கவர்ன்மெண்டார் ஜனாபிமானமும் சாமர்த்தியமுமில்லா திருந்தார்களென்று ஜனங்களுக்குத் தெளிவாய் புலப்பட்டிருக்கும். டூமா சபையார் தேச நிர்வாகத்தையும் யுத்தத்தையும் திறமையாய் நடத்தும் எண்ணத்துடன் புதிய கவர்ன்மெண்டை ஸ்தாபிப்பதாக வெளியிட்டவுடன், தலைநகரத்திலுள்ள ஜனங்கள் அம்முயற்சியை மனப்பூர்வமாய் ஆதரித்தார்கள். அவ்வாறு பாமர ஜனங்களுடைய ஆதரவைப்பெற்று டூமா சபையார் ஜாதீய கவர்ன்மெண்டை ஸ்தாபிக்கும்படி சக்கரவர்த்திக்கு அறிவித்துவிட்டு அப்போதிருந்த மந்திரிகளையும் அதிகாரிகளையும் நீக்கி புதிய கவர்ன்மெண்டை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யத் தொடங்கினார்கள். உடனே துருப்புகளும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். ஏனெனில், இந்த யுத்தத்தில் சாமான்னிய ஜனங்களிலிருந்தே துருப்புகள் சேர்க்கப்பட்டிருப்பதால், அந்தத் துருப்புகள் பொது ஜனங்களிடம் அபிமானம் பாராட்டுவது இயல்பே. ஆதலால் கலகத்தின் ஆரம்பத்தில் சிற்சில துருப்புகள் ஜனங்களை எதிர்த்தபோதும் பிறகு அவர்களெல்லாரும் ஒன்றாய்ச் சேர்ந்துகொண்டு போலீஸாரைத் தாக்கினார்கள். ராஜீயக்குற்றவாளிகளை விடுதலைசெய்தனர். பழைய கவர்ன்மெண்டை காக்கும்பொரு



ட்டு கலகக்காரர்களை தாக்கி அடக்கமுயன்றது போலீஸார்தான். ஜனாதிகாரம்பெறாத ஆட்சி முறையில் போலீஸாரே ஜனங்களால் மிகுதியும்வெறுக்கப்படுகிறவர்கள். ஆகையால் ஜனங்களுக்கு போலீஸாரிடத்தில் மிகுந்த ஆத்திரம் உண்டாயிற்றென்று தெரிகிறது. துருப்புகளும் ஜனங்களும் ஒன்றாய்ச் சேர்ந்துகொண்டு போலீஸாரைத்தாக்கவே, சக்ரவர்த்தி தாம் ஜனப்பிரியத்தை இழந்ததைக் கண்டு தமக்கும் தமது 12 வயதுள்ள ஏக புத்திரனுக்கும் அரசுரிமை வேண்டியதில்லை என்று வியாழக்கிழமைதினம் நிச்சயித்து, தமது சகோதராகிய கிராண்ட் டியூக் மைகேலுக்கு பட்டமளித்து பிஸ்காப் என்ற இடத்துக்குப் போய் விட்டார், ஆனால் கிராண்ட டியூக் மைக்கேல் அந்தப்பட்டத்தை வெகு காலம் வகிக்கவில்லை ஏனெனில், நிகலஸ் சக்ரவர்த்தியை விலக்கி விட்ட பொது ஜனங்கள் தம்மை சக்ரவர்த்தியாக அங்கீகரிக்க எவ்வளவு தூரம் பிரியப்படுவார்கள் என்பதை அவர் முன்னதாக அறிந்து கொள்ள விரும்பினது இயல்பே. ஆகையால் அவர் ஜனப் பிரதிநிதிகளுடைய விருப்பத்தைத் தெரிந்து கொண்டாலொழிய தமக்கு அப்பட்டம் தேவையில்லை என்று அறிவித்திருக்கிறார். ஆதலால், சக்ரவர்த்தியில்லாமலே குடியரசுக் கவர்ன்மெண்டை ஸ்தாபிக்க வேண்டுமென்ற ஆவல் ஜனங்களுக்கிருப்பதாக ஒருதந்தி அறி..க்கின்றது. டூமா சபையை ஆதாரமாகக்கொண்டு புதிய மந்திரிகளடங்கிய ஒரு நிர்வாக சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

மேற்சொல்லிய ராஜாங்கப் புரட்சி ருஷ்யத் தலைநகரமாகிய பீட்ரோகிராட்டில் மட்டும் ஜனங்களாலும் துருப்புகளாலும் டூமா சபையோராலும் முக்கியமாய் நடத்தப்பட்டதாகும். ஆனால் ருஷ்ய ஏகாதிபத்தியத்தைச்சேர்ந்த மற்ற பாகங்களெல்லாம் அந்தப் புதிய ராஜாங்க ஸ்தாபனத்தை ஆதரிக்கத்தயாராயிருக்கின்றனவென்று தெரிகிறது. இந்தப் புதிய கவர்ன்மெண்டு போதுமான அதிகாரமும் செல்வாக்கும் நிர்வாக சக்தியும் பெற்றிருக்கிறது. அதேமாதிரி ஏகாதிபத்தியத்தின் பற்பல பாகங்களில் ஜனசமூகத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஏராளமான துருப்புகள் போர்முனைகளில் ஆயுதபாணிகளாயிருப்பதால், அந்தத் துருப்புகளும் சேனைத்தலைவர்களும் புதிய அரசு ஸ்தாபிக்கப்படுவதை ஏற்றுக்கொள்வார்களென்றுந் தெரிகிறது. தவிர ருஷ்ய ஏகாதிபத்தியத்தில் சக்ரவர்த்தியையும் அவருடைய வம்சத்தையும் ஆதரித்து வந்துள்ள பிரபுவர்க்கத்தார்களும் மற்ற செல்வாக்குள்ளவர்களும் புதிய கவர்ன்மெண்டைதாங்கி நின்று யுத்தத்தை வெற்றியுடன் முடிக்க வேண்டுமென்று ருஷியசக்கிரவர்த்தி தம்முடைய விளம்பரத்தில் அறிவித்திருப்பது கவனிக்கத்தக்கது.

இந்த ராஜாங்கப்புரட்சி யுத்தத்துடன் நேராகச் சம்பந்தப்பட்டதல்ல. ஆனால் இந்த யுத்தத்தினால் ருஷ்யஜனங்களுக்கு தற்போது உண்டாகியுள்ள சகிக்கமுடியாத கஷ்டநிஷ்டூரங்களில் பெரும்பான்மையும் பழைய கவர்ன்மெண்டாருடைய திறமையின்மையாலும் கவனக்குறைவாலும் ஏற்பட்டதென்று டூமா சபையார் நினைப்பதாகத் தெரிகிறது. புதிய கவர்ன்மெண்டார் அவற்றை வெகுவாய் நீக்கி யுத்தகளத்தில் சிறந்த வெற்றிகளைப் பெற்று ஜனப்பிரியத்தை சம்பாதிப்பார்களென்று நம்புகிறோம். அம்மட்டில்தான் இந்த ராஜாங்கப் புரட்சி யுத்தத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. தேசத்திலுள்ள பாமரஜனங்களின் உதவியையும் தொழிலாளிகளின் ஆதரவையும் பூர்ணமாய் பெற்றுக்கொண்டு ஜெர்மானியரின் பக்ஷமாயுள்ள சிற்சில ருஷ்ய அதிகாரிகளைத் தொலைத்து யுத்தத்தை வெற்றியுடன் முடிக்க வேண்டுமென்ற நோக்கமே தவிர, அதை நிறுத்தி சத்துருவுடன் அவசர சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்ற நோக்கம் டூமா சபையாருக்கில்லை ; ஜன சுதந்திரத்துக்காக நடத்தப்படுகிற இந்த மகா உக்கிரமான யுத்தத்தில் அநேக மன்னர்கள் கிரீடத்தை இழந்தபோதிலும், ருஷ்ய ஏகாதிபத்தியத்தில் சக்கரவர்த்தியைவிலக்கி ஜனாயகம்பொருந்திய கவர்ன்மெண்டை ஸ்தாபிப்பது மிகப்பிரமாதமான யுத்தசம்பவமென்றே கருதவேண்டும்,''

## THE INDIAN WAR LOAN.
## இந்திய யுத்தக்கடன்.

இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா யுத்தக்கடன் ஒன்று ஏற்படுத்த முன்வந்திருக்கிறார்கள். அதனால் வரும் ரொக்கத் தொகை முழுவதும் யுத்தம் நடைபெறும் பொருட்டு பிரிடிஷ் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கப்படும். இந்தக் கடனில் அநேக விதங்கள் உண்டு. அவைகளில் ஒன்றிற்காவது பலவற்றிற்காவது ஜனங்கள் சேரலாம்.

### I. 100-க்கு 5 வட்டியுள்ள யுத்தக்கடன். 1929—1947.

இந்தக் கடனின் கிரயவிலை 100-க்கு 95 விதம், அதாவது ஒருவர் ரூபாய் 95 கொடுத்தால் அவருக்கு ரூபாய் 100 குறிக்கப்பட்டுள்ள உத்தரவாத பத்திரம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்த தொகைகளுக்கு அதற்குச் சரியாக பத்திரம் கொடுக்கப்படும். இந்தக் கடனுக்கு வட்டி 100-க்கு 5 விதம் 1947ஹு ஆகஸ்டுமீ 15உ அப்பத்திரத்தின்மேலெழுதியுள்ள தொகை கொடுக்கப்படும். ஆனால், 1929-ம்ஹு ஆகஸ்டுமீ 15உக்குப் பிறகு கவர்ன்மெண்டார் அப்பத்திரத்தில் கண்ட முழுத்தொகையையாவது அல்லது ஒரு பகுதியையாவது கொடுத்தல்கூடும். இந்தக் கடன் வெளிப்படுத்தின பிறகு இதன் மதிப்புவிலை அதாவது கடைவிலை குறைய நேர்ந்தால் அதை நிவர்த்திசெய்யும்பொருட்டு ஒவ்வொரு வருஷமும் 100-க்கு $1\frac{1}{2}$ விழுக்காடு வேறாக எடுத்துச் சேமித்து வைக்கப்படும். எவ்வெப்போது கடைவிலை குறைகிறதோ அப்போதெல்லாம் அந்தக் கடனின் உத்தரவாத பத்திரங்களை வாங்கி சரிபடுத்தப்படும். இந்தக் கடனுக்குச் சந்தாதாரர்களாகச் சேரவிரும்புகிறவர்கள் அவர்களிடத்துள்ள 100-க்கு 4 வட்டியுள்ள 1916—17 மாற்றக்கூடிய கடன் 100-க்கு $3\frac{1}{2}$ அல்லது 3 வட்டியுள்ள ரூபாய் கடன் பத்திரங்களை 100-க்கு 5 வட்டியுள்ள யுத்தக்கடன் பத்திரமாக பாரா 10-ல் சொல்லியபடி மாற்றிக்கொள்ள அதிகாரமுள்ளவராவார்கள்.

### II. 100-க்கு $5\frac{1}{2}$ வட்டியுள்ள யுத்தபத்திரங்கள் 1920.

இவைகளின் விற்கிரயவிலை 100-க்கு நூறு விதம். இப்பத்திரங்களுக்கு விண்ணப்பஞ் செய்வோர் 100-க்கு $5\frac{1}{2}$ வட்டியுள்ள உத்தரவாத பத்திரங்களைப் பெறுவார்கள். இவைகளின் தொகை முழுவதும் 1920-ம்ஹு ஆகஸ்டுமீ 15உ திருப்பிக்கொடுக்கப்படும்.

### III. 100-க்கு $5\frac{1}{2}$ வட்டியுள்ள யுத்தபத்திரங்கள், 1922.

இவைகளின் கிரயம், வட்டி முதலியவை 1920 யுத்தபத்திரங்களை ஒத்திருக்கும். இப்பத்திரங்களில் குறித்த தொகை முழுவதும் 1920-ம்ஹு ஆகஸ்டுமீ 15உ திருப்பிக்கொடுக்கப்படும்.

### IV. தபாலாபீசு 5 வருஷத்து ரொக்கச் சீட்டுகள் (Certificates).

இந்த ரொக்கச் சீட்டுகள் ரூபாய் 10,20,50, 100 என்றுள்ள தொகைகளுக்குக் கொடுக்கப்படும். சரியாக 5-வருஷங்களுக்குப் பின் ஷை தொகைகள் பெறுவதற்கு இப்பொழுது கட்டவேண்டிய தொகை விவரம்:—

| | | | |
|---|---|---|---|
| 10 | ரூபாய் சீட்டின் விலை | ரூ. 7-12 | பிரதி நபரும் 7500 ரூ. வரையில் இச்சீட்டு |
| 20 | ,, ,, | ரூ. 15- 8 | |
| 50 | ,, ,, | ரூ. 38-12 | |
| 100 | ,, ,, | | |

களில் பணம் கட்டலாம், அதற்குமேல் கூடாது. இடையில் பணம் வேண்டியிருந்தால் கட்டின தொகையுடன் கிரமவட்டி விதித்தபடி சேர்த்துக் கொடுக்கப்படும்.

### சந்தாதாரராய்ச் சேரும் விதம்.

2. 100-க்கு 5 வட்டியுள்ள யுத்தக்கடனுக்கும் 100-க்கு $5\frac{1}{2}$ வட்டியுள்ள யுத்த பத்திரங்களுக்கும் எவரேனும் 1917-ம்ஹு மார்ச்சுமீ 15உ முதல் 1917-ம்ஹு அக்டோபர்மீ 15உ வரையில் சந்தாதாரராய் இருந்தாலுஞ்சரி,



இல்லாவிட்டாலுஞ்சரி, விண்ணப்பம் சேவிங்ஸ் பாங்கி அலுவல் செய்யும் எந்தத் தபாலாபீசிலேனும் கொடுக்கலாம்.

3. 1929—1947 யுத்தகடனுக்கும், யுத்த பத்திரங்களுக்கும் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம் ரூபாய் 25 அல்லது அத்தொகையின் பெருக்கெண்ணுக்குச் செய்யப்பட்டதாக இருக்கவேண்டியது.

4. ஒரு சந்தாதாரர் தபாலாபீசு மூலமாக இந்தக் கடனுக்குச் செலுத்தக்கூடிய தொகை ரூபாய் 22,500-க்கு மேற்படக்கூடாது. இதில் ரூபாய் 7,500-க்கு மேற்படாத தொகை 100-க்கு 5 வட்டியுள்ள யுத்தக்கடனிலும், ரூபாய் 7,500-க்கு மேற்படாததொகை 1920, 1922 யுத்தபத்திரங்களில் ஒன்றிலாயினும் இரண்டிலாயினும், ரூபாய், 7,500 மேற்படாத தொகை தபாலாபீசு 5 வருஷத்து ரொக்கச் சீட்டிலும் இருக்கலாம்.

எச்சரிப்பு.—இந்த அளவு தபாலாபீசு மூலமாக வாங்கப்பட்ட இதர உத்தரவாத பத்திரங்களைப் பாதிக்காது

5. இதற்குச்சேர விரும்பியவர் விண்ணப்பப்பாரத்தில் எழுதி அனுப்புதல்வேண்டும். சேவிங்ஸ் பாங்கி வேலைசெய்யும் எந்தத் தபாலாபீசிலும் இந்தப்பாரம் கிடைக்கும். விண்ணப்பம் நேராகவாவது அல்லது ஆள் மூலமாகவாவது கொடுக்கலாம். விண்ணப்பத்துடன் எவ்வளவு தொகைக்கு விண்ணப்பஞ்செய்யப்பட்டதோ அத்தொகை முழுவதும் செலுத்தப்படவேண்டும். இதற்காக அவர் (சேவிங்ஸ் பாங்கி சந்தாதாரராய் இருந்தால்) தன்பேரில் வைத்திருக்கும் சேவிங்ஸ் பாங்கி பணத்தை உபயோகப்படுத்தலாம். அல்லது ரொக்கமாகவும் கொடுக்கலாம். கொடுக்கப்பட்ட பணத்திற்கு ரசீது கொடுக்கப்படும்.

### பத்திரங்களின் பாதுகாப்பு.

6. பத்திரங்களை விண்ணப்பதாரரே வைத்துக்கொள்ளலாம். அவர் விரும்பினால் தபாலாபீசு அவருக்குப் பதிலாக அதைப் பாதுகாக்கவுங்கூடும். அவர் விண்ணப்பம் செய்யும்போது இதைப்பற்றி விவரமாய் அறிவிக்கவேண்டியது. அவர் தன்னிடமே அப்பத்திரங்களை வைத்துக்கொள்ள விரும்புவாராயின் அவை தயாரானபோது அவருக்கு அறிவிப்பு கொடுக்கப்படும். தபாலாபீசிலேயே வைத்துக்கொள்ளும்படி விரும்பினால் அவருக்கு அவைகள் தபாலாபீசுக்கு வந்ததும் ஒரு (அவை சேமித்துவைக்கப்படுகிறதாக) அறிவிப்பு அவருக்குக் கொடுக்கப்படும். அதன்பிறகு அவர் எப்போதேனும் தானே வைத்துக்கொள்ள விரும்புவாராயின், அவை அப்போது அவரிடம் கொடுக்கப்படும்.

### வட்டி கொடுத்தல்.

7. 100-க்கு 5 வட்டியுள்ள யுத்தக்கடனுக்கு வட்டி ஆறுமாதத்திற் கொருமுறை கொடுக்கப்படும். அதாவது 100-க்கு $2\frac{1}{2}$ விதம் ஒவ்வொரு வருஷமும் பிப்ரவரிமீ 15உயும், 100-க்கு $2\frac{1}{2}$ விதம் பிரதி அக்டோபர்மீ 15உயும் கொடுக்கப்படும். 100-க்கு $5\frac{1}{2}$ வட்டியுள்ள யுத்த பத்திரங்கள் மீதும் வட்டி ஆறுமாதத்திற்கு ஒருமுறை கொடுக்கப்படும். அதாவது பிரதி வருஷமும் 100-க்கு $2\frac{3}{4}$ விதம் பிப்ரவரிமீ 15உயும் அதேவட்டி அக்டோபர்மீ 15உயும் கொடுக்கப்படும். சந்தா செலுத்தியநாள் முதல் மறுவட்டி தேதிவரையிலு (அதாவது 1917-ம்ஹு ஆகஸ்டுமீ 15உ அல்லது 1918-ம்ஹு பிப்ரவரிமீ 15உ) முள்ள குறைந்த நாட்களுக்கு ஏற்பட்ட வட்டி பத்திரங்களைக் கொடுக்கும்போது அவைகளுடன் சில்லறையாகக் கொடுக்கப்படும் (தானே அப்பத்திரங்களை வைத்துக்கொள்ள விரும்பினால்). அவர்

அப்பத்திரங்களை தபாலாபீசில் விட்டுவைக்க விரும்பினால் வட்டி சேவிங்ஸ் பாங்கித் தொகையோடு சேர்க்கப்படும். (அடுத்த பாராவைப் பார்க்க.)

8. ஒரு விண்ணப்பதாரர் தன்னுடைய பத்திரங்களைத் தபாலாபீசில் விட்டுவைக்க விரும்பினால் தபாலதிகாரிகள் 6-மாதத்திற்கொருமுறை தவறாமல் வட்டியை வாங்கி அதற்காக அவர்பேரில் திறக்கப்பட்ட சேவிங்ஸ் பாங்கிக் கணக்கில் சேமித்துவைப்பார்கள். அவருக்கு இதற்குமுன்னதாகவே ஒரு கணக்கு இருக்கும் பட்சத்தில் அதில் கூட்டப்படும். எவ்வெப்போது வட்டி வாங்கிக் கொள்ளப்படுகிறதோ அப்போதெல்லாம் அவருக்குத் தெரிவிக்கப்படும். இதற்கு கட்டணம் ஒன்றும் கிடையாது. யுத்த பத்திரங்களுக்காக கொடுக்கப்படும் வட்டிக்கு வருமானவரி கிடையாது. யுத்தக்கடன் பத்திரங்களுக்குக் கொடுக்கும் வட்டித் தொகையின் மேல் அந்த பத்திரங்கள் தபாலாபீசார்வசம் இருக்கும்வரை வருமான வரி கிடையாது. அந்தப் பத்திரங்களை அவரே வைத்திருப்பாராயின் அப்போது அந்த வட்டித்தொகையின்மேல் வருமானவரி உண்டு. 6-மாதத்திற்கொருமுறை அவருக்கு வட்டி கொடுக்கப்படும்போது வருமானவரி அந்த வட்டிப் பணத்தினின்றும் கழித்துக் கொள்ளப்படும்.

உத்தரவாத பத்திரங்கள் விற்பனை.

9. தபாலாபீசு மூலமாக வாங்கப்பட்ட யுத்த கடன் பத்திரங்களை முழுவதுமாகிலும் சிறிதுபாகமாகிலும் எப்போதாயினும் ஒருவர் விற்க விரும்பினால் அவரிடம் கூலி பெறாமலே விற்பதற்கு வேண்டிய முயற்சிகள் தபாலாபீசால் செய்யப்படும். இதைக் குறித்த விவரங்கள் தபாலாபீசில் விசாரித்தறியலாம்.

## HABITS TO BE CULTIVATED IN CHILDREN.

## பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்தவேண்டிய நடவடிக்கைகள்.

சிறு பிள்ளைகளை நல்லவழியில் கொண்டுவரவேண்டுமென்றால் அவர்களுடைய சரீரம் மனம் நடத்தை இம்மூன்றையும் சீர்திருத்த வேண்டுவதவசியம் என்பதை முன்னமே சொல்லியிருக்கிறோம். அவற்றுள் மூன்றாவதாகிய நடத்தையைப்பற்றி இங்கே சற்று விவரித்தெழுதுவோம்.

தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பிள்ளைகளை கூர்மையான புத்தியுள்ளவர்களாய் செய்வதோடு மாத்திரம் உபாத்தியாயருடைய வேலை முடிந்துவிடாது. பிள்ளைகளுடைய குணத்தையும் அவர் சரிப்படுத்தவேண்டும். ஒருவன் என்ன புத்திசாலியாயிருந்தாலும் அவன் நடத்தை சரியாயில்லாவிடில் அவனிடத்தில் யாருக்கும் மதிப்புக்கொள்ளாது. குணத்திலும் நடவடிக்கையிலும் கெட்டவர்கள் பூமிக்குப் பாரமேயொழிய வேறில்லை. அவர்களுக்கு மாத்திரமேயல்லாமல் அவர்களைச் சேர்ந்த எல்லாருக்கும் அவமானமும் அபகீர்த்தியும் நேரிடும். ஒருவனுக்கு பூஷணம் குணமேயாதலால் அதைப்பற்றிய கவலை முக்கியமாயிருக்கவேண்டியது. உபாத்தியாயருடையவோ அல்லது பெற்றோர்களுடையவோ அஜாக்கிரதையினால் கெட்டவாடிக்கைகள் பிள்ளைகளிடத்தில் ஏற்பட்டுவிட்டால் அவற்றை மாற்றுவது கஷ்டம்.

அப்படியானால் பிள்ளைகளிடத்தில் நாம் என்னென்ன நற்குணங்களை யேற்படுத்தவேண்டும். என்னென்ன கெட்ட குணங்கள் படியாமல் காக்கவேண்டும்?—என்கிற கேள்வி தோன்றுகிறது. அந்தக் கேள்விக்கு விடையாக முதலில் நாம் ஏற்படுத்தவேண்டிய குணங்களைப்பற்றி விவரிப்போம்.



1. சுறுசுறுப்புத்தனம்.—ஒருவனிடத்தில் என்ன புத்தி கூர்மையிருந்தாலும் சுறுசுறுப்புத்தனமில்லாவிடில் காரியங்கள் ஒன்றும் கைகூடாது. புத்திகூர்மை ஸ்வபாவத்திலேயே யேற்பட்டிருத்தல் நல்ல அதிருஷ்டம். நாம் என்ன பிரயத்தனப்பட்டாலும் அது கிடைத்தலரிது. சுறுசுறுப்புத்தனமோ அப்படியல்ல. சிரமப்பட்டால் இந்த குணத்தை சம்பாதித்துக்கொள்ளலாம். இந்த குணம் பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்த வேண்டியதற்காக உபாத்தியாயர் பிள்ளைகளிடத்தில் கண்டிதமாய் வேலை வாங்கவேண்டியது. ஒவ்வொரு நாளிலும எவ்வளவு படித்து அறிந்துகொள்வது சாத்தியப்படுமோ அவ்வளவும் குறிப்பிட்டுக் கொடுத்து காலம் கொஞ்சமேனும் வீண் போகாத மாதிரி பிள்ளைகளை பாடத்தில் கவனம் வைக்கச்செய்யவேண்டியது. சில பிள்ளைகள் பரீக்ஷைக்கு கொஞ்சநாளைக்கு முன்பாக மட்டும் சிரமப்பட ஆரம்பித்தால் போதாதா, என்ற எண்ணங்கொண்டவர்களாய் அநேக நாள் சோம்பேறிகளாய் காலம் கழிப்பார்கள். அப்படிக்கு இருக்கவொட்டாமல் ஒரே சீராய் அன்றைக்கிட்ட வேலையை யன்றைக்கே செய்துமுடிப்பது தான் தங்களுடைய கடமையென்பதை பிள்ளைகளுக்கு தெளிவாக்கவேண்டும். இந்த நற்குணமிப்பொழுதே யேற்பட்டால்தான் பிள்ளைகள் பெரியவர்களாய் பிரபஞ்சத்தில் வியவகாரங்கள் செய்யும்பொழுது கீர்த்தியும் பெயருமுண்டாக விடமுண்டு.

2. மூத்தோர் சொல்லுக்குக் கீழ்ப்படிதல்.—பிள்ளைகளுக்கு தீர்க்காலோசனை சக்தியிராதாகையால் தாங்கள் பிரவிர்த்திக்கும விஷயங்களில் தங்களுக்கு நேரிடக்கூடிய லாபநஷ்டங்களை யூகித்துத் தெரிந்துகொள்ள முடியாது. அநுபவத்தில் அநேகவிஷயங்களின் ரீதியை அறிந்து இது பிள்ளைகளுக்கு லாபகரம், இது அவர்களுக்கு நஷ்டத்தை விளைவிக்குமென்று முன்யோசனையுடன் சொல்லக்கூடிய பெரியோர்கள் அதாவது பெற்றோர்கள உபாத்தியாயர்கள் முதலியவரின் சொலலுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி பிள்ளைகளை கட்டாயப்படுத்தவேண்டியது. நாமிட்ட கட்டளைப்படி பிள்ளைகள் கீழ்ப்படிந்து நடக்கும்பொழுது நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இரண்டுண்டு. கட்டளையிட்டதும் உடனேயதின்படி செய்கிறார்களாவென்பதும், வெறுப்பில்லாமல் சந்தோஷத்துடனும் இஷ்டப்பட்டும் நடந்துகொள்ளுகிறார்களா வென்பதும். அதாவது முதலில் உபாத்தியாயர் வகுப்பு முழுமையும் நோக்கி 'நிற்க' என்று கட்டளையிட்டால் எல்லாப்பிள்ளைகளும் ஒரேமட்டமாய் எழுந்திருந்து நிற்பதில், 'நிற்க' என்ற சப்தம் கேட்டவுடனே பெஞ்சியிலுள்ள யந்திரமொன்று எல்லாப் பிள்ளைகளையும் ஒரேமடங்காய் தூக்கி பூமியில் நிறுத்தியதுபோல காணவேணுமேயல்லாது சிலர் உடனே நிற்பதும் சிலர் வேறு விஷயங்களில் ஞாபகமுள்ளவர்களாய் மெள்ள எழுந்திருப்பதும் சிலர் கீழேகுனிந்து புஸ்தகங்களை சரிப்படுத்திக்கொண்டிருப்பதும் வேறு சிலர் அங்குமிங்கும் திரிவதும்கூடாது. கட்டளையிட்டதும் கொஞ்சநேரமேனும் தாமதியாமல் உடனே கீழ்ப்படியும் வழக்கம் பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்தும் பொருட்டுத்தான் பள்ளிக்கூடங்களில் ‘டிரில்’ சொல்லிக்கொடுக்கும்படி விதிக்கப்பட்டிருக்கிறது. ‘டிரில்’ பழகுவதினால் அவயவங்கள் திடப்படுவதுமன்றி சொன்னபடி செய்யும் வழக்கம் பிள்ளைகளிடத்தில் உண்டாவதுதான் முக்கிய லாபம். சொற்படி நடத்தலுக்கு பழக்கம்தான் முக்கியகாரணம். அந்தப்பழக்கத்தை ‘டிரில்’ உண்டாக்கும். இதை யொட்டிய ஒரு சிறிய வர்த்தமானமொன்றுண்டு:—வெகு நாளாய் இராணுவத்தில் சேர்ந்து ஸோல்ஜராயிருந்து பென்ஷன் வாங்கி சுகவாசியாயிருந்த ஒருவன் ஒருநாள கடைத்தெருவிலிருந்து தான் வாங்கிய சில கண்ணாடி சாமான்களடங்கிய ஒரு கூடையை தன் தலையின்மேல் வைத்துக்கொண்டு கூடை கீழே விழாதபடி அதனிரண்டு பக்கத்தையும் இரண்டு கைகளால் பிடித்துக் கொண்டு கடை வீதியே போய்க்கொண்டிருந்தான். இவன் ஸோல்ஜராயிருந்தவனென்ற சங்கதியை யறிந்திருந்த சில விஷமக்காரப்பிள்ளைகள் அவன் பின்னாலேபோய் திடீரென்று ‘அட்டென்ஷன்’ (Attention) என்று ஒரு கூச்சல் போட்டார்கள். டிரில் நடத்தும்பொழுது முதல் முதலில் இடப்படும் கட்டளை ‘Attention,’ அதாவது ‘கவனம்’ என்றர்த்தம். அந்

தக் கட்டளையிட்டதும், அவரவர்கள் தங்களிஷ்டப்படி நிற்காமல் விதிப்படி கைகள் இரண்டையும் இருபுறத்துத் துடையண்டை சேர்ந்தாற்போல வைத்து தலையை குனியாமல் நிமிர்த்தி கண்களுடைய பார்வையை யங்குமிங்கும் போகவொட்டாமல் நேரேநோக்கி நிற்க வேண்டியது. 'அட்டென்ஷன்' (Attention) என்ற வார்த்தையைக் கேட்டதும மேற்குறித்த நிலைமையில் தன்னை யெத்தனையோ தடவை அவன் சீர்திருத்திக்கொண்டவனாகையால் இந்த துஷ்டப்பிள்ளைகள் 'Attention' என்று கூச்சலிட்டவே யோசனையொன்றும் செய்யாதவனாய், வழக்கமொன்று அவனிடத்தில் ஸ்திரமாய் ஏற்பட்டிருந்தபடியால் உடனே கைகளை கீழே தொங்கப்போட்டு 'Attention' நிலையில் நிற்கவே தலையிலிருந்த கூடை கீழே விழுந்து சாமான்கள் சேதமாய்ப்போயின. இதனால் டிரில் பழக்கமானபேருக்கு சொற்படி நடக்கும் வாடிக்கை ஸ்திரமாய் ஏற்படுமென்பது விளங்கும்.

இட்ட கட்டளைப்படி உடனே நடப்பது தவிர சந்தோஷத்துடன் நடந்துகொள்ளும் படிக்கும் செய்யவேண்டும். உபாத்தியாயர் தன் வேலையை சிரத்தையுடனும் உத்ஸாகத்துடனும் செய்கிறவராயிருந்தால் பிள்ளைகளுக்கு அவரிடத்தில் மரியாதையும் அன்பும் பக்தியும் உண்டாகும். அவர் சொல்வது நமது நன்மைக்கே யென்று நினைத்து அவர் சொல்படி பிள்ளைகள் நடப்பார்கள். எந்த விதிகள் முக்கியமானவையோ அவற்றை யொரு நோட்டீசுபோல எழுதி எல்லாப் பிள்ளைகளும் காணக்கூடிய விடத்தில் மாட்டி வைக்கவேண்டியது. இன்ன விதிகளுக்குட்பட்டு தாங்கள நடந்துகொள்ளவேண்டுமென்பது நிச்சயமாய் பிள்ளைகளுக்கு தெரியுமாகையால் அந்தப்படி நடந்துகொள்ள முயலுவார்கள்.

3. நாள் தப்பாமலும் காலம் தப்பாமலும் **பள்ளிக்கூடத்துக்கு வருதல்.**—தினம் தப்பாமல் வந்தால்தான் பாடங்கள் கிரமமாய் தெரிய வரும். சிலநாள் வராமலிருந்து மறுபடி வந்தால் ஏற்கனவே போதிக்கபபட்ட பழைய விஷயங்கள் தெரியாதாகையால் அவைகளையொட்டிச் சொல்லப்படும் புது விஷயங்களும் அவர்களுக்கு மனதில்பதிவது கஷ்டம. ஆகையால் அவர்கள் அபிவிருத்திக்கு பங்கம்வரும்.

பிள்ளைகளை தினம் தப்பாமல் பள்ளிக்கூடத்துக்கு வரச்செய்ய உபாத்தியாயர் சிரத்தை சாமர்த்தியம் உத்ஸாகம் இவைகளுடன் தன் வேலையைச் செய்பவராயிருக்கவேண்டும். அப்பொழுது நம்முடைய நன்மையை யுத்தேசித்து உபாத்தியாயர் இவ்வளவு சிரமப்படுகிறாரென்பது பிள்ளைகளுக்குத் தோன்றுமாகையால் தினம் தப்பாமல் வருவார்கள்.

மேலும் பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடத்தில் நடக்கும் விஷயங்களில் சிரத்தையுண்டாகச் செய்தால் அவர்கள் வீட்டிலிருக்கும்போது கூட பள்ளிக்கூடத்தில நடக்கும் சங்கதிகளைப் பற்றியே பிரஸ்தாபித்துக் கொண்டிருப்பார்கள். அதனால் படிப்பு சரியாய் நடந்து வருகிறதென்றும், பள்ளிக்கூடத்துக்குப் போவதினால் பிள்ளைகள் விருத்தியடைந்து வருகிறார்களென்றும் பெற்றோர்களுக்கு தெரியும். ஆகையால் ஒருநாள் கூட அவர்களை வீணில் வீட்டிலிருக்கச் செய்யாமல் அனுப்பிவிடுகிறார்கள்.

உத்திரவின்றி பள்ளிக்கூடத்துக்கு சில பிள்ளைகள் வராமலிருந்தால் உடனே அதை தகப்பன்மார்களுக்கு தெரியப்படுத்தவேண்டும். சில பிள்ளைகள வீட்டில் வேளைக்குச் சாப்பிட்டு கிரமமாய் பள்ளிக்கூடத்துக்குப் போகிறவர்களைப்போலவே புறப்பட்டு எங்கேயாவது போய்த்திரிந்து விளையாடி திரும்பவும் மற்றப் பிள்ளைகளைபபோலவே வீட்டுக்குத் திரும்பி காலத்தில் போவதுண்டு. உபாத்தியாயர் பையன் வீட்டிலிருந்து விட்டானென்று நினைப்பார். தகப்பனார் பையன் பள்ளிக்கூடத்திலிருக்கிறானென்று நினைப்பார். அவனோ இருவரையும் ஏமாற்றினவனாய் எங்கேயோ வீண்காலம் போக்குகிறவனாயிருப்பான். மேலே சொல்லியமாதிரி நோடீசுவிட்டால் பையனுடைய ஆட்டம் பலிக்கவிடமில்லை.

நாள் தப்பாமல் வருவதோடுகூட வேளை தப்பாமலும் வரும்படி செய்யவேண்டும். இதற்காக முதல்முதல நடத்தும் பாடம் முக்கியமான பாடமாயிருக்கவேண்டும். அதை யிழக்கமனமில்லாதவர்களாய் ஸ்கூல் துவங்கும் மணிநேரத்தில் தப்பாமல் வருவார்கள்.

மேலே சொல்லிய நடவடிக்கைகள் பள்ளிக்கூடத்தை யொட்டினவை. அடுத்தமுறை பிரபஞ்ச வியவகாரத்துக்குத் தக்க வண்ணம் வேண்டிய குணங்களைப்பற்றிப் பேசுவோம்.



## ON THE IDEALS OF INDIAN WOMEN.

## இந்திய ஸ்திரீகளின் லக்ஷியங்கள்.

“சமூக ஊழியம்” என்ற விஷயமாய் பல உபந்நியாசங்களைச் செய்து தங்களுடைய மனதைச் சந்தோஷப்படுத்திவிட்டுப் போகும்படியாக கஞ்சம் ஜில்லாவைச் சேர்ந்த பெர்ஹாம்பூர் வாசிகள், மிஸ்ஸஸ் குமுதினி பாஸு பி.ஏ. என்பவரை கேட்டுக்கொண்டதற் கிணங்கி மேற்கண்ட அவர் பெர்ஹாம்பூருக்கு வந்திருந்தார்.

பெர்ஹாம்பூரிலிருக்கும் ஸ்திரீகளின் சங்கத்து வருஷாந்த மீட்டிங்கின்போது மிஸ்ஸஸ் குமுதினிபாஸு அக்கிராசனம்வகித்தார். “இந்திய ஸ்திரீகளின் இலக்ஷியங்கள்” என்ற விஷயத்தைப்பற்றி மிஸ்ஸஸ் பாஸு ஒரு வியாசத்தை வாசித்தார். அந்த வியாசத்தை ஸ்திரீகளின் சங்கத்தார் சிறிய புத்தகமாக கூடிய சீக்கிரத்தில் அச்சிட்டு வெளிப்படுத்துவார்கள்.

மிஸ்ஸஸ் குமுதினி பாஸு மேற்கண்ட விஷயத்தைப்பற்றி அடியில் வருமாறு சொன்னார் :—

சகோதரிகளே! நீங்கள் என்னை ஸ்டேஷனில் வரவேற்று உபசரித்து எனக்கு பச்சைக் கற்பூரமாலை போட்டதற்காக நான் நிரம்ப சந்தோஷப்படுகிறேன். அந்த மாலைக்கு சுபாவமாக இருக்கும் வாசனையுடன் உங்களுடைய தயாளத்துவம் கருணை என்ற வாசனையும் கலந்து பரிமளிக்கும்.

உங்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்திரீகளின் சங்கத்தின் ரிபோர்ட்டைக்கேட்டு திருப்தியடைந்தேன். அதில் சிறந்த வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. உங்களுடைய தேசத்து ஜனங்கள் இவ்வித காரியங்களைக் கண்டு சந்தோஷப் படுவதுமன்றி அவ்வித காரியங்களுக்குவேண்டிய அனுகூலங்களையும் செய்து வருகிறதினால், இவ்விஷயத்தில் அவர்களுக்கு அக்கரையுண்டு என்பது வெளியாகிறது. ஆனால் உங்களுடைய ரிபோர்ட்டில் இச்சங்கத்தில் 35 மெம்பர்கள் தான் சேர்ந்திருக்கிறார்கள் என்ற ஒரு விஷயம் மட்டும் கொஞ்சம் அதைரியத்தை யுண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது இவ்வளவு பெரிய பட்டணத்தில் மெம்பர்களாகச் சேரக்கூடியவர்கள் 35 பேர்கள் தானா? இதைவிட ஐந்து மடங்கு எண்கொண்ட மெம்பர்கள் சேரலாம். இவ்வளவு சௌகரியங்கள் ஏற்பட்டிருந்தும் 35-மெம்பர்கள் மட்டுமே சேர்ந்திருக்கிறதைக்காணும் ஜனங்கள் உங்களைப் பார்த்து பரிகாசம் செய்யமாட்டார்களா? அதற்கு இடங்கொடாமல் மேன்மேலும் மெம்பர்களாகச் சேர்ந்து அத்தொகையை அதிகப்படுத்துங்கள்.

சகோதரிகளே! நீங்கள் என்னை அக்கிராசனாதிபதியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதில் நான் உங்களுக்குச் சில வார்த்தைகளைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

### சமூகத்தில் ஸ்திரீகளின் நிலைமை.

சகோதரிகளே! இவ்வுலகத்திலிருக்கும் இயற்கைப் பொருள்கள் அனைத்தும் ஸ்திரமாக ஒரே இடத்தில் நின்றுகொண்டிருக்கிறதில்லை. ஒவ்வொன்றுக்கும் சலனம் ஏற்பட்டிருக்கிறது. அந்த சலனத்தைத்தான் சாஸ்திர வல்லோர் “கதிவிதி” (Law of Motion) என்றுசொல்லுகிறார்கள். இவ்வித நித்திய விதியை யனுசரித்து வரும் இயற்கைப் பொருள்களில் ஒன்றாகிய மெதுவும் அமைதியுமான நமது கீழ் நாடுங்கூட நகர்ந்துகொண்டிருக்கிறது. 20 வருஷங்களுக்கு முந்தி இவ்வித சலனத்தையும் மாறுதல்களையும் கண்டறிவது கஷ்டமாக இருந்தது. இப்பொழுதோ தேசமெங்கும் பரவியுள்ள ஸ்கூல்களிலும், கோவில்களிலும், சமாஜங்களிலும், சங்கங்களிலும், நமது சொந்த வீடுகளிலுங்கூட இம்மாறுதலின் அடையாளம் பிரத்தியக்ஷமாய் தோன்றியிருக்கிறது. இந்தமாறுதலைத்தான் ஜனங்கள் “புதிய உணர்ச்சி” அல்லது “நவீன ஊக்கம்” என்று சொல்லுகிறார்கள். தேசம் முழுவதையும் இப்புதிய ஊக்கம்பிடித்து ஆட்டிவருகிறது. அதனால்தான்

...லின ஜனனத்தை எடுத்திருக்கிறோம் என்ற விஷயத்தை ருஜுப்படுத்துவதற்கு உலகத்தின்பலபாகங்களில் பல உறுதியான அடையாளங்கள்தோன்றியிருக்கின்றன. நமதுஜனங்கள் ஜனாசாரமுறையில் அபிவிருத்தியடையும் வழியை சுறுசுறுப்பின்மையினாலும், உதாசீனமாயிருந்ததினாலும் கவனித்து வராததினால், ஸ்திரீகளின் நிலைமைஉயர்த்தப்படாமல்தாழ்ந்திருந்தது. பூர்வகாலத்து ஸ்திரீகளின் உத்தமமான நடவடிக்கைகளை இப்பொழுதிருக்கும் ஸ்திரீகள் அனுஷ்டித்துவராததினால் நமது ஸ்திரீகளின் நிலைமை இவ்வளவு தாழ்ந்தஸ்திதிக்கு வந்து விட்டதென்று இப்பொழுதுதான் நமது ஜனங்கள் அறிந்துகொண்டிருக்கிறார்கள். பூர்வகாலத்து ஸ்திரீகளின் காலத்தில் இந்தியா மகோன்னத ஸ்திதியை அடைந்திருந்தது. வேதம் உபநிஷத்துக்கள் ஏற்பட்ட பிரக்யாதி பெற்ற சிறந்த காலத்தில் இந்திய ஸ்திரீகளின் நிலைமை, மகோன்னத ஸ்திதியிலிருந்தது. அவ்வளவு உன்னத பதவியை உலகத்திலுள்ள எந்த தேசத்து ஸ்திரீகளும் அடைந்ததில்லை. அக்காலத்தில் கார்க்கி, மைத்ரேயி, லீலாவதி இவர்களைப்போன்ற உத்தம ஸ்திரீகள் இருந்து வந்தார்கள். இப்பெயர்கள் உலகத்திலிருக்கும் எல்லா ஜாதியாருக்கும் பெருமையைக் கொடுக்கத் தக்கதாயிருக்கின்றன. கணவனை இழந்த ஸ்திரீகளை கணவனுடன் உடன்கட்டையேறி மடியும்படியாகக் கட்டாயப்படுத்தும் காலத்தைப் பற்றியாவது, சிசுவதை செய்துவந்த காலத்தைப் பற்றியாவது, கணவன் இறந்துபோனால் வேறு விவாகம் செய்துகொள்ளாமல் சாகும் வரையிலும் விதவையாக இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்ட அவ்வித காலத்தைப் பற்றியாவது, பால்ய விவாகமுறை அனுஷ்டித்து வரும் காலத்தைப்பற்றியாவது நான் பேச வரவில்லை. மேற்கண்ட முறைகள் நிரம்ப கொடுமையானவை. இந்திய ஸ்திரீகளை இம்சைக்குள்ளாக்கும் முறைகளாகும். முகத்தை மூடிக்கொள்ளும் படுதாமுறையையும் நாம் வெறுக்கிறோம். கார்க்கி, மைத்ரேயி, லீலாவதியைப்போன்ற பெண் இரத்தினங்களை ஜனிக்கும்படிச்செய்த அவ்வித சிறந்த காலத்தைத் தான் நாம் விரும்புகிறோம். சீதை, சாவித்திரி, அருந்ததி, காந்தாரி ஆகிய இவர்களைப்போன்ற உத்தமப் பதிவிரதா சிரோமணிகள் வாழ்ந்த காலத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த ஸ்திரீகளின் நடவடிக்கைகளை, இக்காலத்து ஸ்திரீகள் அனுஷ்டித்து வரவேண்டும் என்பதை நான் கோருகிறேன்.

### புதிய ஊக்கம்.

சகோதரிகளே! பலனற்றதும் குறை கூறத் தக்கதுமான ஜனாசார முறைகள் தானாகவே அழிந்துபோய்க்கொண்டிருக்கின்றன. புதிய ஊக்கம் தோன்றியிருக்கிறது. இனி நாம் வீட்டின் சுவற்றிற்குள் அடைபட்டிருக்கும் காலம் போய்விட்டது. கதவுகள் பலமாக தட்டப்படுகின்றன. நாம் கதவைத் திறந்துவிட வேண்டும், இல்லாவிட்டால் தட்டப்படும் வேகத்தினால் சுவர்கள் கீழே விழுந்துவிடும். நாம் ஒரே இடத்தில் அசையாமலிருக்க முடியாது. நாம் நகரவேண்டும். மாறுதல்களுக்கும் உட்படவேண்டும். நகரவேண்டிய இடம் இது தானா என்பதை நிச்சயப் படுத்திக்கொண்டபிறகு நகரவேண்டும். அதைத் தெரிந்து கொள்ளாமல் நகருவோமானால் குழியில்கொண்டுபோய் இறக்கிவிடும். உயர்தரப் படிப்பை அவசியம் கற்று வரவேண்டும். அப்படிச் செய்வதில், நற்குணங்களையும் நன்னடக்கைகளையும் கைவிடக்கூடாது. நல்லொழுக்கங்களையும் தேச சுதந்தரங்களையும் நழுவவிடும் பேர்வழிகளைப்போல! (ஆணானாலும் சரி) பெண்ணானாலும் சரி) கொடுமையானவர்களை நான் மனதிலுங்கூட ஸ்மரிக்கமாட்டேன். ஸ்திரீகளுக்குள் உயர்தரப் படிப்பு பரவினால் தான் நமது ஜாதியும் சீராக அமைக்கப்படும். நமது சமூகம் திருத்தியமைக்கப்படும். மேலுக்கு பாவனைகாட்டி வருவதினால், நாம் நல்ல காரியங்களைச் செய்து முடிக்கலாம் என்ற தப்பெண்ணம் நமக்குள் பரவியிருக்கிறது. அதில் பிரயோஜனமில்லை. ஸ்திரீகளுக்கு உயர்தரப் படிப்பைக் கொடுத்தால், அவர்கள், ஆசார சம்பந்தமானதும் மத சம்பந்தமானதும், ராஜீய சம்பந்தமானதுமான காரியங்களில் புருஷர்களுடன் கலந்து உழைப்பார்கள்.

### இந்திய ஸ்திரீகளின் உத்தமமான குணம்.

சகோதரிகளே! ஒவ்வொரு ஜாதியிலும் நற்குணங்களும் துற்குணங்களும் உண்டு. மேனாட்டார்களின் உத்தம குணங்களை நாம் அனுஷ்டிக்கவேண்டும். அவர்களிட மிருக்கும் துற்குணங்களை அனுஷ்டிக்கக்கூடாது. மேனாட்டாரிடம் தோன்றும் படிப்பில் பிரியம், கடமைகளைச் செய்து முடிப்பதில் சிரத்தை, தன்னலம் பாராட்டாத ஊக்கம் முதலிய பல நற்குணங்களை நாம் அனுஷ்டித்து வரவேண்டும். இந்திய ஸ்திரீகள் பூர்வீக ஸ்திரீகளின் வம்சத்தில் பிறந்தவர்கள் என்ற பெருமையும் வேறு பல நற்குணங்களையும் பெற்றிருக்கிறார்கள். அவைகளை உலகத்தார் பலர் அனுஷ்டித்து வரவேண்டும்.

### நமது வீடுகள்.

சகோதரிகளே! நமது வீடுகளை மையமாக வைத்துக்கொள்ளுவோம். சமூகமும், தேசமும் அந்த வட்டத்தின் சுற்றளவாக வைத்துக்கொள்ளுவோம். நாம் எப்பொழுதும் மையத்திலிருந்து சுற்றளவுக்குச் செல்லவேண்டும். சுற்றளவுக்குப் போவதிலும் மையத்திலுள்ள நாட்டம் மாறக்கூடாது. மாறினால் வட்டத்தின் ஒழுங்கு தவறிக் கோணிப்போம். இப்படிச் செய்தால்தான் நமது கடமைகளை முற்றும் செய்து முடித்தவர்களாகிறோம். ஒரு பறவை கொல்லப்பட்டுப்போன பிறகு அவைகளின் இறகை ஒழுங்கு படுத்துவதில் பிரயோஜன மென்ன?

### குழந்தைகளை வளர்த்தல்.

ஸ்திரீகளுக்குரிய சிறந்த கடமையாகிய குழந்தைகளை வளர்க்கும் முறைக்கும், படிப்பு அவசியமென்பதை நான் வற்புறுத்துகிறேன். இந்த விஷயம் தான் நமக்கு ஏற்பட்டிருக்கும் பெரிய பொறுப்பாகும். தாய்மார்கள் படித்தவர்களாக இருந்தால்தான், பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடிக்கவல்லவர்களாவோம். ஆகையால், வீட்டுக்காரியங்களை ஒழுங்காக முடிப்பதற்கும் உயர்தரப் படிப்பு ஸ்திரீகளுக்கும் அவசியம் என்று மறுபடியும் வற்புறுத்துகிறேன்.

## CHARACTER SKETCH: THE EARLY DAYS AND TRAINING OF H. M. QUEEN VICTORIA.

### குணவலி விளக்கம்.

### மாக்ஷிமைதங்கிய இந்திய சக்கிரவர்த்தினியாகிய விக்டோரியா மஹாராணியாரவர்களின் இளமைப் பருவமும் கல்விப் பயிற்சியும்.

இளவரசிக்கு அதிபால்யத்திலேயே தமது அருமைத்தந்தையை இழக்கும்படியான பெருந்தயரம் நேர்ந்ததாயினும், "தந்தையொடு கல்விபோம்" என்ற உலகவழக்கப்படி அவருக்கு வித்யாபிவிர்த்தியில் யாதும் குறைவுண்டானதில்லை. அவருடைய நற்றாயார், அவர் நற்குண நற்செய்கையுடையவராய் மேலால் அடையக்கூடிய ராஜபதவியைக் குறைவில்லாமல் பரித்து நிர்வகிக்கும்படித் தம்முடைய கருத்து முழுதும் புத்திரியின் வித்யாபிவிர்த்தியிலேயே செலுத்திவந்தார். இளவரசி வித்யாப்யாசம் செய்யத்தொடங்கியபோது கீழே சொல்லியபடி அவர் ராஜபதவியை அடைதல் முற்றிலும் நிச்சயமில்லாமையினால், அவருக்கு அரசைப்பெறுதற்குப் பாக்கியமிருந்தாலும் சரி, இல்லையானாலும் சரி, இரண்டு பக்ஷத்துக்கும் அநுகூலமாகும்படி, சாதாரணமாக அரசர்களுக்குள் உள்ள வழக்கம்போல வீணான ஆடம்பரமும் கூட்ட நாட்டமுமில்லாமல், தமது சொந்த விசாரணையிலேயே அதிகூடமாய் அவரது கல்வியையும் ஒழுக்கத்தையும் சீர்ப்படுத்திவந்தார். அன்றியும்,

> "பல்பொருட் டேர்ச்சியும், பரந்த நூலுணர்
> கல்வியின் மாட்சியும், கலையின் தோற்றமும்,
> நல்வகை யுதித்திட நவையின் நீங்குறச்
> சொல்வதொன்றல்லவே துகளில் கல்வியே."

> "உண்மையும் ஞானமும் ஒடிவிலாமனத்
> திண்மையும் பொறிவழி செறிக்கும்வன்மையும்
> தண்மையும் ஊக்கமும் தயையும் நேர்மையும்
> வண்மையும் சிறந்திட வகுத்தல் கல்வியே."

என்றபடி, ஒருவர் கல்வியினால் அடையும் பிரயோசனம் அநேக கலைகளில் பாண்டித்தியம் பெறுதல் மாத்திரமேயன்று; நன்னடக்கையும், வாய்மையும், மனோநிக்ரகமும் ஆகிய பல

நற்குணங்களும் வாய்க்கப்பெறுதலுமேயாகும் என்று நன்றாக அறிந்தவராதலின், அதற்குத்தக்கபடி தம் புத்திரிக்குப் பயிற்றுவிப்பார் ஆயினர்.

இளவரசிக்கு உபாத்தியாயர் இருவர். அவர்களில் தலைமை உபாத்தியார் பிற்காலத்தில் பீடர்புரி அத்யக்ஷர் என்று உயர்ந்த பதவியைப் பெற்று மேன்மையடைந்த டேவிஸ் மஹா பண்டிதர். அவருக்கு உதவியாக இளவரசியின் படிப்பு விஷயங்களைக் கவனிக்கும்படி நியமிக்கப்பட்டிருந்தவர் லெஷன் பெருமாட்டி என்பவர்.

இப்பெருமாட்டியினிடத்தில் இளவரசி மிக்க பக்தியும் விசுவாசமும் உடையவராய், தாம் பட்டத்துக்கு வந்தபின் இவரைத் தமக்கு அந்தரங்க காரியதரிசியாகச் சிலகாலம் நியமித்து வைத்துக்கொண்டனர். இவர் பின்பு உத்யோகத்தைவிட்டுத் தமது சுதேசத்துக்குப் போய்விட்டபிறகும் அரசி இவரை மறவாதவராய், வாரம் ஒருமுறை தப்பாமல் இவருக்குக் கடிதம் எழுதிவந்தார்.

இளவரசி தமது சுயபாஷையாகிய இங்கிலீஷைப்போலவே, ஜர்மன், பிரஞ்சு, இதாலியன் என்னும் தேசாந்தர பாஷைகளையும் பால்யத்திலேயே சரளமாகப் பேசவல்லவர் ஆயினர். ஜர்மன் பாஷை தம் தாயாருக்கு ஸ்வபாஷையாதலினால் தாமும் அதை ஸ்வபாஷைபோலவே சுலபமாகக் கற்றுக்கொண்டனர். இவையன்றி தமிழ்ப் பாஷைக்கு ஸம்ஸ்கிருதம் எப்படியோ அப்படியே, இங்கிலீஷ் பாஷைக்குப் பலவகையாலும் மூலபாஷையாய் அதற்கு அழகையும் புஷ்டியையும் கொடுப்பதான லாடின், கிரீக் என்னும் பிராசீன பாஷைகளிலும் மிக்க தேர்ச்சியடைந்தார். அரசி, எப்போதும், பாஷைகளை அப்யசிப்பதில் மிக்க ஆசையும் சந்துஷ்டியுமுள்ளவர். வெகுநாட் கழித்துத் தமது *முதுமைப்பருவத்திலும் கூடத் தம்முடைய இந்திய பிரஜைகளும் மற்றவர்களும் கேட்டு மனங்களிக்கும்படி, ஹிந்துஸ்தானி பாஷையை விரும்பிக்கற்கத் தொடங்கினாரல்லவோ; இவையல்லாமல் கணிதம், சரித்திரம், தேச சட்டம், சங்கீதம், சிற்பம் முதலான வித்தைகளிலும் தேர்ச்சியடைந்தார்கள்.

இளவரசி சித்திரம் எழுதுவதிலும் சங்கீத வித்தையிலும் இயல்பாகவே மிக்க விருப்பமுடையவராய் அதி பால்யத்திலேயே மிக்க தேர்ச்சியடைந்தனர். இனிமையான சாரீர சம்பத்தையும் உடையவராதலின், எடுத்த கீர்த்தனங்களைக் கேட்போர்க்கானந்தமுண்டாக நன்றாகப் பாடவல்லவர் ஆனார். அரசியின் சங்கீத ஞானத்தை விவரிக்க ஓர் சிறு கதையுண்டு. பிற்காலத்தில், தாம் தமது அருமைக் கணவருடன் பக்கிங்ஹாம் அரண்மனையில் இல்லறம் நடத்திவரும் காலத்தில், சங்கீத சாகித்ய வித்தைகளில் அதிநிபுணராகிய மெண்டலோசன் என்னும் ஒரு ஜர்மானிய பண்டிதர் அரசியைத் தரிசிக்கவந்தனர். அப்போது பண்டிதர் தாம் இயற்றிய சில கீர்த்தனைகளைப் பாடி முடித்ததும், அரசி தாமும் ஒரு கீர்த்தனையைப் பாடுவதாகச் சொல்லி அவரது புஸ்தகத்தைவாங்கி, கடினமான ஒரு கிருதியை எடுத்து ஸ்வரங்களில் சற்றும் தவறுவாராமல், புலவர்தாமும் மெச்சி மனமகிழும்படி, இனிமையாகப்பாடி முடித்தனர்.

இளவரசி, தமக்கு நற்குண நல்லொழுக்கங்களைப் போதிக்கும்பொருட்டுத் தமது தாயார் எடுத்துக்கொண்ட விசேஷ சிரமத்துக்குத் தக்கபடி, பெரும்பயனை அடைந்தாரென்பது அவருடன் பிற்காலத்தில் அடுத்துப்பழகிய ஒவ்வொருவருக்கும் நன்றாகத் தெரியும். பிற்காலத்தில், அரசியினிடத்தில் விசேஷமாக விளங்கின ஒவ்வொரு சிலாக்கியமான குணமும் "விளையும் பயிர் முளையிலே" என்றதுபோல அவரது குழந்தைப் பருவத்திலேயே அவரிடத்தில் நிலையாகக் குடிகொண்ட உண்மை, நீதி, அன்பு, இரக்கம் முதலிய நற்குணங்களை விளக்கும் விர்த்தாந்தங்கள் அநேகம் உள்ளன. அவை அரசியின் குணங்களைத் தெரிவிப்பதேயல்லாமல் படிப்போர்களுக்கும் மிக்க பிரயோசனமாகுமாதலின் அவற்றில் சிலவற்றை இங்கு விவரிப்போம்.

* மஹாராணியார் ஹிந்துஸ்தானி பாஷை கற்கத் தொடங்கினபொழுது அவருக்கு வயது 60.



முதல் முதல், "பொய்யாமையன்ன புகழில்லை யெய்யாமை எல்லாவறமுந்தரும்" என்றபடி வாய்மையே சமஸ்தமான பெருமைக்கும் நன்மைக்கும் காரணமாகி, இம்மையில் அழியாப்புகழையும் மறுமையில் அளவில்லாத சுகத்தையும் கொடுக்குமாதலின், மக்கட்பிறப்பையடைந்தவர் யாவர்க்கும் அது முக்கியமாயினும், மக்களுட் சிறந்து மநுநெறி செலுத்தி மன்பதையோம்பும் மன்னர்க்கு அது இன்றியமையாததாதலினால், இளவரசி பால்யம் முதலாக மனமொழி மெய்களால் பொய்மையைத் தவிர்த்து மெய்மையையே ஆசரிக்கும்படிப் போதிக்கப்பெற்று, அதைத் தமது பால்ய முதலாகத் தமக்கு உறுதிப்பொருளாகக் கொண்டனர்.

ஒரு நாள் பாடம் படிக்கையில், உபாத்தியாயரிடத்தில் சரிவர நடந்துகொள்ளாமல், விளையாட்டின்மேல் திருஷ்டியாய்ப் பாடத்தைச் சீக்கிரம் முடித்துவிடும்படி உபாத்தியாயரை அவசரப்படுத்தினர். பின்பு தாயார் வந்து லெஷன் பெருமாட்டியை நோக்கி, "இன்று இளவரசி எப்படி நடந்தாள்?" என்ன அவர், "ஒருதரம் மாத்திரம் சொன்னபடி கேளாமல் விஷமம் பண்ணினர்" என்றனர். அப்போது இளவரசி தாம் சொல்லும் உண்மையால் தமது குற்றம் பலப்பட்டுத் தாயாரின் கோபத்துக்குத் தாம் அதிகமாகப் பாத்திரம் ஆகவேண்டி வருமாயினும் அதனைப் பொருள் பண்ணாமல் உபாத்தினியை மெல்லத்தட்டி "மறந்துவிட்டீரே, இரண்டுதரமல்லவா?" என்று ஞாபகம் செய்தனர். இதனைக் கருதும்போது "நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக்கறிதி" என்ற சத்திய விரதரின் தர்மம் எவ்வளவு இனிமையாக இளவரசியினிடத்தில் அதிபால்யத்திலேயே விளங்கிநின்றதாகத் தெரிகின்றது.

இந்நேர்மைக் குணமானது ஒருவர்க்கு இதர விஷயங்களைக்காட்டிலும் பணவிஷயங்களில் முக்கியமாய் இருக்கவேண்டியதாதலின், இளவரசி பால்யமுதலாகப் பணவிஷயத்தில் பிசகாத நேர்மையும் நாணயமும் உடையவராகக் கற்பிக்கப்பட்டு வந்தனர். அவர் ஒருநாளும் தம்மால் நிர்வகிக்கமுடியாத செலவைச் செய்வதும் இல்லை; தம்மால் அடைக்க முடியாத கடனையும் ஒருநாளும் வாங்குவதில்லை. சாதாரணமாக அரசர்களுக்குள் இந்த சுபாவம் இருப்பது மிக்க அருமை. தங்களுக்குவேண்டியபடி எவ்வளவோ வரும்படியிருந்தாலும், அவ்வளவும் போதாமல் அபரிமிதமாகக் கடன் வாங்கி வீண்செலவு செய்தல் அவர்களுக்குள் வழக்கம். அரசியோ பணவிஷயத்தில் மிக்க நிஷ்கர்ஷையுள்ளவர். இதைத் தெரிவிக்க அநேக திர்ஷ்டாந்தங்கள் உண்டு. அவற்றுள் ஒன்றை இங்கு குறிப்பிடுவோம். தாம் குழந்தையாயிருந்தகாலத்தில் ஒரு நாள் ஒரு கடையில் தமக்குப் பிரியமான விளையாட்டுக் கருவியொன்றைக்கண்டு அதை வாங்கவேண்டுமென்று ஆசைகொண்டனர். ஆனால் அதற்குப் போதுமான பணம் அப்போது கைவசம் இல்லாமையினால், சற்றே தயங்கிநிற்க, அதுகண்டு, கடைக்காரன் "பணம் அப்புறம் கொடுக்கலாமே, இதைக்கொண்டுபோங்கள்" என்று அதை எடுத்துக் கொடுக்கவும், இளவரசி அதற்குடன்படாமல், அப்பொருளை அவனிடத்திலேயே விக்ரயம் செய்யாமல் வைத்து வைக்கும்படித் திட்டம் செய்துவிட்டு, மறுநாள் வந்து பணத்தைக்கொடுத்து அதை வாங்கிக்கொண்டுபோனர். இக்குணமானது அரசிக்கு பால்யத்திலேயே உண்டாகி, வர வர உறுதியடைந்து, முடிவுவரையில் மாறாமல் நிலைநின்றுதவியது.

இவ்வாறு, பணவிஷயத்தில் மிக்க கவனமும் நாணயமும் உடையவராயிருத்தல் பெரிதோ? இதை இவ்வளவு சிறப்பித்துச் சொல்லவும்வேண்டுமோ? என்று சிலர் எண்ணக்கூடும். அங்ஙனம் எண்ணுதல் சரியன்று. உல

கத்தில் தமக்கும் பிறருக்கும் உண்டாகும் சுகதுக்கங்களுக்கு முக்கியமான காரணம் பணமே. பணத்தைப் பராமரியாமல் வரவுக்கு மிஞ்சின செலவுகள்செய்து கடன்படுதலினும் துன்பம் வேறில்லை; கடன் படாமையினும் சுகமும் வேறில்லை. இதனாலன்றோ "கடனுண்டு வாழாமை முன்னினிதே" என்றும், "மேலே கடனிருப்ப வேண்டுமோ வூணுறக்கம், பாலேயும் கைப்பாகும் பார்" என்றும்,

"விடன்கொண்ட மீனைப்போலும் வெந்தழன்
மெழுகுபோலும்
படன்கொண்ட பாந்தள்வாய்ப் பற்றிய
தேரைபோலும்
திடங்கொண்ட ராமபாணம் செருக்களத்
துற்றபோது
கடன்கொண்டார் நெஞ்சம்போலும்
கலங்கினனிலங்கைவேந்தன்."—

என்றும் இவ்விஷயத்தை வற்புறுத்திப் பலவாறு கூறியிருக்கின்றனர். அரசர்கள் கடன்படுவாராயின், அதனால் அவர்களுக்கேயன்றி குடிகளுக்கும் உண்டாகும் துன்பம் இவ்வளவவ்வளவென்றில்லை. இவ்வுண்மையறியாமல் நமது தேசத்தில் எத்தனைபேர் சிற்றரசர்களும், ஜமீன்தார்களும், அபரிமிதமான துர்விரயம் செய்து பெருங்கடன்பட்டு, அரசும், ஆஸ்தியும், சீரும், சிறப்பும் இழந்து சிறுமைப்பட்டுப் போனவர்கள்? அரசியோ, அவனிடம் கடன்வாங்கினர், இவனைக் கடன்கேட்டார், அந்த வர்த்தகன் கொடுத்து முழுகிப்போனான். இவன் மோசம்போனான் என்று அங்கங்கு வம்பர்கள் குசுகுசுவென்று சொல்லிக்கொள்ளச் சிறிதும் இடம்வைக்காமல், தமக்குரிய வரும்படியைக்கொண்டே சமஸ்தமான செலவுகளையும் செய்துகொள்வதனால், மனோசஞ்சலமும் அவஸ்தையும் அடையாமல் சுகமாயிருப்பதன்றியும், பலகாரணங்களிலும் முக்கியமாக இவ்வொரு காரணத்தாலும் குடிகள் தம்மை மிகவும் நேசித்துச் சிலாகித்துக்கொள்ளவும் பெற்றிருந்தனர்.

இச்சம்பந்தத்தில், அரசியின் வரவு செலவுகளைப்பற்றி சிலருக்கு அறிய விருப்பமுண்டாகுமாதலின், அவற்றை இங்கு சிறிது விவரிப்போம். அரசிக்கு பார்லிமெண்டாரின் தீர்மானப்படி, அரசிப்பட்டத்துக்கு வந்தகாலம் முதல், பிரதிவருஷமும் மூன்று லக்ஷத்தெண்பத்தையாயிரம் பவுன் கொடுத்துவரப்படுகின்றது. இதைத்தவிர வேறே வரும்படி அரசிக்கில்லை. இந்த வரும்படியைக்கொண்டு தானே அரசி தமது சொந்தச் செலவுகளும், தம்பரிசனங்களின் சம்பளங்களும், தமது குடித்தனச் செலவுகளும், தம் பெண்பிள்ளைகளின் படிப்புச் செலவுகளும் சமஸ்தமும் செய்துகொள்ளவேண்டும். அங்ஙனமாயினும், அரசிக்கு வரவர சம்சாரமும் செலவுகளும் அதிகரித்துக்கொண்டுவந்தும், அன்றுமுதல் இன்றுவரையில் ஒரு அறுபது வருஷகாலமாகத் தமக்கு நிர்ணயிக்கப்பட்ட வரும்படி போதாதென்றும், கூடவேண்டுமென்றும் குடிகளைக் கேட்டவரல்லர். இவ்வொரு விஷயத்திலேயே அரசியின் செட்டும் கட்டும் நிதானமும், விதரணமும், ஒருவாறு ஊகித்தறியலாகும்.

அரசியின் மிதவிரயத்தைப் பற்றியும், அதில் அவர்க்குள்ள விருப்பத்தைப்பற்றியும், சில சங்கதிகள் இங்கு விவரிக்கலாகும். ஐரோப்பா கண்டத்தில் உள்ள அநேக அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் உடுப்புகள்செய்து கொடுப்பவனாகிய பாரிஸ் வர்த்தகனொருவன், சிலநாளைக்குமுன், நியாயசபையில் ஒரு வழக்கில் இவ்விஷயமாகப் பிரஸ்தாபிக்கவேண்டி வந்தகாலத்தில், ஐரோப்பிய அரசர்களுக்குள்ளே தன்னிடத்தில் உடுப்பு செய்வித்துக்கொள்ளாதவர் இங்கிலாந்து மஹாராணி ஒருவர்தாம் என்று சொன்னானாம். இதனால் இராணியவர்கள் வீணாகப் புச்சமும், குச்சமுமான இடம்பமான உடைகளில் பணத்தைக் கொட்டுவதில்லையென்பது நன்றாக விளங்கும்.



இளவரசி, பல சமயங்களிலும் தாமே நேரிட்டுக் கடை கண்ணிகளுக்குப்போவது வழக்கம். ஒருநாள், தாம் ஒரு நகைக்கடைக்காரன் கடைக்குப்போயிருந்த காலத்தில், அங்கு இளம்பிராயமுள்ள துரைமகள் ஒருவள் தங்கக்கொலுசொன்று வாங்கவேண்டி வெகுநேரம் பலதினுசுகளைப் பரிசோதித்துப் பார்த்தும் திருப்திப்படாமல், கடைசியில் ஒரு கொலுசை ஆராய்ந்து எடுத்துக்கொண்டு விலையை விசாரித்ததில், அது அதிக விலைபெற்றதாயிருந்ததுகண்டு, கொஞ்சம் முகம்வாடி "அம்மா! இவ்வளவு விலைகொடுத்து எனக்கு வாங்க நிர்வாகமில்லை" என்றுசொல்லி அதைத் திரும்பக்கொடுத்துவிட்டு இன்னொன்று இலகுவிலைக்கு வாங்கிக்கொண்டுபோனாள். அதைப் பார்த்துக்கொண்டிருந்த இளவரசி, அவள் போனபின், கடைக்காரனை நோக்கி "இவள் பெயர் உனக்குத்தெரியுமா?" என்று கேட்க அவன்தெரியும் என்றதும் "அவள் விரும்பின கொலுசை அவளுக்கு அனுப்பி தனக்கு வாங்கச் சக்தியில்லாததொன்றை வாங்காமல் தன் விருப்பத்தை அடக்கிய அவள் குணத்துக்கு மெச்சி விக்டோரியா இளவரசி அதை அவளுக்குப் பரிசாகக்கொடுத்தனுப்பினர் என்று தெரிவிப்பாய்" என்று உத்தரவு செய்தார்.

இதற்கு நெடுநாளைக்குப்பின், அரசியின் உருவம் எடுக்கப்பட்ட ஒரு காலத்தில், அவர் யாதோர் நகைகளும் பூட்டிக்கொள்ளாமல் ஒரு கறுப்புப்பட்டு மாத்திரம் உடுத்து உருவம் எடுக்கத் தயாராயினர். அப்போது, அருகில் இருந்தவர்கள் "ஏதாவது சில நகைகள் பூட்டிக்கொண்டால் அலங்காரமாயிருக்குமே" யென்ன, அரசி "வேண்டாம்; இவ்வுருவம் என் பிரஜைகள் பலரும் பார்க்கக்கூடியதாதலினாலும், என்னால் ஆனவரையில் அவர்களுக்குள்ளே வீண்செலவு செய்வதைத் தவிர்க்க வேண்டுமென்பது என்னிச்சையாதலாலும், இப்படியேதான் இருத்தல்வேண்டும்." என்றனர்.

## KAMALABAI.

SHORT STORY.

## கமலாபாய்.

(ஒரு சிறுகதை.)

"பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும்
பொருளல்லதில்லை பொருள்."—திருக்குறள்.

அது ஓர் ஏழைக்குடும்பம். அதில் தரித்திரம் அதிகரிக்கத் தகுந்தவளவு பிரஜாவுற்பத்தி அதிகப்பட்டு கடோரமான வருத்தத்தையும் சங்கடத்தையு முண்டாக்குவது சகஜந்தானே. அதற்கு குசேல சரித்திரத்தைவிட வேறு திருஷ்டாந்தமும் வேண்டுமோ? அநேகமாய் பெண்களுக்கு பிறந்தவீட்டில் விசேஷ சொம்பும் தெம்பும் நிறைந்திருந்தபோதிலும், புகுந்தவீட்டில் அஃதில்லாவிட்டால் சிறப்பும் சீரும் விசேஷமாயிராதென்பது திண்ணமன்றோ? நமது கதாநாயகி கமலாபாய் பிறந்தவிடமாகிய முன்னூற்றுமங்கலத்திலுள்ள அநேக தென்னை, மா, கமுகு முதலிய தோப்புக்களுக்கும், நஞ்சை புஞ்சை பூமிகளுக்கும் சொந்தக்காரர் நமது கமலாபாயின் தந்தை ஹரிராயர். இவர் வடதேசத்திலிருந்து வந்த கர்னாடகப் பிராம்மணரெனப் புலப்படுகிறது. இவர்காலத்திலரசாண்ட இராஜ சிரேஷ்டர்களுக்கு தன் வேலைத்திறமையினால் திருப்தியையுண்டுபண்ணி அநேக பூமிகளை சர்வமானியமாகப் பெற்றவர். அவ்வூரில் 365-அந்தணர்களுடைய கிரகங்களுண்டென்றும், இவர்கள் ஹக்கிரபூமி என்னப்பட்டவிடத்தில் தங்களைநாடிவந்த சிவமூர்த்தி என்ற புராணப்பிரசிரேஷ்டருடைய வாக்கினால் கேட்ட சத்சரிதைகளுக்கு பிரதிபலன் கொடாமல் தூஷித்துத் துரத்திவிடவே, அவர் தேசாதிபதியிடம் அவர்கள் வஞ்சனையையும், அக்கிரமத்தையும் முறையிட, இராஜனும் அவர்களை கடுமையாய்த்தண்டித்ததாகவும், பிறகு ஜகதீசன் கட்டளைப்படி இவர்கள் சகர சக்கரவர்த்திக்கு அறுபதினாயிரம் பிள்ளைகளாய் க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்து, கபிலர் சாபத்தால் சாம்பலாய், பகீரதனுடைய முயற்சியால் இப்பூமி

யில் வந்த கங்காநதியினால் விமோசனமடைந்து, முன்னூற்று மங்கலத்தில் பிராமண குலத்தி லுதிக்கவும், புராணீகர் அடுத்த மலையில் பகாசுரனாக உற்பவிக்கவும், முன்வினையினால் அவர்கள் தினப்படி அவ்வசுரனுக்கு சில வண்டிகள் நிறைய அன்னமும், அதற்குத்தக்க காய்கறிகளும், தயிர், நெய், பலகாரங்களும், ஒருமனிதனும் ஆகாரமாக அனுப்பிக்கொண்டு வர ஏற்பட்டதாகவும், பிறகு அவ்வசுரன் பீமனால் சம்ஹாரம் செய்யப்பட்டதாகவும், இராமாயண காலக்ஷேபத்தின் பலனாய் அவன் பின்பு பரீக்ஷித்து மகாராஜனாய்ப் பிறந்ததாகவும், சிற்சில கிரந்தங்களால் தெரியவருகிறது. நமது ஹரிராயர் இராஜாங்கத்தாரால் வடதேசத்திலிருந்து வரவழைக்கப்பட்டவராதலால் பகாசுரனுக்கு விருந்தளிக்க ஏற்பட்டவர்களில் உட்படவில்லை. இந்நகரையடுத்து பவானி நதி எக்காலத்திலும் வற்றாமல் ஓடிக்கொண்டிருந்தபடியால், விசேஷ நிலவளம் நீர்வளம் பொருந்தி கண்ணுக்கெட்டியதூரம் தெங்கு; மா, கொய்யா முதலிய பழ மரங்களாலும் பயிர் பச்சைகளாலும் நிறைந்து, வனமிருகங்களும் பக்ஷிஜாதிகளும் மலிந்து, ரமணீயமாயிருந்ததாகத் தெரியவருகிறது. யானைத் தந்தங்களும் மான்கொம்புகளும் காடுகளில் எரிகரும்புக்காகச் செல்கிறவர்களுக்கு சர்வசாதாரணமாய் அகப்படுகிறதுண்டென்றும், சில தந்தங்கள் எடுப்பாரின்றி மண்ணுக்கிரையாமென்றும் கூறப்படுகிறது. இந்நகருக்கு சந்திரசேகரபுரம் என ஒரு நாமமுமுண்டு. இராயர் காலத்திற்குப்பிறகு அவர் குமாரன் நாகோஜிராவ் தந்தையின் சகல சொத்துக்களுக்கும் பாத்தியஸ்தனாய், தான் இலக்ஷ்மி புத்திரன் என்பதை வெளிஜனங்களுக்குக் காட்ட, தனக்கும் தன் குழந்தைகளுக்கும் சமுசாரத்திற்கும், உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரையில் பொன்னாபரணங்களையும் கல்நகைகளையும் செய்து பூண்டு, பட்டாடைகளையும் ஜரிகைவஸ்திரங்களையுமன்றி மற்றத் துணிகளையணியாமல், அலங்கரித்துக்கொண்டு வெகு கம்பீரமாய் யாரையும் லக்ஷியஞ்செய்யாமல் ஈவிரக்கமின்றி, தன் தந்தையை யடுத்துப் பிழைத்து வாழ்ந்துவந்த சுற்றத்தாரையும் பந்துக்களையும் நீக்கினதுமன்றி, தன் ஒரே சகோதரியும், நமது கதாமணியுமாகிய கமலாபாயையும் புக்ககத்திற்குப் போகும்படி யனுப்பிவிட்டனர்.

கமலமோ பிறந்தநாள்முதல் விவாகமாகிற வரையிலும், விவாகமான பின்பும் புருஷனுடன் தாய் வீட்டிலேயே வாழ்ந்து யாதொரு கவலையும் கிலேசமுமின்றி இருபத்திரண்டு வயதிற்குள்ளேயே நான்கு குழந்தைகளைப் பெற்று மகோன்னத தசையிலிருந்தவளானபடியால் வறுமை என்பதையும், கஷ்டமென்பதையும் அறியாள். இவள் தகப்பன் ஜீவந்தராயிருக்குங்காலத்தில், இவள் ஏதோ காரியார்த்தமாய் வெளியேபோனால், தந்தை உடனே இவளை 'கமலா வெயிலில் போகாதே உன் முகம் வாடுவதை நான் சகியேன்' என்று கூவியழைத்து பக்கத்திலுட்காரவைத்துக்கொண்டு இன்சொல் கூறுவார். பெயருக்குத் தக்க வழகும் குணமுமமைந்து கற்புக்கரசியாய் விளங்கினவளை பச்சாதாபமின்றி சகல ஆடையாபரணங்களையும் கவர்ந்துக்கொண்டு தமயன் துரத்திவிட்டபடியால், குழந்தைகளுடன் புருஷனையும் கூட்டிக்கொண்டு கால்நடையாகப் புக்ககம் சேர்ந்தனள்.

சங்கர்ஜி எனப் பெயர்வாய்ந்த புருஷனோ மாமனார் வீட்டுச் சொத்தை நம்பி கணபதிபுரமென்ற ஊரிலுள்ள தன் வீடுவாசல் பூமி காணிமுதலியவைகளை அலக்ஷியஞ்செய்து, சிறுவயதிலேயே மாமனார் வீடுசேர்ந்து அகவிலையறியாதவராயிருந்தபடியால், தன்னூர் சேர்ந்த பிறகு ஜீவனோபாயம் தெரியாமல், குடும்ப சம்ரக்ஷணார்த்தம் வெகு கவலைமேலிட்டு, பிதார்ஜிதமான சொத்துக்களை ஒவ்வொன்றாக விற்றுத்தின்றும் நாள்கழிந்தபாடில்லை. யாம் ஆதியில் சொன்னபடி மறுபடியும் இரண்டு குழந்தைகள் அதிகரித்தன. முந்திய பெண்ணுக்கு விவாகமும், பிந்திய



பிள்ளைக்கு உபநயனமும் நடத்த, காலம் நெருங்கி மனத்தைவருத்திற்று. விசாலமான பழைய வீட்டில் விளக்குவைக்க எண்ணெய்க்கும் வழியில்லை. தரித்திரம் மேலிட்டபடியால் ஒருவேளைப் போஜனத்திற்கும் திண்டாட்டமாயிற்று. கடன் கொடுப்பாருமில்லை. வீட்டின்பேரில் கடன் கொடுத்திருந்த ஆசாமி கோர்ட்டில் வழக்கிட்டு வீட்டை ஜப்திசெய்ய, ஏலம் போடத் தேதிகுறிக்கப்பட்டது. சங்கர்ஜி எங்கேயோடித் தப்பிக்கலாமென்று யோஜிக்கிறார். குழந்தைகள் பசியால் வருந்துகின்றன. கமலமோ கண்ணும் கண்ணீருமாய் தவிக்கிறாள். இங்கே ஸ்திதி இங்ஙனமிருக்க,

தமயன் நாகோஜி வீட்டை கவனிக்கும் பொழுது அவன் திரவிய மகிமையால் கண் தெரியாமல், அறிந்து பழகினவர்கள் எதிர் வந்து நின்று பெயர் குறிப்பு சொன்னபோதிலும், தெரியாதவன்போல் பாசாங்கு செய்துகொண்டு தன்னுடைய கைவிரல்கள் நிறைந்து கல்லிழைத்த மோதிரங்களையும், பெண்சாதி யணிந்துக்கொண்டிருக்கிற பொன்னாபரணங்களையும் அடிக்கடி பார்த்து ஆநந்தித்துக்கொண்டிருந்தான். அவன் பெண்சாதியோ மகா கொடியவள். ஒருநாள் அவன் தன் சமையலறையிலிருக்கையில் ஒரு ஸ்திரீ இயற்கை யழகே மிகுந்து செயற்கை யழகின்றி சில குழந்தைகளுடன் வந்தாள். அவர்களைப் பார்ப்பதற்கு வெகு தூரத்திலிருந்து நடந்து வந்தவர்கள்போல் நெற்றியில் நீர்வடிய, பசியால் களைப்படைந்து, கண்குழிந்து, நின்று பேசவும் சக்தியற்றவர்களாய்த் தோற்றினார்கள். சுமார் மணி பதினொன்றிருக்கலாம்.

'நொய்தாந் திரணத்தி னொய்தாகும் வெண்பட்சி
னொய்தா மிரப்போ னுவ்வுங்கா—னொய்யசிறு
பஞ்சதனி னொய்யானைப் பற்றாதே காற்றனுக
வஞ்சுமவன் கேட்ப தறிந்து.'

என்றபடி இவர்களுடைய அலங்கோலத்தைக்கண்ட காற்றும் பயப்படுவது நியாயமாகவிருக்க, அதற்கு விரோதமாக இரக்கமுற்று இளங்காற்று வீசியது. நெற்றியில் வடிகிற வியர்வை நீரைக் கையால் வழித்து எறிந்துக்கொண்டு நின்றவளைக்கண்ட நாகோஜியின் மனைவி "யார்?" என்றும், "என்ன சங்கதி?" என்றும் கேட்கவில்லை. இதனால் இன்னாரென்று தெரிந்துகொண்டே மமதையாலும், கர்வத்தாலும் லக்ஷியஞ்செய்யவில்லை என்பதை யறிந்தவள் நாணமுற்று, 'பசியறியாது வெட்கமும் நாணமும்' என்பதற்கிணங்க 'நாகோஜி எங்கே' என்று கேட்டாள்.

நாகோஜிமனைவி.—"அவர் எங்கே போனாரோ? யார் கண்டது? வேலை என்ன?" என்பதாகக் கடுகடுத்த வதனத்துடன் கூறி முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

வந்தவள்.—குழந்தைகள் நடந்துவந்த அலுப்பால் அழுகின்றன. கொஞ்சம் பழைய அன்னமிருந்தால் குட்டிகளுக்குப்போடேன்.

நாகோஜி மனைவி.—(கோபக்குறி தொனியுடன்) இங்கே யார் பழையது சாப்பிடுகிறார்கள்?

'கொதிக்கிற கூழுக்கிருப்பீரானால்
இருப்புறை காணலாம்' என்றனள்.

வந்தவள் முகம்வாடி துக்கம் தொண்டையிலடைக்க, பசி வயிற்றைப் பிடுங்கித்தின்ன, குழந்தைகள் இதுகொடு அதுதா வென்று அலட்ட, புறக்கடைப்புறம் திரும்பி கொல்லையை நோக்கித் தன் குழந்தைகளுடன் சென்றனள். அவ்விடத்தில் நாகோஜிராவ் சிறசில பண்ணையாட்கள் செய்கிற வேலையை மேற்பார்வை பார்த்துக்கொண்டிருந்தவர், வந்தவர்களைக் கடைக்கண்ணால் பார்த்து சும்மா விருந்துவிட்டனர்.

வந்தவள்.—(சற்று பொறுத்திருந்து) நாகோஜி, குழந்தைகள் பசியால் தவிக்கிறது. சமையலோ இன்னுமாகவில்லை. தென்னமரத்திலிருந்து நான்கு இளநீராவது போடச் சொல்லி வெட்டிப் பொத்திக்கொடேன்.

நாகோஜி முணுமுணுத்துக்கொண்டு இரண்டு இளநீர் தள்ளச்சொல்லி வெட்டிக் கொடுப்பித்தான். அவை அதிக இளசான குரும்பையானபடியால், நீரும் கொஞ்சம்,

தேங்காய் வழுக்கல்கூட அதிகமாயில்லை. ஒரு குழந்தைக்காவது தொண்டைகூட நன்றாக நனையவில்லை. குழந்தைகள் எனக்கு உனக்கென்று செய்கிற ரகளையையும் ஒரு குழந்தை தேங்காய் மட்டையிலுள்ளதை தன் பல்லால் சுரண்டித் தின்பதையும் கண்ட நாகோஜி 'தரித்திரப் பிணங்கள்' என்று சொல்லி வேறு வேலையாய்ப் போய்விட்டான்.

வந்தவள்.—

"நல்லார் இளந்தேங்காய் நன்றாய்க் காய்த்தாயே
பாவி இளந்தேங்காய் பாலாடைபோற் காய்த்தாயோ?"

என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள். குழந்தைகளைத் பொறுமையுடன் இன்சொற்களால் ஆதரவூட்டிக்கொண்டு மெல்ல மெல்ல நடந்து பகல் சுமார் ஒரு மணிக்கு காரைச்செடிகள் நிறைந்த ஒரு காட்டின் வழியே செல்கிற பாதையினோரத்திலுள்ள ஒரு குட்டையையும் கன்னிமார் கோவிலையும், அதன் பக்கத்திலுள்ள ஆலமரத்தடியில் வழிப்போக்கர்கள் தங்கி சமையல்செய்து எறிந்துவிட்டுப்போன பெரிய மண்பாத்திரங்களையும், மூக்கல்லால் கூட்டப்பட்ட ஒரு அடுப்பில் தீபுகைந்துக்கொண்டிருப்பதையும் கண்டு, ஒரு பெரிய சட்டியை யெடுத்துக் கழுவி காரைச்செடிகளிலுள்ள இளந்தளிர்களைக் குழந்தைகளும் தானுமாகக்கொய்து, சட்டியிலிட்டு, அடுப்பேற்றி தகுந்த அளவு நீரையும் வார்த்து, தீக்கொளுத்தி வேவித்தனள். குழந்தைகளுக்கு கீரை சுண்டித் தருவதாய் வாக்களித்தும், ஆசைகாட்டியும், குட்டையில் விளையாட உத்தரவுகொடுத்தும், ஆயாசந்தீர்த்ததன்றி, இப்பேர்க்கொத்த அனுதரவான காலத்தில் கலங்காத மனுடிட முன்னவனாயிருந்தாள்.

இங்ஙனம் பிள்ளைகள் ஒருபுறம் விளையாட, தான் அடுப்பண்டையுட்கார்ந்து கீரையைக் கிண்டிக்கொடுத்து அதற்கிட உப்பில்லாததால் விசனமுற்று பரிபூரணரும் சர்வவியாபகருமான பகவானை, "ஆபத்பாந்தவா" என வாய்விட்டுக் கதறிக்கூவி அனுதியாகிய தானசெய்யும் கீரையை தேவாமிருதமாகும்படியாகவும், தன் குழந்தைகளை அதனால் பசியாற்றும்படியாகவும், மன்றாடி வருந்தினாள், வாடினாள், நமஸ்கரித்தாள், கைகூப்பினாள், சிரமேற்றாக்கினாள் பலதரம்.

இரண்டு தடவை மூடியிருக்கும் சட்டியைத் திறந்து கீரையைப்பார்த்தாள். நீராவியால் கீரை கண்ணுக்குப் புலப்படவில்லை. கொம்பு கொண்டு எடுத்துப்பார்த்தாள். பொன்னிறமான ரசம் கசம்பியோடிற்று. சுகவாசனை கமகமவெனப் பரிமளித்தது. அவற்றை முகர்ந்த புள்ளினங்கள் கூவிப்பறந்து வட்டமிட்டன. பிள்ளைகள் பசியால் வருந்தும் கஷ்டத்தையும், தாயின் பரிதாபத்தையும் கண்டுகேட்ட கதிரவன் மனதிரங்கித் தன் கிரணங்களை யொடுக்கி சுவர்ணநிறமாய் மேற்குத் திக்கில் பிரபரப்பா யோடிக்கொண்டிருந்தான். சட்டியை அடுப்பைவிட்டிறக்கி, சூடாறின பிறகு ஆத்திரத்தினால் எல்லோரும் வட்டமாக நின்று, கீழே கற்பாறையின்பேரில் கவிழ்த்தார்கள். கலகலவென்ற சப்தத்துடன் குவிந்தது. . . . . .

* * * *

கண்டார்கள். கண்குளிர்ந்தார்கள். ஆநந்தித்தார்கள். பசி பஞ்சாய்ப்பறந்தது. குதூகலத்துடன் பேருக்குக்கொஞ்சமாக வாரிக்கட்டிக்கொண்டு,

"காரைச்செடி வாழ கன்னியம்மாள் குட்டைவாழ,
காரைநகர் வாழ—இன்னுஞ் சிலகாலம்
செல்லப்பிறந்தகமும் வாழ."

எனவாழ்த்தி, கடுகி வழிநடந்து முச்சந்தி வேளையில் விநாயகபுரம் சேர்ந்தார்கள்.

இவர்கள் தரித்திரத்தின் கொடுமையால் தமயன் வீடு சென்ற கமலாபாயும் குழந்தைகளும் என்பதையும், இவர்களுக்கு கடவுள் கிருபையால் அகப்பட்டது ஒருகோடி திரவியமென்பதும், இதைப் படிப்போருக்குத் தெரியாதிராதெனநம்பி மேல் நடந்தவற்றை ஒருவாறு கூறுவாம். தமயன் வீடுசென்ற வரலாற்றையும், தனக்கு தமயன் இவ்வளவு திரவியமும் கொடுத்ததாகவும் புருஷனிடத்தில் சொல்லி, வேண்டிய பொன்னாபரணங்களையும் நகைநட்டுகளையும் தனக்கும் தன் குழந்தைகளுக்கும் செய்துக்கொண்டு கொஞ்சநாள் சென்ற பிறகு தனக்குக் கடவுள் கிருபையாலுண்டாயிருக்கிற போகபாக்கியங்களைப்பற்றி தமயனுக்குத் தெரிவித்து, சகலாபரணரூடியாய், குழந்தைகளுக்கும் வேண்டிய ஆடை ஆபரணங்களை அணுவித்து, இரண்டு குதிரைகள் பூட்டிய வண்டியிலேறிக்கொண்டு தமயனைப் பார்க்கப் புறப்பட்டனள்.

தமயன் தன் பெண்சாதி பிள்ளைகளுடன் ஒருமைல் தூரம் எதிர் சென்றுவந்து, சகோதரியும் அவள் குழந்தைகளும் அணிந்துக்கொண்டிருக்கும் ஆபரணங்களையும் பட்டாடைகளையும் கண்டு ஆநந்தித்து, கட்டித்தழுவி முத்தமிட்டு, கைக்குழந்தையை தன் சம்சாரத்தினிடத்திற் கொடுத்து, எடுத்துக்கொள்ளச் செய்து, மூத்தகுமாரனை தன் கையில் பிடித்துக்கொண்டு வண்டியேறிச்சென்று வீடு சேர்ந்து, தீர்த்தமாடச்செய்து முந்தியே ஏற்பாடு செய்திருந்தபடி சித்தமாயிருந்த ஷட்ரச பதார்த்தங்களையும் பக்ஷண பலகாரங்களையும் தலைவாழை இலைகளில் பரிமாறி உட்கார்ந்து போஜனஞ் செய்யும்படியாக உபசரித்துப் பிரார்த்தித்தார்கள்.

* * * *

கமலாபாய் இந்த அமர்க்களத்தைக் கண்டு ஆநந்தித்து உடனே தான் முன் வந்தபொழுது நடந்தவைகளை நினைத்துத் துக்கித்து, இவ்வாடம்பரத்திற்கும் துக்கத்திற்கும் காரணம் தானும் தன் குழந்தைகளும் அணிந்துகொண்டிருக்கும் நகைகளும் பட்டாடைகளுமே எனத்துணிந்து, உடனே குழந்தைகளும் தானுமணிந்துக்கொண்டிருந்த நகைகளில் காரை, வங்கி, பவுன்மாலை, அட்டிகை, காப்பு முதலிய சிலவற்றை கையில் வாங்கி பல பக்ஷண பதார்த்த பழவர்க்கங்களால் பரமாரப்பட்ட இலைகளின்முன் வைத்து "ஓ! காரையே, லட்டு சாப்பிடு, ஆ! வங்கியே, பாயசங்குடி, ஏ! பவுன்மாலையே, பேணியை ருசிபார்! ஓ! அட்டிகையே, அதரசம் புசி!' என்று அடுக்கடுக்காகப் பலதரம் கூறி நகைகளை எடுத்து அணிந்துக்கொண்டு பிள்ளைகளுடன் சரேலென்று புறப்பட்டு வண்டியேறி கணபதிபுரம் சேர்ந்து சுகித்திருந்தனள்.

* * * *

நாகோஜியும் அவன் மனைவியும் யாதொன்றும் தோன்றாமல் மரம்போல் நின்று திகைத்தார்கள்.

"நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சுமரம் பழுத்தற்று."—திருக்குறள்.

## LESSONS IN CIVICS.

### FACILITIES FOR EXCHANGE.

பண்டமாற்றலுக்குவேண்டிய சாதனங்கள்.

1. Currency. 2. Banks 3. Weights and Measures.
கரன்ஸிகள். பாங்கிகள். அளவைகள்.

முன் காலத்தில் பணம் என்பது கிடையாது. ஆனால் நாகரீகம் என்பது ஏற்படு முன் ஜனங்கள் அவரவர்களுக்குவேண்டிய சாமான்களைச் செய்துகொண்டும் ஒருவரிடமிருந்த பொருளை மற்றவர்களுக்கு கொடுத்து பண்டமாற்றிக்கொண்டும் வந்தார்கள். இதற்கு (Barter or Exchange without the Medium of Money) என்று பெயர். அவரவர்கள் பொருளை அவரவர்கள் உபயோகிக்கிறதற்கும் பணத்தை கொடுத்து பொருளை வாங்குகிறதற்கும் இடையாயுள்ளதற்கு (Medium of Exchange) என்று பெயர். ஒருவன் தன்னிடமுள்ள வஸ்துவை பிறருக்குக் கொடுத்து பிறன் வஸ்துவை மாற்றிக்கொள்வதாயின் இருவரிடமுள்ள வஸ்துக்களும் ஒரே நிலையுள்ளதாக விருக்கவேண்டும். இல்லாவிடில் ஒருவர்க்கொருவர் மாற்றிக்கொள்ளச் சம்மதிக்கமாட்டார்கள். அப்படிக்கின்றி ஒரே வஸ்து ஒரு சமயத்தில் கிராக்கியாகவோ மலிவாகவோ ஆகக்கூடும். அப்படியானால் ஜனங்கள் சாமானைக்கொடுத்து மாற்றுவது சிரமசாத்தியமாயிருக்கும். ஆகையால் எந்த சாமானை நாம் உபயோகிக்கிறோமோ அதன் மதிப்பு ஒரே நிதானமாய் இருக்கவேண்டும் அடிக்கடி மாறக்கூடாது. இதற்கு (Standard Value) என்று பெயர்.

### QUALITIES NECESSARY FOR MONEY.

நாணயங்களுக்கு வேண்டிய குணவிசேஷங்கள்.

1. அதற்கு மதிப்பும் உபயோகமுமிருக்க வேண்டும். (It should posses value & it must be useful)

2. சுலபமாய் ஓரிடமிருந்து மற்றோரிடம் கொண்டுபோகக்கூடியதா யிருக்கவேண்டும். (Easily portable).

3. சுளுவில் பிரித்தெடுக்கக்கூடியதா யிருக்கவேண்டும். (Divisible.)

4. சீக்கிரத்தில் அழியக்கூடாததாயிருக்க வேண்டும். (Indestructible).

5. அதன் மதிப்பு அடிக்கடி மாறக்கூடாது. (Value unchangeable).

மேற்சொன்ன குணங்களையெல்லாம் உடையது தங்கமும் வெள்ளியும்தான். இவைகளைத் தவிர்த்து இதர உலோகங்களும் நாணயங்களாக வழங்கி வருகின்றன.

MONEY USED IN OLDEN DAYS.

முற்கால நாணயங்கள்.

வேட்டையாடும் நிலைமையிலுள்ள ஜனங்கள் எலும்பையும் தோலையும் மேய்ச்சல் நிலைமையிலுள்ள ஜனங்கள் ஆடுமாடுகளையும் வியவசாய நிலைமையிலிருந்த ஜனங்கள் தானியப் பொதிகளையும் நாணயங்களாக வழங்கி வந்தார்கள். இன்னும் New Guinea போன்ற விடங்களில் அடிமைகளை, பணமாகவும் Sahara Desert போன்ற விடங்களில் உப்பை நாணயங்களாகவும் இன்னும் சிலவிடங்களில் (Couri Shells) சோழிகளை நாணயங்களாகவும் வழங்கி வந்ததாகத் தெரியவருகிறது. உலோகங்கள் அகப்பட்டு நாணயங்களாகச் செய்யுமுன் தங்கப் பொடிகளை பைகளில் கட்டி நாணயங்களாகவும் தங்கக்கட்டிகளையும், தங்கக்கம்பிகளையும் நாணயங்களாகவும் உபயோகப்படுத்திவந்தார்கள். இதனால் சில கெடுதல்கள் ஏற்பட்டன. இராஜாங்கத்தார் உத்திரவில்லாததனால் ஜனங்கள் ஒருவர்க்கொருவர் மோசம் செய்ய இடமுண்டு. நாணயத்துண்டுகளை உபயோகித்தால் ஜனங்கள் நல்ல உலோகங்களை வாங்கிக்கொண்டு கலப்பு உலோகங்களைக் கொடுத்து மோசம் செய்தார்கள். உலோகங்களில் வரம்பு முதலிய யாதொரு அடையாளமுமில்லாததால் குறைக்கவும் இடமிருந்தது. இம்மாதிரியான மோசங்களையெல்லாம் அறிந்த துரைத்தனத்தார் நாணயத்தின் ஒரு பக்கத்தில் இராஜா அல்லது இராணியின் தலையும் மற்றொரு பக்கத்தில் நாணயத்தின் மதிப்பும் சில பூவேலைகளும் இருபக்கங்களிலும் வரம்புகளும் உள்ளதாய் (Milling) நாணயங்களடித்து வருகிறார்கள். இந்த அடையாளங்கள் நாணயங்களின் இடையை நிச்சயப்படுத்தவும் சூது மோசமில்லாமல் உலோகங்களை (Proportionate) அளவுடன் கலக்கவும் வெட்டிக் குறைத்தெடுக்க முடியாமலும் இருப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

CURRENCY.

கரன்ஸி.

| | |
|---|---|
| 1 Mettallic Curiency. | 2. Paper Currency. |
| உலோக நாணயங்கள். | காகித நாணயங்கள். |
| 1. Standard Coins. | 2. Token Coins. |

இந்த உலோக நாணயங்கள் இருவகைப்பட்டது.

STANDARD COINS.

Mettallic Value. Legal value.

ஒரு (Metal) நாணயத்தின் மதிப்பு அது உலோகமாக விருந்தாலும் பிறகு நாணயமாக மாற்றப்பட்டாலும் ஒரே மதிப்புள்ளதாகவிருக்கவேண்டும். ஒரு நாணயத்தின் விலை குறைந்தால் அல்லது அதிகமானால் பொருள்களின் விலைக்குத் தக்கபடி பணங்கொடுத்து சாமான்கள் வாங்க ஏற்பட்டிருக்கும். அப்படிக் கொடுத்து வாங்க உபயோகப்படுத்துவது தங்க நாணயங்களுக்கு மட்டும்தான். வெள்ளி முதலிய நாணயங்களுக்கு எப்பொழுதும் ஒரே மதிப்புத்தான். ஆகையால் தங்க நாணயங்களை Standard Coins என்று சொல்லப்படுகிறது.

TOKEN COINS.

நாணயக்குறி.

சாமானின் விலை எப்படியிருந்தபோதிலும் நாணயத்தின் மதிப்பு ஒரே மதிப்புதான். பவுனின் மதிப்பு 15-ரூபாயாயிருந்தபோதிலும் 15-முதல் 18-ரூபாய் வரையில் சிலாவணியாகிறது. ரூபாய், அரை ரூபாய் முதலிய வெள்ளி நாணயங்கள் அப்படி சிலாவணியாகிறதில்லை. ஆகையால்தான் இந்த வெள்ளி நாணயங்களுக்கு (Token Coins) நாணயக்குறி என்று பெயர். மேலும் ஒரு பவுனை உருக்கினால் 15-ரூ. மதிப்புள்ள உலோகம் தேறிவிடும். ரூபாயோ 9-அணா வெள்ளிதான்தேறக்கூடியது. இன்னும் இவைகளைத்தவிர்த்து செம்பு முதலிய உலோகங்களையும் நாணயங்களாக அடித்து வருகிறார்கள். நாம் கஜானாவில் பணத்தைக் கட்டினால் சிறு தொகைகளுக்கு அரை ரூபாய், கால் ரூபாய்கள்தான் எடுத்துக்கொள்ளுகிறதில் அவர்களுக்கு சிரமமில்லாமலிருக்கிறது. பெரிய தொகையாயிருந்தால்தான் ரூபாயையும் (Sovereins) பவுன்களையும் எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆகையால் பவுன், ரூபாய், இவைகளுக்கு Legal Tender என்று பெயர்.



THE CHILDREN'S PAGE.

THE EVILS OF AMBITION.

சிறுவர்க்கான பக்கம்.

"பேராசை பெருங்கேடு."

பல நூற்றாண்டுகளுக்குமுன் மகேந்திரபுரம் என்பது ஒரு சிறந்த நகராய் விளங்கிவந்தது. அந்நாளில் அந்நகரை பகவான்தாஸ் என்னும் பார்த்திபன் பரிபாலனம் பண்ணிவந்தான். அக்கால் அவ்வம்பதி மாளவ தேசத்திற்குக் கப்பங்கட்டிக்கொண்டு வந்துகொண்டிருந்தது. ஆதலால் பகவான்தாஸ் திறைகட்டிவரும் சிற்றரசனாய் இருந்தான்.

அந்நாளில் அவ்வூரில் கேசவபட்டர் என்னும் பெயர்பூண்ட அந்தணனொருவன் வாழ்ந்துவந்தான். அவன் கலைமகள் கடாக்ஷம் குறைவறப்பெற்ற கண்ணியன், ஆயினும் திருமகள் கருணையற்றவனாய்த் தெருத் தெருவாயலைந்து, பிச்சைக்கப்பரையேந்தி உஞ்சிவிருத்தி செய்து உயிர் வாழ்ந்துவந்தான். லக்ஷ்மி கருணையற்ற பிக்ஷுகனாயிருப்பினும் அவன் அத்தேவியின் திருவடித் தாமரைகளைக் கணமேனும் மறவாது தியானம் செய்துவந்தான். இவ்வாறு சின்னாட்செல்ல இலக்குமியும் அவன் மேலிரக்கம்கொண்டு அவன் இலக்ஷாதிகாரியாகும்படி கடாக்ஷித்தருளினாள். பார்ப்பான், ஒருநாள் வழக்கம்போல் வேறோரூரில் பிக்ஷை பெற்று வீட்டுக்குத் திரும்புங்கால், இருள் பரவும் நேரமாய்விட்டது. இனிச் சாலைவழியே செல்லுவது சாலவும் சல்லியமெனச் சிந்தித்து, குறுக்கே ஓர் சிறு காட்டின்கண் இறங்கி ஒரு ஒற்றையடிப் பாதையாய் வந்துகொண்டிருந்தான். அப்போது, பக்கத்தில் சலசலவென்று ஒரு சத்தமுண்டாக, அந்தணன், குலை நடுக்கமுற்றுக் குப்புறவிழுந்தான். விழுந்ததும், இவன் பக்கலில் "கல் கல்" என வெண்கலம்போல் ஏதோ ஒரு சத்தமுண்டாயது. உடனே பயந்த பார்ப்பானுக்குப் பயித்தியமே பிடித்துவிட்டதுபோல் விரைந்தெழுந்து வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு வேகமாய் ஓடவாரம்பித்தான். ஓடுபவன், உயிரிருந்தால் எப்படியேனும் முறைவுபெறலாம். உயிரே போகுங்கால் உணவுஎன்ன செய்யும் என்று ஆலோசனை செய்துகொண்டு பிக்ஷை மூட்டையை வீசியெறிந்தான். அம்மூட்டை தற்செயலாய் அவன் முன்விழுந்த இடத்திலேயேவிழ மறுபடியும் "கல் கல்" என்ற சத்தம் எழும்பியது. எழும்பியசத்தம் கேசவபட்டர் செவியை எட்டியதும், வெகு வேகமாய் ஓடி வீடடைந்தனன் அந்தணன். வீடடைந்ததும் பயமற்றவனாய்த் தான் கேட்ட சத்தத்தைப்பற்றிச் சிந்தித்தான். அதைப் பற்றி நினைக்க நினைக்க அவனுக்கு அச்சத்தம் ஒரு புதையல் குவியலினின்றும் கிளம்பியதாயிருக்கலாம் என்று எண்ணம் தோன்றியது. உடனே மறுநாள் விடிந்ததும் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுவோமென்று தீர்மானஞ் செய்துகொண்டான்.

மறுநாள் இருள் கழிந்ததும் வேதியனெழுந்து வேற்க விருவிருக்க, விருக்ஷம் நிறைந்த வக்காட்டிற்குக் கடப்பாறையும் கையுமாய்க் கடுகி நடந்தான். சிலதூரம் சென்றதும், தான் முந்திய சந்தியில் எறிந்து சென்ற மூட்டையைக் கண்டான். கண்டதும் அதனருகில் தோண்டலுற்றான். தோண்டியவன் மனமகிழ தோண்டிபொன்று பெரிதாயகப்பட்டது. அதன்கண் விலைபெறு மாணிக்கங்களும், நிகரிலாக் கெம்புகளும், கண்பறிக்கும் வைரங்களும், மனங்கவரும் மஞ்சப்பொன் காசுகளும் நிறைந்திருக்கக்கண்டான். ஆனாலும் பெருநிதியடைந்த நிர்மலப் பார்ப்பானையடைந்தது, பணப்பேயென்னும் ஒரு கொடும் பாவி. அப்பேயின் வசப்பட்டதும் அவனிதயம் மாறியது. "பிக்ஷைவாங்கியவன் க்ஷணத்தில் லக்ஷாதிகாரியாய்விட்டான்? லக்ஷப்பிரபு கோடீச்ரவனாக ஏன் ஆகக்கூடாது" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். உடனே பணத்தைப் பெருக்கும் வழியேதென்று நினைத்தான். பலவற்றினும் வியாபாரமே சாலச் சிறந்ததெனப்பட்டது. பணப்பேயின்

பெருதவியால் வைதிக விர்த்தியை விட்டு வியாபாரத்தொழிலில் நழுவ நிச்சயம் செய்து கொண்டான். தத்க்ஷணமே, பிக்ஷை மூட்டையை, யவிழ்த்து அதிலிருந்த அக்ஷதையில் கொஞ்சம் எடுத்து, தோண்டியின் வாய்ப்புறத்தை மூடி விட்டுக்கெடுத்துச் சென்றான்.

விடடைந்ததும் தானடைந்த விலையேறப்பெற்ற கற்களை விற்றுத் தனமாக்கிக்கொள்ள நிச்சயித்து, இருந்த மற்ற மாசற்ற மஞ்சட்காசுகளைத், தன் மனதுக்கியைந்த செட்டியொருவனிடம் விட்டுவிட்டு, வெளித்தேயம் போக நினைவுகொண்டான்.

தோண்டியிலிருந்த ரத்தினங்களையெல்லாம் வெளியே யெடுத்துவிட, பொற்காசுகளெல்லாம் அத்தோண்டியிற் பாதியை நிறைத்தன. பாக்கித் தோண்டியில் அரிசியை நிரப்பித் தன் நண்பனிடம், அதைக் கொண்டுபோய், அத்தோண்டியில் அரிசி யிருப்பதாகவும், தான் வெளியூர் போவதால், அதைக் காப்பாற்றி வைத்திருந்து தான் வந்ததும் கொடுத்துவிடுமாறு வேண்டிக்கொண்டனன். நண்பனும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டனன்.

காசு விசாரம் நீங்கியதும், கல் விசாரம் பார்ப்பான் மனத்தைக் குடிகொண்டது. அவைகளையும் விற்றுப் பொன்னாக்க மனங்கொண்டு அவைகளை யெடுத்துக்கொண்டு மாளவதேசத்து மன்னவனுக்கு விற்கப் புறப்பட்டுச் சென்றான். அக்கற்களை விற்பனை செய்துவிட்டு ஊருக்குத் திரும்புங்கால் அவனைச் சில* பெருவழிப்போக்கர், வழிமறித்து, பணம்பறித்து உபநயனம் செய்தனுப்பினர். இருதரம் உபநயனம் செய்விக்கப்பெற்ற இருடி, பழைய பார்ப்பானாகி, வழிப்பிச்சையெடுத்து ஊர் நோக்கி வந்துகொண்டிருந்தான். மகேந்திரபுரம் நோக்கி வந்துகொண்டிருந்த பட்டனை நோக்கி வந்துகொண்டிருந்த கொண்டிச் சனியவனை விட்டகலவில்லை. அப்பொழுது பகவான்தாஸ், மாளவதேசத்து மன்னனுக்குக் கப்பங்கட்ட மறுத்துவிட்டான். மறுத்தவனை அமர்க்களத்தில் முறித்துப் பணம்பறித்து வர மனங்கொண்ட மாளவமன்னவன், பகவான்தாவின்மேல் ஒரு பெரும்போர் தொடுத்தான்.

போராரம்பமானதும், கேசவபட்டனை மாளவதேசத்தார், பகையாளி யொற்றனென்று கைதுசெய்து, அவனுக்கு காராக்ருகப்ரவேசம் செய்வித்தனர். அவன் அவ்விடத்திலேயே சிலகாலம் இருக்க நேர்ந்துவிட்டது.

இவன் கதி இவ்வாறாக, மகேந்திரபுரத்தில் வர்த்தகனோ வேதியன் மர்மமறியானாய் இருந்து வந்தான். ஆயினும் அவ்வூரில் கொடிய பஞ்சமொன்று, போரினால் நேரிட்டது. அக்காலத்தில் அரிசி விலையேற வர்த்தகன் அந்தணன் அரிசியை இப்போது உபயோகப்படுத்திக் கொண்டால், பின்னால் பார்த்துக்கொள்வோமென நினைந்து, பார்ப்பான் மடாவைக் குப்புறக் கவிழ்த்தான். கவிழ்த்தவன் கண்குளிர எல்லாம் கனகக் காசுகளாய்க் கொட்டின. "இவ்வேதியன் நமக்கல்லவோ காதுகுத்த யத்தனித்தான். நாம் நாட்டுக்கோட்டையனென்பதும், நம் செவி நீளம் இன்னதென்றும் அறியாதவனானல்லவோ வேதியன். ஆயினும் யாம் அவன் பட்டனென்பதையும், அவனுக் கிவ்வண்ணம் நாமம் சாத்த வேண்டு மென்பதும் நன்கறிவோம்" என்று மனமகிழ்ந்து பொற்காசுகளையெல்லாம் தன் பொற்கொடியாள் வசமொப்புவித்துவிட்டுப் பார்ப்பான் தோண்டியில் தான் பின்பு வாங்கி வந்த அரிசியை நிரப்பிவைத்து விட்டான்.

மறுநாள் என்ன பாபமோ, செட்டியின் ஊழ்வினையே உருவெடுத்து வந்தாற்போல் கேசவபட்டன் அவன்முன் வந்து தோன்றினான். வந்தவனை யழைத்து, முகமன்கூறி, அவன் அரிசித்தோண்டியை அவனிடமொப்புவித்தான். "செட்டி அவன் வீடுசென்று தோண்டியைத் தோண்டிப்பார்க்கப் பொற்காசுகள் பறந்து போய், பருக்கைநிகர் அரிசியிருக்கக் கண்டான். கண்டதும் மனம் விண்டான். செட்டியினிடம் ஓடினன், ஓடித் தொகையை வேண்டினான். செட்டி மறுக்க வெகுண்டான். வெகுண்ட முனிவனைச் செட்டி அலக்ஷியம்செய்து, அவன் அரிசித்தோண்டி வைத்துப்போக, அரிசி ஒன்றுக்கு முதவாது கட்டிதட்டுமேயன்றி நாணயங்களாகக் குட்டிபோடுமோ" என்று பரிகாசம் செய்தனன். ஏளனம் செய்யவே பட்டன் சினம் அளவுகடந்தது. உடனே சொல்பவன் உடல் நடுங்க, கேட்பவர் குலைநடுங்க பார்த்தவர் மனநடுங்கச், செட்டியைச் சபிக்கலானான். "அடே பாபி! ஹே பிராமணத்துரோகி! என் வயிறெரியுங்கால் நீ குளிர வாழ்வையா? வைத்துச்சென்ற பணத்தையில்லையென்று மறுக்கத் துணிவுகொண்ட நின் நரம்பற்ற நாக்கை நான் கண்டிக்க எந்நேரம் பிடிக்கும்? நீ நரகமென்னும் குழிக்கு, நாற்றங்காலாய்ப்போய் நீள்காலம் நலிக! நின் குடும்பம் நசிக்க! நின் சந்ததிகள் வேறற்றுப் போக!" என்று சரமாரியாய்ப் பொழியவாரம்பித்தனன்.

இவ்வளவு தூரம் தன்னை மானபங்கப்படுத்திச் சபித்த பட்டனைப் பொருளாய் அச்செட்டி அதிகாரிகளிடம் பிரியாது செய்துகொண்டான். அதிகாரிகளும், அந்தணன் வார்த்தைகள் பிசகென்று கருதி, நேற்றுக் கோவணத்திற்குத் துணி கேட்டவன் இன்று எவ்வாறு கோடீச்வரனானான். ஆதலால் இவன் பேசுவது சுத்தப் பொய்யென மதித்து அவனுக்குத் தண்டனை விதித்தார்கள்.

இவ்வாறு பட்டன் சிக்ஷிக்கப்பட்டானென்று தெரிந்ததும் அப்பட்டினத்தார் மிகுந்த விசனமடைந்து, பட்டனை அரசனுக்கு நேரே மனு செய்துகொள்ளுமாறு புத்தி கூறினர். பட்டனும் அவ்வாறே செய்துகொண்டனன்.

அன்றிரவு பகவான்தாஸ், மாறுவேடம் பூண்டு ஊர்சோதனை வந்துகொண்டிருந்தவன், சில சிறுபிள்ளைகளின் விளையாட்டை ஆச்சர்யமடைந்து பார்த்துக்கொண்டிருந்தான். அவர்களில் ஒருவன் நியாயாதிபதிபோல் பீடம் வகித்து உட்கார்ந்திருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம், அந்நியாயதிபதி முன்னர், கேசவபட்டன்போல் நடித்தவனும், செட்டிபோல் நடித்தவனும் கொண்டுவரப்பட்டனர். நியாயாதிபதி இருவர் வாக்குமூலங்களையும் வாங்கிக்கொண்டு, தோண்டியைக்கொண்டு வருமாறு கட்டளை யிட்டான். தோண்டிவந்ததும் அதிலிருக்கும் அரிசியைப் பார்த்துவிட்டு செட்டியை நோக்கி "ஐயா! நீர் இந்தத் தோண்டியை எடுத்ததுண்டா இல்லையா" என்று வினவ, செட்டி சாமிசாக்ஷியாயில்லை யென மறுத்தான். உடனே அச்சிறு நியாயதிபதி மெச்சத்தக்க புத்திகூர்மையுடன் "ஐயா செட்டியாரே! இவ்வரிசி ஏது, சென்ற வருஷத்திய நெல்லினின்றும் குத்தியெடுத்தது போற் காண்கிறதே! நீரோ அவ்வந்தணர் ஊர் விட்டுப்போய் ஏழு வருஷத்திற்கு மேலாகிறது என்கிறீரே! இவை யிரண்டில் எது நிஜம் எது பொய்? என்று கேட்க செட்டி "மதியிழந்து வாயிழந்து," தன் குற்றத்தை யொப்புக்கொண்டு பணத்தை மீட்டும் கொடுத்து விடுவதாக ஒப்புக்கொண்டான்.

அது கேட்ட அரசன் அகமகிழ்ந்து, "இச்சிறுவன் புத்திசாதுர்யம் என்னே! நம் சட்ட நிபுணரான நியாயதிபதிகளனைவரும் இப்பாலனுக் கீடாவரோ! தீவட்டிமுன் தீபம் நிற்குமோ? சூரியன்முன் மின்மினி சோதியாகுமோ?" என்று சிந்தித்தவாறே தன்னரண்மனை சார்ந்தனன்.

மறுநாட்காலை, மனுச்செய்துகொண்ட பட்டனையும், மற்றப் பிரதிவாதியையும் அழைத்துவரக் கட்டளையிட்டான். அவன் பின்னர் தான் முன்னிரவு கண்ட சிறுவனையும் அழைத்துவந்து, அவர்களிருவரையும் விசாரித்து, நியாயம் தீர்க்குமாறு வேண்டிக்கொண்டனன். சிறுவனும் தான் முன்னிரவு நடித்ததுபோல், தோண்டியைக் கொண்டுவரச்சொல்லி, அது புது அரிசியென்று ரூபித்து, செட்டியைக் குற்றவாளியாக்கினான். அது கண்ட நியாயாதிபதி அழுக்காறு கொண்டவனாய், செட்டி ஒரு வேளை அரிசியை, உபயோகித்திருக்கலாமென்

* பெருவழிப் போக்கர்—High way men.

றும், அத்தோண்டியில் பொன்னாணயங்கள் இருந்திருக்க நியாயமில்லை யென்றும் வாதித்தான். இதைக் கேட்டதும் பகவான்தாஸ் ஏங்கலானான். சிறுவன் இவ்வினாவிற்கு யாது விடை பகர்வன்? என்று சிந்தித்துக்கொண்டிருந்தான். செட்டியின் முகமும் மலரவாரம்பித்தது. ஆயினும் சிறுவன் பாலசந்திர வதனம் வாடவேயில்லை.

உடனே அவன் செட்டியை நோக்கி, "ஐயா இப்பொழுது நீர் நான் சொல்லியபடி எழுதும் நீர் குற்றவாளி யென்பதும், உத்தமனென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்" என்றார். செட்டியார் எழுத மனமற்றவராயிருந்தாலும் மன்னனருகிலிருக்கையில் மறுக்கமருண்டான். உடனே அச்சிறுவன் செப்பியவாறே வரையலுற்றான். அவ்விதம் பின்வருமாறு "அடியேன் பொற்கொடியாளே! நாம் பொற்காசபகரித்ததெவ்வாறோ சிற்றரசர் செவியுற்றது. அவர் என்னுடை குற்றமறிந்து என்னைத் தூக்கிலிட உத்தரவளித்துவிட்டார். இப்பொழுதும் வேதியன் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டால், உனக்கு மாங்கல்யப்பிச்சை யளிப்பதாக வாக்களித்தனர். என்னை யுனக்கு இனிப்பார்க்கவேண்டுமெனுமார்வமுளதேல், இது கொணரும் கொத்தவாலிடம், பொன் பூட்டிய பெட்டியைக் கொடுத்தனுப்புவாய். இங்ஙனம், பெட்டியை யெதிர்பார்த்து நிற்கும்,

............செட்டியார்.

இக்கடிதம் கண்ட கற்புடைய காரிகை செட்டியார் இல்வாழ்க்கைத்துணைவி. அவர் உலகவாழ்க்கையைக் கொஞ்சநாள் நிலைநிறுத்த எண்ணங்கொண்டு, பூட்டிய பெட்டியைச் சாவியுடன் நியாயஸ்தலத்துக்கனுப்பினாள். பெட்டி சிறுவன் கைக்கெட்டியது, நியாயாதிபதி தலை 1 முழம் குறைந்தது. இறங்கிய முகமும், சுருங்கிய கண்ணுமாய், அதிகாரி வெளியே நடந்தான்.

இவைகளைக்கண்ட வேந்தன் அடங்கா மகிழ்ச்சிகொண்டு அச்சிறுவனை ஆலிங்கனம் செய்துகொண்டனன். அவனையே பிரதம நீதிபதியாய் நியமித்தான். பின்னர் செட்டியார் தம் பாவத்தின்பலனை பெற்று தன் சொத்து முழுதையும் இழந்து, ஊர்விட்டோடிப் போயினார். வேந்தனருளாலும், பாலன் புத்தியாலும், பணம்பெற்ற வேதியன் தன் ஆஸ்தியையெல்லாம், அந்தச் சிறுநீதிபதிக்கே யளித்தான். அவனுக்குச் செல்வத்தினிடத்து மிகுந்த வெறுப்புண்டாயது. "இது செல்வம், செல்வமே! ஓரிடம் நிலைபெற்றிருப்பதில்லை." "பொருளீட்டலும் துன்பம் ஈட்டியதைக் காத்தலும் துன்பம்; காத்தல் குறைபடிற்றுன்பம், கெடிற்றுன்பம், செலவிடிற்றுன்பம்;" இங்ஙனம் பலதுன்பங்கள் பயக்கும் பணத்தை நம்பொணாது மெய்தானே' "ஆறிடுமேடும் மடுவும் போலாம் செல்வம்!" ஆ! வாஸ்தவம் தான். நான் தனவந்தனானதும் தனமற்றவனானதும் போதுமே; இதற்காக என்ன ஓட்டம் ஓடினோம், என்னபாடு பட்டோம், என்னபொய் சொன்னோம். என்ன வருணாசிரமதர்மம் கைவிட்டோம், என்ன அடிபட்டோம், என்ன சிறைபட்டோம், என்ன கோபம் கொண்டோம் எவ்வாறு வாய்கூசாது சபித்தோம், ஐயே! இன்னும் என்ன பாவம் செய்தோம். எல்லாம் எதற்காக? இந்தப் பொன்னுக்காக அடாடா; சிவனேயென்று, பிக்ஷையை வாங்கி புஜித்து கிருஷ்ணா ராமா கோவிந்தா வென்று உட்காந்திராமல், வியாபாரியாய், மோசஞ்செய்து, அடியுதை இவைகள் பட்டு, நியாயஸ்தலம் போக நேர்ந்ததல்லவா? ஆ! இது என்ன துச்சம்! இதனால் யாருக்கு என்ன பிரயோஜனம். பணமா பாக்கியம், வித்துள்ளவன் தூங்கான் என்பது எவ்வளவுநிஜம். இவ்வாறு நம்மைப் பலவழியிலும் மோக்ஷ மார்க்கத்தைவிட்டு, பொட்டைக் குதிரைபோல், கல்லும், முள்ளும் நிறைந்தபாட்டையி லிழுத்துச்செல்லும் இப்பணத்தை பேன் மானிடரிவ்வாறு பூஜிக்கின்றனர். பணமுள்ளவன் எவ்வளவு பாபங்களைச் செய்கிறான். கள்ளும், பொய்யும், காமமும், கொலையும், பணத்திற்காகவே, பணத்தாலேயேயன்றி மற்றவைகளுக்காக விருப்பது மிகவுமரிது. பணமென்னும் அசவம் ஆரோகணித்து, வாழ்வு என்னும் ஆற்றைத்தாண்ட விரும்பியவன், மண்குதிரையை நம்பி நீர் பெருகிபோம் நிஜவாற்றினிறங்கிய, மடமானிட னொப்பனல்லனோ" என்று சிந்திக்கலானார். பின்னால் அவைகளையெல்லாம் வெறுத்துச் சந்நியாசம் வாங்கிக்கொண்டு, சன்மார்க்கத்திற்சேர்ந்து, ஜீவன்முக்தரானார்.



செட்டியார் ஊரைவிட்டோடிய செய்தி கேட்டதும், அவர்மனைவி தற்கொலை புரிந்துகொண்டாள். அவர், ஒருநாடு கடக்கையில் முன் பட்டனிடம் பணம் பறித்தவரிடம் அகப்பட்டுக்கொள்ள அவர்கள், "நாம்தாம் ஏதோ, இல்லாக்கொடுமை பார்ப்பானை உதைத்து ஏதோகொஞ்சம் பிடுங்கிக்கொண்டோம்; இந்தச்செட்டி நல்லகொழுத்த பணக்காரச் செட்டி, அவரிடம் பாவம்! ஏதோ கொஞ்சம் மிச்சமிருந்ததையும் பிடுங்கிக்கொள்ளப் பார்த்தான். இவனை லேசிலேவிடப்போகாது" என்று சொல்லி நையப்புடைத்தனுப்பினர். செட்டியார் அடிதாங்காமல், "ஐயோ பிராமணத் துரோகியானேனே! அவன் சாபம் பலித்துவிட்டதே. "என்வீடு எருக்குமுளைத்து எலிகள் குடியிருக்கலாச்சே,' என்னுருயிர்த்துணைவி வருந்தி உயிர் விடலாச்சே, என் சொர்ணசரீரம், என்ன கஷ்டப்பட்டு வெகுநாளாய் வளர்க்கப்பட்ட தேகம் இவ்வாறு புடைபெறலாச்சே! என்கவலையற்ற சித்தம், வருத்தம் கனக்க கிழியலாச்சே! எல்லாம் எதனால்? பொன்னுக் காசைப் பட்டல்லவோ! அந்தோ பிராமண சாபம் கொடிதுகொடிது" என்றுவருந்தி உயிர் விட்டான்.

இவ்வாறு அறிவு கெட்டுப்போன இவ்விருவர் பட்டபாடும் கெட்டகேடும் என்னே! யோசிக்குங்கால் பயமாயிருக்கிறதே. ஆயினும் இவர்கள் எப்போது செல்வத்தை வெறுக்கலானார். அதையடைய அவர்கள்செய்த முயற்சியில் வருத்தம் வந்தபோதல்லவோ அவர்கள் செல்வத்தை யிகழ்ந்தனர். மற்ற நாளில் அவர்கள் பணத்தாற் சுகம் பெறவில்லையோ என்பதும் நியாயமானதொரு கேள்வியே. ஆயினும் அவர் சிறிது சுகம் பெற்றவராயினும் பெருந்துன்பமிறுதியிலடைந்தனரல்லவோ? அதைக்கண்டு நாமும், அநியாயமாய்ப் பொருள்தேட விரும்புவதும், அநேகமாய் ஊரார்பணத்தை யபகரிப்பதும், சொல்லொணாத் துயரத்திற் கிடமாகும். "திரைகடலோடியும் திரவியம்தேடு" என்று ஔவை சொல்லினளேனும், ஒருகட்டுக் கரைபோடே பொருள் சேகரிக்கவேண்டியது, நம் இகபர சாதகத்திற்கு இன்றியமையாததாகும்.

## EXTRACT : HEALTH NOTES.

### சுகாதாரக் குறிப்பு.

சுகாதார விதிச் சுருக்கம்விரும்பு
சுத்தக்காற்றைச் சுவாசித்திருநீ
ஜீவஜெந்து நெருக்கமேவுவதைவிடு
நிலைவிளக்கறையி னித்திரைகொள்ளாதே
அழுகினவஸ்துவை யாசித்தலாகா
தோப்பினிரவிற் றூங்கலாகாது
துர்க்கந்தத்தைச் சுவாசித்தலாகாது
காற்றுள்ளவிடத்தில் வீற்றிரப்போதும்
சுகமேபகலிற் றோப்பிலிருப்பது
மழைபெய்யக் காற்று மாசினைப்போக்கும்
வீட்டிற்குப்பை விழச்செய்யாதே
வீட்டருகு குப்பை மேவுந்தீதே
ஆடுமாடுகள்வீட் டருகில்வையாதே
வீட்டில் மலஞ்சலம் விடுத்தலாகா
விடுத்தாலுடனே வெளியாக்கவேண்டும்
சாலகங்கால்வாய் சாலவுஞ் சுத்திசெய்
துர்க்கந்தவினைகளைத் தூரத்தினில்வை
தேகம் வஸ்திரம் கிரகந் தினமுஞ் சுத்திசெய்
கரித்துகள் துர்க்கந்தங் காணுதொட்டிடும்
கழிமண்டுகளாற் கந்நாற்றம்போம்
வீட்டிற் கடிக்கடி வெள்ளையடித்துவா
உப்பைப்புகைக்க வோடும்விஷவாயு
அயோடினைக்கண்டா லகலும்வசூரி
செம்புத்திராவகமுஞ்சேர்க்கவேநாற்றம்போம்
கந்தகப்புகையாற் காணுதுவிஷவாயு
சுகாதாரம் விட்டாற் சுகமென்பதில்லை
சுகாதாரம் விரும்பிச் சுகமாக வாழ்க
சுத்தஜலபானஞ் சுத்தத்திற் காதாரம்
கண்ணாடிபோலக் காண்பது சுத்தநீர்
இரசனைவாசனை யிற்றது சுத்தநீர்
வண்டற்படியா மாண்பது சுத்தநீர்
பருப்புக்காய் வேகும் பக்குவஞ் சுத்தநீர்
அசுத்த ஜலபானத்தா லகட்டிற் பூச்சியாம்.
அசுத்த ஜலபானத்தா லநேக சுரங்களாம்
அசுத்த ஜலபானத்தா லநேக பேதியாம்
அசுத்த ஜலபானத்தாலண்டிடும் வாந்தி
சுண்ணத்தரை நீராற்சூழ்குடனோய் மந்தமாம்
சுண்ணத்தரை நீராற் சுககேடும் பேதியாம்
அழுக்கு ஜலபானத்தா லற்புதச் சிலந்தியாம்
அழுக்குஜல முழுக்கா லணுகிடுஞ் சிலந்தி
அழுக்குஜலத்தா லநேக வியாதிகள்
சுத்தமழைநீரே உத்தமஞ் சுகத்திற்கு
அசுத்தமழைநீரா லளவிலாக்கேடு

சுத்தநதிநீரால் முத்தோஷந் தாகம்போம்
கெட்டநதிநீரால் வெட்டைசுரம் பேதியாம்
அசுத்தக்குளத்து நீராகா சுகத்திற்கு
சுத்தமிலா வேரிநீர் சத்தினால் வாதம்
சுத்தக்கிணற்றுநீர் சுகமாகும் நாளும்
ஆற்றாற்றுநீருக் கடற்தாகம் பித்தம்போம்
பாறையது நீராற் பலபல தோஷமாம்
சுக்கான்பாறைநீர் முக்கு மூத்திரங்கபம்
கரும்பாறைநீராற் பெரும்பயன் சுகத்திற்கு
அருவிநீரா லழகுபெருந் தேகம்
வடிகட்டநீரின் வளர்குற்ற நீங்கும்
காய்ச்சினால்நீரின் கடுந்தோஷம் நீங்கும்
ஸ்நாநஞ்செய்வதே சகலசௌக்கியம்
தினஸ்நாநத்தால் மனோபலவிருத்தியாம்
தினஸ்நாநத்தாற் றேகசுகவிருத்தி
தினஸ்நாநத்தாற் றிருஞ்சொறிநோய்
தினஸ்நாநத்தாற் றேகம் பெருக்கும்
ஸ்நாநவிதியறியார் சுகவிதியறியார்
ஸ்நாநஞ் செய்யார் சுகவீனராவார்
சுத்தஜல ஸ்நாநமெத்தவிசேஷம்
உதயஸ்நாந முடம்பிற்குறுதி
போஜன ஸ்நாநம் பொல்லாது நீக்கு
ஜீரணஸ்நாநஞ் செய்தலைநீக்கு
குளிர்ந்த ஸ்நாநங் கூடாது களைப்பில்
குளிர்ந்த ஸ்நாநங் கொடுக்குமுற்சாகம்
குளிர்ந்த ஸ்நாநத்தாற் றெளிக்தோடுமிரத்தம்
குளிர்ந்த ஸ்நாநத்தாற் குதூகலிப்புண்டாம்
குளிர்ந்த ஸ்நாநத்தாற் கூடும்பலஞ்சுகம்
குளிர்ந்த ஸ்நாநந் தெளிந்தறிந்தாடு
இளவெந்நீர் ஸ்நாந மிதமாந் துளிரில்
இளவெந்நீர் ஸ்நாந மினிதெய்த்தோர்க்கு
இளவெந்நீர் ஸ்நாநமிசையுங்களைத்தோர்க்கு.

—சுகாதாரபோதினி.

பாட்லிவாலாவின் கொயினா மாத்திரைகள் (1 கிரெயின்) 100 அடங்கியுள்ள புட்டி 1-க்கு அணா 12.
பாட்லிவாலாவின் கொயினா மாத்திரைகள் (2 கிரெயின்) 200 அடங்கியுள்ள புட்டி 1-க்கு ரூபா 1-0-0.
ஆகூ மிக்ஸர் ஜ்வரம், கபம், மலேரியா முதலியவைகளுக்கு மேலானது புட்டி 1-க்கு ரூபா 1-0-0.
குளிர்சுர மருந்து மாத்திரைகள் ரூபா 1-0-0.
அஜீரண முள்ளவர்களுக்கு உபயோகமான தாதுவிருத்தி மாத்திரைகள். ரூ. 1-8-0.
பல்பொடி வாய் நாற்றத்தைப் போக்கும் அணா 0-4-0.
Dr. H. L. Batliwalla Sons&Co., Ltd.,
Worli, Dadar, Bombay.

## EVENTS OF THE MONTH.
## மாத விசேஷங்கள்.

"லோகல் அண்டு முனிசிபல் கான்பரென்ஸ்."

சென்ற மார்ச்சுமீ 17-18-ந்தேதிகளில் சென்னையில் விக்டோரியா பப்ளிக் ஹாலில் (Victoria Public Hall) ஸ்தானிகசுய ஆட்சிசங்கங்களில் ஜனப்பிரதிநிதிகளாயுள்ளவர்களின் முதல் கூட்டம் (Conference) கூடிற்று. இம்மாகாணத்தில் பற்பல பாகங்களில் யூனியன்கள், முனிஸிபாலிட்டிகள் (நகரச்சங்கங்கள்) தாலூகா போர்டுகள், ஜில்லா போர்டுகள் எனப் பெயருள்ள பல சங்கங்கள், ஜனப்பிரதிநிதிகளின் ஆதரவுடன் ஆங்காங்குள்ள ஸ்தல காரியங்களை நிர்வகித்து வருவதற்காக ஏற்பட்டிருக்கின்றன. இச்சங்கங்கள் ஜனநாயகமுள்ளதாய், இன்னும் உபயோகமாயிருப்பதற்கான சீர்திருத்தங்களை, தீர்க்காலோசனை செய்து, நேராக கவர்ன்மெண்டிற்கு அறிக்கை செய்வது இக்கான்பரென்ஸின் கருத்துகளில் ஒன்று. இதனுடைய நடவடிக்கைகள் கனம் லார்ட் பென்ட்லண்ட் அவர்களால், ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு ஆலோசனை செய்யவேண்டிய விஷயங்களை ஐந்து வகுப்பாகப்பிரித்து, பல அக்கிராசனாதிபதிகளின்கீழ் ஒவ்வொன்றும் நன்றாக நடந்தேறியது.

மாகாண சுய ஆட்சி.

அந்தந்த மாகாணங்களின் துரைத்தன காரியங்களும் விசாரணைகளும் அந்தந்த மாகாணத்தார்வசமாக விடப்படு அவ்விடத்தைச் சேர்ந்த பொது ஜனங்களின் அதிகாரப் பொறுப்பின்கீழ் அமைந்த அதிகாரிகளின் ஆதரணையில் நடத்திவந்தால், இந்தியாவானது யுத்தத்தில் இன்னும் பன்மடங்கு உதவிசெய்யக் கூடியதாயிருந்திருக்கும் என்று முன் இந்தியாவில் முக்கிய சேனாதிபதியாக இருந்த 'ஜெனரல் ஸர் ஓ. மூர் கிரேஹ்' என்பவர்,



எழுதியிருப்பதை இச்சஞ்சிகையின் முகட்டில் பிரசுரித்திருக்கிறோம். இந்த ஸ்தானிக சுய ஆட்சி சுதந்திரம் கொடுக்க 1911-ம் வருஷமே கவர்ன்மெண்டார் ஒப்பியிருந்தார்களென்றும் தெரிகிறது. இவ்விஷயம் மிக முக்கியமானதால் அடுத்த சஞ்சிகையில் விவகரித்து எழுதுவோம்.

" இந்தியா யுத்த கடன்."

இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியர்கள் ஒவ்வொருவரும், தங்களாலியன்றமட்டும், இந்த யுத்தத்தை தீவிரமாய் முடிப்பதில் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்கு உதவி செய்யும் பொருட்டு இந்தியா யுத்தக்கடன் ஒன்று ஏராளமாகச் சேர்க்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஏழை ஜனங்களும் இதில் கூடியமட்டும் உதவி செய்யட்டும் என்று, பல அனுகூலமான விதிகள் ஏற்படுத்தியிருப்பதுடன், கடன் தொகைக்கு மிக தாராளமான வட்டியும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சென்னை நகரவாசிகள், மார்ச்சு மாதம் 23-ந்தேதி ஷெரிப்பால் கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில், இந்தியா யுத்தக் கடனுக்கு தங்கள் சக்தியாலானது அவ்வளவையும் கொடுத்துதவுவதாகத் தீர்மானம் செய்தார்கள். அப்பொழுது கனம் லார்ட் பென்ட்லண்ட் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். ஜனங்கள் யுத்தக் கடனின் விதிகளை அறிந்துக்கொள்ளும்பொருட்டு அவைகளை விவரமாய் மற்றோரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

" THE INDENTURE SYSTEM "

'பிஜி' முதலிய தீவுகளுக்கு உடன்படிக்கையின்மேல் போகும் இந்தியர்கள் படும் கஷ்டங்களும் இந்திய ஸ்திரீகளுக்கு ஏற்படும் அவமானங்களும் சகிக்கமுடியாதவை என்றும், கனம்பொருந்திய இந்தியா கவர்ன்மெண்டார், கனம் லார்ட் ஹார்டிஞ்சி அவர்கள் ராஜப்ரதிநிதி ஸ்தானத்திலிருந்து கொடுத்த வாக்குறுதிப்படி, உடன்படிக்கைமேல் கூலியாட்களைச் சேர்க்கும் வழக்கத்தை நிறுத்தவேண்டும் என்றும், இந்தியர்கள் ஒரே மனதாய் கேட்டுக்கொண்ட விஷயம் எல்லாருக்கும் தெரிந்தே. தங்கள் சகோதரிகளுக்கேற்படும் அவமானங்கள் சகிக்கமுடியவில்லை என்று பம்பாயில் இந்திய ஸ்திரீகளெல்லாம் கூட்டம் கூடி. தீர்மானித்து, அதை நேரில் கனம் லார்ட் செம்ஸ்போர்டுக்குத் தெரிவிப்பதாய் தீர்மானித்தார்கள். அப்படியே இதர மாகாணங்களிலுள்ள இந்திய ஸ்திரீகளும் தீர்மானித்து, லேடி டேட்டா முதலிய பிரமுகர்களின்கீழ், இந்திய ஸ்திரீகள் நேரில் கனம் செம்ஸ்போர்ட் பிரபுவிற்குத் தங்கள் குறைகளை தெரிவித்துக் கொண்டார்கள். கனம் செம்ஸ்போர்ட் பிரபுவும் உடன்படிக்கை வழக்கம், யுத்தத்தின் பொருட்டு ஏற்பட்ட விதிகளின்படி நிறுத்தப்பட்டிருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம் என்றும், ஒருதரம் நிறுத்தப்பட்ட அந்த வழக்கமானது மறுபடியும் உயிர் பெறாது என்று தான் நம்புவதாயும், மிகக் கருணையுடன் கூறினார். பிறகு செம்ஸ்போர்ட் பெருமாட்டி இந்திய ஸ்திரீ பிரமுகர்களை வரவேற்று 'டீ பார்ட்டி கொடுத்து' உபசரித்தார். பொது ஜன காரியங்களில், இந்திய ஸ்திரீகளும் முன்வந்து, தங்களது அபிப்பிராயத்தை வெளியிட்டு அக்குறையை நேரில் அதிகாரியினிடம் முறையிட ஆரம்பித்தது இந்தியாவின் நற்கால வருகைக்கு ஒரு அறிகுறியென்று நினைக்கிறோம்.

கும்பகோணம் காலேஜ் ஜூபிலி.

சமீபத்தில் கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜின் 50-வது வருஷத்திய "ஜூபிலி"க் கொண்டாட்டம் திவான் பஹதூர் வி. பி. மாதவ ராவ் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடந்தேறியது. அக்கிராசனாதிபதி அவர்கள் தான் கலாசாலையில் படித்த காலத்தில், பிரின்ஸிபாலாயிருந்த போர்டர் துரை அவர்களின் குணாதிசயங்களை விவகரித்துக்கூறி, உபாத்தியாயர்களும், போதகர்களும், தங்களுடைய மாணாக்கர்களிடத்தில் அனுதாபமும் அபிமானமுமுள்ளவர்களாயிருப்பதோடு அவர்களுடன், சமமாகப் பழகி, பாடத்தைப் போதிக்கும் ஆசிரியராயிருப்பதோடு இராமல், மெய் நண்பராகவும், புத்திமதிச் சொல்லி வழிகாட்டுபவராகவும் (Teacher Friend and M..ntor) இருக்க வேண்டும் என்றும் சொன்னார். இக்குணங்களே இக்காலங்களில் மிகவும் வேண்டியவையாய் இருப்பன. பெற்ற பிதாவிற்கு அடுத்தபடியில் பையனுடைய நன்னடக்கைக்கும் அபிவிருத்திக்குமான பொறுப்பு வித்யா குருவாகிய ஆசிரியரது என்பது கவனத்திலிருக்க வேண்டும்.

### துணிகளின்மீது இறக்குமதி வரி.

இவ்வருஷத்திய புதுவரிகளில் இங்கிலாந்திலிருந்துவரும் துணிகள் முதலிய பருத்தியைச் சேர்ந்த சாமான்களுக்கு இந்தியா கவர்ன்மெண்டார், நூற்றுக்கு 3½ விகிதத்திலிருந்து வரியை 7½ விகிதத்திற்கு உயர்த்தியிருப்பது எல்லாருமறிந்த விஷயமே. இவ்வரியினால் இங்கிலாந்து வியாபாரிகளுக்கு லாபம் மிகவும் குறைந்து மிகுநஷ்டமும் ஏற்படுமென்று முறையிட்டாலும், இந்தியாவில் உற்பத்தியாகும் பருத்திச்சாமான்களுக்கும் துணிகளுக்கும் ஜாஸ்தியாக விற்பனை ஏற்பட்டு, இந்தியாவில் அக்கைத்தொழில் விருத்தியடையும். இந்திய கவர்ன்மெண்டார் தங்கள் தேசத்துக் கைத்தொழில்களை விருத்திக்கு கொண்டுவரச்செய்யும் முயற்சி மிகவும் கட்டாயமாய்ச் செய்யவேண்டியதென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இங்கிலாந்திலுள்ள லங்காஷையர் முதலிய பிரதேசங்களில் இவ்வியாபாரம் மிகவும் மும்முரமாக நடந்தேறுகின்றன. அவ்விடத்து முக்கிய வியாபாரிகள் இந்திய மந்திரியாகிய மிஸ்டர் சேம்பர்லெயினிடம் தங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தைப்பற்றி முறையிட்டு, அவ்வரியை உடனே எடுத்துவிடாவிட்டால், தங்களுக்கு இந்த யுத்தத்தில் உள்ள ஊக்கம் ஒருவேளை குறையக்கூடும் என்றும் சொன்னார்கள். ஆனால் இந்தியா மந்திரியானவர், மிகவும் சரியாய் தம்மால் அவர்கள் சொல்லுவதற்கிணங்க முடியாது என்று கண்டிப்பாய் சொல்லியும் லங்காஷையர் வியாபாரிகள் பண்ணிய ஆர்ப்பாட்டத்தில், காமன்ஸ் சபையில் இவ்விஷயமானது மறுபடியும் ஆலோசிக்கப்படும் என்று அவர்களுக்கு கொஞ்சம் இடம்கொடுத்திருக்கிறார்கள். இதை மாஜி பிரதம மந்திரியாகிய மிஸ்டர் ஆஸ்குவித்து பிரேரேபித்தார் என்பது இந்தியர்களுக்கு சிறிது ஆச்சரியமாயிருக்கிறதுடன் இந்தியர்கள் போட்டிபோட்டுக்கொண்டு எள்ளளவும் பேதமில்லாமல் இந்த யுத்தத்தில் ஊக்கத்துடனிருக்கும்பொழுது, லங்காஷையர் ஜனங்கள் மாத்திரம் பேதம் பாராட்டி, சுயநலத்தின்பொருட்டு, வாதம் செய்வது இந்தியர்களுக்கு மிகவும் விசனத்தையும், ஆக்கிரஹத்தையும் உண்டாக்கி இருக்கிறது.

### அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களின் யுத்த ஸந்நத்தம்.

பல காலமாய், ஜர்மனிக்கும் அமெரிக்காவிற்கும் புகைந்துகொண்டு வந்த மனஸ்தாபமானது முற்றி, இம்மாத ஆரம்பத்தில் இவ்விருதேசங்களுக்கும் யுத்த நிலைமை ஏற்பட்டுவிட்டது. அமெரிக்காவின் காங்கிரெஸ் சபையில் இருபிரிவுகளாகிய பிரதிநிதி சபை ஸெனேட் சபை என்ற இருவகைகளும் யுத்தத்தில் இறங்குவதென்று தீர்மானித்தபின் ஜெர்மனியுடன் யுத்தமென்று பிரஸிடெண்ட் வில்ஸன் அறிக்கை செய்துவிட்டார். இதன் முக்கிய நிமித்தமாய், உடனே 5-லட்சம் துருப்புகள் சேர்க்கப்படுவார்கள். அப்பால் அவசியமானால் இன்னும் 5-லட்சம் பேர்கள் சேனையில் சேர்க்கப்படுவார்கள். இன்னும் பல யுத்த முஸ்தீபுகள் அமெரிக்காவில் நடந்தேறி வருகின்றன. அமெரிக்கரைப் பாராட்டி நமது சக்கிரவர்த்தியும், இதர தேச அரசர்களும் பிரஸிடெண்ட் வில்ஸனுக்கு சந்தோஷ பசாரமொழிகள் அனுப்பியிருக்கிறார்கள்.

### MOTHERLAND.

## தமிழகம்.

வாழிய அன்னாய்! வாழிய அன்னாய்!
தொழுதனை வாழ்த்தினம் தாயசீர் அன்னாய்!
மிடியிருள் நீங்கி விடியல்வந் துற்றது.
என்னினித் துயில்வது? எழுந்துமுன் பாராய்!
நின்புகழ்க் கதிரவன் கோவந் துற்றனன்.
அன்புருஉக் கொண்ட அன்னாய் எழுக!
எம்மனங் குடிகொளும் இறைவியே எழுக!
எம்வாய் புகழ்தர இனியைநீ எழுக!
எங்கரங் குவிதர ஏற்பாய் எழுக!
நின்னுடைச் சீரெலாம் நேரிதில் யாங்கள்
பின்னை முறையினிற் பெறுதலும் இலமோ?
பண்டுநின் சிறப்பெலாம் பரிக்கும் அடியேம்
மறந்தனைத் துறப்பமோ? மயங்கலை அன்னாய்!
வான்மீன் திரியினும், வானம் பொய்ப்பினும்,
நின்னருந் தொண்டினை நீங்கலம் அம்ம!
களைக! களைக! கடுந்துயிற் பிணியினை!
எழுக! எழுக! ஏறுக ஆதனம்!
கவிக! கவிக! காமர்வெண் குடைநிழல்!
ஓங்குக தமிழ்மணம்! உயர்கநின் குடிகளே!

—செந்தமிழ்.

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith.*"
" *Seek Truth wherever you can find it,*" *But*, "*Make your choice and stick to it till you reach the End*

"பஞ்சவிம்சதிபாக்கியம்"] ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.** ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A·STAR." "TO THINE OWN SELF BE TRUE."




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"**New Series**" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** "**Approved**"

புத்தகம். 25.] பிங்கள௵ வைகாசிமீ, 1917௵ மேமீ. [சஞ்சிகை 2.

### Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our "terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *One month's credit at the arrears rate* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued †in the middle of a Vol.
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

### General Notice.

i. The *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised ;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to "fluctuations" and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor*) ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)
THE MANAGING AGENTS, "VIVEKACHINTAMANI,"
*Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore.*

☛ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.*

†Notice of discontinuance to have effect must be given in time in writing before a New Volume begins in April and after all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say "that every effort will be made to trace them." "If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed" continues the same high authority, "I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should invariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## "HITCH YOUR WAGON TO A STAR." IDEALS FOR YOUNG MEN.

Emerson says: "Hitch your wagon to a star.' Jesus' call to "All ye that labour and are heavy laden" refers to this wagon load of cares, trials and tribulations which are the usual burden of this wordly life. The Tamil Poet also says: "இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம்." Thus is the figure of speech common to all, be they of the East or the West, which refers to the burdens of this life to a "Wagon" loaded with the necessaries and luxuries of life. A "Star" shines high in the blue Empyrean far above the cares and turmoils of this world, shedding its light and influence on Earth and yet not affected' by that which is of the Earth, Earthy. So is the Ideal of Life far above the burdens of Life. "The Ideal of Life" is made up of many ideals which are all parts of the whole. And what are ideals? "Ideals are truths that have not yet effected themselves for men, the realities of a higher plane of existence which have yet to fulfil themselves on this lower plane of life and matter, our present field of operation."

OUR NATIONAL IDEAL.

In the case of individuals as well as nations, the influence of ideals is always great. We shall here indicate a few ideals for our young-men as set forth by a teacher but the Ideal of our Nation is the Hero and Heroine of the Ramayana. So the great seers of the Upanisheds teach and give it to the world as the Maha Mantra combined with the Ideal of Sri Krishna who is not different from Sri Rama but a development and fulfilment of the Earlier Ideal of Sri Rama to suit the March of Time which brings on its own changes.

*"Hare Rama, Hare Rama,*
*Rama Rama Hare, Hare!*
*Hare Krishna, Hare Krishna,*
*Krishna Krishna Hare, Hare!"*

And if we would pursue this ideal of our nation to our own times it is quite easy to do so, and we have only to add:—

*Hare Rama, Hare Krishna,*
*Rama-Krishna Hare, Hare!*

IDEALS FOR THE YOUNG.

And now we come to the few ideals which our young men should learn to realise in the early years of their life:

(i) *Cultivate love of knowledge and a love of study.*

"A good book is the life-blood of a master-spirit embalmed and treasured-up on purpose for a life beyond life." Such a book is Ramayana as also the Mahabharata. They are illustrations of life and characters to be found in the great Book of Nature. Learn "something of everything and everything of something."

(ii) *Pay special attention to Indian culture and studies, not neglecting western culture and studies.*

(iii) *Cultivate habits of observation, of inquiry and research.*

(iv) *Cultivate habits of industry and application.*

'*Genius*' has been defined by Carlyle as merely "*a capacity for taking pains.*"

"The heights by great men reached and kept
Were not attained by sudden flight;
But, while their companions slept
They were toiling upward in the night."

The mission of the West to the East is the mission of a strenuous life—the ideal which our ancients practised and lived up to, with what result our glorious civilisation of the past proclaims to a wondering world. As Sir Alfred Lyall has put it:

"Fast and pray—said the sages of Ind
We know not what prayer and penance may give
For visions are fading and words are wind
The faith we bring you is "Labour and live".

Our own ideal is: live and learn. We learn to live first and then live to learn until we learn the great truth of *Existence-Knowledge-Bliss.*

(v) *Cultivate the ambition of patriotic Service* which is but an aspet of *Samashti-Sevai* the so-called "social service" which is the privilege of serving our fellowmen as the service most acceptable to God, the Maker of us all.

(vi) And last but not the least: *Realise the nobility of life and conduct yourself in a fitting manner.*

In the memorable words of Gladstone, 'Remember that life is no mean and grovelling thing that you are to shuffle through as best you can, but a lofty and exalted duty." Again in the words of Browning:—

*"This world's no blot for us*
*Nor blank; it means intensely and means good.*
*To find out its meaning is my meat and drink.'*

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-2.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

பிங்கள௵ வைகாசி௴ } விவேக சிந்தாமணி { May-June. 1917.

FIRST ESTABLISHED, 1892. OUR JUBILEE YEAR, 1917.

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## "HITCH YOUR WAGON TO A STAR"

IDEALS FOR YOUNGMEN.

### இலக்ஷியத்தில் கண்ணுயிரு.

சிறுவர்க்கான இலக்ஷியங்கள்.

"தாரகலக்ஷியம் தரணியில் சுகமளிக்கும்." தாரகம் என்றால் நக்ஷத்திரம். தாரகலக்ஷியம் என்றால் நக்ஷத்திரம்போலுள்ள உயர் லக்ஷியம். இலக்ஷியம்போலிருக்கும் இலக்ஷணமாதலால், உயர் லக்ஷணம் படியவேண்டில் உயர் லக்ஷியத்தைக் கைக்கொள்ளல்வேண்டும். இகபரமிரண்டிற்கும் இதுவே சாசுவதமான சாதகமும் சாதனமுமாம். ஆத்ம லாபத்தை யுத்தேசத்துச் செய்யும் தாரகலக்ஷிய அப்பியாசத்துக்குத் "தாரகயோகம்" என்று பேரிட்டு ஆதிசங்கராசாரியர் அவர்கள் அதைப் பற்றி அருமையான கிரந்தமொன்றும் எழுதியிருக்கிறார். நித்தியப்படி வாழ்க்கையில் சுகம் பெறவேண்டுமானால் அதற்கும் உயர்லக்ஷியம் அவசியம் என்பதை வற்புறுத்தவேண்டி அமெரிகா தேசத்தவரான எமர்ஸன் சொல்லிய வாக்கியத்தை இங்கு எடுத்தாண்டிருக்கிறோம். அதுவே நமது "விவேகசிந்தாமணி"யின் நோக்கத்தைக் குறிப்பதாகவும் இருப்பதால் அதைப்பற்றி இங்கே சிறுவர்களுக்கு உபயோகமாகும்படி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறோம்.

மனிதன் பாவனா புருஷனாயிருக்கிறான். பாவனா சக்தியில்லாவிட்டால் அவனுக்குப் புருஷத்துவமில்லை. "யத்பாவம் தத்பவதி" யென்பது ஸத்யமாதலால் மனிதன் எப்படி நினைக்கிறானோ அப்படியே ஆகிறான். நினைப்பு மறப்புத்தொழில்களுக்குக் கருவியாக விருப்பது மனம். இந்த மனம் தானே சங்கல்ப விகல்ப (நினைப்பு மறப்பு) ரூபமாக விருக்கின்றது என்பது சித்தாந்தமாயுணர்ந்த உண்மை. இந்த உண்மையை அனுபவத்தில் கண்டறிய வேண்டுமேயன்றி வேறு விதத்தில் கண்டறிவது சாத்தியமில்லை. இந்த அனுபவஞானமுள்ளவர்கள் மனத்தை அடக்கி யாள்வது தானே எல்லா ஆட்சியிலும் மஹத்தான பேராட்சியென்று சொல்லியிருக்கிறார்கள். குதிரை அல்லது 'மோடார்' சவாரிக்குரிய சாதனமாயிருந்தாலும் அதை அடக்கியாளத் திறமையில்லாதவர் அவற்றையுபயோகித்தால் ஆபத்து சம்பவிக்கும் என்பது திண்ணம் அல்லவா? அதுபோலவே மனதை அடக்கியாளத் தெரியாதவர்கள் வேறு விதமாய் அதை உபயோகிக்க யோக்கியதை யற்றவர்களாகிறார்கள். அயோக்கியர்களுக்கு அதிகாரம் சித்திக்காது. அநதிகாரி செய்யும் காரியமுயற்சிக்கு எப்போதும் பழுதுவரும். ஆதலால் மனதை யடக்கியாளவேண்டியது அவசியமாகவிருக்கிறது.

இதற்குக் கைகண்ட சாதனங்கள் சிக்ஷை, தீக்ஷை, லக்ஷியம் என மூவகைப்படும். சிக்ஷையென்பது மனதைத் தடுத்தாளல்; தீக்ஷையென்பது நம் இஷ்டம்போல் அதை நடத்தல்; லக்ஷியம் என்பது குறித்த ஒன்று எவ்வா

அதுவாகும்படி தைலதாரைபோல் இடைவிடாது சிந்தித்துச்சாதித்தல். இம்மூன்றுக்கும் பரசாதனமாயிருப்பது இலக்ஷியத்தில் கண்ணுயிருத்தல். இதைத்தான் "Hitch your wagon to a Star" என்று சொல்லியுள்ளார். ஏனெனில், இலக்ஷியத்தில் கண்ணுயிருக்கிறவனுக்கு மனது தியேயாகாரமானபோது அது சகலத்துக்கும் சாதகசாதனமளிப்பதாகும். ஸ்ரீராமர் பாலப்பருவமாயிருக்கையில் தானே வசிஷ்டர் அவருக்கு ஞானவாசிஷ்டம் அவ்வளவையும் கதைகளால் உண்மை விளங்கச்செய்து ஓதினர். இராமர் குணம் பெற்றது ஞானவாசிஷ்ட மஹிமையினல் என்று சொல்லலாம். அந்தக் கிரந்த முழுவதும் உயர் லக்ஷியத்தை உண்மையாளர் கைப்பிடித்தனுபவித்த விதத்தைச் சொல்கிறது. நமது தேசத்துக்கும் ஜனங்களுக்கும் இராமரே தான பரமபுருஷனுவார். ஆகையால் அவரே தான் நாம் கண்டறிந்து அனுபவிக்கவேண்டிய லக்ஷியமாயிருக்கிறார். இராமரைவிட்டு சீதையைப் பிரிக்கமுடியாது. சீதையைப் பிரித்த இராவணன் பட்ட பாடு உலகறியுமே. தாரகத்தினின்றும் அதன் ஒளியைப் பிரிக்கலாமா? முடியாதுபோல் இராமரை விட்டு அவருடைய சக்தியம்சமான சீதையைப் பிரிக்கமுடியாது. அப்படியே லக்ஷ்மணரும் பிரிக்கமுடியாதவராயிருக்கிறார். இராமரும் லக்ஷ்மணரும் பிரிக்கமுடியாதவராயிருக்கிறார்கள். இராமரும் லக்ஷ்மணரும் நினைத்தலும் ஆற்றலும் போல் இணைபிரியாத தன்மை வாய்ந்துள்ளார். முன் காலத்தில் ராமாயண படனத்தாலேயே எழுத்து வாசனையறியாத குடியானவர்களும் பெண்பாலாரும்கூட உயர் லக்ஷணம் பொருந்தியவர்களாகி அவர்களுடைய பாரம்பரிய புண்ணியத்தால் இப்பொழுதும் நம்தேசத்து வியவசாயிகளும் ஸ்திரீகளும் எழுத்து வாசனையில்லாதவர்களானுலும் குணசீலம் பொருந்தியவர்களாகவிருக்கிறார்கள். இதை ஸர் ஜ்யார்ஜ் பர்ட்வுட் அவர்கள் ஒப்புக்கொண்டு உலகிலுள்ள வியவசாயக்குடிகள் எல்லாரிலும் இந்தியாவிலுள்ள எழுத்து வாசனையறியாத வியவசாயக் குடிகள் மனோதர்மத்தில் சிறந்தவர்களாயிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். கல்கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜாயிருக்கும் ஸர் ஜான் வூட்ராப் அவர்கள் இப்பத்திராசிரியருக்கு எழுதிய கடிதத்தில் இந்தியாவிலுள்ள வியவசாயக்குடிகளும ஸ்திரீகளும் நமது ஜாதிய விசேஷமான குணசீலத்துக்குப் பொக்கிஷமாயிருக்கிறார்கள் என்றும், அதற்குக் கேடு வராதபடி பிரதம வித்யாபோதனை செய்வதே உத்தமம என்றும் சொல்லியிருக்கிறார். நாமும் அந்த உயர்லக்ஷியம் கொண்டே சாமான்ய ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்வதே தொழிலாக இந்த 32-வருஷ காலமாக உழைத்து வந்திருக்கிறோம். இங்லீஷ் படித்தவர்கள் நமது பூர்வலக்ஷியத்தைமறந்து நவநாகரீகபுருஷர்களாகத் திரிவதைக்காண தேசக்ஷேமத்தில் சிரத்தையுள்ளவர்கள் எல்லோரும வருத்தப்படுகிறார்கள். ஆதலால் நமது சிறுவர்கள் அந்தவழியில் செல்லாதபடி உபாத்திமைததொழில் பூண்ட ஒரு சிரேஷ்டர் அவருக்குப் போதனையாகச் சொன்ன லக்ஷியசாதனங்களை இங்கெடுத்துரைக்கிறோம. இவையெல்லாம்ஸ்ரீராமர் ஸ்ரீகிருஷ்ணர் இவர்களுடைய பேரிலக்ஷிய வெளிதத்திலடங்கிய திவலைகள் போலுமாறுலும சிறுவர்கள் கையாடவேண்டிய முக்கிய அம்சங்களாக விருக்கின்றன. நமது தேசலக்ஷியம இன்னதென்றுணர்த்த, மஹாமந்திரமென்று உபநிஷத்து இருஷிகள் உபதேசித்திருப்பது ஒன்றே போதுமாயிருக்கிறது. அது இது :—

"ஹரே ராம, ஹரே ராம,
ராமராம ஹரே, ஹரே!
ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண"
கிருஷ்ண கிருஷ்ண ஹரே, ஹரே!"

இந்தப் பூர்விகமான சாசுவத லக்ஷியத்தை இக்காலம் வரையில் செல்லத்தக்கதாகச் செய்ய வேண்டில் இந்த மஹாமந்திரத்தோடு இன்னும் ஒருமந்திரம் கூடச்சேர்த்தால் போதுமானதாயிருக்கிறது.



அது இது :— முன்சொன்ன மந்திரங்களுக்குப் பின் இதைக் கூட்டிக்கொள்ளவும்.

"ஹரே ராம, ஹரே கிருஷ்ண,
ராமகிருஷ்ண ஹரே, ஹரே!"

ஸ்ரீராமகிருஷ்ணதேவர் எழுத்து வாசனையறியாதவராயிருந்தும் குடதிசையும் குணதிசையும் மெச்சும் மஹாத்மாவும் மஹாஞானியுமாக இருந்து விளங்கினர். இவர்கள் எல்லாரும் அவதாரமஹிமையினல் ஸ்வயம்பிரகாசராகவிளங்கினுலும் விடாமுயற்சியினுலும் ஊக்கத்தினுலும் உண்மையொழுக்கத்தாலும் இவர்கள் போனவழி பின்பற்றிநடத்தல் எல்லாருக்கும் சாத்தியமேயாகும். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று இருப்பதால், நம்தேசத்துச்சிறுவர்களும் சிறுமிகளும் எண்ணுலும் எழுத்தாலும் குணசீலராகவேண்டும். அவர்கள் மனதில் வைத்துச்சிந்தித்து அனுபவத்திற் கொண்டுவந்துய்யவேண்டிய ஆரம்ப லக்ஷியங்கள் ஆறெனவெடுத்து அவற்றைக் கீழே வரைகிறோம்.

(I) ஓதுவதொழியேல்; பள்ளிப்பருவம் கடந்தபின்னும் ஓதுவதொழியேல். கல்விக் கேள்விகளிலுள்ள ஆசை வரவரப் பெருகவேண்டுமேயன்றி குறுகக்கூடாது.

(II) மூத்தோர்சொல் வார்த்தையமிர்தமாய் முன்னோர் தர்மத்தைக் கைவிடாது பழகு.

(III) ஊக்கமது கைவிடேல்; ஊக்கமும் உழைப்பும் உண்மைக்குச் சாதனம்.

(IV) தரிசனம் விசாரம் திடஞானமிவை மூன்றும் சாலப்பெருகச் சதாவெண்ணிப் பழகு.

(V) ஊருக்குழைப்பதே உத்தமதர்மமால் பேருக்குழைக்காது ஊருக்குழைத்து உபகாரியாக ஸமஷ்டி சேவையைச் சாதனமாயனுசரி.

(VI) எடுத்த ஜன்மத்தைப் பாழாக்காதே! உண்மையை உணர்ந்துய்தல்தானே ஜன்மசாபல்யமென்றுணர்ந்து உண்மையை அனுபவிக்க உள்ளளவும் உழை. உழைக்கும் வழியறிந்துழைப்பது தானே பிழைக்கும் வழியாய்ப் பெரியோர்கள் செப்பியுள்ளார். இதற்கு 'நிஷ்காமியதர்மம்' என்று சொல்வதுமுண்டு. இதைவிட மேலானதர்மம் இங்கும் அங்கும் எங்கும் இல்லை. இது ஸத்யம், ஸத்யம், முக்காலும் ஸத்யம், ஓம்தத்ஸத்.

## A PLEA FOR INSTRUCTION OF THE SCIENCES THROUGH THE MEDIA OF VERNACULARS.

## சுதேச பாஷைகள் மூலமாக ஜனங்களுக்கு சாஸ்திர ஞானமுண்டாக்க வேண்டுமென்பதைப்பற்றி.

இந்தியர்களில் அனேகர், பி. ஏ., எம். ஏ., பரீக்ஷைகளில் அதிகௌரதையுடன் தேர்ந்து, பெயர் பெற்றவர்களாக விருந்தபோதிலும், ரசாயன சாஸ்திரம் (Chemistry) தாபரசாஸ்திரம் (Botany), பிருதிவி சாஸ்திரம் (Geology) முதலிய சாஸ்திரங்களில் ஸ்வயமாய் ஆராய்ச்சிசெய்து, நமது தேசத்திலிருக்கும் புல், பூண்டு முதலிய தாபர வஸ்துக்களின் குணங்களையும், பலவித லோகாதிகளிருக்கும் இடங்களையும், அவைகளை யெடுக்கும் விதங்களையும், இன்னும் மற்றக் கைத்தொழில்களைத் தற்கால சாஸ்திரங்களை யனுசரித்துச் சீர்படுத்தும் வழிகளையும், அறிந்து இத்தேசத்தின் க்ஷேமத்தை அபிவிருத்திசெய்ய யாதொரு ஏற்பாடும் அவர்கள் செய்யவில்லை என்பது அனைவருக்கும் தெரிந்தவிஷயமே.

இதற்கு அனேக காரணங்களுண்டு. முதலாவது, நமது தேசத்தவர்க்கு வஸ்துக்களின் தன்மையை அறிய ஆவலும், அவைகளை ஊர்ந்துபார்க்கும் சக்தியும், மிகச்சொற்பமே. ஓர் ஐரோப்பியப்பையன் சிறுவனயிருக்கும் பொழுதே, விநோதமான பக்ஷிகளைப் பிடிப்பதிலும், புஷ்பங்கள், பூண்டு முதலியவைகளைச் சேர்ப்பதிலும் சிறு பூச்சிகளைப் பிடித்து அவைகளின் நடத்தைகளை கவனிப்பதிலும், ஆசையுள்ளவனுகி, அம்மாதிரி விளையாட்டுக்களில் காலத்தைக் கழிக்கின்றான். இளமைப் பருவத்தில் இப்படியிருப்பதால், நாளாக நாளாகதான் சிறுபிராயத்தில் பார்த்த விஷயங்களின் தன்மையைப்பற்றி அதிகமாக அறிய அவனுக்கு ஆசக்தியுண்டாகிறது. ஆகையினுல்,

சாஸ்திரங்களை அதியாவலுடன்கற்று, அவைகளில் சுவய ஆராய்ச்சியும் செய்கிறான். நம் பிள்ளைகளோ பிறந்தது முதல் அம்மாதிரியான விளையாட்டுக்களைக் கொஞ்சமேனு மறியார்கள். பெரியோர்களும் அம்மாதிரி செய்வதினால் பிள்ளைகளுக்குண்டாகும் நன்மைகளை யறியாமல், கூடியசீக்கிரத்தில் பாஷா புஸ்தகங்களைப் படிக்கும்படி, பள்ளிக்கூடங்களுக் கனுப்பி விடுகிறார்கள்.

மேலும், இக்காலத்திய ஐரோப்பிய ஸ்திரீகள் அனேகமாய், மேற்குறித்த சாஸ்திரங்களின் பிரதான அம்சங்களையாவது அறிந்திருக்கின்றமையால், தங்கள் குழந்தைகள் வேடிக்கையாய்ச் சேகரிக்கும் செடி, கொடி, புஷ்பம், கிளிஞ்சல், பூச்சிகள் முதலியவைகளை வைத்துக்கொண்டு, அவர்களுடன் அவைகளைப்பற்றி சம்பாஷித்து, அறிவை வெகு சுலபமாய் அவர்களுக்குப் புகட்டிவருகின்றார்கள். நமது தேசத்து ஸ்திரீகளின் கல்வி அந்த ஸ்திதியை அடைவதற்கு வெகுகாலம் செல்லவேண்டுமென்று தோன்றுகிறது; அப்பேர்ப்பட்ட தாயார்கள் உதிக்கும்வரையில், நமது பிள்ளைகளுக்கு இளவயதில் அறிவைப் புகட்டுதல் கடினமாகவேயிருக்கும்.

நமது வாலிபர்களின் சாஸ்திராப்பியாசத்திற்கு இம்மாதிரியான இடையூறுகள் இருப்பதுமன்றி, அவர்களுடைய பதினைந்தாவது வயதுவரையில், சாஸ்திர சம்பந்தப்பட்ட யாதொரு விஷயங்களையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறதில்லை. அவர்களுடைய பாலியம் முழுவதும், ஆங்கிலேய பாஷையின் இலக்கிய இலக்கணங்களைக் கற்பதிலேயே செலவழிந்து போகிறது. பதினைந்து, பதினாறுவது வயதில், ரசாயன சாஸ்திரத்தினுடையவும், ஜடசாஸ்திரத்தினுடையவும் (Physics) மூலபாகத்தைக் கற்க அவர்கள் ஆரம்பிக்கிறார்கள். அப்புத்தகங்கள் அன்னிய பாஷையாகிய ஆங்கிலேய பாஷையிலெழுதப்பட்டிருக்கின்றமையால், பாஷாப் புத்தகங்களைப் படிப்பதுபோல, அவைகளைக் கற்பதன்றி, அவைகளிலுள்ள தத்துவங்களைச் சரியாக கிரகிப்பதில்லை. இரண்டு மூன்று வருஷம், அவைகளைப் படித்து, மறந்து விடுகிறார்கள். பிறகு, பி. எ., பரீக்ஷைக்குப் படிக்கத்துவக்கும்பொழுது, அச்சாஸ்திரங்களைக் கற்று அறிவை விருத்திபண்ணவேண்டுமென்கிற ஆவலில்லாதவர்களாக விருப்பினும், பரீக்ஷைகளில் தேருவதற்கு அதுவுமோர் மார்க்கமாயிருப்பதால், சில பிள்ளைகள் சாஸ்திரங்களைப் படிக்கின்றார்கள். பரீக்ஷையில் தேர்ந்தவுடன், அறிவை விருத்திசெய்வதையும் நிறுத்திவிடுகின்றார்கள். அவர்களில் சிலர், அப்படி அபிவிருத்திசெய்ய விருப்பமுள்ளவர்களாக விருப்பினும், அதி கடினமான ஆங்கிலேய பாஷையைக் கற்பதில் வெகு சிரமப்பட்டுச் சோர்ந்துபோய், தங்கள் விருப்பத்தை முடிவுக்குக் கொண்டுவர அசக்தராயிருக்கின்றார்கள்.

நமது வாலிபர்களின் சாஸ்திரப் பயிற்சி இப்படியிருக்க, நமது பெண்களின் பயிற்சி இதிலும் தாழ்ந்ததாகவிருக்கிறது. நமது வாலிபர்கள் ஆங்கிலேய பாஷையை அறிந்திருப்பதால் தங்களுக்கிஷ்டப்பட்டபோது, அப்பாஷையில் எழுதப்பட்டிருக்கின்ற சாஸ்திரப் புத்தகங்களைப் படித்து அறிவைத் தேடிக்கொள்ளக்கூடியவர்களாக விருக்கின்றார்கள். நமது பெண்களோ, தமிழை எழுதப் படிக்கத் தெரிந்துவிட்டால், எல்லாவித்தையும் வந்துவிட்டதாக எண்ணுகிறார்கள். இதுவரையில் நமது பெண்களின் கல்வி இதற்கு மேற் போகவில்லை. தமிழ்பாஷையில் எழுதப்பட்ட சாஸ்திரபுத்தகங்கள் அதிகமாக இல்லாமையால், அச்சாஸ்திரங்களில் தேற்சியடைந்து அறிவை விருத்திசெய்யக் கொஞ்சமேனும் ஹேதுவில்லாதவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.



இவ்விஷயங்களையெல்லாம் யோஜித்துப் பார்க்கும் வேளையில், நமது சிறுவர்களுக்கு தங்கள் அறிவை விருத்திபண்ணுவதில் ஆசை உண்டாகும்பொருட்டு, அவர்களுடைய சொந்த பாஷையாகிய தமிழ் மூலமாக, தாபரசங்கமாதி வஸ்துக்களின் பிரதான குணங்களைப் போதிக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அதற்காக ஆங்கிலேய பாஷையில் எழுதப்பட்டிருக்கின்ற சாஸ்திரப் புத்தகங்களை, தமிழில் எளியநடையில் மொழிபெயர்த்து கீழ் வகுப்புக்களிலேயே பாடமாக வைக்கவேண்டும்.

ஆனால் இப்படிச் செய்வதற்குத் தடையாக ஒன்றிருக்கின்றது. யாதெனில்: ஆங்கிலேயப் புத்தகங்களில் வழங்கும் சாஸ்திரீக வார்த்தைகளுக்குச் சரியான பதங்கள், தமிழ்ப்பாஷையில் அகப்படுவதில்லை. ஆகையினால், அம்மாதிரி விஷயங்களைப்பற்றி எழுதுவது சற்று கடினமாக விருக்கின்றது.

ஐரோப்பிய சாஸ்திரங்களில் தேர்ந்தவர்களும், தமிழ்ப்பாஷையைக் கற்றறிந்தவர்களுமான பல கனவான்கள் நமது நாட்டிலிருக்கின்றார்கள். தமிழ்ப்பாஷையில் சாஸ்திரீக பதங்களைத் தொடுத்து அவைகளைப் புத்தகங்களில் உபயோகித்து யாவருக்கும் தெரியும்படி வழக்கத்திற்குக் கொண்டுவருவது, அவர்கள் கடமை. அவர்கள், மேற்குறித்தபடி யாவருக்கும் புலப்படும்படியான சுலபமான நடையில், சாஸ்திர விஷயங்களைப்பற்றி எழுதி பிரசுரிப்பார்களாகில், காலாவட்டத்தில் நமது தேசத்தவர்களின் அறிவு விசாலிப்பதுமன்றி, நமது தேசக்ஷேமமும் அனேக மார்க்கங்களில் விருத்தியடையுமென்பதற் கையமில்லை.

## ON THE CHARACTERISTICS OF TEACHERS.
## உபாத்தியாயருக்கு இருக்கவேண்டிய லக்ஷியங்கள்.

சென்றமாதச் சஞ்சிகையில், மாத விசேஷங்களின் கீழ், கும்பகோணம் காலேஜ் பிரின்ஸிபாலாயிருந்த போர்டர் துரையவர்களின் குணநிசயங்களைக் குறிப்பிட்டு உபாத்தியாயர்களும், போதகர்களும், தங்களுடைய மாணாக்கர்களிடத்தில் அனுதாபமும் அபிமானமுமுள்ளவர்களாயிருப்பதோடு, அவர்களுடன் சமமாகப்பழகி, பாடத்தைப் போதிக்கும் அசிரியராயிருப்பதோடு இராமல், மெய் நண்பராகவும், புத்திமதிச்சொல்லி வழிகாட்டுபவராகவும் (Teacher, friend and mentor) இருக்கவேண்டும் என்று திவான்பகதூர் வி. பி. மாதவராவ் அவர்கள் சொல்லியதைக் குறிப்பிட்டுச் சொன்னோம்.

இப்பொழுது, நமது பையன்களுடைய நன்னடைக்கைக்கும் அபிவிருத்திக்குமான பொறுப்புள்ள இத்தொழிலை வகிப்பவர்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய லக்ஷணங்களைப் பற்றி சிறிது விவரித்து எழுதுவோம்.

1. சரீரதிடம். முதலில் தேக ஆரோக்கிய முள்ளவர்களாயிருக்கவேண்டும். சரீரத்துக்கும் மனதுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. அசௌக்கிய ஸ்திதியிலிருப்பவனிடத்தில்போய் நாம் ஒரு விஷயத்தை யோசனை செய்து சொல்லும்படி கேட்டால் அவன் தன்னால் அப்பொழுது முடியாதென்பான். அவன் மனம் வேலைசெய்யாது. அதே மாதிரி மனவியாகூல மடைந்தவனுடைய உடம்பு மெலிந்துபோகும். இதனால் மனதும் சரீரமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. சரீரம் திடமாயிராவிட்டால் மனது திடமாயிராது. ஆகையால் தேகாரோக்கியமில்லாதவர்களை உபாத்தியாயர் வேலைக்கு நியமிக்கக்கூடாது. இவர்களுக்கும் எப்பொழுதும் குதித்து விளையாடி குதூகுலமாயிருக்கும் சிறு பிள்ளைகளுக்கும் ஒத்துவராது,

அற்ப விஷயங்களுக்கெல்லாம் கோபங்கொண்டு கடினமாய்த் தண்டிப்பார். நோயுள்ளவர்களாயிருந்தால் அடிக்கடி வீட்டிலிருக்கும்படியாய் நேரிடும். பிள்ளைகளின் வித்தியாபிவிருத்திக்குப் - பங்கமுண்டாகும். ஆகையால் இந்த வேலையில் புகுகிறவர்கள் சரீரதிடமுள்ளவர்களாயிருப்பதுடன் பின்னும் ஆரோக்கியமாயிருக்கும் பொருட்டு தங்கள் ஆகாரம் நித்திரை தேகப்பயிற்சி இவைகளில் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

2. அங்கஹீனமின்மை. சிறு பிள்ளைகள் பெரியவர்களின் ரூபத்தைக்கண்டுதான் பயப்படுவதும் மரியாதை செய்வதும். சரீரம் எப்படியிருந்தாலென்ன யோக்கியதையையறிந்தல்லவா மரியாதை செய்ய வேண்டியதென்பது அவ்வளவாய் அவர்களுக்குத் தெரியாது. சிலர்களுக்கு ஸ்வபாவத்திலேயே சரீரம் நடைமுதலியவை காம்பீரியமாயும் பார்ப்போருக்கு பயத்தையும் பக்தியையும் உண்டுபண்ணத்தக்கவையாயும் ஏற்பட்டிருக்கும். இந்த பாக்கியம் எல்லாருக்கும் கிடைக்காது. உபாத்தியாயர்கள் எல்லாரும் இப்படியில்லாமற்போனாலும் அங்கஹீனமற்றவர்களாயாவது இருக்கவேண்டும். ஒரு உபாத்தியாயர் நொண்டியாயிருந்தால் அவரிடத்தில் பிள்ளைகளுக்கு பயமும் பக்தியும் உண்டாவது கஷ்டம். ஏற்கனவே சொல்லியபடி பிறரைப்போல் செய்கிற ஸ்வபாவம் பிள்ளைகளிடத்திலுண்டாதலால் நொண்டி நொண்டி நடக்கும் உபாத்தியாயரைப்பார்த்தால் அவரைப்போலவே அவருக்குப்பின் தாமும் நொண்டிநொண்டி நடப்பார்கள். அது கடைசியில் உபாத்தியாயரைக்கேலி பண்ணுவதில் முடியும்: அவரிடத்தில் மரியாதையும் குறைந்துபோம்.

3. ஸ்பஷ்டமாய்க் கேட்கும்படியான கண்டத்வனி. உபாத்தியாயர் பேச ஆரம்பித்தவுடனே சப்தம் கணீரென்றிருந்து பிள்ளைகளை சந்தடிசெய்யாமல் அடக்கி அவர் சொல்லும் வார்த்தைகளை கவனிக்கச் செய்கிறதாயிருக்கவேண்டும். மிகவும் தாழ்ந்த குரலுடனும் பேசக்கூடாது. அதிக உரத்த கூச்சல் போட்டுக்கொண்டும் பேசக்கூடாது. வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கு எந்தமட்டில் உரத்திப்பேசினால் போதுமோ அந்தவிதமாய்ப் பேசவேண்டியது.

4. கூர்மையான கண்ணும் காதும் உடையவராயிருக்கவேண்டும். வகுப்பில் பாடம் நடக்கும்பொழுது அனாவசியமான சப்தம் கொஞ்சம் கிளம்பினாலும் சரி, அல்லது, பிள்ளைகள் சற்று கவனத்தப்பாய் அங்குமிங்கும் பார்த்தாலும் சரி, அந்த சப்தத்தையும், கவனத்தப்பையும் உடனேயறியக்கூடிய அவ்வளவு கூர்மையான காதும் கண்ணும் உபாத்தியாயர் உடையவராயிருக்கவேண்டும். பாடம் நடக்கும்பொழுதுசொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயர் குரலோ, அல்லது போட்ட கேள்விக்கு பதில் சொல்லும் பிள்ளைகளுடைய குரலோ—ஒரு குரல்தான் கேட்கப்படவேண்டும். ஒரு பள்ளிக்கூடத்தில் வகுப்புகள் எத்தனையோ அத்தனை குரல்கள்தான் கேட்கப்படவேண்டுமே யொழிய அதற்குமேல் கேட்கப்படக்கூடாது. அதற்கு மேற்பட்டு எந்த சப்தமுண்டானாலும் அது பள்ளிக்கூடத்தில் நடக்கிற வேலைக்குப் பிரதிகூலமாய்த்தானிருக்கும். ஆகையால் அப்படியிருப்பதாய் உடனுக்குடன் தெரிந்துகொண்டு அதை நிவர்த்திக்க உபாத்தியாயர் முயற்சிசெய்யவேண்டியது. இல்லாவிடில் பள்ளிக்கூடம் ஒரே கூச்சலாயும் கலவரமாயும் ஆய்விடும்.

5. போதிக்குந் திறமையுடையவர்களாயிருக்கவேண்டும். கல்விமட்டுமிருந்தால் போதாது, கற்பிக்குந் திறமையும் இருக்கவேண்டும். படித்தவர்களில் அநேகர்களுக்கு தங்களுக்குத் தெரிந்தவிஷயங்களைத் தெளிவாய்ப் பிறருக்கு மனதிற் படும்படி சொல்லும் சக்தியிருப்பதில்லை. சிலர் பேச வாயெடுத்தால் கேட்கவொண்ணாது. மற்றும் சிலர் நாள் முழுமையும் பேசினாலும் கேட்க சகிக்காது. இந்த மாதிரி போதிக்கும் திறமை ஸ்வபாவத்திலேயே யிருப்பது சிரேஷ்டம்.



அப்படியில்லாதவர்கள் கூட சிரமப்பட்டு அந்தத் திறமையைத் தங்களிடத்தில் ஏற்படுத்திக் கொள்ளலாம். அனுபவத்தினாலும் இந்தத் திறமையேற்படும். ஆனால் அனுபவம் சித்திப்பதற்குமுன் எத்தனையோ தப்புகள் செய்யும்படி நேரிடும். அதுவரையில் அவரிடத்து வந்துபோன பிள்ளைகளுக்கு வித்யா நஷ்டமுண்டாகும். அதனால்தான் போதிக்கும் முறைகளைக் கற்பிக்கும் பாடசாலைகளையேற்படுத்தி அதில் படித்துத் தேர்ந்தவர்களையே உபாத்தியாயர்களாக ஏற்படுத்திவருகிறார்கள்.

6. தான் கற்பிக்கப்புகும் விஷயத்தில் பூர்ண ஞானமுடையவராயிருக்கவேண்டியது. ஒரு விஷயத்தை நாம் பிறருக்குக் கற்பிக்க வேண்டுமேயானால் அதை நாம் முன்னாடி நன்றாய் அறிந்துகொண்டிருக்க வேண்டும். தம்மைப் பார்க்கிலும் அதிகமடங்கு படிப்பும் ஞானமும் உபாத்தியாயரிடத்தில் உண்டென்ற வெண்ணம் பிள்ளைகளுக்கு உண்டானால்தான் அந்த உபாத்தியாயரிடத்தில் அவர்களுக்கு பயமும் பக்தியும் தோன்றும். "பிள்ளைகளைப் பார்க்கிலும் எனக்கு பிரபஞ்சஞான மதிகமாகையால் எனக்குமுந்தி தெரியாத அம்சமானாலும் அன்றன்றைக்கு வேண்டியதை அப்போதைக்கப்போது படித்துப் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க என்னால் முடியாதா" என்று சிலர் நினைக்கலாம். இது தப்பெண்ணம். நாம் படித்துக்கொண்டே போகும் பொழுது எல்லாம் சுலபமாய் தெரிந்துவிட்டாற்போலத் தான் தோன்றும். பிறருக்கு எடுத்துச் சொல்லப் புகுந்தாலோ முன் நமக்குத் தோன்றாத சந்தேகங்கள் தோன்றும். நமக்கே தெளிவாய்த் தெரியாத விஷயத்தைப் பற்றிப் பிள்ளைகளுக்கு நாம் கற்பிக்கும் பொழுது நாம் எதிர்பார்த்திராத கடினங்கள் பிள்ளைகளுக்குத்தோன்றி உபாத்தியாயரிடம் சந்தேகந்தெரிந்துகொள்ள அவர்கள் கேள்விகள் போடலாம். அந்த சமயத்தில் அவர் விழிக்கும்படியாய்த்தான்வரும். இப்படி சம்பவித்தலால் உபாத்தியாயருக்கு அவமானம்நேரிட்டு ஏற்கனவே அவரிடத்தில் பிள்ளைகள் வைத்திருந்த கௌரவம் குறைந்துபோகும்.

மேல்மேல் படித்து தன் ஞானத்தை விருத்திசெய்ய வேண்டுமென்ற ஆவல் கொண்டவராயிருக்கவேண்டும். இது முன்சொல்லிய இலக்ஷணத்துக் கவசியமானது. புதுவிஷயங்களைத் தெரிந்துகொண்டேயிருந்தால் அதனால் உபாத்தியாயருக்கு புத்தி அதிகத் தெளிவுண்டாகி பிள்ளைகளுக்கு கற்பிக்குந் திறமையில் விருத்தியடைவார்.

7. உபாத்தியாயருக்கும் பிள்ளைகளுக்கும் ஒற்றுமை யிருக்கவேண்டும். அதாவது உபாத்தியாயர் எவ்வளவு பெரிய படிப்புள்ளவராயிருந்தாலும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் பொழுது தன்னையும் அவர்களில் ஒருவராய் பாவித்துக்கொண்டால்தான் பிள்ளைகளுக்கு எந்த விடங்களில் சந்தேகம் தோன்றுமோ அவைகளைத்தெரிந்து தகுந்தபடி போதிப்பார். தமக்கு ஒரு விஷயம் நன்றாய்த் தெரிந்ததையிட்டு பிள்ளைகளுக்குக்கூட அது சுலபமாய் மனதில் படுமென்ற எண்ணத்துடன் அலக்ஷியமாய் உபாத்தியாயர் போதிக்கத் தொடங்கினால் அது பயன்படாது.

8. தன் வேலையில் சிரத்தை. எந்தத் தொழிலானாலும் சரி, அதில் புகுகிறவர்கள் சிரத்தையுடன் உழைத்து நல்லபெயர் அடையவேண்டுமென்று உத்ஸாகத்துடன் வேலை செய்து வரவேண்டியது. இது நியாயமாயிருக்க, உபாத்தியாயர் வேலைக்கு வருகிறவர்களில் அனேகருடைய உத்தேசம் மட்டும் வேறாகவேயிருக்கிறது. சிலர் அனேக இடங்களில் வேலைக்குப் பிரயத்தனம்செய்து உடனே கிடைக்காமல் தாத்காலம் ஜீவனோபாயத்துக்கு ஒரு வழி வேண்டுமேயென்று ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் கிடைத்த சம்பளத்துக்கு உபாத்தியாயராக அமர்ந்து,தினந்தோறும் வேறு வேலைக்கு மனுக்கொடுத்தும், பெரிய உத்யோகஸ்தர்களைப்பார்த்து அநுசரித்தும் தாங்கள் ஒப்புக்கொண்ட உபாத்தியாயர் வேலையை சரியாய் செய்ய தகுந்த அவகாச

மற்றவர்களாயிருக்கிறார்கள். "நாம் இதை விட்டுவிடப்போகிறது இன்றைக்கோ நாளைக்கோ; அதற்குள் நாமேன் வீண் சிரமப்பட வேண்டும்" என்று வேலையில் கவலையற்றவர்களாயிருப்பார்கள். வேறு சிலர் "நான் என்ன இந்த வேலையில் சாசுவதமாயிருக்கப் போகிறேனா. ஏதோ இரண்டு வருஷகாலமிருந்து கொஞ்சம் பணம் சேர்த்துக்கொண்டு "லா கிளாஸ்" (Law Class) சேர்ந்து படிக்கப் போகிறேன்" என்று சொல்பவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் இந்த வேலையில் நிலையாயிருக்கிறதில்லையென்ற நிச்சயத்துடன் பிரவேசிக்கிறபடியால் அவர்களுக்கு வேலையில் சிரத்தையிராது; ஆகையால் அவர்கள் செய்யும் வேலை பயன்படாது. இன்னும் சிலர்கதி இந்த வேலையிலேயேயிருந்து வாழ்நாள் முழுவதும் கழித்துத் தீரவேண்டியதாயிருந்தாலும் உத்ஸாகமற்றவர்களாய் தங்கள் சம்பளமே பிரதானமாயும் பிள்ளைகளின் அபிவிருத்தி அலக்ஷியமாயுங்கொண்டு மணியடித்தபின் பள்ளிக்கூடத்துக்கு வருவதும், மணியடிக்கு முன் வீட்டுக்குத் திரும்பிப்போக சித்தமாயிருப்பதும், லீவு நாள்கள், முதல் தேதி யெப்பொழுது வரப்போகிறதென்று மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதும் இவர்களுக்கு சுபாவம். தாங்கள் செய்யும் வேலையைப்பற்றி யாரிடத்திலாவது பிரஸ்தாபம் வந்தால் 'ஆமா! இங்கே கொடுக்கிற சம்பளத்துக்கு நான்செய்கிறவேலை போதாதா' என்று இவர்கள் சொல்வார்கள்—இவ்விதமான அபிப்பிராயங்களை யுடையவர்கள் நம்முடைய பாடசாலைகளில் அனேகரிருக்கிறார்கள். அவர்களெல்லாரையும் களை பிடுங்குவதுபோல சுத்தமாய் நீக்கி இந்த வேலையில் உத்ஸாகத்துடன் உழைத்து கீர்த்திபெற வேண்டுமென்று எண்ணங்கொண்டவர்களை மாத்திரந்தான் இந்த வேலைக்கு நியமிக்கவேண்டும்.

9. பிள்ளைகளை யடக்கியாளும் திறமை. இது பெருந்த ஸ்வபாவத்திலேயேயிருக்கும். சில உபாத்தியாயர்கள் வகுப்பண்டை வரும்பொழுதே பிள்ளைகள் அவரவர்களிடத்திலுட்கார்ந்து கிச்சென்ற சப்தங்கூட வில்லாமல் அமரிக்கையாயிருப்பார்கள். இன்னும் சில உபாத்தியாயர்கள் வகுப்பில் வந்துட்கார்ந்தும், இவர் வந்ததைப் பிள்ளைகள் சற்றேனும் கவனியாமல் அவரவர்கள் தங்கள் காரியத்திலிருப்பதையிட்டு "சரியாயுட்காரு" "புஸ்தகங்களை மூடு" "நீ பெஞ்சிமேல் நில்லு" என்று சூரமாரியாய் அடுத்தடுத்து தண்டனைகள் விதித்துக்கொண்டிருந்தபோதிலும் லக்ஷியம் செய்யாமல் அவரையே யெதிர்த்துப் பேசுவதும் உண்டு. முதலில் வந்தவரிடத்தில் அவ்வளவடக்கத்துடனிருந்தவர்கள் இவரைக்கண்ட மாத்திரத்தில் இப்படி மாறுவதேன்? இவர் பாபம் இது; அவர் செய்த பாக்கியம் அது. புதிதாய் யாராவது பள்ளிக்கூடம் நடக்கும் மாதிரியைப் பார்க்கவந்தால் இதென்ன ஆச்சரியம்! முதலில்வந்த உபாத்தியாயர் வாயையசைத்து ஒருகடுமொழியுஞ் சொல்லாமல் சும்மா இருக்கும்பொழுதே அவரிடத்தில் அவ்வளவு அடங்கியிருந்த இதே பிள்ளைகள் இந்த உபாத்தியாயர் இத்தனை சிரமப்பட்டும் அவரை இவ்வளவு பாடுபடுத்திவைக்கிறார்களே யென்று வியக்கும்படியிருக்கும். இதற்கெல்லாம் காரணமென்ன. முதலில் வந்தவரிடத்தில் பிள்ளைகளுக்குபயமும் பக்தியுமுண்டு. இவரிடத்தில் அதில்லை. உபாத்தியாயருக்கு பெருத்த யோக்கியதையுண்டென்று பிள்ளைகளறிந்தால்தான் அவரிடத்தில் மரியாதையாயிருப்பார்கள். யோக்கியதையிருப்பதுடன் உபாத்தியாயருக்கு மனோதிடமிருக்கவேண்டும். இத்தனை பிள்ளைகளையும் நான் என்னமாயடக்கி யாளப் போகிறேன் என்று அதைரியம் வந்தால் உடனே யவர் வேலையை விட்டுவிட வேண்டியதுதான். தன்னிடத்திலேயே தனக்கு நம்பிக்கையில்லாமற்போனால் மேலே யொருகாரியமும் முடியாது. இதற்கு திருஷ்டாந்தம்:— ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் வேலை காலிவிழுந்தது. அதற்கு அனேகர் மனுக்



கொடுத்ததில் அந்தப் பள்ளிக்கூடத்ததிகாரி ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைப் பள்ளிக்கூடத்திற் கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்பினார். பிள்ளைகள் புது உபாத்தியாயரைத் தனியாய்க் கண்டவுடன் இவர் திறமை யெந்தமட்டிலிருக்கிறதென்பதையறிய உத்தேசங்கொண்டவர்களாய் தங்கள் கால்களால் பூமியில் சப்தஞ் செய்யத் தலைப்பட்டார்கள். சற்று உபாத்தியாயர் சும்மாயிருந்திருப்பாரேயானால் இன்னும் மேல் நடவடிக்கைகள் பிள்ளைகள் நடத்தியிருப்பார்கள். ஆனால் அவர்கள் சப்தம்செய்ய ஆரம்பித்தவுடனே உபாத்தியாயர் "பிள்ளைகளே அமரிக்கை" யென்று திட்டமாய்ச் சொல்லவே அந்த காம்பீரியக் குரலைக்கேட்டு அவரவர்கள் நடுங்கியொடுங்கி இவரிடத்தில் நம்மாட்டம் பலிக்காதென்று தெரிந்துகொண்டு அடங்கிவிட்டார்களாம். "உபாத்தியாயர் சொன்னால் சொன்னதுதான்: செய்தால் செய்ததுதான். அவர் நிச்சய புத்தியும் மனோதிடமும் உடையவர்" என்ற வெண்ணம் பிள்ளைகளுக்குண்டாகவேண்டும்.

10. சாமர்த்தியம். சமயோசிதமாய் நடந்துகொள்ளக்கூடிய யுக்தியும் புத்தியும் உபாத்தியாயரிடத்திலிருக்கவேண்டும். இதின் அர்த்தத்தை ஒரு உதாரணத்தினால்தான் விளக்கிக்காட்ட முடியும். உபாத்தியாயர் கருப்புப் பலகையில் எழுதத்திரும்பினதும் வகுப்பில் ஒரு பையன் சிரிக்கிறதாக வைத்துக்கொள்ளுவோம். யாரோ ஒருவன் சிரித்தானென்று மட்டும் தெரிகிறதே யொழிய இன்னானென்று குறிப்பாய்த் தெரியவில்லை. உபாத்தியாயர் சமயோசித சாமர்த்தியமற்றவராயிருந்தால் உடனே கோபங்கொண்டு, எழுதுவதை நிறுத்தி, சிரித்தது யாரென்று கடுமையாய் விசாரிக்கப் புகுவார். உபாத்தியாயர் வகுப்புமுகமாய்த் திரும்பினதும் சிரித்தவனுள்பட எல்லாப் பிள்ளைகளும் சர்வ சாந்தகுணமுடையவர்களைப்போலக் காணப்படுவார்கள். உபாத்தியாயர் சிரித்தது யாரென்று கேட்ட கேள்விக்கு தெரியாததினாலோ அல்லது பயத்தினாலோ மறுமொழி யொருவரும் சொல்லமாட்டார்கள். விசாரணையை யாரம்பித்துவிட்டோமே ஏதோ ஒருவிதமாய் முடித்தால்தான் நமக்கு கௌரவம் தக்கும் என்ற தப்பெண்ணத்தால் "ஒருவரும் சொல்லமாட்டார்களல்லவா! நான் உங்களைத் தகுந்தபடி நடத்துகிறேன்" என்று சொல்லிக்கொண்டே எல்லாப்பிள்ளைகளையும் ஒரே சீராய்த் தண்டித்துவிடுவார். இப்படிச் செய்வதினால் தப்புச் செய்தவர் இன்னார் செய்யாதவர் இன்னார் என்று தெரிந்துகொள்ள உபாத்தியாயருக்கு சக்தியில்லையென்றும் நம்மையுஞ்சேர்த்து அநியாயமாய் தண்டித்தாரேயென்றும் பிள்ளைகளில் தப்புசெய்யாதவர்களுக்குத் தோன்றும். தப்புசெய்தவனுக்கு உபாத்தியாயரை ஏய்த்துவிட்டோமென்ற ஒரு எண்ணமும் தன்னை தண்டித்தபடியே பிறரையும் தண்டித்தபடியால் தான் தாழ்ந்துபோனது ஒன்றுமில்லையென்றும் தோன்றும். அதாவது நல்ல பிள்ளைகள், கெட்டபிள்ளைகள் யாவருக்கும் உபாத்தியாயருக்கு யோக்கியதை யில்லையென்றும் அவரை எளிதில் ஏய்த்துப்போடலாமென்றும் எண்ணமிடமுண்டாகும். அதனால் அவரிடம் ஏற்கனவேயிருந்த கௌரவம் குறைந்துவிடும். சாமர்த்திய மற்றவர் பாடு இது. உபாத்தியாயர் சமயம்போல் நடந்துகொள்ளத் தெரிந்தவராயிருந்தால் தனக்கு சிரித்தது இன்னானென்று நிச்சயமாய்த் தெரியாததினால், பையன் சிரித்த சங்கதியே தன் காதில் படாததுபோல் மேல்காரியங்களை நடத்தி வகுப்பின்பேரிலேயே கண்ணாயிருந்து, தான் பண்ணின விஷயத்தை உபாத்தியாயர் தெரிந்துகொள்ளவில்லையென்பதைப்பற்றி குற்றவாளி மற்றப் பிள்ளைகளுடன் கண்ஜாடையினால் செய்யும் சம்பாஷணையிலிருந்து சிரித்தது இன்னான்தானென்று தெரிந்துகொண்டு அவனைமட்டும் தகுந்தபடி தண்டிப்பார். அப்படி செய்பவரைக் கண்டால் இவர் உண்மையை யெப்படியோ அறிந்துகொள்ளக்கூடிய யுக்தி

சாலியென்றும், இவரிடத்தில் தாம் அடங்கி அமரிக்கையாய்த்தானிருக்கவேண்டுமென்றும் பிள்ளைகளுக்குத் தோன்றும்.

11. பொறுமை. நாம் முன்சொல்லியபடி உபாத்தியாயர்வேலை கடினமானது. மேலும் படிக்கவரும் பிள்ளைகளில் மந்தபுத்தியுள்ளவர்கள் அதிகமாயிருப்பார்கள். சில சமயங்களில் எத்தனை தடவை ஒரே சங்கதியைப் பற்றி உபாத்தியாயர் கரடியாகக் கத்திச்சொன்னாலும் அவர்கள்மனதில்படாது. அப்பொழுதுகூட அவர்கள்பேரில் சற்றேனுங் கோபங்கொள்ளாமல் நன்றாய் விளக்கிக்காட்டாத குற்றம் தன்னுடையதென்று நினைத்து மறுபடியும் சொல்லமுயலவேண்டும். ஆதலால் உபாத்தியாயர் விடாமுயற்சி செய்கிறவராயும் பொறுமையுள்ளவராயுமிருக்கவேண்டும்.

12. பக்ஷபாதமின்மை. இது நியாயம் இது அநியாயமென்பது பிள்ளைகளுக்கு நன்றாய்த் தெரியும். சில பிள்ளைகளை யொருமாதிரியாயும் மற்றும் சிலரை வேறு மாதிரியாயும் நடத்தினால் அவரிடத்தில் பிள்ளைகளுக்கு நம்பிக்கையிராது.

13. சத்யம் தவறாமை. உபாத்தியாயர் தான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையிலும் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் சத்தியத்தை மேலாகக்கொண்டவராயிருக்க வேண்டும். உபாத்தியாயர் சத்தியம் தவறுதவராயிருந்தால் பிள்ளைகளுக்கும் அதே நன்னடவடிக்கை படியும்.

14. பிள்ளைகளின் நன்மையை உத்தேசித்து உபாத்தியாயர் தன்னிடத்துள்ள துரப்பியாசங்களையெல்லாம் நீக்கி, நாள் தப்பாமல் குறிப்பிட்ட மணிக்குப் பள்ளிக்கூடத்துக்கு வருதல், சரீரத்திலும் உடுப்பிலும் பரிசுத்தமாயிருத்தல் முதலிய நல்ல வழக்கங்களை பிள்ளைகளும் அநுசரிக்கும்படி அப்பியசித்து வரவேண்டியது.

## PROVERS AS AIDS TO CHILD-STUDY.

## பாலபோத சாதனம் : பழமொழி விளக்கம்.

நமது தர்மசாஸ்திரங்கள் எப்படி உற்பத்தியாயின? திடீர் என்று எடுத்ததும் தர்மசாஸ்திரங்களாக வந்து நிற்கவில்லை. எவ்வளவோ அபிமானத்தில் பிரஹ்மாவே சொல்லி அவருடைய பிள்ளையாகிய மனு என்பவர் மானவதர்மசாஸ்திரம் எழுதினார் என்று நாம் ஒருவாறு ஒவ்வொரு ஸமயத்தில் சொல்லிக்கொண்டிருந்தபோதிலும் சரித்திரக்கண்ணாலும், ரோமாபுரி, யவன தேசம் முதலிய இடங்களில் அங்கங்குள்ளோர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தர்மசாஸ்திரங்களின் சர்ச்சையாலும் நாம் பரிசோதித்துப்பார்த்தால் அநேக பழயவழக்கங்கள் ஒவ்வொரு நாட்டிலிருந்ததாகவும், அந்த வழக்கங்கள்,—எந்த வழக்கங்களை நாம் மாமூல் என்று ஒவ்வொரு சமயத்தில் சொல்லுகிறோமோ அந்த வழக்கங்கள்—தர்மசாஸ்திரங்கள் ஏற்படும் முன்னமிருந்திருப்பதாகவுந் தெரியவருகிறது. இவ்வித வழக்கங்கள் அதிகப்படவே, இனி ஓர்வித ஏற்பாடில்லாவிட்டால் இந்த வழக்கங்கள் எண்ணிலடங்காதென்ற சமுசயம் வந்தது. அவ்வித சமுசயம் வந்தபோது தர்ன் ஸ்மிருதிகள் ஏற்படும்படி நேரிட்டன.

இவ்வளவுதூரம் நாம் இங்கு ஸ்மிருதிகளையும் தர்மசாஸ்திரங்களையும்பற்றி சொல்லியதற்குக் காரணம் நாமிப்போது ஆரம்பிக்கும் "பழமொழிகள்" என்பவை இம்மாதிரி வந்த ஸ்மிருதிகளுக்கு முன்னமே, எவைகள் ஸ்மிருதிகளுக்குத் தாயாகவிருந்து வழக்கங்கள் என்று பெயர் பெற்றனவோ அவைகளிலிருந்து, உண்டானவைகள். பழமொழி என்றால் பழய காலத்துச்சொல்; அந்தச்சொல்லை தத்காலம் நாம் வெகு அருத்தத்துடன் பிரயோகப்படுத்துகிறோம். ஒரு நாழிகை செய்ய வேண்டிய ஸம்பாஷணையை ஒரு கொடியில்



சிறு பழமொழி ஒன்றைச்சொல்லி ஸரியாய்க் காட்டிவிடுகிறோம்.

மேலும் ஜனங்களுடைய அந்தர்கதமான பாவங்களை ஒருவனறிய விரும்பினால் அவர்களுடைய பழமொழிகளை நன்றாய்க் கற்றறியவேண்டும். பழமொழிகள்தான் அவர்களுடைய சரித்திரம், மதம் முதலிய ரஹஸ்ய சங்கதிகளை ஒருவாறு பயிரங்கப்படுத்துகிறவைகள். இவைகள்தான், எந்த பாஷையை அவைகள் அனுசரித்திருக்கின்றனவோ, அந்த பாஷையின் யதார்த்த ரூபத்தை வெளிப்படுத்தும் ஆதாரங்கள். சில சரித்திர கிருந்தகர்த்தாக்கள் பல ஜனங்களுடைய பழமொழிகளை ஒன்றுசேர்த்து ஒப்பிட்டுப் பார்த்தால் ஆசியா கண்டத்தின் மத்தியபாகத்திலிருந்து ஜனங்கள் பிரிந்துபோய், உத்திரதக்ஷிண பூர்வபச்சிம பாகங்களில் குடியேறினகாலமும் அவர்களந்த சமயத்திலடைந்திருந்த நாகரீகம் முதலியவைகளும் ஒருவாறு ஒப்பிட ஆதாரங்களுண்டாகும் என்ற அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள். அது யதார்த்தமே.

கர்னாடக பாத்திரங்கள், கர்னாடக கட்டிடங்கள், கர்னாடக சம்பிரதாயங்கள் என்ற அசிலாக்யத்தால் பலவானவைகள் இப்போது மடிந்துபோகிறமாதிரி நமது தேசத்து பழமொழிகளும் அவைகளின் அருமையறியாத நாகரீகங்கள் என்னும் வலையில் சிக்கி மடிந்துகொண்டு வருகின்றன. ஆகையால் இவைகளை சீக்கிரத்தில் ஒன்றுசேர்த்து ஜனங்கள் இவைகளை யிகழாமலிருக்கும்படி பயிரங்கப்படுத்துவது அத்யாவசியமாகவிருக்கிறது.

இவ்வளவு பாவகருப்பமாயிருக்கும் பழமொழி எப்போது உண்டானது; யாராலியற்றப்பட்டது; என்று கேட்டால் சொல்லத் தெரியாது. அவ்வித கேள்விகளுக்கு விடை ஒன்றேதான். ஜனங்கள்தான் பழமொழியை உண்டாக்கினார்கள்; அவர்கள் சொத்துத்தான் அது; எல்லாருடைய ஸமுதாய சொத்தாகவுமிருக்கிறது. இந்த 'எல்லா ஜனங்களுடைய சமுதாய சொத்தான' பழமொழியைப் பாதுகாத்தல் அவசியம். பழமொழியிலவ்வளவுசிரத்தை ஏன் என்று கேட்டால், பழமொழிதான் ஒவ்வொரு ஜனங்களுடைய ஸரியான பேச்சு, புத்தி, யுக்தி, சக்தி, மதம், தைர்யம், கோட்பாடு, கொள்கை முதலியவைகளை வெளியிடுபவைகள். இவ்வளவு சக்தியுள்ள இந்த பழமொழியோ இன்னாரிடந்தானிருக்கின்றது; இன்ன புஸ்தகமூலமாய்த்தான் கற்றுக்கொள்ளவேண்டும் என்றில்லாமல் எல்லாரிடமும் கொஞ்சங்கொஞ்சம், அவர்கள் பத்வியோ, வித்தையோ இவைகளை யனுஸரித்து விளங்கி வருகிறது.

"முற்றுங் கற்றவரில்லை முழுவதூஉம் கற்றனமென்று களியற்க" என்னும் சித்தாந்தம் ஒருக்காலிந்தப் பழமொழி வித்தைக்குத்தான் முக்கியமாக ஏற்பட்டதோ என்று சந்தேகிக்கும்படியாக, பெரிய வித்வான்கூட அவன் வீட்டு தயிர்க்காரியிடம் பேச்சிலறிந்துகொண்ட பழமொழிகளிருக்கின்றன. ஆகையால் பழமொழிகளை முற்றிலும் கற்றவர்கள் ஒருவருமில்லை. நமக்கு 4-தெரிந்திருக்கலாம், நமது வீட்டு மாட்டுக்காரனுக்கும் நமக்குத் தெரியாத பழமொழிகள் 4-தெரிந்திருக்கலாம்; இவைகளையெல்லாம், எங்கெந்த சமயத்தில் யார் யார் வாயிலிருந்து வருமோ அப்போதப்போது எடுத்து நாம் ஏற்படுத்திய அட்டவணையைக்கொண்டு பார்த்தால் நமது தமிழில் சற்றேறக்குறைய 10,000 பழமொழிகளுக்குக் குறையாமல் இருக்கலாம் என்று தோன்றுகிறது. சிலர் ஔவை முதலிய கவிகளுடைய "தந்தைதாய்ப்பேண்," "இளமையிற்கல்" என்னும் மூதுரைகளையும் பழமொழியாய்ச் சேர்த்து கணக்கை அதிகரிக்கிறார்கள். இவைகள் பழமொழிகளாகமாட்டா. ஏனெனில் இவைபோன்றவைகள் ஜனங்கள் பேச்சாகவிராமல் ஒரு கவியினுடைய சொல்லாகவிருக்கிறது; நாம் நமது பழமொழிகளில் ஜனங்கள் சொல்லாய் வழங்கிவருகிறவைகளை யல்லாது மற்றவைகளைப் பழமொழிகளாக ஒப்புக்கொள்ளவில்லை. பழமொழிகளின் அருத்தத்தை

உள்ளது உள்ளபடி சொல்லி அவைகளைச் சேர்ந்த கதைகள், பிரயோகங்களின் வித்யாஸம் முதலியவைகள் ஏதேனுமிருப்பினும் அவைகளையும் எடுத்துச்சொல்லக் கேட்டுணர வேண்டியதவசியம்.

அன்றியும் இவ்வித பழமொழிகள் பதினையிரத்தையும், அகரமுதல் வௌகாரம்வரையும் எழுத்துவாரியாய்க் கொடுப்பதினால் அதிக பிரயோஜனமிருக்கமாட்டாது என்று எண்ணி ஒவ்வொரு விஷயத்தின் கீழும் வரும் பழமொழிகளை எடுத்தெழுத உத்தேசித்திருக்கிறோம். அகரத்தில் அகதி, ஏழமை இவைகளைப் பற்றிய பழமொழிகள் முதல் முதல் ஆரம்பிக்கிறபடியால் இவைகளை முதலில் எடுத்துச் சொல்லுகின்றோம். அகரமுதலாய்வரும் அட்டவணையில் "அகங்கையிற்போட்டு புறங்கையை நக்கலாமா" என்னும் பழமொழியைக்கொண்டு எல்லா புஸ்தகங்களும் ஆரம்பிக்கிறபடியால் அதையும் விடாமல் முதலில் கொடுத்திருக்கிறோம். அப்புறம் ஏழமை என்னும் விஷயத்தின் கீழ்வரும் பழமொழிகளை ஒருவாறு சொல்லி முடித்து பிறகு விஷயங்களின் பிரகாரம், விவசாயம், கோபம், வியாபாரம், பொறுமை, பணம், நாகரீகம், மதம் முதலிய ஒவ்வொரு விஷயத்தையும் எடுத்துக்கொண்டு அதன்கீழ்வரும் பழமொழிகளை நம்மால் கூடியமட்டும் சம்பூர்ணமாகக் கேட்டெழுத முயலுவோம்.

பழமொழிகள்.

(1) அகங்கையிற் போட்டு புறங்கையை நக்கலாமா.

அகங்கை என்றால் உள்ளங்கை. உள்ளங்கையில் ஏதோ ஒரு திரவபதார்த்தை—நெய்யை அல்லது தேனை—போட்டு=வைத்து, புறங்கையை=வெளிப்பக்கத்துக் கையை; நக்கினால், உள்ளங்கையில் போட்டதேனோ நெய்யோ எப்படி வாயில் வரும் என்றபடி. இந்தப் பழமொழி எப்போது உபயோகப்படுத்தப்படுகிறது என்றால், நாம் ஒருவனுக்கு உபகாரஞ்செய்துவிட்டு உபகாரஞ்செய்யாத மற்றொருவனிடமிருந்து நாம் கஷ்டப்படுங் காலத்தில் ஏதாவது ஒருவித சகாயத்தை எதிர் பார்க்கும்போது அல்லது ஒருவிதமாக பிரயத்தனம் பண்ணி மற்றொரு விதமாக லாபம் எதிர்பார்க்கும்போது.

ஏழமை.

(2) அகதிக்கு ஆகாயந்துணை.

(3) அகதிக்கு தெய்வமேதுணை.

அகதி என்றால்=போக்கற்றவன். அதாவது அத்தியந்த தரித்திரன். அவன் பங்கில் யாரிருப்பார்கள்? ஒருவருமிருக்கமாட்டார்கள்; ஆகாசம் அல்லது தெய்வந்தான் அவனுக்குத் துணை.

ஏழைகளுக்கு தெய்வத்தைத் தவிர வேறொருவித சகாயமும் கிடையாது என்றபடி. இந்த உலகம் எப்போதும் பணத்தையே அநுசரித்ததாக விருக்கிறபடியால் எவனிடம் பணமிருக்குமோ அவனைத்தான் தொடரும். "ஸர்வே குணா: காஞ்சனம்* ஆச்ரயந்தே" என்றும், எல்லாகுணங்களும் பணமிருக்கிறவனுக்குத்தான், அவனிடம் என்னதோஷமிருந்தாலுமதை மறைத்து குணமாக லோகம் புகழும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அகதிக்கோ ஒருவித துணையும் கிடையாது. ஆகாசமும் தெய்வமுந்தான். மற்றவர்கள் செய்தகுற்றங்கள் அகதி தலையில் விடியும். அப்படி வருகிற காலத்தில் அகதிபங்கில் யாரிருந்து சாட்சி சொல்லுவார்கள். ஒருவரும் அவனை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஆகாசமும் தெய்வமுந்தான் அவனுக்குத் துணை என்றபடி.

(4) அகதிசொல் அம்பலமேறாது.

அகதி ஏதாவது தன் ஒரு விஷயத்தைப் பற்றிச் சொன்னால் அதை யார் காதுகொடுத்துக் கேட்பார்கள். ஏழமை என்பது 6-வது பாதகத்திற்கு ஒப்பானதாகையால் அவனை ஒருவரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அம்பலம் என்றால் சபை. அவன் சொல்லை சாதா

* காஞ்சனம்=தங்கம்=தங்கத்தை.
ஆச்ரயந்தே=தொடருகின்றன.



ரண ஜனங்களே—அவன் பெண்சாதி, பிள்ளைகளே கேட்கமாட்டார்களே: அது ராஜசபையில் என்னமாக ஏறும் என்றபடி.

(5) அகதி தலையில் பொழுது விடிந்தது.

இதனுடைய அருத்தம் வெகு விசித்திரம். இதை விவரிக்கும் முன்னதாக நாம் சொல்லவேண்டியவைகள் சிலவுண்டு. காலையில் நாம் படுக்கையைவிட்டு எழுந்திருக்கும்பொழுது எந்த முகத்தைப் பார்க்கிறோமோ அதற்குத் தகுந்தபடி அந்த நாள் நமக்கு இருக்கும் என்பது ஹிந்துக்களின் கொள்கை. சில ஜனங்கள் நல்லவர்கள் என்றும் அவர்கள் முகத்தில் விழித்தால் ஒன்றும் குறைவுவாராது என்றும் சொல்வதையும், அதே மாதிரி சிலர் பொல்லாதவர்கள் என்றும் அவர்கள் முகத்தைப் பார்த்தால் அன்றையப்பொழுது நல்ல பொழுதாகப் போகவேண்டுமேயென்ற பயம் ஜனங்களுக்கு உண்டாவதையும் நாம் கேட்டும் பார்த்துமிருக்கக்கூடும். "இன்றைய தினத்தில் யார் முகத்தில் விழித்தேனோ தெரியவில்லை: என் கதி இப்படியாக முடிந்தது" என்று சிலர் புலம்புவதையும் நாம் கண்டிருக்கலாம். இதற்காகவே சிலர் தூங்கப்போகும் முன்னம் தங்கள் தலைக்கு நேராக நல்ல படங்கள் கண்ணாடி முதலியவைகளை வைத்திருப்பதுண்டு. காலையில் அவைகளின் பக்கம் திரும்பிக்கொண்டு கண்ணைவிழித்துக் கொள்வார்கள். மலையாளதேசத்தில் இம்மாதிரி பிராதக்காலத்தில் நல்ல வஸ்துக்களைப் பார்க்கவேண்டும் என்ற கொள்கையானது வெகு பிரபலமாய் வருஷப்பிறப்பின்போது நடப்பது அந்த நாட்டில் கொஞ்சகாலம் வசித்தவர்களுக்குத் தெரியும். அவ்விடத்திய வருஷப்பிறப்பிற்கு விஷுக்கணி என்று பெயர். விஷு என்றால் வருஷம். வருஷத்தின் பிறப்பு. அதாவது நவீன வருஷத்தின் ஆரம்பம். கணி என்றால் பார்வை. ஆகவே "விஷுக்கணி" என்றால் புது வருஷத்தின் பார்வை என்று அருத்தமாகும். இந்த தினத்தில் அவ்விடத்தில் என்ன நடக்கிறது என்பதை சற்று விசாரிப்போம். வருஷப்பிறப்பிற்கு முதல்நாள் சாயந்திரம் ஒவ்வொரு வீட்டிலும், அங்கங்குள்ள முக்கியமான ஆபரணங்கள், கண்ணாடிகள், பலவகைப்பழங்கள் கொன்னை முதலிய புஷ்பங்கள் இவைகளெல்லாம் சேகரிக்கப்பட்டு அந்த வீட்டுப் பூஜை அறையில்வைக்கப்படும். சகலவிதமான காசுகள், தங்கக்காசு, வெள்ளிக்காசு முதலியவைகள் குவியல் குவியலாய் வைக்கப்பட்டிருக்கும், நன்றாய் பழுத்தவும் ஒருவித கோணலும் ஊனமுமில்லாதவுமான பரங்கிக்காய் பூசணிக்காய் முதலிய காய்வர்க்கங்களும் அவ்விடம் கொண்டுவரப்படும்; நன்றாய் முத்தின தேங்காய்கள் 2-மூடிகளாக குறைவு ஒன்றுமில்லாமலுடைக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும்; அகப்படக்கூடிய சகலவித கனிவர்க்கங்களும் நிறைந்திருக்கும். அந்தந்த குடும்பத்துக்குத் தலைவனை காரணவன் என்பவன் வருஷப்பிறப்பாகிய விஷுவன்றைய தினம் அதிகாலையில் 4-மணிக்கு எழுந்திருந்து பூஜைமனையைத் திறந்து கையில் தீபம் ஏந்தி அவ்விடம் வைக்கப்பட்டிருக்கிற பணம், காசு, நகை முதலிய எல்லாவற்றையும் தீபாராதனை செய்து வணங்குவான். அப்புறம் அந்த வீட்டிலுள்ள ஒவ்வொரு ஜனங்களும் ஒருவர்பின் ஒருவராக தங்கள் கண்ணை மூடிக்கொண்டு அந்த அறைக்குட்சென்று கண்ணைத்திறந்து காசுக்குவியல்கள், கனிவர்க்கங்கள் முதலியவைகளை முதல் முதலில் பார்ப்பார்கள். அப்படி முதல் முதலில் கண்ணைவிழித்தபிறகு காரணவன் ஒவ்வொருவருக்கும் கைநாட்டு என்று சில வெகுமதிகள் கொடுப்பது வழக்கம். கைநாட்டென்றால் கையில் வைக்குதல்.

இம்மாதிரி முதல் முதலில் நல்ல பதார்த்தங்களில் கண்ணைவிழித்துவிட்டு ஒவ்வொருவரும் தங்கள் இருகரங்களையும் நீட்டுவார்கள். அப்படி நீட்டும்பொழுது காரணவன் ஒவ்வொருவருக்கும் காசு, பழம், நகை முதலியவைகளை அவரவர்கள் வயதுக்கும் பதவிக்கும் தக்கப்படி கொடுப்பதுவழக்கம். இதற்குத்தான் கைநாட்டென்று பேர். இதற்குப் பிறகு விஷுவன்

றைபதினம் மலையாளிகள் காலையில் கஞ்சி குடித்துவிட்டு பகல் 20-22 நாழிகைக்கு ஒரு வேளைதான் சாப்பிடுவது வழக்கம். இதன் அருத்தம் வருஷப்பிறப்பன்று ஒரு வேளைக் கஞ்சியும் மற்றொருவேளை அன்னமும் கிடைத்தால் இவ்விரண்டிற்கும் வருஷம்முடிய குறைவிருக்காது என்பதாம்.

முதல் முதலில் காலையில் எழுந்தவுடன் யார் முகத்தில் விழிக்கிறோமோ அதை அனுஸரித்து நமது நாளின் அதிர்ஷ்டங்களிருக்கும் என்பது ஹிந்துக்களுடைய தொன்றுதொட்டு வரும் கொள்கைகளிலொன்று. இந்தக் கொள்கை முதல் முதல் காலையில் விழிக்கும் முகத்திற்கு மாத்திரமல்ல. ஏதாவது ஒரு பிரயாணம் முதலியவைகள் செய்ய எத்தனிக்கும்போதும் சுபசகுனங்கள் அபசகுனங்கள் என்று பார்ப்பதும் வழக்கம். ஒரு ஊருக்கு ஒருவன் புறப்படும்போது நல்ல சகுனமாகாவிட்டால் பிரயாணத்தை நிறுத்திவிடுவான். அல்லது வீட்டிற்குத் திரும்பிவந்து உட்கார்ந்து ஒரு வாய் தீர்த்தமாவது குடித்துவிட்டு மறுபடி புதிதாகப் புறப்படுவதுபோல புறப்படுவான். சில அபசகுனங்களுக்கு பிராயச்சித்தம் அல்லது மாற்றுகள் உண்டு. இரவில் புறப்படும்போது ஆகாசத்திலிருந்து நக்ஷத்திரங்கள் உதிர்ந்தால் அது அபசகுனம். அப்படி உதிருங்கால் பச்சைமரத்தைப் பார்த்தால் அந்தப் பாபம் நீங்கும். நக்ஷத்திரங்கள் உதிர்கின்ற ஸங்கதி நூதன சாஸ்திரப்படி மேகங்கள் மோதி அவைகளினின்று உற்பவிக்கும் மேகத்தீ என்று ஏற்பட்டபோதிலும் ஹிந்துக்களின் கொள்கைப்படி அவைகள் ஆகாசத்தில் புண்ணியம்பண்ணி வசித்த மஹாத்மாக்கள் புண்ணியம் குன்றிப்போகவே நட்சத்திர ரூபமாக பூமியில் விழுகிறார்கள் என்பதாம். இது கேவலம் குழந்தைகள் கொள்கையல்ல; மிருச்சகடி என்னும் பழைய நாடகத்தில் 4-வது அங்கத்தில் தாளம் போடுவதில் ஜாலர் மேலிருந்து கீழ்விழும்பொழுது அதை புண்ணியம் குன்றி ஆகாசத்திலிருந்து பூமியிலிறங்கும் நக்ஷத்திரத்திற்கு சமானமாயிருப்பதாக கவி வருணித்திருக்கிறார். இந்த கிரந்தமோ 2,000-வருஷங்களுக்கு முன்னியற்றப்பட்ட கிரந்தம். இம்மாதிரி சில சகுனங்களும் அவைகளுக்கு பரியாயங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

நமது நாட்டார் கொள்கையைப்பற்றி இவ்வளவு தூரஞ்சொல்லிவிட்டு நமது 5-வது பழமொழியாகிய "அகதிதலையில் பொழுது விடிந்தது" என்பதைப்பற்றி விசாரிப்போம். அகதி எப்பொழுதும் ஒருவருக்கும் நல்லவனல்ல என்பது எல்லாரும் அறிந்திருக்கும் விஷயம். அவன் சொந்த ஜனங்கள், பந்துக்கள், மித்திரர்கள், அவன் பெண்டு பிள்ளைகள் கூட அவன் அகதியாய்விடவே அவனை அலட்சியம் செய்துவிடுவார்கள். அன்றியும் ஏதாவது நமக்கு ஒரு ஆபத்து ஸம்பவித்தால் நாம் அந்த விடியாமுகமுள்ள* தரித்திரன் முகத்தில் விழித்தேன் இன்றைப்பொழுது இப்படியாயிற்று என்று சொல்லுவதும் வழக்கம். இந்தக் கொள்கையினுடைய கதை பின்வருமாறு:—

ஒரு ஊரில் ஒரு அரசன் அதிகாலையில் எழுந்திருந்து தன் மாளிகைமேல் நின்றுகொண்டு இன்னும் துயில் நீங்காதிற்கும் தனது பட்டணத்தை நாலுபக்கமும் மேலிருந்த வண்ணம் பார்த்தான். எங்கும் நிசப்தமாயிருந்தது. மனிதப்பூண்டு என்பது ஒன்றுகூடக்காணோம். இப்படி பார்த்துக்கொண்டிருக்கும்போது ஒரே ஒரு அகதி ஒரு பழக்கடை முன் நின்றுகொண்டு கீழே விழுந்திருக்கும் பழத்தோல்களை எடுத்துக்கொண்டிருக்கக் கண்டான். தற்செயலாய் அந்த அகதியும் அரசனைப் பார்த்தான். பிறகு அரசன் தனது மொட்டை மாளிகையைவிட்டு அறைக்குட்புகும்பொழுது

* இது வழக்கச்சொல்லில் 'விடியாமூஞ்சி' என்று மருவி வருவதுண்டு.



கதவு நிலை அவன் தலையிற்றாக்கி ரத்தகாயம் பண்ணிவிட்டது. அவன் மனதில் உடனே தோன்றிய தென்னவெனில், 'அந்தப் பாவிப் பிச்சைக்காரன் முகத்தில் விழித்தோம்: தலையில் காயம் பட்டுவிட்டது. அவன் சண்டாளன். இன்னும் எத்தனை பெயர்கள் பிரதிதினமவன் முகத்தைப்பார்த்து இப்படி என் மாதிரி அவஸ்தைப்படுகிறார்களோ தெரியவில்லை—என்று யோசித்து உடனே ஒரு ஆளையனுப்பி அந்த அகதியைத் தருவித்து அவனைப்பார்த்து "அடேசண்டாளா" இன்றுகாலை எழுந்து நான் உன் முகத்தைப்பார்த்தேன். எனக்கு இன்றைப்பொழுது உன் தலையில் விடிந்தது. என் ஸ்திதி என்னமாயிற்றுப் பார். தலையில் காயப்பட்டு அவஸ்தைப்படுகிறேன். இம்மாதிரி எத்தனை பேர் அவஸ்தைப்படுகிறார்களோ தெரியவில்லை. இவ்வளவு கெட்டவனாகிய நீ இருப்பதிலும் இறப்பது நலம். உன்னைக் கழுவேற்ற உத்தரவிடுகிறேன்" என்றான். இதைக்கேட்டான் அகதி. என்செய்வான் அவன். அகதி சொல்லோ அம்பலமேறாது. அகதிக்கோ ஒருவரும் துணையில்லை. இருக்கட்டும். நாம் நம்மால்கூடியமட்டும் பார்ப்போம் என்று எண்ணிக்கொண்டு அரசனை நோக்கி "மகாராஜாவே என்னைப்பார்த்துத் தங்களுக்கு ரத்தகாயப்பட்டது என்றுசொல்லி என்னைக் கழுவிலேற்ற ஆக்ஞாபித்தீர்கள். நானோ இன்றைபதினம் தங்களைப்பார்த்து கழுவிலேற்றப் படப்போகிறேன். நம்முள் யார் ஜன்மம் அதிக கெட்டஜன்மம் என்பதை எல்லாந்தெரிந்த தாங்களே ஊகித்துக்கொள்ளவேண்டும்" என்றான். அரசன் அவன் தைரியத்தையும் யுக்தியையும் கண்டு மெச்சி அவனை மன்னித்தான்.

இந்தப் பழமொழியின் தாத்பரியம் அகதி எல்லாரையும்விட பணத்திலும் செல்வாக்கு முதலியவைகளிலும் இளைத்தவனாகையால், அவன் தலையில் குற்றங்களை சுமத்துவது வழக்கம்.' அப்படிச் செய்வது நியாயமல்ல. தீர விசாரித்து அகதி ஒருவன் குற்றவாளிதான் என்று நிச்சயப்பட்டபிறகு அவனுக்கு சிட்சை விதிக்கவேண்டும். அப்படியில்லாமல் அவன் அகதியாயிருக்கும் ஒரு காரணத்தைக்கொண்டே அவன்மேல் எல்லாவித பாபத்தையும் சுமத்தி பழிகளை அவன்மேல்போட்டு அவதூறு சொல்வது நியாயமன்று என்றபடி.

## CHARACTER SKETCH: SIR THOMAS MUNRO.

## குணவலி விளக்கம்: ஸர் தாமஸ் மன்றோ பதுமையும், அவர் ஜீவ்ய வரலாறும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."

இச்சஞ்சிகையின் முகப்பில் படத்தில் சித்திரித்துக் காட்டியிருக்கும் 'மன்றோ ஸ்டாட்யூ' (Munro's Statue)என்னும் பதுமையை சென்னைமா நகரவாசிகள் அனேகமாய் எல்லோரும், மற்றும் இந்நகரைக் கண்காட்சியின் பொருட்டு வந்து கண்ணுற்றுப் போகும் வெளிநாட்டாராகிய அனேகரும் பார்த்திருக்கலாம். இப்பதுமை நாட்டப்பட்டிருக்கும் இடம் கண்ணுக்கு மிகவும் ரமணீயமானது. இந்நகரை ஊடுருவிச்செல்லும் கூவநதி என்னும் ஓர் சிற்றாறு சமுத்திர சங்கமமாவதற்குக் கொஞ்சமேலாக இரண்டு கிளைகளாகப் பிரிந்து இந்நகரினோர் பாகத்தைச் சிறிய தீவாக்கிப் பின்னும் புனைந்து கடலில் பாய்கிறது. இத்தீவின் இருபுறத்திலும் சாலைமரங்கள் அமைந்த 'மவுண்டு ரோட்டு' என்னும் விஸ்தாரமான சாலை கிளைநதிகளை இரண்டு நேர்த்தியான பாலங்களால்* கடந்துகொண்டு தென் வடலாய் ஊடுருவிச்செல்கின்றது. இப்பாதையின் இருபுறத்திலும் கண்களைக் கவரத்தக்க பசும்புற்கள் நிறைந்துள்ள மைதான வெளிகள் இருக்கின்றன. கிழக்குப் பக்கத்தில் இருக்கும் மைதானத்தில் மாலைப்பொழுதில் குதிரைப் பந்தயம் நடப்பதையும், துரைமார்கள் பந்தயத்திற்காகக் குதிரைகளைப் பழக்கிக்கொண்டிருப்பதையும், இவைகளைப்பார்க்க ஜனங்கள் திரள்திரளாய் கூட்டம் கூடியிருப்பதையும் பார்க்க வெகு விநோதமாயிருக்கும். மற்றப் பக்கத்து மைதானத்திலோ சேனாவீரர்கள் கவாத்துப்

* தென் புறத்திலிருக்கும் பாலத்திற்கு கவர்னர் மாளிகை வாராவதி என்றும், வடபுறத்துப் பாலத்திற்கு வாலாஜா வாராவதி என்றும் பெயர்.

பழகுவதையும், சாயங்கால வேளைகளில் வாலிபர்கள் பந்தடிப்பதையும் பார்க்கலாம். இத்தீவின் நாலாபக்கத்திலும் ஆங்காங்கு மரங்களுக்கிடையிலேயும், சிற்சில தாழ்ந்த கட்டிடக் கும்புகளிலேயுமிருந்து ஆகாயத்தை அளாவி நிற்கும் நகர சபாமண்டபம் (Victoria Public Hall), புதிய முனிசிபல் ஆபீஸ் சென்னை இருப்புப்பாதை 'ஸெண்டிரல் ஸ்டேஷன்,' 'ஹைகோர்ட்டு,' கோட்டைக் கட்டிடங்கள், சர்வகலாசபை மண்டபம் (Senate House), கலச மஹால், கவர்னர் மாளிகை முதலான இத்தகைய மாடகூடங்களினுடைய கோபுரசிகரங்களின் தோற்றம் நேத்திரோத்ஸவமுண்டாக்கத்தக்க நேர்த்தியான காட்சியாய்த் தோன்றும். இவ்வருமையான தோற்றத்தையுடைய இத்தீவின் நடுவில், சாலையின் மத்தியில் அண்டாகாரமாய் அமைத்ததும், மனோரஞ்சிதமான பூஞ்செடிகள் நிறைந்துள்ளதுமானதோர் மேடையில், கருங்கல்லாலாக்கியதும், சற்றேறக் குறைய பூமிமட்டத்திற்கு 25 அடிக்குமேல் ஸ்தம்பாகாரமாய் நிற்பதுமான ஓர் அழகிய பீடத்தில் இந்த மன்றோசீமானது பதுமையானது கிழக்கு நோக்கிய முகமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. போர்க்களத்திலும் சற்றேனும் சளைக்காத கம்பீரமுள்ளதாய்த்தோன்றும் பாராசாரிக்குதிரை ஒன்றின்பேரில் ஏறி ஓர் கையில் கடிவாளம்பிடித்து மற்றக்கையில் உருவின கத்தியோடு எதிரிகளை எதிர்த்துத்தாக்கச் சேனையை நடத்தத்தயாராய் வெகுதிடசித்தத்துடன் வீற்றிருக்கிறார்போல மிகவும் சிறந்த வேலைப்பாடுடன் நிர்மாணித்திருக்கப்பட்ட இப்பதுமை இத்தீவிற்கு ஒரு நடு நாயகமாகும் திலகமணிபோல் விளங்குகிறது. இக்காட்சியின் அருமை பெருமையை அறிந்துதான் இப்பதுமைக்கு இங்கு இடமளித்தார்கள் போலும். இவ்வுருவை அனேகர் பார்த்திருப்பினும், இதில் பிம்பரூபமாய் பிரகாசிக்கும் மகா பிரபு யாவர்? யாதுகாரணத்தின்பொருட்டு அவருக்கு இப்பதுமைரூபம் அமைக்கப்பட்டு காண்போர் கண்களை ஆனந்திக்கத்தக்கதும் விசேஷமாய் ஜனங்கள் நடமாடக்கூடியதுமான இடத்தில் நாட்டப்பட்டிருப்பது? இப்பதுமை எவ்வகைப் பொருளால் அமைக்கப்பட்டுள்ளதோ? இவ்வழகிய பதுமையைச் சிற்பித்த சிற்ப வல்லாளர் யாவரோ?—என மனதில் உதயமாகும் சில கேள்விகளைக் கருத்துடன் கேட்டறிந்து கொண்டார் சிலரேயுளர்.

கொஞ்சநாளைக்கு முன் ஓர்தினத்தில் நாம் 'மவுண்டு ரோட்' வழியாய்ச் செல்லுகையில் இப்பதுமை நிற்குமிடத்தில் சற்று நிதானித்து அதன் சிறந்த லக்ஷணங்களையும், வேலைப்பாட்டின் திறத்தையும் சிந்தித்துக்கொண்டு அதைக் கண்ணோக்கின வண்ணமாய் நிற்கையில், சமீபத்தில் வந்துகொண்டிருந்த இருவர்களில் ஒருவன் மற்றவனைப்பார்த்து, 'இதென்ன ஆச்சரியம்! கல்லாலோ, செம்பாலோ, இரும்பாலோ செய்யப்பட்ட இந்தப் பாவையை இவர் வெகு ஆச்சரியமாய்க் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கிறாரே. என்ன காரணமோ தெரியவில்லை' என்றுசொல்ல, அதற்கு மற்றவன் 'அது என்னமோ நான் ஒரு ஆச்சரியத்தையும் காணவில்லை' என்று சொல்லிக்கொண்டே இருவரும் அப்புறம் போனார்கள். நடந்த இச்சம்பாஷணையால் நாம் அதிக வியப்புற்று போகுமவர்களைக் கூவியழைத்து, 'இப்பிம்ப ரூபமாய்விளங்கும் பிரபு யாவரென்று நீங்கள் அறிவீர்களோவென்ன, அதில் ஒருவன் 'இவர் பரங்கிப்பட்டாளத்துள் ஓர் தலைவன்; அவன் தன் ஜாதிக்கும் வேலை அந்தஸ்திற்கும் குறைவானதும் அவமானமுண்டாக்கக்கூடியதுமான ஓர் கெடுதொழில் புரிந்ததால் காண்போரெல்லாம் பார்த்து அவமதிக்குமாறு இங்கு அவனுருவைக் காற்று மழை வெயிலில் அடிபட்டு காக்கை கழுகுகள் தலையில் உட்காரும்படியாக வெட்டவெளியில் நிறுத்தியிருக்கிறார்கள்'. என்று புகலக்கேட்டு எமக்கு வெகு நகைப்புண்டாயிற்று. நகைப்புக்குக் காரணம் படிப்பு, நாகரீகம், சீர்திருத்தம் முதலான இவைகளெல்லாம் நாளுக்குநாள் மேன்மேலும் அபிவிர்த்தியாய்வரும் இக்காலத்



திலும் இப்படி தப்பான அபிப்பிராயம் சிலர் கொண்டிருக்கிறார்கள் என்பதே. நாம் அவர்களுக்கு அந்தப் பிரபுவின் சௌரிய ஔதாரிய குணங்களையும் பெருமைகளையும், அப்பதுமையின் சிற்ப சிலாக்கியத்தையும் நன்றாகப் புகட்டிக் காட்டிய பிற்பாடு தங்கள் பிசகான அபிப்பிராயத்தை தவிர்த்து அவர்கள் வழிநோக்கிச் சென்றார்கள். இப்பதுமையைக் குறித்த பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள விரும்புவோர்க்கு அவற்றை ஒருவாறு அடியில் சுருக்கிச் சொல்வோம்.

### ஸர் தாமஸ் மன்றோ சரித்திரம்.

மேற்சொன்ன பதுமை ரூபத்தில் காணப்படுமவர் யாரென்றால், நமது சென்னை ராஜதானியில் 1820-ம்ஷு முதல் 1827-ம்ஷு வரையில் கவர்னராயிருந்து அதிகாரம் செலுத்திவந்த ஸர் தாமஸ் மன்றோ என்னும் கனவான். இவருடைய சரித்திரத்தைப் படிப்பதால், ஒருவன் எவ்வளவு எளியவனாயிருந்தாலும் விடாமுயற்சியும், புத்திசாதுரியமும், எடுத்த காரியத்தைக் கருத்தாய்ச்செய்து முடிக்கும் குணமும் அவனுக்கு இருக்குமேயானால் கடைசியில் நல்ல பதவியை அடையலாமென்பது நன்றாய்ப் புலப்படுகிறது.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு."

இவர் இங்கிலாந்தை யடுத்த ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ (Glasgow) என்னும் பட்டணத்தில் 1761-ம் வருஷம் மேமீ 27௳ பிறந்தவர். இவர் தந்தையாகிய அலெக்ஸாந்தர் மன்றோ என்பவர் ஒரு வியாபாரி. தாமஸ் மன்றோ பதினாறு வயதிற்குள்ளாகவே கிளாஸ்கோ சர்வகலாசாலையில் படித்து கணிதம், இலக்கணம், சரித்திரம் முதலான சாஸ்திரங்களில் மிகத்தேர்ச்சியடைந்தார்.

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு."

போர்வீரருக்கும், ராஜரீக காரியங்களைச் சரிவர நடத்துவோருக்கும் வேண்டியவையான தேககாத்திரமும், வலிமையும், விசேஷ சுருசுருப்பும், ஆத்தும பரித்தியாகமும், மனோதைரியமும் இவரிடத்துப் பால்யத்திலேயே நன்றாய் விளங்கியது. 1777-ம் வருஷத்தில் ஒரு வர்த்தகரிடத்தில் இவர் குமஸ்தாவாக அமர்த்தப்பெற்றார். பிறகு அடுத்த வருஷத்திலேயே அவர் தகப்பனார் வியாபாரம் நசித்துப் போய் மிகவும் எளியவராய்விட்டபடியால் தாமஸ் மன்றோ தன் வேலையை விட்டுவிட்டு 'ஈஸ்டு இந்தியா கம்பெனி' யாரிடத்தில் ஒரு படையாளாகச்சேர்ந்து இந்தியாவுக்குவரும் அவர்கள் கப்பலொன்றில் பிரயாணப்பட்டு வரவேண்டியதாயிற்று. போர்ச்சேவகனாயமர்ந்தும் பிரயாணச் செலவுக்கு பணம்கொடுக்க வகையில்லாததினால் அதற்கு ஈடாகக் கப்பலில் ஓர் சாமானிய மாலுமியாக வேலைசெய்து 1780-ம் வருஷம் ஜனவரிமீ 15௳ சென்னப்பட்டணம் வந்துசேர்ந்தார். இந்தியாவில் வந்ததும் இவருக்கு ஏற்பட்ட சம்பளம் 28-ரூபாய். இச்சொற்ப வரும்படியுடன் அவருக்குண்டான சௌக்கியக்குறைவைச் சொல்லவும் வேண்டுமோ. மாதமொன்றுக்கு வேலைக்காரனுக்கு 7-ரூபாயும், சமையற்காரனுக்கு $3\frac{1}{2}$-ரூபாயும், வண்ணானுக்கு $3\frac{1}{2}$-ரூபாயுமாகக் கொடுக்கவேண்டியிருந்ததால் இவர் மற்ற செலவுகளை 14-ரூபாயிலேயே நடத்திக்கொள்ள வேண்டியதாயிருந்தது. புசிக்கச் சரியான போஜனமில்லாமலும், உடுக்கச்சரியான உடையில்லாமலும் வெகுவாய்த் தரித்திரத்தின் கொடுமையால் அவதிப்பட்டார். அவர் தன் சகோதரிக்கு எழுதின ஒரு கடிதத்தில் தான் இந்தியாவுக்குவந்து 3-வருஷங்கள் வரையிலும் ஒரு கோணியின்மேல் புஸ்தகத்தை தலையணையாக வைத்துக்கொண்டு நித்திரை செய்துவந்ததாக எழுதியிருக்கிறார்.

இவர் வந்த கொஞ்ச காலத்திற்குப் பிற்பாடு கம்பெனியாருக்கும், மைசூர் சுல்தானாகிய ஐதர் ஆலிக்கும் போர் உண்டாயிற்று. 1780-ம் வருஷம் முதல் 1784-ம் வருஷம் வரையில் நடந்த மைசூர் யுத்தத்தில் நேர்ந்த போர்டோநோவோ, பாலிலோர், சோளிங்கர், சித்தூர்,

ஆரணி, கூடலூர் முதலான சண்டைகளிலேயும், சிதம்பரம், திருப்பாசூர், கூடலூர் முற்றுகைகளிலேயும் இவர் படையாளாகப் போர்த்தொழில் புரிந்திருக்கிறார். இவருடைய சவுரியத்திற்காக 1786-ம் வருஷம் இவருக்குப் பட்டாளத்தில் 'லெப்டிநெண்டு' என்னும் அந்தஸ்து அளிக்கப்பட்டது. 1786-ம் வருஷம முதல் 1792-ம் வருஷம்வரையில் ஐதர் ஆலியின் மகனாகிய திப்புசுல்தானுடன் நடந்த மைசூர் யுத்தத்தில் இவர் இருந்து சண்டை செய்திருக்கிறார். சண்டையில் திப்பு தோல்வியடைந்தபடியால் ஸ்ரீரங்கபட்டணத்தில் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டான். இதன் பிரகாரம் சேலம் ஜில்லாவில், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஊத்தன்கரை, திருப்பத்தூர் முதலிய தாலூக்காக்கள் அடங்கிய பாகமாகிய 'பாராமகால்'* கம்பெனியார் வசமாயிற்று. அப்போது 1792-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் இந்த 'பாராமகாலுக்கு' ரீட்துரையுடன் இவர் உதவிக்கலெக்டராக நியமிக்கப்பட்டார். ஐதர், திப்பு இவர்களுடைய கொடுங்கோன்மையால் சீர்கெட்டிருந்த இந்த பாகத்தைத் திருத்தம் செய்து, இப்போது இச்சென்னை ராஜதானியில் நடந்துவரும் 'ரயத்துவாரி ஸிஸ்டம்' என்னும் குடிமிராசு ஏற்பாட்டை நிலத்தீர்வையின் பொருட்டு இவரே 'பாராமகாலில்' முதல் முதல் புதிதாய் ஸ்தாபித்தார். இவர் இங்கே இருக்கும்போது கட்டுவித்த சத்திரங்களும், வெட்டுவித்த குளங்களும், இவரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மரங்களும், இவர் தனக்குள்பட்ட குடிகளிடத்தில் வெகு அன்பு பாராட்டி வந்ததற்கு அறிகுறியாக இன்றும விளங்குகின்றன. 1796-ம் வருஷம் இவருக்கு 'காப்டன்' என்னும் அந்தஸ்து கொடுக்கப்பட்டது. 1799-ம் வருஷம் மார்ச்சு மாதம் திப்பு மறுபடியும் போர் துவக்கவே, இவர் கலெக்டர் வேலையை விட்டு ஸ்ரீரங்கபட்டணப் முற்றுகையின் பொருட்டு ஜெனரல் ஹாரிஸ் என்பவருக்கு உதவியாக வரவேண்டியதாயிற்று. பிற்பாடு இவர் மைசூர் நிலத்தீர்வை முதலான விஷயங்களைக்குறித்து ஏற்படுத்தப்பட்ட காரியதரிசிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டார். இந்த வேலை மேற்சொன்ன வருஷம் ஜூலை மாதத்துடன் முடிந்துபோகவே, புதிதாய் அப்போது தான் கம்பெனியாருக்குக் கிடைத்த கன்னட ஜில்லாவுக்கு உடனே கலெக்டராக தாமஸ் மன்றோ கவர்னர் ஜெனரல் அவர்களால் தெரிந்தெடுக்கப்பட்டார். நிலைகுலைந்திருந்த இந்த நாட்டில் இவர் கலெக்டராயிருந்த 15-மாதங்களுக்குள், அவ்விடமிருந்த கொடுங்கொள்ளைக்கூட்டங்களை வேரோடுகளைந்தும், சர்க்காருக்கு வரவேண்டிய தீர்வைகளைக் குறித்து குடிகளுக்கு தொந்தரவில்லாத ஏற்பாடுகளைச் செய்தும், அந்நாடு முழுவதையும் நீதியான ஆட்சிக்குள்ளாக்கினார். இவர் கன்னட நாட்டை நேரான நிலைமைக்குகொண்டு வருவதற்காக எடுத்துக்கொண்ட விசேஷ முயற்சியின் பொருட்டு மேஜர் என்னும் அந்தஸ்திற்கு உயர்த்தப் பெற்று, நிஜாமால் கம்பெனியாருக்குக் கொடுக்கப்பட்ட, 'விடுபட்ட நாடுகள்' (Ceded Districts) என்று இப்போதும் வழங்கிவரும் பல்லாரி, கடப்பை, கர்நூல் அநந்தபூர் ஜில்லாக்களுக்குக் கலெக்டராக இவரே தகுந்தவரென்று 1800-ம் வருஷம் நவம்பர் மாதம் கிளைவ் பிரபு அவர்களால் நியமிக்கப்பட்டார். இவர் இவ்வதிகாரத்தைக் கைக்கொண்டதும், அந்நாடுகள் முழுவதும் கொள்ளையே கருத்தாய்த் துவம்ஸம செய்து வந்த 80-பாளையக்காரர்கள் அல்லது சிற்றரசர்களை அடக்கி, அவர்களிடமிருந்த ஏராளமான சிப்பாய்ப் பட்டாளங்களையும கலைத்து விடும்படி செய்தார். கொடுங்கொள்ளையும் கொலைகளும் ஒடுங்கி ஜனங்களுக்குள் அமைதி உண்டாகவே, பல நிலங்களையும் அளவிட்டு அதற்குச் சரியான தீர்வையும ஏற்படுத்திச் சர்க்கார் வரி குந்தகமில்லாமல் வந்து சேரும்படியான ஏற்பாடுகளையும செய்தார். இவர் கடப்பை முதலான இடங்களில் இருந்தகாலத்தில் அதிக மழையால் சற்றேறக்குறைய 1000-ஏரிகளும் 800-வாய்க்கால்களும் உடைந்து சிதறுண்டு போகவே, 7-லக்ஷம ரூபாய் வரையில் அவைகளைச் செப்பனிடுவதில் செலவிட்டு குடிகளுக்குப் பெருதவி புரிந்தார். அப்போது இவருக்கு 'கானல்' என்னும் பதவியும் அளிக்கப்பட்டது.

(இன்னும் வரும்.)

* பாராமகால் என்பதற்கு 12-அரண்மனைகள் என்று பொருள், அதாவது பன்னிரண்டு சிற்றரசர்கள் அரசாட்சி செய்துவந்த நாடு என்று அருத்தமாகும்.



## ON DEBT.

## கடன்.

கடன் வாங்குவது என்னும் எண்ணம், நேற்று இன்று உண்டானதல்ல. மனித சிருஷ்டியான சில நாள்களுக்கெல்லாம் இந்த எண்ணம் வந்திருக்கவேண்டும். சத்தியம் இன்னது, பொய் இன்னது, தெய்வம் இன்னது என்ற எண்ணம்கூட இல்லாத நாகரீகமற்ற ஜன சமூகங்களிலும் கடன் கொடுத்தல் வாங்குதல் முதலியன நடந்து வருவதாக நாம் அறிகிறோம். பொன் வெள்ளி முதலிய உலோகங்களை யறியாத மிலேச்சர்களுக்கு ரூபாயையும் பவுனையும் பற்றி எண்ணம் உண்டாகக் கூடுமா? ஒவ்வொரு வஸ்துவையும், விஷயத்தையும் ஒருவர் அறிந்த பிறகுதான் அதைக் குறித்து ஒருவிதமான எண்ணமும், அவ்வெண்ணத்தைக் குறிக்க வார்த்தைகளும் ஏற்படும். கடன் என்னும் எண்ணத்தைக் குறிக்கும் வார்த்தைகள் மாத்திரம், இப்போது தெரிந்தவரையிலுள்ள எல்லாப் பாஷைகளிலுமிருப்பதாகத் தெரியவருகிறது. இதற்குக் காரணம் வெட்டவெளியா யிருக்கிறது. எவ்வளவு நாகரீகமற்ற ஜனசமூகமானாலும் அந்த சமூகத்திலுள்ள ஒவ்வொருவனும் தனக்கு வேண்டியவற்றையெல்லாம் தானாகவே தேடிக்கொள்ள முடியாது. செம்படவர்கள் கூட்டத்தில் ஒருவன் யாதொரு காரணத்தாலாவது ஒருநாள் மீன் பிடிக்கச் செல்லாததினால் அன்றையதினம் அவனுக்கு வரும்படி யில்லாமற்போகுமாகில், அண்டையயலில் கடன்வாங்கியன்று ஜீவனம் செய்யவேண்டியிருக்கும். பூர்வத்தில் ஜனங்கள் மண்ணை உழுது பயிரிட்டுச் சாப்பிடுவதற்குமுன் மீன் பிடித்தும் வேட்டையாடியுந்தான் ஜீவனம் செய்து வந்ததாகத் தெரியவருகிறது. அந்தக் காலத்திலேயே ஒருவரிடமிருந்து ஒருவர் உதவிபெறவேண்டியிருந்ததென்று தெரியவருகிறது. நாகரீகமற்ற ஜனங்களைக் குறித்து நாம் வாசிக்கும் கதைகளில் சில விநோத விஷயங்கள் தெரியவருகின்றன. செம்படவர் கூட்டத்தில் ஒருவனுடைய படகை யொருவன் கடன் வாங்கிக்கொண்டுபோனால், மறுபடியும் அந்தப் படகைத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டியதுமன்றி, அந்தப் படகைக்கொண்டு பிடித்த மீன்களில் ஒரு பகுதியும் படகுக்காரனுக்குக் கொடுக்கவேண்டியது ஒரு தீவில் வழக்கமாம். இந்த வழக்கத்தை யுற்றுப்பார்த்தால், அது நாம் வருஷவாரி நூற்றுக்கு இவ்வளவு என்று கடனுக்குக் கொடுக்கும் வட்டிக்குச் சமானமானதென்று அறிந்துகொள்ளலாம். ஒரு சாமானைக் கடன் கொடுத்துப் பிறகு அதைத் திருப்பி வாங்கும் விஷயத்தைக்குறித்து ஜனங்களுடைய எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் மாறுபட்டு வந்ததாக நாம் காணலாம். இத்தாலியா தேசத்திலுள்ள ரோம் என்னும் நகரம் இராஜதானியாயிருந்த காலத்தில் அந்த இராச்சியத்தில் கடன் விஷயத்தைக்குறித்து மிகவும் கடுமையான சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. கடன் கொடுத்து, வாங்கும் சாமான்கள் இரண்டுவிதமாகப் பிரிக்கப்பட்டன; சில சாமான்கள் விஷயத்தில், எந்த சாமான் கடனாக வாங்கப்பட்டதோ அதே சாமான் திருப்பிக் கொடுக்கப்படவேண்டியிருந்தது; மற்றவைகள் விஷயத்தில் வாங்கிக்கொண்ட சாமானுக்கு, விலையிலும் குணத்திலும் சரியான சாமான் பதில் வாங்கிக்கொடுத்தால் போதும். சமையல் செய்ய அரிசி கடன் வாங்கிக்கொண்டால் அதே யரிசியை எப்படித் திருப்பிக்கொடுக்க முடியும்? வேறு அரிசிதான் வாங்கிக்கொடுக்கவேண்டும். ஒரு ஊருக்குப்போக வண்டியொன்று கடன் வாங்கிக்கொண்டால் அதே வண்டிதான் திருப்பிக் கொடுக்கவேண்டும். இந்தவிதமான வித்தியாசம் இப்பொழுதுகூட சில விஷயங்களில் இருந்துகொண்டிருக்கிறது. முன்காலத்தில் கடன்காரர்களைக் குறித்த சட்டம் மிகவும் கொடுமையாக இருந்ததென்பதற்கு ஆதாரம் உரோமருடைய சட்டங்களில் வேண்டிய அளவு அகப்படும். கடன் கொடுத்தவனுக்கு வாங்

கிக்கொண்டவன்பேரில் எவ்வளவு அதிகாரம் செலுத்தலாமோ அவ்வளவு செலுத்த சட்டப்படி அனுமதியுண்டு. கடன் வாங்கினவனைக் கொலைசெய்து விடுவதற்குக்கூட அவர்களுக்கு அதிகாரமிருந்தபோதிலும், தங்களுக்கு அடிமையாகச் செய்து கொள்ளுவதுதான் ஏறக்குறைய வழக்கமாயிருந்தது. கடன் கெடுவுக்குமேல் அறுபது நாள்கள் கருணையின் பேரில் கொடுப்பதுண்டு. அதற்குள் கடன் கொடுபடாவிட்டால், கடன்காரன் அடிமையாகவேண்டியதுதான். பிறகு அவனை சிறைச்சாலையில் மூடிவைத்துச் சோறுகூடப் போடாமல் வருத்தப்படுத்துவார்கள். கடன்காரனுடைய சுற்றத்தார் யாருக்காவது இரக்கம்வந்து கடனைத் தீர்த்தால்தான் அவனுக்கு மீட்சியுண்டு : இல்லாவிட்டால் அவன் சிறையிலிருந்தேதான் இறக்கவேண்டும். அந்த காலத்து அரசாங்கமும் சட்டதிட்டங்களும் இந்தக் காலத்தவ்வளவு விருத்தியடைந்தவையல்ல. மகன் எவ்வளவு உன்னத ஸ்திதியிலிருந்தபோதிலும், அவனுக்கு எந்த விதமான தண்டனையும் காரணமில்லாமலே விதிப்பதற்கு தகப்பனுக்கு அனுமதிகொடுத்திருந்த இராச்சியத்தில், கடன்காரர்களைக்குறித்த சட்டம் கொடுமையாக விருக்கக்கேட்பானேன். கடன்காரர்களுடைய கொடுமையைக் குறித்து அங்கிலேய நாடக கவிசிரேஷ்டராகிய ஷேக்ஸ்பியர் என்பவர் வெனிஸ் வணிகன் என்னும் கதையில் நன்றாக விவரித்திருக்கிறார். தன்னுடைய சிநேகிதன் பஸ்ஸானியோவுக்காக அன்டோனியோ என்னும் வியாபாரி கடன்வாங்கிவிட்டு ஷைலக்கிடத்தில் பாம்பின் வாயில் அகப்பட்ட தேரைபட்டபாடு பட்டது உலகம் மறக்கவே மறக்காது. அக்காலத்தில் ஷைலக் என்ற ஒருவன்தான் அந்தமாதிரி கடினசித்தமுள்ளவனென்று எண்ணவேண்டாம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு அரிசி பதம் என்ற பழமொழிப்படி அக்காலத்தாரைக் குறித்துக் காட்டுவதற்காகவே ஷைலக் என்னும் ஒரு நாடக பாத்திரத்தை அந்த நாடகத்தில் வருணித்திருக்கிறார். ஹாம்லெத் என்னும் நாடகத்திலும், பொலோனியஸ், தன் குமாரனுக்கு புத்திசொல்லும் இடத்தில் கடன் கொடுக்கவும் வேண்டாம் வாங்கவும் வேண்டாம் என்று வற்புறுத்தியிருக்கிறார். கடன் விஷயமாக முதலில் அவர் மிகவும் வருத்தப்பட்டவர். ஆதலால் 'பழம் புண்ணாளி பாதி பரிகாரி' என்றபடி மற்றவர்களுக்கும் அதைக்குறித்து புத்திமதி கூறியிருக்கிறார். கோல்ட்ஸ்மித் என்னும் அங்கிலேய கவிசிரேஷ்டர் கடன் வாங்கி மானம் இழந்தது எல்லாருக்கும் நன்றாய்த் தெரியுமே.

இந்து தேசத்திலும் கடனாளிகளைக் குறித்த சட்டம் வெகு கொடுமையாகவே யிருந்தது. கடன் கொடுத்தவன் இஷ்டப்படியெல்லாம் கடனாளி நடந்தே தீரவேண்டும். அவன் என்ன சித்திரவதை செய்தபோதிலும் அதற்குக் கேள்வி முறையே கிடையாது. கடனாளிகளைக் கையிலும் காலிலும் கிட்டுபோட்டு வருத்தப்படுத்துவது தென்னாட்டில் வழங்கிவந்ததென்று நமது பாட்டன்மார்கள் சொல்லக்கேட்டிருக்கிறோம். சேலம் ஜில்லாவைச் சேர்ந்த ஓமலூரிலிருந்த நாராயணபாரதியென்ற ஒரு கவிவாணர் அவ்வூர் வேங்கையப்ப செட்டியிடம் கடன் வாங்கியிருந்தார். அச்செட்டியின் மக்களாகிய மணவாளன், நாராயணன் இவர்கள் இவரைக் கடனுக்கு மிகவருத்தம்செய்து, கடைசியில் இவரால் கொடுக்கமுடியாதென்று தெரிந்ததன்பேரில் தங்கள் இருவர் விஷயமாக ஒரு பிரபந்தம் பாடும்படி படாதபாடுபடுத்தினார்கள். இவரோ "அரங்கனைப் பாடிய நாவால் மற்றொரு குரங்கனைப் பாடேன்" என்று கூறிய அழகிய மணவாளதாசரைப்போல், மனிதர் விஷயமாய்ப் பாடுவதில்லையென்று பிடிவாதம் பிடித்ததின் பேரில், விஷ்ணு விஷயமாகவாவது பாடி அதில் எங்கள் பேர்கள் வரும்படி அமைத்துப் பாடவேண்டுமென்று நிர்ப்பந்திக்க வடவேங்கடசதகம் பாடி மீட்சியடைந்ததாக ஒரு கதையுண்டு. சத்தியவாக்கு அரிச்சந்திரனைக் கூட வல்லவர் கௌசிகர் வெகுபாடு படுத்திவிட்டார்.



கொடுத்த கடனை மீட்பதற்கு இந்துதேசம் முழுமையும் "தார்ணு" என்றொரு சம்பிரதாயம் இருந்தது. கடனாளி வீட்டுவாசலில் ஒரு பிராமணனை மறியல்போட்டு வைப்பதற்குத்தான் "தார்ணு" என்று பெயர். இந்த வழக்கம் அநாதிகாலமாக இத்தேசத்தில் வழங்கிவந்திருக்கிறது. உபநிஷத்துக்களில் இதைக் குறித்து விஸ்தாரமாகக் கூறியிருக்கிறது. "பிராணதாரணம்" என்னும் வடமொழிதான் "தார்ணு" என்று பிற்காலத்தில் மருவியது நமது தேசத்துப் பிராமணர்கள் தாங்கள் சாப்பிடுங் காலத்திலெல்லாம் இன்றைக்கும் நாளைக்கும் வெளியில்வந்து யாராவது சாப்பாட்டுக்குக் காத்திருக்கிறார்களா என்று பார்க்கிற வழக்கம் இருக்கிறது. பிராமணனை வெளியில் பட்டினிபோட்டுவிட்டு கடனாளி தான் சாப்பிட்டுவிட்டால் தனக்கு பிரமஹத்தி தோஷம் வருமென்று, பயந்து எவ்விதத்திலாவது கடனைத் தீர்க்க வழிதேடுவான் என்பதுதான் அதன் கருத்து. இந்த வழக்கத்திலிருந்து தற்காலத்திலுள்ள ஜப்தி அல்லது மறியல் என்னும் வழக்கம் உண்டாயிற்று.

மனிதர்களெல்லாரும் கெட்ட எண்ணமுள்ளவர்களாகவே யிருப்பார்களோ? சில ஜனங்கள், தங்களுக்குக் கடன்கொடுக்க வேண்டியவர்கள் வாஸ்தவத்திலேயே கையிளைத்துக் கொடுக்கச் சக்தியற்றவர்களென்று தெரியவந்தால் தயாளகுணத்துடன் மன்னித்து விடுவதையும் கண்டிருக்கிறோம். காஞ்சிபுரத்தில் மார்க்கசகாயம் பிள்ளையென்ற ஒரு லக்ஷாதிகாரியிருந்தார். அவரிடம் கடன் வாங்காதவன் அவ்வூரிலேயே இல்லை. அவர்களுள் கொடுக்கச் சக்தியுள்ளவர்கள் தன்னை மோசம் செய்கிறார்கள் என்று. தெரிந்தால் கொஞ்சம்கூட தயைதாக்ஷிணியமில்லாமல் கண்டித்து பணத்தை வசூலித்துவிடுவார். ஏழை எளியவர்கள் கொடுக்கச் சக்தியற்றவர்கள் இவரைக் காண்பதற்குக்கூடத் துணியாமல் ஓடி ஒளிகிறார்கள் என்று இவருக்குத் தெரியவந்தது. இவருக்கு வெளியில் போகவேண்டிய அலுவல்கள் எவ்வளவு இருந்தாலும், தன்னுடைய ஏழைக்கடனாளிகள் மனதைப் புண்ணாக்கக் கூடாதென்றே வெளியில் புறப்படுவதை நிறுத்திவிட்டார். எப்போதாவது வெளியில் வண்டியின்பேரில் போகும்போது தப்பித்தவறி யாராவது எதிரேவருவதாக அவருடைய வண்டிக்காரன் சொன்னால், வண்டியின் கதவுகளையெல்லாம் நன்றாக மூடிவிடும்படி வண்டிக்காரனுக்கு உத்திரவு செய்வார். வண்டிக்காரன் இவரைக் குழந்தைப் பருவத்திலிருந்தே வளர்த்தவனாதலால் இவருடைய கடன்காரர்களையெல்லாம் அவனுக்கு நன்றாகத் தெரியும். கதவை மூடுவதன் அருத்தம் என்னவென்றால், கடன்காரர்கள் தன்னைப்பார்த்து மனவருத்தப்படக் கூடாதென்பதுதான். புண்ணியகாலங்கள் வருங்காலத்தில் தன் ஏழைக் கடன்காரர்களையெல்லாம் கூப்பிட்டு அவர்களுக்கு அவ்வளவு பணமும் தானம் கொடுத்துவிட்டதாகச் சொல்லி அவர்கள் பத்திரத்தைக் கிழித்து மீட்டுவிடுவார்.

இந்த இரண்டு குணங்களுள் எது சிரேஷ்டமென்பது நாம் சொல்லவேண்டியதேயில்லை. 'கொட்டினால் தான் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி யாதலால், மோசக்காரர்களிடம் மறியல் முதலிய கொடுமை அவ்வளவும் வேண்டியதே. இந்தக் கொடுமைகள்தான் தற்காலத்திய சிவில் கோர்ட்டு ஜப்திகளும் கடன்காரர்களுடைய சிறைச்சாலைகளுமாக மூர்த்திகரித்திருக்கின்றன. 'இன்ஸால்வெண்டுகோட்டு' என்று ஒருகோர்ட்டு இருக்கிறதே, அதுதான் பின்சொல்லிய குணத்துக்கு இலக்காயிருக்கிறது. தன்னுடைய புத்திவலிமையினால் அசாத்தியமான காரியங்களையும் செய்து முடிக்கவல்லவனொருவன் விதிவசத்தால் கடன் தீர்க்க முடியாமற்போனால், அவனை அடியோடு கெடுத்துவிடுவது நல்லதா? அவன் பட்ட கடனிலிருந்து அவனை மீட்பித்துவிட்டால் அவன் மிகவும் பெரிய மனிதனாகவும் கூடும். இதற்குதாரணமாக அநேக கனவான்களை நமக்குள்ளேயே காணலாம். ஆகையால் மிகுந்த ஜாக்கிரதையுடன் சில கடன்காரர்களை மீட்கவேண்டியதும் தருமமே.

தில் கூறப்படுகிறது. தவிர பகீரதர் கங்கையை பூலோகத்திற்குக் கொண்டுவரும்பொழுது, கங்கை இவ்விடத்தில் பிரவாகிக்க யமுனை எதிர்க்கொண்டுபோய் வணங்கி தன்னுடன் கலந்து பிரவாகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க கங்கை யமுனையை நோக்கி "ஏநங்கமாய்! நீ பிரசிஷ்டை பெற்றவள், நான் உன்னுடன் கலந்து பிரவாகித்தால் உன்பெயர் மட்டும் பிரபலமாகுமேயன்றி எனது பெயர் வெளிப்படாதென மயங்குகிறேன்" என்று சொல்ல, யமுனை கங்கையை நோக்கி "ஏ தேவி! பயப்படாதே, இந்த க்ஷேத்திரமுதல் பெயர் உன்னதாகவே யிருக்கட்டு" மென்று சம்மதிக்க, கங்கையும் யமுனையும் இவ்விடத்தில் சங்கமமானதாகவும், அன்று முதல் கங்கையின் ஜலம் வெண்மையாயும், யமுனையின் ஜலம் இளநீலவர்ணமாகவுமிருந்தாலும் சமுத்திரத்தில் விழுகிறவரையில் கங்கை என்ற பெயரே பெற்றதாகவும் சொல்லப்படுகிறது.

அன்றியும் பிர்மாவானவர் அஸ்வமேதயாகங்கள் செய்தபிறகு இந்த ஸ்தலத்தை வர்ணிக்கத் தொடங்கி முடிக்கமாட்டாமல் மயங்க சரஸ்வதி அதை முடித்துக்கொடுப்பதாகக்கூறி முடிக்கமாட்டாமல் திகைத்து உலகரக்ஷணார்த்தமாக யோசனை செய்துகொண்டிருந்த திரிமூர்த்திகளைப் பார்க்க நாணியகாலத்தில், படபன் என்னும் இராக்ஷதன் தோன்றி தனது கடும்பசியினால் உலகத்தாரை இம்சைசெய்யத் தொடங்கவே, சரஸ்வதியானவள் அவன்முன் தோன்றவும், அவன் மோகித்து நெருங்கவும், பசிப்பிணியால் வருந்தும் உன்னை விவாகஞ்செய்துகொள்ள பயப்படுகிறேனென்று சரஸ்வதி கூறவும், அந்தப் பசியை நீதான் தீர்க்க வேண்டுமென்று ராக்ஷதன் வேண்டவும், பசி நீங்க ஆகாரம் கொடுப்பதாக அழைத்துக்கொண்டுபோய் சமுத்திரத்தைக்காட்டி ஜலத்தை பானஞ்செய்யும்படிவிட்டு பிரயாகை ஸ்தலத்தைக் காணவந்ததாகவும், அப்பொழுது கங்கையும் யமுனையும் இந்த சரஸ்வதியின் நடனத்தைக்காண விரும்பியதாகவும், சரஸ்வதி பிர்மாவுடன் கூறியபடி பிரயாகையை வர்ணிக்கமாட்டாதவளாய் வெட்கி தகப்பனார் பரிகாசம் செய்வாரென்ற எண்ணத்தினால் பகிரங்கமாகத் தோற்றாமல் கங்கை யமுனைக்குள் அடக்கமாகி பிரவாகத்தில் விளையாடிச் சென்றதாகவும், இப்படி மூன்று நதிகளும் சங்கமமாவதால் மோக்ஷஸைந்தி தலைரோமத்தின் மூன்று பின்னலென்றும், அதாவது கங்கையும் யமுனையும் இந்தவிடத்தில் உலகத்தாருடைய பாவங்களைக் கத்தரிக்க கத்தரிக்கோல்களானதாகவும் அக்கோல்களுக்கு இடையே ஆணியாக, சரஸ்வதி ஸ்தானத்தைப்பெற்று உபகரித்ததாகவும், ஆகவே திரிவேணி என்று பெயர்பெற்று விளங்குவதாகவும் கருதப்படுகிறது. இப்பொழுதும் தம்பதி சகிதமாக இந்த க்ஷேத்திரத்திற்கு வருகிற யாத்திரைக்காரர்கள் திரிவேணிதானம் என்பதாக ஒரு சடங்கு செய்கிறார்கள். அதாவது—புருஷனும் ஸ்திரீயுமாக நூதன வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு வாத்தியத்துடன் திரிவேணி சங்கமஸ்தானத்திற்குச் சென்று ஸ்திரீயினுடைய சிரோரோமத்தை மூன்று பிரிவாக்கி புருஷன் பின்னியபிறகு திரிவேணிக்கும் கத்தரிக்கோலுக்கும் பூஜித்து பிரார்த்தனைசெய்துகொண்டு ஸ்திரீயின் சிரோரோமத்தின் நுனியில் மூன்று அங்குல பிரமாணம் கத்தரித்து ஒரு தட்டத்தில்வைத்து கங்கா புத்திரனுக்கு தானம் செய்கிறார்கள். இந்த தானத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு கங்காபுத்திரர்கள் அதிக தொகை முதலியவைகளை எடுத்துக்கொண்டு கத்தரித்த ரோமத்தை திரிவேணியில் விடுகிறான். அது சற்று தூரம் செல்வதற்குள் நீரினால் சுழற்றப்பட்டு அமிழ்த்தப்படுகிறது. இந்தச் சடங்குசெய்கிற ஸ்திரீகளுக்கு விதவா



ஜென்மமில்லை என்பது ஐதீகம். கங்காபுத்திரர்களுக்கு கொடுக்க சக்தியில்லாதவர்கள் தாங்களே மேற்படி சடங்கைசெய்து ரோமத்தை திரிவேணியில் போட்டுவிடுகிறார்கள். தவிர இந்தவிடத்தில் பிராணதத்தம் செய்பவர்கள் ஜன்மாந்தரத்தில் விரும்பிய சித்திகளையடைந்து அனுபவித்து, மறுபடியும் இந்த புண்ய பூமியில் பிறந்து, பிறவித்துன்பமின்றி பேரானந்தத்தை யனுபவிப்பார்களென்று ஸ்தல புராணத்தில் கூறியிருப்பதால் இக்காலத்திலுங்கூட அநேக தபசிகள் அந்தரங்கமாக கங்கையில் இறங்கி பிராணதத்தம் செய்வதாக பிரஸ்தாபமுண்டு.

முசுகுந்த பிர்மசாரி என்னும் ஓர் தபசி தான் மண்டலாதிபதியாக வேண்டுமென்று கருதி தனது தேகத்தில பாதி பாகத்தை யறுத்து யக்கியத்தில் ஆகுதி செய்து பிராணனை விட்டதாகவும், அவருடைய சிஷ்யர்களும, அந்த குருவுக்கே மறுஜன்மத்தில் மந்திரிகளாக வேண்டுமென்றும், அப்பொழுது பூர்வ ஜன்மஞானமிருக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்துக்கொண்டு, இந்த ஸதல மகத்துவத்தை எட்டு ஸ்லோகங்களாகச்செய்து ஒரு ஓலையிலெழுதி கடலைபொரி விறறுவந்த ஒரு கிழவியிடம் கொடுத்து மேற்படி யாககுண்டத்தில விழுந்து பிராணனை விட்டதாகவும, மறுஜன்மத்தில் அந்த முசுகுந்தன ஆக்பர் பாதுஷாவாகப் பிறந்து டில்லியில் சக்கரவர்த்தியாயும, சிஷ்யர்கள் அவருடைய மந்திரிகளாயும பிறந்திருக்கும் காலததில ஒருநாள மந்திரிகள் கடலைபொரி விறறுவநத கிழவியிடததிலிருநத ஸதல மகத்துவமாகிய எட்டு ஸ்லோகத்தை வாங்கிக்கொண்டுவந்து பாதுஷாவிறகுக் காட்ட அவர் அதிக ஆநந்தமடைந்து அன்றுமுதல் இந்த ஸ்தலத்திறகு அலகாபாத்து=அல்லா=கடவுள், பாத்து=பட்டணம், என்று பெயரிட்டு அன்னியர் இதை அழிக்காதபடி ஒரு அழகான கோட்டையையும் கட்டினதாகவும் சொல்லப்படுகிறது. இந்தக் கோட்டை கங்கை யமுனை சங்கமமாகுமிடத்தில் எப்படிப்பட்ட பிரவாகத்திற்கும் அசையாதபடி கட்டப்பட்டிருக்கிறது. கோட்டையை சுற்றிய அகழில் இப்பொழுது ஜலமில்லை. ஆள் ஒன்றுக்கு ஒரு பைசா வாங்கிக்கொண்டு கோட்டைக்குள் விடுகிறார்கள். ஒரு சிபாய் நேராக பிரயாகை ஈஸ்வரர் ஆலயத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறான். இந்த ஆலயம் பூமிமட்டத்திற்குக் கீழ் செய்யப்பட்ட குகைபோனறது. இந்த ஆலயத்திற்குள் விநாயகர், தண்டபாணி, கங்காதேவி, மகாவிஷ்ணு முதலிய பல விக்கிரகங்களிருப்பதுடன் பூர்வமான வடவிருக்ஷத்தின் அடிபாகமுமிருக்கிறது. மேல் கிளைகளை வெட்டிவிட்டார்கள். ஆயினும் மரம் பட்டுப் போகவில்லை. வருஷத்திற்கு ஒருதடவை சில தளிர்கள் தோன்றி வாடிப்போவதாகத் தெரிய வருகிறது. இவ்விடத்தில் சில பண்டாக்கள் என்றவர்களிருந்துகொண்டு யாத்திரைக்காரர்களிடம் பைசா கேட்கிறார்கள். இக்குகை அதிக இருட்டாயிருந்தபடியால் மேல்பாகத்தில் இப்பொழுது சிற்சில பலகணிகளை வைத்திருக்கிறார்கள், கோட்டையின் மற்ற பாகத்தில் யாத்திரைக்காரர்களை விடுவதில்லை. மேற்படி கோவிலைப் பார்த்துக்கொண்டு வெளிப்புறத்திலுள்ள கோட்டைவாயில் வழியாக வெளிப்படவேண்டியதே. இதற்குள் சில ஆபீசுகளும் பல யுத்த ஆயுதங்களுமிருக்கின்றன. ஒரு ஐரோப்பியருடைய சமாதியும் அதன்பேரில் ஒரு கோபுரமபோன்ற கட்டடமும் கட்டப்பட்டிருக்கிறது.

"திரிவேணிமாதவம் சாம்பம், பரத்வாஜஞ்ச
வாசகீம், வந்தே அக்ஷயவடாம் சேஷம்,
பிரயாகம் தீர்த்தநாயகம்."

—என்ற ஸ்லோகத்தை வடவிருக்ஷத்தடியில் சொல்லவேண்டுமாம்.

இந்த ஸ்லோகத்தின்படி இந்தக் கோட்டைக்குள் தரிசித்ததுபோக சோமேஸ்வரர் ஆலயம் கங்கைநதியின் அக்கரையிலிருக்கிறது. படகில் ஏறி அக்கரை சென்று சற்று தூரம் நடந்து சென்றால் ஒரு பூர்விகமான ஆலயமும் அதில் சோமேஸ்வர லிங்கமும் இருப்பதைத் தரிசிக்கலாம். டோராகஞ்சியிலிருந்து முக்கால் மைல் தூரத்தில் பரத்வாசர் ஆஸ்ரமமிருக்கிறது. இவ்விடத்தில்தான் பரத்வாஜரை இராமலக்ஷ்மணர்கள் கண்டு தரிசித்ததாகக் கூறப்படுகிறது. இவ்விடத்தில் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜை செய்துவரப்படுகிறது. மிகவும் ஆரோக்கியமும் இன்பமும் தரத்தக்கவிடம். இப்பொழுது இதற்கு சமீபத்தில் சில ஐரோப்பியர்களுடைய பங்களாக்கள் காணப்படுகின்றன. சற்று தூரத்தில் சில தர்மசாலைகள் இராஜாக்களால் கட்டப்பட்டிருக்கின்றன. இதற்கு சமீபத்தில் சங்கரி ஆலயமென்ற ஒரு கோவிலிருக்கிறது. இந்த அம்மனுக்கும தினப்படி பூஜை நைவேத்தியம் முதலியவைகள் கிரமமாக நடக்கின்றன. பிந்து மர்தவர்கோவில் அரைமைல் தூரத்திலிருக்கிறது. இது அவ்வளவு பெரிய ஆலயமன்று.

திரிவேணியில் ஸ்நானஞ் செய்கையில் சொல்லும் சங்கல்பமாவது.—

“ஆரியவர்த்தந்தர்க்க பிர்ம்மவர்த்தைக தேச, விஷ்ணு பிரஜாபதி க்ஷேத்திரே, ஷட்கோணமத்தியே, அந்தர்வேதியாயாம், பாகிரதீயாயாம் பஸ்சமபாகே, காளீந்திய உத்திரதீரே, வடஸ்ஸ்யபர்வதிக்பாகே விக்கிரமசகே, பவுத்தாவதாரே,—வருஷே” என்று கூறி மற்றவைகளையும தக்ஷணதேசரீதியாகக் கூறப்படுகிறது.

இந்த அலகபாத்து என்னும் பட்டணம் சுமார் 10 மைல் சுற்றளவுளளதாய் 150,000 ஜனங்கள் வாசஞ்செய்யப்பட்டது. இவ்விடத்தில் இந்துக்கள் மகமதியர்கள் என்ற வித்யாசத்தைக் கண்டுபிடிப்பது சாத்தியமில்லாதபடி பஞ்சகவுடர்களுடைய நடை உடை பாவனைகள் மகமதியர்களைப்போலவே காணப்படுகிறது. ஸ்திரீகள் தங்களுடைய துணிகளை கோரமாய் அணிந்துக்கொள்வதினாலும், அளவுக்குமிஞ்சிய அதிகமான வெள்ளி நகைகளை அணிந்துக்கொள்வதினாலும் அவலக்ஷணமாகக் காணப்படுகிறார்கள். இவ்விடத்தில் கத்திரி, உருளைக்கிழங்கு, மொட்டைகோஸ், பட்டாணி, வெங்காயம், இஞ்சி, பொதீனா, முள்ளங்கி, கொய்யாப்பழம் முதலியவைகள் ஏராளமாய் விற்கப்படுகின்றன. கொய்யாப்பழம், இலந்தைப்பழம் இவைகள் அளவுக்குமிஞ்சிய காத்திரமாயும் சரசமாயும் கிடைக்கிறது. நம் தேசவாசிகளுக்கு உடனே ஜ்வரத்தை யுண்டாக்கத்தக்கது. கோதுமைமாவு ரொட்டியும் துவரம்பருப்புமே இவ்விடத்திய ஜனங்களுக்கு முக்கிய ஆகாரமாதலால் நல்ல அரிசி, புளி, மிளகாய், நெய் முதலியவைகள் கிடைப்பதில்லை. பலர் கோதுமைமாவில் செய்த பூரி, லட்டு முதலியவைகளைத் தின்று காலங்கழிக்கிறார்கள். இவ்விடத்தில் மாடுகளும் எருமைகளும் நன்றாக வளர்ந்து கொழுத்து புஷ்டியாகவும் அழகாகவும் காணப்படுகின்றன. சென்னையில் ‘ரேக்ளா’ என்று கூறப்படும் வண்டிகளைவிட சற்று பெரிதான ‘எக்கா’ என்னும் ஜட்காவண்டிகள் அதிக விநோதமாய் சவாரிக்கு சற்றும் ஒவ்வாததாயிருக்கிறது. இந்த வண்டிகளை உடனே முனிசிபால்டியாராவது கவர்ன்மெண்டாராவது நிறுத்தும்படி கட்டளையிட்டு சென்னையிலுள்ள ஜட்காவண்டிகள் போன்றவைகளைச் செய்து விற்றாவது வாட்டியாவது நடவடிக்கைக்குக் கொண்டுவரவேண்டும். ‘எக்கா’ என்னும் வண்டிகள் மழைக்கும் வெயிலுக்கும் உபயோகமின்றி பிருப்பதுமல்லாமல் மகா



அநாகரீகமாயும் அபாயகரமாயு மிருக்கிறது. இந்த ஆபாசமான வண்டியின் அடிப்புறத்திலுள்ள பெட்டிகளை பித்தளை தகட்டினால் செய்திருக்கிறார்கள். பக்கிகள் என்னும் கோச் வண்டிகள் கூடியவரையில் நன்றாகவிருந்தாலும் அதிகமான ஆட்களையும் சாமான்களையும் ஏற்றுவது பரிதாபமாயிருக்கிறது.

கபிலே ஏற்றம் இறைக்கும் மாதிரி இவ்விடத்தில் வித்தியாசப்படுகிறது. பரித்தண்ணீரை துலைவாயில் ஒருவன் ஊற்றியவுடனே எருதுகளின் நுகத்தடியில் மாட்டியிருக்கப்பட்ட வடக்கயிற்றை, எருதுகளை ஓட்டிக்கொண்டு போகிறவன், கழற்றிவிடுகிறான். வடக்கயிறுடன் பரி அதிக வேகமாய் கிணற்றிலிறங்கிவிடுகிறது. உடனே நுகத்தடியுடன் தயாராயிருக்கும் வேறுமாடுகளைக் கொண்டுவந்து வடக்கயிற்றை மாட்டிவிடுகிறான். இப்படி ஒரு ஏற்றத்திற்கு மூன்றுஜோடி மாடுகளை உபயோகிக்கிறார்கள். நமது தேசத்தில் மாடுகளை பின்னுக்குப் பின்னாக இழுத்து வருத்துவதுபோல் இவ்விடத்தில் வழக்கமில்லை—தண்ணீர் அதிகமாயும் வேகமாயும் இறைக்கப்படுகிறது.

இந்தப் பிராந்தியங்களில் கடைத்தெருவுக்கு ‘சவுக்கு’ என்று சொல்லுகிறார்கள். இந்த கஸ்பாவிலுள்ள சவுக்கானது அதிக விஸ்தாரமானது. தெருக்களில் வீடுகள் 3-4-5 அடுக்கு மெத்தைகளோடு மகமதியர்களுடைய கட்டடபாவனையாக விருப்பதன்றி கீழ் அடுக்குகளில் பலவித வியாபார வஸ்துக்களையுடைய கடைகளை யுடைத்தாயிருக்கின்றன. சவுக்கென்னப்பட்ட விடத்தில் சாயந்திரங்களில் சென்னையில் குஜிலிசேர்வதுபோல பலவித துணிமணிகளும், காய்கறி பழவர்க்கங்களும், பலவித தட்டுமுட்டுகளும் வந்து சேர்ந்து விற்கப்படுவதால் ஜனங்கள் நடந்துசெல்வதற்கும் வழியின்றி தவித்து நின்றுவிடுகிறார்கள். இவ்விடத்தில் வசிக்கும் அங்கிலேயர்கள் கேனிங்டவுன் என்ற விஸ்தாரமான விடத்தில் பங்களாக்களை அதிக அழகாக கட்டிக்கொண்டு வசிக்கிறார்கள். சுதேசிகள் வசிக்கும் பாகத்திற்கும் அங்கிலேயர்கள் வசிக்கும் பாகத்திற்கும் மத்தியில் ரயில்பாதை செல்லுகிறது. அங்கிலேயர்கள் வசிக்கப்பட்ட பாகத்தில் எல்ஜின், மேயோ, ஆல்பர்ட், ஸ்டேன்லி முதலிய ஐரோப்பியர் நாமத்தைக் கொண்ட தெருக்களிருக்கின்றன. இத்தெருக்கள் அதிக விஸ்தாரமானவைகள். இவ்விடத்தில் ஐகோர்ட், மேயோஹால், டவுன்ஹால், கவர்ன்மெண்டு காலேஜ், பீகம் ஜிஹாங்கிர் முதலிய கட்டடங்கள் பார்க்கத்தக்கவைகள். ஐகோர்ட் கட்டடம் நான்கு பிரிவாயிருக்கிறது. கவர்ன்மெண்டு காலேஜ்ஹால் அதிக பெரியது. இதற்கு ஜெயப்பூர் மகாராஜாவேண்டிய பணவுதவி செய்திருக்கிறதாகத் தெரிய வருகிறது. இந்த கல்லூரியில் டில்லி, கான்பூர், லக்ஷ்மணபுரி, மதுரா, அயோத்தி முதலிய விடங்களிலிருந்து ஏராளமான பிள்ளைகள் வந்து படிக்கிறார்கள்.

இந்தப்பட்டணத்தில் அலகாபாத்து என்ற ரயில் ஸ்டேஷனைத்தவிர அல்லங்கஞ் என்ற ஒரு சிறிய ஸ்டேஷனுமுண்டு. டோராகஞ் என்ற ஊரிலிருந்து இந்த ஸ்டேஷனுக்கு மூன்றுமைலிருக்கலாம். யாத்திரைகாரர்கள் இந்த விடத்தில்தான் கங்காஜலத்தை செம்புகளில் எடுத்து வாய்மூடி தங்கள் தங்களூர்களுக்கு அனுப்புகிறார்கள். இதற்கும் வடமேற்கிலுள்ள ஹரித்துவாரமென்ற விடத்திற்கு செல்லுகிறவர்கள் இவ்விடத்தில் கங்கை எடுப்பதில்லை. இவ்விடத்தில் யாத்திரைகாரர்கள் தீர்த்த ஸ்ரார்த்தம் செய்து பிதர்க்களுக்கு பிண்டமிடுவது வழக்கம். வழங்கும் பாஷை இந்துஸ்தானியாதலால் அது தெரியாத தெக்ஷணதேச யாத்திரைக்காரர்களுக்கு கஷ்டம் அதிகமாகவேயிருக்கும்.

## CHILDREN'S PAGE.
## சிறுவர்க்கான பக்கம்.

### THREE WARNINGS.
### மூன்று எச்சரிக்கைகள்.

மரத்துக்கு வயசு ஆக ஆக வேர் ஊன்றி பூமியில் அதிகப் பிடிப்பு உண்டாகிறது. மனிதர்களுக்கும் மரணம் நெருங்க நெருங்க ஆசை இளம்பிராயமடைகிறது. இதைச் சொல்லாதவர்கள் இல்லை. இதை நம்பி நடந்தவர்களையும் காணோம். இந்த உண்மையைத் தெரிவிக்க ஓர் கதை சொல்லுகிறேன், கேளுங்கள்.

முன்னொரு காலத்தில் நர்மதா தீரத்தில் ஆனந்ததாண்டவபுரம் என்ற ஊரில் கலியாணராமன் என்று ஓர் பிராமணப்பையன் இருந்தான். அவன் சிறுவயதில் ஆற்றில் குதித்து, நீந்தி, மரங்களேறிப் பழம் பறித்துத் தின்று, விளையாடிக்கொண்டே இருப்பான். இப்படி தாமரைத் தடாகத்தில் ஹம்ஸபட்சி புஷ்பத்தைவிட்டுப் புஷ்பம் சிறிதும் சிரமமில்லாமல் இனிமையாய்ப்போவதுபோல், 'சுகத்திலிருந்து சுகத்துக்குத்தாவி சுமார் 20-வருஷங்கள் கழித்தான். இக்கால முழுவதும் ஒருவாறு ஆலோசிக்குமிடத்து அவ்வளவு புஷ்பங்கள் கோர்த்த மாலைபோலும், தங்கக் கொடிபோலும் காணும். துக்கமென்றது அறியான். சுகத்தின் எவ்வளவும் அவன் கையிலிருந்தது. எவரோடும் ஹாஸ்யமாய்ப் பேசிக்கொண்டு உல்லாசமாய்த்திரியும் சுபாவமுள்ள இவனுக்கு ஏற்றப்படி அடுத்த கிராமத்தில் இவன் உறவில் 'கலியாணி' என்ற சுந்தரியை விவாகம் பண்ணிவைத்தார்கள். அவன் சம்பத்துக்கும், உற்றார் ஐக்கியத்துக்கும், தேசகாலத்தின் வளத்துக்கும், அவன் சுபாவத்துக்கும் தக்கபடியே கலியாணசாம்ராஜ்யமும் இருந்தது. புஷ்பப் பந்தல்களும், பாட்டுக் கச்சேரிகளும், வாத்திய கோஷங்களும், விகடகவிக் கூட்டங்களும், நாட்டியங்களும், குளிர்ந்த முகங்களும், சிவந்த உதடுகளும் நிறைந்த கலியாணமண்டபம் அந்த க்ஷணத்துக்கு பூலோக ஸ்வர்க்கம் போலிருந்தது.

அவர்களிருவர்களும் தம்பதீசமேதராய் மண்டபத்திலிருக்கையில் ஓர் கிழவர் பின்னண்டையில் வந்து 'அப்பா கலியாணம், சற்று இங்குவா ஒரு சேதி' என்று தட்டி அழைத்தார். பெரியவரைக்கண்டு நமஸ்கரித்துப் பின்சென்றான். தனிமையாய் மற்றோரறையில் சென்று 'அப்பா நானாரு தெரியுமோ இல்லையோ? தருமராஜனன்றோ? கலியாணியைவிட்டு என்னோடு புறப்பட்டுவா' என்றார்.

கலியாணம்.—'உங்களோடேயா? கலியாணியைவிட்டா? என்ன வயசாயிற்று? இதென்ன அநியாயம்? அதுவுமல்லாமல் நான் எங்கே பரலோகமெங்கே? என் மனதெல்லாம் எங்கேயோ இருக்கே, இன்றைக்குத்தானே கலியாணம்; உங்களுக்குத் தெரியாதா?'

தருமவடிவாயிருந்த கிழவர் இவன் பதறுவதைக்கண்டு மனந்தளர்ந்து,—'நல்லது, இப்போ போகட்டும், என்பேரிலும் மனஸ்தாபம் வேண்டாம். மூன்றுதரம் ஞாபகிக்க வருவேன். கடைசியில் ஒரு அதிருப்தியுமில்லாமல் வரத்தயாராயிருக்கவேண்டும்' என்றார். அவர் பேசும்பொழுதே வலதுகையிலிருந்த காலசக்கிரம் நிர்த்தயமாய்ச் சுற்றிக்கொண்டேயிருந்தது.

அவன் ஆயுசுக்கு முதல் முதல், பூப்பந்தல்களை அறியாது, சப்தங்களொன்றும் தெரியாது, மனையாளை மறந்து உலகமுழுவதும் தானும் தன்னோடிருந்த கிழவரும் தான்



என்று சிந்தித்து தூணாய் நின்றான். ஒன்றும் சாணாது வெறித்தான்.

சுவப்நம்போல் இந்த அவஸ்தை சற்றிருந்து மாறிற்று. முன்போல் யோஜனையின்றி போதுபோக்கத் தலைப்பட்டான். கலியாணம் நிறைவேறிக் குடியேறவே, 'முதிர்ந்தோர்கள் இலையுதிர்காலத்து இலைகள் போல் பழுத்து உதிர, மற்றவை புதிதாய் துளிர்க்க, புதுக்குறல்கள் வீடு நிறைய, சேர்ப்பதும், செலவழிப்பதும், விற்பதும் வாங்குவதும், சிரிப்பும் அழுகையுமாய், பிறப்பும் இறப்பும், கொள்வதும், கொளுத்துவதுமாய் காலம்செல்லவே கலியாணராமய்யன் கிழவரைக் கண்டதினம் இருந்தபடி இருப்பது அசாத்தியம்.

சந்திரன்போன்ற முகம் எங்கே? பதினாயிரம் கவலைகள் அவர் முகத்தில் பள்ளப்பண்ணி பதுங்கிக்கிடக்கின்றன. பழயகோட்டை வாசற்படிக் கல்போல் பற்களெல்லாம் இருந்தவிடம் தெரியாது விழுந்துபோயின. ஆகாயத்தோடு சம்பாஷித்த வெற்றிக்கொடிபோல் நின்ற தேகம் பூமியின் ஆசைமுதலியவற்றின் ஆகர்ஷண சக்தியால் வளைந்து தரையோடு தரையாயிற்று. துஷ்யந்தன் குதிரைகள் போல் பாதி பூமியிலும் பாதி முற்றும் மறவாத ஆகாயத்திலுமாயிருந்த கால்கள், பூமியில் புதைவதுமன்றி அதைவிட மனமில்லாதது போல் மற்றொரு காலும்* அபேட்சிக்கின்றன. என்ன ஆச்சரியம்! முதனாள் தன்னூரிலிருந்து கோவில் குளங்களைப்பார்த்து, தன் உறவினர்களோடு உத்திரவுபெற்று சாயந்திரம் ரயிலேறி அதிற்படுத்துறங்கி மறுநாள் காலையில் தான்பாராத கேட்காதகாட்சியும், மலையும், துஷ்ட மிருகங்கள் கர்ச்சனையுமுள்ள ஓரிடத்தில்வந்து, வேறு நடையுடை பாவனையுள்ளவர்களையும் காண்பவனுக்கு என்னமாயிருக்கும்? அம்மாதிரியே, கலியாணத் தன்றைக்கு உலகவாழ்க்கையென்ற தூக்கத்தில் விழுந்தவர், 60-வருஷங்களான பிறகு விழித்தாரானால் தன்னுடைய ஸ்திதியும் தோன்றும். நம் கலியாணராமனுக்கு அவ்வளவு சீக்கிரம் விழிப்புக்கொடுக்கவுமில்லை. அவர் மனைவியாகிய கலியாணிப்பாட்டி மாட்டுப்பெண்களுக்குத் தான் காலமே கறிகாய் வாங்கின சமர்த்தைப் பற்றி புகழ்ந்துகொண்டு மறுநாள் அமாவாசியைக்குவேண்டிய கறி குழம்பு திட்டம் சொல்லிக்கொண்டிருந்தாள். கலியாணிப் பாட்டியைக்கூப்பிட்டு: 'அடியே, உன் பேரன் பேத்திகளை கத்தவிடாமல் தூங்கப்பண்ணு' என்று கூவிப்போட்டு தாத்தா மாடியில்போயிருந்தார். பாட்டியும் சற்றுக் கழித்துவந்து ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது, வடக்கே திரும்பி 'அருந்ததி அருந்ததி, என்று உங்களை கலியாணத்தின்போது பார்க்கச் சொன்னீரே, இதுதானே அது?' என்றாள். அடுத்த நிமிஷம் 'ஆனந்தவல்லிக்கு கலியாணம் பண்ணவேணு'மென்றாள். தாத்தாவுக்கு தருமராஜா கலியாணப்பந்தலில் சொன்னது சரியென்று ஞாபகத்தில் வந்தது. என்னசெய்வார்? வருத்தப்படுவாரா? ஆச்சரியப்படுவாரா? வருஷம் 60-ஆயிற்று. அது நடந்து இந்த ஞாபகம் ஒருதரமாவது தட்டுப்படவில்லையே. எதிரில்வந்து நின்றார் தருமராஜரும்: தாத்தா கண்ணைமூடி யோஜித்தார்.

கலியாணராம.—"அதுக்குள்ளே வந்துவிட்டீரே."

தருமரா.—"இதுவா சுருக்கு, நன்றாயிருக்கு. நீ நிஜமாய் பரிகாசம் பண்ணுகிறாய். நான்வந்து இன்றைக்கு 60-வருஷமாகிறது."

கலியாணராம.—"அதுக்கென்ன இப்போ? கிழவனை உபத்திரவிக்கிறது தருமமா?"

பின்னும் யோஜித்து இந்த விசை மீள்கிறது அசாத்தியமென்றெண்ணி, கோர்ட்டிலடிபட்ட

* அதாவது 'ஊன்றுகோல்.'

மனுஷியனுனதால், கலியாணராமய்யன்: "ஆமா? உமக்கென்ன அதிகாரம்? வாரண்டு எங்கே? ஊரெல்லாம் தான் 'போர்ஜரி'யா யிருக்கே, நீர் கொண்டுவந்தது என்ன சரி? ருஜுவுண்டா? அதுவே போகட்டும், மூன்று நோட்டிஸ் தருகிறேன் என்று சொன்னீரே. நானுந்தான் நாளுக்குநாள் காத்திருந்தேன். இதிலேயே போது போயிற்று. இப்போ யார் என்னசெய்கிறது. இப்படி திடீரென்று வந்தால் எப்படி?" என்றான்.

தருமரா.—"நான் என்றைக்கு வந்தாலென்ன? என்னை ஒருவரும் அதிதியாக அழைக்க மாட்டார்கள். நீ இந்த வயசில் ஓடி ஆடித்திரிந்திருப்பாயென்று நினைக்கவே யில்லை. போகட்டும் அந்த மட்டும் சந்தோஷம் தான்" (வலதுகைச் சக்கிரத்தைப்பார்த்து), "ஆமோ காலம் ஓடி விட்டது."

கலியாணராம.—"அய்யா, நாலுவருஷமாய் நொண்டி, அவ்வளவு அவசரப்பட்ப் படாது."

தரும.—"கண்ணிருக்கோ இல்லையோ"?

கலியா.—"அதுவும் போயிட்டுதே!"

தரும.—"சுற்றி எல்லாரும் பிரியமாயிருக்கிறதாய்ச் சொல்லுகிறார்களே."

கலியா.—"காதும் கேட்கிறதில்லையே!"

தரும.—"சரி, காலும் முடமாய், கண்களும் பொட்டையாய், காதும் செவிடாய் இருந்தால் நான் சொன்ன மூன்று எச்சரிக்கையும் ஆயிற்று. புறப்படு."

கலியாணராமன் என்ன செய்வான்? முகம் வெளுத்தது. திகைத்து நின்றான். சற்று தெளிந்து 'அங்காவது மேளதாளமும், கோர்டுக் கச்சேரியும் இருக்குமா?' என்றான்.

தருமராஜா.—"இவ்வளவு நாளிருந்து கோர்டும், கோடிலாபமும், மேளமும், தாளமும் தவிர ஒன்றும் கண்டு தேட்டறியாயோ? நசிகேதஸ் என்பவன் என்னை, மன்றாடி, தனத்தையும், சுகத்தையும் எவ்வளவு நான் கொடுத்தாலும் அவையெல்லாம் மறுத்து மறுஜந்ம மன்றியில் செய்யும் பிர்மஞானத்தைப் பெறவேண்டுமென்று என்னை நாடினது கேட்டிராயோ? இதை உபனிஷத் கதறுகிறதன்றோ? சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் நாளொருதரம் நமக்கு காட்சி கொடுக்கும்படி வானத்தில் உலாவ, சமுத்திரம், ஆதிகாலம் துவங்கி, ஈசுவரனுடைய விலாசத்தைக்கண்டு ஆனந்தம் பொங்கி, தன்னுள் அடக்கமாட்டாமல் தன்னை படைத்த பூமிக்கு வந்து கூவ, புல்லிலும், புஷ்பத்திலும், சிறிதிலும், பெரிதிலும் அவர் விலாசம் எங்கும் நிறைந்திருக்க, பகவான் ஸ்ரீராமன் கிருஷ்ணன் காலால் நடந்த இந்த பூமியில் நீ இத்தனை வருஷகாலமாய்க் கண்டது இவ்வளவுதானு?"

ஸ்படிக்கக் கல்லில் ஜலம் ஊருவதுபோல் கண்ணில் நின்றும் நீர்பெருக ஆ—என்று பெருமூச்சுவிட்டான் கலியாணராமன். தருமரும் தன் பாசத்தை அவன்மீதெறிய அவன் ஆத்துமா, இந்த பழைய குடிசையைவிட்டு தன்னிடம் சென்றது.

---

பாட்லிவாலாவின் கொயினு மாத்திரைகள் (1 கிரெயின்) 100 அடங்கியுள்ள புட்டி 1-க்கு அணு 12.
பாட்லிவாலாவின் கொயினு மாத்திரைகள் (2 கிரெயின்) 200 அடங்கியுள்ள புட்டி 1-க்கு ரூபா 1-0-0.
ஆகூர் மிக்ஸர் ஜ்வரம், கபம், மலேரியா முதலியவைகளுக்கு மேலானது புட்டி 1-க்கு ரூபா 1-0-0.
குளிர்சுர மருந்து மாத்திரைகள் ரூபா 1-0-0.
அஜீரண முள்ளவர்களுக்கு உபயோகமான தாதுவிருத்தி மாத்திரைகள் ரூ. 1-8-0.
பல்பொடி வாய் நாற்றத்தைப் போக்கும் அணு 0-4-0.
Dr. H. L. Batliwalla Sona&Co.,Ltd.,
Worli, Dadar, Bombay.

THE NEED "TO BE INSPIRED BY IDEALS RICHLY AND NOBLY EXPRESSED."
THE FETISH OF THE SCHOOL AND THE IDEAL TO BE AIMED AT."

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God. that sublime belief that seeing evil I yet have faith."*

*" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

"பஞ்சவிம்சதிபாக்கியம்"] ஸத்தியம் வத—SPEAK THE TRUTH. ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 25.] பிங்களஃ ஆனிமீ, 1917ஃ ஜூன்மீ. [சஞ்சிகை 3.

## Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our " terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *One month's credit at the arrears rate* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued †in the middle of a Vol.
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

## General Notice.

i. The *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to "fluctuations" and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor*) ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, "VIVEKACHINTAMANI,"
*Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore*.

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.*

†Notice of discontinuance to have effect must be given in time in writing before a New Volume begins in April and after all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say "that every effort will be made to trace them." "If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed" continues the same high authority, "I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should invariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## THE NEED "TO BE INSPIRED BY IDEALS RICHLY AND NOBLY EXPRESSED."
## "THE FETISH OF THE SCHOOL AND THE IDEAL TO BE AIMED AT."

(*A Teacher on our Educational System.*)

We are so accustomed to hear outsiders criticise our educational system that we hardly know what those who are actually engaged in working it, think of it. We therefore gladly avail ourselves of this opportunity to present our readers with what a teacher (who is also the Secretary of a Teachers' Association) thought and said to his fellow teachers of the present educational system. His verdict is :—

"HIGHLY WANTING."

"Our system of education, if system it can be called, is one that is highly wanting—one that does not extend its compass to the needs of the nation and leaves much to be desired."

"A MOST IMPORTANT AND MOST DIFFICULT PROBLEM."

He quotes Lord Ripon, who 32 years ago as Viceroy of India said : "To my mind, one of the most important, if it be also one of the most difficult, problems of the Indian Government in these days is how to afford such satisfaction to those aspirations and those ambitions as may render the men who are animated by them the hearty advocates and the loyal supporters of the British Government." And he makes the significant comment: "See the obvious futility of our system of education which is of very little use or help in the subsequent working life."

"THE CLAIMS OF "CULTURE AND UTILITY."

A system of education should satisfy two great claims—that of culture and that of utility. ......It should take in view a scientific knowledge of the nation's needs and the training should be vocational to a considerable extent. The subjects taught should bear closely upon the pupil's future vocation.

"DOES OUR SYSTEM OF EDUCATION DO ALL THIS?"

He asks, and proceeds : "Does it foster our children on the ideals of true liberty and fervent patriotism ? Does it prepare them to their life ? And does it endeavour to bring them up to be good civic citizens of the future ?" And his answer to all these questions is :— "No, no indeed."

"THE EDUCATION IN THE SCHOOL."

Leaving aside the education in the University "whose portals are open only to those who are not bound by limitations of time and money"—he takes up for consideration "the education in the school—that is, the education of the adolescent, of the poor democracy," and pointedly remarks :—

"We must here remember the simple but eloquent words of Mr. John Bright that THE NATION IN EVERY COUNTRY DWELLS IN THE COTTAGE. And it is of the utmost importance that the adolescent education, *i.e.*, elementary and secondary education of children of growing age of the people, must be properly attended to."

"THE CHILD IS ESSENTIALLY A CRAFTSMAN."

He (the child) delights in things rather than in words or ideas. And there must be sufficient scope for the enlargement of his mind in this natural direction in the system of education designed to benefit the growing needs of the child-mind. "In our system of education, there is not

"THAT INTIMATE UNION OF THE THEORETICAL AND PRACTICAL."

And hardly any provision is made for a kind of preliminary vocational training"—or "the training of the hand and the eye" to work in co-operation with each other. In the view of the teacher actually engaged in his work, "our children are mostly taught by what are called—

"FORCE-PUMP METHODS."

"Facts are forced into their brains so that many of them fall victims to unnatural precocity. In the words of Huxley, "the vigour and freshness which have been stored up for the purposes of the hard struggle for existence in practical life, have been washed out of them by precocious mental debauchery, by book gluttony and lesson bibbing." This is exactly the case with a great many of our University men as well as our children in the Elementary and Secondary Schools."

"THE NEED TO BE INSPIRED BY IDEALS RICHLY AND NOBLY EXPRESSED."

Man, in whatever walk of life he may be, has to be now and then inspired by ideals richly and nobly expressed ; for such we must surely turn to literature. But the literature should be chosen. It should be that which presents ideals in a form suited to the life of the individual, and it should do much to give the individual a noble exposition of his daily toil. It is thus that education should tend to both culture and utility. (See next page.)

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-3.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

பிங்கள ஆனி மீ. } விவேக  சிந்தாமணி { June-July. 1917.

FIRST ESTABLISHED, 1892. OUR JUBILEE YEAR, 1917.

"பெற்றோர்கள் தாழ்வப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

"THE FETISH OF THE SCHOOL AND THE IDEAL TO BE AIMED AT."

"Further, our system has," he says, "rendered English and Arithmetic to be the fetish of the school-work. This ought not to be. What are called "the knowledge subjects" must be given their due share of importance and they must not be taught in such a way that as at present, they are forgotten as soon as the pupils leave school. They must be so taught as to "weld them on to the pupil's own experience of life and make them realities influencing thought and conduct and as to be of considerable help in practical life." Add to these the enormous waste of time and energy in the acquisition of a difficult and foreign tongue, which, unfortunately, remains the medium of instruction in all subjects. Such are the points presented to us by a teacher, of the "defects" in our system of education. The defects of the "Educator" are equally great and they "are pressing for a speedy and satisfactory solution."

---

## THE NEED "TO BE INSPIRED BY IDEALS RICHLY AND NOBLY EXPRESSED."

A TEACHER ON OUR EDUCATIONAL SYSTEM.

உயர்லக்ஷியமின்றி உத்தமலக்ஷணமில்லை.

நமது வித்தியாப்பியாச முறையைப்பற்றி ஒரு போதகாசிரியர் அனுபவசித்தாந்தம்.

---

இத்தேசத்துப் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு வித்தியாப்யாசம் செய்துவைக்கும் முறையைப்பற்றி அதில் நேராக சம்பந்தப்படாதவர்கள் அடிக்கடி குற்றநற்றஞ் சொல்லி பேசியிருக்கிறார்கள்: அதை நாம் கேட்டுமிருக்கிறோம். ஆனால் அந்த வித்தியாப்யாச முறையில் சம்பந்தப்பட்டவராய் அதில் ஈடுபட்டுழைக்கும் போதகாசிரியர் ஒருவர் அவருடைய அனுபவ சித்தாந்தமாய் அம்முறையைப்பற்றிச் சொல்லிய அபிப்பிராயத்தை நாம் கேட்டதில்லை. அப்படிப்பட்ட ஒருவர் தாம் போதகாசிரியரா யிருப்பதோடு உபாத்தியாயர்கள் சங்கத்துக்குக் காரியதரிசியாகவு மிருக்கிற முறையில் அவருடைய அனுபவத்தைக் கொண்டு சித்தாந்த பூர்வமாய் தனக்குப்பட்ட அபிப்பிராயத்தைச் சொல்லியிருப்பதை முன்னிட்டு அவருடைய எண்ணம் இன்னதென்பதை விவேக சிந்தாமணியை வாசிப்போர் அறிய இங்கு வெளியிட்டுப் பிரசுரித்தல் உசிதமாயிருக்குமென்று நினைக்கிறோம்.

முதலெடுப்பில் அவர் தமது முடிவான தீர்மானத்தை வெளியிட்டுச் சொல்லியிருக்கிறார். அது: "நமது பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் வித்தியாப்யாசமுறை — அதையும் "முறை" யென்று சொல்லலாமானால்— இத்தேசத்தார்க்கு வேண்டிய அளவுக்குப் பொருந்தினதாக வில்லாததோடு அதில் பொருத்தவைக்கவேண்டியவாயுள்ள மிகுந்துள்ளவையாயிருக்கிறது" என்பதே.

ஆகவேண்டியது ஒன்று—அவசியமும் கஷ்டமுமானது.

சுமார் 32-வருஷங்களுக்கு முன் லார்ட் ரிப்பன் அவர்கள் இந்தியாவில் இராஜப்பிரதிநிதியாகவிருந்தபொழுது (இவருடைய பிரதிமையைச் சென்னைமவுண்ட்ரோட்டில் 'ரவுண்ட்டாணா' மண்டபத்துக்கு அருகில் காணலாம்) சொன்னதோர் முக்கியமான சங்கதியையெடுத்துக்கூறி இத்தேசத்தில் கவர்ன்மெண்டார் கடமையென்னவென்பதைக் குறிப்பிட்டுரைக்கிறார். லார்ட் ரிப்பன் சொன்னதாவது :—

“இக்காலத்தில் இந்தியா கவர்ன்மெண்டாரால் ஆகவேண்டியதும் அதிமுக்கியமானதும் அஃதோடு அதிகஷ்டமானதுமான காரியம் ஒன்றிருக்கிறது. அது என்னவெனில்: இந்தியாவில் படித்துத் தேர்ந்தவர்கள் உயர்பாவங்கொண்டு உயர்பதவியை நாடி உயர் எண்ணங்கள் கொண்டுழைக்க சித்தமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை பிரிடிஷ் கவர்ன்மெண்டுக்கு அனுகூலமாயிருந்து அவர்களை ஆதரித்துப் பேசுவதே அவர்களுக்கு நன்மை பயப்பதாகுமென்று எண்ணும்படி கவர்ன்மெண்டார் நடந்துகொள்ளவேண்டியதே.”

இந்தியாவில் நடந்தேறிவரும் வித்தியாப்பியாசமுறை இந்தக்கொள்கையைக்கொண்டு பார்க்கில் பிரயோசனமற்றதாகவிருக்கிறது. காரியத்துக்குதவாத படிப்பு (மனம்படியப் பெறுதலே படிப்பு) படிப்போடு சேர்த்தியல்ல. பள்ளியில் படித்துத் தேறினவர்களெல்லாம் மனம் படியப் பெறுதலாம் “படிப்பு”ப் படியப்பெற்றவர்கள் என்று சொல்லலாமா பாருங்கள் என்கிறார். மனம் படியப்பெற்றால்மட்டுமே “கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை” யென்னும் மூதோர் மொழி பலிக்கும். அஃதில்லையேல “அரைப்படிப்பு ஆபத்து விளைக்கும்” என்கிற பழமொழிக்கு இலக்காகும். இத்தனை காலமாய் நடந்துவரும வித்தியாப்பியாச முறையின் பலன் முன்னதை யொட்டினதாயிருக்கிறதோ பின்னதை யொட்டினதாயிருக்கிறதோ கண்ணுள்ளவர் கண்டறிந்து கொள்ளட்டும் என்கிறார்.

'படிப்பு' மனப்பயிர்ச்சிக்கும் காரியசித்திக்கும் இன்றியமையாத சாதனமாம்.

வித்தியாப்பியாச முறையென்று ஒன்று ஏற்பட்டிருந்தால் அது மனப்பயிர்ச்சிக்குச் சாதகமாயிருப்பதோடு காரியசித்திக்கும் சாதனமாயிருக்கவேண்டும். இவ்விரண்டுக்கும் உதவாத படிப்பு ஒற்றைக்கால் நொண்டியாகி மேல்விர்த்திக்கு உதவாததாகும். 'நொண்டிப் படிப்பு கோண்டித்தனத்துக்குக் காரணமாம்' என்பது வெகுஜன வசனம். கோண்டித்தனம் என்றால், தான் கொண்டதே கொள்கையென்று பிடிவாதமாய்ப் பிடித்துநிற்கும் முரட்டுத்தனம். இந்த முரட்டுத்தனம் மனதைப்பற்றியதாக விருத்தல்போல் தேஹமுயற்சியைப பற்றியதாகவுமிருக்கலாம். உண்மைப்படிப்பின் பயன் உத்தமசித்தமும் நினைத்தது முடிக்குமாற்றலுமாய் விளங்கும். உத்தமசித்தமில்லாது போனால் 'நினைத்ததுமுடிக்கும்ஆற்றல்' அழகுறப் பொருந்தாது. அப்படியே 'நினைத்தது முடிக்குமாற்றல்' இல்லாதபோது உத்தமசித்தமும் பேடிகைப்பட்ட பெண்மணிபோல் பயன்படாது ஒழியும். ஆகையால் இவ்விருவிதப் பலனும் சித்திக்க வித்யாப்யாசமுறை அறிவு விசாலப்படுவதாயிருப்பதோடு கூட அனுபவத்துக்கும் ஒத்ததாகவிருக்கவேண்டும். இதனால் ஏட்டுப்படிப்பின் பிரயோஜனமற்ற தன்மையும் அனுபவஞானத்தின் சிரேஷ்டமும் கூறப்பட்டதாகும். இவ்விருவித உத்தமபலனும் சித்திக்கத்தக்கதாக “நமது வித்தியாப்பியாச முறை இசைந்திருக்கிறதா ?” என்று கேட்கிறார். பின்னுமவர் : “பள்ளியிற் படிக்கும் சிறுவர்கள் ஸ்வதந்திரப்பிரியர்களாகவும் உத்தமசித்தர்களாகவும் அனுகூலம் இருக்கிறதா ?” அப்பள்ளியில் படிக்கும் குழந்தைகள் எல்லாம் தங்கள் தேசத்துக்கும் குலத்துக்கும் பெருமை, விளைக்கத்தக்க உத்தமமான



நகரமாக்களும் நன்மக்களும் ஆவதற்குவேண்டிய பால்யப்பழக்கம் பெற்றுவருகிறார்களா ?” என்று கேட்டு, இக்கேள்விகளுக்கெல்லாம் “இல்லை, இல்லை, உண்மையில் இல்லை” யென்று அவரே விடைபகர்கிறார்.

பள்ளிப்பழக்கம்.

'யூனிவர்ஸிடி' யென்று சொல்லும் ஸர்வகலாசாலைப்படிப்பு காலம், திரவியம் ஆகிய இரண்டு சம்பத்துக்களும் குன்றாத புமான்கள் மக்களுக்கே கிடைக்கத்தக்கதாயிருப்பதுப் பற்றி அதைப்பற்றிச் சிந்திப்பதைவிட்டு, பெரும்பாலான சாமான்ய ஜனங்களின் பிள்ளைகள் பெறுவதற்கான பால்யப் படிப்பு என்று சொல்லும் இளவயதில் அமையவேண்டிய பிரதம பாடசாலைப்படிப்பு, அதற்குமேற்பட்ட இரண்டாந்தர அல்லது மத்தியதரப் பாடசாலைப்படிப்பு இவ்விரண்டையும் பற்றிச் சிந்தனை கொண்டு விசாரித்து அவருடைய அனுபவசித்தாந்தத்தை வெளியிடுகிறார்.

மிஸ்டர் ஜான் ப்ரைட் என்னும் ஆங்கிலேய மஹான் அவருடைய வித்வத் சாமர்த்திய விசேஷத்தால் “எத்தேசத்திலும் அத்தேச சத்துயிர் தங்கும் ஜனங்கள் ஏழைகளாய் குடிசைகளில் வசிப்பவர்களாகவே யிருப்பார்க” ளென்று சொல்லியிருக்கிறார். இது உண்மையானதோர் சமஷ்டிஜீவ தர்மம். ஆகையால் இதை நாம் சிந்தையிற்கொண்டு பெரும்பாலரான ஏழை ஜனங்களின் வளர்பிராய மக்கள்கள் பால்யப் பழக்கம் பெறுவதற்கான வித்தியாப்பியாச வசதிகள் சரியாக ஏற்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்குங்கால் இத்தேசத்துப்பள்ளிப் பழக்கம் “ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது” என்கிற பழமொழிக்கேற்றதாயிருக்கிறதேயன்றி காரண காரிய தோரணை பொருந்தக் கருவிகரணங்கள் இரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பதற்கான உத்தம சாதனம் அமையப்பெறாமலேயிருக்கிறது வெள்ளிடைமலைபோல் விளங்குமென்கிறார். கரணம் என்பது மனசு, புத்தி, சித்தம், அகங்காரம் என்கிற மனோவிர்த்திகள் நால்வழியில் பழகுவதற்கான மனப்பயிர்ச்சிக்குப் பொருந்துவதாகவும், கருவி யென்பது கை, கால், கண் காது முதலான தசேந்திரியங்களும் மனதால் நினைத்ததைக் காரியத்தால் முடிக்கும் ஆற்றல் பெற்றதாய்ப் பழகிப்படியப் பெறும் படிப்புக்குப் பொருந்துவதாகவும் கொள்ளல் வேண்டும்.

“பாலைப் புகட்டலாம்: பாக்கியத்தைப் புகட்டலாமா?”

என்பது பழமொழி. படிப்பை விர்த்தி செய்ய அப்பியாசங்களைக் கற்பிக்கலாம். அந்த அப்பியாசங்களில் பழகிவரும் பயிர்ச்சி உள்ளத்துணர்ச்சியினால் ஆத்ம விர்த்திபற்றியுண்டாகவேண்டுமேயன்றி நிர்ப்பந்தமான கற்பனை சிற்பனைகளால் ஏற்படத்தக்கதல்ல. அப்படியிருக்க, பள்ளிப்படிப்பு “டுக்ருங்கரணே மூடமதே” யென்று ஸ்ரீமத்சங்கரபகவத்பாதாசாரியார் கண்டித்துக் கூறியபடி நெட்டுருப் போட்டு பொட்டைப் பாடமாகக் கற்பிக்கப் படுவதாயிருக்கிறது ஸ்பஷ்டம் என்கிறார்.

நமது பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குப் போதிக்கப்படும் படிப்பை “ ஏட்டுப்படிப்பு” என்றும், “புஸ்தகத்தை அறைத்தூட்டல்” என்றும் “யந்திரம் அறைக்கிறதுபோல் கல்வி மூளையில் இறங்க அறைத்துவிடுகிறது” என்றும் பலவாறு சொல்லக் கேட்டிருக்கிறோம். 35-வருஷங்களுக்கு முன் இதை யெழுதுபவர் படித்துப்பழகிய போதகாசிரியராகிய 'காலேஜ் ப்ரின்ஸிபால்' என்னும் கல்லூரித்தலைவரைக் கண்டு இக்காலத்துப் பிள்ளைகளின் கதியையும் படிப்பின் நிலைமையையும்பற்றிச் சமீபத்தில் பேசிக்கொண்டிருந்தபொழுது, 'பிள்ளையைப் பள்ளிக்கூடத்துக் கனுப்பிவிட்டோம்' என்று நிம்மதியாயிருக்கக் காலம் இதுவல்ல. உன் பிள்ளை முன்னுக்கு வருகிற வழியை நீயே தேடியுழைக்கவேண்டும். பள்ளிப் படிப்பு காரியத்துக் குதவாது : பால்யம் போனால் வராது! உஷார்!' என்று அவர் நம்மை எச்சரித்துப் பேசலானார். இந்த மாதிரி உத்தமசித்தர்கள் அநேகர் இக்காலத்துக் கல்வியின் குறையைப்பற்றி மனங்குழைய உணர்ந்தும் அதைச் சீர்திருத்த ஒரு விதத்திலும் ஆற்றாதவராய் மனோற்சாகம்குன்றி காலத்தைத் தள்ளி வருகிறார்கள் என்பது நாம் நேரில் அறிந்த விஷயம்.

இலக்கியமின்றி இலக்கணமில்லை.

காரியப்படியின் அவசியத்தை எடுத்து வற்புறுத்திக்கூறுவதால் உயர் இலக்ஷியத்துக்க

வசியமான உத்தம கிரந்தங்களைப் படிப்பது அனாவசியமென்றாவது அவ்வளவு அவசியமில்லையென்றாவது சொல்வதாகத் தப்பர்த்தம் செய்துக்கொள்ளக்கூடாது. இலக்ஷியமின்றி இலக்ஷணமில்லை, உத்தமலக்ஷியம் மனதிற் பதியப்பெற்றால்தான் உத்தம குணங்கள் அமையப் பெறலாம்; ஆகையால் அதுவும் அவசியமே.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"

என்பது மூத்தோர் சொல் வசனம். இதற்குக் கோணல் அர்த்தம் செய்து புஸ்தக வாசிப்பும் கணக்குபோடுதலுமே பிரதானமென்று பால்மணம் மாறாக் குழந்தைகளுக்கெல்லாம் "வாய்ப்பாடு" நெட்டுருப்போட்டு வருவதும் ஸாரமற்ற ஏட்டுப்படிப்புச் சொல்லித் தருவதுமே "இளமையிற்கல்" என்பதின் நோக்கமாக எண்ணி குழந்தைகளின் பாலப் பருவத்தை விருதாவில் கழித்து வருவதன்றி அவர்கள் பால புத்தியையும் மழுங்கச் செய்து விடுகிறார்கள். இது மகா கொடுமையான அபராதம்.

குழந்தைகள் விளையாட்டுப்பிரியர்கள்.

எதையும் அவர்கள் காரியத்தில் கண்டு களிக்கும் ஸ்வபாவம் உடையவர்கள். ஆகையால் அவர்களுக்கு எதையும் அவர்களுடைய அனுபவத்துக்கு ஒத்துவரும்படியாகப் பொருந்தப் பொருத்தி, அவர்களுடைய பாலசந்திரன் போன்ற இளம் புத்தி மேன்மேலும் விர்த்தியாகி அறிவு விசாலம்பெறப் போதிக்க வேண்டும். "வாத்தியார் சொன்னபடி தர்ப்பயாமி!" யென்று இன்றைக்கு வாத்தியார் நிர்ப்பந்தத்துக்காகப் பாடத்தை நெட்டுருப் போட்டுப் படித்து ஒப்புவித்துவிட்டு நாளைக்குப் பள்ளியைவிட்டதும் எல்லாவற்றையும் அறமறந்து மந்தமதியாய் விளங்குவது பிள்ளைகள் மனதைக் கொல்வதற்கொப்பாகும். ஆகையால் இளம்பிராயத்தில்தானே எதையும் குழந்தைகளுக்கு அனுபவசித்தாந்தமாய்ப் போதிக்கவேண்டும். இதற்குப் பெற்றோர்களும் போதகாசிரியர்களும் அனுபவஞானமுள்ளவர்களாக விருக்கவேண்டும். அந்த அம்சம்தான் அவர்களிடத்தில் பூஜ்யம். அதைப்பற்றி பெழுதில் வளரும். ஆதலால் தொட்டதைமட்டும் இடைவிடாது சுருக்கச் சொல்லி விளக்கவைத்து முடித்தோம்.

## ADVICE TO THE YOUNG.

## பாலர்க்கு ஹிதோபதேசம்.

அடியில்வரும் சில நீதிவாக்கியங்களைச் சிறுவர்களும் சிறுமிகளும் தங்கள் மனதிற்கொண்டு அனுஷ்டிக்குமாறு பிரசுரிக்கிறோம். இதனுடன்கூட, பாலர்கள் மனதில் பச்சை மரத்தில் அறைந்த ஆணிபோல், நன்றாக வேரூன்றும்படியாக வரையப்பட்டிருக்கும் நீதிமார்க்கக் கும்மியையும் பிரசுரிக்கிறோம். இவைகளில் தர்மார்த்தகாமமோக்ஷ சாதனங்களான தத்துவங்களெல்லாம் மனதில் நன்றாகப் பதியும்படியாக நன்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதை வாசிக்கும் ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் இவைகளை நன்றாக மனப்பாடம் செய்து, தினசரி நடக்கையில் அதைப்பழக்கம் பண்ணுவார்களென்று நம்புகிறோம்.

இங்கு எளிதாய் சொல்லப்பட்டிருக்கும் இவ்வுயர் தத்துவங்களை மாத்திரம் அனுபவத்திற்கு கொண்டுவருவார்களேயானால் மனதுகளங்கமற்று, வரவர ஹிருதயசுத்தி லபிக்கும். வாழ்க்கையில் எவ்வித இடுக்கண் நேரிடினும் ஈடுகொடுத்துச் சமாளித்துக்கொண்டு சுகவழி அடைய சாமர்த்திய முள்ளவர்களாவார்கள். மடியில் கனமுள்ளவனுக்கே வழிப்பறிசெய்யும் திருடர்களிடமிருந்து பயமன்றி, மடியில் கனமில்லாத வழிப்போக்கனுக்கு பயமொன்றுமில்லை என்பதுபோல—கோபம், அகங்காரம், பொறாமை, சத்தியமின்மை, பேதம் பாராட்டுந்தன்மை, பேராசை, பயபக்தியின்மை முதலிய இத்துர்க்குணங்களின் சேர்க்கையே மனிதனுடைய வாழ்க்கையை, கர்மபாரம் என்னும் பாபமூட்டையால் கனமுள்ளதாகச் செய்து, பிறகு, அவன் என்னதான் திருத்திக்கொள்ள முயற்சிசெய்யினும், கஷ்டங்களில் மாட்டிவைத்து, துக்கமுள்ளவனாகச்செய்து "ஸம்ஸாரம் துக்கஸாகரம்" என்றபடி இவ்வுலக வாழ்க்கையானது விசனங்களும் கஷ்டங்களும் நிரம்பிய ஒரு பெரிய சமுத்திரம் என்று நினைக்கும்படிச் செய்கிறது.



முளையில் திருத்தப்படாத மரத்தை வளர்ந்தபிறகு, திருத்த முடிகிறதில்லைபோல, எளிதில் அப்பியாசங்கள் அமையப்பெறும் சிறுவயதில், துரப்பியாசங்களாகிய கோணலான கிளைகள் நேராக்கப்படாவிட்டால், பெரிய மரங்களான பிறகு பட்டுப்போகிற வரையிலும் கோணலாகவேயிருந்து உபத்திரவமளிக்கும். உதாரணமாக எவராலும் கவனிக்கப்படாது இஷ்டம்போல, வீதிகளில் அஷ்டக்கோணலுடன் வளர்ந்திருக்கும் மரங்களையும் அப்பொழுது அப்பொழுது தோட்டக்காரனால் கொத்தப்பட்டும், கத்திரிக்கப்பட்டும், வெட்டப்பட்டும், சீர்திருத்தப்பட்டுள்ள தோட்டத்திலுள்ள மரங்களையும் பார்த்தால், வித்தியாசம் நன்குவிளங்கும்.

இதே மாதிரியாகத்தான் பாலியத்தில்,மனம் போன போக்குப்படியெல்லாம் நடந்து நலம் தீது இன்னதென்று பகுத்தறியும் சக்தியில்லாமலும், இன்னது செய்தால் இன்ன பிரதிபலன் கிடைக்கும் என்று தெரியாமலும், அந்தந்த சமயத்திற்கு தனக்கு எளிதாயும் சுகமாகவும்பட்ட பொய்த்தோற்றப்படி நடந்துகொள்பவர்கள் பெரியவர்களானபிறகு பல கஷ்டங்களைப்பட்டு பல அவமானங்களுக்குள்ளாகி சீர்குலைந்து போகிறார்கள். இதனாலேயே அடித்துத் திருத்தப்படாத பிள்ளையும், ஆசிரியனிடம் படித்து போதிக்கப்பெறாத பிள்ளையும் அணிப்பிள்ளை, கிளிப்பிள்ளையென்று உதாசீனமாகச் சொல்லப்பட்டிருக்கிறார்கள். தங்கள் பார்வையிலுள்ள பிள்ளைகளை நல்ல புத்திமதிகள் போதித்து சீர்திருத்தாத தாய் தந்தையரும் துரோகிகளை ஒத்தவர்களாவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஆகையினால் இவைகளையெல்லாம் நன்றாக மனதில் பதியவைத்து 'கல்வியைக்கல் கற்றப்படி நில்' என்னும் ஔவைப் பிராட்டியின் வாக்குப்படிக்கு இளம்வயதில் தூயமனதுள்ளவர்களாய் கோணல் முதலியவைகளில்லாமல், குணத்தினால், தென்னைபோல் உயரோங்கி, அது சிரசில் இளநீர் தேங்காய் கொடுப்பதுபோலவும், அன்னம் நீரிலிருந்து பாலைப்பிரிப்பதுபோல தீங்கிலிருந்து நல்லதைப்பிரித்துக் கிரகித்தும், பக்கத்திலிருப்போருக்கு சன்மார்க்க நெறியாய் நின்று உலகுய்ய நடக்கச் சாதனமாய் இதைக் கைப்பிடித்து நடப்பார்களென்று நம்புகிறோம். இன்னும் வருஞ் சஞ்சிகைகளிலும் நன்கு படும்படியான நடையிலுள்ள விவேகரஸத்தாலாட்டையும் பாரதம் முதலியவைகளிலிருந்து சிறுநீதிக் கதைகளையும் கூடியவரையிலும் விவரிப்போம்.

### ஹிதோபதேசக்குறிப்புகள்.

1. இந்தச்சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளைவணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

2. இன்னகாலத்திலே இந்தச்சரீரம் நீங்கும் என்பது நமக்குத் தெரியாதாகையால் நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

3. கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும் அதனால் எய்தும் பயனையும், நமக்குப் போதிக்கும் அருள்வடிவாகிய ஆசாரியர் ஒருவரே நமக்கு உயிர்த்துணை. ஆதலால், அவரை ஒருகாலமும் மறக்கப்படாது.

4. ஈசுரபக்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதாமாதாக்களை உடைமையே பெரும்பாக்கியம்.

5. தீவிரமாயேனும் மந்தமாயேனும் நல்வினை இன்பத்தையும் தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.

6. நன்மைசெய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யாதொழிவோமாயின், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது.

7. சோம்பலே தீமைக்கும் துன்பத்திற்கும் பிறப்பிடம்.

8. தங்கள் நயத்தின்பொருட்டு மாத்திரமன்றி, பிறர் நயத்தின்பொருட்டும் பிரயாசைப் படுகிறவர்களே உத்தமர்.

9. எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும் முற்றறிவு உடையு

கடவுள் அறிந்து பயன் அளிப்பார். பிறர் அறிந்தென்? அறியாதிருந்தென்?

10. தன்பொருட்டு மாத்திரம் பிரயாசைப் படுகிறவர் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பர். அவ்வற்ப இன்பமுமோ மிக இழிந்தது.

11. அறிவும் அதனால் ஆகிய நற்குண நற் செய்கைகளும் உள்ள சான்றோர்களாலே நன்கு மதிக்கப்படுவதற்கு யோக்கியனாய் இருக்கக்கடவோம்.

12. நாம் பிறர்க்குச்செய்த உபகாரங்களை நாமே எடுத்துப் புகழ்தல் தக்கதன்று.

13. அடக்கம் உடைமை அனைவருக்கும் சிறந்த ஆபரணம்.

14. நாம் செல்வத்தையும் உபசரிக்கப்படுதலையும் நம்முடைய பிரீதிக்கு மாறாக இழத்தல்கூடும். நல்லொழுக்கத்தையோ அப்படி இழத்தல் கூடாது.

15. சுசி உடைமை சரீரத்துக்கு திடத்தையும் ஆரோக்கியத்தையும் வளர்விக்கும்.

16. நாம் பிறர்க்கு ஒன்றை வாக்குத்தத்தம் செய்யுமுன் அது நம்மால் இயலுமோ? இயலாதோ? என ஆராய்ந்துகொள்ளக்கடவோம்.

17. இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றேயாயினும் தீதேயாயினும் அதுவே பெரும்பான்மையும் மரண பரியந்தம் அவனைத் தொடரும்.

18. நமக்கு நல்லொழுக்கமும் புகழும் இன்பமும் வருதல், தவிர்தல்கள் முறையே பெரும்பான்மையும் நமது நற்சார்பு தீச்சார்புகளால் ஆகும்.

19. நாம் இரகசியமாகக்குற்றம் செய்யும் போது பிறர் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்வோமாயினும் நம்முடைய மனம் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பிக்கொள்ள மாட்டோம்.

20. நாம் சிறு துன்பங்களைச் சகிக்கப்பயில்வேண்டும். பயில்வோமாகில், மேலே பெருந்துன்பங்களையும் சகிக்க வல்லவர் ஆவோம்.

## ARYAN MORALS IN KUMMI SONGS.

### நீதிமார்க்கக்கும்மி.

1.

சீர்பெறுமிப்புவி மீதினில் மானிடர்
திண்ணமுடன் வாழமுனிவர்சொன்ன
ஏர்பெறுமாரிய நீதியைக் கும்மியாய்
இயம்பப் பராபரனைத் துதிப்பாம்.

2.

மாதா பிதா குரு தெய்வம் இவரை
மதியாது விட்டால் மாபாதகம்;
ஆதாரம் உன்னை யீடேற்று வதற்கிவர்
ஆய்ந்து பாரடி ஆரணங்கே.

3.

உண்மையே உயிர்களுக் குற்றதுணையென்று
உபநிடதங்க ளெல்லா முரைக்கும்;
புண்ணியங்கட்கு வழிகாட்டும் அது
புத்தியிற் கொள்ளடி பூங்குயிலே.

4.

தன்னைப் போலவே அந்நியருமென்று
தருமஞ் செய்வா யவர்தளரும்போது;
அந்நியர் துன்பம் அசட்டை செய்தால் நீ
அடைவதில்லைப் பேறு ஆரணங்கே.

5.

அந்நியர்க்குத் துன்பஞ் செய்யாதே அதை
ஆவலாய் மனதில் எண்ணாதே;
மண்ணுந்தர்மமும் மற்றத்தவங்களும்
மாய்ந்து போகுமடி மானினியே.

6.

அந்நியர் வேதைப் படும்போது மேலோர்
சொந்த நன்மைகளைப் பாரார்கள்;
இன்னுயிர்களையும் ஈவார் அதற்குப்
பின்னு மென் சொல்வது பெண்மயிலே.

7.

சந்தன மரத்தை வெட்டுங் கோடாலிக்கு
கந்த ஜலத்தைத் துளிப்பதுபோல்
சிந்தையில் எண்ணாது தீங்குசெய்வோருக்கு
வந்தனஞ் செய்வது வண்ணமாமே.

8.

ஜாதி குலங்களைப் பாராதே ஒருவர்
வேதனைகள் படும் போதவர்க்கு



சாத்தியமான வுதவி செய்து அவர்
சங்கடந் தீர்ப்பது தர்மமாமே.

9.

தருமவிதிவழி நடப் போர்க் கதனால்
தரித்திரம் மென்மேல் வந்திடினும்
பெருமையாய் மனத்தை யதர்மச்செய்கையில்
போகவிடாதே நீ பூங்குயிலே.

10.

நன்றி மறப்பதை நாடாதே அது
நரக வேதனைக்கு ஆளாக்கும்;
என்று முன்னோர்கள் சொன்னதை யுணர்ந்து
இடர்களைத் தேடாதே இட்டவர்க்கு.

11.

பொன்னுடன் மண்ணுங் கலந்திருக்கக்கனி [யில்
மண்ணைவிட்டுப் பொன்னைக் கொள்வது [போல்
இன்னல் தருங்கன்மம் இழிவானதென் [றெண்ணி
ஈட்டுவாய் புண்ணியம் ஏந்திழையே.

12.

மண்ணோரம் சொன்னார் மனையழியுமென்று
மாதுமுன் சொன்ன மறைமொழியை
யெண்ணியே யெந்நாளும் ஏதமில்லாமலே
எட்டி நடவடி ஏந்திழையே.

13.

கோபமே பாபத்துக்காதாரம் அதைக்
கொள்ளி கொண்டே நீ சுட்டெரிப்பாய்;
ஆபத்துகள்வரும் அறிவைக் கெடுக்கும்
ஆய்ந்து பாரடி ஆரணங்கே.

14.

பொறுமையே யாவர்க்கும் பெருமை தருவதும்
போகங்களை யுண்டாக்குவதும்;
சிறுமை யொன்றும் உண்டாகாது அதைச்
சிந்தையில் வையடி தேன்மொழியே.

15.

செல்வம் வந்தாலும் செருக்கடையாதே
சீக்கிரம் வந்திடும் அதற்கு நாசம்;
இல்லாமை சேர்ந்தாலும் இதயத்தில் சஞ்சலம்
இல்லாமல் பாரடி சேரிழையே.

16.

முயற்சி யுடையவர் எக்காலத்திலும்
இகழ்ச்சியடையார்கள் என்று நினை;
உயர்ச்சி யடைவாய் நீ உண்மைவழிகளால்
உறுதியாய் நம்படி ஒண்டொடியே.

17.

ஈசனளித்தது எவ்வளவானாலும்
அவ்வளவே போதுமென்றிருப்பாய்;
பேசாதே குறைகள் பேசிடில் வந்திடும்
பெரிய துன்பங்கள் பெண்மயிலே.

18.

கொலை களவு காமம் கள்ளுண்ணலானவை
கொடிய பாதகமெனத் தவிர்ப்பாய்;
நிலையாக மனதை நித்திய வஸ்துவில்
நிறுத்துவதே மோட்சம் சேரிழையே.

19.

தெய்வ பக்தி யில்லாதவர்க்கென்றும்
தீங்குகள் நேரும் அஃதுள்ளவர்க்கு
வையம் புகழநல் வாழ்வுகளுண்டாகும்
வானோர் உறவாவார் வாள் விழியே.

20.

நீரின்மேல் பிறக்குங் குமிழியானது
நிமிஷத்தில் தோன்றி மறைவதைப்போல்
பாரின்மீது மாந்தர் தேகமும் வாழ்வும்
பார்க்கும்போதே போகும் பைங்கிளியே.

21.

ஈசனிருப்பிடம் இதயத்திலே இதை
யின்னபடி யென் றறியாமல்
தேசமெல்லாஞ் சுற்றித் திரிந்தலைகிறார்
திண்மை யில்லாதவர் தீங்குயிலே.

22.

நீ செய்யுஞ் செய்கையும் நினைக்கு மெண்ணமும்
நீயே யறிவாயென் றெண்ணாதே;
நேசமாயுன் னுள்ளே வாசமாயிருக்கும்
நித்தியவான்மா வெல்லாமறியும்.

23.
ஜென்மங் கிடைப்பது கன்மத்தின்படியே
துன்புறுங் காரியஞ் செய்யாதே ;
உண்மையாய்க் காயம் மனோவாக்கிவையால்
உத்தமியென்று உயர்வடைவாய்.

24.
தனக்குச் சத்துரு மித்துருவாவதும்
தானே யென்றறிவாய் தையலே நீ;
தாழ்வதும் உயர்வதும் தன்னாலே அதன்
தன்மை யறிவது ஞானமாமே.

25.
ஆசையுண்டாவதும் அது அழிவதும்
ஆகியவைகள் மனத்தாலே;
நேசமாய் மனதை நிறுத்திப்ரம்மத்தில்
நிராசை தேடடி ஞானப்பெண்ணே.

26.
உற்றார் பெற்றார் முதலாகிய சுற்றத்தார்
ஒருவரும் உன்னுடன் வாரார்கள்;
மற்றும் நீ முன் செய்த பாவ புண்ணியங்கள்
பார்த்துத் தேரடி பைங்கிளியே.

27.
ஆரிய நீதியை ஆவலாய்த்தமிழில்
அவனியி லுள்ளோர்க் குதவும்படி
சீருடனேஸ்ரீ-நிவாச உள்ளன் சொன்ன
சிங்காரக் கும்மியைப் பாடுவாய் நீ.

---


## விளம்பரம்.

விவேகசிந்தாமணி மாதிரிக்காப்பி வேண்டியவர்கள் அணா-8 அனுப்பவேண்டும். அல்லது V. P. P. யில் அனுப்ப உத்திரவனுப்பவேண்டும். விவேகசிந்தாமணி ஒரே பதிப்புத்தான் பிரசுரமாய் வருகிறது. அதற்கு முன்பணமாய் ரொக்கம் ரூ. 5. ஒருமாதக்கடன் ரூ. 6. வஸூல் கணக்காகவே சந்தாபெறப்படும்.

| | | | |
|---|---|---|---|
| கமலாம்பாள் சரித்திரம் ரூ. | 1 | 4 | 0 |
| டை காலிகோ கட்டடம் ரூ. | 1 | 12 | 0 |
| ராதகீதாமகன் சிலம்பொலி ரூ. | 1 | 0 | 0 |
| டை காலிகோ கட்டடம் ரூ. | 1 | 4 | 0 |

தபாற்கூலி பிரத்யேகம். வேண்டியவர்கள் விவேகசிந்தாமணி மானேஜருக்கு எழுதிக்கொள்ளவும்.

விலாசம்:—ஏஜண்டு மானேஜர், "விவேகசிந்தாமணி"
வலிதாலயம், 19, ஆடம்தெரு,
மைலாப்பூர், சென்னை.


## THE ESSENCE OF MAHABHARATA.

### பாரத சாரம்.

வேதம், ஆகமம், இதிகாசம், புராணம் என்னும் பெரிய நூற் பிரிவுகளில் பாரத மென்ற இதிகாசம் உலகத்திலுள்ள அரிய பெரிய கிரந்தங்களுள் தலைமை பெற்றதாகும். "பாரத: பஞ்சமோவேத:" என்று இதை வேதத்தோடு சேர்த்து ஐந்தாவது வேதமென வழங்குதலால் இதன் பெருமை நன்குவிளங்கும்.

ஒருவனைப்பார்த்து "நீ வாய்மையே வழங்கல்வேண்டும்," என்று சொல்வதைவிட அரிச்சந்திரனைப்போல் சத்தியத்தில் நின்றவர்களைப் பற்றியும், அதனால் அவர்களுக்கு வந்த கதியைக்குறித்தும் வற்புறுத்துகிற கதையைச் சொல்லியும்; "நீ பொய் சொல்லலாகாது" என்று சொல்வதைவிட தருமராஜனைப்போல் ஒரு பொய் சொன்னதினால் நேர்ந்த தீமையைக்குறித்து வற்புறுத்துகிற கதையைச் சொல்லியும் போதிப்பதானது சிரேஷ்டமானதென வுணர்ந்த நமது கவி சிரேஷ்டராகிய வியாசர் மானிடஜன்ம மெடுத்தவர்களுக்கு இன்றியமையாத மகா பாரதத்தை எழுதினார். இது நாம் எப்படி நடத்தல்வேண்டுமென்பதை நன்கு யெடுத்துக்காட்டி நீதியைப் போதிக்கும் குருவைப்போன்றுளது. குழந்தை, புதல்வன், புதல்வி, தம்பி, தமயன், தாய், தகப்பன் என்னும் நிலைமையிற் செய்யவேண்டுவனவற்றை கப்பீரமாயும் மனோகரமாயு மெடுத்துக் கூறுகின்றது. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சொல்லப்பட்ட நான்கு வருணத்தாரும், இவருட் சேராத பஞ்சமர்களும் யாவரும் நடந்துகொண்டுவரவேண்டிய மார்க்கங்களும் இதில் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. இப்படியே மாதா பிதாக்களிடத்திலும், குருவினிடத்திலும், ஈசுவரரிடத்திலும் காட்டவேண்டிய பக்தி, சகோதரரிடத்தில் அன்பு, பதிவிரதா தருமம், பெரியோர்களிடத்தில் மரியாதை,



விருந்தோம்பல், செய் நன்றியறிதல், செங்கோன் முறைமை முதலிய பல சிறந்த நீதிகளை நன்கு புலப்படுத்துகின்றது. நன்னடக்கைக் குறிய விதிகளைமாத்திரம் எடுத்தெழுதி யிருப்பின் அதனுண்மை அவ்வளவு நன்றாய் விளங்குவதரிது. அதைப் பார்ப்பவரிற் பலர்,

> "சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாஞ்
> சொல்லிய வண்ணஞ் செயல்."

என்னுந் தேவர் குறளை எண்ணி, "சொல்லுவது சுலபம், நடத்தல் கஷ்டமென," அந்நூல் விஷயத்தில் அவர் வாக்கையே பிரயோகிப்பார்போலாவாரேயன்றி அவ்வாறு நடக்க முயலார். அந்தந்த விதிகளைத் தம் வாழ்நாளில் மேற்கொண்டு நடந்துகாட்டியவர்களின் சரித்திரங்களையு முரைத்து நீதிகளையும் எடுத்துக்காட்டினால் அவர்கள் அவ்விதிகளை முன்னிலும் நன்கு கிரகிப்பதுமன்றி நடக்கவும் முயல்வார்கள். ஒருவனுக்கு ஜயாபஜயமும், சுகதுக்கமும், செல்வமும் வறுமையும், அவனது நடத்தையால் வருவன. பிரஹ்லாதன் தன் நன்னடக்கையின் பலனாக ஒரு காலத்தில் திரிலோக சாம்பிராச்சியத்தையு மடைந்திருந்தான். அப்பொழுது இந்திரன் ஒரு வேதிய வேடங்கொண்டு அவனிடஞ்சென்று, சீடனாக அநேக நாளிருந்து அவனுக்கு அதிக பிரீதிவருமாறு ஒழுகிக்கொண்டு வருகையில் பிரஹ்லாதனுக்கு சீடனிடத்தில் அதிக விஸ்வாசம் பிறக்கவே அவனை யழைத்து "உனக்கு வேண்டிய வரத்தைக்கேள், நான் தருகிறேன்," என, இந்திரன் "உன் நன்னடக்கையை யான் விரும்புகிறேன்" என்றான். பிரஹ்லாதன் என் செய்வானினி! தன்னுடைய பிரதானமான இக்குணத்தைத் தானஞ் செய்துவிடுவதனால் யாது விளையுமோ என்னு மச்சமுடையவனா யிருந்தபோதிலும், தான் வாக்களித்துவிட்டபடியால் வேறொன்றுஞ் செய்வதற்கியலாது தடையின்றிக் "கொடுத்தேன்" என்றான். நிகழ்ந்ததைக்குறித்து பிரஹ்லாதன் மனக்கவலையுற்று யோசித்துக் கொண்டிருக்கு மளவில் அவனது தேகத்தினின்றும் ஒரு ஜோதி அருநிழலுருவத்தோடு வெளிப்போந்தது. அதைப்பார்த்து பிரஹ்லாதன் நீ யாரென்ன, அஜ்ஜோதியானது "நான் உன் நன்னடக்கையின் சாராம்சம், நீ என்னை எறிந்துவிட்டாயாதலின் உன்னைவிட்டுப் பிரிந்தேகுகின்றேன் என்றது. சீடனாகிய அந்தப் பிராமணனிடத்து வாசஞ்செய்யப்போகின்றேன்" என்றது. அதன்பின் வேறொரு ரூபம் முன்மாதிரியாகவே வெளித்தோன்றியது. அதை நீ யாரென வினவியபோது அது, "நான்தான் நேர்மை என்னும் பெயர் பெற்றவன், எப்பொழுதும் நன்னடக்கையோடு குடிகொண்டிருப்பவன். அஃதுன்னை விட்டேகவே யானும் புறப்படவேண்டியிருக்கிறது" என்று சொல்லிப்போய்விட்டது. இம்மாதிரியாகவே அவனிடம் குடிகொண்டிருந்த வாய்மை, பொறுமை, வீரம் முதலிய சகல குணங்களும் ஒன்றின்பின் னொன்றாகச் சென்றுவிட்டன. ஐசுவரியம் அவனைவிட்டுப் பிரியும்பொழுது அவனை நோக்கி "ஓ பிரஹ்லாதா! உன் நன்னடக்கையினால் மூன்றுலகினையும் உட்படுத்தி யாண்டனை. அதனை யறிந்து தேவர்களுக் கரசனாகிய ஆயிரக்கண்ணன் பிராமணவேடம் பூண்டு சீடனாய் உன் பிரீதியைச் சம்பாதித்து உன் குணத்தைக் கவர்ந்தான். சிறந்த அறிவும் ஆண்மையும் பொருந்தின பிரஹ்லாதனே! எனக்கும் மற்றவைகளுக்கும் மூலாதாரம் நல்லொழுக்கமாகிய நடையேயன்றி வேறில்லை" எனக்கூறி அக்குணமும் சென்றது. இப்படியே மகாபாரதம் அநேக சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவனும் தான் அறிந்து நடக்கவேண்டிய நானாவித நடக்கைகளைக்குறித்தும் கூறுகின்றது. பகுத்தறிவும் சேர்ந்து ஆறறிவுடைய மனிதனுக்கு, கடவுள், மனிதன், பிரபஞ்சம் இவைகளினுடைய சொரூப முதலிய குணங்களையும் ஒன்றற் கொன்றுள்ள சம்பந்தத்தையு மெடுத்துச் சொல்லி அவற்றை ஒரொழுங்குபடுத்திக்

கூறும் தத்துவநூலை யாராய்வது கடமையாகும். மகா பாரதமும், எல்லாவற்றிற்கு மொரு முதல்வன் உண்டென்றும் அவனைத் தான் ஈசுவரன், பரப்பிரமம் முதலிய பெயரிட்டு வழங்குகிறார்களென்றும், சூரிய சந்திரர் தாம் தினந்தோறும் செய்துவரும் வேலைகளைச் செய்விப்பவனும் அவன்தானென்றும், புல் பூண்டு, செடி, மரம், கொடி, பறவை, மிருகம், ஊர்வன, நீர்வாழ்வன முதலிய பலவகைப் பிராணிகள், தேவர்கள், மனிதர்கள் இவர்களின் உயிருக்குயிராயிருப்பவனும் அவன்தானென்றும்,

"புல்லாகிப் பூவாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருக்ஷமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற வித்தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும்"

பிறங்கிளைத்த உயிருக்குயிராயினன் எனவே இறைவனில்லாத விடமொன்று மில்லையென்றும், அவனெங்கு மிருக்கிறானெனவே எல்லாவற்றிலுமிருப்பது ஒருயிரே என்றும், அவ்வுயிர்தான் கடவுள் என்றும் கூறும் தத்துவ நூலாயிருக்கிறது. இதனால், நமக்கு எல்லா ஜந்துக்களிடத்தும் அன்பும் ஆர்வமும் அருளுமிருத்தல் வேண்டுமென்பது புலப்படுகிறது. எல்லா உயிர்களிடத்தும் ஒரு பொது உயிர் பொருந்தியிருப்பதனால் பிறவுயிருக்கு எவ்விதத் துன்பஞ்செய்தாலும் நாம் நமக்கே துன்பஞ்செய்துகொண்டது போலாகின்றது. ஆதலால் தான் மன்னுயிரையுந் தன்னுயிரைப் போற் பாதுகாத்தல் வேண்டுமென்பது. இதற்கு உசிநரன் அல்லது சிபிச்சக்கரவர்த்தியே சான்றாகும்.

பிரபஞ்ச முழுவதும் தன் ஸ்வரூபத்தை யடையவேண்டுமென்பது ஈசுவரனுடைய இச்சை. அவ்வீஸ்வரனே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்று சொல்லப்பட்ட திரிமூர்த்தி ஸ்வரூபமாயுள்ளவன். அவர்விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே மற்ற தேவதைகள் பாடுபடுவார்களேயன்றி தத்தம் சுயநன்மையைக் கருதியன்று. தேவதைகள், மனிதர்கள்போம் வழியிற் கஷ்டங்களையும் துன்பங்களையும் செய்து பரீக்ஷிப்பார்கள். இவைகளுக்கெல்லாம் பயப்படாமற் தைரியமுடையவர்களாய் அதிக பலமும் நல்லறிவும் பெற்று நேரிய வழிக்கு மானிடர்களைக்கொண்டு வரவேண்டுமென்பது அவர்களெண்ணமேயன்றி மற்றப்படியன்று. மனிதர்களும் மற்றுமுள்ள ஜந்துக்களும் தாமிருக்கும் தேகம் தமக்கு இனியிருக்கத்தகாத நிலைமையை அடைகிறபோது அவ்வுடலைவிட்டு நீங்குகிறார்கள். இதைத்தான் மரணமென்றும், சாவு என்றும் சொல்லுகிறோம். இவ்வுடலம் விழுந்தபிறகு அதிலிருந்த ஆத்மா தான்செய்த இருவினைக்கேற்ப முன்னிருந்த தேகத்திலும் சிறந்ததோர் தேகத்தையாவது இழிந்ததோர் உடலையாவது தனக்கிருப்பிடமாகக் கொள்ளுகிறது. நாம் தரிக்கும் அங்கி நாம் வளர வளர நமக்கு அளவு சரிப்படாது கிழிந்துபோவதுபோல நமதுடம்பும் சிறப்பில் வளரும் அல்லது தேயும் ஆத்மாவுக்கு சரிப்படாது போம்பொழுது அழிந்துபோகின்றது. இக்கருத்தையுட்கொண்டன்றோ

"பாலையாந்தன்மை செத்தும் பாலனாந்தன்மை
செத்துங்
காளையாம் பருவஞ்செத்துங் காமுறு மிளமை
செத்து
மீளலின் மொய்ம்பு செத்து மேல்வருமூப்புமாகி
நாளு நாஞ்சாகின்றாமா னமக்கு நாமழாததென்
னோ!',

என்று குண்டலகேசினியாருங் கூறுவாராயினர். ஒரு பெரிய ரிஷியினிடமிருந்து நந்தினி என்னும் காமதேனுவைக்களவாடிய அஷ்டவசுக்களும், ரிஷியினுடைய சாபத்தால் பூமியில் பிறக்கவேண்டி நேரிட்டதைக்கருதி, ஜாநவி என்னும் கங்கையினிடம் வந்து, தங்களைக் குழந்தைகளாகப் பெற்று தயா என்பவனைத் தவிர மற்றவர்களை உடனே எறிந்துவிட வேண்டுமென்று கேட்டார்களென்பதினால்,



மானிடயாக்கையிலிருப்பது அவர்கட்கு சிறையிலிருப்பதுபோலத் தோன்றியதினாலன்றோ? இவ்வுலகிலுள்ள நாம் ஒரு குழந்தை பிறக்கும்போது அதிக ஆநந்தக்களிப்பிலாழ்ந்து ஒருவன் இறக்கும்பொழுது சற்றேனும் யோசியாது அறிவீனத்தினால் அழுவதையே நம் தொழிலாகக்கொள்ளுகிறோம். இஃது நமது சிநேகிதனை சிறையிலடைக்கும்பொழுது உற்சாகத்துடன் விருந்துண்டு, அவனைச் சிறையினின்று விடுக்கும்பொழுது வருத்தத்துடன் அழுவதையொக்கும். எப்படி அஷ்டவசுக்களையும் கங்கையானவள் மானிட தேகமாகிய கூண்டினின்றும் எப்படி விடுதலை செய்தனளோ, அது போலவே மரணக்கடவுளாகிய யமன் ஆத்மாவை உடலிலிருந்து விடுதலைசெய்கிறார். மரணத்திற்கு அதிபதியான கூற்றுவனைக் கொடியவனென்றெண்ணாது நமக்கு நன்மை நாடுபவனாக எண்ணல்வேண்டும். ஏனெனின், இருந்த உடலிலேயே அழுகச்செய்து ஆத்மாவை உபத்திரவஞ்செய்யாது தக்க காலத்தில் ஆத்மா சிறப்பில் விருத்தியாகும்படி விடைகொடுப்பதினாலென்றறிக.

"தீங்கு வந்தடையுமாறு நன்மைதான் சேரு
மாறுந்
தாங்கள் செய்வினையினாலே தத்தமக் காயவல்லா
லாங்கவை பிறரால் வாரா வமுதநஞ்சிரண்டி
னுக்கு
மோங்கிய சுவையின் பேத முதவினார் சிலரு
முண்டோ?"

என்றபடி நல்லவர்களும் தீயவர்களும் தங்கள் வினையைத் தாங்களே யாக்கிக்கொள்ளுகிறார்கள். நல்லவர்களுக்கு தேவதைகளுடைய உதவியும், தீயவர்களுக்கு அவர்களுடைய விரோதமும் சேருகிறது. ஒருவரைத் தாழ்த்தியும் ஒருவரை யுயர்த்தியும் வைக்கவேண்டுமென்ற எண்ணமோ கடவுளுக்கில்லை. மனிதர்கள் தங்களுடைய வினைப்படி வரவேண்டிய இடத்திற்கு தேவதைகள் அவர்களை செலுத்தவே, அவர்கள் அதற்குத் தக்கபடி ஜன்மமெடுக்கிறார்கள். ஒருவன் தன் முற்பிறப்பில் தனக்கிருந்த நல்லெண்ணம் நற்செய்கை இவற்றுக்குத் தக்கவாறு இந்த ஜன்மத்தில் தக்கவிடத்தில் தக்க குணரூபலாவண்யத்தோடு பிறக்கிறான். தீய எண்ணமும் தீச்செயலுமுடையவன் அதற்குத் தக்கபடி பிறக்கிறான். ஒருவன் தேகமும் அவன் பிறந்திருக்கும் வர்ணாசிரமும் பூர்வகர்மத்திற்குத் தக்கபடிதானிருக்கும். நிஷாதர்களுடைய அரசன் புத்திரனான ஏகலைவன் குருபக்தியினால் சகல அஸ்திர சஸ்திர வித்தைகளைக் கற்றும், ஏகவல்லியனென்று பெயர்பெற்றும், குருவிசுவாசம், ஊக்கம், விடாமுயற்சி முதலியவைகளில் சிறப்புற்றும், தனக்குரியன வல்லாதனவற்றை தன் கையைக்கொண்டு முயற்சிசெய்தமையால் தன் வலக்கைப் பெருவிரலை குருவுக்கு காணிக்கையாகக் கொடுக்கும்படி நேரிட்டது. இதுவும் பூர்வகர்ம தோஷமே யன்றி வேறல்ல.

இப்படி பூர்வகர்ம விசேஷத்திற்குத்தக்கபடியே பாரத யுத்தத்தின்பொருட்டு சுவர்க்கத்தில் தேவர்களெல்லாம் ஒருங்குசேர்ந்து யோசனைசெய்து தேவேந்திர பதவியிலிருந்த சிலரை, பூமியில்போய்ப் பிறந்து காரியத்தை முடித்து, மறுபடியும் சுவர்க்கம் வந்துசேரும்படி உத்திரவிட்டார்கள். இப்படியேவந்து தோன்றியவர்கள்தான் பஞ்சபாண்டவர்களென விசிதமாகிறது. இவர்களுக்குதவியாக மகா விஷ்ணுவும் கிருஷ்ணாவதாரம் செய்ததாகத் தெரியவருகிறது. தம்முடைய ஆதிசேஷனையும் உடன்கொண்டுவந்தார். பலராமர் தான் ஆதிசேஷாம்சம்.

உலகம் தான் போகவேண்டிய நன்மார்க்கத்தினின்று தவறி துன்மார்க்கத்திலே அதிகமாய்ப் பிரவேசித்துப் பாவங்களும் தீமைகளும் அதிகரித்து பூமி தாங்காத நிலைமைக்குவந்துவிடுந்தருணத்தில், தீமையை யொழித்து நன்மையை நிலைநாட்டும் வண்ணம் சர்வேசுவரனே பூத வுருவங்கொண்டு இங்கு பிறப்பதுண்டென்பது வேதத்தில் ஒப்புக்கொள்ளப்

பட்டவிஷயம். இப்பிறப்பிற்குத்தான் அவதாரம் என்று பெயர்.

துஷ்யந்த மகாராஜாவுக்கு சாகுந்தலையினிடமாகப் பிறந்த பரதனுடைய வமிசத்தாரைக் குறித்துச் சொல்லும் சரித்திரமாகையால் பாரதமென்று பெயர். சந்திரகுலதிலகனாகிய சவ்வருணன் சூரியன் மகளாகிய தபதியை நினைந்து வருந்துவதையறிந்த வியாழபகவான் சூரியனிடம் பேசி தபதியை சவ்வருணனுக்கு மணஞ்செய்வித்தார். குருவருளாற் கூடிய மணத்திற்பிறந்த மகனுக்கு 'குரு' என்றே பெயரிட்டார்கள். அவனுடைய நாடு குருநாடு இவன் சன்னியாச ஆசிரமத்தை அதிகமாய் வகித்து ஜப தப முதலியவற்றை நிறைவேற்றிய இடத்திற்கு குருக்ஷேத்திரமென்று பெயர். பாரதசாரத்தில் அங்கங்கே காட்டப்பட்ட சிற்சில சாரமான சங்கதிகளை எடுத்துக் கூறுவோம்.

அஷ்டவசுக்களில் ஒருவராகிய தயா என்பவர் பீஷ்மராகப்பிறந்து தன் பிதா சந்தனுவின் கருத்தை நிறைவேற்ற எண்ணங்கொண்டவராய், தன்னை யேற்றுக்கொள்ளும்படி நின்ற இல்லற வாழ்க்கையையும், சிம்மாசனத்தையும் துறந்து சத்தியவதி என்ற பரிமளகந்தியை தன் தகப்பன் முன்கொண்டு வந்து விடவே, தகப்பன் ஆச்சரியமும் ஆநந்தமுமடைந்து பிள்ளையைப்பார்த்து,

"தந்தையர்க்குதவு முதவியினெனக்குச்
சதமடங்குதவினை, யுனக்கு
மைந்தருக்குதவு முதவியிற்சிறிது
மாதவஞ் செய்திலே னுதவச்,
சிந்தையிற்றுறக்கம் வேண்டுமென்றெண்ணிச்
செல்லு மன்றல்ல துன்னியிர் மேன்
முந்து றக்காலன் வரப்பொரு ளென்றே
முடிவிலா வொருவர மொழிந்தான்."

ஓ! குமாரா! நீ விரும்பினலொழிய மரணம் உன்னை அணுகாதொழிக. பாவசிந்தையென்பது சிறிதேனுமில்லாத சற்புத்திரனே! உன்னுடைய உத்தரவின்பேரில் தான் யமன் உன்னை யணுகுவான்" என்று ஆசீர்வதித்தான்.

அங்ஙனம் தன்னருமைப் புதல்வனை ஆசீர்வதித்து நின்றதும்,

"அம்புவியரசன் மாமனு மரச
னடி பணிந் தவயவத்தழகா
லும்பரும் வியக்கும் கிளியை முன்னிருத்தி
யொடுங்கினன் வாய் புதைத்துரைத்தா
னெம் பெருமானீ கேட்டருளுனக்கே
யிசைந்த மெய்த் தவம்புரியிவனை
வம்பவிழ் மலர்மா தென்பதே யன்றி
யலைஞர்மா மகளெனக்கருதேல்."

என்று வல்லுநர் தலைவன் புகன்றான்.

2. சத்தியவதி பீஷ்மரைப்பார்த்து, விதந்துவாயிருக்கும் அம்பிகை அம்பாலிகை என்னு மிருவரையும் மணந்து புத்திரபாக்கியம் பெற்று சந்தானு வம்சம் இடையறுவண்ணம் காப்பாற்றும்படி வேண்ட, அவர் தமது சிற்றன்னையை நோக்கி "அம்மா, தாங்கள் சொல்வது சரிதான். தர்மசாஸ்திரத்திற்கும் ஒத்ததுதான். ஆயினும், பிரமசரியத்தையே நான் எப்பொழுதும் விரதமாகக்கொண்டு ஒழுகுவேனென்று கூறிய சபதம் உங்களுக்குத் தெரிந்ததுதானே. திரிலோகசாம்ராஜ்ஜியம் வருவதானாலும், அல்லது அதினும் சிறந்த பதவி கிடைக்கிறதாயிருந்தாலும், அவற்றை யொரு பொருளாக மதித்து என் சபதத்திற்கு விரோதமாய் நடக்க எண்ணுவேனோ? ஒருக்கால் மண் தன் மணத்தை மாற்றினும் மாற்றும்; ஜலம் தன் குளிர்ச்சியை நீக்கினும் நீக்கும்; ஒளி தன் உருக்காட்டுமியல்பினை ஒழிக்கினும் ஒழிக்கும்; வளி தன் பரிசம் மறைக்கினும் மறைக்கும்; அக்னி தன் சூட்டை யகற்றினு மகற்றும்; ஞாயிறு தன்னொளி யிழக்கினு மிழக்கும்; திங்கள் தன் தண்கதிர்விலக்கினும் விலக்கும்; விருத்திரனை வென்றோன் தனது ஆண்மையை இழக்கினும் இழக்கலாகும்; தர்மதேவதை நடுவு நிலைமைகுன்றி ஒருபுடை சாரினும் சாரும். யானோ சொன்ன சொற் பிறழேன், தாயே! என்னை மன்னிப்பீராக" என்றான்.



3. துரோணரிடத்தில் வில்வித்தை கற்ற மாணவர்களின் அறங்கேற்றநாளில் கர்ணனை துரியோதனன் அங்கதேசாதிபதியாக்கிய சமயத்தில், அந்நன்றிக்கறிகுறியாய் "நம்முடைய நட்பு நமன் ஒருவன் தவிர மற்றெவராலும் மற்றெதனாலும் பிரிக்கமுடியா தொழிக" என்று கர்ணன் சபதம் செய்தான்.

4. பாஞ்சால தேசத்து அரசனாகிய துருபதனை துரோணருடைய உத்திரவுப்படி அர்ச்சுனன் தேர்க்காலில் கட்டிக்கொண்டு வந்துவிட, துரோணர் அவனைப்பார்த்து, "அரசனல்லாதவன் எப்படி அரசனுக்குச் சிநேகனெனக் கூறிக்கொண்டு வரலாம்!" என்று என்னை இகழ்ந்தாயில்லையோ? நம்மிருவருடைய பாலிய சிநேகம் என்றைக்கும் நிலைபெற்றிருக்க வேண்டாமா? மேலும் நாம் வாசிக்கும்போதே எனக்குப் பாதி ராஜ்ஜியம் கொடுப்பதாக மனமகிழ்வுடன் வாக்குதத்தம் செய்தாயில்லையோ? பிறகு என்னுடன் பேசுவதற்கு நாணினையன்றோ? ஓ! க்ஷத்திரியஸிம்மமே! இப்பொழுது உன் உயிருக்கு பயம் வேண்டாம். அஃது உன் பகைஞனாகிய என் கையிற்றானிருக்கின்றது. இப்பொழுதாவது முன்னிருந்த சிநேகிதத்தை நினைத்து அதை மறுபடி விருத்திசெய்துக்கொள்ள எண்ணமுண்டோ உனக்கு? உன்னுயிருக்கு ஹானி வராது பயம்வேண்டாம். பிராமணர்களுக்குரிய முக்கியகுணம் மற்றவர் குற்றங்களை க்ஷமித்து அவரைக்காத்தலே. நீ இப்பொழுது தோற்றுப்போனதினால் உன்னுடைய ராஜ்ஜியம் முழுவதும் என்னுடையதே. எனக்குவந்த குரு தக்ஷிணை இது. யான் விரும்பின் முழுவதையும் உனக்குத்திருப்பிக்கொடுத்துவிடலாம். ஆயினும் உன் சொல்லே உனக்குக்கூற்றாய் நிற்கின்றது. ஆயினும் நான் பாதி இராஜ்ஜியத்தை வைத்துக்கொள்ளுகிறேன்.

"அன்றெனக்கு நீ யிசைந்தவவனிபாதி யமையுமற்
றின்றுனக்கு நின்றபாதி யான்வரைந்து தருகுவன்
குன்றெனக்கு விற்றிலங்கு கொற்றவாகு வீரனே
யுன்றனக்கு வேண்டுமென்னவு யிரும்வாழ்வு முதவினேன்."

உனக்குப்பாதி கொடுக்கிறேன். வளப்பம் பொருந்தியதும் பாகீரதியின் தென்புறமுள்ளதுமான தேசத்திற்கு நீ அரசனாயிரு; அதற்கு வடக்கேயுள்ள இராஜ்ஜியமெல்லாம் என்னுடையதாக விருக்கட்டும். நான் பேருக்கு மாத்திரம் அரசனாயிருந்தாற்போதும் உன் சிநேகிதம்தான் வேண்டும் உன்னுடைய விருப்பம் யாது? என்றனர். துருபதன் உயிர் நின்றதே போதுமெனத் திரும்பினான்.

5. துருபதன் தன்னூர் சேர்ந்து, தன்னை தேர்வண்டிக்காலில் கட்டிக்கொண்டுபோன விஜயன் கழுத்தைக்கட்ட ஒரு கன்னிகையையும் தன்னை அவமானப்படுத்திய துரோணர் கழுத்தை வெட்ட ஒரு வீரனையுமடைய புத்திரகாமேஷ்டியாகஞ் செய்வித்தான். துரோணரை பதினைந்தாநாட் பாரதயுத்தத்திற் பூர்த்தி செய்தவனை திஷ்டத்துய்மனையும், அசுரர் குலமழியச் சீதை தோன்றியவாறு அரசர் குலமுடியத்தான் தோன்றித் தன் குழலும் அவர் தம்குலமும் ஒருங்கே முடித்தவளாகிய திரௌபதையையும் அடைந்தான்.

6. திரௌபதையின் சுவயம்வரத்தில் அர்ச்சுனன் வில்லை எடுத்து சிரமமில்லாமலே நாணேற்றி பாணமும் தொடுத்து மச்சயந்திரம் அற்றுவிழுமாறு விடுத்தனன். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. நாற்புறமும் வாத்தியகோஷ முழங்கியது.

"பூமழை சொரிந்தார் விண்ணோர்
பொன்மழை பொழிந்தமேகம்
பாமமா கடல்களெல்லாம்
பன்மணி துலியார்த்த
கோமுனி கணங்களெல்லாங்
கூறினவாசு கொற்ற
நாமவேல் விழிப்பாஞ்சாலி
நல்வரந்தானென்னு."

என்று சிறப்பித்தது வெகு கம்பீரமாயிருக்கிறது.

7. இந்திரப்பிரஸ்தத்தில் மயனால் ஒரு மாளிகை கட்டப்பட்ட பிறகு அவ்விடத்திற்கு வந்த நாரதர் தருமரைநோக்கி அநேகம் கேள்

விகள் கேட்டாரென்று ஆரம்பித்து, தர்ம சாஸ்திரப்பிரகாரம் அரசன் பிரஜைகளுக்கெல்லாம் அதிபதி; அவன் விஷ்ணுவின் அம்சமென்று சொல்லப்படுவன். அவனுடைய கடமைகளோ எண்ணிறந்தன. அவன் நல்லவனாயிருந்தால், குடிகளும் க்ஷேமமடைவார்கள். மாந்தர் செய்வது மன்னனைச்சேரும். அப்பா, தர்மா! உன் காலத்தைத் தினந்தோறும் தர்மார்த்த காம மோக்ஷ சம்பாதியத்திற் கழித்துக்கொண்டு வருகிறாயா? உன்னிடம் துன்மந்திரிகளல்லாத நற்குணம், நற்புத்திவாய்ந்த மந்திரிகளை வைத்திருக்கின்றாயா? உன்னுடைய சைனியங்களுக்கு மாதந்தோறும் சம்பளம் சரியாய்ச் சேர்ந்துகொண்டு வருகிறதா? உனக்காக பற்பல யுத்தங்களில் உயிரைத்தந்த இராணுவவீரர்களின் சம்சாரங்களை ஆதரித்து வருகின்றாயா? யுத்தத்தில் வென்ற மாற்றலரை இரக்ஷித்து வருகின்றாயா? எல்லோரும் உன்னை எளிதில் வந்து பார்த்தல் கூடுமா? குடிகள் உன்னைத் தங்கள் தந்தைபோற் பாவித்து உன்னையணுகும்படி வைத்திருக்கின்றாயா? உன் வரும்படியில் எவ்வளவு கூறு செலவு செய்கிறாய்? வேளாளர்களெல்லாம் சுகமாயிருக்கிறார்களா? மழையில்லாமற்போனால் உன்னாடு வளங்குறைந்து போமாகையால், பற்பல விடங்களிலும் ஏரிகளும் குளங்களும் ஏற்படுத்தி வைத்திருக்கின்றனையா? விவசாயிகளுக்கு வேண்டிய வித்து முதலியவைகளை சேகரித்துத்தந்து வருகின்றனையா? சுயநலம் பாராட்டியேனும், அகங்காரத்திலேனும் அநீதி நடந்துகொண்டுவருகிறதா? உன் மந்திரிகள் இலஞ்சம் வாங்காதிருக்கின்றார்களா? வரிகளும் அநியாயமாய்ப் போடப்படாதிருக்கின்றனவா? குருடர்களையும், முடவர்களையும், ஊமைகளையும், அங்கவீனர்களையும், சிநேகிதரற்றவர்களையும், சன்னியாசிகளையும், தகப்பன் பிள்ளையைப் பாதுகாப்பதுபோற் காப்பாற்றி வருகின்றனையா? அரசே! தூக்கம், சோம்பல், பயம், கோபம், தாமசம், அதைரியம் என்பனவாய அறுவகை தோஷங்களையும் அகற்றினாயா? என்று வினவினாரென்றும், தருமர் அவரை வணங்கி இனி இவற்றில் அதிக கவனம் வைப்பதாகச்சொன்னார் என்றும் எழுதியிருப்பது வெகு நன்றாயிருக்கிறது.

8. கடவுளால் கொடுக்கப்பட்ட பொறிகளைந்தினுள் தலை நின்றதாகிய வாய், அவனையும் அவனருள்வழிப்பட்ட சான்றோரையும் புகழ்ந்து துதித்தற்கே யமைந்ததாயிருக்க, அதனையுணராது அநேகர் மதி மயங்குதல் என்னே! என்று கூறியதன்றி,

"யாகாவாராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்றும்,
"ஆக்கப்படுக்கு மருந்தை வாய்ப் பெய்விக்கும்
போக்கப்படுக்கும் புலை நரகத் துய்ப்பிக்கும்
சாக்கப்படுவனவு மிந்திரியு மைந்தினு
நாக்கல்ல தில்லை நனி வெல்லுமாறே,"

என்றும் 'வளையாபதி'யிலிருந்து எடுத்துக் காட்டியிருப்பது வெகு சமயோசிதமாயிருக்கிறது.

சூதைப்பற்றி எடுத்துக்காட்டப்பட்ட பாடல்கள்.

1. உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ்சிதைக்கு—மருவு
மொருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து.

2. அறத்தை வேர்கல்லு மருநரகிற் சேர்க்குந்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கு—மறத்தையே
பூண்டு விரோதஞ் செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்க
ளண்டுவரோ வென்றாற்றெரிந்து.

3. ஐயநீ யாடுதற்கமைந்த சூது மற்
றெய்து நல் குரவினுக்கியைந்த தூதுவெம்
பொய்யினுக்கருந்துணை புன்மைக்கின்றதாய்
மெய்யினுக்குறுபகை யென்பர் மேலையோர்.

4. என்னுக சூதினை யிகலி வென்றதூஉங்
கன்ன மேற் கொடுவலை கரந்து வெட்டுவ
ருள்ளுற வமைத்திடு முனைவை யோர்கிலாப்
புள்ளின மருந்தின போலும் மென்பவே.



சத்தியந் தவறலாகாது என்பதைபற்றி.

5. வேலைகரையிழந்தால் வேத நெறி பிறழ்ந்தான்
ஞான முழுது நடுவிழந்தாற்—சில
மொழிவரோ செம்மை யுரை திறம்பாச்செய்கை
யழிவரோ செங்கோலவர்.

9. பாண்டவர்கள் சூதினால் சகலத்தையும் தோற்று வனம் சென்ற மாதிரியைப்பற்றி திருதராஷ்டிரன் விதுரரைக்கேட்க, அதற்கவர் அரசனை நோக்கி, ஐயா! தருமனோ எப்பொழுதும் அன்பும் அருளுமுள்ளவன்: அத்தகையனுக்கு இப்பொழுதிருக்குங் கோபாக்கினியால் விழிக்கெதிர் நின்ற பொருள்கள் அழிவுறுமெனப்பயந்து தன் முகத்தை மூடிக்கொண்டார். பீமனோ தன் விரோதிகளை தன் புயபலத்தைக்கொண்டு எப்பொழுது ஒழித்து பழிக்குப்பழி வாங்கலாமென்று தன் புயத்தைப் பார்த்துக்கொண்டே சென்றான். அர்ச்சுனன் தான் யுத்தகாலத்தில் பொழியப்போகிற சரமாரிக்கறிகுறியாய் மணலை வாரி வீசிக்கொண்டு சென்றான். சகாதேவன் கஷ்டம் வருங்காலத்து இன்னானெனப் பிறர் தன்னை யறியாதவாறு முகத்தில் மண்ணையிட்டுக்கொண்டு போனான். நகுலன் அன்பினால் எவருடைய இதயத்தையுங் கொள்ளைவண்ணம் தன் தேக முழுவதும் மண்பூசிக்கொண்டு சென்றான். துரோபதை தன் விரோதிகளின் மனைவியர், சில்லாண்டு சென்ற பின்னர், அதேவழியில் அவர்தம் புருஷருக்கழவேண்டி வருமே என்பதை எண்ணியவளாய் தன் கூந்தலினால் முகத்தை மறைத்துக்கொண்டு சென்றனள். தௌம்யர், பிரேதத்துடன் செல்லும் புரோகிதர் உச்சரிக்கவேண்டிய சாமவேதத்தையுச்சரித்துக்கொண்டு போனாரென்பதாகக் கூறியதாக முடித்ததும் வெகு அழகாயமைந்திருக்கிறது.

---

## GLEANINGS FOR AN INDIAN KINDERGARTNER.

## சிறுகுழந்தைகளுக்குச் சொல்லும் சிறு கதைகள்.

குழந்தைகளுடைய சுபாவத்தை யறிந்து கடவுள் கிருபையால் அவர்களுக் கியற்கையா யமைந்து உள்ளடங்கிக் கிடக்கும் சக்திகள், குணங்கள் முதலியவை நல்வழியில் விர்த்தியாகி வளரும்படிக்கு உதவிபுரிந்தும், சகவாச தோஷத்தாலும் மற்றவிதத்தாலும் ஏற்படக்கூடிய தீக்குணங்கள் வளர்ந்து அவர்களிடத்து இயல்பாயமைந்த நற்குண நற்சுபாவங்களை யமுக்கிவிடா வண்ணம், அவைகளைக் களைபிடுங்குவது போல் தீதற நீக்கியும், குழந்தைகளிடத்து தேகமனோவிர்த்தியும் ஆத்மவிர்த்தியும் ஒன்றோடொன்று பொருந்த உண்டாகப் பரிபாலித்து வருவது (கிண்டர்கார்டன் என்று வழங்கும்) 'சரியாய்ப் பிள்ளை வளர்க்கும்' முறையாமென்று இப்பத்திரிகையில் பன்முறையும் எடுத்துச் சொல்லி விளங்க வைத்திருக்கிறோம். இத்தலைப்பின் கீழ் குழந்தைகளை முறைப்படி வளர்க்கச் சாதனமாகும் வழிவகைகள் நம்முடைய முன்னோர்களுக்குத் தெரியாமலிருந்ததில்லையென்றும், நமக்குள் சாதாரணமாக வழங்கும் சிறு குழந்தைகளுக்குச் சொல்லும் பாட்டுகள், கதைகள், விளையாட்டுகள் அநேகம் இப்பொழுது இத்தேசத்தில் அனுஷ்டானத்துக்கு வந்து கொண்டிருக்கும் கிண்டர்கார்டன் முறைக்கிசைய உபயோகிக்கத் தகுந்தவைகளென்றும் காட்டி, சிறு குழந்தைகளைப் பயிற்சி செய்து வளர்ப்பதில் இல்லமும் பள்ளியும் இசைந்துழைக்க வேண்டிய தவசியமாதலால், ஏற்கனவே ஹிந்துக்கள் இல்லத்தில் ஸ்திரீகளுக்குத் தெரிந்துள்ள பழமையான பாட்டு, விளையாட்டுகளைப் பள்ளியி லுபயோகித்து அவற்றால் குழந்தைகளைப் பயிற்சி செய்வதிலுண்டாகும் சாதகங்களை யெடுத்துரைத்தால் நலமா

யிருக்குமென்பதைப் பெற்றோர், பள்ளிக்கூட உபாத்தியாயர் இருவர்க்கும்பட வற்புறுத்த எண்ணினோம். அவ்வெண்ணப் படி, இங்கு சிறுகுழந்தைகளுக்கு விசாரிக்கும் சக்தியுண்டாகும்படி செய்வதற்கு ஆஸ்பதமான இரண்டு சிறு சம்பாஷணைகளைப் பிரசுரிக்கிறோம். இவ்விரண்டும் தமிழ் நாடெங்கும் வழங்கிவரும் பழமையான குழந்தைப் பேச்சுகள். சிறு குழந்தைகளுக்கு விசாரணை சக்தியுண்டாகச் செய்ய வேண்டுமென்றால் அது எப்படி சாத்தியம்? அவர்களுக்கு என்ன தெரியும்? என்று பலர் முதலில் இந்த வழியில் ஐயமுற்று ஆக்ஷேபஞ் சொல்வார்கள். அப்படி அவர்கள் சொல்வது, குழந்தைகளின் மனோபாவ இயல்லை யறிய வெண்ணாத் தோஷத்தாலன்றி வேறல்ல. அவர்கள் தங்களிடத்துள்ள தெரியாமையை யுணர்ந்து கொஞ்சம் விஷய ஆராய்ச்சி செய்து யோஜிக்க மனம் வைப்பரேல் பின்வரும் சம்பாஷணையினால் குழந்தைகள் மனதிலுண்டாகும் பயனை அறிந்து கொள்ளக்கூடியவராவர். "அம்புலிமானே" என்ற முதல் விஷயம் ஒரு சிறு குழந்தை நிலாவெறிக்கும்பொழுது ஆகாயத்தை அண்ணாந்துப் பார்க்க அங்கே சந்திரன் ஓடுகிறாப்போல் காணும் தோற்றத்தைக் கண்டு அந்தச் சந்திரனோடு பேசுகிற பாவனையாகச் சொல்லும் பேச்சு. குழந்தைகளை வைத்துக் கொண்டு விளையாட்டுக் காட்டும் தாயோ, மற்றவர்களோ, குழந்தைக்குச் சந்திரனைக் காட்டி அது ஓடுகிறதைக் கண்டு "எங்கே போறே" என்று கேட்கச் சொல்லிக்கொடுத்து, உடனே கேள்வியும் பதிலுமாக பேச்சைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டுபோவார்கள். இதனால் குழந்தைக்கு நிலாக்காலத்தில் ஆகாயத்தினழகையும் சந்திரனது சந்தோஷ முண்டுபண்ணும் தோற்றத்தையும் கண்டு மகிழக் காட்டிக் கொடுப்பதோடு, குழந்தை சந்திரனோடு பேசுகிற பாவனையாகச் சொல்லும் பேச்சில் அக்குழந்தை மனோபாவ சக்தியைத் தூண்டிவிட்டு, காரண காரியங்களைப்பற்றி விசாரிக்க ஒரு ஆசையுமுண்டுபண்ணும்படி யிருப்பதையறிந்துணரத் தக்கவர்கள் இப்பாட்டைக் கற்பித்தவர்களுடைய சூக்ஷ்மபுத்தியைக் கண்டு வியக்காமலிரார். ஆகாயத்தில் சந்திரனைக் காட்டவே, சந்திரன் ஆகாயத்தில் போய்க் கொண்டிருப்பதைக்கண்டகுழந்தை "எங்கேபோறே" என்று கேட்கிறது. அதற்கு சந்திரன் "மலையான் குளத்துக்குப் போகிறேன்" என்று சொல்ல, அங்கு ஏன் போகிறாய், என்று குழந்தை கேட்கிறது; குளத்திற்கு "மண்ணெடுக்கப் போறேன்" என்று பதில்சொல்ல, அதன்மேல் "மண் என்னத்திற்கு ? என்று குழந்தை கேட்கிறது; "செப்புச் செய்ய" என்று பதில் கிடைத்தும் அதோடு நிற்காமல் குழந்தை தனக்கு இயல்பாயமைந்துள்ள ஆராய்ச்சி சக்திதூண்டப்பட "செப்பு என்னத்திற்கு ?" என்று மேன்மேலும் கேட்டுக்கொண்டு போகிறது; கடைசியில் "குழந்தைஎன்னத்திற்கு?" என்கிற கேள்வி பிறக்கும்பொழுது அதற்குச் சொல்லும் விடை குழந்தை தன் அனுபவத்தில் அறிந்ததாயிருப்பதால், அது கேட்டுக் கொண்டுபோன கேள்விகள் அதுமட்டில் திர்ப்திகரமாக முடிந்ததைப்பற்றிச் சந்தோஷித்துக் குதித்து விளையாட ஆரம்பிக்கிறது பாருங்கள்.

இரண்டாவது விஷயமான "காகம் காகம் எங்கே போனாய்?" என்பதும் இதே மாதிரியானதுதான். இராவில் சந்திரனைக் காட்டிப் பேச்சுக் கொடுத்தால், பகலில் காகம் ஒன்று எதிரே இருப்பதைக்காட்டி அதோடு குழந்தை பேச்சுக்கொடுக்கும் மாதிரி செய்யப்பட்டுள்ளது இந்தப் பேச்சு. இதில் காகம் சற்று எதிரே உட்கார்ந்து ஓடி ஓடிப்போய் பின்னும் வருவதால், அதை நோட்டமிட்டு "காகம் காகம் எங்கே போனாய்?" என்ற முதற்கேள்வி போடப்பட்டிருக்கிறது. மேலே காட்டிய சாதகங்களோடு குழந்தைகள் தங்கள் கண்முன் காணும் விஷயங்களை நோட்டமிட்டு அதன் மேல் விஷயமாராயக் கேள்விகள் போடும்படி பழக்குவிக்கப்படுவதும் இதில் நன்றாய்ப் புலப்படும். இவ்வளவோடு நாம் மேலே சொன்ன இரண்டு பாட்டுகளையும் கீழே பிரசுரிக்கிறோம். இந்த மாதிரி சிறுவர்கள் சொல்லும் பாட்டுகள் விளையாட்டுகளை யெழுதியனுப்பும் சிறுவர்களுக்கு அவர்களனுப்பும் பாட்டு நல்லதாயிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டால் அவர்களுக்குபயோகமான சிறு புஸ்தகம் ஒன்று இனாமளிக்கப்படும். இதை விவேகசிந்தாமணியை வாசிக்கும் நாட்டுப்புறத்துச் சிறுவர்கள் சிறுமிகளெல்லாம் கவனித்து அவரவர்களுக்குத் தெரிந்த பாட்டுகளை யெழுதியனுப்பி வெகுமதி பெறப்பார்ப்பார்களென்று நம்புகிறோம்.



### I. "அம்புலிமானே."

அம்புலிமானே ஆடியசிற்றப்பா எங்கெங்கே போறே ?
மலையான் குளத்திற்குப் போறேன்.
ஏன் மலையான் குளத்திற்குப் போறாய் ?
மண்ணெடுக்கப் போறேன்.
மண் என்னத்திற்கு ?
செப்பு பண்ணுவதற்கு.
செப்பு என்னத்திற்கு ?
பணம் போட.
பணம் என்னத்திற்கு ?
மாடுவாங்க.
மாடு என்னத்திற்கு ?
சாணி போட.
சாணியென்னத்திற்கு ?
வீடு மெழுக.
வீடு என்னத்திற்கு ?
பிள்ளை பெறுவதற்கு.
பிள்ளை என்னத்திற்கு ?
எண்ணெய்க் குளத்திலே துள்ளிவிளையாட
நச்சம்பாயிலே இருந்துவிளையாட
கோரைப்பாயிலே குந்திவிளையாட
தாழம்பாயிலே தவழ்ந்து விளையாட
ஓலைப்பாயிலே ஓடிவிளையாட.

---

### II. "காகம் காகம் எங்கேபோனாய் ?"

காகம் காகம் எங்கே போனாய் ?
இரைமேயப்போனேன்.
இரையென்ன எடுத்தாய் ?
வைக்கோல் எடுத்தேன்.
வைக்கோல் என்ன செய்தாய் ?
மாட்டுக்குப் போட்டேன்.
மாடு என்ன கொடுத்தது ?
சாணி கொடுத்தது.
சாணியென்ன செய்தீர்?
விரட்டி தட்டினேன்.
விரட்டி என்ன செய்தாய் ?
குயவனுக்குக் கொடுத்தேன்.
குயவன் என்ன கொடுத்தான்?
தோண்டிகொடுத்தான்.
தோண்டி என்னசெய்தாய் ?
கிணற்றில் போட்டேன்.
கிணறு என்ன கொடுத்தது ?
ஜலம் கொடுத்தது.
ஜலம் என்ன செய்தாய் ?
பூஞ்செடி மாஞ்செடிகளுக்கு வார்த்தேன்.
பூஞ்செடி மாஞ்செடி என்னகொடுத்தது ?
பூஞ்செடி பூவும் மாஞ்செடி மாம்பழமும் கொடுத்தது.

---

### விநோதக் கூற்று.

உபாத்தியாயர் :—"மனக் கணக்கு. கேட்கிறவன் மட்டுமே பதில் சொல்ல வேண்டியது. கவனியுங்கள்: ஒருவன் கோதுமைமா 2-அணா 6-பை; சர்க்கரை 1-அணா 6-பை; நெய் 6-அணா; பாதுமைப் பருப்பு 6-பை; ஏலக்காய் 3-பைசா; இவை வாங்கினான். எல்லாம் சேர்ந்தால் என்ன ஆகும்? குப்பா! நீசொல்.

துப்பன் :—பேஷான அல்வா, ஸார்.

உபா :—(சிரித்து) எவ்வளவடா ஆகும் மடையா? என்ன ஆகுமென்றா கேட்டேன்?

துப் :—கட்டத் தட்ட ஓர் சேர் ஆகுமா, ஸார்?

உபா :—கழுதை! எப்போதும் தின்பதிலேயே எண்ணம். பணம் எவ்வளவடா ஆகும் என்றால்?

துப் :—அல்வா மட்டும் நன்னா இருந்தால் சேர் ரூ 1—8—0, ஸார். "விவேகோதயம்,"

## CHARACTER SKETCH : SIR THOMAS MUNRO.

### குணவலி விளக்கம்.

### ஸர் தாமஸ் மன்றோ.

(வைகாசி௴ சஞ்சிகை 52-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுவரையிலும் ஏறக்குறைய 28-வருஷங்களாய்க் கொஞ்சமேனும் ஒய்வு ஒழிச்சல இல்லாமல் குடிகளுடைய நன்மையையே நாடி உழைத்து வந்ததில் இவருக்குத் தேகம் கொஞ்சம் பலஹீனமாகவே, தாய் தந்தையர் முதலானவர்களைப் பார்க்கச் சீமைக்குப் போக வேண்டுமென்று எண்ணமுண்டாயிற்று. ஆனால் இதுவரையில் தன் பெற்றோர்களை மறந்திருந்தாரோ? இல்லை. அவர்களுக்கு வேண்டுமான பொருள் அப்போதைக்கப்போது அனுப்பிக் கொண்டிருந்ததோடுகூட, அவர்கள் வசிப்பதற்கு வசதியான ஓர் வீடும் வாங்கிக்கொடுத்து, வறுமையிலிருந்தும் விடுவித்துச் சௌக்கியமான ஸ்திதியில் வைத்திருந்தார். 1867-௵ அக்டோபர்௴ தன் கலெக்டர் வேலையை ராஜினாமாக் கொடுத்துவிட்டுச் சீமைக்குப் பிரயாணமாய் அவ்விடம் 1868௵ ஏப்ரல்௴ போய்ச் சேர்ந்தார். சேர்ந்தும அவர் ஆவலுடன் எண்ணிப்போன காரியம் கைகூடாமற் போயிற்று. அவர் இந்தியாவைவிட்டுப் புறப்படும் சில மாதங்களுக்கு முன்னதாகவே அவர் தாயார் தேகவியோகமடைந்து விட்டாள். மன்றோ அவர்கள் உத்தியோகத்தில் மேன்மேலும் பெருமைப்பட்டு வருவதை அதிக ஆவலுடன் கேட்டுக் களித்து வந்த அவர் தகப்பனாரோ இப்போது விர்த்தாப்பியத்தால் மெய் தளர்ந்து மனோதிடனற்றவரா யிருந்தார். ஆகவே தனது அருமைத் தாய் தந்தையரோடு குலாவிக் குதூகலிக்க வகையில்லாமற் போயிற்று. இவர் இங்கிலாந்தில் இருக்குங் காலத்தில் இந்தியாவில் நிலத்தீர்வை, நியாய விசாரணை, போலீசு முதலான முக்கியமான விஷயங்களை சரிவர நடத்த ஏற்பட்டுள்ள துரைத்தன விசாரணைகளைக் குறித்துப் பார்லிமெண்டில் கேள்வியுண்டாகவே, அவ்விடத்தில் தாமஸ் மன்றோ அவர்களால் சொல்லப்பட்ட விஷயங்களே அவருடைய விஸ்தீரண நோக்கத்திற்காகவும், அவர் விடைகளின் தீவிர யுக்தி சாதுரியத்திற்காகவும் மற்றவர்கள் எடுத்துக்காட்டிய விஷயங்களைக் காட்டிலும் மேலாகக் கொள்ளப்பட்டன. இவர் சீமையில் 6-வருஷகாலம் இருந்த பிற்பாடு, இந்தியாவில் நியாய விசாரணை ஏற்பாடுகள் விஷயமாய்த் தீரவிசாரித்து அதைச் சீர்திருத்தும்படி பார்லிமெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு கமிஷனுக்கு, அக்கிராசனாதிபதியாய் நியமிக்கப்படவே 1874-௵ ஜூன்-௴ சீமையைவிட்டுப் புறப்பட்டு செப்டெம்பர்௴ சென்னை வந்து சேர்ந்தார். புறப்படுவதற்குச் சில மாதங்களுக்குமுன் இவருக்கு கலியாணம் ஆயிருந்தபடியால் மன்றோ துரைசானியும் கூட வந்தார். மேற்குறித்த கம்மிஷனில் விசேஷ முயற்சி எடுத்துக்கொண்டு நியாய விசாரணையைக் குறித்த காலத்திற்குள்ளாகவே செய்து முடித்தார்.

பிற்பாடு, பூனாவில் நடந்த உடன்படிக்கையின் பிரகாரம் பேஷ்வாவால் கம்பெனியாருக்கு விடப்பட்ட தென் மகாராஷ்டிர தேசத்தின ஓர் பாகத்திற்கு கர்னல் மன்றோ கம்மிஷனராக அனுப்பப்பட்டார். டார்வாருக்குப் போய் வேலையை ஏற்றுக்கொண்ட கொஞ்சகாலத்திற்குள், பேஷ்வாவுடன் நடந்த உடன்படிக்கையின் பிரகாரம் 181( ௵ அக்டோபர்௴ சந்தூர் ராஜ்ஜியத்தைக் கைப்பற்றும்பொருட்டு அவ்விடத்திற்குப் படையெடுத்துப்போனார். இவர் வரவைக்கண்ட சந்தூர் ராஜன் இவரை தஞ்சமென்று அடையவே அவனிடத்தில் உடன்படிக்கை செய்துகொண்டு அவனைத் திரும்பவும் ராஜ்ஜியத்தில் ஸ்தாபிக்கவும ஏற்பாடு செய்தார். இதற்குள் பேஷ்வா மறுபடியும் போர் துவக்கினதால் அவன் நாட்டின் பேரில் மன்றோ படையெடுத்துச் செல்லவேண்டியதாயிற்று. 1818௵ ஜனவரி௴ இவர் பேஷ்வாவினுடைய அரணான ஸ்தானங்களில் முக்கியமானதான நடாக், தாமல், ஹூப்ளி முதலான இடங்களைக் கைப்பற்றிக்கொண்டார். பிற்பாடு ஏப்ரல்௴ பேஷ்வாவின் முக்கிய ராணுவஸ்தலமாகிய பெல்காமையும், மேமாதத்தில் ஷோலாப்பூரையும் பிடித்துக் கொண்டார். ஷோலாப்பூர் பிடிபடவே பேஷ்வா மனம் தளர்ந்து கம்பெனியாரிடத்தில் அடைக்கலமானான். ஆகவே தென் மகாராஷ்டிரம் முழுவதும் கம்பெனியார் ஆட்சிக்குள் வந்துவிட்டது. மன்றோ இந்த ராஜ்ஜியத்தைக் கைப்பற்றினதோடுகூட வெகு சீக்கிரத்தில் அவ்விடத்தில் நீதியான ஆட்சியும், குடிகளுக்குள் ஓர் அமைதியும் உண்டாக்கி அதிக கீர்த்திப்பிரதாபங்கள் பெற்றார். இவர்பட்ட சிரமத்தில் தேகசௌக்கியம் கெட்டு பலஹீனமடையவே தன்வேலையை ராஜினாமாக் கொடுத்துவிட்டு சீமைக்குப்போக பெங்களூர் மார்க்கமாய்ச் சென்னைக்குச் சென்றார். இப்போது இவருக்கு 'ஜெனரல்' பட்டமும அமைந்தது.



சென்னையை விட்டு 1819-ம் வருஷம் ஜனவரி மாதம் தாமஸ் மன்றோவும், மன்றோ துரைசானியும் புறப்பட்டுப்போனார்கள். போகும் வழியில் மன்றோ சீமாட்டிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ஜூன் மாதக்கடைசியில் எல்லோரும் இங்கிலாந்தை அடைந்து தங்கள் சுயதேசமாகிய ஸ்காட்லாந்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இவருடைய கீர்த்தியோ இவருக்கு முன்னால் பார்லிமெண்டு சபைக்கு எட்டி, அவ்விடத்தில் இவருடைய சாமர்த்தியத்திற்காகவும், புத்திவலிமைக்காகவும் மிகவும் புகழ்ப் பெற்று ஹியூ எல்லியட்துரை யவர்களுக்குப் பிற்பாடு சென்னை கவர்னர் வேலைபார்க்கத் தகுந்தவர் இவரே என்று நிச்சயிக்கப்பட்டது. மன்றோவுக்கு இந்தியாவுக்குப் புறப்படுமுன் 1818-ம் வருஷம் அக்டோபர் மாதம் 'கம்பானியன் ஆப் தி பாத்' (C. B.) என்னும் பட்டமும், 1819-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 'மேஜர் ஜெனரல்' என்னும் அந்தஸ்தும், கவர்னர் வேலையை ஏற்றுக்கொண்ட பிற்பாடு 'கே. ஸி. பி.' (K. C. B.) பட்டமும் கொடுக்கப்பட்டன. கம்பெனியின் 'டைரெக்டர்களால்' இவருக்குப் பிரயாண விருந்தளிக்கப்பட்டபோது, இவர் செய்த நன்மைகளையும், இங்கிலாந்துக்குச் செய்த உபகாரங்களையும் குறித்து அப்போது முக்கிய அத்தியக்ஷராயிருந்த கானிங் துரை நன்கு மதித்துப்பேசினார். ஸர் தாமஸ் மன்றோவும், மன்றோ சீமாட்டியும் குழந்தையுடன் 1819-ம் வருஷம் டிசம்பர் மாதம் சீமையை விட்டுப்புறப்பட்டு பம்பாய் மார்க்கமாய் 1820-ம் வருஷம் ஜூன் மாதம் 8-ம் தேதி சென்னைவந்து சேர்ந்து கவர்னராகவேலையை ஒப்புக்கொண்டார்.

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்"

என்றபடி, இவர் சென்னை ராஜதானிமுழுவதும் குற்றங்கள் கண்டிக்கப்பட்டு சரியான நியாயம் கிடைக்கும்படியாய் அங்கங்கே நியாயஸ்தலங்களை ஸ்தாபித்தார். உள்நாட்டு அதிகாரம் சீராய் நடந்துவரும்படி அந்தந்த வேலைக்குத் தக்கபடி ஐரோப்பியரையும் இந்துக்களையும் நியமித்துப் பார்த்துவந்தார். இந்துக்களுக்கு இங்கிலீஷ் துரைத்தனத்தில் பிரியம் உண்டாவதற்காக அவர்கள் தொன்று தொட்டு அனுசரித்துவரும் கொள்கைகளிலேயும், வழக்கங்களிலேயும் பிரவேசிக்காமல் இருந்ததோடுகூட அவைகளைப் பாதுகாத்தும் வந்தார். மேலும் இவர் இந்துக்கள் மதவிஷயத்திலே பிரவேசித்தவரல்ல. 1822-ம் வருஷத்தில் பல்லாரியில் இருந்த 'சப்கலெக்டர்' தன் உத்தியோக அதிகாரத்தைப் பாதிரித் தொழிலில் செலுத்தி அவ்விடத்து ஜனங்களை கிறிஸ்தவர்களாக்க முயன்றபோது அந்தக் கலெக்டரைக் கண்டித்து அவர் செய்யப்புகுந்தது தகாதசெயலென்றும், மத சம்பந்தமான விஷயங்களில் துராகிர்தமாய்ப் பிரவேசிப்பது பலதீமைகளை விளைவிக்கும் கொடிய கலகங்களுக்கிட முண்டாக்குமென்றும் வற்புறுத்தினார். சர்க்காரைச்சேர்ந்த எல்லா இலாகாக்களிலும் விசேஷ சீர்திருத்தங்கள் செய்து அங்கிலேய துரைத்தனத்தை பலரும் மெச்சிப்

புகழும்படி செய்தார். சுதேசிகளின் வித்தியாபிவிர்த்தியின் பொருட்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் இந்துக்களுக்காக ஒரு பாடசாலையும், மகம்மதியருக்காக ஒரு பாடசாலையும், ஒவ்வொரு தாலூக்காவிலும் ஒரு பாடசாலையும் ஏற்படுத்தினர்.

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறை யென்று வைக்கப் படும்."
"கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையானாம் வேந்தர்க் கொளி."

இக்காலத்தில் முக்கியமான இடங்களுக்கெல்லாம் ரயிலும், நல்லபாதையும் இருப்பதால் வெகு சலீசாய் பிரயாணம் செய்யலாம். முற்காலத்திலோ அப்படியல்ல. நல்ல சாலைமுதலானதொன்றுமில்லாமல் சாமானிய வண்டிகளிலேயே வெயிலிலும், காற்றுமழையிலும் அடிபட்டு யாத்திரை செய்யவேண்டியதாயிருந்தது. அப்படியிருந்தும் ஸர் தாமஸ் மன்றோவுக்கு ராஜதானிமுழுவதும் அடிக்கடி சுற்றிப்பார்த்து அங்கங்குள்ள குறைகளைத் தவிர்ப்பதில் வெகு பிரியமானதால் அவற்றையெல்லாம் பாராட்டவில்லை. இவர் 1821-ம் வருஷம் தான் முதலில் கலெக்டராயிருந்த 'பாராமகா' லுக்குப்போய் விசாரணைசெய்துவந்தார். 1822-ம் வருஷம் சென்னப்பட்டணத்திலிருந்து நெல்லூர் மார்க்கமாய் கஞ்சம் ஜில்லாவுக்குப்போய் திரும்பி விஜயநகரம், வெங்கிடகிரி, காளஹஸ்தி ராஜாக்களுக்குப் பேட்டி அளித்து வந்தார். 1823-ம் வருஷம் கடப்பை, பல்லாரி முதலான ஜில்லாக்களில் சுற்று விசாரணை செய்தார்.

1824-௵ முதல் 1826-௵ வரையில் நடந்த பர்மாயுத்தத்தில் தாமஸ் மன்றோ அவர்கள் சென்னப்பட்டணத்திலிருந்து பட்டாளம், எருது, படகு, கப்பல் இன்னும் மற்றும் வேண்டுமானவைகளெல்லாம அவ்விடத்திற்கு அனுப்பி பங்காள கவர்ன்மெண்டாருக்கு உதவி செய்தார். மேலும் அந்த யுத்தத்திற்கு வேண்டிய யுக்தி ஆலோசனைகளைக்குறித்து கவர்னர் ஜெனரலாயிருந்த அம்ஹெர்ஸ்ட் பிரபுவுக்கு அடிக்கடி கடிதமூலியமாய் எழுதிவந்தார். போரும் அனுகூலமாய் முடியவே சென்னை கவர்னராகிய ஸர் தாமஸ் மன்றோ அவர்கள் புரிந்த பேருதவிக்காக அவருக்கு 'பாரன்' (Baron) என்னும் பட்டம் கொடுக்கப்பட்டது. இதுவுமல்லாமல் அடுத்த முறை கவர்னர்-ஜெனரல் வேலையை இவருக்கே கொடுப்பதாகத் தீர்மானமும் செய்யப்பட்டது.

இவருடைய தேகஸ்திதி பலக்குறைவுபட்டு வந்ததால் 1826-௵ கவர்னர் வேலையை ராஜிநாமாக்கொடுத்துவிட்டு சீமைக்குத் திரும்பிப் போவதற்காகக் கம்பெனியாரை எழுதிக் கேட்டுக்கொண்டார். இதற்குள் 1823௵ செப்டெம்பர்மீ பிறந்த இவர் இரண்டாவது குழந்தைக்கு தேகஸ்திதி அனுகூலமில்லாதிருந்ததால், சௌக்கியத்திற்காக மன்றோ சீமாட்டி குழந்தையுடன் முன்னதாகவே சீமைக்குப் போகவேண்டியதாயிற்று. (ஐயோ பாவம்!! அடுத்த வருஷத்திலேயே மன்றோ பிரபு இந்த இந்தியா மண்ணுக்கிரையானதால், மன்றோ சீமாட்டிக்குத் தன் நாயகனைத் திரும்பவும் பார்க்க வகையில்லாமற்போயிற்று.) 1826-௵, இவர் செங்கல்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிறாப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயமுத்தூர் ஜில்லாக்களைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு நீலகிரி வந்துசேர்ந்தார். பின்பு நீலகிரியிலிருந்து பெங்களூர் மார்க்கமாய் காவேரியின் நீர் வீழ்ச்சியைக் கண்டுகளித்து பட்டணம் போய்ச்சேர்ந்தார். தன் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மற்றோர் கவர்னர் வரத் தாமதப்படுமென்று அறிந்து கடைசித்தடவையாய் கடப்பை, பல்லாரி ஜில்லாக்களுக்குப் போய்ப்பார்த்து வரும்படி 1827ம் வருஷம் மேமீ சென்னையிலிருந்து பிரயாணப்பட்டார். அனந்தப்பூரில் சிலகாலமிருந்த பிற்பாடு கவர்னரும் பரிவாரங்களும் ஜூலைமீ 4-உ குத்திக்கு வந்துசேர்ந்தார்கள். இவ்விடத்தில், அவருடன் வந்த சிப்பாய்களில் அனேகர் வாந்திபேதி என்னும் கொள்ளை நோயால் மடிந்தார்கள். மறுதினமே கவர்னரவர்கள் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு கர்நூல் ஜில்லாவைச்சேர்ந்த பள்ளிகொண்டாவுக்கு 6-உ வந்து சேர்ந்தார். வந்துசேர்ந்து கொஞ்சநேரத்திற்கெல்லாம் திடீரென்று உபாதி கண்டு, தென் இந்தியாவுக்கு ஓர் பேருபகாரியாயிருந்த இச்சீமானும் இக்கொள்ளை நோய்க்கு அன்றையதினம் இராத்திரி 9½-மணிக்கெல்லாம் இரையானார். உடனே அவர் பிரேதம் குத்திக்குக் கொண்டுபோகப்பட்டு அவ்விடத்து அழகிய மலையின் கீழுள்ள அங்கிலேயக் கல்லறை முற்றத்தில் சேமிக்கப்பட்டது. பிற்பாடு இதை 1831௵ ஏப்ரல்மீ மறுபடியும் திறந்தெடுத்து, சென்னப்பட்டணம் கொண்டுவந்து செண்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் இருக்கும் செண்ட்மேரி கோவிலில் கவர்னர் பீடத்திற்கு எதிரே அடக்கம் செய்யப்பட்டது. இதற்கருகாமையில் மன்றோ சீமாட்டியால் ஒரு சித்திரபீடமும் அதன்பேரில் மன்றோபிரபுவின் மார்பளவுகற்சிலையும், ஞாபகசின்னமாய் ஏற்படுத்தப்பட்டது.

மன்றோ பிரபுவின் மரணசமாசாரம் சென்னைக்கு எட்டவே அங்குள்ளோர் அனைவரும் தங்கள் உற்றார் இறந்ததாகவே மதித்து விசனமுற்றார்கள். துரைத்தனத்தாரோ 1827-ம் வருஷம் ஜூலை மாதம் 9-ம் தேதி பிரசுரித்த சர்க்கார்ப் பத்திரிகையில் மன்றோ பிரபுவின், விசேஷபுத்தி யூகத்தைக்குறித்தும், சிறப்பான சாமர்த்தியத்தைக் குறித்தும், விடாமுயற்சி, சற்குணம், காருண்யம் முதலாகிய குணங்களைக் குறித்தும் வெகுவாய்ச் சிலாகித்து எழுதி அவர் மரணத்தால் நாட்டுக்கு உண்டாகிய பெருநஷ்டத்தைக்குறித்து மிகவும் வருத்தப்பட்டார்கள். பள்ளிகொண்டாவில் இந்தச் சீமான் உயிர்துறந்த இடத்தில் துரைத்தனத்தார் அவர்ஞாபக சின்னமாக ஒரு தோப்பும் துரவும் ஏற்படுத்தினார்கள். குத்தியிலோ மன்றோ அவர்கள் பேரால் ஒரு குளமும், பெரிய சத்திரமும் கட்டினார்கள். இச்சத்திரத்தில் வெகுகாலம் வரையில் அன்னதானம் செய்து வந்தார்கள். ஸர் மார்ட்டின் ஷீ (Sir Martin Shee) என்னும் சிற்பியால் சித்திரிக்கப்பட்ட அவர் படம் ஒன்று அதில் மாட்டப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். சென்னை 'ரெவினியூ போர்ட்' கச்சேரியிலும், பல்லாரி, கடப்பை முதலான இடங்களிலுள்ள கச்சேரிகளிலும் இவர் படத்தைப் பார்க்கலாம். நீதிமானும் பரோபகாரியும், கபடமில்லாதவரும், பச்சாதாப குணமுள்ளவருமான இந்தப் பிரபுவின் மரணத்தால் உண்டான துக்கத்தை வெளியிடுவதற்காகவும், தங்களுடையசீர்திருத்தத்திலும், நன்மையிலும் முக்கிய கருத்துள்ளவராய் உழைத்துவந்த இவருடைய ஞாபகம் என்றும் நிலைநிற்பதற்காகவும் ஏதாவது ஏற்பாடு செய்யக்கருதி சென்னை நகரவாசிகள் அனைவரும் ஒரு பெருஞ்சபை கூடினார்கள். அவர் பட்ட பரிசிரமத்திற்காக அவர் பெயர் என்றும் அழியாப் புகழ்பெற்றோங்கும்படியாய் அவருடைய பிரதிமை ஒன்று நிருமாணிக்கப்பட்டு அனைவரும் பார்த்துக் களிக்கும்படியான இடத்தில் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று எல்லோரும் ஏகோபித்த மனதாய்த் தீர்மானித்தார்கள். இதன் பிரகாரம், சீமையில் அக்காலத்தில் அதிக கீர்த்திபெற்ற சிற்பியாகிய ஸர் பிரான்ஸிஸ் சான்டிரி (Sir Francis Chantrey) அவர்களால் சென்னை நகரவாசிகளின் வேண்டுகோளின்படி மன்றோ பிரபு குதிரையின்பேரில் வீற்றிருக்கும் வண்ணமாய் பிரதிமை ஒன்று நிருமாணிக்கப்பட்டு 1839௵ சென்னைக்குக் கொண்டுவரப்பட்டது. இது அந்த வருஷம் அக்டோபர் மாதம் 23உ விசேஷ வைபவத்துடன், மேலே விவரமாய் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கும் சென்னையில் அதிக நேர்த்தியான காட்சியமைந்த பாகமாகிய தீவில் ஸ்தாபிக்கப்பட்டது.

இது வரையில் ஸர் தாமஸ் மன்றோ அவர்களுடைய சரித்திரத்தைப் பற்றிச்சொன்னோம். அடுத்த சஞ்சிகையில் மன்றோ பதுமை எவ்வகைப் பொருளால் ஆக்கப்பட்டுள்ளதென்பதையும், அதை நிருமித்த சிற்பியின் சரித்திரத்தையும் சுருக்கமாகக் கூறுவோம்.

## ON DEBT.
## கடன்.

(வைகாசிமீ சஞ்சிகையின் தொடர்ச்சி.)

ஒருவன் வருந்தித் தேடிய பொருள் அவனுக்குத்தான் உரியது. அதை மற்றொருவன் வாங்கிக்கொண்டால் அதைத் திரும்பிக் கொடுப்பதற்கு அவன் கடமைப்பட்டிருக்கிறான். ஏனென்றால் அதைத்தேடும் விஷயத்தில் இவன் எள்ளளவும் பாடுபடவில்லையல்லவா? இப்படியிருக்க சிலர் இப்போது நாம் வாங்கிக்கொண்டால் பின் நாம் தேடும்பொழுது திருப்பிக்கொடுக்கலாம் என்ற எண்ணத்துடன் வாங்குகிறார்கள். திருப்பிக்கொடுக்க முடியாமற்போனாலும் போகலாம். அப்பொழுது நாமாகத் தேடாத ஒரு பொருளை நாம் அனுபவித்தோமே அது தவறல்லவா என்ற எண்ணம் உண்டாகும். இப்படிக் கடன் வாங்குவதற்கும் திருடுவதற்கும் என்ன வித்தியாசம்? பைசா கடன் வாங்கினவன் பவுன் கடன் வாங்குவதற்கும் அஞ்சான். காணிக்கு வந்தது தானே கோடிக்கும் வரும். "கடனுண்டு வாழாமை காண்டலினிதே." காற்பணம் கடனிருந்தாலும் காத தூரம் நடந்தாவது தீர்க்கவேண்டும் என்பதை மறக்கக்கூடாது. இராப்பட்டினி கிடந்தாலும் கிடக்கலாம் அரைப் பணம் கடன் மாத்திரம் வைக்கக்கூடாது. ஏழைகளாக இருப்பதில் யாதொரு குற்றமுமில்லை. கடன் வாங்கினால் எப்பொழுதும் மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டு தானிருக்கவேண்டும். எவ்வளவோ ஏழைகள் மரியாதையான காலக்ஷேபம் செய்வதைப் பார்த்திருக்கிறோம். எவ்வளவு பணக்காரனாயிருந்தாலும், கடன்காரனென்றால் ஊராருக்கெல்லாம் அருவருப்பாகவேயிருக்கும். சில மூட ஜனங்களுக்கு கடன் வாங்குவதில் பைத்தியக்காரத்தனமான சந்தோஷமுண்டு. "கடனில்லாத கஞ்சி கால் வயிறு" என்பது அவர்கள் வேதவாக்கு. அவர்கள் "எரவலு சொம்மு பருவுகுசேடு"* என்ற தெலுங்குவசனத்தை யறியார்கள் போலிருக்கிறது. கடன் வாங்கியும் பட்டினியா என்று சில ஜனங்கள் கைகொண்டமட்டும் கடன் வாங்கத்தலைப்படுகிறார்கள். இவர்கள், மயிலிறகைப்போர்த்து மயிலினத்தோடு சேர்ந்த வான்கோழி, நேர்ந்த சண்டையில் தன் சொந்த இறகையும் இழந்து மொட்டையாய் நின்றதுபோல், தங்களுக்கு ஏற்கனவேயுள்ள சிறிது பொருளையும் இழந்து திண்டாடுவார்கள் என்பதற்குச் சந்தேகமும் உண்டோ? வரும்படிக்கு மீறிச் செலவழிப்பதே நம்மவர்களுக்கு இப்பொழுது ஏற்பாடாயிருக்கிறது. "திரி தவட்டுவதற்கு எண்ணெயில்லை, திரிசிராப்பள்ளிவரை. பிரட்டை தீவட்டி போடடா" என்கிறார்கள். பொருளைத் தேடுவது கஷ்டமல்ல. அதை வகையறிந்து செலவிடுவதுதான் கஷ்டம். அநேகர் வீண் செலவு செய்யாமலிருந்தால் வறுமை யென்பதையே அறியமாட்டார்கள். இக்காலத்துள்ளவர்கள் அநேகர் தங்கள் தாய் தந்தைகள் சாப்பிட்ட மாதிரி தாங்கள் சாப்பிடுவது கௌரவக்குறைவென்று கண்டதையெல்லாம் வாங்கிக் கடனாளியாகிக் கடைசியில் பிச்சையெடுப்பதும் நாம் காணுக்காட்சி யல்லவே. பாய் நீளமறிந்தல்லவா கால் நீட்டவேண்டும். கடனாளிகள் பொய் சொல்லாமல் முடியாது. கொடுக்கிறேன் என்று சொல்லும் தினத்தில் கொடுக்கமுடியாதென்று மனதாரத் தங்களுக்குத் தெரியுமானாலும் இன்றைக்கென்றும் நாளைக்கென்றுமே சொல்லிக்கொண்டு வருவார்கள். கடைசியில் அது இல்லையென்பதற்கடையாளமாய் முடிகிறது. கடன் என்பது ஒரு நரகக்குழி. அதில் விழுந்து தப்பித்துக்கொள்ளுகிறவன் பாக்கியவந்தனே. ஆனால் அதில் விழாமலே ஜாக்கிரதையாயிருப்பவன்தான் எல்லா மனிதர்களிலும் உத்தமபுருஷன்.

* "இரவல் நகை சுமைக்குக்கேடு."



கடன் பட்டார் நெஞ்சம் மிகவும் கலங்கியிருக்கும் என்பதை யுட்கொண்டுதான், இராவணன் இராமருடன் சண்டைசெய்து தோல்வியடையும் சமயத்தில் இராவணனுடைய மனநிலைமையைக் குறித்துச் சொல்லும்பொழுது "கடன் பட்டார் நெஞ்சம்போற் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்றார் கம்பநாட்டாழ்வாரும். கடனில்லாதவனே துரைமகன். தங்களுக்கு வேண்டாத சாமான்களானாலும் சரசமாக வருகிறதென்று வாங்கத்தலைப்பட்டால் வெகு சீக்கிரத்தில் தங்களுக்கு அதியவசியமான சாமான்களைச் சபதமாக விற்க நேரிடும் என்பது நிச்சயம். கடன் வாங்கி ஜனங்களை வஞ்சனைசெய்து பணக்காரனாக முடியுமென்றால், கடல் நீரிலிருந்தும் கற்கண்டு காய்ச்சலாம். சிலர் ஜீவனத்துக்கு வழியேதும் இல்லாவிட்டால் கடன் வாங்கிக் கடன் கொடுத்து அதினால் ஜீவிக்கிறதைக் காண்கிறோம். நூற்றுக்கு ஆறு ரூபாய் வீதம் வட்டிக்கு வாங்கிப் பணத்தை வைத்துக்கொண்டு மாதம் ஒன்றுக்கு ரூபாய்க்கு அரையணா வீதம் வட்டிவாங்கி வயிறு வளர்ப்பவர்கள் எவ்வளவோ பேர். வட்டிக்காக ஆசைப்பட்டு சில்லரையாகக் கொடுக்கும் கடன்காரர்கள் திருப்பிக்கொடுக்கச் சக்தியற்றவர்களாய் விட்டால் இவன் பாடு அம்பலந்தான். கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும், மரமேறிக் கைவிட்டவனும் பிழைப்பதுண்டோ? ஆனால் கடன்வாங்கிக் கடன் கொடுப்பதே தவறு என்று சொல்ல வரவில்லை. கைத்தொழிலாளிகள் முதலில்லாமல் வருந்தி நம்மைப் பணம் கேட்டு நம்மிடமும் இல்லாவிட்டால், நம்மை நம்பிக் கொடுக்கக்கூடியவர்களிடம் வாங்கி உதவிசெய்வது எல்லாவிஷயத்திலும் மேலானது. கைத்தொழிலாளிகளை நம்பிக்கொடுக்க சிலர் பிரியப்படாமல் நம்மிடம் கொடுக்கப் பிரியப்படலாம். நமக்கு கைத்தொழிலாளிகளிடம் நம்பிக்கையிருந்தால் அவர்களிடம் கடன் வாங்கி இவர்களுக்கு உதவி செய்வதனால் முத்திறத்தாரும் லாப மடையக்கூடும். இந்தத் தத்துவத்தின்பேரில்தான் தற்காலத்திய 'பாங்கிகள்' என்னும் திரவியசேகர நிதிகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஜனசமூகத்துக்கு நன்மைசெய்யும் விஷயத்துக்காக, பலரிடமிருக்கும் சிறு பொருளையெல்லாம் ஒரு வர்த்தகச் சங்கத்தார் கடனாக வாங்கிச் சரியான விஷயத்தில் உபயோகப்படுத்தினால் எவ்வளவோ நன்மைகள் செய்ய முடியுமே. நமது தேசத்தில் இப்போது ஏற்பட்டிருக்கும் இருப்புப்பாதைகளும், கப்பல் வியாபாரமும், துணி, காகிதம், சர்க்கரை முதலிய செய்யும் இயந்திரங்களும் கடன் இல்லாமல் முடியுமா. இவ்வகையான வர்த்தக சங்கங்களும் கடன் கொடுப்பதில் நம்பிக்கையுமிருந்தால்தான் தேசம் விருத்தியடையும். இதுதான் நமது தேசத்துக்கும் ஐரோப்பிய தேசங்களுக்குமுள்ள வித்தியாசம். உணவுக்குரிய தானிய விளைவு விஷயத்தில்தான் மிகுந்த முயற்சி முதலில் எடுத்துக்கொள்ளவேண்டும். நம் தேசத்துக்குடிகளுள் அநேகருக்கு ஒரு ஏர் மாடு வைத்துக்கொள்ளக்கூடக் கைம்முதலில்லாமலிருக்கிறது. மழை பெய்ந்தால் ஈரம் போய்விடுகிறதே என்று கடன் கொடுப்பதற்கு எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிகளிடம் ஓடுகிறார்கள். இவர்கள் கடன்கொடுப்பதற்குப் பின்னிடுகிறதேயில்லை. தங்களிடம் ஒருவன் கடன் வாங்கிவிட்டால் அவனை அட்டை உரிஞ்சுகிற மாதிரி உரிஞ்சிவிடுகிறார்கள். இவர்கள் வெகு சரசமான வட்டிதான் வாங்குகிறது. உழுகிறவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது. இதையெல்லாம் அறிந்து தான் நமது துரைத்தனத்தார் விவசாயக்காரர்களுக்குப் பூமியைச் செப்பனிடவும், உழவுமாடுகள் வாங்கவும் குறைந்த வீதத்துக்குப் பணம் கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாக வசூலிக்கிறார்கள். இதைவிட நல்லமாதிரியாக உதவி செய்ய வேண்டுமென்று நமது துரைத்தனத்

தார் விவசாயபாங்கிகள் ஏற்படுத்த வேண்டுமென்று மிஸ்டர் நிக்கல்ஸன் துரையவர்கள் பல வருஷங்களுக்கு முன் ஐரோப்பாவிலுள்ள அம்மாதிரியான பாங்கிகளைப் பார்வையிட்டுத் தெரிவிக்கும்படி கேட்டார்கள் அப்படியே சில ஏற்பாடும் செய்து வருகிறார்கள்.

சிலர், ராஜாங்கத்தாரே கோடி கோடியாகக் கடன் வாங்குகிறார்களே! அரசன் எவ்வழி யவ்வழி குடிகள்; நாம் ஏன் கடன் வாங்கக் கூடாது? என்று வாதாடலாம். அரசாட்சியார் எந்தக்காரியத்தை யுத்தேசித்து முடிக்கக் கடன் வாங்கினார்களோ அதே மாதிரியான காரியம் செய்ய நாம் ஏற்பட்டுக்கொண்டால் நாமும் கடன் வாங்கலாம். அரசாங்கத்தார் கடன் வாங்கிச் செய்யும் காரியங்கள் எவ்வளவு லட்சாதிகாரியானாலும் ஒருவனால் முடியாத காரியங்கள். ஹிமாசலத்திலிருந்து கன்னியாகுமரிவரை நல்லபாதை போட வேண்டுமென்றால் எந்த ஒரு தனவானாலாவது முடியுமா? அநேக தனவான்கள் சேர்ந்து தான் போடவேண்டும். ஆனால் இத்தனவான்கள் ஒருவரையொருவர் அறியாமலுமிருக்கக்கூடும்; அறிந்தாலும் தங்கள் தங்கள் தனத்தை நம்பிக்கொடுக்க இயலாது. துரைத்தனத்தார்களோ யாவருக்கும் பொதுவானவர்களானதால் யாரும் நம்பிக்கொடுக்க முடியும். அசாத்தியமான காரியங்களும் சாத்தியமாகும். சில விஷயங்களில், பொய்யும் குற்றமில்லாத நன்மையைச் செய்யுமானால் மெய்ம்மையின் குணத்தை யுடையதாகும் என்பதுபோல கடன் வாங்குவதும் மிகுந்த பிரயோசனத்தைத் தரக்கூடியதாகும். முதலில் அப்படிக் கடன் வாங்குவது பழுதில்லாத் தன்மையைப் பயக்குமா என்று மாத்திரம் தெளியத் தெரிந்துகொள்ளவேண்டும்.

## LESSONS IN NATURE STUDY.
## SWALLOW.

### பிரகிருதி வித்யாம்லம்:
### தூக்கணங்குருவி.

(ஒரு சிறுபர் அனுப்பியது.)

சென்ற வெள்ளிக்கிழமை யன்றையதினம் என் வீட்டில் ஒருவிசேஷம் நடந்தது. அப்பொழுது யான் என்வீட்டின் பின்பக்கம் சென்றேன். அங்கே ஒரு தென்னைமரமிருக்கின்றது. அந்தமரத்தில் என் வீட்டின் விசேஷத்திற்காக தோரணத்திற்கு பூவரிகொய்ய என் பாட்டனார் அதில் ஏறினார். அப்பொழுது நானும் மரத்தை நோக்கினேன். அதில் நானிதுவரை பார்த்தறியாத அழகுள்ள பல கூண்டுகள் தோற்றப்பட்டன. அதைப் பற்றி என் பாட்டனாரிடம் விசாரித்தேன். அவர் இவை தூக்கணத்தான் கூடு என்று சொன்னார். அம்மரத்தில் ஏழுகூடுகள் தொங்கின. அதில் ஒரு கூட்டில் குஞ்சின்றி வெறுங் கூடாயிருந்தது. அதனை என்பாட்டனார் எடுத்து எனக்குக் கொடுத்தார். நான் அதைப்பார்த்து சிட்டுக்குருவியொத்த இக்குருவிக்கு இவ்வளவு அழகுள்ள கூடு கட்ட யுக்தியுண்டானது கடவுள் செயலன்றி அதின் செயலல்லவென என்புத்தியில் மதித்துக்கொண்டு அக்கூடு எதினால் கட்டப்பட்டதெனக் கவனித்தேன். தென்னைமரத்தின் ஓலையின் வாரடையினாலும் சோளம் கம்பு என்னும் பயிரின் வாரடையினாலும் கூடு கட்டியிருந்தது. நம்நாட்டில் மிகுந்த நெசவு செய்பவர்களிருக்கின்றனர். அவர்கள் நெசவு செய்வதைக் கவனித்துப்பார்த்தாலும் நாம் கற்றுக்கொள்ளலாம். இப்பட்சி பின்னிய கூடும் அப்படியுறினும் நாம் கற்றுக்கொள்வதெளிதல்ல. அக்கூடு தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருப்பதாய் நமக்குத்தோற்றுகின்றது. அது மரத்தின் சிக்கலில் சேர்த்துப் பின்னி மழைவெயில் முதலியவைகளால் கெட்டுப்போகாதபடி தந்திரமாய்க் கட்டப்பட்டிருக்கின்றது. என் பாட்டனார் எனக்குக் காட்டிய கூட்டைப்பார்த்த நாள்முதல் நான் அந்த தென்னைமரத்தைக் கவனித்துப் பார்த்து வந்தேன். பார்த்துவருகையில் ஜனவரிமீ 14உ திங்கட்கிழமையன்று ஒரு குருவியானது கூடுகட்ட யத்தனித்தது. நானதையே கவனித்துப் பார்த்துவந்தேன். மேற்படி மாசம் 26உ சனிக்கிழமை அந்த தூக்கணத்தான் அக்கூட்டை சரியாய்க்கட்டி அதில் சில களிமண்களை இலேசாய் வைத்து இரண்டொரு இறக்கைகளையும் வைத்திருந்தது. பிப்ரவரிமீ 3உ ஞாயிற்றுக்கிழமை அக்கூட்டில் முட்டையிட்டு இருந்தது. இந்த தென்னைமரம் சிறியதாயிருப்பதால் யான் அடிக்கடி பார்வையிடத் தோன்றிற்று. மற்றுநாளிரண்டு முட்டைகளிருந்தன. அம்முட்டையின்பேரில் ஆண் குருவி அடைகாத்துக்கொண்டால் பெண் குருவி இரைதேடப்போகிறதும் அக்குருவி வந்து அடைகாத்ததின்பின் ஆண்குருவி இரை தேடப்போகிறதுமாக இருந்தது. இப்படியாய் மார்ச்சுமீ 13உ வரையிருந்தன. யான் அன்றையத்தினம் காலையில்போய்க் கூட்டைப் பார்த்தேன். முட்டைகளிரண்டுமிருந்தன. அன்று சாயந்திரம் பார்க்கும்பொழுது இரண்டு முட்டையினின்றும் இரண்டு குஞ்சுகள் பொரித்திருக்கக்கண்டு [illegible] என் பாட்டனாரிடம் சொன்னேன். இந்த வரலாறெல்லாமவர்கேட்டு அது நாற்பது நாள் முட்டையிட்டு ஆயினவுடன் குஞ்சு பொறிக்கும்; அது நாலு முட்டைகளுமிடும்: நாலுமுட்டைகளிட்டால் இரண்டு முட்டைகள் கூமுட்டைகளாய் விடும். இரண்டு முட்டைகளிட்டால் கூமுட்டையின்றிப் பொறிக்கும் என்றார். நான் கவனித்துவந்தேன். குஞ்சுபொறித்தநாள் முதல் தினந்தோறும் அதன் தாய்தந்தை இரண்டும் ஒன்றுமாற்றி யொன்று வெளியேசென்று கம்புசோளம் நெல் முதலிய தானியங்களைப் பொறுக்கிக் கொணர்ந்துகொடுத்துப் பாதுகார்த்தன. அதில் பெண்குருவிதான் குஞ்சுகளை இடைக்கிடை வந்து பார்த்து இரைகொடுத்து வளர்த்தது. இந்த இரண்டும் ஆண் ஒன்று பெண் ஒன்றுதான் பொறிக்குமென்று என்பாட்டனார் எனக்குச்சொன்னார்.

இந்த இரண்டு குஞ்சுகளும் பொறித்த பதினேழாம் நாளன்றயதினம் சாயந்திரம் பார்க்கையில் வெளியே சிரஸைக்காட்டிக்கொண்டிருந்தன. மார்ச்சுமாதம் 30உ ஆகிய சனிக்கிழமையன்று இந்த இரண்டு குஞ்சுகளையும் தாய்க்குருவி கூட்டினுள் சென்று வெளியே தன் முகத்தினால் தள்ளிற்று. உடனேதானே தானுங்கூடவே வந்து தரையில் கிடக்குந் தானியங்களைப் பொருக்கி தாய்க்குருவி குஞ்சுகளுக்கு ஊட்டி குதித்துக்குதித்து குஞ்சுகளுக்குப் பறக்கக்காட்டிற்று. அன்று அந்த இரண்டு குஞ்சுகளும் கொஞ்சந்தூரம் போகிறதும் பின் கீழே விழுகிறதுமாயிருந்தன. அன்று சாயந்திரம் அவை அம்மரத்தில் கூட்டில் சேராது மரத்தின் பக்கம் என் காரைவீட்டின் மேலிருந்தன. மறுநாள் முன்தினம்போலவே தாய் வந்து பறவை காட்டிக்கொண்டிருந்தது. அப்புறம் அதன் தந்தையாகிய ஆண் குருவியும்வந்து பறவைகாட்டி மற்றுநாள் பறந்தோடிற்று. அந்தக் குஞ்சென்று அடையாளந் தெரியும்பொருட்டு பாசியினால் அந்தக் குஞ்சின் கால்களில் பின்னலிட்டு குஞ்சங்கட்டி வைத்திருந்தேன். அதுகளிரண்டும் பின்னும் அந்தஇடத்தினிலே அந்தமரத்தினில் ஒரு மட்டையில் தன்னினங்களைப்போல பெரிய குருவிகளாகி ஏப்பிரல்மீ 11-உ வியாழக்கிழமையன்று கூடு கட்ட ஆரம்பித்து அரைவாசி கட்டி இருக்கின்றது. இதிப்படி இருக்க என் வீட்டின் வாசலில் ஒரு பக்கிரி நாலு தூக்கணத்தான் குருவி கொண்டுவந்தான். அதுகள் பார்வைக்குச் சிட்டுக்குருவிபோலிருந்தாலும் மஞ்சள் வர்ணங்கலந்திருப்பதால் பார்வைக்கு மிகவும் அழகாயிருந்தது. அதில் ஒன்று நான் அவனிடத்தில் கேட்க அவன் என்னைப்பார்த்து அம்மா இந்தக் குருவியின் அருமையெனக்கும் என்னைப்போல வளர்ப்பவர்களுக்குந்தான் தெரியுமென்றான். நானவனை அதன்

அருமை என்னவென்று கேட்க, அவன் சொல்லியதாவது: ‘அம்மா நாம் சொன்னவைகளைக் கேட்கும். ரூபாயைக்கிணற்றில் போட்டாலுடனே எடுத்துவந்துவிடும். எந்த மரத்தினின்றும் இலைகளைக்கொய்து வரும்படி சொன்னாலும் கொய்துவரும். நான் எங்கே செல்லுகிறேனோ அங்கேயே விட்டுவிட்டால் பறந்து வந்துசேரும். இதனருமை நிரம்பவம்மா’ என்று அவன் சொல்ல நானதின் மீதுற்ற ஆசையை இவ்வளவென்று வரையமுடியாது. பின்னும் நான் அந்தப் பக்கிரியைப்பார்த்து எந்த மரத்தினிலும் இலைபறித்துக்கொண்டுவரும் என்றனையே பனைவகையரா, தென்னை, வாழை இப்படிப் பலத்த காம்புள்ளவைகளில் கொண்டுவருமா என்ன, அவைகள் தவிர மற்ற இலைகளைக்காம்புடன் கொண்டுவரும். அந்த இலைகளையும் காம்பன்றி கரித்தும்வரும் என்றான். நான் அவனை நோக்கி இன்று உனக்கு என்ன சம்பாத்தியங் கிடைக்குமென்றேன். அவன் கடைகளுக்குப்போனால் அரைக்கால் ரூபாய் கிடைக்கும்; ஊர்க்காட்டில் சாப்பாடு கிடைக்கும் என்றான். நான் அவனைநோக்கி இன்று உனக்குச் சாப்பாடு செய்துவைத்து கால்ரூபாய் தருகிறேன். அந்தக் குருவியின் வேடிக்கைகளைக் காண்பிக்கவேண்டுமென்று கேட்டேன். உடனே அவன் சம்மதித்து அன்று என் வீட்டினிலே இருந்து அந்தக் குருவிகளை ஒன்றொன்றாய் உயரப்பறக்க விட்டுவிட்டு வெளியே சென்றான். அந்தக் குருவிகள் அவன் சிரசின் நேராகப் பறந்து ஒரு திண்ணையில் உட்கார அதுகளும் இறங்கி அவன் சிரசிலும் மடியிலும் கையிலுமாய் உட்கார்ந்தன. அவன் அவைகளுக்குச் சில இரைகளங்கே கொடுத்துவிட்டு மறுபடியும் பறக்கச்செய்துவிட்டு என் வீட்டிற்கு வந்தான். அந்த நாலு குருவிகளும் முன்போலவே வந்து இறங்கி இருந்தன. உடனே அவன் என் வீட்டின் பக்கத்திலிருந்த வேப்பமரத்தில் இலைகொய்து வரும்படி ஒவ்வொரு குருவியாய் கையினில் வைத்துச் சைகை காட்டினான், ஒவ்வொரு குருவியும் விருட்டெனப் பறந்து ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு குருவியும் ஒவ்வொரு இலைகொணர்ந்ததுகள். ஒவ்வொரு குருவியும் சுமார் 10-தடவைசென்று கொணர்ந்திருக்கும். இப்படி வேடிக்கைகள் காட்டிய பின் குருவிகள் நாலுக்கும் அந்தப் பக்கிரி இரைகொடுத்தான். ஒரு அரைமணிநேரம் சென்றபின் என்வீட்டிற்கு அடுத்தவீட்டில் ஒரு கிணறு இருக்கிறது. அந்தக் கிணற்றின் பக்கம் என்னையும் அங்கிருந்த என் மித்திரர்கள் சுற்றத்தாரையும் கூட்டிச்சென்று தன் கையிலிருந்து அரைக்கால் ரூபாயை எங்கள் யாவருக்கும் காண்பித்து வலதுகையில் ரூபாயைவைத்து இடதுகை மணிக்கட்டின்மீது ஒரு குருவியை நிறுத்தி குருவிக்கு ரூபாயைக் காட்டி கிணற்றிலெறிந்தான். அந்தக் குருவி ரூபாய் நீரில் விழுமுன்னம் ஒடித் தன் வாயினலந்த ரூபாயைப் பிடித்துக்கொண்டு வந்து அவன் கையில் வைத்துவிட்டுக் கையிலிருந்த இரையைத் தின்றுவிட்டு விளையாடிக்கொண்டிருந்தது. இப்படி ஒவ்வொரு குருவியையும் தனித்தனியே இவ்வேடிக்கை செய்யும்படி செய்து காண்பிவித்தான். இதை யான் நோக்கினமாத்திரம் என்னிருதயக்களிப்பு இவ்வளவெனச்சொல்ல அடங்காது. நான் அந்தப் பக்கிரியினிடம் அவனுக்குத் தருகிறதாய்ச்சொல்லியிருந்தபடி ¼ ரூபாய்கொடுத்து அவனுக்கு அன்று சாப்பாடும் செய்துவைத்தேன். அவன் சந்தோஷமாயிருக்கும் சமயம் நானிந்தக் குருவிகள் எவ்விடத்தின்கண் அகப்பட்டனவென வினவ அவன் இந்தக் குருவிகள் கருவேலமரம் தென்னைமரம், பனைமரம் இவைகளில் கூடு கட்டியிருக்கும். அதுகளைப்பார்த்துச் சிறு குஞ்சினிலே யெடுத்தேன் என்றான். நான் அவனை இவை வேறு இடங்களில் கூடுகட்டாதா என்று கேட்க அவன் வேறு மரங்களில் அது கூடுகட்டிச் ஜாஸ்தியாய்ப் பார்த்ததில்லை என்றான். உடனே ‘இந்தக் குருவிகள் உன்னிடம்வந்த பின் இப்படித் தொழில்கள் பழகினவா அல்லது அதற்கு



இயற்கையா’என வினவ? அவன் அம்மா இந்தக் குருவிகளைச் சிறு குஞ்சினிலே யெடுத்து இப்படிப்பட்ட, வேடிக்கைத்தொழில்கள் செய்து பழக்குவது என்றான். நானுடனே இவைகள் மனிதன் சொன்னவைகளைக் கேட்கவும் செய்யவும் செய்கின்றனவே இவை முட்டையிட்டுக் குஞ்சுபொறித்து வளர்த்த தாய்தந்தைக் குருவிகள் சொன்னபடியும் கேட்கவேண்டுமே யென்று அந்தப் பக்கிரியைக் கேட்டேன். அதற்கவன் எந்தக்காலத்தில் யார் இரை கொடுக்கிறார்களோ அவர்கள் சொன்னபடி கேட்கும். இப்பொழுது அதன் தாய் தந்தையர்களாகிய குருவிகளில் ஒன்று இரை கொடுத்தாலதின் சொல்லையும் இப்பொழுது கவனிக்குமென்றான். நான் என்புத்தியில் இதற்குப் பகுத்தறிவில்லை; ஆகையால் தான் தாய்தந்தையரைக் கவனிக்கவில்லையென்று மதித்தும் இவைகளை யோசிக்குங்கால் சாக்ஷாத்காரமாகிய எம்பெருமான் திருவிளையாட்டென மதித்தேன். அந்தப் பக்கிரியிடமிருந்த குருவியில் ஒன்றை யான் முன்போலவே அதனைசையால் கேட்டேன். அவன் ‘என்னை அது வளர்க்கிறது நானதைவளர்க்கிறேன்’ என்று சொல்லிக்கொண்டு குருவிகள் நாலையும் கொண்டுச் சென்றனன். என்வீட்டின் பின்பக்கமிருந்த தென்னைமரத்தில் தினந்தோறும் மிகுந்த தூக்கணத்தான் குருவிகள் சேர்ந்து சம்பாஷித்துக்கொள்வதைப்பார்த்து நான் என் வீட்டிலுள்ள வேலைச்சமயம்போக மற்ற வேளைகளில்மிகுகவனமாய்ச் சந்தோஷமடைந்திருக்கின்றேன். எனக்குச் சில காலம் வியாகூலம் வந்து மனவருத்தமுற்றிருக்கையில் வீட்டின் பின்பக்கம் தென்னைமரத்தில் அதின கூடுகளையும் அவைகள் சம்பாஷிப்பதையும் நோக்கினாலுடனே என் மனம் களிப்புற்றுக் கவலை நீங்கிவிடும். இந்த தூக்கணத்தான் குருவிக்கு ஆயுள் என் பாட்டனாரிடமும் மற்றும் பக்கத்தினிலும் விசாரித்ததில், வயது நூறு; இதிலிடையே பாம்புக்குச் சித்தனாரிடத்தில் சொல்லியிருக்கின்ற ஆபத்துகள் எத்தனையோ அதுபோல அதற்குமுண்டாம். அந்த அபமிருத்துகள் நீங்கினால் காலமிருத்தாகிய வயது நூறாய். இதனை நான் கவனிக்குங்கால் யாவரும் இப்படி வேடிக்கை செய்யும் இந்த பட்சிகள் அன்பையுட்கொள்வதுண்டு.

அதனால் ஒரு நியாபகம் எனக்குண்டாயிற்று. அதாவது நாம் நம்மை ஆதரிப்பவர்களுக்குப் பணிந்து நடந்தும் நியாயாதிபதிக்கடங்கியும் ஸ்ரீகளும் புமான்களும் சுற்றத்தாருக்கு அடங்கி நடக்கவேண்டியது முக்கியம். பகுத்தறிவில்லாப் பக்ஷியைப் பார்க்கிலும் பகுத்தறிவுள்ள மனிதர்களாகிய நாம் அப்படி நடக்காத விஷயம் கடவுளருளின்றியும் உலகதூஷணைக்கும் நரகத்திற்கும் ஆளாவோம். உணவின்றியும் அலையவும் நேரிடும். ஐயா, நான் பெண்பால், என்வசனங்களிலும், நடையிலும் எழுத்துக்குற்றங்கள், சொற்குற்றங்கள் எவையுரினும்,

“பூமாலை வாங்கிப் புனைபவர்கள் நாரதனைத்
தாமாகாதென்று சற்றுந்தள்ளா ரதுபோல”

இந்த நடந்த அதிசய வர்த்தமானங்களையறியுங்கள். நீங்களறியாதவைகளல்ல. நான் பார்த்தமட்டும் அதிசயமாயிருந்தமையால் இந்நிரூபம் வரைந்தேன்.

## சிவனும் உமையும்.

### ஆசிரியப்பா.

Shiva & His Consort (For Recitation.)

உலகம் யாவும் ஒருங்கே படைத்திட்டு
அரியணை* யிருக்கும் அரசன் முதலாக்
கூழைக் குடிக்கும் ஏழையீ றுவுள
அவரவர்க் கேற்ற தொழிலும் உணவும்
அறிந்து கொடுத்தான் அரன்முந் நாளில்
செல்வர்க் கமுதும் அல்லர்க்குத்தினையும்
இல்லந் தோறும் இரந்து[1] குடிக்கும்
துறவிக் கோடும் ஒருபிடி அன்னமும்
ஆவிற் கறுகும்[2] ஆனைக்[3] காலும்

* சிம்மாசனம்.

1. பிச்சையெடுத்து. 2. அறுகம்புல். 3. ஆனைக்கு+ஆலும்.

புலிக்கு மாடும் பூனைக்கெலியும்
தெரிந்து தந்தான் சிவபெருமானே
படைத்த உயிர்களைச் சமமாய்ப் பாவித்
துயர்வோ தாழ்வோ ஒன்றும் எண்ணிலன்
பரமன் அன்பொடு பிராணிகள் யாவையும்
தினமும் ஊட்டி வளர்த்தல் கண்டு
உமையவள் ஒருநாள் கிளியொன் றெடுத்துப்
புடவையில் வைத்துப் பொதிந்து பின்னர்
விளையாட் டாக நாதனைப் பார்த்து:
" ஆயிர உயிர்களுக் கன்ன மளிக்கும்
" அரனே கேளாய் யானசொல்வதனை
" சிருட்டியி லடங்கிய செந்து வொன்றினை
" ஊட்டினை யல்ல உணர்வையோ அதனை?
என்ன உரைப்பச் சிவபெருமானும்:
" ஆசைக் கிசைந்த அணங்கே கேளாய்.
" எல்லா வுயிர்க்கு மீந்தேன் உணவுன்
" ஆடையில் மறைத்த அழகுறு கிளிக்கும்
" ஈந்தே னுணவே[1] மாந்தேன் அல்லேன்"—
எனவிடை பகர்ந்தனன் இடப[*] வாகனன்.
†முக்கணன் சொன்ன அக்கண மதனில்
மடியில் மறைத்த கிளியை யெடுப்ப
உத்தம உமையாள் [2]தத்தைதன் மூக்கில்
கொவ்வைக் கனியைக் கவ்வக் கண்டு
மனதிற் பயந்து சிவனைப் பணிந்து
"அண்டம் அனைத்தும் ஆளும் அரனே [யும
" எவ்வயின்[3] இருப்பினும் ஒவ்வொரு உயிரை
" அவ்வவ் வேளையில் அருத்துவ தறியா[4]
" தாடையில் மறைத்தேன் மூடத் தனத்தால்,
" அடியாள் பிழையை அருளொடு பொறுப் [பை
" தெரியா திழைத்த‡ சிறுபிழை மறப்பை"
என்ன மொழிந்தனள் ஏந்திழை தாழ்ந்தே.

1 உணவு+ஏமாந்தேன் என்று பிரித்து அருத்தம் செய்துகொள்ளவும். 2 தத்தை = கிளி. *விருஷபம்.

† மூன்று கண்களுடையவன்; (இயற்கையாயுள்ள இரண்டு கண்களும் நெற்றிக்கண்ணும்) அதாவது சிவன்.

3 எவ்வயின் = எவ்விடம். 4 அருத்துவது + அறியாது + ஆடையில். (அருத்துவது = உண்பிப்பது). ‡ செய்த.

## THE CHILDREN'S PAGE.

### LAKSHMI AND SANEESVARA.

## சிறுவர்க்கான பக்கம்.

### லக்ஷுமியும் சனிபகவானும்.

ஒரு காலத்தில் லட்சுமிக்கும் சனீஸ்வர பகவானுக்கும் தங்களில் யார் சாமர்த்தியசாலி என்பதைப்பற்றி விவாதம் நடந்தது. லட்சுமியோ தான் செல்வத்துக்கெல்லாம் அதிகாரியாயும், சந்தோஷத்திற்கெல்லாம் காரண பூதமாயுமிருப்பதால் தானே சாமர்த்தியசாலியென்றாள். சனீஸ்வரனோ ஒருவனை தலையெடுக்கவொட்டாது தவிக்கச்செய்வதாலும், அவன் பட்டபாட்டைக் கண்டு பயந்து பயபக்தியுடன் தன்னையே துதிக்கப்பெறுதலாலும் தனக்குமிஞ்சியவன் கிடையாதென்றும் ஆதலால் தானே சமர்த்தனெனவும் வாதித்தான். இவர்களிப்படி "தென்றல் முற்றிப் பெருங் காற்றானது" போல் பலமான சண்டை பிடித்துக் கொண்டிருந்தமையால் இவர்களுக்கு மத்தியஸ்தமாய்வந்து சமாதானப்படுத்த ஒருவரும் துணியவில்லை. முடிவில் இருவரும் தங்களுக்குத்தெரிந்த "நற்குணங்களையே அணிகலனாகப்பூண்ட நரேந்திரன்" என்னும் அரசனிடம் செல்வதாக ஒப்புக்கொண்டு அவ்விடமேகினார்கள். ஜயபுரி அரசனான நரேந்திரன் இவர்களைக்கண்டு ஆசார உபசாரம் செய்து நின்றான். அப்போது இருவரும் தங்கள் விவாதத்தை விஸ்தரிக்க, அரசன் யோசித்து "நல்லது நாளைவாருங்கள் உங்களுக்குப் பதிலளிக்கிறேன்" என்றான். இருவரும் தத்த மிருப்பிடமேகினார்கள்.

மறுநாள் நரேந்திரன் கொலுக் கூடத்தில் ஒரு தங்க சிம்ஹாஸனமும் வெள்ளிசிம்ஹாஸனமொன்றும் போடப்பட்டு தகதாயமாய் ஜொலித்துக்கொண்டிருந்தது. அப்போது இவ்விரு தேவதைகளும் அங்கு பிராப்தமாக அரசன் வந்தனைவழிபாடுசெய்து உட்காரும்படி சிம்ஹாஸன மிருக்குமிடத்தை கையால் சுட்டிக்காட்டினான். அப்போது பெருந்தன்மையான முகமும், புன்சிரிப்பு தவழ்ந்த உதடுமுடைய லட்சுமியானவள் தன் அந்தஸ்துக்குத் தக்கவண்ணம் பொற்சிம்மாசனத்தில் எழில்பெற பொலிவுற்று விளங்கினள். சனீஸ்வரனோ வெள்ளி சிம்மாசனத்தில் உட்கார்ந்து "அரசனே! இதில் இப்போது யார் திறமைசாலி! செப்புவாய்" என அரசனை நோக்கி வினவினான். அரசன் இருகரங்களையும் சிரமேற்கூப்பி "நான் சொல்வதைக் கேட்டு கோபித்துக்கொள்ளாமல் மன்னிக்கும்படி கோருகிறேன். வெள்ளி சிம்மாசனமானது பொற்சிம்மாசனத்தைக் காட்டிலும், தாழ்ந்தது என்பது தங்களுக்கே தெரியும். மேலும் இதில் இன்னார் தாழ்ந்தவர் என்று நான் சொல்லாமலே தாங்களே தெரிந்துக் கொள்ளலாம்" என்றான். இதைக் கேட்டவுடனே சனீஸ்வரபகவான் கண்களில் தீப்பொறி பறக்க உற்று நோக்கி, "அரசனே! என்னை யாரென்று நினைத்தாய்? சப்தலோகங்களும் கிடுகிடென்று நடுங்கும்படி செய்பவல்ல என்னை ஒரு அற்ப அரசன் நீ! சொல்லப் போய்விட்டதா? நல்லது என் சாமர்த்தியத்தைப் பார்த்து பின்னாடி நீயே தெரிந்துக் கொள்ளும்படியான உத்தம குணத்தைக் கற்பிக்கிறேன்" என மறைந்தான். லட்சுமியுமெழுந்து "அரசனே! அதைரியப்படாதே? நான் உன்னைக் கைவிடேன். அவன் அட்டகாசங்களெல்லாம் கொஞ்ச காலத்துக்குத் தான். இதற்காக உன்மனத்துக்கு சஞ்சலத்தையும் வருவித்து உன்உத்தம குணத்தைக் கைவிடாதே" என லட்சுமியும் அந்தர்த்தானமாகினாள்.

* * * * *

கலியின் கொடுமையே கொடுமை! சிறிது நாட்களுக்குள்ளாக நரேந்திரன் நாட்டில் பஞ்சம் அதிகரித்தது. ஜலம் நிர்ஜலமாய்ப் போய்விட்டது. கொள்ளை நோயும், திருட்டும், பூகம்பமும் உண்டாகி எண்ணிறந்த ஜனங்கள் மாண்டார்கள். பசியினால் வருந்தி அநேகர் இறந்தார்கள். ஓர் வேற்றரசன் வந்து நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். இது செய்தியறிந்த நரேந்திரன் என்னும் அரசனும் அவன் மனைவி சுகுணாவும் இருந்த கொஞ்ச நஞ்ச சொத்துக்களையும் மூட்டை கட்டிக்கொண்டு மத்தியான வெயிலில் கால்கடுக்கப் புறப்பட்டார்கள். ஐயோ! சுகுணா அந்தப்புறத்தில் பத்தடி எடுத்தடி வைத்திராளே! ஆகா! அவள் மிருதுவான பாதங்கள் என்னமாய் நோகுமோ! காட்டையு மிழந்து கல்லுமுள்ளும் செறிந்த காட்டில் தன் மனைவியும் தானும் கால்கடுக்க நடந்து செல்லவும் கடவுள் அமைத்தாரோ? என்று அரசன் அங்கலாய்த்துக்கொண்டு கண்ணீர் ஆறாகப்பெருக செய்வதின்னதெனவறியாது ஓர் ஆற்றினிடமாகப் போந்தனர். அங்கே ஒரு படகில் ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான். அக்கரைக்குச்செல்ல ஆற்றைக் கடந்துபோக வேண்டிநேர்ந்தமையால் அரசன் படகோட்டியை நோக்கி "அப்பா! நாங்களிருவரும் அக்கரைக்குச் செல்லவேண்டியவர்கள். ஆதலால் அக்கரையில் எங்களை சேர்ப்பிப்பாயானால் உனக்கு நாங்கள் வைத்திருக்கிற நகைகளில் நல்லதாய்ப் பார்த்து மிகுந்த விலையுள்ள நகையொன்றைக் கொடுக்கிறோம் என்றான். அதைக்கேட்ட படகோட்டி "ஓ! ஓ! அதுகூடாது. என்னுடைய படகு ஒரு ஆள்தான் கொள்ளும். ஆதலால் முதலில் உம்முடைய மூட்டையைக் கொடும். அதை அக்கரைசேர்த்து பின்பு உங்களையும் சேர்ப்பிக்கிறேன்" என்றான். இதைக்கேட்ட அரசனும் சம்மதித்து "மூட்டையை நீட்ட", மூட்டையையும் காணோம், படகோட்டியையும் காணோம், ஆற்றையும் காணோம், ஒன்றும் காணவில்லை. "ஆகா! இதுவும் அக்கலியின் கூத்தல்லவா? என அரசன் வருந்தி பின்னும் சில தூரம் நடக்க மாளாது தத்தளித்துத் தவிக்கும் தன்மனையாளையு மழைத்துக் கொண்டேகினான். இவர்களோ இரண்டு நாட்களாய் சாப்பிட்டவர்களல்லர்; பசியோ பிராணன்போகிறது? என்னசெய்வார்கள்? அங்கிருந்த மீன் பிடிப்போரிடம் அரசன் சென்று கெஞ்சாதவண்ணம் கெஞ்சி ஒரு மீன்வாங்கி சமைக்கத் தன் மனைவியிடம் கொடுக்க பாங்கிகளால் சமைக்கப்பெற்று சுகமாகசாப்பிட்டுக் காலங்கழித்த இராஜபுத்திரி சமைக்கவழி தெரியாது தியங்கினும் கூடிய மட்டில் மனதைத் தைரியம் பண்ணிக்கொண்டு அங்கே கிடந்த மட்டை, சருகு முதலானவைகளைச் சேகரித்து மூட்டம்போட்டுப் பார்க்க மீனெல்லாம் கரியாகவிருந்தது. அதைக் கண்டு வருந்தி ஆற்றிற்குச்சென்று அதைக் கழுவலாமென்று போனால் ஆற்றுக்குள் மீன் ஒரே குதியாய்க் குதித்துச்சென்றது. இதைக் கண்டு சுகுணா மனமாற்றாது கோவென்றலறினாள். அரசன் ஓடிவந்து உள்ளதையறிந்து வருந்தி "இனி இவ்விடம் இருக்கலாகாது" என்று பயணப்பட்டு ஒரு குக்கிராமத்துக்கு வந்துசேர்ந்தனர். அங்கே பிழைப்பு நடக்க வேண்டி அரசன் கட்டைவெட்டி ஜீவனம்

செய்ய நேர்ந்தது. ஒருநாள் கட்டை வெட்டியபின்பு ஆயாசம்தீர மரத்தடியினில் உட்கார்ந்து தனக்குச்சம்பவித்த இடுக்கண்களையெல்லாம் எண்ணி எண்ணி மனம் புண்ணுவான்.

இப்படியாக சிலகாலம் செல்ல, ஓர் நாட்காலமே வழக்கம்போல் கட்டைவெட்ட நரேந்திரன் அடவிக்குச்செல்ல, சுகுணை மட்டும் வீட்டிலிருந்தாள். இப்படியிருக்க அன்று காலமே ஒரு கப்பல் வந்து இக்கிராமத்தருகில் வரவும் என்னமுயற்சி பண்ணியும் செல்லாமல் நின்றது. இதைக்கண்டு அக்கப்பல் வர்த்தகன் மனம்படி வைதியிருக்க, ஒரு பிராமணன் ஜோசியன்போலும் வர்த்தகனிடம் வந்து "அப்பனே! சுகுணை என்றோர் பெண் இக்கிராமத்தில் வசிக்கிறாள், அவள் வந்து உன் கப்பலைத்தொட்டால் இது நகரும்" என்றான். உடனே வர்த்தகன் அக்கிராமத்துக்குள்ளோடி அவ்வீட்டின் கதவைத்தட்டி சுகுணைவெளி வரவும் நடந்ததைச் சொல்லி கிருபைகூறும் படி கெஞ்சினன். "தன்புருஷன் வீட்டிலில்லாத சமயத்தில் போவது கூடாது" என்று நினைத்து முடியாதென்றாள். கடைசியாக அக்கம் பக்கத்தார் கேட்டுக் கொள்வதிலும், தன்னோடொத்த பெண்கள் வருந்தி பிரார்த்திப்பதாலும், உயிரைக்காக்க வேண்டுமென்ற ஓர் ஜீவகாருண்ணியத்தினாலும் துணிந்து போய்க் கப்பலில் பாதி ஏறினவுடனே கப்பல் வாயு வேகமனோவேகமாய்க் கரை கண்ணுக்கெட்டாத தூரத்துக்கிப்பால் வந்துவிட்டது. என்ன செய்வள் சுகுணை? தன்னைத்தானே நோகிறாள். வர்த்தகனைக் கண்டபடி திட்டுகிறாள். தன் புருஷனைப் பற்றி வருந்துகிறாள். இன்னது செய்வது என்று தெரியாது தயங்குகிறாள். வர்த்தகனோ அவள் தன் கப்பலிலிருக்கும் வரை அபாயமில்லையென்றும் அவள் நல்ல லட்சணமாயிருப்பதால் ஊருக்குச்சென்றதும் கல்யாணம் செய்துகொள்ளலாமென்று மனப்பால் குடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான். நிற்க, நரேந்திரன் சங்கதியைக்கொஞ்சம் கவனிப்போம். நரேந்திரன் வீட்டிற்குச் சாயங்காலம் வந்தான். தன் அருமை மனைவியைக்காணோம். அவன் மனம் பட்டபாட்டை என்னென்போம்? ஆ! "மனையாளில்லா வீடு மயானமென்பார்களே? அது சரியாகப்போயிற்றே என்று அங்கிருந்தவர்களை விசாரித்து சமுத்திரக்கரை சேர்ந்து பார்க்க இவன் கண்ணுக்கு ஒன்றும் தென்படவில்லை. "ஐயோ! தெய்வமே! இன்னுமா சோதனை?" என்றேங்கிச்செய்வதியாதெனவறியாது ஒருநகரத்தில் இராஜவீதி வழியாய்ச் செல்ல அங்கே ஒரு கொட்டகையில் ஏகக்கூட்டமாயிருந்தது. பெரிய அரசர்களும், கீர்த்திமான்களும், ஸ்தானாதிபதிகளும் நிரம்பிய கும்பாயிருந்தது. அவர்களோடு இவனும் சேர்ந்து நின்றுகொண்டிருந்தான். அப்போது அவ்வூரரசன் குமரி குணமணி தன்கையில் மாலையையெடுத்துக் கொண்டு யாரையும் ஏறிட்டுப் பாராது இவனண்டை வந்து இவன் கழுத்தில் மாலையைப்போட்டாள். உடனே விவாஹம் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டு நரேந்திரனுக்கு முடிசூட்டும் வைபவமும் ஒருங்கே நடந்து தம்பதி சமேதராய் வாழ்ந்து கொண்டிருக்கையில் "சுகுணையை தேடும்பொருட்டு முன்னமேயே திட்டம்செய்தனுப்பப்பட்ட சேவகர்கள் அவ்வர்த்தகனையும், சுகுணையையும், அரசன் முன்னிலையில் கொணர்ந்து நிறுத்தினர். சுகுணை தன் நாயகனைக்கண்டதும் புளகாங்கிதம் கொண்டு அரசன் பக்கலில் அடைந்தாள். அரசன் வர்த்தகனுக்குத் தக்க சிட்சை விதித்துத் தன் மனைவி விரதமிருப்பதாகப் பொய்புகன்று தன் மானம் காத்துக்கொண்டதையும் கேள்வியுற்று, தன் மாமனாரிடம் சகல சங்கதிகளையும் செப்பி அவரது அருளையும் பெற்று, கொஞ்ச காலத்திற்குள்ளாக படையெடுத்து மீளவும் தனது மூந்தின நாட்டையும் வசப்படுத்திக் கொண்டு சுகமே வாழ்ந்தனன். அஷ்டலட்சுமிகளும் அவ்வூரிலேயே வாசஞ் செய்துக் கொண்டிருந்தார்கள்.

இக்கதையால் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய தென்னவெனில்,

"குடை நிழலமர்ந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினு நண்ணுவர்"

என்றபடி மகாமண்டலேசுவரனாயினும் அவனும் தனது நாட்டையுமிழந்து கஷ்டத்தை யடைவானென்றும்,

"அறத்திடு பிச்சை கூவியிரப்போரிருந்து
அரசாளினுமாளுவர்"

என்றவாறு ஒரு எளிய பிச்சைக்காரனானும் திடீரென்று நன்னிலைமைக்கு வந்து செங்கோலோச்சுவானென்றும் ஆதலால் மனிதனுக்கு சுகம், துக்கம், இரண்டும் சமமாதலால் இதற்காக வருந்தாது எந்நாளும் நித்யானந்தத்தோடு நற்குணங்களைப் பூண்டு பக்திமார்க்கத்திலொழுகி முத்தியடைவோமாக—என்பதாம். சுபம்.

**THE FUNDAMENTAL BASIS OF PRIMARY EDUCATION.**

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."*

*" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

"பஞ்சவிம்சதிபாக்கியம்"] ஸத்தியம் வத—SPEAK THE TRUTH. ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE."




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 25.] பிங்களஹு ஆடிமீ, 1917ஹு ஜூலைமீ. [சஞ்சிகை 4.

## Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our " terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *One month's credit at the arrears rate* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued †in the middle of a Vol.
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

## General Notice.

i. The *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised ;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to " fluctuations " and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor.*) ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, " VIVEKACHINTAMANI,"
*Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore.*

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.*

†Notice of discontinuance to have effect must be given in time in writing before a New Volume begins in April and after all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say " that every effort will be made to trace them." " If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed " continues the same high authority, " I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should invariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## THE FUNDAMENTAL BASIS OF PRIMARY EDUCATION.

In 1905 when the Director of Public Instruction, Madras, has promulgated his new Scheme of Primary Education and active steps were being taken for giving effect to the same, Mr. C. V. Swaminatha Aiyar called public attention to a series of three articles he wrote in 1903 on "the Fundamental Principle of Primary Education" and to the fourth on "Character-Building," as the process of drawing out the innate tendency in man to evolve what is good in him is called in the West, laying stress on the fact that it should be the first and essential basis of all efforts at a national system of Primary Education. He pointed out, "that American Educators confess the errors of the past and are begining 20th century work with character-building as the basis." Indian Educators also admit "that the hope of the future of India lies in the moral regeneration of its people." And before a dozen years have elapsed, the Great War now raging in the West has opened the eyes of the British people and others that they were equally in error in the conception they have formed of the Ideal of Primary Education as actually carried out by them. It is a fundamental principle of all education that "moral regeneration" ought to be and is the only true and safe basis on which the future hope of any country should be built—if it is not to meet with disappointment and disaster at a grave crisis in the national life of the people. Primary Education to be a success must effect this. The Education of the coming man or citizen must be based on a moral basis, *i.e*, in drawing out the moral being that is in man. So far all are agreed. But when we look to the ways and means, men and methods to carry out this supreme need of the hour, we are confronted with so many differences, difficulties, varieties of opinions, methods and what not, that it is impossible for any one whether it be a *Commission* of Experts or a body of Educationists, to make anything out of the chaos of information regarding men, methods, resources, materials, etc., they may be able to collect together. For it is a Law of Nature to conform to unity of purpose only so far as fundamentals or underlying principles are concerned and then to branch off into infinite varieties so far as details of growth or the law of manifestation is concerned. While the underlying principle may be one to all humanity, the law of manifestation or individual growth and expression as it is sometimes called, would necessarily be of infinite variety; for, it is influenced by so many varieties of circumstances, states and conditions, both objective and subjective, that it is very rare to find two persons all alike in every respect. "Not possibly will the soul all rich, all eloquent with thousand-cloven tongue, deign to repeat itself." In brief, 'Manifest yourself.' And you will find that "there is for you at this moment an utterance as brave and grand, as that of the colossal chisel of Phidias, or the trowel of the Egyptians, or pen of Moses or Dante, *but different from all these*." The italics are ours.

And how will you teach it? Here must every one, each country, state, province or district, each distinct unit from the individual to the nation, from each village community to every province and state, start, each for itself individually, on terms suited to itself and work out its own salvation. Here comes the parting of ways and no external force, no power of Government, no centralised organisation can be of any help from this point; on the contrary, all stereotyping of education by code rules and other iron bound compliances of modern state craft, is a distinct disadvantage; a wilful strangling or smothering of the tender sprouts of national education. It is because of this truth I have studiously avoided entering on details here. One can only lay down the fundamental principle and see that it is adhered to. And if the State can do this much its duty then is merely to watch the growth of the institutions and help it grow on its own lines, taking care that the unfoldment of the soul or the drawing out of the spirit that is in the childman, is the outcome of all the processes of education however varied they may be in practice. Enforce the principle and teach how to apply it and leave the other small details as to means and materials to the resources of local men, minds and talents. They cannot possibly err. For the insisting of the principle which is the true method of education (the "pedagogic method" they call it in the West,) will never give room for the teacher to err in any eggregious way provided he has been able to grasp the principles and assimilate it internally and not merely mechanically—retaining it as a load in his memory—as most teachers now-a-days do. This can be done only by a teacher who has himself realised the truth of the principles he is teaching to his pupils.

'No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*
புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-4.
"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."
பிங்கள வருஷம் ஆடி மீ. } விவேக சிந்தாமணி { July-August. 1917.
FIRST ESTABLISHED, 1893. OUR JUBILEE YEAR, 1917.

"பெற்றேர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேஞ் சேயிகழ்கை
'யாச்சரிய மோதா னவர்க்கு."

## THE FUNDAMENTAL BASIS OF PRIMARY EDUCATION.

### பிரதம வித்யா சிக்ஷை லக்ஷியம்.

1905-ம் வருஷத்தில் சென்னைவித்யா இலாகாத்தலைவர் இந்தியா கவர்ன்மெண்டார் 1903-ம் வருஷத்தில் வெளியிட்ட அவர்களுடைய வித்யாவிர்த்தி முறையின் முக்கியக் கொள்கைகளை யனுசரித்து இவ்விராஜதானியில் பிரதம வித்தையைப் பரவச்செய்வதற்கான புதிய ஏற்பாடு தயார்செய்து வெளியிட்டபொழுது பிரதமவித்யா சிக்ஷையின் லக்ஷியமாயுள்ள கொள்கைகளைப்பற்றி வற்புறுத்தி ம-ா-ா-ஸ்ரீ, ஸி. வி. ஸ்வாமிநாதையர் அவர்கள் தாம் 1903-ம் வருஷத்தில் எழுதிய விஷயங்களிற் கண்டவற்றை யெடுத்து வற்புறுத்தி ஆங்கிலேய பத்திரிகைகளில் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார். இப்பொழுது 12-வருஷங்களாகியும் அம்மூலக் கொள்கைகளை வற்புறுத்திப்பேசவேண்டிய அவசியம் குறையவில்லை. ஆதலால் அதன் முக்கியாம்சத்தைத் திரட்டி முகட்டில் இங்கிலீஷில் தானே அச்சிட்டு அதையே தமிழிலும் வற்புறுத்திக் காட்டுகிறோம். இந்த 20-வது நூற்றண்டு பிறக்கவும் வித்யாவிஷயத்தில் இதற்குமுன்னிருந்த தப்பெண்ணங்களெல்லாம் மாறத்தலைப்பட்டன. அமெரிக்கா தேசத்தார்கள் அதற்குமுன் தங்கள் வித்தியாப்பியாச முறையிலிருந்த குற்றங்குறைகளையுணர்ந்து திருத்திக்கொள்ளத் தலைப்பட்டார்கள். அவர்கள் படிப்பின் நோக்கமெல்லாம் மனம்படியப் பெறுவதற்காகவென்றே யறிந்துகொண்டார்கள். மனம்படியப் பெறுவதெல்லாம் ஸத்யத்தையுணர்ந்து பொய்யைத்தள்ளி மெய்யைத்தழுவிக் கடவுளை வழிபடுவதற்கேயன்றி வேறில்லை. யென்பது அநாதிகாலமுதலுள்ள இத்தேசத்து முக்கிய தர்மம். திருவள்ளுவநாயனர்

"கற்றதனு லாயபய னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்?"

என்றதன் உண்மையை மேற்றிசையார் இப்பொழுதுதான் சிறுகச்சிறுக உணர்ந்து கிரகித்து வருகிறார்கள். இப்பொழுது நடந்துவரும் ஐரோப்பிய மஹாயுத்தம் இந்த உண்மையை பிரிடிஷாரும் உணரும்படி நன்றாக வற்புறுத்திக்காட்டிவிட்டது. ஆதலால் பிரிடிஷ் அதிகாரிகள் அவர்கள் படிப்பு முறையை ஆதியோடந்தம் திருத்த முயன்று ஏராளமான பணச்செலவிட்டு வருகிறார்கள். பிரிடிஷ் கவர்ன்மெண்டில் வித்யாமந்திரியாகவிருக்கும் மிஸ்டர் பிஷர் அவர்கள் இதைப்பற்றிச் சவிஸ்தாரமாய்ப் பேசி ஸர்க்கார் செலவில் வித்யா சீர்திருத்தத்தை முன்னிட்டு ஏராளமாகச் செலவிட வரவு செலவுகணக்கில் மதிப்புப் போட்டிருப்பதை யெடுத்து விளக்கிச்சொன்னார். இந்தியா கவர்ன்மெண்டாரும் பிரதம வித்தையின் முக்கியத்தைப்பற்றி விசேஷ

கவலைகொண்டவராயிருந்தும் யுத்தச்செலவு முடக்கடியினால் முன்போல் செலவு செய்ய சாத்தியமில்லையென்று சொல்லி வருகிறார்கள். இந்தியாவில் எங்கும் பிரதமவித்தை இலவசமாய்ச் சொல்லிக்கொடுக்கப்பட வேண்டுமென்கிறார்கள். பம்பாய் சட்ட நிரூபணசபையில் ஒரு மெம்பரான மிஸ்டர் பேடல் அவர்கள் அவ்விராஜதானியிலுள்ள முனிஸிபாலிடியார் அவர்கள் அதிகாரத்துக்குள்பட்ட பட்டணங்களில் பிரதம வித்தையை எல்லாருக்கும் இலவசமாய்ப் போதிக்க முயலவேண்டுமென்று உத்தேசித்து அப்படி அவர்கள் முயற்சியெடுத்துக்கொள்வதற் கனுகூலமாக ஒரு சட்ட மூண்டுபண்ண உத்தேசித்திருக்கிறார். அவர் அதற்காகத் தயார்செய்த மசோதா இந்தியா கவர்ன்மெண்டார் அநுமதிபெற்று ஜூலை மாசத்து பம்பாய் சட்ட நிரூபண சபையில் ஆலோசனைக்குக் கொண்டுவரப்படுமென்று தெரியவருகிறது. ஆதலால் இந்த சமயத்தில் பிரதம வித்யா சிக்ஷையின் லக்ஷியமான கொள்கை யின்னதென்பதை வற்புறுத்திக் கூற வேண்டியது அவசியமாயிருக்கிறது என்பதை எல்லாரும் ஒத்துக்கொள்வார்கள். எல்லா வித்தைகளின் நோக்கமும் ஆத்மவிர்த்தியேயன்றி வேறல்ல. ஆத்ம விர்த்தியென்றால் அறிவு விர்த்தியென்று அர்த்தம். அறிவு விர்த்தியாவதற்கு குழந்தைகளிடத்தில் ஸ்வபாவமாயுள்ள ஆத்மசக்தியை வளரச்செய்ய வேண்டும். அப்படி ஆத்மசக்தி தானாய் வளருவதற்கான சாதக சாதனங்களே வித்யாப்பியாச முறையென்று சொல்லப்பெறுவது.

"விளையும் பயிர் முளையிலே"

என்பது பழமொழியாதலால், குழந்தைகளுக்கு பால்யத்தில் வித்யாப்பியாசம் எப்படி அமர்கிறதோ அதுபோலவே யிருக்கும் அவர்கள் மனச்சார்பும் பிரவிர்த்தியும். ஆகையால் குழந்தைகளுக்குப் பிரதமவித்தை போதிப்பதில் நாம் எல்லாரும் முக்கியமாய் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அது அவர்கள் சன்மார்க்க வழியில் நடக்க ஆதாரமாயுள்ள அப்பியாசங்களைக் கையாடவேண்டும் என்பதே.

"சன்மார்க்கமே நன்மார்க்கம்"

என்று திருமந்திரோபதேச மிருப்பதால் மனிதனது சத்குணப் பிரவிர்த்தியே இகபரமிரண்டிற்கும் நல்லதாகி "நன்மார்க்கம்" என்று கொண்டாடத்தக்கதாயிருக்கிறது. இந்த சத்குணம் எல்லாக் குழந்தைகளிடத்தும் வித்தில் முளைபோல் மறைந்திருக்கிறது. அதை வெளிப்படுத்துவதே வித்தியாமுறை. அதை வெளிப்படச் செய்வதில் பிரகிருதி-தர்மமறிந்துழைக்கவேண்டியது நம்முடைய கடமை.

"எள்ளுப்போட்டால் கொள்ளு முளைக்குமா?"

அஃதேபோல குழந்தைகள் அவரவர்களுடைய பூர்வ ஜன்மவாசனைப்படி அமைந்த ஸ்வபாவ குணத்துக்குத் தக்கபடியே மேல் விர்த்தியடைவது சாத்தியமாகும். அதற்கு மாறாக நடப்பது இயற்கை விரோதமால் சாத்தியமில்லை. ஆகையால் வியவசாய குலத்தில் பிறந்து பழகிய பிள்ளைக்கு ராயசக்காரன் படிப்பும், ராயசக்காரன் தொழிலுக்கு வியவசாயப் படிப்பும் பொருத்தமாயிராது. ஆயினும் எல்லாருக்கும் குணம் ஒன்றே. ஆதலால் 'மூலதத்துவத்தை யறிந்து குழந்தைகளைப் பழக்கினால் அவரவர்கள் ஸ்வபாவத்துக்குத் தக்கபடி குணப் பிரவிர்த்தி யுண்டாகும். அதைக் கொண்டு அவரவர்களுடைய மனச் சார்பறிந்து மேலே ஜீவனத்துக்குவேண்டிய தொழிலை அவரவர்கள். காலக்கிரமத்தில் படித்துப் பழகித் தேறுவார்கள்.

தொழிலில் கருமானானாலும் பெருமானானாலும் எல்லாருக்கும் நுட்ப புத்தியும், கைப்பழக்கம், பார்வை நுட்பம், கேள்விநுட்பம் முதலான பழக்கவழக்கங்களும் இன்றியமையாதனவாம். ஆகையால் பிரதமவித்தை குழந்தைகளுக்கு ஸ்வபாவமாயுள்ள இயற்கைக் குணங்கள் வளர்ந்து விரிந்து விருத்தியடையத்தக்கனவாக விருக்கவேண்டும். பார்ப்பாரைப் பார்த்து நடித்துப் பழகுதல் இலகுவாம்.



இதற்கு கிளிப்பிள்ளைப் படிப்பு என்று பேர். ஆனால் தானாகப்பார்த்துச் சிந்தித்து எதையும் ஸ்வயமாக எண்ணித்துணியும் சக்தி உலகில் அரிதாம். தானாக எண்ணித்துணியும் துணிபும், "துணிந்தபின் எண்ணுவ மென்பதிழுக்கு" என்பதற்கு ஒக்க, முன்வைத்தகாலைப் பின்வைக்காது வினைத்தது முடிக்கும் ஆற்றலுடையவர்களுமே ஸ்வதந்திர புத்தியுள்ளவர்கள். இப்படிப்பட்ட ஸ்வதந்தர புத்தியுள்ளவர்களே உலக விர்த்திக்கு வேண்டியவர்கள். இவர்களாலேயே உலகம் முன்னுக்கு வரத்தக்கது. ஆகையால் இப்பேர்ப்பட்டவர்கள் எங்கிருந்தாலும் உலகப் பிரவித்தராவர். உலகப் பிரவித்தர் என்றால் உலகத்தில் மேலான ஸித்தியடைந்தவர்கள் என்று அதனால் யாவரும் அறியப்பெற்றவர்கள். குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதில் அவர்கள் மனதையும் இந்திரியங்களையும் கூர்மைப்படுத்தி அவைகள் தம் தொழிலைக் குறைவறச் செலுத்தத் தக்கவையாகச் செய்யவேண்டும். இந்திரியங்கள் மனதுக்கும், மனது அறிவுக்கும் உள்பட்டவையாக விருக்கவேண்டும். அப்படிக்கின்றி "தன்னைக் குடிகெடுக்கும் நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யின்" படுகுழியில் விழுந்தகப்பட்ட யானைபோல் ஸ்வதந்தர புத்தியை இழந்துவிடுவார்கள். ஆகையால் மனதைக் கூர்மைப்படுத்தி அந்த மனதாங் கருவி சரியாக ஆளப்பட நல்லறிவு விர்த்தியாக வேண்டும். "தன்னைத்தான் நெஞ்சம் கரியாகத் தானடங்கின் பின்னைத்தானெய்தாற் பயனில்லை." ஆகையால் மனதைக் கூர்மைப்படுத்துகையில் மனச்சாக்ஷியாம் உள்ளத்தையும் சுத்தியாக வைத்துக்கொண்டிருக்கச் செய்யவேண்டும். இல்லையேல் "மாசமறு" படிந்துவிடும். விவேகத்தாய் தன் பிள்ளைக்குத் தொட்டில் பழக்கமாய்க் கற்பித்துள்ள விதம் ஒவ்வொரு தாயும், இளம்பிள்ளைகளைப் படிப்பிக்கும் ஒவ்வொரு போதகாசிரியரும் அந்தத்தாய் ஸ்தானத்திலிருந்து குழந்தைகள் மனதில் சன்மார்க்கம் படியும்படி பழக்கல்வேண்டும். "நூலைப்போல சேலை: தாயைப்போல பிள்ளை" யென்றிருப்பதால் தாயின் குணமே குழந்தைக்குப் படியும். ஆகையால் தாய்மார்களெல்லாம் விவேக சம்பன்னர்களா யிருக்கவேண்டும். மௌட்டிய நிலையிலிருந்து பிள்ளையைப் பெறுகிறவர்களெல்லாம் தேசத்தில் மௌட்டியத்தை வளரச் செய்கிறவர்களாகிறார்கள்.

'விவேகத்தாய்' தானே தேசக்ஷேமத்துக்கு இன்றியமையாத சாதனமும் சாதகமுமாகின்றனள். அவள் தன் குழந்தைக்கு நன்மார்க்கத்தைத் தொட்டிற் பழக்கமாய்ப் படியவைப்பாள்.

"தன்னைடை போல்நடப்பாய்
தக்கபேர் நீயெடுப்பாய்
பிள்ளையென்னும் பக்குவத்தே
பெருங்கீர்த்தி நீபடைப்பாய்.

"வாலிபந்தா னென்றுசொல்லி
மாசுமறு செய்யாதே
பாலியந்தா னென்றுசொல்லி
பழிபழுது செய்யாதே.

"பிஞ்சில் விளைவதுவே
பெரியமர மானபின்பு
மிஞ்சிநிற்கும் வாசனையை
வேறுக்கக் கூடியதோ.

"மட்டில்லா வுண்மையிது
மனதுதனில் நீதரிப்பாய்
தொட்டிற் பழக்கமதே
சுடுகாடு மட்டுமம்மா."

என்று இப்படியாக மேலான நீதி தத்துவங்களை தன் சொந்த அனுபவத்திலிருந்து எடுத்தோதிப் பச்சை மரத்தாணிபோல் அது குழந்தையின் இளமனதிற் பதியும்படி செய்யவேண்டும். இதுதான் உண்மையான பிரதமவித்தை.

162035
600 008.

## ON THE FIRST TEACHING OF LITERATURE TO CHILDREN.

## சிறுவர்களுக்கு கற்பிக்கவேண்டிய பிரதம போதனுமுறை.

சிறுபிள்ளைகளுக்குத் தெரியவேண்டிய நூதன விஷயங்கள் எல்லாவற்றையும் நாம் அவர்களுக்குச் சொல்லவேண்டுமென்று மட்டும் மொத்தமாய்க் குறிப்பிட்டிருக்கிறோம். அதைப் பற்றிச் சற்று இங்கு விவரித்து எழுதுவோம். வீட்டிலுள்ள அத்தை பாட்டிகளிடத்திலிருந்து கதைகள் கேட்பதிலும் தாங்கள் கேட்ட கதைகளைப் பிறருக்குச் சொல்வதிலும் சிறு குழந்தைகள் மிகுந்த ஆவலுள்ளவர்களென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஆகையால் புது விஷயங்களை யவர்களுக்கு விளக்குவதற்குக் கதைகள் ஒரு பெரிய சாதனம் என்று நிச்சயமாய் சொல்லலாம். முக்கியமாய் அவர்களிடத்தில் நற்குணங்களும் நல்லொழுக்கங்களும் ஏற்படும்படி கதைகள் மூலமாய்த்தான் நாம் பிரயாசைப்படவேண்டியது. முதல் முதல் பிள்ளைகள் கையில் கொடுக்கப்படும் புஸ்தகங்களில் கதைகள் நிரம்ப இருப்பதற்கு இதுதான் காரணம். நமக்குள் பழக்கத்திலிருக்கும் எல்லாக் கதைகளும் இந்த மாதிரி பயன்படா. இப்படி யுபயோகப்படத்தக்க கதைகள் எத்தன்மைத்தாயிருக்க வேண்டுமென்றும் அவைகளை யெப்படிச்சொல்ல வேண்டுமென்றும் கீழே யெழுதுவோம்.

1. கதையானது சாதுர்யமானதும் பிள்ளைகளுக்கு இன்பத்தைத் தரத்தக்கதாயுமிருக்க வேண்டியது. ஒரு முக்கியமான நீதிவிஷயம் அடங்கினதாயும் கதையில் சொல்லப்படும் மற்ற எல்லா விருத்தாந்தங்களும் இதை யநுசரித்திருப்பதுடன் இதை வற்புறுத்துவனவாயுமிருத்தல்வேண்டும். கதையின் போக்கு அதைக் கேட்கும் பிள்ளைகளுக்கு அதிலடங்கிய நீதியை விளக்கி யெடுத்துக் காட்டும்படியாகவும் வேறு எத்தனையோ விருத்தாந்தங்கள் கதையில் கலந்திருந்தபோதிலும் கதையின் முக்கிய உத்தேசமெதுவோ அது மட்டும் எப்பொழுதும் மேலிட்டிருக்கும்படியாகவும் நாம் பார்த்துக்கொள்ளவேண்டியது.

2. கதைகளிலடங்கிய விஷயங்கள் பிள்ளைகளின் மனோபாவங்களுக்கு ஒத்திருக்கவேண்டியது அவசியம். பிள்ளைகளுக்கு மொத்தத்தில் 'நன்மை விதைத்தால் நன்மைவிளையும், தீமை விதைத்தால் தீமை விளையும்' என்று பெரியோர் சொல்லத்தெரியும். அவர்கள் கேட்கும் கதைகளிலும் இந்த நியாயம் ஏற்பட்டிருக்கிறதா என்று ஆவலுடன் பார்ப்பார்கள். ஆகையால் கதையின் விருத்தாந்தங்கள் இந்த அபிப்பிராயத்தை யொட்டியிருக்கவேண்டும். ஸாதாரணமாய் பிரபஞ்சத்தில் நல்லவர்கள் துன்பப்படுவதும் கெட்டவர்கள் விளங்குவதும் நாம் காணலாம். இது ஸகஜமேனும் இந்த மாதிரி நாம் சிறு குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகளை முடிக்கக்கூடாது. இது அவர்களுக்கு அநியாயமாய்த் தோன்றும். இதின் காரணமும் அதிலிருந்து அறிந்து கொள்ளவேண்டிய நீதியும் வயது வந்தவர்களுக்குத் தெரியுமேயல்லாது சிறு பிள்ளைகளுக்குப் புலப்படாதாகையால் அவர்கள் வயதுக்கும் அறிவுக்கும் தக்கபடி எந்தமட்டில் அவர்களுக்கு விளக்கமுடியுமோ அந்த மட்டில்தான் நாம் கதையில் பிரயோகிக்கவேண்டும்.

3. கதையானது நல்லொழுக்கத்தாலுண்டாகும் நன்மைகளை யெடுத்துக் காட்டுவதாயிருக்கவேண்டுமே யொழிய கெட்ட நடத்தையினால் விளையும் தீமைகளை யெடுத்துக் காட்டுவதாயிருக்கக்கூடாது. இந்த மாதிரி கெட்ட நடவடிக்கைகள் ஒருவனிடமிருக்குமாயின் இன்ன இன்ன தீங்குவிளையும். ஆகையால் இவைகளை நீக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் இவைகளை யெடுத்துச்சொல்லலாமென்று சிலர் அபிப்பிராயப் படலாம். அது தப்பு. அவைகள் கூடாதென்று கண்டிப்பாய் சொல்வதற்காகக்கூட அவைகளைப்



பற்றிப் பேசக்கூடாது. இப்படியும் நடவடிக்கைகள் உண்டு. ஆனால் நாம் அவற்றில் பிரவேசிக்கக்கூடாதென்று அவர்களுக்குத் தோன்றச்செய்வதைப் பார்க்கிலும் அப்படியும் உலகத்திலுண்டென்ற விஷயமே தெரியாமலிருப்பதுதான் மிக்க லாபகரமானது. அபாயங்கள் உண்டென்று தெரிந்து அந்த வழியில்போய் அவைகளை எதிர்த்து ஜெயிக்க முயலுவதைப்பார்க்கிலும் அவ்வழியே போகாதிருத்தல் நன்று. ஆகையால் பிள்ளைகளுக்கு மனவருத்தத்தையும் பயத்தையும் உண்டுபண்ணக்கூடிய கதைகளாயில்லாமல் எப்பொழுதும் உண்மைபேசுதல் பெரியோருக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் முதலிய நற்குணங்களினால் உண்டாகக்கூடிய லாபங்களை யெடுத்துக்காட்டும் கதைகளாயிருக்கவேண்டும். (வயது சென்றால் குழந்தைகளுக்கு பால்யப் பழக்கமாய் அமைந்த சுபவாசனையானது தீமைகளை யுணரும்போது அந்த வாசனை படியாதபடி பாதுகாக்கும்.)

4. கதையிலடங்கிய விருத்தாந்தங்கள் ஸாதாரணமாய் பிள்ளைகள் அநுபவத்தில் நடக்கக்கூடியதாயிருக்கவேண்டும். அசாத்திய அற்புதங்களாயிருந்தால் பிள்ளைகளுக்கு அவைகளில் நம்பிக்கை வரமாட்டாது.

மேற்குறித்த இலக்ஷணங்களடங்கிய கதைகளைப் பொறுக்கியெடுப்பது உபாத்தியாயரின் முதல்வேலை. பிறகு அதை சாதுர்யமாய் எடுத்துச்சொல்லும் சக்தி யவசியம். சிலருக்கு இந்த சாமர்த்தியம் ஸ்வபாவத்திலேயே இருப்பதுண்டு. அவர்கள் வாயைத்திறந்து விட்டால் எல்லாரும் கேட்க ஆவல்கொண்டு செவி கொடுப்பார்கள். ஆகிலும் பழக்கத்தினாலும் இந்த சாமர்த்தியம் ஏற்படலாம். இதில் பின் வருவனவற்றை முக்கியமாய் கவனிக்கவேண்டியது. முதல் முதல் கதைமுழுமையும் நாம் நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டியது. சிலர் கதையைச்சொல்ல ஆரம்பித்துப் பாதியானவுடன் நடுவில் சில ஸங்கதிகள் கோர்வையாய் ஞாபகத்துக்குவராமல் 'இதோ வருகிறேன் சற்றுப்பொறு' என்று நிறுத்தி யோசிப்பதுண்டு. மறக்கப்பட்ட விஷயங்கள் ஞாபகத்துக்கு வருகிறதுமில்லை, ஆரம்பித்த கதை முடிகிறதுமில்லை. சொல்லவந்தவருக்கும் கேட்கப் புகுந்தவர்களுக்கும் எவ்வளவு மனவருத்தமாயிருக்கும்! ஆகையால்தான் நாம் சொல்லப்புகுமுன் கதை முழுமையும் நன்றாய் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டியது. அப்படிச் செய்வதுடன் எந்தமாதிரி பிள்ளைகளுக்குச் சொன்னால் அதிலுள்ள நீதி நன்றாய்த் தெரியவருமோ அந்தமாதிரி யதன் பாகங்களை யேற்படுத்திக் கொள்ளவேண்டியது. சில கதைகளில் அனேக அம்சங்கள் அடங்கியிருக்குமாகையால் இன்னதுதான் இதில் முக்கிய உத்தேசமென்பது விளங்காமலேயிருக்கும், முதலில் கதையை யொருமுறை சொல்லியும் அதிலுள்ள நீதி நன்றாய்த் தெரியும்படி திரும்பியெடுத்து முக்கிய அம்சங்களைச் சொல்லுதலும் ஆக இரண்டுமுறை திருப்பவேண்டிய அகத்தியமில்லாத வண்ணமாய் ஆரம்பித்திலேயே நன்றாய் எல்லாப் பாகங்களையும், அவைகளை விவரித்துச் சொல்லவேண்டிய முறைமையையும் ஆலோசித்து வைத்துக் கொள்ளவேண்டியது. அப்படி நாம் சொல்வதில் கதைபாதி கேட்டவுடனே முடிவு இன்னமாய்த்தானிருக்கும் என்று பிள்ளைனே நிதானிக்கக் கூடியதாயிருக்கவேண்டும்.

மேலும், வெறும் கதையைமட்டும் சொல்லாமல் அங்கங்கு நின்று, இடங்கள், மனிதர்கள், வஸ்துக்கள் இவைகளைப்பற்றி ஸாவகாசமாய் வர்ணித்துச் சொல்லவேண்டும். கதைதானே முக்கியமென்று இவைகளைப்பற்றி யொன்றும் சொல்லாமல் ஓட்டிவிடக்கூடாது. இந்த வர்ணனைகளினால் கதையின் சந்தர்ப்பங்கள் தெளிவாகலாம். மேலும் கதையொரேயடியாய் 'காசிக்குப்போனான் காவடிகொண்டு வந்தா'னென்று மட்டுமிருந்தால் சுவாரசியமாயிருக்காது. இந்த வர்ணனைகளினால் 'மேல்

என்ன என்ன!' வென்ற ஆவலுண்டாகி கதையில் சிரத்தை யதிகரிக்கும்.

கடைசியாக கதைகளைக் குழந்தைகளுக்கு எளிதில் தெரியும்படி சிறிய பதங்களைக் கொண்டு சொல்லவேண்டும். ஆனால் குழந்தைகள் பேசும்பொழுது உபயோகிக்கிறார்களே கொச்சைவார்த்தைகள் அவைகளையுபயோகித்து நாம் பேசக்கூடாது. நம்முடைய பேச்சு உண்மையில் வேறு மாதிரியென்று அவர்களுக்குத் தெரியுமாகையால் அவர்களைப் போல் நாமும் பேசினால் தங்களைப் பரிகாசம் செய்வதாய்த்தான் நினைப்பார்கள். அப்படிக்கில்லாமல் சாதாரணமாய் நாம் பேசவேண்டும்.

மேல்சொன்ன ரீதியில் கதைகளைப்பொறுக்கியெடுத்து சாதுர்யமாய் பிள்ளைகளுக்குச் சொல்வதினால் அனேக புது விஷயங்கள் தெரிவதுடன் நன்னடவடிக்கைகளும் நற்குணங்களும் படிய இடமுண்டு. அதோடுகூட இக்காலத்துச் சிறுவர்களுக்கும் புராதன வழக்கங்களைப்பற்றிப் பேசினால் யோசனையின்றி மிக இளப்பமாகப் பேசுவது வழக்கமாயிருக்கிறது. காலசக்கிரம் சுழலச் சுழல கல்வியும், நாகரீகமும், அதனால் புத்தி விர்த்தியும் எவ்வளவோ அதிகரித்து வருகின்றன. முதலில், ஒரு நூதன விஷயம் அல்லது சூக்ஷ்மம் அல்லது யந்திரத்தைக் கண்டுபிடிக்கும்பொழுது எவ்வளவோ பாடுபட்டு தன்னுடைய சுயபுத்தி வலிமையாலும், யுக்தி விசேஷத்தாலும் கண்டுபிடித்து சொல்லமுடியாத கஷ்டநஷ்டங்களுக்குட்பட்டு பலதடவை தன்னுடைய யத்தனங்கள் தானறியாத தப்புத்தவறுதல்களால் பலிக்காமற்போய் பின்பு, கடைசியில் உண்மை வழியின்னதென்று கண்டுபிடித்து மற்றவர்கள் தன்னைப்போல் பிசகிப்போகாவண்ணம் அவ்வுண்மையை நன்றாக விளங்கவைக்கப் பாடுபடவேண்டியிருக்கிறது. பின்பு வருகிறவர்கள் எவ்வளவோ பாடுபட்டு கண்டுபிடிக்கப்பட்ட சூக்ஷ்மத்தை சுலபத்தில் தங்களுடையதாக்கிக்கொண்டு அதற்குமேல் தங்கள் புத்தியை விர்த்திசெய்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். இதனால் காலம் செல்லச் செல்ல உலகம் விர்த்தி யதிகரித்துக்கொண்டு வருவதற்கு மிகவும் சகஜமாகத் தோன்றும். ஆனால் இப்படிப்பட்ட விர்த்தியுண்டாவதற்குப் பின்காலத்து மனிதர்கள் முன்காலத்து மனிதர்களிடமிருந்து வந்த அறிவு, ஞானம், ஆசார, அனுஷ்டானங்கள், இவற்றில் உபயோகமாயுள்ளவற்றைப் பகுத்தறிந்து கிரகித்துக்கொண்டு உபயோகமல்லாதவற்றையே ஆராய்ந்து தள்ளுவதற்கு வேண்டிய பகுத்தறிவு விசேஷமாயிருக்கவேண்டியது நீரா அவசியம். இப்பகுத்தறிவு குறையக் குறைய, ஒரு தேசத்து ஜனங்கள் தங்கள் முன்னோர் நிலைமையை விடத் தாழ்ந்த நிலைக்கு வருவதும், மேற்குறித்த பகுத்தறிவு விர்த்தியாக ஆக அவர்களும் காலம் போகப்போக மேன்மேலும் விருத்தியடைந்து மேன்மைப்பட்டு வருவதும் பிரத்தியக்ஷமாக விளங்கும். அன்னிய வழக்கங்களை அனுசரிப்பதிலும் இக்கோட்பாடு முற்றும் பொருந்தத்தக்கதே. ஆகையால் நாம் ஒரு விஷயத்தை நல்லது கெட்டதென்று அதை அனுஷ்டிக்கவோ தள்ளும்படி செய்யவோ தீர்மானிக்குமுன் நமது பகுத்தறிவை உபயோகித்து அதிலுள்ள குணத்தையும் குற்றத்தையுமாராய்ந்து குணமாயிருப்பதைக் கிரகித்துக்கொண்டு குற்றமாயிருப்பதை விலக்கித் தள்ளல் வேண்டும். இப்பகுத்தறிவு குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே பிடித்து பழக்கப்படவேண்டும். மிகவும் இளம்பிராயத்தில் கற்பனாசக்தியாயும், பிறகு விசார சக்தியாயும் விருத்தியடைந்து, பகுத்தறிவு நன்கு ஊன்றும்படிச் செய்வது, பிரதம வித்யாபோதனையின் லக்ஷியமாகும். இதைப்பற்றி கொஞ்சம் விவரித்துச் சொல்லுவோம்.

சிறு குழந்தைகள் பொம்மை முதலியவைகளை வைத்துக்கொண்டு விளையாடும்பொழுது பொம்மை தூங்குகிறது, அழுகிறது என்றுபற்பல பாவங்களை கற்பித்து விளையாடுவதைப் பார்த்திருக்கிறோம்.



இளம் பிராயத்தில், கற்பனா சக்தியாயிருக்கும். இதுவே வயது ஆக, ஆக ஒவ்வொன்றையும்பற்றி விசாரித்துத் தெரிந்துகொள்ள விரும்பும் விசார சக்தியாயிருக்கிறது. வயது முதிர்ந்தவர்கள், இது சம்பிரதாயம், இது இப்படித்தான் இருக்கும், அது அப்படித்தான் நடக்கும் என்று வேறு கவலைகளால் விசாரசக்தி குறைந்திருப்பதுபோல் பாலர்களிருப்பதில்லை. உலக் கவலையற்று, தூயமனத்தோர்களாகையால் ஒவ்வொன்றையும், ஊன்றி விசாரணை செய்யும் சக்தி பாலர்களுக்கே மிகுதி. முன் ஒரு சஞ்சிகையில் பாலர்களுக்குள்ள விசார சக்தியைப் பற்றி எழுதியிருந்ததை வாசித்த ஒரு மாது பின்வருமாறு சொன்னாள்: "பத்திரிகையில் பாலர்களுக்கு விசாரபுத்தி யதிகம்" என்று கூறியிருப்பதை நான் சாக்ஷாத்காரமாய் என் மைந்தனிடம் பார்த்திருக்கிறேன். அவனுக்கு இப்பொழுது வயது ஐந்து. கொஞ்ச காலத்திற்குமுன், மதுரையில் வைகை நதியில் ஜலமில்லாமல் வரண்டு, ஜனங்கள் அங்கங்கு ஊற்றுகள்தோன்றி ஜலத்தை உபயோகித்துக் கொண்டிருந்த காலத்தில், நான் என் தகப்பனாருடனும், மைந்தனுடனும், அவகாசமாய் வரண்டிருந்த வைகையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது விளையாட்டாக மணலைப் பறித்துக்கொண்டிருந்தோம். கொஞ்சம், தோண்டினவுடன், ஜலம், குபீரென வெளிவந்தது. இதைக்கண்ட என் மைந்தன் 'அம்மா, ஏன் இவ்வளவு ஜலத்தையும் கீழே வைத்துக்கொண்டு அதன்மேல் மணலைப் போட்டு மூடிவைத்திருக்கவேண்டும். தோண்டும் கஷ்டம் எதற்கு, ஜலத்தின்கீழ் மணலிருக்கவேண்டியிருக்க அதை ஜலத்தின்மேல் போட்டு மூடியிருப்பது அதிசயமாயிருக்கிறதே,' என்று கேட்டான். அவனுக்கு திருப்திகரமாய் பதில் சொல்ல, எங்களால் முடியவில்லை. பிள்ளைகளை வளர்க்குமுறையில் வளர்க்க கற்றுக்கொள்ளும் வித்தை மிக்க கஷ்டவித்தையே. ஆனால் அப்படி பயின்றுக் கொண்டால் பாலர்களுக்கு புத்தி விசாலமாயிருப்பதோடு அல்லாமல் நமக்கும் மிகப் பலனைக்கொடுத்து அறிவை விருத்திச்செய்கிறது என்றனள்.

குழந்தைகள் பொம்மைகள் முதலியவைகளைக்கொண்டு விளையாடும்பொழுது அவைகளின் உறுப்புகளை அவர்களுக்குத் தெரிந்த வார்த்தைகளில் சிறு பாட்டுகளாக அமைத்து, அவர்களை கற்கச்செய்திடில் அதைக் கற்பதே அவர்களுக்கு ஒரு விளையாட்டாயிருப்பதோடு, அவர்கள் உபயோகப்படுத்தும் சாமான்களைப் பற்றிய முழு விவரங்களையும் அறிந்துக்கொள்ளுகிறார்கள். பாலசிக்ஷையின் முதல்பாடமாகிய அ என்னும் அக்ஷரத்தை எழுத கற்றுக்கொள்ளாத மழலைச்சொல் கூறும் குழந்தைகள் இம்மாதிரிப் பாட்டுகளை நன்கு மனப்பாடம் செய்து அதற்குரியவைகளைக் காட்டி அவைகளின் கருத்தையும் கிரகித்திருப்பதை பிரத்தியக்ஷமாகப் பிரார்த்திக்கிறோம். அர்த்தம் விளங்காமல் வாசகப் பாடத்தில் உள்ளதை, தலைகீழாக மனப்பாடம்செய்து, தட்டுத் தடையின்றி அதை வாசித்தும், பாராமல் அதை ஒப்பித்தும், இவ்வளவு தூரம் தெரிந்துள்ள கதையின் ஒரு அம்சம்கூட மனதில் பதியாமலும், விளங்காமலும், தற்கால போதனாவிதிப்படி மூன்றாவது வகுப்புகள் வரை பரீக்ஷைகள் தேறியிருக்கும் பாலர்களைப் பார்த்திருக்கிறோம். சுபாவமாக, பாலர்கள் எல்லாருக்குமே புத்தி விசாலம் அதிகமானது. ஆனால் பள்ளியில் நீதியேயில்லாமல், குருட்டுத்தனமாய், மனப்பாடம் செய்யும் முறையால், வயது 8, 9, ஆயினும், மூன்று வகுப்புகள் வாசித்திருந்தும், பள்ளியிலே சேராத மழலைச் சொல்கூறும் குழந்தைக்குள்ள கிரகிக்கும் சக்திகூட இல்லாமல், இழந்து தவிக்கிறார்கள். போதனாமுறையின் விதிகள் சிறிது இடைஞ்சலாயிருப்பினும் உபாத்தியாயர்கள், தங்கள் சொந்த ஊக்கத்தாலும் முயற்சியாலும், பாலர்களுக்குரிய தங்கள் கடமையை திருப்திகரமாய்ச் செய்யக் கடமைப்பட்டவர்களாயிருப்பார்கள். கிராமாந்திரங்களில் தங்களிடம் வாசிக்கும் பாலர்கள் அநேகமாய் தங்களிடம் படிக்கும் பிரதம சிக்ஷையோடுவிட்டு, ஜீவனத்தொழில்களிற்

பிரவேசிக்கிறார்களென்பதையும், அப்படி வாசிக்கும் சொற்பகாலத்திற்குள் பொதுவாய் ஒவ்வொரு விஷயங்களிலும் ஞானமும், நல்லது-தீது, சுலபவழி-கடினவழி என்னும் அறிவும் முக்கியமாய் பகுத்தறிவும், வேண்டியதென்பதை நன்கு உணர்ந்தும், கிராமாந்திரங்களில் தாய்தந்தையர்கள், பாலர்க்குரிய சிக்ஷையைக்கொடுக்கும் சக்தி குன்றினவர்களாயிருக்கிறார்களென்பதையும் ஆதலால் தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட பாலர்களின் சிக்ஷைக்கும் கடைத்தேறுதலுக்கும், பாடசாலை மானேஜர்களும் வித்யா இலாக அதிகாரிகளும், உத்திரவாதிகள், எனப்படினும், தாங்களே, முக்கிய உத்திரவாதிகள் என்பதையும் உபாத்திமைத் தொழில் ஜீவனோபாயத்தொழிலாக மாறியிருப்பினும் அதற்குள்ள மகிமையும், முக்கியப் பொறுப்பும் குன்றவில்லையென்பதையும் தாங்கள் சொற்ப சம்பளத்தினரேயாயினும் தாங்கள் 'ஆசான்' 'குரு' என்னும் ஸ்தானத்திலிருப்பவர்களென்பதையும் நன்கு உணர்ந்து, அதன்படி நடப்பதற் கிடையூறாக, என்ன இக்கட்டுகளிருப்பினும், அதை பொருட்படுத்தாது, தங்கள் கடமையைச் செய்யத்துணிந்து, அதற்குள்ள சிரமத்தையும் வகிப்பார்களென்றும் நம்புகிறோம். பாலர்களுக்குரிய பகுத்தறிவை விருத்திசெய்யாது கடைமையில் தவறும் தாய்தந்தையரும், ஆசிரியரும் சத்துருக்களே, எனப் பெரியோர்களும் பின்வருமாறு சொல்லியிருக்கின்றனர்.

> "நீதநன் றறிவிலாச் சேய ரென்னெய்வார்
> கோதற வவரைநன் னெறியிற் கூட்டிடா
> தேதங்க ளவர்மு ந்செய் திழிவைக் கற்பிக்குந்
> தாதைதாயாசிரியர் புதல்வருக்குச் சத்துருக்களே.

இப்படியிருக்க, 3-வயதுக் குழந்தைகளுக்கெல்லாம் கிண்டர் கார்டனில், விளையாட்டுப்போல் படிப்புச் சொல்லிக்கொடுத்து அவர்கள் புத்திவிர்த்தி தேகவிர்த்திக்கு வேண்டியவைகள் செய்யப்படுகின்றன என்று, ஒரு பெரியவரிடம் பேசிக்கொண்டிருக்கையில் அவர் சிறு குழந்தைகளுக்குச் சொல்லும் சிறு கதைகள் பல சொன்னார். கிண்டர்கார்டன் முறையைத் தெரிந்தவர்கள் ஆராய்ந்து பார்த்து அவைகளின் உபயோகத்தை நிதானித்தறியும் பொருட்டு, சமயம் நேர்ந்தபோது பாலர்களுக்குரைக்கும் சிலபாட்டுகளை வரைந்திருக்கிறோம், பின்னும் வரைவோம்.

## THE STORY OF THE FAMOUS CHOLA KING OF TIRUVARUR.

*From a classic source of dramatisation known as "Tiruvarur Gipsy-song."*

### "மனுநெறிகண்ட சோழன் கதை"

(திருவாரூர்க் குறவஞ்சி.) *

* [குறவஞ்சி யென்றால் குறத்தி பாட்டு என்று அர்த்தம் கொள்ளும். "இறப்பு நிகழ்வெதிர் வென்றுமுக் காலமுந் திறப்பட வுரைப்பது குறத்தி பாட்டே" என்பதனால் இதன் சிறப்பு விளங்கும். இந்தக் குறத்திபாட்டு அகப்பொருள், புறப்பொருள் என்னுமிவற்றன், புறப்பொருளைக்கொண்டு அகப்பொருளை யுணர்த்துவதாகும். 'தலைவன்' என்பது "பதி" அல்லது "பரமாத்மா." 'தலைவி' யென்பது "பிரத்தியகாத்மா" (பாசக்கட்டு நீங்கிய பசு). 'தலைவன்' பவனிவர, "பூதமொடு பழகிவரு இந்திரியங்களாம்" மகளிர் அவர் பவனியைக்கண்டு மோகிக்க, 'தலைவி' மோகினி யுருக்கொண்டுவந்து தலைவனைக்கண்டு மயங்கலும், காமவேதனைப்படுதலும், பாங்கிமார் உபசரித்தலும், குறத்திதோன்றலும், அவளை "யார்?" என்று வினவ, தலைவனது மலை, நாடு, ஆறு முதலியவற்றின் வளங்கூறி அவை தன்னுடையவாகப் பொருள்படக் கூறலும், பிறகு தலைவி குறிகேட்டலும், 'நீ தலைவனை அடைவாய்' எனக் குறி சொல்லும் அச்சமயம் பகவான் குறவனாகத்தோன்றி குறத்தியைத்தேடி வருதலும், அவ்விருவரும் சந்தித்தலும், அவ்விருவரது ஐக்கியத்தில் தலைவனும் தலைவியும் இரண்டறக் கலந்து நிற்பதுமான காட்சி அற்புதமாயிருக்கும். இது நாடகமாக நடிக்கப்படும்பொழுது கண்ணையும் கருத்தையும் கவர்ந்து எண்ணையும் மெழுத்தையும் விழுங்கி "உண்ணின்று இலங்கும்" உண்மைப் பொருளைத்தழுவி நிற்கும். ஷோடச கலையாகிய "ஸாதாக்கியம்" என்னும் நித்திய வொளியே (Eternal Light) திருவருட் குறத்தி. அவளைக்கண்டு அவள் குறிசொல்லக்கேட்ட ஒருவர் அந்த திருவருட் சோதியாம் 'குறத்தி'யைப் பின்வருமாறு புகழ்ந்து பாடியிருக்கிறார்.

#### 'சிரிப்பாணிக்' குறத்தி.

"SHE MADE A LAUGHING-STOCK OF ME"

> "சின்னஞ்சிறுக்கியவள் சிங்பாதம் பெற்றமகள்
> கன்னக்குறத்தியவள் கண்மணியுள்ளே நுழைவள்
> வன்ன வடிவழகியவள் வாயமுத மூன்வளர்க்கும் [பெற்றியவள்



> தென்னைமரத் தடிநீர் தலையிற் றேங்காயின நீராம் [போல்
> புன்னைமரத்தடிநீர் மாறுப் பச்சைநிற மாயிடும்போல்
> என்னைமறக்கச்செய் துஎன் னுயிரைக்கொள்ளைகொ [ண்டு
> பொன்னைமறக்கச்செய்துபுண்ணியத்தைக்கொள்ளை [கொண்டு
> தன்னைமறக்காமற்தன்னிலையுங் குலையாமற்றனியிட [த்தே
> என்னை மறக்கச்செய்து என்மனத்தைத் தன்வசமாச் [செய்துகொண்டு
> தன்னையேஎண்ணியெண்ணித்தாபமெல்லாந்தீரவி [ட்டு
> அன்னைபோ லென்னையவள் ஆதரித்து மேதினியிற்
> பின்னையெனக் கின்பசுகங் காட்டியொளித்துப் [பின்னு
> 'மென்னைமறவாதே'யென் றென்னிடத்திற் சத்தி [யம் வாங்கி
> மன்னுகாதல்மஹிமையினால்மாயைமயக்கந்தீர்த்துப்
> பொன்னுலகுமண்ணுலகும்பொடிபடவேதன்னைக் [காட்டிச்
> சின்னஞ்சிறுக்கியவள்சிரிப்பாணிசெய்தாள்
> காணே!"

பின்னேவரும் "மனுநெறிகண்ட சோழன்கதை" திருவாரூர்க் குறவஞ்சி யென்னும் சிறந்த பழமையான நூலினின்றும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அது 'இலக்கணவிளக்க பரம்பரை சோமசுந்திர தேசிகர்' வசமிருக்கிறதாகத் தெரிகிறது. அவர் மாதிரிக்காக வெடுத்துக்காட்டிய அதன் ஓர் அகவல் தன்னில் இந்த பாகம் வருகிறது. இந்தத் திருவாரூர்க் குறவஞ்சி நாடகரூபமாகத் திருவாரூரில் நடிக்கப்பட்டு வந்திருக்கிறதாகக் கூறுகிறார். திருவாரூர்த் தியாகராஜ பெருமான் உத்ஸவங்களில் ஒன்றைப் பின்வருமாறு எடுத்துக்கூறுகிறார். "புற்றிடங்கொண்ட பெருமானார்க்கு ஆவணித்திங்களில் பவித்ரோத்ஸவம் என்று ஒன்று நடப்பது உண்டு. அக்காலத்து சிவபெருமானுக்கு இரண்டாங்காலம் செய்வித்து எழுந்தருளச் செய்து தேவாசிரயமென்னும் காவணத்துக் கொண்டு வந்து வைத்துப் பத்து நாடகங்கள் தாசிகளால் நடிக்கப்படுவது வழக்கமாயிருக்கின்றது. இந்நாடக வழக்கம் சிலநாளாய் நின்றுபோயினும் உற்சவம் நீற்காது நடந்துவருகின்றது. எளையூர்க் குறவஞ்சிபோலன்றி இது நடந்துவருவதே இதன் பெருமைக்குப் போதிய சான்றாம்" என்று 'கமலாலனி'யில் வற்புறுத்திக் கூறியிருக்கிறார். சிறுவர்க்கு ரஸமாயுள்ள "மனுநெறிகண்ட சோழன்கதை"யைமட்டும் அதிலிருந்து அதன் சுவைவிளங்க இங்கே யெடுத்து அச்சிட்டிருக்கிறோம்.]

> "மனுநெறி தழைக்க வையகம் புரக்கத்
> தினகரர் குலத்தில் திகழ்மனு வேந்தன்
> மெய்யன் புலகில் விளங்கிட வேண்டி
> ஐயன் பசுவா யந்தநன் கன்றாய்
> அணிமுடி நெடிய வம்பொன் வீதியில்
> மணிமுடி மன்னர் வருநெருக் கத்தில்
> அன்றர சிளங்கன் றரிபதேர்க் காலில்
> கன்றரை படவே கபிலையுங் கதறிச்
> செம்பிய னரசு செலுத்திய மணியைக்
> கொம்பினு லசைக்கக் கொற்றவ னடுங்க
> முன்னுள் விதியின் முறைமையோ விதுதா
> னென்ன காரண மென்றலு மமைச்சன்
> ஆவின் மெய்த்துய ரரசனுக் குரைப்பப்
> பாவியே னிந்தப் பழிகழி வதற்கு
> இளவர சனையூர்ந் திடுவதே வழக்கென்
> றளவிலர்க் குரையா வமைச்சனை யனுப்ப
> மந்திரி யரசன் மதலை தன்னை
> யெங்ஙன மரைப்போ மென்றுதன்
> னுயிரை யிழக்க மந்திரி யரைந்த
> சேதி கேட்ட வரசன் சிவாய
> நமவென் றோதி யஞ்செழுத் துண்மை
> யுள்ளத் தளர்ந்து மனந்த ளர்ந்து
> சுடரினம் பசுவின் துயர்க்குமெய்ச் சுதனும்
> படர்புக ழமைச்சன் பழிக்குநா னென்
> றுன்னியே மகனை யூர்ந்தபின் னுகந்து
> தன்னுயிர் மாய்க்குந் தகைமைகண் டிரங்கிப்
> பொன்னிலத் தமரர் பூமழை பொழிய
> யின்னிலத் தவர்களிரு கண்ணீர் சொரிய
> செந்திரு மாயன் றிசைமுகன் முனிவர்
> இந்திரன் முதலோ ரிருபுடை நெருங்க
> தவளமால் விடைமேற் றண்ணிலா வணிந்து
> பவளவார் சடையார் பரிதிமன் னவன்முன்
> னாட்சியாய்த் தோன்றி யனைவருங் காணக்
> காட்சியே கொடுக்குங் கமலநா யகர்முன்
> ஆவினங் கன்று மமைச்சனு மனுவின்
> கோவினங் கன்றுங் கூடவே யெழுந்து
> சுந்தரக் கன்றுஞ் சுரபியா விலங்க
> மைந்தனு மமைச்சனு மன்னனை வணங்க
> பொன்னடி பணியும் பொழுதன மிரங்கி
> அரசனே யுன்ற னன்புகண் டுகந்தோம்
> வரிசைசேர் புவியில் மனுநெறி நடாத்தி
> யுன்பெருங் கீர்த்தி யுலகினில் சிறந்திப்
> பின்புபே ரின்பம் பெறுவைநீ யென்னத்
> திருவருள் புரிந்தே தேவர கண்டர்."

## THE HINDU WOMAN'S IDEAL.

*(Declaration by a Hindu Lady.)*

### ஹிந்து மாதர் லக்ஷியம்.

ஹிந்து மாதர் லக்ஷியம் இன்னதென்று விளங்க அவர்களில் ஒருவர்தானே "எஸ். கல்யாணி அம்மாள்" என்று கையொப்பமிட்டு "சுதேசமித்திரனில்" எழுதியிருப்பதை இங்கு எடுத்துப் பிரசுரிக்கிறோம். "அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு" என்று சொல்லும் மாதர்க்கியல்பாயுள்ள நாற்குணங்களில் 'அச்சம்' என்பது ஆகாதவற்றைக்கண்டு பயப்படல் என்றும், 'நாணம்' என்பது தன்மானம் கெடாது காப்பாற்றும் பொருட்டு அதற்கு மாறானவற்றைக்கண்டு கூசல் என்றும், 'மடம்' என்பது அத்வைதஞானம் ஒன்றைத் தவிர மற்ற இயற்கைஞானமுற்றும் இயல் பாயறியும் 'இயற்கையறிவு' என்றும், 'பயிர்ப்பு' என்றால் உயிரோம்பும் தன்மையென்றும் அர்த்தம் செய்துகொள்வது அவர்களது ஸ்வதர்மத்துக்கேற்றதாகும். இக்குணங்களுக்கு அநர்த்தம் செய்துகொண்டு மாதர்களுக்கு மவுட்டியமே அழகு என்று கூறி அதற்கு உதாரணமாய் "பேதமை யென்பது மாதர்க்கணிகலம்" என்னும் மூத்தோர்சொல் வார்த்தையை அதன் பொருள் உணராமல்கொண்டு உளறுகிறவர்களைக் கண்டித்தும், மாதர்கள் ஸ்வபாவகுணத்தையும் ஸ்வதர்மத்தையும் புகழ்ந்தும் எழுதியிருக்கிறார். 'பெண்' என்றால் பேணப்பெறுமவள், அல்லது பேணத்தகுமவள் என்று அர்த்தம். அப்படிப்பட்டவள் எத்தகையினள் எனில் அதற்கு நீதி வெண்பாவில் கவி கூறுகிறார் :—

"அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்-வன்னகலை
வேசி துயிலும் விரல்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்."

இது நம்முன்னோர் வாக்கு. இக்காலத்து மாதர்கள் நோக்கும் அதுவேயாக விருப்பதும் அவர்களுடைய உயர் நோக்கும் லக்ஷியமும் தாழவிடாது காக்க அவர்கள் கடமைப் பட்டவர்களாக விருக்கிறார்கள் என்பதை இக்காலத்தவர் உற்றுணர்ந் திருக்கிறார்கள் என்பதும் பின்வருவனவற்றால் விளங்கும்:—

1. "நாணம் நல்லொழுக்கம் நாமறவோம்
நங்கையர்கௌரவம் நாம் துறவோம்
நாரியென்றேசிட ஸம்மதியோம்;
நடுநிலைமையில் வாழ்ந்திடுவோம்.

2. கல்வியுணர்ந்து ஞானம்பெறுவோம்.
கடமையறிந்து கீழ்ப்படிவோம்
நல்வழியுரைத்த ஔவையை போன்றிந்
நானிலந்தன்னில் புகழ்பெறுவோம்.

3. குடும்பமே கோயில் என்றிருப்போம்
கொண்ட கணவனே தெய்வமென்போம்
இடுக்கண் தேசத்திற் குற்றிடுமாகில் நாம்
இன்னும் சில துறை யிலுழைப்போம்.

4. ஆசார திருத்தம் என்று சொல்லிப் பெரும்
ஆபாலத்துறையில் நாமிறங்கோம்
தேசாபிமானமதா பிமானத்துடன்
தேன்மாரி பெய்திட வாழ்ந்திடுவோம்.

5. வீரான மக்களைப் பெறுவோம்
வாயினில் தாய்மொழி யைப்பிழிவோம்
காருண்யமும் ஞானமும் பெற்றிந் தியாவின்
கழலடி போற்றச்செய்திடுவோம்

6. இந்து மதத்தையே போற்றிடுவோம்
தொந்திரவுபல துற்றிடுவோம்
எந்த விதத்து மக்கிணையாமே என்
றெம்மை புகழுமாறு முயல்வோம

7. கணவனே தெய்வமானாலும் மந்த
கடவுளையும் தொழுதிடுவோம்
குணம்பெருகிட குற்றம் குறுகிட
குவலயத்தில் வாழ முயல்வோம்."



## ON ANIMAL INTELLIGENCE.

### ஜீவராசிகளின் புத்திவலிமை.

நமது புராணங்கள் சிலவற்றுள், அசேதனமாகிய எறும்பு, நண்டு முதல் சேதனமாகிய மனிதன் வரையொவ்வொரு பிராணியும் எங்கும் நிறைந்த பரம்பொருளை யர்ச்சித்து முத்தி பெற்றதாகக் கதைகளிருக்கின்றனவே, இவற்றையெல்லாம் நாம் உற்றுப்பார்த்தால் நமது புராணங்களிற் கூறியிருக்கிறபடி எல்லா செந்துக்களுக்கும் ஒரே மாதிரியான புத்திவலிமையுண்டா என்று ஒரு சந்தேகம் ஜனிக்கிறது. ஸ்ரீகாளத்தியில் தன் வயிற்றிலிருந்து வாயினால் நூலிழைத்துப் பலநாள் வருந்தி, சிலந்திப்பூச்சியானது கட்டிய கோயிலைச் சிவபிரான் அழித்தகாலத்தில் அச்சிலந்திக் குண்டான மனோவருத்தமும், அதன்மேல் தன்னுயிரை நீக்க விளக்கின்பேரில் பாய்ந்த துணிவும் எவ்வளவு மனோவலிமையைக் காட்டுகிறது? அதே ஸ்தலத்தில் பாம்பு ஒன்று யானையோடு போட்டிபோட்டுச் சிவபிரானை யர்ச்சித்த கதையில் இவ்விரண்டும் தத்தம் பகைவனைக்கொல்ல முயன்று, கடைசியில் பாம்பு யானையின் தும்பிக்கையில் புகுந்து தலையைக்குடைய அந்த யானை தன் தும்பிக்கையை நிலத்தில் ஓங்கி யடித்துப் பழி தீர்க்க யத்தனித்ததும் அந்தப் பிராணிகளின் புத்திவலிமைக்கு அத்தாக்ஷியாக இருக்கின்றதல்லவா? ஆகவே, சிலந்திப்பூச்சி, பாம்பு, யானை இந்த மூன்று பிராணிகளின் புத்திவலிமையும் ஒரே தரத்ததா அல்லது வித்தியாசப்பட்டதா? என்ற சந்தேகம் பிறப்பது சகஜம். அடியார்கள் எவ்வளவோ பேர்கள் பிரானை வந்தித்துக் கதிபெற்றிருப்பதாகவும் கதைகளிருக்கின்றனவே. அவற்றிலும், அவர்களுடைய குணங்கள், மேற்கூறிய மூன்று செந்துக்களின் குணம்போலவே கூறப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியாகப் பூசித்து முத்திபெற்ற, எறும்பு, நண்டு, கோழி, தவளை, யானை, காக்கை, கருங்குருவி, பன்றி, குரங்கு, மனிதன் முதலிய எல்லாச் சாதிகளுடையவும் புத்திவலிமை எத்தன்மையது? எது உயர்ந்தது எது தாழ்ந்ததென்று பிறக்கும் கேள்விக்கு உத்தரம் தேடவேண்டியதவசியம். சாதாரணமாகவே, மனிதன் மற்ற எல்லாச் சீவராசிகளிலும் புத்தியிற் சிறந்தவன் என்பது நமக்குத் தெரிந்த விஷயம். மற்றவற்றில் உயர்வு தாழ்வு இன்னதென்று நிர்ணயிக்க வேண்டுமானால் அவைகளைக் குறித்த சிலகதைகளைப்படித்தால் தான் முடியும்.

புத்திவலிமைக்கெல்லாம் ஆதாரஸ்தானம் மூளையென்று நமக்குத் தெரியுமே. மூளையோ நரம்பு சத்துக்களாலாகியது. ஆகவே புத்திக்குக்காரணமாகிய மூளையின் சக்தி நரம்புக்கும் இருக்கும். எல்லா ஜீவராசிகளும் எவ்வளவு புத்திவலிமையுள்ளவையென்று பார்க்க இப்போது புகுந்தால் நம்மால் முடியாது. பூனை, புலி முதலிய ஒரே சாதிக்குள் சேர்ந்தவற்றிற்குள், ஏதாவதொன்றின் குணத்தைப் பரிசோதித்தால் அதன் குணமே அந்தச் சாதியின் குணமென்று தீர்மானிக்கத் தடையிராது. ஆகவே வர்க்கத்துக்கு ஒன்றாய் எடுத்துக்கொண்டு அவைகளின் குணத்தை யறிந்து கொள்ளுவோம்.

ஜீவராசிகளிலெல்லாம் மிகச் சிறிதான எறும்புகளின் சாமர்த்தியத்தையும் புத்திவலிமையையும் பற்றி ஸர் ஜான் லப்பக் என்பவர் ஒரு பாரதம் எழுதியிருக்கிறார். எறும்புகளின் திருஷ்டி நுட்பமும், ஞாபக சக்தியும், கோபமும், வீரியமும், சுறுசுறுப்பும், பச்சாதாபமும், தந்தியில் பேசுவதுபோல் க்ஷணநேரத்துக்குள் ஒன்றுடனொன்று சம்பாஷித்துக் கொள்ளும் துரிதமும் சக்தியும், கூட்டங்கூடுவதும், இளம் எறும்புகளுக்கு ஆகாரம் ஊட்டுவதும், அவற்றைப் பழக்குவதும், தங்களுக்குள் அடிமை பிடிப்பதும், இனத்தோடு இனம் போர்செய்வதும், செல்வமாகச் சிலவற்றை வளர்ப்பதும், தூக்கம், வேடிக்கைக் காலந்

கள் முதலியவற்றை திட்டப்படுத்தி வைத்திருப்பதும், சஞ்சயனச் சடங்குகள் செய்வதும், முதலான ஒவ்வொன்றுமே ஒரு பெரிய கதையாகுமென்றால் இப்போது இதை நிறுத்திப்பின்னால் சாவதானமாகக் கற்றுக்கொள்வதே நலமானாலும், அவைகளைக்குறித்துச் சிலவிஷயங்கள் இப்பொழுது தெரிந்துகொள்வதில் குற்றமில்லை. அவைகளின் பச்சாதாபத்தைக் குறிக்க அடியில்வரும் கதையொன்றே போதாதா?

'பெல்ட்' என்னும் ஒரு துரை ஒருநாள் தனக்குப் பக்கத்தில் ஒரு எறும்புக்கூட்டம் வரிசையாகப் போவதைக்கண்டு, ஒரு எறும்பின்மேல் ஒரு சிறிய கல்லை எடுத்துவைத்தாராம். இதுபோகாமல் அங்கே நிற்கவே பின்னால் வந்த எறும்பானது இதன் ஸ்திதியைக்கண்டு உடனே பின்னால் திரும்பி ஒவ்வொரு எறும்புக்கும் இந்த சமாசாரத்தைத் தெரிவித்தது. எல்லாமாக அதை விடுவிக்க வந்தன. கல்லைக்கடித்து நகர்த்த முயன்றன. சில, கால் அற்றுப்போனாலும் சரியென்று அந்த எறும்பைப்பற்றி யிழுத்தன. சில; இப்படியாக முயன்று கடைசியில் அதை விடுவித்துக்கொண்டே மீண்டன. பிறகு அவர் ஒரு எறும்பின் தலையைமட்டும் வெளியே விட்டுவிட்டு மற்றப்பாகத்தைக் களிமண்ணை யப்பி மூடிவிட்டாராம். இதை மற்ற எறும்புகள் கண்டுபிடித்து அந்தக் களிமண் கட்டியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்தெறிந்து, அடிபட்ட எறும்பைத் தப்புவித்தனவாம். சிலநாளுக்குப் பிறகு இன்னொருநாள் அவர் எறும்பின் வரிசைக்குக் கொஞ்சம் எட்ட எறும்பு ஒன்றைக் களிமண் வைத்து முன்மாதிரிமூட அனேக எறும்புகளுக்கு இது தென்படவேயில்லை. கடைசியாக ஒரு எறும்பு இதைக் கண்டுபிடித்து அதை யிழுக்கப்பார்த்தும் தன்னால் முடியாததுகண்டு திரும்பி வெகு வேகமாய் ஓடிற்றும். இதை விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டதென்றே அவர் எண்ணினாராம். க்ஷணநேரத்துக்கெல்லாம் கூட்டமாக எறும்புகளைக் கூட்டிவந்து அந்த எறும்பை விடுவித்ததாம். மனிதர்களுக்குக்கூட இந்த பூததயை என்னும் குணம் இல்லாமற்போகிறதே!

பூனா பட்டணத்தில் 'சைகீஸ்' என்ற ஒரு இராணுவ உத்தியோகஸ்தர் இருந்தார். அவர் சாப்பாட்டு மேஜையின்பேரில் மிகவும் உருசிகரமான பக்ஷணங்கள் வைத்திருப்பதுண்டு. அவைகளுக்கு எறும்புகள் தாராளமாக வந்துகொண்டிருந்தனவாம். அதற்காக மேஜையின் நாலுகால்களுக்கும் அடியில் தொட்டியில் ஜலம் வைத்தார். 2-3 நாள் ஒன்றும் வரவில்லை. ஜலத்தின் அகலம் ஒரு விரற்கடைதானிருந்ததால், சில செத்துப்போனபோதிலும், அனேகம் எறும்புகள் நீந்திச்சென்று பலகாரத்தைச் சாப்பிட எத்தனித்தன. பிறகு அவர் கால்களுக்குக் கற்பூரத்தைலம் தடவவே எறும்புகளுக்கு வரமுடியாமற் போயிற்று. மறுபடியும் நான்கு நாட் கழித்து பக்ஷணங்களுக்கு எறும்பு வருவதைக் கண்டு, எப்படி வந்ததென்று கண்டு பிடிக்க முயன்றும் முடியவில்லை. கடைசியாய் ஒரு நாள் மேஜைக்கு நேரே மேலே தொங்கிக் கொண்டிருந்த ஒரு கயிற்றிலிருந்து மேஜையின்மேல் எறும்புகள் குதிப்பதைக்கண்டார். தங்களுக்குச் சரியான வழியில்லையாகவே, எறும்புகள் சுவரின்மேல் ஏறிக் கூரைவழியாய்க் கயிற்றி லிறங்கி மேஜையின்மேல் குதித்துப் பலகாரத்தைச் சாப்பிடவேண்டுமென்று எறும்புக்குத் தோற்றுமானால் அதன் புத்தி வலிமைக்கு அளவு ஏற்படுமா?

தேனீக்களின் சாமர்த்தியம் மிகவும் விந்தை பயக்கத்தக்கது. தேனீக்களின் இராணி தலைமையாய் நின்று மற்றெல்லாவற்றையும் தன் ஆக்ஞாசக்கரத்திற்கு மீறாமல் அடக்கியாண்டு, சோம்பேறி ஈக்களைத் தண்டித்து, பருவத்துக்குத் தகுந்தபடி காலமறிந்து பொருளை ஈட்டிவைக்கும் குணம் ஒன்றினாலேயே



நாம் எவ்வளவோ நன்மைகளும் நீதிகளும் அறிந்து கொள்ளலாமே. நாடக சிரோமணியாகிய ஷேக்ஸ்பியர் தேனீக்களின் கூட்டத்தை, நன்றாயாட்சியமைந்த ஒரு அரசாங்கத்துக்கு ஒப்புமை கூறியிருக்கிறார். தாம் வருந்தி யீட்டிய பொருளைப் பிறர் வெளவ வந்தால் யாருக்குத்தான் கோபமுண்டாகாது. மலைக்காடுகளில், மரங்களின் உச்சியிலும், பாறைகளின் மத்தியிலும், மழை வெயில் என்ற சிரமம் பாராமல் தாங்கள் சேர்த்து வைத்த தேனை, கம்பளியைப் போர்த்தும், தீவட்டியாற் சுட்டும் மனிதர்கள் எடுக்கவரும்போது, கோபமூட்டப்பட்டு ஈக்கள் அவர்களைக் கொட்டிக் கொன்றது கொஞ்சமல்லவே. இவைகளிலும் எறும்புகளைப்போல அடிக்கடி போர்கள் நேர்வதுண்டு. எறும்புகளுக்கு ஈக்கள் ஒருபடியுயர்ந்தவையென்பது, யாதொரு நாகரீகமுமின்றி வெறும்புகள் குழிகளிலும், புற்றுக்களிலும் வசிக்க, தேனீக்கள் வெகு விசித்திரமான கூடுகட்டிக்கொள்கின்றன என்பதினாலேயே விளங்கவில்லையா? அதிலும் இவ்வீடுகட்டுவதில் இன்னபாகம் கட்டுவதற்கு இன்ன ஈ என்று, மனிதர்களில் கொல்லத்தக்காரன், தச்சன் முதலியவர்களைப்போல் வரையறுத்து வைத்திருப்பது எவ்வளவு உசிதமானது பாருங்கள்.

தன் வயிற்றிலிருந்து நூலை வாயினால் இழைத்துக் கூடுகட்டும் சிலந்தியின் சாமர்த்தியம் ஏட்டிலடங்குமா. இதைப்பார்த்து அதிசயித்துத்தான் நமது புராணிகர்கள், திருவானைக்காவிலும், ஸ்ரீகாளத்தியிலும், சிலந்தி பரமசிவனுக்குக் கோவில் சமைத்ததென்று அதற்கு தெய்வத்தன்மை ஏற்றியிருக்கிறார்கள். சிலந்திப்பூச்சியின் புத்திவலிமையை நேரே பார்த்து அறிந்தவர் சொல்லியிருக்கும் கதையொன்றுண்டு. ஒரு தோட்டத்தில் குடிசையின் தாழ்வாரத்தில் ஒரு சிலந்திப் பூச்சி கூடு கட்டியிருந்ததாம். ஒருநாள் பெருங்காற்று ஒன்று அடிக்கவே அந்தக் கூட்டின் கால் ஒன்று அற்றுப்போய் சுருங்கிவிட்டது. சிலந்தி வேறே நூல் நூற்றுக்கட்ட ஆரம்பியாமல் சரசரவென்று கீழேயிறங்கி ஐந்தடியாழத்தில் கிடந்த ஒரு சிறிய சுள்ளியில் ஒரு நூலைக்கட்டி அறுந்த பாகத்திற் கட்டித் தொங்கவிட்டதாம். இப்படிச் செய்ததானது காற்றுக்கு எதிர்த்து நிற்காமல் கூடு ஆடிக்கொண்டிருந்தபோதிலும் பூச்சிக்குச் சரியான இடம் அமைத்துவிட்டது. மறுநாள் யாரோ அந்தக்கோலைத் தள்ளிவிட, அது மறுபடியும் சென்று அதைக்கொணர்ந்து கட்டியது. காற்றுக்காலம் நீங்கவே, எப்போதும் போல் தன்வலையை உறுதியாகக் கட்டியதாம். இதில் எவ்வளவு புத்தி சாதுரியம் வெளிப்படுகிறது!

நாற்றவெண்ணெயின் மோப்பத்தாற் றன் வாலிற் கட்டிய பட்டுநூலை, சிறைச் சாலையிலிருந்த ஒரு தேசாபிமானிக்கு ஒரு பொறி வண்டு சேர்த்ததினால், பட்டு நூலின் மற்ற நுனியிற் கட்டிய பெருங்கயிற்றைப்பற்றி அவன் தப்பித்ததாக ஒரு கதையுண்டு. எறும்பு முதல் இதுவரையிலும் நாம் பார்த்த சீவராசிகளெல்லாம் எலும்பின்றிக் குழலால் ஆன உடம்புகளையுடைய கீழ்ச்சாதிக்குச்சேர்ந்தவை. மனிதனைப்போலவே முதுகெலும்புள்ள ஜீவராசிகளின் குணத்தைப்பார்க்கலாம். இந்த வர்க்கத்தில் எல்லா விஷயத்திலும் தாழ்ந்தது மீனினம். மீனினம் உயர்ந்த சாதிக்குச் சேர்ந்ததாயினும் முற்கூறிய குழலினத்தில் எறும்பு, தேனீ போன்ற சில ஜந்துக்களுக்கு புத்தி வலிமையிற்றாழ்ந்ததே. மனிதரிலனேகர் தாம் பெரிய குலத்திற் பிறந்ததினாலேயே தங்களுக்கு புத்தி வலிமையுமுண்டென்று எண்ணுகிறதும் சரியானால், மீனும் எறும்பு முதலியவற்றிற்கு புத்தியிற் சிறந்ததாம். மீனினத்திற்கும் பயம், கோபம், பொறாமை, விளையாட்டு விநோதம் முதலிய குணங்களுண்டு. திமிங்கிலம் முதலிய மீன்களைப் பிடிப்பதில் கப்பல் முதலியவெல்லாமல்லவா தவிடுபொடியாகின்றன. மச்சாவதாரமெடுத்துக் கண்ணன் கடலைக்கலக்கியது நம்மவர் மறப்பரோ?

தவளைகளுக்கு கால வித்தியாசம் வெகு சீக்கிரத்தில் தெரிகிறதென்பது நாமெல்லாமறிந்த விஷயமே. தவளைகள் கத்தினால் மழைவருமென்பது தவறான கொள்கையல்ல. கால வித்தியாசமாகிறதென்று தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி தங்கள் இருப்பிடத்தை யவைகள் மாற்றிக்கொள்ளுகின்றன. ஈரலைத் தனியே வைத்து வந்தேன் என்று சொல்லி வானரத்தை யேமாற்றின முதலையின் கதை நாம் பஞ்சதந்திரத்தில் படித்திருக்கிறோமல்லவா?

சங்கீத மில்லாதவன் கொலைக்கும் அஞ்சான் என்று ஷேக்ஸ்பியர் சொல்லுகிறார். நாகப்பாம்புக்கோ சங்கீதத்திலுள்ள பிரியம் இவ்வளவு அவ்வளவென்றில்லை. அப்படியிருந்தும் இத்தேசத்தில் பாம்புகடியா லிறப்பவர்கள் கணக்குக்கும் குறைவில்லை. ஆனால் சில தத்துவசாஸ்திரிகள் பாம்புகளுக்கு சங்கீதக் கியானமில்லையென்றும், மீன்பிடிக்க இராத்திரியில் தீவட்டிபோட்டுச் சென்றால் தாங்கள் எப்போதும் காணாதவெளிச்சத்தைக் கண்டு மீன்கள் படகை நெருங்குவதுபோல, பாம்புகளும் தாங்கள் எப்போதும் கேளாத சுரத்தைக்கேட்டு அதிசயித்து ஆடுகின்றனவென்றும் சொல்லுகிறார்கள்.

மீன்களுக்கும், ஊர்வனவுக்கும் அடுத்த உயர்ந்த சாதி: பக்ஷிகள். பக்ஷிகளின் சாதி வெவ்வாறாயினதற்குத் தக்கபடி குணமும் வேறுபடுகின்றது. சாதாரணமாக எல்லாப் பக்ஷிகளுக்கும் ஞாபகசக்தியென் பதுமட்டும் குறையவே குறையாது. அன்றிப்பக்ஷியின் பிரியத்தைக்குறித்தும், அசுணத்தின் சங்கீத ஞானத்தைக்குறித்தும், நமது கவிகள் சொல்லுமவை யவ்வளவும் நிசமே. பக்ஷிகளின் ஒற்றுமைக்குணம் காக்கையின் கூட்டத்திலேயே விளங்குகிறதல்லவா. மயில்கள் தங்கள் அழகிய சிறகை விரித்தாடுவது கொஞ்சம் கர்வத்தையும் குறிக்கும். கோகிலம் தன் முட்டைகளைக் காக்கையின் கூட்டில் இடுவதொன்றே, ஒரேகாலத்தில் காக்கையின் மூடத்தனத்தையும் குயிலின் சாமர்த்தியத்தையும் விளக்குகிறதே. இது மிகவும் முக்கியமான விஷயமானதால் சமயம் வரும்போது கற்றுக்கொள்ள வேண்டியதவசியமே, ஊர்க்குருவிகள், சிட்டுக்குருவிகள் இவைகளைப் பற்றி நாம் எவ்வளவோ தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறதே.

'ப்ராங்க்லின்' (Franklin) என்னும் ஒரு தத்துவ சாஸ்திரியிடம் இரண்டு கிளிகள் இருந்தன. நான்கு வருஷத்துக்குமேல் அவற்றில் பெண் கிளிக்கு நோய்கண்டு கால் வீங்கிப் போனதால் கீழே யிறங்கி இரையெடுக்க முடியாமற்போயிற்று. ஆண்கிளி தினந்தோறும், தன் மூக்கினால் இரையையெடுத்து ஊட்டி வளர்த்தது. பிறகு அந்த நோய்க் கிளிக்கு உட்காரக்கூட சக்தியில்லாமற் போய் கூட்டில் கீழே கிடந்து புரண்டு கொண்டிருந்தது. ஆனாலும் முன்மாதிரி தண்டில் ஏறியுட்காரவேண்டுமென்ற எண்ணம்மட்டில் பலமாயிருந்தது. ஆண்கிளி அதைத் தன் மூக்கினாற் கௌவி மேலே எடுத்து நிறுத்த முயலும். கடைசியாய் அதுவும் இயலாமற்போயிற்று. கொஞ்சநாளுக்குப் பிறகு அது இறந்து போனகாலத்தில் இது பட்ட வருத்தத்தைக் கண்ணால் கண்டவர்கள் பரிதபிக்கக்கூடியதாயிருந்தது. சிலதினங்களுக்குப் பின் இதுவும் மனம் முறிந்து இறந்ததாம். பக்ஷிகளுக்கு இருக்கும் அன்பு எத்தன்மையது பாருங்கள்.

வாத்துகளின் ஞாபக சக்தியைக் குறிக்க ஒரு கதையுண்டு. ஒரு ஊரில் சந்தையில் தானியம் விற்று வருவதுண்டு; அந்தக் கிராமத்திலுள்ள வாத்துகள் மறுநாள் கீழே யிரைந்துகிடக்கும் தானியங்களைப் பொறுக்கித் தின்னவரும். ஒரு தடவை கூடத் தவறாமல் சரியான தினத்திலேயே வந்து கொண்டிருக்கும். இதற்குக்காரணம் முதல் நாள் தானியத்தின் மோப்பத்தாலும், சந்தையின் இரைச்சலாலும் ஞாபகம் வந்து மறுநாள் வரக் கூடும் என்று சிலர் எண்ணினார்கள். இப்படியிருக்க, ஒரு நாள் உற்சவத்துக்காக சந்தை நிறுத்தப்பட்டது. மேற்கூறியது காரணமானால், அடுத்தநாள் வாத்துகள் சந்தைக்குப் போயிருக்கக் கூடாது. அப்படியின்றி மறுநாளும் அவைகள் சந்தைக்கு வந்ததால், ஞாபக சக்தியினாலேயே வந்தனவென்று நிச்சயமாயிற்று. ஆனால் அவை காலத்தை எப்படி யளந்தனவென்று மட்டும் அறிய முடியவில்லை.

(இன்னும் வரும்)



## THE MERCHANT OF VENICE.

## வெனீஸ் வர்த்தகன் சரித்திரக் கவிகள்.

(1) வடதிசையில் வெனீஸென்னும் வளநகரில் மாநிதியால்
[1] வடதிசைப்பா லகனென்ன வாழ்பவன்ஷை லாக்கென்பான்
கடனொருகாற் காசுக்குக் காற்காசு வட்டியென்று
திடமுடன்றந் திடுங்கொடிய சிந்தனையான் [2] நிந்தனையான்.

(2) அந்தவூ ரினிற்றரும் சிந்தனையாண் செல்வமுளான்
அந்தோனி யாவென்போன் ஷைலாக்கை யடுத்தடுத்து
நிந்தனைசெய் வான்கேட்டு நெஞ்சிலருந் துயரமொடு
நொந்தவனைக் கெடுத்திடவே நோக்கியஷை லாக்கிருந்தான்.

(3) அக்காலம் அந்தோனி யாவிடத்து மனத்தன்பு
மிக்கவன்பஸ் ஸானியோ போர்ஷியா எனு [3]மாதைத்
தக்கபடி மணம்புரியத் தனக்காறு யிரம்ரூபா
[4] இக்கணமே வேண்டுமென்றான் இவனிடத்தப் பொழுதில்லை.

(4) ஆதலினால் ஷைலாக்கை அடுத்து [5]நிதி கேட்டனரப்
பாதகனீர் என்னைமுன்னம் பலவாறு தூஷித்தீர்
ஏதையா நாயிடத்தில் நிதியென்றான் அந்தோங்யா
[6] ஓதியநல் வார்த்தையினால் உடன்பட்ட ஷைலாக்கு.

(5) கேளீயென நீர் மூன்று மாதத்தில் தராவிடில்நும்
மேலொரு பவுன்சதையே வேண்டுமென்றான் சம்மதித்தப்
பாலுடனே உடன்படிக்கை பண்ணி நிதி பெற்றகன்றார்
[7] சீலமுடன் பஸ்ஸானி யோவுமணம் செய்திருந்தான்.

(6) அந்தோனி யாகப்பல் இன்றுவரும் நாளைவரும்
வந்தவுடன் பணமெடுத்தம் மடையனுக்குக் கொடுப்பமென்று
சிந்தனைசெய் திருந்திடுங்கால் மூன்று[8] மதி செல்போதில்
வந்தகப்பல் கடல்மூழ்கி மாண்ட செய்தி வந்ததுவால்.

(7) இதைஅறிந்த ஷைலாக்கந் தோனியா இருதயத்தில்
சதையறுக்கக் கச்சேரி சார்ந்தசெய்தி தனைத்தெரிந்து

1 வடதிசைபாலகன்=குபேரன். 2 நிந்தனை=பழிப்பு. 3 மாது=பெண். 4 இக்கணம்=இந்தநிமிஷம். 5 நிதி—திரவியம். 6 ஓதிய=சொல்லிய. 7 சீலம்=அன்பு. 8 மதி=மாதம்.

பதைபதைத்துப் பஸ்ஸானி யோ[9] மனையாட் குரைத்திடலும்
நிதிபலனு யிரமெடுத்து நீகொடுத்துக் காவென்றாள்.

(8) அங்கிருந்த கிரேஷியானி யோவென்போ னையுங்கூட்டி
இங்குவந்தான் ஷைலாக்கு மாமிசமே வேண்டுமென்றான்
எங்குமில்லாப் பெரும்பாவி இவனென்றிவ் விருவோரும்
பொங்குநெருப் பினில்விழுந்த புழுப்போலத் துடித்திருந்தார்.

(9) இருந்திடுங்காற் போர்ஷியா எனுமாது மிகத்தெளிந்து
திருந்தியதன் [10]மதியாலோர் முடிவுசெய்து வக்கீல்போல்
வரிந்தவுடை தரித்தோரு வக்கீல்கடித மும்பெற்றுப்
பொருந்துநிரீ ஸ்ஸாகுமஸ்தா போலவரும் படிபுரிந்து.

(10) அந்தநியா யஸ்தலத்தை அடுத்தெதிரி பக்ஷத்தில்
வந்தவக்கீல் என்றுவழக் குரைத்துப்பத் திரப்படியே
தந்திடுதல் சரியெனினும் ஷைலாக்நீ தயவுசெய்தே
இந்தநிதி தனைக்கைக்கொண் டேயிவனைக் காவென்றாள்.

(11) என்சொலியும் கேட்டிலன்—ஞாயாதிபதி பத்திரத்தில்
முன்சொன்ன படிசெயலே முறையென்றார்—நடுங்காமல்
வன்சொலுறும் கொடும்பாவி ஷைலாக்கோர் கத்திகொண்டே
இன்சொலுறும் அந்தோனி யாசதையை அறுக்கவந்தான்.

(12) அப்பொழுது நில்லென்று போர்ஷியா ஆகும்வக்கீல்
இப்பொழுதெவ் வளவுதசை எடுத்திடுவாய்? எனக்கேட்டாள்.
ஒப்பந்தப் படியென்றான். ஒருதுளியாயினுமிரத்தம்
குப்புற வீழ்ந் திடுமாயிற் கொல்லுமுனைச் சட்டமென்றாள்.

(13) ரத்தம்வரா மற்சதையை யாரெடுப்பார்? என்றுரைத்தான்,
பத்திரத்தில் ரத்தம்வரும் படியெழுத வில்லையென்றாள்,
மெத்தமயங் கிப்பணமே வேண்டுமென்றான், தந்திடவே
ஒத்தவரைத் தடுத்துநிதி உனக்கெழுத இல்லையென்றாள்.

(14) யூதனெவன் ஆயினும்ஓர் கிறிஸ்தவனைக் கொல்லஎண்ணிற்
சாதலுறு வான்அந்தச் சட்டமுனக் கெய்துமென்றாள்.
ஆதலினால் நீதிபதி அவனைத்தண் டித்தபின்பு
[11]மேதகுபோர் ஷியாமாது [12]மீண்டுதன்னூ ரினையடைந்தாள்.

9 மனையாள்—பெண்சாதி. 10 மதி—புத்தி. 11 மேதகு—பெருமையுள்ள. 12 மீண்டு—திரும்பி.



## SOME DETAILS ON THE KINDERGARTEN METHODS.

## கிண்டர்கார்டனைப்பற்றிப் பின்னும் சில விவரங்கள்.

கிண்டர்கார்டன் என்பது இல்லத்துக்கும் பள்ளிக்கும் நடுவிலுள்ள ஸ்தானத்ததாய் சிறு குழந்தைகள் இல்லப்பயிற்சிக்குமேல் பள்ளிப் பயிற்சி பெறுவதற்கு அனுசரணையாய் அவர்களுடைய தேகமனோபாவங்களை யறிந்து அவைகளை நல்வழியில் செலுத்தி அவர்களுடைய தேகம், புத்தி, ஆத்மா மூன்றும் ஒன்றை யொன்றனுசரித்து நல்வழியில் விர்த்தியடையப் பார்த்துவரும் ஸ்தாபனமாமென்று இதற்குமுன் சொல்லியிருப்பதால் விளங்கும். "தொட்டிற் பழக்கம் சுடுகாட்டுமட்டும்" என்று நமக்குள் சொல்வதுண்டு. இது ஓர் மகத்தான உண்மையை விளக்கும் வாக்கியம். இப்படிப்பட்ட காலத்தில் சிறு குழந்தைகளுக்குப் படியும் பழக்கம் பின்னால் அவர்கள் சாகுந்தனிலும் அவர்களை ஒட்டியிருக்குமாதலால் இப்படிப்பட்டகாலத்தில் அவர்களுக்கு கெட்ட வழக்கங்கள் படியாதபடிப் பாதுகாத்து நல்ல பழக்கவழக்கங்கள் படியும்படிக்கும் நல்ல எண்ணங்கள் உண்டாகும்படிக்கும் செய்ய வேண்டியது எவ்வளவு முக்கியமும் அவசியமுமான கடமை. இக்கடமையை நிறைவேற்றற் கேற்பட்ட சாதனமே கிண்டர்கார்டன் என்பது. மேலெசொல்லிய பழமொழியிலடங்கிய உண்மையை முற்றும் கிரகித்துணர்ந்தே 'ப்ரோபேல்' என்னும் ஜர்மனி தேசத்து மகா வித்வான் குழந்தைகளைச் சரியாய்ப் பயிற்சி செய்யும் இம்முறையைக் கண்டுபிடித்து அதற்குக் கிண்டர்கார்டன் என்று பெயர் கொடுத்தார். குழந்தைகளுக்கு பாலசிக்ஷைசெய்து பிரதமத்தில் வித்தை போதிப்பது நாகரீக வித்தையெல்லாவற்றிலும் சிறந்த வித்தை. இதையுணராது இத்தேசத்தில் சொற்பவித்தை கற்றவர்களெல்லாம் பள்ளிக்கூடம் போட்டு சிறுவர்களுக்கு வித்தை போதிப்பதாகக் கிளம்பிவிடுகிறார்கள். இதனால் விளையும் கெடுதல் கொஞ்சநெஞ்சமில்லை. பாலப்பருவத்தில் தகுதியற்ற வாத்தியாயர்களால் போதிக்கப்படுவது. அப்படி போதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும், அக்குழந்தையைச் சேர்ந்த குடும்பத்தோருக்குமட்டும் தீங்குவிளைப்பதாயின்றி ஜனசமூகத்துக்கே தீங்குவிளைப்பதாயிருக்கிறது. ஏனெனில் குழந்தை யெப்படியோ அப்படியே மனிதனுமாகிறான். பாலப்பருவத்தில் நல்லவழியில் திருப்பப்படாத புத்தி பிந்தி ஒருபோதும் நல்லவழிக்குவராது. இப்படிப்பட்டவர்கள் தான் பிந்தி, குற்றஞ்செய்வோர்களாகிறார்கள். சிறுபிராயத்தில் ஒருகெட்ட குணம் அல்லது கொள்கை குழந்தையின் மனதில் படியவிட்டோமானால் அது பிந்தி கப்பும் கிளையுமாகப் பரவிச்செழித்து அளக்கமுடியாத கெட்டபலனைத்தரும். பிரதமவித்தியாசாலையில் நல்ல பலன் கிடைக்கவேண்டுமானால் பிரதம போதம் செய்யும் உபாத்தியாயர் தேகம், புத்தி, ஆத்மா மூன்றையும் நல்வழியிற் செலுத்தி விர்த்திக்குக் கொண்டுவருவதற்குத் தக்கயோக்கியதை யமைந்தவராக விருக்கவேண்டும். இது முற்றும் தானாக அமையக் கூடியதல்ல. சுபாவபுத்தி எவ்வளவுதான் அனுகூலம் செய்யக்கூடியதாயிருப்பினும் அது அவ்வேலைக்கு வேண்டிய வழியில் நன்றாகப் பழக்கிச் சீர்ப்படுத்தாவிடில் காரியத்தில் பயன்படாதொழியும். எந்தத்தொழிலும் கொஞ்சக்காலம் சிரமப்பட்டு முறையறிந்து கற்றுப் பழகினவருக்கே குறைவின்றி முற்றும் கையாடவரும். குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லுவிக்கும் வேலை மற்றத் தொழில் வித்தைகள் எல்லாவற்றிலும் அதிக நுட்பபத்தியும் சாமர்த்தியமு முபயோகிக்க வேண்டிய பெரியதொழில் வித்தையாதலால் அவ்வேலையிலமர்வோர் அதற்கு வேண்டியபடி பழக்கப்படாமல் அவ்வேலையிலமர்வது தீங்குக்கிடமேயாமன்றி வேறுபயன்தராது என்பது நிச்சயம். சீர்ப்பட்ட ஜனசமூகத்தில்

ஜனக்ஷேமத்தை நாடியுழைக்கும் ஸ்தாபனங்கள் மூன்று. மதஸ்தாபனங்கள் ஜனங்களுடைய மதக்ஷேமத்தை, யதாவது, ஆத்மலாபத்தை நாடியுழைத்துவருவன. துரைத்தனம் அல்லது இராஜாங்கங்கள் ஜனங்கள் தேசக்ஷேமத்துக்கு வேண்டியவைகள் யாவற்றையும் நாடியுழைத்துவருவன. வித்தியாஸ்தாபனங்கள் ஜனங்களின் புத்திவிர்த்தியை நாடியுழைத்துவருவன. இம்மூன்று ஸ்தாபனங்களும் வெளிக்கு வேறுபட்டிருந்தாலும் இவைகளெல்லாம் ஒத்துழைத்து மனுஷன் மூன்று விதத்திலும் விர்த்தியடைந்து வந்தாலன்றி அவனுக்கு பூர்ணசுகம் சித்திப்பது துர்லபம். இம்மூன்று ஸ்தாபனங்களும் தங்கள் வேலையைச்சரிவர நடத்துவதற்கு அஸ்திவாரமாகவிருப்பது குழந்தைகளின் பிரதமப் பயிற்சி. ஆகையால் குழந்தைகளைப் படிப்பிக்கும் வகையில் அல்லது பிரதமவித்தை விஷயத்தில் மிகுந்த பாடுபட்டு அத்துறையில் எவ்வளவு நன்றாகவுழைப்பது சாத்தியமோ அவ்வளவும் நடக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டியது மனுஷஜாதியின் ஆத்மக்ஷேமத்திற்கும் தேக மனோவிர்த்தி க்ஷேமத்துக்கும் இன்றியமையாததாயிருக்கிறதென்று ஏற்படுகிறது. மேலே சொன்ன மூவகை ஸ்தாபனங்களும் மற்ற விஷயங்களில் தங்கள் கடமைகள் என்னதான் வேறுபட்டிருப்பதாகப் பாவித்தாலும் குழந்தைகளுக்குப் பிரதம வித்தைபோதிக்கும் விஷயத்தில் எல்லாரும் ஒத்துழைக்க வேண்டியதவசியமென்பதை பொத்துக்கொண்டிருக்கின்றன. பிரதம வித்தையில் அதிக பொறுப்போடு நம்மாலான முயற்சியெல்லாம் செய்து மிக்க பாடுபட்டுழைக்க வேண்டிய தவசியமென்று ஒப்புக்கொண்டாலும் கிண்டர்கார்டன் ஸ்தாபனங்களிலுள்ள இலக்கியமென்னவென்றால், அது குழந்தைகளின் மேலான குணங்களை விர்த்திசெய்கிறது. அழுக்குப்படாத, தொட்டால் ஒட்டிக்கும் தன்மையுள்ள குழந்தைமனதில் சன்மார்க்க தத்துவங்கள் பதியச்செய்கிறது. அங்கே குழந்தைகள் மனதிலுண்டாகும்படி செய்யப்படும் எண்ணங்களும் நினைவுகளும் மனதை மேனோக்கிக்கொண்டு போவதோடு பின்னால் சகவாசதோஷத்தால் தெரியவரக்கூடிய துன்மார்க்க எண்ணங்களெல்லாம் எதுவும் நன்றாகப் பதியும் அக்காலத்தில் அவர்கள் மனதில்புகவிடாமல் தடுக்கத்தக்கவையாகவிருக்கின்றன. சிறு பிராயத்திலே கிண்டர்கார்டன் முறையினால் கை, கால், உறுப்புகளும் தேகமும் இலகுவாகவும் அழகாகவும் இயங்கப்பழக்கப்படுகின்றன. கிண்டர்கார்டன் வேலையினால் நேர்த்தியான கைப்பழக்கம் உண்டாகிறது; கண்களுக்கு எதையும்பார்க்க ஆயத்தமான சக்தியும், நுட்பசக்தியும் உண்டாகின்றன. மனோபாவசக்திக்கு பலம் உண்டாகிறது. கிண்டர்கார்டன் விளையாட்டுகளும் ஆட்டங்களும் காலத்தைப்பற்றி நுட்பமான எண்ணமும், சங்கீத உணர்ச்சியும், குணமும் பிறருக்காகச் சிந்தனைசெய்யும் குணமும், எதனிடத்திலும் நல்லெண்ணம் பாராட்டும் தன்மையும் உண்டாகச்செய்கின்றன. சாப்பாட்டு வேளையில் நன்றாய்ப் பழகின கிண்டர்கார்டன் வாத்தியார் கூடவிருந்து பார்த்துவந்தால் குழந்தைகளுக்கு நல்ல மாதிரிபடியும்; அந்நியோன்னிய சுபாவமும் தன்னிடத்துள்ளதைப் பிறர்க்குப் பகிர்ந்து கொடுத்துண்ணும் குணமும் உண்டாகும். கிண்டர்கார்டன் ஸ்தாபனத்தில் பழகின குழந்தை தன்னயம் பார்க்கிற குணமுடையதாயிருக்கமுடியாது. இவ்வகை குணங்களும் இன்னுமிவைபோன்ற சத்குணங்களும் விர்த்தியாகப் பார்ப்பதோடு தேகசௌக்கியமும் கட்டழகும் விர்த்தியாகும்படி பார்த்துவரவேண்டுமெனபதே இந்த கிண்டர்கார்டன் முறையின் நோக்கமெல்லாம். கிண்டர்கார்டன ஸ்தாபனத்தில் குழந்தைகளைச் சுற்றியுள்ளவைகள், வேலைசெய்யும் வகைகள், குழந்தைகளுடைய மனநிலை இவையெல்லாம் மேலே சொன்ன பூர்ணபலன் சித்திக்க உதவிசெய்யும் சாதகங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இம்முறைப்படி, பாலர்களின் விசாரபுத்தியை விருத்திசெய்து பகுத்தறிவை வளரச் செய்தலைப்பற்றி இன்னொரு இடத்தில் குறிப்பிடுகிறோம்.



## DEATH OF DADABHAI NAOROJI. INDIA'S GRAND OLD MAN.

## ஸ்ரீ மஹான் தாதாபாய் நௌரோஜியின் தேஹ வியோகம்.

இந்தியர்வில் வயதிலும் புத்தியிலும், மேன்மையிலும், கண்ணியத்திலும், ஊருக்குழைப்பதிலும் உத்தம புருஷனாய் விளங்கி 92-வயதுவரையில் ஜீவித்திருந்து கடைசிவரையில் தன் தேச க்ஷேமத்தை மறவாமலிருந்துவந்த ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜியவர்கள் சென்ற ஜூன்மாசம் 30 தேதி சனிக்கிழமையன்று சாயங்காலம் 5-மணிக்குத் தேஹவியோகமானார். இவர் 1825-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 4 தேதி பம்பாய் நகரத்திலே ஒரு எளிய பார்ஸி குடும்பத்தில் பிறந்தவர். நாலாவது வயதில் தனது பிதாவை யிழக்கும் தௌர்பாக்கியம் பெற்றுத் தன் தாயினால் படிக்கவைக்கப்பெற்று முன்னுக்குவந்தவர். பம்பாய் எல்பின்ஸ்டோன் இன்ஸ்டிடியூஷனில் பணஉதவிபெற்ற மாணாக்கராய்ப் படித்துத் தேறி 1845-ம் வருஷத்துக்குள் இந்தியாவில் படிக்கக்கூடிய அளவு படித்து முடித்துவிட்டார். அப்பொழுது பாம்பாயில் சீப் ஜஸ்டிஸாயிருந்த ஸர் எர்ஸ்கின் பேர்ரி என்பவர் நௌரோஜியின் புத்திசாமர்த்தியங்களைக்கண்டு வியந்து அவரை பாரிஸ்டர் பரீக்ஷைக்கு வாசிக்க இங்கிலாந்துக்கு அனுப்ப உத்தேசித்தும் அது பலிக்காமற்போயிற்று. 1850-ம் வருஷத்தில் இவர் படித்த வித்தியாசாலையில் தானே ஒரு போதகராக நியமனம்பெற்று 1854-ம் வருஷத்தில் அந்த எல்பின்ஸ்டோன் காலேஜில் தானே ஒரு பிரதமபோதகராகும் பதவிபெற்றார். 1856-ம் வருஷத்தில் அவர் அவ்வேலையைவிட்டு ஒரு பெரிய கம்பெனியின் ஏஜண்டாக லண்டனிலிருந்து வேலை பார்த்துவர நியமனம் பெற்றுச் சீமைக்குப் போய்விட்டார்.

இடையிலுள்ள 10 வருஷகாலங்களில் (1845-1855) அவர் பம்பாயில் சமஷ்டிசேவையார்த்தம் சமுதாய நன்மைக்காகப் பல துறைகளிலிறங்கி யுழைத்துவந்தார். பல பெண்பாடசாலைகளையும் இதர ஸ்தானங்களையும் ஏற்படுத்தி நடத்திவந்தார். இங்கிலாந்துக்குச் சென்றபிறகு இந்தியாவின் ராஜ்ய க்ஷேமவிர்த்தியை நாடியும் இந்தியர்களுக்கு அதில் சாய்காலுண்டாவதற் கனுகூலமாகவும் எவ்வளவோ பாடுபட்டு உழைத்துவந்தார். இவருடைய அபார முயற்சியினால் இவர் பார்லிமென்டு சபை மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பெற்று அங்கேயும் அதற்கு வெளியிலுமாக நெடுங்காலம் உழைத்துவந்ததின் பலனாக இந்திய ஸிவில் ஸெர்விஸ் பரீக்ஷையை இங்கிலாந்திற்போல் இந்தியாவிலும் அதற்குச் சரியாக நடத்தி வரவேண்டுமென்று பார்லிமென்டு சபையில் பிரேரேபித்து அந்தப்படியே அவர்கள் தீர்மானமும் செய்யும்படி செய்தார். அப்படி இடைவிடாதுழைத்து ஜயித்தும் கவர்ன்மெண்டார் காமன்ஸ் சபையார் தீர்மானத்தையும் நிறைவேற்றாது போட்டுவிட்டார்கள். இதைப்பற்றி இவர் 1906-ம் வருஷம் மூன்றுவதுமுறை காங்கிரெஸ் ப்ரெஸிடெண்டாக கல்கத்தாவில் கூடிய அம்மஹாசபையின் அக்கிராசனம் வகித்துப் பேசியபொழுது மிகு வருந்திமுறையிட்டுக்கொண்டார். முறையிட்டுக்கொண்டாலும் சித்தம் கலங்கவில்லை. அஞ்சாதநெஞ்சினர். அபூர்வதிறத்தினர். விடாமுயற்சியுடையவர். "முயற்சி திருவினையாக்கும்" என்பதில் அத்யந்தபக்தியுள்ளவர். அதை யனுசரித்து ஆயுஷ்காலமுழுவதும் ஒழுகினவர். அப்பேர்ப்பட்டவர் 70 வருஷகாலமாக இந்தியாவுக்கு இடைவிடா துழைத்துவந்தார். அவருடைய முயற்சி விசேஷத்தைவிட அவருடைய அனுபவ விசேஷம் பெரியது. நல்லது பொல்லாதிரண்டுக்கும் ஈடுகொடுத்துத் தேர்ந்தவர். உத்தமகுணசீலர். எதிரியை மனம்நோகாது கண்டித்துப்பேசவல்ல சாதுரியமுடையவர். "சத்தியம் வத: ஹிதம்வத" என்னும் மஹா வாக்கியத்தை யனுசரித்து பிறரைக் கண்டித்துப் பேசும்போ

தும் அவர் துவேஷங்கொள்ளாதபடி உண்மையை ஹிதோபதேசமாகப் பேசவல்லவர். 1855-ம் வருஷம் முதல் 1869-ம் வருஷம் வரையில் இவர் இங்கிலாந்திலிருந்தார். இடையிலே 1862-ம் வருஷத்தில் ஒரு ஹிந்து நண்பருக்கு உதவிசெய்யப்போகத் தானும் அவருடன் முழுகிப்போகும்படியான ஸ்திதிக்கு வந்துவிட்டார். ஆயினும் அவருடைய நாணய மிகுதியினாலும் நற்குணச் சிறப்பினாலும் எல்லாருடைய பிரீதியையும் சம்பாதித்து கடன்காரர்களுக் குரியதைக் கொடுத்துத் தீர்த்துச் சமாளித்துக் கொண்டுவந்தார்.

1869-ம் ஆண்டில் அவர் பம்பாய்க்குத் திரும்பி வந்தாராயினும் உடனே இங்கிலாந்திற்குத் திரும்பிப்போகும்படியாக நேரிட்டது. இந்தியாவின் அரசிறை விசாரணைக் கமிட்டிமுன் சாக்ஷியம்சொல்ல அவரை அழைத்திருந்தார்கள். அவர்கள் முன் இந்தியாவுக்கு அனுகூலமாக வெகு திறமையோடு சாக்ஷி சொன்னார். அவருடைய சாமார்த்திய விசேஷத்தினால் இந்தியா எல்லாத் தேசங்களிலும் மிக ஏழைமையான தேசமென்றும் வரும்படி தலைக்குச் சராசரி ரூ. 20 - ம் ஒரு வருஷத்திற்கிடைப்பதாயில்லையென்றும் இது சாப்பாட்டுக்கே போதாதென்றும் வற்புறுத்திக் கூறி ருசுவும் காட்டி ஸ்தாபித்தார்.

அங்கே 5 வருஷங்கள் இருந்தபின் 1874-ம் வருஷத்தில் பரோடா திவானாக வந்து சேர்ந்தார். அந்நாட்டில் அவர்செய்த சீர்திருத்தங்கள் எல்லாராலும் மெச்சிக்கொண்டாடப்பட்டன. அந்தப் பதவியிலும் நீடித்திருக்க மனம் பிடிக்காமல் அந்த வேலையை ராஜினாமா கொடுத்துவிட்டு பம்பாயில் தானே பல வருஷம் வசித்துவந்தார். இந்தியாவிலிருந்து ழைப்பதைவிட இங்கிலாந்திற்குச்சென்று அங்கேயுள்ள பார்லிமெந்து மஹாசபையில் மெம்பராகச்சேர்ந்து உழைக்கவேண்டியவேலை மிகப்ப இருக்கிறதென்று 1885-ம் வருஷம் அவர் மீண்டும் சீமைக்குச்சென்றார். 1886-ம் வருஷத்துப் பொது எலெக்ஷன் காலத்தில் லண்டனின் ஒரு பாகமான ஹால்பர்ன் என்னும் வட்டத்துக்கு அவர் பார்லிமெந்து சபை மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பெறப் பிரயாசைப்பட்டார். அது பலிக்காமற்போகப் பிறகு 1892-ம் வருஷத்தில் பின்ஸ்பரி மாகாணத்துக்கு பார்லிமெந்து மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படலானார். பார்லிமெந்து சபை மெம்பராகவிருந்து அவர் இந்தியாவுக்கனுகூலமாகச் செய்த வேலைகள் அனந்தம். அவைகளைக் கணக்கிட்டு முடியாது. 1895-ம் வருஷத்தில் நடந்த பொது எலக்ஷனில் அவர் மெம்பராகவர முயன்றும் பலிக்காது தோற்றுப்போயினர். ஆயினும் அவர் சளைக்கவில்லை.

இந்தியாவில் கூடிய காங்கிரஸ் மஹாசபைக்கு அவர் மூன்றுதரம் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்படலானார். கடைசித் தடவை 1906-ம் வருஷம் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் சபையில்தான் அவர் தனது அனுபவத்தையெல்லாம் குறிப்பிட்டுச்சொல்லி இந்தியாவுக்கு ஸ்வராஜ்யாக்கியம் என்கிற ஜன ஆட்சி சித்தித்தாலன்றி இந்தியாவின் குறைகள் தீராவென்று கல்லும் கரைந்துருக வற்புறுத்திப் பேசினார். அவர் 10 வருஷங்களுக்குமுன் போட்ட வித்தே இப்பொழுது மரமாக வளர்ந்து இருக்கிறது. காங்கிரஸ் சபையாரும் முஸ்லீம் மஹாசபையாரும் போனவருஷம் இந்தியாவுக்கு ஜன ஆட்சி சித்திக்க திட்டமாக இன்ன இன்ன சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுத் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அந்த திர்மானத்தை யனுசரித்தே இந்தியாவுக்கு ஜன ஆட்சி சித்திப்பதற்கான சபைகள் எங்கும் ஏற்பட்டு உழைத்து வருகின்றன. 1902-ம் வருஷத்தில் அவருடைய வியாசங்கள் பிரசங்கங்கள் புஸ்தகங்களை யெல்லாம் சேர்த்துத் திரட்டி ஒரு பெருநூலாகப் பிரசுரித்தார். அது இன்னும் சிலாக்கியமாகக் கொண்டாடப்படுகிறது.

இப்படியாகச் சுமார் 50 வருஷகாலம் இந்தியாவின் மேன்மைக்காகப் பாடுபட்டுழைத்துவிட்டு வயோதிகம் மேலிட பம்பாயில் தானே வசிக்கலுற்றார். சரீரபலம் குறைந்து தளர்ந்தாலும் மனோபலமும் திடமும் கடைசிவரையில் குறைவுபடவேயில்லை. அவருடைய 80-வது வயதில் அவருக்கு மூப்பு மேலிட்டு தேகபலம் மிகக் குன்றிப்போக அவர் அது முதல் பம்பாய்க்கருகிலுள்ள வார்ஸோவா என்னும் கிராமத்தில் வசித்துவந்தார். பிரதி வருஷம் செப்டெம்பர் 4௳ அவருடைய பிறந்தநாள் தேசமெங்கும் கொண்டாடப்படும்பொழுது அவர் அங்கிருந்து ஜனங்களுக்கு புத்திமதிகூறி நல்வசனமுரைப்பார். அந்த புத்திமதி வார்த்தைகள் மிகச் சிறந்தவையாக விருக்கும். இந்தியாவில் ஹிமாலயம் முதல் கன்னியாகுமரிவரையில் அவருடைய பேரையும் கீர்த்தியையும் அவருடைய தேச சேவையையும் கேட்டுக் கொண்டாடாதவர் ஒருவருமில்லை. அந்த மஹான் அவருடைய 92-வது வயதில் முதிர்ந்த பழம் உதிர்ந்து விழுவதுபோல் தேஹத்தை விட்டுப் பரலோகப்பிராப்தி யடைந்தார். 1906-ம் வருஷம் அவர் காங்கிரஸ் ப்ரெஸிடெண்டாகச் செய்த பிரசங்கத்தில் ஆணித்திறமான சில வார்த்தைகளை ஜனங்கள் தங்கள் மனதில் இருத்தி இன்றைக்கும் என்றைக்கும் அதை மறவாமல் உழைத்துவரக் கடமைப்பட்டவர்களாகக் கருதியிருக்கிறார்கள். அவருடைய அந்த உத்தம உபதேசம் இது :—



“நான் ஆதியில் முயற்சி எடுக்க ஆரம்பித்தது முதல் எத்தனையோ ஏமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் எவனுடைய மனதும் அதைரியமடையும்படி செய்திருக்கக் கூடியவை. எனக்குநேர்ந்த ஏமாற்றங்கள் சாதாரணமானவையல்ல; சாதாரணமாக ஒருமனிதன் ஒரு விஷயமாய்ப் போராடி, தோற்றுப்போவானாகில் அவனுக்கு ஏமாற்றம் உண்டாகும். ஆனால் அநேகம் சமயங்களில் நான் வெற்றியடைந்தும், அந்த வெற்றிகளின் பலனை நான் அடையமுடியாமல், நிர்வாக அதிகாரிகள் செய்துவிட்டனர். இவைகள் மனதை உடைத்துவிடக் கூடியவை. ஸ்டாச்சூடரி ஸிவில் ஸெர்விஸ், சமகாலப் போட்டிப் பரிட்சை, வெல்பி கமிஷன் முதலிய பல விஷயங்களில் நான் ஜயமடைந்தேனாயினும், காரியம் பலிக்காமல் நிர்வாக அதிகாரிகள் செய்துவிட்டனர்.

“ஆனால் நான் தைரியத்தை இழந்துவிடவில்லை. தைரியத்தை இழந்துவிடாமலிருந்தது மாத்திரமல்ல, இப்பொழுது நம்பிக்கையுடனும் உங்கள்முன் நிற்கிறேன். நான் தைரியத்தை இழக்காததற்கும் காரணமுண்டு, நம்பிக்கையுடனிருப்பதற்கும் காரணமுண்டு. விடா முயற்சி வேண்டுமென்கிற கோட்பாடே நான் தைரியத்தை விடாததற்குக் காரணம். சிறிதோபெரிதோ எந்தக் காரியத்தில் நீங்கள் இறங்கினாலும் விடாமுயற்சி வேண்டும். ஏமாற்றம் உண்டானாலும் நடுவில் நின்றுவிடக் கூடாது; நின்றுவிட்டால், ஏற்கனவே அடைந்த லாபமெல்லாம் போய்விடும்; மறுபடி ஆரம்பம் செய்வது கஷ்டமாயிருக்கும். அந்தந்த நிலைமைக்குத் தகுந்த முறையை நாம் அனுசரிக்கலாமாயினும், முடிவு வரையில் விடாமுயற்சிவேண்டும். நம்முடைய கட்சி நியாயமானதாகையால், முடிவில் அது வெற்றியடையும். ஆகையால் தான், நான் தைரியத்தை விட்டதில்லை. அநேகம் ஏமாற்றங்களை நான் அனுபவித்திருந்தும் இந்த சமயத்தில் எனக்கிருக்கிற நம்பிக்கைக்குக் காரணமென்னவென்றால், ப்ரிட்டிஷ் ராஜ தந்திரகளுடைய மனதில் சுவாதீனம் முதலிய ப்ரிட்டிஷ் ஜாதியின் கொள்கைகள் புனர் ஜனனமடைந்து வருகின்றதேயாம்.” இவருடைய உத்தம குணங்களையும் சிரேஷ்டமான நடத்தைகளையும் நன்கு மதித்து பம்பாய் யூனிவர்ஸிடி சங்கத்தார் இவருக்கு எல். எம். டி. பட்டம் கொடுத்து கௌரவித்தார்கள்.

## ON THE EDUCATIONAL NEEDS OF WOMEN.

(BY PANDIT KUMARI LAJJAVATHI.)

## நமது தேச ஜனங்களின் கல்வி சம்பந்தமான தேவைகள்.

பண்டித் குமாரி லஜ்ஜாவதியின் பிரசங்கம்.

பஞ்சாப்பைச் சேர்ந்த ஜலந்தரிலிருக்கும் கன்யா மஹா வித்யாலயத்தின் கௌரவ வைஸ் பிரின்ஸிபாலான ஸ்ரீமதி பண்டித் குமாரி லஜ்ஜாவதி லாகூரிலிருக்கும் பிராட்லா ஹாலில் 7000 பேர்களடங்கிய ஒரு பெரிய சபையில் சென்ற செவ்வாய்க்கிழமையன்று ஒரு உபந்யாசஞ் செய்தார்.

ராஜா நரேந்திரநாத், எம். ஏ., அக்கிராசனம் வகித்து அடியில் வருமாறு பேசினார்:—இந்த கன்யா மஹாவித்யாலயம் 1886-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இக்காலேஜ் இவ்வளவு பிரபலமாய் விளங்கி வருவதற்குக் காரணம் ஸ்ரீமதி லஜ்ஜாபாயின் அக்கரையேயாகும். இந்த வித்யாலயத்தில் லௌகிகப் படிப்புடன் ஆரிய சமாஜத்தின் முறைகளின்படி மதசம்பந்தமான படிப்பும் கற்பிக்கப்பட்டு வருகிறது. மதப்படிப்பை புருஷர்களைவிட, ஸ்திரீகளுக்குக் கற்றுக் கொடுப்பது நிரம்ப அவசியமாகும். மதப்படிப்பு இல்லாததினால் உண்டாகும் குறைகள் புருஷர்களிடத்தில் காணப்படுவதைவிட ஸ்திரீகளிடத்தில் அதிசீக்கிரமாய் விளங்கும். நமக்கு கௌரவம் கொடுப்பவர்கள் ஸ்திரீகளே. கிரககிருத்திய காரியங்களைச் சரிவர நடத்துவதில் அவர்கள் வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். ஸ்திரீகளுக்கு ஏதேனும் குறைகள் ஏற்பட்டால், அவைகளை அவர்கள் அதிக நுட்பமாக உணருகிறார்கள். ஸ்திரீகளுக்கு ஆபரண அழகைக் காட்டிலும் நல்லொழுக்க அழகே அழகாகும். நல்லொழுக்கங்கள் புருஷர்களைவிட ஸ்திரீகளிடத்தில் அதிகமாக இருக்கவேண்டும். நல்லொழுக்கப் படிப்பை ஸ்திரீகளுக்குப் போதிப்பதே இந்த கன்யா மஹா வித்யாலயத்தின் நோக்கமாகும். ஸ்திரீகளுக்குப் பிரயோஜனப் படும்படியான விஷயங்களைக் கற்றுக் கொடுப்பதில் இந்த வித்யாலயத்தைப்போன்ற புராதன வித்யாலயம் வேறொன்றுமில்லை. இதைப்போன்ற பிரபலமான வித்யாலயம் சென்னையிலாவது பம்பாயிலாவது இல்லை இதற்கு உயிர்கொடுத்து இவ்வளவு தூரம் பிரபலமாய் விளங்கும்படிச் செய்தது லாலாதேவராஜ் என்பவர் தான். தவிரவும், ஜலந்தர் வாசிகளும் இந்த வித்யாலயத்தின் அபிவிருத்தியைப்பற்றி நிரம்ப அக்கரை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இந்த மஹா வித்யாலயத்தில் பெண்களுக்கு மதசம்பந்தமான படிப்பைக் கற்றுக்கொடுப்பதினால் இதற்கு ஜனங்கள் பண உதவி செய்வார்கள் என்று நம்புகிறேன் என்று பேசி முடித்தார்.

கன்யா மஹா வித்யாலயத்தின் கௌரவ வைஸ் பிரின்ஸிபாலான குமாரி லஜ்ஜாவதி பேசின பேச்சின் சாராம்ஸம் அடியில் வருமாறு:—பெண் கல்வி யபிவிருத்தியானால் தான் இந்தியா க்ஷேமமடையும். இந்தியா பல வழிகளில் அபிவிருத்தி யடைந்துவரும் இக்காலத்தில் ஸ்திரீகளின் கல்வியைப்பற்றி இன்றையதினம் கொஞ்சம் சொல்லத் துணிகிறேன். ஸ்திரீகளின் படிப்பைப்பற்றி பரிகாசம் பண்ணிவந்த காலம் போய்விட்டது. சென்ற 20 வருஷ காலமாக பஞ்சாப்பில் பெண்கல்வி அபிவிருத்தி யடைந்து வருகிறது. ஆனால் அபிவிருத்தி நிரம்ப மெதுவாக இருக்கிறது. வீட்டுக்காரியங்கள் சந்தோஷகரமாகவும் சுகமாகவும் நடந்து வரவேணுமானால் ஸ்திரீகளும் புருஷர்களும் படிப்பில் சமமாக அபிவிருத்தி யடைந்திருக்கவேண்டும். ஸ்திரீ புருஷர்களில் உயர்வுதாழ்வு என்றபேதம் கூடாது. கிரக கிருத்தியம் என்ற படகை நடத்தும் ஸ்திரீ புருஷர்களில் யாராவது ஒருவர் மற்றவர்களைவிட பளுவாக இருந்தால் அப்படகு மூழ்கிப்போகும். ஆண் குழந்தைகளுக்கு படிப்பைக் கொடுத்துவரும் மனிதர்கள் அவர்களுடைய பெண்குழந்தைகளை மறந்துவிடக் கூடாது. படிப்பினால் ஸ்திரீகள் யாதொரு பயனையும் அடைந்ததாகக் காணோம் என்று சிலர் சொல்லுகிறார்கள். வேத சாஸ்திரங்களில் ஞானத்திலும் ராஜ்ஜியங்களை நிர்வகிக்கும் சக்தியிலும் ஸ்திரீகள் புருஷர்களுக்குக் குறைந்தவர்கள் என்று சொல்லுவதற்கில்லை. யுத்தகளத்தில் ஸ்திரீகள் அவர்களுடைய கணவன்களுடனும், சகோதரர்களுடனும் சேர்ந்து சண்டைசெய்திருக்கிறார்கள். தசரத மஹா ராஜாவின் மனைவியான கைகேயி ரணகளத்தில் சத்துருக்களுடன் போர்செய்து தன் கணவனுடைய உயிரைக் காப்பாற்றினதாகவும் அதனால் அந்த மன்னன் சந்தோஷமடைந்து தன் தேவியைநோக்கி எனக்கு அளவிலாச் சந்தோஷமாயிருக்கிறது. உனக்கு வேண்டிய இரண்டு வரங்களைக்கேள் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்—என்று சொல்ல, அதற்கிசைந்து சமயம் வந்தகாலத்தில் ராமனை காட்டுக்கு அனுப்பவேண்டுமென்றும் தன் மகன் பரதனுக்கு பட்டம் கட்டிக்கொடுக்கவேண்டு மென்றும் கைகேயி கேட்க, அவ்விரண்டு வரங்களையும் கைகேயி பெற்றதாக ராமாயணத்தில் வாசித்திருக்கிறோமல்லவா? அஹல்யாபாயும் விக்டோரியா மகாராணியும், போபால் பீகமும் புருஷர்கள் ராஜ்ஜியபாரத்தை நடத்தி வந்ததைவிட அதிக சிறப்பாக நடத்திவந்ததை நாம் அறிந்திருக்கிறோமல்லவா. குழந்தைகளைக் காப்பாற்றும் வேலையிலும், சமையல் செய்யும் வேலையிலும் வீட்டுக்காரியங்களை நிர்வகிக்கும் வேலையிலும் ஸ்திரீகள் அமர்ந்து நடத்திவருகிறவர்களாக இருக்கிற படியால், அவர்களுக்கு வெளியேபோய் இதர வேலைகளை நடத்துவதற்கும் சாவகாசம் இல்லாமல் இருக்கிறது. இதனால் அவர்களை புருஷர்களைவிடக் கீழானவர்கள் என்று சொல்லலாமா. தேசம் முன்னுக்கு வருவதற்கான கல்விமுறை எதுவோ அந்த முறைப்படி பெண்களுக்குக் கல்வி கற்பிப்பது நலம். மதாவேசம், சமூகத்தாருக்கு ஊழியஞ் செய்யவேண்டும் என்ற எண்ணம் தன் மறுப்பு ஆகிய இவ்வித உத்தமமான குணங்கள் உதிக்கும்படியான படிப்பை பெண்களுக்கு கற்பித்து வரவேண்டும். நல்ல மனைவிகளும் நல்ல தாயார்களும் உற்பத்தியாகும்படியான வழியில் கல்வி கற்பித்து வரவேண்டும் என்பதை இலக்ஷியமாகக் கொள்ளவேண்டும். பெண் கல்வி அபிவிருத்தியடையாமல் தளர்ந்துபோவதற்குக் காரணம், ஸ்திரீ உபாத்திமார்கள் இல்லாததின் குறையேயாகும். இந்த உத்தமமான கைங்கரியத்தின் பொறுப்பை வகிப்பதற்கு, இத்தேசத்தில் லக்ஷக்கணக்கான கைம்பெண்கள் இருக்கிறார்கள். அவர்களை உபாத்திமைத் தொழிலுக்கு தயார்ப்படுத்தலாம். புருஷன் இன்னவர் என்று தெரியாத பால்ய கைம்பெண்கள் ஆயிரக்கணக்காக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இரண்டு வழிகள் ஏற்பட்டிருக்கின்றன. மனதை வசப்படுத்திக்கொள்ளும் சக்தியையும், வாழ்நாளை சரியான வழியில் நடத்திவரவேண்டும் என்ற எண்ணத்தையும் உடைய கைம்பெண்கள், தேச ஊழியம் என்ற பெரிய கைங்கரியத்தை விட்டுவிட்டு மறுபடியும் கிரக கிருத்திய சம்பந்தமான வழியை அனுஷ்டிக்கும்படியாக அவர்களை ஏன் கட்டாயப்படுத்தவேண்டும். இந்தியாவில் ஸ்திரீகள், அவர்களுடைய புருஷர்களை இழந்துவிட்டால், அவர்களில் சிலர் இறந்துபோன தங்களுடைய புருஷர்களையே சதாகாலமும் நினைத்துக்கொண்டு வேறு விவாகம் செய்துகொள்ளாமல் இருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் ஜன ஊழியத் தொழிலை சிரசாக வகித்து உலகம் முழுவதையும் சொந்த குடும்பமாக பாவித்து காலத்தைக் கழித்து வரலாம். ஸ்திரீகளுக்கு மற்றொரு வழி ஏற்பட்டிருக்கிறது. வைத்திய சாஸ்திரங்களையும் சுகாதார சாஸ்திரங்களையும் கற்று நிபுணர்களாகி டாக்டர்களாக அமர்ந்து பிளேக்கு நோய் முதலிய தொத்து வியாதிகள் தேசத்தில் பரவாமலிருக்கும்படியான உபாயங்களை அனுஷ்டித்து, பறந்தோடிப்போகும்படிச் செய்யும்படியான தேசோபகாரமான கைங்கரியத்தை

ஸ்திரீகள் ஏற்றுக்கொண்டு செய்து வரலாம். இவ்வித கைம்பெண்களுக்கு சநாதன தர்ம சபையாரும், ஆரிய சமாஜத்தாரும் பிரா மோசமாஜத்தாரும் சகாயம் செய்யவேண்டியது அவசியம். வேறு சில கைம்பெண்கள் கோஷா ஸ்திரீகளுக்கு சட்ட சம்பந்தமான வழிகளில் புத்திமதி சொல்லிவரலாம். வேறு சிலர் தையல் வேலைகளைக் கற்றுக்கொண்டு மற்றவர்களுக்கு கற்பித்து வரலாம். வேறு சிலர் இல்லறத்தை வெறுத்து சன்னியாசம் பூண்டு தேசம் தேசமாய்ப்போய் மதவிசாரணை செய்து மதசம்பந்தமான வழிகளை உபதேசித்து வரலாம். விவாகமாகாத சிறிய பெண்களுக்கு கல்வி கற்பிக்கும் விதத்தைப்பற்றி கொஞ்சம் சொல்லுகிறேன். ஆண்பிள்ளைக்கு, பணத்தைச் சம்பாதிக்கும் வழியை யொட்டிய படிப்பைக் கற்பித்தால், பெண் பிள்ளைகளுக்கு, அப்பணத்தை எப்படிச் செலவுசெய்யவேண்டும் என்பது சம்பந்தமான படிப்பைக் கற்றுக் கொடுக்கவேண்டும். பணத்தைச் சம்பாதிக்கும் விதத்தைக் கற்பித்துக் கொடுக்கும்படிப்பு, ஸ்திரீகளுக்கு வேண்டியதில்லை. பெண்கள் சர்வகலாசாலையைச்சேர்ந்த பட்டப் பரீக்ஷையில் தேறவேண்டுமென்ற நியமம் இல்லை. பெண்களுக்கு அன்னிய பாஷை கற்பிக்க வேண்டிய அவசியமில்லை. ராமாயணம் பாரதம்போன்ற கதைகளை அறியாத பெண்களுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதில் என்ன பிரயோஜனம்? ஹிந்துப் பெண்களுக்கு கீதையையும், மகம்மதியப் பெண்களுக்கு கொரானையும் கற்பித்துக்கொடாமல், சரித்திரம், பூகோளம், கணிதம் முதலிய சாஸ்திரங்களைக் கற்பித்துவருவதில் என்ன பிரயோஜனம்? குழந்தைகளைப் பெறும் காரியத்தைத் தவிர, உலகத்திற்குப் பிரயோஜனமான வேறு பல காரியங்களுக்கு உபயோகப்படாமல் இருக்கும்படியாக பெண்களை வைத்திருப்பதில் என்ன பிரயோஜனம்? பெண்களுக்கு சமையல்தொழில், தையல்வேலை வீட்டுக்காரியங்களில் சிக்கனம் முதலிய விஷயங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும். தானியத்தை அரைக்கும் தொழில் கற்றிருந்தால், அத்தொழில் நடத்தினால் அதனால் சகல வியாகூலமும் போய்விடும். உலகத்தில் பரம ஏழைகள் யார் என்றால்- இந்தியர்களைத்தான் குறிப்பிடவேண்டும். மேலும் மேலும் பணத்தைச் சம்பாதிக்கும் மார்க்கத்தை அவர்கள் அறிய விரும்பினால், அப்பணத்தை எப்படிச் செலவு செய்யவேண்டும் என்ற விஷயமாய் ஏற்பட்டிருக்கும் ஞானத்தையும் அடைய விரும்பவேண்டும். வீட்டுக் காரியங்களை நிர்வகித்துவரும் பொறுப்பை வகித்து வருவதோடுகூட வேறு தேசங்களில் நடக்கும் காரியங்களையும் அறிந்துகொள்ளுவதற்கு வேண்டிய சாமர்த்தியத்தை சம்பாதித்துக் கொள்ளவேண்டும். இந்திய கவர்ன்மெண்டைப்பற்றியும் இந்தியச் சட்டத்தைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்திருக்கவேண்டும்.

கன்யா மஹா வித்யாலயத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தையைச்சொல்லுகிறேன். இந்த மஹா வித்யாலயம் 1886-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அப்பொழுது அதில் மூன்று பெண்கள் வாசித்து வந்தார்கள். ஒரே ஒரு உபாத்தியாயர் இருந்தார். ஆரிய சமாஜத்தார் அதற்கு மாதம் ஒன்றுக்கு அற்பத்தொகையே பண உதவி செய்துவந்தார்கள்.

1896-ம் வருஷத்தில் அதற்கு கன்யா மஹா வித்யாலயம் என்ற பெயர் இடப்பட்டது. அந்த வித்யாலயத்தில் இங்கிலீஷ் பாடம் இஷ்டபாடமாக கற்பிக்கப்பட்டு வந்தது. ஹிந்திபாஷையின் மூலியமாக எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்பட்டு வந்தன. ஹிந்து பெண்களுக்கு ஸ்ரீராமர் ஸ்ரீகிருஷ்ணர் இவர்களுடைய ஜீவ்ய சரித்திரம் இன்னதென்றே தெரியாது. அன்னிய மதத்தினர்களின் கொள்கைகள் கற்பிக்கப்பட்டு வந்தன. இலவச கட்டாயப் படிப்பு முறைகள் இந்தியாவில் பிரஸ்தாபிக்கப்படுவதற்கு முந்தியே இந்த வித்யாலயத்தில் படிப்பு இலவசமாக கற்பிக்கப்பட்டு வந்தது. வித்யாலயத்தில் ஸம்ஸ்கிருதமும் சங்கீதம் முதலியவைகள் கற்பிக்கப்பட்டு வந்தன



வித்யாலயத்தை யொட்டி போர்டிங் ஹவுஸும் கைம்பெண்களின் ஆச்சிரமமும், அனாதைக் குழந்தைகளின் ஆச்சிரமமும், ஏற்பட்டிருக்கின்றன. 90-உபாத்தினிமார்கள் இருக்கிறார்கள். அவர்களில் 10-பேர்கள் கைம்பெண்கள் 400-பேர் வித்தியார்த்திகள் இருக்கிறார்கள். சிக்கனமாக ஜீவனம் செய்யும் வழிகள் பெண்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகின்றன. 11 கௌரவ உபாத்திமார்கள் மாதம் ஒன்றுக்கு 10-ரூபாய் சம்பளம் பெற்று வருகிறார்கள். அவர்கள் அதில் 5 ரூபாயைச் சாப்பாட்டுக்காக போர்டிங் ஹவுஸுக்குக் கொடுத்து விடுகிறார்கள். இக்காலேஜ் கூடிய சீக்கிரத்தில் சர்வ கலாசாலையாக உயர்த்தப்படும்.

இந்த மஹா வித்யாலத்திற்கு பொருளுதவி செய்யவேண்டுமென்று உபன்னியாசகர் கேட்டுக்கொண்டார். சந்தாப்பட்டியில் 5000 ரூபாய்க்கு கையொப்பம் இடப்பட்டது.

---

## மாந்தர் லக்ஷியம். The Goal of Man.

" அகங்காரமற்று அவகடமிலாது
அகண்ட னருள் நாடுவதுசமாதி
ஜகமீதிலே அன்புபற்றுமலே பற்றி
பற்றற்றிருப்பது சமாதி
மகத்தான அடியருடன் உறவாடிக் கூடியே
காலங்கழிப்பதும் சமாதி
எக்காலமெவர்பே சினும்
சிறிது மெண்ணாதிருப்பது சமாதி
சுகமொடு இகழான வசனங்கள்
ஒன்றெனக் கொள்வது சமாதி
பகவனே மௌனகுரு நாதனே அடி
யேனுனை நம்பினே
னிதுவேளை நீயருளவே
செய்தற்கறிதான
வேதாந்த நாளுடைய துய்யனே
என்னிரு கண்மணியான குருநாதனே."

## EVENTS OF THE MONTH.
## மாத விசேஷங்கள்.

### ஆனித் திருமஞ்சனம்.

"ஆனித்திருமஞ்சனம் அழுக்காறு நீக்கும்." ஆனிமாசத்திலே ஸ்ரீ நடராஜ மூர்த்திக்குத் திருமஞ்சனம் (அபிஷேகம்) நடப்பது விசேஷம். மார்கழி திருவாதிரையில் தரிசனம் தந்த ஸ்ரீநடராஜ மூர்த்தி பகலெல்லா முழைத்து இரவில் கழுவிக்குளித்து இளைப்பாறும் வேலைக்காரனைப்போல் தேவர்களுக்குப் பகல் காலமாம் உத்தராயணத்தில் தேவர், பக்தர், முனிவர்களுக் கெல்லாம் தரிசனமளித்து நல்லுபதேசம் செய்து தக்ஷிணயனகால முந்தமுன் "அந்திக்குளி' போந்த ஆனித்திருமஞ்சன நீராடி அழுக்காறு நீக்கிச் சித்சபையில் புகுந்து நிற்பர் உத்தராயண காலத்தில் உயிர்பெற்று ஓங்கிய ஜீவகோடிகள் தக்ஷிணயன காலத்தில் ஒடுக்கு நிலைபெற்று உள்ளத்தமர்ந்து தூங்கும். ஆடிமாசத்தில் வியாச பௌர்ணமியன்று தியாகராஜர் வியாசர்க்குச் செய்து காட்டியருளிய திருநடனம் செய்வார். உலகில் பகவான் நடித்துக்காட்டி உலகுய்யப் போதித்தபின் தக்ஷிணயன காலத்தில் பரித்தியாக தர்மத்தை விளக்கத் தியாகராஜராய் விளங்குவார்.

இதனால் பகலிலுழைத்து இரவில் தூங்கும் ஜீவராசிகள்போல் பகவத் பாதசரணர்களாயிருக்கும் மேலோர் உத்தராயணத்தில் சிருஷ்டி கர்த்தாவின் லீலைகளை விளக்கி, தக்ஷிணயத்தில் ஸம்ஹார மூர்த்தியும் அவரேயென்னத் தியாகராஜ லீலைசெய்து காட்டுவர். துறவிகள் சாதுர்மாசிய விருதம் அனுஷ்டிக்கத்தொடங்கும் காலமும் இதுவே.

### யுத்த அரங்கங்கள்.

ஐரோப்பாவில் நடக்கும் யுத்த அரங்கங்களின் செய்தி இன்னும் சண்டையும் பூசலுமாயிருக்கிறதேயன்றி சமாதானத்துக் காஸ்பதமான சின்னங்கள் ஒன்றையும் காணோம். அமெரிகா யூனைடெட் ஸ்டேட்ஸ் என்னும்

ஐக்கியமாகாணத் தரசாக்ஷியார் இந்த ஐரோப்பிய சண்டையில் புகுந்தபின் ஜெர்மானியர் ஆட்டபாட்டங்கள் கொஞ்சம் அடங்கியிருக்கிறதாகச் சொல்லலாம். ஆனால் ருஷியாவில் தனியாக செலுத்திவந்த ஏகாதிபத்திய சக்ரவர்த்தியைத் தள்ளித் தூரத்தில் வைத்துவிட்டு அத்தேசத்து மகாஜனங்கள் குடியரசு ஸ்தாபனம் செய்ததில் அத்தேசத்திலுண்டான மாறுதல்கள் சொப்படி வித்தைபோல் திடீரென்று நேர்ந்ததால் அதன் பலாபலனை முற்று முணர்ந்து சொல்லக்கூடிய தாயில்லை. இராஜாங்க மாறுதல்களினால் அத்தேசத்தார் யுத்த அரங்கத்தில் செய்முயற்சி சிறிது தளர்ந்தே யிருந்தாலும் அதுவரவர பலப்பட்டு வருகிறது. ஜெர்மானியார் 'ஸப்மரின்' படகுகளைக் கொண்டு நடுக்கடலில் காணும் கப்பல்களைத்துவம்சப்செய்து வருகிற உபத்திரவம் எல்லாராலும் மிகுதியாக உணரப்படினும் அவர்கள் செய்யும் இந்தச் சாகஸச் செயல்களுக்கு யாரும் இணைத்துப் போவதாகக் காட்டவில்லை. அமெரிக்கா யூனைடெட் ஸ்டேட்ஸ் அரசாட்சியார் அவர்களுக்கு எதிராகச் சண்டையில் சேர நேர்ந்தது இது காரணத்தினாலேயே. ஜெர்மானியர் கொஞ்சம் கொஞ்சமாய் பின்னுக்கு வாங்கி வந்தாலும் அவர்கள் தோற்றுப் போனதாக எங்கும் காட்டவில்லை. சண்டையில் விட்டுக் கொடுப்பவராகவும் தோற்றவில்லை. விடாமுண்டன் - கொடாமுண்டன் கதையாக இருதரத்தாரும் வைரம் பாய்ந்த உறம்கொண்டு எதிர்த்து மன்றாடிவருகிறார்கள். முடிவு எப்படியாகுமோ பகவானுக்குத்தான் வெளிச்சம். ஆனால் ஒவ்வொருவரும் தமக்கே ஜயம் சித்திக்கிற வரையில் சண்டைபோடுவதை விடுவதில்லை யென்று உறம்பேசி முண்டக யுத்தம் செய்து வருகிறார்கள். ஐரோப்பாவில் ஜன ஆட்சி மேலெடுக்கவேண்டி இந்த யுத்தம் நடந்துவர, இந்தியாவில் அதே மாதிரி ஜன ஆட்சிமேலெடுக்கவேண்டி ஜனக்கட்டுக்குட்பட்ட துரைத்தனம் ஏற்படவேண்டுமென்று பாடுபடுகிறவர்கள் முயற்சி அசர்த்தமாய் முடிவதாயிருக்கிறது.

### இந்தியா பந்தோபஸ்து சட்டம்.

இந்த யுத்தம் துவங்கினபின் எதிரிகளையும் எதிரிகளுக் கனுகூலமா யிருக்கப்பட்டவர்களையும் கலகம் குழப்பம் இவைகளுக்கு ஆஸ்பத மாயிருக்கப்பட்டவர்களையும் கவர்ன்மெண்டார் விசாரணையின்றியே பிடித்து பந்தோபஸ்தில் வைக்கலாமென்று ஒரு சட்ட முண்டுபண்ணினார்கள். இந்தியாவிற்கு ஜனஆட்சி சித்திக்கவேண்டுமென்று சட்டவிரோதமின்றி யுழைத்துவரக் கங்கணம் கட்டி யுழைத்து வந்தவர்களில் அதிசிரேஷ்டரான அன்னிபெஸண்ட் அம்மாளையும் அவருக்கு உற்றவிடத் துதவியாக விருந்துழைத்து வந்த மிஸ்டர் வாடியா, மிஸ்டர் அரண்டேல் என்பவரையும் அவர்கள் முயற்சி ஜனக்ஷேமத்துக்குப் பங்கமுண்டு பண்ணுவதாயிருக்கிறதென்று சொல்லி கவர்ன்மெண்டார் அவர்களைப் பிடித்து பந்தோபஸ்தில் வைத்து விட்டார்கள். அவர்கள் தற்போது உதகமண்டலத்தில் வசித்து வருகிறார்கள். அவர்களுடைய பந்தோபஸ்துக்காக ஏற்படுத்திய விதிகளைக் கடந்து அவர்கள் நடக்கக்கூடாது. நடந்தால் மூன்று வருஷதண்டனை கிடைக்கும். அவர்கள் மீட்டிங்குகளுக்குப் போகவாவது, பொது சபைகளில் பகிரங்கமாகப் பேசவாவது கூடாது; ஓதவும் கூடாது. கடிதப் போக்குவரவுகூட போலீஸார் மேன்பார்வையில் தான் நடத்தவேண்டும். அவர்கள் போட்ட புஸ்தகங்கள் எழுதிய துண்டுகளை அனுமதியின்றி விற்பனை செய்யக்கூடாது. இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் நேரிட்டதால் மிஸ்ஸஸ் பெஸண்ட் அம்மாள் நியூ இந்தியா என்கிற பத்திரிகையை நடத்தமுடியாமல் அதை அச்சிட்டுப் பிரசுரிப்பவராக விருந்ததைவிட்டு, அதற்கும் அவருக்கும் சம்பந்தமில்லையென்று மாஜிஸ்திரேட்டுமுன் எழுதிவைத்து விட்டு அவருக்குக் குறிக்கப்பட்ட பந்தோபஸ்து எல்லைக்குள் வசிக்கப்



போய்விட்டார். அந்தப் பத்திரிகையை பம்பாயில்ஹைகோர்ட் ஜட்ஜாயிருந்த மாஜி கனம் ஜஸ்டிஸ் டிலாங் அவர்களுடைய புத்திரராகிய மிஸ்டர் பி. கே. டிலாங் என்பவர் விலைக்கு வாங்கி முன்போல் நடத்திவருகிறார். அவர் நிரப் படித்தவர்: நல்ல திறமை வாய்ந்தவர். பெஸண்ட் அம்மாளுடைய சிஷ்யர்களில் பிரதானமான ஒருவர். அவருடைய மேன்பார்வையில் அப்பத்திரிகை இடையில் மூன்றே நாள் நின்றபின் மறுபடியும் உயிர்பெற்று நடந்துவருகிறது. கவர்ன்மெண்டார் இப்படி அந்த அம்மாளை பந்தோபஸ்தில் வைத்ததால் இந்தியாவில் அங்கங்கே பிரமுகர்களும் ஜனசிரேஷ்டர்களுமாயிருக்கப்பட்டவர்கள் பொதுக்கூட்டம் கூடி கவர்ன்மெண்டார் செய்தது தப்பு என்று கண்டித்துப் பேச கவர்ன்மெண்டார் இதுவரையில் அக்கண்டிப்புக்குக் காது கொடுக்காமல் தானே அவர்கள் கொட்டத்தை அடக்கிவிடப் பார்க்கிறார்கள். இந்தியா மந்திரி, அவர்களுடைய பந்தோபஸ்து நடபடிக்கையை அங்கீகரித்துப் பேசியிருக்கிறார். ஜன சிரேஷ்டர்கள் அதையும் கண்டித்தே பேசிவருகிறார்கள். சென்னையில் டாக்டர் ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் இது விஷயத்தை ஆரத்தீர யோஜித்து இந்தியாவுக்கு ஜனஆட்சி சுதந்திரம் கிடைக்கவேண்டியது இத்தேச க்ஷேமத்துக்கு இன்றியமையாத அவசியமாயிருப்பதால் அதற்காக வுழைப்பதில் குற்றமொன்றுமில்லையென்று தான் தீர்மானித்திருக்கிறதாக வெளியிட்டிருக்கிறார். அவர்தாமே இதற்குழைக்கும் பொறுப்பை மேலெடுத்துப் போட்டுக்கொண்டும் முன்வந்திருக்கிறார்.

### சென்னை பம்பாய் கவர்னர்கள்.

இராஜப்பிரதிநிதி கவர்னர் ஸ்தானங்களுக்கும் கௌன்ஸில் மெம்பர்கள் வேலைக்கும் நியமிக்கப்படுகிறவர்கள் 5 வருஷகாலவரைக்குள்பட்டு வேலை பார்த்து வருவது வழக்கம். இந்த விதிப்படி சென்னை கவர்னராயிருக்கும் கனம்பொருந்திய லார்ட் பென்ட்லாண்ட் அவர்களும், பம்பாய் கவர்னராகிய லார்ட் உவில்லிங்டன் அவர்களும் அவர்களுடைய 5 வருஷதவணையாகி வேலையை விட்டுப்போகும் காலம் நெருங்கிவிட்டது. யுத்த முடக்கடியால் சீமைக்குப் போக்குவரத்து சாதகம் குன்றி நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருப்பதால் இந்தியா சக்ரவர்த்தியின் அனுமதிபெற்று இந்தியா மந்திரியாகிய மிஸ்டர் ஆஸ்டின் சாம்பர்லென் அவர்கள் அவ்விருவர்களையும் அவர்கள் தவணை கழிந்தபினனும் இந்தியாவில் அவர்கள் இப்பொழுதிருக்கும் ஸ்தானத்தில் தானேயிருந்து வேலைபார்த்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள அதற்கு அவர்களிருவரும் உடன்பட்டுவிட்டதாக லண்டன் கெஜட்டில் பிரசுரமாகியிருக்கிறது. இந்தியாவிலும் அது விஷயம் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

### சீமைக் கோர்ட்டுகளில் இந்தியா வழக்குகள்.

சென்னை ஹைகோர்ட்டில் "நியூ இந்தியா ஸெகியூரிடி" கேஸ் விசாரணையான விஷயத்தைப்பற்றியும் மாஜிஸ்திரேட்டு அப்பத்திரிகையிடமிருந்து இரண்டாந்தரம் செகியூரிடி கேட்டதைப்பற்றியும் ப்ரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்துகொள்ள அனுமதி கேட்டதற்கு இணங்கி அக்கோர்ட்டார் அனுமதி கொடுத்து உத்தரவு பிரப்பித்திருக்கிறார்கள்.

இது சம்பந்தமாய் சீமையில் நடக்கும் இன்னொரு கேஸும் கவனிக்கத்தக்கது. அது தான் திலகர் வாதியாகவும் சிரோல் பிரதிவாதியாகவும் ஏற்பட்டு இங்கிலீஷ் ஹைகோர்ட்டில் விசாரணையாகிவரும் கேஸ். அது விஷயமாய் கனம் மிஸ்டர் பாப்டிஸ்டா அக்கேஸை நடத்தவென்று சீமைக்குப் போகிறார். அவரைப் பற்றிப் பத்திரிகைகளில் பின்வரும் சமாசாரம் வெளியாகியிருக்கின்றது.

"இங்கிலாந்தில் ஸர் வாலண்டைன் சிரோலின் மீது ஸ்ரீமான் திலகர் தொடுத்த கேஸின் சம்பந்தமாக பாரிஸ்டர் கனம் ஜோஸப் பாப்டிஸ்டா இங்கிலாந்து செல்லப்போகிறார். பந்தோபஸ்தில் வைக்கப்பட்ட அரண்டேலின்

சார்பாக பிரிவி கௌன்ஸிலின் முன்பு செய்திருக்கும் கேஸின் விஷயமாகவும் அவர் செல்லுகிறார். சென்னையிலிருந்து மிஸ்டர் இ. லக்ஷ்மண ஐயரும் அவருடன் செல்லுவார். இப்படிப் போகும் பாரிஸ்டர் மிஸ்டர் ஜோஸப் பாப்டிஸ்டாவுக்கு ஜூலைமீ 10உ இரவு பம்பாயில் ஒரு உபசார விருந்து செய்யப்பட்டது. மிஸ்டர் பாப்டிஸ்டா தம்முடைய தொழில் முறையில் மேற்சொன்ன கேஸ்களை நடத்துவதுடன் இந்தியாவின் நிலைமையைப் பற்றிப் பிரிட்டிஷ் ஜனங்களுக்கு அறிவிக்கும் ராஜீய வேலைகளையும் இங்கிலாந்தில் செய்வார்.'

### சென்னையில் குழாய்த்தண்ணீர் கஷ்டம்.

சென்னைமா நகரில் ஜனங்கள் சௌகரியத்துக்காகப் புழலேரியிலிருந்து குடி தண்ணீர் வாய்க்கால் வழியாகவும் குழாய்கள் வழியாகவும் தெருக்களிலும் வீடுகளிலும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிற விஷயம் எல்லாருக்கும் தெரிந்ததே. சில வருஷங்களுக்கு முன் இந்தத் தண்ணீர் 'சப்ளை' செய்கிற முறையைச் சீர்திருத்தி நல்ல சுத்தமான தண்ணீர் வடிக்கட்டினதாக எப்போதும் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று பல வருஷங்களாய் வேலைசெய்து வந்தார்கள். அவ்வேலை முடிந்து இரண்டொரு வருஷத்துக்கு முன்தான் வடிக்கட்டின தண்ணீர் குழாய்கள் மூலமாக எங்கும் வரத்தலைப்பட்டது. இப்பொழுது வடிக்கட்டும் யந்திரங்கள் மூன்று இருந்து வேலை செய்கின்றன. இவைகளில் ஒன்று ரிபேர் செய்யவேண்டியதாக ஏற்பட மற்ற இரண்டு இஞ்ஜின்களால் நகரத்துக்கு வேண்டிய தண்ணீர் வடிக்கட்டி யிறைக்க முடியாமற்போய் ஜனங்கள் குடி தண்ணீர் இன்றிக் கஷ்டப்பட்டார்கள். ஜூலைமீ 1உ முதல் நல்ல ஜலம் காலையிலும் மாலையிலும் மட்டும் விட்டு வரவும் மற்றக் காலங்களில் நிறுத்தி வைக்கவும் ஏற்பாடு செய்து பார்த்தார்கள். இந்த ஏற்பாட்டினால் ஜலம் பூராவாகச் சில விடங்களுக்கு வராமல் நின்றுபோனதோடு மற்ற இடங்களுக்கும் சரியாகக் குடி தண்ணீர் கிடைக்காமல் ஜனங்கள் மிக்க கஷ்டப்பட்டார்கள். இதனால் புகார் உண்டாகி அதிகரிக்க, கார்பொரேஷன் அதிகாரிகள் இப்பொழுது வடிக்கட்டின தண்ணீர் அழுக்குத் தண்ணீர் எல்லாமாகக் கலந்து எப்போதும்போல குழாயில் ஜலம் விட்டுவரத் தீர்மானித்திருக்கிறார்கள். இதைப் பற்றிச் சுதேசமித்திரன் பத்திரிகையில் பின் வருகிறபடி எழுதியிருப்பது எல்லாரும் கவனிக்கத் தக்கதா யிருக்கிறது:—"அழுக்குத் தண்ணீர் எப்பொழுதும் வரும்:—சில மணிநேரம் நிறுத்தியும், வடிக்கட்டின ஜலத்தை போதுமான வரையில் விட முடியவில்லை யாகையால், இனி வடிக்கட்டின ஜலமும் வடிக்கட்டாத ஜலமும் கலந்து எப்பொழுதும் விடப்படும் என்று கார்பொரேஷன் பிரஸிடெண்டு அறிவிக்கிறார். இது ஏற்கெனவே நடந்து வந்த காரியம். வடிக்கட்டாத ஜலத்தின் உபயோகத்தால், மரணம் ஜாஸ்தியாய் விடுகிறதென்று ஹெல்த் ஆபிஸர் முறையிட்டார். அதன்மேல் சிறிதுநேரம் நிறுத்தி வடிக்கட்டின ஜலத்தையே விடப் பார்த்தார்கள்; முடியவில்லை யென்று பழைய வழக்கத்தை மறுபடி கைக்கொள்ளப்போகிறார்கள். ஹெல்த் ஆபிஸர் சொல்வது உண்மையானால், இதன்பலனாக மரணம் அதிகமாகும்; முனிஸிபல் அதிகாரிகளின் திறமை யின்மையைக் காட்ட வேறெதுவும் தேவையில்லை. ஜலத்தைக் காய்ச்சிக் குடிக்கவேண்டுமென்று பிரஸிடெண்டு எச்சரிக்கை செய்கிறார். காய்ச்சிக் குடிக்கும் பிரயோஜனத்தை அறியும்படியான படிப்பு பாமர ஜனங்களுக்கிருக்கிறதா? அவர்களை முட்டாள்களாக நாம் வைத்து விட்டு, சமயம் வந்தபோது சாஸ்திர ஞானத்தை அவர்களிடம் எதிர்பார்க்கிறோம். இன்னும் சில வடிக்கட்டிகளைக் கட்ட வேண்டியதுதான் இதற்கு வழி. ஆனால் பணமில்லை."

### இந்தியா மந்திரி ராஜிநாமா.

இந்தியா மந்திரியாயிருந்த மிஸ்டர் ஆஸ்டின் சாம்பர்லேன் மெஸலொபொடோமியா கமிஷன் ரிபோர்ட்டில் குற்றஞ் சாட்டப் பெற்றவர்களில் ஒருவர்போலும் அவர் தம் வேலையை இராஜிநாமா கொடுத்துவிட்டார்.



## EXTRACT: PATNA UNIVERSITY BILL.

### பாட்னா யூனிவர்ஸிடி மசோதா.

பாடலிபுர மென்று பூர்வந்தொட்டுப் பேர்போன பாட்னா நகரில் புதிதாய் ஏற்பட்ட பிஹார்-ஒரிஸ்ஸா மாகாணத்துக்குரியதாக ஒரு யூனிவர்ஸிடி யேற்படுத்தப் போகிறார்கள். அதைப்பற்றிய மசோதா ஒன்று சிலகால முன் வெளியாகிப் பின்னர் ஜனவாக்குக் கிசைந்ததாக வில்லையென்று அதை ஒருவாறு சீர்திருத்த முயன்றார்கள். அப்படி சீர்திருத்தப்பெற்ற மசோதாவானது இந்தியாசட்ட நிரூபணசபையார் நியமித்த ஸெலெக்ட் கமிட்டியார் ஆலோசனை பெற்று அவர்களுடைய ரிபோர்ட்டுடன் இப்பொழுது வெளியாகி யிருக்கிறது. இதைப் பற்றிச் சுதேசமித்திரன் பத்திரிகை பின்வருமாறு பொதுஜன அபிப்பிராயத்தை வெளியிட்டுப்பேசி யெழுதியிருக்கிறது. இப்பொழுது "யூனிவர்ஸிடி ரிபார்ம்" என்று யூனிவர்ஸிடிகளைச் சீர்திருத்த வேண்டுமென்கிற எண்ணம் எங்கும் அதிகமாய்ப் பரவி வருகிறபடியால், இது விஷயத்தில் அதிகாரிகள் நோக்கும் ஜனங்கள் நோக்கும் எப்படியிருக்கிறதென்றுணர்ந்துகொள்ள இம் மசோதாவைப் பற்றியுள்ள அபிப்பிராய பேதங்கள் தெரிந்து கொள்ளத்தக்கவையாக விருப்பதால் அதைக் கீழெடுத்துப் பிரசுரிக்கிறோம்:—

"பிஹார்-ஒரிஸ்ஸா என்ற மாகாணங்களுக்குத் தனியாக ஒரு யூனிவர்ஸிடியை ஏற்படுத்தக் கருதி, இந்தியா கவர்ன்மெண்டார் சில மாதங்களுக்குமுன் ராஜப்பிரதிநிதியின் சட்டசபையில் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தனர். யூனிவர்ஸிட்டிகள் நாடெங்கும் ஏற்படவேண்டுமென்று ஆசைப்பட்டிருந்தவர்களும் அந்த மசோதாவைப் பார்த்ததும், அம்மாதிரி யூனிவர்ஸிட்டி ஒன்று ஏற்படுவதை விட ஏற்படாமலிருப்பதே நலமென்று கருதினார்கள். அந்த மசோதாவின்படி ஏற்படக்கூடிய யூனிவர்ஸிட்டியானது விநோதமானதாயிருக்கக் கூடியதாயிருந்தது. உலகிலுள்ள யூனிவர்ஸிடிகள் இருவகைப்படும்; சென்னையைப் போல சில யூனிவர்ஸிட்டிகள் பரீட்சையை மாத்திரம் நடத்தி பட்டம் கொடுக்கின்றன. அவைகளைச் சேர்ந்த காலேஜ்கள் அவைகளின் அதிகார எல்லைக்குள் எங்கு மேற்படலாம். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் முதலிய இடங்களிலிருப்பவை போன்ற யூனிவர்ஸிடிகள் கல்வியைத் தாங்களே போதிக்கின்றன. ஆனால் மசோதாவின்படி பாட்னாவில் யூனிவர்ஸிடி ஏற்பட்டதானால், அது மேற்சொன்ன இரண்டு வகை யூனிவர்ஸிட்டிகளில் ஒன்றைப் போலிராமல் இரண்டையும் போல் இருக்கப் பார்க்கும். பாட்னா என்று சொல்லப்படும் பாடலிபுரத்தில் இரண்டு காலேஜ்கள் இருக்கின்றன. அவைகளே யூனிவர்ஸிடி காலேஜ்கள் ஆகும். வெளி ஜில்லாக்களில் இருக்கும் காலேஜ்களில் ஐந்தும் அங்கீகரிக்கப்படும். இவைகள் அன்னியில் வேறு காலேஜ்கள் அங்கீகரிக்கப்படவேண்டுமானால் அவை பாட்னாவில் ஏற்படப்போகிற ஸினேட் சபையின் கட்டடத்திலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் ஏற்படவேண்டும். இல்லாத இடங்களில் காலேஜ்களை வைக்க யாரேனும் முன் வருவார்கள். ஏற்கெனவே இரண்டு காலேஜ்கள் இருக்குமிடத்தில் மறுபடியும் காலேஜ் வைக்க எவர் முன் வருவர்? ஆகையால் ஆரம்பத்தில், அங்கீகரிக்கப்படும் ஏழு காலேஜ்களுக்கு அதிகமாக எப்பொழுதும் காலேஜ்கள் ஏற்பட முடியாது. இந்த நிலைமையில் உயர்தரக் கல்வி நாடெங்கும் பரவ வழி எப்படி யேற்படும்? இது மசோதாவில் ஒரு குறை. அம்மாகாண லெப்டினெண்டு கவர்னர் யூனிவர்ஸிடியின் வைஸ்-சான்ஸலராயிருப்பார். எந்த விஷயத்தையும்பற்றி அவர் சுயமாக விசாரணைசெய்து, உத்தரவு செய்யலாம். அவருடைய உத்தரவு ஸிண்டிகேட் ஸினேட் என்ற எல்லா அதிகார ஸ்தானங்களையும் கட்டுப்படுத்தும். மசோதாவில் இது ஒரு குறை. வைஸ் சான்ஸலர் மற்ற யூனிவர்ஸிட்டிகளில் கௌரவ அதிகாரியாயிருக்கிறார். பாட்னா யூனிவர்ஸிடியில் அவருக்கு சம்பளமுண்டு. பாட்னாவிலுள்ள இரண்டு காலேஜ்களையும் மேற்பார்வை செய்யும் வேலை அவருடையது. மற்ற ஐந்து காலேஜ்களையும் ஸிண்டிகேட் மேற்பார்வை யிடலாம். ஆகையால் யூனிவர்ஸிடியைச் சேர்ந்த எந்தக் காலேஜையும் மேற்பார்வை செய்யும் அதிகாரம் யூனிவர்ஸிடிக்கு இருக்கவேண்டியது நியாயமாயிருக்க, கவர்ன்மெண்டினால் நியமிக்கப்பட்டு கவர்ன்மெண்டின் அபிப்பிராயத்தை அனுசரித்து நடக்கக்கூடிய வைஸ் சான்ஸலருக்கு அது போய்விடும். இது ஒரு குறை. ஸிண்டிகேட் சபையில் மசோதாவின்படி உத்தியோகஸ்தர்

களே அதிகமாக இடம் பெறுவார்கள். உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களும் கவர்ன்மெண்டை அநுசரித்து நடக்கக் கூடியவர்களாகவே இருப்பார்கள். இது ஒரு முக்கியமான குறை. ஸினேட் சபையானது பேருக்குமாத்திரம் அமைக்கப்படுமேயல்லாமல், அதற்கு ஒரு அதிகாரமும் இராது. அது யோசனை செய்து விதிகள் நிபந்தனைகளை ஏற்படுத்தலாம். ஆனால் அவ்விதிகள் நிபந்தனைகளை ஸிண்டிகேட் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரும்படி செய்ய ஸினேட்டுக்கு அதிகாரமில்லை. ஆகையால் ஸினேட் இல்லாமலேயிருந்தாலும் பாதகமில்லை. இந்த மசோதாவின்படி ஏற்படும் யூனிவர்ஸிட்டியானது சர்க்கார் இலாக்காவாக இருக்குமேயல்லாமல், சுவாதீனமுள்ள யூனிவர்ஸிடியாகமாட்டாது. ஆகையால் இந்த யூனிவர்ஸிடி தேவையில்லை என்ற அபிப்பிராயம் நாடெங்கும் பரவிவிடவே, தாங்கள் அதிக உயரத்தில் பறந்துபோய் விட்டதாக கவர்ன்மெண்டார் உணர்ந்து சிறிது கீழே வர உத்தேசித்தார்கள். சென்ற பிப்ரவரி மாதம் 7-ந்தேதியன்று நடந்த ராஜப்பிரதிநிதியின் சட்ட சபை மீட்டிங்கில், ஸர் சங்கரன் நாயர் மேற்சொன்ன குறைகளையெல்லாம் ஒப்புக்கொண்டு அவைகளைத் திருத்த கவர்ன்மெண்டார் இஷ்டப் படுகிறதாகச் சொல்லி, மசோதாவைப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அந்தக் கமிட்டி ஆலோசனை செய்து மசோதாவில் சில திருத்தங்களைச் செய்து முடித்துவிட்டதாகவும், முக்கியமான திருத்தங்கள் இன்னவென்றும் 9-ந்தேதி வந்த தந்தியை நமது நேயர்கள் கவனித்திருப்பார்கள். கமிட்டியின் பதினொரு மெம்பர்களும் ஏகோபித்து ரிபோர்ட் செய்திருப்பதால், கவர்ன்மெண்டு கட்சி மெம்பர்களும் பொது ஜனக் கட்சி மெம்பர்களும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ராஜியாய்ப் போயிருப்பதாகத் தெரிகிறது. பாட்னாநகருக்கு வெளியில் 5 காலேஜ்களையே அங்கீகரிக்க உத்தேசித்த மசோதா இப்பொழுது 6 காலேஜ்களை அங்கீகரிக்கும். சான்ஸலருடைய அதிகாரத்திலும் திருத்தம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் திருத்தப்பட்டபடி மசோதா இன்னும் நமக்குக் கிடைக்கவில்லையாகையால், விவரம் தெரியவில்லை. வைஸ்-சான்ஸலர் 5 வருஷகாலம் உத்தியோகத்திலிருக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக மூன்று வருஷமிருக்கும்படி மசோதா திருத்தப்பட்டிருக்கிறது. ஸினேட்டில் 40 முதல் 60 மெம்பர்கள் இருக்கலாமென்று ஏற்பட்டிருந்ததற்குப் பதிலாக 60 முதல் 75 மெம்பர்கள் இருக்கலாமென்று திருத்தப்பட்டிருக்கிறது. அவர்களில் 50 மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டும். ஆகையால் யூனிவர்ஸிடியில் பட்டதாரிகளின் செல்வாக்கு அதிகமாக ஏற்பட இடமுண்டாகும். யூனிவர்ஸிடியின் காரியங்களையெல்லாம் நிர்வகிப்பதும் மேல்பார்வை பார்ப்பதும் ஸினேட்டினுடைய அதிகாரங்களாகும். ஆயினும் சில விஷயங்களைப்பற்றின வரையில் ஸிண்டிகேட் சபையானது தானாக நடந்து விடலாம் என்றிருப்பது விரும்பத்தக்கதல்ல. ஸிண்டிகேட் மெம்பர்களில் 5 பெயர்கள் அச்சபை செய்த ஒரு காரியத்தை ஸினேட் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டால், ஸினேட் பரிசீலனை செய்யலாமென்றிருந்தாலும், ஸினேட்டின் நிர்வாகசபையாகிய ஸிண்டிகேட் தானாக சில விஷயங்களை நடத்திவிடலாமென்பது அவ்விரு சபைகளுக்குமுள்ள சம்பந்தத்துக்கு ஒத்திருக்கவில்லை, ஸிண்டிகேட்டுக்கு இன்ன அதிகாரமிருக்கவேண்டுமென்றும் ஸினேட்டுக்கு இன்ன அதிகாரம் இருக்க வேண்டுமென்றும் தீர்மானிப்பது கமிட்டி மெம்பர்களின் அபிப்பிராய பேதத்தால் கஷ்டமாயிருந்ததென்று ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருப்பதால், ஸினேட்டுக்கு சிறிது யோக்கியதை உண்டுபண்ணுவது வெகு சிரமமாயிருந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த மசோதாவை கமிட்டியிலிருந்த ஜனப்பிரதிநிதிகள் பலர் அங்கீகரித்து விட்டபடியால், அது சீக்கிரம் சட்டமாய் விடும், அந்த சட்டத்தை அனுசரித்து ஏற்படும் யூனிவர்ஸிட்டியானது தேசத்தின் தேவைக்குத் தகுந்தாற்போல் நாளுக்குநாள் விசாலமாகக்கூடாததாயிருக்கும். அதன் சான்ஸலர் சர்வாதிகாரமுள்ளவராயிருப்பார். வைஸ் சான்ஸலர் கல்வி இலாக்காத்தலைவர் போலாய்விடுவார். ஸிண்டிகேட் ஸினேட்டைவிட அதிக அதிகாரமுள்ளதாயிருக்கும். பாட்னா யூனிவர்ஸிட்டியைப் போல் இனி ஏற்படப்போகிற புது யூனிவர்ஸிடிகள் அமையக்கூடாது என்று கனம் பூபேந்திரநாதவாஸுவும் கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரிகளும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

"THE EDUCATIONAL SALVATION OF THE COUNTRY MUST BEGIN AT HOME."

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God that sublime belief that seeing evil I yet have faith."*

*" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

"பஞ்சவிம்சதிபாக்கியம்"] ஸத்தியம் வத—SPEAK THE TRUTH. ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE."




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 25.] பிங்களஹு ஆவணிமீ, 1917ஹு ஆகஸ்டுமீ. [சஞ்சிகை 5.

**Business "Terms."**

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our " terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *At one month's credit* (*arrears rate*) : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with the Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued† in the middle of a Vol.
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

**General Notice.**

i. The *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised ;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to " fluctuations " and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor*) ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, " VIVEKACHINTAMANI,"
*Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore.*

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.*

†Notice of discontinuance to have effect must be given in due time in writing before a New Volume begins in April and after all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say " that every effort will be made to trace them." " If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed " continues the same high authority, " I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should invariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## "THE EDUCATIONAL SALVATION OF THE COUNTRY MUST BEGIN AT HOME."

Last month we pointed out that the basic principle of Primary Education consists in understanding the child-mind and helping it grow on its own lines, taking care that the unfoldment of the soul or the drawing out of the spirit that is in the children is the outcome of all the processes of education however varied these may be. For this, two things are essential. First the insisting of the principle by the controlling authority of the State and the necessity of teachers who have realised the truth of the principles they have to teach to the pupils committed to their care. Taking this subject for consideration, Mr. C. V. Swaminathaiyar in his article published 12 years ago, says :—

" Possibly for many years to come we cannot get the ideal teacher we want for our Primary Schools ; and even if we can train or import such teachers regardless of expense, the educational salvation of the country will not begin for a generation yet to come. For unless the parents themselves realise their responsibilities, the State can do very little to uplift the children by a model system of education in schools. You must raise the home-ideals of the people before you can successfully build up a national ideal of education for its future citizens. For the home is the ground work, the soil, so to speak, on which the 'child-plant' must grow. The school can only help to water and manure and attend to timely weeding and training of the child-plant to grow. If the soil is unfavourable to healthy growth, no amount of garden appliances can promote that "healthy growth" in it. And the home ideals though perfect and noble in themselves as they were built up by the ancient *Rishis*, are now but mockeries of the same, sapless and emaciated, with no help or protecting hands to tend their growth—dragged to dust and mire by alien hands or influences that could scarcely understand the grand purpose of those ideals and the deep import of the practices in which they are clothed. To enable the well-meaning and highly inspired among Englishmen who are working earnestly for the good of our people and the struggling and aspiring worker among the people themselves to understand each other, to translate our ancient ideals into present-day forms and expressions of thought is a work worthy of the foremost pioneers of enlightenment in this country. I have in my own humble way been attempting to work on the lines here sketched out, and have tried to show that the best thoughts and underlying principles of conduct in East and West are the same or nearly the same."

Not only did he dive deep and study the ancient thoughts and underlying principles of conduct in the East, but he took every opportunity of comparing notes with the best thinkers and leading seekers after truth among those of the West with whom he kept himself in touch by unobtrusively helping them to understand the highest ideals of the East, often in terms and in language which was quite familiar to them. Thus did he obtain a first hand knowledge of those fundamental principles of education which are common to all humanity all the world over. And when the first principles were grasped and understood, the rest became easy as he was not content with a mere intellectual grasp of those principles but actually lived up to them in his every-day-life.

Thus was the ground cleared for the great work—the ministry of children and their parents—to which he was called by the present Director of Public Instruction and in which he stands consecrated by the oath he took "to give up his ministry to the general public" "to devote himself exclusively," as it was put to him, to the cause of Children's Education which he felt was of the utmost importance to the people, to the Country and to the State. That is why we are working persistently and with unceasing perseverance in our aim to reach all the schools in the Tamil country and through them the parents and homes of those children. For we feel that the Educational Salvation of the country must begin at home and extend through the various stages of Primary and Secondary Education to schools and other institutions where the children of the soil learn to fit themselves for the life they have to live. "The leading thoughts suggested are shown in extracts from prominent English authors and thinkers that the keen and advanced student may catch the modern aspect of these great thoughts, which are presented more or less in the simple garb in which the ancients clothed them transmitting them by homely traditions to the people in a way peculiarly fitted for their understanding of the same, just to make it easy for the advanced rural teacher who has not lost touch with the traditions of his people to understand and appreciate. The highest principles of Psychology and Education may thus be presented to the average teacher imbued with the ancient thoughts and traditions of the country, though it is a matter of regret that "the old school teacher is becoming more and more a rare individual to meet with and the modern 'certificated teacher' is but a raw youth who has neither imbibed the traditions and thoughts of his forefathers nor the culture and discipline of the present day."

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-5.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

பிங்களஹு ஆவணிமீ. } விவேகசிந்தாமணி { August-Septemper 1917.

FIRST ESTABLISHED, 1892. OUR JUBILEE YEAR, 1917.

"பெற்றோர்கள் தாழ்வப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேந் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## THE EDUCATIONAL SALVATION OF COUNTRY.

## தேசம் வித்யா சிக்ஷையினால் கடைத் தேறுவது எப்படி?

"In the great agitation now made throughout the country for universal education, we are apt to overlook the vital issues regarding the nature and the amount of learning which is to be regarded as the minimum qualification for a claim to education. The three R's, reading, writing and arithmetic are generally regarded as the ideal of popular education. But this ideal is miserably low. Of what use is education if owing to neglect of ordinary sanitary precautions a man is afflicted by pestilential diseases which are sources of danger to himself and his neighbours. Again, if a man is untruthful, does not discharge his obligations to the Society, wants improperly to benefit himself at the expense of others, the education has served no purpose. There is no charm in statistics. The number of schools in the country may be increased, the expenditure on education may be enhanced, and the rise in number of students attending schools in the country may be very satisfactory. But these figures, however dazzling in themselves, have no real significance if the education imparted is not such as to improve the physical and the mental happiness of the students and to elevate the general condition

of the society."—*Speech by Mr. V. Srinivasachariar, Chairman, Municipal Council, Madura*, on the 27th July, 1917.

சென்றமாஸம் பிரதம வித்யாசிக்ஷையின் லக்ஷியத்தைப்பற்றி விளக்கக் கூறினோம். வித்யா சிக்ஷையெல்லாம் மனம்படியப் பெறுவதற்கேயாதலால் அவற்றிற்கெல்லாம் "படிப்பு" என்கிற பேர் வழங்குகிறது. படிப்பும் ஸத்யத்தை யுணருவதற்கே. ஸத்யத்தை யுணர்வதும் கடவுளை வழிபடுவதற்கேயாம் "கடவுளை வழிபடுவானேன்?" என்று சிலர் குதர்க்கவாதம் செய்து கேட்கலாம். அதற்கு இப்பொழுது நடந்துவரும் மஹாயுத்தமே போதுமான பதிலாகும். யுத்தம் என்றால் வீரர்கள் போர்க்களத்திற்கூடி யுத்தமுறைமையை அனுசரித்துச்செய்யும் சண்டைக்குப் பெயராயிருந்ததுபோய் பகையாளிகள் தாரதம்மியமின்றி ஒருவரையொருவர் பூண்டோடு நசித்துப்போகச்செய்யும் முயற்சிக்குப் பேராய் வந்து முடிந்திருக்கிறது "மனுஷன் கடவுளை வழிபடுவானேன்?" என்று கேட்கத் தெரிந்துகொண்டதனால்தான் என்று சொல்லலாம்.

THE INHUMANITIES OF THE PRESENT WAR.

அமானுஷிக யுத்தம்.

சென்றமாசம் ஜெர்மானியரின் ஆகாய ரதப் படைகள் லண்டனிற்கு நேராக ஆகாசத்திற் பறந்துவந்து ஏழைகள் குடியிருக்கும் நெருக்கமான பாகங்களிலும் குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களிருக்கு மிடங்களிலும் ஆகாசத்திலிருந்து வெடிகுண்டுகளைப் போட்டு த்வம்ஸம்செய்து ராக்ஷஸப்போர் செய்தார்கள். அப்படிச் செய்ததில் பாலர்கள் படிக்கும் பள்ளிக்கூடக் கட்டடங்களில் விழுந்த வெடிகுண்டுகளினால் 6-வயதுள்ள பாலர்கள் பலர் திடீரென்று மேலிருந்துவிழுந்த வெடிகுண்டுகள் கட்டிடங்களைத் தகர்த்துக்கொண்டு அவர்கள் மத்தியில்விழுந்து வெடித்ததனால் சிதறுண்டு மாண்டார்கள். அப்படிப்பட்ட பாலர்கள் 50-பேர்களுடைய உத்தரக்கிரியை நடந்தபோது அந்தக் கண்காட்சியை லண்டன் நிருபர்கள் எழுதியிருப்பது படிப்பவர்க்கே மனவருத்தத்தையுண்டுபண்ணினால் அப்பாலரைப் பெற்ற தாய்மார்களும் உற்றார் பெற்றாரும் ஒருங்குசேர்ந்து அப்பாலர்க்கு உத்தரக்கிரியை நடத்தச்சென்ற கோலத்தைக்கண்டவர் மனம் எப்படிக் கொதிக்காது! கண்டு கேட்டவர்கள் மனங்கொதித்தால் பெற்றவர் மனம் எப்படி பற்றியெரியாது? இத்தனைக்கும் இந்தப் பாலர்களாவது அவர்களைப்பெற்றவர்களாவது செய்த தீங்கொன்றுமில்லை! மனிதன் நெஞ்சு ஈவிரக்கமற்றுக் "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்று நடந்துகொள்ளப் பழக்கப்பட்டதால் ராக்ஷஸகுணம் நிறைந்து ஒரு காரணமுமின்றி நாசகாலர்களாக நடந்துகொள்வதில் அவர்களுக்கு ஒரு உற்சாகமும் பேரும் கீர்த்தியும் உண்டாவது சாத்தியமாயிருக்கிறது. இதற்குத்தான் மனுஷத் தன்மையை இழந்துவிடுதல் என்று சொல்கிறது. மனிதனாய்ப் பிறந்தவன் மனுஷத்தன்மையை இழந்துவிடாதிருக்க வேண்டுமானால் கடவுளை வழி படவேண்டும் என்று சொல்கிறது.

"THE SEQUENCE OF THE OLD AND THE NEW"

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல."

கடவுளை வழிபடுவதற்கு ஒரே வழியுண்டு. அதுதான் "ஜீவகாருண்யம்." ஆதலால் தான் முற்றுந்துறந்த முனிவர்களெல்லாம் ஜனங்களை நல்வழிப்படச் செய்வதே தங்கள் பெருங்கடனாகவுன்னி உலகத்துக் குழைத்திருக்கிறார்கள்.

"பாபஞ் செய்யாதிரு மனமே—நாளைக்
கோபஞ் செய்தேயமன்
கொண்டோடிப் போவான்
பாபஞ் செய்யாதிரு மனமே."

என்று அவர்கள் பல்லவி பாடிப் பாமர ஜனங்களுக்கும் நல்லொழுக்கம்படியச் செய்துவந்தார்கள்.

"சொல்லருஞ்சூது பொய்மோசம்—செய்தாற்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்



நல்லபக்தி விசுவாசம்—எந்த
நாளுமனிதர்க்கு நன்மையாய் நேசம்."

என்று மூலதத்துவங்களையெல்லாம் சிறு குழந்தைகளும் வயது முதிர்ந்தவர்களும் படித்தோர் பாமரர் யாவரும் உணர்ந்து உள்ளமுவந்து ஒழுகும்படி செய்ததெல்லாம் பெருமையாக விருந்ததுபோய், பொய்யும் புனைசுருட்டும் வைஷம்யமும் மேலிட்டு "எதிரியை யெத்தாலும் கொல்லு, பகைத்தாரைப் பாரில் வையாதே" யென்கிற புதுக்கோட்பாடுகள் மேலேறி வருகின்றன.

"வைதாரைக் கூடவையாதே—இந்த
வையகமுற்றும் பொய்த்தாலும் பொய்யாதே
வெய்யவினைகள் செய்யாதே—கல்லை
வீணிற்பறவைகள் மீதிலெய்யாதே."

என்று நமமுன்னோர் ஜனங்களுக்குப் போதித்த தர்மம் என்னை! இப்பொழுது பகையும் புனைசுருட்டும் பொல்லாப்பும் மேலிட்டு மனுஷர்கள் வனவிலங்குகள்போல ஒருவரையொருவர் தின்று மாய்ப்பதென்ன!

"எவ்வகையாக நன்னீதி—அவை
யெல்லாமறிந்தே யெடுத்து நீபோதி
ஒவ்வாதென்ற பலசாதி—யாவும்
ஒன்றென்றறிந்தே யுணர்ந்துறவோதி,"

என்று போதகாசிரியர் குழந்தைகள்முதல் எல்லாருக்கும் போதித்து வரவேண்டியதாகவிருக்க, அரசர்களும், அமைச்சர்களும், மற்றுமுள்ள மந்திரி பிரதானிகளும பகைமையே பெரிதெனப் பாராட்டி எதிரிகளை மறியல் யுத்தம்செய்து பட்டினி போட்டுக்கொல்லவும், இராக்ஷஸ யந்திரங்களால் போர்முகங்களைப் பாமர ஜனங்களையெல்லாம் அவர்கள் தலையிலிடிவிழுந்ததுபோல் ஆகாசத்திலிருந்து வெடிகுண்டுகளைப் போட்டுக்கொன்றும் எவ்வகையாலும் நாசமும் கீர்த்துளியும் செய்வதே பெருமையும புண்யமுமாக நினைத்து தேசத்தாரையெல்லாம் அவ்வழியில் தூண்டிவிட்டு முடுக்கி வருகிறார்கள். "கடவுளை வழிபடுவானேன்?" என்ற புத்தியினால் மனிதன் அகங்காரம் தடித்து காடி புலியொத்த காட்டுமிருகங்கள்போல் நடந்து கொள்வானனேன்.

THE ESSENTIALS OF TRUE EDUCATION.

"கற்றதனாலானபயன்."

ஆதலால் வித்யா சிக்ஷையினால் தேசம் கடைத்தேறவேண்டுமானால்,—

முதலாவது, அந்த வித்யாசிக்ஷையின் பலனை ஜனங்கள் மனம்படியப் பெறல்வேண்டும்.

இரண்டாவது, மனம் படியப்பெற்று நல்வழியை நாடல்வேண்டும்.

மூன்றாவது, நல்வழியை நாடி நற்கதி பெறல் வேண்டும்.

நான்காவது, நற்கதிபெற்றும் கடவுளை வழிபட்டு ஜனக்ஷேமத்துக் குழைக்கவேண்டும். இதற்குத்தான் 'சமஷ்டிசேவை' யென்று சொல்கிறது. இத்துறையில் சாதன சாதகபுருஷர்களும் சாத்திய புருஷர்களும் இறங்கியுழைக்க யதேஷ்டமாக இடமுண்டு.

சுருங்கச்சொல்லில்,—சாதன சதுஷ்டய சம்பன்னர்களா யிருப்பவர்களே போதகாசிரியர் தொழிலுக்குரியவர்களாம். அவர்கள் தாமே சிறு குழந்தைகளிடமுள்ள தெய்வத் தன்மையையுணர்ந்து அவர்களிட மிருந்துணர்ந்ததை அக்குழந்தைகள் தாமே விசாரபுத்தியினால் அறிந்துணர்ந்துய்யும்படி செய்ய வல்லவராவார். இப்படிப்பட்ட குணசம்பன்னர்கள் குழந்தைகளுக்குப் போதிக்கும் பிரதம பாடசாலைப் போதகராக வரப்பெற எத்தனை காலம் செல்லுமோ! என்னதான் நாம் செலவைப் பாராது போதகர்களை தர்பீது செய்தாலும், பணச்செலவு ஒன்றினால் மட்டும் இது ஆங் காரியமாகவில்லை. பின்னையெப்படி சாத்தியமென்றால் சொல்கிறோம் கேண்மின்!

THE INFLUENCE OF THE MOTHER IS A POTENT FACTOR.

"பெற்றவளுக்கே தெரியும் பிள்ளையி னருமை"—என்பது பழமொழி யாதலால் பெற்றோர்கள் முதல்முதல் இதுவிஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொள்ளல்வேண்டும். பிள்ளைகள் செடியாய்வளர்வது (கிண்டர்கார்டன்) பள்ளிக்கூடங்களிலானாலும் அந்தச் செடிகள் உண்

டாவதற்கு விரைபாய்ச்சும் நாற்றங்காலாக உதவுவது இல்லமே. ஆதலால்தான் "இல்லறமல்லது நல்லறமல்ல" வென்று மேலோர் இல்லறத்தை மேலாகச் செப்பியுள்ளார். இல்லறம் சரிவர நடந்தாற்றான் சற்புத்திரர்களைப் பெறலாம். சற்புத்திரர்களைப்பெற்ற பின்னும் பெற்றோர் அப்புத்திர ரத்தனங்களை மாசுமறு படியாது வளர்த்து வந்தால்தான் "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்கிற வசனப்படி அவர்களுக்கு ஆத்யந்தம் நல்லவழியில் மனம் பற்றி சன்மார்க்கவிர்த்திக்குக் காரணமாயிருப்பார்கள். ஆகையால் தேசம் கடைத்தேறுவதற்கு மூலகாரணமாயிருப்பது நல்வழிபற்றிக் கடைத்தேறின குடும்பங்கள் நிரம்பியிருப்பதேயென்று தானாய் விளங்கும். பீஜாங்குர நியாயம்போல் இது வளைய வந்து கொண்டிருக்கிறது என்று சொல்லக்கூடாது. "நன்மை விதைத்தால் நன்மை விளையும்" என்பது உண்மை. ஊருக்கொருவரேனும் நல்லவர் இருந்தால் அவர் நன்னடத்தையைப் பார்த்துப் பலரும் நாளடைவில் திருந்திவிடுவார்கள். ஆதலால் 'தேசம் கடைத்தேற நான் என்ன செய்யமுடியும்?' என்று மயங்கி முயங்காமல், ஒவ்வொருவரும் தன்னால்தானே தனது தேசம் கடைத்தேற வேண்டுமென்று நினைத்து அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும்.

### MARITAL OR PRENATAL INFLUENCE.

### "ஆயிரங்காலத்துப் பயிர்"

—என்று சொல்லுவர் வாலிபர்க்குக் கலியாணம்செய்யும் காரியத்தை. பிதுர்க்கள் கடைத்தேறுவதே விவாக ஸம்ஸ்காரத்தினாலென்றால் தேசம் கடைத்தேறுவதற்கு விவாககாலமே விசேஷமாயிருப்பது என்றுசொல்லக் கேட்பானேன். நல்லெண்ணம் மனதிற்பதிந்து வேறொன்றினால் நல்லவழியில் நடக்க அநுகூலங்கள் ஏற்படும். இதைத்தான் நம்மவர் "மனம்போலிருக்கும் மாங்கல்யம்" என்று சொல்வதுண்டு. நல்ல வதூவரர்கள் எப்படியும் அவர்கள் மனோபீஷ்டம் நிறைவேறப் பெற்று வாழ்வார்கள். இடையில் நேரும் துன்பங்களெல்லாம் அவர்கள் மனதைப் பரிசோதிப்பதற்கான பரீக்ஷைகளேயன்றி வேறல்ல. நளாயனி கதையை நினைத்துப்பாருங்கள். அவளுக்கு "மனம்போலிருக்கும் மாங்கல்யம்" என்னும் பழமொழியில் ஆத்யந்த நம்பிக்கை யில்லாவிட்டால் அவள் அவளுடைய பர்த்தாசெய்த அத்தனை பரீக்ஷைகளுக்கும் ஈடுகொடுத்துத் தேறியிருக்க முடியுமா பாருங்கள்.

"பக்தியெனுமேணி நாட்டித்—துவந்த
பந்தமற்றவிடம் பார்த்ததை நீட்டி
சத்தியமென்றதை யீட்டி—நாளுந்
தன்வசமாக்கிக்கொள் சமயங்கள் ஒட்டி"

யென்றுள்ள மூத்தோர் போதனை அவள் விஷயத்தில் எவ்வளவு நிதரிசனமாக விளங்கியது பாருங்கள்.

### "GOD HELPS THOSE WHO HELP THEMSELVES."

### தன்முயற்சியினால் வரும் பயன்.

ஸ்ரீ பகவான் தானே தானானவராதலால் "தன்முயற்சி" யிலெல்லாம் ஒளிந்திருந்து உதவுமோர் உத்தம சீலனாய் விளங்குகிறார். ஹிருதயசுத்தி லபிக்குமட்டும் தன்முயற்சி வேண்டும். அது லபித்துவிட்டால் எல்லாம் அவன்முயற்சி ஆய்விடும். அப்பொழுது அவனுடைய சித்விலாச மஹிமையைக் கண்டுணர்ந்தவர்கள் அவனை "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும் அருட்சோதியாகக்" கண்டனுபவித்து அவன் திருவருளை வியந்து பாடியிருக்கிறார்கள்.

"எங்கும் சுயப்பிரகாசன்—அன்பர்
இன்ப ஹிருதயத்திருந்திடும் வாசன்
துங்க அடியவர் தாசன்—தன்னைத்
துதிக்கிற் பதவியருளுவனீசன்."

இங்கே நாம் இப்படி நமது பெரியோர் வாக்கை யெடுத்தாண்டு "மூத்தோர்சொல் வார்த்தை யமிர்தமாய்"க்கொண்டு சொன்னதெல்லாம் வீண்வாச்சா மாத்திரமென்று கொள்ளக்கூடாது.



### THE NEW AWAKENING IN THE WEST.

### மேற்றிசையார் கண்விழிப்பு.

இங்கே கண்ட உண்மைகளையெல்லாம் மேற்றிசையார் இப்பொழுது நடக்கும் பெரிய போராட்டம் நேர்ந்தபின் அனுபவத்துவாரா அறிந்து அவர்களில் மேலானோர் தத்தித் தடுமாறிக் கண்டு பிடித்துரைக்க அதிக சிரத்தையோடு கவனித்து அந்தப்படி நடந்துகொள்ள முயன்று வருகிறார்கள். கொல்லுலைத் தெருவில் ஊசிவிற்கவந்தவன் கதையாக அதையெல்லாம் மேனாட்டார் புதிய சீர்திருத்தங்களென்று இத்தேசத்தார்க் குபதேசிக்கவராது இவையெல்லாம் நம்ஜாதியார் பூர்வோத்தரம் தொட்டு உணர்ந்து அனுபவித்து நமது இரத்தத்தில் சுவர்ந்திருக்கிறவையேயென்று காட்ட அவற்றை நம்முன்னோர் வழக்குக்கு இழுக்கு வராமலும் இக்காலத்துப் படிப்புக்கு முரணாமலும் உள்ளதையுள்ளபடி உள்ளர்த்தம் விளங்க வெடுத்துரைத்தோம்.

### THE EVER OLD NEVER OLD TRUTHS.

### நவீனமாயினும் புராதனமானதே.

இந்த உண்மைகளையெல்லாம் இப்பத்திரிகாசிரியர் ம-ா-ா-ஸ்ரீ, ஸி. வி. ஸ்வாமிநாதய்யர் அவர்கள் ஆங்கிலம் கற்ற மேதையோர்க்கு ஒரு மாமாங்கமாக எடுத்தோதி வற்புறுத்தி வந்திருக்கிறாரென்பது விளங்க அவருடைய எழுத்துமூலமான போதனைகளை 12-வருஷங்களுக்குமுன் அவர் பத்திரிகைகளில் பிரகரித்துள்ளபடி யெடுத்துக்காட்டி யிருக்கிறோம். சென்றமாசம் இப்பத்திரிகையில் எடுத்தோதிய உண்மைகள் இங்கிலீஷ் பத்திரிகைகளிலும் தற்போது அவரால் எடுத்தோதப் பெற்றுக் கொண்டாடப்பட்டு வருகிறதை ஆங்கில தினசரிப் பத்திரிகைகளை வாசிப்போர் கரதலாமலகமாய்க் கண்டுணரலாம்.* மதுரை முனிசிபல் கௌன்ஸில் சேர்மான் ம-ா-ா-ஸ்ரீ வி. ஸ்ரீனிவாஸாச்சாரியார் அவர்கள் கனம். ஸர் அலெக்ஸாண்டர் கார்டு மதுரையில் ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல் கட்டட ஸ்தாபன சடங்கு சம்பந்தமாய் வந்து அக்கிராசனம் வகித்திருந்தபொழுது வெகு சமீபத்தில் இந்த உண்மைகளை வற்புறுத்திப் பேசியிருக்கிறார். தேஹ மனப்பயிர்ச்சிக்கனுகூலமில்லாத படிப்பு படிப்பல்லவென்று அவர் சொன்னார்.

* *Vide* "Hindu" of 21st July 1917, page 8, special article under "Education in India" by Mr. C. V. Swaminatha Aiyar.

### PRACTICAL EFFECTS OF EDUCATION.

### காரியத்துக்குதவும் கல்விப்பயிற்சி.

உதாரணம், செய்கை இவற்றின் திறம்.

"Coming to the moral side of the question, education is a mere waste of money if habits of truthfulness are not formed. There are many temptations in the world to get away from the path of truth. A person who exaggerates and distorts facts and creates a sensation sometimes passes for a hero. *Opportune untruth often leads to success.* But if there is a providence guiding the destinies of the world, untruth *must react with terrible results* sooner or later. *Untruth leads to unpunctuality, distrust, disunion and a host of other evils bringing about the degradation of society.*—(Italics are ours.) * * *

In order to render education a real force in the life of a country, it is necessary that students should be taught not only the theory of a sound and happy life, but should actually be trained to lead such a life. Healthy and truthful habits should be a part of nature, practised uniformly, automatically and unconsciously without calculating the consequences or the benefits."—*Speech by Mr. V. Srinivasachariar, Chairman, Municipal Council, Madura*, on the 27th July, 1917.

"நாலுபேர் காண முயற்சிசெய்து, மேரை தப்பாதிருந்து நேர்கோல்போல் நிற்கும் சத்தியவந்தன் ஒருவன் எளியரில் எளியனாயிருப்பினும், அவனால் அவன் தேசத்திற்கு அவன் இருக்கும்பொழுதும் இறந்த பின்னும் நலமுண்டு." எப்படியென்றால்; அவனுடைய நல்லொழுக்கத்தையும் குணக்குறிகளையும் காண்பவர்கள் தாமறியாமலே அவனைப்போல் நடப்பார்கள்; அவர்களைக்கண்டு பிறர் அவர்களைப்போல் நடப்பார்கள். இவ்வாறு அவன் ஒழுக்கமும் நற்குண நற்செய்கைகளும் உலகத்தில் மனுஷர் என்னளவும் அறியாத நீடித்து நிலைபெறும். ஒவ்வொருவரிடத்தில் விளங்

கும் ஊக்கந்தான் பிறருடைய ஒழுக்கத்தைத் தேறத்திருத்திச் செய்கையைச் சிறப்பித்து, அவர்கள் தொழிலுக்கு உதவும் உத்தம வித்தையாகிறதென்று நித்தநித்தம் அனுபவ சித்தமாய் அறிகிறோம். இந்தக் கல்வியோடு இணையிட்டுப் பார்க்கில், சாதாரண பாடசாலைகளிலும், சாஸ்திர பாடசாலைகளிலும், உயர்ந்த கல்விச்சாலைகளிலும் கற்பிக்கப்படுவது 'நெடுங்கணக்குத்தரம்' அல்லது அரிச்சுவடி ஆரம்பத்துக்குச் சமானம் எனப்படும். நாம் வாழும் இல்லங்களிலும், போக்குவரவு செய்யும் வீதிகள், தெருக்களிலும், வர்த்தகசாலைகள், வேலைச்சாலைகளிலும், நெய்தற்கூடத்திலும், கடைகள், கழனிகளிலும் இன்னும் உலக வியாபாரம் நடக்கும் ஜனக்கூட்டமுள்ள இடங்களிலும் புழங்குவதால் ஒருவனுக்கு அனுபவசித்தமாய்க் கிடைக்கும் கல்வி ஏட்டுப்படிப்புமட்டும் சொல்லிக்கொடுக்கும் கல்விச்சாலைகளில் கிடைக்கும் கல்வியைவிட எத்தனையோ மடங்கு பிரயோசனமுள்ளதும் பெரும்பயன் விளைக்கத்தக்கதுமாயிருக்கிறதென்பது நிதர்சனம். இனத்தோடு இனமாய்க்கூடி வாழும் இயற்கையுள்ள மனுஷ ஜாதியின் ஜனசமூகத்தில் ஒருவனாகவிருந்து மற்ற ஜனங்களோடு கூடி வாழ்வதில் அனுபவசித்தமாய்க் கிடைக்கும் மேலே சொல்லிய கல்வியைத்தான் ஷில்லர் (Schiller) என்னும் மகாபண்டிதர் "மானிடரின் வித்தியாப்பியாசம்" என்று வியந்து கூறினர். ஒருவன் செய்வதைத் திருந்தச்செய்யவும், சீராய் நாள் கழிக்கவும், தன்னைத்தானே பண்படுத்தவும், சித்தஸ்வாதீனனாயிருக்கவும் உணர்த்துவது இந்தக் கல்வி; ஒருவனை உண்மையாய்த் தேற்றிச் செய்கடனையும், பிழைப்பதற்கு உதவும் தொழிலையும் ஏற்குமாறுசெய்து முடிக்கப் பக்குவசாலி ஆக்குவதெல்லாம் இந்தக் கல்வி—இது ஏட்டுக் கல்வியல்ல—உள்ள நாள் உள்ளமட்டும் ஒன்றன்பின் ஒன்றாய் எத்தனைகோடி நூல்களை ஆராய்ந்தாலும் இந்தக் கல்வி சித்திக்காது. பேக்கன் என்னும் மகாநிபுணர் "நூலாராய்ச்சியினால் மட்டும் கற்றகல்வி—கல்வியின் பயனை யுணர்த்தாது. அதையுணர்த்தும் ஞானம் நூலாராய்ச்சியினால் வருவதன்று; அதற்குப் புறத்ததாய் அதிலும் மேலானதாயிருக்கும். அந்த ஞானம் ஞானேந்திரியங்களை உபயோகித்து உலகில் ஒருவரைச் சுற்றி நடப்பவைகளை அவதானிப்பதாலே சித்திக்கத்தக்கது அதாவது காக்ஷிகள் கேள்விகள் முதலியவற்றாலே அமைவது" என மொழிந்தது லௌகிக வியாபாரத்திற்கு உண்மையாய் அமைந்திருப்பதுபோலவே மனக்காட்டைத் திருத்திச் செய்நேர்த்தி செய்வதற்கும் உண்மையாய் அமைந்திருக்கிறது. ஏனெனில், ஒருவனுக்குப் பக்குவம் முதிர்வது அத்தனையும் ஏட்டுப்படிப்பினாலல்ல, காரிய முயற்சியினாலே; நித்தமும் ஒருவனைத் திருத்திக்கொண்டு வருவது அத்தனையும் நூல்களல்ல ஒழுக்கம், கற்கையல்ல செய்கை, பிறர் சரித்திரத்தைப் படிப்பதல்ல, சொந்தத்தில் அனுசரிக்கும் நடை எனும் உண்மையை ஸர்வானுபவம் ஐயந்தெளிய விளக்கி நிலைநிறுத்துகின்றது.

### பெரியோர் சரித்திரத்தின் உபயோகம்.

ஏட்டுப்படிப்பு, பிறர் சரித்திரம் வாசித்தல் இவைகளைவிட காரியமுயற்சியும் ஒருவன் சொந்தத்தில் அனுசரிக்கும் நடத்தையுமே மிகவும் பிரதானமென்பது ஸர்வானுபவ சித்தமாய் விளங்கும் உண்மையென்று கூறினோம். அதனால் பிறர் சரித்திரம் வாசிப்பதையிகழ்ந்ததாகவாவது உபயோகமற்றதென்று எண்ணினதாகவாவது நினைக்கவேண்டாம். பெரியோர் சரித்திரத்தாலும் முக்கியமாய் நல்லோர் சரித்திரத்தாலும் பிறருக்கு மிக்க அறிவும் பிரயோஜனமுமுண்டாம். அவை அவர்களுக்கு உதவி வேண்டும்பொழுது உதவும்; வழிதெரியாதிருக்கையில் வழிகாட்டும்; தூண்டுதலில்லாதிருக்கும் சமயம் தூண்டுகோலாம். சில உத்தமர் சரித்திரமும் தேவவாக்கும் ஒக்



கும். அச்சரித்திரங்களால் உயர்ந்த ஒழுக்கமும் உன்னத சிந்தனையும், தமக்கும் பிறர்க்கும் நயம் பயக்கும் ஊக்கமான செய்கையும் உணர்த்தப்படும். தன்முயற்சி, புத்தி பூர்வமாய்க் கொண்ட கருத்தை நிறைவேற்றுவதிற் பொறுமை, எண்ணித் துணிந்து கருமமுடித்தல், நிலைபெறும் மனநிறை இவற்றின் திறத்தை விளக்கும் அரிய திர்ஷ்டாந்தங்கள் அச்சரித்திரங்களில் உண்டு. இந்தக் குணம் குறிகள் மாசற்று உயர்ந்து மனுஷரைச் சிறப்பிக்கும் ஒழுக்க வடிவாய்த் தோன்றி, அவனவன் என்ன என்ன காரியங்களைச் சாதிக்க மாட்டுவானென்று ஐயந்திரிபறத் தெளியக்காட்டும்; அன்றியும், மானமும் மனவுறுதியுமுள்ளவர்கள் கீழ்குலத்தோரா யிருப்பினும், தம்மட்டில் நிறைசெல்வரும் கனமிக்கோரும் திண்புகழுடையோரும் ஆவார்களென்று வற்புறுத்தி விளக்கும். வித்தையில் வல்லவர்கள், இலக்கண விலக்கிய பண்டிதர்கள், சித்திர முதலிய கைத்தொழிலில் தெளிந்தவர்கள் இவர்களெல்லாரும் ஒரே வகுப்பாரல்ல, ஒரே தரத்தாரல்ல. வித்தியாசாலைகளில் கற்றுத்தேறினவர்கள் சிலர்; தொழிற்சாலைகளிற் கைதேர்ந்தவர்கள் சிலர்; ஒப்பந்த ஊழியஞ்செய்து பயின்றவர்கள் சிலர்; சிறு குடிசைகளிலிருந்து சீரழியும் வறிஞர் குடும்பத்தில் பிறந்தவர்கள் சிலர்; சிறந்த மாளிகைகளில் வாழும் செல்வர் குடும்பத்தில் தோன்றியவர்கள் சிலர். வறிஞரில் வறிஞராயிருந்தவர்கள் சிறுபான்மை உயர் பதவி பெற்றுப் பிரதாபம் பெற்றதுமுண்டு. வெல்லரிய பெருந்தடைகளும் அவர்களுக்கு ஒரு பொருளாகத் தோன்றவில்லை. பெரும்பாலும் பிரதிபந்தங்கள் எதிர்ப்பட்டபொழுது அவர்கள் உழைக்குந்திறமும், பாடுதாங்குந்திறமும் வெளிவந்து, வீணே கிடையாயிருந்த கருவி கரணங்கள் செயலிற் பிரவர்த்தித்தன. அதனால், முன்பு கசந்து பின்பு உடலுக்கு உறுதிதரும் மருந்தைப்போல, முதலில் முயற்சிக்கு இடையூறாய் நேரிட்ட தடைகளே முடிவில் அம்முயற்சிக்கு அனுகூல சாதனங்களாயின. இப்படிப் பெருந்தடைகளை ஊடறுத்து ஈடேறினவர்களும் சித்திபெற்றவர்களும் வெகு வெகு பெயர். "சித்தமிருந்தால் எதையும் சாதிக்கலாம்" எனும் முதுமொழி வீண்மொழியல்லவே. இதற்கு இந்த மாசத்து விவேகசிந்தாமணியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 'ஸர் பிரான்ஸிஸ் 'சாண்ட்ரி' சரித்திரம் ஓர் நல்ல திர்ஷ்டாந்தமாக விளங்குகிறது. இன்னும் எத்தனையோ திர்ஷ்டாந்தங்களிருக்கின்றன. 'ஸர் தாமஸ் மன்றோ' இந்தியாவுக்கு வந்தபொழுதிருந்த இருப்பென்ன: முடிவில் அவரடைந்த பேரும் பிரதாபமும் என்ன: ஜனங்களுக்கு அவர் செய்த நன்மைகள் தான் என்ன கொஞ்சமா! ஆங்கிலேய நாட்டில் மகா பிரசித்திபெற்று மிகவும் உன்னதபதவியிலிருந்தவர்களனேகர் நாவிதர், வண்ணார், குயவர் முதலான தாழ்ந்த அந்தஸ்திலிருந்து தங்கள் சொந்த முயற்சியாலும் அபூர்வ சாமர்த்தியத்தாலும், அசாத்தியத் திறமையாலும் மிகவும் மேலான பதவிக்கு வந்து பிரதாபர்களாய் புகழுடம்பெடுத்து இன்றைக்கும் அவர்கள் பெயர் உலகத்தில் அழியாது நிலைபெற்று வருகிறது. இப்படிப்பட்டவர்களது சரித்திரங்கள் உலகத்தார்க்கு வழிகாட்டும் ஒளிவிளக்குக்குச் சமானம். இச்சரித்திரங்களை நிதானித்து வாசித்து அவர்கள் ஜீவ்யவரலாற்றால் வெளியாகும் மேலான உண்மைகள், அனுபவங்கள், முதலியவற்றை கிரகித்துணர்ந்து காரியத்தில் அவைகளை இதாஹிதமறிந்து உபயோகிப்பவர்கள் மிக்க பயனையடைவார்களென்பதற்கையமில்லை. ஆகையால் மேலோர் சரித்திரங்களை வாசிக்கும்பொழுது அதை ஒரு கதையாகமட்டும் பாவித்து வாசித்துத் தள்ளாமல் அவர்கள் வாழ்நாளில் செய்தனவற்றால் அறியக்கூடிய பாடங்கள் இன்னவென்று கிரகித்தறியும் நோக்கம் வைத்துப் படித்துவரவேண்டும். பெரியோர் சரித்திரங்களை இப்படிப் படிக்கவேண்டியதின் முக்கியத்தையும் அதனால் விளையும் பயனையும்பற்றி எவ்வளவு கூறினும் ஒக்குமாதலால் அதைப்பற்றிப் பின்னுமொருமுறை வற்புறுத்திக்கூறி இது விஷயத்தை இந்த மட்டில் நிறுத்துகிறோம்.

—From *Smiles.*

## MORAL AND MAXIMS IN SONGSS.

(*Suitable for use in the Kindergarten*)

## நீதிக்கதைகளும் நிறுபோதமும்.

(கிண்டர்கார்டனில் உபயோகிக்கத்தக்க பாட்டுகள்.)

(விவேகத்தாய் தன்குழந்தைக்கு புகட்டு நீதி.)

1. தன்குணத்தை தான்துதித்தால்
இசைவா யிருக்காது
தன்குணத்தி னற்சாக்ஷி
ஜெகத்திலுள்ள மெய்க்கீர்த்தி.

2. ஆதலாற் கண்மணியே
அழகுமிகும் விண்மணியே
நீதியொடு நற்குணமும்
நீபெரிதா யெண்ணிநிற்பாய்.

3. இணையில்லா விவ்வுயிர்தான்
இவ்வுடலை விட்டாலும்
குணமே பெரியதென்று
கொண்டுநீ வாழ்ந்திடுவாய்.

4. தன்னைநடை போனடப்பாய்
தக்கபேர் நீயெடுப்பாய்
பின்னையென்றும் பக்குவத்தே
பெருங்கீர்த்தி நீபடைப்பாய்.

5. வாலிபத்தா னென்றுசொல்லி
மாசுமறு செய்யாதே
பாலிபத்தா னென்றுசொல்லிப்
பழிபழுது செய்யாதே.

6. பிஞ்சில் விளைவதுவே
பெரியமர மானபின்பும்
மிஞ்சிநிற்கும் வாசனையை
வேறுக்கக் கூடியதோ.

7. மட்டில்லா வுண்மையிது
மனதுதனில் நீதரிப்பாய்
தொட்டிற் பழக்கமதே
சுடுகாடு மட்டுமம்மா.

8. இதற்கோர் கதையுரைப்பேன்
இன்பமொடு கேட்டிடுவாய்:
பதியொன்று, பெண்ணொருத்தி;
பாங்காங் குழந்தையொன்று;

9. பழுதகன்ற வவ்வூரிற்
பாங்கான தோட்டமொன்று;
வழுதுணங்காய்த் தோட்டமதில்
வாலிபனும் போயிருப்பான்.

10. ஓயாத வாசையினால்
ஒருகாய் களவுசெய்தான்
தாயாரிடங் கொடுத்தான்
தன்செயலுந் தானுரைத்தான்.

11. பிள்ளைதிற முள்ளதென்று
பெருமகிழ்ச்சி கொண்டணைத்தாள்
தள்ளைமதி கேடலவோ
தன்சிசுவைக் கொல்லுவதும்.

12. இரண்டுகா பாச்சுபின்னும்
எட்டுபத்து நூறுக்கு
மருண்டுநிற்குந் தீக்குணத்தை
மாற்றியிடக் கூடியதோ.

13. தள்ளை யிதுவிதமாய்த்
தன்மகனைத் தான்வளர்த்துப்
பள்ளியினில் வைத்திடவே
பாலன் படித்துவந்தான்.

14. கற்றான் பலதுறையுங்
கணக்குதனிற் றேர்ச்சிமிகப்
பெற்றா னரண்மனையில்
பெருங்கணக்கன் றன்னலுவல்.

15. பெருமை யருமைமிகப்
பிரதாபந் தானுமிக,
அரியதொரு சங்கதிதான்
அங்கே நடந்ததப்போ.

16. ராஜாத்தி, யாவேர்க்கும்
ஏற்றமுற்ற ராயாபாய்,
தேசார்ந்த பூங்கொடியாள்,
தேன்பழித்த நன்மொழியாள்,

17. நாளொன்றில் நீராடி
நன்று பலங்கரித்து
மாளிகைக்குத் தான்றிரும்பி
வந்தாள் மனஞ்சலித்தாள்.



18. உத்தமியும் நீராட
வுத்தேச மாய்மறந்து
வைத்துவிட்டுப் போனாள்தன்
மதிப்பரிய தாழ்க்கோலை.

19. ஆணிகொண்ட கள்ளமதே
அரசன்முடி கொள்வதற்கும்
காணிகொண்ட கள்ளமதே
கனகோடிப் பொன்னினுக்கும்.

20. பழிபழுது வாலிபத்தே
பதிந்தால் கீர்த்தியுண்டோ
வழுதுணங்காய்க் கள்ளமது
மாறவில்லை நாளாயும்.

21. கணக்கன் களவுசெய்தான்
கணிப்பரிய சொர்ணமெல்லாம்,
இணக்கியிடக் கூடியதோ
ராஜாத்தி பொன்னலவோ.

22. சாக்ஷிகளை விஸ்தரித்தார்.
நடவுதனி லேயடைத்தார்
மாட்சிகனங் குன்றியது
மகிமையெல்லாங் குன்றியது.

23. விரித்துநின்ற குற்றமிதை
மேலாக நிர்ணயித்துத்
துரைத்தனத்தா ரந்நாளில்
தூக்கிலிடச் சொன்னார்கள்.

24. தூக்கிலிடுந் தெண்டனையால்
துக்கித்தான் பாலகனும்
வாக்கினா லம்மறுக்கம்
வரையறுத்துக் கூறுவதோ.

25. கொலைசெய்ய எத்தனித்தோர்
குறிப்பாகக் கேட்டார்கள்:
'மலைத்துநிற்கும் பாலகனே
மனதினுனக் கிஷ்டமெது?'

26. தருவதெது நீங்களிப்போ
தாயாரை யிங்கழைத்து
ஒருவார்த்தை பேசியிட
உத்தரவு தாருமென்றான்.

27. அப்படியே சம்மதித்தார்
அம்மைவந்தா ளண்டையிலே
செப்பியிடுஞ் சங்கதிக்குச்
சென்றானே பாலகனும்.

28. தாயார்தன் காதிரண்டும்
சார்பாய்க் கடித்திழுத்தான்
பாயாத ரத்தநதி
பாய்ந்ததைப் பார்த்தோர்கள்,

29. உன்கருத்தி லிவ்வா
றாதித்ததென்ன சொல்லெனவே
"முன்களவைத் தட்டாமல்
மோசமிவள் செய்தாள்காண்.

30. மதிப்பாய்ப் புகழ்ந்துநின்றாள்
வழுதுணங்காய்க் கள்ளமதைத்
துதிப்பும் புகழுமப்போ
தூக்குங் கயிறுமிப்போ."

31. என்றுசொல்லி நொந்தழுதான்
ஏக்கமிகக் கொண்டழுதான்:
நின்றவர்கள் பார்த்தார்கள்
நெஞ்சயர்ந்து நின்றார்கள்.

32. தூக்குக் கயிறுகண்டான்
துக்கமெத்த மெத்தமெத்தத்
தாக்கியது நெஞ்சினிலே
சாற்றுவான் பாலகனும்.

33. சிறிய வழுதுணங்காய்
திறமென்றீர் தாயாரே
பெரிய வழுதுணங்காய்
பிடரியிலே யென்றழுதான்.

34. ஆதலாற் கண்மணியே
அழகுமிகும் விண்மணியே
காதலித்த கற்பகமே
கள்ளமெதுஞ் செய்யாதே.

35. கள்ளமெதுஞ் செய்யாதே
கபடேதுந் தீண்டாதே
எள்ளளவும் வஞ்சகத்தே
இச்சைவைத்துச் செல்லாதே.

36. களவுசெய்த கைகளுக்குக்
கனவிலங்கு பூட்டிடுவார்,
அளவில்லாத் துன்பமுண்டாம்
ஆற்றுதற்கு மாளாது.

37. பொய்சொன்ன வாயிற்
புழுப்புழுக்கு மென்னரசே
மெய்சொன்ன வாயில்
விளம்புவதுஞ் சீனியம்மா.

38. மதிகேடு செய்தாலும்
மார்க்கமுண்டு தப்பியிடச்
சதிகேடு செய்யாதே
தங்கள் கண்ணி தங்களுக்கே.

39. வஞ்சித்தார் வாழார்
வழிப்பறித்தார் பாழாவார்.
பஞ்சான தேகமிது
பகவா னொருவனுண்டு.

40. கச்சைகட்டிக் கூத்தாடிக்
கடைத்தெருவி லோடேந்திப்
பிச்சையெடுத் துண்டாலும்
பிறர் துயரஞ் செய்யாதே.

41. தணியாத கோபமுள்ளார்
தபக்கம்வந்து தாழ்வார்கள்
பணிவாய் நடப்பவர்க்கோ
பாரெல்லாங் கையாட்சி.

42. மூலந் தனத்தினுக்கு
முயற்சியென்பார் சிற்சிலபேர்
காலந் திரவியமாம்
கருத்துடையார் காட்சியிலே.

43. உடலம் பிணிநீங்கி
உள்ளமது நற்றெளிவாய்த்
திடம்பெற் றிருப்பதுவே
சேரிய பாக்கியமாம்.

44. அகலாது வாசனைதான்
அகிலமிதி லெல்லோர்க்கும்
சகவாசம் போனடக்கை
சத்தியந்தான் சத்தியந்தான்.

45. மாறுக்க லகமதை
மாற்றுவது நன்மௌனம்
ஆறாத் துயரமெல்லாம்
ஆற்றுவதோ வீசனருள்.

46. சத்தியமே நன்மார்க்கந்
தவறுவரு மற்றெதிலும்
வித்தையிதில் லாபமெத்த
விசுவாசம் மெத்தமெத்த.

47. பூட்டியிட்ட தேகமிது
போயழியு மெந்நாளும்
நாட்டிலுள்ள வாழ்வினுக்கு
நற்பெயரே கண்டபலன்.

48. வாலிபந்தா னானாலும்
மாசுமறு சம்மதியேன்
பாலியந்தா னானாலும்
பழிபழுது சம்மதியேன்.

49. சித்தம்மொழி தான்றிருந்திச்
செயல்திருந்தி நீநடப்பாய்
உத்தமியான் பெற்றெடுத்தேன்
ஒருகுறையுஞ் செய்யாதே.

50. உள்ளபல பூமியெல்லாம்
ஓர்குடைக்கீ ழாண்டாலும்
பிள்ளையை வளர்க்கும் வித்தை
பிரயாச மானவித்தை.

51. ஆராய்ந் துலகனைத்தும்
ஆண்டாலும் பிள்ளையொன்றை
நேராக்க மாளாது
நிச்சயந்தா னிச்சயந்தான்.

52. கண்ணே யுறங்குறங்கு
கற்பகமே நித்திரைபோ
மண்ணிலுள்ள யாபேரும்
வாழியென்று நித்திரைபோ.

53. பிள்ளையை வளர்ப்பதிலே
பேரறிவு பெற்றுநின்ற
தள்ளையெல்லாம் வாழியென்று
தண்ணமுதே நித்திரைபோ.



## BIOGRAPHICAL SKETCH:
## SIR FRANCIS CHANTRE.
## ஸர் பிரான்ஸிஸ் சான்ட்ரி.

"ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்ப தொன்றில்."

மன்றோ பிரதிமையானது 'ப்ரான்ஸ்' (Bronze) என்று சொல்லப்படும் ஒருவித வெண்கலத்தால் செய்யப்பட்டுள்ளது. இந்த உலோகமானது 100 பங்கில் 70 முதல் 90 பங்கு வரையில் செம்பும், மீதி தகரமும் சேர்த்து உருக்குவதினால் உண்டாகிறது. இதனால் செய்யப்படும் பிரதிமைகள், சலவைக் கற்களால் அமைக்கப்படுவனபோல கண்ணுக்கு அவ்வளவு நேர்த்தியான உருவங்களாய்க் காணாவிடினும் பகிரங்கமான ஸ்தலங்களில் ஸ்தாபிக்கப்படுவதற்கும், காற்று, மழை வெயில் முதலானவைகளால் நெடுநாள் வரையிலும் யாதொரு கெடுதியும் உண்டாகாமல் சீராயிருப்பதற்கும் ஏற்றவைகளா யிருக்கின்றன. இது காரணம்பற்றியே நமது சென்னையில் மவுண்டுரோட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் போர்வீரராகிய நீல் துரையின் பிரதிமையும், கடற்கரை யோரமாய் சர்வகலாசபை மண்டபத்திற்கு (Senate House) எதிரே நாட்டப்பட்டிருக்கும் நமது மாட்சிமைதங்கிய விக்டோரியா மகாராணியா ரவர்களுடைய பிரதிமையும்* மன்றோ பிரதிமையைப் போலவே இக்கலவை வெண்கலத்தினாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. சலவைக்கற்களால் செய்யப்படும் பிரதிமைகள் மண்டபங்களுக்குள் அலங்காரமாய் வைக்கத் தகுந்தனவே யொழிய, வெட்டவெளியில் வைக்கப்பட்டால் மழை வெயிலில் அடிபட்டு நாளாவட்டத்தில் பின்னமடைந்து போய்விடும். பெரிய மணிகள் முதலானவை செய்யப்படுவனபோலவே, இக் கலவை வெண்கலத்தை உருக்கி, பிரதிமைகளுக்கு ஏற்ப அச்சுகளமைத்து அவைகளில் வார்த்து உருவாக்குவது வழக்கம். நாம் எந்த எந்த மனுஷருடைய உருவம் அமைக்கப்படவேண்டுமென்று உத்தேசிக்கிறோமோ அவரவருடைய முகத்திற் காணக்கூடிய சாந்தம், தயை, புன்சிரிப்பு, சௌரியம், பராக்கிரமம், வீராவேசம் முதலான குணங்கள் சற்றேனும் பிசகாமலும், அங்க அடையாளங்கள் கொஞ்சமேனும் மாறுபட்டமில்லாமலும், நகக்கண்கள் நரம்புத் தாரைகள் முதற்கொண்டு சரிவர இருக்கும்படியாய் அச்சுகளமைத்து அவைகளில் உலோகத்தை உருக்கி வார்த்து பிரதிமைகளை உண்டாக்குவது எவ்வளவு கஷ்ட சாத்தியமான காரியமென்று சற்றே நிதானித்து யோசித்துப் பார்த்தால் தெரியவரும். நாகரீக வித்தைகளென்று சொல்லப்படுமவைகளில் ஒன்றாகிய சித்திர சாஸ்திரத்தின் அருமையும் பெருமையும் அறிந்து தானே இச்சாஸ்திரத்தைக் கற்று மிகத் தேர்ச்சியடைந்த சிற்பிகள் யாவராலும் புகழப்பெற்று நன்கு மதிக்கப்படுகின்றார்கள். மிக்கேல் ஆன்ஜிலோ, ரபேல், நிகோலாஸ் பௌசின், டாஸ்ஸோ, ஜோஷுவா ரெயினால்ட்ஸ் முதலான மிகக் கீர்த்தி பெற்ற சிற்பிகள் முன்காலத்தி லிருந்தவர்கள். அவர்கள் இறந்துபோய் அனேக வருஷங்கள் ஆய்விடினும் அவர்கள் இச் சாஸ்திரத்தில் அடைந்த ஒரு தேர்ச்சியாலும், அவர்களால் இவ்வுலகிற்கு வைத்துப்போயிருக்கும் மிகவும் வேலைப்பாடுடைய சித்திரப் படங்களாலும், கற்சிலைகளாலும் அல்லவோ அவர்களுடைய பெயர்கள் இன்றும் அழியாப் புகழ் பெற்றோங்கி விளங்குகின்றன. நமது மன்றோ பிரதிமையை நிருமித்தவரும், சிற்பசீலருமான ஸர் பிரான்சிஸ் சான்ட்ரி என்பவருடைய அடியிற் சொல்லப்பட்டிருக்கும் சரித்திரச் சுருக்கமானது, ஒருவன் தன்னால் யாதொன்றும் முடியாது என்னும் எண்ணத்தை அகற்றி, தனக்குத் தெய்வானுகூலத்தால் இயற்கையாயமைந்த புத்தி விசேஷத்தை, ஊக்கமும் விடா முயற்சியுமே விரதமாகக் கைக்கொண்டவ

* இதரபிரதிமைகள் அனேகம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பினவும் இம்மாதிரியே போடம்துரையாதிமை யொன்றே சலவைக்கல்லானது.

னைப் அபிவிர்த்திசெய்து கல்வி நிலைகளில் செலுத்துவானேயாயின் இறுதியில் அதிக கீர்த்திப் பிரதாபங்கள் பெறலாமென்பதற்கு ஒரு நிதர்சனமாக விளங்கும்.

'அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.''

என்று நாயனாரும் சொல்லியிருக்கிறார்.

பிரான்சிஸ் சான்ட்ரி என்னும் கீர்த்தி பெற்ற இச்சிற்பியானவர் இங்கிலாந்து தேசத்திலுள்ள ஷெப்பீல்ட் பட்டணத்தையடுத்த நார்டன் என்னுமோர் கிராமத்தில் 1782-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 7-ம் தேதி பிறந்தவர். இவர் தகப்பனாரோ காணியளவு நிலத்தை உழுது பயிர்செய்து ஜீவனம் செய்துவந்த ஒரு எளிய குடியானவன். ஆதலால் சான்ட்ரி சிறுவனாயிருக்கும்போது வறுமையின் கொடுமையால் மிகவும் அவதிப்படவேண்டியதாயிருந்தது. இவருக்கு வயது எட்டாகவே இவர் தகப்பனார் இறந்து போய்விட்டார். அங்கிலேயர் முதலான ஜாதியாருக்குள் இருக்கும் வழக்கத்தின் பிரகாரம் இவர் தாயார் மறுமணம் புரிந்துகொண்டாள். ஆகவே, "தாயோடறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்," என்றபடி இவர் தந்தை காலஞ்சென்ற பிற்பாடு இவருடைய கல்வி முதலான விஷயங்களின் அபிவிர்த்தியைக் குறித்து அவ்வளவாகச் சிரத்தை எடுத்துக் கொள்வார் ஒருவரும் இல்லாமற்போயிற்று. பிற்பாடு கொஞ்சகாலம் இவர் தன் தகப்பனாருடைய சினேகிதர்களால் ஆதரிக்கப்பட்டுவந்தார். பன்னிரண்டாம் வயதில் இவர் ஒரு பலசரக்குக் கடையில் சிற்றாளாக அமர்த்தப்பட்டார். இவர் இயற்கையிலேயே புத்திசாதுர்யமுடையவராயிருந்தபடியால் தமக்கு இடையிடையே கிடைக்கக்கூடிய விடுதிநேரங்களையெல்லாம் கொஞ்சமேனும் வீணாக்காமல் உபயோகமுள்ள விஷயங்களைக்குறித்துப் படிப்பதிலேயும் சிந்திப்பதிலேயும், கற்றுணர்ந்தோரைக்கேட்டு அறிந்துகொள்வதிலேயும் கருத்துடன் செலுத்துவது வழக்கம். இவருக்கு 16-வயது ஆனபோது இவரை 'ஷெப்பீல்ட்' பட்டணத்திலுள்ள ஒரு வக்கீலிடத்தில் வேலை கற்றுக்கொள்ளும்படியாய் அமர்த்த அவர் சினேகிதர்களால் தீர்மானிக்கப்பட்டது. அப்போது ஒரு நாள் இவர் கடைத்தெருவு வழியாய்ச் செல்லுகையில் அவ்விடத்திலுள்ள ஒரு கடையின் சாளரத்து மரக்கதவில் விசேஷ வேலைப்பாடுடன் செய்திருந்த கொத்துவேலையைக்கண்டு மிகவும் ஆச்சரியமடைந்து, வக்கீல் வேலையைக் கற்றுக்கொள்வதைக் காட்டிலும் இவ்வளவு அருமையான இச்சித்திரக் கொத்துவேலை முதலானவைகளையே கற்றுக்கொள்வது தனக்கு ஏற்றதென்று தீர்மானித்துவிட்டார். பிற்பாடு இவர் வக்கீலிடத்தில் அமராமல் அப்பட்டணத்தில் படங்கள் அச்சியற்றுவதிலேயும், மரம் முதலியவைகளில் சித்திரம் கொத்துவதிலேயும் மண்ணால் உருவமமைப்பதிலேயும் வியாபாரம் செய்து வந்த ராபர்ட் ராம்ஸே என்பவரிடத்தில் வேலை கற்றுக்கொள்பவராக தன் இஷ்டத்தின் பிரகாரமே அமர்ந்தார். அமர்ந்ததும் அவ்விடத்திலுள்ள சித்திரங்களைப் பார்த்து வரைவதிலும், கொத்துவேலைகள் செய்வதிலும், சிற்பசாஸ்திரிக்கு அத்தியாவசியமான * அங்கசாஸ்திரத்தைக் குறித்துத் தீர விசாரிப்பதிலும் அதிக முயற்சி யெடுத்துக் கொண்டு வெகு சீக்கிரத்தில் தேர்ச்சியடைந்தார். மேலும் அக்காலத்தில் தன்னுடன் அச்சித்திரப் பண்டசாலையில் வேலையில் அமர்ந்திருக்கும் வாலிபர்களை அப்போதைக்கப்போது உட்காரச் செய்து அவர்கள் மாதிரி மண்ணால் பிரதிமை ரூபங்கள் செய்து அப்பியசித்து வந்தார். அவர் முதல் முதலில் தன் சினேகிதனொருவனை உட்காரச்செய்து அவன் போல பிரதிமை உண்டாக்க முயன்றார். அதை ஓர் படமாகச் சித்திரித்துக் காட்டியிருக்கிறதைப்பார்த்தால் அப்படத்தின் இடதுபுறத்தில்

* நாகரீக வித்தைகளாவன—சித்திரம், கீதம், புலமை முதலியவைகளாம்.



மெலிந்த தேகமுடையவரும், பெற்றோர் ஆதரணையற்று அநாதையாய் முகத்தில் கிலேசக்களையைக் கொண்டவருமாய், கையில் உருவமமைப்பதற்கு உபயோகமான ஒரு சிறு குச்சியைப்பிடித்துக்கொண்டு நிற்கிறார் சான்ட்ரி. அவர் எதிரில் ஒரு கள்ளிப்பலகைப் பெட்டியின் பேரில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான் அவர் சினேகிதன். அவன் உருவைத்தான் களிமண்ணால் அமைக்க சான்ட்ரி முயற்சி செய்கின்றார். அவர் காலுக்குச் சமீபத்தில் அவர்பக்கத்தில் ஓர் பலகையின்பேரில் உருவமமைப்பதற்காக உபயோகப்படும் சுத்தஞ்செய்த ஒருவிதக் களிமண் வைத்திருக்கிறது. அதற்குப்பக்கத்தில் உள்ள மரத்தொட்டியில் பிரதிமைசெய்யும் பொருட்டு மண்ணைக் குழைத்துக்கொள்வது முதலான காரியங்களுக்காக ஜலம் வைத்திருக்கிறது. சான்ட்ரிக் கருகாமையில் உள்ள ஒரு மேஜையின்பேரில் அவர் இடது கையால் பிடித்துக் கொண்டு அவர் சினேகிதன்போல களிமண்ணால் மார்பளவு பிரதிமை அமைத்துக்கொண்டிருக்கிறார். இவருடைய குண விசேஷத்தையும் புத்தி யூக்த்தையும் கண்டு அதிசயித்த ரபேல் ஸ்மித் என்ற ஒரு சிற்பி இவருக்குச் சித்திர சாஸ்திரத்தின் முறைகளை வெகுவாய்ப் பயிற்றுவித்தார்.

இவ்வாறாக இவர் சித்திர சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்தமேல் தானே சிற்பியாய் வேலைசெய்து பெயரெடுக்க வேண்டுமென்று ஆசையுண்டானதால் தன் எசமானாகிய ராம்ஸே என்பவரிடத்தில் செலவுபெற்றுக் கொண்டு, டப்ளின், எடின்பர்க் முதலான இடங்களுக்குப்போய் கொஞ்சகாலம் சித்திரம் எழுதிவந்தார். பிற்பாடு கடைசியாக லண்டனுக்கு வந்து அவ்விடத்தில் ஒரு உதவி மரக்கொத்து வேலைக்காரனாக அமர்ந்தார். இத்துடன் படங்கள் வரைவதிலேயும், மார்பளவில் கற்சிலைகள் செய்வதிலேயும், களிமண் உருவங்களமைப்பதிலேயும் வேலைசெய்து வந்தார். இவரால் வரையப்பட்ட படங்களில் அநேகத்தை 'ஷெப்பீல்டி'லேயும் அதையடுத்த சுற்றுப்பக்கத்துப் பட்டணங்களிலேயும் இன்றும் காணலாம். இவருக்குப் படம் வரைவதைக்காட்டிலும் சலவைக்கற்களாலும் 'ப்ரான்ஸ்'—வெண்கலத்தாலும் உருவமமைப்பதிலே வெகு பிரியம். தனது கற்பனாசக்தியைக்கொண்டு இவரால் முதல்முதலில் செய்யப்பட்ட உருவமாகிய 'சாத்தானுடைய தலை' (Satan's Head) என்று சொல்லப்படும் பிரதிமையானது 1808-ம் வருஷத்தில் லண்டன் நகரத்துத் *துரைத்தனச் சிற்ப கலா சபையில் அறங்கேற்றப்பெற்று மிகவும் புகழப்பட்டது. பிற்பாடு இவர் கிரீன்விச் நகரத்து தர்மவைத்தியசாலைக்காக மிகவும் பெயர்பெற்ற போர்க்கப்பல் தளகர்த்தர்களாகிய டன்கன், ஹோவி, வின்சென்ட், நெல்ஸன் முதலானவர்களுடைய மார்பளவு உருவங்களை சலவைக்கல்லால் பென்னம் பெரிய பிரதிமைகளாகச் செய்து முடித்தார். இவைகள் செய்து ஸ்தாபிக்கப்பட்டவுடனே இவர் கீர்த்தி நாடெங்கும் பரவி, அதிகமான வேலைகள் வரத்தலைப்பட்டு கொஞ்சகால அளவிலேயே அதிக செல்வவானானார். 1818-ம் வருஷம் இவர் சிற்ப கலாசபையார்களில் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். பிற்பாடு 1819-ம் வருஷம், ஐரோப்பாகண்டத்துள் முற்காலத்திலும் தற்காலத்திலும் சிற்பசாஸ்திரத்திற்கு முக்கியமான வாசஸ்தலங்கள் என்று சொல்லக்கூடிய இத்தாலியா தேசத்திலுள்ள பிளாரென்ஸ், உரோமாபுரி முதலான நகரங்களுக்குச்சென்று அங்குள்ள சிற்ப சிரோன்மணிகளுடன் கலந்து சினேகம் பூண்டு, அவர்கள் செய்யும் சிற்பமுறைகளையும் அறிந்துகொண்டு, லண்டன் நகரத்திற்குத் திரும்பி வந்தார். இவருக்கு சேம்பிரிட்ஜ் 'யூனிவர்சிடி' சபையாரால் எம். ஏ. (M. A.) பட்டமும், ஆக்ஸ்போர்ட் சபையாரால் டி. ஸீ. எல். (D. C. L.) பட்டமும் கௌரவமாகக் கொடுக்கப்பட்டது. 1837-ம் வருஷம் இவர் 'நைட்' (Knight) என்னும் பட்டத்தையும் அடைந்தார்.

இவரால் செய்யப்பட்ட பிரதிமை முதலான வேலைகளோ எண்ணிறந்தவை. ஆயினும் அவைகளில் மிகவும் முக்கியமானவை வட அமெரிக்கா கண்டத்தில் 'போஸ்டன்' நகரத்திலுள்ள துரைத்தனக் கொலுக்கூடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மிகக்கீர்த்தி பெற்ற வாஷிங்டன் அவர்கள் பிரதிமை; லண்டனிலுள்ள மூன்றுவது ஜார்ஜ் அரசனின் பிரதிமை, பிரைடன் பட்டணத்திலுள்ள நான்காவது ஜார்ஜ் அரசனின் பிரதிமை, வெஸ்ட்மினிஸ்டரிலுள்ள *கிரிஸ்திய மதாசாரியார் மடத்திலும், கிளாஸ்கோ நகரத்திலும் நாட்டப்பட்டிருக்கும் வாட் துரையின் பிரதிமை, லிவர்பூலில் வைத்திருக்கும் ராஸ்கோ, கானிங் இவர்களுடைய பிரதிமைகள், மான்செஸ்டரிலுள்ள டால்டன் அவர்களின் பிரதிமை, எடின்பர்க்கில் உள்ள மெல்வில் பிரபுவின் பிரதிமை முதலான இவைகளே. குதிரையின் பேரில் ஏறின வண்ணமாய்ச் சிற்பித்திருக்கும் பதுமைகளில் முக்கியமானவைகள் லண்டன் நகரத்தில் நாட்டப்பட்டிருக்கும் வெல்லிங்டன் பிரபுவின் பிரதிமையும், நமது இந்தியாவில் இச் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மன்றோ பிரதிமையும், இது போன்றதாகவே கல்கத்தாவில் நாட்டப்பட்டிருக்கும் மன்றோ பிரதிமையுமே. இவர் வெல்லிங்டன் பிரபுவின் பிரதிமை செய்ததற்காக 10,000 பவுன் பரிசு அளிக்கப்பட்டார். (இது அக்காலத்திய விலையின்பிரகாரம் சற்றேறக்குறைய 1,80,000 ரூபாய்க்குச் சமமாகிறது.) நமது மன்றோ பிரதிமை செய்வதற்காக அவர் பெற்றது 7,000 பவுன். (1,26,000 ரூபாய்). லிச் பீல்டில் †அத்தியக்ஷர் தேவாலயத்தில் உள்ள ஓர் கல்லறையின்பேரில் இரண்டு சிறு குழந்தைகள் ஒன்றையொன்று தழுவித் தூங்குவனபோல நிர்மாணம் செய்யப்பட்டுள்ள பிரதிமையானது இவருடைய வேலைப்பாட்டின் சுத்தத்திற்காகவும் அழகிற்காகவும் குழந்தைகளின் சுந்தரவடிவங்களுக்காகவும் எக்காலத்திலும் புகழ்ந்து மெச்சப்படுகின்றது. இதுபோலவே 'லூசியா ரஸ்ஸல்' என்னும் சீமாட்டி கால் நுனிவிரல்களால் குந்தி நின்றுகொண்டு தன் மார்பில் மாடப்புறாவை வைத்துக்கொண்டு சீராட்டுவதாகச் சிற்பித்திருக்கும் பதுமையும் மிகவும் அழகான வேலைப்பாடுடையது. ஒரு பதுமை செய்வதற்காக லக்ஷக்கணக்காய் பணம் கொடுப்பதேன்? என அநேகர் யோசிக்கக்கூடும். சித்திர சாஸ்திரம் என்ன இலேசானதா? இச் சாஸ்திரத்தின் உதவியாலல்லவோ நமது உற்றார் பெற்றார்கள் இறந்தும் அவர்கள் ஞாபகம் இருக்குமாறு படரூபத்தில் அவர்களை அமைத்து வைத்துக்கொள்வது. நாட்டுக்கோர் நல்லரசனாயிருப்பவனையும், அவ்வரசனுக்குதவியான மந்திரிகள் தளகர்த்தர்கள் முதலானோர்கள் காலஞ்சென்ற காலத்தும் அவர்கள் செய்த நன்றியின் பொருட்டு அவர்கள் ஞாபகம் என்றும் நிலை நிற்பதற்காகவும், அவர்களிடம் விளங்கிய காருண்யம், வீரதீரம், சுதேசாபிமானம், ஞானம், கண்யம், பெருந்தன்மை முதலாகிய அரிய குணங்களை தற்காலத்திலுள்ள நமது வாலிபர்களுக்கும், பிற்காலத்தில் அநேகம் தலைமுறைகளில் வரப்போகிறவர்களுக்கும் ஊட்டுவித்து, அப்பெரியோர்கள் நடந்தவழியாய் நடந்து சன்மார்க்கம் பெற்று உலகிற்குபகாரிகளாய்க் கீர்த்தி பெருவதற்கு ஒரு சாதனமாகவும், அவர்களுடைய உருவங்கள் போன்று பிரதிமைகள் ஏற்படுத்திவைத்துக் கொள்வது இவ்வருமை நூலாலன்றோ. மேலும் முற்காலத்தில் நடந்த போர்முதலியவைகளை இப்போது நடப்பதுபோலத் தோன்றும்படியாய் சித்திரித்துக் காட்டக்கூடிய கலையிதுவன்றோ. காலையிலும் மாலையிலும் சூரியோதயமாகும் போதும் அஸ்தமிக்கும்போதும் வானத்தில் உண்டாகும் மாறுபாடுகளாகிய கண்களுக்கினிய பலவர்ணங்களமைந்த காட்சிகளைக் குறிப்பித்துக் காட்டக்கூடிய வித்தை இதுவல்லவோ? உலகத்திலுள்ள பலவிநோத

* Cathedral. † Westminster Abbey.



காட்சிகளையும் அவ்வாறே சித்திரித்து, இதென்ன படமோ அல்லது நிஜமான தோற்றமோ வென சந்தேகிக்குமாறு அவ்வளவு நேர்த்தியாயும், யாவரும் பார்த்துக் களிக்கும்படியாயும் செய்விப்பது இச் சாஸ்திரத்தின் வலிமையாலன்றோ? இச் சாஸ்திரத்திற்கே இவ்வளவு பெருமை யிருக்குமாயின், இக்கலையைக் கையாடவல்லோருக்கு உண்டாகும் பெருமையைக் கேட்கவும் வேண்டுமா? அவர்களால் செய்யப்படும் வேலைத்திறத்திற்கு லக்ஷ ரூபாயும் ஒரு பொருட்டா?

பிரான்ஸிஸ் சான்ட்ரிக்கு பால்ய முதற்கொண்டே கண்களில் அவ்வளவாகப் பார்வை போதாது. வலது கண்ணால் அவருக்கு சுத்தமாய் பிரயோஜனமில்லை. பார்வை சற்றே குறைந்திருந்த மற்றொரு கண்ணாலேயே இவர் உலகெல்லாம் புகழ்ந்து அதிசயிக்கும்படியான சிற்ப வேலைகளைச்செய்து முடித்து அதிக கீர்த்தியடைந்ததை நினைக்க வெகு அற்புதமாயிருக்கிறது! மேலும் கண்ணின் பலத்தாலல்லவோ சிற்பி கடைத்தேறவேண்டும். அப்படியிருந்தும் இவர் இந்த உன்னத பதவியை அடைந்தது மிகவும் ஆச்சரியமே! இவர் அதிகமாய்க் கற்றுணர்ந்தவரோ என்றாலோ முதலில் தன் சிறு வயதில் வேலைக்காரனாக அமர்ந்த காலத்தில் ஒழிந்த நேரத்தில் தானாகவுழைத்து ஏதோ கொஞ்சம் படித்ததைத்தவிர விசேஷமாக அதிகமாய்க் கற்றவரல்ல. ஆயினும் இவரை எந்தவிஷயத்திலும், 'தெரியாதவர்' என்று குறைகூறினவர்களில்லை. இவர் ஆதியில் ஒரு ஏழைக் குடியானவனுக்கு மகனாகப்பிறந்து கூலிவேலை செய்திருந்தும் கடைசியில் ராஜசமூகங்களிலும் சாதாரணமாய்க் கலந்து துலாவிவரத் தகுந்த கம்பீரமும், பெருமையும், பதவியும் அடைந்தார். இவர் அடைந்த பெருமைக்குக் காரணம், இவரிடம் குடிகொண்டிருந்த ஊக்கமும், விடாமுயற்சியும், பொறுமையும், சற்குணமுமே.

'தெய்வத்தானாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்,'

என்று சொன்னார் திருவள்ளுவர்.

1841-ம் வருஷம் நவம்பர் மாதம் 25-ம் தேதி இவர் 60-வது வயதில் மார்பு நோயால் கொஞ்சம் அவஸ்தைப்பட்டு தேகவியோகமடைந்தார். இவருடைய பிரேதம் தனக்கென்று அவராலேயே தனது பிறப்பிடமாகிய நார்டனில் உள்ள கோவிலில் அமைத்து வைத்த கல்லறையில் சேமிக்கப்பட்டது. இவர் இறக்கும்போது இவருக்கு இருந்த ஆஸ்தி 90,000 பவுன் அல்லது 16,20,000 ரூபாய். இவருக்குச் சந்ததி யில்லாததினால் இவர் மனைவியாகிய சான்ட்ரி பெருமாட்டி இறந்த பிற்பாடு இவ்வாஸ்தி முழுமையும், அவரிடமிருந்த அற்புதமான வேலைத்திறமமைந்த படங்களும் சிலைகளும், அவர் எழுதிவைத்துப் போன (Will) மரணசாசனத்தின் பிரகாரம் சிற்ப கலாசங்கத்திற்குப் பரிசாக அளிக்கப்பட்டன. 'முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்' என்னும் பழமொழியின் உண்மையும், 'முயற்சி திருவினையாக்கும்' என்னும் மூத்தோர் வாக்கின் பெருமையும், இவர் வாழ்நாட் சரித்திரத்தால் நன்கே விளங்குகின்றன.

---


## விளம்பரம்.

விவேகசிந்தாமணி மாதிரிக்காப்பி வேண்டியவர்கள் அணா-8 அனுப்பவேண்டும். அல்லது V. P. P. யில் அனுப்ப உத்தரவனுப்பவேண்டும். விவேகசிந்தாமணி ஒரே பதிப்புத்தான் பிரசுரமாய் வருகிறது. அதற்கு முன்பணமாய் ரொக்கம் ரூ. 5. ஒருமாதக்கடன் ரூ. 6. வால்யம் கணக்காகவே சந்தா பெறப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கமலாம்பாள் சரித்திரம் | ரூ. | 1 | 4 | 0 |
| ஷை காலிகோ கட்டடம் | ரூ. | 1 | 12 | 0 |
| நாதகீதநாமகன் சிலம்பொலி | ரூ. | 1 | 0 | 0 |
| ஷை காலிகோ கட்டடம் | ரூ. | 1 | 4 | 0 |

தபாற்கூலி பிரத்யேகம். வேண்டியவர்கள் விவேகசிந்தாமணி மானேஜருக்கு எழுதிக்கொள்ளவும்.

விலாசம்:—ஏஜண்டு மானேஜர், "விவேகசிந்தாமணி"
லலிதாலயம், 19, ஆடம்தெரு,
மைலாப்பூர், சென்னை.

## ON ANIMAL INTELLIGENCE.

## ஜீவராசிகளின் புத்திவலிமை.

(ஆடிமாசம் 112-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனிப் பாலூட்டிக் குழவிகளை வளர்க்கும் வர்க்கத்தையும் ஆராய்ந்து பார்க்கலாம். முதலில் குதிரை வர்க்கத்தை எடுத்துப்பார்த்தால், குதிரைகள் தங்கள் யஜமானனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதும் அவனைப் பகுத்தறிவதும், வேறு யாராவது வந்தேறினால் தூக்கியெறிவதும் புத்திவலிமையைக் காட்டுகின்றதே. வண்டிகளில் கட்டும் குதிரைகள் தாங்கள் வழக்கமாகத்தங்கும் இடம் வழியிலிருந்தால் அங்கே நிற்கவேண்டாமலிருந்தாலும், நிற்க இழுப்பது ஞாபகசக்தியின் சின்னமல்லவா? கொஞ்சகாலத்திற்குமுன் தென்னிந்தியாவில் நடந்த ஒரு கொலைக்கேசில் குதிரைப்பந்தியில் புதைக்கப்பட்டிருந்த பிணத்தை மோப்பத்தாலறிந்து, ஒரு குதிரை கொலையை வெளியிட்டது அனேகர் அறிவார்கள். தாங்கள் செய்யும் குறும்புகளை மறைத்து வைத்துக்கொள்ளும் சாமர்த்தியம், யானை, நாய், வானரம் முதலியவற்றிற்குத் தான் விசேஷமாக உண்டு. ஆனால், அமெரிக்கா கண்டத்தில் ஐக்கிய மாகாணங்களில் 'அயோவா' என்னும் பட்டணத்தில் ஒருவரிடம் ஒரு குதிரையிருந்ததாம். அது தினம் தினம் எப்படியோ லாயத்திலிருந்து தோட்டத்துக்குள்போய்விடுமாம். ஆனால் கதவு மாத்திரம் மூடினது மூடினபடியே யிருக்குமாம். வெகுநாள் வரையில் இதன் மர்மம் ஒருவருக்கும் தெரியவில்லை. ஒருநாள் அந்தக் குதிரை, தாளை நீக்கித் தோட்டத்திற்குள் போனபிறகு, அங்கிருந்து வேலியின்வழியாய்த் தலையை நுழைத்து மறுபடி தாளிட்டதாம்.

செங்குத்தான மலையில் வழியில்லாத இடத்தில் இரண்டு ஆடுகள் எதிரெதிராகச் சந்தித்தபோது, இரண்டும் பிழைக்க வழியுண்டாவதற்காக ஒன்று படுத்துக்கொண்டு மற்றொன்றைத் தன்மேலேறிப்போகும்படிவிட்டது எவ்வளவு புத்திவலிமையைக் காட்டுகின்றது.

கரடி கூத்தாடுவதும், புலி சிங்கம் முதலியவை 'சர்க்கஸ்' வித்தைக்காரர்களிடமகப்பட்டு நமக்கு விநோதமுண்டாகும்படியான அற்புதச் செய்கைகள் செய்வதும் சாமானியமானவையா?

பஞ்சதந்திரத்தில் தன் யுக்திவாதத்தால் ஒரு யானையைவென்ற கிழமுயலின் கதையினால் முயலின் புத்திவலிமை தெரிகின்றதே. எலி, பெருச்சாளியிவற்றின் திருட்டுத்தனமும், துஷ்டத்தனமும் நாம் நன்றாக அறிவோம்.

நீர்நாய்களின் வீடுகளும், அவைகள் மரங்களைப் பல்லால் கடித்து வெட்டித்தள்ளுவதும், அம்மரங்கள் தங்களுக்குவேண்டிய இடத்துக்குப்போய்ச் சேரவேண்டியதற்காக நதியோரங்களில் வெட்டி சலத்தில்போட்டு கீழேகொண்டுபோவதும் எவ்வளவு புத்தி விசேஷத்தாலுண்டாகவேண்டும். தங்கள் வீடுகளுக்கு அடுத்தாப்போல் எவ்வளவு அழகாக அணைபோட்டு ஜலத்தைத் தேக்கித் தங்கள் வீடுகளும் ஜலத்தில் முழுகும்படி அமைக்கின்ற அழகே, மனிதன் மெச்சத்தக்கதும் பார்த்து அகங்காரப்படத்தக்கதுமாய் இருக்கிறது. நீர்நாய்களைக்குறித்தும் சாவதானமாக நாம் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் அனந்தமுள.

யானைகளின் சரித்திரம் எழுதினால் இடங்கொள்ளாது. ஊசியிட்டுத் தும்பிக்கையிற் குத்திய தையற்காரன் பட்டபாடு எல்லோரும் அறிவோமே. யானைகளுக்குக் கோபம்வந்துவிட்டால் யாராலும் அடக்கமுடியாது. ஆனால் அதன் பெருந்தன்மையும் அளவில் அடங்காதது. அவ்வளவு வலிமையிருந்தும், மனிதன் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறது வெகு அதிசயம். தன்பாகனிடத்தில் எப்பொழுதும் மிகுந்த அன்புள்ளதாகவே யிருக்கும். ஒரு வியாபாரி தான் மிகவும் அருமையாய் வளர்த்த ஓர் யானையைப் பொன்னாசையால் விற்றுவிட்டான். அதை வாங்கினவன் ஒருவிநோதக்கூத்து ஆட்டுபவன். ஒரு பொய்ப்பாலங்கட்டி அதன்மேல் அவன் அந்த யானையைச் செலுத்த அதுபோகமாட்டேன் என்றது. அவன் கண்டகோடாரி யெடுத்துக் காதடியில் வெட்ட இரத்தவெள்ளம் பெருகிற்று. அந்தச் சமயத்தில் அதை வளர்த்த வியாபாரி என்ன சங்கதியென்று பார்க்கப் பக்கத்தில் நெருங்கவே, அந்த யானை, அவன் கையைத் தன் தும்பிக்கையால் பிடித்துக் காயத்திலிருந்துவரும் இரத்தத்தில் அமிழ்த்தி, அவன் முகத்திலிடித்துக்காட்டியது. வாய்விட்டுப் பேசும் மனிதன் இதைவிட எவ்விதமாகச் சொல்லக் கூடுமென்பது தெரியவில்லை. வாய்விட்டுச் சொல்வதில், யானைசெய்த மாதிரி உருக்கமாகச் சொல்லமுடியாது. யானைகளைக் குறித்த கதைகள் எண்ணில. ஆயினும் நம்மனோர் ஸ்ரீகாளத்தியில் பாம்போடு போட்டிபோட்டுச் சிவபிரானை யர்ச்சித்த யானையின் சரித்திரத்தையும் ஆதிமூலமேயென்றழைத்த கஜேந்திரன் சரித்திரத்தையும் ஒருபோதும் மறவார்கள்.



பூனையின் தந்திரமும், அதன் புத்தியும், சாதுரியமும் மிகவும் வியக்கத்தக்கவையே. எலி பிடிப்பதில் அதன் சாமர்த்தியமும், பதுங்கிப் பதுங்கி அதை ஏமாற்றுவதும் புத்திக்கு அடையாளமே. தன்குட்டிகளை வெகு அன்பாக வளர்ப்பதில் மிகப் பேர்பெற்றது. வாயினால் கௌவிக்கொண்டே வேண்டுமிடம் செல்லும். இந்த விஷயமாக சென்னப்பட்டணம் துரைத்தன விநோதசபை யதிகாரியாயிருந்த மேஸ்தர் பிடீ துரை யெழுதியிருப்பதைப் பாருங்கள். சென்ற 1877-ம் வருஷத்தில் இரண்டுமாதம் ஊரைவிட்டுப் போயிருந்தாராம். அவர் வீட்டில் மூன்று பூனைகளுண்டு. அவற்றுள் ஒன்று சீமைப்பூனை. இவர் வெளியே போயிருந்தகாலத்தில் இவர் வீட்டிலிருந்த இரண்டுபேர்கள் பூனைகளைத் தொந்திரவு செய்வது வழக்கமாம். இப்படியிருக்க இந்தச் சீமைப்பூனை குட்டிபோட்டது. குட்டிகளை யவர்கள் தொந்தரவு செய்வார்களென்று பயந்து அவைகளைப் புஸ்தகசாலையில் பதுக்கி வைத்திருந்தது. பிறகு அவர்திரும்பி வந்தவுடன் அவர் குரலைக்கேட்டு அவரிடம் ஓடிவந்தது. அவர் அதைத் தடவிக்கொடுத்தார். பிறகு கொஞ்சநேரங்கழித்து அவர் உடுப்பு அறையில் தன் குட்டிகளையெல்லாம் எப்போதும்போலக் கொண்டுபோய் வைத்திருந்தது. அவர் அவைகளைப்பார்த்து, வேலைக்காரனை இவையேது என்று கேட்க, அவன் நடந்ததைச் சொன்னான். இதையுற்றுப்பார்த்தால், அந்தப் பூனையானது அடியிற்கண்ட மாதிரி ஆலோசித்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இப்போது என் யஜமான் திரும்பி வந்துவிட்டதால் குட்டிகளை அந்த இரண்டு கிராதகர்கள் வதைக்கமாட்டார்கள்; ஆகையால் குட்டிகளைக்கண்டு அவர் அதிசயித்து ஆனந்திக்கும்பொருட்டு அவர் அறையில் எப்போதும்போல் கொண்டுவிடலாம் என்பதே. பூனைக்கு வேண்டியபடி உபயோகிக்கத் தகுந்த கால்களும் நகரக்கூடிய நகங்களுமிருப்பதால், யானை தும்பிக்கையால் செய்யக்கூடிய மாதிரியும் அனேகவிதமான இலாகவமான காரியங்கள்செய்ய இயலும். பூனைக்கு அடுத்தபடி தந்திரத்தில் உயர்ந்தது குள்ளநரி, நரிமுதலியன. இவைகள் கோழி குருவி முதலியவற்றைப் பிடிப்பதில் மிகுசமர்த்துள்ளன. இவைகளின் தந்திரத்தைச் சொல்லும் கதைகள் எல்லோருக்குந் தெரியுமே.

அடுத்தபடி யுயர்ந்த சாதியாகிய நாய்க்கும் மற்றவற்றிற்கும் புத்திவலிமையில் மிகவித்தியாசமுண்டு. பூனையின் புத்திக்கும், நாயின் சக்திக்கும் நடுவில் ஏணிவைத்துத்தான் ஏறவேண்டும். அதற்குள்ள ஞாபகசக்தியைக் குறித்து ஒருகதை சொல்லுகிறேன். ஒரு நாய்க்குக் கத்திபட்டு காயமாயிருந்தது. அதன் யஜமானன் அதை ஒரு வைத்தியரிடம் சிகிச்சைக்கனுப்பினார். அதனால் தனக்குச் சௌக்கியமாகவே கொஞ்சநாட்கழித்துத் தன் தோழனான ஒரு நாய்க்கும் அதேமாதிரி காயம் பட்டிருக்கக்கண்டு அந்த நாய் அதை யிட்டுக்

கொண்டு இராத்திரி வேலையில் வைத்தியர் வீட்டுக்குப்போய்க் கதவை யிடித்தது. அவர் யாரென்று கதவைத் திறந்துபார்க்க, தான் முன் சௌக்கியம்செய்த நாயும் அதேமாதிரி காயம்பட்ட மற்றொரு நாயும் இருக்கக்கண்டு அதன் எண்ணத்தையறிந்து அதையும் சவுக்கியப்படுத்தினார். எவ்வளவு சங்கதிகளை நினைப்புவைத்துக்கொண்டு அதன்மேல் தன் யோசனசக்தியை உபயோகித்து இந்தக் காரியத்தைச் செய்திருக்கவேண்டும்? இந்த நாய்களின் உதவியால் எவ்வளவு பிராணிகள் உயிர் பிழைக்கிறார்கள்? ஆல்ப்ஸ் மலைச்சாரலில் ஸெய்ன்ட் பெர்னார்ட் சன்யாசி மடத்தார் நாய்களின் உதவியாலேயே பனியில் மூழ்கிக்கிடக்கும் பிரயாணிகளைப் பிழைப்பிக்கிறார்கள்.

நியூவௌண்ட்லாந்து நாய்களின் சாமர்த்தியம் நாமெல்லாம் கேட்டிருக்கிறோமே. ஆயினும் ஒருவிசேஷமான கதை ஒன்று பாருங்கள். ஒரு துரைமகன் வீட்டில் செவிலித்தாய் குழந்தையை யெடுத்துக்கொண்டு காற்று வாங்குவதற்காக வெளியே உலாவப் போகும்போது நாய் ஒன்று கூடப்போவதுண்டு. ஒருநாள் குளிர்ந்த காற்று அடித்ததால் கொஞ்சதூரம் போனபிறகு அந்தச் செவிலித்தாய் குழந்தைக்குச் சால்வை போர்த்தினாள். அதை நாய் பார்க்கவில்லை. கொஞ்சதூரம்போய் வீட்டிற்குத் திரும்பும்போது நாய் குழந்தையைக் காணாததினால் தாதியை வழிமறித்தது. அவளுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. எவ்வளவோ விதங்களில் அதைச் சமாதானம் செய்யப் பிரயாசைப்பட்டும் அது அவளை ஒரு அடிகூட எடுத்துவைக்க விடவில்லை. கடைசியாய் சால்வையைத் திறந்து குழந்தையைக் காட்டவே வீட்டிற்குப் போயிற்றாம். எவ்வளவு புத்தி பாருங்கள். வேட்டையாடுவதில் நாய்கள் மோப்பம் பிடிப்பதும் தொடர்ந்து செல்வதும் வியக்கத்தக்கதே.

எல்லாவற்றிற்கும் உயர்ந்த குரங்குச் சாதியைப்பற்றிச் சொல்லவேண்டிய சங்கதிகள் அனேகம் இருக்கின்றன. அனேக விஷயங்களில் மனிதர்கள் மாதிரியே அநேக காரியங்கள் செய்கின்றன. ஒரு பிரபு ஒரு ஓராங் என்னும் குரங்கு வளர்த்துவந்தார். அவர் ஒருநாள் அதற்கு ஒரு கொளுமிச்சம்பழம் உரித்துப் பாதி கொடுத்துவிட்டு மீதியைத் தன் தலையணையண்டை வைத்தார். பிறகு தூங்குவதுபோல் பாசாங்கு செய்தார். அந்தக் குரங்கு தன்னிடம் விட்டுவந்து அவர் தூங்குகிறாரா என்றுபார்த்து தூங்குகிறார் என்று தெரிந்துகொண்டு மீதிப்பழத்தையும் எடுத்து உரித்துத் தின்றுவிட்டு அதன் தோலையெல்லாம் யஜமானனுக்குத் தெரியாதபடி மறைத்து வைத்துவிட்டுத் தன்னிடம்போய் உட்கார்ந்ததாம். இதில் எவ்வளவு புத்திவெளியாகிறது பாருங்கள். இராமாயண யுத்தமே வானரங்களா லல்லவா முடிந்தது. ஹனுமானைப்போல புத்தியில் வல்லவர்களுண்டா. அவர் நவவியாகரண பண்டிதராச்சுதே. மனித சாதிக்குரிய விசேஷமான குணம் என்ன என்று கேட்டதற்கு ஒரு தத்துவசாஸ்திரி, 'மனிதன் சிரிக்கும் பிராணி'' என்றாராம். இந்தக்குணம் வேறு எந்தப் பிராணிக்கும் இல்லையாயினும் இதுவே போதுமான வித்தியாசமாகாது. ஒருவர் "மனிதன் ஆயுதங்களை உபயோகப்படுத்தும் பிராணி" யென்று வரையறுத்திருக்கிறார். சில வானரங்களும் தடி, கத்தி முதலிய ஆயுதங்களை யுபயோகப்படுத்துவதை நாம் காணலாம். ஆனால் மனிதன் உபயோகப்படுத்துகிற மாதிரி எல்லா ஆயுதங்களையும் சாதுரியமாக உபயோகப்படுத்த இயலாது. மற்றும் விசேஷமென்னவென்றால் மனிதன் தான் உபயோகப்படுத்தும் ஆயுதங்களைத் தானே செய்துகொள்ள வல்லவனாயிருக்கிறான். மற்ற எந்தப் பிராணிக்கும் இந்த சாமர்த்திய மில்லவேயில்லை.

இவையெல்லாம் உற்றுப்பார்த்தால் சீவராசிகளில் வர்க்கத்துக்குத் தக்கபடி புத்திவளமை வேறுபடுகிறதென்று தெரியவருகிறது. புத்திக்குக் காரணமென்ன என்பதை யாராய்ந்து பார்ப்போம்.



ஒரு அணுவானாலும் தன்னியற்கையிடம் விட்டுப் பெயர்வதற்கு வேறுகாரணபூதங்களில்லாமல் நகரமுடியாது. கிணற்றிலிருக்கும் ஜலம் நமக்குவேண்டுமானால் நாம் முயற்சிசெய்து தானே சேந்தியோ இறங்கியெடுத்தோ பெறுகிறோம். நாம் நடக்கவேண்டுமானால் நமது கால்கள் மடிந்தும் நீண்டும் புடைபெயர்ந்தால்தான் முடியும். கல்லாலும் மரத்தாலும் செய்த பதுமைகளுக்கும் கால்கள் இருக்கின்றனவே அவைகள் ஏன் நடப்பதில்லையென்று கேட்டால் நமது சிறுவர்கள் தாமதமில்லாமல் அவற்றிற்கு உயிரில்லையென்று சொல்லிவிடுவார்கள். கடைகளில் உள்ளே யந்திரமமைத்த பதுமைகள் சிலவற்றை வாங்கிச்செவ்வையாய் முறுக்கிவிட்டுக் கீழேவைத்தால் சில சரசரவென்று ஓடுவதையும், சில பாட்டிற்கு இசைய நடிப்பதையும், வெவ்வேறு விதமாக விளையாடுவதையும் சிறுவர்க்குக்காட்டி அவற்றிற்கு உயிருண்டாவென்று கேட்போமானால் அப்பொழுதும் இல்லையென்று நிஸ்ஸந்தேகமாய்ச் சொல்லுவார்கள். தாங்களே ஓடுகிறவும், ஆடுகிறவுமானவைகளை யேன் உயிருள்ளவையென்று சொல்லக்கூடாதென்று நாம் அவர்களைக்கேட்டால் இவைகளுக்கு உள்ளே முறுக்கு யந்திரமிருக்கிறதென்றும் அதனால் ஓடுகின்றனவேயன்றி உயிரிருப்பதால் ஓடுபவையல்லவென்றும் சொல்லுவார்கள். அவைகளுக்கு உயிரிருக்குமானால் நம்மைப்போல் நினைத்தபோதெல்லாம் தாமாகவே ஆடவும் ஓடவும் செய்யலாமே. நாம் ஓடவும் ஆடவும் வேண்டுமென்றால் நம்மை வேறொருவர் முறுக்கியா விடுகிறார்களென்றும் நியாயவாதம் செய்யலாம். பொம்மைகளைக்கொண்டு நாடகமாட்டுவிப்பதை நம்மனோர் அனேகர் பார்த்திருக்கலாம். ஒவ்வொரு தரமும் பொம்மை கண்ணைச் சுழற்றும்போதும், கையை ஓங்கும்போதும், அச்செயல்களுக்கெல்லாம் ஆதாரபூதமாகப் பின் சூத்திரம் மறைந்திருக்கிறதைக் காணலாம்.

அம்மாதிரியே நமது கைகால்கள் மடியவும் நீளவும் வேண்டுமானால் அச்செய்கைகளையியற்ற சூத்திரம் உள்மறைந்திருக்கவேண்டும் என்று மேற்கூறிய உதாரணங்களால் சந்தேகமின்றி அனுமானிக்கவேண்டியிருக்கிறது.

கசாப்புக்கடைகளில் கட்டித் தொங்கவிட்டிருக்கும் ஆட்டின் தொடைப்பாகத்தைக் கொணர்ந்து அதில் (electricity) மின்சாரத்தைப்போக்கினால், உயிருள்ள ஆடு செய்வதுபோலவே காலை மடிக்கக் காண்போம். கால் மடிவதற்குக் காரணமென்னவென்று, அதைக் கொஞ்சம் கிழித்துப் பார்த்தால் தசைக்குள் முழுவதும் வெள்ளிக்கம்பிபோன்ற நரம்புகள் ஓடுவதையும், மின்சாரம் போக்கினால் நரம்புகள் சுருங்கி காலை மடியச்செய்வதையும் நாம காண்போம். நமது சிறுவர்கள் அனேகர் மூங்கிற் பிளப்பில் கயிறுகட்டி வில்லாக வைத்துக்கொண்டு குறிபார்த்துக் கல்லடித்துப் பழகியிருக்கலாம். அவர்களுக்கு இந்த விஷயம் மிகவும் நன்றாக விளங்கும். கயிற்றின் நீளம் குறையக்குறைய மூங்கிலின் தலைப்புகள் நெருங்குவது சுவபாவம்தானே. அதே மாதிரிதான் அந்த ஆட்டின் காலிலுள்ள நரம்புகளின் ஒருமுனை ஒரு எலும்பிலும், மற்றொரு முனை மற்றொரு எலும்பிலும் கட்டப்பட்டிருப்பதால், இந்த நரம்பு சுருங்க, எலும்புகளிரண்டும் நெருங்குவதால் கால் மடங்குகிறதென்று செவ்வையாய் விளங்கும். மனித தேகமும் ஆட்டின்தேகத்தை ஒத்ததே. "தொட்டாற் சுருங்கி" என்ற செடியின் குணம் எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். மற்ற செடிகளைப்போ லில்லாமல் இதுமாத்திரம் வேறு பொருளாற்றீண்டப்பட்டவுடனே அக்கிரமஞ்செய்யும் பாதகர்களைக்கண்டால் சற்சனர்கள் கண்டு ஒளிவதுபோல், தன் இலை, கொடி முதலியவற்றை அடக்கிக்கொள்வானேன? பரிசோதித்தால், மின்சாரத்தால், சுருங்குவதற்கு ஆட்டின்காலில் நரம்புகளிருப்பதுபோல், இந்தச் செடியிலும் சில நரம்புகள் ஓடுவதைக் காணலாம். பல்லி, அரணை முதலியவற்றின் வால் அறுந்துபோனால், உடனே அவை குதிப்பதை யாவரும் பார்த்திருக்கிறோம். அற்ற வால்கள் கொஞ்சம்

குதித்து அடங்கிய பின்பு, மறுபடியும் அதை நாம் தொட்டால் அது அப்பொழுதும் குதிப்பதைக் காணலாம். அதுதான் அற்று இறந்த வாலாயிற்றே. அதில் குதிக்கக்கூடிய சக்தியேது. அந்த வாலில் இருந்த உயிர் அந்தப் பிராணியின் தலையுள்ள பாகத்தோடு அல்லவோ இருக்கிறது. அப்படியிருக்க இந்த வால் குதிக்கக் காரணமென்னவென்று யோசித்தால், அந்த வாலிலும் நரம்புக்கூட்டம் இருக்கிறதென்றும் அது தொட்டாற் சுருங்கியைப்போல, ஏதாவது ஒன்று தன்மேற்பட்டால் சுருங்குகிறதென்றும் அறிகிறோம். ஆனால் இந்த சக்தி வாலில் இரத்த ஓட்டம் இருக்கும்வரையில்தானிருக்கும்.

நமது முதுகில் விரலைக்கொண்டு தடவிப் பார்த்தால் தலைமுதல் இடுப்புவரை வரிசையாக எலும்புகளிருப்பதைக் காணலாம். இந்த எலும்பு வரிசையில் உள்ளாக ஒருகுழல் இருக்கிறது. அந்தக் குழலுக்குள் 'சுழிமுனைநாடி' என்ற ஒரு தடித்த நரம்பு ஓடுவதையும், அதிலிருந்து இடையிடையே கிளைகள் புறப்படுவதையும் காண்கிறோம். இம்மாதிரியான கிளைகள் கால்களுக்கும் பாவுகின்றன. நமது காலில் ஏதாவது ஒன்றுபட்டால், அது இயற்கையாகவே பின்வாங்குகிறதுமன்றி, அச்செயல்களெல்லாம் நமது புத்திக்கும் அறிவிக்கப்படுகின்றன. யாதாவதொருகாரணத்தால் நமது இடை ஒடிந்து அந்நரம்புக்கிளைகள் அற்றுப்போனாலும், நமது கால்கள் வேறொன்றின்பேரில்பட்டால் முன்போல பின்வாங்கித் துடித்தபோதிலும், அச்செயல்களெல்லாம் நமது புத்திக்கெட்டாது. இப்படித் துடிக்கும் நமது கால்களுக்கும் பல்லியின் அற்ற வாலுக்கும், தொட்டாற் சுருங்கிக்கும், சூத்திரப் பொம்மைக்கும் ஏதும் வித்தியாசமேயில்லை. சாதாரண ஸ்திதியில் நம் உடம்பில் ஏதாவது பட்டால், நரம்பாகிய தந்தியின் வழியாய், இந்த சமாசாரம் மூளையென்னும் ஸ்தானத்திற்குச் செல்வதால், நமது மனதிற்குத் தெரிகிறது. இந்நரம்பு அற்றுப்போனால் நமது புத்திக்கு சமாசாரம் எட்டாது. ஆனாலும், 'சுழிமுனைநாடி' நரம்பின் சக்தியால் அற்றகால்கள் துடிக்கும். நாம் மனதில் காலை மடிக்கவேண்டுமென்று எண்ணினாலும் அது மடிகிறது. ஆகையால் மனத்திற்கு எவ்வளவுதூரம் இதில் சக்தியிருக்கிறதென்று அறியக்கூடவில்லை.

கிருமி கீடங்களெல்லாம் தாமாகவே வெவ்வேறிடங்களுக்குச் செல்ல இயலுகின்றதே. அச்செயல் எல்லாம் மனதின் 'காரணத்தாலுண்டானதா? அல்லது வேறு என்ன காரணத்தாலுண்டானது? மனிதன் மனதிற்கும், கிருமிகளின் மனதிற்கும் ஏதாவது வித்தியாசமுண்டா என்று சந்தேகிக்கலாம். சிறு ஜந்து முதல் மனிதன் வரை தேகக்கூறுனது தசைத்தேகம், குழல்தேகம், எலும்புத்தேகம், முதலாக எப்படி படிப்படியாக மாறிப்பட்டிருக்கிறதோ அதுபோல மனமும் புழு முதல் மனிதன் வரை படிப்படியாய் விருத்தியில் வேறுபட்டிருக்கிறதென்பது சிலர் கொள்கை. ஒரு யந்திரத்தின் ஒருபாகத்தை, சாவியைத் திருப்பி மாற்றினால், அந்த யந்திரம் சில காரியங்களைத் தன்னுணர்ச்சியின்றியே, எப்படி செய்து தீரவேண்டுமோ, அம்மாதிரி, சில ஜீவராசிகள் தாங்கள் இன்னகாரியம் செய்கிறோமென்பதே தெரியாமல், சிலகாரியங்கள் செய்தே தீரவேண்டும். சில ஜீவராசிகளுக்குத் தாங்கள் ஏதோ காரியம் செய்வதாக மாத்திரம் தெரிந்துகொள்ளக்கூடுகிறதேயொழிய அச்செயலினால் இன்னதுண்டாமென்று அறியக்கூடுகிறதில்லை. மற்ற ஜீவராசிகள் தாங்கள் இன்ன பயனை யடைவதற்காக இன்ன காரியம் செய்யவேண்டுமென்பதையும் அறிகின்றன. மனிதனோ தான் நினைக்கும், எண்ணும், செய்யும், செய்கைகளுக்கெல்லாம் தானே அதிகாரியாயிருக்கின்றான். அதாவது சுருங்கச்சொல்லவேண்டுமென்றால், சில ஜீவராசிகளுக்கு, மனம் என்று கூடச் சொல்வதற்குப் போதாத குணமிருப்பதாகவும், சிலவற்றிற்கு மனம் மாத்திரம் உண்டென்றும், உயர்ந்த ஜீவராசிகளுக்கு இன்னது செய்வது சரி, இன்னது தவறு என்று பகுத்தறியக் கூடிய சக்தியுண்டென்றும் அறிகிறோம். ஆனால் படிப்படியாயுள்ள இந்த ஜீவராசிகளின் மனோ நுட்பத்திற்கு, இந்தச் சாதிக்கு இவ்வளவுதான் என்று ஒரு அளவிட்டு வரையறுக்கமுடியாது. மனிதனுக்குள்ள, ஞாபகசக்தி, கோபம் முதலிய அகங்காரங்கள், புத்தி நுட்பம் இவைகளெல்லாம் நாய், பூனை முதலிய பிராணிகளிடத்தும் காணலாம். மனிதனுக்கு அடுத்தபடியாயுள்ள வானரச் சாதிக்கு இன்னும் விசேஷமான அறிவுண்டு.



## "THE GREATNESS OF THE HOME."

"இல்லதென் இல்லவள் மாண்பானால்"

"பெண்ணைப் போற்றி வளர், பிள்ளையை அடித்து வளர்" என்பது பழமொழி, அப்படியென்றால் என்னை? பால் வேற்றுமையினால் தேஹ தர்மத்தில் சில சூக்ஷ்மமான வேற்றுமைகள் உண்டு. பெண்களுக்கு இயல்பாகவே சூக்ஷ்மபுத்தி யதிகம் உண்டு. ஆனால் அவர்களுக்கு தேகதிடன் மிக முக்கியமானது. அபலைகளானாலும் குடித்தனப்பாங்கிலும் ஸம்ஸாரத்திலும் அவர்கள் பங்குக்கு விழும் பொறுப்புகளை வகித்து அவற்றிற்கு ஈடுகொடுக்க அவர்களுக்குத் திடகாத்திரம் இன்றியமையாதது. அந்தத் திடகாத்திரமும் குழந்தைப் பருவத்திலேயே போஷணை மிகுதியினால் உண்டாகவேண்டும். ஏனெனில் அவர்கள் பெரியவர்களானபின் தேஹப் பிரயாசை அவர்களுக்கு அதிகம் நேரிடும். "அழுதாலும் பிள்ளை அவளேதான் பெறல் வேண்டும்" என்கிற பழமொழிப்படி அவர்கள் தாமே வகித்துச் சமாளிக்கவேண்டிய பொறுப்பு எத்தனையோ இருக்கின்றன. "மனைமாக்ஷி" யெல்லாம் மனையாள் தலைப்பொறுப்பாய் ஏற்படவேண்டியதாயிருப்பதினால் தான் "இல்லதென் இல்லவள் மாண்பானால்" என்று திருவள்ளுவநாயனார் கூறியுள்ளார். அப்படியே பிள்ளைக்கு பாலியசிக்ஷை பிரதானம். க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாகயோக தர்மம் உணர்ந்தவர்களுக்கு இதன் அவசியம் வெள்ளிடைமலைபோல் விளங்கும். இப்பொழுதும் எப்பொழுதும் "இல்லவள் மாண்பானால்" தான் இல்லறம் சிறக்கும். இல்லறத்தில் தேறினவர்களே அரசியல் தர்மம் உணரத்தக்கவர்களாவர். ஏனெனில் அரசியல் என்பது சமஷ்டி தர்மம், இல்லியல் என்பது வியஷ்டி தர்மம். இதன் சூக்ஷ்மத்தை வற்புறுத்திக் காட்டவே "குடியுயரக் கோனுயர்வான்" என்று சூசிப்பிக்க "வரப்புயர" என்று ஔவையார் அரசனை வாழ்த்தினார். அந்த ஆசிர்வசனத்தின் உள்மர்ம மென்னவென்று கேட்டபொழுது

"வரப்புயர, வயலுயரும்;
வயலுயரக் குடியுயரும்;
குடியுயரக் கோனுயர்வான்."

என்று எடுத்துக்கூறி விளக்க வைத்தாள்.

## THE WIT AND HUMOUR OF POETS.

கவிகளின் சாதுரிய சமத்காரங்கள்.

சிற்சில புலவர்கள் தம் வறுமையைக்குறித்து இவ்வாறு வெகு விசித்திரமாகப் பாடியிருக்கின்றனர். அவற்றிற் சில வற்றையும் அடியில் குறிப்பிடுவாம்.

இராமகவிராய ரென்னும் ஒருவர் தாம் சென்னைபுரியில்வந்து அடைந்த சிறுமையைப் பெருமையாகப் புகழ்ந்து கூறுகின்றனர். அதாவது,

8. "சென்னைபுரி வந்து சிவனாயி னேன்நல்ல
அன்னமது காணா தவனாகி—மன்னுசிரங்
கைக்கொண் டரைச்சோமன் கட்டிச் சடை
மெய்க்கொண்ட நீறணிந்து மே." முறங்கி

சென்னைபுரிக்குவந்து சேர்ந்ததன் பின், ஆதரிப்பாரின்மையால் நான் அன்னம் காணாதவனாகினேன் (சிவன் அன்னத்தாற்றேடிக் காணப்படாதவராயினர்.) நான் சிரங்கைக் கொண்டேன் (சிவனோ பிரமாவின் சிரத்தைக் கையில் ஏந்திக்கொண்டனர்.) நான் அரையில் மட்டுமே சோமன் கட்டப்பெற்றேன். மேலே போட்டுக்கொள்ள உத்தரீயத்துக்கு வகையில்லாதவனாயினேன். (சிவன் அர்த்த சந்திரனைச் சடாமகுடத்தில் தரித்தனர்.) என் தலைமயிர் எண்ணெய்ப்பசை காணாமையின் ஒன்றோடொன்று பிணைந்து சடையாய்ப் போகப்பெற்றேன், (சிவனும் சடாமுடியைத் தரித்திருக்கின்றனர்.) நான் உடம்பெங்கும் எண்ணெய் தேய்க்காமையின் நீறுபூக்கப்பெற்றேன். (சிவனும் உடம்பெங்கும் திருநீற்றைத் தரித்திருக்கின்றனர்.) ஆகவே இக்காரணங்களால் நான் பரமசிவனுக் கொப்பாயினேன் என்று தருக்கிக் கூறியதுபோலும் கூறினர்.

இவ்விராமகவிராயர் சரிதமும் மற்றவர் சரிதம்போலத்தான்; நமக்கு விவரமாகத் தெரிந்ததில்லை. இவர் பொன்னேரித் திருவாய்ப்பாடிப் புராணம் என்னும் பிரபந்தத்தை இயற்றினர். இப்பொன்னேரி என்பது சென்னை

க்கு வடக்கே 20-மைல் தூரத்தில் ஈஸ்டு கோஸ்டு (கிழக்குக் கடலோரம்) ரயில்வேயில் உள்ளது. இவர் பாடிய இன்னொருபாட்டும் வேடிக்கையாயிருத்தலின் இங்கு காண்கின்றோம்.

9. கார்படைத்த காதலத்தான் துரைதிருவேங்கட
மளித்த கன்னு வெங்கும்,
பேர்படைத்த ஆனந்த ரங்கமகிபாலனின்
பிரம்பூர் நாட்டில்,
நேரிழைக்கு வழியேழு மூலையாறு காதைந்து
நெற்றிநான்கு,
பாரிடத்திலிப்புதுமை கண்டுவந்தேன் இதன்
பயனைப் பகர்ந்திடாயே."

இப்பாடலில் "நேரிழைக்கு வழியேழு மூலையாறு காதைந்து நெற்றி நான்கு" என்பதற்குப்பொருள் இவ்வாறு கொள்ளல்வேண்டும். நேரிழையாவது—கன்னி. கன்னியாராசிக்கு ஏழாம் ராசி மீனம்; ஆறும் ராசி கும்பம்; ஐந்தாம் ராசி மகரம்; நான்காம் ராசி தநுசு; ஆதலின் இவர் குறித்த பெண்ணுக்குச் சேல்போன்ற விழிகளும், கும்பம்போன்ற தனங்களும், மகரக்குழையணிந்தசெவிகளும் வில்லையொத்த நெற்றியும் உள்ளன என்பது பொருள்.

மதுரகவிராயரென்னும் இன்னொரு புலவரும் இக்கருத்தையே வைத்து, இதே பிரபுவின் மீதே,

"தங்கவரை மார்பா துரைரங்க பூபதியே
இங்கோர் புதுமை யியம்பக்கேள்—பங்கயக்கை
ஆயிழைக்கு நான்கு நுதலைந்துகுழை யாறுமூலை
மாயவழி யேழா மதி."

என்று பாடியிருக்கின்றனர். இவ்விரண்டும் ஒரே கருத்தாய் ஒரே பிரபுவின்மீது பாடப்பட்டிருப்பதற்குக்காரணம், ஒருவேளை, இவ்விருவரில் ஒருவர் இக்கருத்தை வைத்துப்பாட மற்றவரை அந்தப் பிரபு பரிக்ஷிக்கவேண்டிப் பாடும்படிக் கேட்டுக்கொண்டதாயிருப்பினும் ஆம்.

சொக்கநாதப்புலவர் என்னும் இன்னொரு புலவர், தமது வறுமைநிலையைப்பற்றிச் சமத்காரமாகப் பின்வருமாறு கூறுகின்றனர்:—

10. "இந்திரன்கலையா யென்மருங்கிருந்தான்
அக்கினி உதரம்விட்டகலான்,
எமனெனைக் கருதானரனெனக்கருதி
நிருதிவந்தென்னை யென்செய்வான்
அந்தமாம்வருணன் இருகண்விட்டகலான்
அகத்தினில் மக்களும் யானும்
அநிலமதாகும் அமுதினைக்கொள்வோம்
ஆரெதி ரெமக்குளா ருலகில்
சந்ததமிந்த வரிசையைப் பெற்றுத்
தரித்திரராஜனைவணங்கித்
தலைசெயுமெம்மை நிலைசெய் சற்கீர்த்திச்
சாளுவ கோப்பையனுதவும்
மந்தரப் புயத்தான் வளப்புறுபெயரான்
மகிழ்வொடு விலையிலாவன்னோன்
வாக்கினுற் குபேரனுக்கி னனவனே
மாசிலீசான பூபதியே."

இப்பாடலில் இந்திரன் முதலான திக்குபாலகர் எண்மரின் பெயரும் வரும்படித் தொகுத்தனர். இதன்பொருள், இந்திரனே வஸ்திரரூபமாக என் அரையில்வந்திருந்தனர். (அதாவது யான் கட்டியவஸ்திரம் இந்திரன் கண்கள்போல சகஸ்ரகந்தல்) இயமனே என்னை அரனென்றெண்ணி என்னைக்கிட்ட நினைத்தற்கும் அஞ்சுவான். (அரனெனக் கருதியது முன்னே இராமகவிராயர் "சென்னைபுரிவந்து சிவனுயினேன்" னென்றபடியாயினுமாகும்.) நிருதிவந்து என்னை என்ன செய்யக்கூடும்? (நிருதி அரக்கனுதலின் நரமாம்சம்புசித்தல் அரக்கற்கியற்கையாயினும் என்னுடம்பில் தசையே இல்லையாதலின் என்னை அவன் செய்யற்பாலதொன்றும் இல்லை என்றபடி.) வருணனே என்னிரண்டு கண்களையும்விட்டு நீங்கான். (எப்போதும் வறுமை முதலிய காரணங்களால் கண்ணீர்விட்டழுது கொண்டேயிருத்தலின் அவ்வாறு கூறினர்.) வீட்டிலுள்ள என்மக்களும் நானும் வாயுபட்சணம் செய்து காலம்தள்ளுவோம். (உண்ணுதற்கொன்றுமில்லாமல் பட்டினிகிடக்கவேண்டி வருதலின் அவ்வாறு கூறினர்.) ஆதலால் எங்களுக்குச் சமானம் உலகில் வேறே யாவர் இருக்கின்றனர்? (இல்லர் என்றபடி) எப்



போதும் இந்தப் பெருமையைப்பெற்றுத் தரித்திரராஜாவை சேவித்து முதன்மைபெற்று வருகின்ற என்னை இக்கனவான் வாக்கு மாத்திரத்தினலே குபேரன் ஆக்கிவிட்டான். (அதாவது ஒன்றும்கொடாத உலோபிகளாயினும் காட்டைக்கட்டுகிறேன் மலையைக்கட்டுகிறேன் பொன்னைத்தருகிறேன் பொருளைத் தருகிறேனென்று கூச்சமில்லாமல் தாராளமாய்ச் சொல்லுவது சிலருடைய வழக்கம் அவ்வழக்கத்தைக் கொண்டவன் இப்பிரபு என்றபடி.) ஆதலின் இவனே ஈசானனுக்குச் சமானமான பூபதியென்றபடி. (ஈசானன் போல வாக்கினுல் மாத்திரம் பெருந்தகையான காரியங்களைச் செய்யவல்லவன் என்றபடி)

இவ்வாறு பாடும் பாடல்களில் சில கடவுளர்களைச் சுட்டியும் வசைபோலத் துதியாய் நிற்கும். ஆசுகவிச்சிங்கமாகிய காளமேகப்புலவர் இவ்வாறு பாடுவதில் நிரம்பச் சமர்த்தர். இதற்குத் திருஷ்டாந்தமாக இரண்டொன்றை எடுத்துக் காட்டுவோம். ஒருகால் முருகக்கடவுள் திருவிழாக் கொண்டு வீதியில் எழுந்தருளி வருதல் கண்டு,

11. "அப்பனிரந் துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்
கென்ன பெருமை யிது"

என்று நிந்தித்தல் போலக் கூறினர். இன்னொரு சமயத்தில் தியாகராஜப் பெருமான் வீதியில் எழுந்தருளி வருகையில்,

12. "ஆடும் தியாகரே ஆட்டமேன் தானுமக்கு
வீடு சமுசாரம் மேலிட்டுக்—கூடிச்
செருக்கி விளையாடச் சிறுவரிரண் டாச்சே
இருக்குமூர் ஒற்றியாச் சே"

என்றனர். இன்னம் இவைபோன்ற பாட்டல்கள் பலவுள. நிற்க, இராமச்சந்திரக் கவிராயரென்னும் ஒருவித்துவான் பாடியுள்ள இவ்விதமான விநோதப் பாட்டொன்றை இங்கு எடுத்துக்காட்டுவோம். அது பின்வருமாறு:—

13. "வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற்புண்ணும்,
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற் புண்
[ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சென்றேனப்பா!
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும்வேடன்
கொடுங்காலாலுதைத்த புண்ணும் கோபமாகப்
பஞ்சவரிலொருவன் வில்லா லடித்த புண்ணும்
பாரென்றே காட்டிநின்றான் பரமன்தானே."

அதாவது, கொடாத லோபிகளிடத்தே அவர்களது வஞ்சகச்சொல்லை நம்பி பன்முறை நடந்து திரிந்ததனுலுண்டாகிய காலிற் புண்ணும், அவ்வஞ்சகர்களுடைய வாயில்கள்தோறும் புகுந்து புறப்படுங்காலத்தே நிலையில் மோதியடித்த தலையிற் புண்ணும், அவர்கள் மேல் இதமாகப்பாடும்படி அழகிய சொற்களை நினைந்து நினைந்து பொறுக்குதனுலுண்டாகிய நெஞ்சிற்புண்ணும், ஆகிய இப்புண்களெல்லாம் இனிப்பரமனைப் பாடித்துதித்து அவரருளால் தீர்ந்து சுகம்பெறலாமென்றெண்ணிச் சங்கரனிடத்துச் சென்றக்கால் அவர், என் புண்களைத் தீர்த்துக் கொண்டல்லவா உன் புண்களைத் தீர்க்கவேண்டும். உன் புண்களினும் என் புண்கள் வன்புண்கள், அனேகமுமாகும். பாண்டியன் பிரம்படியாற் பட்டபுண் இதோ முதுகு நிமிரப்படவில்லை; கண்ணப்ப நாயனர் காலால் நெற்றியில் உதைத்த புண் இதோ நெற்றியெல்லாம் வீங்கிப் போய்விட்டது; பாண்டவர்களில் ஒருவனுகிய அருச்சுனன் என்மேல் கோபித்து வில்லாலோங்கியடித்த புண்ணிதோ மார்பின்மேல் இன்னமும் பச்சையாயுள்ளது பார்த்துக்கொள் என்று சாக்குச் சொல்லிப் போக்கிவிட்டார். நானினி என் செய்வேன். யாவரை நாடி இப்புண்கள் தீருவேன் என்றபடி.

இவ்விராமச்சந்திரக் கவிராயர் தொண்டைவளநாட்டிலுள்ள இராசநல்லூரிலே பிறந்தவராயினும், சென்னைமா புரியைத் தமக்கு உறைவிடமாக்கி அங்கேயுள்ள வித்வசிரோமணிகளால் மெத்தப்பாராட்டி மெய்ச்சப்

பட்டவர். நாடகப் புலமையிற் சிறந்தவர். சகுந்தலை விலாசம் என்றோர் நாடகம் செய்தனர். அன்றிப் பாரத கதையின் ஒரு கூறாகிய இடும்ப வதத்தைப்பாடி பாரத விலாசம் என்று பெயரிட்டனர். இவர் சென்னை அரசாட்சி உத்யோகஸ்தரும் தமிழ் பாஷையில் நிபுணருமாகிய எல்லிஸ் துரை (Mr. Ellis) யின் அரசாட்சியை வியந்து சிலபாடல்கள் செய்தார். இவர் மேலேகூறிய பாடலன்றி இன்னம் விசித்திரமான அநேக பாடல்களைப் பாடியிருக்கின்றனர். அவற்றுள் இரண்டொன்றை இன்னமும் எடுத்துக் காட்டுவோம். இவர் தஞ்சை நகரில் குருவப்பபூபன் என்னும் ஒரு பிரபு தமக்குச் செய்த வரிசையைக் கொண்டாடிப் பின்வருமாறு பாடுகின்றனர்.

14. "எதிலே வறியார்க்கும் இனியகவிப்புலவருக்கும்
இரங்கி யந்தப்
போதிலே தனம்கொடுக்கும் தஞ்சை நகர்
குருவப்பபூப னெற்குக்
கோதிலே கிடந்துழலும் பலரிடத்திற்
சென்ற தமிழ்கூறுவண்ணம்
காதிலே ஒட்டிட்டுத் தாடையின் மோதக்
கடுக்கன் தானிட்டானே."

எளியவர்களுக்கும் இனிய கவிப் புலவர்களுக்கும் அவர் தம்மையடுத்துக் கேட்ட தட்சணமே தனத்தைக் கொடுத்துதவும் தாதாவாகிய தஞ்சை நகரில் மேவிய குருவப்பபூபனென்னும் பிரபுவானவர் கெட்ட நடக்கையையுடைய ஜனர்கள் பலரையும் அடுத்து அவர்களைப் புகழ்ந்து பாடா வண்ணம், அவர்களை ஒருவேளை பாடின் அதற்குத் தண்டித்தல்போலத் தாடையில் மோதி யடிக்கும்படிக் காதில் ஒட்டிட்டுக் கடுக்கனும் இட்டனர் என்று சமத்காரமாகப் பாடினர்.

15. "வஞ்சகத்தி லொன்றானைத் துதிக்கை மிகத்
திரண்டானை வணங்காருள்ளே
அஞ்சானை மூன்றானை மறைபொழி
நால்வாயானை யைந்தனைத்
துஞ்சவுணர்க் கஞ்சானைச் சென்னியணி
யாறானைத் துகளெழானைச்
செஞ்சொன் மறைக் கெட்டானைப்
பரங்கிரி வாழ்கற்பகத்தைச் சிந்தை செய்
வாம்."

இப்பாடலில் ஒன்று முதல் எட்டு வரையில் உள்ள எண்கள் தொடர்ந்து வரும்படித் தொடுத்தனர்.

வஞ்சகம் என்பது சிறிதும் இல்லாதவரை, திரண்ட துதிக்கையை யுடையவரை, தம்மை வணங்காத தீயவர்களது வன்னெஞ்சத்தே தமது அழகிய திருவடிகளை யூன்றுதவரை, வேதங்களைப் பொழிகின்ற தொங்குகின்ற வாயுடையவரை, அசுரர்களுக்கு அஞ்சாதவரை, திருமுடியில் கங்காநதியைத் தரித்தவரை, குற்றமற்றவரை, வேதங்களாலும் அறியப்படாதவரை, திருப்பரங்கிரி என்னு க்ஷேத்திரத்தில் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் கற்பகம்போல அடியார்க்கு அளிப்பவராகிய விநாயகக் கடவுளைத்தியானிப்போம் என்றபடி. யானை முகத்தை யுடையாதலின் நால் என்றார். துஞ்சவுணர்-தூக்கம் சோம்பல் முதலிய துர்க்குணங்களையுடைய அவுணர் என்றும். அல்லது; தம் மாற்றலுக் காற்றாது தம் கைப்படையால் உயிர் துறந்தவர் என்றும் ஆம்.

இவ்வாறே காளமேகப் புலவரும் முக்கால், அரை, கால், அரைக்கால், இருமா, மாகாணி, ஒருமா, கீழரை என்னும் பின்னபேதங்கள் வரும்படித் தொடுத்திருக்கின்றனர். அப்பாடல் பின்வருமாறு:—

16. "முக்காலுக்கேகாமுன் முன்னரையில்வீழாமுன்
அக்காலரைக் கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது."

இதன் பொருளாவது, தடியூன்றிப் பிருங்கிரிஷிபோல் மூன்றுகாலால் நடவாததற்குமுன், மயிர் நரையாததற்கு முன், யமனைக் கண்டு உயிர்நடுங்காததற்குமுன், விக்கலெழ இருமாததற்குமுன், பெரியமசான பூமிக்குப் போகாததற்குமுன், கச்சிப்பதியில் ஒரு மாமரத்தின் கீழ் எழுந்தருளி யிருக்கின்றவரை இளமைப் பருவமுள்ள இப்பொழுதே ஸ்துதி செய் என்றபடி,



17. "வீமனுக்கு மைந்தனார் வேதனாகும்
வேதனுக்கு மைந்தனா ரீசனாகும்,
காமனுக்கு மைந்தனார் வீமன் தம்பி
கந்தனுக்கு மாமனா காமன் தானே,
மாமனுக்கு முன்தமயன் தந்தை காலன்
வையகத்தி லிம்முறைமை வழங்கலாலே
ராமனுக்குச் சீதைதங்கையாக வேண்டும்
ராவணனுக்குத் தகப்பன் ராமன்தானே."

இப்பாட்டில் வீமன் என்பதற்குக் கருடனுக்கு இறைவனாகிய திருமாலென்றும், (வீ= பறவை, கருடன்; மன்=இறைவன்) வேதனுக்கு என்பதற்கு மூங்கிலுக்கு என்றும், (வே=மூங்கில் திருநெல்வேலியில் சிவன் மூங்கிலில் தோன்றினாரென்பது புராணம்.) காமன் என்பதற்குக் கற்பகத்துக்குத் தலைவனாகிய இந்திரனென்றும், மாமன் என்பதற்குக் குதிரைக் கிறைவனாகிய நகுலன் என்றும், இராமன் என்பதற்கு இரவுக்கரசனாகிய சந்திரனென்றும், இராவணன் என்பதற்கு இருளநிறமுடைய மன்மதன் என்றும் பொருள் கொள்ளல்வேண்டும். வீமன் தம்பி என்றது அருச்சுனனை; மாமனுக்கு முன் தமயனென்றது தருமனை. சந்திரனும் இலக்குமியும் திருப்பாற்கடலில் பிறந்தவர்களாதலின் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாகக் கருதப்படுவர். மன்மதன் திருமாலுக்கு மைந்தனாதலின் அத்திருமாலின் அவதாரமாகிய ராமனையும் தந்தையாகக் கூறினர்.

இன்னம் இவ்வித்துவான்களின் சமத்காரங்களையும் யுக்திகளையும் விளக்குவதற்கு எவ்வளவோ பாடல்களுள்ளன. அவற்றை இன்னொரு சமயத்தில் சமயம் வாய்க்கின் விவரிப்போம்.

## SOME CURIOUS WAYS OF KILLING WILD ANIMALS.

## கொடிய பிராணிகளைப் பிடித்துக் கொல்லும் சில விநோதமான வழிகள்.

1. ஆப்பிரிக்கா தேசத்தவர் முதலைகளைக் கொல்லுவதற்குப் பின்வரும் உபாயத்தைச் செய்வார்கள். கற்சுண்ணாம்பைவேண்டிய அளவு எடுத்து அதை ஒரு, மீன் வயிற்றிலோ நாய் வயிற்றிலோ வைத்துத் தைத்து ஆறுகளில் முதலைகள் மிகுதியாகச் சஞ்சரிக்கும் இடங்களில் ஒரு கயிற்றிற் கட்டி நீரோட்டத்தில் அடித்துக்கொண்டு போகாமல் மிதக்க விடுவார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் இரை தேடித்திரியும் முதலைராஜன் ஓடிவந்து ஆவலோடு கவ்வி விழுங்கும். வயிற்றிற் சென்று ஜீரணமானதும் உள்ளிருக்கும் சுண்ணாம்பு நெருப்புப் பற்றினதுபோல் குடலிற் பற்றிக் கொளுத்த ஆரம்பிக்கும். அப்பொழுது முதலை தாபம் தணியும்படி ஏராளமாக நீரைக் குடிக்கும். இதனால் தாபமும் எரிச்சலும் எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றினதுபோல் முன்னிலும் பன்மடங்கதிகரிக்கும். அவ்வெரிச்சல் பொறுக்கமுடியாமல் ஓடி உழன்று அவஸ்தைப்பட்டு சிறிதுநேரத்துக்கெல்லாம் பிராணனைவிடும்.

2. மலேபா தேசத்தார் சுறுமீனென்னுங் கொடிய கடல்மீனை இதுபோலவே கொல்லுவார்கள். இவர்கள் சுண்ணாம்பை வைத்துப் பொதிவதற்குப் பதிலாக நான்கடி நீளமும் ஒரு அங்குலம் அகலமும் உள்ள பச்சை மூங்கிற் சிம்பை இருதலையும் கத்திமுனைபோல் கூர்மையாகச்செதுக்கி ஓலைச்சுருள்போலச் சுருட்டி முதலில் ஒரு மீன்தோலில் வைத்துத் தைத்து பின்பு ஒரு நாயின் குடலுள் செலுத்திச் சமுத்திரத்தில் எறிந்துவிடுவார்கள். அச்சூதை அறியாத சுறுமீன் நமக்குவாய்க்கினிய நல்ல உணவு அகப்பட்டதென்று கருதி அதை ஆவலோடு கவ்வித் தன் பிலம்போன்ற வாயிலிட்டு விழுங்கிவிடும், இரண்டு மூன்று நாளைக்

கெல்லாம் நாயுடலும் மீன் தோலும் வயிற்றில் ஜீரணமானவுடன் அம்மூங்கிற் சிம்பு அதிவேகமாகச் சுருள் விரிந்து அதன் வயிற்றில் இருபுறமும் குத்திக்கொண்டு உபத்திரவம்பண்ணிக் கடைசியில் அம்மீனைக் கொன்றுவிடும். இந்தச் சொற்பக் கருவியினாலே இக்கொடிய மீன்களை வருஷாவருஷம் ஆயிரக்கணக்காகக் கொன்றுவிடுவார்கள்.

3. வங்காளத்தில் வேடர்கள் புலியைப் பிடித்துக் கொல்வதற்கு ஒரு நல்ல யுக்திசெய்வதுண்டு. காட்டில் புலிகள் சஞ்சரிக்குமிடத்தில் ஒரு மாமிசத்துண்டத்தை ஒரு மரக்கிளையிலிருந்து பூமிக்குமேல் பத்துப் பன்னிரண்டு அடி உயரத்தில் தொங்கும்படி கட்டிவைத்துப் பின்பு அதின்கீழ் ஆலிலைபோல் அகன்ற இலைகளில் பட்சிகளைப்பிடிக்க உபயோகிக்கும் பிசினைத்தடவி தரைநெடுகப் பரத்திவைப்பார்கள். புலி அங்கு திரிகையில் அவ்விறைச்சியின் மணத்தைத்தெரிந்து ஆவலோடு ஓடிவந்து அதை எட்டிப் பிடிக்கத்தாவும். என்ன தாவினால்தான் என்ன அதற்கு எட்ட முடியாத உயரத்தில் கட்டி இருத்தலாலே அதைப் பற்ற முடியாது. இதற்குள்ளே இதன் உள்ளங்கால்களெல்லாம் இந்தப் பிசின் தடவின இலைகள் ஒட்டிக்கொள்ளக் கண்டு ஏதோவென்று கலங்கி அதை நீக்கிக்கொள்ளுவதற்காக முகத்தால் தேய்த்துக்கொள்ள அவ்விலைகள் காலைவிட்டு முகத்தில் ஒட்டிக்கொள்ளும். இதனால் முன்னிலும் புலி திகிற்பட்டு அவ்விலைகளை நீக்கிக்கொள்ள ஆத்திரப்பட்டுக் கீழும் மேலுமாகப் புரண்டு தத்தளிக்க இலைகள் மேன்மேலும் உடலெங்கும் கனமாய் ஒட்டிக்கொள்வதன்றிக் கண்ணிலும் வாயிலும் மூக்கிலும் கொடிய பிசின் புகுந்து வாதை செய்யத் தலைப்படும். இதனால் புலி ஒன்றுந் தோன்றாமல் கலங்கிச் சோர்ந்திருக்க அத்தருணத்தில் பதுங்கியிருக்கும் வேடர்கள் அதை நெருங்கிச் சுலபத்தில் கொன்றுவிடுவார்கள். புலியை உயிரோடு பிடிக்கவேண்டியிருந்தால் இவர்கள் செய்யும் உபாயம் வேறொன்றுண்டு. புலிக்கூடொன்றைச் சில சாதுரியமான ஏற்பாடுகளால் மாட்டுப்பட்டிபோல தோன்றச் செய்து காட்டில் புலிகள்வரும் மார்க்கத்தில் வைத்திருப்பார்கள். புலி அதைக்கண்டதும் ஓடிவந்து உள்ளே நமக்கு இரையாகும் நல்ல பசுவொன்று உள்ளதென்று எண்ணி அதனுள் ஆவலோடு புகுந்துவிடும். உட்புகுந்ததோ இல்லையோ மாட்டுப்பட்டியாகத் தோற்றினது புலிக்கூடாய் மாறிவிடும். உடனே அங்கு பதுங்கி இருந்து பார்த்திருக்கும் வேடர்கள் மூங்கிற் சிம்புகளையும் பிரம்புகளையும் வளைத்து மேலே கயிற்றுப்பாயிட்டுத் தைத்த பன்னிரண்டடி நீளமும் பதினெட்டு அங்குலம் உள்ளகலமும் உள்ள குழாய்போன்ற கூட்டை அதற்குட்செலுத்திக் கூட்டின் வாயை அடைத்துவிடுவார்கள். புலி இருட்டில் ஒன்றுந் தெரியாமல் மதிமயங்கி இருந்து சூரியோதயமானதும் வாயிலின் புறமாக வெளிச்சந்தோன்றக்கண்டு தப்பி ஓடுவதற்கு முன்னோக்கிப் பாய்ந்து அந்த வட்டக்குழாயில் அகப்பட்டுக்கொள்ளும். நொடிக்குள்ளே அதன் இருதலையும் சுருக்கிட்டு அப்புலியை அதனுள் மாட்டிக் கட்டிக்கொண்டுபோய் விடுவார்கள். இக்காரியங்கள் செய்வதற்கு எவ்வளவோ சாகஸமும் தைரியமும் வேண்டும்.

4. அமெரிக்காதேசத்து இந்திய ஜாதியார் நரி காடி ஓநாய் முதலிய ஜந்துக்களைப் பிடிப்பதற்கு எலிப்பொறிபோன்ற ஒரு யந்திரத்தை உபயோகப்படுத்துவார்கள். இவற்றில் இம்மிருகங்களின் கால்கள் அகப்பட்டுக்கொண்டு பிடிபட்டுப்போம். நரிகள் இரண்டு கால்களும் மாட்டிக்கொண்டால் தப்பிப்போக வழியில்லாமல் நிச்சயம் பிடிபடும். ஒரு கால் மட்டும் மாட்டிக்கொண்டால் அக்காலை அடியுறக்கத்திரித்துத் துண்டித்துக்கொண்டு ஓடிப்போய்விடும். ஓநாய்கள் வெகு தந்திரமாய்ப் பொறியில்வைத்த இரையைமட்டும் தின்றுவிட்டு அகப்பட்டுக்கொள்ளாமல் தட்டிவிட்டு ஓடிப்போய்விடும். ஆதலால் இவற்றைப் பிடிப்பதற்கு இரண்டு பொறி ஜோடாக வைப்பது வழக்கம். ஒருபொறியில் வைத்த இரையைத் தின்னும்போது மற்றப்பொறியில் ஒருவேளை காலைவைத்து மாட்டிக்கொள்ளக் கூடும். ஓநாய்களைக் கொல்லுவது மிகவும் கஷ்டம். அது தன்னை விடுவித்துக்கொள்ளும்படித் தன்னால் ஆனவரையில் இழுத்துப் பறித்துக்கொண்டு நிற்கும். வேடன் தன்னை நெருங்கினதும் அதிவேகமாய் அவன் மேற் பாயும் அதற்குத் தப்பிக்கொண்டு வெகு வேகமாய் வேடன் அதனைவெட்டி மாய்த்துவிடுவான்.



## EXTRACT.

### THE GREATNESS OF ELECTRICITY.

### மின்சாரத்தின் பிரபாவம்.

Contributed by a Lady to the Tamil daily.

ஒரு ஸ்திரீ நிரூபர் தமிழ் தினசரிப்பத்திரிகைக்கு மொழி பெயர்த்தனுப்பியது:—

மின்சார சக்தியினாலுண்டாகும் ஆச்சரியங்களை நன்றாய் அறிந்துகொள்வது ஸுலபமல்ல. மார்க்கோனி என்பவரின் புத்திநுட்பத்தால், நடு ஸமுத்திரத்தில் போய்க்கொண்டிருக்கும் கப்பல்களுக்கு அபாயம் ஏற்பட்டால், கம்பியில்லாத் தந்தி மூலமாய் அந்த ஸமாசாரம் மற்றக் கப்பல்களுக்குத் தெரிந்து அவைகள் அந்த ஜனங்களை அபாயத்திலிருந்து காப்பாற்றுவதைப்பற்றிக் கேட்டு நாம் ஆச்சரியப் படுகிறோம். இதே மின்சாரமானது, நம்முடைய வீட்டு வாழ்க்கையையும் கைத்தொழில்களின் வழிகளையும் சுத்தமாய் மாற்றிவிட்டதென்பதைப்பற்றி நாம் யோசிப்பதில்லை.

மின்சார சக்தியினால் அனேக தூரதேசங்களிலிருந்து அனுப்பப்படும் தந்தி ஸமாசாரங்களடங்கிய பத்திரிகையைப் படிக்கிறவன், அப்பத்திரிகையே மின்சாரத்தினால் அச்சிடப்படுகிறதென்பதை அறிவானா? மின்சாரத்தின் பிரயோஜனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இப்பொழுதிருப்பதைவிட பதின்மடங்கான ஆச்சரியங்களை அதன் மூலமாய் நாம் பார்க்கப் போகிறோமென்பதில் ஸந்தேஹமில்லை.

கைத்தொழில் சாலைகளிலும், ஆலைகளிலும் இருக்கும் யந்திரங்கள் மின்சாரத்தினால் வேலை செய்கின்றன. மின்சாரமானது, ரெயில்வண்டிகளையும், சிறு கப்பல்களையும், ஆகாய விமானங்களையும், ஓடும்படி செய்கிறது. பெரிய பட்டணங்களிலிருக்கும் கடியாரங்களுக்கு சக்தியைக் கொடுக்கிறது; நம்முடையபுஸ்தகங்களையும், பத்திரிகைகளையும் அச்சடிக்கிறது. நம்முடைய தோட்டங்கள், வீதிகள், கட்டடங்கள் முதலியவைகளுக்கு வெளிச்சங் கொடுக்கிறது. இந்த பூலோக முழுவதும், ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு டெலிபோன், தந்தி, கம்பியில்லாத் தந்தி இவைகள் மூலமாய் ஸமாசாரங்களை அனுப்புகிறது.

மேனாடுகளில் குடியானவர்கள் கூட மின்சாரம் உண்டுபண்ணும் யந்திரங்களை வைத்திருக்கிறார்கள். ஏனென்றால், மின்சார சக்தியினால் நிலங்கள் உழப்படுவது மல்லாமல் பயிர்களும் நன்றாய் விளைகின்றனவாம். எருப் போடுவதைக் காட்டிலும் நிலங்களுக்குள் மின்சாரத்தை விடுவது நிரம்பவும் மேன்மையென்று சொல்லப்படுகிறது.

மேல் கானடாவிலிருக்கும் விவசாயத் தொழில் ஸ்தலங்களில், மின்சாரத்தினால் எல்லா வேலைகளும் செய்யப்படுகின்றன. அங்கிருக்கும் கட்டடங்களும் களஞ்சியங்களும் மின்சார விளக்குகளினால் பிரகாசிக்கப்படுகின்றன; தான்யங்களையடிக்கும் யந்திரங்களும், நீர்ப் பாய்ச்சும் பம்புகளும், பால் கடையும் மத்துக்களும், எல்லாம் மின்சாரத்தினால் வேலை செய்யப்படுகின்றன. பசு மாடுகளிலிருந்து பால் கறப்பதற்குக் கூட மின்சாரத்தினால் ஓட்டப்படும் ஒரு யந்திரம் உபயோகப் படுத்தப்படுகிறது.

வீட்டு வேலைகளிலும் மின்சாரம் அனேக ஆச்சரியமான காரியங்களைச் செய்கிறது. ஒரு கம்பியைத் திருப்பினவுடன் நிரம்பவும் பிரகாசமுள்ள வெளிச்சமுண்டாவதை நாமெல்லோரும் பார்த்திருக்கிறோம். ஆனால் இந்த வெளிச்சத்தைக் கொடுக்கக்கூடிய மின்சார சக்தி, நம்முடைய வீட்டில் நடக்க வேண்டிய வேலைகளையெல்லாம் செய்யக்கூடுமென்று அனேகருக்குத் தெரியாது. சமயல், வேஷ்டி துவைத்தல், இஸ்திரி செய்தல், முதலானவைகளெல்லாம் மின்சாரத்தினால் இப்பொழுது அனேக வீடுகளில் செய்யப்பட்டு வருகின்றன.

தைப்பதற்கும், பனிக்கட்டி செய்வதற்கும், காப்பிப்பொடி செய்வதற்கும், பாத்திரங்களைக்

கழுவுவதற்கும், ஜலத்தை சுடப்பண்ணுவதற்கும், சிறிய மின்சார யந்திரங்கள் கடைகளில் விற்கப்படுகின்றன. தன்னுடைய அறையில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டே ஒரு சிமாட்டி, மின்சாரக் கணப்பினால் குளிர்காய்ந்து கொண்டு, இடத்தைவிட்டு நகராமலே, ஒரு கம்பியைத் தொட்ட மாத்திரத்திலேயே, தனக்குத் தேயிலைப்பானத்துக்கு வேண்டிய ஜலத்தைக் கொதிக்கவைக்கலாம். இன்னொரு கம்பியைத் தொட்டு, பியானோவை பாடும்படி செய்யலாம் இதே சமயத்தில் சமயலறையில், வேலைக்காரி மின்சார அடுப்பில் சாப்பாட்டைத் தயார்செய்து கொண்டிருக்கலாம். லண்டனிலிருக்கும் பெரிய ஹோட்டல்களிலெல்லாம், மின்சாரத்தினாலேயே எல்லா உண்டிகளும் சமைக்கப்படுகின்றன. இப்பொழுது நாம் எப்படி கடைக்குப் போய் ஒரு தட்டாவது, கரண்டியாவது வாங்கிக் கொண்டு வருகிறோமோ, அதேமாதிரி கூடிய சீக்கிரத்தில் நாம் வீட்டில் செய்யவேண்டிய வேலைகளுக்காக ஒரு மின்சார யந்திரமும் வாங்கி வருவோ மென்பதற்கு ஸந்தேகமில்லை.

மேலும், தச்சன், கம்மாளன் முதலியவர்கள் தங்களுடைய வேலையை தேகப் பிரயாசத்தால் செய்வதற்கு பதிலாக மின்சாரத்தினாலேயே செய்வார்கள். குழந்தைகள் கூட மின்சாரத்தினால் ஓட்டப்படும் பொம்மைகளை வைத்துக்கொண்டு இப்பொழுதுகூட விளையாடுகிறார்கள்.

தோட்டங்களிலிருக்கும் நீர்க்குழாய்கள் மின்சாரத்தினால் வேலை செய்யப்படுகின்றன. வீடுகளிலும் கடைகளிலும் மின்சாரம் ஸஹஜமாய்ப் போய்விட்டது. மின்சார சக்தியினாலேயே மோட்டார்வண்டி நிரம்பதூரம் ஓடும்படி செய்பவன் கோடீஸ்வரனாகி விடுவானென்பதற்கு ஸந்தேஹமில்லை.

தற்காலத்தில் மின்சார மோட்டார்வண்டி கொஞ்சதூரம்தான் ஓடுகின்றன. 50 மையல் போவதற்குள் அவைகளுடைய பட்டரைகளிலிருக்கும் மின்சாரம் போய் விடுகின்றது. மறுபடியும் அவைகளுக்கு மின்சாரம் ஏற்ற வேண்டியதாயிருக்கிறது. இதற்கு 12 மணியாகும். இதை யுத்தேசித்து இரண்டு பட்டரைகளைக் கொண்டுபோக வேண்டியதாயிருக்கிறது.

ஆகையால் மின்சார மோட்டார்வண்டி ஒருவனாலும் விரும்பப்படுகிறதில்லை. கொஞ்சநாள் முந்தி, ரொம்பதூரம் போகக்கூடிய பட்டரையைக் கண்டு பிடித்து விட்டதாக எடிஸன் சொன்னார். ஆனால் இது வரையில் அதைப் பற்றி நாம் ஒன்றும் கேள்விப்படவில்லை. ஆனால் கூடிய சீக்கிரத்தில் ரெயில் வண்டிகளிலும், கப்பல்களிலும், ஸ்டீம் என்ஜினுக்குப் பதிலாக மின்சார என்ஜின்கள் உபயோகிக்கப்படுமென்று, தத்வ சாஸ்திர சிகாமணிகள் சொல்லுகிறார்கள்.

---

## CHILDREN'S PAGE.

## கோபம்வந்தால் கோரம்வரும்.

---

மதுரையில் ஆவணிமூல வீதியில் சுப்பு என்னும் ஒரு பெண் இருந்தாள். அவளுக்குக் கோபம் வந்தால் அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் எதிரே வெடிக்கும். அவளுக்கு அடிக்கடி கோபம் வந்து கொண்டிருந்ததனால் கோபச்சுப்பு என்று பெயர் வைத்தார்கள். அவள் தாயார் கோபத்தைவிட்டு சாந்தமாயிருக்கும்படி அவளுக்கு பலமுறை சொல்லிக்கொண்டு வந்தாள். ஆனால் என்ன சொல்லியும் அவள் கேட்கவில்லை.

இப்படியிருக்க ஒருநாள் அவள் கொலுவின் சாமான்களை எடுத்துத் தனக்கு முன்னால் வைத்துக் கொண்டிருந்தாள். அவைகளில் மண்பொம்மை ஒன்று வெகு அழகாயிருந்தது. அதை அவளுடைய சின்னத்தம்பி ஒருவன் ஆசையோடு எடுத்தபோது கைதவறி விழுந்து உடைந்துபோய் விட்டது. இதைக் கண்டதும் அவளுக்கு அடங்காதகோபம் வந்துவிட்டது. கண்கள் சிவந்து தீப்பொறி பறந்தது. உதடு துடிக்க முகத்தில் இரத்தம் சுரந்தது. பற்களை நெறு நெறென நெறித்தாள். அப்போது அவள்முகம் பார்வைக்கு வெகு பயமாயிருந்தது.

உடனே பக்கத்தில் இருந்த அவள் தாயார் இதுதான் சமயமென்று ஒரு கண்ணாடியை எடுத்து அவள் கண்களுக்கு முன்வைத்தாள். கண்ணாடியில் கண்ட உருவம் தனக்கு மிக கோரமாகப்பட்டது. படவே அவள் கோபம் போனவழி தெரியாமல் போய்விட்டது.

தான் அதிக கோரமாகக் காணப்பட்டதை நினைத்து வெட்கப்பட்டு துணியால் தன் முகத்தை அவள் மறைத்துக்கொண்டு விட்டாள்.

அவள் தாயார் தன் மகளைப்பார்த்து, "சுப்பு, பார்த்தையா! உன்முகம் எவ்வளவு கோரமாயிருக்கிறது. இப்படியே நீ கோபிப்பாயானால் உன்முகம் எப்போதும் கோரமாகவே போய்விடும்" என்று சொன்னாள்.

அவள் தாயார்சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அவளைக் கத்தியைக்கொண்டு குத்தினாற்போலிருந்தது. அவள் தலைகுனிந்தபடி அழுதுகொண்டு "இனிமேல் நான் ஒரு பொழுதும் கோபித்துக்கொள்ளுகிறதேயில்லை. கோபம் இவ்வளவு கோரமாயிருக்குமென்று என்னக்குத்தெரியாது" என்று மகா விசனத்தோடு சொன்னாள். அதுமுதலாக எதற்கும் அவள் கோபிக்கிறதேயில்லை. அதனால் அவளுக்கு கோபச்சுப்பு என்று இருந்த பெயரும் மாறி எல்லாரும் அவளைச் சுப்பு லெட்சுமி என்று பெயர் சொல்லி அழைத்துக் கொண்டாடினார்கள்.

சுப்புலெட்சுமி எப்படி தன்கோபத்தை மாற்றினாளோ அப்படியே நாமும் நம்முடைய கெட்ட குணங்களை எல்லாம் மாற்றிக்கொள்ளப் பிராயாசைப்படவேண்டும்.

## SOME FIGURE PUZZLES

### AND STRANGE ARITHMETICAL PROBLEMS.

### சில விநோதமான தொகைகள்.

(1)

$15873 \times 7 = 11111$

$31746 \times 7 = 222222$

$47619 \times 7 = 333333$

$63492 \times 7 = 444444$

$79365 \times 7 = 555555$

$95238 \times 7 = 566666$

$126984 \times 7 = 888888$

$142857 \times 7 = 999999$

$111111 \times 7 = 777,777.$ (இது பிரத்தியக்ஷமே)

மேலே காட்டிய தொகைகளில் முதல்தொகை விசித்திரமானதேயன்றி மற்றவை அவ்வளவு விசித்திரமல்ல. இடதுபக்கத்தில் எவ்வளவுதரம் ஏற்றுகிறோமோ அதற்குத்தக்கபடி வலதுபக்கத்திலும் பெருக்கிவந்த தொகை ஏறுகிறது. முதல் பெருக்குத் தொகை முழுதும் ஒன்றென்னும் இலக்கம் (figure) பொருந்தி வருதலின் மற்ற ஈவுகளும் அவ்வாறே இரண்டு முதலிய இலக்கங்கள் தனித்தனியே முழுதும் பொருந்தி வரலாயிற்று. ஆயினும் யோசித்துப் பாராமல் முதலிற் பார்ப்பவர்களுக்கு விசித்திரமாகவே தோன்றும்.

(2)

$1 \times 9 + 2 = 11$

$22 \times 9 + 3 = 111$

$123 \times 9 + 4 = 1111$

$1234 \times 9 + 5 = 11111$

$12345 \times 9 + 6 = 111111$

$123456 \times 9 + 7 = 1111111$

$1234567 \times 9 + 8 = 11111111$

$12345678 \times 9 + 9 = 111111111$

(3)

$1 \times 8 + 1 = 9$

$12 \times 8 + 2 = 98$

$123 \times 8 + 3 = 987$

$1234 \times 8 + 4 = 9876$

$12345 + 8 + 5 = 98765$

$123456 \times 8 + 6 = 987654$

$1234567 \times 8 + 7 = 9876543$

$12345678 \times 8 + 8 = 98765432$

$123456789 \times 8 + 9 = 987654321$

(4) ஒரே இலக்கங்களாய்த் தொடர்ந்து நின்ற இரண்டு எண்களைப்பெருக்கிவந்த தொகையை அவ்விரண்டிலக்கங்களையும் பெருக்கிவந்த தொகையால்

வருக்கவரும். ஈவு 12?4...முதலியவரிசைக் கிரமமாக விருக்கும். (உ-ம்) $\frac{8888888 \times 4444444}{32}$

$=1234567654321.$

எவ்வளவு இலக்கங்களை அடுக்கிவைத்துப் பெருக்குகின்றோமோ அவ்வளவு ஏறிப் பின்பு முறையே இறங்கும். மேலேகாட்டிய உதாரணத்தில் ஒவ்வொரெண்ணிலும் எவ்வேழிலக்கம் தொடர்ந்து கீற்றலின் ஏழுவரையில் உயர்ந்து பின்பு அம்முறையே இழிகின்றது. இக்கணக்குகளில் ஒன்பது இலக்கங்களுக்கு மேற்பட அடுக்கிபெருக்கலாகாது. ஆதலின்,

$\frac{999999999 \times 888888888}{72}$

$=12345678987654321.$

(5) 9-ஆலும் 11-ஆலும் முறையே மிச்சமின்றி விபாகிக்கப்படும் எண்களைப்பெருக்கச் சுலபவகை. உதாரணமாக $54 \times 55 = 2970$. இங்கு 54-ல் 6 ஒன்பது 55-ல் 5 பதினொன்றும் இருக்கின்றன. ஆதலின் 6-யும் 5-யும் பெருக்கி ஒன்றைத்தள்ள ($6 \times 5 - 1 = 29$) 29 கிடைக்கின்றது. இது நூற்று ஸ்தானத்தில் உள்ள சங்கியைகளாகும், பத்தாவது ஸ்தான சங்கியையும் முதல் ஸ்தான சங்கியையும் 99-ல் இருந்து 29-க்கழிக்கவரும் ($99 - 29 = 70$) இன்னொருதாரணம்: $36 \times 77 =$ ($4 \times 7 - 1) = 27$ நூறுகளும் ($99 - 27) = 72$-ம் ஆகும் அதாவது 2772 ஆகும்.

(6) ஒரெண்ணை 5-ஆல் பெருக்கவேண்டுமானால் அவ்வெண்ணுக்கிறுதியில் ஒரு பூஜ்யம் சேர்த்து அதனை 2-ஆல் விபாகிக்கவரும்.

(2-ம்) $127 \times 5 = 1270 \div 2 = 635$.

இவ்வாறே ஒரெண்ணை 25-ஆல் பெருக்கவேண்டுமானால் அவ்வெண்ணுக்கு இரண்டு பூஜ்யம் சேர்த்து 4-ஆல் வகுக்கவரும்.

இவ்வாறே 125-ல் பெருக்குவதற்கு மூன்று பூஜ்யம் சேர்த்து எட்டால் பெருக்கவேண்டும்.

(7) ஒரெண்ணை 11-ஆல் பெருக்கக், கூட்டலைக் கொண்டே சுலபத்தில் முடிக்கலாம். உதாரணமாக 67583-ஐ 11-ஆல் பெருக்க, ஒவ்வொரு சங்கியைக்கும் சங்கியைக்கூட்டி முறையே எழுதிகொண்டு போகவேண்டியது. ஆகவே பூஜ்யமும் மூன்றும் மூன்று. இந்த மூன்றை ஒன்றாவது ஸ்தானத்தில் எழுதுக; மூன்றும் எட்டும் பதினொன்று: ஒன்றைப் பத்தாவது ஸ்தானத்தில் எழுதி, ஒரு பதின் ஒன்றை அடுத்த பெருக்கிவரும் ஈவுடன் கூட்டிக்கொள்க; இவ்வாறே முழுதும்செய்க.

$$\frac{67,583}{743,413}$$

(8) ஒன்பதால் பெருக்குவதற்கு தொகையுடன் ஒரு பூஜ்யம் சேர்த்து வலப்புறத்திலிருந்து முறையே பின்னின்ற எண்களை ஒவ்வொன்றாகக் கழித்துக் கொண்டுபோகவேண்டியது.

$$\frac{67,533}{608,247}$$

(9) இக்கணக்கு மிக வேடிக்கையாயிருக்கும். 12 பவுனுக்குக்கீழ் ஒரு தொகையை எடுத்துக் கொள்க. £10-18-11. என்று வைத்துக்கொள்வோம். இதனைத் தலைகீழாக எழுதுக. £11-18-10 ஆகும். பெரிய தொகையிலிருந்து சிறிய தொகையைக்கழிக்குக. 19-ஷி 11-ஆகும். இதை மறுபடித் திருப்பி எழுதிக்கொள்க. £ 11-19-ஷி, இது இரண்டையும் கூட்டுக. £ 12-18-11. என்னும் முதல் தொகையேவரும் இது £ 12-க் கீழ்ப்பட்ட எந்தத் தொகைக்கும் பொருந்தும். ½ பெனி முதலான பின்னங்களைச் சேர்க்கப்படாது.

(10) நூறுயிரம் கோடியாவது என்ன? இதனை வாயால் இலகுவாய்ச் சொல்லிவிட்டோம். எழுதுவதும் இரண்டுவார்த்தைதான். ஆனால் எண்ணிச் சொல்லமுடியுமா? புருஷாயிசுபோதாது ஒரு மினிட்டுக்கு 200 எண்ணினாலும் இத்தொகையை எண்ணிமுடித்தற்கு 9512-வருஷம் 34-நாள் 5-மணி 20-மினிட்டுவேண்டும். எண்ணுகிறவனுக்கு ஆகாரம் தூக்கம் முதலான காரியங்களுக்கு நாளொன்றுக்கு 12-மணிநேரம் விடும்பக்ஷத்தில் இத்தொகையை எண்ணிமுடித்தற்கு 19024-வருஷம் 63-நாள் 10-மணி 40-மினிட்டு வேண்டும். இராவணாசுரன் மாதிரி ஆயுளைப்பெற்றவர்க்கல்லவோ இக்காரியம் சாத்தியமாகும்.

(11) ஏதாவது ஒரு சங்கியையை எடுத்துக்கொள்ளுக. உதாரணமாக 7823-எடுத்துக்கொள்வோம். இதை தலைகீழா யெழுதுக. 3287-ஆகும்: பெரிய தொகையிலிருந்து சிறியதைக்கழிக்குக. 4536-வரும். இந்த மிச்சத்தில் ஏதாவது இலக்கத்தை அடித்துவிட்டால் மற்றவற்றைக்கூட்டிவந்த தொகையால் அது இன்னதென்று சொல்லிவிடலாம். இதில் கண்கட்டு வித்தையொன்றும் இல்லை. அதற்கு உபாயம் கூட்டிவந்த தொகைக்கு மேலே அடுத்தபடியான 9-ஆல் வகுக்கக்கூடிய தொகையிலிருந்து அதைக் கூட்டிவந்த தொகையைக் கழித்தால் அடித்துவிட்ட தொகையாம். 3-அடித்துவிடுவோம். மற்றத்தொகைகளின் மொத்தம் 15. ஆதலால் அடித்ததொகை. 18—15=3. 5-அடித்தால் கூட்டிவந்ததொகை 13. ஆதலால் அடித்ததொகை 18—13=5. இவ்வாறே மற்றவைகளும் கூட்டிவந்ததொகை 18,27,36 முதலாயின வானால் அடித்த தொகை ஒன்றிலோ பூஜ்யம் ஆகவேண்டும்; அல்லது 9 ஆகவேண்டும். இந்தக் கணக்கில் எவ்வளவு பெரிய சங்கியை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். இவ்வளவுதான் கூடும் என்கிறவரையறை இல்லை.


"TALKS TO TEACHERS AND STUDENTS."

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God that sublime belief that seeing evil I yet have faith."*

*" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

"பஞ்சவிம்சதிபாக்கியம்"] ஸத்தியம் வத—SPEAK THE TRUTH. ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 25.] பிங்களஹு புரட்டாசிமீ, 1917ஹு செப்டெம்பர்மீ. [சஞ்சிகை 6.


## Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our "terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *At one month's credit (arrears rate)* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with the Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued† in the middle of a Vol.
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

## General Notice.

i. The *terms* offered are for regular subscribers only
ii. no exception to these rules can be made or recognised;
iii. short credit allowed should not be misused;
iv. unpaid accounts are subject to "fluctuations" and overcharges;
v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor*);
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

*(By Order of the Managing Committee.)*

THE MANAGING AGENTS, "VIVEKACHINTAMANI"
*Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore*.

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.*

†Notice of discontinuance to have effect must be given in due time in writing before a New Volume begins in April and after all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say "that every effort will be made to trace them." "If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed" continues the same high authority, "I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should invariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## "TALKS TO TEACHERS AND STUDENTS."

*" We build our future thought by thought."*

" We build our future thought by thought ;
For good or bad we know it not ;
Yet so the universe is wrought.

" Thought is another name for fate ;
Choose then thy destiny and wait,
For love brings love and hate brings hate.

" Mind is the Master of the sphere ;
Be calm, be steadfast and sincere.
Fear is the only thing to fear.

" Thought like an arrow flies where sent;
Aim well, be sure of thy intent,
And make thine own environment."

—*Ella Wheeler Wilcox.*

" According as a function receives daily exercise or not, the man becomes a different kind of being in later life......*keep the faculty of effort by a little gratuitous exercise every day.*"

Nothing we ever do is in strict scientific literalness, wiped out. Could the young but realise how soon they would become walking bundles of habits, they would give more heed to their conduct while in the plastic state. We are spinning our fates, good or evil, and never to be undone. The drunken Rip Van Winkle in Jefferson's play, excuses himself for every fresh dereliction by saying " I won't count this time !" Well, he may not count it ; and a kind heaven may not count it ; but it is being counted none the less. Down among the nerve-cells and fibres the molecules are counting it, registering and storing it up to be used against him when the next temptation comes. Nothing we ever do is, in strict scientific literalness, ever wiped out. Of course this has its good side as well as its bad one. As we become permanent drunkards by so many separate drinks, so we become saints in the moral, and authorities and experts in the practical and scientific spheres, by so many separate acts and hours of work. Let no youth have no anxiety about the upshot of his education, whatever the line of it may be. If he keep faithfully busy each hour of the working day, he may safely leave the final result to itself. He can with perfect certainty count on waking up some fine morning to find himself one of the competent ones of the generation, in whatever pursuit he may have singled out. Silently between all the details of his business, the *power of judging* in all that class of matter will have built itself up within him as a possession that will never pass away. Young people should know this truth in advance. The ignorance of it has probably engendered more discouragement and faint-heartedness in youths embarking on arduous careers than all other causes put together.—" *Talks to Teachers and Students on Some of Life's Ideals* " by Professor W. JAMES.

### முக்கிய அறிக்கை.

இந்த விவேகசிந்தாமணியை வாங்கி வாசித்து வரும் உபாத்தியாயர்கள் ஒவ்வொருவரும் இப்புஸ்தகத்தை பத்திரமாகச்சேர்த்து 'பயிண்டு' செய்து வைத்துக்கொண்டு வந்தால் இதுவே ஒரு முக்கியமான நல்லறிவு புகட்டும் கல்விக் களஞ்சியமாயுதவும். அடிக்கடி பார்த்துப் படித்து மனதைத் திருத்திக்கொள்ள உபயோகப்படுவதாகும். ஆகையால் இதை வரப்பெறும் ஒவ்வொரு உபாத்தியாயரும் அதை அவர்கள் நலம்பெற உபயோகித்து வருவதற்கடையாளமாக இதைக்கொண்டு அவர்கள் பயன்பட உழைத்து வருவதைப்பற்றி அவர்களுடைய விலாஸத்திற்கண்ட நெம்பரைக் குறித்து முழுவிலாஸத்தோடும் நமக்கு எழுதித்தெருவித்து வரவேண்டும். கவர்ன்மெண்டார் விவேகசிந்தாமணி பிரதம பாடசாலைகள் எல்லாவற்றிலும் உபயோகிக்க ஏற்றமானதென்று ஒவ்வொரு ஸ்கூலுக்கும் ஒரு காபி வாங்கியனுப்ப உத்தரவு செய்திருக்கிறார்கள்.

மானேஜர், விவேகசிந்தாமணி.

Every elementary schoolmaster must have a copy of the *Vivekachintamani* for himself and his school. It is the best and most economical thing in the long run, as it infuses a spirit of inquiry and a desire to enlarge the mind by the constant presence of the volume being in his possession which he individually has to care for and preserve as school property. " When so kept they serve as a permanent and continuous volume of reference and useful knowledge for pupils and teachers. So, I would strongly recommend the supply of the Journal to be made to all the schools on the principle of one copy for each school." The teachers are requested to put themselves in communication with the Managing Agents of the *Vivekachintamani*, who will afford them every facility for each of them securing a copy. The annual subscription is Rs. 5 per volume payable in advance. (*Vide* " Terms.")

*Address* :—THE MANAGING AGENTS,
*Vivekachintamani*, 19, *Adam Street*,
*Mylapore, Madras, S.*

"No good work is ever lost." " My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-25.] " பஞ்சவிம்சதிபாக்கியம் " " Our Jubilee Year." [சஞ்சிகை-6.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

பிங்கள ஆடி புரட்டாசி. } விவேக  சிந்தாமணி { Septemper October 1917.

FIRST ESTABLISHED, 1892. OUR JUBILEE YEAR, 1917.

" பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## "TALKS TO TEACHERS AND STUDENTS."

(BY PROFESSOR W. JAMES).

### படிப்பைப் பற்றிய ஓர் பெரியவர் பிரஸ்தாபம்.

" சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்த
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக்குணம்''—ஔவையார்.

உண்மையில் படிப்பு என்பது மனம்படியப் பெறுவதற்கே பெயராம். அப்படிப்பட்ட படிப்பும் போதனையோடு பழக்க வழக்கங்களாலும் ஸகவாஸத்தாலும் அமையத் தக்கதாயிருக்கிறது. போதனை யென்பதில் கல்வி கேள்விக ளிரண்டும் அடங்கும். கற்பதும் கசடறுவதற்காகவே. கசடு என்றால் குற்றம் அல்லது தோஷம். குற்றத்தைக் களைந்து நீக்கி குணத்தை விர்த்திசெய்யவேண்டும். குற்றத்தைக் களைவதற்கும் குணத்தை விர்த்திசெய்வதற்கும் கருவி கரணங்களின் உபயோகம்வேண்டும். அவையின்றி முடியாது. கருவியென்பது மனத்தின் விகாரங்களாகிய இந்திரியங்களாம். இவற்றிற்கெல்லாம் காது (சுரோத்திரியம்) முதலாயிருப்பதால் இந்திரியங்களால் அறியப்படுவதற்கெல்லாம் 'கேள்வி' யென்கிற பொதுப்பெயர் கொடுக்கப் பெற்றிருக்கிறது. இதில் கேட்டல், ஸ்பரிசித்தல், பார்த்தல், உருசியறிதல், முகரல் அல்லது வாசனையறிதல் ஆகிய ஐந்தறியுங் கருவிகளின் தொழிலும் அடங்கும். அன்றி வாக்கு, கை, கால் முதலிய கன்மேந்திரியங்களின் தொழிலும்கூட இதில் அடங்கும் இவைகளையெல்லாம் விர்த்திசெய்ய ஒரே வழியுண்டு. அதுதான் பழக்கம். அப்படியே கரணங்கள் என்பது அந்தக்கரணம் முதலாகவுள்ள மனது, புத்தி, சித்தம், அகங்காரம் என்கிற நான்குக்கும் பொருந்தும். பின் சொன்ன நான்கு கரணங்களும் முன்சொன்ன அந்தக்கரணத்தில் ஒடுங்கி விரியும். இவையெல்லாவற்றாலும் அறிவதற்கு கல்வி யென்று பேர். தோற்றங்களெல்லாம் (ஜகத்) அகம்-புறம் என்று சொல்லும் இருவகைத்தால் விரிந்து சேர்ந்திருப்பதால் வெளிப் பிரபஞ்சமான விஷயங்களைக் கிரகிக்கவும் அப்படி கிரகித்தவற்றை உட்பிரபஞ்சமான அந்தக்கரணத்தில் பதியச்செய்யவும் வேண்டியது அவசியமாகிறது. அப்படியே உள்ளே தோற்றுவனவற்றை வெளியில் விளங்கச் செய்யவும் வேண்டும். இப்படி கருவிகரணங்களைப் பழக்கித் தேறச்செய்வதே வித்யாப்பியாசம் அல்லது படிப்பு என்று பேர்பெறும். இதற்கெல்லாம் பழக்கவழக்கமே பிரதானம்.

சித்திரம் முதலான நாகரிகத் தொழில்களெல்லாம் கைப்பழக்கத்தினுல் உண்டானதன்றி வேறல்ல.

இலக்கண இலக்கிய ஞானசம்பத்தும் (செந்தமிழும்) நாப்பழக்கத்தினுலுண்டானதன்றி வேறல்ல.

ஆதிமுதல் எத்தனையோ ஜன்மங்களில் தேடிவைத்த கல்வியும் மனப்பழக்கத்தாலுண்டானதன்றி வேறல்ல.

நித்தியப்படி நடத்தைகளும் நடைப்பழக்கத்தினாலுண்டானவையே. இவையெல்லாம் பழக்க வழக்கங்களால் (சிக்ஷை தீக்ஷைகளால்) உண்டாகத்தக்கவை யானதால் இந்த தேஹமெடுத்தபின் பிரயாசைப்பட்டுழைத்து தேஹ மனோதத்துவங்களைப் பழக்கித் தேற்றுவதால் ஒருவன் அடையலாம்.

நட்பு - உண்மைநேசம், தயை - ஜீவகாருண்யம், கொடை - ஈகைக்குணம் ஆகிய இவை மூன்றும் வாசனா விசேஷத்தால் உண்டாகத்தக்கவையாதலால் பூர்வ ஜன்மங்களில் செய்த தபஸினால் (தேஹமனோ சிக்ஷையினால்) காரண சரீரத்தில் வாசனையாகப் படியப் பெற்றுப் பிறக்கும்பொழுது அந்த வாசனையோடு பிறக்கவேண்டும். ஆகையால் இவை மூன்றும் "பிறவிக்குணம்"—நற்குலத்தில் பிறப்பதினால் உண்டாகவேண்டும்.

குழந்தைகளுக்கு வித்யாசிக்ஷை செய்வதில் அவர்களின் தேஹ மனோதர்மங்களின் நிலையறிந்து அந்நிலையிலிருந்து அவை மேல் விர்த்தி யாவதற்கு வேண்டிய வழி வகைகளைத் தேடி யுழைக்கவேண்டும். அப்பொழுது தான் கல்விபயன் தருவதாகும்.

ஹார்வார்ட் யூனிவர்ஸிடியில் மனோதத்வ சாஸ்திர நிபுணராயிருந்த ப்ரொபெஸ்ஸர் ஜேம்ஸ் அவர்கள் உபாத்திமார்களுக்கும் மாணவர்களுக்கும் உபதேச மொழியாகச் சொல்லவெழுதியுள்ள கிரந்தத்தில் ("Talks to Teachers and to Students on Some of Life's Ideals" - by Professor M. James) இதைப் பற்றி நன்றாக வற்புறுத்திக் கூறியிருக்கிறார். அவர் சொல்கிறபடி, "நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும் கல்லி லெழுத்துப்போல் நம் தேகத்தின் அணுப்பிரமாணக் கூட்டங்களில் பதியப்பெற்று, நரம்புகளின் வழியாக நம்மைப் பாதிக்க வல்லதாம்." ஒரு வார்த்தை சொன்னால் அது ஒரு எண்ணமுதிக்க ஏதுவாகிறது. அந்த எண்ணத்தை எண்ணிப் பழகினால், அது பழக்கமேலீட்டால் நம்மையன்றி நம்மிலுண்டாகி நம் தேகத்தை யாட்டுவதாயிருக்கிறது. நாம் ஸ்வயஞானமின்றிச் செய்யும் ஜீரணித்தல், சுவாஸித்தல் முதலாக, நடத்தல், படுத்தல் ஈறாகவுள்ள எல்லாச் செய்கைகளும் பல ஜன்மங்களில் அல்லது ஒரு ஜன்மத்தில் உண்டான பழக்க வாசனையால் உண்டானதன்றி வேறல்ல. வழியறிந்து முயற்சித்தால் ஸ்வாஸம் விடல், ஜீரணித்தல், ஹிருதயமடித்தல், நாடியோட்டம் முதலாக எல்லாம் நம்மிஷ்டப்படி நடக்குமாறு செய்துகொள்ளலாம். பழக்கவாசனை பலத்தால் சமயோசித சாமர்த்தியமாய் சந்தர்ப்பாசந்தர்ப்பங்களில் உத்தமமாக நடந்துகொள்ளுமியல்பே 'இயல்பு.'—இதை 'சுபாவம்' என்றும் ஒழுக்கம், நடை யென்றும் சத்குணம் என்றும் சொல்லப்படும். இப்படி அமையப்பெற்ற குணமானது கெடுபிடி சந்தர்ப்பங்களால் மாறாது. இதை வற்புறுத்தவே "சுட்டாலும் சங்கு தன்னிறம் கெடாது" "அரைக்கினும் சந்தனம் தன்மணமறாது" என்று மேலோர் எடுத்தோதியிருக்கிறார்கள். மேலோர் வறுமை வரினும் கீழோர் நடத்தையைப் பற்றார். ஏனெனில் நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணமாக அமையப் பெற்றவர்களாதலால். அப்படியே மனோவாக்குக் காயங்களை இயல்பாக அடக்கியாளும் வன்மை பெற்றோர் பிறர் செய் நிர்ப்பந்தத்துக்கு பயந்து தங்கள் நடத்தை மாறமாட்டார்கள். இதற்கு உதாரணம் குழந்தையில் பிரஹ்லாதன்: பெரியோரில் வசிஷ்டர்.



## TRUE KNOWLEDGE.

## மெய்யறிவு.

அறிவு இருவகைத்தாய்ச் சிற்றறிவு, பேரறிவு எனப் பெரியோரால் பகுத்துச் சொல்லப்படும். நலந் தீதென்னும் பேதம் பாராட்டித் தீமையைவிலக்கி நன்மையை நாடியுணரும் அறிவு சிற்றறிவாகும். நலமென்றும் தீதென்றும் பாராமல் எல்லாவற்றையும் உத்தமமாகப் பாவித்து உலகத்தில் உள்ளதெல்லாம் ஒன்றே மற்றப்படி காணப்படுந் தோற்றங்களெல்லாம் அவ்வொன்றின் விகாரமேயன்றி வேறில்லையென்று எதையும் அபேதமாய் அறியும் அறிவு பேரறிவாகும். சிற்றறிவு க்ஷணத்துக்கு க்ஷணம் மாறிக்கொண்டிருக்கும் நாமரூப சப்தமாத்திரமாயிருக்கும்; இந்த ஜகத்தில் நிலையின்றி மாறிவரும் அற்பசுகத்தைக் கொடுக்கும். இப்படிப்பட்ட அற்பசுகம் அனுபவிக்க யோக்கியமானதன்று. ஏனெனிற் சுகம் என்பதுள்ள விடத்திலெல்லாம் துக்கமுங்கூடவே மற்றொரு பக்கத்தில் மறைந்திருக்கிறது. இருபுறம்பெற்ற ஒரு காசில் ஒரு பக்கம் தலையும் ஒரு பக்கம் வாலுமாயிருப்பதுபோல், சிற்றின்பமென்று வழங்கிவரும் காசுக்குச் சுகமும் துக்கமும் இருபக்கங்களாக விருக்கின்றன. இவற்றில் ஒன்றைத்தள்ளி ஒன்றைக் கிரகிப்பது அசாத்தியம். காசின் ஒரு பக்கத்தைக் கீழேதிருப்பி மற்றொரு பக்கத்தை மேலேவைத்துப் பார்ப்பதனால் அந்தப் பக்கத்தை யெப்படித் தள்ளினதாக எண்ணுதல் முடியாதோ அப்படியே சுகம் துக்கம் என்னும் இரண்டனுள் ஒன்றைத்தள்ளி ஒன்றைக் கிரகிப்பது கூடாமையாக விருக்கிறது. தள்ளின் விரண்டையுந் தள்ளிவிடவேண்டுமே யன்றி ஒன்றை வைத்துக்கொண்டு ஒன்றைத் தள்ளுவது கூடாமை. செல்வம் சகடக்கால் போல் உருண்டுகொண்டே யிருக்கிறது உண்மைபோல், ஜகமும் சலநத்தினாலேயே உண்டாகிவளர்ந்து அழிந்துவருகிறது. ஒரு நதியிலுள்ள ஜலம் கரையிலிருந்து பார்ப்பவனுக்கு ஒரேவிதமாகத் தோற்றினாலும் அவன் கண்ணுக்குப்படும் ஜலத்துளிகள் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக்கொண்டே யிருக்கின்றன. ஜல ஓட்டம் இன்றால் நதியென்கிற பெயர் அதற்குப்பொருந்தாது. நதியாக ஓடுகிற ஜலம் சமுத்திரத்திற்போய்க் கலந்தபிறகு நதியென்கிற நாமரூபமழிந்து சமுத்திரத்தோடு சமுத்திரமாகக் கலந்துபோவதுபோல, இந்த ஜகமும் நதியைப்போல் ஓயாது சலித்து ஓடிக்கொண்டுபோய் முடிவில் ஸத்தியமாகிற சமுத்திரத்திற்கலந்து அசைவற்று அகண்டைக ஐக்கியமாகி என்று மழியா ஆநந்தஸ்வரூபமாகப் பிரகாசித்து விளங்குகிறது. இந்த ஜகமாகிய நதிக்கு மனிதனாகிய ஜீவன் சங்கமுகம் (சமுத்திரத்திற் கலக்கும் பாகம்) ஆகிறான். நதியும் சமுத்திரமும் ஒன்றாய்க்கலப்பது ஜீவேசுவர ஐக்கியமென்னும் முக்தி அல்லது மோக்ஷநிலையாம். நதிகள் சமுத்திரத்திற் கலக்குமிடம் விசேஷமெனக் கருதி, ஜனங்கள் லக்ஷம் கோடிக்கணக்காய் அங்கு சென்று ஸ்நானம் செய்வது இந்த எண்ணத்தைக்கொண்டேயாம். நதி சமுத்திரத்தில்விழுந்து கலந்து ஒன்றாகி என்று மழியாத பூரண நிலையடைவதுபோல், ஜீவன்தானும் பரப்ரம்மம் அல்லது பரமபிதாவாகிய மூலப்பொருளோடு ஐக்கியமாய் மோக்ஷசாம்ராஜ்யத்தை யடையவேண்டுமென்று நினைத்து, அந்நினைவு உறுதிப்பட்டுத் தடித்துப் பலனை யளிக்கும்பொருட்டுச் சங்கமுகஸ்நானம் செய்கிறான். உள்ளதெல்லாமொடுங்க ஐந்து லக்ஷணங்களில் இருப்பதையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அஸ்தி பாதி பிரியம் நாம ரூபஞ்சேத் யம்ச பஞ்சகம்
ஆத்யத்ரயம் பிரம்மரூபம் ஜகத்ரூபம் ததோத்வயம்.

சத், சித், ஆனந்தம், நாமம், ரூபம் இந்த ஐந்தில் எல்லா மடங்கிவிட்டது. சத், சித், ஆனந்தம் இம்மூன்றும் கடவுளின் ஸ்வரூபம், அதாவது ஸத்திய நித்திய சாசுவதப் பொருளாயிருப்பது. சத் என்பது இருத்தல், அதாவது, அசைவற்று அழியாதிருத்தல்; சித் என்றால் அறிவு, அதாவது, அழியாது மாறாது எல்

லாம் தன்னிலடங்கிய பூர்ணஞானம் அல்லது பேரறிவாம். ஆனந்தம் என்பது அனுபவ ஸ்வபாவமாம். அதாவது அழிவற்றதாய் என்றும் மாறாததாயிருக்கும் சுகனமான தன்மையாம். சுகம் துக்கமென்கிற பேதமற்று அகண்டைக ஆனந்தமாயிருத்தலே இந்நிலையான சுகமாம். இதைத்தான் பேரின்பம் என்று சொல்வார்கள். இப்படியின்றி, காமரூபத்தோடு கூடியிருப்பதெல்லாம் ஜடமாம். இது நிலையற்றது, அழிவுள்ளது. சலனமே ஸ்வபாவமாக வுடையது. இந்த ஜகத்தை யண்டமாகவெடுத்துச் சொன்னால், மனிதனைப் பிண்டமாக எடுத்துச் சொல்வார்கள். அண்டத்திலுள்ளதெல்லாம் பிண்டத்திலடக்கமாம். பிண்டத்திலுள்ளதே அண்டத்தில் விரிவாம். அண்டத்தில் சதா சலித்துக்கொண்டிருக்கும் வஸ்து ஆகாசமாம். பிண்டத்தில் சாதசலித்துக்கொண்டிருப்பது மனமாம். மனமும் மாருதமும் (காற்றும்) ஒன்றாம். எனின், மனம் சலனஸ்வபாவமுள்ளதென்றருத்தமாம். சலனமற்றால் மனமும் அற்றது. மனத்தின் சலனமாவது நினைவாகும். நினைவற்றவிடத்து, அஃதாவது, மனம் அசைவற்று நின்றவிடத்து மனிதன் அகண்டாகார ஸ்வரூபியாகிறான். அதாவது ஏகமாய் ஸர்வாந்தர்யாமியாயிருக்கும் பரம்பொருளோடு ஐக்கியமாகி சமுத்திரத்தைச்சேர்ந்த நதிபோல அப்பரம்பொருளே யாகிறான். இந்தப் பதவியடைவதுதான் முக்தியென்றும், மோக்ஷமென்றும் சொல்லப்படுகிறது. யேசு கிறிஸ்து தான் பரமபிதாவோடு ஐக்கியமாகி அவரோடு ஒன்றுப்படுவதாகச் சொன்னதும் இதுவேயாம். இந்த ஜகத்தில் ஒருவனுக்குச் சாத்தியமானது எல்லாருக்கும் ஸாத்தியமாகக் கூடியதே. ஆனால் கோடானுகோடி ஜனங்கள் ஏன் சாத்தியப்படாமல் அஜ்ஞானிகளாய் அவஸ்தைப்படுகிறார்களென்றால், சாதன சதுஷ்டய சம்பத்தியில்லாமையாலென்க. சாதன சதுஷ்டயம் கைகூடிவருவதைத்தான் ஞானோதயமென்றும், பரிபக்குவமென்றும், கிறிஸ்து உதயமாதலென்றும் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். தேடும் முறையறிந்து தேடினால் தேடும்பொருள் தானேவந்தமைகிறதென்பது மஹான்கள் எல்லாரும் எந்த ஜாதி மதத்தவராயினும் தங்கள் ஸ்வானுபவத்திலிருந்து கண்டு உலகுய்யப் போதித்திருக்கிறார்கள். இதை யனுபவசித்தமா யுணர்ந்தறிய வழியறியாத வம்பர்கள் 'என் தெய்வம்' 'உன் தெய்வ'மென்றும், 'எம்மதம்,' 'உம்மத'மென்றும் சொல்லி வீண்வாதம்பேசி உலகுக் குண்மையைப் போதிக்கவந்த பெரியோர்களின் பெயரைச் சொல்லிக்கொண்டு அவர்கள் கனவிலும் நனவிலும் செய்ய நினைத்தறியாத கொடுமைகளைச்செய்து, குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டவன் கதையாக நல்லபதவியைத் தேடுகிறோமென்று வீணாக வினையைப்பெருக்கித் தங்களுக்கே வருத்தத்தை யுண்டுபண்ணிக்கொள்கிறார்கள். ஆகையால் உண்மையுணர்தல் எல்லார்க்கும் அவசியமாம். இகம்பரம் இரண்டிற்கும் சாதகமாம். இதன் முக்கியத்தையுணர்ந்தே, பிறவிஞானியாகிய திருவள்ளுவநாயனார் "மெய்யுணர்தல்" என்பதையொரு அதிகாரமாகவைத்து 10-க்குறளடியில் அதன் தன்மையை யுணர்த்தியுள்ளார். அவர் மெய்ப்பொருள் பொய்ப்பொருள்களைப் பகுத்தறியும் 'ஆத்மாநாத்த' விவேகமே மெய்யுணர்வாகுமென்றும் அப்படி யுணரும் அறிவின்மையால் உண்டாகும் மயக்கத்தினாலே பிறவித்துன்பம் நேரிடுகிறதென்றும் சொல்லி,

"ஐயத்தினீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானநணிய துடைத்து"

மெய்ப்பொருள் பொய்ப்பொருளைப் பிரித்தறிய வுணராதுழலும் சந்தேகத்திலிருந்து நீங்கி மெய்யுணர்வில் தெளிந்தவர்க்கு இகமாகிய இந்நிலவுலகத்தைவிடப் பரமாகிய முத்தியுலகம் அடைந்ததையொக்கும்; அதாவது மிகச் சமீபமாம் என்று சொல்லியிருக்கிறார்.

"எப்பொருள் எத்தன்மைத்தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு."

எந்தப் பொருளிடத்தும் உண்மைப் பொருளை யறிவதே அறிவு என்று சொல்லியிருக்கிறார். அதாவது எந்தப்பொருள் எப்படித் தோற்றினும் அந்தத் தோற்றப் பார்வையைத் தள்ளி அதனுள் பொதிந்துகிடக்கும் உண்மைப்பொருளை அதாவது அழியாத தத்துவத்தை யறிவதே உண்மையில் அறிவு என்று சொல்லப்படும். மற்றப்படி யறியும் அறிவு போலியறிவேயாம் என்பது அவர் கருத்து. இதற்குச் சாதனம் "அவாவறுத்தல்" என்று சொல்லி யடுத்த அதிகாரத்தில் அதனை எடுத்துச்சொல்கிறார்.

அவாவறுத்தல், அதாவது ஆசையைவிடுத்தலின் முக்கியத்தையும் அவசியத்தையும் வற்புறுத்திக்கூறி, அப்படி ஆசையைவிட்டொழிப்பதனால்வரும் பயனைப் பின்வரும் குறள்களிலெடுத்துச் சொல்லுகிறார்:—

"இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங்கெடின்."

துன்பத்துக்கெல்லாங் காரணமாகிய ஆசைகெடின், மோக்ஷபலனாகிய இன்பத்தை இவ்வுடம்போடு கூடியிருக்கையிலேதொட்டு நீங்காது அனுபவிக்கலாமென்று சொல்லுகிறார்.

"ஆராவியற்கையவா நீப்பினந்நிலையே
பேராவியற்கை தரும்."

ஒருபோதும் நிரம்பாத இயற்கையையுடைய ஆசையை நீக்கினால், எப்போதும் ஒரு நிலையாகவிருக்கும் பேரானந்தம் அப்போதே சித்திக்கும் என்பது பொருள். இப்படிப்பட்ட மெய்யுணர்வாகிய அறிவையே அவர் அறிவு என்று சொல்வதன்றி மற்றப்படி பேதபுத்தியினாலுண்டாகும் அறிவையன்றென்று வற்புறுத்துமாறு "அறிவுடைமை" யென்னு மதிகாரத்தில்,

"எப்பொருள்யார் யார்வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்று சொல்லியிருக்கிறார். தோற்றத்தைத் தள்ளி உண்மையை யறிவதே மெய்யுணர்வு என்றார் முன்னர். இப்பொழுது சப்தத்தையுந் தள்ளி உண்மைப்பொருளையுணர்வதே அறிவு எனத்தகும் என்றார். முதல் 5-பாட்டுகளில் அறிவுடைமையின் இலக்ஷணம்கூறி இப்படிப்பட்ட அறிவுடையோரின் இலக்ஷணமும் பின்னர் உரைக்கின்றார்:—

"அறிவுடையார் ஆவதறிவார் அறிவிலார்
அஃதறிகல்லாதவர்."

வரக்கடவதை முன்னறிய வல்லவர் அறிவுடையாராவர். அப்படி முன்னறியமாட்டாதவர் உண்மையறிவில்லாதவராவர் என்று சொன்னார்.

"அஞ்சுவதஞ்சாமை பேதைமையஞ்சுவ
தஞ்சலறிவார் தொழில்."

அப்படிப்பட்ட அறிவுடையோர் அஞ்சத்தக்கவைகளுக்கு அஞ்சுவர்; அப்படி அஞ்சாமை பேதைமையாகுமென்றார். இதனால் அறிவுடையார் பழிபாவத்துக்கஞ்சி நடப்பரென்று சொல்லப்பட்டது. வரப்போகு மவற்றை முன்னறிந்துகொள்ளும் சக்தியுள்ள அறிவுடையார்க்குத் திடீரென்று நடுங்கும்படியான துன்பம் எப்படி வரும்? வாராதென்பதைப் பின்வரும் குறளிற் சொல்லுகிறார்:

"எதிரதாக்காக்கு மறிவினார்க்கில்லை
யதிரவருவதோர் நோய்."

வருந்துன்பங்களை முன்னறிந்துகாக்கும் விவேகமுடையவர்களுக்கு அவர் நடுங்கும்படி வரும் துன்பமில்லையென்பதாம் இஃது உண்மையேயன்றோ? ஆகையால் இப்படிப்பட்ட விவேகமுடையவர் வேறொன்றுமில்லாதவராயினும் எல்லாமுடையவரே யாவர். ஏனெனின் நோயற்றவாழ்வும் குறைவற்றசெல்வமும் எப்போதும் அவரிடத்தேயிருப்பதனால் இந்த விவேகமில்லாத மற்றவர்கள் உலகத்திலுள்ள ஸர்வசம்பத்து முடையரேயாயினும் ஒன்றுமில்லாதவருக்கு ஒப்பாவரென்பது சொல்லாமலே விளங்கும். இந்த உண்மையை விளக்கும் குறளடியே இவ்விவேகசிந்தாமணிக்கு வழிகாட்டியாகும் தீபஸ்தம்பம்போல் முதலிலிருந்து விளங்கிவருகிறது. அத்தூங்காவிளக்கின் ஒளியைக்கொண்டே யாமும் இதுகாறும் பாங்காக உழைத்துவந்தோம். உண்மையான அதன் பிரகாசத்தை இதனை வாசிப்போர்க்கு உள்ளபடி விளக்கக் கடவுள் அருள் சுரந்து பூரண கிருபை பாலித்தருள்வாரென்று நம்புகிறோம். நம்பியே இப்பத்திரிகையை நடத்திவருவதிலுற்ற இடுக்கண் யாவற்றையும் பொருள்செய்யாது "ஸத்தியமே ஜயம்" என்னும் வாக்கில் உண்மையான பூர்ண நம்பிக்கையோடு மேலுழைத்துவரத் திடனுற்றோம். இந்நற்கருமத்தில் ஆண்டவனருளால் வேண்டிய சகாயமெல்லாம் கிடைக்குமென்னுந் துணிபே எமக்குத் தைரியத்தைக்கொடுக்கிறது. காலக்கிரமத்தில் எல்லாம் ஒத்துவர இடையூறெல்லாம் அற்றுப்போமென்னும் நம்பிக்கையால் உற்சாகங்கொண்டு உழைத்துவருகிறோம். "ஓம் தத்ஸத்," "ஸத்தியமே ஜயம்."

"அறிவுடையாரெல்லா முடையாரறிவிலா
ரென்னுடையரேனுமிலர்."

## SPORTS AND PASTIMES AS AIDS TO CHILD EDUCATION.

## விளையாட்டுகளினாலுண்டாகும் வித்தியாப்பியாசத்துக் கனுகூலமான பயன்.

விஷயங்களை பயிர்துகொள்வது மட்டும் வித்தியாப்பியாசம் ஆகமாட்டாதென்றும், உண்மையில் 'வித்தியாப்பியாசம்' என்பது குழந்தைகளின் தேகமனோபாவங்களும் குணவிசேஷங்களும் குற்றமறவிர்த்தியாகும்படி செய்வதற்கே பொருந்துமென்றும் கிண்டர்கார்டனைப்பற்றி இப்பத்திரிகையில் எழுத நேர்ந்தபோது பல முறையும் எடுத்துக்கூறி வற்புறுத்தியிருக்கிறோம். கிண்டர்கார்டன் முறையின்னதென்பது ஒருவாறு நன்றாக விளங்கும்படி அனேகந்தடவைகளில் அதைப்பற்றி உபாத்தியாயர்பக்கத்தில் எழுதிவந்ததன்றி நமக்குள் சாதாரணமாக வழங்கும் பாட்டுகள், குழந்தை விளையாட்டுகள், சிறுகதைகள் முதலியவை கிண்டர்கார்டன் முறைக்கிணங்க மிக உபயோகமாக விருப்பதையும் திருஷ்டாந்த பூர்வமாகப் பலதடவைகளில் எடுத்துக் காட்டியிருக்கிறோம். குழந்தைகளுக்கு விளையாட்டுச் சொல்லிக் கொடுப்பதால் வித்தியாப்பியாசத்துக்கு என்ன அனுகூலம்? விளையாட்டுப்புத்தி வீண்புத்தி தானே!- யென்று விஷயமறியாதவர்கள் கேட்கலாம். விளையாட்டுகளினால் வித்தியாப்பியாசத்துக்கு அதிக சாதகமுண்டு என்று இந்நூதனபோதனா முறையிலுழைத்துத் தேர்ந்த ஒருவர், இப்போதனாமுறை எங்கும் பரவி விர்த்தியடைவதற்குச் சாதகமாக லண்டனில் பிரசுரிக்கப்பட்டுவரும் ஒரு மாதாந்தரப் பத்திரிகையில் எடுத்துக்காட்டியெழுதியிருக்கிறார். அவர் இது விஷயமாய் வற்புறுத்திக்காட்டியெழுதியிருக்கும் சில அம்சங்களை, தமிழ் நாட்டிலுள்ள உபாத்தியாயர்களும் பாலசிக்ஷையில் சிரத்தையெடுத்துக்கொள்ளும் பெற்றோர் மற்றோர் அனைவரும் அறிந்து கொள்ளும்படி இங்கே எடுத்தெழுதி விளங்கவைப்போம்.

விளையாட்டுகளினால் சந்தோஷமாகப் பொழுது போக்குவது ஒன்றே பலன் என்று நினைக்கக்கூடாது. சிறு குழந்தைகளுக்கு உபயோகமான கிண்டர்கார்டன் விளையாட்டுகளினால் சிறுவர்க்கும், வெளியில் சென்று விளையாடும் விளையாட்டுகளால் வாலிபர்க்கும், அவர்களுடைய தேக மனோபாவங்களும், குணவிசேஷங்களும் பயிற்சியினால் விர்த்தியடைந்து வளருகின்றன. ஒவ்வொரு விளையாட்டும் அதை விளையாடுவோர் புத்தியையாவது, மனதையாவது ஏறத்தாழ ஒருவிதத்தில் பாதிக்கின்றதென்பது திண்ணம். மனதை ஒருவழிப்படுத்தி கவனமுழுவதும் ஒன்றில் செல்லும்படி செய்ய வாய்ப்பது அற்ப சாதகமான குணமன்று; மகா விசேஷமானது. இந்த குணம் சிறுவர்க்கமையச் செய்வதற்குச் சாதகமாயிருக்கும் எதுவும் அவர்கள் வித்தியாப்பியாஸத்துக்கு அனுகூலம் செய்யும் துணைக்கருவியென்று மதிக்கப்படத்தக்கது. கிண்டர்கார்டனிலிருக்கும் சிறு குழந்தைகளுக்கு அவதானகுண முண்டாகும்படி செய்ய அவர்கள் ஏதாமொன்றில் தங்கள் மனமுழுவதையும் கொஞ்ச நேரத்துக்கேனும் செலுத்தும்படி செய்யவேண்டும். அச்சிறுகுழந்தைகள், எடுத்ததும் அக்ஷராப்பியாசம் செய்துவைக்கும் பாடத்தைக் கவனிக்கும்படி செய்வது மிகவும் கஷ்டமே. குழந்தைகள் கவனிக்கும்படி செய்ய, முதலில் உபாத்தியாயர் அவர்கள் மனதில் சிரத்தை யுண்டாகச்செய்யவேண்டும். மனதில் சிரத்தையுண்டானால் அதைப்பற்றி கவனமும் நாடிச்செல்லும். குழந்தைகள் தங்களுக்குப் பிரியமில்லாத ஒரு ரசமற்ற விஷயத்தில் கவனத்தைச் செலுத்துவதற்கு அப்பியசிக்கு முன், அவர்களுக்குப் பிரியமானதாய், அவர்கள் மனதில் சிரத்தையுண்டுபண்ணும் விஷயங்களில் கவனத்தைச் செலுத்தி அப்பியாசப்படவேண்டும். அவர்கள் மனதுக்கினிப்பைக்



கொடுத்து சிரத்தையுண்டாக்கத்தக்க விஷயங்கள் அவர்களுக்கேற்ற விளையாட்டுகளிலேயிருக்கின்றன. சிறு குழந்தைகள் கிண்டர்கார்டன் உபாத்தியாயரின் மேன்பார்வையின் கீழ் விளையாடட்டும், அல்லது அவர்கள்மட்டில் தனியாக விளையாடட்டும், விளையாட்டில் கவனம் செலுத்தவேண்டிய அவசியம் நேரிடுகிறமட்டும், சிறுகச் சிறுக அவ்வப்பியாசம் படிந்து அதற்கேற்க அவர்கள் புத்தியும் விர்த்தியடைகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. இப்படி விளையாட்டுகள் மூலமாகக் குழந்தைகளின் கவனசக்தியை விர்த்திசெய்யப் பார்ப்பது கிண்டர்கார்டன் முறையின் பிரதான ஏற்பாடுகளில் ஒன்றாகவிருக்கிறது. இப்படி இரண்டொரு வருஷம் கிண்டர்கார்டனிலிருந்த குழந்தைகள் மேல் 'ஸ்டாண்டார்டு'களில் படிக்கும்பொழுது வருத்தமானதும் விருப்பம்தராததுமான பாடங்களை மற்றப்பிள்ளைகளைவிட அதிக இலகுவாகவும், கொஞ்சம் சந்தோஷமாகவுங் கூடப் படித்துக் கிரகித்துக் கொள்கிறார்களென்று பிரத்தியக்ஷப் பிரமாணமாகக் கண்டிருக்கிறார்கள். இது குழந்தைப் பருவத்தில் கிண்டர்கார்டனிலிருக்கும் பொழுது ஏற்பட்ட கவனசக்தி அவர்களுக்கு உற்றவிடத்துதவியாகவிருந்து சாதகமளிப்பதால் உண்டாகும் அனுகூலமென்பதற்குச் சந்தேகமில்லை.

கவனம் செலுத்தும்சக்தியாகிய ஒன்றுதான் விளையாட்டுகளினால் நேரிடும்; புத்திவிர்த்தி சாதகமென்று நினைத்துவிடக்கூடாது. இதைப்போல் இன்னும் எத்தனையோ சாதகங்கள் ஏற்படுகின்றன. அவைகளையெல்லாம் விரித்துரைக்கிற் பெருகுமென்று நுட்பமாக ஒரு உதாரணமட்டு மெடுத்துக்காட்டப்பட்டது. குழந்தைகளில் 'ஒற்றையோ இரட்டையோ'? என்கிற விளையாட்டு, புதிர்போட்டுப் பிரித்தல், இன்னும் இவைபோல் ஒரு விஷயத்தை ஊகித்து ஆராய்ந்து சொல்லவேண்டிய மற்ற விளையாட்டுகள் அதிகமாய் விளையாடும் குடும்பங்களில் வளர்ந்த குழந்தைகள் புதிதாய் ஏதாவது கண்டுபிடித்துக் கற்றுக்கொள்வதில் துரித புத்தியுள்ளவர்களாகக் காட்டி வருவது அடிக்கடி பிரத்தியக்ஷானுபவமாக நேர்ந்திருக்கிறது. அவர்களிடத்து யூகபுத்தியும் விசாரணாசக்தியும் அதிக விர்த்தியடைந்திருக்கக் காணப்படுகிறது. விளையாட்டுகளில் தெரியாதவற்றை ஆராய்ந்து பார்த்து யூகித்தறிந்து சொல்லப்பழகிய இக்குழந்தைகளுக்கு பின்னால் கணிதசாஸ்திரம், நியாயசாஸ்திரம் பயில்வதற்குபயோகமான வழியில், முன்னதாகவே மிகமேலான அப்பியாசமுண்டாவதாக ஏற்படுகிறது. இந்த முன் அப்பியாசத்தால் அவர்கள் பின்னால் கணித சாஸ்திரம் நியாயசாஸ்திரம் பயிலத்தொடங்கும் பொழுது அப்பாடங்கள் அதிக இலகுவாக கிரகிக்கக் கூடியவையாகவிருக்கும். சதுரங்கவிளையாட்டினால் புத்திதீக்ஷிண்யம் அதிகமாகுமென்பது நம்மவர்களில் அனேகர் சாதாரணமாகச் சொல்லிக் கொள்வதைக் கேட்டிருக்கிறோம். இதே மாதிரி, தைரியம், முன்புத்தி, சமயோசித சாமர்த்தியம் முதலான எத்தனையோ திட்ப நுட்பமான புத்தி விசேஷங்கள் சித்திக்கும்படியான விளையாட்டுகள் பற்பல விருக்கின்றன. அங்கிலேய போர் வீரர்களிலெல்லாம் பிரதமஸ்தானம் வகித்தவராகக் கொண்டாடப்படும் உலகெங்கும் பரவிய கீர்த்திப் பிரதாபம் பெற்ற 'டியூக் ஆவ் வெல்லிங்டன்' என்னும் மகா வெற்றி வீரர், அங்கிலேயர் போர்முகத்தில் பெறும் ஜயங்களுக்கெல்லாம் மூலஸ்தானமும் மூலகாரணமுமாயிருப்பது அங்கிலேய நாட்டிலெங்குமுள்ள 'கிரிக்கெட்' பந்து விளையாடுமிடங்களேயென்று சொன்னாரென்பது உலகப் பிரசித்தமாய் வழங்கும் வசனம். அதாவது அங்கிலேயர் போர்முகத்தில் காட்டும் வெற்றி பெறுவதற்கவசியமான வீர தீர பராக்கிரம, சமயோசித சாமர்த்திய குணங்கள் அனைத்தும் கிரிக்கெட் பந்து விளையாட்டு ஆடும்பொழுது பால்யத்தில் அவர்களுக்குச்

சித்தித்த குணங்களையன்றி வேறல்லவென்பதை வற்புறுத்திக்கூற அப்படிச் சொன்னார்.

விளையாட்டுகளினால் விளையும் சன்மார்க்க விர்த்தியும் அற்பசொற்பமானதல்ல. குழந்தைகள் ஒன்றுசேர்ந்து விளையாடும்பொழுது அனேகம் மேலான சத்குண விசேஷங்கள் படிகின்றன. பிறருக்குத் துன்பமிழைக்காம லிருப்பது, தன்னயத்தைமட்டும் பாராட்டாமல் எல்லாரும் சந்தோஷமாக விருக்க வேண்டுமென்று முயற்சிப்பது, ஒருவரை யொருவர் மதித்து ஒருவர்க்கொருவர் வருத்தம் விளைக்காமல் நடந்துகொள்வது, சாந்தமாயிருத்தல், நாணயமாகவும், நியாயமாகவும் நடந்துகொள்ளுதல், நீதிவழுவக்கூடாது — கண்ணியம் குறையக்கூடாதென்கிற எண்ணமுண்டாவது, நாலுபேர்கூடி விளையாடும் விளையாட்டில் தன் கீர்த்தியை நாடாமல் தன் கக்ஷியின் கீர்த்தியை நாடி தன்னையடக்கி நடந்து கொள்வது, எல்லாருக்கும் பொதுவாய் பாரபக்ஷமின்றி நடத்தல் முதலிய எத்தனையோ சத்குணங்கள் உதித்து அவை மனதில் வேரூன்றி விர்த்தியடைவதற்கு விளையாட்டு பூமி அனுகூலமாக விருக்கிறது. அங்கே தான் சிறுவர்களுடைய நற்குண துர்க்குணங்கள் வெளியில் வர வழியேற்படுகின்றது. ஒருவன் பின்னுக்கு என்னமாயிருப்பான் என்று விளையாட்டு பூமியில் அவன் நடத்தையைப் பார்த்து நன்றாகச் சொல்லலாம். உலக வாழ்க்கையில் அடிபட்டுழலும் மனிதனுக்கு விளையாட்டு பூமியே அவன் பின்னுக்குப படவேண்டிய பாடுகளை யெல்லாம்பட்டு அனுபவம்பெற ஏற்ற மூலஅப்பியாச இடமாகிறது.

விளையாட்டுகளினால் தேகவிர்த்திக்கு அனுகூலமான பயன் விளைவது யாவரும் கண்கூடாக் கண்டு தெளிந்த விஷயமாக விருப்பதால் அதைப்பற்றி லண்டன் பத்திரிகையில் எழுதியவர் ஒன்றும் சொல்லவில்லை. ஹிந்துக்கள் அதையும் ஞாபகத்தில் வைக்கவேண்டியதாமொரு வார்த்தை சொல்லவேண்டியதாக விருப்பதால் நம்மவர்களுக்கு விளையாட்டால் விளையும் தேகாரோக்கிய அபிவிர்த்தி விஷயம் அலக்ஷியமாய் விட்டுவிடத்தக்கதல்ல வென்று மட்டும் சொல்லி இதை முடிக்கிறோம்.

## TRUE COURAGE.
## உண்மையான தைரியம்.

பெரியோர் பிடித்தகாரியத்தைக்கைவிடார். தேவர்கள் சமுத்திரத்தைக் கடைந்தபோது, இரத்தினங்களைக் கண்டதும் சந்தோஷமடையவுமில்லை, பயங்கரமான விஷம் கிடைத்ததும் பயப்படவுமில்லை. அமிருதம் அகப்படுமளவும் அவர் முயற்சி தளரவுமில்லை. இடையூறுவருமென்று எத்தொழிலிலும் ஏற்படார் அற்பர். ஓர் காரியத்தைக் கைக்கொண்டு விக்கினம் வருமளவில் பின்வாங்குவோர் அவரினும் சிறந்தவர். தலையிட்ட காரியத்தை, தடைகள் அடிக்கொன்று இருப்பினும், சலியாது சாதிப்பவர் சான்றோர். ஒரு காலத்தில் தரையில் படுத்து உறங்குவார்: ஒருகாலத்தில் மிருதுவான சயனங்களில் நித்திரைபோவார். ஒருவேளை காய் கனிகளைப் புசித்திருப்பார்; ஒருவேளை உத்தம உருசியுள்ள உணவுகள் உண்பார். ஓரிடத்தில் கந்தைகளை உடுப்பார்; ஓரிடத்தில் பட்டாடைகள் தரிப்பார். இவ்வாறு, சுகதுக்கம் பாரார் கருமமே கண்ணாயினார். அவர்களை உலகத்தார் தூஷித்தாலும் ஒன்றே. பூஷித்தாலும் ஒன்றே; சம்பத்து வந்தாலும் ஒன்றே, வாராது தன்வழி சென்றாலும் ஒன்றே, மரணம் இன்றைக்கெனினும் ஒன்றே; இனி ஓர் யுகமளவும் இல்லை யெனினும் ஒன்றே. நியாய நெறியைவிட்டு அணுவளவேனும் தவறார் தீரர்கள்.

எவர் மனத்தை மங்கையரின் கடைவிழிகள் சேதிக்கவில்லையோ, கோபமென்ற அக்கினி தபிக்கவில்லையோ, இந்திரிய சுகங்களும் ஆசையென்ற பாசங்களும் இழுக்கவில்லையோ, அவரே மூவுலகையும் வென்ற வீரர். தைரியகுணமுடையோருக்கு அவமானம் வந்தாலும், அக்குணத்தை அழிக்கச் சாத்தியமில்லை. அக்கினியைத் தலைகீழாகப் பிடித்தாலும் அதன் சுவாலை கீழ்நோக்குமா?



உயர்ந்த மலையின் முடியிலிருந்து விழுந்து பிராணனை விட்டாலும் விடலாம், கொடும் விஷமுள்ள சர்ப்பத்தின் வாயிற் கையைவைத்தாலும் வைக்கலாம், அக்கினியிற் புகினும் புகலாம், நல்லொழுக்கமொன்றை மாத்திரம் கைவிடலாகாது.

உலகில் யாவரும் கொண்டாடும் குணமுடையோனுக்கு நெருப்பும் நீராகும், கடலும் க்ஷணப்பொழுதிற் கால்வாயாகும், மேருமலையும் சிறு கல்லாகும், மிருகராசனும் உடனே மான் போல் நிற்பான், நாகமும் அணியு மாலையாகும், விஷமும் அமிருத மழையாகும்.

ஒடிந்த மரம் துளிர்ப்பதையும், குறைந்த சந்திரன் நிறைவதையும் ஆலோசித்து, தம்மினத்தார் துயரப்படும்போது, பெரியோர் தளர்ச்சிக்கு இடங்கொடார்.

ஐசுவரியத்துக்கு அழகு நற்குணம். சூரனுக்கழகு வாயடக்கம், ஞானிக்கு அழகு சாந்தம், தபசிக்கழகு கோபமின்மை, வித்தைக்கு அழகும் வணக்கமுடைமை, பிரபுவுக்கழகு பொறுமை, தருமத்துக்கழகு டம்பமின்மை, பணத்துக்கு அழகு கொடை.

இவையனைவற்றிற்கும் காரணமாயுள்ள நல்லொழுக்கமே எல்லோர்க்கும் அழகு.

---


## விளம்பரம்.

விவேகசிந்தாமணி மாதிரிக்காப்பி வேண்டியவர்கள் அணா-8 அனுப்பவேண்டும். அல்லது V. P. P. யில் அனுப்ப உத்தரவனுப்பவேண்டும். விவேகசிந்தாமணி ஒரே பதிப்புத்தான் பிரசுரமாய் வருகிறது. அதற்கு முன்பணமாய் ரொக்கம் ரூ. 5. ஒருமாதக்கடன் ரூ. 6. வால்யம் கணக்காகவே சந்தா பெறப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கமலாம்பாள் சரித்திரம் | ரூ. | 1 | 4 | 0 |
| ஷை காலிகோ கட்டடம் | ரூ. | 1 | 12 | 0 |
| நாதகீதநாமகள் சிலம்பொலி | ரூ. | 1 | 0 | 0 |
| ஷை காலிகோ கட்டடம் | ரூ. | 1 | 4 | 0 |

தபாற்கூலி பிரத்யேகம். வேண்டியவர்கள் விவேகசிந்தாமணி மானேஜருக்கு எழுதிக்கொள்ளவும்.

விலாசம்—ஏஜண்டு மானேஜர், "விவேகசிந்தாமணி"
லலிதாலயம், 19, ஆடம்தெரு,
மைலாப்பூர், சென்னை.


## METHODS OF TEACHING GEOGRAPHY TO CHILDREN.
## சிறுவர்களுக்கு பிரத்தியக்ஷரூபமாக பூமிசாஸ்திரம் போதிக்கும் முறை.

சிறு குழந்தைகளுக்குப் போதிப்பதில் எப்போதும் அவர்களுக்குத் தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றுக்கு அவர்களை இட்டுக்கொண்டு போகவேண்டும். முக்கியமாய் பூமிசாஸ்திரம் போதிக்கும் உபாத்தியாயர் இந்த விஷயத்தை மனதில் வைத்து நடக்கவேண்டும். கிண்டர் கார்டனில் குழந்தைகளுக்குப் போதிப்பதெல்லாம் விசேஷமாக அவர்கள் புலனறிவைக் கொண்டாதலால் மேலேயுள்ள ப்ரைமெரி பாடசாலையிலும் அந்த முறையை யனுசரித்தே சிறுவர்களுக்கு வாத்தியார்கள் பாடம் சொல்லவேண்டும். எந்த விஷயமும் குழந்தைகள் தாங்களே நேரில் பிரத்தியக்ஷமாகக் கண்டபின் மனதில் பதிவதுபோல் மற்றப்படி சும்மா வார்த்தைகளால் சொல்வதால் படியாது; ஆகையால் குழந்தைகளுக்கு பூமிசாஸ்திரம் போதிக்க ஆரம்பிக்கும் பொழுது எடுத்ததும் படத்தைக் காட்டி விஷயங்களைச் சொல்லாமல், அவர்கள் பள்ளியிலிருக்கும் அறை, பிறகு பள்ளிக்கூட கட்டடம், அப்புறம் பள்ளிக்கூடமிருக்கும் தெரு, அப்புறம் அந்த ஊர், இவைகளை ஒன்றன் பின் ஒன்றாகப் படமெழுதிக் காட்டச் சொல்லவேண்டும். கிண்டர்கார்டனில் பழகின குழந்தைகளுக்குக் கட்டடங்கள் நில அளவையெடுத்து ப்ளான் போடும் விஷயம் தெரியும். ஒரு அளவுகோலால் கட்டடத்தின் அகலம் நீளம் முதலிய அளவுகளை யெடுத்துக்கொண்டு படமெழுதுவதற்காகக் கட்டம்போட்டு விற்கும் கடிதத்தில் அந்த அளவுகளைக் குறுக்கி படம் எழுதச்சொல்லலாம். பிறகு சமீபத்திலுள்ள பெரிய கட்டடங்கள் கோவில்களிவைகளைப் பற்றி பாடங்கள் சொல்லலாம். இப்படியே, அவ்வூரிலுள்ள தெருக்களைப்பற்றியும், பிறகு

அந்த ஊரைப்பற்றியும், அதற்கு அருகாமையிலுள்ள ஊர்களைப் பற்றியும், கடைசியில் அந்த ஊரிலிருக்கும் தாலூக்கா, ஜில்லா இவைகளைப் பற்றியும் சொல்லிக்கொண்டு போகவேண்டும். இப்படியாக சிறுவர்களுக்கு அவர்களிருக்கும் ஊர், தெரு, அங்கேயுள்ள கோவில், குளம், கச்சேரி, சத்திரம் முதலான பொது ஸ்தலங்களெல்லாம் நன்றாகத் தெரியவந்து அவைகளில் அவர்களுக்கு ஒருவித சிரத்தையுண்டாகும். இந்த சிரத்தையுண்டாகவே அவர்களை ரயிலடி, ஓடத்துறை, முதலியவற்றிற்கு அழைத்துக் கொண்டுபோய் அங்கேயிருந்து ரயில்வண்டிகள் ஓடுவதையும், ஓடம், படகு இவை நீரின்மேல் போவதையும் காட்டி அவைகளிலும் சிரத்தை யுண்டாகச் செய்யலாம். இதற்குமேல் அவர்களை மனோபாவனையால் தூரத்திலுள்ள ஊர்கள், பட்டணங்களுக்கும், தூர தேசங்களுக்கும்கூட அழைத்துக்கொண்டு போகலாம். அவர்கள் நேரில் கண்டவைகளை யெல்லாம் படமாக எழுதிக்காட்டச் சொல்லவேண்டும். அவர்கள் தங்கள் ஊரிலுள்ள கோயில், குளம், கடை, கச்சேரி, ஆறு, கால்வாய் இவைகளையெல்லாம் நன்றாக அறிந்துகொண்டபின் அவைகளையெல்லாம் குறிப்பிட்டு ஒரு படமெழுதிக்காட்டச் சொல்லவேண்டும். இதனால் குழந்தைகளுக்குப் படத்தின் உபயோகமும், அதனால் விளங்கும் விஷயங்களும் மிக நன்றாகவும் தெளிவாகவும் மனதிற் பதியும். இப்படி முன்னதாகக் கொடுக்கும் பாடங்களில் எதையும் குழந்தைகள் தாங்களாகக் கண்டுபிடிக்கும்படி விட்டு வரவேண்டும். அவர்கள் சுயமாக அறிந்துகொள்ள முடியாத விஷயங்களைமட்டுமே வாத்தியார் சொல்லவேண்டும். கிண்டர்கார்டனில் சிறு கதைகள் சொல்லி முன்னுக்குக் கொண்டுவரப்பட்ட மனோபாவ சக்தியை அவர்கள் விடாது அப்பியசிக்கச் செய்யவேண்டும். அதற்கு வாத்தியார் குழந்தைகளுக்கு ஏற்கனவே தங்களுடைய சொந்த ஊர், ஜில்லா இவைகளைப்பற்றித் தெரிந்திருக்கும் விவரங்களைக்கொண்டு அவர்கள் காணக்கூடாத மற்ற விவரங்களை விவரணமாய்க் கூறி அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும் விவரங்களைக்கொண்டு புதிதாய்ச் சொல்லும் விவரணங்களை அவர்கள் தங்கள் மனோபாவ சக்தியால் மனதிற் பதிய வைத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும். எதையும் குழந்தைகளுக்கு வாத்தியார் தாமே சொல்லிவிடாமல் குழந்தைகள் தாமாகவே யோசித்தும், நோட்டமிட்டும், ஆராய்ந்தும் அறிந்துகொள்ளும்படி விட்டு அவர்கள் புது விஷயங்களையறிய அவைகளைக்கொண்டு இன்னும் புதுவிஷயங்களை யறிய வழிமட்டும் காட்டிக்கொடுத்து வருவது மிகவும் மேலான போதனாமுறையாம். சூரியனைப்பற்றிச் சொல்லவேண்டி யிருந்தால் எடுத்ததும் சூரியன் அப்படியிருக்கிறது இப்படியிருக்கிறது என்று சொன்னால் குழந்தைகளின் மனோபாவ சக்தி வாத்தியார் சொல்வதை எட்டிப்பிடிக்க முடியாமல் தடுமாறும். அதற்குப் பதிலாக சூரிய கடிகாரம்* ஒன்று அமைத்து பள்ளிக்கூடத்தில் வெயிலடிக்கும் ஓரிடத்தில் வைத்திருந்தால் அதில் செங்குத்தாய் நிற்கும் குச்சியின் நிழல் ஒழுங்காய் மாறுபட்டு வருவது சில குழந்தைகள் கண்ணிற்படும். அப்போது அந்த நிழல் வர வர எப்படி குறுகி, நீள்கிறது என்கிற கேள்வி பிறக்கும். அதிலிருந்து நாழி யென்னதென்றும் இராப்பகல் எப்படி யுண்டாகிறதென்றும், இராக்காலம், பகற்காலம் இவற்றின் அளவு வேறுபட்டிருப்பதும் இன்னுமனேக விஷயங்களும் சுலபமாகப் பிள்ளைக்கு மனதிற் படும்படிக்கும் அதில் அவர்களுக்கு சிரத்தை யுண்டாகும்படிக்கும் சொல்லலாம்.

மிகவும் தாழ்ந்த வகுப்புக்களில் குழந்தைகளுக்கு, தீவு, ஏரி, தீபகற்பம், ஜலசந்தி முதலானவை இன்னவென்று பிரத்தியக்ஷமாய்

* Sun-dial.



விளங்க களிமண்ணைக் கொண்டு உருப்பிடித்துக்காட்டும் வேலை செய்யச் சொல்லலாம். களிமண்ணால் உருச்செய்தவற்றை அவர்கள் படமாக எழுதிக்காட்டக் கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு அவைகளின் பேர்களைக் கருப்புப் பலகையில் எழுதிக்காட்டச் சொல்ல வேண்டும். இப்படிச் செய்தால் குழந்தைகளுக்கு பூகோள பாடம் மனக்கசப்பும் வெறுப்பு முண்டுபண்ணுவதாயின்றி அதிக இன்பந் தரும் பாடமாகு மென்பதிற் சந்தேகமில்லை. ஆதியிலிருந்து இப்படி பழக்கப்பட்ட குழந்தைகள் முன் பின்னால் படத்தை விரிக்கும் பொழுது அது வேதனையும் மனக்குழப்பமு முண்டுபண்ணுவதற்கு ஆஸ்பதமாயின்றி, பார்க்கப்பார்க்கப் புதுவிஷயங்களைப் புகட்டும் மனதிற்கினிய சித்திரப் படம்போல் விளங்கும். இப்படி எதையும் பிரத்தியக்ஷப் படுத்தி பூமிசாஸ்திரம் போதித்தால் சிறு குழந்தைகளுக்கும் அதுமிக சந்தோஷத்தைக் கொடுக்கும் பாடமாகச் செய்யப்படலாம். இப்படி பூமி சாஸ்திரம் போதிப்பதில் பலவித வித்தைகளும் ஒன்றுக்கொன்று ஒத்தாசையாக அமைந்து எல்லாம் ஒத்திருப்பது விளங்கும்.

பூகோள சாஸ்திரத்தை நாம் பலவிதமாக நோக்கலாம்.

1. ஜனசமூக சம்பந்தமாக நோக்கலாம்.
2. சரித்திர சம்பந்தமாக நோக்கலாம்.
3. சாஸ்திர சம்பந்தமாக நோக்கலாம்.

இத்தலைப்புகள் ஒவ்வொன்றின் கீழும் உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கும் விஷயத்தில் கவனிக்கவேண்டிய சில விஷயங்களை இங்கு எடுத்துரைப்போம்.

1. ஜனசமூக சம்பந்தமாய்ப் போதிப்பதில் பின்வரும் குறிப்புகளை ஞாபகத்திலிருத்துவது நலமாம்.

(i) ஒரு தேசத்தாரின் குணாகுணங்களை அத்தேசத்தின் இயற்கை விசேஷணங்கள் எவ்வாறு பாதிக்கின்றனவென்று விளங்கவெடுத்துக் கூறவேண்டும். உதாரணமாக உஷ்ணப் பிரதேசங்களில் வசிக்கும் ஜனங்கள் சீதள தேசங்களில் வசிக்கும் ஜனங்களைவிட பலக்குறைவுபட்டு மனவலிமையற்றிருக்கிறதை யெடுத்துக்காட்டி அது என்ன காரணத்தினாலென்று விளங்கச் சொல்லவேண்டும். சீதள தேசத்திலுள்ள ஜனங்கள் அதுவும் கடற்கரையோரமா யுள்ளவர்கள் அதிகப் பயிர் பச்சை யில்லாமையால் கடலில் சென்று அனேக அபாயங்களுக்குள்பட்டு மீன் பிடித்தல் முதலிய தொழில்களால் தங்கள் இரை தேட வேண்டி யிருத்தலாலும் எப்போதும் குளிர், காற்று, பனிக்கட்டி, காட்டு மிருகங்கள் இவற்றால் விளையும் கொடுமைகளைச் சகித்தும் வென்றும் உயிர் வாழவேண்டிய தவசியமாயிருப்பதாலும் அவர்கள் இக்காரணங்களால் தேகபலம், மனோவலிமை, கஷ்டங்களைத் தாங்கும் திறம் முதலிய அடைகிறார்கள். சீதள தேசங்களி லுள்ளவர்களுக்கு இயற்கையாயுண்டாகும் ஆபத்துகள் கஷ்டங்கள் உஷ்ணப் பிரதேசங்களிலுள்ளவர்களுக் கில்லாமையால் தேகபலமும் தைரியமுமின்றி அதிக உழைப்புக்கு ஆற்றாதவர்களா யிருக்கிறார்கள்.

(ii) பூமியின் இயற்கையாலும் ஜனங்களின் குணங்கள் பாதிக்கப்படுமென்றும் அது எப்படி யென்றும் காட்டவேண்டும். நீர் வளம் நிலவளமில்லாத தேசத்திலுள்ளவர்கள் புஞ்சை பூமிமையை உழுது பயிர்செய்து அது கொடுக்கும் சொற்ப பலனைக்கொண்டு ஜீவிக்கவேண்டியவர்களா யிருப்பதால் அவர்கள் அதிக உழைப்பும் ஊக்கமும் பொறுமையும் அந்நிய சகாயத்தை எதிர்பார்க்காத தீரமுமுள்ளவர்களாகிறார்கள். அப்படிக்கின்றி செழிப்பான பூமியில் வசிப்பவர்கள் அவர்களுடைய சொற்ப உழைப்பும் அவர்களுடைய தேவைக்கு மிஞ்சின பலனைக் கொடுப்பதால், ஊக்கமும் விடாமுயற்சியு மற்றவர்களாய் மனோதீர மற்று தாங்கள் தலையிடும் எந்தக் காரியத்திலும் அந்நிய சகாயத்தை யெதிர்பார்க்கும் தன்மையானர்களாகிறார்கள்.

(iii) உஷ்ணப் பிரதேசங்களில் ஜீவவர்க்கங்களும் மூலவர்க்கங்களும் பிரகாசமாய் பல வர்ணங்களோடு விளங்குகின்றதனால் அப்படிப்பட்ட தேசங்களிலுள்ள ஜனங்கள் கண்ணுக்குப் பகட்டான வர்ணங்களிலும் அலங்காரங்களிலும் பிரியமுள்ளவர்களா யிருக்கிறார்கள். சீதோஷ்ணம் சமகுணமா யிருக்கும் தேசங்களில் செடி கொடி மரங்கள் புஷ்பங்களும் பிராணிகளும் மங்கலான நிறமுள்ளவர்களா யிருப்பதால் அங்குள்ள ஜனங்களும் மங்கல் நிறமானவற்றையே அதிகமாக விரும்பி அவர்களுடைய உடை முதலியவற்றில் அவ்வித நிறத்தையே இச்சிக்கிறார்கள். உதாரணமாக இந்தியாவிலுள்ளவர்கள் பலவர்ணங்கள் பிரகாசிக்கும் உல்லாச உடைதரிக்கப் பிரியப்படுவது அவர்களைச் சுற்றியுள்ள இயற்கைக் காக்ஷிகள் பிரகாசமாய்க் கண்ணுக்குப் பகட்டாயும் மனதுக்கு உல்லாசமாயு மிருப்பதைப் பார்த்து உண்டானதென்றும், வெள்ளைக்காரர்கள் மந்தமான மங்கல்நிற உடைகள் தரிக்கப் பிரியப்படுவது அவர்கள் தேசத்தில் காணப்படும் இயற்கைக் காக்ஷிக்கு ஒத்ததாயிருக்கிற தென்றும் எடுத்துச் சொல்லவேண்டும்.

(iv) நடையுடைகளில் மட்டுமன்றி பேச்சு வார்த்தைகளிலும் அந்தந்தப் பிரதேசங்களின் சுபாவ விசேஷங்களுக்குத் தக்கபடி மாறுதல்கள் காணப்படும். கண்ணுக்குப் பகட்டாய் மனதுக்கு உற்சாகம் கொடுக்கும்படியான காக்ஷிகள் ஸ்வபாவமாய்க் காணக்கூடிய இடங்களில் ஜனங்களுடைய பேச்சு வார்த்தைகளும் அவர்களுக்குள் வழங்கும் கிரந்தங்களும் அலங்காரங்களும் வர்ணனைகளும் நிறைந்து விளங்கும். இயற்கைக் காக்ஷி சாதாரணமாகவிருக்கும் சீதோஷ்ணம் சமகுணமாயிருக்கும் தேசங்களில் ஜனங்களுடைய பேச்சு வார்த்தைகளும் அவர்கள் செய்யும் கிரந்தங்களும் வீண் அலங்காரங்கள் ஒன்றுமின்றி சுத்தமாய் விஷயமென்னவுண்டோ அதைமட்டும் வெளியிடும் சுபாவமுள்ளதாயிருக்கும். இதை கிரந்தங்கள், காவியங்களின் மாதிரியைக் கொண்டும் சாதாரண பேச்சு வார்த்தைகளில் பொறுக்கியெடுத்த சில உதாரணங்களைக் கொண்டும் விளக்கிக் காட்டலாம்.

(v) ஒவ்வொரு தேசத்துக்கும் இயல்பாய் அமைந்துள்ள விசேஷ குணங்களால் அந்தந்த தேசத்திலுள்ள ஜனங்களின் குணகுணங்கள் பாதிக்கப்படுவதன்றி, தேச அமைப்புகளின் மாதிரியால் ஒரு தேசத்தார் இதர தேசத்தோடு எவ்வளவு தூரம் கலந்து பழக நேரிட்டதென்பது ஏற்படுகிறது. ஆகையால் உலகத்தார் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகுவதற்கு ஆஸ்பதமான வழிகள் பாதைகள் இவற்றை நன்றாக அறியவேண்டும். சமுத்திரத்தில் கப்பல்போகும் மார்க்கத்திலுள்ள தேசங்களும், 'கரவன்கள்' என்னும் வியாபாரக் கூட்டத்தார் போகும் பாதைகளிலுள்ள தேசங்களும் பரதேசத்தார்களுடைய கூட்டுறவால் விசேஷ பலனடைந்து நாகரீக விர்த்தியடைய ஹேதுவாயிருக்கும். இந்த சாதகத்தோடு அத்தேசங்களுக்கு பாதகமுமுண்டு. வியாபார வழியிலிருப்பதால் அதிக ஆசையும் அதற்கேற்ற ஊக்கம் பராக்கிரமுமுள்ளவர்கள் அந்நாட்டில் தங்கள் அதிகாரம் செல்ல வேண்டி அவைகளைக் கைப்பற்றப் பார்ப்பார்கள். மலைகள் பாலைவனங்கள் தேசத்துக்குள் எதிரிகள் வராமல் பாதுகாக்க சாதகமாயிருப்பதோடு அவை இதர தேசங்களோடு போக்குவரத்துக் கிடமின்றிச் செய்கின்றன. இப்படிப்பட்ட விசேஷங்களையெல்லாம் பிள்ளைகள் அறிய எடுத்துச் சொல்லவேண்டும்.

2. சரித்திர சம்பந்தமாக நோக்குவதில் பின்வரும் அம்சங்களைக் கவனிக்கவேண்டும்.

(i) உறவாகவாவது பகையாகவாவது ஒரு தேசத்தாருக்கும் இதர தேசத்தாருக்குமுண்டான சம்பந்தங்கள். உதாரணமாக இந்தியாவிற்கும், 'க்ரீஸ்' முதலிய தேசத்தாருக்கும் ஆதியிலிருந்த வியாபார சம்பந்தம், அதனாலுண்டான பலன், மகம்மதியர்கள் படையெடுப்பினால் ஹிந்து நாகரீகம் விர்த்தியடைவது நின்று பின்னடைந்தது. பிறகு ஐரோப்பிய வியாபாரிகள் மூலமாக இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்குமுண்டான சம்பந்தம். இந்துக்கள் சமுத்திர யாத்திரை செய்வதைவிட்டு தூரதேசங்களுக்குப் போய் அந்நிய தேசத்தாரோடு கலந்துறவாடாமல் தங்கள் தேசத்திலேயே நின்றதால் அவர்களுக்குண்டான பலக்குறைவு, கெடுதி முதலியன; இவை போன்றவைகளை யெடுத்துச் சொல்லலாம். ஒரு இராஜதானியைப்பற்றிச் சொன்னால் அதற்கும் அதை யடுத்துள்ள பிரதேசங்களுக்குமுண்டான சம்பந்தங்களைப்பற்றியும் மற்ற விசேஷங்களைப்பற்றியும் அதேமாதிரி சொல்லலாம்.

(ii) உலகத்தில் நடந்த பெரிய யுத்தங்கள்; அவைகளாலுண்டான மாறுதல்கள். யுத்தமுறையில் முற்காலத்துக்கும் தற்காலத்துக்குமுள்ள வித்தியாசம் பூர்வகாலப் படத்தையும், தற்கால படத்தையும் ஒத்துக்காட்டி, அவைகளிலுண்டான பெரிய மாறுதல்களையும் தேச எல்லைகள் நமது பெற்றோர் அல்லது பாட்டனார் காலத்திலிருந்ததற்கும் அவை தற்காலமிருப்பதற்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டி ஒரு தலைமுறையிலுண்டான மாறுபாடுகள் இவ்வளவென்று எடுத்துக் காட்டவேண்டும்.

3. சாஸ்திர சம்பந்தமாக நோக்குவதில் பின்வரும் அம்சங்களைக் கவனிக்கலாம் :—

(i) சீதோஷ்ண சக்கரங்கள் பலவற்றிலும் வசிக்கும் பிராணிகளைப் பற்றிய விவரங்கள் : உதாரணமாக ஐஸ்லாண்ட் 'தீவு' அதன் பூமி விசேஷணம், அங்கே பனிக்கட்டியுறைந்திருப்பதும், அங்கே வசிக்கும் ஜனங்களின் ஜீவன வகை, அவ்விடத்திலுள்ள பிராணிகளின்பேர், குணம், மற்ற விவரங்கள் முதலியனவும் சொல்லவேண்டும். இப்படியே சீதோஷ்ணம் சமகுணமாயிருக்கும் தேசங்களில் விசேஷமாய் வசிக்கும் பிராணிகளும் அவைகளைப்பற்றிய விவரங்களும், உஷ்ண சக்கிரத்தில் விசேஷமாயுள்ள பிராணிகளின்பேர் முதலியனவும் மற்ற விவரங்களும், ஒவ்வொரு வகை தேசத்திலும் ஜனங்கள் வசிக்கும் மாதிரி முதலிய விவரங்களும் பிள்ளைகளுக்குத் தெரியும்படி செய்யவேண்டும்.

(ii) உஷ்ணம், சீதளம் இவைகளைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து, எரிமலைகள், கொதிப்புகள், பூகம்பங்கள் முதலியனவைப்பற்றியும், மலைகள், கொடுமுடிகள், ஆலாங்கட்டிக் குவியல்கள், பனிக்கட்டிகள் முதலியனவைப் பற்றியும் சொல்லிக்கொண்டு போகலாம்.

(iii) வெளிச்சம், இருட்டு என்பதைத் தொட்டுக்கொண்டு மத்தியரேகையிலிருந்து வடக்கேயாவது தெற்கேயாவது போகப்போக பகல் இரா இவற்றின் காலம் பருவகாலத்துக்குத் தக்கபடி மிக வித்தியாசப்பட்டு வரும் விதமும் அதன் காரணமும் சொல்லிக்கொண்டு போகலாம்.

(iv) சமுத்திர யாத்திரை, திசைகாட்டும் கருவி; நக்ஷத்திரங்களைப்பற்றி அந்தந்த தேசத்தில் விளங்கும் பழங்கதைகள், புராணங்கள் இவைகளைப்பற்றிச் சொல்லலாம்.

இதில் சில முக்கியமான அம்சங்களை மட்டும் எடுத்துச் சொன்னோம். பூமிசாஸ்திரம் போதிக்கும்முறை இன்னமாதிரியிருக்க வேண்டுமென்று ஒருவாறு காட்டுவதற்காகக் குறிப்பாய் மட்டும் சில அம்சங்களை யெடுத்துச் சொன்னோம். இன்னும் எத்தனையோ விஷயங்கள் போதனாசிரியர் யுக்திக்கும் புத்திக்கும் தோன்றியபடி அவர் எடுத்துச்சொல்லி விளங்க வைக்கவேண்டி வரும். உதாரணமாக ஒரு தேசத்தில் முக்கியமான கைத்தொழில்கள் என்ன, அவை எங்கே ஸ்திரமாக

ஏற்பட்டிருக்கின்றன வென்னும் விஷயம் வரும்பொழுது அந்தக் கைத்தொழில்கள் குறித்த இடத்தில் ஏன் விசேஷமாக ஓங்கி வளரவேண்டும்; அது அங்கே செழித்தோங்குவதற்குக் காரணமாயிருக்கும் சாதகங்கள் என்ன; அந்தச் சாதகங்கள் எப்படி மற்ற எல்லா விடங்களையும்விட அந்த விடத்தில் அதிகமாய் ஏற்பட்டிருக்கின்றன முதலிய விவரங்களை ஒரு திறமையுள்ள வாத்தியார் தாமே யோசித்து அவருடைய புத்தியுக்திக்குத் தக்கபடி எடுத்துச் சொல்லுவார். பூமிசாஸ்திரம் போதிப்பதில் பிள்ளைகள் படமெழுதக் கற்றுக்கொள்ள வேண்டியது முக்கியமென்று முதலிலே சொன்னோம். ஒவ்வொரு பாடமுமானபின், அந்தப் பாடத்தில் பிள்ளைகளறிந்த விஷயங்களையெல்லாம் குறிப்பிட்டு ஒரு படமெழுதச் சொல்லவேண்டும். ஒரு தேசத்தின் விளைபொருள்களைப் பற்றிப் படித்தானால் அத்தேசத்துப் படமொன்றெழுதி அதில் எந்தெந்த விளைபொருள்கள் எவ்விடத்திலுண்டாகின்றன என்பதை அப்படத்தில் குறிப்பிட்டுக் காட்டச் சொல்லவேண்டும். இப்படியே ஒவ்வொன்றுக்கும் ஒரு படமெழுதச் சொல்லவேண்டும். முதலில் பள்ளிக்கூட அறையிலிருந்து ஆரம்பித்து கொஞ்சம் கொஞ்சமாக குழந்தைகளின் எண்ணமும் நோக்கமும் விசாலமாகும்படி செய்ய யத்தனித்த கோட்பாட்டைக் கடைசி வரையில் மனதில் வைத்து, பூமிசாஸ்திரம் போதிப்பதின் பயனாக பிள்ளைகளுக்கு தேசாபிமானமும் ஜனாபிமானமுமுண்டாகி அவர்களின் மனநோக்கு வரவர விசாலமாக உலகெங்கும் பரவத் தக்கதாகச் செய்யவேண்டும்.

## THE PLANETARY AND TERRESTRIAL WORLDS COMPARATIVELY CONSIDERED.

## பூமண்டலத்தையும் கிரகங்களையும் அகில ப்ரபஞ்சத்தோடொப்பிட்டு நோக்கி ஆராய்வது.

பூமியின் மீது வசிப்பவர்களாகிய நமக்கு இப் பூகோளத்தைவிடப் பெரிதாகத் தோற்றுவ தொன்றுமில்லை. இது மற்ற அண்டங்கள் யாவினும் பெரிதாகத் தோற்றுவதுமன்றி, புல் பூண்டு செடி கொடி மரங்களால் எங்கும் ஆடைபோல மூடப்பட்டுக் கண்ணுக்கு மிக்க அலங்காரமாயுமுள்ளது. ஆயினும் வானிலுள்ள யாதேனுமோர் கிரகத்தினின்று பார்ப்பவர்களுக்கு இஃது எங்கும் ஒரேதன்மையாக வேறுபாடின்றி ஒளிமயமாகத் தோற்றுவதன்றி அளவிலும் ஒரு பொட்டளமாகவே தோன்றும். இன்னம் அதிக தூரத்தில் வசிப்பவர்களுக்கு இது முற்றிலும் கண்ணுக்குத் தெரியாமலே மறைந்துபோகும். ஒரு காலத்தில் காலையில் சூரியோதயத்துக்கு முன் கீழ்த்திசையில் உதிப்பதாயும் இன்னொரு காலத்தில் மாலைப்போதில் நக்ஷத்திரங்களுக்கெல்லாம் முன்னே மேற்றிசையிற் றோன்றுவதாயுமுள்ள சுக்கிரனென்பதும் நக்ஷத்திரமென்று சொல்லப்படினும் இப்பூமிபோலவே ஓர் கிரகமேயாகும். இச்சுக்கிரனும் சூரியனைச்சுற்றி அவ்வளவு ஆச்சரியமாக ஓடித்திரிகின்ற மற்றக் கிரகங்களும், இயற்கையில் ஒளியில்லாதனவாய் சூரியனுடைய ஒளியை ஏற்றுப் பிரகாசிப்பவைகளாம். அவற்றில் ஒவ்வொன்றிலும் தரைகளும் கடல்களும் ஆகாயமும் அவ்வவற்றிற்குரியவாகவுள்ளன. அவற்றில் ஜீவராசிகள் வாழ்தற்கேற்ற ஆகாராதிகள் அமைக்கப்பட்டிருப்பதன்றி அவை நம்மையொத்த சேதனப் பொருள்களாலும் வசிக்கப்பெற்றனவென்றெண்ணுகிறார்கள். இவை யனைத்தும் நாம் வாழ்கின்ற இந்தப் பூமண்டல முள்படப் பரம காருணிய மூர்த்தியாகிய சர்வேசுவரனுடைய



அருட்கொடைகள் யாவையும் தன் வழியே நமக்குத் தருவதாகிய சூரியனைச்சார்ந்து அச்சூரிய கிரணங்களால் தாம் தமது ஒளியைப் பெற்று உயிர்களுக்கு இனிய வாசஸ்தானமாக விளங்குகின்றன.

சூரியன் நம் கண்ணுக்கு நாடோறும் ஆகாயத்திற் சுற்றிவருதல்போலத் தோற்றினும், உண்மையில் அசைவற நிலையாக நிற்பதேயாம். அது அசையாமல் அச்சுக்கட்டைபோல நடுவில் நிற்க, நாம் வாழும் இப்பூகோளமும் இன்னம் இதிலும் பெரியவைகளான மற்றக் கோளங்களும் அதைச்சுற்றி ஓடித்திரிகின்றன. சூரியன் பார்வைக்கு ஓர் கடியாரத்தின் முகம்போல அவ்வளவு சிறிதாகத் தோற்றினும் உண்மையில் அநேக உயர்ந்த பர்வதங்களையும் அகாதமாயகன்ற கடல்களையும் தன்னிடத்துப் பெற்ற இந்தப் பூமண்டலத்திலும் பல்லாயிரம் பங்கு பெரிது. அதனூடே அதன் மையத்தின் வழியே ஒருபுறத்து நின்று மறுபுறத்துக்குச் செல்லும் ஓர் இரேகையினளவு எட்டு லக்ஷம் மைலுக்குமேலே இருக்கும். அதைச் சுற்றியோடும்படி ஓர் பந்தனம் அமைக்கப்படுமாயின் அது அநேக கோடிக் கணக்கான நீளமுடைத்தாகும். அதன் கன பரிமாணத்தை அளந்து நிர்ணயிப்பின் அத்தொகை நம்மறிவுக் கெட்டாததாவதன்றியும் வாக்கினாலும் உரைக்க முடியாது. இவ்வாறு பண்டிதர்கள் சொல்லும் விருத்தாந்தங்களைக் கேட்க நமக்குப் பெருவியப்புண்டாகாமற் போகுமா? இவற்றைக் கேட்கும்போது இவ்வளவு அவாங்மனோசரமாகி விரிந்துள்ள பெருநெருப்பை மூட்டி அவ்வக்னிச்சுவாலையை அநேக ஆயிரம் நூற்றாண்டுகளாக அணைந்துபோகாமல் எரிந்துகொண்டிருக்கும்படி அமைத்திருக்கும் அந்த ஆதிகாரண மூர்த்தியின் சக்தி எவ்வளவானதோ என்று ஆச்சரியம் உண்டாகாமற்போமா? இன்னம் இவ்விஷயமாகச் சாஸ்திரங்கள் என்ன சொல்லுகின்றன வென்று சற்றே கவனிப்போமாக.

சூரியனும் அதைச் சுற்றியோடும் கிரகங்களுமாகக்கூடி அகில புவனமாகிய இம்மகா கம்பீரமான யந்திரத்தில் ஆராயின் மிகவும் சிறியதோர்பாகமே யன்றி வேறில்லை. ஒவ்வொரு நக்ஷத்திரமும் பார்வைக்கு ஒரு மேன்மகளின் கைவிரல் மோதிரத்தில் துலங்கும் வயிரக் கல்லைவிட உருவிற் பெரிதாகத் தோன்றாவிடினும் அம்மா! உண்மையில் சூரியனைப்போலவே உருவிலும் ஒளியிலும் சிறந்த ஓர் பெரிய அண்டமாகும். அவ்வொளிப் பிழம்பாகிய கதிரவனைப் பார்க்கிலும் அது உருவிலேனும் ஒளியிலேனும் எவ்வளவாயினும் குறைந்ததன்று. ஆதலின், ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒவ்வொரு அண்டமட்டுமே யன்று; அநேக அண்டங்கள் தன்னைச்சூழ்ந்து செல்லத்தான் மத்தியில் அவற்றிற் காதாரமாய் நிற்கும் அண்டமண்டலமாகும். ஆயினும், அளவுக்கடங்காத நெடுந்தூரத்தில் நிற்றலால் அவை யொன்றும் நம் கண்ணுக்குப் புலப்படுவதேயில்லை. நக்ஷத்திரங்கள் இவ்வளவு சிறியவைகளாய் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாத புள்ளிகள்போலத் தோற்றுதற்குக் காரணம் அவற்றின் எண்ணுதற்கரிய அளவைக் கடந்த நெடுந்தூரமே யன்றி வேறல்ல. வெடிமருந் திட்டுக்கெடித்த பெருவெடிப் பீரங்கியினின்றும் வெளிப்படும் ஓர் குண்டு தன் வேகத்தில் எவ்வளவும் குறையாமல் ஒரே நிலையாகச் செல்லுமாயின் நமக்கு மிகச் சமீபமான நக்ஷத்திரத்தைப்போ யெட்டுதற்கு ஏழு லக்ஷம் வருஷம் வேண்டிவரும் ஆதலின் அந்நக்ஷத்திரங்களின் தூரம் எவ்வளவு அவாங்மனோசரமானதோ நீங்களே அறிந்துகொள்ளலாம். இத்தனை விரிவாகிய இப்பிரபஞ்சத்தின் தன்மையை ஆலோசிக்கும்போது எனது எண்ணுதற்கரிய சிறுமை வெளிப்படுதலன்றி இப்பூவுலகிலுள்ள மற்றப் பொருள்களின் அற்பமும் சிறுமையும் கூட விளங்கும். ஆகாயத்திலுள்ள அற்புதமாகிய பொருள்களோடு ஒப்பிட்டு நோக்குங்கால் இப்பூமியும் அதில் உள்ள உன்

னதமான பொருள்களும் எவ்வளவு? இப்பிரபஞ்ச கோடிகளையுள்ளடக்கிய பிரமாண்டத்தை விளக்கிக்காட்டும் ஓர் படத்தில் கண்ணுக்குத் தோன்றியும் தோன்றாமலு மிருக்கும் ஒரு புள்ளி யென்றன்றோ அதைச் சொல்லவேண்டும். பொருள்களை நிதானித்தறிய வல்ல ஓர் பண்டிதர் சொல்லுகிறபடி இவ்வுலகங்களுக்கெல்லாம் ஒளிதந்துவிளக்கும் சூரியனை முற்றிலும் அணைத்தவித்து அதைச்சுற்றிபோடுகின்ற கிரக சமூகத்தையும் நிச்சேதமாக நாசம் செய்யினும் கடற்கரையில் உள்ள மணலில் ஒரு மணி மணலை எடுத்து ஒளிப்பின் எவ்வாறு அது நீங்கிய தன்மை ஒருவர்க்கும் புலப்படாதோ அதுபோலவே இவ்வுலகங்கள் முழுதும் ஒருங்கே பார்க்கவல்ல ஒருவர் கண்ணுக்கு அவைபோன தன்மையே புலப்படமாட்டாது. அவற்றின் உருவமும் அவை அடைத்துக்கொண்டிருப்பதான ஸ்தல பரிமாணமும் அகில ப்ரபஞ்சத்தோடொப்பிட்டு நோக்குகையில் எவ்வளவோ மகா சொற்பமாதலின் அவை அழிந்துபோனதினால் அகிலகாரணராகிய கடவுளின் அளவற்ற சிருஷ்டிப் பொருள்களில் ஒன்று குறைந்து போயிற்றென்னும் தன்மையே தோன்றமாட்டாது. இவ்வாறு நாம் வாழு மிப்பூமண்டலமொன்றே யன்று, இந்த சூரியமண்டல முழுதுமே இவ்வளவு சிறிதாயின் ஒரு ராஜ்யத்தையாவது தேசத்தையாவது எவ்வளவென்று சொல்லுவது. சிற்சில சிறிய பிரபுக்களின் ஆட்சியையாவது, செல்வ வந்தரென்று வெகுவாகக் கொண்டாடப்பட்டவர்களின் ஸ்திதியையாவது என்னென்று சொல்லுவது? அவற்றை என்னுடைய அற்ப சொத்தோடு சாதிர்சியப்படுத்தின் அவை எவ்வளவோ அளவிற் பெரியவையென்றே, சொல்லவேண்டும். அப்படிக்கன்றி இந்த அகில பிரபஞ்சத்தோடுவைத்து அளந்தால் அவை எத்துணைச் சிறியவை! எவ்வளவு அற்பமானவை! அவை எவ்வளவு பகட்டுப் பகட்டினும் சுத்த சூன்யத்துக் கொப்பாகவே சுருங்கிவிடும். ஆக்ஷேபணையில்லை.

---

## SELECTIONS.

### 1. ON THE SUPERIORITY OF RICHES.

### செல்வத்தினுயர்ச்சி.

1. குணமிருந்தாலும் குலமிருந்தாலும் கொழுந் தமிழின்
மணமிருந்தாலும் மதியிருந்தாலும் வழுத்திடு*வங்
கணமிருந்தாலு மொருகாசும் பெறாது; சிங்கார அரைப்
பணமிருந்தாலவர்க் கெல்லாருமஞ்சலிபண்ணுவரே.

2. சத்துவம் புத்திவித்தை சதுர்விதார்த்தங்களான
இத்தனை விதமுஞ் செல்வமில்லையேல் இல்லையாகும்;
சத்துவம் புத்திவித்தை சதுர்விதார்த்தங்களான
இத்தனை விதமும் செல்வம் எய்திடில் எய்து மன்றே.

*வங்கணம்—உற்றநேசம், சிநேகம்.



3. கதிரவன் இலையேற் கண்ணிற் காண்பன மறையுமாபோல்
நிதிய மொன்றிலை யேல்யார்க்கும் நீதிமாஞானபோதம்
துதிபெறுகீர்த்தி ஆண்மை சூழ்ச்சி மந்திரம் விசாரம்
சதிரபிமானமெல்லாம் தன்னிலே மறைந்து போமால்.

4. சொற்ற ருகலை யெலாம் தொடர்ந்து பற்பகல்
கற்றவராயினும் கழி நிரப்பினால்
அற்றவர் ஆவரேல் ஆக்கம் வேண்டியே
பற்றலர் தம்மையும் பணிந்து நிற்பரால்.

5. நூலுறுகல்வியை நுனித்து நாடியே
வாலறிவெய்திய வரத்தினோர்களும்
மேலுறு திருவொடுமேவுறார் எனில்
ஞாலமங்கவர்தமை நகையுள்வைக்குமால்.

6. கல்லானே ஆனாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர் கொள்வர் இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாதவன் வாயிற்சொல்.

7. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

8. பொருளென்னும் பொய்யாவிளக்கம் இருளறுக்கும்
எண்ணியதேயத்துச் சென்று.

9. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற்கூரியதில்.

10. நிந்தையோர் சிறிதென்னினும் நேர்ந்தது,
கந்தை யூடதைக் காணுறக் காட்டுமால்
அந்தமான அணிமணியாடைதான்
வந்தவாயிழி வியாவுமறைக்குமே.

## THE STORY OF VARAGUNA PANDYA. THE TRADITIONAL SANCTITY OF MADHIARJUNAM.*

## வரகுணபாண்டியர் சரித்திரம்.

### மத்தியார்ச்சுன* மான்மியம்.

பத்தியாவது ஈசனிடத்துத் தியான பூசனாதிகளாலே இடையறாதே செலுத்தும் அன்பாம். அவ்வன்பானது தாய் தன் சிசுவினிடத்து வைத்த நேயத்தையும் கற்புடை மகளிர் தமது உயிர்த்துணைவரிடத்து வைத்த காதலையும் ஈன்ற தாய்ப் பசு தன் இளங்கன்றினிடத்து வைத்த ஆவலையும் ஒக்குமென்பர். இவ்வன்பைச் செலுத்துமிடத்து, உள்ளமுருகிக் கரைந்தோட நம்பரமபிதாவாகிய கடவுள் நமக்குப் புரிந்தருளியிருக்கும் எண்ணிறந்த நன்றிகளையுணர்ந்து, அவரது ஆணைக்குட்பட்டு, அவரை உகப்பித்து அவரது அருளைப்பெறுமாறு செலுத்தல்வேண்டும். என்னை! அனாதியாக ஆணவ மலத்தழுந்தி அசேதனம்போலச் செயலற்று இருளில் மூழ்கி எதற்கும் பயனின்றிக் கிடந்த நம்மை எடுத்துத் தனுகரண புவன போகங்களைக் கொடுத்தருளிச் சிற்றறிவுறுத்தி இருவினைப் பயன்களை யுண்பித்து இருவினை யொப்பும் மலபரிபாகமும் எய்திய காலத்து அருட்குருவாகத் தோன்றி ஆன்மஸ்வரூபத்தையுணர்த்திப் பாசமுத்தியும் சிவத்வாபி வியக்தியுமுண்டு பண்ணித் தனக்குச் சமனாகச் செய்யும் இப்பேருதவியை உள்ளபடி உணர்பவர்களுக்கு இவ்வன்பு எங்ஙனம் வாராமற் போகும்? ஒவ்வொரு மதஸ்தரும் ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு பாஷையிலும் ஒவ்வொரு கோடியாக உரைப்பதும் இதுவேயாகும். தேவாரம், திருவாசகம், சிவானந்தலகரி முதலிய திருவருட்பாக்கள் முழுதும் இவ்வன்பையே சிறப்பிக்கும். ஆசாரிய சுவாமிகள் இவ்வன்பின் தன்மையை யெவ்வாறு எடுத்து விளக்குகின்றனர் பாருங்கள்.

"அங்கோலந்தனை வித்தம் அயக்காந்தந்தனை யூசியரிய கற்பின்
மங்காதமடவாறன் மணமகனைக்கொடிமரத்தை வழிக்கொளாறு
தங்காதுமறிகடலைச் சார்ந்திடல்போற் பசுபதியின் சரணமென்னும்
பங்கேருகமென்மலரை மனஞ்சார்தல் பத்தியெனப்பகரலாமே."

அதாவது, அழிஞ்சிவித்தானது மரத்தையும், அயக்காந்தம் ஊசியையும், கற்பின் வழுவாத உத்தம மாது தனது கணவனையும், கொடியானது மரத்தையும், நதியானது கடலையும் எவ்வாறு இயற்கையிலேயே அடைகின்றனவோ, அவ்வாறே நம்மனமும் பசுபதியின் தாமரைபோன்ற பாதங்களிற் சென்றடைந்து தங்கியிருத்தலே பக்தியென்று கூறப்படும் என்று அப்பக்தியின் இயலைக் கூறியிருக்கின்றனர். இப்பக்திக்குச் சான்றாக இவ்வுலகின் கண்ணே எண்ணிறந்த பெரியோர்கள் தோன்றியிருக்கின்றனர். அப்பக்திமான்களிற் சிறந்தோராகிய வரகுணபாண்டியரென்னும் பாண்டி நாட்டரசருடைய விருத்தாந்தத்தை பண்டித சிரேஷ்டராகிய ம-ள-ள-ஸ்ரீ, சாமிநாதய்யர் அவர்களது மத்தியார்ச்சுனமான்மியத்தில் நின்றும் எடுத்து அடியில் வரைகிறோம்.

பாண்டிநாட்டிலே, மதுராபுரியிலே, வைதிகநெறியும் சைவநெறியுந் தழைத்தோங்க அரசியற்றிய வரகுணபாண்டியர், ஒரு நாள் காட்டிற்சென்று, வேட்டையாடி விரைந்து திரும்பி வருகையில் சூரியாஸ்தமயமாயிற்று. அப்போது, வழியிலயர்ந்து கிடந்த ஒரு பிராமணன் அவனேறிய குதிரையினால் மிதிக்கப்பட்டு இறந்தான். இராஜா, அதனை யறியாது தமது நகரத்தை யடைந்தார். பிரமகத்தி அவரைப்பற்றி மிகவருத்தியது. அதனால் அவர் மனநொந்து, பல தானதருமங்களைச் செய்து வந்தார். ஒன்றினாலும் அது தீராமையால், பின்பு தமது குலதெய்வமாகிய சோமசுந்தரமூர்த்தியைப் பிரார்த்தித்துக்கொண்டு வருநாளில், ஒரு நாள் சிவபெருமானுடைய திருவ



ருளினாலே, "வரகுணா! இன்னும் சிலநாளில், நீ மத்தியார்ச்சுனமடைவை; அப்பொழுது இது தீரும். நீ கவலைப்படவேண்டாம்" என்று ஆகாசத்தில் ஓரசரீரி யுண்டாயிற்று. இராஜா அது கேட்டு மகிழ்ச்சியுற்றிருந்தனர். சில நாளைக்குப்பின், சோழராஜன் யுத்தஞ்செய்தற்குவர, அரசர் அவனோடு யுத்தஞ்செய்து, அவனைத் துரத்திக்கொண்டே வந்து, இந்த மத்தியார்ச்சுன ஸ்தலத்தை யடைந்தார். அடைந்த தினம் குருபுஷ்யமாதலால், நிரம்ப மகிழ்வுற்று, விதிப்படி புஷ்யதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி, அளவிறந்த தானங்களை அந்தணர்க்களித்து, பின்பு காருண்யாமிர்தத்திலும் ஸ்நானம்பண்ணி திருக்கோயிலுக்குள்ளே செல்லுகையில் அப்பிரமகத்தி நடுநடுங்கி வெளியே நின்றுவிட்டது. அரசர் மகிழ்ந்து, விதிப்படி சுவாமியையும் அம்பிகையையுந் தரிசித்து இந்த ஸ்தலத்திலே, என்றும் வசித்தல் வேண்டுமென்னும் குறிப்புடையவராய், சிவபெருமான் கட்டளைப்படி மேலைவாயில்வழியே சென்று, திருவீதியில் ஒருபக்கத்தில் ஒரு மாளிகை கட்டுவித்து, காலந்தோறும் சென்று, சுவாமி தரிசனத்தோடு நூறு அசுவமேதப் பிரதக்ஷணமும் செய்துகொண்டு அம்மாளிகையிற்றங்கி அரசியற்றுவாராய், பின்பு மேலைக் கோபுரத்தைத் தம் பெயராற் கட்டுவித்து, திருக்கோயிலுக்கு வடக்கே சோமசுந்தரக் கடவுளுக்கு ஓராலயம் இயற்றுவித்து, இன்னம் பலபல பணிகளியற்றிக்கொண்டிருந்தார்.

இப்படி யிருக்குங்காலத்தில் ஒருதினஞ் சென்று நமஸ்காரம் செய்யும்பொழுது, மருதவாணர், "வரகுணா! கைலையங்கிரியின் கொடுமுடியை யொப்ப ஒருமதில் கட்டுவித்து அதை வலஞ்செய்தி; அதைச்செய்யு மொரு பிரதக்ஷிணம், ஆயிரம் பிரதக்ஷிணத்திற் கொப்பாம்: நமக்கு மிகவுவப்பாம்". என்றருளக்கேட்டு, அரசர் அவ்வாறே புரிவித்து வலம் வருவாராயினர்.

பின்னொரு நாள், கொடிய கள்வனொருவனைச் சிரச்சேதஞ்செய்தற்பொருட்டுக் காவற்காரர்கள் இறுகக்கட்டிக்கொண்டு செல்லுகையில், அவன் நெற்றியில் திருநீறு விளங்குவதைக்கண்டு கட்டவிழ்த்து விடுவித்து, அவனுக்கு வேண்டும் பொருளளித்து நயமொழி புகன்று விடுத்தனர்.

பின்னொரு நாள் இரவிலே நரிகள் ஊளையிடுதலைக்கேட்டு இவைகள் ஆலவாயானை யழைக்கின்றனவென்று மனமுருகிப் பிடித்து வருவித்து, நல்ல வஸ்திரங்களாலவற்றைப் போர்த்து விடுத்தனர்.

பின்னொரு நாள், ஒரு தடாகத்தில் தவளைகள் சத்தித்தலைக்கேட்டு, இவைகள் "ஹர ஹர" என்று சத்திக்கின்றன என்று கருதி, இரத்தினங்களையும் சுவர்ணங்களையும் அத்தடாகத்தில் வாரியிறைத்தனர்.

பின்னொருநாள் திருமஞ்சன தைலத்திற்காக உலர்த்திய எள்ளைக் கோயில் வேலைக்காரனொருவனெடுத் துண்பதைக்கண்டு, "நீ இதை உண்ணலாமோ" என்றனர். அவன் எள்ளுண்ட கடனைத் தீர்க்கவேண்டும் என்னும் பழமொழிப்படி மருதவாணர்க்கு மறுபிறப்பிலும் அடிமையாய் வருதற்பொருட்டு உண்கின்றேன்" என்ன, அப்படியாயின் எனக்கும் இதிற்சிறிது கொடு" என்று சொல்லி அவன் எச்சிலெள்ளை வாங்கியுண்டனர்.

பின்னொருநாள் தலையோடொன்று இந்த க்ஷேத்திரவெல்லையிற் கிடத்தலைக்கண்டு, மனமுருகி, அதைத் தமது மலர்க்கரத்தாலெடுத்து, கண்ணீர் வெள்ளத்தாலாட்டி "உம்மைப்போலத் தமியேனும் இந்த ஸ்தலத்தெல்லையில் எந்தலை கிடக்கப்பெறுவேனோ என்று மனமுருகினர்.

பின்னொருநாள் திருக்கோயிலின் முன்னே நாய் மலங்கிடத்தலைக்கண்டு, இதை யெடுப்பவருக்கு "என் தேசத்திற் காற்பங்கு கொடுப்பேன்" என்று எண்ணி முதற்பிரதக்ஷிணமும் அது எடுக்கப்படாமையால் அரைப்பங்கு கொடுப்பேன்" என்று இரண்டாம் பிரதக்ஷிணமும், "முக்காற்பங்கு கொடுப்பேன்" என்று மூன்றும்பிரதக்ஷிணமும், "முழுமையும் கொடுப்பேன்" என்று நாலாம் பிரதக்ஷிணமும் செய்தார். அதுவோ எடுக்கப்படவில்லை. அதுகண்ட அரசர் "என் தேசம் எனக்கேயுரியது"

* Otherwise called Tiruvidamaruthur. (திருவிடைமருதூர்)

என்று சொல்லி அதைத் தமது திருக்கரத்தினால் எடுத்துப் புறத்தே எறிந்தார். பின்னொருநாள் திருவீதிப்பிரதக்ஷிணம் செய்யும்பொழுது பழுத்த வேப்பமரங்கள் வெயிலில் நிற்றலைக்கண்டு, "அந்தோ! சிவலிங்கத்தையொத்த திருவுருப்பலவற்றைத் தாங்கி இலைகள் வெதும்புகின்றனவே" என்று இரங்கி, அம்மரங்களுக்கெல்லாம் மேற்கட்டி கட்டுவித்தனர்.

பின்னொருநாள் தாம் விவாகம் செய்துகொண்ட சோழராஜன் புத்திரியை இரவில் அந்தப்புரத்திற் கண்டு, "இவள் எம்பெருமானுக்கே யுரியள்" என்று நினைந்து, உடனே ஒருவரும் அறியாவண்ணம் அழைத்துக்கொண்டு ஆலயத்தை யடைந்து திருமுன் நின்று, "மருதவாணா! இப்பெண்மணியை யங்கீகரித்தருள்க" என்று பிரார்த்தித்து, கதவைத்தட்டி அழைக்க; சிவபெருமான் கதவைத்திறந்து, "வாருணா! வருதி" என்றழைத்தார். அப்போது பாண்டியர் "ஸ்வாமி, இப்பெண்மணியை யங்கீகரித்தருள்க" என்று பிரார்த்திக்க, எம்பெருமான் வலக்கைமாத்திரம் வெளியே தெரிய அப்பெண்மணியை உட்கொண்டருளினர். அரசர் அதுகண்டு, "இத்தக்கையை மாத்திரம் எளியேனால் தீண்டப்பட்டதென்றோ நீக்கியருளினீர்," என்று மனந்தளர, சிவபிரான் "உன்னன்மை உலகத்தார் அறியும்படி இக்கையை நாளை அங்கீகரிப்போம்" என்று கட்டளையிடுதலும், அரசர் மகிழ்ந்து வெளியேவந்தார். திறக்கப்பட்ட கதவுகள் முன்போலவே மூடப்பட்டிருந்தன. அரசரையும் தேவியையும் மனையிலுள்ளோர் தேடிப் பின்பு அரசரைமட்டுங்கண்டு, "தேவியார் எங்கே?" என்ன, அவர் "மகாலிங்க மூர்த்தியினிடத்தில் இருக்கிறார்" என்றார். அவர்கள் ஆச்சரியமுற்று, பூசிப்பவர்களோடு உள்ளேபுகுந்து, மகாலிங்கப்பெருமான் முடிமீது கைவிளங்குதலைக் கண்டார்கள். சிவபிரான் உடனே அக்கையை உள்ளே வாங்கியருளினர். அதுகண்ட அரசர்மகிழ்ச்சியடைய மற்றவர்கள் அச்சமும் அதிசயமும் அடைந்தார்கள். தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள்.

இவ்வாறு பல நாள் இந்நகரில் வசித்துக்கொண்டிருந்து, மருதவாணர் கட்டளையின்படி தமது மதுராபுரியை யடைந்து, சோமசுந்தர மூர்த்தி சிவலோகங்காட்டி யருளத் தரிசித்து பலநாள் அரசாட்சிசெய்து சிவபதமடைந்தார்.

## VALMIKI'S RAMAYANA.

## வால்மீக ராமாயணம்.*

"இராமர் - என்றால் பாவம் போம், சீதை- என்றால் துக்கம் போம். இராமாயண கதை இன்பம், அதைக் கேட்டிடில் அகன்றிடும் துன்பம்" என்பனவற்றை யறியாதவரெவர்? "ஸமீர்ஜித்யபுரீம் லங்காம்" என்று தொடங்குகிற சுலோகத்தின் முதலக்ஷரத்தைக் கேட்டமாத்திரத்தில் ஒருவன் இராஜ தண்டனையினின்று நீங்குவான். அவனை வருத்துகிற குஷ்ட முதலிய தீராத நோய்கள் பஞ்சாய்ப் பறக்கும் என்று அறிவிற்சிறந்த பெரியோர்கள் கூறுவதால், இராமாயணத்திலுள்ள வேதஸ்வரூபமான வசனங்களை பக்தி சிரத்தையுடன் கேட்பவன் அடையும் பலன்களுக்கு மளவுண்டோ?

"ராமநாமமே பாநந்தம், அதை யுண்டபேர்க்கு பிர்மாநந்தம்" வேதங்களாலே அறியத்தக்க பரம புருஷரானவர், தசரதர் புதல்வராய்ப் பிறந்தபொழுது, சாக்ஷாத் வேதமானது இராமாயண மென்ற உருவெடுத்து வால்மீகியினிடமிருந் துண்டாயிற்று. எவன் வால்மீகியின் முகத்தாமரையினின்று பெருகும் இராமாயண மென்ற இனிய தேனைக் காதுகளாகிய கலங்களிலே முகந்து பிரதிதினம் அன்புடன் பருகுகிறானோ அந்தப் புருஷன் நரை, திரை, மூப்பு, ஆபத்து, மரணம் முதலியவற்றால் துன்பமிகுந்துள்ள சம்சார சாகரத்தினின்று நீங்கி நித்தியமான மோக்ஷபதவியை அடைவானன்றோ?

தவிர, இராமாயணம் வேதத்தைப் போலவே அநேக விசேஷக் கருத்துகளை யடக்கிக்கொண் டிருக்கிறபடியாலன்றோ, அதை பாராயணத்திற்கு யோக்கியமான தென்று கொண்டாடி பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்வதும்; அதிலுள்ள பரிசுத்தத்தையும், சத்தியத்தையும், மகிமையையும் உத்தேசித்தன்றோ, உபகாரியா காரியங்களை யறிய அதை வேதவாக்கியமாக வெண்ணி அநேகர் கயிறு போட்டுப் பார்த்து அவ்வாறு நடந்துவருவதும்? மந்திரங்களி லெல்லாம் சிரேஷ்டமான காயத்திரி மந்திரம் இதில் ஆயிரம் சுலோகங்களுக்கு முன் ஒவ்வோர் எழுத்தாய் 24 ஆயிரம் கிரந்தங்களுக்கு முன்னும் 24 எழுத்துக்களாய் வந்து அமையப் பெற்று, சப்தகாண்டங்களும் காயத்திரியின் ஸப்த வியாகிருதிகளைக் குறித்து கூறுகிறபடியால், மேற்பார்வைக்கு காயத்திரி மந்திரம் சூரியனைக்குறித்த ஸ்தோத்திரம்போன்று, ஆழ்ந்து பார்க்குங்கால். பிர்மஸ்வரூபத்தியானமாக விளங்குவதுபோலவே, இராமாயணமும் மேற்பார்வைக்கு சூரியகுல வேந்தராகிய இராமர் சரித்திரம்போன்று, ஆழ்ந்து நோக்குங்கால் பிர்மஸ்வரூபத்தை பிரதிபாதிக்கிற அற்புத நூலாய், அநேக நுட்பமான வேதக் கருத்துகளை யடக்கிக்கொண்டிருக்கிற சிறந்த வைதீக கிரந்தமாயுமிருக்கிறது.





2. அன்றியும், தசரதர் வசிஷ்டர் கட்டளையை மீறக்கூடாதென்று உடனே தன்னருமைச் சிறுமக்களை விஸ்வாமித்திருடன் செல்லச் சம்மதித்து அனுப்பியதால் ஆசாரிய பக்தி விசேஷத்தையும், கைகேயியாகிய சிற்றன்னை தம்மைக் காட்டுக்கு அனுப்பும்படியாக தசரதரிடத்தில் வரம்பெற்றதை பாராட்டாமல், "தந்தையும் தாயும் நீரே தலைநின்றேன் பணிமின்" என்று இராமர் கூறிப் பணிந்து கானகஞ்செல்ல உடன்பட்டதால், மாதுருபக்தி விசேஷத்தையும்; "இராமன் காட்டுக்குப் போகவேண்டும் அவனுக்குப் பிரதியாக பரதன் இளவரசாகவேண்டும்" என்று கைகேயி கேட்டவரத்தை சத்தியத்தால் கட்டுண்ட தசரதர் மறுக்க வழியின்றி யளித்ததால் சத்தியத்தின் மேன்மையையும்; இராமர் தந்தையின் வாக்கை நிறைவேற்ற வேண்டிக் காட்டுக்குச் சென்றதனால், பிதிருபக்தி விசேஷத்தையும்; இராமர் வனமேகச் செலவு பெற்றதை யறிந்த சீதாபிராட்டியார் உடனே யுண்டான ஞானத்தால் "பர்த்ராகமோக்ஷ காரார்யா" என்றதை யுணர்ந்து உலகப் பற்றை யுதறி முற்றுந்துறந்த துறவியைப் போல், தாமும் கூடவருவதாகச் சொல்ல,

இராமர்:—"பஞ்சின்மென் தளிரடிப்பவாய், கல்லிலும் முள்ளிலும் நின் சேவடி நடவாதே, அருக்கனும் எரியுமே" என,

அருந்ததியனையாள்:—"நின்பிரிவினும் சுடுமோ?" என,

தாசரதி:—"நீ எல்லையற்ற துன்பம் தருவாய்" என, சீதாப்பிராட்டியார் தன்னகத்திலுள்ள கோபத்தை முகத்தில்காட்டி இராமரை நோக்கினாளென்பதால் பதிவிரதா தரும விசேஷத்தையும், இராமர் கொடுத்த பாதுகையை சிரமேற்கொண்டு சிங்காசனத்தின் மீது வைத்து, அதை இராமராகவே மதித்துப் பூஜித்து, தம்பி சத்துருக்கனால் இராஜ்ஜிய காரியத்தை நடப்பித்து தாம் கொண்ட தவவேடத்துடன் நந்திகிராமத்திலிருந்து, சந்திரன் வரவை எதிர்பார்க்கும் சகோர பக்ஷியைப் போல் இராமர் வரவை எதிர்பார்த்து நாளெண்ணிக் கொண்டிருந்த சகோதர வாஞ்சையால்,

"எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்தார்க ளெல்லாம்
ஒத்தார் பரதன் பெரிதுத்தமனாத லுண்டோ?"

என்று கூறத்தகுந்த விதமாய்ச் சிறந்த பரதருக்குள்ள பிராதிரு பக்தியையும்;

"புறவொன்றின் பொருட்டால் யாக்கை புண்ணுற
வறிந்த புத்தேள்
அறவனு மின்னையைய நிகர்க்கில லப்பானின்ற
பிறவினி யுரைப்பதென்னே பேருளாள ரென்பார்
கறவையுங் கன்றும் போல்வார் தமக்கிடர் [illegible]
யின்"

என்ற செய்யுளின் கருத்துப்படி வரையப்பட்ட வாக்கியங்களால் தன்னுயிர்போல் மன்னுயிரைக் காக்கவேண்டுமென்ற ஜீவகாருண்ணியத்தையும்;

இலக்ஷ்மணர், "ஜ்யேஷ்டப்ராதாபிதுருஸம" என்றபடி ஒரு சமயத்தில் சீதாபிராட்டியாரின் திருவடியைத் தவிர அவர் திருமேனியின் வேறு ஒரு பாகத்தையும் யான் பார்த்ததில்லை யென்று சொன்னதினால், சகோதரர் மனைவியை பாவிக்க வேண்டிய முறைமையையும்;

சகோதர வாஞ்சைக்கும் ஒற்றுமைக்கும் காரணமாகத் தற்காலத்திலும் இரட்டைப் பிள்ளைகளுக்கு இராம லக்ஷ்மண ரென்று பெயரிடுவதாலும், அவைகளுக்கு இவர்களையே உபமானமாகக் கூறுவதாலும், சகோதர அன்புக்கும், ஒற்றுமைக்குமுள்ள வல்லமையையும்;

அநுமார் சுக்கிரீவனிடத்தில் காட்டிய அற்புத விசுவாசமும், அசோகவனத்தில் பிராட்டியாரிடம் அவர் பேசிய வினயமும், விபீஷண சரணாகதி சமயத்தில் இவர் மிக்க ஆராய்ச்சியுடன் சொன்ன ஆலோசனையும், நிஷ்காமமாய் இவர் செய்த இராம கைங்கரியங்களும், இராமரிடத்தில் இவர் இடைபறாது வைத்த பக்தியினாலே ஸ்ரீராமாயண படனம் நடக்குமிடமெல்லால் இவர் வந்திருந்து இராமநாம அமிர்தத்தை பானம் பண்ணிக்கொண்டிருக்கிறாரென்று இவர் பக்தி விசேஷத்தைக் கொண்டாடுவதால், தூத லக்ஷணத்தையும், பக்தியின் பெருமையையும்;

இராமர், ஒருகால் வனம்போகச் சம்மதிப்பாரோ மாட்டாரோ என்று கைகேயி சந்தேகித்ததை அவள் முகக்குறிப்பாலறிந்து, அவளைப்பார்த்துத் தாயே! பொருளாசையால் இவ்வுலகில் வசிக்க ஆசைகொண்ட மானிடனாக நீர் என்னைக் கருதவேண்டாம், கருமத்தைத் தருமத்தின் பொருட்டே கைப்பற்றி நடத்திவரு முனிபுங்கவர்களுக்கு ஒப்பான மானிடனாக நீர் என்னை எண்ணவேண்டும்" என்று சொல்லியதிலுள்ள பெருந்தன்மையையும்;

விஸ்வாமித்திரர் ஆயிரம் வருஷம் தவமியற்றி ரிஷிப்பட்டத்தையும், மறுபடி ஆயிரம் வருஷம் தவத்தையே மேற்கொண்டு மகாரிஷிப் பட்டத்தையும், மறுபடியும் சளையாமல் ஆயிரம் வருஷம் தவமியற்றி பிரம்மரிஷிப் பட்டத்தையும் அடைந்ததினால், "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்," "வருந்தியழைத்தால் வாராததொன்று மில்லை," என்னும் சிறந்த நீதியையும்;

பல வருஷகாலம் கடுந்தவம்புரிந்த கும்பகர்ணன், தன்முன் பிரத்யக்ஷமான பிர்மாவை நித்தியத்துவத்தைக் கேட்க உத்தேசித்திருந்ததை தேவர்களறிந்து சரஸ்வதியைப் பிரார்த்திக்க, அவர் அக்கொடியவன் நாவில்நின்று நித்தியத்துவம் என்பதை நித்திரை என்பதாகச் சொல்லும்படி செய்ய அப்படியே அவன் தூக்க வெறியுள்ளவனானன். ஆதலின், பிர்மாவைக்குறித்துத் தவஞ்செய்யுஞ் சாமர்த்தியமிருந்தாலும் தீக்குணமிருந்தால் பிரயோஜனப்படாதென்ற நீதியையும், இராம லக்ஷ்மணர்கள் விஸ்வாமித்திருடனிருக்கும் பொழுது அவர் இவர்களை தினப்படி திரிகாலங்களிலும் காலக்கடனைச் செய்யும்படியாகத் தூண்ட அவர்களப்படியே கிரமமாகச்செய்து கொண்டு வந்ததனால் படித்தவர்கள் ஒருவரும் தங்கள் வர்ணாசிரமத்திற்கு ஏற்பட்ட பல கடன்களைச் செய்யத் தவறக்கூடாதென்கிற உத்தம தர்மத்தையும்;

இப்படியே வர்ணாசிரம தருமம், மாதர் ஆடவர் தர்மம், பெரியோர்களிடத்தில் மரியாதை, விருந்தோம்பல், செய்ந்நன்றியறிதல், செங்கோன்முறை, இராஜதந்திரங்கள், "ஆலம் விழ்போலும் அமைச்சன்" என்றபடி மந்திரிகளின் இலக்ஷணம், அன்பு, தயை, நடுவு நிலைமை, நன்மை தீமைகளின் பயன் முதலிய மேலான நீதிகளையும் கற்பிக்கிற சிறந்த லௌகிக நூலாயுமிருக்கிறதென்பதை யார்தான் மறுக்கக்கூடும்?

3. இராமாயணமோ ஐந்தாம் வேதமாகக் கொண்டாடப்படுகிற பாரதமென்ற இதிகாசத்திற்கு முற்பட்டது. "வனத்திற்கு வால்மீகி"



என்றபடி இந்நூலை இயற்றிய வால்மீகி மகாரிஷி சுபாவத்தை சுபாவமாகவே வர்ணிப்பதில் இவருக்கு 'மேலானவர்கள் எவரு மிருந்ததில்லை யென்ற வண்ணமாகத், தமிழ் நாட்டாரால் கவிச்சக்கிரவர்த்தி என்று கொண்டாடப்பட்ட கம்பர்தாமே

"வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான்மீகி யென்பா
நீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான் [ன்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டையன்பெனும் நறவமாந்தி
மூங்கையான் பேசலுற்றானென்ன யான் மொழியலுற்
றேன்"

என்று புகழ்ந்திருக்கிறார்.

தசரதர் புத்திரகாமேஷ்டியாகம் செய்த விவரமும், கங்காநதி உற்பத்தி பிரபாவமும், விஸ்வாமித்திரர் தபசின் வரலாறுகளும், இராமர் வில்லை முறித்துச் சீதையை மணம்புரிந்த கட்டமும், பரசுராமரிடம் சம்வாதஞ் செய்து வில்லைப்பெற்ற சந்தர்ப்பமும், வெகு கம்பீரமாயும் மனோகரமாயும், சாதுரியமாயும் எழுதப்பட்டிருக்கிறது.

4. இதில் இன்னபாகம் அல்லது இன்ன காண்டம் அல்லது இன்ன சுலோகம்தான் அதிக கம்பீரமாகவும், அழகாகவும், ருசிகரமாயுமிருக்கிறதென்று குறித்துக் கூறுவது, "வெல்லப் பிள்ளையாருக்கு இன்னபக்கம்தான் தித்திப்பு" என்று சொல்வதை யொக்குமேயன்றி மற்றப்படி யன்று. எப்படியென்றால்.—

"நன்மையும் செல்வமும் நாளுநல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே.
சென்மமு மரணமுமின்றித் தீருமே
இம்மையே 'ராம' என்றிரண்டெழுத்தினால்."

5. இப்பூதலத்தின் கண்ணுள்ள பண்டித பாமரருக்கு கற்பனைக் களஞ்சியமாய் நவரசம் நிறைந்ததாய், சொல்லினிமை, பொருளினிமையுள்ளதாய், கேட்போருக்குத் தெவிட்டாத் தேன்போன்றதாய், ஷண்மதஸ்தர்களும் ஏத்திப் போற்றத்தக்கதாய், பிற மதஸ்தர்களும் கொண்டாடுதற்குரியதாய், வேதப்பொருள் நிறைந்து வேதத்திற்குச் சமமானதென்று சகலராலும் பெருமை பாராட்டப்படுவதாய், உலகவியல்புகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் மிகத்தெளிவாக எடுத்துக் காட்டுவதாய், மானிடருக்கு இன்றியமையாத சிறந்த கருத்துக்களை யுடையதாய், கம்பீரமும் மனோகரமுமான நடையி லெழுதப்பட்டு, நம் முன்னோர்களின் நாகரிகச் சிறப்புக்கு பெரிய திருஷ்டாந்தமாய், ஸம்ஸ்கிருத பாஷையில் விளங்கும் வால்மீகி மகாரிஷி யருளிச் செய்த ஸ்ரீமத்ராமாயண காவியத்தை, நமது தமிழ் பாஷையை அறிந்த ஆண்பெண்ணாகிய இரு பாலருக்கும் உபயோகப்படும்படியாகவும், அவர்கள் சாரத்தையுட்கொண்டு கடைத்தேறும்படியாகவும், எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பதுமட்டும் நமது ஜனங்களுக்கு உண்மையான படிப்பாகாதென உணர்ந்தும், அறிவின் பயனெல்லாம் ஜனங்களின் மனவிருளைப் போக்கி தருமமும் சத்தியமுமான வழிகளில் நடத்துவதிலடங்குமென்பதை யோர்ந்தும், தற்காலம் நம்மவரிடத்தில் பக்தியும், ஜீவகாருண்ணியமும், பரோபகாரசிந்தையும் வரவரக் குறைந்து வருவதைக் கருதியும், சகலவித சாம்பிராஜ்ஜியத்தையும் கொடுக்கவல்ல ஸ்ரீவால்மீகி ராமாயணத்தை, கூட்டியும் குறைத்தும் மொழிபெயர்க்காமல், கறந்தபால் கறந்தவண்ணம் வால்மீகியினுடைய கருத்துக்களுக் கிணங்க, சிறு குழந்தைகளுக்கும் உதவியாகும்படி, அவர்களை தீயவொழுக்கத்தில் கவருமென்று நினைக்கக்கூடிய சிருங்கார ரசத்தை யகற்றி, நமது தேசாபிவிர்த்தியையும் சன்மார்க்க அபிவிர்த்தியையுமெண்ணி, சகலரும் ஒரு பூஷணமாக வாங்கிப் படித்து இகபரசுகங்களை யனுபவிக்கும்பொருட்டு விநாயகத்யானம், சரஸ்வதிப் பிரார்த்தனை முதலியவற்றைத் தெள்ளிய நடையில் விளக்கி, சந்தர்ப்பத்திற் கிணங்க காலஞ்சென்ற நமது நண்பர் பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் பி. ஏ., எழுதி வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்.

தவிர, அது குற்றங்குறை யென்பது சற்றுமில்லாதபடி பாராயணத்திற்கும் ஒவ்வொருவர் வீட்டு பூஜா ஸ்தானத்தில் வைப்பதற்கும் தகுந்த அழகாய்க் கட்டப்பட்டு மிருக்கிறது, சுபம்.'

## SHORT STORY : DORAISAWMY.

### துரைசாமி: ஒரு சிறுகதை.

இப்பேருலகில் சிருஷ்டி மர்மங்களில் ஒன்று மரணம். மனிதன் என்று பிறந்தானோ அன்றே அதுகூடவே "இறப்பு" என்னும் காலனும் ஏற்பட்டேயிருக்கிறது. பிறந்தவன்றே யிறப்பதும் சிலநாள் ஆடிப்பாடி அமருகிறதும் உலக வியற்கை. இம்மண்ணுலகில்வாழும் மாந்தர்களில் எவ்வளவு புகழ்படைத்தவனாயினும், எவ்வளவு கல்வியிற் பூர்ணபாண்டித்ய முடையவனாயிருப்பினும், அகிலப்பிரபஞ்சமுமாளும் மஹா மண்டலேசுவரனாயினும் கடைசியாய் ஒரு பிடி வெண்சாம்பலாகின்றனரேயன்றி நிலைத்திருப்போர் எவரையுங்காணோம். அந்தப் பிடிசாம்பலும் காற்று வந்தாலடித்துக் கொண்டு போய்விடுகிறது. பார்க்கப்போனால் மிச்சம் யாதொன்றுமில்லையே. ஆ! இப்பிரபஞ்சத்தில் மானிடவாழ்வைக்குறித்து ஆலோசிப்பின் என்ன ஆச்சரியமாயிருக்கிறது.

> "சீலமுந் தருமமுஞ் சிதைவில் செய்கையும்
> சூலமுந் திகிரியும் சொல்லுந் தாங்கிய
> மூலம்வந்த தவிய மூவர்க்காயினும்
> காலமென்றொரு வலைகடக்கலாகுமோ"

என்றபடி அத் திரிமூர்த்திகளே மாயாபாசத்திற் கட்டுண்டுழலும்போது இம்மானிடன் எம்மாத்திரம்!

> "எப்போதாயினுங் கூற்றுவன் வருவா
> னப்போதந்தக் கூற்றுவன் றன்னைப்
> போற்றினும்போகான் பொருளொடும்போகான்
> சாற்றவும்போகான் றமரொடும்போகான்
> நல்லாரென்னான் நல்குரவறியான்
> தீயாரென்னான் செல்வரென்றன்னான்
> றரியாதொருகணந் தறுகணாளன்
> னுயிர்கொடுபோவா னுடல்கொடுபோகான்"

என்ற வண்ணம் எப்போதாயினும் கூற்றுவன் வந்தே தீருகிறான். இம்மானிடன்வாழும் இச்சின்னாட்களுள் இவ்வுலகில் நடக்கும் காரியங்களென்னை? இதற்குள் அவனுக்கு சம்பவிக்கும் கஷ்ட நிஷ்டூரங்களெவ்வளவு? இவ்வளவையும் அநுபவித்து "அலகைகொடுத்த உலக்கைசாத்தி" நடத்திவரவேண்டியிருக்கிறது. இவ்வுலகம் நமக்காக சிருஷ்டிக்கப்பட்டதல்ல. நம்முடைய ஆக்ஞாசக்கிரத்தை அது கவனியாது தன்கால சக்கிரத்தைச் சுழற்றிக்கொண்டு செல்லா நிற்கின்றது. நமக்குள் அடங்கிய உலகமானால் நல்லவர்களுக்கு "அடைக்கலான் குருவிக்கு ஆயிரத்தெட்டு கண்டம்" என்பதுபோல் கஷ்ட நிஷ்டூரங்கள் ஒன்றின்பின்னொன்றாய் நெருங்கிச் சூழ்ந்துகொண்டு தலையெடுக்கவொட்டாது தவிக்கச் செய்வதேன்? துஷ்டர்கள் பெருப்பதேன்? வயோதிகரும் அமங்கலிகளும் அதிகமாய் வீடு நிறைவதேன்? ஆகவே நம்முடைய செயலன்றி கடவுளின் திருவருளின்செயலேயாம். நிற்க, இவ்வுலகில் "பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை, பிறந்துமண்மேல் இறக்கும்பொழுது கொடுபோவதில்லை" என்றபடி தங்கப் பணிதிகள், நகைநட்டு, நாணயங்கள், பட்டுப் பட்டாவளிகள், பஞ்சபட்சிய பரமான்னங்களுடன் கூடியசுகமான இராஜபோஜனங்கள், முதலியனவெலாம் இங்கு வந்துதான். சந்திசிரிக்கத் திண்டாடுவதும், எல்லாருக்கும் ஏளனமாய்ப்போக சாண்வயிறு வளர்க்க யாசிப்பதும் பாடுபடுவதும் இங்குவந்துதான். இதற்கெல்லாம் காரணபூதமாயிருப்பதும் பொருள்தான். அது இல்லாவிடில் அவன் நடைப்பிணத்துக்குச் சமானமாகிறான். "பொருளில்லார்க்கிவ்வுலகமில்லை" யெனவும் கூறப்பட்டிருக்கிறதல்லவோ? மிகுந்த செல்வவந்தராயிருந்து ஏதோ விதிவசத்தால் தரித்திர நிலைமையையடையின் எவருங் கவனிக்கிறார்களில்லை. "இல்லானை இல்லாளும்வேண்டாள், ஈன்றெடுத்த தாயும்வேண்டாள்" அல்லவோ? இதைக் குறித்தன்றோ ஔவைப்பிராட்டியார் "கொடிது கொடிது வறுமைகொடிது" எனத் திருவாய் மலர்ந்தருளினார். இப்பேர்ப்பட்ட வறுமைச் சாகரத்தில் மூழ்கினவர்களில் நமது சுந்தரமய்யரும் ஒருவர்.

அவர் "கொமறலிங்கம்" என்னும் கிராமத்தில் வந்து வசிக்கத் தலைப்பட்டார். கோயம்புத்தூரிலிருந்த தனது வீடும் நிலபுலன்களும்



ஏலத்தில்போய்விடவே, பெரியபட்டணத்தில் தான் வாழ்ந்ததுபோய் தற்காலம், வறுமை நோயால் இச்சிறு கிராமத்தில் வந்து வசித்து வருதலையும், முன்பு செல்வமுள்ளபோது "தர்மம் தலைகாக்கும்" என்ற நீதிவாக்கியத்தைக் கடைப்பிடித்தொழுகியதையும், அதன்மூலமாய் தான் நல்ல ஸ்திதியைவிட்டு தரித்திர நிலையையடைந்ததும், தற்காலம் சொல்லமுடியாத வறுமையென்னும் கொடிய நோயைத் தான் அநுபவிப்பதையும், முன்பு வெகு பிரீதியாயிருந்த உறவின்முறையார் கவனியாதிருப்பதும், அவருக்குப் பசுமரத்தாணிபோல் மனதில் பதிந்துகிடந்தன.

தடஸ்தமாய்நிற்கும் நீருள்ள கேணியில் கல்லையெறியின் அந்நீர் எவ்வாறு ததுளித்து நிலைகுலையுமோ அங்ஙனமே அவர்மனமும் ததளித்து நிலைகுலைந்தது. அவருடைய தங்கம் போன்ற மேனியும், தாமரைத்தளம்போன்ற விசாலித்த கண்களும், கருணையும், உவகையும், ஊடாடிநிற்கும் வதனமும்போய், கண்கள் உட்குழிந்து, உடல்கறுத்து, மெய்வாடி, பயித்திய காரனைப்போல் பக, பகவெனச் சிரிக்கிறதும், "அப்படியா! தெய்வமே! எல்லாமுன்னுடைய பாக்கியம்" என ஸ்வாமியைநோக்கி இருகைகளையும் விரித்துக்கொண்டு நீர் மாலை மாலையாய்ச் சொரிகிறதுமாய் கரையற்ற விசனக் கிராந்தத்தில் மூழ்கினவரானார். அவர் சில வேலைகளில் தனக்குத்தானே "சீ! என்னபாழுலகம். பையூரிலேயிருந்து பாழூரிலேபிறந்து அவதிப்படவாவிதித்தாய் சிவமே! எவ்வளவு கொடுத்துவைத்திருக்கிறார்களோ அவ்வளவுதான் கிடைக்கும். வீணாக வருத்தப்பட்டுச் சாவதில் லாபமென்ன? நாமென்ன பாவம் பண்ணினோமோ நன்றாய் அநுபவிக்கிறோம்" என்று தனக்குள்தானே வெறுத்துக்கொள்வார். சிலவேளைகளில்

> "வறியவர் செல்வராவர் செல்வர்பின் வறியராவர்
> சிறியவ ருயர்ந்தோராவ ருயர்ந்துளோர் சிறியராவர்
> முறைமுறை நிகழுமீது முன்னையூழ் வினையேகண்டா
> யெறிகதிர் வழங்குஞாலத் தியற்கையுமினையதன்றே"

எனப் பாடிக்கொள்வார். இப்படியாக நாள் போவது தெரியாமல் தன் காலத்தைக் கடத்தி வந்தார்.

இப்படியாகக் காலங்கடத்திவருகையில் "அந்தோ!" அவரது அருமைத்திருமனைவி வெங்கம்மாள் பரலோகமடைந்தாள். அடடா! அவரென்செய்வார்! "செய்வதெல்லாம் செய் பகவானே! என்னுடைய தீவினைக்கும் துன்மார்க்கத்திற்கும் அவ்வளவும் வேண்டியதுதான்?" எனத் தலையிலடித்துக்கொண்டு விசனுக்கிராந்தராய் அன்னபானாதிகள்கூட செவ்வையாய் செய்துகொள்ளாமலிருந்தார். இப்படியிருக்க "உறிசுற்றின்மேல் உலக்கைவிழுந்தது" போல் அவரது அருமைப் புத்திரியும் அற்பாயுசாய்க் காலஞ்சென்றுவிட்டாள். அவர் நிலைமை எப்படியிருக்கும்? முன்னமேயே விரக்தி வைராக்கியத்துடன் இருந்த அவருக்கு இதுவும் சேர்ந்தது. "என் காலக்கொடுமைக்கும் தீவினைக்கும் அநுபவிக்கத்தான்வேணும். மாட்டேனென்றால் தீருமோ' என்று கண்களில் நீர்தளும்பச்சொல்லிப் பின்பு "நமக்குப் பிள்ளையேது? குட்டியேது? இருந்ததுக்கெல்லாம் காலம்வந்து வாரிக்கொண்டு போய்விட்டது. நமக்குத்தான் வரவில்லை, நாம்தான் பாக்கி. அந்தப்பயல் துரைசாமி ஓடிப்போன காமாட்டிப்பயல் இருக்கிறானோ? போய்விட்டானோ? அல்லது எங்கேயாவது கோவிக்தக்கொள்ளி வாங்கிக்கொண்டானோ தெரியவில்லை. அவன் இனி எக்கேடுகெட்டால் எனக்கென்ன? இதோ! எங்கேயாவதுபோய் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு இப்பொழுதே பிராணனை விட்டுவிடுகிறேன். அப்புறம் தொல்லையேயில்லை" எனத் துணிந்து கண்களிலிருந்து அடக்க அடக்கப் பெருகும் கண்ணீரைக் கையால் சுண்டி யெறிந்துகொண்டே கட்டிய வேஷ்டியுடன்,

> "கன்றினுக்குச்சேதாய் கனிந்திரங்கல் போலெனக்
> கென்றிரங்குவாய்கருணை யெந்தாய் பராபரமே"

எனப் பாடிக்கொண்டு புறப்பட்டு எங்கேயோ போய்விட்டனர். அவரைப்பற்றிய சங்கதி ஒன்றும் தெரியவேயில்லை.

* * *

இங்ஙனமிருக்க மதுரைமா நகரத்தின்கண் ஓர் நாட்காலே சூரியன் கிழக்கே உதித்தனன். அவனது பரந்த செஞ்சுடரொளிகள் தங்கக் கம்பிகள்போல் விரிந்து பள, பளவென ஒளி வீசி ஜாஜ்வல்லியமாய்த் துலங்கிற்று. வைகையாற்றின் ஜலமானது பொன்னீர்போலவிருந்தது. அந்நன்னீரில் சிறுமீன்கள் துள்ளிக் குதித்தன. தங்கத் தாம்பாளத்தில் வைரக்கற்கள் பொதிக்கப்பட்டாற்போல் பள பளத்து ரமணீயமாயிருந்தது. எண்ணிறந்த சோலை சிங்காரவனங்களின் காற்றும் நறுமணம் கமழும் நந்தவனத்தின் காற்றும் எழுப்பி வீசி இனிமையை யூட்டிற்று.

அதன் வழியேசென்றால் பெரிய மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், நெருங்கிய பெரும் வீதியொன்றிருக்கிறது. அதன் கடைக்கோடியில் ஒரு மண்டபம தென்பட்டது. அது வழிப்போக்கர்களும் ஏழை எளியவர்களும், தங்குமிடமாகிய ஒருபெரும் மடம். அம்மடத்தில் ஏகக்கூச்சல் போட்டுக்கொண்டு அநேக பிரயாணிகளும், வழிப்போக்கர்களும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அம்மடத்தின் வாசலிலிருந்த ஓர் பெரும் பாறாங்கல்லில் ஒருவர் நீறுபூசிய நெற்றியும் தேஜோமயமாய் விளங்கும் வதனமும், ஜபமாலையையுடைய கையுமாய் சப்பளம் கூட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். சிறிதுநேரம் சென்ற பின்பு "சங்கரா! சம்போ!!" என இரண்டு தரம் பெருமூச்சு விட்டுக்கொண்டு உரக்கச் சொல்லிவிட்டு எழுந்து பக்கத்திலிருந்த "பூலோக கைலாசம்" என சிறப்புற்றோங்கிய ஹாலாஸ்ய க்ஷேத்திரத்துக்குள் நுழைந்தார்.

* * *

அப்பொழுது கோவிலில் ஏகக்கூட்டம். அரக்குவளையல், பப்பாய்வளையல் முதலிய தினுசு தினுசானவளையல்களை யணிந்துகொண்டு சிரித்து விளையாடிக்கொண்டு தங்கள் தோழிகளோடு கோயிலுக்குச்சென்ற பெண்மணிகளனேகர்; புஷ்பம்வாங்கியும் தேங்காய், பழம், வெற்றிலைபாக்கு முதலிய தீபாராதனைக்கு வேண்டும் சாமான்களை தட்டிலெடுத் தேந்திக்கொண்டு நீறு பூசிய நெற்றியுடன் பட்டகச்சம் சோமன் தரித்துக்கொண்டு தம்முடன் ஸ்வாமி தரிசனார்த்தம் வருவாரை அழைத்துச்செல்ல, ஆவலுடன் அங்கு மிங்கும் திரிந்த பட்டமாரனேகர்; மிட்டாய் வாங்கியும் "குடகாரஞ்சி ?காக்குவேணுமாடா! நேக்கு கிரேப்புமாம்பழம் வாங்கிக் கிறேண்டாப்பா" எனக் களங்கமற்ற மனதோடு உற்சாகத்துடன் சொல்லிக்கொண்டு தம்மை யழைத்துச் செல்லுமவரோடும் தம் நேயரோடும் "அப்பா! அதோ பாரப்பா! தலையாட்டி யானையை" எனத் தம்கையால் சுட்டிக் காட்டி கூச்சலிட்டுக்கொண்டும் குதித்துக் கூத்தாடிச் சென்ற பொடியர்களனேகர். "சங்கிடி சேலைவேணுமாடி வெங்கிடசுப்பி" இரவிக்கையைப்பாரடி அரக்குவைத்திருக்கிறது அலமேலி" என்றுகொண்டு கடலைப்புட்டாணி, தாளிசபத்திரி, கொரநாடு முதலிய தினுசு தினுசானசேலை யேரம்செய்தும் இராக்ஷசிகளைப்போல் தங்கள் நீண்ட வாய்களைத் திறந்துகொண்டு "அய்யன் பிடாரிபோல்" ஆவலித்த ஸ்திரீகளோ அனந்தம். தம் கணவருடன் உரையாடிக் கையாடி, சல்லாபமாய்ச் சென்ற சரசிகள் அநேகர். "நேக்கு ஜிகனாபொம்மை வாங்கிக்கொடு மரப்பாச்சிவாங்கித்தா" என்று கீழே கட கடவென்று விழுந்து புரண்ட சின்னஞ் சிறியார்கள் பதேஷ்டம். கண்ணிருந்தும் ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டு நடந்து தடுக்கிவிழுந்து தட்டுக்கெட்டுத் தடுமாறிச் செல்லும் கிழங்கெட்டுகளும், விடோபாய்சாக்களும் எண்ணிறந்தவை. அன்று வெள்ளிக்கிழமை, அம்மனுக்கு அன்று முத்துக்கொப்பு சாத்துகிற நாள் ஏகக்கூட்டமாயிருந்தது. அம்மன் சன்னிதானத்திற்கெதிரே முட்டிக்கொண்டும் மோதிக்கொண்டும் செல்லும் கூட்டத்தைவிட்டு அம்மன் சந்நிதிக்குள் செல்வோம். அங்கே நக்ஷத்திர விளக்குகள் ஆயிரம் சூரியன் உதித்தாற்போல் தேஜோமயமாயிருந்தது. அதிலேயும் ஸ்திரீகளும் புருஷர்களும் கணக்கு வழக்கில்லை. தூங்காமணி விளக்குள் அநேகம் பாங்காக ஏற்பட்டிருந்தன. அம்மன் எதிரே அநேக பக்திமான்கள் நின்றுகொண்டு சிலர் கீர்த்தனைகளைப் பாடியும், சிலர் ஸ்லோகங்களுச்சரித்தும், சிலர் "ஜெகதாம்பிகே, நித்யகல்யாணி, மீனாம்பிகே என்னைக் காப்பாற்றுவாயடி தாயே" என வாசகரூபமாய் வேண்டிக்கொண்டிருந்தனர்,

அவர்களுள் நாம் முன்பு சொன்ன பெரியவர் இருகையும் சிரமேற்குவித்து வெகு பய பக்தியுடன்



ஆதிபரா பரையாகி யாத்ம மாகி
அன்பத்தோ ரக்ஷரத்துள் ளமர்ந்து நின்ற
ஜோதிநிற வடிவாகி சூக்ஷ்ம மாகி
சூக்ஷத்தின் பொருளாகிச் சுடரு மாகி
பாதிமதிச் சடையனிடப் பாக மாகி
பையரவை மோதிரமா யணிந்த தேவி
வீதியென்ற நடுவீதிக் குள்ளி ருந்த
வேதாந்த மீனாட்சி விமலி நீலி.

நீலியென்றுஞ் சூலியென்றும் மவுனத்துள்ளே
நிரஞ்சனமாய் நின்றொளிர்ந்த வடிவ மாகி
நாலிதழாம் புட்பவிரு தயத்தி னுள்ளே
நாதாந்த வடிவாகி மோன மாகி
ஆலிலைமேற் பள்ளிகொண்டோன் அம்ல மாகி
அருவுருவா யமர்ந்துநின்ற வம்மை யாகி
வேலிமலழுஞ் சத்தியென்று விளங்கி நின்ற
வேதாந்த மீனாக்ஷி வேத வேந்தே.

எனப் பாடித் துதித்துப் பின்,—

ஆதிநீ போற்றிபோற்றி(என்)அம்மணீ போற்றிபோற்றி
நீதிநீ போற்றிபோற்றி நித்யமே போற்றிபோற்றி
சோதிநீ போற்றிபோற்றி சுந்தரரூபி போற்றி
போதிக்கு மூலாதார அம்மணி போற்றிபோற்றி.

எனப் போற்றித் துதித்துவிட்டு தீபாராதனையாகும்போது "ஓம் ஹரஹர! மீனாக்ஷி காத்தருள் புரியடி தமியேனைக் காரடி! ஆனந்தவல்லி அருள்புரியடி" எனக் கன்னத்தில் தட்டிக்கொண்டு இருகையாலும் தீபாராதனையை யேற்றுக் கண்ணிலொற்றிக் கொண்டு நிற்கையில் நாலைந்துபேர் தீவட்டி பிடிக்க, வில்லைடலாயத்துகள் போட்ட சேவகன்கள் பின்னே வர, ஐந்தாறு பட்டமார்கள் கைகட்டி ஜனங்களை விலக்கிக்கொண்டு முன்னே வர, இடையில் சரிகைத் துப்பட்டாவும், காதிலும் கைகளிலும் பச்சைகளும் வைரங்களும், ஜொலிக்க நெற்றியில் விபூதி ரமணீயமாய்த் துலங்க, கழுத்தில் தங்க ருத்திராக்ஷம் துலங்க ஒருவர் கோயிலுள் பிரவேசமாயினர். அவர் அவ்வூர் சப்ஜட்ஜ். அப்பெரிய மனுஷரிடம் நற்குணங்களெவ்வளவுளவோ அவ்வளவும் பொருந்தியிருந்தன. நித்தியம் கோயிலுக்கு வரத் தவறார். தன் குலாசார ஒழுக்க வழக்கங்களை தவற விடாத்தன்னியர். பெரியோர்களிடம் பஞ்சப்பிராணன். பெருந்தன்மையே பிறவிக்குணம். இப்பேர்ப்பட்ட ஜனரஞ்சகர் தற்செயலாய் நாம் முன்புசொன்ன பெரியவரைப் பார்க்க நேர்ந்தது. உடனே வெகு பிரிய மரியாதையுடன் வேஷ்டியை இடுப்பில் வரிந்து கட்டி சாஷ்டாங்க தெண்டன் சமர்ப்பித்து "ஏ! ஸ்வாமின்! தாம் யாரோ தெரியவில்லை. தம்முகம் தேஜோமயமாய்த் துலங்குகிறது. எக்ஞோபவீதம் தங்கள் பஜஸ்ஸைத் தெரிவிக்கின்றது. என் அன்பார்ந்த விப்பிரசிரேஷ்டர் பசியால் தள்ளாடியவர் போலும் தோற்றுகிறது. தயை கூர்ந்து என் குடிலில் இன்று கருணையுடன் பிக்ஷை பேற்றுக்கொள்ள அனுக்கிரகிக்க வேண்டும்" என வருந்த அம்மறையவரும் யாதும்பேசாது "சத்தியமே ஜபம்" என்று சொல்லிப் பின்தொடர்ந்தார். அநேக சந்துபொந்துக்களையும், மூலைமுடக்குகளையும் தாண்டி ஓர் பெருவீதியி லிராநின்ற ஒரு பெரிய வீட்டினுள் நுழைந்தார்கள்.

வீட்டிற்கழைத்துப்போன சப்ஜட்ஜ் அவர்கள் ஆசார உபசாரம் செய்து தானே கையில் பதார்த்தங்களை யெடுத்துக்கொண்டு வட்டிக்கத் தலைப்பட்டார். சிறிது நேரம் அவ்விடமுள்ள இலையையும், பார்த்துக்கொண்டிருந்த சுவாமிகளுக்கு எதற்கோ தன்னை யறியாமலே கண்களில் மள, மளவென ஜலம் பெருகிற்று. இதனைக்கண்ட அவர் "ஏ ஸ்வாமின்! தெரிந்து யான் தமக்கு யாதோர் தப்பிதமும் செய்யவில்லையே? அப்படியே யிருந்தாலும் மன்னித்தருளல் வேண்டும்" என வேண்ட, அப்பெரியவர் "என் விதியை நொந்தேன் என்னையனே" என, "அதை வெளியிட்டருளலாம் விருப்பமிருப்பின்" என இவர் வினவ, அவர் "இப்பாவி சரிதையைக் கேட்பாய்" என சாங்கோபாங்கமாய் வெளியிட்டருளினர்.

"ஐயோ! அண்ணா!! வந்து சேர்ந்தாயோ! அப்பாவி துரைசாமி என்று ஓடி பிதுர் துரோகம் பண்ணின குமாரன் நான்தான். என்னை மன்னிப்பா யண்ணா? நல்லவேளை உன்னைத் தெய்வம் கூட்டி வைத்ததே "முதலில் சாப்பிடு அண்ணா! பின்பு என் எல்லா சங்கதியும் சவிஸ்தாரமாய்ச் சொல்கிறேன். மிகவும் களையாயிருக்கிறாய்" என்று சொல்லி ஆவலால் தன் தந்தையாரைப் போய்க் கட்டித் தழுவினன். இதனைக்கண்ட அப்பெரியவர் "ஏ பகவானே! எதுக்கோ உன் செயலிப்படி" என்று கூச்சலிட்டார்.

* * * *

"நீருமிழலு நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும்புகழும் பெருவாழ்வு—மூரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமில்லார்க் கென்
தருஞ்சிவந்த தாமரையாடான்" [முர்

## "திருப்புலம்பல்."

"உற்றாரையான்வேண்டேன், ஊர்வேண்டேன், பேர்வேண்டேன்,
கற்றாரையான்வேண்டேன், கற்பனவும் இனி அமையும்;
குற்றாலத்தமர்ந்துறையுங்கூத்தா ! உன்குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருகவேண்டுவனே."—திருவாசகம்.

## UNIVERSAL PRAYER.

## பிரார்த்தனைப்பத்து.

1

அன்பேயருளே அழியாமுதலே
இன்பேரசமே இசையுட்சுவையே
உன்பேரொளியை உள்ளாதுணரா
தென்பேயுருகா தேங்குவனையே !

2

ஐயனேயுன்றன் அருளிலாச்சிவன்
மெய்யனேயன்பன் மருளிலாழ்ந்துள்ளன்
வெய்யனேயுன்றன் வெண்மதிதண்ணருள்
பையனேனுள்ளம் பாயுமோவிண்ணவ !

3

விண்ணவனுமென்னண்ணலேபோற்றி
மண்ணவனுமென்னுண்ணின்றிலங்குவை
கண்ணதுகாக்குமிமைபோலென்றனை
விண்ணதுமேவமண்ணினிற்காப்பையே.

4

காப்பையேயென்றனைக்காரிருள்போக்கியே
காப்பையேயென்றனைக்காயமின்னூட்டிடை
காப்பையேகானெனும்பாவமழிந்திடக்
காப்பையேநீயெனைக்காதல்வைத்தருளினால்.

5

அருளினாலன்றியொராக்கமுமில்லையால்
மருளினால்காணெனச்செய்வதொன்றில்லை;
தெருளினாலுள்ளந்தெளிந்திடச்செய்யுமுன்
னருளினாலன்றியாவதொன்றில்லையே.

6

இல்லையேஅண்ணலே யேதமுனையன்றியே
எல்லையில்விண்ணிலே யுன்னுள்கைபோலவே
தில்லையில்மண்ணிலே யுன்னுள்கைசெல்கவே
எல்லையில்கருணையாலெனை யாண்டுகொள்கவே.

7

ஆண்டுகொள்வாயெனையாரமுதூட்டிநீ
காண்டுகொள்ஏழைநான் : காரணங்கேட்கிலோ
வேண்டுவனுன்னருள்வேறொன்றுமுள்கிலேன் [யே.
வேண்டுமென்றேங்கினேன் வேட்கைதீர்த்தாள்வை

8

ஆள்வையேமாதாவா யருளமுதமூட்டிவைப்பாய்
வேள்வியிலேன்நாதா வெவ்வினைதீர்த்திடுவாய்
மாள்வேன்மயக்கொழித்து மாயவலையறுத்திடுவாய்
கேள்வியிலேன்வேதாநான் கேடுறலுனக்காமோ !

9

உனக்காமோநாதா உலகெலாமாளீசா !
உனக்காகாதொன்று முளதோசொல்லீசா !
எனக்காமோவுன்றனுண்மையுணரவுள்ளீசா ! [சா !
எனக்காவின்னருள்சாதித்தெனையாண்டருள்வல்லீ

10

ஈசாபோற்றியென்னிறைவாபோற்றி !
மாசிலாமணியேமரகதவொளியேபோற்றி !
ஏசிலாமொழியாலிரந்தார்க்கருள்நேசாபோற்றி !
ஆசிகூர் ! அண்ணலேவாசியென்றன்றுன்பற்றினேன்
[போற்றி.

ஓம்தத்ஸத்.

### சத்குருவணக்கம்.

அன்னையேகுருவே அருளொளிக்கண்ணே !
உன்னையேநம்பியானுள்ளொளிகண்டேன்;
என்னையேகருவாய்க்கண்ணுளேவைத்து
முன்னையேபருவாய்ப் பெற்றாய்போற்றி !
ஓம் நமோநம: ஓம்.

## CHILDREN'S PAGE.

### THE SHEPHERD AND THE PHILOSOPHER.

### சிறுவர்க்கான பக்கம்.

### இடையனும் பண்டிதரும்.

பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயரால் புத்தகங்களிலிருந்து போதிக்கப்பட்டு அநேக விஷயங்களைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். முதல் முதல், எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் பாஷையை அங்வயித்து அர்த்தம் செய்துகொள்ளவும், பின்பு அதன்வழியாய் நீதிமார்க்கம், பூகோளம், ககோளம், சரித்திரம், முதலான பற்பல சாஸ்திரங்களையும் தெரிந்துகொள்ளவும் கற்கிறார்கள். ஆயினும், புத்திசாலிகளாயிருப்பவர்கள் குருமுகமும் புஸ்தகமும் இல்லாமலே, அனேக விஷயங்களைத் தாங்களே உற்றுநோக்கி ஊகத்தையும் கவனத்தையும் செலுத்தி அறிந்துகொள்ளலாம். ஒருவன் பலவிஷயங்களையும் தெரிந்திருப்பதற்கும் இன்னொருவன் ஒன்றையும் அறியாமல் மூடனாய் இருப்பதற்கும் பொருள்களை உற்றுநோக்கி ஊகித்துணர்தலும் அவ்வாறு உணராமையுமே காரணமாகும். உற்றுநோக்கிச் சிந்தித்துணராதவர்கள் உலகமெல்லாம் ஓடித்திரிந்தாலும் ஒன்றையும் அறியமாட்டார்கள். உற்றுநோக்கிச் சிந்திப்பவர்களுக்கோ நெடுந்தூரம் செல்லவேண்டிய அவசியமில்லை. தங்களைச்சூழ்ந்திருக்கும் பசு பக்ஷி மிருகங்களைக் கண்டே எவ்வளவோ நீதியும் உண்மையும் தெரிந்துகொள்ளலாகும். இதற்குதாரணமாக உங்களுக்கு ஒரு சிறு கதை சொல்லுவேன், கேளுங்கள்.

நெடுநாளைக்குமுன்னே, பட்டணவாசங்களுக்கு நெடுந்தூரத்தில், காட்டுப்புறத்தில் ஒரு ரில் ஒரு இடையன் தன் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு ஆசாபாசங்களால் விசாரப்பட்டு மனந்தளராமல் சுகமாக ஜீவனம் செய்துவந்தான். அவன் மகா புத்திமான் என்றும் ஞானவான் என்றும் பலராலும் மெச்சிக்கொண்டாடப் பட்டுவந்தான். அவன் பொறாமை, பேராசை முதலிய தீக்குணங்களில்லாமல், மெய்வருந்தி உழைத்துச் சந்தோஷமாகக் காலம் கழித்துவந்தான்.

இவ்வாறு அவனிருந்துவருகையில், அவனுடைய அறிவையும் பெருமையையும் சோதித்தறியவெண்ணி, வேதசாஸ்திரங்களைப் படித்துக் கரைகண்ட பண்டிதர் ஒருவர் அவன் குடிசையை அடைந்து, அவ்விடையனைநோக்கிப் பின்வருமாறு கேட்கலாயினார் :—"ஏனப்பா ! நீ எவ்வளவோ தெரிந்தவன் என்று யாவரும் உன்னைப் புகழ்கின்றார்களே. உன் வித்தையை நீ எங்கே சம்பாதித்தாய் ? நீ தர்க்கவியாகரண மீமாம்சாதி சாஸ்திரங்கள் படித்திருக்கிறாயா ? இதிகாசபுராணங்களைக் கற்றிருக்கிறாயா ? சுருதி ஸ்மிருதிகளில் எவ்வளவேனும் உனக்குத் தேர்ச்சியுண்டா ? அல்லது, நீ பற்பல தேசங்களுக்கும் சென்று, அங்கங்குள்ள ஜனங்களின் நடையுடை பாவனைகளையேனும் பார்த்தறிந்திருக்கிறாயா ?"

இவற்றைக்கேட்ட அவ்விடையன் மிக்க வணக்கத்தோடு,—"ஐயா, பண்டித சிரேஷ்டரே, நான் சாஸ்திரங்களையும் அறியேன், சம்பிரதாயங்களையும் அறியேன். தேசசஞ்சாரமும் செய்ததில்லை. மனுஷ்யரது சட்டதிட்டங்களையும், கற்பனை விற்பனங்களையும் நான் கண்டறிந்ததில்லை. மனிதர்கள் சொல்லில் எனக்கு நம்பிக்கையில்லை. அவர்கள் உண்மையை உரைப்பதில்லை. ஆயினும், அவர்கள்பேரில் குற்றமில்லை; தாங்களே தெரிந்துகொண்டல்லவோ பிறருக்கு உரைக்கப்போகிறார்கள் ? ஆயினும், தெரியும் என்கிற அகங்காரம் மாத்திரம் நெஞ்சளவும் நிரம்பியுள்ளது. ஆகையினாலே நான் அறிந்திருக்கும் சொற்ப விஷயங்கள் மனிதர்களிடத்துக் கற்றுக்கொண்டவையல்ல; என்னைச் சூழ்ந்திருக்கும் பக்ஷி மிருகாதிகளின் குணகுணங்களை ஆராய்ந்து ஊகித்துத் தெரிந்துகொள்ளப்பட்டன. நான் அநுஷ்டித்துவரும் நீதிமார்க்கங்களும், நீச்செயல்களில் நான் கொண்டிருக்கும் மாறா வெறுப்பும், எல்லாம் அப்பிராணிகளிடத்தே கற்றுக் கொள்ளப்பட்டன."— என்றனன்.

இப்படிச் சொல்லிப் பின்னும் சொல்லுகின்ருன்:—"தேனீக்கள் தினந்தோறும் உழைப்பதைக்கண்டு, நானும் சோம்பலின்றி உழைக்கக் கற்றேன். எறும்புகள் இடைவிடாமல்முயன்று இரைதேடிச் சேர்ப்பதுகண்டு, நானும் அவ்வாறே மேலால் வேண்டும் பொருள்களை இப்போதே சேர்த்துவைத்துக்கொள்ளலானேன். என் நன்றியுள்ள நாயின் விசுவாசமும் நன்றியுணர்ச்சியும் கண்டு, நானும் அவ்வாறு என் எஜமானனிடத்தில் நன்றிவிசுவாசமுடையவனுய் இருக்கக்கற்றேன். அன்றிலின் அகலா நேசத்தைக்கண்டு என்மனைவியை நானும் விடாது நேசிக்கலானேன். கோழிகள் தம் பெட்டைகளைக் குளிரால் வருந்தாமல் சிறகாலணைத்துக் காப்பதுகண்டு, நானும் அவ்வாறே என் குழந்தைகளை ஆதரவாகக்காக்க வேண்டுமென்று தெரிந்துகொண்டேன்.

"இவ்வாறே, இன்னமும் பிறரை நிந்தித்திகழாமை, அகங்கரித்து வெல்லாமை முதலான அநேக நீதியார்க்கங்களையும், பக்ஷிமிருகாதிகளின் குணுகுணங்களைக்கண்டே தெரிந்துகொண்டேன். "ஊமைக்கோட்டான்" என்று உலகில் அதனை இகழ்தலினுலே, கலகலவென்று களங்கமின்றிப் பேசாமல் மவுனம் சாதித்திருத்தலால் புத்திமானென்று பெயர்வாங்க எண்ணுதல் அறியாமையென்றுதெரிந்துகொண்டேன். சளசளவென்று ஓயாமாரி போலப்பேசுவதிற் பயனில்லை என்பது, கீச்சுப்பீச்சென்று கத்திக்கொண்டிருக்கும் கிளிப்பிள்ளையை ஒருவரும் மதியாததனுலே அறிந்துகொண்டேன். பிறர்பொருள் கவர்தல் தீமையென்பது, பருந்து நாய் முதலிய கொன்றுதின்னும் கொடிய பிராணிகளை யாவரும் வெறுத்தலாலே தெரிந்துகொண்டேன். புறங்கூறுதல், பொறுமை பேசல் முதலியவைகள் விஷத்திலும் கொடியவைகளாதலினுலே, விஷஜந்துக்களாகிய பாம்பு தேள் முதலியவற்றைக்கண்டு நடுங்கிவிலகுதல்போல, நம்மையும் வெறுப்பார்கள் என்றஞ்சி, அத்துர்க்குணங்களினின்றும் நீங்கலானேன். இவ்வாறே ஒவ்வொரு பிராணியினின்றும் எவ்வளவு அற்பமாயினும் உற்று நோக்குவார்கள் எவ்வளவோ உண்மைகளை உணர்ந்துகொள்ளலாகும்."—என்றவன்.

இந்த வார்த்தைகளைக்கேட்ட பண்டிதர் இடையனைநோக்கி "உன் அறிவும் பெருமையும் உண்மையாகவே மெச்சத்தக்கவைகளே. நீ சொல்லியபடியே, பண்டிதர்களை நம்புதற்கிடமில்லை. அவர்கள், அநேகமாகத் "தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்றபடித் தாம்கொண்ட கொள்கையை நிலைநிறுத்தவேண்டும் என்னும் பிடிவாதத்தாலும், அகங்காரத்தாலும், உண்மை ஒருவழியிருக்க ஒருவழியாகச் சாதிப்பார்கள். பிராணிகளோ அப்படியல்ல. அவை நம்மை ஒருபோதும் வஞ்சிப்பதில்லை. அவற்றின் நடை குணங்களைக்கண்டு, யதார்த்தங்களைத் தெரிந்துகொள்பவர்களுக்கு, உண்மையறிவுண்டாமென்பதில் தடையில்லை. அந்த ஞானத்தால் தானே வேறே பாண்டித்தியமில்லாமல் விவேகமும் மேன்மையும் அடையக்கூடுமென்பதும் உண்மையே."—என்றுசொல்லி இடையனை மெச்சி விடை பெற்றுக்கொண்டு போனுர்.

---

## PUZZLES.

## விடுகதைகள்.

### I. RIDDLES.

### விசித்திரக் கேள்விகள்.

1. எவ்விஷயத்தில் நாம் அரசனிற் பெரியோம்?
2. ஊசி எப்போது செவிடரை யொக்கும்?
3. எந்தப்பாத்தியில் முன்னே முளைக்கும்?
4. எவ்விடத்தில் சுகத்தை எப்போதும் காணலாம்?
5. எந்த மானுக்குக் கொம்பு கிடையாது?
6. எந்தக்குட்டிக்கு வாலில்லை?

### II.

1. கோழி குஞ்சு பொரிப்ப தெப்படி, தாழி நெய்யை எடுப்பதெப்படி?
2. பார்ப்பான் புத்தி படிப்ப தெப்படி, பணக்காரர் அரையில் உடுப்பதென்னது?
3. பாத்தி எப்படி நிறைவது, பசுவின் கன்றெப்படி முட்டுவது?
4. அக்கிரகாரம் எப்படி அழிவது, ஆனபயிர் எப்படிக் கெடுவது?
5. அரிசியை மாவாப்பண்ணுவது எப்படி, தமர்கள் புத்திசொல்வது எப்படி?


# THE IMPROVEMENT OF RURAL EDUCATION IN INDIA.

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God that sublime belief that seeing evil I yet have faith."*

*" Seek Truth wherever you can find it," But, " Make your choice and stick to it till you reach the End."*

"பஞ்சவிம்சதிபூாக்கியம்"] ஸத்தியம் வத—SPEAK THE TRUTH. ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE".




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 25.] பிங்களஹு ஐப்பசிமீ, 1917ஹு அக்டோபர்மீ. [சஞ்சிகை 7.



### Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our " terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *At one month's credit (arrears rate)* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with the Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued† in the middle of a Vol.
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

### General Notice.

i. The *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised ;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to " fluctuations " and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months *(time being an important factor)* ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

*(By Order of the Managing Committee.)*

THE MANAGING AGENTS, " VIVEKACHINTAMANI."
*Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore.*

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to* ☜

†Notice of discontinuance to have effect must be given in due time in writing before a New Volume begins in April and after all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say " that every effort will be made to trace them." " If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed " continues the same high authority, " I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should invariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## THE IMPROVEMENT OF RURAL EDUCATION IN INDIA.

(By Mr. C. V. Swaminatha Aiyar.)

The education of the children of the people in rural areas is of the greatest importance. But it is rural education that is neglected by those local bodies who are ostensibly entrusted with that important work. The educational needs of the children of the people in rural areas are but indifferently looked after owing to a system of dual control (fraught with much personal friction) which obtains in this Presidency. Mr. H. A. L. Fisher, President of the Board of Education, in his remarkable speech in Parliament said: "Perhaps one of the most beneficial consequences of the war has been a growing recognition by people of all ranks and classes of the vital importance of a well-planned system of education to national strength and welfare. Most significant of this widespread awakening to the urgent needs of education in all its varied aspects is the demand of both the labour and commercial and manufacturing interests not only for a higher standard of commercial and industrial training, but also a higher level of general education."

The level of general education in India is very low as it obtains now. That the conception of the needs of rural education is altogether faulty is recognised by all sober thinkers. Mr. V. Srinivasachariar, Chairman of the Municipal Council of Madura, pointed this out very clearly in a speech he made in July last with the Hon'ble Sir Alexander Cardew in the chair. Of fault finding criticisms we have had enough and more. What we want is the help of constructive genius for planning and carrying out "a complete system of education."

"Education is nothing if it is not a preparation for life. A complete system of education is one that affords means for the training of the capacities of every individual comprising a nation, enabling him at the end of his school career to earn his livelihood by honest labour."

A Japanese whose education has stopped with the primary grade, it is affirmed, will be able to earn his livelihood wherever he may go; whereas a graduate of our University will not be able to do so.

What we really want is a set of able, intelligent, self-relying and self-respecting men of good character to be our teachers in rural schools. The lay enthusiasm of the Local Boards for the betterment of the status of the teacher is undiscriminating. It may vote, out of generosity, a few more rupees to be paid to his monthly wage or it may try to hire more men to be teachers than before, but that will never solve the problem of rural education. We want a keen body of opinion among educationists themselves. And that is rendered impossible by the existing state of things. The treatment which is meted out to enthusiastic educational advisers as well as workers is such as to chill the most ardent spirits and make them realise that they cannot as self-respecting men venture to go beyond "the formal and wooden rules of pedagogy and pedagogic institutions and pay recognition to the intensely human character of the teaching profession." The result is a make-believe system of education in which the real educationist very soon loses faith and learns to let things take their own course. It is demoralising both to the educationist and to the self-governing bodies and between these two the interests of education of the children suffer grievously and to a woeful extent. It is well said on the authority of Professor A. C. Benson that the theory of education was the dullest imaginable thing while the practice of education was the most interesting. Education is not a matter of red-tape and routine as some educational bodies easily assume it to be and act up to it. It is not even an abstract scientific process as Professor Benson points out, but it is "a contact of living minds."

"The genius to teach is genius inborn and where it is available it has to be availed of to full advantage." In the promotion of rural education as well as "in manning pedagogic institutions" "the search for the genius to teach has to be keen." Dull seniority and duller handling of red-tape and routine is a source of much harm. And this harm threatens to ruin the influence for good of even the few that really take an interest in the improvement of rural education, is a fact to which the attention of the public and the authorities concerned has necessarily to be directed to prevent further mischief.

—*The Hindu*, 1st September, 1917.

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-7.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

பிங்கள௵ ஐப்பசி. விவேகசிந்தாமணி October-November 1917.

First Established, 1892. Our Jubilee Year, 1917.

31 JAN 1918 MADRAS

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றோ மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## THE IMPROVEMENT OF RURAL EDUCATION IN INDIA.

## இந்தியாவில் நாட்டுப்புறப் படிப்பு விருத்தி.

நாட்டுப்புறங்களிலுள்ள ஜனங்களின் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதை விருத்தி செய்யவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. ஆனால் காரியத்தில் அதுதான் உள்ளபடி கவனிக்கப்படாமலிருக்கிறது. நாட்டுப்புறங்களில் பாடசாலைகள் நியமித்து நடத்தல் வரவர லோகல் போர்டுகள் வசமாக ஒப்புவிக்கப்பட்டு வருகிறது. இப் பாடசாலைகளை மேல்விசாரணைசெய்து நடத்துகிற அதிகாரம் இருவகையார் வசமாகி இரண்டுபட்டுக் கிடப்பதால் இந்த முக்கியமான வேலை கிரமமாக நடப்பதில்லையென்கிற புகார் அதிகப்பட்டு வருகிறது. வித்யா இலாகா அதிகாரிகள் மேன்பார்வை செய்துவந்தாலும் அவர்களுக்கு சிபார்சு செய்ய மட்டும்தான் அதிகாரமிருக்கிறது. ஊக்கமும் முயற்சியுமுள்ள வித்யா விசாரணைகர்த்தர் ஒருவருடைய சிபார்சை வித்யாவிஷயங்களில் அவரைப் போல் அனுபவமில்லாதவர்கள் ஆலசியமாய்த் தள்ளிவிட்டால் அவருக்கு வருத்தத்துக்கிடமுண்டாகிறது. மேலும் சீமையில் வித்யா மந்திரியாகவிருக்கும் மிஸ்டர் எச். ஏ. எல். பிஷர் அவர்கள் இந்த மஹாயுத்தம் காரணமாக ஜனங்களில் உழைப்பாளிகளாயிருப்பவர்களும் வியாபார வர்த்தக துறையிலுழைப்பவர்களும் சிறுவர்களுக்குப் புத்திவிருத்தி, தொழில்விருத்தி சம்பந்தமான படிப்புச்சொல்லிக்கொடுப்பதில் முன்னிலும் மேல்தரமான படிப்புச்சொல்லிக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கோருகிறார்களென்று சொல்லி அதற்காக ஏராளமான பணம் செலவழித்து வித்யாமுறைகளைச் சீர்திருத்தி வருகிறார்.

இந்தியாவிலோ பொதுப் பள்ளிக்கூடங்களில் சொல்லிக்கொடுக்கும் படிப்பு இங்கிலாந்தைப்போல் அவ்வளவு மேலானதாகவில்லை. புத்தி விருத்திக்கான படிப்பே இப்படி அதிருப்திகரமாயிருக்கும்பொழுது தொழில்விருத்திக்கானபடிப்பு என்ன சொல்லிக் கொடுக்கப் போகிறார்கள். பிரதம வித்யாசாலைகளில் முதல்கொண்டு 'மனப்பழக்கம்' படித்து உளக்கண் திறப்பதற்கான படிப்பு பூஜ்யமாக விருக்கிறது.

பிள்ளைகளைப் படிப்பிக்கும் வித்தை பிரயாசமான வித்தை. அதற்காக உபாத்திமார்களாக நியமிக்கப்படுகிறவர்கள் புத்தி விருத்தியுள்ளவர்களாயிருப்பதோடு சூக்ஷ்மபுத்தியும் தன் மதிப்புமுள்ளவர்களாயிருக்க வேண்டும். "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்றிருப்பதால் மனம் படியப்பெறுவதே படிப்பின் உத்தேசமாயிருக்கவேண்டும். வித்யாவிருத்தி விஷயமாய் வேண்டிய முயற்சிசெய்ய வித்யாசிக்ஷையில் தேர்ந்து வித்யாதீக்ஷை பெற்றவர்களைப் பொறுக்கியெடுக்கும் சாமர்த்தியம்வேண்டும். இதுதான் போர்டாருக்கில்லை.

இதனால் ஜனங்களின் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பது வரவர சிறப்புக்குன்றி பரீக்ஷைக்கு வேண்டிய சில பாடங்களை மட்டும் மனப்பாடம் செய்துவைத்து வருகிறார்கள். இப்படிப்பட்ட படிப்பு உள்ளபடி மனம் படியப் பெறுவதற்கான படிப்பாகுமா?

"சத்தியமே நன்மார்க்கந்
தவறுவரும் மற்றெதிலும்
வித்தையிதில் லாபமெத்த
விசுவாசம் மெத்தமெத்த"

என்று விவேகத்தாய் கூறியிருப்பதால் இந்த நன்மார்க்கம் படிய இடமில்லாதபோது படிப்பு ரஸமற்றதாகப் போகிறது.

பிள்ளைகளுக்கு நல்ல பேர் எடுக்கவேண்டுமென்கிற அவா உதிக்கச் செய்வதே உண்மையான படிப்பின் பிரயோசனமாம்.

"பூட்டிவிட்ட தேகமிது
போயழியு மென்னாளும்
நாட்டிலுள்ள வாழ்வினுக்கு
நற்பெயரே கண்டபலன்"

என்பதைக் குழந்தைகள் கிரகித்துணர்வது எப்படி? கூலிக்கு மாரடிக்க வந்தவரை யெல்லாம் வேலிக்குப் படல் வைத்துக் கட்டச் சொன்னால் அந்த வேலை எப்படிச் சரிவர நிறைவேறும். பாடுபட்டுப் பயிர் செய்வோனுக்கல்லவோ வேலி போடவேண்டியதனவசியமும் அதன் பொறுப்பும் பிரயோசனமும் நன்றாகத் தெரியும்?

இப்படி ஸ்தானிக சுய ஆக்ஷியின்கீழ் நமது நாட்டுப்புறத்துப் பிள்ளைகளெல்லாம் பௌட்டியம் நீங்காதவர்களாய்த் தேர்ச்சியின்றி வாலிபம் கழிய நேரிட்டால், ஜன சமஷ்டியின் யோகக்ஷேமம் நல்லபடியாக விருத்திப்பது எப்படி? சுவற்றை வைத்துக்கொண்டல்லவோ சித்திரத்தை எழுதவேண்டும். பிள்ளைகளை பிள்ளைப் பருவத்தில் நன்றாக மனப்படியப் பழக்கினாலல்லவோ, அவர்கள் பெரியவர்களானபின் தேசக்ஷேமத்துக்கு உழைக்கவல்லவர்களாவார்கள். ஜப்பானில் பிரதம வித்யாசாலையில் படித்துத்தேறினவர்களெல்லாம் எங்குபோனாலும் அவர்கள் ஜீவன மார்க்கத்தைத் தேடிக்கொள்ள யோக்கியர்களாயிருப்பார்களாம். இந்தியாவிலோ உயர்தரப் படிப்பு பெற்றவர்களுக்குக்கூட அந்த யோக்கியதை இல்லை. இப்படிப்பட்ட படிப்பு என்னத்திற்குப் பிரயோசனப்படும்.

"உள்ளபல பூமியெல்லாம்
ஓர்குடைக்கீழ் ஆண்டாலும்
பிள்ளையை வளர்க்கும் வித்தை
பிரயாசமான வித்தை"

என்பதினுண்மையை நம்மவர்கள் இன்னும் நன்றா யுணர்ந்தார்களென்று தோன்றவில்லையே. மனம் செம்மைப் பட்டால்தான் எல்லாம் செம்மைப்படும். மனம் செம்மைப் படாவிட்டால் வேறு எதுவும் செம்மைப் படாது.

"ஆராய்ந்து உலகனைத்தும்
ஆண்டாலும் பிள்ளையொன்றை
நேராக்க மாளாது
நிச்சயந்தான் நிச்சயந்தான்"

என்று விவேகத்தாய் அறைந்தறைந்து சொல்லியும் அதை யுணராதவர்களுக்கு நாம் என்னத்தைச் சொல்லி புத்தி புகட்டுவதென்று தெரியவில்லை. ஒரு ராஜ்ஜியமாண்டாலும் ஆளலாம், இளம் பிராயத்தில் கோணல் வழி பற்றிய ஒரு பிள்ளையைப் பின்னால் முயற்சித்து நேராக்கமாளாது. இது உண்மையாகவிருக்க எத்தனையோ ஏழை ஜனங்கள் பிள்ளைகளை படிப்பிக்கிறோம் என்கிற வியாஜம் வைத்துக்கொண்டு அவர்கள் மனம் படியும் வழியைப் பார்த்துழைக்காமல் அது கொண்டிமாடுபோல் அலையவிட்டுக் காலம் போக்கி வருகிறார்களே. ஐயோ! பின்னால் இவர்களையெல்லாம் நேராக்குவதெப்படி? இதை உள்ளபடி உணர்ந்து நடப்பாரில்லையே! ஈசுவரா!



## EDUCATION IN ENGLAND.

### A COMPARISON AND A CONTRAST.

*Mr. Fisher's proposals in the New Education Bill, now before Parliament, may briefly be summarised as follows for the purpose of comparison and contrast with what prevails in India:—*

1. His general aim is "to provide enlarged and enriched opportunities of education to the children of the poor," who are to be given compulsory education freely up to the age of 14.
2. Child-labour under 12 years of age to be strictly prohibited.
3. Half-timings and exemptions from school attendance to be abolished.
4. Attendance at "continuation schools" up to 18 to be made compulsory for all who have not received a full-time course up to 16.
5. Voluntary "nursery schools" for babies up to the age of 5.
6. Providing for medical care and physical training throughout the whole period of school education.
7. Good teachers with proper training, adequate pay and a higher consideration for the profession, to be made available.
8. Private schools to be brought under the purview of ministry of education.
9. Allotment of consolidated elementary school grants to Provincial Associations to be founded for the purpose, which will allocate the sums with greater elasticity and freedom.
10. Mr. Fisher urged in the House of Commons "that to the greater demand upon the civic spirit of every man and woman in these momentous times, no intelligent response could be expected unless the House was prepared to make some sacrifices in order to form and fashion the mind of the young."

☞ This is as true of India as of England. Will the Government provide the same facilities for "the education of the children of the poor" people in this country and come forward to make the necessary sacrifice?

## இங்கிலாந்தில் படிப்பு விருத்தி இதையும் அதையும் ஒத்துப் பாருங்கள்.

இந்தியாவில் ஏழை ஜனங்களின் குழந்தைகள் படிப்பு இந்த ஸ்திதியிலிருக்க, சீமையில் சர்க்கார் இது விஷயமாய் செய்துவரும் முயற்சியைப் பாருங்கள். இதற்கும் அதற்கும் எவ்வளவு வித்யாசமிருக்கிறது.

சீமையிலே வித்யா மந்திரியாகிய மிஸ்டர் பிஷர் அவர்கள் செய்யத் தீர்மானித்திருக்கும் புதிய ஏற்பாடுகளைத் திரட்டி இதன் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம். வேதபூமியென்று பேர்பெற்ற இத்தேசத்தில் வித்யாதானமே எல்லா தானங்களிலும் மேலானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சீமையிலுள்ள ஏழைஜனங்களின் குழந்தைகளை ஆளாக்கிவிடச் செய்து வரும் சாதனங்கள் இத்தேசத்துக் குழந்தைகளுக்கும் அவசியமென்று நாம் சொல்லாமற்றானே எல்லாருக்கும் படும். நமது இந்தியா கவர்ன்மெண்டார் இத்தேசத்து ஏழை ஜனங்களின் குழந்தைகளை ஆளாக்கிவிட அதே மாதிரி ஏற்பாடுகள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்வார்களா? என்பது தான் கேள்வி. செய்யாவிட்டால் பாலர்கள் விஷயத்தில் ஓரவஞ்சனை செய்ததாக வல்லவோ ஏற்படும்! அந்தக் குற்றத்துக்கும் தோஷத்துக்கும் ஆளாகலாமா? துரைத்தனத்தார் அதற்கு ஆளானால் அது அரசியல் தர்மத்துக்கு அடுத்ததாகுமா? இதை அவர்களே யோசிக்கவேண்டும். ஏனெனில் தற்சமயம் இந்தியர்கள் வாயில்லாப் பூச்சிகளாய் வைக்கப்பட்டிருக்கிறார்கள். மைசூரில்கூட பிள்ளைகள் எல்லாருக்கும் படிப்புச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடுசெய்து பெண்களுக்கும் அப்படியே செய்ய முயற்சித்து வருகிறார்கள்.

## CHILD-NATURE AS AID TO EDUCATION.

### பிள்ளைகளின் இயற்கையினாலுண்டாகும் வித்தியாப்பியாசத்துக் கனுகூலமான பயன்.

பிள்ளைகளின் சுறுசுறுப்புத் தனத்தையும் விளையாட்டுத்தனத்தையும் நல்வழியில் திருப்புவது உபாத்தியாயரின் கடமையென்று முன் சொன்னோம். அது எப்படி யென்று ஒருவாறு தெளிய உரைப்போம்.

1. சுறுசுறுப்புத்தனம். — பிள்ளைகளுக்கு இயல்பாயுள்ள சுறுசுறுப்புத்தனம் காரணமாக அவர்கள் வகுப்பில் பாடம் நடக்கும்பொழுது இடை இடையே கை துறுதுறுத்து விஷமங்கள் செய்வது வழக்கமென்று சொன்னோம். எந்தப்பாடம் நடத்தும்பொழுதும் கொஞ்சநேரம் சொல்லிக்கொடுத்த பிறகு, சொல்லிக் கொடுத்த அம்சங்களை பலகையிலோ நோட் புத்தகத்திலோ எழுதச்செய்தால் பிள்ளைகளின் துறுதுறுத்தகைகளுக்கு ஒருவேலை யேற்படும். அப்படியெழுதச் செய்வதினால் வகுப்பு முழுவதும் சப்தமின்றி யிருப்பதுடன் அம்சங்கள் மனதில் நன்றாய்ப் படுதல், கையெழுத்துப் படிதல் முதலிய லாபங்களும் ஏற்படும். விஷமமும் பிறருக்குத் தீங்கும் விளையாது. எழுதத் தெரியாத சிறியபாலர்கள் (Infants) வகுப்பில் அடிக்கடி 'டிரில்' (Drill) நடத்தவேண்டியது. இன்னம் ஒரு உதாரணம் : ஒரு இலையோ அல்லது புஷ்பமோ ஒன்றைக்காண்பித்து அதை நன்றாய் கவனத்துடன் பார்க்கச்செய்து 'ஸ்கூல் தோட்டத்தில் இந்தமாதிரி இலை யல்லது புஷ்பம் இருக்கிறது; அதை யார்கண்டு பிடித்துப் பறித்து வருகிறீர்கள் பார்ப்போம்' என்று பிள்ளைகளைப்பார்த்து உபாத்தியாயர் சொன்னால், உடனே பிள்ளைகள் ஸ்கூல் தோட்டத்தில் அங்குமிங்கும் ஓடி குறிப்பிட்ட இலையையோ அல்லது புஷ்பத்தையோ பறித்துவர முயலுவார்கள். அவர்கள் கொண்டுவராமற்போனாலும், கொண்டுவருவது சரியானதா யில்லாமற்போனாலும், அங்கும் இங்கும் ஓடினதால் கைகால்களின் துறுதுறுத்த தனம் சற்றுநேரம் அடங்கியிருக்கும். பிள்ளைகளுக்கு அது விளையாட்டாகத் தோன்றுமாதலாலும் நாம் முன்னதாய்க் கொண்டுபோக வேண்டும் என்று ஒவ்வொருவரும் ஆவலுடன் ஓடுவதாலும் பிள்ளைகளுக்கு உண்டாகும் ஆநந்தத்திற்கு அளவில்லை. ஓடுவதினால் அவயவங்கள் திடப்படும். இது தவிர ஸரியான இலை, பூவைக்கொண்டு வந்துவிட்டாலோ அவர்களுக்கு ஸ்திரமாய் ஏற்படுகிற லாபம் ஒன்றுண்டு. குறித்த இலை யல்லது புஷ்பம், இதைக் கண்டுபிடிப்பதில் அநேக இலை புஷ்பங்களை யொப்பிட்டுப் பார்த்து சமான மல்லாதவைகளை நீக்கிச் சமானமானவைகளைத் தேர்ந்தெடுக்கும்படியான பகுத்தறிவு உண்டாகும். இந்த லாபங்களெல்லாம் உண்டென்ற சங்கதியை கொஞ்சங்கூட அறியாமல் சிறு குழந்தைகளைக் காலைமுதல் சாயங்காலம் வரையில் மணி யொன்றுக்கு ஒரு பாடம் விதம் 6-மணி நேரம் மறித்துப்போடலாமா? நல்ல பகுத்தறிவுடைய வயது வந்தவர்களாகிய நாம் ஒரு உபந்யாஸம் கேட்டுக்கொண்டிருப்பதாய் வைத்துக்கொள்ளுவோம். அது கேட்க மிக இனிமையாயிருந்தபோதிலும் அதினால் நமக்கு நூதனமும் முக்கியமுமான சங்கதிகள் அநேகம் தெளிவாய் விளங்குவதா யிருந்தாலும், உபந்யாஸம் சொல்லுகிறவர் கொஞ்சம் இளைப்புக்காக நிறுத்தினால், சும்மா உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்த நமக்கு என்ன சிரமம்! இருந்தாலும் அவர் நிறுத்திய அந்த நான்கு நிமிஷங்களுக்குள் எவ்வளவோ சந்தோஷத்துடன் கைகால்களை யசக்கிக் கொடுத்துக்கொண்டு மூச்சு நீர்க்கமாய் விட்டுக்கொண்டும் இருமி தொண்டையைக் கனைத்துக்கொண்டும் எழுந்திருந்து நின்றும் அந்தப்புறம் இந்தப்புறம் திரும்பியும் நாம் நம்மை சீர்திருத்திக் கொள்ளுகிறோமல்லவா? அதாவது பெரியவர்களுக்குக்கூட கை கால்களை அசைக்காமல் உட்கார்ந்திருப்பது கஷ்டந்தான். எப்பொழுது அந்த நிலைமை மாறி யதேச்சையாய் அவைகளை யாட்டியசைக்கப் போகிறோமென்ற ஆவல் உண்டாகும். மேலும் நம்முடைய படம் (photo) எடுத்துக்கொள்ள நாம் நிதானமாய் உட்கார்ந்திருக்கவேண்டியது இரண்டு மூன்று



விநாடிகள்தானே. அந்தக் காலங்கூட சரியாய் இருக்க முடியாமல் எவ்வளவு பேர்கள் தங்கள் (photo) படங்களைக் கெடுத்து விடுகிறார்கள். சும்மா இருப்பது பெரியவர்களுக்கே இவ்வளவு கஷ்டமான வேலையானால் பிள்ளைகளுக்கு அது எவ்வளவோ மடங்கு அதிக கஷ்டமாயிருக்குமென்பதைச் சொல்லவேண்டியதில்லை.

2. விளையாட்டுத்தனம். — பிள்ளைகளுக்கு இயற்கையான குணங்களில் மற்றொன்று விளையாட்டில் பிரியம். இது முதலில் சொல்லிய குணத்துடன் ஒட்டியதுதான். பிள்ளைகள் எப்பொழுதும் குதூகலத்துடன் விளையாடிக்கொண்டே யிருப்பார்கள். ஆகையால் சிறு பிள்ளைகளின் வகுப்பிற்கு வயது சென்றவர்களையாவது அசௌக்கிய ஸ்திதியில் உள்ளவர்களையாவது உபாத்தியாயர்களாக, ஏற்படுத்தக்கூடாது. இவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஒத்து வரமாட்டாது. வயது சென்றதினாலும் அசௌக்கியத்தினாலும் உபாத்தியாயர்களுக்கு குதூகலமில்லாமலும் எதைக்கண்டாலும் அருவைப்பட்டுக்கொண்டுமிருப்பார்கள். அடிக்கடி கோபம்வரும், உபாயப் பிழைகளைக் கூடப் பொறுத்துக்கொள்ளக் கூடாதவர்களாய் எடுத்ததெற்கெல்லாம் பிள்ளைகளைத் தண்டிப்பார்கள். இவர்களுக்கும் சதா ஓடியாடிச் சிரித்து மனக்கவலையன்னியில் விளையாடிக்கொண்டிருக்கும் இயற்கையையுடைய சிறுபிள்ளைகளுக்கும் எவ்வளவுக் கெவ்வளவுதூரம்? சிறுபிள்ளைகளுடன் மனது கலந்து அவர்களுடன் சேர்ந்து விளையாடி இவரும் நம்மில் ஒருவர்தான் என்ற எண்ணம் பிள்ளைகளுக்கு உண்டாக்கக் கூடியவர்தான் அவர்களுக்கு உபாத்தியாயர்களாக ஏற்படத் தகுந்தவர்கள். பிள்ளைகளின் விளையாட்டுத் தனத்துக்கு அனுகூலமாய் உபாத்தியாயர் ஏற்பாடுகள் செய்யவேண்டியது. (Infant) சிறுவர் வகுப்புப் பிள்ளைகளுக்கு மற்ற வகுப்புப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்துவதுபோலப் பாடங்கள் ஏற்படுத்தாமல் விளையாட்டுகள் ஏற்படுத்தவேண்டியது. நமது நாட்டில் சிறு பிள்ளைகளுக்குள் எத்தனையோ விளையாட்டுகள் உண்டு. அவைகளெல்லாம் இப்பொழுது சில கிராமாந்தரங்களில் தவிற வேறு இடங்களில் கிடையாது. அவை (Infant) பாலர் வகுப்பு பிள்ளைகளுக்கு மிகவும் தகுந்தவை. இவைகளெல்லாம் பிள்ளைகளுக்கு விளையாட்டாகத் தானிருக்கும். ஒரு விளையாட்டு ஒரு சமயத்தில் பிடிக்காமல் போனால் அவர்கள் இஷ்டப்படியே விட்டுவிட வேண்டியது. இந்த விளையாட்டுகளில் பிள்ளைகள் வேடிக்கையாய் சந்தோஷத்தை யடைவதுடன் கண்ணினால் பார்க்கிற திறமையும் காதினால் கேட்கிற திறமையும் அவர்களுக்கு விர்த்தியாகும். உபாத்தியாயரிடத்தில் பிரியமும் அவருடன் எப்பொழுதும் கலந்திருக்க விருப்பமும் பள்ளிக்கூடத்தை நினைத்தால் சந்தோஷமும் உண்டாகும்.

---

### முக்கிய அறிக்கை.

இந்த விவேகசிந்தாமணியை வாங்கி வாசித்து வரும் உபாத்தியாயர்கள் ஒவ்வொருவரும் இப்புஸ்தகத்தை பத்திரமாகச்சேர்த்து 'பயிண்டு' செய்து வைத்துக்கொண்டு வந்தால் இதுவே ஒரு முக்கியமான நல்லறிவு புகட்டும் கல்விக் களஞ்சியமாயுதவும். அடிக்கடி பார்த்துப் படித்து மனதைத் திருத்திக் கொள்ள உபயோகப்படுவதாகும். ஆகையால் இதை வரப்பெறும் ஒவ்வொரு உபாத்தியாயரும் அதை அவர்கள் நலம்பெற உபயோகித்து வருவதற்கடையாளமாக இதைக்கொண்டு அவர்கள் பயன்பட உழைத்து வருவதைப்பற்றி அவர்களுடைய விலாஸத்திற்கண்ட நெம்பரைக் குறித்து முழுவிலாஸத்தோடும் நமக்கு எழுதித்தெருவித்து வரவேண்டும். கவர்ன்மெண்டார் விவேகசிந்தாமணி பிரதம பாடசாலைகள் எல்லாவற்றிலும் உபயோகிக்க ஏற்றமானதென்று ஒவ்வொரு ஸ்கூலுக்கும் ஒரு காபி வாங்கி யனுப்ப உத்தரவு செய்திருக்கிறார்கள்.

மானேஜர், விவேகசிந்தாமணி.

Every elementary schoolmaster must have a copy of the *Vivekachintamani* for himself and his school. It is the best and most economical thing in the long run, as it infuses a spirit of inquiry and a desire to enlarge the mind by the constant presence of the volume being in his possession which he individually has to care for and preserve as school property. "When so kept they serve as a permanent and continuous volume of reference and useful knowledge for pupils and teachers. So, I would strongly recommend the supply of the Journal to be made to all the schools on the principle of one copy for each school." The teachers are requested to put themselves in communication with the Managing Agents of the *Vivekachintamani*, who will afford them every facility for each of them securing a copy. The annual subscription is Rs. 5 per volume payable in advance. (*Vide* "Terms".)

*Address*:—THE MANAGING AGENTS,
*Vivekachintamani*, 19, *Adam Street*,
*Mylapore, Madras, S.*

## ON THE CHOICE OF BOOKS.

### "நூல்களும் நூலாராய்ச்சியும்"

இது, எட்டியபுரம் மாணவர் சங்கம் உபஅக்கிராசனாதிபதியாகிய, மிஸ்டர் சுந்தரமய்யர் அவர்களால் ஒரு தமிழ்ச்சங்கத்தின் முன்பு வாசிக்கப்பட்டதின் சாராம்சம்.

நாமின்றெடுத்துக்கொண்ட விஷயம் மிகப் பெரியதாயினும் அதைப் பின் வருமாறு பிரித்துக்கொண்டு எனது சிற்றறிவுக் கெட்டியவற்றை உங்களுக்குச் சொல்லத் துணிகிறேன்.

உயர்ந்த நூலாசிரியர் யாவர்? உயர்ந்த நூல்கள் யாவை? அவர்கள் செய்யும் வேலையென்ன? அவர்கள் நூல்கள் எத்தகையவை? எவ்வாறு விர்த்தியடைகின்றன? அவற்றை நாம் எவ்வாறு ஆராய்ச்சி செய்யவேண்டும்? என்ற விஷயங்களைப்பற்றிச் சற்று கவனிப்போம்.

உயர்ந்த நூலாசிரியர் யாவர்? உயர்ந்த நூல்கள் யாவை? என்பது நமது முதற்கருத்து. தம்மகத்தில் தோன்றுவனவற்றை நன்குணர்ந்து அவற்றைப் பிறர் நன்குணருமாறு சொல்லுபவர்கள் உயர்ந்த நூலாசிரியர். அவர்களது காவ்யங்களே உயர்ந்த நூல்களாகும். உலகத்தோருக்கு அறிவை அபிவிர்த்தி செய்யக்கூடியதாகவும் அவர்களுடைய அறிவுக்கு ஆனந்தத்தைத் தரக்கூடியதாயும் இறைக்க இறைக்க ஊறிக்கொண்டிருக்கும் ஊற்றைப்போல் படிக்கப் படிக்கப் பேரின்பத்தையும் உற்சாகத்தையும் உயர்ந்த அறிவையும் உலகியலையும் ஊட்டக் கூடியதாயுமான நூல்களே நன்னூல்களாகும். இத்தகைய நூல்களின் கர்த்தாக்களே உயர்ந்த நூலாசிரியராவர்.

உலகில் நடைபெறும் விஷயங்களை அன்றன்று அவசரமாய்த் தெரிவிக்குமாறு பத்திரிகைகளில் எழுதப்படுபவை உயர்ந்த நூல்களாகுமா? இல்லை. உதாரணமாக (Holinshed) ஹாலின்ஷெட் என்பவர் ஆங்கில சரத்தில் சில விஷயங்களைக் குறித்திருக்கிறார். அவற்றைக்கொண்டு ஷேக்ஸ்பியர் என்பவர் அரிய பெரிய நாடகங்களை எழுதியுள்ளனர். விஷயங்கள் இரண்டிலுமுள்ளன. ஆனால் முற்கூறியது நல்ல கிரந்தமில்லையென்றும் பிற்கூறியவை உயர்ந்த நூல்களென்றும் சொல்லுகிறார்கள். ஷேக்ஸ்பியரின் நூல்களினாலேயே முற்கூறியவரின் பெயரும் அவருடைய குறிப்புக்களும் இதுகாறும் தங்கியுள்ளன. இன்னும் கம்பராமாயணத்தைப் போன்ற கிரந்தங்களையும் அவற்றிலுள்ள விஷயம் சுருக்கமாய் எழுதப்பட்டு வெளிவரும் தற்காலத்திய புத்தகங்களையும் உற்றுணர்ந்தால் உயர்ந்தநூல் யாதென்பது நன்கு விளங்கும். உயர்ந்த நூல்களெனப்படுபவை நம்மனத்தை எப்பொழுதும் கவருவதையும் படிக்கப் படிக்க இன்பம் பெருக்குவதையும் அவையல்லாதவை ஓர் முறைபடிப்பதன்முன் மனச்சோர்வு தருவதையும் கவனிக்கலாம் இதற்குக் காரணம் விஷயங்கள் எழுதப்படும் விதமும் அவற்றை எழுதுகிறவர்களின் திறமையுமே.

உயர்ந்த நூலாசிரியர் யாவர், உயர்ந்த நூல்கள் யாவை என்று ஒருவாறு அறிந்தபின்னர், அவர்கள் செய்யும் வேலை இன்னதெனச் சற்று ஆராய்வோம். முதலாவது இவர்கள் தம் பாஷையை விர்த்தி செய்கிறார்கள். காலத்திற்கேற்க நூதனமான பதங்களையும் பதச் சேர்க்கைகளையும் உண்டாக்கி அப்பாஷையைப் பேசுபவர்கள் யாவரும் தத்தம் எண்ணங்களைத் தெளிவாய்த் தெரிவிக்கும்படிக்கு உதவுகின்றார்கள். இவ்வாறு பாஷையை விர்த்தி செய்யாவிட்டால் நேரும் கேடுகள் இன்னவென்பதை நாமெல்லோரும் நன்குணர்ந்திருக்கலாம். நமது தாய் பாஷையாகிய தமிழ் வெகுகாலமாக யாதொரு அபிவிர்த்தியுமடையாமல், ஆதரிப்போரின்றி மேன்மை குன்றிப்போய் பண்டை நிலையிலேயேயிருந்துவிட்டதையும் அதனால் இப்பொழுது நேர்ந்துள்ள துன்பங்களையும் நாம் செவ்வையாய் உணரலாம். அநேகர் சாதாரணமாய்த் தம்



சிநேகர்களுடனும் சுற்றத்தாருடனும் நல்ல தமிழில் சம்பாஷிக்கச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். அநேகர் தாம் பேசும் பொழுது அன்னிய பாஷை கலக்காமல் பேச முடியவில்லையென்கிறார்கள். அப்படிக் கலப்பின்றிப் பேசுவதற்கு முயற்சி செய்ய மனமில்லாதவர்களாயுமிருக்கின்றனர் அநேகர். அப்படி முயற்சி செய்வது இழிவெனக் கருதுபவர்களுமுளர். இப்படிக்கெல்லாம் வந்ததற்குக் காரணங்கள் பலவுண்டாயினும், நம் பாஷையை ஆதரிக்காமல் அதன் அகராதியை அபிவிர்த்தி செய்யாமல் விட்டுவிட்டது ஒன்றாகும்.

ஆங்கிலபாஷையானது எலிசபெத் (Elizabeth) அம்மை காலத்திலிருந்த நிலையையும் தற்கால நிலையையும் கவனித்தால் மிகுந்த ஆச்சரியம் விளையும். அவ்வம்மை காலத்தில் அது மிகத் தாழ்வான நிலையிலிருந்தது. அக்காலத்தில் தமிழுக்கு நேர்ந்திருந்த புகழின் பத்திலொரு மடங்குகூட அவ்வாங்கிலபாஷைக்கு இல்லையென்பதை அப்பாஷையின் சரித்திரத்தைப்படிப்பவர்கள் அறியலாம். அதன்நிலைமை சீதளதேசத்தில் வளரும் ஓர் சிறுசெடியினையதாயிருந்தது. தற்காலத்திலோ மழையும் வெயிலும் மிகுந்துள்ள உஷ்ணமண்டலத்தில் வளரக்கூடிய பிரமாண்டமான விருக்ஷத்தைப்போல ஓங்கி வளர்ந்திருக்கிறது. இணையற்றதெனச், சொல்லும்படி அவ்வளவு விர்த்தியடைந்திருக்கிறது. காரணம் என்னவெனிலோ எலிசபெத்தம்மை காலத்தில் ஜனங்களுக்கு ஞானவிதத்திலும் ஊக்கம் மேலிட்டு அநேகவழிகளில் உழைத்தார்கள் பலபேர் பாஷையைப் பரிபாலித்தனர். பல்லாயிரம் பேர் அதை விர்த்திசெய்தனர். அம்மகாராணியே அதைப் பரிபாலித்து பாஷா விர்த்தி செய்பவர்களாகிய கவிஞர்களுக்கும் ஞானிகளுக்கும் ஏராளமான உதவி புரிந்தனள். வேறொன்றையும் கருதாது பாஷை விர்த்தியே முதற்காரணமாகக் கொண்டு, அன்னிய பாஷைகளைக்கற்று, அவற்றினுதவியைக்கொண்டு நூதனமான வார்த்தைகள் ஏராளமாக உண்டுபண்ணியும் அப்பாஷைகளிலுள்ள அரிய நூல்களைத் தம் பாஷையில் மொழிபெயர்த்தும் தம்பாஷையை விர்த்திசெய்தார்கள். அதுமுதல் இதுவரை அநேகர் செய்யுள் அல்லது வசனரூபமாய் அரியவிஷயங்கள் எழுதி அறிவை விர்த்திசெய்வதுடன் பாஷையையும் விர்த்திசெய்து வந்திருக்கிறார்கள். ஓர் தேசத்துபாஷை விர்த்தியடைந்தால் தான் நாகரிகமும் அறிவும் விர்த்தியடையக் கூடுமென்பதை அவர்கள் நன்றாய்த்தெரிந்தார்கள். ஷேக்ஸ்பியர், கார்லைல் (Carlyle) போன்றவர்கள் இலக்கணத்தையும் வழக்கத்தையுங்கருதாது புதிய பதங்களும் புதிய பதச்சேர்க்கைகளும் உண்டுபண்ணலாயினர். இவ்வாறு செய்ததின் பலன்களை ஆங்கிலேயர் மாத்திரமல்ல உலகம் முழுதும் அநுபவிக்கின்றது. ஆகையால் பாஷை விர்த்தியடைய வேண்டியது அத்தியாவசியமாகும். இவ்வித விர்த்திக்கு அறிவுபொருந்திய நூலாசிரியர்களே காரணமாவர்.

பாஷையை விர்த்தி செய்வதுடன், இவர்களது நூல்கள் எதிரிலுள்ளவைகளின் பிம்பத்தைச் சற்றும் குற்றமின்றிக் காண்பிக்கும் பரிசுத்தமான பளிங்குக் கண்ணாடியைப்போல் உலகத்தில் நடைபெறுபவைகளைத் தெளிவாய்க் காட்டுகின்றன. ஜனங்களின் நடையுடை பாவனைகள், அப்போதப்போது ஏற்படும் மனப்போக்கு, விருப்பு, வெறுப்பு, முயற்சி முதலியவைகளைத் தெளிவாய்த் தெரிவிக்கின்றன. எத்தனையோ விஷயங்களை நாம் செய்கிறோம்; பார்க்கிறோம்; கேட்கிறோம்; கவனிக்கிறோம். ஆனால் இவையெல்லாம் நமக்குத்தெரிந்தும் தெரிந்ததாகத் தெரிந்தோமில்லை. பெரியோர்களால் எழுதப்பட்ட புத்தகங்களைப் படிக்கும்பொழுது அவற்றிலுள்ளவை பல நமக்குத் தெரிந்ததாகவாவது அல்லது நாம் அநுபவித்ததாகவாவது நேருகின்றது. ஆனால் அவற்றை நுட்பமாய் அறிந்து பிறருக்குத் தெளிவாய்க் கூறும்படியான சக்தி பலருக்கு இல்லாமற் போகின்றது. அநேகர் கண்களைப் பெற்றிருந்தும் சரியாய்ப் பார்க்க முடியவில்லை. காதுகளிருந்தும் நல்ல

வைகளைக் கேட்க முடியவில்லை. நாவிருந்தும் நல்லவைகளை உருசிக்க முடியவில்லை. இவர்களுக்கெல்லாம் நுண்ணறிவுள்ள பெரியோர்கள் சரியான கண்களையும் காதுகளையும் கொடுக்கிறார்கள். தெரியாததைத் தெரியும்படி செய்கிறார்கள். ஞானத்தை ஊட்டுகின்றார்கள். அஞ்ஞானமெனும் இருளை அகற்றுகின்றார்கள். இன்னும் ஏற்ற சமயங்களில் தகுந்த புத்திமதிகளைக்கூறி நன்னெறியில் நடக்கும்படி வழிகாட்டுகிறார்கள்.

உதாரணமாக, இராமாயணம் அல்லது பாரதம் போன்ற உயர்ந்த நூல்களை நாம் படிக்குங்கால் வெகு நாட்களுக்குமுன் நம் நாடிருந்த நிலையையும், இந்நாட்டு ரிஷிகள் ஞானமும் வலிமையும் மேன்மையும் பொருந்தி, இன்பமாய் வாழ்ந்து வந்ததையும் அவர்களுக்கு அரசர் முதல் யாவரும்பயந்து நடந்ததையும், அரசர்கள் குடிகளின் நன்மைக்காகவே செங்கோல் புரிந்து வந்தார்களென்பதையும், குடிகளின் நாகரிகத்தையும் விசேஷமாய்த் தெரிகிறோம். இந்தியாவின் பூர்விக சரித்திரம் இதுகாறும் சரியாய் எழுதப்பெறாவிட்டாலும் இவற்றைப் படிப்பதினின்றும் உலகம் முழுதும் அஞ்ஞானமெனும் பேரிருட்டில் மூழ்கியிருந்த காலையிலும் நம்மிந்தியா மிகுந்த ஞானவொளி பெற்றிருந்ததென்றும் நாகரிகமுள்ளதென்றும் ஐயந் தெளியத் தெரிந்து கொள்ளலாம். இராஜ தர்மம், இராஜ விசுவாசம், பதிவிரதா தர்மம், புத்திரவாஞ்சை, சகோதர வாஞ்சை, பெற்றோரைப் பேணல், குருபக்தி முதலிய நற்கர்மங்கள் நன்மை பயப்பதையும், காமம், வெகுளல், சதி, துரோகம் முதலிய தீய செயல்கள் தீமை பயப்பதையும் தெரிகின்றோம். அப்பொழுது நமக்கு உலகியல் நன்றாய்த் தெரிவதுடன் நாமும் நல்லவர்களைப் பின்பற்றி அவர்களடைந்த நன்மைகளை நாமும் அடைய முயலுகிறோம்.

பரதன் தனக்கு ராஜ்யம் முழுவதுங் கிடைத்தும் பூமியாசையை வெறுத்து சகோதர வாஞ்சை மேலிட்டு தன் தாய் இராமனுக்குச் செய்த சதியை நினைத்து நினைத்து வருந்தி அவளையும் நிந்தித்து, கானம் சென்று இராமனது பாதுகைகளைப் பெற்று அவைகளுக்குப் பட்டாபிஷேகம் செய்து தன் தமயனுக்காகத் தான் இராஜ்ய பரிபாலனம் பண்ணினான் என்று படிக்கும்பொழுது நாம் பரதனுடைய குணத்தை வியந்து அவனைப்போல் சகோதர வாஞ்சையுள்ளவர்களாக விருக்க விரும்புகின்றோம். விசுவாமித்திரர் இராமனைக் கேட்டபொழுது தசரதர் "கண்ணிலான் பெற்றிழந்தாலெனவு ழன்றான்" என்று படிக்கவும் நாம் அவருடைய மனச் சோர்வை அறிந்து பரிதாபப்படுவதுடன் காவ்யகர்த்தாவின் திறமையையும் நுண்ணறிவையும் உணருகிறோம். பின்பு, கூனியைப்போல சதிசெய்பவர்கள் எவ்வளவு ஒற்றுமையுள்ளவர்களையும் வேற்றுமைப்படுத்தி விடுவார்களென்பதை அறிகிறோம். தர்ம புத்திரர் தனது மாற்றாந்தாயாகிய மாத்திரியை மகிழ்விக்குமாறு செத்துக் கிடந்த நால்வரிலும் அவளது அருமைப் புதல்வனை நகுலனை உயிர் பிழைத்திருக்கட்டும் என்று யக்ஷனிடம் கேட்டார். இதைப் படிக்கும்பொழுது உலகத்தில் மாற்றாந்தாய் வயிற்றுப் பிள்ளைகள் அநேகமாய் ஜென்ம விரோதிகளாயிருக்கிறதைக்கண்டு பரிதாபப்படுகிறோம். சகுந்தலை தன்னை மறந்த கணவனுக்குக் கடிதம் எழுதுவதையும் அவனுடன் வாதாடுவதையும், ஜூலியட் (Juliet) என்பவள் தன்னருமைக் காதலனாகிய ரோமியோ (Romeo) தன் தந்தையினெதிர்க்கக்ஷியின் பெயரைப் பூண்டிருக்கும் காரணம் பற்றி அவனை விவாகம் செய்துகொள்ள முடியாமலிருப்பதை நினைந்து விசனப்படுவதையும், ஒதெல்லோ (Othello) தன் உத்தம பத்தினியாகிய டெஸ்டிமோனாவின் (Desdemona) கற்பைச் சந்தேகப்பட்டு, அவளை இழித்து கொல்லுவதையும், டார்க்குவினஸ் (Tarquinus) யுத்தகளத்தினின்று திருட்டுத்தனமாக வந்து தனக்காகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் கொலாட்டினஸ் (Collatinus) என்பவனுடைய மனைவியாகிய ல்யுக்ரீஸி (Lucrece) என்பவள்மேல் காமுற்று பலாத்காரமாய் அவள் தூங்கும்பொழுது அறைக்குட்பிரவேசித்து அவளது கற்பைக் கெடுக்கும்பொழுது அவள் பிரலாபிப்பதையும் நாம் படிக்கும்பொழுது நமக்கு முன்னிலையிலேயே அவைகள் நடப்பது போலவும் நாமே அநுபவிப்பது போலவும் தோற்றுகின்றது. இவ்வாறு உலகியலையும் மனிதனுடைய மனோநிலையையும் எவ்விதத்தாலுந் தெரிந்துகொள்ளுகிறோம். உதாரணங்கள் கணக்கிலடங்கா.

(இன்னும் வரும்.)



## VILLAGE LIFE—AN IDEAL PICTURE.

## நாட்டுப்புறவாசமும் அதன் உயர்தர லக்ஷியமும்.

இத்தேசத்தில் கிராமாந்திர வாஸிகளாயிருப்பவர்கள் இங்கிலீஷில் நன்றாகப் பேசப் படிக்கத் தெரியாதவர்களாயிருப்பதால் அவர்களுக்குப் பொது விஷயங்களில் சிரத்தையில்லையென்றும் "இராமராண்டாலென்ன இராவணனாண்டாலென்ன" வென்று அலக்ஷியமாயிருப்பவர்களென்றும் பலர் சொல்லிவருகிறார்கள். நாம் பிறந்து வளர்ந்தது கிராமாந்தரத்திலேயன்றி பட்டணத்திலன்று. நம்மைப் போல் பட்டணம் வந்து பிரபலமாய்ப் பேர் பெற்றிருப்பவர்களும் உத்தியோகம், வர்த்தகம், வியாபாரம் முதலிய துறைகளிலிறங்கியுழைப்பவர்களும் அநேகமாய் எல்லாரும் கிராமாந்தரங்களைச் சேர்ந்தவர்களே. பட்டணம் வந்து பிரபலமான பேரும் புகழும்பெற்று இங்கேயே நிரந்தரமாக ஸ்தாபிதமானவர்கள் கூட தங்களுடைய குடும்பப்பேரோடு ஜனன பூமியாம் கிராமப்பேரையும் விடாமல் அதிக அருமையாகப் பாராட்டி வருகிறார்கள். கிராமங்களில் பிறந்து வளர்ந்தவர்கள் தான் இயற்கையாகவே தேஹமனோதிடம் பொருந்தியவர்களாய் இயற்கை ஞானத்தோடு செயற்கையறிவும் கலந்து நல்ல காரியசமர்த்தர்களாக விளங்குகிறார்கள். பட்டணவாசம் பிரபலமாய்த் தலையெடுத்தது சென்ற 20, 25 வருஷங்களுக்குள் தான் என்று சொல்லலாம். இப்பொழுதுங்கூட பட்டணவாசிகள் தங்களுடைய கிராமசம்பந்தத்தை விட்டொழித்தார்களில்லை. ஓய்வு ஒழிவு நேர்ந்த போதெல்லாம் தங்கள் கிராமம் சென்று பழையவாசனைவிட்டுப் போகாமல் காப்பாற்றி வருகிறார்கள். கேவலம் ஜீவனார்த்தம் மட்டும் பட்டணவாசத்தை ஆச்ரயித்திருக்கிறார்களேயன்றி உண்மையாகவே அவர்களுக்குப் பட்டணவாசத்தில் அவ்வளவு பிடிமானமில்லை. பட்டணவாசத்தில் பிறந்து வளர்ந்த குழந்தைகளைவிட கிராமவாசங்களில் பிறந்து வளர்ந்த குழந்தைகள் எப்போதும் தேஹமனோதிடம் அதிகப் பொருந்தியிருப்பது வழக்கம். இது இந்தியாவில் மட்டும் அல்ல. எல்லாத்தேசங்களிலும் இது சகஜமாகவே யிருந்துவருகிறது. கிராமாந்தர ஜீவனத்தில் வீண் ஆர்ப்பாட ஆடம்பர படாடோபங்கள் அதிகமாயில்லாவிட்டாலும் பிரகிருதி தர்மத்தை யாராய்ந்துணர அனுகூலங்கள் அங்கே அதிகம் உண்டு. பிரகிருதிஞானமுள்ளவர்கள் உலக வியவகாரங்களில் சமர்த்தர்களாயிருப்பது சகஜம். ஏனெனில் உழைப்பும் பிழைப்பும் அவர்களுக்கு ஒன்றே. அப்படியென்றால் உழைப்பே பிழைப்பும் பிழைப்பேயுழைப்புமா யிருக்கப்பட்டவர்கள் என்று அர்த்தம். இப்படிப்பட்டவர்கள் எப்படியும் மேதாவியாவார்கள் என்பது நிச்சயமென்று ப்ரொபெஸ்ஸர் ஜேம்ஸ் மனோதத்துவமறிந்து கூறியிருப்பதை சென்ற சஞ்சிகையின் முகட்டில் பிரசுத்திருக்கிறோம். மேலும் "இராமனாண்டாலென்ன இராவணனாண்டாலென்ன" வென்று சொல்லும் பழமொழி இக்காலத்திலுண்டானதில்லை. அது பூர்வம் தொட்டு வழங்கி வருகிறது. அதற்கு அர்த்தம் என்னவென்றால் அரசன் எப்படியிருந்தாலும் கிராம சமுதாயத்தின் க்ஷேமலாபம் கிராமத்தாரோடே—அதாவது "தானேதனக்குப் பகையும் நட்டாலும்" என்றுள்ள திருமந்திரோபதேசத்துக் கொப்ப கிராம சமுதாயங்கள் க்ஷேமலாபத்தை யனுபவிப்பது அவர்கள் சொந்தமுயற்சியாலன்றி அரசன் கையைப் பார்த்துக்கொண்டு அவன் படியளக்க வாங்கிச் சாப்பிடுகிறவர்களல்லவென்பது கருத்தாம். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்று மேலோரும் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்கள் அவர்கள் பிழைப்பை. ஆதலால் கிராமவாசிகளுக்கு தேசக்ஷேமலாபங்களில் சிரத்தையில்லையென்பது சரியன்று. இப்பொழுது தான் கிராம சமுதாயங்கள் நிலைகுலைந்து எல்லாம் "ஹஸூர்" வைத்து சட்டமாக விருக்கிறது. முன்னெல்லாம் இப்படியில்லை. இதற்குதாரணம் வேண்டில் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு எழுதிவருகிற நாட்டுப்புற ஜனங்களின் புத்தி சாமர்த்தியத்தையும் ஸ்வபாவ ஞானத்தையும் ஆராய்ந்து பார்த்தால் தானே புலப்படும். இதையும் விட கிராமாந்தரங்களில் சென்று எழுத்து வாசனையறியாத ஜனங்கள்கூட எவ்வளவு மனப்பயிற்சியுள்ளவர்களாயிருக்கிறார்களென்பதை யுற்றுணர்ந்து ஆராயின அவர்களுடைய மேன்மை விளங்கும் இங்கே நாட்டுப் புறத்தார் ஒருவர் வரகவி ஸர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களுடைய சிறப்பை நன்குமதித்து எழுதியிருப்பதை எடுத்துக் கூறுகிறோம்.

## CHARACTER SKETCH: SIR RABINDRA NATH TAGORE.

### குணவலி விளக்கம்: ஸர். ரவீந்திர நாத் தாகூர்.

ஒரு தேசத்தில் சண்டை நடந்துகொண்டிருக்கும் சமயத்திலோ, ஜனங்களுக்கும் ராஜாங்கத்திற்கும் அபிப்பிராய பேதங்களேற்பட்டு மனக் கொதிப்புண்டாகும் சமயத்திலோ, ஜனங்களின் துர் ஆசாரங்களின் பலனாக சமூக வாழ்வு கேடு அடையும்போலிருக்கும்பொழுதோ, கவி சிரேஷ்டர்கள் சேனைகளுக்கும் ராஜாங்கத்திற்கும் ஜனங்களுக்கும் புத்தி புகட்டி ஊக்கமும் உற்சாகமும் உண்டாக்கி, அவரவர்கள் தங்கள் கடமைகளை சரிவரச்செய்யும்படி செய்வித்து, தேசங்கள் ஆபத்தினின்றும் காப்பாற்றப் பட்டிருக்கிறதாய் சரித்திரங்கள் வாயிலாக அறிந்திருக்கிறோம். அப்பெரியோர்கள் அப்படிப் பேசும்பொழுது அது யாருக்கு ருசிக்கிறது: யாருக்கு அது கசப்பாக விருக்கும்? தங்களுக்கு பின்னால் என்ன லாப நஷ்டங்கள் ஏற்படும் என்கிற கவலையில்லாதவர்களாய்ப் பொது நலங்கருதி, தங்கள் அநுபவத்திற் கண்ட எது உண்மையோ, எது நியாயமோ, எது சத்தியமோ, அந்தத் தருமங்களைக் கூசாமல் கூறுவார்கள். இப்பொழுது இந்தியாவில் அப்பேர்க்கொத்த நெருக்கடியான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. அதை பற்றியே உலகப்பிரசித்திப்பெற்ற மகா கவி ரவீந்திரநாத் தாகூர் இந்திய விஷயங்களைக் குறித்து சமீபத்தில் அடுத்தடுத்து தாம் பேசவோ எழுதவோ நேர்ந்தது என்று நாம் துணிவாகச் சொல்லலாம்.

ஸர் ரவீந்திரநாத் தாகூர் அமைதியான இயல்புடையராயினும் தன்மதிப்புள்ளவர். கள்ளங் கபடற்றவர்; அஞ்சாத நெஞ்சுடையவர். இவருடைய சிஷ்ய கோடிகளில் ஒருவராகிய மிஸ்டர் காசிநாத் நாராயணன் என்பவர் இவருடைய உருவச்சிலை யொன்றை சமீபத்தில் வெகு அழகாய்த் தயாரித்திருக்கிறார். அதன் முகத்திலிருந்து இவர் 'அகத்திலிருக்கும் தைரியலக்ஷ்மி நன்றாய் விளங்குகிறாள். ஜாதி மத ஆசார விஷயங்களில் சீர் திருத்தங்கள் அடைந்தாலல்லாமல் நிரந்தரமான விமோசனம் இந்தியாவிற்கில்லை என்று வாதித்து வருகிறார். இதர பாடல்களோடு, தேசாபிமானத்தைப் புகட்டவல்ல அருமையான பாடல்களை வங்காள பாஷையில் பாடியிருக்கிறார். மகா பரோபகாரி; 'சாந்திநிகேதன்' என்ற ஒரு பாடசாலையை வெகு அருமையான முறையில் வைத்து நடத்திவருகிறார். இந்தப் பாடசாலையின் அபிவிருத்தியே அவருக்கு ஒரு பெரிய நோக்கம். கிடைத்தற்கரிய 'நோபல் ப்ரைஸ்' என்னும் இனாமில் கிடைத்த அவ்வளவு திரவியத்தையும் அப்பாடசாலையின் விருத்திக்கே உபயோகப்படுத்தினார். ஜப்பான் அமெரிக்கா முதலிய நாடுகளில் உபன்யாசங்கள் செய்து, அதிலிருந்து அவருக்குக்கிடைத்த ஆயிரக்கணக்கான ரூபாய்களையும் இதன் உபயோகத்திற்கென்றே வைத்துக்கொண்டார். அவ்விடங்களில் அவருக்கு நடந்த மரியாதையையும் அவர் திருவாக்கிற் கேற்பட்ட மகிமையையும் அறிந்தவர்கள் அவரைப்பற்றி நினைத்த வண்ணம் பிதற்றி யிருக்க மாட்டார்கள். நாம் என்றும் மறக்க முடியாத இந்தியாவின் வைசிராயாக விருந்த லார்ட் ஹார்டிஞ்ஜ் ரவீந்திரநாதரைப் புகழ்ந்து பேசும்பொழுது ஆசியாவின் கவிச் சக்கிரவர்த்தி என்று கூறியுள்ளார். புண்பட்ட மனத்திற்கு அவர் வார்த்தை பொன் போன்ற மருந்தாக உதவும். எந்த நாட்டில் மகாகவி தோன்றுகின்றாரோ அந்த நாடு மகா மேன்மையடையும். பாரத நாட்டில் ரவீந்திர நாதர்போல் ஒரு மகாகவி தோன்றியது நமது தாய்நாட்டிற்கே ஒரு பாக்கியமல்லாமல் உலகத்திற்கு மோருபகாரமாகும். உலகுய்யப் பிறந்தவர் என்பது அவர் போன்றவர்க்கே பொருந்தும்.

## ON MIND.

### மனது என்றால் என்ன?

மனிததேகத்தின் ஸ்வரூபத்தைப் பார்த்தால் தலைக்குக் கீழ்ப்பட்ட அங்கங்கள் இத்தன்மையானவென்றும், இத்தொழிலையுடையவென்றும் கண்களுக்கு இலகுவாய்ப் புலப்படுகின்றன. தலையோ அப்படி அறியக்கூடியதாகவில்லை. அது எத்தன்மையானது? மனிதன் செய்யும் வேலையில் எதற்கு ஆதாரமாகிறது? நாம் சாப்பிடும் ஆகார முதலியவைகள் அப்பாகத்திற்குச் செல்லுகின்றனவா? அது எத்தொழிலை எவ்விதமாய்ச் செய்கின்றது? இவைகளை ஒருவாறு விசாரிப்போம்.

பசியென்றால் மனிதன் வயிற்றைப்பிடித்துக் காட்டுவான்; கண்பார்வை நன்றாகத் தெரியாவிட்டால் கண்ணைத் துடைத்துக்கொள்வான்; தூரத்தில் வாசிக்கும் நாகசுரம் காதில் படாவிட்டால் தொன்னைபோல் காதைக்குவித்துக் கொள்வான். குதிரைச் சேனைகளை எதிர்பார்ப்பவர்கள் காதைத் தரையில்வைத்து அடி ஓசை அறிந்துகொள்வார்கள். அந்த மரத்தண்டை உளுந்து வறுக்கும் வாசனை அடிக்கிறதென்றால் மூக்கால் அதிக காற்றை உட்கொண்டு முகர்கிறோம். இவை இவ்வாறாகவிருக்க, தலையைப்பற்றி என்னகாரியம் அறிகிறோம். பரீட்சாசாலையில், கேட்ட கேள்விக்கு உத்தரம் உடனே தெரியாவிட்டால் பையன் தலையைச் சொரிகிறான். மணி அடிக்கப்போகிறதென்றால், பரபரப்பாய் ஆள்காட்டி விரலால் பின்னந் தலையை, வைத்துப்பூட்டியிருப்பதை சாவியால் திறந்து எடுப்பவன்போல், சொறிவான். அப்படியும் வராதுபோகுமானால் ஐயோ என்று தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதை பரீட்சை சாலையில் காணாதவர் யார்? ஞாபகம், யோஜனை வேண்டிய காலத்தில் தலையைத் தொடுவதால் அது அவைகளுக்கு உபயோகமாயிருக்குமென்று சங்கிக்க இடமுண்டாகிறது. அது உண்மையிலும் அவ்வாறே. மனதென்று சொல்வதற்கு இருப்பிடம் தலைதான். ஆனாலும், சத்தியமாய்ச் சொல்லென்றும், மனச்சாட்சிக்கு உண்மையாய்ச் சொல்லென்றும் ஜனங்கள் ஹிருதயத்தில் கைவைக்கச் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் நெஞ்சறியச் சொல்லென்பார்கள். நெஞ்சிலும், இருதயத்திலும் படபடவென்று அடிப்பது பிரசித்தமானதால் ஆத்மாவின் இருப்பிடமென தீர்மானித்தார்கள்போலும். அன்றியும் இவ்விடங்களில் குற்றமுள்ளவர்களுக்கு பயத்தால் அதிகமாய் படபடவென்று அடித்துக்கொள்வது வழக்கம். இப்படி அடிப்பது சாதாரணமாயிருந்தும் மனதிற்கவலையுண்டாகும் காலங்களில் ரத்தம் அதிகமாய் ஓடுவதால் பலமுறை இந்த ஓசைகள் கேட்கலாம். தலைதான் புத்திக்கு இருப்பிடமென்று ரூபிக்க சில பரீட்சைகள் சொல்வோம். மூட்டை தூக்கி வந்தால் அப்பாவென்று முதுகைபிடித்துக் கொள்ளுகிறான். கொல்லை கொத்தினால் புஜத்துக்கு உபசாரம் செய்கிறான். வெகு நேரம் ஒரு விஷயத்தைப்பற்றி யோஜித்தால், அல்லது பிரசங்கித்தால் உபாத்தியாயர் தலையைப்பிடித்துக் கொள்ளுகிறார். அதிகப் படிப்புள்ளோருக்கு தலைநோவு சகஜமாய் பின்தொடரும்.

2. அன்றியும் ஓர் தவளையின் தலையைக் கிள்ளி எறிந்துவிட்டாலும், அது ஜீவித்திருக்கும். காலைச்சுட்டால் பின்னிழுத்துக்கொள்ளும். அனுவேனும் புத்திவேண்டிய வியாபாரத்திற்கு ஏலாது.

3. மேலும் அற்பப் புழு முதல் பார்த்து வந்தால் புத்தி விருத்தியடைய யடைய தலைப் பாகம் வெளிப்பார்வைக்கும், அதிக மேல்தரத்தில் உள்ளின் கனத்திலும் அதிகரித்தே வருகின்றதைக் காணலாம்.

4. வயது ஆக ஆக ஞாபகக் குறைவு உண்டாவது எல்லாருக்குந் தெரியும். முதலாவது ஓர் பாஷையின் வார்த்தைகள் மறந்துவிடும். ஆளைக்கண்டால் ஞாபகம் வரக்கூடியவர்கள் பேர் மறந்து போய்விடும். பின்னும் கிழத்

தனத்தில் பேசும் திறமையே குறைந்துவிடும். இந்த அவஸ்தையுள்ளோர்க்கு மண்டையினுள் சில குறித்த பாகங்கள் மலினமாய்ப் போயிருப்பதைக் கண்டிருக்கிறார்கள்.

5. மற்றுமின்னொரு வாஸ்தவ சரித்திரம் இதை நன்றாய் விளக்கும் என்று நம்புகிறோம். ஜெர்மானியா தேசத்தில் முன் நடந்த சண்டையில் ஒரு சிப்பாய் தலையில் குண்டுபட்டு மூர்ச்சைவிட்டுக் கிடந்தான். வைத்தியம் செய்யக் காயம் ஆறி எழுந்திருந்தான். எழுந்து தான் இன்னதேசத்திலிருக்கிறானென்றாவது, தன் ஜாதி, குலம், கோத்திரம், பெயராவது தெரியாதவனாய், தன் பெண்டாட்டி பிள்ளைகளை எல்லாம் மறந்து தாயின் வயிற்றிலிருந்து இந்த க்ஷணத்தில் விழுந்த குழந்தை போல் பேசத்தெரியாமல், ஒருவரையும் அறியாமல், பேதையாய்விட்டான். நம்தேசத்தில் இம்மாதிரி அதிசயங்கள் நடந்திருக்கின்றன. குண்டுபட்டல்ல; மகாரிஷியின் சாபவலிமையால் தனக்கு நடந்ததை முற்றும் மறந்திருக்கக் கேள்வியுற்றிருக்கிறோம்.

இப்படியிருக்க, தேகவலிமைக்கு யாதும் குறைவில்லாததினால், வயிற்றுப்பசி அவனுக்குமுண்டாகையால், அமெரிக்காதேசம் புறப்பட்டுச் சென்று அங்கு ஜீவனம் செய்துகொண்டு வந்தான்.

அப்படி வருநாளில் முன் குண்டு பட்ட இடத்தில் இன்னொரு முறை வாசற்படி இடிக்க, இராமபாதம்பட்ட அகலிகையின் கல்லுருவம் பெண்ணாய் எழுந்ததுபோல், பேதையாய் நின்று தன் உறவினர், தான் பேசிய பாஷை முதலியவைகளையும் இழந்திருந்த இம்மூப்படைந்த பாலகன் பின்னும் திடீரென்று, தன் அருமைத் தாய்தகப்பனையும், தன்னை மணந்த மனைவியையும், தான் பிறந்த நாட்டையும், தன் வீட்டையும் நினைந்து கதறினான்; ஊர் வந்து அவர்களையும் அடைந்தான். இதென்ன ஆச்சரியம்!! துர்வாச மகாரிஷியின் கோபத்தினால் துஷ்யந்தனுக்கு நேர்ந்த மறதியும், நாராயண பாதத்தின் பிரசாதத்தினால் அகல்லிவைக்கு விளைந்த சாபவிமோசனமும், ஒரு சடக்குண்டும் விவேகமற்ற வாசற்படியும் செய்து முடித்தன பாருங்கள். இதுவும் கருணாநிதியான கடவுளின் செயலே. அந்த கபாலத்தின் கீழுள்ள அறையில் அல்லவோ நம் புத்தி, நாம் அறிந்த ஞானம், இனி அறியும் சக்தி எல்லாவற்றையும் நீதியாய் வைத்திருக்கிறார். அதை மாற்றி இடம் பேரச் செய்தால் அவைகளிலுள்ளவை மறைந்துபோய்விடும். தன் ஸ்திதியையடையவே பின்பெறும். சிலரின் பைத்தியம்கூட திரவம் கொடுத்து மண்டையோட்டை எடுத்து மூளையைச் சுத்திசெய்தால் போகிறது. இவ்வேலையை எப்படிச் செய்கிறது?

நம் தேகத்திலுள்ள இரத்தத்தில் 5-ல் ஒரு பங்கு 8-ல் ஒரு சாணுள்ள தலைக்குப்போகிறது. இதினால், புத்தி வேலைக்கு அதிக ஆகாரம் தேவையென அறியலாம். உலகத்திலும் பேனா வேலைக்கு மண்வெட்டி வேலையைவிட எத்தனையோ அதிகச் சம்பளம் கொடுக்கிறார்கள்.

மண்டையிலுள்ள பதார்த்தம் சாம்பல்நிறமுள்ளதாயும், வெண்மையாயும் பஞ்சுபோன்ற மிருதுவான தன்மையுடையது. அது இரண்டு கோளமாய்ப் பிரிவுபடும். இவ்விரண்டு பெரிய பிரிவுகளன்றி இன்னும் வெகுவாய் பிரிவு அடைந்திருக்கின்றது. பொடாஷ் என்ற வஸ்துவின் விகாரம்தான் அதனுள் அடங்கியிருக்கிறது. ஆகையால் அந்த வஸ்து மிகுதியாயுள்ள காய் கறிகளை உண்பது புத்திக்குப் பலமென்பார்கள். வெண்டைக்காயை இது காரணம்பற்றியே ஓர் ஐரோப்பிய சாஸ்திரி ஏராளமாய் உப்பிட்டுச் சாப்பிடுவாராம். இதென்ன இவ்வளவு சாதாரணமானவஸ்து இந்த அற்புதத்தை விளைவிக்குமா என்றால் வைரமென்று வழங்குவதும், அடுப்பு நிலக்கரியும், ஒரே வஸ்துவென்று ரூபிக்கலாம். அடுப்பில் போட்டால் அவற்றின் உறவு வெளியாகும். இரண்டும் பிடிகரியாகும்.

ஒன்று அடுப்பில் தவிப்பானேன். மற்



றொன்று ராஜாதிராஜர்கள் முடிமேல் நட்சத்திரங்கள்போல் விளங்குவானேன்?

இத்தன்மையான மூளைக்கும் தேகத்தினுறுப் புகளுக்கும் என்ன சம்பந்தம்?

அது சொல்லுமுன் இக்கபாலமே நம் முதுகெலும்பின் பரப்பென அறியலாம். அது நாகத்தின் நுனியில் பாத்து இருக்கிறது. இரண்டு கோளங்கள் முதலில்; அதன்கீழ் ஒரு சிறு மூளை; அதின்கீழ், முதுகு நரம்பின் சிகரத்தில் ஒரு சதுர நரம்பு; என இவ்வாறு முக்கியமாய் மூன்று பாகங்களாகச் சொல்லலாம். இவைமூன்றும் தலையிலுள்ள மூன்று தந்தி ஆபிசு எனக்கொள்ளலாம். இவைகளுக்கு வரும் தந்திக்கம்பிகளாவன தேகம்தோறும் 'ஆபாதமஸ்தகம்', 'பாதாதிகேசம்' அல்லது காலடி முதல் தலை நுனிவரை எங்கும் ஓடும் நரம்புகள்தான். இந்நரம்புகள் வெகு நுட்பமானவை. இவை கடைசியில் முதுகு எலும்போடு சென்று மண்டையின் கீழ்பாகத்தில் சதுர நரம்பில் சேருகின்றன. கைவிரல்களின் நுனியில் ஒரு சிறு ஊசியால் குத்தினால் உடனே நரம்பின் வழியாய் அது செல்ல அதை வலி என்று அறிந்து அதை நிவர்த்திக்கும்படி விரலை நகர்த்தும்படி மற்றொரு நரம்பு சமாசாரம் கொண்டுவரும். முதுகிலடிக்கும் அடியும், கண்ணில் விழும் ஜோதிரலைகளும் காதில் கொள்ளும் சப்த அலைகளும், உள்ளே ஒரு புத்தியில்லாத வரையில், உணர்வு உண்டாக்காது; ஜோதிரலைகள் வெளுப்பு சிவப்பு எனப் புலப்படாது. கொல்லன் என்ன அடி அடிக்கினும் சப்தமாகத் தெரியாது. ஹெகில் (Hegel) என்னும் மகாவித்துவான் லெப்ஸிக் (Leipzic) என்ற ஊரில், நெபோலியனென்ற கலியுக ராவணனோடு ஐரோப்பிய நாட்டார் சண்டைபோட்டுக் கொண்டிருக்கையில், இந்திரஜித்தைவிட எவ்வளவோ கோரமாய் கர்ஜிக்கும் பிரங்கிகள் ஆகாயத்தைத் தகைக்க, அவையொன்றும் அறியாதவராய் அதனண்டையில் மகாகிரந்தத்தை எழுதிக்கொண்டிருந்தார். அதினால் மனது கவனிக்காவிடின் பிரங்கி வெடி அவருக்கு சப்தமாகத்தெரியாது. வேறொன்றை நினைத்துக்கொண்டிருந்தால் எதிரில் வருபவரை அறியார். தன் பெண்டாட்டி இறந்தாளெனக்கேட்ட ஒரு வேதாந்தி அவளிடத்தில் என்ன செய்யலாமென்று கேட்பேனென்று பிணமிருந்த அறையினுள் சென்றாராம். ஆகையால் காது கேட்பதென்பதும் கண்பார்க்கிறதென்பதும் உபசாரவார்த்தைதான். மனம் கருவியாக ஆத்மாவே பார்க்கிறது, கேட்கிறது என்று சொல்வதே சரி. ஆனாலும் இந் நரம்பை தூக்கத்தில் குத்தினாலும் எழுந்து விடுவானேன். சில சமயங்களில் வலிதெரியாவிட்டாலும் காலையெடுத்துவிடுவோம். அது ஏனென்றால் இந்த நரம்புதலையிலிருக்கும் சுரூபத்தையறியும் சக்தியுள்ள கோளங்களுக்குச் செல்லாது முதுகு நரம்புக்கு வந்ததும் பதில் தந்திபோய்விடும். முதுகு நரம்பு தாழ்ந்த ஆபீசு; அதற்கு மேலானது சதுர நரம்பு; அதற்கு மேலானது சிறு மூளை. இவ்விரண்டும் அதிககஷ்டமான வேலைகளுக்கு ஆதாரமாயிருக்கின்றன...............

.....................................................................

.....................................................................

............இப்படி தந்திக் கம்பிகள் மூலமாய்ச் சமாசாரம் வருகிறதென்று சொன்னோம். அது எவ்விதமாய் வருகிறது. எவ்வளவு வேகமாய் வருகிறது? ஒன்றின் மேலொன்றாய் சாய்ந்து இருக்கும் கல்லுகளில் ஒன்றை தட்டினால் மற்ற கற்கள் நகராமலே கடைசிக்கல் வரை கீழே விழுந்துவிடும். அம்மாதிரியே நரப்புகள் மூலமாக சமாசாரம் வருகிறது. வெளியிலிருந்து மூளை ஸ்தானத்துக்கு சமாசாரம் கொண்டுபோகும் நரப்புகளுக்கு 'Sensory nerves' என்றும் மூளை ஸ்தானத்திலிருந்து உடலின் மற்ற இடங்களுக்கு சமாசாரம் கொண்டுபோகும் நரம்புகளுக்கு 'Motor nerves'ம் என்று இங்கிலீஷில் பேர் வைத்திருக்கிறார்கள். நமக்கு உணர்ச்சியுண்டு பண்ணக் காரணமாக இருப்பவை முற்சொன்ன நரம்புகளாம். நாம் கை, கால்,

கண் முதலிய உறுப்புகளை அசைப்பதற்குக வியாயிருக்கும் நரம்புகள் பிற்சொன்னவைகளாம். முற்சொன்ன (Sensory nerves) நரம்பின் வழியாக சமாசாரம் விநாடிக்கு 111 அடி விகிதமாக ஓடும். பின் சொன்ன (motor nerves) நரம்பின் வழியாகச் சமாசாரம் ஓடுவது விநாடிக்கு 98 முதல் 131 அடிவரையில் வேகமாக ஓடும். இதெல்லாம் தந்தியின் மின்னல் வரும் வேகமாகாது.

ஷேக்ஸ்பியர் முதலிய மகாகவிகள் காவியங்களை மனதில் தியானித்தபோதும், சங்கராசாரியார் முதலிய தெய்வப் பிறப்புள்ளவர்கள் வேதாந்த உண்மைகளை யோஜித்தபோதும், அவர்கள் மண்டையினுள், வெவ்வேறு எண்ணத்துக்குத் தகுந்த நரம்புகளின் சேர்க்கை இருந்துதானிருக்க வேண்டும். எப்படி குறித்த வீணைத்தந்தியை அடித்தால் வெவ்வேறு விதமாய் எவ்வளவோ விதமான மதுரத்வனிகள் உண்டாகின்றனவோ அம்மாதிரியே நரம்புகள் சிலவாயினும் மகாகவி, மகாசாஸ்திரிகள் அற்புத எண்ணங்களும் தந்தியிலிருந்து பாட்டுப்போலவே வருகிறது. அவையில்லாமல் இவை வரா. என்ன வித்துவானானாலும் வீணைத்தந்தி யறுந்தால் என்ன செய்வார். ஆனால் வெறும் (catgut) நரம்புத் தந்திகளுக்கும் அதிலிருந்து வரும் மதுர த்வனிக்கும் என்ன சம்பந்தம்? அது இதற்கு எப்படிக் காரணமாகும்? என்ன ஆச்சரியம்! கம்பி கண்ணுக்குத் தெரியும், அளவிடக்கூடும்; எண்ணங்களோ இந்திரியங்களுக்கு எட்டாது, தேகத்தில் அடங்காது. எப்படி இவை இரண்டும் ஓரிடத்தில் குடியிருக்கின்றனவோ? அன்றியும், "*ஒவ்வொரு சந்தோஷ உணர்ச்சியும், துக்கானுபவமும், அற்ப எண்ணமும், மனதில் தியானமும், வாதத்தில் சொல்லும் ஒவ்வொரு யுக்தியும் உண்டாவதற்கு குறித்த சுத்தவாயுவும், (oxygen) கரியும், (carbon) மற்றுமுள்ள பௌதிகங்களும் சேர்ந்து தேகத்திலோரிடத்தில் செலவாயிருக்கவேண்டும்." பௌதிகமான காய்கறி இல்லாது சின்மயமான எண்ணம் உண்டாகாது எனத் தெரிகிறது. † சிலர் மாத்திரம் தேகத்துக்கு ஆகாரம் குறைந்தாலும் புத்தியின் வேலைக்குக் குறைவு இல்லாததுமன்றி, தீவிரமும் உண்டாகுமென்று சாதிப்பார்கள். அப்படியானால் தேகமின்றி, மூளைநரம்பின்றி, அதைப்போஷிக்கும் ஆகாரமின்றி மனது வேலை செய்யுமா? அதை ரூபிப்பதற்கு தேகத்தை விட்ட ஆத்மா பேச, அல்லது சிந்திப்பதை நாம் பார்த்ததில்லை. பார்ப்பது அசாத்தியமாயிருக்கிறது. ஆனால் கூடும் என்று சொல்வோரும் உளர். ‡ ஆயினும் சுரத்திலும் மரணகாலத்திலும் அபரிமிதமான நுட்பமாய்ப் பேசியிருக்கிறார்களே. ஆகையால் பலம் குன்ற புத்தி அதிகம் அன்றல்லவா? இந்த அபிப்பிராயங்கள் பேதங்களால் இவ்வாறு சொல்வார்கள். மூளை அதாவது தேகமும், சித்தும் மனிததேகம் இருமுகம் படைத்த ஓர் அதிசயம். ஒரு பக்கம் ஆத்மா, ஒரு பக்கம் ஜடதேகம் அல்லது மூளை நரம்பு. அவை ஒன்றுக்கொன்று சம்பந்தம் சொல்வது அசாத்தியம். மற்றும் சிலர், புத்திக்கு நரம்புதான் காரணம்: பித்தப்பையிலிருந்து பித்தம் ஊறுவதுபோல் மூளையிலிருந்து புத்தி வரும் என்பார்கள். நம்மவர் வெற்றிலை போட்டால் உண்டாகும் மதம் போன்றது என்பார். நம்முடைய வேதாந்திகள், அர்த்தநாரீசுவரர் போன்றது என்பார். பார்வதியை ஈசுவரன் சிருஷ்டித்து தன்புறம் வைத்ததுபோல், சித்து தேகத்தையும் பரமாத்மா ஜகத்தையும் கற்பித்து தன்னோடு இடைவிடாது வைத்தாரென்பார் பின்னும் சிலர்.

* Bain's Practical Essays.

† Huxley's Essays. ‡ Annie Besant.



## ON THE USE OF WORDS.

## வார்த்தைகளின் உபயோகம்.

ஒரு பெட்டிநிறையப் பணம்* வைத்துக்கொண்டு உபயோகித்தலையும் கடவுள் நமக்குக் கொடுத்த அரிய சக்தியாகிய வார்த்தைகளின் பிரயோகத்தையும் உவமையிடலாம். பணத்தைக்காட்டிலும் வார்த்தை சிறந்தது மாத்திரமன்று, மட்டாய் உபயோகிக்கத் தக்கது. ஆனால் பொருளுக்கும் வார்த்தைக்குமுள்ள முக்கியமான வித்தியாசம் என்னவெனில், செலவழித்த பணத்தைத் திரும்ப அடையலாம்: வாயினின்றும் வெளியேறிய வார்த்தையைத் திரும்ப அடைவது ஒருவராலும் ஆகாது. செலவழித்ததனால் வரும் பயனை நாமே அனுபவித்துத் தீரவேண்டும். இவ்வளவு அரிய பொருளைப்பற்றிக் கொஞ்சம் எழுதப்புகுவது வீண் போகாது.

சிலவேளை நாம் சற்றும் யோசியாமல் பேசும் வார்த்தைகள் நல்ல பயன் விளைக்கலாம். போஜனமானபின் 'வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கையில், சில கெட்டவார்த்தைகள் பேசினாலும் பேசியவனுக்குக் கெடுதி வருவதில்லை. தேவதூஷணம்-கோள் முதலிய பெருங் குற்றங்களும் அவ்வேளையில் விளையாட்டாக எண்ணப்படுகின்றன. ஆனால் பெரும்பாலும் கருதாது பேசும் வார்த்தைகள் கெடுதிக்கே காரணமாகின்றன. தன் மனதில் தோன்றும் எண்ணங்களைத் தோன்றியவாறே வெளியிடுவதால், அவர்களுக்குப் பெரும்பாலும் துன்பம் உண்டாகிறது. கண்ணைமூடிக்கொண்டு கல்லைவிட்டெறிந்தால், அக்கல் எறிந்தோன் மனதில் கொஞ்சமேனும் நினைத்திராத குழிகளில் போய்த் தாக்குகிறது. அதுபோல, யோசனையின்றிப் பேசும் பேச்சுகள் கேட்போர் மனதைக் களிப்பித்துக் துக்கநிவிர்த்தி செய்தாலும் செய்யலாம்; இல்லாவிடில் கேட்போர் துன்பத்தைப் பெரிதாக்கி மனதைச் சுட்டாலும் சுடலாம். இப்படி நினைத்து ஆராயுங்கால் மனிதர் மனத்துன்பத்துக்கும் இன்பத்துக்கும், சண்டை சமாதானத்துக்கும் வார்த்தைகளே ஆதாரமாகின்றன.

இங்கு கூறிய காரணங்களால் நாம் பேசும் முன்னம் இரண்டுதடவை யோசித்துத்தான் பேசவேண்டும் என்று தெரிகிறது. பேசுங்கால், யோசிக்க வேண்டியது காலம் இடம் என்னும் இரண்டையுமே. யாவரும் துக்கத்திலமுழ்ந்திருக்கையில், பரிகாசமாயாவது, சந்தோஷமாயிருக்கையில், தூஷணமாயாவது யோசித்தன்றியில் பேசக்கூடாது. இதைக் காட்டிலும் முக்கியமாய், நாம் யாருடன் சம்பாஷிக்கிறோமோ அவர்கட்கும் நமக்குமுள்ள தாரதம்மியத்தை யுத்தேசித்துப் பேசவேண்டும். நம்மிலும் அறிவிற் சிறந்த பெரியோர்முன் டம்பமாயும் அற்பமாகவுமாவது, அல்லது, நம்மோடொத்தவருடன் கர்வமாகவாவது, நம்மிற்றாழ்ந்தவரிடம் மரியாதை குறையும்படியாவது, வாயைத் திறப்பது கூடாது.

“கடவுள் நமக்கு இரண்டு செவியும் ஒரு வாயும் கொடுத்தது நிறையக்கேட்கவும் குறையப்பேசவும் தான்” என்று சொன்ன சாஸ்திரியைப்பற்றி யாவரும் கேட்டிருக்கலாம். இருந்தாலும் சிலர் எங்கே போனாலும் வாய் சலியாமல் பேசி மற்றோரைப்பேச விடாதபடி பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுவார்கள். அப்படிப் பேசுவதெல்லாம் கேட்போர்க்கு அறிவு புகட்டுவதற்கன்று. தங்கள் சமர்த்தை வெளியிட்டு யாவரும் தலையசைத்து மெச்சுகிறார்களாவென்று பார்த்துத் திருப்தியடையவோ, அல்லது வேறு யாதாமொருவர் பேசினால் தன்னுடைய மதிப்புக் குறைந்து போகுமோ என்றபயமோ, இவ்விரண்டி லொன்றினால்தான். இப்படிச்செய்வதனால் இரண்டு தீமைகள் விளைகின்றன. தன் மரியாதை குறைவதுமன்றித் தன்னைக் கண்டோர் மனதில் ஒரு அருவருப்புண்டாகும்படி நேரிடுகிறது. மேலும், மற்றோர் மூலமாய்த் தான் கேட்டு அறியும் அறிவையும் இழக்கிறான். உதாரணமாக, இக்காலத்

திலும், கற்றோர் சிலர் கர்வங்கொண்டு மற்றோரிடத்தில் தம் பெருந்திறங்களை யெடுத்து வியந்து கொள்வதனால், படிப்பினால் கர்வம் வந்து விடுமென்று ஜனங்கள் நினைக்கிறார்கள். இக்குற்றங்களினின்றும் தப்புவித்துக் கொள்ள வேண்டுமானால், நாலு பேருடன் கூடியிருக்குங்கால், அவர்கள் மனதிலும் வெறுப்புண்டாக்காமல் தானும் பேசாமல், எவ்வளவு தூரம் இருக்கக் கூடுமோ அவ்வளவு தூரம் பேசாமலிருப்பது நலம்.

இன்னொன்று குறித்துப் பேசாது, பொழுதில் விளையாட்டுக்காகப் பேசுகையிலும் எச்சரிக்கையுடன் பேசவேண்டும். விருந்துண்டபின் விகடகவியைக் கூப்பிட்டுக் களிப்படைவதுண்டல்லவா? அப்படிப்பட்ட வேளையிலும் கெட்டவார்த்தைகள் நழுவவிடப்படாது. இனிய வேளைகளில் சிலர் தேவதூஷணம் மததூஷணம் முதலிய செய்தல் தீங்கல்லவென்று நினைத்தல் பிசகு. பொழுது போக்குவதிலும் கூடக் குளிர்ந்தவார்த்தைகள் பேசுவது எவ்வளவோ நன்மையைக் கொடுக்கும்

வேறொரு மனிதரைப்பற்றிப் பேசுகையில் மிகக் கவனமுடையவர்களா யிருக்கவேண்டும். ஒருவன் நல்லவன் கெட்டவன் என்று சொல்வது இலேசான காரியமல்ல. நாம் எப்படியும் மனிதராய்ப் பிறந்தோராதலால் ராகத்துவேஷங்களுக்குட்பட்ட அடிமைகளாதலால், மற்றோரைப் புகழ்ந்தோ, இகழ்ந்தோ பேசுவது பெரும்பாலும் தப்பிதமாயிருக்கும். ஒருவரில்லாத இடத்து அவரை யிகழ்ந்துரைப்பது பெரியகுற்றம். ஆகையினால் பிறரைப் பற்றிப் பேசுகையில், அவர் நமக்குச் செய்த உபகார அபகாரங்களை மாத்திரம் மதிப்பிடாமல், பல சந்தர்ப்பங்களையும் யோசித்துச் சொல்ல வேண்டும்.

கடைசியாக, இவ்வுபந்யாஸம் முழுவதையும் இனியவார்த்தையே பேசவேண்டும் என்னும் ஒரு சொல்லில் அடக்கிவிடலாம். ஏழைகள் வந்து இரக்கும்போது கூடத் துன்முகனாய்க் கடுஞ் சொற்கூறியனுப்புதல் பேசியவனுக்கும் கேட்பவனுக்கும் இன்பத்தைக் கொடுக்கும். கொடுஞ்சொற் கூறுவதனால் கேட்டவனுக்கும் துன்பத்தைக் கொடுத்து, பிறகு நமக்கும் மனநோயையுண்டாக்குகிறது.

“இன்சொலினிதீன்றல்காண்பானெவன்கொலோ
வன்சொல்வழங்குவது”;—குறள்.

## SOCIAL SERVICES:
## ON DEVOTION AND LOVE.

### சமஷ்டி சாதனம்:
### பக்தி சிரத்தை.

---

பக்தியாவது அச்சத்தோடுகூடிய அன்பு அல்லது விஸ்வாசம். பக்தி, அன்பு, விஸ்வாசம் என்ற பதங்கள் ஒரே பொருளைக் கொண்டவைகளாயினும் சமயோசிதமாய் உபயோகப்படுத்தப் படுகின்றன. கடவுளுக்கும், அவர் அருள்வழிப் பட்டோருக்கும், குருவிற்கும், செலுத்தக் கூடியது பக்தி யென்றும், அரசனுக்கும், மாதா பிதா முதலிய முதியோர்களுக்கும் செலுத்தக் கூடியது விஸ்வாசமென்றும், தம்பி, மனைவி, புத்திரர் முதலியோருக்கு செலுத்தக்கூடியது அன்பென்றும் பெரும்பாலும் வழங்கப்பட்டு வருகிறது. அன்பும் விஸ்வாசமும் பழக்க மிகுதியாலும், கருத்தொற்றுமையாலும், ஒருவருக்கொருவருள்ள அபிமானத்தினாலும் உண்டாகின்றன. பக்தியோ அங்ஙனமன்று. கேள்வியினாலும், செயற்கையினாலும், அச்சத்தினாலும், சுற்றத்தார்களுடைய ஆசார அனுஷ்டானங்களைக் காணுவதினாலும் உண்டாவது. ஆயினும் சிலருக்கு குழவிப் பிராயத்திலேயே பக்தியுண்டாயிருந்தமைக்குக் காரணம் பிராரத்துவ பலமென்றே கூறவேண்டியிருக்கிறது. எம்மதக் கொள்கையை அனுசரிப்பவராயினும் இகபர சுகங்கள் இலேசாய்க் கிடைக்க விரும்புகிற ஒவ்வொருவரும் பக்தியுள்ளவர்களா யிருப்பது அவசியம். ஒவ்வொரு சமயம் அல்லது மதத்திலும் புத்திமான்களா யிருந்தவர்கள் கடவுளிடத்திலும், குருவினிடத்திலும் பக்தியை உடையவர்களாயிருந்ததினாலேயே வாழ்நாளில் சிறப்புடன் வாழ்ந்தார்களென்றும், அந்தியத்தில் ஜீவன்முக்தர்களாய் விளங்கினார்களென்றும் சகல சமயநூல்களும் முறையிடுவதல்லாமல் தற்காலத்திலும், அவர்களை அந்தந்த சமயத்தார்கள் நித்தியானுஷ்டானத்து



டன் வழிபட்டு வருவதை நாம் கண்டும் கேட்டும் வருகிறோம். அதுவுமன்றி அவரவர்களுடைய ஆலயங்களில் நித்திய நைமித்திய பூஜைகளும், ஸ்தோத்திரங்களும், உற்சவாதிகளும், பல மரியாதைகளும் நடந்தேறி வருகின்றன. இவைகளுக்கெல்லாம் பக்தியே காரணம். பக்தியே முக்திக்கு வித்து. பக்தியே நன்மார்க்கத்திற்கு வழிகாட்டி. பக்தியே பாவமாகிய காட்டை எரிக்கும் அக்னி. பக்தியே இகபர சுகத்திற்கு ஏதுவாகிய பொக்கிஷம். பக்தியே காமம், வெகுளி, மயக்கம் என்னும் இருட்டைப் போக்கும் சூரியன். ஆகவே மனிதர்களுக்கு இன்றியமையாதது பக்தியென்று ஏற்படுவதால் அதைக்குறித்து ஒருவர் பாடிய கீர்த்தனையையும் இங்கே கூறுவோம்.—

பல்லவி.

பக்தி பண்ணிக்கொண்டிருந்தால்-முத்திபெறலாமே.

அனுபல்லவி.

எத்திசையு மெவ்வுயிர்க்கு
மவ்வுயிராய் நிறைந்திருக்கும்,
வஸ்துவென்று அம்பலவன்
மலரடி தினந்தோறும் (பக்தி.)

சரணம்.

பச்சைமரத் தாணிபோலே
பரிந்துமனம்—நாடி,
பாலகிருஷ்ணன் பணியும் பொன்னம்
பலவனைக்—கொண்டாடி,
இச்சை யொழிந்தைம்
புலன்களைந்தும்—வாடி,
ஏகரசமானபரி பூரணத்தைத்—தேடி,
அச்சமறதிருவிழியி லானந்தநீர் கரைபுரள,
அரனே திரிபுரனே கங்காதரனே
பராபரனே யென்று (பக்தி.)

சகல லோகங்களையும் படைத்துக் காத்து அழித்து எங்கும் நிறைந்து சர்வஞ்ஞராயிருக்கும் பகவானை நாம் பரமாத்மா வென்கிறோம். நமக்குள்ளிருக்கும் ஆத்மாவை ஜீவாத்மா வென்கிறோம். இந்த ஜீவாத்மா தேகத்தை விட்டுப் பிரிந்து சேருவது எங்கேயென்றால் பரமாத்மாவுடன் என்று எண்ணுங்கால், நாம் ஆசாபாசங்களைக் களைந்து, மானாபிமானத்தை விட்டு, நம் ஆத்ம சொரூபத்தை யறிவோமானால் அதுவே பரமாத்மாவென வுணர்ந்து நற்கதியடையலாம். அவ்வாத்மாவைக் காண்பதற்காகவே வேதாந்த சாஸ்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அநந்தமா யிருக்கும் சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் சோதித்து சாரத்தைமட்டும் உருட்டித்திரட்டி சாக்ஷாத் கிருஷ்ணமூர்த்தி பக்தனாகிய அர்ச்சுனனுக்குச் சொல்லி யிருக்கிறார். அதைத்தான் நாம் பகவத்கீதை என்கிறோம். இக்கீதையின் பெருமையை ஒருவராலும் அளவிட்டுச் சொல்லமுடியாது. நமது மதவிஷயமான சகல கேள்விகளுக்கும் இக்கீதையில் சமாதானங் கூறப்பட்டிருக்கிறது. இந்நூலை இப்பொழுது மொழிபெயர்க்காத பாஷையும் இதிலுள்ள கருத்துகளைப் புகழாத பண்டிதர்களும் உலகத்திலுள்ள எச்சமயத்திலுமில்லை. இக்கீதைக்கு ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகளும், இராமானுஜாசாரியாரும், மத்வாசாரியாரும் பாஷ்யம் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கீதையில் கர்மம், ஞானம், யோகம் முதலிய பலவிஷயங்களைப்பற்றி அர்ச்சுனனுக்கு கண்ணபிரான் சொல்லி வரும்பொழுது, மாயையில் அகப்படாதவர்கள் கிடையாதென்றும், மாயையை வென்றாலன்றி ஈஸ்வர தரிசனஞ் செய்வது சாத்தியமன்றென்றும், கூறியகாலையில் பார்த்தன், பின் எப்படித் தான் மாயையை விலக்கலாகும் என்று கேட்க, பகவான் ஈஸ்வரபக்தியினால்தான் மாயையாகிற வலையை அறுக்கலாமேயன்றி மற்றப்படியல்லவென்று கூறினார். ஆதலின் யோகம், ஞானம் முதலிய சகலமார்க்கங்களும் பக்தியொன்றில்லையானால் பிரயோஜனப்படமாட்டா. சம்சாரிக்கும், சந்நியாசிக்கும், போகிக்கும், யோகிக்கும, ஏழைக்கும் தனாட்டியனுக்கும், சகல லோகங்களிலுள்ள ஜீவராசிகளுக்கும் பகவத் பக்தியைத் தவிர வேறு சுலபமான மார்க்கமொன்றுமில்லை. எவனொருவன் ஈஸ்

வர பக்தியைக் கிரமப்படி செய்கிறானோ அவனுக்கு பரமபதம் நிச்சயம். அப்படிப்பட்டவன் எக்குலத்தி லுதித்தவனாயினும் பாதகமில்லை. இதற்கு நந்தன் என்ற நீசஜாதியில் பிறந்த புண்ணியவானே தகுந்த சாக்ஷியாகும். இவர் சரித்திரத்தைக் கேட்டவர்கள் உயர்குலம் இழிகுலமென்பதை கட்டோடொழித்து பக்திமானாயிருப்பவனையே உயர்ந்த குலமெனப் போற்றுவார்களென்பதிலும் தடையுண்டோ?

எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்.

—என்பதுபோல எந்தக் குலத்தில் பிறந்தவனாயினும் பக்தி செய்கிறவனிடமே ஈஸ்வரனுக்குப் பிரீதி. ஆகவே மானிட ஜென்மமெடுத்த ஒருவனுக்கு ஈஸ்வரனிடத்தில் பக்தியுண்டாவதற்கு, அவனிட முண்டாகக்கூடிய பதினாறு குணங்களில் ராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மச்சரியம், ஈரிஷை, அசூயை, டம்பம், தர்ப்பம், அகங்காரம் என்னப்பட்ட பதிமூன்று குணங்களை நீக்கவேண்டும். ஏனென்றால் ஸ்வதந்திர ஸித்திக்கு இவைகள் தடைகளாகும்.

1. விஷயபோக இச்சையினால் மதிமயங்கி யிழுக்கப்படுகிற குணத்திற்கு ராகம் என்ற பெயர். இராவணன் விஷயபோக இச்சையினால் சீதையைக் கவர பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களில் அபகீர்த்தி முதலிய அநர்த்தங்களை யனுபவித்தான்.

2. ஒருவன் தனக்கு அபகாரஞ்செய்தால் அதற்கு பதிலபகாரஞ் செய்யவேண்டு மென்கிற குணத்திற்கு துவேஷம். இரண்யகசிபன் தன் தமயனைக்கொன்ற நாராயணனைக்கொல்ல வெண்ணி பல அநர்த்தங்களை யனுபவித்தான்.

3. புத்திரமித்திர, கிரககிராம, தன தான்ய திகளை மேன்மேலும் சம்பாதிக்க வேண்டுமென்றுண்டாகிற குணத்திற்கு காமம் என்று பெயர். நரகாசுரன் இலக்ஷம் ஸ்திரீகளை விவாகஞ் செய்துக்கொள்ளுவதற் காசித்து தேவஸ்திரீகள் பதினாயிரம் பெயரை சிறைபிடித்து வந்ததைக்கேட்ட கிருஷ்ண மூர்த்தியால் அவன் பல துக்கங்களை யனுபவித்தான்.

4. தனக்குவேண்டிய காரியங்களில் ஒருவன் விக்கினம் பண்ணினால் அவனிடத்தில் விரோதம்கொள்ளுகிற குணத்திற்கு குரோதம் என்று பெயர். பகாசுரன் தனக்கு வரப்பட்ட அன்னம் முதலியவைகளை தடைசெய்த பீமராஜன் பேரில் குரோதம்வைத்து அவனால் பல அநர்த்தங்களை யடைந்தான்.

5. தன் சொத்தில் ஒருவருக்கு ஒரு பைசாகூட செலவு செய்யக்கூடாதென்ற எண்ணத்திற்கு லோபம் என்று பெயர். துரியோதனன் தன் இராஜ்ஜியத்தில பஞ்சபாண்டவர்களுக்கு ஐந்து குடிசைகள்கூடக் கொடுக்க மாட்டேனென்று லோபஞ்செய்ததால் பந்துமித்திரர்களுடன் நாசமானான்.

6. தன்னுடைய பதார்த்தங்களின் பேரில் அபரிமிதமான பிரியத்தைவைக்கிற எண்ணத்திற்கு மோகம். தசரத சக்கரவர்த்தி தனது குமாரனை ஸ்ரீராமரிடத்தில் வைத்திருந்த அத்தியந்தப் பிரியத்தினால், பிதுருவாக்கிய பரிபாலன நிமித்தம் காட்டுக்குப்போன இராமரின் பிரிவாற்றாமையால் பிராணஹானி முதலிய சங்கடங்களை யடைந்தார்.

7. ஐஸ்வரியப் பெருக்கினால் கர்வித்து வருகிற எண்ணத்திற்கு மதம் என்று சொல்லப்படுகிறது. கார்த்தவீர்யார்ச்சுனன் தன்னிடத்தில் வந்த மகரிஷியாகிய நாரதரை ஐஸ்வரிய கர்வத்தினால், மதித்து உபசரியாமலிருந்ததினால் பல அவஸ்தைகளை யடைந்தான்.

8. ஒருவர் சுகமாய் வாழ்ந்தால் அதைப் பார்த்து சகிக்காமல் விகற்பித்து வருகிற எண்ணத்திற்கு மாச்சரியம் என்று கூறப்படுகிறது. சிசுபாலன் தர்மராஜருடைய ராஜசூய யாகத்தில் ஸ்ரீகிருஷ்ணசுவாமிக்கு செய்யப்பட்ட



அக்ரபூஜா கௌரவத்தை சகியாமல் மாச்சரியப்பட்டபடியால் சரீரஹானி முதலிய பல தீங்குகளை யடைந்தான்.

9. தனக்கு வந்த துக்கம் பிறருக்கும் வராகாதா வென்று எண்ணுகிற சித்தத்திற்கு ஈரிஷை என்று பெயர். அருணாக்ஷதன் தனக்கு வந்த துக்கம் தனதிஷ்டனான வாணாசுரனுக்கு வரலாகாதா வென்று எதிர்த்த ஈரிஷையால் பிராணஹானி முதலிய தீங்குகளை யடைந்தான்.

10. தனக்கு வந்த சுக சௌக்கியம் பிறருக்கு வரலாமா வென்று எண்ணுகிற சித்தவிருத்திக்கு அசூயை என்று சொல்லப்படுகிறது. பவுண்டரீக வாசுதேவன், கிருஷ்ணனுக்கும் வாசுதேவன் என்ற பெயராவென்ற அசூயையினால் அவரிட மெதிர்த்து பல கஷ்டங்களை யனுபவித்தான்.

11. தான் செய்யும் தர்ம தானங்களைப் பார்த்து நான்குபேர் மெச்ச வேண்டுமென்று எண்ணுகிற சித்த விருத்திக்கு டம்பம் என்று பெயர். நபூர்வ மஹாராஜன் துருவாசரிஷியைப் பார்த்து நான் செய்த யாகத்தைப் போல் யார் செய்யப் போகிறார்களென்று டம்பமாகப் பேசியபடியால் பிராணஹானி முதலிய தீங்குகளை யடைந்தான்.

12. புத்திர மித்திர தனதானிய முதலிய சம்பத்துகள் தன்னொருவனுக்கு மட்டுமே யுண்டு. தனக்கொருவரும் சமானமில்லை. என்று எண்ணுகிற குணத்திற்கு தர்ப்பம் என்று கூறப்படுகிறது. சதகந்தன் ஐஸ்வரியத்தில் தனக்கு சரிசமானமானவ ரொருவருமில்லை யென்று அமரர்களுக்கு உபத்திரவஞ் செய்ததை நாரதர் ஸ்ரீராமருக்கறிவிக்க அவர் பாரியையான சீதையமனால் பிராணஹானி முதலிய கஷ்டங்களுக் குள்ளானான்.

13. அடா என்னை யறியாயா! நான் பிடித்த காரியத்தை சாதியாமல் விடுவேனோ! நீயா எனக்கு புத்தி கூறுகிறவன் என்று விகற்பித்து வருகிற எண்ணத்திற்கு அகங்காரம் என்று சொல்லப்படும். மதுகைடவரென்பவர்கள் மகாவிஷ்ணுவோடு யுத்தம் செய்து களைப்புறாமலிருக்கவே, அகங்காரங்கொண்டு மகாவிஷ்ணுவைப் பார்த்து உமக்கு என்ன வரம்வேண்டுமென்று கேட்டபடியால் பிராணஹானி முதலிய கஷ்டங்களை யனுபவித்தார்கள்.

ஆகையால் மேற்சொன்ன பதிமூன்று கெட்ட குணங்களையும் ஸ்வதந்திர ஸித்தியை விரும்புகிறவர்கள் சற்றுமில்லாமல் விட்டுவிடவேண்டியது அவசியம். ஏன் விட்டுவிடவேண்டுமென்றால் இராவணன் முதல் மதுகைடவர்கள் ஈறாகவுள்ள பேர்கள் மகா சமர்த்தர்களாயிருந்தும் பிராணஹானி, பந்துநாசனம் முதலான அநர்த்தங்களை அனுபவித்தார்கள். தற்காலத்திலும் இப்பேர்க்கொத்த குணங்களால் அநேக ஜனங்கள் திரவியநாசம், பந்து விரோதம், அபகீர்த்தி, வியாதி முதலான ஆபத்துகளை அனுபவிக்கிறதை நாம் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறோம். தவிர இக்குணங்கள் ஜனனமரண ஏதுவாயிருக்கிறபடியாலும், நரகத்திற்குக் காரணமா யிருக்கிறபடியாலும், ஜனன மரண ரூபமான தேகமே நரகமென்பதற்கு பிரமாண மிருக்கிறபடியாலும், எங்கே சரீரமுண்டோ அங்கேயெல்லாம் துக்கமுண்டென்றும், எங்கே சரீரமில்லையோ அங்கே துக்கமில்லை என்றும் வேதத்தில் கூறப்பட்டிருக்கிறபடியாலும், இவைகளை உடனே விட்டுவிடவேண்டியது.

இனி கொள்ளத் தகுந்ததான இச்சை, பக்தி, சிரத்தை என்ற முக்குணங்களைப் பற்றிப் பேசுவோம்.

1. பசிதாக நிமித்தம் அன்ன பானாதிகளை உட்கொள்வது, தேக சுகத்திற்காக மல ஜல விசர்ஜ்ஜனஞ்செய்வது, உறங்குவது முதலியவைகளை செய்ய வேண்டுமென்று உண்டாகிற எண்ணத்திற்கு இச்சை என்று பெயர். இவைகளை செய்யாமற்போனால் துக்கமும், செய்தால் சுகமுமுண்டாகிறபடியால் கொள்ளத்தக்கதாகும்.

2. பகவானிடத்திலும், குருவினிடத்தி

லும், மாதா பிதாக்களிடத்திலும் செலுத்த வேண்டிய விஸ்வாசத்திற்கு பக்தி என்று பெயர். மேற் சொன்னவர்களிடத்தில் பக்தியை செலுத்தி மோக்ஷத்தை யடைந்தவர்களைக் குறித்து பிந்திய பத்திரிகையில் ஒவ்வொரு சிறந்த திருஷ்டாந்தம் கூறுவோம்.

3. வேதாந்த சாஸ்திரங்களையும் மற்ற சிறந்த நீதி நூல்களையும் செவ்வையாகக் காப்பாற்ற வேண்டுமென்றும், பகவத் விஷயமான காரியங்களை செவ்வையாகச் செய்யவேண்டுமென்றும் உற்பத்தியாகிற எண்ணத்திற்கு சிரத்தை என்று கூறப்படுகிறது. அடுத்த பத்திரிகையில் கூறப்போகிற திருஷ்டாந்தங்களில் சிரத்தையையும் காணலாம்.

இவைகளில் முக்கியமானது பக்தி. இதற்கு சிரத்தையும் அவசியம். சிரத்தையோடு கூடிய பக்தி விசேஷமாக விருந்தாலும் முன் சொன்ன பதின்மூன்று கெட்ட குணங்களில் ஏதாவதொன்று லவலேசமிருந்தாலும், பூர்ணமான பக்தி யில்லாவிட்டாலும், தீங்கை யிழைக்குமேயன்றி நன்மை பயக்காது.

[பக்தியுள்ள விடத்தில் சிரத்தையும், சிரத்தையுள்ள விடத்தில் பக்தியும் தானே தோன்றி விளங்கும். மனிதன் நடப்பதற்கு இரண்டு கால்களும் ஒன்றைமுந்தி யொன்று சென்று உதவுவதுபோல, கடவுளை வழிபடு மன்பர்க்கு பக்தி சிரத்தை யிரண்டும் இருகால்களாக விருந்துதவும். இதனுண்மை உள்ளன்புடையவரிடத்து விகசிதமாம்.]

ஆகையாற்றான் நமது பத்திராதிபர் அடிக்கடி,

"அன்பும் சிவமு மிரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதியாரும் அறிந்திலர்
அன்பே சிவமாவதியாரும் அறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே."

என்ற திருமந்திரத்தையும்,

God is love, and he that
Dwelleth in love
Dwelleth in God
And God in him.

என்றதையும் பிரயோகிக்க மறந்துவிடுகிறதில்லை. அன்புவழிபட்டு ஆத்மரக்ஷை அடைந்த புண்டரீகபக்தன் சரித்திரத்தை அடுத்த சஞ்சிகையில் விவரிப்போம்.

## "A FAITH OF REASON WHICH POSTULATES A GOD TO REALISE IT."

"For man's well-being, Faith is properly the one thing needed '—Carlyle.

"And now abideth Faith, Hope, Love, these three; but the greatest of these is Love."——
—St. Paul. i. Cor. xiii.

"We can think of mind only in terms of matter. The antethesis of subject and object, never to be transcended while consciousness lasts, renders impossible all knowledge of that Ultimate Reality in which subject and object are united. It is one and the same Ultimate Reality which is manifest in us subjectively and objectively. The law of evolution holds good of the inner world as it does of the outer world."— Herbert Spencer, in *Principles of Psychology*.

புத்திக்கெட்டாதது பக்திக் கெட்டும்.

## நாரதர் கலகம்.

(உண்மை விளங்க ஒரு திவ்ய புருஷர் சொல்லிய கதை.)

இன்றைக்குச் சுமார் நூறுவருஷங்களுக்கு முன் சென்னைக்கடுத்த "திருபுரைநகர்" என்னும் புராதன புண்யக்ஷேத்திரத்தில் "செல்வகேசவராயர்" என்று ஒரு க்ஷத்திரியகுல திலகர் வாசஞ் செய்துவந்தார். இவருடைய முன்னோர்களில் ஒருவர் காஞ்சிபுரத்திலே சோழமஹா ராஜாக்கள் ஆண்டகாலத்தில் அவருக்குள் அரண்மனைச் சேவகத்திலிருந்துவந்தார். அவர் ஆதியில் பிராம்மணர். சோழமஹாராஜனுக்குப் புரோகிதராம் பதவிபெற்றவராதலால், அந்த மஹாராஜாவின் அன்புக்கும் ஆதரவுக்கு முரியவராய் அவருடைய முழுநம்பிக்கைக்கும் பாத்திரராய் அவர் அருகிலே எப்போதும் வசித்துவந்தார். இப்படி வசித்துவரும் நாளில் அவருடைய இராஜ்ஜியத்தில் உட்கலகம் ஒன்று நேரிட திடீரென்று அரசனுக்கு அபாயம் நேரிடும்படியான



ஆபத்து வந்துவிட்டது. மந்திரி பிரதானிகள் இது விஷயத்தில் வேண்டிய விழிப்பின்றி உஷார்க்குறைவாயிருந்ததினால் திடீரென்று நேரிட்ட ஆபத்துக்காலத்தில் அரசனைக் காப்பாற்ற வகை தேடாதவர்களாயிருந்து விட்டார்கள். கூடவிருந்த புரோஹிதர் பிராம்மணகுலத்தவரானாலும் சகவாசவிசேஷத்தால் பிரம்மநிஷ்டையிலும் இராஜதந்திரத்திலே மனம் பாய்ந்தவராயிருந்தார். இப்படி திடீரென்று நேர்ந்த அபாயம் அரசனை மீளா ஆபத்துக்குள்ளாக்குமுன், இவர் உளவு மர்மங்களெல்லாம் அறிந்தவராதலால், பிரதானிவேஷம் பூண்டு அரசன் பேரால் அவன் படைகளை இரகசியமாய்த் தயார் செய்து வைத்திருந்து, கலகக்காரர்கள் உத்தேசத்தையறிந்து அவர்கள் வேஷம்போட்டு நகரில் பிரவேசிக்கு முன்னமேயே, ஆயுதபாணிகளான போர்ச்சேவகர்களை க்ஷேத்திரயாத்திரைசெய்யும் பிரயாணிகள் கூட்டம் போல் சிறுகூட்டங்களாகப்பிரித்து, அங்கங்கே யிருத்தி, நல்ல சமயத்தில், முன்யோஜனையோடு அவர்களுக்கு குறிப்பித்திருந்தபடி சோமக்கலந்தட்டி சங்கேதஞ்செய்ய, ஸாதுக்களாய்ப் போலிவேஷம் தரித்திருந்த அத்தனை பேரும் போர்ப்புலிகளாகமாறி கலகக்காரர்கள் கண்விழித்துக் கத்தி வாங்குமுன் அவர்களை கால்பிடிக் கைப்பிடியாகக்கட்டி விலங்கிட்டு அரசன் கொட்டடியில் கொண்டுபோய் அடைத்துவிடச்செய்து தன்னுடைய யதாஸ்தானத்தில் அரசன் பக்கலடைந்து, அவன் கண்விழிக்கும் தருணம் பார்த்திருந்தார். இரவில் நடந்த ஆரவாரப் போர்ச் சின்னங்களால், நகர்க் காவலாளர்கள் ஏதோ கலகமென்று தெரிவிக்க மந்திரி பிரதானிகளெல்லாம் தாங்கள் மோசம் போனதைப்பற்றி விசனித்து சேனைகளையெல்லாம் போருக்கு முஸ்திபுசெய்து அரசன் துயில்நீங்கிவருவதை ஆவலோடு எதிர்பார்த்திருந்து, இராஜதானிக்கு நேர்ந்த ஆபத்தைத் தெரிவித்து அவர் உடனே யுத்தசந்நத்தராகவேண்டிய அவசரத்தை வற்புறுத்திநிற்க, அவனும் அப்படியே யாக அவசரமாய் காலைக் கடன்களை முடிக்க யத்தனித்தான். கூடவிருந்த புரோகிதர் நித்யகர்மாநுஷ்டானங்களை பதிகமாக வளர்த்தி வீண் காலதாமதம் செய்தனர். அரசன் அதுகண்டு பிராமணன்மேல் அடங்காக் கோபங்கொண்டு அவனைச்சிறையிலிட உத்தரவுசெய்து அவசர அவசரமாகப் போருக்குச் சந்நத்தனாக, பிராமணன், தன்னைஉடனே விடுவிக்காவிட்டால் சபித்துவிடுவதாகச் சொல்லிப் பயமுறுத்தினான். ஆபத்துக்காலத்தில் அச்சானியம்போல் பிராம்மணசாபம் பெற்றுப் போர்முகம் செல்ல மனமற்றவனாய், புரோஹிதருடைய உண்மையையுணர்ந்த சோழன், அவரை வரவழைத்துப் பரிகாசமாய் "ஸ்வாமி! தபோமஹிமை தங்களுக்கு ரொம்ப அதிகரித்துப் போய்விட்டது போலிருக்கிறதே! சாபமிட்டால் நான் தாங்குவேனோ!" என்று சொல்லி அவரை விடுவித்தான். பின்னும் பிராம்மணர் இடையூறு செய்ய, உள்ளதை யவரிடத்திலுள்ளபடி சொல்லி, அவருடைய ஆர்ப்பாட்டங்களெல்லாம் செய்ய அது சமயமன்றென்று வற்புறுத்த, புரோகிதர், பகவத் பக்தியிருந்தால் எப்பேர்ப்பட்ட ஆபத்தும் சூரியனைக்கண்ட பனிபோல் பறந்துபோய் விடுமென்று பின்னும் தான் பிடித்தபிடியே பிடியாக நின்றார். அரசன் இவர் இப்படிச்செய்த அட்டிகளைத் தாளமாளாதவனாய், 'புரோகிதரே, உமக்குத் தலை கழுத்தில்நிற்ககாலம் இல்லை" யென்றுசொல்ல, அவர் "எப்படியாவது மஹாராஜாவுக்குத் தலை கழுத்தில் தரித்திருந்தால் போதும்" என்று அவருடைய அவசரபுத்தியைச் சூக்ஷ்மமாய்க் கண்டித்தான். அதன்மேல் இவரிடத்தில் ஏதோ இரகசியமிருக்கிறதென்று அதை கிரகிப்பான் அவர்மனம் போனபடி விட்டுக் கொடுத்துப் பார்க்க, அரசனை மந்திராலோசனை சபைக்குப் போகவிடாமலே அந்தரங்க வழியாகக் கொட்டடிக்கு அழைத்துப்போய் கலகக்காரர்களெல்லாம்

கால்கட்டு கைக்கட்டுகள் இன்னும் அவிழ்க்கப்படாமல் உள்ளே பந்தோபஸ்து செய்யப்பட்டிருப்பதைக் காட்டி அரசனுக்கு வந்த ஆபத்து அடியோடு நீங்கிவிட்டதால், ஆபத்து வந்தகாலத்தில் மோசம்போய்த் தூங்கின மந்திரி பிரதானிகள் ஆத்திரத்துக்கு அரசன் உடன்படவேண்டியதில்லையென்று புரோகிதர் போதித்தார். அரசன் பிறகு மந்திரி பிரதானிகள் மோசம்போனதை யெடுத்துக் காட்டி உள்ளதையுள்ளபடி கலகக்காரர் விசாரணையின்போது அவர்களுக்கு மெய்ப்பித்து, தன்னுயிரையும் அரசையும் காப்பாற்றிய புரோகிதர் பிறவியினால் பிராம்மணரானாலும் குணத்தினாலும் புஜபலபராக்கிரமத்தினாலும் க்ஷத்திரியராயிருப்பதால் அவருக்குத்தன் மகளையே பாணிக்கிரகணம் செய்துகொடுத்து நாடுநகரங்களும் கொடுத்து தனக்குள் சிற்றரசராகவிருக்க அமர்த்திக்கொண்டான் என்று சொல்வர். இந்தக்கதையின் உண்மையையும் காலதேச வர்த்தமான விவரங்களையும் விசாரித்துக்கொண்டிருக்க அவகாசமில்லை. செல்வகேசவராயர் இப்பொழுது க்ஷத்திரியகுலதிலகராயினும் பிராம்மண ரக்தக்கலப்பு அவர் வமிசத்திலிருக்கிறதென்பதை ஸ்தாபிக்கவே அவருடைய பூர்வோத்திரத்தில் விசேஷமான இக்கதையை இங்குசொல்லலாயிற்று.

இந்த செல்வகேசவராயர், காலவேற்றுமையினால், பூர்வீக அதிகாரத்தையெல்லாம் ஆங்கிலேய கவர்ன்மெண்டுக்குப் பறிகொடுத்து அவர்களுடைய ஆட்சியில் அவருக்கு ஊதியமாய்க் கிடைக்கும் கைப்பொருளைக்கொண்டு கண்யஜீவனம் செய்துவந்தார். இவர் அக்காலத்தில் அதிசிரேஷ்டராயிருந்து கும்பினி ராஜாங்கத்தாரால் மிக மதிக்கப்பட்டவராயிருந்தும், புத்தி யுக்தி சாமர்த்தியம் சம்பத்து உலகஞானம் எல்லாம் அமையப்பெற்ற அதிர்ஷ்டசாலியாகிய இவர் 'உள்ளக்குறை' யொன்றினால் அனலிலிட்ட மெழுகுபோல் மனமுருகிவாடினார். இப்படி யிவ்வுலகில் ஒருவன் விரும்பத்தக்க சம்பத்துக்களெல்லாவற்றையும் பெற்றும் சந்தோஷமின்றி உலகத்திலுள்ள மாந்தர்க்கில்லா உள்ளக்குறையொன்றினால் மனம் நொந்து வருவதை யுணர்ந்த அவருடைய தர்மபத்னி அவரை என்னதான் சிஷ்ருஷைசெய்து களிப்பிக்கப் பார்த்தும், மதனலீலைகளால் அவர் மனதை மாற்றமுயன்றும், தம் யத்தனங்கள் பலிக்காததுகண்டு அவ்வம்மணி மிக வருந்தலுற்றார். இராயர் அவர்கள் தம் நித்யகடன்களை வழுவின்றிச்செய்து ஒழிந்த வேளைகளிலெல்லாம் அவ்வூரிலுள்ள திரிபுரசுந்தரியம்மன் சந்நிதானத்தில் போயுட்கார்ந்து,—"அம்மணீ! நீயே எனக்குக்கதி! உன்னைவிட்டால் எனக்கு வேறுகதியில்லை! நீயே எனக்குத்தாய்: உன்செல்வக்குழந்தை நான். என்மனக்குறையை உன்னிடத்தில் சொல்லாது பாசபந்தங்களால் கண்பஞ்சடைந்த மாந்தரிடத்தில் சொல்லியென்ன பயன்! உள்ளங்கனிந்தாரை உள்ளபடிபோற்றும் பேரருள்வள்ளல் நீ! என் மனம் அனலிலிட்ட மெழுகுபோல் உன் ஸ்வரூபத்தைக்காணாது கனிந்துருகுவதை நீ யறியாயோ! நீ யெனக்குக் கொடுத்திருக்கும் எல்லாப் பாக்கியங்களும் எனக்கு பாக்கியமாகத் தோற்றவில்லையே! அழுதபிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுகிற கதையாய் எனக்கு இவ்வுலகவின்பங்களைக் காட்டி ஏமாற்றப் பார்க்கிறாயே! உன் திருவருட்பால் கொடுத்துக் காப்பாற்றென்றால், கிலுகிலுப்பையைக்காட்டி யென்னைச் சமாதானப்படுத்தப் பார்க்கிறாயே! அம்மணீ! தாயே, இந்தப் பரிசோதனை வேண்டாம். என் உடல் பொருள் ஆவியையும் இதோ உனக்கு அற்பிதம் செய்தேன்! உன்னையன்றி எனக்கு வேறுகதியில்லை. உன் பக்தர்களன்றி யெனக்கு வேறு தோழரில்லை. உன்னடியார்களன்றி யெனக்கு வேறு உற்றாரில்லை. உன்னையன்றி யெனக்கு வேறு பெந்துவுமில்லை. தாய், தகப்பன், தாரம், தனயர், செல்வம், செருக்கு, பேர், புகழ், கீர்த்தியெல்லாம் நீரிற் குமுழிபோல் நீ காட்டும் விளையாட்டுகள். அம்மணீ! இவற்றோடெல்லாம் ஓடியாடி விளையாடியலுத்



தேன்! இப்பிறவித்துன்பம் போதும்! 'இப்புன்பிறவி வேண்டேன் இனிவேண்டேனே' யென்று உன் காலையே கட்டிக்கொண்டழுகிறேன்."—என்று இப்படி உள்ளுறந் தியானித்து அந்த அம்மன் கோவிலிற்கு அடிக்கடி போய் அம்பிகையே சரணம் என்று அழுதுவந்தார். காலையிலெழுந்தால் தன்னிஷ்டதேவதையைச்சிந்தித்து அவளுக்கு ஒரு மங்களஹாரத்தியேனும் செய்து ஆராதிக்காமல் வேலைபார்க்க இசையார். பொழுது புலர்ந்தபின் எத்தனை நேரம் வரையில் இகத்து ஜோலிகளிருப்பினும், நடுநிசியானாலும் அம்மன் தரிசனம் செய்து பள்ளியறை தீபாராதனை பார்க்காமல் தான் பள்ளிகொள்ள இசையார். இப்படியனேக வருஷங்களாக ஓய்வொழிவின்றி அவ்வம்மனை ஹிருதய பூர்வகமாய் பக்திசெய்து ஆராதித்து ஆத்மஞானம் சித்திக்கவேண்டுமென்று ஒரே பிடியாக மனதையெல்லாம் அதில் செலுத்தித் தபசு செய்துவந்தார். இப்படிப் பத்துவருஷங்கள் கழிந்தன. அம்பிகை அவர் பக்தி பூசனைக்குகந்து அவருக்கு புத்திர மித்திர களத்திர பாக்கியங்களெல்லாமளித்து லெக்ஷ்மீகடாக்ஷமுண்டாக அனுக்ரகித்தாள். இதையெல்லாம் பெற்றும் அவர் ஆசையடங்கவில்லை. மனம் ஒடுங்கவில்லை. அவருக்கு சம்பத்துக்களெல்லாம் அதிகரிக்க அதிகரிக்க, அவைகளையெல்லாம் அம்பிகையின் வரப்பிரசாதமாகப்பெற்று அவளை யாராதித்துத் துதிப்பதிலேயே அதிகமாக உபயோகித்துவந்தார். பணம் அதிகமாகக் கிடைத்தால் அம்பிகைக்கு நித்யபூஜைசெய்ய ஏற்பாடுசெய்வார். புத்திரபாக்கியம் பெற்றபின், முதலிற் பிறந்த குழந்தை பெண்ணாயிருந்தால், 'இது பெண்ணாய்ப்பிறந்ததே!' என்று மனம் சலிக்காமல், 'இது அம்பிகையின் வரப்பிரசாதம்; அம்பாளைத் துதிசெய்ய இக்குழந்தையை அருமை பெருமையாய் வளர்ப்பேன்' என்று அதற்கு பாட்டும் படிப்பும் கீர்த்தனைகளும் தோத்திரங்களும் பணத்தைப் பணமென்று பாராமல் செலவழித்துச் சொல்லிக்கொடுப்பார். பிள்ளைகுட்டிகள் பெருத்த சம்சாரியானால், நான்மட்டும் இனி ஒண்டியாகக் கோயிலுக்குப் போகாமல், பெண்டுபிள்ளைகளோடு ஸஹகுடும்பியாய் என் தாயைத்தெரிசித்து வருவேன் என்று பெண்டாட்டி பெண் முதலானவர்களை 'கோஷா' முறை ஜாதிமுறையும் பார்க்காமல் கோயிலுக்கு பஹிரங்கமாக அழைத்துப் போவார். கோயிலுக்குப்போனால் "நான் அழுக்குப்படிந்த மனதுடையவன்: அம்பாளுக்கு என் குறையை வாய்திறந்து சொல்ல நான் யோக்கியனில்லை: மாசமறுவற்ற பாலன் வாயால் என்குறையைச்சொல்லி பகவானைத் துதித்தால் அதைக்கேளாமல் தள்ளமுடியாது" என்று பசுங்கிளிபோலும் தன் இளங்குழந்தையை வாய்விட்டுத் தன் குறையிரந்து இனியகுரலில் பாடச்செய்து உண்மையறியாத அக்குழந்தை இராகம்போட்டு உள்ளபடி பாட தான் மனங்குழைந்து கைகூப்பி மனதில் கடவுளைத் தியானித்து நிற்பார். இப்படி அலுக்காது சலிக்காது பகவத்பக்தி செய்து வருநாளில் ஒருநாள் அவருக்கு இருந்திருந்தாற்போல் திடீரென்று ஒரு ஆபத்து விளைந்தது. எல்லாப் பறியிலும் உயிர்ப் பறிகொடுத்தல் மகா கஷ்டமானது. அதுவும் அன்பும் அபிமானமும் பாராட்டப் பழகியபின் ஒரு பிராணியை விட்டுப் பிரிக்கப்படுதல் மகாகஷ்டம். கொழுக்கொம்பில்லாமல் விடப்பட்ட கொடி எப்படித் தவிக்குமோ அதிலும் பதின்மடங்கு அதிகமாய்த் தவிக்கும் கொழுக்கொம்பில் சுற்றிப்படர்ந்த கொடி அக்கொம்பை விட்டும் இடையில் பிரிக்கப்பட்டால்; கொழுக்கொம்பு வழியாக ஏறி மேலேயுள்ள பந்தர்ப் பரப்பில் பற்றி முதிர்ந்த கொடியோ. கொழுக்கொம்பு இருந்தாலும்

கொண்டாவது இழுக்கும். தூக்கவேண்டியிருந்தாலும் கொம்புகளை உபயோகிக்கிறபோனாலும் பக்தரின்மேற்படர்ந்த பற்றுக்கோட்டின் பலத்தால் பாதிக்கப்படாமல் தன்னிலை குலையாது நிற்கும். அப்படியே உலகத்தில் பெற்றோர், பிறந்தார், உற்றார் என்றுள்ள பெந்துவர்க்கங்களெல்லாம் கிஞ்சிக்ஞ ஜீவனை மனிதனது அன்பு என்னும் இளங்கொடி பற்றிப்படர்ந்து மேலெழுந்து சென்று ஆகாயத்தில் அளாவிநிற்கும் நிராலம்பமான ஜகதீசன் பாதாரவிந்தமாகிய (அடி நடு முடிவற்று சச்சிதானந்த ஸ்வரூபமாய் விளங்கும் பரமசாதகமான) பந்தரில் போய்ப்பற்ற சாதகமாயுதவும் கொழுக்கொம்புகளாம். ஆகையால் அன்புவைத்த ஒருவரை யிழத்தல் பரமன் பாதத்தில் நீங்காத பற்று முற்றப் பெறுதவர்க்கு பிராணனை வதைத்துச் சின்னாபின்னம் செய்யும் பெருங்காற்று மழைக்கு ஒப்பாம். இப்படிப்பட்ட மஹாசங்கடமாகிய சோகம் நேரவும், பாவம், அந்த ஏழை பக்தர் மனம் விண்டு வெதும்பிக் கருகியது. "பட்ட காலிலேபடும் கெட்டகுடியேகெடும்" என்பது பழமொழி. அதற்கொப்ப அவருக்கு இதையொட்டி இன்னம் பல துன்பங்களும் நேரிட்டன. சாவு, இழவு, துன்பம், துக்கம், வியாதி, வழக்கு, விசாரம் எல்லாம் ஒன்றின்மேல் ஒன்றாக சேர்ந்தன. துன்பத்திலடிபடாத தூயஹிருதயம் வாய்ந்த அன்பர் மனம் நொந்துருகியது. கடைசியில் குழந்தைகளையும் பத்தினியையும் விட்டுப் பிரிந்திருக்கும்படியான சந்தர்ப்பமும் நேரிட மனம் விண்டு போகலாயிற்று.

(இன்னும் வரும்.)

---

## "THEY ALL LIKE IT VERY MUCH."

The Superintendent of the Olcott Panchama Free Schools, Madras, after a two years' experience of the "Vivekachintamani," writes:—"They all like it very much and are looking forward to its coming every month."

---

## LESSONS IN NATURE STUDY :

### ON ELEPHANT AND ITS CHARACTERISTICS.

### பிரகிருதி வித்தியாம்சம் :

### யானையும் அதன் குணாதிசயங்களும்.

இந்தியா, சிம்மளம், சீயம், பிரமதேசம் (Burma) முதலிய இடங்களிலிருக்கும் ஆசியா அல்லது இந்திய யானையைப் பார்த்தவுடனேயே அதின் முக்கிய விசேஷணங்கள் மனதில் பதிந்துவிடுகின்றன. பரந்தநெற்றி, சிறியகாது, மயிரற்று சுமாராக வழுவழுப்பான தோல், வளைந்தமுதுகு இவைகள்தாம். ஆபிரிக்க யானைக்கோ, குறுகின நெற்றியும், பரந்த காதுகளும் வளைந்ததலையும் சிறிது விசாலமான கண்களும் தட்டையான முதுகும் இருக்கும். இன்னொரு விசேஷமென்னவென்றால், தும்பிக்கை நமது கையைப்போல வஸ்துக்களைக் கையாட உபயோகப்படும் என்று தெரியுமல்லவா. அந்தத் தும்பிக்கையில் ஆசிய யானைக்கும் ஆபிரிக்க யானைக்கும் வித்தியாசமுண்டு. இந்திய யானைக்குப் புழைக்கரத்தில் முன்பக்கம் மாத்திரம் நாக்குமாதிரி நீண்ட சதையுண்டு. அதன் உபயோகத்தால் வஸ்துக்களைச் சுருட்டிப்பிடிக்கும். ஆபிரிக்க யானைக்கு தும்பிக்கையில் முன்பக்கம் ஒன்று பின்பக்கம் ஒன்றாக இரண்டு விரல்கள் போன்ற பாகம் உண்டு.

கடைசியாக யானையின் உபயோகங்களைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால் பெருகும். ஹிந்து ராஜாக்களின் சேனையில் அது ஒரு அங்கமாக உபயோகப்பட்டது. தற்காலத்தில் பரிவாரத்துக்காகத்தான் உபயோகப்படுகிறது. ஆங்கிலேய துரைத்தனத்தார் கனமான துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் இழுப்பதற்காக உபயோகிக்கிறார்கள். இவைகளை இழுப்பதற்கு அது தன் கொம்பை உபயோகிக்கிறதில்லை. ஜேணம் கட்டி உடம்பினாலாவது, கயிற்றைக்கட்டி பல்லில் கடித்துக்



கொண்டாவது இழுக்கும். ... தில்லை. காலில் புரட்டியாவது, தலையில் மோதியாவது தூக்கும். மரங்களையிழுத்து அடுக்குவதும் இப்படியே.

இனி யானையின் புத்திவலிமையைப்பற்றி நாம் அறியக்கூடிய தின்னதென்று பார்ப்போம். புத்தியின் மூலஸ்தானமாகிய மனதும் அதற்கிருப்பிடமாகிய மூளையும் நன்றாயமைந்திருந்தாற்றான் புத்தியும் தெளிவாயிருக்கும். யானைக்கு மண்டைமாத்திரம் பெரிதாயிருக்கிறதேயன்றி உள்ளிருக்கும் மூளை மிகச்சிறியதென்று முன்னமேயே பார்த்தோம். மூளையிற் கோணல்களும் மிகக் குறைச்சலாகவே, பின்னும் புத்தி குறைவுதான். ஆனால் யானையின் புத்திவலிமையைக் குறித்து ஜனங்களுக்கு மிகவும் உயர்ந்த எண்ணம் உண்டாயிருப்பது நாமறியாத விஷயமல்ல. டெமாஸ்தனீஸ் என்ற பிரசங்க வித்துவான் நன்றாய்ப் பிரசங்கஞ்செய்யக் கற்றுக்கொள்வதற்காக கடற்கரையில் நின்றுகொண்டு உரக்கக் கூவிப் பழகினதாக ஒரு கதையுண்டு. அந்த மாதிரி ரோம்நகரத்தில் ஒரு யானை தனக்குக் கற்றுக்கொடுத்த காரியங்களை நன்றாய்செய்யத் தேர்ச்சியடையும்பொருட்டு தனியாகத்தானே அதைச் செய்துகொண்டிருந்ததைக்கண்டதாக புளூடார்க், ப்ளினி என்ற இரண்டு சரித்திரீகர்கள் குறித்திருக்கிறார்கள். இதை எவ்வளவுமட்டும் நம்பலாமென்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. மற்றொரு யானைக்கு அக்ஷரங்களை யெழுதக் கற்றுக்கொடுத் திருந்ததாகவும், சுண்ணாம்புக் கட்டியைக்கொண்டு கறுப்புப்பலகையில் அது எழுதிவந்ததாகவும் ஒரு கதையுண்டு. இது ஒருவேளை நிசமாக இருந்தாலும் இருக்கக் கூடும். அடிக்கடி நாம் சர்க்கஸ் வித்தைகளில் பார்க்கும் யானைகளுக்கு எவ்வளவோ விசித்திரமான செய்கைகளெல்லாம் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். யானை தானாகவே தன் புத்திவலிமையால் யாதொரு காரியமும் செய்யமுடியாதென்றும் கற்றுக்கொடுத்தால் அசாத்தியமான காரியங்களையும் செய்யக் கூடியதென்றும் ஒரு தத்துவசாஸ்திரி குறித்திருக்கிறார். யானையிடத்தில் முக்கியமாக இரண்டு குணங்களுண்டு (1) கொஞ்சமேனும் பொய்யாகாத ஞாபகசக்தி. (2) பழகின பிறகு பாகனுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல். இந்த இரண்டு குணங்களும் மேலிட்டிருப்பதினால் தான் அது மிகவும் புத்தியிற் சிறந்ததென்ற அபிப்பிராயம் சாமானியமாய் உண்டாகிறது.

இந்த ஞாபகசக்தி யிருப்பதினால் தனக்கு உபகாரம் செய்தவர்களுக்குப் பிரதியுபகாரம் செய்ய எவ்வளவு காலமானாலும் சித்தமாய்க் காத்திருக்கும். இதற்குதாரணமாக ஒரு கதையிருக்கிறது பாருங்கள். புதுச்சேரியில் ஒரு இராணுவவீரன் இருந்தான். அவனுக்குக் குடிப்பதற்காக சாராயம் கிடைத்தபோதெல்லாம் தளத்துக்குச்சேர்ந்த ஒரு யானைக்குக் கொஞ்சம் கொடுத்துவருவான். இப்படியே நாளாவர்த்தியில் இருவருக்கும் நெருங்கின பழக்கமுண்டாயிற்று. ஒருநாள் கண் தலைதெரியாமல் மிதம்மீறிக் குடித்து போதைமேலிட்டது. மற்ற இராணுவவீரர்கள் இவனைப்பிடித்து தளகர்த்தனிடம் ஒப்பிக்க பிரயத்தனப்பட்டார்கள். இவன் பயந்து யானையண்டை ஓடி அதன் காலின் கீழ்படுத்து நன்றாய் உறங்கிவிட்டான். யானைப்பாகனும் மற்ற இராணுவ வீரர்களும் இவனை யிழுத்துப்போக எவ்வளவு பிரயாசைப்பட்டும் யானை தன் தும்பிக்கையை வீசி அவர்களை யண்டவொட்டாமலடித்தது. மறுநாள்காலை அவன் தூங்கியெழுந்து அவ்வளவு பெரிய மிருகத்தினடியில் படுத்திருப்பதைப் பார்த்து தன் உயிருக் கஞ்சினான். யானை யவனைத் தன் தும்பிக்கையால் தடவிக்கொடுத்து அனுப்பிற்று. இதே ஞாபகசக்தியை அபகாரம் செய்தவனுக்கு அபகாரம்செய்ய உபயோகிப்பதுதான் பழிக்குபழி என்று சொல்லப்படும். இதைக் குறித்த கதைகள் அநேகம் உண்டு. பரதபுரி (Bhurtpore) கோட்டையை அங்கிலேய இராணுவம் முற்றுகை போட்டகாலத்தில் கோடைகாலம் சமீபித்தது. இராணுவம் தண்டுபோட்டிருந்த இடத்துக்கு அணித்தாய் எங்கும் ஜலம் என்ற பெயரே கிடையாது. ஆனால் கொஞ்சதூரத்தில் ஆழமான கிணறுகளுண்டு. அந்தக் கிணறுகளில் கூட்டம் மிக

அதிகமாகவே ஜனங்களுக்குள்ளும் கால்நடைகளுக்குள்ளும் அடிக்கடி சச்சரவு நேரிடுவதுண்டு. ஒருநாள் இரண்டு யானைப் பாகர்கள் தத்தம் யானைகளைச் செலுத்திக்கொண்டு போனார்கள். அதில் ஒரு யானை பெரியது. ஆனால் அதனிடத்தில் தண்ணீர் எடுப்பதற்கு தொட்டி கிடையாது. தன்னிலும் இளைத்த மற்ற சிறிய யானை வைத்திருந்ததை பலவந்தமாய்ப் பிடுங்கிக்கொண்டது. சமயம் வந்தபோது பார்த்துக்கொள்ளலாமென்று அது சும்மாவிருந்தது. சிறிதுநேரங்கழித்து அந்தப்பெரிய யானை கிணற்றுப்பக்கமாய் நின்றுக்கொண்டிருந்தபோது மற்றது மெள்ள பின் நகர்ந்து ஒரே மோதாய் மோதி அதைக் கிணற்றிலே விழ்த்தியது. பெரிய யானை எவ்வளவு பயப்பட்டிருக்கும் என்பதை நாமே ஊகித்துக் கொள்ளலாம். (இன்னும் வரும்.)

---

## EXTRACT.—ஆபரணம்.

1. பிராமணன் வித்தையால் விளங்குகின்றான்; க்ஷத்திரியன் விஜயத்தால் விளங்குகின்றான்; செல்வமுடையோன் தானத்தினால் விளங்குகின்றான்; குலஸ்திரீ நாணத்தினால் விளங்குகின்றாள்.

2. கைக்குத் தானம் ஆபரணமாம்; கண்டத்திற்குச் சத்தியம் ஆபரணமாம்; சுரோத்திரத்திற்குச் சாஸ்திரம் ஆபரணமாம்; அந்நிய ஆபரணங்களினால் என்ன பயன்?

3. நட்சத்திரங்களுக்குச் சந்திரன் ஆபரணமாம்; ஸ்திரீகளுக்குப் பதி ஆபரணமாம்; பூமிக்கு அரசன ஆபரணமாம்; வித்தை யாவருக்கும் ஆபரணமம்.

4. குதிரைக்கு வேகம் ஆபரணமாம்; ஸ்திரீகளுக்குப் பயம் ஆபரணமாம்; பதிகளுக்குத் தபசு ஆபரணமாம்; அரசனுக்குப் பொறுமை ஆபரணமாம்; வீரனுக்குப் பராக்கிரமம ஆபரணமாம்.

5. ஆகாசத்திற்கு பரிசுத்தத்தன்மை ஆபரணமாம்; தாமரைவனத்திற்கு வண்டு ஆபரணமாம்; வாக்கிற்குச் சத்தியம ஆபரணமாம்; செல்வத்திற்குக் கொடை ஆபரணமாம்; மனத்திற்கு மைத்ரி ஆபரணமாம்; சத்துருக்களுக்கு இன்சொல் ஆபரணமாம்; யாவருக்கும் விநயம் ஆபரணமாம். —விவேகபாநு.

## POEM: RAMA AND THE SQUIRREL:

## இராமனும் அணிலும்.

நேரிசை யாசிரியப்பா.

அயோத்தி ஆண்ட தசரதன் புதல்வன்
இராகவன் அழகுறு ஜனகியை மணந்து
கூனியும் சிற்றனையும் கொடுமை யிழைப்பக்
கோலும் துறந்து காடும் புகுந்து
காதலி தன்னுடன் காலம் கழிக்க
அரக்கர் போக்கிய மாய மானினைக்
காதலி காமுறக் கணவன் தொடர்ந்தனன்:
வந்திழை தனிப்ப இயற்றிய மாயம்
தசமுகன்‡ தோன்றித்தையல்முன் தவமொடு[1]
தரையுடன் பெயர்த்துத் தடந்தேர் வைத்து
ஏகினன் விரைந்து இலங்கைக் கவளுடன்.
இம்மா யமதை இராகவன் அறிந்து
விம்மா[2] வெதும்பி வனிதையை மீட்க
வானரத்தலைவனை நட்புக் கொண்டு [சீதையை
குரங்கெலாம் விடுத்தனன் கொணர்கெனச்
குணக்கும்[3] தெற்கும் குடக்கும்[4] வடக்கும்.
அணங்குறை இடமதை அநுமனால் அறிந்து
குரங்கெலாம் கூடியே குழுறுகடல் அணையிட
செவ்விய கொம்புத் தேனினைக் கூட்டொடு
மாந்திக்[5] களித்து வானரக் குழுவெலாம்
வெறியும் வீரா வேசமும் உற்று
தோள்தனைக் கொட்டி வாலைமேற் றாக்கிக்
கனைகடல் அடங்கவும் இடியே றடங்கவும்
பிராணிகள் நடுங்கவும் பிரயாணி ஒடுங்கவும்
ஆர்த்துக் குதித்து ஆரவாரித்துப் [டித்து
பொருப்பொடு[6] பொருப்பை நெருப்பெழப்பொ
எட்டுத் திக்கினும் கடுகி ஏகியே
பருத்த பொருப்பினைப் பெயர்த்து வந்து
தசமுகற் கபரக் கிரியையில்[7] காட்டும்
கற்போற் பொருப்பினைப்போட்டன கடலில்
குரங்கடி வயிற்றினில் அணைத்திடும் குட்டியும்
இரங்கியே இராமனுக் கெடுத்ததோர் குன்றினை
இவ்வா றுகப் பலமலை கொணர்ந்து
கௌவைக்[8] கடலிற் கட்டுங்கால் அணையினை

‡ பத்துத்தலையையுடைய இராவணன். 1. தவவேஷம் பூண்டு. 2. விம்மி. 3. கிழக்கு. 4. மேற்கு. 5. மாந்தி=குடித்து. 6. பொருப்பு=மலை. 7. சாவுக்குச்செய்யும் சடங்கு. 8. கௌவை=சப்தம்.



மயிரடர் வாலும் ஒளியுறு கண்ணும்
சாம்பல் நிறமும் வாய்ந்ததோர் அணிலது
கண்ணிற் கண்டது கடலினை யிடுதலை
குரங்குகள் எல்லாம் ஒருங்கு சேர்ந்தே.
இன்னதற் கென்றனை அறிவதற் கவ்வணில்
நறுமணம் பரப்பும் பொன்னிற மடல்கள்
இன்னிசை பாடும் [9]அளிமது உண்ண
விரியப் பெற்று விளக்கா விளங்கும்
கைதை[10] மரங்கள் கரையிரு மருங்கும்[11]
நெருங்கி ஒழுங்கா நிறைக்கப் பெற்ற
தீம்புனல்[12] பாயும் செவ்விய ஓடையில்
புனனை நீழலிலோர் புதுமணற் பரப்பில்
காதலி யுடனுமோர் காதலன் அமர்ந்து
சிற்றுண் டிதனைச் சிரித்துண் ணுங்கால்
அவ்வுண் டிதனை அவர்கை நின்றும்
தட்டிப் பறித்துத் தானும் புசித்துக்
குட்டிக்கு மூட்டும் குரங்கினைக் கண்டு
கட்டிடும் அணைக்குச் காரணம் யாதென
அணிலது கேட்க: 'இராமன் மனைவியை
'இராவணன் கவர்ந்து இலங்கைக் கேகினன்:
'அணங்கினை மீட்கவே அணையினைக் கட்டுதல்'
எனவிடை பகர்ந்திடக் குரங்கும் பரிந்து
மனதினில் இரங்கியே மயங்கித் தியங்கி
கண்ணீர் அருவியாக் கணத்திற் பெருக்கி
"என்னால் இயன்ற உதவியான் புரிகுவன்
"உடலும் உயிரும் ஒருங்கே அளிப்பன்
"கொடியனைக் கொன்று கொடியினை மீட்டும்
"படியினில்[13] நேர்ந்தவிப் பாதகம் தீர்க்க
"அடியனேன் என்னால் ஆய உதவியைப்
"புரியவென் முன்னோர்புரிந்தார்கொல்நற்றவம்"
என்னத் தன்னெஞ் சொடுசொலி அணிலது
தழைத்த ஆக்கமும் கொழுத்த ஊக்கமும்
பழுத்த கருணையும் செழித்த அன்பும்
பூண்டே உறுதியாய்ப் புருடோத் தமன்பால்
பசியும் துயிலும் பாராது நள்ளிருள்
நிசிவேளையிலும் நடுவெயில் அதனிலும்
நெடுவழி நடந்தும் செடிகொடி கடந்தும்
ஏகிப் பலதிசை இளைப்பது வன்றியே
எடுத்து வந்து சிறுத்த கற்களைக்
குவியல் குவியலாக் குவித்தது கரைதனில்;
தாய்முது கேறிய சிறுவணிற் குஞ்சும்
தண்ணருள் சுரந்து கவ்வின தோர்கல்.
கனைகடல் ஒலிக்கும் கரைபொரும் அலைக்கும்
மேலெழு திரைக்கும் கொஞ்சமும் அஞ்சாது
குவித்த கற்களைப் போட்டன கடலில்
குரங்குபோற் றானுமோர் அணைகட் டிடவே
இதனைக் கண்டு வானரக் குழுவெலாம்
இறுமாந் ததனை இகழுமா போல
பற்களைக் காட்டிப் பரிகசித் தனவே:
"புல்லிய அணிலிது புழுவை நிகர்க்கும்
"காக்கைவாய் கவ்வின் கணத்தினில் இறக்கும்
"யாக்கையோ சிறிது அவயவம் குறிது
"பல்லிற் கவ்வுமாம் பலகற் கொணருமாம்
"கடலிற் போடுமாம் கட்டுமாம் அணையினை"
என்றவ் வணிலை இகழும் போழ்து
இராமனும வ்விடம் எய்தினனாயினன்.
குரங்குகள் எல்லாம் கூட்டம் கூடியே
கைகளைக் கட்டி வாய்தனைப் பொத்தி
அவன்முன் நின்றன களிப்பது பூத்தே.
உவந்தவன் அவைகளை ஆசீர் வதித்தனன்
அணிலினை இகழ்ந்த குரங்குகளை நோக்கி
"அணையிட் டன்பினை நாட்டிய அன்பவர்காள்
"உருவினைக் கண்டே எள்ளாமை[14] வேண்டும்
"பெருமையும் சிறுமையும் உருவால் இல்லை
"பெருமைக் களவு அன்பொன் றேதான்
"உருவிற் சிறிய அணிலிது வாயினும்
"சிறந்த தொழிலை இயற்றிய" தெனவே,
அணிலின் அன்பினை அகத்தினில் அறிந்து
மிகவும் வியந்து அகமும் உவந்து
"மெய்வருத் தமதைச் சிறிதும் நோக்காது
"மெய்யன் புடனும் உழைத்த அணிலே!
"புல்லிய பிராணிநீ ஆயினும் என்பால்
"பூண்டாய் அன்பினை மாண்டார்[15] போல
"நிலையா யாக்கையால் உதவியைப் புரிந்து
"நிலையாம் புகழை நிறுத்தினை நிலமிசை[16]
"ஆகையால் நீயிப் புவியினில் நெடுநாள்
"சுகமாய் வாழ்வை சுற்றத் தொடு"மென
வாழ்த்தி அதனைப் பின்வர் இராமனும்
உலக மனைத்தையும் ஊட்டும் கையினால்
அண்ட மனைத்தையும் ஆட்டும் கையினால்
தடவினன் முதுகினில்தயவுடன்குளிர்ந்தே
மூக்கு முதலதன் வால்நுனி வரைக்கும்
மூன்று கோடுகள் தோன்றின முதுகில்
வெள்ளைக்கோடுகள் நரைத்த முதுகில்
அந்நாள் தொட்டு அணிலின் முதுகில்
அன்பிற் கோரடை யாளமா
மூன்று கோடுகள் ஊன்றின வாயின.

9. அளி=வண்டு. 10. தாழை. 11. மருங்கு=பக்கம். 12. மதுரமானஜலம். 13. பூமியில்.

14. எள்ளாமை=இகழாமை. 15. மாட்சிமையுடையார், பெருமையுடையார். 16. நிலம்×மிசை=நிலத்தினில்.

## CHILDREN'S PAGE:

SOUNDARANANDA.

## சிறுவர்க்கான பக்கம் :

### சௌந்தராநந்தா.

பூர்விக இந்து சமஸ்தானங்களில் பேர் பெற்று விளங்கிய விஜயநகரத்தைச் சார்ந்த துங்கபத்ரா தீரவாசமாகிய ஒரு கிராமமுண்டு. அது நீர்வளம், நிலவளம் பெற்று சிறப்புற்றிருந்ததால் பற்பல மரம் செடி கொடிகளும், பூஞ்சோலைகளும், பட்சி இனங்களும் நிறைபப் பெற்று வெகு ரமணீயமாய் இருந்தது. அதில் தனபாலனென்னும் ஓர் வணிகனுக்கு சர்வசம்பத்துக்கள் இருந்தாலும் மக்கட்பேறு இல்லையாதலின் துக்கசாகரத்தில் ஆழ்ந்தவனாய் தக்க பெரியோர்களை வரவழைத்து தனது குறையைச் சொல்லிக்கொண்டான். அவர்கள் அவனைப் பலவித தானதருமங்களைச் செய்யச் சொல்லி தினந்தோறும் அங்குள்ள காளிகோவிலை வலம்வந்து அம்மனை தரிசித்துப் போம்படி கட்டளையிட்டார்கள். அந்த தனபாலன் தனக்குச் சொல்லியபிரகாரம் செய்து வரவே அந்த தேவி மனம் உவந்து ஒரு புத்திரன் உண்டாகும்படி அனுக்ரஹித்தாள். நாளாவர்த்தியில் அழகே உரு எடுத்தாற்போல் அதிசுந்தரவடிவுள்ள ஓர் புத்திரன் பிறந்தான். தகப்பனார் இச்செய்தி கேட்டதும் மிக்க களிப்பெய்தி வேண்டிய அளவு அந்தணர்களுக்கும், ஏனையோர்க்கும் தானங்கள்செய்து அந்தநாளை ஒரு பெரிய உற்சவமாகபாவித்து சிறப்புச் செய்தான். அக்குழந்தையின் சௌந்தரியத்தைப்பற்றி அதற்கு சௌந்திரனென நாமகரணஞ்செய்யப்பட்டது. தனபாலன் மனைவி கருணம்பாள் என்பவள் குழந்தையை பொற்றொட்டி லிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்துவந்தாள். அதிகசெல்வமாயும் சிறிதும் கண்டிக்கப்படாமலும் வளர்ந்ததால் அவன் பல துர்நடத்தைகளை அனுசரிக்கத்தொடங்கவே பெற்றோர்களின் மனது சஞ்சலமடைந்தது. கெட்ட சகவாசம் முற்றவே சௌந்திரன் நடத்தையும் வரவர அதற்கேற்ப மாறிவந்தது. துங்கபத்திரா கரையினின்று சுமார் 2-மைல் தூரத்திலுள்ள ஒரு ஊரில் ஆடல், பாடல் முதலியவைகளிற் தேர்ச்சியடைந்து ஆடவர்களை மயக்கித் தன் வசமாக்கிக்கொள்ளும் வித்தையில் நிபுணளாய் இருந்த அம்புஜம் என்ற ஒரு விலைமகள் இருந்தாள். சௌந்திரன் வேடிக்கையாக பரசல் போட்டுக்கொண்டு தன் தோழர்களோடு எதிர்க்கரையடைந்தான். வெகு நாளாய் இந்த பாலகனை எவ்வாறாவது வசப்படுத்திக்கொண்டு தான் பொருள்தேடக் கருதியவளாய் இருந்தமையால் அவள் தன்னை ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு தனது உத்தியான வனத்தில் வீணை வாசித்துக் கொண்டு பாடத்தொடங்கினாள். சௌந்திரன் கரைசேர்ந்ததும் வீணாகானத்தைக் கேட்டு அதிக ஆவல்கொண்டு தன்கூட வந்த சிநேகிதர்களை எண்ணிப்பாராமல் ஒருவனாக அவ்விடம் போய்ச்சேர்ந்தான். அதிக பணக்கார மகனென முன்னமே தெரிந்திருந்த அவள் சௌந்திரனுக்கு உபசாரம்செய்து ஒரு உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்தாள். அவன் அவளது பாட்டுக்கேட்டு மதிமயங்கி தினமும் அவன் தன் ஊரைவிட்டு இவளிடம் உத்தியான வனத்திற்கு வந்துகொண்டிருந்தான். சௌந்திரன் சிநேகிதர்கள், உற்றார், பெற்றார் என்ன புத்திசொன்னபோதிலும் தன் போக்குப்படியே நடந்துவந்தான். வீட்டில் உள்ள சம்பத்துக்களை எல்லாம் அம்புஜமிடம் சேர்த்துவிட்டான். வயதுசென்ற அவன் தகப்பனார் சதா துக்கசாகரத்தில் இருந்தவராதலால் திடீரென உயிரை இழந்தனர். சௌந்திரன் வீட்டில் இல்லாமல் எப்போதும் போல அம்புஜமிடமே இருந்தான். அவனுடைய உயிர்த்தோழர்கள் அவனிடம்சென்று இறந்துபோன தனபாலனுடையடத்தரகிரியைகளைசெய்யும் காலபரியந்தமாவது, சௌந்தரனை யனுப்பவேண்டுமென்று வெகுவாய்க் கேட்டுக்கொண்டனர். அம்புஜம் மனது மெழுகுபோல் உருகி சௌந்தரனைப்பார்த்து பலவாறு தேற்றிப் போகச்செய்தாள். அவன் ஒரு கணமேனும் விட்டுப்பிரிய மனமில்லாதவனாய் இருந்தபோதிலும் நிர்ப்பந்தத்தின்மேல் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு தன்பதியடைந்து தன் தகப்பனாருக்குச் செய்யவேண்டிய சிரார்த்த முதலிய சடங்குகளைச் செய்துமுடித்துக்கொண்டு அன்றிரவே ஆற்றைக்கடக்க வெண்ணினான். வானத்தில் நீருண்ட மேகங்கள் கவிந்துகொண்டு பேரிருள்சூழ காற்றும், இடியும், மின்னலும் அதிகரிக்க தாரை தாரையாய் பெருத்தமழை அடித்துக்கொண்டிருந்தது. வெளியே ஜீவராசிக்குள் யாதொன்றும் தலை நீட்டக்கூடாதபடி அவ்வளவு பயங்கரமாக விருந்தது. மணி பன்னிரண்டாய்விட்டது. இதை எல்லாம் நம்முடைய சௌந்திரன் பாராட்டாமல் தனிமையாய் மழையில் அடிபட்டு அனேகவிடங்களில் கால் சறுக்கி விழுந்து தட்டித்தடுமாறி தாம்பரபரணிதீரம் வந்தடைந்தான். அப்போது ஆறுபெருக்கெடுத்து கோஷித்திருக்கக் கண்டான். நீந்துவதில் மிக்க தீரனாதலால் உடனே ஆற்றில் வீழ்ந்து அங்கே மிதந்துவந்த ஒன்றை மரக்கட்டையென அதை கையில் பிடித்துக்கொள்ள அதிர்ஷ்டவசத்தால் ஆறானது இவனை அம்புஜம் வீட்டிற்கெதிரில் கொண்டுவந்துவிட்டது. இக்கண்டத்திற்குப் பிழைத்தேன் என்று மரக்கட்டையை ஓரிடத்தில் ஒதுக்கிவிட்டு கரைவந்து வஸ்திரங்களைக் களைந்து நன்றாய்ப்பிழிந்து கட்டிக்கொண்டு தான்கட்டிக்கொடுத்த பங்களாவுக்குள் நுழையப் பார்த்தான். சுற்றிலும் சுவர் கிளப்பப்பட்டிருந்தமையால் உள்ளே போகக்கூடவில்லை. வெளியே நின்று தொண்டைகிழிய கதறினபோதிலும் இவனது சப்தம் காற்று, மழை, இடி முதலியவற்றின் சப்தத்தில் மூழ்கிப்போயின. இருட்டோ எதிரில் வருவோர் இன்னாரெனத் தெரியாதபடி அவ்வளவு அந்தகாரமாய் இருந்தது. சுவரில் வெகு நீளமாய் தொங்கின ஒன்றை கயிறெனப்பிடித்து உள்ளே முத்தத்தில் குதித்து அறையில் நுழைந்தான். அம்புஜம் விழித்தெழுந்து "ஆ இதென்ன ஆச்சரியம். எப்படி உள்ளே வந்தீர். இவ்வேளையில் ஆற்றைக் கடக்க உமக்கு படகு ஏது. வெளியே தலை நீட்டாதபடி மழை கொட்டுகிறதே. ஆ! பளா! வெகு நேர்த்தி. எட்ட இருந்து பேசும். கிட்டே வராதேயும். என்ன பிண நாற்றம் வீசுதே. எப்படி இந்த கோலத்தோடு சுவர்தாண்டி வந்தீர் எனப் படபடத்துப்பேசினாள். அதற்கு சௌந்திரன் தான் ஒரு கயிற்றைப்பற்றி வந்ததாகச் சொன்னான். கயிறே கிடையாதே எங்கே காட்டுமெனக் கைவிளக்கு ஒன்றைஏற்றிக்கொண்டு வெளியேவரவே, ஒரு பெரிய கருநாகப்பாம்பைப் பார்த்து திடுக்கிட்டாள். எப்படி ஆற்றைக் கிடந்தாரென அறியும்பொருட்டு கையிலுள்ள விளக்கோடு ஆற்றைப் பார்க்கவே ஓரத்தில் ஓர் அழுகிப் போன பிணம் மிதக்கக்கண்டு அதை மரக்கட்டையெனப் பிடித்து தன்பொருட்டு வந்தவனைப்பார்த்து பரிதாபத்தோடு நீர் இவ்வித பக்தியை உம்மைப்படைத்த சர்வாபீஷ்ட பிரதாபகராகிய சர்வேஸ்வரனிடம் செலுத்தினால் முக்தியடைய ஆக்ஷேபனையே கிடையாது. மின்னலைப்போல் தோன்றி மறையும் மாம்சத்தாலாகிய பாண்டத்தையுடைய அடியாள்மீது இந்த வீரபக்தி தகாதெனச் சொல்லவே, அவன் மனதில் பசுமரத்தில் ஆணி அறைந்தாற்போல் பட்டு அந்த நிமிஷமே அவளை குருவாக எண்ணித் துதிசெய்து துறவறம் பூண்டு சௌந்தரானந்த சுவாமிகளென சிறப்புப் பெயர்வாய்ந்து ஜீவகாலபரியந்தம் நிஷ்டையிலிருந்து ஜீவன்முக்தராய் விளங்கி, விதேஹமுக்தி யடைந்தார். இதை வாசிப்போர் ஒவ்வொருவரும் இவ்வுலக வாழ்க்கை இத்தன்மையதென நன்குணர்ந்து வழி பிசகி நடக்காவண்ணம் இளமை முதற்கொண்டே நன்னெறித் துறையைப்பற்றி தெய்வபக்தி பூண்டு காலங்கழித்து சுகமடை வாராக.

## SOME INTERESTING ITEMS.
### சில விநோதவிஷயங்கள்.

1. மனிதனது எலும்புக்கூட்டை நிறுத்துப் பார்த்தால் சராசரி 14-பவுண்டு நிறையிருக்கும்.

2. மனிதன் மூளை மற்ற எந்தப்பிராணியினும் இரண்டுபங்கு பெரிதாயிருக்கும்.

3. ஸ்காத்லாந்தியர் மற்றத்தேயத்தாரை விட உயரத்திலும் கனத்திலும் மிஞ்சினவர்கள். அவர்கள் உயரம் 5-அடி 9-அங்குலமாகும், உடல் நிறை 150 பௌண்டாம். பிரஞ்சுக்காரர் 136-பௌண்டும், ஜர்மானியர் 146-பௌண்டும், நிறையுள்ளவர்.

4. மனிதருக்குச் சராசரி பற்கள் 32, பால்யத்தில் பற்கள் குறைந்தும் வளரவளர அதிகப்பட்டும் வரும்.

5. மனிதன் மினிட்டொன்றுக்கு 20 தரம் மூச்சுவிடுவான். மணிக்கு 1,200-தரம் ஆகிறது. (யோகியோ ஒருநாளைக்கு 21000 தரம் ரேசகபூரகரும்பக மியற்றுகிறான்.)

6. நாம் மூச்சுவிடும் வாயுவில் 100-ல் 4·08 பங்கு கரியமிலவாயுவென்னும் விஷவாயு கலந்திருக்கும்.

7. குழந்தைகளுக்கு நாடி அதிகவேகமாயடித்துக்கொள்ளும். மினிட்டுக்கு 120-தரம் அடித்துக்கொள்ளும். முதிர்ந்தவர்களுக்கு 80 தரம் அடித்துக்கொள்ளும். 60-வயதில் நாடி மினிட்டுக்கு 60-தரம் அடித்துக்கொள்ளும். ஸ்திரீகளுக்குப் புருஷர்களைவிட விரைவாய் அடித்துக்கொள்ளும்.

8. உலகிலுள்ள மணிகள் எல்லாவற்றிலும் பெரிது உருஷியதேசத்தில் மாஸ்கோ (Moscou) நகரில் உள்ள மணி. இதன் நிறை 220-டன், ஆனால் இம்மணி இப்போது உடைந்துபோயிருக்கிறது. இவ்வூரிலேயே 110-டன் நிறையுள்ள இன்னொருமணியுள்ளது. இது பெரியமணிகளில் இரண்டாவதாகும். நவகோரட் (Novagorod) என்னும் இன்னொரு ருஷிய நகரில் 31-டன் நிறையுள்ள ஒரு மணியிருக்கின்றது. ஐரோப்பிய தேசங்களில் உள்ள மற்றமணிகளெல்லாம் இவற்றிற் சிறியவைகளே. லண்டன் நகரில் ஸெண்ட் பால்ஸ் (St. Paul's) என்னும் கோயிலில் கட்டியிருக்கும் மணியும் பெரிதே. கிட்டத்தட்ட 17-டன் நிறையுள்ளது. நாதவிசேஷத்தைப் பார்க்கும்போது ஸெண்ட்பால்ஸ் மணியும், மான்செஸ்டர் நகரில் ஒரு மணியும் மிகச் சிறந்தவை என்கிறார்கள். மணிகள் வார்ப்பதில் பர்மாதேசத்தார் பேர்பெற்றவர்களென்கிறார்கள். இவர்கள் ஐரோப்பியர்களைப்போல வார்க்க வல்லவர்களாகத் தோன்றுது.

9. ஆனைக்கு வயது-200, ஒட்டகைக்கு 40, குதிரைக்கு 30, மாட்டிற்கு 20, நாய்க்கு 12, பூனைக்கு 10, தவளைக்கு 15, கிளிக்கு 100, திமிங்கிலத்துக்கு 400.

10. பருந்து மணிக்கு 100 மைல்வீதமும், காக்கை 25-மைல்வீதமும், புறா 60-மைல்வீதமும் பறந்தோடும்.

## OUR RUZZLE CORNER.
### விடுகதைகள்.

புரட்டாசி மாதச்சஞ்சிகையில் 192-ம் பக்கத்தில் வெளியான விசித்திரக்கேள்விகளுக்கு கூட்டி அனுப்பப்பட்ட விடையை கீழ் பிரசுரிக்கிறோம்.

விடை.

I.

1. அரசனுக்கு இருப்பிடம் அரமனை (அரைமனை) நமக்கு முழுமனை.
2. காது போனபோது.
3. சப்பாத்தியில்.
4. அகராதியில்.
5. அம்புலிமானுக்கு.
6. அய்யாக்குட்டிக்கு.

II.

1. முட்டையிட்டு-முட்டையிட்டு.
2. பட்டுப்பட்டு.
3. பாய்ந்து பாய்ந்து.
4. பார்ப்பாரில்லாமல்.
5. இடித்திடித்து.

## Mr. MONTAGU'S DEPUTATION TO INDIA.

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God that sublime belief that seeing evil I yet have faith."*

*" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."]*

"பத்சவிம்சதிபாக்கியம்"] ஸத்யம் வத—SPEAK THE TRUTH. ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE".




*அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.]* [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 25.] பிங்களஹூ கார்த்திகைமீ, 1917ஹூ நவம்பர்மீ. [சஞ்சிகை. 8.

### Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our " terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *At one month's credit (arrears rate)* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with the Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued† in the middle of a Vol., *nor without three months, clear notice as required.*†
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

### General Notice.

i. The *terms* offered are for regular subscribers only;
ii. no exception to these rules can be made or recognised;
iii. short credit allowed should not be misused;
iv. unpaid accounts are subject to " fluctuations " and overcharges;
v. all arrears should be fully paid *within* three months *(time being an important factor.)*;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

*(By Order of the Managing Committee.)*

THE MANAGING AGENTS, " VIVEKACHINTAMANI."
*Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street, Mylapore.*

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.* ☞

†Notice of discontinuance to have effect must be given in writing *full three months before the current Volume ends (in March)* and after all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say " that every effort will be made to trace them." " If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed " continues the same high authority, " I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should invariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## Mr. MONTAGU'S DEPUTATION TO INDIA.

In the House of Commons, on August 20, Mr. Montagu, Secretary of State for India, replying to Mr. C. Roberts, M. P., said:—"The Government of India have for some time been urging that a statement should be made in regard to Indian Policy, and I am glad to have the opportunity afforded by my hon. friend's question of meeting their wishes. The policy of His Majesty's Government with which the Government of India is in complete accord is (1) that of the increasing association of Indians in every branch of the administration, and (2) the gradual development of self-governing institutions, with a view to (3) the progressive realization of responsible Government in India.

They have decided (4) that substantial steps in this direction should be taken as soon as possible, and (5) that there should be a free and informal exchange of opinion between those in authority at home and in India.

His Majesty's Government have accordingly decided, with His Majesty's approval, (6) that I should accept the Viceroy's invitation to proceed to India to discuss these matters with the Viceroy and the Government of India, to consider with the Viceroy the views of Local Governments, and to receive with him the suggestions of representative bodies and others. (7) I would add that progress in this policy can only be achieved by successive stages. (8) The British Government and the Government of India, on whom the responsibility lies for the welfare and advancement of the Indian peoples, must be the judges of the time and measure of each advance, and they must be guided (9) by the co-operation received from those upon whom new opportunities of service will thus be conferred, and (10) by the extent to which it is found that confidence can be reposed in their sense of responsibility.

Ample opportunity will be afforded for public discussion of the proposals, which will be submitted in due course to Parliament."

According to the above announcement of the decision of the Cabinet, Mr. Montagu in conjunction with Mr. Charles Roberts, M. P., Lord Donoughmore, Sir William Duke and Mr. M. C. Seton, as his colleagues, will proceed to India as a deputation to settle the exact details of the general policy as above enunciated by Government. They all arrived on the 9th November in Bombay, and proceeded to Delhi the same day where they will stay till the end of November, conferring with the Government of India and receiving All-India Deputations. They are expected to be in Madras from the 14th to the 22nd December.

### முக்கிய அறிக்கை.

*இந்த விவேகசிந்தாமணியை வாங்கி வாசித்து வரும் உபாத்தியாயர்கள் ஒவ்வொருவரும் இப்புஸ்தகத்தை பத்திரமாகச்சேர்த்து 'பயிண்டு' செய்து வைத்துக்கொண்டு வந்தால் இதுவே ஒரு முக்கியமான நல்லறிவு புகட்டும் கல்விக் களஞ்சியமாயுதவும். அடிக்கடி பார்த்துப் படித்து மனதைத் திருத்திக் கொள்ள உபயோகப்படுவதாகும். ஆகையால் இதை வரப்பெறும் ஒவ்வொரு உபாத்தியாயரும் அதை அவர்கள் நலம்பெற உபயோகித்து வருவதற்கடையாளமாக இதைக்கொண்டு அவர்கள் பயன்பட உழைத்து வருவதைப்பற்றி அவர்களுடைய விலாஸத்திற்கண்ட நெம்பரைக் குறித்து முழுவிலாஸத்தோடும் நமக்கு எழுதித்தெரிவித்து வரவேண்டும். கவர்ன்மெண்டார் விவேகசிந்தாமணி பிரதம பாடசாலைகள் எல்லாவற்றிலும் உபயோகிக்க ஏற்றமானதென்று ஒவ்வொரு ஸ்கூலுக்கும் ஒரு காபி வாங்கியனுப்ப உத்தரவு செய்திருக்கிறார்கள்.*

மானேஜர், விவேகசிந்தாமணி.

Every elementary schoolmaster must have a copy of the *Vivekachintamani* for himself and his school. It is the best and most economical thing in the long run, as it infuses a spirit of inquiry and a desire to enlarge the mind by the constant presence of the volume being in his possession which he individually has to care for and preserve as school property. "When so kept they serve as a permanent and continuous volume of reference and useful knowledge for pupils and teachers. So, I would strongly recommend the supply of the Journal to be made to all the schools on the principle of one copy for each school." The teachers are requested to put themselves in communication with the Managing Agents of the *Vivekachintamani*, who will afford them every facility for each of them securing a copy. The annual subscription is Rs. 5 per volume payable in advance. (*Vide* "Terms.")

*Address*:—THE MANAGING AGENTS,
*Vivekachintamani*, 19, *Adam Street*,
*Mylapore*, *Madras*, S.

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-8.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

பிங்கள௵ கார்த்திகை. } விவேகசிந்தாமணி { November 1917.

FIRST ESTABLISHED, 1892. OUR JUBILEE YEAR, 1917.

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
தற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னோந் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## MR. MONTAGU'S DEPUTATION TO INDIA.

### மிஸ்டர் மான்டேகு விஜயம்.

*மிஸ்டர் மான்டேகு இப்பொழுது இந்தியா மந்திரியாக விருக்கிறார். மெஸபொடோமியா கமிஷன் சபையார் அவர்களுடைய ரிபோர்ட்டில் கண்டுபிடித்துக் காட்டியிருந்த ஊழல்களில் சம்பந்தப்பட்டவர்கள் அவர்களுடைய வேலையிலிருப்பது தகுதியல்லவென்கிற எண்ணத்தினால் மிஸ்டர் ஆஸ்டின் சாம்பர்லேன் அவர்கள் இந்தியா மந்திரி வேலையை ராஜிநாமாக்கொடுத்ததின்மேல் இவர் அந்த ஸ்தானத்துக்கு நியமிக்கப்பட்டார். இவர் இதற்குமுன் லார்ட் மார்லி இந்தியாமந்திரியாக விருந்தபொழுது அவருக்குள் உதவி மந்திரியாக விருந்தார். பிறகு மாக்ஷிமை தங்கிய ஜியார்ஜ் அரசர் இந்தியாவுக்கு விஜயமாய் வந்தபொழுது அவர் பரிவாரத்தில் சேர்ந்தவராய் இவர் இந்தியாவுக்கு நேரில் வந்தார். இவர் மிகத் திறமை வாய்ந்தவர். நற்சிந்தை யுடையவர். உயர்லக்ஷிய சாதனங்களால் தெளிந்த தேறிய மனோபாவமுடையவர். மெஸபொடோமியா கமிஷன் ரிபோர்ட்டு பார்லிமெந்து காமன்ஸ் சபைமுன் பிரஸ்தாபத்துக்கு வந்தபொழுது இந்தியா கவர்ன்மெண்டு ஸ்தாபனங்களும் இந்தியா மந்திரியின் கௌன்ஸில் ஏற்பாடும் மிகவும் புராதனமானவையாகத் தற்காலத்துக் கேற்றவையாக வில்லாமல் இந்தியாவின் முன்னேற்றத்துக்குக் கால்கட்டுகளாயிருக்கின்றனவே யன்றி, மற்றப்படி அவை யிருக்கவேண்டியபடி அனுகூல சாதனங்களாகவில்லையென்று சொல்லி அவருடைய அபிப்பிராயத்தை நன்றாக அழுத்தமும் திருத்தமுமாகச் சொல்லி வெளியிட்டுப் பேசினார்.*

*அவருடைய அபிப்பிராயங்கள் இந்தியர் கவர்ன்மெண்டில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று முயற்சித்து வருகிற காங்கிரஸ் கக்ஷியையும் முஸ்லிம்-லீக் கக்ஷியையும் சேர்ந்தவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு ஒத்தனவாய் அவர்களைவிட அதிக தைரியத்தோடு வெளியிடப்பட்டனவாயிருந்தன. ஆயினும் அவர் அந்த அபிப்பிராயங்களை வெளியிட்ட சிலநாட்களில் இந்தியா மந்திரியாக நியமிக்கப்பட்டார். ஆதலால், அவருடைய சொந்த அபிப்பிராயத்தை கவர்ன்மெண்டார் அபிப்பிராயமாக வெளியிடுவது சரியல்லவென்று மாக்ஷிமை தங்கிய அரசரின் மந்திராலோசனை சபை மெம்பர்கள் எல்லாரும் சேர்ந்த "காபினெட்" என்கிற ரகஸியாலோசனை சபை மந்திரிகள் இந்தியா கவர்ன்மெண்டாரோடு மனம்கலந்து பேசித் தீர்மானித்தபடி அவர்களுடைய அபிப்பிராயத்தை சென்ற ஆகஸ்டுமீ 20௳ யன்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் சார்ல்ஸ் ராபர்ட் அவர்கள் கேட்ட ஒரு கேள்விக்கு பதில் சொல்லவேண்டியிருந்த சமயத்தை முன்னிட்டு பிரிடிஷ் கவர்ன்மெண்டார் நன்றாக ஆலோசித்துத் தேர்ந்து தெளிந்துமுடிவுகட்டிய அவர்களுடைய இராஜ*

ரீகமுறையை வெளியிட்டுப் பேசினார். அப்படி வெளியிட்டதில் இந்தியா கவர்ன்மெண்டார் வேண்டுகோளின்பேரிலும் அவர்களுடைய முழுசம்மதத்தோடுமே இந்த இராஜரீக முறை பிரிடிஷ் கவர்ன்மெண்டாரால் தீரத்தேர்ந்து முடிவுகட்டி வெளியிடப்படுகிறதாகச் சொன்னார். அந்த இராஜரீகமுறை என்னவென்றால்:—

(1) இந்தியா துரைத்தன சம்பந்தமான எல்லாப் பிரிவுகளிலும் இந்தியர்களை மேன்மேலும் அதிகமாகச் சேர்த்துக்கொண்டு அவர்களுடைய சங்காற்றம் (அதாவது, "சேர்க்கை வலி") மேன்மேலும் விர்த்தியாகி வளரச் செய்வது ஒன்று.

(2) ஸ்வய-ஆட்சி ஸ்தாபனங்கள் மேன்மேலும் அதிகமாய் வளர்ந்து விர்த்தியாகி வரவும், அதனால்,—

(3) இந்தியாவில் இந்திய மஹா ஜனங்களுக்குட்பட்ட பொறுப்புள்ள கவர்ன்மெண்டு காலக்கிரமத்தில் ஏற்படவும், அப்படிப்பட்ட ஸ்வய-ஆட்சி ஸித்திபெற்ற இந்தியாவும், பிரிடிஷ் மஹா ராஜ்யத்திலடங்கிய இதர ஸ்வய-ஆட்சி பெற்ற தேசங்களோடு சரிசமமான அந்தஸ்துள்ளதாய் அந்த மஹா ராஜ்யத்தின் முக்கியாங்கமாக விளங்கும்படியாகவும் வாய்க்கப்பெற வேண்டியது.

(4) இந்த இலக்ஷியத்தை வைத்துக்கொண்டு இது நிறைவெய்திவர இதற்காக உடனே வேண்டிய ஏற்பாடுகளைக் கூடிய சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள்.

(5) அதற்காக இங்கிலாந்திலும் இந்தியாவிலுமுள்ள துரைத்தனத்தார் ஒருவரையொருவர் நேரில் சந்தித்து மனங்கலந்து அபிப்பிராயங்களை வெளியிட்டுச் சிந்திக்க வேண்டியது அவசியமாயிருக்கிறதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

(6) இப்படியாகத் தீர்மானித்த அம்சங்களை நிறைவேற்றுவதற்காக பிரிடிஷ் மந்திராலோசனை சபை மெம்பர்களான கவர்ன்மெண்டார் ஒன்றாகக் கூடி மாக்ஷிமை தங்கிய அரசரின் சம்மதி பெற்ற இந்தியா மந்திரியாகிய மிஸ்டர் மான்டேகு அவர்களைத் தலைவராய்க்கொண்ட ஒரு சிறு விசாரணை சபையார் அவர்களுக்குப் பிரதிநிதியாக இந்தியாவுக்கு விஜயம் செய்து, இந்தியாவிலுள்ள இராஜப் பிரதிநிதியவர்களுடைய அழைப்புக்கிணங்கி இந்தியா சென்று இராஜப்பிரதிநிதி யவர்களோடும் கூடவிருந்து இந்தியா கவர்ன்மெண்டாருடையவும் மற்ற இராஜதானி கவர்ன்மெண்டார்களுடையவும் அபிப்பிராயங்களைக் கேட்டுக் கலந்துபேசி, மற்ற ஜனப்பிரதிநிதி சபைகளுடைய அபிப்பிராயங்களையும் இதர ஜனப்பிரமுகர்களுடையவும் அபிப்பிராயங்களையும் நேரில் தெரிந்துகொண்டு, இன்ன இன்ன சீர்திருத்தங்கள் தற்போது அவசியமாய்ச் செய்யவேண்டியிருக்கின்றன வென்பதையும் இதர விவரங்களையும் துரைத்தனத்தாரோடும் ஜனப் பிரதிநிதிகளோடும் கலந்துபேசி அவர்கள் அபிப்பிராயங்களையெல்லாம் மனதில் வாங்கிக்கொண்டு கால, தேச, வர்த்தமானங்களுக் கேற்றபடி மேலே வெளியிட்ட இராஜரீக முறையை ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவரும் வழி தேடி அதை நன்றாக ஆராய்ந்து தேறுவதற்குவேண்டிய சாதனங்களளித்தபின் முடிவுகட்டி நிர்ணயிக்கக்கூடிய ஏற்பாடுகளை பார்லிமெந்து சபையார் முன் ஆலோசனைக்குக் கொண்டு வருவார்கள்.

(7) இவ்விராஜரீக முறையை யனுசரிப்பதில் இது படிப்படியாகத்தான் ஏறி அனுபவ ஸித்திபெறக்கூடுமென்பது ஒரு அபிப்பிராயம். அதை ஒரு நிபந்தனையாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார் மிஸ்டர் மான்டேகு.

(8) படிப்படியாக மேன்மேலும் சீர்திருத்தங்கள் செய்வதிலும், இன்ன காலத்தில் இன்னபடி இவ்வளவு தூரம் முன்னேறிப் போகலாமென்பது பிரிடிஷ் கவர்ன்



மண்டாராலும், இந்தியா கவர்ன்மெண்டா
ாலும் நிதானித்துச் சொல்லப்படவேண்டும்.
னெனில் இந்தியாவிலுள்ள ஜனசமூகங்கள்
ன்னுக்கு வந்து கடைத்தேறும்படி செய்ய
வண்டிய பொறுப்பு அவர்கள் தலைப்பாரமா
ருக்கிறதை மாற்ற முடியாமையினால்,

(9) அவர்களும் இப்படிப்பட்ட நிதானத்
க்கு வருவதில் ஊருக்குழைக்க நூதனமான
ாதனங்கள் அளிக்கப்பெற்றவர்கள் எவ்வள
க்கெவ்வளவு அனுகூல சாதகர்களாயிருக்
ழைத்து வருகிறார்களோ அதற்குத் தக்க
தமாக நிதானித்துத் தீர்மானிக்கவேண்டும்.

(10) அஃதோடு அப்படி நூதனமான
மஷ்டி சேவை சாதனங்கள் அளிக்கப்பெற்
வர்கள் அவர்களுடைய கடமைகளை எவ்
வளவு சீராகப் பொறுப்பும் தரிப்பும் விளங்க
றைவேற்ற கவர்ன்மெண்டாருக்கு அவர்க
ுடைய ஸமஷ்டி சேவை சாமர்த்தியத்தில்
ம்பிக்கை யுண்டாகும்படி நடந்துகொள்கிறார்
ளோ அதையும் யோஜித்து நிதானிக்கவேண்
ம்.

இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்
சான்ன இராஜரீக முறையை ஊர்ஜிதத்திற்
க் கொண்டுவர உடனே யெடுத்துக்கொள்ள
வண்டிய ஏற்பாடுகளைத் தீர விசாரித்துத்
தர்க்கு தீர்மானிக்க மிஸ்டர் மான்டேகு அவர்
ளும் அவருக்கு சகாவாக பார்லிமெந்து சபை
மம்பர் மிஸ்டர் சார்ல்ஸ் ராபர்ட் அவர்களும்
ர்ட் டொனௌமூர், சர் வில்லியம் டியூக்,
ஸ்டர். எம். ஸி. ஸின் இவர்களும் கூடவரு
றார்கள். துரைத்தனத்தில் சீர்திருத்தங்கள்
செய்வது சாத்தியமாயிருக்கவேண்டுமாயின்
ாமான்ய ஜனங்கள் படிக்கத்தெரிந்தவர்களா
ருக்கவேண்டியது அவசியமாதலின் இந்தியா
ந்திரியவர்கள் பிரதமவித்தை ப்ரவிருத்தி
கிவருவதைப்பற்றியும், வரும் விதத்தைப்
ற்றியும் அவர் இந்தியாவிலிருக்கும்பொழுது
ரவிசாரிப்பாரென்று கர்ஸன் பிரபு சொல்லி
ருக்கிறார்.

## THE DUTIES AND RESPONSIBILITIES OF THE TEACHER.

(From a lecture delivered by the late Rev. H. W. Kellet at the Madras Educational Conference of 1903.)

## உபாத்தியாயர் தொழிலின் மகிமையும் அவர் கடமையும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால முறையினானே," யென்றுள்ள பழைய சூத்திரத்தின் உண்மை எவ்வகையிலும் எல்லாவற்றிற்கும் பொதுவாகப் பொருந்தும் உண்மை. பழையன கழிந்துகொண்டே வருகின்றன. புதியனவும் புகுந்துகொண்டே வருகின்றன. பழையன புதியன இரண்டையும் பொருந்த இசைப்பது உபாத்தியாயர் தொழில். உபாத்தியாயர் இல்லாவிட்டால், இவையிரண்டும் பொருந்தாது முரண்பட்டுத் தனிநின்று தத்தளிக்கும். சென்றதோடு வருவதை யிசைப்பதான நிகழ்கால வேலை உபாத்தியாயர்களுடையதேயாம். உபாத்தியாயர் வேலையில் ஊதியம் மிகப்பெரிதாயில்லாவிடினும், அவர்கள் பொறுப்பும், கடமையும் வரையற்று விளங்குகின்றன. ஏனெனில், அவர்கள் இளகினமண்ணை அழகிய பாண்டமாய் வனையும் குயவனைப்போல், காலசக்கரத்தின் உதவிகொண்டு சிறுவர்களின் இளமனதைப் பின்னால் வரும் புகழ்நிறும் புண்ணியர்கள், கண்ணியர்கள், வித்வான்கள், விற்பன்னர்கள், வீரர்கள், தீரர்கள், வியாபாரிகள், தொழிலாளிகளெனப் பல பல விதமாக விளங்கும் உண்மைமிகு உத்தம பாத்திரங்களாகச்செய்ய அடிப்போட்டு அழகிய உருவமைத்து வைப்பவர்களாக விருக்கிறார்கள். இனி வருங் காலத்தில் இத்தேசத்தின் நிலைமையே இவர்கள் தலைப்பொறுப்பாக நிற்கின்றது. இவர்களுடைய தொழிலின் பொறுப்பு உண்மையில் உள்ளாய்ந்து நோக்கில் தாய்மார்களின் பேரன்பு நிறைந்துள்ள புண்ணியத் தொழிலுக்கிரண்டாவதாய், அதற்கு அடுத்து நிற்கும் ஆதாரவு பெற்றதாய் இருக்கின்றது. தாய்மார்கள் தங்களுடைய சுத்த ஹிருதயம் சில

நடத்தை பேரன்பு புண்ணிய சிந்தை இவை போலின்னுமுள்ள அரும்பெருங்குண விசேஷங்களால் புண்யாத்மாக்கள் ஜன்மமெடுக்கப் புனிதக்ஷேத்திரமாக விளங்குகிறார்கள். அப்படி அவர்கள் வயிற்றில் அவதரித்துப் பிறந்து வளர்ந்த புண்யசீவன்கள் தங்களில் உள்ளொடுங்கியிருக்கும் பூர்ணசக்தியை வளர்த்து வெளியாகச் சாதன சாதக சாத்திய வள்ளலாயிருந்துதவி அவர்களைத்தாயன்போடுபோற்றி வளர்பிறை போலுமவர்கள் இளமனதைத் தினைதினை கலைசேர்ந்து வளரச்செய்து பூரணசந்திரன்போல் அவர்கள் மனம் மதியொளி விளங்கப் பிரகாசிக்கச் செய்வோர் உபாத்தியாயர்கள். ஆகையால் இவ்வித புண்ணியகடன் செலுத்தும் புமான்கள் புனிதாத்மாக்களாக விருக்கவேண்டியது அவசியம். ஆதியில் அகத்தூய்மையால் ஆத்மவித்யா சம்பன்னராய் விளங்கிய ஆரிய புருஷர்களே அரசிளங்குமாரர் முதல், அடிசிற் பிச்சையெடுத்துண்ணும் வித்யாவித்துக்களாகிய பிராமணச் சிறுவர் தலையாக, வைசியகுலதிலகர்களான ஐசுவரியவான்களின் புத்திரர்களீறாக எல்லாருக்கும் அவரவர் ஸ்திதிமதி விசேஷங்களுக்குத் தக்கவாறு வித்யாப்பியாசம் செய்விக்கும் மாக்ஷிமை பெற்றுள்ளாராய் விளங்கினார்கள். ஆங்கிலேய அரசாக்ஷி இந்தியாவில் ஸ்திரப்பட்டு இங்கிலீஷ்படிப்பு தலையெடுக்கக் கிளம்பிய காலத்தும் இவ்விராஜதானியில் இளமைப் பருவமுள்ள வாலிபர்களுக்கு வித்யாப்பியாசம் செய்யும் கடமைபூண்டு விளங்கியவர்கள் புண்ணியம் நிறைந்த புண்யாத்மாக்களாகவேயிருந்தனர்கள். மிஸ்டர் பௌவல் என்ன, மிஸ்டர் போர்ட்டர் என்ன, நம்மவரெல்லாங் கொண்டாடும் கலியுக புண்ணியராம் ஸ்ரீ கோபாலராயரென்ன, தற்காலத்தில் தன்னந்தனியாய்ப் பூரணசந்திரன்போல் புகழ்பிரகாசிக்க விளங்கும் டாக்டர் மில்லர் என்ன, இவர்கள் எல்லாரும் உள்ளப்பெருமை நிறைந்த உத்தம வித்தியா சம்பன்னர்களாகிய புண்ணிய புருஷர்களே யல்லவோ? இவர்கள் உத்தமசிந்தையும் உயர்ந்த எண்ணங்களும் உள்ளத்தெளிவும் இவர்களையடுத்து வித்யாப்பியாசம்செய்து விற்பன்னர்களான வாலிபர்கள் இப்பொழுது பேரும்புகழும்பெற்று பிரதமஸ்தானங்களில் பிரபலர்களாகவும் புனிதகுண சீலர்களாகவும் விளங்குவதால் பிரத்தியக்ஷமாகத் துலங்கவில்லையா? இப்படிப்பட்ட உத்தம குணசீலர்களை உதாரணமாக வைத்துக்கொண்டு ஒவ்வொரு உபாத்தியாயரும் இவர்கள் வழிபற்றிச்செல்லவிரும்பி உண்மையிலுழைக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்களென்று மிஸ்டர் கெல்லட் அவர்கள் ஆத்மசிந்தை நிறைய ஆர்வமிகுந்து உள்ளங்குழைந்து உண்மைபெருகக் கேட்டோர் மனதைக்கவரும் மதிநிறைந்த வார்த்தைகளால் பிரசங்கமாரி பொழிந்து பேசினர். இப்படி பொதுவாய்ச் சொல்லவேண்டியதைச் சொல்லிப், பிரத்தியேகமாகச் சொல்லவேண்டியதைக் குறித்துப் பேசுகையில், சென்றவருஷத்தில் எல்லாரும் அவரவர் துறையில் அதிசிரத்தையோடுழைத்து விருத்தி விளங்கவுழைத்து வந்தார்கள் என்று சொல்வது எல்லாரும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாயிருக்குமென்று சொன்னார்.

"அடுத்த வருஷத்தில் கவனிக்கத்தக்க வித்யா விஷயங்கள் என்னமாயிருக்குமோ ஏதாயிருக்குமோ, சொல்லச் சாத்தியமில்லை. ஆனால் ஒரு விஷயம் மட்டும் மிகமுக்கியமாய்க் கவனிக்கப்பட்டு வருகிறது. அது இன்னும் விசேஷமாய்க் கவனிக்கப்படவேண்டியதாயிருத்தலால் எல்லா உபாத்தியாயர்களும் இவ்விஷயமாய்க் கவனமெடுத்துக்கொண்டு ஒவ்வொருவரும் பிரத்தியேகமாகப் பாடுபட்டுழைக்கவேண்டு" மென்று வற்புறுத்திக் கூறினார். வித்யா விஷயத்தில் மதசம்பந்தமானதும் நன்னடத்தையை விர்த்தி செய்வதுமான அம்சம் மிகவும் கவனிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார். "சத்தியமின்றிச் சன்மார்க்கமில்லை" யால் இதனுண்மையை யுணர்ந்தோர் யாவரும் மதம்வேறு நடத்தை



வேறு என்று ஒன்றைவிட்டொன்று பிரிக்கத்தக்கதாகப் பேதித்துப் பேசார்கள். மதம் என்றால் என்ன? எண்ணம், உள்ளுணர்வு, மார்க்கம். இவையெல்லாம் ஆத்மதத்துவத்தை யுணரும் வழியையே குறிக்கும் ஒரு பொருள் - பலசொற்கிளவிகளாம். நடத்தையென்றாலும் ஒழுகுப்வழி, செயல்களினால் விளங்கும் மார்க்கம் என்பதே பொருளாம். இதையே சன்மார்க்கம் என்பார்கள். உற்று நோக்கி உள்ளாராய்ந்தால் மனிதனுக்கு நற்கதிபயக்கும் செயல்கள் எவையோ அவையே நன்னடத்தை, நன்மார்க்கம், சன்மார்க்கம் என்று சொல்லப்படவுரியதாம். மனிதனுக்குக் கடைசியாகவுள்ளது கதி-மோக்ஷமே. "கதி-மோக்ஷம்" இல்லாதவன் கடையரினும் கடையனாவான். மதம் என்பது உள் நிலையை யுணர்த்துவதானால் நடத்தை புறநிலையை யுணர்த்துவதாம். இதையே உட்சமயம், புறச்சமயம் என்று சொல்வர். இக்காலத்து மனோதத்துவ சாஸ்திரிகளும் உள்ளத்துணர்வாம் எண்ணம் எப்படியிருக்கிறதோ அப்படியேயிருக்கிறது நடத்தையும் என்று ஆராய்ச்சி முறையால் அறிந்துணர்ந்து தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால் தெய்வசிந்தனையின்றி நன்னடத்தையுண்டாகச் செய்யலாமென்று சொல்லுவோர் உண்மையறியாது உளருகிறவர்களாவார்கள். தெய்வமென்றால் காட்டேறி, கருப்பண்ணன், கற்சிலை, மரச்சிலையென்று நினைக்கிறார்கள் இவர்கள். அப்படியல்ல. உண்மையாகவுள்ள தெய்வம் ஒன்றே. அதுவே ஆத்மா. பரமாத்மாவென்றும் ஜீவாத்மாவென்றும் சொல்வதெல்லாம் தோற்றம்பற்றிச் சொல்லியவார்த்தைகளாம். விக்ரகங்களில் ஆவாகனம் செய்யப்பட்டுள்ள ஆத்மசக்தி தெய்வமேயன்றி அதைத் தள்ளிப்பார்க்கும் ஸ்தூலவிக்ரகம் தெய்வமாகமாட்டாது. சூக்ஷ்மப் பார்வை யில்லாதவர்கள் உளக்கண் திறக்கப்பெறும் வரையில் உண்மையாக ஆத்மசிந்தனை செய்ய அசக்தர்களாயிருப்பதால் அவர்கள் ஸ்தூலபாவனையால் சிந்தித்து உள்ளன்பு நிறைந்து உளம்பெருகி மனங்கரைந்து உளக்கண்திறக்கப் பெறுவதற்குச் சாதனமாக ஏற்பட்டவையே கோயில், குளம், தீர்த்தம், க்ஷேத்திரம், திருநாள், மந்திரம், தந்திரம் முதலிய எல்லா உபாயங்களும். கடவுள் எல்லாம் கடந்தவராகையால், அவரைக் கண்டு தரிசிக்க விரும்பும் சற்சனர் தத்துவங்களையெல்லாம் அனுபவத்தால் கண்டு கடந்து செல்லல்வேண்டும். அப்படிக் கடந்து செல்வதற்காக ஏற்பட்ட மார்க்கங்களே எல்லா மதங்களும். மதங்களெல்லாம் சாதன வழிகளேயன்றி வேறல்ல. ஆனால் சித்திகிடைக்கும் வரையில் சாதனமே சித்தியாக பாவிக்கவேண்டியது அவசியமாதலால், சாதனத்தைப் பழிப்பார்க்கு சித்திகிட்டாது. இது ஒரு உண்மையான மனோதத்துவம். விளையாட்டில் உண்மையாக மனம் பதிந்து விளையாட்டையே வினையாக நினைந்து நடக்காத குழந்தை விளையாட்டுப்பருவம் நீங்கிய பின் வினையாகவரும் உயிர் வாழ்க்கையை உள்ளபடி யனுபவிக்கத் தெரியாதுழலும். விளையாட்டும் வினையும் கருவிகளாம் சொப்புமரப்பாய்ச்சிகளில் இல்லை. அவைகளை யுபயோகிக்கும் சீவன்களுடைய அறிவு முதிர்ச்சியையும் அனுபவ விசேஷத்தையும் பொறுத்ததாம். அறிவு பிறக்காத அனுபவமற்ற சிறுவர்களுக்கு உண்மையில் குழந்தையாகவும், வீடாகவும், வாசலாகவும் படும் மரப்பாய்ச்சி, மணல்வீடு முதலியவை அறிவுபிறந்து அவைகளின் உண்மையான அனுபவம் சித்திக்கப்பெற்ற பெரியவர்களுக்கு விளையாட்டுக் கருவிகளாம். அப்படிப்போலவே கோயில் குளம், தீர்த்தம் க்ஷேத்திரம், வேதம், சாஸ்திரம், மந்திரம், தந்திரம் முதலியவை ஆத்மஞானமுதித்து ஆத்மானுபவ சித்திபெற்றவர்களுக்கு உண்மைக்குச் சின்னமாயுதவும் விளையாட்டுக் கருவிகளாம். ஆத்மானுபவம் பெற்றபெரியோர், யேசுகிறிஸ்துவைப் போலவும், திருமூலர், மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர் முதலான சைவசமயாசாரியர்களைப் போலவும், வேதமோதிய விப்ரசிகாமணிக

னாம் பூர்விக ருஷிகளைப்போலவும் "கடவுளும் நானுமொன்றானேன்" என்று கடவுளோடு ஐக்கியப்பட்டு நின்று இப்பிரபஞ்ச வாழ்வினைத்தையும் ஓர் விளையாட்டாகப் பார்த்து நிற்பார்கள். அவர்கள் வழிபட்டு நாம் அந்த கதியடையும் வரையில் அதற்குச் சாதனமாக வேற்படுத்தியுள்ள மார்க்கங்களாம் அவரவர்கள் மதத்தையே பெரிதாகவும் பூர்ணமானதாகவும் நம்பி நடக்கவேண்டும். இந்த மட்டிற்கு எல்லாரும் தத்தம் மதமே பெரிதென்று கொண்டாடுவது இயல்பும் அவசியமுமாயினும் பிறர் மதத்தை யிகழ்ந்து புன்மொழிகள் பேசி அம்மதப்பற்றுள்ளோர் மனநோவச்செய்வது மஹாபாதகமாம். ஆகையால், கிறிஸ்தமதப் பற்றுள்ளவர்கள் அவர்கள் மதத்தைப்பற்றிச் சிலாகித்துப் பேசும்பொழுது அப்படிப் பேசுவதினாலேயே நம் மதத்தை யவர்களிகழ்ந்ததாக நினைக்கலாகாது; அவர்களுக்குத் தம்மதம் எப்படியோ அப்படியே நம்மதம் நமக்கு அருமையானதாம். தம்மதத்திற்குமிஞ்சி பேறில்லையென்று நினைப்பர் உண்மையான மதப்பற்றுள்ளோர்.

## EXTRACT.

### அழகு.

கல்விக் கழகு கசடற வேமொழிதல்
சொல்லுக் கழகு சொலின்வாய்மை—இல்லுக்
கழகாகும் கற்புடையாள் அன்பர்க்கழகு
பழகாத தேவஞ்சம் பார். (1)

பார்த்திபர்க்குச் செங்கோன்மை பார்க்கி னழகாகும்
கீர்த்திக் கழகு செழுகொடையே—சீர்த்திபெறும்
செல்வர்க் கழகு செழுங்கிளையைத் தாங்கிடுதல்
எல்லாவர்க்குங் கல்வி அழகே. (2)

ஏசாதிருத்தல் இனத்திற் கழகாகும்
ஆசானுக் கன்பே அழகாகும்—கூசாமை
வேசிக் கழகாகும் வேண்டாமை யேயழகாம்
யோசிப்போர்க் கென்றே உணர். (3)

உணர்வோர்க் கழகாகும் உண்மைவழிச் சேறல்
குணத்தோர்க் கழகின்சொற் கூறல்—மனத்திற்
கழகு சுமங்கலியே ஆய்தற் கழகு
கிழவோரை அண்டியவர்க் கேட்பு. (கேட்பு-கேள்வி)

கேட்புக் கழகு கெடுதி விளையாமை
பாட்டுக் கழகு பகரிசையே—நாட்டகத்
தன்மைக் கழகு தவறாமை சாட்சிக்குத்
தன்மையுரை யாமை அழகு—விவேகபாநு.

## ON THE INDISPENSABILITY OF KNOWLEDGE.

### அறிவு இன்றியமையாததென்பது.

"அறிவுடையாரெல்லா முடையாரஃதிலா
ரென்னுடைய ரேனுமிலர்."

ஒருவன் என்று பிறந்தானோ அன்று முதலாகவே அறிவைச் சம்பாதிக்கத்தொடங்கி அதை நாள்தோறும் பெருக்கிக் கொண்டே வரும் இயல்பினனா யிருக்கிறானென்பதை யாவரும் எளிதில் உணர்வார்கள்.

இருப்பிடம் விட்டுப்பெயரவறியாத இளங்குழந்தை, இருந்து, தவழ்ந்து விளையாடி நிற்க நடக்கக்கற்றுத் தாய் தந்தையர் இன்னாரென்றும் நீர் இன்னது நெருப்பு இன்னதென்றும் பகுத்தறியுமுன் படும்துன்பங்களையும், அத்துன்பங்களுக்குப் பின்னிடாமல் அக்குழந்தை அவற்றை மேற்கொண்டு கடந்து செல்லச்செல்ல, அழகமைந்து ஊக்கமுற்று அறிவில் விருத்தியடைவதையும், காண்போர் ஊகிக்கக் கூடியவை என்னவெனின்:—எவ்வளவு பேரறிவுடையோரெனினும் அவரும் அவ்வறிவைப் பிறவியிலேயே பெற்றவரல்லரென்பதும் அவ்வளவு அறிவும் அவர் வருந்தி உழைத்தே அடைந்திருக்கவேண்டும் என்பதுமே.

பொருள்களி னியல்புணர்ந்து அவற்றைப் பயன்படச்செய்யு மறிவும், நோயில்லாவுடலும், வறுமையில்லா வாழ்வும் குற்றமற்ற நடையும், தானுகர்ந்து பிறர்க்குதவும் குணமும் ஆகிய இவையெல்லாம், சரியான உழைப்பின்றி, எளிதில் வருவனவல்ல. இவற்றுள் முதற்சொல்லிய அறிவே மற்றை நான்கையும் கைகூடுவிப்பதாம். அவ்வறிவோ நல்லுழைப்பின்றி வாராதென்பது திண்ணம். சிலர் செல்வராயே பிறக்கக் கூடுமெனினும் அவரும் அறிவாலல்லது தம் நிலையில் நிற்றலரிது.

உயிருள்ள அளவும் ஒவ்வொருவரும் ஏதேனு மொருவேலை செய்துகொண்டே இருக்கிறார்கள். ஏதேனு மொருவிதமான அறிவைச் சம்பாதித்துக்கொண்டே யிருக்கிறார்களென்னின்,—அதுவுமெய்யே; ஆனால் எல்லா



வேலையும் வேலையல்ல. நல்ல நிலவளமுள்ள தோட்டத்தில் நமது சீர்திருத்தம் ஒன்றுமின்றியே ஏதேனுமொன்று உண்டாய்க் கொண்டேயிருக்கிறது. அவ்வாறுண்டாவன வெல்லாம் நமக்குப் பயன்படாவாம்; பயன் படாதிருப்பதன்றிச் சில பயன்படுவனவற்றையும் கெடுக்குமென்பது நிச்சயம். ஆதலின் அந்நிலவளமுள்ள தோட்டத்துக் குரியவன் கடமை யாதெனின்:—அதைச் சரியானபடி பண்படுத்தி, அதில் விசேடமாய் பயன்படுவனவற்றை உண்டாக்குதலன்றி அத்தோட்டம் சிறந்து கண்களிக்க அமையும்படி அப்பயன்படுவனவற்றில், இன்னது இன்ன அளவில் இன்னவிடத்தில் இருக்கவேண்டுமென்று ஒழுங்குபடுத்தவும் வேண்டுமென்பதே. அறிவின் பயிற்சியும் இத்தன்மையதேயாம். சரியான வழியில் நல்லவாறுழைத்துப் பயன்படுமறிவைத் தேடுதலன்றி அவ்வறிவு நமக்கு வேண்டுங் காலையில் எண்ணிய வாறுதவும்படி அதை ஒழுங்கு படுத்திவைத்தலும் வேண்டும். ஆகவே, நாம் முற்சொல்லியபடி, நோயில்லாவுடலைத் தந்து, வறுமையில்லா வாழ்வை யளித்து, மறுவற்ற மார்க்கத்தைக் காட்டி, உலகத்துக்கு உபகாரியாக்குமறிவே பயன்படுமறிவாம்; இவ்வறிவைக் கொடுக்கும் உழைப்பே நல்லுழைப்பாகும்.

சிலர் "உழைப்பினால் விசேஷப்பிரயோஜனமொன்றுமில்லை; உழைத்தாலும் உழைக்காவிட்டாலும் வருவது தானே வரும்; வாராதது ஒருநாளும் வாராது" என்று சொல்லிக்கொண்டு காலத்தை வீணாகப்போக்கிச் சோம்பித்திரிகிறார்கள். இப்படிப்பட்ட சோம்பேறிகளைப்போல் குலத்தைக் கெடுக்கும் கோடரிக்காம்பு வேறில்லை; சோம்பியிருத்தல் தெய்வ சம்மதமான காரியமன்றென்று நம்மைச் சூழ்ந்துள்ள ஒவ்வொரு பொருளும் முறையிடுகின்றது. இப்பூமி நாடோறும் தன்னைச் சுற்றியும் வருடந்தோறும் சூரியனைச் சுற்றியும், ஓய்வின்றிச் செல்லாநிற்கின்றது. காற்றோ பூமியிலுலவித் தீயவற்றைத் தூரத்தில் நீக்கிச் சீதோஷ்ணங்களை மிதப்படுத்திச் சஞ்சரித்துக் கொண்டே இருக்கிறது. தண்ணீர் சிலவிடத்துக் கடலாகவும் அசைவிலேயே நிற்கின்றது. சூரியனும் பூமியினின்றும் நீரையிழுத்த வண்ணமாயிருக்கிறான். அமைந்திருக்கும் மலைச் சிகரங்களோ தொழிலற்றிருப்பனவாய்க் காணப்படினும் எப்பொழுதும் வேலையிலேயே இருக்கின்றன; அவற்றில் ஆவியாய் எழுப்பப்பட்ட நீர் இறங்கித் தரையின்மீது அருவியாய்ப் பெருகுகின்றது. பிராணிகளில் வேலையற்றிருப்பனவே இல்லை. அற்பப் பிராணிகளும் தம்மிரையைத் தின்னுமுன் அதைத் தேடிச் சம்பாதிக்க அலைகின்றன. ஆகவே எல்லா முழைத்தே ஜீவிக்கவேண்டு மென்பது தெய்வத்தின் ஏற்பாடென்பது நிச்சயம். மனிதன் இதற்கு விலக்கானவனல்லன்; எந்நிலைமையிலும் அவனும் உழைத்தே ஜீவிக்கவேண்டும். வேலை செய்யாச் சோம்பேறி தன் சரீரத்துக்கும் சுகத்துக்கும் தீங்கு விளைத்தலன்றித் தன்னையண்டியிருக்கும் ஏனையோர்க்கும் தீங்கு விளைக்கிறான்.

வேறு சிலர் உழைத்தால் எப்பொழுதும் கருதியவாறு பயனுண்டாகிற தென்பது நிச்சயமில்லையே யென்றும், அதிர்ஷ்டசாலிகளாகிய சிலருக்கு மாத்திரம் நற்சமயம் வாய்க்கச் சரியான பயனுண்டாகிறதன்றி, மற்றவர்களுக்கு அப்படிக்கில்லையென்று மெண்ணித் தம் முயற்சியைக் குறைக்கிறார்கள். அவ்வாறு செய்வது சரியன்று. ஏனென்னின், நற்சமயம் வாய்க்கப் பெற்றுப் பெரும்பயனடைந்த அதிர்ஷ்டசாலிகளெனப்படுவோரின் சரித்திரத்தைப் பார்த்தால் அவர்களில் அநேகர் பல கஷ்டங்களிலகப்பட்டுத் தம்மை மேலெழும்ப வொட்டாமல் தடுத்துவந்த இடையூறுகளை விலக்கித் தமக்குப் பிரதிகூலமாயிருந்தவைகளை யெல்லாம் அனுகூலமாக்கிக் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். இதை இரண்டொரு உதாரணங்களால் விளக்கிக் காட்டுவோம்.

உலகத்துக்குப் பரமோபகாரமாகப் புகைவண்டியை யுண்டாக்கி அதைக்கொண்டு நடத்துவதற்கு வேண்டிய எல்லா அங்கங்களையும் ஒன்று குறையாமல் ஏற்பாடு செய்த ஸ்டீவன்ஸன் என்பவர் நிலக்கரிச்சுரங்கத்து ஒரு நெருப்பு வேலைக்காரரின் குமாரர்; சிறுவராயிருந்தபொழுது மாடுமேய்த்துக் கொண்டிருந்தார். ஒருவரும் கணிக்காத இத்தாழ்மையான நிலையிலிருந்து பெரிய உலகோபகாரியாவதற்கு எவ்வளவோ பிரயாசைப்பட்டு எத்தனையோ இடையூறுகளுக்கு வருந்தி அவற்றைக்கடந்து போந்திருக்க வேண்டுமென்பது எளிதில் யாவரும் ஊகிக்கக்கூடியதே. மிக்க கீர்த்திபெற்றுச் சிறந்து விளங்கின ரஸாயன சாஸ்திரஞ்ஞரான "பாரடே" * என்பவரின் சரித்திரமும் இதைப்போன்றதே. அவர் ஒரு கொல்லன் புதல்வர்; இளமையில் புஸ்தகம் கட்டுபவனிடத்தில் வேலை கற்றுக்கொள்ள அமர்ந்து முன்னுக்கு வந்தார்.

இவர்களன்றிப் பலவருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் "போஸ்ட்மாஸ்டர் ஜெனரல்" உத்தியோகத்திலிருந்து இறந்துபோன "பாஸெட்" என்பவர் கலாசாலையிற் கல்விகற்றுத் தேறியபின், "இவர் உலகத்தில் அநேக விசேஷகாரியங்களைச் செய்ய வல்லவர்" என்று பிறரும் "இம்மகனைப் பெற்றுப் பெறும் பேறுபெற்றேன். இவனால் எனக்கு எல்லாப் பெருமையும் பெறலாம்" என்று தந்தையும் எண்ணியிருக்குங் காலத்தில் மிக்க பாலியமான 25-ஆம் பிராயத்தில், தாமும் தம் தந்தையும் வேட்டையாடப்போனவிடத்தில் தந்தை தூரத்தில் ஒரு செடி நிழலில் மிக்க ஒளிவீசும் கண்களோடு ஒரு பறவை மறைந்து நிற்கிறதென்று மயங்கி அறியாமல் அத்திசை நோக்கிச்சுடவே, சுட்ட துப்பாக்கியினின்றும் இரண்டு ஈயரவைகள் செடிமறைவில் நின்ற தன்மகனது இரண்டு கண்களிலும் பாய, இரண்டு கண்களையும் இழந்து, உலகத்தையே யிழந்தவர்போலானார். அதன் பின்னர் தம்மால் பெரும் பயனடையலாமென்று எதிர் பார்த்திருந்த தம் தந்தை "என்மகன் உலகிற்கு உபகாரியாகமலே போகும்படி அவனுக்கு நானே இத்தீங்கு விளைத்தேனே" என்று மனம் வருந்தித் துயருறு வண்ணம் தம் கண்ணால் ஆகவேண்டியவற்றை, பிறரொருவர் கண்ணால் செய்வித்துக் கொண்டு, கண்ணிருப்பவன் போலவே இவர் வேலை செய்ய உறுதி செய்துகொண்டார். அவ்வுறுதிப்படியே உழைத்து வேலை செய்துகொண்டு "பார்லிமெண்ட்" ஜனப்பிரதிநிதி சபையில் முக்கியமானவரில் ஒருவருமானார். இவர் அடிமுதல் நுனிவரையில் செவ்வையாய் ஆராய்ந்தன்றி ஒன்றையும் பேசார், ஒன்றையும் நடத்தார். இவர் இந்தியாவின்மேல் மிக்க அபிமானமுள்ளவர். இத்தேசத்து வருஷாந்தர வரவு செலவு கணக்குகளைக்குறித்துப் "பார்லிமெண்டில்" பிரசங்கமுண்டாகும் காலத்தெல்லாம், இவர் அவ்விதமான கணக்குகளில் வெகு நிபுணராகையால், லக்ஷம் கோடிக்கணக்கான தொகைகள் அநேகங்களைக் குறித்து நல்ல நிச்சயமான அறிவோடு பேசுவார். ஞாபகக்குறிப்பு ஒன்றுமின்றிச் சிலவேளைகளில் ஒரு மணி, இரண்டு மணிநேரம் அநேகவிஷயங்களடங்கிய பிரசங்கங்கள் செய்வார். இவர் இவ்வாறு செய்வது தமக்குள்ள ஞாபகசக்தியாலல்லவென்றும், சொல்ல வேண்டியவற்றை ஒருவாறு காரணகாரிய சம்பந்தத்துடன் மனத்தை ஒழுங்குபடுத்திப் பிரசங்கிக்கத் தொடங்கினால் ஒவ்வொன்றும் உரிய காலத்தில் உரிய வார்த்தைகளால் வெளிப்படும் என்றும் சொல்லுவார். இவர் சரித்திரத்தை ஊன்றிப்பார்ப்போர் யாவர்க்கும் எந்நிலைமையிலும் "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்" என்பது செம்மையாய் விளங்கும்.

அதிர்ஷ்டசாலிகளெனப்படுவோரின் காரியங்களைப் படியிருக்க, அதிர்ஷ்டமில்லாதோரெனப்படுபவரில் அநேகர் வாய்த்த சமயத்தைப் பயன் படுத்தாமல் வீணாக்கினவராகக் காணப்படுவோர்கள்.

* Faraday. † Henry Fawcet.



இன்னும் சிலர், புத்திவன்மை எவ்விதத்திலும் சிறந்ததாயிருந்தாலல்லவோ உழைப்பினால் முதன்மையாய் வரக்கூடும்; உலகிற்குப் பேருபகாரியுமாகக்கூடும்; அத்தன்மையான புத்தி வன்மையில்லாதவரின் பிரயத்தனத்தால் பிரயோசனமொன்றுமில்லை யென்று எண்ணுகிறார்கள். அப்படி நினைப்பதும் சரியன்று. எல்லாருக்கும் புத்திவன்மை எல்லாவிதத்திலும் சிறந்ததாயிருத்தல் இல்லையென்பது மெய்யே; ஆதலால் எல்லோரும் முதன்மையாய் வருதல் கூடாத காரியமே. உலகத்திற்குப் பேருபகாரிகளாய் எங்கும் கீர்த்திபெற்று விளங்குபவர் சிலரேயாம். ஆயினும் புத்திவன்மை சிறிதுமில்லாது பிறப்பவரே யில்லையாகையால் உலகமுழுவதும் மதிக்கத்தக்க காரியம் செய்தல் எல்லாருக்கும் கூடிய தன்றெனினும் ஒவ்வொருவரும் தம்மூராரும் தம்மையறிந்தோரும் நன்குமதிக்கும்படி நடந்துகொள்ளக் கூடுமாதலின் பரோபகாரியாயிருத்தல் யாவராலும் சாத்தியமென்பது நிச்சயமே. ஆனாலும் ஒவ்வொருவரும் தமக்குச் சிறிதேனுமுள்ள புத்திவன்மையைச் செவ்வையாயுபயோகித்து வாய்த்தசமயங்களை வீணாக்காது பயன்படுத்தி நல்லறிவைத்தேடி, அதற்குத் தக்கபடி நடத்தல்வேண்டும். அப்படிச் செய்பவரே தமக்குள்ள கடமையைச் செய்பவராவர். இது யாவராலும் செய்யக் கூடியதே.

முற்சொல்லியவையன்றி எல்லாரும் ஒருக்காலும் மறவாது கருத்தில் வைக்கவேண்டியது வேறொன்றுளது; அஃதாவது உள்ளும் புறமும் ஒத்திருத்தலேயாம். வெளித்தோற்றத்தில் மிக்க அறிவுடையோர் போன்றும், நன்னடையார் போன்றும், உலோகபகாரிகள் போன்றும் வேடம் பூண்டொழுகுவர் பலர். இவ்வேடம் சிறிதுகாலம் பலிக்கும்போல் காணப்படினும் சமயத்தில் மோசஞ்செய்யுமென்பது நிச்சயம். அஃது உண்மையைப் புறந்தாக்கி ஆற்றொணா அவமதிப்பை விளைவிக்குமாகையால் வெளித்தோற்றத்திற்கேற்க உள்ளத் துண்மை யுப் இருத்தல் வேண்டும். அஃதவ்வாறு அமைந்திருக்குமிடமே நன்னெறியுள்ள விடமாகும். நன்னெறியே நன்கு மதிப்புக்குக் காரணமாம். இந்நன்னெறியையும் அதனாலுண்டாகும் நன்குமதிப்பையும் யாவரும் பெறவல்லவரேயாம்.

இது வரையிற் சொல்லியவற்றால் யாம் வற்புறுத்துவது யாதெனின்,—எல்லாரும் உள்ளும் புறமும் ஒத்துத்தம்மை பிறர்க்கும் பயன்படச் செய்துக்கொள்ளக்கூடு மென்பதும், இதுவே எல்லாருக்கும் முக்கிய கருத்தாயிருக்க வேண்டுமென்பதும், இதற்கு அறிவைச் சாதனமாய் அடையவேண்டு மென்பதும், சோம்பலின்றித் தமக்கு இயற்கையிலுள்ள புத்திவன்மையைச் சரியானபடி உபயோகிப்பவருக்கே நல்லறிவு உண்டாகுமென்பதும் நல்லறிவைப் புகட்டும் புத்தகங்களைப் படித்தலிலும் நல்லாரோடிணங்கலிலும், பொருள்களின் குணங்களை நன்காராய்தலிலும், இயற்கைவன்மையை உபயோகப்படுத்துவதே அறிவுக்குரிய உழைப்பென்பதும் யாவரும் நன்குணரவேண்டுமென்பதே.

இயற்கையிலுள்ள புத்திவன்மையை வாய்த்த சமயத்துக்குத் தக்கபடி உபயோகித்து, அறிவையடைந்து, அதை யுக்தா யுக்தமாயுணர்ந்து பயன்படச்செய்வது விவேகமெனப்படும். இவ்விவேகம் சிந்தித்ததைக் கொடுக்கும் இயல்பினதாகையால் இது சிந்தாமணியேயாம். ஆதலின் இவ்விவேக சிந்தாமணியை யாவரும் பெற்றுப் பயன்படல் வேண்டுமென்று நாம் எப்பொழுதும் பிரார்த்திக்கின்றோம்.

## THE CHIEF CHAR' CTERISTICS OF STUDENTS:

### INDUSTRIOUSNESS AND LOVE OF TRUTH.

## மாணாக்கர்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய லக்ஷணங்கள்:

### சுறுசுறுப்பும் வாய்மையுடைமையும்.

1. சுறுசுறுப்பு:—காரியசித்தி பெறும் வண்ணம் எப்போதும் மெய்வருந்திக் கொண்டிருத்தலே "சுறுசுறுப்பு" என்பதின் பதப்பொருள். ஒரு காரியம் கைகூடவேண்டு மெனின் விசேஷ புத்திகூர்மைவேண்டுமென்றே இல்லை. "முயற்சியுடையோர் இகழ்ச்சி யடையார்" என்று ஔவையார் சொன்னபடி முயற்சி ஒன்று இருந்தால் போதும். அது இல்லையெனின் எவ்வகை புத்தியும் பயனற்றதேயாம். இதைப்பற்றி 'ஈஸப்' (Aesop) சொன்ன முயலும் ஆமையும் என்ற கதையால் நன்கு விளங்கும். ஸாலமான் (Solomon) "முயற்சியுடையோன் செல்வமுடையோன்" என்று சொல்லியுள்ளார். மேலும் "மெய்வருந்தி உழைப்போன் உலகை ஆள்வான்" என்றும், "சுறுசுறுப்புள்ள மனிதனைப்பார்! அவன் மன்னன் முன்னிலையில் வீற்றிருப்பான். கீழ்மக்களோடு கலந்திரான்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சரித்திரங்களிலும் அனேக உதாரணங்களைக் காணலாம். 'குவாலியர்' இராஜவம்சத்தை ஸ்தாபித்த ஸிந்தியாவென்பவர் ஆதியில் ஒரு யஜமானனிடம் அடிமையாயிருந்து குற்றேவல் செய்து பிறகு தமது விடாமுயற்சியால் உயர்ந்த பதவிக்கு வந்தாரென சரித்திரத்தால் விளங்குகின்றது. இம்முயற்சியின் சிறப்பைக் குறித்து திருவள்ளுவர்,—

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

என்று கூறியுள்ளார். இன்னும் இவைபோன்ற பல திருஷ்டாந்தங்கள் உள.

* * *
* * *

2. வாய்மையுடைமை :—இதைப்பற்றித் திருவள்ளுவர்,

"வாய்மையெனப்படுவது யாதெனின்யாதொன்றுந்
தீமையிலாத சொலல்"

என்று சொல்லியுள்ளார். அதாவது நாம் செய்ய அல்லது சொல்ல நினைக்கிற ஒவ்வொரு விஷயமும் பிறர்க்குத் தீங்கு விளைக்காதபடி உண்மையாக விருக்கவேண்டும். இக்குணத்தின் மேன்மை சிறுவர்களுக்கு விளங்குவது அறிதாதலின் இதில் விசேட பற்றுடையவராகக் காணப்படுகிறதில்லை. என்றாலும் அஃது சரியானவழி என்று மாத்திரம் உணருகிறான். எங்ஙனமெனின் தான் உண்மையை மறைத்து ஏதாவதொன்றைச்சொல்லி அதைப் பிறர் கண்டுபிடித்தால் தன் முகக்குறியால் தன் வெறுப்பை வெளியிடுகிறான். அல்லது தன்னிடத்தில் யாராவது உள்ளபடி சொல்லாமல் மறைத்துச் சொன்னால் கோபக்குறியைக் காட்டுகிறான். உண்மையை மறைத்துப் பொய் புகலும் மார்க்கங்கள் பல உள. அவையாவன: 1. தான் செய்யத்தகாத காரியத்தை செய்துவிட்டு செய்ததற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுதல். 2. உள்ளவற்றைப் பதின்மடங்கு அதிகமாகச் சிறப்பித்துக்கூறல். 3. பல பொருள்படக் கூறி உண்மை விளங்காமற் போகச்செய்தல். 4. தெரிந்தவன் போல் பாசாங்கு செய்து பிறர் உண்மையெனக் கொள்ளும்படி சும்மாவிருத்தல். 5. முன்பின் யோசனை செய்யாமல் வாக்களித்த பிறகு அதைப்போற்றத் தவறிப்போதல். 6. வாக்குக் கொடுத்தபடி நடக்கத் திறமையுளதேனும் அவ்வாறு செய்யத்துணியாமல் அசட்டையாயிருத்தல்: இங்ஙனம் பிள்ளைகள் பல வகைகளிலும் தவறிப்போக இடமிருத்தலால் அவர்களுக்கு உண்மையென்ற சிறந்த குணத்தைச் சிறுவயதிலேயே மனத்தில் வேரூன்றி வழக்கத்தில் அநுசரிக்கும்படி செய்வது ஆசானது முக்கிய கடமை. ஆழ்ந்து நோக்கின் ஊக்கமின்மையே பொய்சொல்வதற்குக் காரணமாம். மேலும் இதே புறங்கூறல், கையொப்ப மற்ற பத்திரங்கள் வரைதல் முதலிய கெட்டகுணங்களுக்கும் காரணமாம். ஆனது பற்றி ஊக்கத்தையும், உண்மையையும் ஒரு மாணாக்கன் கைசோரவிடாது அவற்றை முக்கிய சாதனமாகக் கொள்ளல்வேண்டும்.



## ON THE CHOICE OF BOOKS.

### "நூல்களும் நூலாராய்ச்சியும்."

(ஐப்பசிமீ சஞ்சிகை, 202-ம் பக்கத்தொடர்ச்சி.)

நல்ல நூல்கள் இன்னும் அறிவை அபிவிருத்திசெய்து உலகியலைக் காண்பிப்பதுடன் மனிதனுடைய மனச்சோர்வு துன்பம் முதலியவைகளை அகற்றுகின்றன.

எவ்வளவுதூரம் நேரினும் எவ்வளவு துன்பம் அநுபவித்தாலும் இவைகளைப் படிக்குங்கால் அவைகளெல்லாம் ஓடுகின்றன. தன்னையும் மறந்து ஆனந்தமடைய நேருகின்றது. அரிச்சந்திரன், துரௌபதை முதலியவர்கள் முதலில் எவ்வளவு துயருற்றும், முடிவில் துயரற்று இன்பமடைந்ததுபோல் நாமும் துயர் நீங்கி மகிழ்வுறலாம் என்று நினைந்து மனத்தைத் தேற்றிக்கொள்ளலாம். இக்காரணங்கள் பற்றியே ஓர் மகான் உயர்ந்த நூலைப்பற்றிச் சொல்லுங்கால்,

"Poetry is an ornamant ;
It is a play thing and it is life.".

அதாவது, அது அழகு பொருந்தியது, விளையாட்டுக் கருவியைப்போல் மாசற்ற இன்பந்தரக்கூடியது. மனிதன் வாழ்வை வெளிப்படுத்துவது என்று கூறியிருக்கிறார். உயர்ந்த நூலாசிரியரைப் பற்றிச் சொல்லுங்கால்,

"Our never-failing friends are they
With whom we converse day by day."
—Southey.

அதாவது, தினந்தோறும் நாம் தாராளமாய்ச் சம்பாஷிக்கும்படியான நித்தியமான நண்பர்கள் என்று கூறுகிறார்.

இவைநிற்க. இந்நூல்கள் எவ்வாறு விருத்தியடைகின்றன. காலத்துக் கேற்ப எவ்வாறு மாறுபாடடைகின்றன வென்பதை விசாரிப்போம். ஓர் சமயத்தில் எல்லோரும் பாக்கள் எழுதுகிறார்கள். மற்றொரு சமயத்தில் நாடகம் எழுதுகிறார்கள். வேறொரு சமயத்தில் வசனநடையிலேயே எழுதுகிறார்கள். இதற்குக்காரணம் என்னவென்று பார்ப்பது தகுதியே. பெரியோர்கள் தாமாகவே சொந்தமாக விஷயங்கள் கற்பனைசெய்து நூல்களியற்றலாம், அல்லது இன்னொருவர் இயற்றியுள்ளதைப் பின்பற்றி எழுதலாம். அல்லது ஓர் காலத்தில் வழங்கிவந்து இடையில் மறைந்துபோனதை மறுபடியும் முன்னிலைக்குக் கொண்டுவரலாம். இம்மாதிரியாக, அவரவர்கள் சக்திக்குத் தக்கபடியும் மனதுக்குத் தக்கபடியும் விஷயங்களை வைத்துக்கொண்டு அவைகளுக்கேற்ற நடையிலெழுதுகிறார்கள். இதில், முக்கியமாய் ஒருவர் நாடகம் எழுதி மேன்மைபெற்றால், பலர் அவரைப் பின்பற்றி நாடகம் எழுதுகிறார்கள். கடைசியில் அநேக நாடகங்கள் ஏற்பட்டு அதனால் ஜனங்களுக்கு ஓர்வித அருவருப்பு உண்டாகிறது. தவிரவும் எல்லோரும் நன்றாய் எழுதுவது சாத்தியப்படுவதுமில்லை. பின்பு, நாடகத்தைவிட்டு வேறொருவிதமாய் எழுதுகிறார்கள். இவ்விஷயம் ஆங்கில நூல்களின் சரித்திரத்தைக் கவனித்தால் நன்றாய்த் தெரியவரும். எலிஸபெத்தம்மை காலத்தில் அநேகர் நாடகமே எழுதினார்கள். இவர்களுக்குப் பின்வந்தவர்களாகிய ட்ரைடன், போப் (Dryden, Pope) முதலியவர்கள் சிறந்த நாடகம் எழுதுவதைவிட்டு வசைப்பாக்கள் (Satires) எழுதினார்கள். பின்பு அநேகர் வசைப்பாக்களை எழுத ஆரம்பித்தனர். பிறகு செய்யுள் நடையை விட்டு வசன நடையிலேயே எழுதலாயினர். அதன்பின்பு "நாவல்" நடையிலெழுதினர். இவ்வாறு காவிய நடையும் மாதிரியும் மாறுபட்டுக்கொண்டே வந்தது. இதேமாதிரி; நமது தமிழிலும் இப்பொழுது வசன நடையையே அநேகர் விரும்புகிறார்கள். கம்பராமாயணத்தைப்போன்ற ஓர் பெரியகாவியம் இயற்ற முயலுபவர்கள் இப்பொழுது அநேகமாயில்லையென்றே சொல்லலாம். அப்படி யெழுதுவது கடினமாயிருப்பதுடன் தற்காலத்தில் வசன

நடையை அல்லது காவல், நாட நடைகளை விரும்புவதுபோல் செய்யுள்நடையை விரும்புவதில்லை. இப்படி காவ்யங்களின் ரூபம் காலத்துக்குத் தக்கப்படி மாறுபடுகின்றது.

இதுகாறும் நூல்கள் யாவை யென்பதையும் அவைசெய்யும் வேலை இன்னவென்பதையும் அவைகள் மாறுவதைப்பற்றியும் சொன்னோம். இனி நாம் கவனிக்க வேண்டுவதொன்றுளது. அது இந்நூல்களை எப்படி ஆராய்ச்சி செய்வது என்பதாகும். இதையும் சுருக்கமாய்ச் சொல்லி இவ்விஷயத்தை முடிப்போம். முதலாவது நூல்களின் மூலமே படித்தாகவேண்டும். அதாவது மூலத்தைப் படிப்பதற்கு முன்னாவது அல்லது அதற்குப் பதிலாகவாவது அதைப்பற்றி யெழுதியுள்ள தர்க்கங்களையும் வியாகரணங்களையும் படிப்பது தவறு. அநேகர் நூல்களைப்பற்றிப் பிறர்சொல்லியிருக்கும் அபிப்பிராயங்களை எப்படியாவது தேடிப் பிடித்துக்கொண்டு நூல்களைப் படிக்காமல் விட்டுவிடுவதுடன் அவ்வளவுந் தெரிந்ததாகவும் நினைத்து அவற்றின் ஏற்றத்தாழ்ச்சிகளைப் பற்றிப் பிரசங்கிக்கத் துணிகின்றனர். பிறர் கூறியிருக்கும் அபிப்பிராயங்கள் தவறாயினுமிருக்கும். ஆகையால் முதலில் நூல்களை நன்றாய்ப்படித்து அவற்றிலுள்ள சாரத்தை கிரஹித்து குணாகுணங்களைத் தெரிந்துகொள்ள முயலவேண்டும். பிறகு நம்முடைய அபிப்பிராயங்களைப் பிறருடைய அபிப்பிராயங்களுடன் ஒத்துப்பார்த்து எல்லாவற்றையும் செவ்வனே சீர்தூக்கி முடிவில் தப்பபிப்பிராயங்களை யகற்றி நல்லவைகளைக் கைப்பற்ற வேண்டும்.

பின்பு, எந்த நூலைப்படிக்குங் காலையிலும் அந்நூலாசிரியரிடத்து மிகுந்த பயபக்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

"An author !! tis is a venerable name."

அதாவது, ஆசிரியரெனும் பெயரே மிக்க மரியாதையும் மேன்மையும் பொருந்தியது என்று ஒரு பெரியவர் சொல்லுகிறார். அவரிடத்து மரியாதையாயிருப்பதுடன் அவர் மனத்தையும் நம்மனத்தையும் ஒருமைப்படுத்த வேண்டும். இவ்வித மரியாதையும் மனவொருமையுமில்லாவிடில் அவர்களின் கருத்தை யறிவதுமரிது. அவர்களது நூல்களை நாம் ஆராய்வதுமரிது.

"In every work regard the writer's end
Since none can compose more than they
[intend."—Pope.

அதாவது, எந்தநூலைப்படிக்குங்காலையிலும், அந்நூலை இயற்றியவரின் கருத்தையறிந்து கண்யப்படுத்து. ஏனெனில், அவர்கள் நினைப்பையும் அவர்கள் கோரிக்கையையுந்தான் அவர்கள் வெளியிடலாமே யொழிய அதற்குமேல் முடியுமா என்று 'போப்' என்பவர் சொல்லியிருக்கிறார். அவர்கள் கருத்தையுங் காரணத்தையுந் தெரிந்து தம்தம் நினைவின் வண்ணம் சரிவர எழுதியிருக்கிறார்களா வென்று பார்க்கலாமே யொழிய நாம் நினைக்கும்படி அவர்கள் எழுதியிருக்கிறார்களா வென்று பார்ப்பது பெருந்தவறு.

உதாரணமாக, ஆதியில் அரிஸ்ட்டாட்டில். (Aristotle) என்ற மகான் நாடகம், செய்யுள், வாசகம் முதலிய காவ்யங்களின் இலக்ஷணங்களையும் அவைகளின் விதிகளையும் அவருக்குத் தோன்றினமட்டும் எழுதினார். அவ்விதிகளை யனுசரித்து அக்காலத்திலுள்ளவர் எழுதிவந்தனர். ஆனால் வரவர நாட்செல்லவும், அவரது கொள்கைகளிற் பலவற்றைக் கைவிட்டு விட்டனர். அவற்றின்படி நடப்பது அசாத்தியமென்று கண்டோ அல்லது அப்படி நடப்பது உசிதமில்லையெனக் கருதியோ அவற்றை விட்டு வேறு கொள்கைகளைக் கைப்பற்றினர். ஆங்கில நாடகத்தில் அவரது கொள்கைகளை முற்றிலும் அநுசரித் தெழுதப்பட்டவை மிகவும் சொற்பமெனச் சொல்லவும் செய்யுள் விதிகள் அநேகம் ஏற்படுத்தியிருக்கிறார். அவ்



ற்றையெல்லாம், 'டிரைடன்', 'போப்' போன்றவர்கள் சரிவர கவனித்தார்கள். ஆனால் இவர்களுக்குப் பின் வந்தவர்கள் இவ்விதிகளிற் பலவற்றைத் தவிர்த்து தம்மிஷ்டம்போலவே எழுத ஆரம்பித்தனர். இக்காரணத்தை வைத்துக்கொண்டு இவர்களை உயர்ந்த நூலாசிரியரில்லை யென்று சொல்லிவிடுதல் தகுதியா? இன்னும் மில்ட்டனை (Milton)ப் போன்றவர்கள் பெரிய விஷயங்களை வைத்துக்கொண்டே செய்யுள் எழுதினர். 'போப்' போன்றவர்கள் அற்பவிஷயங்களையும் பெரிதாகக்கொண்டு பாக்கள் பாடினர். இவர் ஓர் பொடிப்பட்டையைப்பற்றியும், ஓர் பெண்மணியின் மயிர்ச் சுருளைப்பற்றியும் அநேக பக்கங்கள் எழுதியுள்ளனர். பர்ன்ஸ், வொட்ஸ்வர்த் (Burns, Wordsworth) இவர்கள் சீர், மோனை முதலிய செய்யுள் லக்ஷணங்கள் அவசியமில்லை யென்று மறுத்தனர். வால்ட் உவிட்மன் (Walt Whitman) என்பவர் இவர்கள் சொன்னதை சித்தாந்தமாய் அநுபவத்திற்குக் கொண்டுவந்தார். இவ்வாறு பலர் பலவிதக் கருத்துக்களைக் கொண்டும் பலவித கொள்கைகளைக்கொண்டும் காலத்திற் கேற்றவாறு தம் வேலையைச் செய்வது இயல்பு. இவற்றைக் கொண்டு இவர்களை இழித்து இவர்களுடைய நூல்களைத் தாழ்வாகப்பேசுதல் அழகா? 'வொர்ட்ஸ்வொர்த்' என்பவர்,—

The Moving accident is not my trade;
To freeze the blood I have no ready arts;
'Tis my delight, alone in summer shade,
To pipe a simple song for thinking hearts.

அதாவது,

மனத்தையயக்கும் அரும்பெரும்
　விஷயம் எனக்குரிதன்று
கேட்போர்மனத்தைக் கொள்ளைகொள்ளும்
　வழியோ வறியேன்
மற்றுக்கோடைக்காலம் குளிர்ந்ததோர்
　நிழலில்தனியா யென்போல்
நினையுநண்பர்க்கெளிய செய்யுள்
　சாற்றச் சுவைகொண்டேனே.

என்று வியக்தமாய் அவர் கருத்தைக்கூறியிருக்கிறார்.

இவர் இக்கருத்தைக்கொண்டு, இடையர்களைப்பற்றியும், அவர்களது வாழ்வைப் பற்றியும், இயற்கையிலுள்ள இலை, செடி, பூக்களைப் பற்றியும், செய்யுள் எழுதியுள்ளனர். ஆங்கிலகவிஞர்களில் இவர் மிகவும் மேன்மை பொருந்தினவராகவே மதிக்கப்பட்டு வருகிறார். ஆகையால் பெரியோர்கள் எழுதியவற்றை நன்றாய்ப் படித்து அவர்கள் கருத்தையறிந்து அவர்களின் மேன்மையைக் கண்டறிய வேண்டுவதே நமது கடமையாகும். அவர்களிடத்தில் அது இல்லை, இது இல்லை என்று புத்திஹீனமாய் அவர்களைக் குற்றஞ்சாட்டலும் அவர்களுடைய ஏற்றத்தாழ்ச்சிகளை எடுத்துரைக்கத் திறமை பொருந்தியுள்ளோம் என்று நினைப்பதும் பெருந்தவறாகும்.

முடிவில், உயர்ந்த நூல்கள் அழிவற்றனவென்றும், அளவிறந்த நன்மை பயக்கக்கூடியவையென்றும், பாஷைவிர்த்தி அவசியமென்றும், அது நூலாசிரியரைச் சார்ந்ததென்றும், வெவ்வேறு நூல்கள் ஏராளமாய் ஏற்பட வேண்டுமென்றும் இதர பாஷைகளை கற்றறிந்து அவற்றினுதவியால் அவைகளிலுள்ளவைகளை நம்முடையவை யாக்கிக்கொள்ள வேண்டுமென்றும், நூலாசிரியரை தெய்வமெனப் பேணி, அவர்களது நூல்களைப் பயபக்தி விசுவாசத்துடன் ஆராய்ச்சி செய்ய வேண்டியது நமது கடமையென்றும் நாம் தெரிந்து கொள்ளுகிறோம். ஜான்ஸன் (Johnson) எனும் மகான் கூறியவண்ணம்,—

"The chief glory of any people
rises from its authors."

அதாவது, எத்தேயத்தோரின் புகழும் புலவராற்றான் பொங்கும் என்பதையும்,

"அறிவுடையார் எல்லாமுடையார்
　அஃதிலார் என்னுடையரேனு மிலர்."

என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவர் வாக்கையும் மறவாதுட்கொண்டு விர்த்தியடைவோமாக.

## SOCIAL SERVICE: ON THE CULTIVATION OF MENTAL HAPPINESS.

By A HINDU LADY.

### சமஷ்டி சாதனம்: அகமகிழ் பயிற்சி.

(ஒரு ஹிந்து சகோதரி எழுதியது.)

எனதருமை அன்புள்ள சகோதரிகளே, இவ்வழகிய உலகில் நமக்குவேண்டிய சுகங்களை கருணைக் கடலாகிய ஜெகதீசன் ஏராளமாய்த் தந்திருந்தும் சில வேளை நாம் ஏதோ வொரு மனக்குறைக்கு உள்ளாகி துன்பப்படுகிறோம். இதை யொழிக்கும்படியாக நாம் ஒருசாதனம் செய்யவேண்டும். எப்போதும் சந்தோஷமாயிருக்கும்படியான பழக்கம் நம்மில் உண்டாகவேண்டும். சாதனையில்லாமல் ஒன்றையும் சாதிப்பது கூடாது. கண்விழித்து நாடக முதலானது பார்த்துக் களிப்பதையும் சந்தோஷமென்பார்கள். நான் சொல்லவரும் சந்தோஷம் அப்படிக்கொத்ததல்ல. ஆனால் துன்பத்திலும் நாம்பெற்றிருப்பதைக் கொண்டு சுகமனுபவிக்கும்படியான பழக்கம்: இதுதான் அகமகிழ்பயிற்சி.

நமக்குண்டாகும் துன்பங்களில் அநேகம் நாம் செய்துகொள்பவைகளே. அல்ப விஷயங்களுக்கெல்லாம் கோபத்திற்கும் குறைகளுக்கும் உள்ளாகிறோம். ஆழமறியாமல் காரியங்களில் தலையிடுகிறோம். ஆகாப்பண்டங்களில் இச்சைவைத்து அனுபவிக்கிறோம். இச்செய்கைகளால் நேரிடும் துன்பங்கள் அநேகம். நமது செய்கையின் காரணமல்லாமல் இராஜீக, தெய்விகமாய் வருபவை கொஞ்சம். நமது கெடுதிகள் எதினால் விளைகின்றனவென்று எண்ணிப்பார்க்கும்போது நாம் பெற்ற பேறாகிய *இச்சா சுதந்திரத்தை † துர்விநியோகம் செய்வதினால் என்று வெளியாகும். எழுவகைத் தோற்றங்களில் மக்களாகிய நமக்கு இழிந்தனவாகிய விலங்கு பறவைமுதலியன தம்மைப்படைத்த கடவுளின் நியமனங்களுக்கு கொஞ்சமாவது மாறுபடாமல் தத்தம் செய்கைகளை சரிவர நடத்திவருகின்றன. தங்களுக்கு ஏற்பட்ட விதிகளினின்று பிசகும்படியான சுதந்திரம் அவைகளுக்கு இல்லை. ஆகையால் அவற்றின் சுகம் கெடுவதற்கு மார்க்கமில்லை. பட்சி முதலியவற்றை கவனித்துப் பாருங்கள். அவைகள் தத்தம் பேடைகளுடன் கூடிக்குலாவுவதையும் அவைகள் தம்மினத்தை நீடூழியாய் இருக்கும்படிசெய்யும் கருமத்தை ஏற்பட்ட கிரமத்திற்கு கொஞ்சமாவது மாறுபடாமல் நடக்கிறதை பார்ப்பீர்களானால் ஆச்சரியப்படாம லிருக்கமாட்டீர்கள். அவைகளுக்கு நேர்ந்த விவேகக்குறைவிற்குத் தக்கபடி இச்சா சுதந்திரமும் குறைந்திருக்கிறது. அவைகள் நம்மைப்போல பயிர் செய்து உணவைப் பெறவேண்டிய அவசியமில்லை. கடவுள் செயலின் அழகைப் பாருங்கள். விவேகக் குறைவு இருப்பதால் உணவிற்கு பிரயாசைப் படவேண்டியதில்லாமலே பட்சிகள் விருட்சங்களில் உண்டாம் கனிமுதலியவற்றால் தினம் விருந்துண்டுகளிக்கின்றன. காக்கை முதலியவை முட்டையிட்டு குஞ்சுபொறிக்குங்காலம் சமீபித்தபோது ஆணும் பெண்ணுமாக கூடுகட்டுவதற்கு சாமக்கிரியைகளை தேடுவதில் படும்பாட்டையும், பிறகு தம்குஞ்சுகளுக்கு இரைதேடி அவைகளின் பவழம்போன்ற வாயில் புகட்டி உண்பிக்கும்படி தமக்குவேண்டிய இரையை எங்கும் இலேசில் கிடைக்கும்படி செய்திருக்கும் அழகிய செய்கையையும் கவனியுங்கள். பசு முதலிய மிருகங்கள் சூல்படவேண்டிய காலந்தவிர மற்றகாலத்தில் அவ்விச்சையற்றிருந்து அவைகளுக்கு நியமித்த வேலையை செய்துவருவதினால் அவைகளுக்கு நோய் நொடிகள் மட்டாயிருக்கின்றன. ஊண் உறக்கம் முதலியவற்றில் மனுஷனும் மிருகங்களுக் கொப்பானவனானாலும் பகுத்தறிவு

* இஷ்டப்படியெ விதம் செய்யும் சுதந்திரம்.
† அக்கிரமமாய் செலவழித்தல்.



இவனுக்குண்டாயிருப்பதினால் கடவுளின் நியமனங்களை தெரிந்துகொண்டு நடக்கவேண்டியவனாய் இருக்கிறான். தெரிந்து நடந்து சுகப்படவும், தெரிந்துகொண்டு நடக்காவிட்டால் துன்பத்திற்கு உள்ளாகவும் வேண்டிய சுதந்திரத்தைப்பெற்றுவிட்டான். இச்சுதந்திரத்தின் மேன்மையைக் கவனிக்காதவராய் துர்விநியோகம்செய்து துக்கங்களைப்பெருக்கிக்கொள்ளுகிறோம். நமக்குள்ள சுதந்திரத்தை எவ்வளவுக்குகையாடலாம்எங்கு விடவேண்டும்என்று நமது பகுத்தறிவால் சுலபப் பிரயாசையினால் தெரிந்து கொள்ளக் கூடியவர்களாயிருந்தும், சோம்பலுக்கு உள்ளாகி சித்தம்போனவாறு பிரவர்த்திக்கிறோம். கடினப்பிரசவங்களுக்கு நாம் பலமுறை ஆளாகிறோம். மருந்தும் கையுமாய் இருக்கவேண்டி வருகிறது. உண்டாகும் சந்ததிகள் நோய்நொடியற்று செழித்திருப்பதில்லை. பகுத்தறிவை கூர்மையாக்கிக்கொண்டு *சித்தசுவாதீனத்தைக் கைக்கொள்வோமாகில் நமக்கு நேரிடக்கூடும் துன்பங்களில் பெரும்பாகம் ஒழிந்துவிடும். நாம் துன்பப்படும்போது நம்மையுமறியாமல் "கர்மம்" கர்மமென்று சொல்லுகிறோம். ஆம், நாம் முற்பகல் செய்தது பிற்பகல் விளைந்ததை † நிதரிசனமாய்க் கண்டோம். ஆகையால் நமக்குக்கிடைத்த இச்சாசுதந்திரத்தை வெகு சாக்கிரதையாய் கையாட வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் சுதந்தரமில்லாதவர்களென்கிறதும் பொய்யல்ல. மனுஷன் செய்யக்கூடாததை செய்வதற்கு சுதந்திரமில்லையேயொழிய, இவன் செய்யக்கூடியதில் சர்வசுதந்திரம் பெற்றிருக்கிறான். அன்றியில் அச்சுதந்திரத்தை அத்துமீறி அநுசரித்தால் கேடு வருவது நிச்சயம்.

துன்பங்களால் பயனில்லாமற் போகவில்லை. நாம் செய்யும் துர்க்காரியங்களின் பயனாக துன்பங்கள் உண்டாகாமற்போனால் கடவுளின் நியமனங்களை (சட்டங்களை) நாம் நிறைவேற்றுவது எப்படி? அவரது ஆஞ்ஞைமுடிவுபெற வேண்டும். அதைக் கடக்கவல்லவர் ஒருவருமில்லை.

ஈசனுடைய நியமனங்களை கடக்குந்தோறும் நமக்கு துன்பம் உண்டாகிறது. அது நமக்கு நன்மை செய்யும்படி ஏற்பட்ட எச்சரிப்பு. இந்த எச்சரிப்பு நமக்கு அவசியம்வேண்டும். இல்லாவிட்டால் நமக்குக் கிடைத்திருக்கும் பெரும்பாக்கியங்களெல்லாம் அவலமாய்ப் போய்விடும். நெருப்பிற்குச் சுடுந்தன்மை யுண்டல்லவா. அச்சுடுகையைத் தெரிவிப்பது நமது ஸ்பரிசம். சுடுந்தன்மையை ஸ்பரிசம் தெரிவிக்காமற்போனால் ஒவ்வொருகுழந்தையும் நிமிஷந்தோறும் தீய்க்கு இரையாக வேண்டிவரும். இந்த ஒருதிருஷ்டாந்தத்தைப்போல் எதிலும் பார்த்துக்கொள்ளலாம். இயற்கையின் நியமனத்தை நாம் கடக்கும்போதெல்லாம் நமக்கேதோ வொருநோய் உண்டாகி எச்சரிக்காமற் போனால் நன்மைக்கென்று ஏற்பட்டவைகளே நமக்கு பாதகமாய் முடியும். காருண்ணியக் கடவுள் நம்முடைய க்ஷேமத்திற்காகவே நோயை யுண்டுபண்ணி யிருக்கிறார். அவைகளின் பிரயோசனம் உடனுக்குடன் நமக்குத் தெரிகிறதில்லை. பின்னிட்டுத் தெரியவரும். கொப்புங் கிளையுமாய்ச் செழித்திருக்கும் மரத்தை பொருவன் வெட்டுவதைக் கண்டபோது இன்னதற்காக வெட்டுகிறானென்று நமக்குத் தோன்றுகிறதில்லை. அம்மரத்தினின்று பிறகு சுந்தரமான பெட்டியோ பேழையோ உண்டாகிறது. அதைக்கண்டபோது சந்தோஷமடைகிறோமல்லவா? இதுபோல துக்கங்கள் நம்மைவாட்டி மனதில் சிறுகச்சிறுக ஏறியிருந்த அசுத்தமெல்லாம் போக்கி நற்குணங்களை நம்மில் வெளியாகும்படி செய்தபோது துக்கங்கள் நமக்கு பாக்கியமாக விருந்ததாக அறிவோம்.

* மனதை அடக்கி ஆளுதல்.
† திருட்டாந்தமாய்

கற்பிற்கு அரசியான சீதாப்பிராட்டிக்கு நேர்ந்த துன்பங்களினாலல்லவா அக்குணமணிக்கு என்றுமழியாப் புகழுடம்பு உண்டாயிற்று. போகபாக்கியங்களை அனுபவித்து காலங்கழித்து மாண்டுபோனவர்களுடைய சங்கையை யாரால் சொல்லி முடியும். இவர்களில் உத்தமர்களாயிருந்த சிலரைப்பற்றி மாத்திரம் நாம் தெரிந்துகொள்வதற்கு மார்க்கமுண்டாயிருக்கிறது. இச்சிலருடைய சரித்திரத்தை கவனமாய்ப் படித்துப் பார்ப்போமானால் இவர்கள் யாவரும் துன்பத்திற்கு உள்ளானவர்களாகவே யிருக்கிறார்கள். ஒவ்வொருநெறியைக் கைக்கொண்டவர்களாய் அந்நெறியை சாதிக்கும் விஷயத்தில் தாங்கள் பட்ட அல்லல்கள் கொஞ்சமல்ல. கற்பெனும் தன்னுயிரினும் சிறந்த ஆபரணத்தைக்காக்கும் பொருட்டு சீதாப்பிராட்டி பட்டபாட்டை ஆலோசிப்போமானால் நாம் இல்லற தருமத்தை நடத்துங்காலத்தில் நமக்குண்டாகும் கஷ்டங்களைத் துன்பமென்று சொல்ல வாய்கூசும்.

அதிர்ஷ்டவசத்தால் நமக்குக் கிடைத்திருக்கும் துரைத்தனத்தாலும் நாம் அடைந்திருக்கும் கல்விப்பயிற்சியினாலும் சுவாதீனத்தை மாத்திரம் கைக்கொண்டு நடப்போமானால், கூடியவரையில் நம்வாழ்நாளை இனியதாக்கிக்கொண்டு இகபரசுகங்களையடைய யாதொரு தடையுமிராது. மனுஷப் பிரயத்தனத்தையும் கடந்து நமக்கு துன்பங்கள் வருங்காலத்திலும் மற்றெந்தக்காலத்திலும் அகமகிழ்பயிற்சி எப்படி செய்யவேண்டுமென்பதை சீதாபிராட்டியின் சரித்திரத்தைக்கொண்டே தெரிந்துகொள்ளலாம்.

(இன்னும் வரும்.)

---

"விவேக சிந்தாமணியின் ஐப்பசி மாசத்துச் சஞ்சிகை நமக்குக் கிடைத்தது. இதில் ஸ்திரீ புருஷர்கள் சிறுவர்களுக்கான பலவிதமான வியாசங்கள் நன்றாக எழுதப்பட்டிருக்கின்றன".—

சுதேசமித்திரன்.

## MUMUKSHUTARAKA, OR, 'THE WAY TO SALVATION.'

By

BAHGAVADH PADHA SRI SANKARACHARIYA.

பகவத்பாத ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் உபதேசித்தருளிய

## முமுக்ஷுதாரகம் அல்லது, "பஜகோவிந்தம்"

என்னும்

ஸ்ரீ கோவிந்தமஞ்சரிகா ஸ்தோத்திரம்.

ஆசார்யஸ்வாமிகள் உபதேசித்தருளிய இச்சிறிய நூலிற் கூறிய விஷயம் யாதென்னில், இவ்வுலக வாழ்க்கையானது தாமரையிலையிற்றங்கிய நீர்போல அதிக சஞ்சலமானதென்றும், இதில் அடையும் சுகம் சிறிதேனும் இல்லையென்றும், இதில் தேடும் பொருளும் சுற்றமும் துன்பத்துக்கே ஏதுவாதலன்றிப் பரத்துக்கு எத்துணையும் பயன்படாவென்றும், பிறப்பு நீங்கி முத்தியடைதற்கு மார்க்கம் ஆசையை ஒழித்து அமலன் அடியில் இடையறா நேசம் பூணுதலேயென்றுமாம். சுருங்கச் சொல்லுமிடத்துப் பக்தி ஞான வைராக்கியமே மோட்சத்துக்குச் சாதனமாகுமென்பது இந்நூலின் கருத்து.

இனி இந்நூலின் விஷயத்தை விரிவாக ஆராய்வோமாக. முதற்செய்யுளில், கோவிந்தனையே சர்வகாலமும் நேசித்துப் பூசித்துத் தியானித்தலே முத்திக்கு மார்க்கமென்று கூறி, இதனைப் பின்வரும், செய்யுள் ஒவ்வொன்றுக்கும் இறுதியில் *பல்லவியாகக் கொள்ள வைத்தலின், இந்த ஈச்வரபஜனமே முத்திக்கு இன்றியமையாத முதற் சாதனமாகக் கூறியதாயிற்று. அது எப்படியென்னில்—

1. "கோவிந்தனையே குறியாய் குறியாய்
   கோவிந்தனையே குணனின்மதியாய்!
   சாவந்தணைநாள் 'டுக்ருங்கரணே'
   ஆவந்தனை யன்பினளித் திடுமோ?"

* இது மூதல் நூலில், "பஜகோவிந்தம், பஜகோவிந்தம், பஜகோவிந்தம் மூடமதே" யென்று வெகு அழகாகவும், உருக்கமாகவும், கம்பீரமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.



அதாவது, அடா! நற்குணமில்லாத மூடாத்மாவே, உனக்கு மரணகாலம் சமீபிக்கும்போது 'டுக்ருங்கரணே' 'டுக்ருங்கரணே' என்று ஜபிக்கும் இந்த ஜபமானது அந்தோ! உன்னை அன்போடு வந்து ரக்ஷிக்கவல்லதோ? ஏன் வீணாக அதைச் செபித்துக்கொண்டு காலத்தைப் போக்குகின்றாய்? பிறவிக்கடலில் நின்று எடுத்துயர்த்தி உஜ்ஜீவிப்பிக்கும் தாரக மந்திரமாயுள்ள கோவிந்தநாமத்தைச் செபித்துப் பகவான் திருவடிகளைத் தியானிப்பாயாக. இதுவே உனக்கு உறுதியானது என்றபடி. இவ்வுபதேசம், கங்காதீரத்தில் ஒருவன் சப்த சாஸ்திரம் ஒன்றையே கற்றுப், பவசாகரோத்தாரகமாகிய தாரக மந்திரத்தை அறியாமல், தான் கற்றிருந்த 'டுக்ருங்கரணே' என்னும் சம்ஸ்கிருத தாதுவையே அடிக்கடி உருவிட்டுக்கொண்டிருக்கக் கண்டு, ஸ்வாமிகள், அவன் பேதைமைக்கிரங்கிக் கருணைகூர்ந்து அம்மூட பண்டிதனுக்கு ஓதியருளியதென்பர். ஆயினும் இவ்வுபதேசம் யாவர்க்கும் பொதுவானதேயாம்.

முதற்செய்யுளில் ஈச்வரபஜனமே முத்திக்குச் சாதனமென்று பக்தியின் விசேஷத்தைக் கூறி, பக்தியைச் செய்யுங்கால் ஆசைகளையொழித்துச் செய்தல் வேண்டுமென்பதை உணர்த்தும் பொருட்டு அவ்விஷயத்தை அடுத்த செய்யுளிலே கூறுகின்றார். 'ஆசாசாத்பரமம் துக்கம் நிராசாத்பரமம் சுகம்' என்றபடி, ஜனனமரணாதி துக்கங்கள் யாவும் மனிதர்க்கு ஆசாதிக்யத்தினாலே உண்டாதல்பற்றி, அவ்வாசையை யறுத்தலும் மோக்ஷத்துக்கு இன்றியமையாத ஓர் சாதனமாகும் என்னும் உண்மையைப் பன்முறையும் வற்புறுத்துகின்றார். ஆசையானது எந்தெந்தப் பொருள்களின்மேற் செல்லுகின்றதோ அந்தந்தப் பொருள்களைப்பற்றிப் பற்பலவிதமாகும். இவற்றுள், மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இம்மூன்றும் முக்கியமானவை. மண்ணாசையானது பொருளாசையுள்ளே அடங்குமாதலின் அதனை வேறு பிரித்துக் கூறாமல், மற்றிருவகை ஆசைகளையும் துறக்க வேண்டுமென்று கூறுகின்றார் அவ்விருவகை ஆசையினும் பொருளாசை பொருள் சேரச்சேரக் குறைவுறாமல் வர்த்திக்குமாதலின் மிகக்கொடியது என்பதையுணர்த்த அதனை முதலில் வேருடன் களைய வேண்டுமென்று முதற்கண் கூறி, இதன்பின் மூன்றாவது செய்யுளில் பெண்ணாசையைத் துறத்தலைக் கூறுகின்றார். இவ்விருவகை ஆசையையும் துறக்க வேண்டுமென்று கூறியவாற்றானே அவற்றைத் துறத்தற்குரிய உபாயமும் உடனே கூறுகின்றார். பொருளாசையைத் துறத்தற்குபாயம் அடிக்கடி அவ்வாசை எழுந்தோறும் அதனை எழவொட்டாமல் அடக்கும் நற்புத்தியை அப்பியாசத்தினால் ஸ்திரப்படுத்திக் கொள்ளலும், நல்வழியாற் பெற்றபொருள் சிறிதாயினும் அதனால் திருப்தியடைந்திருத்தலுமாம் என்றும், மற்றைப் பெண்ணாசையைத் துறத்தற்குபாயம் காமத்தை விளைக்கும் அவரது அவயவங்களைப் பகுத்து நோக்கி அவை அருவெறுப்பான மாம்சம் கொழுப்பு முதலியவற்றின் விகாரமேயென்று கருதுதலுமாம் என்றும் காட்டுகின்றார். எப்படியென்னில்:—

2. "துறவாய் பொருளாசையினைத் துணிவாய்
   உறுவாய் நசை தீரொரு நன்மதியை
   நெறிவாய் வருமோர் நிதியாலுவகை
   பெறுவாய் நிறை பேதைமையாய் பெரிதே."

3. * "மடவார் வளர் மென்றனமும் வடிவும்
   கடுமோகமனத் துறனீ கணுநீஇ
   முடையார் தசையின்றிரி யென்று முறை
   விடுவாய் விடுவாயதன்மேல் விழைவே."

அதாவது, பொருளை நிலையாகவெண்ணிப் பொருண்மேல் வைத்திருக்கும் உன் ஆசையை நீ முற்றிலும் விட்டொழிந்து ஆசாபாசங்களை விட்டநன்று ஸ்வஸ்தனாயிருக்கும் உத்தமமாகிய உயர்ந்த புத்தியை உறுதியாகப் பெற்றுக் கொள்வாயாக. நல்லொழுக்கத்தில் நின்று முறை பிறழாமல் சம்பாதிக்கும் திரவியம் சொற்பமாயினும் அதனால் மிகவும் மனச் சந்துஷ்டி யடைவாயாக. அன்றியும், பெண்களுடைய வடிவையும் அழகையும் கண்டு காமப் பேய்பிடித்து நிறையழிந்து மனமயங்குதலொழிவாயாக. அவற்றைக் காணுந்தோறும் அவை அருவெறுப்பான மாம்ச விகாரமென்று அறிவால் நிச்சயித்து அவற்றின்மேல் ஆசை வையாமல் அவ்வாசையை நீக்குவாயாக என்றபடி.

(இன்னும் வரும்.)

## "A FAITH OF REASON WHICH POSTULATES A GOD TO REALISE IT."

## புத்திக் கெட்டாதது பக்திக் கெட்டும்.

(உண்மை விளக்க ஒரு திவ்ய புருஷர் சொல்லிய கதை.)

(ஐப்பசிமீ சஞ்சிகை 218-ம் பக்கத் தொடர்ச்சி.)

தன் யுக்தி புத்தியால் செய்வதொன்றும் பலிக்காததுகண்டு தெய்வம் விட்டவழி விட்டும், எதுவந்தாலும் அநுபவிக்க வேண்டியது என் தலைவிதியென்று மனம் வெறுத்து வைராக்கிய சித்தராய் நின்றார். அப்பொழுது அகஸ்மாத்தாய் அவரிடம் ஒரு தெய்வபக்தர் வந்து, 'எங்கே போனாலும் எது வந்தாலும் சரி' யென்று சொல்லக்கேட்டேன்: அப்படியானால் இவ்விடத்திற்கு மூன்று மயில் தூரத்தில் சாமளாதேவி கோயிலொன்றிருக்கிறது. அங்கே நித்யானந்த தேசிகர் என்று ஒரு பரதேசி யிருக்கிறாரெனக் கேள்வி. அவரைப் போய்ப் பார்க்கலாம் வாருங்கள். அவருடைய வாக்கு துன்புற்ற தூயஹிருதயர் மனதுக்கு உடனே ஆறுதலைக் கொடுக்கும் சக்திவாய்ந்ததாயிருக்கிறதாம். அவரை அவசியம்போய்ப் பார்க்கவேண்டு" மென்று அவரைக் கையைப் பிடித்தழைத்துக் கொண்டுபோனார். செல்வகேசவராயர் சத்தியத்திற் கட்டுப்பட்ட ஸர்ப்பம்போல் அவர் வசப்பட்டவராய் அவரோடு சென்று சந்தியாதேவி ஆனந்த நர்த்தனம் செய்யும் அதியற்புதமான மாலை வேளையில் நித்யானந்த தேசிகர் இருந்த ஆசிரமம் வந்து சேர்ந்தார். அவர் இவர்களைப் பார்த்ததும் கலகலவென்று சிரித்து "வாடியம்மா, வா, வா, வா" என்று எல்லாருக்கும் முகமன்கூறி யழைத்து "என்னசேதி? ஏன் முகம் வாடியிறங்கியிருக்கிறது? மனசில் என்ன விசாரம் அப்பா? வீணாக ஏன் வருத்தப்படவேண்டும். ஒன்றுமில்லை; பார்க்கப்போனால் நாம் படும் துக்கத்துக்கு ஒரு காரணமுமில்லை. இல்லாததை இழுத்து வைத்துக்கொண்டு துக்கங்கொண்டாடி யழுகிறது நமது அறியாமையேயன்றி, வேறுயாரிடத்திலும் குற்றம் சொல்வதற்கில்லை. சங்கடப்படாதேயம்மா. தைரியமாயிரு. ஆனந்தமாயிருக்கலாம். அசைவற்றிருக்கலாம். ஒருகுறையுமில்லை. ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். எது சத்தியமோ, எது உண்மையோ, எது அசைவற்றதோ, அதுவே நாமாயிருக்க நமக்கென்னகுறை? ஆனந்தமாயிருக்கலாம்! அசைவற்று அகண்டாகாரமாய், எங்கும் நிறைந்ததாய், தானே தானாய்த், தன்மயமாய், சோதியாய்ச், சுடராய், சொல்லிறந்த மதியாய், சுககனமாய், ஆதியந்தமற்றதாய், ஏற்றத்தாழ்ச்சியற்றதாய், ஏழைக்கெளியதாய், எல்லாத் துன்பங்களுக்குமோர் நல் மருந்தாய், மும்மலமற்றதாய், முமுக்ஷுக்களுக்கு லெக்ஷியமாய், என்றென்றைக்கு மழியாததாயுள்ள நித்தியமுத்த சுத்தப்பொருள் எதுவோ அதுவேயாகவிருந்து ஆனந்திக்கலாம். ஒன்றுக்கும் பயப்படாதேயம்மா! ஒன்றுக்கும் சலிக்காதே! துக்கமேயில்லை! துன்பமேயில்லை! இவைகளெல்லாம் நாமாக உண்டுபண்ணிக்கொண்டவை; நாம் மனது வைத்துத் தள்ளினால் நீங்கத்தக்கவை. ஆகையால் எதற்கும் பயப்படாதே. சஞ்சலப்படாதே. வீணாக மனதைப் புண்படுத்திக் கொள்ளாதே. சந்தோஷமாயிரு! உனக்கொன்றுமில்லை: எல்லாம் ஈசுவரிசெயல் என்றிரு. உன் கவலைகளையெல்லாம் என்னிடத்தில் கொடுத்துவிடு. உன் துக்கங்களையெல்லாம் என்னிடம் ஒப்புவித்துவிடு. உனக்கு சமுசாரமேயில்லை. நித்யஸ்வரூபி. ஆனந்தஸ்வரூபிநீ" யென்று இப்படி சரமாரியாய் ஆற்றுதலும் தேற்றுதலும் ஆனந்தம் கூறுதலும் அபயமளிப்பதுமாகப் பேசினார். இராயர் தன்னை யறியாதவராய் அவருடைய வார்த்தைகளி லீடுபட்டு, தானறியாமலே தன் ஹிருதயத்தை அவருக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார். அவர் பேசும்பொழுதெல்லாம் அவர் வார்த்தையிலீடுபட்டு தன்னுள் நடப்பது தானறியாமலே ஸ்தம்பித்து நின்றவர், அவர் பேசி ஓயவும் தன்னை முற்றும் மறந்து சிறிதுநேரம் வாய் பேசாதிருந்து, தன்னறிவு வரவும் தன் மனதிலிருந்த பளுவெல்லாம் நீங்கி தேகம் பஞ்சுபோலிருக்கக் கண்டார். சாக்ஷாத் திரிபுரசுந்தரியே நேரில் வந்து பேசினால் அவருக்கு எவ்வளவு ஆறுதலிருக்குமோ அவ்வளவு ஆறுதலும் தேறுதலுமுண்டாயிற்று. "ஸ்வாமி! எல்லாம் தங்களிடம் ஒப்புவித்துவிட்டேன். நான் ஒன்றும் அறியாக் குழந்தை! என்னை யீடேற்றுவது தங்கள் கடன். என்னை ஒப்புக்கொள்ளுங்கள்" என்று சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து விடைபெற்று, தன்னுள் உண்டான மாறுதலைப்பற்றி அதிசயப்பட்டுக் கொண்டே வீடுபோய்ச் சேர்ந்தார். இரவு அம்பிகையை நினைத்துக்கொண்டு நித்திரைபோக, அம்மன் திவ்யமங்கள ரூபத்தோடு வந்து "குழந்தாய் ஏன் வருந்துகிறாய்! நானிருக்கிறேன். நீயொன்றுக்கும் பயப்படத் தேவையில்லை" யென்று சொல்லி மறைந்துவிட்டாள். மறையவும், அவர் பிரிவை யாற்றமாட்டாதவராய் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு தான் கனவில் கண்ட தன் இஷ்டதேவதை மறைந்ததற்காகத் தானழுதுகொண்டிருக்கக் கண்டார். "இதென்ன அழுகை! இவ்வளவு அன்பு ஆதரவு காட்டியும், ஒன்றுக்கும் பயப்படாதே யென்று கனவிலும் நனவிலும் அபயஸ்தம் கொடுத்துத் தேற்றியும் அழுகிறோமே! நாம் அம்பிகையிடத்தில் பூர்ண அன்பு வைத்திருந்தால் நம்மை அவள் கைவிடாள். இந்த நித்யானந்த தேசிகர் நமக்கு ஈசுவரியை நேரில்காட்ட வந்தவர் போலுமே தோற்றுகிறார். அவரைக் கைவிடக்கூடாது. ஐயோ! நாம் அம்பிகையை அன்னையாகப் பாவித்துத் தியானித்து பக்திசெய்து வந்தோமே; அந்த அம்பிகை தாயாகவே வந்தல்லவோ என்னையாள வேண்டும்! 'எண்ணினார்க் கெண்ணினபடியிருந்தருள்புரியு' மீசுவரி எனக்குமட்டும் என் எண்ணத்துக்கு மாறாகவந்தென்னையாள நினைத்தனளோ! எப்படியிருந்தாலும் நித்யானந்தர் ஒரு பெரிய மஹாத்மாவே. அவர் சந்நிதானத்திலிருந்து அவர் வாய்ப்பிறப்பைக் கேட்ட மாத்திரத்திலே அடக்கமுடியாத துக்கங்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி மனதிலுள்ள பளுவெல்லாம் நீங்கினதன்றி தேகமும் பஞ்சுபோல் இலேசாயிற்றே. அது அவருடைய மகத்துவமல்லவா! அவரை நாளைக்குப் போய்ப் பார்ப்பேன்!" என்று தீர்மானித்தார். அப்படியே மறுநாள் மாலையில் அவரைப் போய்ப் பணிந்தெழுந்து உற்றுநோக்கும்பொழுது நேற்று பேரைக்கொண்டும் அந்திப்பொழுதில் அவர் வார்த்தையிலீடுபட்டிருந்ததினாலும் ஆண்ரூப மென்று நினைத்திருந்தவர் காஷாயம் தரித்த பெண்ணுருவாக மாறியிருக்கக் கண்டார். இதுவும் ஒரு லீலையே. நேற்று நாமிவரை உற்றுநோக்காததானே ஆண்ரூபமாக பாவித்துச் சென்றோமே. இராத்திரி நாம் சொப்பனம் கண்டதும், விழித்து நினைத்ததும், இப்பொழுது கண்டதும் எல்லாம் நன்றாகப் பொருந்திவிட்டதே! இனி இந்த உருவம் ஈசுவரியின் கடாக்ஷத்தால் நம்மையாள வந்த அவதாரஸ்வரூபமேயன்றி வேறல்லவென்று தன்னுள் தீர்மானித்து பின்னும் பார்க்கலாமென்று வாளாவிருந்தனர். அந்த சமயத்தில், "என் குழந்தை, என்னப்பன், என்கண், வந்தையா அம்மா, இராத்திரி சுகமாய் நித்ரை செய்தாயா; ஈசுவரி கிருபை கிடைத்ததா? ஈசுவரியிடத்தில் மாறாத பக்தியுண்டாயிற்றா?' வென்று சரமாரியாகக் கேள்விகளும், உத்தரம் சொல்லுமுன் சந்தோஷமும், செல்வப்பேரிட்டுக் கொண்டாடுதலுமாக, கன்றைக்கண்ட சேதாப்போல் நித்யானந்தர் ஆனந்தம்பொங்கி "குழந்தை, குழந்தை" யென்று அவரைச் செல்வமாய்க் கொண்டாட மகாராஜராஜஸ்ரீ செல்வகேசவராயரவர்கள் தனக்குண்டான 36-வயதையும் பேர்கீர்த்தி அந்தஸ்து கௌரவம் தனம் கனம் எல்லாவற்றையும் மறந்து ஒன்றும் பேசமாட்டாமல் கரகரவென்று கண்ணில் நீர்மல்க, உள்ளம்பொங்க, உடல் நெக்குவிட்டுருக, தன்னெண்ணமே தனக்குத் தெரியாதபடி அன்பு நிறைந்து ஆனந்த பாஷ்பம் வடித்தார்.

உடனே "அழுகாதேயடி யம்மா, உனக்கென்னகுறை! ஒரு பயமுமில்லை! ஆனந்தமாயிருக்கலாம்!" என்று சொல்லிக்கொண்டே அவருடைய கண்களிலிருந்தும் தாரை தாரையாய் ஓடின நீர்ப்பெருக்கை அடைப்பார் போலும் நித்யானந்த தேசிகர் அவருடைய விரல் நுனிகளால் அவர் கண்களைத் துடைக்கிற பாவனையாகத்தொட, தானாய் வடிந்த நீர் "லாக்குமதகில்" கதவடைத்த வெள்ளம் போல் தடைப்பட்டு நின்றுவிட்டது. தன்னையன்றி கண்ணில் வந்த தண்ணீர், தன் முயற்சியின்றியே நின்றுபோக, நின்ற நீரை வரவழைக்கப் பார்த்தும் வராமையால் இதுவுமொன் மாயமென்று அவர் பாதத்தில் விழுந்து அவருடைய பாதபத்மம் தன் நெற்றியில்பட நமஸ்கரித்து அவருடைய திருவடியைக் கண்ணி லொத்திக்கொண் டெழுந்துட்கார்ந்தார். நித்யானந்தர் நமஸ்கரித்தெழுந்தவரைப் பார்த்துப் புன்னகைவிளங்க கமலம்போன்ற தமது திருக்கையால் அவரது முகத்தைத் தடவிக்கொடுத்து மௌனமாயிருந்தார். சற்று நேரம் கழித்து இராயர் நிகழ்ந்ததை யெல்லாம் வியந்து சொல்ல, எல்லாமறிந்தவர்போல் நித்யானந்தர் புன்சிரிப்புத்தவழ முகமலர்ச்சியோடு கேட்டுக்கொண்டிருந்தார். கடைசியில் "பக்தியைமட்டும் நீகவிடாதே யப்பா, மற்றதெல்லாம் உனக்குத் தானாகவரும். பக்தியினாலாவது புத்தியினாலாகாது" என்று செப்பி "என் செல்வக்குழந்தை நீ" "உன்னைப்பெற்ற பாக்கியமே பெரும்பாக்கியம்" என்றார். செல்வகேசவராயர் அன்பு நிறைந்து பதில் சொல்லமாட்டாமல் மறுபடியும் கண்ணீர் வடித்தார். இம்முறை நித்யானந்தர் கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்தன. இது முதல் இருவரும் தாய் பிள்ளைகளாகி விட்டார்கள். தாயைவிட்டுப் பிள்ளை ஒருதினமும் பிரியப் பொறுக்கார். நித்யானந்தரும் ஆசாபாசங்களெல்லாமற்ற துறவியானாலும் அவர் "செல்வக்குழந்தை"யை விட்டுப் பிரிய மனம் சகியார். இப்படித் தாய் பிள்ளை பாவமாகவேயிருந்து வேடிக்கை விளையாட்டிலே அவருக்கு ஆத்ம வித்தை யவ்வளவும் உள்ளத்திற் பட்டுறைக்கப் போதித்து ஸ்வானுபவோதயம் எப்போ எப்போ என்று இருவரும் காத்துக் கொண்டிருந்தார்கள்.

## LESSONS IN NATURE STUDY:
### ON ELEPHANT AND ITS CHARACTERISTICS.
## பிரகிருதி வித்தியாம்சம்:
### யானையும் அதன் குணாதிசயங்களும்.

(ஐப்பசி௴ சஞ்சிகையின் 220-ம் பக்கத் தொடர்ச்சி.)

யானையைக் கோபமூட்டிவிட்டால் அப்புறம் அவன் பிழைப்பது மிகவும் கஷ்டம். இலங்கைத்தீவில் ஒரு ஊரில் யானைகள் தண்ணீருக்குப் போகும்வழியில் ஒருவன் குடிசை கட்டிக் குடியிருந்துவந்தான். அவன் ஒரு யானைக்கு தினப்பிரதி அத்தித்தழை கொடுத்து வருவது வழக்கம். ஒருநாள் அவனுக்கு அதை ஏமாற்றவேண்டுமென்ற எண்ணம் பிறந்தது. ஒரு கல்லை அத்தியிலையில் மறைத்துவைத்துக் கொண்டு பாகனிடத்தில் இதோ இதற்கொரு கல்லைச் சாப்பிடக்கொடுக்கிறேன். அதற்கொத்துவருகிறதா பார்ப்போம் என்று சொன்னான். அதற்குப் பாகன் நீ வீணாய் மோசம் போகாதே அது கல்லைச் சாப்பிடாது என்று எச்சரித்தான். அவன் கேளாமல் யானைக்கு அதைக் கொடுத்தான். அது வாங்கி கீழே எறிந்துவிட்டுத் தண்ணீர்கரைக்குப்போயிற்று. திரும்பிவருகையில் அவன் வீதியிலுட்கார்ந்திருக்கக்கண்டு தும்பிக்கையாற்பற்றிக் கீழே போட்டு மிதித்துக்கொன்றது. காப்டன் ஷிப். (Captain Ship) என்ற ஒருவர் ஒரு யானைக்கு மிளகைக்கொடுத்து அதற்குக் கோபம் மூட்டியதாக ஒரு கதையுண்டு.

ஞாபகசக்திக்கு அடுத்து யானையின் குணம் என்னவென்றால் பிடிவாதமாய் பழிசாதிக்கிற சுபாவமே. (Vindictiveness) ஒரு காரியம் செய்யவேண்டுமென்று எண்ணினால்அதையார் தடுத்தாலும் நில்லாது செய்தேதீரும். பாரிஸ் நகரத்தில் ஒரு விநோத சபையுண்டு. அதில் ஒரு பெண் யானையிருந்தது. அதன் காவலாளி வருபவர்களையெல்லாம் அதற்குத் தீனி ஒன்றும் கொடுக்கவேண்டாமென்று வேண்டிக் கொள்வது வழக்கம். ஒருநாள் அநேக ஜனங்



கள் அதைப்பார்க்க வந்திருந்தபோது, ஒருவன் அதற்கு தீனிகொடுக்கக் கையெடுத்தான். காவலாளி வேண்டாமென்று சொல்ல வாயைத் திறக்குமுன் யானை தும்பிக்கை நிறைய ஜலத்தை முகந்து அவன் முகத்திலிரைத்தது. எல்லாரும் கொல் என்று சிரித்தார்கள். காவற்காரன் முகத்தைத் துடைத்துக்கொண்டு பக்கத்தில் நின்றிருந்தான். மறுபடியும் ஜனங்கள் அதற்குத் தீனிகொடுக்க ஆரம்பிக்கவே இவன் வாயைத்திறந்து வேண்டாமென்று சொல்ல நேர்ந்தது. உடனே யானை அவன் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கி காலில்மிதித்து நன்றாய் முறுக்கி யெறிந்துவிட்டது.

இலங்கைத்தீவில் காலி என்ற இடத்தில் ஒரு இராணுவம் வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் உபயோகத்திற்கு தானியம் ஒரு அறையில் நிரப்பிவைத்திருந்தார்கள். ஒருநாள் அவர்களெல்லாம் பக்கத்தில் நடந்த ஒரு அமளியை யடக்கப்போயிருந்தார்கள். இதையெல்லாம் முன்னால் ஒருயானை வேவுபார்த்து வந்து தன்னினத்தோடு மறுபடியும் அங்கே போயிற்றாம். தானியக் களஞ்சியமோ செங்கல் சுண்ணாம்பினால் கனமாகக் கட்டப்பட்டிருந்தது. அதற்கு வழியே கிடையாது. ஒரு ஏணிவைத்து ஏறி கூரையின் வழியாய்த்தான் உள்ளே இறங்கவேண்டும். களஞ்சியத்தைக் காக்க இரண்டு வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் பயந்துகொண்டு ஒரு மரத்தின்மேல் ஏறிக் கொண்டார்கள். சுவரை தங்களால் ஆனமட்டும் மோதிப்பார்த்தன; முடியவில்லை. கடைசியாக இரண்டு சுவர்கள் சேரும் மூலைக்குப் போய்த் தங்கள் கொம்பினால் குத்தியிடிக்கத் தலைப்பட்டன. முதலில் ஒன்று தகர்த்தது முடியவில்லை. மற்றொன்று அதைத் தொடர்ந்தது. இப்படியாகத் தகர்த்து கடைசியாய் சுவரை இடித்துப் பரப்பி உள்ளே புகுந்து தானியத்தைக் கொள்ளையாடி தங்கள் வயிற்றை நிரப்பின. இவ்வளவுக்கும் ஒரு யானை வெளியில் நின்று சேனாவீரர்கள் வருகிறார்களோவென்பதைப் பார்த்துக்கொண்டிருந்தது. அவர்கள் வருவதைக்காணவே ஒரு விதமான தொனிசெய்தது. உடனே எல்லாமாக வெளிப்புறப்பட்டு ஓடிவிட்டன.

இராமாயணத்தில் மலையை வருணிக்கும்போது அங்குள்ள யானைகளையும்பற்றிச் சொல்ல கம்பர் ஆரம்பிக்கையில் யானையின் கோபம்தான் முன்னிட்டு நிற்கிறது. ஒரு ஆண் யானை மோப்பம்பிடித்து ஓடுகையில் அந்த வாசனை தான் நினைத்தபடி யானையின் நாற்றமல்லாமல் ஏழிலைம்பாலை என்னும் செடியின் நாற்றமாயிருக்கக்கண்டு அதைக் காலில் மிதித்துத் தேய்த்ததாம். ஒன்றுமில்லாத செடியின்மேலேயே இவ்வளவு கோபம் செலுத்துமானால் அதன் குணத்திற்குக் கேட்பானேன்.

"பாத்தயானையிற் பதங்களிற் படுமதநாறக்
காத்தவங்குச மிமிர்ந்திடக் கால்பிடித்தோடிப்
பூத்தவேழிலைம்பாலையைப் பொடிப்பொடியாகக்
காத்திரங் களாற்றலத்தொடுந் தேய்த்ததோர்களிறு"

இதற்கு அடுத்த குணம் பச்சாதாபம். இந்துதேசத்தின் ஒரு பிரதேசத்தில் காய்ச்சல் கருப்பு அதிகமாய் ஜனங்கள் நூற்றுக் கணக்காய் மடிந்துகொண்டிருந்தார்கள். ஒரு நாள் அந்நாட்டரசன் வெளியிற் புறப்படும்போது வழியில் அநேக நோயாளிகள் எழுந்திருக்கச் சக்தியற்றுக் கிடந்தார்களாம். அவனுடைய பரிவாரத்தில் ஒருவரும் அவர்களை விலக்க யத்தனிக்கவில்லை. யானை வழியிலிருந்தவர்களை ஒவ்வொருவராய் தும்பிக்கையால் விலக்கிவைத்துவிட்டு வழிநடந்ததாம்.

எல்லாவற்றிலும் மேலிட்டிருப்பது பாகனிடத்தில் விசுவாசமும் கீழ்ப்படிவும்தான். கயா க்ஷேத்திரத்தில் ஒரு யானைப்பாகன் தன் வீட்டிலிருந்து ஊருக்குள் தன் யானையைக்

கூட்டிப்போகும் வழியில் ஒரு சிறிய பாலமிருந்தது. ஒருநாள் அது அதன்மேல் போகமாட்டேன் என்றது. பாகனுக்கு அது இன்னதென்று தெரியாமல் கோடரியால் குத்தினான். யானை முதலிலேயே தன் தும்பிக்கையால் அமிழ்த்திப் பார்த்து பாலம் பலக்குறைவென்று அறிந்திருந்தது. நிர்ப்பந்தமாய்ப் போகவே நடுப்பாலத்தில் பாலம் முறிந்தது. பாகன் இறந்தான். யானைக்குப் பலமான காயம் பட்டது. சென்ற ஆவணிமீ' த்து சஞ்சிகையில் சிவராசிகளின் புத்திவலிமை என்ற தலைப்பின்கீழ் யானையைப்பற்றிச் சொல்லும்போது பொன்னாசையால் விற்கப்பட்ட யானையின் கதையொன்று சொன்னோமே. அது எவ்வளவு உருக்கமானது பாருங்கள். பாகர்களுக்குக் கீழ்ப்படியும் விஷயத்தில் தங்கள் உணவைக்கூட விட்டுவிடுவது யானைகளுக்குப் பெரிய காரியமல்ல. கீழ்ப்படிதலே அவைகளுக்கு சகஜம். இந்தியாவில் ஒரு தளத்துக்குச்சேர்ந்த வீரர்களுக்கும் யானைகளுக்கும் உணவில்லாமற் போயிற்று. ஆயினும் சில யானைகளுக்குமாத்திரம் மசோலா என்ற விசேஷமான உருண்டைகள் கொடுத்துவந்தார்கள். அப்படியும் யானைகள் இளைத்துப்போயின. காரணம் மட்டும் தெரியவில்லை. அந்த உருண்டைகள் மிகவும் விலைபெற்றவையாகையால் இவர்களே சாப்பிட்டுவிட்டு யானைகளுக்குக் கொடாமலிருந்திருக்கக்கூடும் என்று கடைசியாக தளகர்த்தர்களுக்கு பாகர்கள்மேல் சந்தேகம் பிறந்தது. அப்படியே ருசுவாயிற்று. அதன்மேல் ஆகாரம் கொடுக்கும்போது தனிக்கை செய்வதற்காக அதிகாரிகள் ஏற்படுத்தினார்கள். உடனே கொஞ்ச நாளுக்கெல்லாம் யானைகள் உடம்புதேறின. ஆனால் இன்னும் கொஞ்ச நாளுக்கெல்லாம் வரவர இளைத்துப்போயின. தனிக்கைசெய்ய ஏற்பட்ட அதிகாரிகளுக்குக் காரணம் தெரியவில்லை. அவைகளுக்கு ஆகாரம் கொடுப்பதை தாங்கள் கண்ணாரக்கண்டிருக்கிறார்கள். உருண்டைகளில் கலந்திருக்கும் சாமான்களும் குணமும், அளவிற்குறையவில்லை. ஆனால் கடைசியாக ஒன்று வெளியாயிற்று. அதிகாரிகளுக்கெதிரில் யானைகள் உருண்டைகளை வாயிற்போட்டுக்கொண்டு அப்படியே வைத்திருக்கும். அவர்கள் போனபிறகு பாகர்களின் கட்டளைப்படி வாயிலிருந்து எடுத்து அவர்களுக்குக் கொடுத்துவிடும். அதையவர்கள் சாப்பிடுவார்கள்.

இவைகளின் விருத்தாந்தம் இப்படியிருக்க சாண்டர்சன் துரையவர்கள் யானைக்கு புத்திக்குறைவு என்று ஸ்தாபிக்கிறார். டில்லிப் பட்டணத்தில் யானையை ஊசியாற் குத்தினதற்காக தையற்காரனைச் சேற்றுநீரால் அபிஷேகம் செய்ததாக ஒரு கதையிருக்கிறதல்லவா. அதில் யானைக்குத்தான் சேற்றில் பிரியமாச்சுதே, அப்படியிருக்க மனிதனுக்கு அதில் பிரியமில்லை என்ற எண்ணம் எப்படி யுண்டாயிற்று? என்று ஆக்ஷேபிப்பதுடன் இவையெல்லாம் அசம்பாவிதம் என்று வாதாடுகிறார். அவர் வாது எவ்வளவுதூரம் நிலைநிற்கும் என்பது சந்தேகிக்கத் தக்கதாகவே யிருக்கிறது.

---

### பஞ்சாபில் கட்டாய ஆரம்பப் படிப்பு.

ஆரம்பப்படிப்பை கட்டாயமாகச் செய்துவிட ஸ்தல சுய ஆட்சி சபைகள் விரும்பின், அவ்வாறே அவைகளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று சிறிது காலத்திற்குமுன் ஒரு தீர்மானம் ஆலோசனைக்கு வர. அதை அம்மகாண அதிகாரிகள் அங்கீகரித்தனர். அவ்விதமே அப்படிப்பைக் கட்டாயமாகச் செய்துவிட அம்மாகாண அதிகாரிகள் ஒரு மசோதா தயாரித் திருக்கின்றனர். மாகாண கவர்ன்மெண்டால் அம்மாதிரியான மசோதா தயாராக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். முன்னம் ஸ்ரீமான் கோகலேயால் தயாரிக்கப் பட்ட ஆரம்பப் படிப்பு மசோதாவில் உள்ள வாதிகளையே அநேகமாக அனுசரித்து, அம்மசோதாவைத் தாங்கள் தயாரிப்பதாக அம்மாகாண அதிகாரிகள் சொல்லியிருக்கின்றனர். அம்மசோதாவின் கருத்துக்களிலே முக்கியமான அம்சத்தைமட்டும் இங்கே குறிப்பிடுவோம்.



## POEM: SRI RAMAVATARAM:
## (FROM "THE WORD OF THE LORD.")

### பாட்டு: ஸ்ரீ ராமாவதாரம்.

விச்வபதி யாக விளங்கும் தசரதர்க்கு
உச்சமுறும் மைந்தராய் உலகில் அவதரித்து,
த்ரைலோக்ய அதிபதியாய்த் தாசரதி யாயுதித்துத்,
தவமுனிவர் பின்சென்று தாடகையைச் சங்கரித்து,
அகலிகைசா பம் தீர்த்து, அரனுடைய வில்முறித்து,
ஜானகிக்கு மாலையிட்டு, ஜமதக் கினிகுமரன்
பரசுரா மன்தன் பராக்கிரமம் தானடக்கி,
அன்புடனே தந்தை அபிஷேகம் சூட்டுதற்கு
ஆயத்தம் செய்திருக்கும் அப்போது துர்ப்புத்தித்
தாய்சொல்லைக் கேட்டு வனவாசம் போம்போது,
பரதர்வந்து பின்தொடரப் பாதுகை யும்கொடுத்து,
மகரிஷிகள் ஆசிரமங்கள் மாண்பாய்க் கடந்துபோய்ப்,
பஞ்சவடி ஆச்சிரமம் வந்து பரிவுடனே,
சூர்ப்பனகை மூக்கரிந்து (கர) தூஷணரை யும்வதைத்து,
மாயமான் பின்சென்று மைதிலியைத் தானிழந்து,
கண்டு ஜடாயுவுக்குக் கைவல்ய முங்கொடுத்து,
கவந்தவதம் பண்ணிக் கானகமெல் லாம்திரிந்து,
சவரிகண்டு பூசைபண்ணச் சந்தோஷ மாய்ப்புசித்து,
அஞ்சனாதேவி மைந்தர் அப்போ தடிபணியக்
கவியரச ரோடு கலந்துசக்கி யம்பண்ணி,
வாலிவதம் பண்ணி, வந்து கடலடைத்துக்,
கும்பகர்ணன் இந்த்ரசித்தைக் கூடமடி யக்கொன்று,
சேனைசமு கத்தோடு தெசமுகனைச் சம்ஹாரித்துப்,
பரிவால் விபீஷணர்க்குப் பட்டமது கட்டிவைத்து,
ஜனகர்மகள் மைதிலியும் செந்தழலிற் பாயஅன்று
சீதையரை அக்கினியும் ஸ்ரீராமர் முன்பில்வைக்கக்
கொம்பனையாள் ஜானகியைக் கொண்டுசென்று புஷ்பகத்தில்,
லிங்கப் பிரதிஷ்டைபண்ணி நிர்மலமாய்ச் சேதுவிலே,
பரத்துவாசர் ஆச்சிரமம் வந்து பரிவுடனே,
தம்பிபர தர்வந்து த ளணைந்து கீழ்ப்படிய
அன்புடனே தம்பியரை அடிமடியிற் கொண்டுசென்றார்.
வசிஷ்டர் சுமந்திரரை மாதாக்க ளைப்பணிந்தார்.
திரும்பி அயோத்திவந்து செம்பொன்முடி சூடிநின்றார்.
(அந்தப்) பட்டாபி ராமர் மகிமைகண்டான் பார்த்தனும்,

## SANITATION COLUMN: ON PERSONAL HYGIENE.

### சுகாதார விஷயம்: தேகாரோக்கியம்.

(ஆறுமுக நாவலர்.)

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்த நான்கையும் அடைதற்குக் கருவி சரீரம்: ஆதலினால், மரணபரியந்தம் தங்கள் சரீரத்தை வியாதி அடையாவண்ணம் பாதுகாப்பது யாவருக்கும் ஆவசியகம்: ஆகையால் சரீரத்தை ஆரோக்கியமுடையதாகப் பாதுகாக்கு முறைமைகளைச் சொல்லுவோம்.

நாடோறும் சூரியோதயத்துக்கு முன்னே விழித்தெழுந்தால், புத்தி தெளிவடையும்; நரம்புத்துவாரத்து நீர் சுத்தியுறும்; பித்தம் நீங்கும்; வாதபித்தங்கள் தத்தநிலையைப் பொருந்தும்.

காலந்தோறும் ஒழுங்காகப் போசனஞ் செய்துகொண்டு வருதல் போலவே, அதினின்று பிரியும் மலசலாதிகளை ஒழுங்காக மோசனஞ் செய்துகொண்டு வருதலும் ஆரோக்கியத்துக்கு ஏதுவாகும். நாடோறும் காலை மாலை என்னும் இரண்டு நேரத்திலும் தவறாமல் மலமோசனஞ் செய்யும்படி பழகிக் கொள்ளல் வேண்டும். இடையிலே மலசல மோசனஞ் செய்யவரினும், தடைப்படாது செய்தல்வேண்டும்.

இயல்பாகிய துவர் உள்ள தாள் இலை கொம்பு என்பவைகளினாலே பல்லின் உள்ளையும் புறத்தையும் செவ்வையாக விளக்கல் வேண்டும். பற்கள் அசைவில்லாமல் உறுதியாய்இருக்கும். செங்கல், மணல், கரி, பாளை, வைக்கோல் என்பவைகளினாலே பல் விளக்கலாகாது.

சரீரத்தில் உள்ள மயிர்க்கால்கள் வழியாக வேர்வையாய்க் கழியும் அழுக்குகளெல்லாம் இரத்தத்தினின்று தடையின்றிப் பறியும் பொருட்டு, நாடோறும் ஒழுங்காகச் சரீரத்தைத் தேய்த்து ஸ்நானம் பண்ணிக்கொண்டு வரல்வேண்டும்.

ஸ்நானத்துக்குப் பிராதக்காலமே உத்தம காலம். பிராதஸ்நானஞ் செய்தால், பசி உண்டாகும்; நோய் அணுகாது. வெந்நீரிலே செய்யும் ஸ்நானத்தைப் பார்க்கினும், தண்ணீரிலே செய்யும் ஸ்நானமே உடம்புக்கு அதிக உறுதியைத்தரும்.

சூரிய சந்திர கிரணம் படாத நீரும், காற்றுப்படாத நீரும், பாசிநீரும் அதிகசேறுள்ள நீரும், இலை உதிர்ந்த நீரும், புழு உள்ள நீரும், துர்க்கந்தமுள்ள நீரும் வியாதிகளை விளைவிக்கும்: ஆதலினால், இவைகள் ஸ்நானம் சமையல் பானம் என்பவைகளுக்கு ஆகாவாம்.

ஸ்நானம் பண்ணி நெடுநேரம் ஈரத்தோடிருக்கலாகாது. உடம்பிலே ஈரஞ்சுவறினால், குளிர் உண்டாகும், அதினால் வியாதி உண்டாகும்: ஆதலினாலே, குளிரும், வியாதியும் உண்டாகாவண்ணம் சீக்கிரம் ஸ்நானம்பண்ணி, அது முடிந்தவுடனே உடம்பிலே சற்றும் ஈரமில்லாமல் துடைத்துவிட்டுத் தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துக்கொள்ளல் வேண்டும். உடுத்த வஸ்திரம் நனைந்தால், உடனே அதைக் களைந்துவிட்டு, வேறு உலர்ந்த வஸ்திரந்தரித்துக்கொள்ளல் வேண்டும்.

மனமுயற்சியாலேனும் சரீரமுயற்சியாலேனும் உடம்பு இளைத்திருக்கும் பொழுதும், போசனஞ்செய்த உடனும், ஸ்நானம் பண்ணலாகாது. பிள்ளைகள் காலையிலே ஸ்நானஞ் செய்யாது போசனஞ்செய்தால், ஐந்து நாழிகை நேரத்துக்குப் பின்பு ஸ்நானம் பண்ணல் வேண்டும்.

உடுக்கிற வஸ்திரங்களும் சயனிக்கிற படுக்கைகளும் சிறிது அழுக்கில்லாமற் சுத்தமாயிருத்தல் வேண்டும். சரீரத்தினின்றும் வெளிப்படும் அழுக்கானது வஸ்திரம், மெத்தை, தலையணை முதலியவைகளில் ஒட்டிக்கொள்ளும்; அவைகள் தோலோடு சம்பந்தப்பட்டால், அவைகளிலே படிந்திருக்கின்ற அழுக்கானது மயிர்க்கால்களை அடைத்து



வியாதியை விளைவிக்கும். படுக்கைகளை நாடோறும் காற்றிலே போடல் வேண்டும்.

காலந்தோறும் ஒழுங்காய் போசனஞ் செய்துவரல் வேண்டும். அகப்பட்ட பொழுதெல்லாம் போசனஞ் செய்யலாகாது. முன் புசித்த போசனம் முழுதும் சீரணமாகி மிகப் பசி தோன்றியபின்பு போசனஞ் செய்தல் வேண்டும். இப்படிச் செய்யாதொழிந்தால், புசித்தபோசனம் செவ்வையாகச் சீரணமாகாது; அதுமட்டோ, பக்குவாசயத்திலே சிறிது சீரணமாய் போசனம் பின்பு புசித்த போசனத்தோடு கலந்து, வியாதியை விளைவிக்கும்.

போசனம் பண்ணுமிடத்து, தன்சரீர சுபாவத்தோடு மாறுகொள்ளாதவைகளையும், காலவியல்போடு மாறு கொள்ளாதவைகளையும், சுவை வீரியங்களினாலே தம்முள்ளே மாறு கொள்ளாதவைகளையும் புசித்தல் வேண்டும். அப்படிப் புசிக்குமிடத்தும், அளவுக்கு அதிகமாகவேனும் அற்பமாகவேனும் புசிக்கலாகாது. போசனம் மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் செய்யும்.

போசனஞ் செய்யும்பொழுது சலபானம் பண்ணலாகாது. போசனம் முடிந்த பின்பே சலபானம் பண்ணல் வேண்டும். தாகமெடுத்தாலும், மீட்டும் மீட்டும் சலபானம் பண்ணலாகாது.

அதிக சுடுகையுள்ள அன்னமும், நன்றாகச் சமையாத அன்னமும், குழைந்த அன்னமும், ஊசிய அன்னமும், பழங்கறியும், கருணைக்கிழங்கல்லாத கிழங்குகளும் புசிக்கலாகாது.

நன்றாகச் சமைத்த துவரம்பருப்பைப் போசனத்தின் முதலிலே பசுநெய்யுடன் அன்னத்திற் கலந்து புசித்தால், ஒருபிடி அன்னத்திற்கு ஒருபிடி சதை வளரும். [என்று சொல்வார்கள்.] அன்னத்தில் இட்டுண்ணும் கறிகளோடு துவரம்பருப்பு ரசஞ்சேர்த்துக் கொள்வது உத்தமம்.

இரவிலே சேஷித்த அன்னத்தில் ஒரு சுக்குத்துண்டைப்போட்டு, ஆறிய வெந்நீரை விட்டு வைத்தல்வேண்டும். அந்தப் பழஞ்சோற்றைக் காலையிலே அந்த நீராகாரத்தோடு புசித்தல்வேண்டும். அப்படிப் புசித்தால், வாதபித்தம் போம்; தாகம் நீங்கும்; பசியுண்டாகும்.

இரண்டு காலபோசனமே உத்தமம்; மூன்றுகால போசனங் கொள்ளல் வேண்டுமானால், காலையிலே மூன்றே முக்கானாழிகையுள்ளும், உச்சிகாலத்திலே பதினைந்து நாழிகையுள்ளும், இராத்திரியிலே ஏழரை நாழிகையுள்ளும், போசனம் செய்தல் வேண்டும்.

சரீர முயற்சியேனும் மன முயற்சியேனும் செய்து இளைத்தவுடனே போசனம் பண்ணலாகாது. போசனஞ் செய்தவுடனே கடுமையாகிய மனமுயற்சியேனும் சரீர முயற்சியேனும் செய்யலாகாது. போசனஞ்செய்தவுடனே நூறடி யுலாவலாகிய குறுநடை கொள்ளல் வேண்டும்.

---

## INSTRUCTIONS IN ELEMENTARY SCHOOLS.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பின்கண்ட சில முறைகளைப்பற்றி குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கவேண்டும்:—

1. இயற்கைப் பாடங்கள் கிராமாந்தர விஷயங்களுக்குப் பொருந்தியவையாயிருக்கவேண்டும். 2. வாசித்தல், எழுத்து, படம் முதலியவையும் கிராம விஷயங்களுக் கேற்றதாயிருக்கவேண்டும் கிராமாந்தரப் பள்ளிகளைச் சுற்றி இயற்கைப் பொருள்கள் அகப்படும் படியான தோட்டங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் கிராமாந்தரப் பள்ளிக்கூடங்களுக்கு கிராமாந்தரத்தாரே உபாத்தியாயர்களாயிருக்கவேண்டும். கிராமாந்தர உபாத்தியாயர்களே உபாத்திமைப் பயிற்சி பெறக்கூடுமாறு பிரத்யேகமான சௌகரியங்கள் செய்து கொடுக்கவேண்டும்.

## "THEY ALL LIKE IT VERY MUCH."

The Superintendent of the Olcott Panchama Free Schools, Madras, after a two years' experience of the "Vivekachintamani," writes:—"They all like it very much and are looking forward to its coming every month."

## CHILDREN'S PAGE: THE SOLDIER'S REPRIEVE.

## சிறுவர்க்கான பக்கம்: ஒரு போர்வீரன் மரண தண்டனையினின்று மன்னிக்கப்பட்டது.

"ஆ! என்னருமைக் குழந்தையை இனி எப்போது காண்பேன்? இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வாறுயிரிழக்கவா அவனை நான் தேசத்துக்குத் தத்தம் பண்ணினேன்? காவல் காக்கையில் ஏதோ க்ஷணப்போது கண்ணயர்ந்து விட்டாலும் அதற்காக அவனுக்கு மரண தண்டனை விதித்து விட்டார்களாம்! இனி 24-மணிக்குள்ளே என் குழந்தை எங்கேயிருப்பானோ அறியேன்?" என்று ஒரு கிழவர் பிரலாபித்தனர். அருகிருந்த சிநேகிதரொருவர் அவரைத் தேற்றிக்கொண்டு "ஏன் விசனப் படுகிறீர் எல்லாம் கடவுள் செயல், 'அவனன்றி ஓரணுவும் அசையாது' அவர்திருவுளப் படியே வரும்" என்றனர்.

கிழவர் பின்னும் "ஐயோ என்னருமைக் கண்மணியே, என் தள்ளாதகாலத்துக்கு ஊன்றுகோல்போலுதவித் தடுமாற்றம் தீர்ப்பாயென்றிருந்தேனே, உனக்கிப்படிப்பட்ட கதியாவந்தது? நீ யொருநாளும் உன்கடமையைத்தவறி நடவாயே, உன்னறிவும், குணமும், ஆருக்குவரும்? 'தன் நாட்டுக்கு உழைக்காதவன் என்னமனிதன்? நாட்டின் நன்மைக்காகப் பிராணனையேனும் கொடுக்கத்துணியாதவன் மானமுள்ளவனா? நான் ஒருபோதும் பின்வாங்கமாட்டேன்,' என்று அடிக்கடிச் சொல்லுவான். அவன்தீரமென்ன காரியமென்ன" என்று பின்னும் பிரலாபித்தனர்.

சிநேகிதர் "ஏன் வீணா-விசனிக்கிறீர்? தைரியப்படுத்திக்கொள்ளும், உமக்கு அந்தப்பிள்ளை பிறக்கவேயில்லையென்று வைத்துக்கொள்ளும்" என்றனர்.

கிழவர். "அவன் ஒருநாளும் அஜாக்கிரதையினால் தனக்கிட்ட கடமையைச் செய்யாதிரானே. குழந்தைக்கு என்ன உடம்போ ஏதோ, சுபாவத்திலே உடம்பு மெலிந்து பலமில்லாதவன், இராணுவத்தில்சேர்ந்து வேலை செய்ய அவனுக்குத் திறமையா? பச்சைப் பாலகன், இன்னம் 18 வயது ஆகவில்லையே. என் வயிற்றுக்கொடுமையினாலேயன்றோ நான் பாவி அவனைப்போகவிடுத்தேன்? என்வாயில் மண்விழுந்துவிட்டது" என்று பின்னும் அழுது வருந்தினர்.

இப்படி இவர் வருந்துகையில் அருகே ஒரு பெண்பிள்ளை அவற்றைச் செவிகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தனள். அவள் மனம் துயரத்தால் வருந்தினும் அதை வெளியிற் காட்டிக்கொள்ளாமல் தன் காரியத்திலேயே கண்ணாயிருப்பவள்போல வீட்டுவேலைகளை வைக்க, எடுக்க, செய்துகொண்டிருந்தனள். அப்போது கதவை யாரோதட்டக் கிழவர் "அம்மா 'ப்ளாசம்' அங்கேயாவர் போய்ப் பார்," என்றார். அவள் சென்று ஒரு கடிதத்தை வாங்கிக்கொண்டுவந்து கிழவர் கையில் கொடுத்து "அப்பா, இது அண்ணா எழுதினது தான் என்றாள்."

கிழவருக்கு அதைத்திறந்து வாசிக்கக்கூட வசமில்லை, கை கிடுகிடு வென்று நடுங்கிற்று. அப்போது அந்நண்பர் அதை உடைத்துப் பின்வருமாறு படித்தனர்.

'பிரியமுள்ள பிதாவே—இக்கடிதம் உங்கள் கையில் சேருமுன்னமே நான் இவ்வுலகை விட்டு மறுவுலகுக்குப் போய்விடுவேன். முதலில் சாவு என்றால் மிகவும் பயங்கரமாகத்தானிருந்தது. பின்பு அதை நினைக்க நினைக்க அப்பயம் நீங்கிவிட்டது. என்னைக் கையைக் கட்டிக் கண்ணைக்கட்டி ஒன்றும் சிறுமைப்படுத்தித் தொந்தரவு செய்யார்களாம். என்னிஷ்டப்படியே நின்று என்



தண்டனையை அடையலாமாம். அது ஒரு நல்ல காரியந்தான். என் நாட்டுக்காகச் சண்டை முகத்தில் வெற்றியோடு சாகலாமென்றெண்ணியிருந்தேன். அந்தப் பாக்கியம் எனக்கில்லாமற் போயிற்று. ஏதோ கடமை பிற்றவறினன் என்னும் அபக்யாதியோடு ஈனமான தண்டனைப்படும்படி என் தலையிலெழுதியிருந்தது. இதை நினைக்க நினைக்க எனக்குப் பெருந்துயருண்டாகின்றன. என் வல்லுயிர் பக்கென்று மாளாமலிருப்பது எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது ஆனால் உமக்கு அவமானம் உண்டாகும்படியான காரியத்தை நான் ஒன்றும் செய்யவில்லை. நடந்த விவரங்களையெல்லாம் சொல்லுகிறேன் அப்போது உமக்குச் சம்மதமாகும்.

"நான் என் சிநேகிதனான ஜம்மிகாரின் தாயாருக்கு அவனைப்பற்றி விசாரப்படவேண்டாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேனென்று உறுதி சொன்னது உமக்குத் தெரியுமே, அவனுக்கு உடம்புக்குவந்தபோது என்னாலானதெல்லாம் செய்தேன். உடம்பு சொஸ்தமாகி மறுபடியும் இராணுவத்தைச் சேரும்படி உத்தரவானபோது பாவம் அவனுக்கு இன்னம் தேகத்தில் நல்ல பலனுண்டாகவில்லை. அன்றிராத்திரிக்கு முதல் நாள் நாங்கள் இன்னோரிடத்துக்குப் பாளையம் பெயரவேண்டியதாயிற்று, வழியில் அவன் மூட்டைமுடிச்சுக்களையெல்லாம் என்னதோடே நானே கட்டிச் சுமந்து சென்றேன். அஸ்தமனமாகவே இருட்டுக்கு முன்போய்ச் சேரும்படி நாங்கள் அதிக விசையாகவும் நடக்கவேண்டியதாயிற்று. மூட்டையும் வரவரத் தூக்கமுடியவில்லை. எல்லாரும் சிரம்பக்களைத்துப் போனோம். ஜம்மியை அடிக்கடி நான் கைகொடுத்துக் கூட்டிக்கொண்டு போகாவிடின் அவன் வழியிலேயே மறித்துப் போயிருப்பான்.

"நாங்கள் கடைசியில் பாளையம் வந்து சேர்ந்ததும் நான் முற்றிலும் களைத்துப்போய் விட்டேன். அன்று காவல்காக்கவேண்டியது ஜம்மியின் முறை. அவன் பாவம் நிரம்பக் களைத்துப்போயிருந்ததனால் அவனுக்குப் பதிலாக அவன்வேலையை நான் பார்ப்பதாக ஒப்புக்கொண்டேன். ஆனாலென் களை சொல்லி முடியாது. என்தலைக்கு நேரே துப்பாக்கியை நாட்டித் தூங்காதே, சுட்டுப் போடுவேனென்று பயமுறுத்தினாற்கூட என்னால் விழிக்கமுடியாது. அப்போது நான் அதை ஆலோசிக்கவில்லை; அப்புறம் தெரிந்தது, என்னசெய்வேன்."

இதைக்கேட்டதும் கிழவர் பத்தியோடும் "நல்லவேளை நான் நினைத்தபடியே யாயிற்று. என்குழந்தை அஜாக்கிரதையினாலே தூங்கியிருக்கமாட்டானென்பது எனக்கு நம்பிக்கைதான், மேலேவாசியும்" என்றனர்.

"தங்களுக்கு இந்தக்கடிதம் எழுதும்படிக் கொஞ்சம் சாவகாசம் கொடுத்திருப்பதாக எங்கள் சேனாதிபதி சொன்னார். அவரைப் பற்றித் தாங்கள் ஒன்றும் தீங்குநினைக்கப்படாது. அவர் அவரது கடமையையே நிறைவேற்றுகிறார். அவரால் முடியுமானால் அவரென்னைக் காப்பாற்றாமல் போகமாட்டார். ஜம்மியைப்பற்றியும் ஒன்றும் கெடுதி நினையாதீர்கள். பாவம் அவன்படும் விசனம் சொல்லி முடியாது. எனக்குப் பதில் தன்னைத் தண்டிக்கும்படி எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறான்.

"அம்மாளையும் ப்ளாசத்தையும் நினைக்கும்போது எனக்கு ஆறாத்துயரம் உண்டாகின்றது. நீங்கள் தானவர்களுக்குத் தைரியம் சொல்லித்தேற்றவேண்டும். நான் சஞ்சலமில்லாமல் தைரியமாய்ச் சீவனைவிடுகிறேனென்று சொல்லவும். யுத்தம் முடிந்தானால் என்னைப்பற்றி இப்போதுண்டான அவமானமெல்லாம் நீங்கிப்போம்.

“கடவுள் உதவியாயிருந்து என்னைக்காக்க வேண்டும். பொறுக்கிறது மிகவும் கஷ்டம் தான், என்னசெய்வது. விடைபெற்றுக் கொள்ளுகிறேன். இனிமேல் உங்களை நான் எப்போது பார்க்கப்போகிறேன். ஒருநாளுமில்லை நான் ஏதாவது குற்றம் குறைசெய்திருந்தபோதிலும் பொறுத்து மன்னிக்க வேண்டும்” என்று படித்தனர்.

அன்றிராத்திரி யாவரும் படுத்துமுடங்கின பின் கொல்லைக்கதவை திறந்துகொண்டு ஒரு பெண் வெளியேபுறப்பட்டு ஒற்றையடிப்பாதை வழியாக ராஜமார்க்கத்தை நோக்கிச்சென்றனள். அவள் செல்வதைப்பார்த்தால் நடப்பது போலத் தோன்றவில்லை. பறப்பது போலிருந்தது. அந்தப்பக்கம் இந்தப்பக்கம் திரும்பிப் பாராமல் அப்போதைக்கப்பொது கையைக் கட்டிக்கொண்டு சுவாமியை வேண்டிக்கொள்ளும்பாவனையாக ஆகாயத்தை மாத்திரம் அண்ணாந்து நோக்கிச் சென்றனள். அப்பெண் இரண்டு மணிக்கெல்லாம் ரயில் ஸ்டேஷனுக்கு வந்து இரீவண்டிவருவதை எதிர் நோக்கி நின்றனள். ரயில் நடத்துவோன் வண்டியைத் திறந்து அவளை உள்ளே தூக்கிவிடுகையில் தன் கை லாந்தல் வெளிச்சம் தாக்க அவளது கண்ணீர்வடிந்த முகத்தைப் பார்த்து யாதோ வென்று ஆச்சரியப்பட்டான். அவனிரண்டொரு கேள்வை கேட்டதற்கு அப்பெண் பளிச்சென்று மறுமொழி சொல்லச் சங்கதி எல்லாம் தெரிந்துகொண்டான். பின்பு தகப்பன்கூடப் பெற்ற பெண்ணிடத்தில் இருக்கமாட்டான் அவ்வளவு விசுவாசமாய் அவளைக் கூட்டிக்கொண்டு போனான்.

அவள் எங்கேபோகிறாள்? தன் தமையன் உயிரை அளிக்கும்படி ராஜ்யாதிபதியாகிய லின்கன் என்பவரைக்கேட்டுக் கொள்ளும் பொருட்டு வாஷிங்க்டன் நகருக்குப் போகின்றாள். அவள் புறப்பட்டுப்போவது வீட்டாரொருவருக்கும் தெரியாது. வரும்போது தன் பிதாவுக்கு தான் இன்ன இடத்துக்கு இன்னகாரியமாகப் போகிறேனென்று ஒரு சீட்டு மாத்திரம் எழுதி வைத்துவிட்டு வந்தனள். தமயன் கடிதத்தையும் கூடக்கொண்டு போகிறாள். தயாளகுணமுடைய லின்கன் அதிபதியின் மனம் அக்கடிதத்தைக்கண்டு இரங்காமற்போகாது. மறுநாட்காலையில் அவர்கள் நியூயார்க் பட்டணம்வந்து சேர்ந்தார்கள். ரயில் நடத்துவோன் உடனே அவளை வாஷிங்க்டனுக்குப்போகும் வண்டியில் ஏற்றிவிட்டான். ஒருகணம்தப்பினால் தன் தமயனைக் காப்பாற்ற முடியாமற் போனாலும் போகும். ஆதலின் அதிசீக்கிரமாக அவள் தலைநகராகிய வாஷிங்க்டனுக்கு வந்து ‘வைட்ஹௌஸ்’ (White house) என்னும் ராஜமாளிகைக்கு உடனே சென்றனள். அதிபதி அப்போது தான் முக்கியமான துரைத்தனக் கடிதங்களைப் பார்வையிட்டுக் கையொப்பம் செய்யும் தமது காலைவேலைக்கு உட்கார்ந்தார். உடனே ஒருவரைக்கொண்டும் தெரிவிக்காமலே கதவை மெல்லத் திறந்துகொண்டு பிளாசம் கட்டின கையுங்கவிழ்ந்த முகமுமாய் அவர் முன் சென்று நின்றனள்.

‘அப்போது அதிபதி அவளைப் பார்த்துத் தமது இனிய குரலால், அம்மா உனக்குயாது வேண்டும். இவ்வளவு அதிகாலையில் இங்கு வந்தாய்’ என்றனர்.

பென்னியின் பிராணனைத் தயவுசெய்து அளிக்கவேண்டுமையா என்று தட்டித்தடுமாறிச்சொல்லினள்.

“பென்னியா? அவன் யாவன் பென்னி?” “என் தமயன் ஐயா. அவன் தன் காவலில் நித்திரைபோனதினால் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது”.

ஆகா! அப்படியாசெய்தி தெரிந்தது. அவன் செய்தது பெருந்தப்பிதமே அம்மா.



எவ்வளவோ அபாயமான வேளையில் அவன் தன் கடமையை நிறைவேற்றாமல் தூங்கிப்போய் விட்டான். அவன் அஜாக்கிரதையால் அனேக ஆயிரம் ஜனங்களுக்குச்சேதம் நேர்ந்திருக்கலாம்” என்றனர்.

“ஆமாம் அப்படித்தான் எங்கள் அப்பாவும் சொன்னார், பாவம் பென்னி மிகவும் களைத்துப் போயிருந்தான், ஜிம்மிக்குபலமேயில்லை. அவன் இருவர் வேலையை ஒருவன் செய்ய வேண்டியதாயிற்று. அன்றியும் அன்று ஜிம்மியின் முறை, என் தமயன் முறையன்று, ஜிம்மிதாங்க முடியாமல் களைத்துப்போயிருந்தான். பென்னியும் களைத்துத்தான் போயிருந்தான். ஆனால் அதைப்பற்றி அவன் ஆலோசிக்கவில்லை” என்றனள்.

‘நீ என்னசொல்லுகிறாயம்மா? கிட்டவந்து சொல்லு, எனக்கு நன்றாய் விளங்கவில்லை என்று அத்தயாளகுணமுடைய பிரபு தமக்குரிய சுபாவப்படி இக்குற்றத்தை மன்னிப்பதற்கு யாதேனும் ஆஸ்பதம் உண்டாவென்று கருதி அவள் வார்த்தையைச் செவிக்கொடுத்துக்கேட்டனர்.’

ப்ளாசம் சமீபத்தில் செல்ல, அவர் அவள் தோள்மேல் தமதுகையை அன்பாய்வைத்து அவளுடைய விசாரத்தினால் வாடிமெலிந்த முகத்தை தமக்கு நேராகத்திருப்பி அவளைச் சொல்லச்சொல்லிக் கேட்டனர். அவளும் தன் கள்ளம் கபடமில்லாத விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாகச் சொல்லித் தன் தமயன் கடிதத்தையும் அவர்கையில் கொடுத்தனள். அவர் அதைக்கவனமாகப் படித்தப்பின் தமது பேனாவை எடுத்து அவசரமாக இரண்டு மூன்று வரியெழுதி மணியையடித்தனர். இந்தக் கடிதத்தை “தக்ஷணமே அனுப்புக” என்றவரிட்ட உத்தரவு ப்ளாசம் காதில்பட்டது. அதிபதி பின்பு அப்பெண்ணைநோக்கி, “அம்மா நீ வீட்டுக்குப்போய், தனது ஏகபுத்திரனுக்குப் பிராணஹானி வந்தபோதிலும் தன் துரைத்தனத்தார் விதித்த தண்டனை அநீதமென்றெண்ணாத மேன்மைக்குணமுடைய உன் தந்தையோடு அச்சற்புத்திரன் பிராணனை இழக்க மனம்பொருந்தாதபடி அவ்வளவு அருமையாக நான் மதிக்கின்றேனென்று சொல்லு போ. அம்மா இல்லாவிடின் இங்கேயிரு நாளை உன் தமயனுடன் கூடிச் சேர்ந்துபோகலாம் அவன் இவ்வளவுதளராமல் மரணத்தை எதிரிட்டதினால் அவனுக்குச் சிறிது விசுவாசம் வேண்டும். ஆதலின் அவனையும் உன்னுடன் அனுப்புவிக்கிறேன்” என்றனர்.

அப்போது ப்ளாசம் “ஐயா தங்களுக்குக் கடவுள் நன்மையெல்லாம் கொடுத்தருள்வாராக” என்றனள். அவள் வேண்டுகோளைக் கடவுள்கேட்டுப் பதிந்துகொண்டனர் என்பதில் யாவர் சந்தேகிப்பார்கள்.

இதற்கு இரண்டு தினத்துக்குப் பின் அவ்விளைஞனாகிய படைச்சேவகன் தன் தங்கையோடு அதிபதியின் அரண்மனைக்குவந்து அவரைத் தனிமையில் தரிசிக்கப் பெற்றனன். அப்போதவர் அவனை ஆதரவாக ஏற்று “உடம்பு சொஸ்தமில்லாதிருந்த தன் சிநேகிதன் சுமைகளைத் தான் சுமந்து சென்று அதற்காக இறக்கவந்தபோது யாதும் அதிருப்தியடையாமல் இருக்கக்கூடிய போர்ச்சேவகன் அவன் தேசத்தாரால் நன்குமதிக்கப்படுதற்கருகன்” என்று அவனைச் சிலாகித்துக்கொண்டனர்.

பின்பு பென்னியும் ப்ளாசமும் தமது ஊருக்குத் திரும்பினார்கள். ரயில் ஸ்டேஷனில் அவர் வரவை எதிர்நோக்கி வெகுபேர்கள் பந்துமித்திரர்கள் கூடியிருந்தார்கள். கிழவர் தமது பிள்ளை கையைப்பற்றி மார்போடணைத்துக்கொண்டு தாரைதாரையாய்க் கண்ணீர் விட்டு சுவாமி உன் திருவருள் கொண்டாடக் கடவது” என்று பத்தியோடும் துதித்தனர்.

இச்சரித்திரத்தில் கூறிய அப்ரஹாம் லின்கன் என்பவர் அமெரிகா தேசத்தில் ஓர் எளிய வேளாளனுக்குப் புத்திரராகப் பிறந்தும் தமது ஆச்சரியகரமான நன்முயற்சியாலும் மேன்மைக்குணங்களாலும் ஐக்கியமாகாணங்களுக்கு அதிபதியாகும் ஒப்பற்ற பதவியைப் பெற்றனர். அவர் இரண்டாம் விசை அதிபதியாகத்தெரிந்து நியமிக்கப்பட்ட இரண்டு மூன்று வாரத்துக்கெல்லாம் ‘பூத்’ என்னும் நாடகக்காரனாகிய ஓர் கொடியோனால் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தனர். ஆ! ஆ! நல்லவர்களுக்குப் பொல்லாதவர்களால் கேடுண்டாகும் இக்கலியின் கொடுமைதானென்ன! எல்லாம் ஈச்வர சங்கற்பம்.

## EXTRACT: ON THE EDUCATIONAL NEEDS OF CHILDREN.

(CONTRIBUTED TO THE TAMIL DAILY.)

### பாலர்களின் கல்விச்சம்பந்தமான தேவைகள்.

(ஒருவிருபர் தமிழ் தினசரிப்பத்திரிகைக்கெழுதியது.)

ஐரோப்பாவில் பல தேசங்களில் சண்டையினால் ஆள் மிகவும் சேதப்படுவதிலிருந்து அங்கே பல பண்டிதர் இனி வரப்போகும் ஜனத் தொகையாகிய குழந்தைகளை நேரே பாதுகாக்கும் விஷயத்தில் அதிக சிரத்தை பாராட்டி வருகிறார்கள். மேல் வகுப்புக் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கும் அளவு கீழ் ஜாதிக் குழந்தைகளுக்கு அங்கே படிப்பு இதுவரை கற்றுக்கொடுக்கவில்லை. கீழ் வகுப்புக் குழந்தைகளை அதிபால்யத்திலேயே தொழிற்சாலைகளுக்கு அனுப்பி வேலைசெய்யச் சொல்லி வருவதால் அவர்களுடைய அறிவு விசாலமடைய யாதொரு வழியுமில்லாமல் போகிறது,

யந்திரத் தொழிற்சாலைகள் மனிதரை மிருகங்களுக்கு ஸமானமாகச் செய்து விடுகின்றன. காலை முதல் மாலை வரை ஒருவன் ஒரு மணையின்மேல் இருந்துக்கொண்டு, நரக வாதனை போன்ற தீராத யந்திரச் சத்தத்தினிடையே யந்திரத்துக்குள் கொஞ்சம் கொஞ்சமாகப் பஞ்சை நுழைத்துக்கொண்டிருந்து விட்டு, ஸாயங்காலம் வீட்டுக்கு வந்தவுடன் குடித்து மதிமயங்கிக் கிடந்து, மறுநாட்காலை பொழுது விடியுமுன்னே மறுபடி பஞ்சுபோடப்போய் விடுகிறான். இவன் தன்னுடைய அறிவை விசாலப்படுத்தவும், உலக இன்பங்களை அனுபவிக்கவும், தியானம் பூஜை முதலிய தெய்வ காரியங்கள் செய்யவும் நேரமெங்கே?

எப்போதும் இடைவிடாமல், அவன் காதில் யந்திரத்தின் பேய்க் கூச்சலும், கண் முன் இரும்பும் பஞ்சும் மாறுடல் இருப்பதால் அந்த மனிதன் நாளடைவில் மனிதத்தன்மை மாறித் தான் ஒரு இரும்பு யந்திரம் போலாய்விடுகிறான். இந்தத் தொழிலுக்குச் சிறு குழந்தைகளைக் கொண்டுவிட்டால் அவற்றின் கதி என்னாகும்?

இங்ஙனம் பாழடைந்து குட்டிச்சுவராய்ப் போகும் குழந்தைகளைக் காப்பாற்றவேண்டுமென்றும், மேல் ஜாதிக் குழந்தைகளைப் போலே கீழ்ஜாதிக் குழந்தைகளுக்கும் தக்க வயதாகும் வரை படிப்பும் நாகரீகமும் கற்றுக் கொடுத்துத் தொழிற்சாலைகளில் சேராமல் தடுக்கவேண்டுமென்றும், மேற்குத் திசையாரில் பல பண்டிதர் முயற்சிசெய்து வருகிறார்கள். படிப்பாளிகள் அநேகர் இந்த யுத்தத்தில் மடிந்து போவதால், சண்டை முடிந்த பிறகு ஐரோப்பாவில் கல்வியின் நிலைமை மிகவும் சீர் கெட்டும் போயிருக்கு மென்பதில் ஸந்தேகமில்லை. இது நிற்க.

நமது தேசத்தில் எல்லாருக்கும் ஆரம்பப் படிப்பு ஸர்க்கார்ச் செலவில் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீகோகலே வைஸ்ராய் சபையில் வாதித்தார். செலவுக்குப்பணம் இல்லை என்று சொல்லி அதிகாரிகள் கையை விரித்து விட்டார்கள். இது சண்டைக்கு முந்தி! இப்போதோ கேட்கவே வேண்டியதில்லை. இனிமேல் போகப்போகச் சண்டைச் செலவும், சண்டை முடிந்தால் வாங்கின கடனுக்கு வட்டிச்செலவும் அதிகப்பட்டுக்கொண்டு போகும். ஆதலால் நாம் ராஜாங்கத்தாரிடம் இவ்விஷயத்தில் அதிக உதவி எதிர் பார்க்க இடமில்லை.

ஆண், பெண், அடங்கலாக நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இனாம் படிப்புக் கட்டாயமாய்ச் சொல்லி வைக்கவேண்டும். இது ராஜங்கத்தாருடைய கடமை. ஆனால் நம்முடைய ராஜாங்கத்தார் இப்போதுள்ள நிலைமையில் அவர்கள் இந்தக் காரியம் செய்ய மாட்டார்கள்.

நமக்கு நல்லகாலம் எப்போது வருமோ தெய்வத்துக்குத் தான் தெரியும். அதுவரை அதிகாரிகள் எப்படி யிருந்தபோதிலும், அதைப் பொருட்டாக்காமல் நாட்டிலுள்ள பணக்காரர் மற்றெல்லாவித தர்மங்களைக் காட்டிலும், ஜனங்களுக்கு அறிவு விருத்தியும், தைரியமும், தேசபக்தியும் உண்டாக்கத் தகுந்த சுதேசியக் கல்வி ஏற்படுத்திக் கொடுப்பதைப் பெரிய தர்மமாகக் கருதி, அதிலே பணம் செலவிட முற்படும்படி மேற்படி பணக்காரருக்கு நல்ல புத்தி ஏற்படுத்திக் கொடுக்குமாறு தெய்வத்தை வேண்டுகிறோம். ஒரு நாட்டில் உள்ள எல்லா விதமான குறைகளுக்கும் புத்திக்குறையே ஆதாரம். இது படிப்புக் குறையினால் உண்டாவது இந்தக் குறையை நீக்குவதில் நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் மிகவும் அவஸரம்.

"LAND OF OUR BIRTH WE PLEDGE TO THEE."

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God that sublime belief that seeing evil I yet have faith.*

*"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

"பஞ்சவிம்சதிபாக்கியம்"] ஸத்தியம் வத—SPEAK THE TRUTH. ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE".




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 25.] பிங்களஶ்ரீ மார்கழிமீ, 1917ஶ்ரீ டிசம்பர்மீ. [சஞ்சிகை. 9.

### Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our "terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *At one month's credit (arrears rate)* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with the Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued† in the middle of a Vol., *nor without three months' clear notice as required* †
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

### General Notice.

i. The *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised ;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to "fluctuations" and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor*) ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, "VIVEKACHINTAMANI."
*Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore*.

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.* ☜

†Notice of discontinuance to have effect must be given in writing *full three months before the current Volume ends (in March)* and *after* all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say "that every effort will be made to trace them." "If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed" continues the same high authority, "I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should invariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## "LAND OF OUR BIRTH WE PLEDGE TO THEE."

### A CHILDREN'S HYMN.

Land of our birth we pledge to thee
Our love and toil in years to be,
When we are grown and take our place
As men and women with our race.

Father in Heaven, who lovest all,
Oh help the children when they call,
That we may build from age to age,
An undefiled heritage.

Teach us to bear the yoke in youth,
With steadfastness and careful truth,
That in our time Thy grace may give,
The truth whereby the nations live.

Teach us to rule ourselves alway,
Controlled and cleanly, night and day,
That we may bring, if need arise,
No maimed or worthless sacrifice.

Teach us to look in all our ends
On Thee for judge, and not our friends,
That we, with Thee, may walk uncowed
By fear or favour of the crowd.

Teach us the strengh that cannot seek,
By deed or thought, to hurt the weak,
That under Thee, we may possess
Man's strength to comfort man's distress.

Teach us delight in simple things,
And mirth that has no bitter springs,
Forgiveness free of evil done
And love to all men 'neath the sun.

Land of our birth, our faith, our pride,
For whose dear sake our fathers died ;
Oh Motherland, we pledge to Thee
Head, heart, and hand through years to be.

Mr. C. V. Swaminatha Aiyar has received the following reply from the Private Secretary to the Secretary of State, dated Viceregal Lodge, Delhi, 19th November, 1917 :—

"I beg to acknowledge the receipt of your letter of the 14th of November enclosing a statement of your views on the subject of Indian Constitutional Progress, which I will place before the Secretary of State. Mr. Montagu regrets that his engagements in Madras will not enable him to take advantage of your offer to visit him."

### முக்கிய அறிக்கை.

இந்த விவேகசிந்தாமணியை வாங்கி வாசித்து வரும் உபாத்தியாயர்கள் ஒவ்வொருவரும் இப்புஸ்தகத்தை பத்திரமாகச்சேர்த்து 'பயிண்டு' செய்து வைத்துக்கொண்டு வந்தால் இதுவே ஒரு முக்கியமான நல்லறிவு புகட்டும் கல்விக் களஞ்சியமாயுதவும். அடிக்கடி பார்த்துப் படித்து மனதைத் திருத்திக்கொள்ள உபயோகப்படுவதாகும். ஆகையால் இதை வரப்பெறும் ஒவ்வொரு உபாத்தியாயரும் அதை அவர்கள் நலம்பெற உபயோகித்து வருவதற்கடையாளமாக இதைக்கொண்டு அவர்கள் பயன்பட உழைத்து வருவதைப்பற்றி அவர்களுடைய விலாஸத்திற்கண்ட நெம்பரைக் குறித்து முழுவிலாஸத்தோடும் நமக்கு எழுதித்தெரிவித்து வரவேண்டும். கவர்ன்மெண்டார் விவேகசிந்தாமணி பிரதம பாடசாலைகள் எல்லாவற்றிலும் உபயோகிக்க ஏற்றமானதென்று ஒவ்வொரு ஸ்கூலுக்கும் ஒரு காபி வாங்கியனுப்ப உத்தரவு செய்திருக்கிறார்கள். மானேஜர்.

Every elementary schoolmaster must have a copy of the *Vivekachintamani* for himself and his school. It is the best and most economical thing in the long run, as it infuses a spirit of inquiry and a desire to enlarge the mind by the constant presence of the volume being in his possession which he individually has to care for and preserve as school property. "When so kept they serve as a permanent and continuous volume of reference and useful knowledge for pupils and teachers. So, I would strongly recommend the supply of the Journal to be made to all the schools on the principle of one copy for each school." The teachers are requested to put themselves in communication with the Managing Agents of the *Vivekachintamani*, who will afford them every facility for each of them securing a copy. The annual subscription is Rs. 5 per volume payable in advance. (*Vide* "Terms.")

*Address*:—THE MANAGING AGENTS,
*Vivekachintamani*, 19, *Adam Street*, *Mylapore. Madras. S.*

'No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*
புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-9.
"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."
பிங்கள ௵ மார்கழி ௴. } விவேகசிந்தாமணி { December-January 1917-18.
FIRST ESTABLISHED, 1892. OUR JUBILEE YEAR, 1917.

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்த."

## "LAND OF OUR BIRTH WE PLEDGE TO THEE."

### A CHILDREN'S HYMN.

"உய்யவேண்டும் பரதக்கண்டம்
உலகெல்லாம் வாழவேண்டும்."

### பாலபோத கீதம்.

பாலர்களுக்குப் போதிப்பதில் கீதம் நல்ல சாதனம். ஏனெனில் நாதத்துக்கும் கீதத்துக்கும் சம்பந்தம் மிகுதியுண்டு. நாதமே கீதமாகவும் கீதமே நாதமாகவும் மாறும். நாதம் என்றால் ஓசை, கீதமென்றால் இன்னிசை, பாட்டு. சங்குநாதம் என்றால் சங்கிலிருந்துண்டாகும் ஓசை, சிங்கநாதம் என்றால் சிங்கத்தின் குரலோசை. இதற்கு கர்ச்சனையென்று பேர். ஓசை செவிக்கினியதாகில் அதற்கு இன்னிசை, சங்கீதம் என்று பேர். சங்கீதம் என்றால் நல்ல கீதம் அல்லது இன்னிசையோடு கூடியது என்று அருத்தம்.

இந்த சங்கீதம் சுருதி-லயம் என இருவகை மாறுபாட்டுக்குள்பட்டதாயிருக்கும். சுருதியென்றால் காதினால் கேட்கப்படுவது. லயம் என்றால் ஒடுங்குவது. சப்தம் பிறந்தவிடத்திலேதானே ஒடுங்கும். சப்தங்களெல்லாவற்றிலும் சூக்ஷ்மமான சப்தம் அநாஹதம் என்கிற ஹிருதயத்துக்குள்ளே யிருக்கிறது. இந்த சப்தம் அநாஹதத்தில் (ஹிருதயமத்தியில்) இருப்பதுதானே உயிர்நிலை. இந்த சப்தம் ஒடுங்கினால் உயிரும் ஒடுங்கிவிடும். இந்த சப்தம் கிளர்ந்தெழுந்தால் உயிரும் கிளர்ச்சி பெற்று எழும்பும்.

### "பாலபுத்தி"

பாலபோதம் என்றால் என்ன? பாலர்க்குச் சொல்லிக்கொடுப்பது என்பர் பலரும். ஆனால் சொல்லிக்கொடுக்க இன்றியமையாததாயுள்ளது புத்தி. இந்த புத்தி பாலரிடத்தில் இல்லாவிட்டால் போதனை ஒன்றும் ஏறாது. ஆதலால் "பாலபோதம்" என்றால் "பாலபுத்தி" யென்றும் உண்மையில் அர்த்தங்கொள்வது ஒக்கும். பாலபுத்தியை விளங்கச் செய்வது ஆசானின் தொழிலேயன்றி உள்ளத்தில் புத்தியில்லாதபோது உண்டாகச் செய்வது அவன் தொழிலல்ல. அது சாத்தியமும் இல்லை. எப்போதும் மூடியிருப்பதை வெளிப்படுத்துவது சாத்தியமேயன்றி இல்லாததை யுண்டு பண்ணுவது சாத்தியமில்லை. வித்தில் மரம் மறைந்திருக்கிறது. அப்படி வித்தானது தன்னில் மூடிக்கொண்டிருக்கிற மரத்தை வெளிப்படுத்தலாமே யன்றி அம்மரமானது அதில் இல்லாதபோது அதை வெளிப்படுத்துவது சாத்தியமில்லை. வறுத்த வித்து முளைக்காது. ஏனெனில் முளைக்கும் சக்தி வறுக்கும் பொழுது வித்திற்குள்ளேயே நசித்துவிடுகிறது. வித்துக்குள் மரம் எப்படியிருக்கிறதோ அப்படிப்போல அநாஹத சப்தத்திற்குள் எல்லாவித்தையும் (ஸர்வ கலைகளும்) அடங்கியிருக்கின்றன.

பிறந்த குழந்தை வாயைத்திறந்தால் பிர

ணவ நாதம் வெளிப்படும் என்பது உண்மை. ஏனெனில் சப்தத்துக்கெல்லாம் ஆதிமுதலாயிருப்பது அ என்னும் சப்தம். அது நாதத்தின் விரிவை விளக்கும். அது கண்டத்துவனியினால் வெளியாகும்பொழுது அதற்கு "அகாரம்" என்று சொல்லுகிறது. இப்படி விரிந்த நாதம் குறுகி யொடுங்கும்பொழுது அதற்கு "உகாரம்" என்று சொல்லுகிறது. உகாரத்தில்குறுகி மகாரத்தில் ஒடுங்கும். அந்த மகாரம் தானும் அநாஹத சப்தமாகிய நாதத்தில் ஒடுங்கும். இப்படி ஒடுங்கினவிடத்துள்ள அநாஹத சப்தத்துக்குள்ளே துவனியிருக்கிறது. அந்த த்வனியிற்குள்ளே ஜோதியிருக்கிறது. இந்த துவனியும் ஜோதியும் இளம் பாலர்களுக்குப் பிரஸன்னமாய் விளங்குமென்பது உண்மை. இந்த துவனியைக் கேட்டும் ஜோதியைப் பார்த்துமே குழந்தைகள் தூங்குகையில் சிரித்து சந்தோஷப்படும். இதை தேவதைகள் குழந்தைகளோடு விளையாடுவதாகச் சொல்லுவர் உலகவழக்கில். தேவதைகள் என்றால் பிரகாசரூபங்கள் என்றே அருத்தம். இப்படி தேவதாம்சமாக விளங்கும் ஜோதிக்குள்ளே "குழந்தை மனம்" என்று சொல்லும் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார சக்திகள் மூன்றும் சேர்ந்துள்ள மனமிருக்கிறது. இந்தக் குழந்தைமனம் மட்டும் மாறாதாகில் மனிதருக்கு ஒரு குறைவும் இல்லை. ஏனெனில் அதில் அழுக்கு இல்லை. விஷய சம்பந்தத்தினாலேயே மனதில் விஷயப்பற்று தோன்ற அதுமூலமாக மன அழுக்கு உண்டாகிறது. அழுக்கு வஸ்திரத்தைத் தோய்த்து உலர்த்தி யுடுத்துவதுபோல விஷயப்பற்றினால் அழுக்குப்படிந்த மனத்தை அப்போதப்போது நாதகீத போத ஞானத்தால் சுத்திப்படுத்திக் கொண்டேவந்தால் ஹிருதய சுத்தி லபிக்கும். அப்பொழுது மன அழுக்கு நீங்கும்.

இதையெல்லாம் இளங்குழவி யொன்றின் குணங்குறி பறிந்து, அறிந்ததை யறிந்தபடி வெளியிட்டெழுதலானேம். எட்டுப் படிப்பு மட்டும் படித்தவர்களுக்கு இது வாச்சா மாத்திரமாகத் தோன்றும். வெறும் வார்த்தைகள் என்று சொல்லி யிகழ்வார்கள். ஆனால் பிள்ளைகளைப் பெற்று அவர்களை வளர்ப்பதிலுள்ள அருமை பெருமையையறிந்த தாய்மார்கள் இதனுண்மையை யெளிதில் உள்ளபடி தாமே யனுபவத்திலறிந்து கொள்வார்கள். இது வித்தைகளிலெல்லாம் பிரயாசமான வித்தை. இதைத் தான் "பிள்ளையை வளர்க்கும் வித்தை பிரயாசமான வித்தை" யென்று விவேகத்தாய் விவேகரஸத் தாலாட்டில் தன் குழந்தைக்குச் சொல்லித் தாலாட்டிப் போதித்திருக்கிறாள். வித்யாப்பியாச முறையில் இதைத் தான் "Cultivation of the heart" என்று சொல்லிப் பெருமையாய்ப் பாராட்டுவார்கள். அப்படியென்றால் ஹிருதயப் பயிர்ச்சியென்று அருத்தம். ஹிருதயத்தைப் பயிர்செய்தல் (பயிர் போல் வளரச்செய்தல்) ஹிருதயப்பயிர்ச்சி. "கிண்டர் கார்டன்" முறையில் இது மிகவும் முக்கியமான வித்தை. இந்த ஹிருதயப் பயிர்ச்சியின்றி சத்குண சம்பத்து அமையப்பெறுவது துர்லபம். சமயகோடிகளும் ஸர்வ மதங்களும் இந்த ஹிருதயப் பயிர்ச்சி வித்தையையே அவரவர்க் கேற்றபடி சாதன சாதகங்களமைய அமைத்துப் போதிக்கும். இதைத் தான் ஹிருதய சுத்தி லபித்தல் என்று சொல்லுவர். இதுவரையில் தான் சமயநெறிகளும் ஜாதிபேதங்களும் செல்லும். ஹிருதய சுத்தி லபித்துவிட்டால் இந்த பேதபாவனைகளெல்லாம் மனத்தினின்று கழன்று விழுந்துவிடும். அப்பொழுது "ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும், நன்றே செய்மின் நாணுமே" என்ற திருமந்திரோபதேசம் தானே பலிக்கும். இப்படிப்பட்ட உயர்பதவி பெற்றவர் யாரோ அவரே இயற்கையில் ஜனசிரேஷ்டராவர்.

இப்பொழுது இந்தியா மந்திரியவர்கள் இந்தியா துரைத்தன முறையைச் சீர்படுத்த வேண்டி இந்தியா துரைத்தனம் ஜனப்பொறுப்புக்குள்பட்டதாக விருந்து விளங்கச்செய்ய என்ன ஏற்பாடுகள் செய்யலாமென்று கனம் பொருந்திய இராஜப்பிரதிநிதியவர்களோடு



கலந்து பொதுஜன அபிப்பிராயத்தை யுணர்ந்து தீர்மானிக்கலாமென்று இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். நவம்பர்மீ 9௳ பம்பாயில் வந்திறங்கியவர் உடனே டில்லிக்குச் சென்று அந்தமாசம் 15௳ முதல் இந்தியா முழுமைக்கும் பிரதிநிதிகளாகப் பேசுமுறையில் அவரைக் காணவிரும்புவோருக்கு பேட்டியளித்து அவர்கள் துரைத்தனச் சீர்திருத்த விஷயமாய்ச் சொல்லும் ஏற்பாடுகளை யெல்லாம் கேட்டு ஆலோசனைக்காக வாங்கி வைத்துக்கொண்டு வருகிறார். டிசெம்பர் மாசம் 1௳ கல்கத்தாவுக்குப்போய் அங்கு இருவார மிருந்து, 14௳ வெள்ளிக்கிழமையன்று சென்னை வந்து சேருவார். சென்னையில் 10 நாள் தங்கி 24௳ பம்பாய் போய்ச்சேர்ந்து ஜனவரிமீ 2௳ வரையில் அங்கேயிருப்பார்.

இவர் வந்திருக்கிற காரியத்தைச் சாக்கிட்டுக்கொண்டு ஒவ்வொருவரும் ஒரு கக்ஷிகட்டிக்கொண்டு ஜாதிமதபேதங்களையும் அதனாலுண்டாயிருக்கும் இன பேதங்களையும் பிரமாதமாக வற்புறுத்தி "எனக்கு, உனக்கு" என்று எல்லாரும் துரைத்தன அதிகாரத்தில் பங்குக்கு நின்று மன்றாடுகிறார்கள். "தன்னை வென்றவன் தலைவனாவன்" "தன்னைத்தானெஞ்சம் கரியாகத்தானடங்கில் பின்னைத்தானெய்தாற் பயனில்லை" என்ற மூத்தோர்சொல் வார்த்தையை அமிர்தமாககொண்டு கடைத்தேறாமல், தேசத்திலெங்கும் கக்ஷிப் பிரதிகக்ஷியும் ஜாதி மதபேத வைராக்கியமும் விர்த்தியாய்க்கொண்டு வருகிறது. இந்த ஜாதிபேத வைராக்கியம் பாராட்டுகிறவர்கள் துரைத்தன அதிகாரம் செலுத்த அருகரில்லை யென்பதை இவர்கள் அறியாதது ஏனோ தெரியவில்லை. "ஊரெல்லாம் வாழக் கேடொன்றுமில்லை" யென்பதோர் உண்மையான பழமொழி. இக்காலத்தார் 'நானெங்கும் ஆள எனக்குக் குறையொன்றுமில்லை' யென்று அகங்காரம் தலைக்கேறிப் பிதற்றுகிறவர்களா யிருக்கிறார்கள்.

இராஜ்யதர்மம் என்று ஈசுவரனிட்ட கட்டளையாய் ஒரு தர்மம் இருக்கிறது என்பதை நினைத்தால் அதற்கு விரோதமாய் நடப்பவரெல்லாம் தலையெடுக்க மாட்டாரென்பது பிரத்தியக்ஷமாக இவர்களுக்குப் படவில்லை போலும். ஈசுவர சங்கல்பம எப்போதும் வீண் போகாது. அதை யனுசரித்து நடப்பதே யுக்தம். அதுவே சித்தியுமாகும். இந்த உண்மையை சாங்கோபாங்கமா யெடுத்துக்காட்டி சமஷ்டி சேவை சாதனசங்கக் காரியதரிசி ஸ்ரீ சிதம்பர சபாநாயகரான ஆனந்த நடராஜமூர்த்தியின் ஆஜ்ஞையை அவர் அருள் வலிகொண்டு சிரமேற்றரித்து இந்திய துரைத்தன ஏற்பாட்டுச் சீர்திருத்த விருத்தி போக வேண்டிய போக்கைக்காட்டி ஒரு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார். அதையும் அங்கீகரித்து ஆலோசிக்கப் படுமென்று இந்தியா மந்திரியவர்கள் தம் அந்தரங்க காரியதரிசியைக்கொண்டு எழுதியிருக்கிறார். அக்கடிதத்தை முகப்பில் அச்சிட்டிருக்கிறோம்.

இதையெல்லாம் பாலபோத கீதமாயமைத்துப் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டி 1907-ம் வருஷத்தில் "பாரதீ மாதா" என்னும் தலைப்பின்கீழ் சாங்கோபாங்கமாய் எழுதியிருக்கிறதைப்போல், ஆங்கிலத்திலும் ஒருவர் ஜன்மபூமியை க்ஷேத்திர மாதாவாகப் பாவித்துக் குழந்தைகள் அம்மாதாவைப் பூஜிக்கும் வகையை இன்னிசைப் பாவில் நாதகீதமாகப் பாடியிருக்கிறார். அதையும் இதன் முகப்பில் அச்சிட்டிருக்கிறோம். அதைப்போல் நம்மவர்களும் பாரதீமாதாவைப் பூஜை செய்யவேண்டுமென்று அதிலிருந்து பிரார்த்தனை ரூபமான சிலபாகத்தை யெடுத்துக் கீழே பிரசுரிக்கிறோம்.

[ண்டும்
"உய்யவேண்டும்பரதக்கண்டம் உலகெல்லாம்வாழவே
பெய்யவேண்டும்நல்லமழை பூவுலகம்செழிக்கவேண்டு
[டும்"

"துன்பங்கள்தீரவேண்டும் தொல்சீர்மையடையவேண்
இன்பதுன்பந்தானறியாத் தீரமதுதான்வேண்டும்."
[ம்.

"கஷ்டங்கள்தீரவேண்டும் கர்மங்கள்தொலையவேண்டு
இஷ்டங்கள்சேரவேண்டும்இன்னுயிரேயென்தாயே."
[ண்டும்

"நஷ்டங்கள்போகவேண்டும் நாடுநன்றாச்செழிக்கவே
சிஷ்டர்களெங்கும் செழித்தோங்கவேண்டுந்தாயே.!"

"துஷ்டர்கள்கொட்டம் அடங்கவேண்டுமென்தாயே!
இஷ்டர்கள்சட்டமுடன் சீர்பெற்றுஓங்கவேண்டும்."

"உன்கதம்பவன நீழலிலெம் கஷ்டங்களையாம் மறப்போம்."

"உன்கற்பகத் தருவடியிலெங்கள் இஷ்டசிறை யெய்தட்டும்."

## THE KINDERGARTEN METHOD OF TEACHING.

(From a lecture delivered by Mrs. I. Brander, the late Inspectress of Girls' Schools, before the Madras Teachers' Conference, some years ago.)

## "கிண்டர்கார்டன்" போதனாமுறை.

[இவ்விஷயம் பல வருஷங்களுக்குமுன் சென்னையில் வித்யா விஷயமாய் ஆலோசிக்கக்கூடிய சென்னை உபாத்தியாயர்கள் மகாசபையில் மிஸ்ஸஸ் ப்ராண்டர் துரைசானியால் எழுதிவாசிக்கப்பட்டது.

கிண்டர்கார்டன் ஒழுங்குகளையும் அபிப்பிராயங்களையும் அனுசரிப்பதினாலேயே வித்தியாப்பியாசம் பயன்படுவதுடன் கிண்டர்கார்டன்முறை ஐம்புலன்களும், அறிவும் விருத்தியாய் வளர்ந்து வரும்படி குழந்தைகளைப் பழக்கி வருவதாதலால் கண்கள் கைகளைப் பழக்குவதில் அம்முறை நேராகவும், மற்றப்படி ஸ்கூலில் போதிக்கும் எல்லாப் பாடங்களையும் போதிக்குமுறையில் அயற்சார்பாகவும் அம்முறை உபயோகமுள்ளதாயிருக்கிறது. இம்முறையின் முக்கியாம்சங்களை, ஒவ்வொரு பிரதம பாடசாலை உபாத்தியாயரும் நன்கு அறியவேண்டியது மிகவும் ஆவசிகமாயிருப்பதால், அப்பொழுது வாசிக்கப்பட்ட பிரபந்தத்தின் சாராம்ஸத்தை இப்பொழுதும் பிரசுரிக்கிறோம்.]

கிண்டர்கார்டன் என்றால் குழந்தைகள் சரியாக வளரப் பழக்கும் ஒரு வித்யாமுறையென்றும், அம்முறை சுமார் 70-வருஷங்களுக்குமுன் ப்ரீட்ரிக் ப்ரோபெல் என்னும் ஜெர்மானியர் ஒருவரால் கண்டு பிடித்து ஒழுங்குசெய்து வழங்கத் துவங்கிற்றென்றும் எல்லாரும் அறிந்திருக்கலாம்.

வித்யா விஷயமாய் ப்ரோபெல் கொண்டிருந்த பிரதம எண்ணங்கள் என்னவெனில்:

(1) வித்யாப்பியாசம் குழந்தையின் தேக மனோசக்திகள் எல்லாவற்றையும் விர்த்தியாகச் செய்து நல்லொழுக்கத்தையும் விர்த்திசெய்ய வேண்டுமென்பது.

(2) குழந்தை தானாக (தன்முயற்சியால்)செய்யும் எதுவும், பிறர்சொல்லி அல்லது போதித்துச் செய்யும் காரியத்தைவிடப் பன்மடங்கு விசேஷமாக விர்த்தியடையும்படிச் செய்கிறது: ஆகையால் உபாத்தியாயர் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதை விசேஷமாகக் கருதாமல், அவர்கள் தன்முயற்சியால் விர்த்தியடைவதற்கு ஆதாரமான சாதகசாதனங்கள் சித்திக்கும்படி பார்த்துவரவேண்டுமென்பது.

(3) இப்படி கூட்டுவிக்கும் சாதக சாதனங்கள் அந்தந்தக் குழந்தையின் தன்மைக்குத் தக்கவாறு ஏற்றிருக்க வேண்டியதோடு குழந்தைகள் விர்த்தியடைவதற்கு ஆதாரபூதமாயுள்ள உத்தேசங்களுக்கு ஏற்றவையாகவு மிருக்கவேண்டும்; அன்றி, அச்சமய சாதனங்கள், முன்யோசனை செய்து இசையச்சமைத்த ஒரு ஏற்பாட்டுக்கிணங்கவும் அளிக்கப்பட வேண்டுமென்பது.

ப்ரோபெல் இம்முறையைச் சீர்படுத்தியதில் அவர் உத்தேசம் இன்னதென்பது இம்முறைக்கு அவர்கொடுத்த பெயராலேயே விளங்குகிறது. கிண்டர்கார்டன் என்னும் ஜெர்மன் வார்த்தைக்குப் பதப்பொருள் "குழந்தைகள் தோட்டம்" என்பதாம். இதனால் அவர் குறித்துரைக்கக் கருதியதென்னெனில், குழந்தைகளைச் செடிகள்போல் பாவித்து, உபாத்தியாயர் தோட்டக்காரனைப்போலிருந்து அவர்களை வளர்த்து வரவேண்டு மென்பதாம். தோட்டக்காரன் செடிகள் தானாக வளருவதற்கு வசதியானபடி, எருப்போட்டுத் தண்ணீர் வார்த்து, வெயில், நிழல் சரியானபடியும் அனுகூலமாகவும் படும்படி அமைத்துவைக்கிறான்; செடி தானாக வளருகிறதேயன்றி; தோட்டக்காரன் அதை எவ்வளவும் நேரில் வளரச் செய்வதில்லை. அது வளருவதற்கனுகூலமான உபகரணங்கள் எல்லாவற்றையும் மட்டும் அவன் ஜாக்கிரதையாகவும் கவனமாகவும் அளவும் காலமுமறிந்து செய்கிறான். பிள்ளைகள் விஷயத்திலும் உபாத்தியாயர் செய்யத்தக்கது அவ்வளவே என்பது அவர் கருத்து. குழந்தைகள் சரியாகவளர்ந்து விர்த்தியாவதற்கு அனுகூலமான சாதக சாதனங்கள் யாவையும் அளித்து, அவர்கள் வளர்ச்சி, கோணியாவது குறைந்தாவது போவதற்கு ஆதரவாகவிருக்கும், எவ்வித காரணங்களையும், தோட்டக்காரன் களை பிடுங்குவதுபோல களைந்து நீக்கி அக்காரணங்கள் அவர்கள் வளர்ச்சி விர்த்தியைப் பிரதிகூலமாகப் பாதிக்காதபடி பார்த்துவரவேண்டும்.



சௌக்கியமாயிருக்கிற ஒரு குழந்தையை நாம் நோட்டமிட்டுப் பார்த்து வருவோமானால் நாம் அறிவதென்ன? முதலாவது அக்குழந்தை அனேகமாக எப்பொழுதும் சந்தோஷமும் சிரிப்புமாக விளையாடிக் கொண்டிருக்கிறது; (2) உடம்பு உறுப்புகளைச் சுறுசுறுப்பாயுபயோகிப்பதில் சந்தோஷ மனுபவிக்கிறது; அதன்மனது எப்போதும் சுறுசுறுப்புள்ளதாய், ஐம்புலனறிவுகளாலும், பெரியோரைக் கேட்கும் கேள்விகளாலும், தன்னைச் சுற்றியுள்ள விஷயங்களை அறிந்துகொள்வதே மணியமாக விருக்கிறது. எதையும் தானாகச் செய்வதில் சந்தோஷப்படுகிறது: ஒரு காரியம் செய்தால் அதைத்தான் செய்யவேணுமென்று விரும்பிச்செய்ய வருகிறது. பக்ஷணங்கள், பாடிகள், பொம்மைகள் ஏதாவது செய்துகொண்டிருப்பதைப் பார்த்தால் தானும் அப்படி செய்யத் தலைப்பட்டு முயற்சிக்கிறது. தான்கண்டு கேட்டதைப் பார்த்துத் தானும் அவ்வாறு செய்ய யத்தனிக்கிறது. இப்படித் தானாகச் செய்யும் முயற்சிகளில் தான் கையாடக்கூடாத கத்தி சூர்க்கத்தி முதலியவைகளையெடுத்து அதற்காகக் கண்டிக்கப்பெறுகிறது. தன்னைப்போலொத்த குழந்தைகளோடு கூடியிருக்கவும், நாய், பூனை, பறவைகளோடு விளையாடவும் விரும்புகிறது. இன்னும் சொன்னால், கடைசியாக, நன்மை தீமை செய்யச் சக்தி வாய்த்துள்ளதாகவும் காட்டுகிறது. இவையெல்லாம் குழந்தைகளின் சுபாவம். இந்த சுபாவ விசேஷங்களெல்லாம் அப்பியாசத்தினால் விர்த்தியாகும்படி கிண்டர்கார்டனில் சாதக சாதனங்கள் ஏற்படுகின்றன. குழந்தைகள் எப்போதும் சுறுசுறுப்பாயிருக்க விரும்புகிறவர்களானபடியால், அச்சுறுசுறுப்பைக் காட்ட அனேக விளையாட்டுகளும், ஆட்டபாட்டங்களும், விர்த்திக்குக் காரணமாகும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சுற்றியுள்ளதை யறிந்துகொள்ள வேண்டுமென்கிற ஆசை கிண்டர்கார்டன் உபாத்தியாயரால் விர்த்திக்குக் காரணமான வழியில் செல்ல உபயோகிக்கப்படுகிறது. ஏனெனில், சுற்றியுள்ள எல்லாவற்றையும் ஐம்புலன் அறிவுகளால் ஆராய்ந்து அறிந்துகொள்ள அந்த உபாத்தியாயர் குழந்தைகளுக்கு ஒத்தாசையாக விருக்கிறார். விதைபடுக்கல், குச்சிவைத்தல், மணி கோர்த்தல் முதலிய கிண்டர்கார்டன் தொழில்கள், எதையும் தானாகச்செய்து பார்க்க வேண்டுமென்கிற குழந்தைக்குள்ள ஆசையைத் திர்ப்திசெய்யக் காரணமாயிருக்கின்றன. அன்றி, இவை குழந்தைகளுக்கு மனதில் படும் எண்ணங்களையும் தோற்றங்களையும் நன்றாக விளக்கவும் காரணமாகின்றன. குழந்தைகளுக்குக் கூடிவிளையாட இதரக் குழந்தைகளும், வளர்ப்புப் பிராணிகளும் கிண்டர்கார்டனிலிருப்பதால், குழந்தைகளுடைய தேக மனோவிர்த்திக்குக் காரணமான எல்லா உபகரணங்களும் கிண்டர்கார்டனில் அமைந்திருக்கின்றன. சாதக சாதனங்கள் உபாத்தியாயர் மேற்பார்வையாலும், சொல்லும் கதைகள், பேசும்பேச்சுகள், சம்பாஷணைகளாலும் சித்திக்கக் கூடியவையாக விருக்கின்றன. பின்னும் கிண்டர்கார்டனிலுள்ள சகவாசமானது சந்தோஷம், சௌக்கியம், சன்மார்க்கம் இவைகளுக்கடுத்ததாக விருப்பதால் குழந்தைகளுக்கு நற்பழக்கங்கள் படிந்து நற்குணசக்தி விர்த்தியடைகிறது. அங்கே சொல்லும் கதைகள், பாட்டுகளினாலும், மற்றப்படி அவர்கள் காணும் உதாரணங்களினாலும் அவர்கள் மனம் நல்லெண்ணங்கள் நிரம்பி நல்வழியில் செல்வதற்கு ஏற்றதாக விருக்கிறது.

குழந்தைகள் பிரகிருதி வஸ்துக்களையும் விஷயங்களையும் நேரில்கண்டறியும்படி செய்

வது மிகமுக்கியமென்று ப்ரோபெல் வற்புறுத்தியிருக்கிறார். பிரகிருதியில் காணும் காக்ஷிகளையும், சப்தங்கள், தொனிகளையும் நேரில் உணர்ந்து அனுபவிப்பதில் குழந்தைகளுக்கு அதிக ஆசை இயல்பாயுண்டென்றும், புஷ்பங்கள், பறவைகள், பிராணிகள் இவைகளைக் கண்டு களிப்பதில் அவர்களுக்குள்ள அனுதாபத்தை நாம் விர்த்திசெய்து வளர்க்கவேண்டுமென்றும் அவர்சொன்னார். ஆகையால் ஒவ்வொரு கிண்டர்கார்டனிலும் ஒரு தோட்டமாவது, குழந்தைகள் தாங்களாகப் பயிர் செய்யக்கூடியதாக ஒரு துண்டு நிலமாவது பிரத்தியேகமாக விருக்கவேண்டியது முதலவசியமென்று ப்ரோபெல் போதித்தார்.

பிரகிருதி வஸ்துக்களையும் விஷயங்களையும் குழந்தைகள் நேரநுபவத்தால் அறிந்து கொள்ள வேண்டியதோடு, பருவகாலங்கள் மாறுவதையும், அவ்வப்பருவங்களில் விசேஷ லக்ஷணங்கள் அப்பருவகால சம்பந்தமான உற்சவாதிகள் இவைகளைக் குழந்தைகள் மனதிற்படும்படி அவர்கள் கவனத்தைதிருத்திக் காட்ட வேண்டுமென்று அவர் சொன்னார். வசந்தகாலத்தில் மரஞ்செடிகள் புஷ்பிப்பதையும் பக்ஷிகள் பாடுவதையும், வெயிலின் உக்கிரத்தையும் விதை விதைத்தல் முதலிய மற்ற விசேஷங்களையும் குழந்தைகள் உணரக் காட்டி, பாட்டுகள் மூலமாகவும், கதைகள் மூலமாகவும், தகுந்த விளையாட்டுகள் மூலமாகவும் அப்பருவகால விசேஷங்கள் அவர் மனதிற்பதியும்படி செய்யவேண்டும். அப்படியே வேனிற்காலம், பனிகாலம், மாரிகாலம் இவைகளின் குணக்குறிகளையும் விளக்கவேண்டும்.

ப்ரோபெல் வற்புறுத்திய மற்றொரு முக்கிய அம்சம் என்னவென்றால், கிண்டர்கார்டனில் நடக்கும் அனைத்தும் ஒன்றுக்கொன்று தோரணையாய் கோர்வை தப்பாது தொடர்ந்து செல்லவேண்டுமென்பதாம். முன்பின் கோர்வையின்றி விஷயங்களை அங்கு கொஞ்சம், இங்கு கொஞ்சமாகச் சொல்லிக் கொண்டு போனால், குழந்தைகள் விஷயங்களின் தோரணையறியாது மயங்கி, அவற்றைச் சரியாகக் கிரகித்துக்கொள்ள முடியாது தவிப்பார்கள். ப்ரோபெல் தாமே குழந்தையாக விருந்த பொழுது தோரணையின்றி துண்டும் துணுக்குமாக விஷயங்கள் போதிக்கப் பெற்றதனால் அவைகளைக் கிரகித்துக் கொள்ளமாட்டாமல் வருந்தினவர். அப்பொழுது அவர் அறிந்தவைகளெல்லாம் முன்பின் தொடர்பின்றி, ஏதோ ஆகாசத்தில் மிதக்கும்மாதிரியாக அவருக்குப்பட்டதாம். ஆதலால் இக்குற்றத்துக்கிடமின்றி அவர் சீர்படுத்திய முறையில் இதை முற்றும் நிவர்த்திக்கத் தீர்மானித்தார். இது காரணமாக, அவர் ஒழுங்குபடுத்திய விளையாட்டுகள் தோரணியாக ஒன்றின்மேலொன்றாகத் தொடர்ந்து சென்றன. ஒவ்வொரு விளையாட்டுத் தோரணியும் முதலாரம்பத்தில் மிகவும் சுபாவமான இலகு விளையாட்டிலிருந்து படிப்படியாக மேலேறி விர்த்தியாகிப் போவதாயிருக்கின்றன. அவர் ஒழுங்குபடுத்திய விளையாட்டுத் தோரணிகள் ஒவ்வொன்றையும் ஒரு சங்கிலிக்கு ஒப்பிட்டால், அதிலடங்கிய ஒவ்வொரு விளையாட்டும் ஒரு சங்கிலிவளையத்துக்கு ஒப்பாகச் சொல்லலாம். ஒரு வளையம் விட்டுப்போனால் சங்கிலியின் கோர்வை விட்டுப்போவதுபோல, ஒரு விளையாட்டு விட்டுப்போனால் தோரணியின் கோர்வையும் விட்டுப்போகும். ஒரு தோரணியிலுள்ள ஒவ்வொரு விளையாட்டும், சங்கிலி வளையம்போல் தொடுத்திருப்பதோடு, ஒவ்வொரு தோரணியும் அதேமாதிரி ஒன்றின்பின் ஒன்று தொடர்ந்து வரும்படி கோர்வையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த விளையாட்டுகளனைத்தும் குழந்தையின் பிரத்தியக்ஷாநுபவத்துக்குட்பட்டு அதோடு சம்பந்தப்பட்டவையாக விருக்கவேண்டும். உதாரணமாக, அறுவடை விஷயமாய்ப் பேசவேண்டுமானால், அறுவடை காலத்தில் அப்பேச்சைத் துவக்கி அக்காலத்தில் நடப்பவைகளைக் குழந்தைகளுக்குப் பிரத்தியக்ஷாநுபவமாகக் காட்ட



வேண்டும். அந்த மாசத்தில் அல்லது வாரத்தில், கிண்டர்கார்டனில் குழந்தைகளுக்கிடும் வேலைகள் அதாவது தொழிற்பாடங்கள், அறுவடைகால விசேஷங்களை விளக்குவனவாக இருக்கவேண்டும். முதிர்ந்த நெற்கதிர்களைக் கொண்டுவந்து அவற்றைக்குறித்துப் பொருட்பாடம் சொல்லவேண்டும்; அறுப்பறுக்கும் அரிவாளைக்குறித்தும், கட்டுக்கட்டுதல், நெல்லடித்தல், களத்துவேலை, சேர்க்கட்டல் முதலியவைகளைக் குறித்தும் பொருட்பாடங்கள் சொல்லவேண்டும். குழந்தைகளுக்குப் போதிக்கும் எதுவும் அவர்கள் பிரத்தியக்ஷத்தில் கண்டவைகளாகவே யிருக்கவேண்டும். காணாதவைகளை அவர்களுக்குக் காட்டுவித்து அவைகளைப்பற்றிய விஷயங்கள் அவர்கள் மனதில் படும்படி பாடஞ்சொல்லவேண்டும். எழுதல், உருச்செய்யல் முதலிய பாடங்களிலும், ஒரு நெற்கதிரைப்போல் படம் எழுதிக்காட்டி அவர்களையும் எழுதச் சொல்லலாம். மணி கோர்ப்பதில் ஒரு நெற்கதிர்போல் கோர்க்கச் செய்யலாம், இன்னுமிப்படி இடத்துக்கும் காலத்துக்கும் தக்கபடி அவர்களுக்கு அக்கால வியல்புகளும் விசேஷங்களும் மனதிற்பதியும்படி போதிக்கவேண்டும். அறுவடை சம்பந்தமான பாட்டுகள், கதைகளும் சொல்லவேண்டும்; கூடுமானால் அறுப்பறுக்கும் வயலை நேரில் போய் அவர்களுக்குக் காட்டி வருவது மிகவும் விசேஷம்.

“கிண்டர்கார்டன்” என்பது, அவ்வார்த்தையின் பதப்பொருளுணர்த்துகிறபடி, குழந்தைகள் வளரும்படியான இடம். வளர்ச்சியென்றால், தேகவளர்ச்சிமட்டுமல்ல; தேகம், மனம், ஆத்மா எல்லாம் சரிப்பிரமாணமாக முறைப்படி விர்த்தியாய் வருவதையுணர்த்தும் வளர்ச்சியாம். கிண்டர்கார்டனில் குழந்தைகள் எழுத வாசிக்கவாவது கணக்குப்போடவாவது கற்றுக்கொள்ளாமல் விளையாட்டுகளிலே கருத்தாயிருப்பதால், அவர்கள் அறிவு அடையவில்லையென்று நினைப்பது சுத்தப்பிசகு. நிறங்கள், உருவங்கள், சப்தங்கள், எண்கள் இவைகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள், எண்ணங்கள் பல உணர்கிறார்கள். உபாத்தியார் சொல்லும் வார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேட்டுணரக் கற்றுக்கொள்கிறார்கள். வாத்தியங்கள் அல்லது வேறு சப்தங்கள் மூலமாகச் செய்யும் அடையாளங்களையுணர்ந்து நடக்கக் கற்றுக்கொள்கிறார்கள். பிராணிகளைப்பற்றியும் செடிகள், கொடிகளைப்பற்றியும் எத்தனையோ விஷயங்களை யுணர்ந்தறிந்து கொள்கிறார்கள். பருவகாலங்கள் மாறுவதையும், காற்றடிப்பதையும், மழை பொழிவதையும், பனி விழுவதையும், வெயில் எறிப்பதையும், மேகங்கள் ஓடுவதையும் நோட்டமிட்டுப் பார்த்துணரக் கற்றுக்கொள்கிறார்கள். பிரகிருதி வஸ்துக்களில் அநேகத்தைச் சேர்த்து அவைகளைப் பலவாறு பரிசோதித்து அவைகளின் குணக்குறிகளை யுணர்ந்தறிந்துகொள்கிறார்கள். பஞ்சு, பருத்தி, காய், கனி, புஷ்பவர்க்கங்கள், ஓடு, கிளிஞ்சல், கூழாங்கல் முதலிய அநேகப் பிரகிருத வஸ்துக்களைச் சேகரித்துப் பரிசோதித்து, உபாத்தியாயருடைய உதவியால் அவைகளின் குணக்குறிகளையறிந்துகொள்ளும்பொழுது, அவர்கள் மனோபாவசக்தி தூண்டப்பெற்று, ஐப்புலன்களையுமுபயோகித் தறிவையடையப் பழகுகிறார்கள். உண்மையான கிண்டர்கார்டன் போதகருடைய சதாநோக்கம், குழந்தைகளுக்கியல்பாயுள்ள சுறுசுறுப்பு முயற்சிக்கு வழி வகையுண்டாக்கி, அதை அவர்கள் விர்த்திக்குக் காரண்மாகும்படி உபயோகிப்பதேயாகும். குழந்தை சுறுசுறுப்பா யிருப்பதோடு தன் முயற்சியால் எதையாவது உண்டாக்கின வண்ணமாயிருக்கப் பழக்கப்படுவதால், அக்குழந்தையின் தேகமனோ சக்திகளனைத்தும் அப்பியசிக்கப்பட நேரிடுகிறது. குழந்தைகள் கிண்டர்கார்டனில் கட்டுவதும், கோற்பதும், தைப்பதும், நெய்வதும், அறுப்பதும், வெட்டுவதுமான தொழில்கள் புரிவதும், மண்ணிலும், மணலிலும் உருவம்பிடிப்பதும் வேலையாக விருக்கிறார்கள். இவ்வகையில் அவர்கள் விஷய ஞானம் அடைவது அவர்களுடைய பள்ளிப்படிப்புக்கு நல்ல அஸ்திவாரம் போட்டது போலாகிறது.”

## THE CHIEF CHARACTERISTICS OF STUDENTS.

## மாணாக்கர்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய லக்ஷணங்கள்.

---

சென்ற மாதத்துச் சஞ்சிகையில் மாணாக்கர்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய லக்ஷணங்களில் சுறுசுறுப்பு, வாய்மையுடைமை இவைகளைப்பற்றி விவரித்து எழுதினோம். இப்பொழுது மாணாக்கர்கள் பெறவேண்டியதாகிய நற்குணங்க ளின்னவென்றும், அக்குணங்களைப் பெறுவதினாலாய பயனின்னவென்றும் அவைகளை ஒருவன் மேற்கொள்ளாமற் போவதற்கு இடையூறுகள் இன்னவென்றும், அநுஷ்டிப்பதற் குபகரணமான வழிவகைகளின்னவென்றும் கவனிப்போம்.

### 3. கிரமப்பாடு.

**பொருள்.** மற்றெல்லா நற்குணங்களுக்கும் வழிபாடான குணம் 'கிரமப்பாடு' என்பதொன்றே! 'கிரமப்பாடு' என்றால் ஒவ்வொரு வேலையையும் தகுந்த இடம் காலம் நியமங்களை யறிந்து கொண்டு ஒழுங்காக நடத்தல். "இதற்குப் பின் இது செய்வது, இதற்குமுன் இது செய்வது" என்று வெளிப்படையாயேனும், குறிப்பாயேனும், ஒரு நியமத்தை ஏற்படுத்திக் கொண்டு அதற்கேற்ப நடத்தல், கிரமப்பாடு. கிரமப்பாடுடைய மாணாக்கனுக்கு ஒவ்வொரு வினைக்குந் தகுந்தகாலமுண்டு. நியமனமான ஓர் காலத்திலேதான் விளையாடுவான். ஒரு காலத்திலே தான் படிப்பான், எழுதுவான். ஓர்காலத்திலேதான் உறங்குவான். கிரமப்பாடில்லாத மாணாக்கன் படிக்கவேண்டிய சமயத்தில் விளையாடி, விளையாடவேண்டிய சமயத்தில் உறங்கித் தடுமாறுவான்.

**பயன்.** கிரமப்பாடுள்ள மாணாக்கனுக்கே எல்லா நற்குணங்களும் படியும். நற்குணங்கள் வழக்கத்தினாலும் கிரமப்பாட்டினாலுமே உண்டாகின்றனவென்று ஒருவர் நமக்கெடுத்துரைக்க வேண்டுமோ? "சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம், நடையுநடைப் பழக்கம்" என்றாள் ஔவையார். கிரமப்பாடில்லாதவனுக்கு வழக்கமுண்டாகாது. வழக்கமில்லாதவனுக்கு நற்குணங்கள் படியா.— மேலும், பலமும் காலமும் வியர்த்தமாக உபயோகமில்லாத விஷயங்களிற் செலவழியும்.

**இடையூறுகள்.** மாணாக்கர்கள் கிரமப்பாட்டின்படி நடவாதிருப்பதற்குக் காரணங்களுள் இடையூறனன.—எது தனக்கு விநோதமாயும் விரும்பப்படத் தக்கதாயுமிருக்கின்றதோ, எது இலேசாயும் ஹிதமாயுமிருக்கின்றதோ, அதையே விரும்பிக் கொண்டிருத்தல் பாலியர்களின் சுபாவம். விளையாட்டை மிகவும் விரும்பினவர்கள் எது கஷ்டமாயும் சிறிது புத்தியைச் செலுத்திக் கவனித்தறியவேண்டியதாயுமிருக்குமோ அதை யசட்டைசெய்து விடுவார்கள். தங்கள் அறிவிற்குப் புலப்படாத பாடங்களை உபாத்தியாயர் எவ்வளவு நன்றாகச் சொல்லிக்கொடுத்தாலும் கவனியார்கள். தங்கள் மனதிற்கிதமான பாடங்களைப் படிக்கும்போது காலஞ்சென்றதுகூடத் தோற்றாது படிப்பார்கள்.

### 4. கவனம்.

ஓராறுவியிடத்திலே நீரானது எவ்வாறு இடைவிடாமல் சதாகாலமு மோடிக்கொண்டிருக்கிறதோ அதைப்போல, நமது மனதினிடத்திலே எண்ணங்களின் விகாரங்கள் இடைவிடாமல் ஒன்றின்பின் ஒன்றாகப்பிறந்துகொண்டே யிருக்கின்றன. நமது மனதிற்கு, 'கவனம்' என்னுமோர் சக்தியில்லாவிடில், ஒரு கற்பாறையிடத்திலே மழைப்பெருக்கானது எவ்வாறு நிலைபெறாமலும் நிலத்திலே யூன்றிவிடாமலும் ஒரே வெள்ளமாயோடிப்போய்விடுமோ அதைப்போல எண்ணங்களின் கோர்வையான வேறுபாடுகளெல்லாம் நமது மனதிலே படியாமல் ஒரேவெள்ளமாய் ஓடிக்கொண்டேயிருக்கும். நல்லவேளையாக நமது மனதிற்கு 'கவனம்' என்றோர் சக்தியானது உண்டாயிருக்கிறது.



**பொருள்.** மனோசக்திகளுக்கெல்லாம் மூலாதாரமாயிருக்கின்ற சக்தியே 'கவனம்.' விசாலமாய் அகன்று பரந்தோடிய நீரானது திடீரென்று ஒரு குறுகலான முகத்துவாரத்தின் வழியாக ஓடும்படி நேரிட்டால், அம்முகத்துவாரத்திலே நீர் என்னபாடுபடும்! 'ஹோ'வென்றிரைந்து பயங்கரமாகச் சுழன்று துவாரத்திலே புடைத்துப் புடைத்து வெகுவேகமாக ஓடுமல்லவா? அமரிக்கையா யசன்றோடுகின்ற நீர்ப்பரப்பிலே ஒருகல்லை விட்டெறிந்தால் அவ்விடத்திலே நீர் வட்டவட்டமாய்ச் சுழன்றோடி அலையையுண்டாக்குகிறதில்லையா? சாந்தமாய்ப் பரந்தோடுகின்ற நீர்நிலையைப்போல நமதெண்ணங்கள் நாலாபக்கத்திலும் விசாலமாயோடிக் கொண்டிருக்கும்போது சரேலென்று நமது மனதை ஓரெண்ணத்திலே யூன்றவைத்தால், அவ்வெண்ணம் மனச்சுழற்சியாலும் புடைப்பினாலும் நமது மனதிற்கு நன்றாகப்புலப்படும். கவனசக்தியால் ஓர் எண்ணம் ஊன்ற நினைக்கப்படும். ஊன்ற நினைக்கப்படு மெண்ணத்தைத் தவிர மற்றெண்ணங்களெல்லாம் சற்று விலகியோடிப்போம்.

**வகைகள்.** இச்சக்தி குறைவான மாணாக்கர்களை நீங்கள் பார்த்திருக்கலாம். அவர்களுக்கு மனதொன்றிலு மூன்றிப்பதியாது. எப்போதும் அவர்கள் சொப்பனாவஸ்தையிலேதா னிருப்பார்கள். அலையற்று சாந்தமாயிருக்கின்ற நீர்நிலைக்கும் இவர்கள் மனதிற்கும் வித்தியாசமே யிராது. ஆகாயத்திலே ஒரு மேகமோடினால் அச்சாயை நீர்ப்பரப்பிலே தோற்றும்; ஒரு பறவையோடினால், பறவையின் சாயல் தோற்றும்; மேகமும் பறவையு மறைந்துவிட்டால் சாயையுமழிந்துவிடும். நீர்நிலை முன்போலவே கலக்கமற்று நின்றுவிடும். இதைப்போலவே நமது மாணாக்கர்களின் புலன்கள் வழியே ஏதாகிலும் விஷயாதிகள் மிகுந்த கவர்ச்சித்தன்மை பொருந்தி யிருக்கின்றமையாலே யுட்போந்தால், அவ்விஷயாதிகளைக் கவனிப்பார்கள். எவ்வளவு சாந்தமாக விருக்கப்பட்ட நீர்நிலையாயினும், சற்றேனும் அலைபுரளாமலிருக்காது. மேலே பரந்துசெல்கின்ற காற்றாலேனும், பாய்சுருளுவதுபோல அலை புரளுவதை நாம் கண்டிருக்கின்றோம். அதைப்போல, இவர்கள் மனதினிடத்திலே எண்ணங்களின் அலைகள் புரண்டுகொண்டே யிருக்கும். கவருந்தன்மைகொண்ட விஷயாதிகளா லுண்டாகின்ற எண்ணங்களைக் கவனிக்கவுங் கவனிப்பார்கள்.

**சித்தாதீனமில்லாத கவனமும் சித்தாதீன முள்ள கவனமும்.** மேலே சொல்லப்பட்ட கவனம், சித்தாதீனமில்லாத கவனம். நாம் அதனை யடக்கியாளுந் திறமையில்லாதிருக்கின்றோம்; அக்கவனம் நமது கட்டளைக்குட்பட்டதல்ல. தொட்டிலிலே படுத்திருக்கின்ற குழந்தை கூடத்திலே யங்குமிங்கும் கொண்டு போகப்பட்ட விளக்கை நோக்குகின்றது. இது சித்தாதீனமில்லாத கவனம். நாம் நாற்காலியிலுட்கார்ந்து படித்துக்கொண்டிருக்கும்போது அதிர்வெடிச்சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிடுகின்றோம். இது சித்தாதீனமில்லாத கவனம். மனதை யடக்கி ஒருமார்க்கமாகச் செலுத்தி திருப்திகரமில்லாத விஷயாதிகளிலேயும் வற்புறுத்தி முயன்றால், இதுவே சித்தாதீனமான கவனம். முன்னது விஷயாதிகளின் கவர்ச்சி சக்தியினாலே யுண்டாகின்றது. பின்னது சித்தவன்மையினாலும் பயிற்சியினாலும் பழக்கத்தினாலுமுண்டாகின்றது. மாணாக்கர்களின் கவனத்தை அவர்கள் சித்தத்தினாலடக்கியாளும்படி செய்துவைத்தல் உபாத்தியாயர்களின் கடமையாகும்.

**பயன்.** இக்கவனம் மற்றெல்லா மனோவிகாரங்களுக்கும் மூலாதாரமென்றோயல்லவா? புத்தி, உணர்ச்சி, சித்தம் ஆகிய இம்மூன்றுக்கும் மட்டிற்குமே அது மூலகாரணமாக விருக்கின்றது. ஓரெண்ணத்தை மற்றோரெண்ணத்திலிருந்

தும் பகுத்தறிந்து ஒப்புச்செய்து, நினைப்புக் கொள்வதற்கு கவனமேவேண்டும். மிகுந்த புத்திசாலிக்கும் மூடனுக்கும் வித்தியாசம் இக்கவன சக்தியிலேதான். மகா மோழையும் கவனத்தினாலே மேதாவியாய்விடலாம். மேலும் கவனம் உணர்ச்சியை அதிகரித்தும் சமனப்படுத்தியும் எண்ணத்தை மனதிலே பதியும்படிச் செய்யும். இராணுவ வீரன் போர் முனையிலே தனது கையறுதலையுங் கவனியாது சண்டை செய்வான். சாஸ்திர வித்வான் தன்னாற் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையைக் கண்டு திருப்தியடைந்து மேலும் அம்மார்க்கத்திலே முயலுவான். ஆதலால், 'கவனம்' மனதிற்கோரின்றியமையாத சக்தியாகும்.

**இடையூறுகள்.**

ஒரு வகுப்பிலே பாடங்கள் நடந்துகொண்டிருக்கவும், மாணாக்கர்கள் பாடங்களைக் கவனியாது போவதற்கு அநேக காரணங்களுள்ளன. மாணாக்கன், உபாத்தியாயன், பாடம்—ஆகிய இம்மூவருக்குமே விவகார சம்பந்தமிருக்கின்றமையாலே, மாணாக்கன் கவனியாது போவதற்கு இடையூறுகள் இம்மூவரிடத்திலேதானிருக்கவேண்டும். மாணாக்கனுடைய மனதின் தன்மை சில, உபாத்தியாயர் போதனையின்றன்மை சில, பாடங்களின் கடின இலகுத் தன்மை சில,— இவைகள் இடையூறுகளாக ஏற்படுகின்றன. இவைகளில் மாணாக்கர்களின் தன்மையைப்பற்றிக் கவனிப்போம்.

**மாணாக்கர்களின் தன்மை.**

சில மாணாக்கர்கள் விஷயங்களைக் கவனிக்கும் சக்தி யதிகமாக வுடைத்தாயிருக்கின்றனர். சிலர் அவ்வளவு கவனமில்லாதிருக்கின்றனர். சிலர் தங்களுக்கு மனோஹரமான சில விஷயங்களிலே தான் புத்தியைச் செலுத்துகிறார்கள். மற்றவர்கள் அவ்விஷயங்களிலேயூன்றிய கவனமில்லாது வேறு சில விஷயங்களைச் செவ்வையாகக் கவனிக்கின்றனர். சில மாணாக்கர்கள் கணக்கிலே மிகுந்த ஆவலுடையவர்களாக விருக்கின்றனர். சிலர் தேச சரித்திரம் படிப்பதி லூக்கமுடையவர்களாக விருக்கின்றனர். சிலர் தங்களைச் சுற்றிலுமுள்ள விஷயங்களிலும் விவகாரங்களிலும் புத்தியைச் செலுத்துகிறார்கள். சிலர் தங்களுக்குள்ளே தாங்கள் யோசனை செய்துகொண்டு பித்தர்களைப்போல நினைவும் கனவுமுடையவர்களாக விருக்கின்றனர். சில மாணாக்கர்கள் ஒரு விஷயத்திலிருந்து மற்றொரு விஷயத்திற்கும் ஒரு விவகாரத்திலிருந்து மற்றொரு விவகாரத்திற்கும் தாமசமில்லாமல் புத்தியைச் செலுத்தி, குரங்கு ஓர் கிளையிலிருந்து மற்றொன்றிற்றாவுவது போலச் சூடிகையுள்ளவர்களாக விருக்கின்றனர். சில மாணாக்கர்கள், "கொக்குக்கு மதியொன்றே" என்றாற்போல ஒரு விஷயத்தையே யோசித்து நிற்க, மற்றொரு விஷயத்தில் புத்தியைச் செலுத்துவதென்றால் பிரம்மப் பிரயத்தனமாகின்றது. சில மாணாக்கர்கள் ஒரு விஷயத்தின் நாலு கட்சியையும் நன்றாகக் கவனிப்பார்கள். சில மாணாக்கர்கள் சில கட்சிகளை மாத்திரம் நன்றாகக் கவனிப்பார்கள். சில மாணாக்கர்கள் ஒருவிஷயத்தை வெகுநாழிகை கவனிப்பார்கள். சிலர் அவ்வளவு நாழிகை கவனிக்க மாட்டார்கள். ஒரே வயதுடைய இரண்டு மாணாக்கர்கள் ஒரே விஷயத்தை ஒரேவிதமான கவனத்தோடு நோக்கார்கள்.— ஆதலால், இரண்டு மாணாக்கர்களுக்குள்ளே கவன சக்தியி லிவ்வளவு வேறுபாடுகளுள்ளவாயின் ஒரு வகுப்பிலே நாற்பது நாற்பத்தைந்து மாணாக்கர்களிருக்கையில் உபாத்தியாயார் என்னபாடுபடுவார் என்பதை நீங்களே நினைத்துக்கொள்ளுங்கள்.

---

"The *Vivekachintamani*, the Tamil monthly which is doing much good work in the cause of education and particularly rural education and children's education, is urging the need for the development of the faculty of observation in children being given the foremost place in any system of elementary and rural education. Considering the importance of the subject, a journal of the type of *Vivekachintamani* has much scope for useful work both for teachers and thinking pupils. It is being conducted by its able and enthusiastic Editor, Mr. C. V. Swaminatha Iyer, who has laboured much for the promotion of vernacular education."—*The Madras Mail.*



## ON RESPECTABILITY.

### அந்தஸ்தைப்பற்றி.

செல்வம் அந்தஸ்துச்சின்னம் என்ற கொள்கையினால் தத்தம் நிலைமைக்குத் தகுந்தபடி தங்கட்கும் தங்களைச் சேர்ந்தவர்கட்கும் செல்வமிருந்தால் தான் யோக்கியதையென்றும் இல்லாவிட்டால் யோக்கியதைக் குறைவென்றும் நினைக்கிறார்கள். மேற்படி கொள்கையினால் நான்குவித அபிப்பிராயமும் அதற்கனுசரணையான ஒழுக்கமும் ஏற்பட்டிருக்கிறது.

(1) ஜீவிதமுதலுள்ளவன் ஜீவித முதலாகவும் வரும்படி புஷ்டியுள்ளவனாகவும் எவ்வளவு இருந்தாலும் ஆபரணம் முதலிய படாடோபங்களில்லாவிட்டால் அவனுக்கு அந்தஸ்தில்லையென்று நினைத்தல்.

(2) ஜீவித முதலும் வரும்படி புஷ்டியும் இல்லாமல் இருந்தாலும் பட்டாடோபத்தால் அவன் அந்தஸ்துள்ளவனென்று நினைத்தல்.

(3) எவ்வளவு ஒழுக்கக்குறைவும், அசத்தியமும் சூதும், வாதும், வஞ்சனை, பொறாமையும், அற்பத்தனமும், அஞ்ஞானமும் இருந்தாலும் செல்வமிகுதி புஷ்டியால் அந்தஸ்தென்று நினைத்தல்.

(4) கல்வியும், ஞானமும், சத்தியமும், பெருந்தன்மையும், மேனோக்கும் பக்தியும், விசுவாசமும் இருந்தாலும் செல்வமில்லாவிட்டால் அந்தஸ்தில்லை என்று நினைத்தல்.

மேற்கண்ட அபிப்பிராயங்கள் சரியல்லவென்றும் அவைகளால் நேரிடும் தீங்குகள் அநேகமென்றும் காண்பிக்குமுன் அந்தஸ்தைத் தூக்கிப்பார்க்கும் அளவை அதாவது பிரமாணசக்தி இன்னதென்று ஆராய்ந்து பார்ப்போம்.

மகா பாரதத்தில் சாந்திபர்வத்தில் நல்லொழுக்கமும் புத்திசாலித்தனமும் காரியக்கூறும், கல்விப்பயிற்சியும் தர்மசீலமும் பொருந்தியவர்கள் அந்தஸ்துக் குரியவர்களாகச் சொல்லியிருக்கிறது. விராட பர்வத்தில் அர்ச்சுனனுக்கும் கௌரவர்களுக்கும் யுத்தம் நேரிடுமுன் அர்ச்சுனனைக்கண்ட துரோணாசாரியார் அர்ச்சுனன் வல்லமையைப் புகழ்ந்தும் தான் முதலிய குருசைன்னியங்களின் பலஹீனத்தை வெளியிட்டும் பேசினகாலையில் கர்ணன் கோபங்கொண்டு அந்தணர்குலத்தில் ஜனித்தவராகிய துரோணாசாரியை எடுத்தெறிந்து பேச அதற்குச் சமாதானமாக கர்ணன் அபஜெயமடைந்த திருஷ்டாந்தங்களைக் கிருபாசாரியார் எடுத்துக்கூற கர்ணன் மீண்டும் வெகுளிமீறி அலக்ஷியமாய் உதறிப்பேச அசுவத்தாமா மனம் சகிக்காமல் துர்யோதனாதிகள் மகா அசத்தியவான்களாகையால் அவர்களோடு சேர்ந்திருப்பது அகௌரவமென்றும் கர்ம பலத்தால் துரோணாசாரி முதல் போருக்கு அவர்களிடம் இருக்க நேரிட்டதென்று சொல்லியிருக்கிறார். இதனால் விளங்குவது என்னவென்றால் எவ்வளவு ராச்சிய புஷ்டியும், ஆபரணபுஷ்டியும், ஐசுவரியபுஷ்டியும் இருந்தாலும் சத்தியமும் தர்மமும் ஞானமும் இல்லாவிட்டால் யோக்கியதை, அதாவது அந்தஸ்து இல்லை யென்பதே.

சர்வபூஜிதைக்கு அர்ஹதையாயுள்ளவன் சாஸ்திர பாரங்கதனாகவும், புத்தி விசாலமுள்ளவனாகவும், தயாசீலனாகவும், நல்லொழுக்கமுடையவனாகவும், இருக்க வேண்டும். இம்மூன்று குணங்களில் நல்லொழுக்கம் பிரதானம். நல்லொழுக்கத்தில் சத்தியம் உட்பட்டிருக்கிறது. சத்தியமில்லாத புருஷன் மிருகத்துக்கும் கேவலமானகயால் அவனுக்கு ஒருவிதத்திலும் அந்தஸ்து இல்லை. இங்கிலீஷ் கவிகளில் ஒருவராகிய 'போப்பு' என்பவர் பின்வருகிறபடி எழுதியிருக்கிறார்.

"மதிப்பும் அவமதிப்பும் ஒரு பதவியிலிருந்து வருகிறதில்லை. உனக்குள்ள ஒழுக்கத்தைச் சரியாய்ப் பார்த்து நடந்துக்கொள். அதினாலேதான் உனக்கு மதிப்பும் அவமதிப்பும் வரக்கூடியது."

நம்முடைய திருவள்ளுவரும் அவ்வாறே பின்வரும் குறள்களில் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

சீரினுஞ்சீரல்ல செய்யாரேசீரோடு
பேராண்மை வேண்டுபவர்.

அதாவது மானத்தை விரும்புவோர் தன் குடிக்கொவ்வாத் தொழில்களைச் செய்யார் என்பதாம்.

குன்றினனையாருங்குன்றுவர்குன்றவ
குன்றியனையசெயின்.

அதாவது, மலையைநிகர்த்த குடிப்பிறப்பாளரும் தாழ்தற்கேதுவான செயல்களைச் செய்தால் தாழ்வார்கள் என்பதாம் என்று வியாக்கியான கர்த்தா சொல்லி யிருக்கிறார்.

பெருமையுடையவ ராற்றுவாராற்றி
னருமையுடைய செயல்.

பெருமையுடையோர் அருமையுடைய செயல்களைச் செய்வார் என்பதாம்.

இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்.

அதாவது பெருமையாகிய சிறப்புஞ் சிறியவரிடத்துண்டாயின் அது மிகுந்த செருக்காய் முடியும்.

கார்லைல் என்ற இங்கிலீஷ் வித்துவானும் முற்காலம் தற்காலம் என்றெழுதியிருக்கும் புஸ்தகத்தில் ஒவ்வோரிடத்திலும் மேற்கண்டபடி அபிப்பிராயப் பட்டிருக்கிறார். அனேக மகான்கள் எழுதியிருக்கும் புஸ்தகங்களிலிருந்து முன்சொன்ன அபிப்பிராயங்களுக் கனுசரணையாக அனேகம் வாக்கியங்கள் எடுத்துக் காண்பிக்கலாம். ஆனால் அவைகளெல்லாம் எடுத்துக் காண்பிக்கிறதாயிருந்தால் இடமடங்காதாகையால் அவ்வாறு செய்யாதே நிறுத்துகிறோம்.

"This magazine is devoted to the diffusion of knowledge and to the "Children's Movement." The commendable zeal of the Editor, Mr. C. V. Swaminatha Iyer, in promoting the cause of children's education, and in making them to realise their duties, rights and responsibilities, has earned for him an enviable name."—*The New India.*

## ON CONDUCT, CULTURE & KNOWLEDGE.

### ஒழுக்கம், கல்வி, புத்தி.

மரியாதைக்கு ஆஸ்பதமாகவும் அதைத் திட்டப்படுத்துவதற்குப் பிரமாணமாகவு மிருக்கிற சங்கதி மூன்று. அதாவது ஒழுக்கம், கல்வி, புத்தி இவைகள் மூன்றும் ஒருவனிடம் பொருந்தியிருந்தால் அவன்தான் எல்லோரினும் பூஜிதைக்குப் பாத்திரமாயுள்ளவன். மரியாதைக்கும் அந்தஸ்துக்கும் அடுத்தவன், புத்தியும் கல்வியும் எவ்வளவு விசாலமாக இருந்தாலும் ஒழுக்கமுடையவன்தான் அதிக பூஜிதைக்கு அவகாசமுள்ளவனே யன்றி கேவலம் புத்தியும் கல்வியும் ஒழுக்கத்துக்குள்ள அந்தஸ்துக்கு ஆதாரமாகாவாம். எவ்வளவு படித்தவனாகவும் புத்திவிசாலமுள்ளவனாகவும் இருந்தாலும் சத்தியம் தவறி அக்கிரமமாகவும் அதர்ம்மமாகவும் நடப்பானாகில் அவனுக்குக் கிடைக்கும் மரியாதை வெகு அற்பமாகவும், அவமரியாதை அதிகமாகவும் இருக்கும். ஏனென்றால் "மனத்தோடு வாய்மை மொழியில் தவத்தோடு தானஞ் செய்வார்கள் தலை." அதாவது ஒழுக்க மென்பது நல்லுணர்வு, நன்மொழி, நற்செயல் என மூன்றுமமைந்ததாகையால் — மனமொத்து பொய்யாத மொழியும் செயலுமாக உள்ள ஒருவன் எல்லா தர்மங்கட்கும் முக்கிய ஆதாரமாய் இருப்பதும் எல்லாவற்றிலும் இடைநிறைவாய்க் கலந்திருப்பதுமான மகாகொள்கையையே கடைப்பிடித்தவனாகையால் அவனேயாவர்க்கும் முதல்வனாகின்றான். "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன், நற்றாடொழா ரெனின்" என்று நாயனார் கேட்டிருக்கிறார். இதனால் தெய்வவணக்கம் முக்கியமென்றும், தெய்வவணக்கம் ஒழுக்கத்திலோரம்சமாகையால் ஒழுக்கம் கேவலம் கல்வியைப் பார்க்கிலும் விசேஷமென்றும் ஏற்படுகிறது. எல்லாமறிந்தும்,—வினைநீக்கி யெல்லாமறிந்தும் ஏதும் பயனில்லை : எல்லாம் அறியும் அறிவுக்கு ஆதாரமாயுள்ளது ஒழுக்கமேயன்றி கல்வியல்ல. இதை உத்தேசித்துத்தான், ஒழுக்கத்தில், கல்லாதவரே கற்றவரைக்காட்டிலும் விசேஷமென்று திருவள்ளுவர், திருமூலர் கூறியிருக்கின்றார்கள்.

நியாதியும் மரியாதையும் உடையவன் பொய்யா தொழுக்க முள்ளவனென்று பின்வரும் குறளில் காண்கிறது.

" உள்ளத்தாற் பொய்யாதொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்."

இதற் கனுசரணையாகவே ஒழுக்கம் விசேஷமாகவும் ஒழுக்கமற்ற கல்வி தாழ்மையாகவும் பெரியவர்கள் பாடியிருக்கிறார்கள்.

" துர்ஜந : பரிஹர்த்தவ்யோ வித்யயாலங்கிருதோபிஸன் | மணினா பூஷிதஸ்ஸர்ப்ப : கிமஸௌநபயங்கர :"

பொருள்: எவ்வளவு கல்விபூஷணத்தால் அலங்கரிக்கப்பட்டாலும் அவன் ஒழுக்கம், சீரில்லாதவனாயிருந்தால் அவனைத் தள்ள வேண்டும். மாணிக்கத்தால் அலங்கரிக்கப் பெற்றிருந்தாலும் ஸர்ப்பத்துக்கு, இயற்கையில் துஷ்ட ஸ்வபாவமானதாக விருப்பதினால், பயந்து ஓடுவதே திருஷ்டாந்தம்.

கார்லைல் என்பவரும் ஒழுக்கத்துக்கே பிரதானம் கொடுக்கிறார். படிப்பு எவ்வளவிருந்தாலும் அது பிரவர்த்தியாக மாறினாலல்லாது அதனால் பிரயோசனமில்லையென்று அவர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். ஒழுக்கம் பிரதானமென்பதற்கும் அதுதான் ஸகல பூஜிதைக்கும் மரியாதைக்கும் அஸ்திவாரமாயுள்ளதென்றும் காண்பிப்பதற்கு கோடானுகோடிப்பிரமாணங்கள் எடுத்துக்காண்பிக்கலாம். ஆனால் முன் எடுத்துக்காட்டியவை போதுமானவையென்று தோன்றுகிறபடியால் அம்மட்டில் நிறுத்துகிறோம்.

ஒழுக்கம் சமத்துவமாக இருக்கும்பக்ஷத்தில் கல்விக்கு பூஜிதை ஜாஸ்தி. கற்றவர்கள் ராஜாக்களைப் பார்க்கிலும் மரியாதைக்குத் தகுந்தவர்களென்று பின்வரும் பாடலிற்காண்கிறது.

மன்னனு மாசறக்கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற்கற்றோன்சிறப்புடையோன்—மன்னற்கு
தன்தேசமல்லால் சிறப்பில்லை
கற்றோற்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு.

மன்னற்கும் கல்வி ஆவசியமென்றும் கல்லா அரசன் காலனைப்பார்க்கிலும் கெடுதலென்றும் பின்வரும் பாடலிற்காண்கிறது.

கல்லாவரசனுங்காலனு நேரொக்குங்
கல்லாவரசனிற் காலன் மிகநல்லன்
கல்லாவரசன றமோரான் கொல்லென்பான்
நல்லாரைக்காலனணுகி னில்லானே.

பின்பாட்டால் செல்வ புஷ்டியும் ஒழுக்கந் தவிர மற்றெவ்வித புஷ்டியுமிருந்தாலும் கல்வியில்லாவிட்டால் அவர்களைக் காணுதல் கூட ஆகாதென்று தெரிகிறது.

கல்லாதமூடரைக் காணவுமாகாது
கல்லாதமூடர் சொற்கேட்கக் கடனன்று
கல்லாதமூடர்க்குக் கல்லாதார் நல்லாராங்
கல்லாதமூடர் கருத்தறியாரே.

ஒழுக்கமும் கல்விச் சம்பத்தும் சமமாயிருக்கும் பக்ஷம் புத்திகூடியவனுக்கு மரியாதையும் கூடும் ; புத்திகுறைந்தவனுக்கு மரியாதையுங் குறையும். அந்தஸ்துக்குப் பிரமாணம் ஒழுக்கம், கல்வி, புத்தியென்று சொன்னோம்.

அசத்தியம், அக்கிரமம், அநீதி இவைகள் நிறைந்து பஞ்சமாபாதகங்கட்கு அஞ்சாமல் சகலபாவங்களும் தீமைகளும் செல்வமாகக் கொண்ட ஒருவன் தன்பூஷணங்களால் ஒழுக்கம் பெற்று சீர்திருந்தினதாகவும், கல்விவந்தடைந்ததாகவும், புத்திகூர்மைப்பட்டதாகவும் நினைக்க முடியுமா ? முடியாது. தனபூஷணங்களால் அந்தஸ்துக்கும் மரியாதைக்கும் பிரமாணமாயுள்ள ஒழுக்கம், கல்வி, புத்தி இவை மூன்றும் ஜனிக்காதென்று எப்போது வெளியாகிறதோ அப்போதே தனபூஷணங்களால் அந்தஸ்து ஜனிப்பதில்லை யென்றும் ஏற்படுகிறது.

கார்லைல் என்பவர் இருவகை ஜனங்களைத்தான் வெருமதிப்பதாகச் சொல்கிறார். அவர்கள் யாரெனில் ஜடபூமியில் சத்தியமாக வியு

வைசிந்த உழைத்துப் பாடுபட்டு சர்வஜனங்களுடைய தேகரக்ஷை நிமித்தம் பொருளுண்டாக்கும் தொழிலாளிகள். ஆத்மபூமியில் பாடுபட்டு சாஸ்திரங்களும் தர்மங்களும் ஏற்படுத்தி எல்லா ஜனங்களும் ஆத்மரக்ஷை அடையும்படி தர்ம்மபோதனை கொடுக்கும் மகான்கள். இவர்கள் இருவகைக்காரர்க்கும் தான் வெகுமதிப்புண்டென்று இருந்தாலும் ஜடபூமியில் பாடுபட்டு ஜடப்பொருள் உற்பத்திசெய்யும் தொழிலாளிகளைப் பார்க்கிலும் ஞானபூமியில் பாடுபட்டு சாஸ்திரம் தர்மம் ஞானம் என்ற சூக்ஷ்மப்பொருள் உற்பத்திபண்ணும் மகான்களுக்கு மரியாதை ஜாஸ்தியென்றும் இவ்விருவகைக்காரர்க்கே மரியாதையன்றி வேறொருவர்க்கும் மரியாதையில்லையென்றும் கூறியிருக்கின்றார். இது திருவள்ளுவர் அபிப்பிராயத்திற்கு ஒத்திருப்பது என்பதற்குச் சந்தேகமில்லை.

பர்த்ருஹரியால் பாடியிருக்கும் சுலோகத்தாலும் அதுவே விளங்குகிறது.

முற்காலத்தில் ஒழுக்கமகிமையும் கல்விமகிமையும் புத்திமகிமையும் பார்த்து மரியாதை செய்தார்களேயல்லாமல் செல்வப்பெருக்கும் தனபூஷணச்செருக்கும் பார்த்து மரியாதை செய்யவில்லை. எவ்வளவு தன பூஷணமும் யுத்தபராக்கிரமும் அதிகார விசாலமுமிருந்தாலும் ராஜாக்கள்கூட வித்வான், ரிஷி என்றால் தலை குனிந்தனர்கள். செல்வபுஷ்டியும் ஆபரணச் செழிப்புமுள்ள துரியோதனனுக்கு மரியாதை ஜாஸ்தியா? ஒரு பூஷணமுமில்லாமல் தவவேடந்தரித்து தர்மவிசாரமாய் தர்ம சுவரூபியாய் சுகுணமாய் தபோமகிமையால் 12,000 உத்தம புருஷர்களுக்கு ஆகாரங்கொடுத்து அவர்களிடம் சதாகாலம் ஞானசம்பாஷணை தொடுத்து தர்ம்மவலியால் பீமனை மலைப்பாம்பின் வாயிலின்றும் மீட்டு, பீமனை நமதம்செய்யவந்த குபேரனை இனியமொழியால் வசப்படுத்திப் பூஜிதையடைந்து, சத்தியந்தவறுதபடி அரசுதுறந்து வனஞ்சென்று துயர் அடைந்த தர்ம்மபுத்திரர்க்கு மரியாதை ஜாஸ்தியா? தர்ம்மபுத்திரர்க்கென்பதில் சந்தேகமில்லை. அற்பபுத்தியுள்ள பாண்டவர்களை ஏங்கும்படி செய்யவேண்டுமென்ற கருத்தின்மேல் ஆடையாபரணங்கள், கீதங்கள், வாகனங்கள், ஸ்திரீகள், சைனியங்கள் சகிதம் பாண்டவாள் இருக்குமிடத்திற்கு சமீபத்தில் வந்து டேரா அடித்து குதூகலங்கொள்ள நினைத்து அக்கிரமங்காட்டி ஜலக்கிரீடைசெய்ய வந்த கந்தர்வனோடு யுத்தஞ்செய்து தோல்வியடைந்து அவனால் கட்டுண்டு ஆகாயமார்க்கங் கொண்டுபோகப்பட்டு அவமானமடைந்த துரியோதனனுக்கு மரியாதையா? வாழ்வுவந்தாலும் தாழ்வுவந்தாலும் சமரசமாய் பந்து அபிமானியாய் தர்ம்மமே தொழிலாயிருந்த தர்ம்மபுத்திரரிடம் வந்து துரியோதனனைச் சேர்ந்த பெண்கள் ஓலமிட அதற்கிரங்கி தர்ம்ம புத்திரர் ஆக்ஞாபிக்க, அதை சிரசில்வகித்து கந்தர்வனைத் தனிமையாக ஜயித்து துரியோதனனை மீட்டவனும், அழற்புலியும் கொடும் ஜீந்துக்களும் அடர்ந்த அடவியில் அஞ்சு வருஷம் ஒரே சித்தமாய் சாக்ஷாத் பரமசிவனையுத்தேசித்து இருந்தநிலை பிறழாமல் கனவிறந்தும் காணுதியிறந்தும் கடுந்தவம்புரிந்து திருலோக கர்த்தாவாகிய பரமசிவனிடம் யுத்தம் பண்ணி பாசுபதாஸ்திரம் பெற்றவனும் தேவேந்திர லோகஞ்சென்று கிரீடியென்னும் பேர் அடைந்து காலகேயர் நிவாதகவசர் என்னும் மகா பலபராக்கிரமமுள்ள அசுரர்களோடு தனிமையாக யுத்தம் நடத்தி அவர்களைப் பூண்டறச்செய்தவனுமாகிய அர்ஜுனனுக்கு மரியாதை ஜாஸ்தியா? அர்ஜுனனுக்கென்பதில் சந்தேகமில்லை. இதனால் மரியாதைக்கும் பூஜைக்கும் அந்தஸ்துக்கும் ஆதாரமாயுள்ளது ஒழுக்கம், கல்வி, புத்தி என்று ஏற்படுகிறதேயல்லாமல் தனவிசேஷத்தால் அந்தஸ்து ஜனிப்பதாய் ஏற்படக்காணும்,



## THE TEN ROOT PRINCIPLES OF LIFE.

1. The world and worldly ever wait for opportunities. (The wise create them.)
2. God plays hide and seek under the veil of Maya to grant clear vision to His votaries.
3. Knowledge without experience is the source of all evils and misunderstanding.
4. Untruth betrays itself, the man and his friends.
5. Those addicted to evil ways will never attain Freedom Great.
6. The insincere man, be he friend or foe, is always dangerous.
7. Death when it comes brings with it the courage to die: Be honest and fear not.
8. As pure gold outshines its dross, so intelligence pure outshines knowledge or "science".
9. Work proper purifies the mind and saves; Thy duty do and *live*.
10. Life and work are like wharp and whoof: Work to live and live to work thus weave thy own destiny.
11. St. Tirumoolar's Three Thousand sayings true when understood well, leads one to Grace and Godliness.

## THE TEN ROOT PRINCIPLES OF LIFE.

### தசமூலக் கொள்கைகள்.

1. "ஓடுமீ னோடிவர ஒருமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு".

2. ஆடுமயி லாடிவர அடியார்மனந் தெளிவுபெற
வோடி யொளிக்குமாம் தெய்வம்.

3. "படுகட்டைபடு" வென்றான் பட்டதெல்லாம்
விட்டுணர, கெடுதியெல்லாம் விளைக்கு மதிகேடு.

4. நட்டாற்றில் கைவிட்டான் நட்பொக்குமே கண்
பட்டாங்கில் லாதான்பால் நண்பு. [டாய்

5. கெட்டார் கேடிழைப்பார் கெடுமதியாட்
பட்டார்க் கெட்டாது வீடென்றுணர்.

6. நட்டாரைப்போல் நடிக்கும் நயவஞ் சகநெஞ்சார்
நட்டாலும் விட்டாலும் கூற்று.

7. கூற்றுவனே தேற்றுவனால் குறையொன்று
மில்லையென்று மாற்றுக்குறை யாதபடிநில்.

8. பத்தரை மாற்றுப் பழுதில்லாத் தங்கம்நூற்
றெட்டரை மாற்றில்நுண் ணறிவாமென்றுழை.

9. உழைக்க வுழைக்க வுழைப்பே பிழைப்பாமென்
றுழைப்ப வுழைத்துப் பிழை.

10. பிழைப்பு முழைப்பு மிழைக்க இழையுமென்
றிழையோட்டித் தானே பிழை.

11. மூலனோதிய மூவாயிரந் தமிழ்கற்றால்
வாலறிவன் நற்றாள்கண் டுய்யலாகும்.

### மனித வர்க்கமும் படிப்பின் அவசியமும்.

கிரேட் பிரிட்டனின்கல்வி யிலாகா மந்திரியான டாக்டர் பிஷர் சில வாரங்களுக்கு முன் யார்க் என்னும் நகரில் பேசியதாவது:—

"நமது குழந்தைகளிலே ஏராளமான பேர் நோய் கொண்டவர்களாகவும், அறிவில்லாதவர்களாகவும் இருக்கின்றனர்; இனி, ஆரம்பப் பாடசாலைகளில் வாசிக்கும்பொழுது, நன்கு போஷிக்கப்பட்டு தக்க படிப்பும் பெற்று வருபவர்களில் ஏராளமான குழந்தைகளோ தங்களது வாலிப வயதில் படிப்பில்லாது போவதனால், அறியாத்தனத்தில் ஆழ்ந்து விடுவதோடு, அநாகரீகமும் அடைந்து விடுகிறார்கள்; இப்படியெல்லாம் இருப்பதனால், நமது ஜன சமூகத்தினருக்குள் பிரமாண்டமான சேதமும் நாசமும் உண்டாய் விடுகின்றன; இதைக் கண்டு நாம் சகித்து வருகிறோம். ஆதலின், நமது கடமை யென்ன? மனித வர்க்கத்தில் அவ்விதம் சேதமும் நாசமும் நேராதபடி பாதுகாக்கவேண்டும்."

## SOCIAL SERVICE : ON THE CULTIVATION OF MENTAL HAPPINESS.

BY A HINDU LADY.

### சமஷ்டிசாதனம் : அகமகிழ் பயிற்சி.

(ஒரு ஹிந்து சகோதரி எழுதியது.)

கார்த்திகைமீ சஞ்சிகை 242-ம் பக்கத்தொடர்ச்சி.

சீதாபிராட்டியார் தனது ஆபத்துகால ஆரம்பமுதல் தான் நடந்துகொண்ட திவ்விய சரித்திரத்தை வெகு சுருக்கமாக நினைவுகூர்வோம்.

கைகேசியின் சூழலால் தன் நாயகன் காட்டுக்குப் போகும்படி நேர்ந்தபோது நாயகனுக்கு அரசு போய்விட்டதே தனக்கு போகபாக்கியங்கள் இல்லையே என்கிறதாய் கொஞ்சமாவது துக்கிக்கவில்லை. ஆனால் எதற்காகத் துக்கப்பட்டார்களென்றால் தன்னை மாமனார் வீட்டில் சௌக்கியமா யிருக்கும்படியாயும் தான் யாத்திரம் காட்டுக்குப்போவதாயும் தன் நாயகர் சொன்னசொல் தன் காதில் நாராசம்போல் துளைத்துச்செல்ல இப்படியும் சொன்னாரல்லவா வென்று விம்மி விம்மி அழுதார். உடனே நாயகரைப் பார்த்து: "தேவரீர் என்ன வார்த்தை சொன்னீர்கள். சக்கிரவர்த்தி தங்களை காட்டுக்குப்போம்படி கட்டளையிட்டால் அடியாளுக்கு வேறேகட்டளை வேண்டுமோ. பர்த்தா அனுபவிப்பதை மனைவியும் அவருடன் அனுபவிக்கிறவளன்றோ? ஆகையால் தங்களைவிட்டுப் பிரிந்திருக்க கொஞ்சங்கூட சகியேன். தங்களுடன் இருப்பதே எனக்கு சுவர்க்கம். தங்களுடைய தோழமையினால் காட்டிலுள்ள தர்ப்பை மூங்கில் முதலியவை இலவம்பஞ்சு மான்தோல் முதலியவைபோல் மிருதுவாகும். தேவரீருடன் புல்லின்மேல் படுத்தபோதிலும் பஞ்சணைமேல் படுப்பதுபோலாம். தேவரீருக்கு கிடைக்கும் உணவு, கனியானாலும் கிழங்கானாலும் மற்றெதுவானாலும் எனக்கு மதுவே அமிர்தம்போலாம். தாயையாயினும், தந்தையையாயினும், நம்மில்லத்தையாயினும், அங்கநுபவித்த சுகங்களையாயினும், கருதி சோகங்கொண்டு தங்களை மனநோவும்படி செய்யேன்," என்று பலவாறாகச் சொல்லியும் தன்னை உடன்கொண்டுசெல்ல இராமருக்கு இஷ்டமில்லையென்று தெரிந்து, தான் சீக்கிரம் உள்ளேபோய் மரவுரியொன்றை அணிந்து இராயரது கையைப்பற்றி நின்றார்கள். காட்டில் இவர்கள் எப்படி காலங்கழித்தனர்?

*பஞ்சவடிதீரத்தில் கோதாவரிநதியோரம் அழகானசோலையில் இலட்சுமணர்கட்டிய ஓர் † பர்னசாலையில் இராமரும் சீதையும் இருந்துகொண்டு இலட்சுமணர் காலையில் கனி கிழங்கு முதலியவற்றைக் கொண்டுவர சீதாபிராட்டி நதியில் ஸ்நானம் செய்துவிட்டு கிடைத்த பண்டங்களை சமையல்செய்து, பர்த்தாவுக்கும் மைத்துனருக்கும் அன்னம்படைத்து தானும் உண்டு சந்தோஷமாக நாயகருடன் விளையாடிக்கொண்டிருப்பார். அச்சோலையில் நதியோரத்தில் இருவரும் உலாவிக்கொண்டிருக்கும்போது அவர்களைக்கண்டு ஒதுங்கும் அன்னத்தின் நடையைக்கண்டு இராமர் சீதையினுடைய நடையையும்பார்த்து அவர் சிரிப்பதும், ஆண்யானை நதியில் நீர் அருந்தி திரும்பிப்போம்போது அதனது பெருமித நடையைப்பார்த்து தன்னுடன் கைகோர்த்துதிரியும் இராஜயானையாகிய இராமருக்கு சமானம் யாரிருக்கிறாரென்று செறுக்குற்று சீதாபிராட்டி நகைப்பதும் உண்டு. அழகான இறகுகளைவிரித்து ஆடும் மயில்களையும், மான்களையும் பூங்கொம்புகளையும், மலைவீழருவிகளையும், இன்னும் இச்சிறுவிடத்தில் சொல்லக்கூடாத அளவிறந்த அற்புதக்காட்சிகளையுங்கண்டு ஒருவருக்கொருவர் காட்டிக்கொண்டு அகமகிழ்வார்கள். மாலையில் சூரியன் அஸ்தமிக்கும்போது தாமரைகள் குவிவது இயற்கை. இவர்களது கைகளாகிய தாமரைகளும் பகவதாராதனைநிமித்தம் தம்சிரமேற்குவியும். இவ்வாறாக தங்களைச் சூழ்ந்துள்ளதைக்கண்டு களிக்கும்

* ஐந்து ஆலமரமுள்ள கரை.
† இலைகளால் அமைந்த வீடு.



இவ்வுத்தமப் பிறவிகளுக்கு, தங்கள் நாட்டைவிட்டதினாலாவது, அரசிழந்ததினாலாவது யாதொரு துன்பமுமில்லை. அரசுசெய்வதினால் ராஜாவுக்கு அதிக மனக்கவலையுண்டு. இராமருக்கு இவ்விடத்திலே யாதொரு கவலையுமில்லாமல் இருவரும் சுகமாகவிருந்தார்கள்.

இவ்வித சுகத்தைக்கெடுக்க பாவி இராவணன் வந்தான். பிந்தி நடந்ததை இங்கு நான் சொல்ல வேண்டியதில்லை. நான் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு சம்பந்தப்படும்வரையில் பேசவேண்டியவளாய் இருக்கிறேன். ஆகையால் நான் இங்கு குறிக்கவேண்டியது என்னவென்றால், நம்வீடுகளில் அற்பவிஷயங்களாகிய துணி மணிக்கு எவ்வளவு சண்டை, கோபதாபம், மனக்கடுப்பு? இவற்றால் சுகமிழந்து எல்லாம்போய்விட்டதுபோல் மூலையில் படுப்பது எவ்வளவு? பாருங்கள்.

அரசு இழந்து காட்டிற்குவந்த தன்னுடைய நாயகருடன் தானும் மரவுரி தரித்துக்கொண்டு காட்டில் வசிக்கும்போது அங்கு பெற்றதைக்கொண்டு அவர்கள் எவ்வளவு சந்தோஷமுடையவர்களாயிருந்தார்கள். அவர்களுக்குக் கிடைத்த உணவாதிகளையுண்டு தம்மைச் சூழ்ந்து எப்பக்கத்திலுமுள்ள ஈசனது அற்புதச்செய்கைகளைக்கண்டு அகமகிழும் சாதனையால் ஆநந்தமடைந் திருந்தார்கள்.

தமக்குக் கிடைத்ததைக்கொண்டு சுகிக்க அறியாத ஜனங்களுக்கு எல்லாப் பாக்கியங்களும் நிறைவாயிருந்தாலும் நித்திய தரித்திரர்களே. பெற்றதைக்கொண்டு அகமகிழ்பவர்களுக்கு சக்கிரவர்த்திகளும் ஈடாகார் என்று சிறிது பழக்கத்தினால் சுவானுபவமாய் நாமே யறியலாம் என்கிற உண்மையை சீதாபிராட்டியின் சரித்திரம் சாட்சி பகர்கிறது.

இன்னொரு சிறந்த குணத்தை நமது சீதாபிராட்டியினிடத்திலிருந்து நாம் கற்கவேண்டியவர்களாயிருக்கிறோம். தான் இலங்கையில் சிறைப்பட்டிருந்த ஏகாந்த நிலையிலும்,

ராஜ்ஜியம் உன்தம்பி பரதனாள நீ காட்டுக்குப்போவென்று கைகேசிசொன்ன காலத்தில் சற்றேனும் மனம்வாடாமல், முன்னினும் மூன்றுமடங்கு மலர்ந்த இராமருடைய * முகாரவிந்தத்தை நினைத்து நினைத்து, சீதாபிராட்டி இவ்வளவு பெருமையான சுபாவம் அவரைத்தவிர மற்ற யாரிடத்திலுண்டு. இப்படிப்பட்ட பிராணநாதனைப் பிரிந்துவிட்டோமேயென்று துக்கித்தார்கள்.

இங்குள்ள அழகைப் பாருங்கள். சீதாபிராட்டி இராமருடைய பெருந்தன்மையைக்கண்டு மகிழ்ந்தது இவ்வளவு அவ்வளவல்ல. அவளுக்கு தன் நாயகர்மீதிருந்த அன்பினால் இராஜ்யம்போனது லட்சியமாகவேயில்லை. தனது நாயகருக்கு அரசுபோக தன்னுடைய சுகங்களெல்லாம் போய்விட்டதே என்கிற தன் † சுயநலவாஞ்சையை முன்னிட்டு துக்கிக்காமல், அவரது குணாதிசயத்தை நினைத்து நினைத்தல்லவோ துன்பப்பட்டார்கள். உத்தமர்களுடைய குணத்தை இங்கு நிதரிசனமாகக் காண்கிறோம்.

குணமுள்ள பதார்த்தங்கள் நமக்கிருந்து நம்மைவிட்டு நழுவினாலும், அவைகளில்லாமலிருந்தாலும் வருந்துவதினால் நமக்கு அதிக நன்மையுண்டு. குணவழகின்மேல் நமது நாட்டம் எப்பொழுது செல்கிறதோ அப்போதே, மனத்தூய்மை நம்மில் உண்டாவதற்கு வழியுண்டாம். குணவழகை நாடாமல் அல்ப விஷயங்களில் நமது நாட்டம் சென்றுகொண்டிருந்தால் மனத்தூய்மையுண்டாகாது. துக்கம் அதிகரிக்கும். மனோசாந்தி நம்மை முற்றும் கைவிடும்.

துக்கங்களை பலமுறை நாமே வருவித்துக்கொள்ளுகிறோமென்பதற்கு இன்னொரு திருஷ்டாந்தமிருக்கிறது. நம்மில் நகைப் பயித்தியம் மெத்தவுண்டு. நாம் பெற்றிருப்பதுடன் திருப்தியடையாமல் ஏதோ வொன்றை சங்கல்பித்துக்கொள்ளுகிறது. அதில்லையே என்கிறதினால் உள்ள சந்தோஷம்போய் மனக்கடுப்பு உண்டாகிறது. இது நம்மோடு போவதில்லை.

* முகமாகிய தாமரை.
† தன் சொந்த சுகத்தின் பொருட்டான ஆசை.

நாயகர்களையும் பிள்ளைகளையும் பாதிக்கும். பூணும் ஆபரணம் வாழ்க்கைக்கு இன்றியமையாததல்ல. ஊண் உறக்கமில்லாமற்போனால் காயம் அழிந்துபோம். நகையில்லாமற்போனால் நேர்வது ஒன்றுங்காணேம். இருப்பதினால் மாத்திரம் பலமுறை கள்ளரால் தீங்குண்டாகிறது. இதினுடைய இலட்சணம் இப்படியிருந்தும் இதில் ஏதோ ஒரு குறை நேர்ந்ததாக வைத்துக்கொண்டு, இதொன்று இல்லாமையால் உள்ள அநேகம் பாக்கியங்களை மறந்து நாம் துக்கிக்கிறதென்றால் நம்மில் எவ்வளவு அறியாமை வெளியாகிறது. சீதாபிராட்டி தான்பிறந்த விடத்தும் புகுந்தவிடத்தும் தனக்குண்டான உலகத்தை விலைக்கு வாங்கத்தக்க அவ்வளவு சிறந்த ரத்தினாபரணங்களையெல்லாம் கழட்டி எறிந்துவிட்டு, நாயகரது தோழமையொன்றிருந்தால் போதுமென அவரது கையைப்பற்றிக்கொண்டு நுழைவதற்கு அரிதான காட்டில் அவருடன்சென்று அங்குள்ள காட்சிகளைக்கண்டு இருவரும் ஆநந்தித்துக் கொண்டிருந்தார்கள். நமக்கு எல்லாமிருந்தும் நம்மனம் கல்பித்த குறையேயன்றி உள்ளதல்லாத ஓர் குறையை நினைத்துக்கொண்டு நம்மைச் சூழ்ந்துள்ள அநேக பாக்கியங்களை மறந்து நமக்கில்லாததைப் பெரிதாக வெண்ணுகிற நமக்கு சுகம்கிடைப்பது அருமை. நாம் பெற்றிருப்பனவைகளைக்கொண்டு ஆநந்திக்கப் பழகுவோமானால், நமக்குண்டாகும் சுகத்திற்கு அளவில்லை. நாம் பெற்றிருக்கும் நன்மைகளை உற்று உணர்வோமானால், அவை அநந்தமென்று ஏற்படும். நம்மைச்சூழ்ந்து எப்பக்கமும் கிடக்கும் ஈசனுடைய அற்புதச்செயல்கள் அளவிறந்தனவாயிருக்கின்றன. அவைகளைக் கண்டு மகிழும்படியான சாதனம் நம்மில் வேண்டும். ஞானாநந்தம் அளிக்கும் நூல்கள் பலவுள. இவற்றால் நமக்குள் உள்ளக்கிளர்ச்சியை பயிற்சிசெய்துகொண்டு நம்மையும் நம்மைச் சூழ்ந்தவர்களையும் சந்தோஷிப்பிக்கச் செய்யவேண்டுமேயன்றி கல்பனரூபக் குறைகளை வைத்துக்கொண்டு நம்மையும் நம்மவர்களையும் துக்கத்திற்குள்ளாக்குவது சுத்த அநாகரீகமும், ஈசனிடத்து அன்பு அற்றவர்களின் செய்கையுமாம். நிமிஷந்தோறும் இலவசமாக பரமவள்ளலிடத்திலிருந்துபெறும் நன்மைகள் எத்தனை! சூழ்ந்திருக்கும் அவரது அற்புதச்செய்கைகளைப் பார்த்துக் களிக்க கண்களைப்பெற்றிருந்தும், குருடனுக்கு அவைகள் பயன்படாமலிருப்பதுபோல நாம் அவைகளை பயன்படுத்திக்கொள்ளாமையால் நமக்கும் பிரயோசனமற்றவைகளாகவே யிருக்கின்றன. சுகம்வேண்டுவது நமது எண்ணமானால் எது செய்தால் அந்த சுகம் நமக்குக் கிடைக்குமோ அதைச் செய்யாமல் சுகத்தையிழக்கும் செய்கையல்லவோ நம்மில் நிரம்பியிருக்கிறது.

"தனக்குவமையில்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலைமாற்றலரிது."

என்று திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளியவாறு ஈசனிடத்து நம்மை சமீபமாக சேர்ப்பிக்கும் சாதனையில்லாமல் வேறுவிதத்தினால் நமது குறைதீராது. உள்ளக்கிளர்ச்சியுண்டாகாது. பார்ப்பாருண்டானால் நிமிஷந்தோறும் நம்மைவிருந்துண்டு களிக்கும்படி செய்யும் அவரது சிருட்டிப்பொருள்களைக் கண்டு களிப்பதினாலும் ஆத்மாநந்தத்தைத் தரும் நூல்களைப் படிப்பதினாலும், நல்லவர்களுடைய சாவகாசத்தாலும் எல்லாரிடத்திலும் அன்பைப் பாராட்டி நமது சுயநலவாஞ்சையை விட்டொழிப்பதினாலும், நமக்கு சுகங்கிடைக்குமேயன்றி இவைகளல்லாத மார்க்கங்களில் சுகமடைவோமென்பது பொய்யெனப் பெரியோர் அநுபவசித்தமாய் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையால் நாமும்பெற்றதைக்கொண்டு அகமகிழ்ப்பயிற்சிசெய்யப் பிரயாசைப்படுவதில் நமக்கு ஜெகதீச னருள்புரிவாராக.



## MUMUKSHUTARAKA, OR, 'THE WAY TO SALVATION.'

By

BHAGAVADH PADHA SRI SANKARACHARIA.

பகவத்பாத ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் உபதேசித்தருளிய

## முமுக்ஷுதாரகம் அல்லது "பஜகோவிந்தம்" என்னும் ஸ்ரீ கோவிந்தமஞ்சரிகா ஸ்தோத்திரம்.

(கார்த்திகை௴ சஞ்சிகையின் 243-ம் பக்கத் தொடர்ச்சி.)

பின்பு, இவ்வாசைக்கு காரணமாயிருப்பது நீர்மேலெழுத்துப்போலும் இச்சரீரத்தின் நிலையாமையை அறியாது நாம் நெடுங்காலம் கற்கோட்டைப்போல் அழியாமல் ஜீவித்திருக்கப் போகிறோமென்னும் பேதைமையாலே நமக்கு மாடுவேண்டும் மனைவேண்டும் என்று எண்ணுவதாதலின் அப்பேதைமை மாறும்பொருட்டு, இவ்வாழ்க்கையானது தாமரை இலையில் நீர்போல அதிசஞ்சலமானதென்றும், இன்னபோதென்றறிய முடியாமல் எந்தக் கணத்திலாயினும் பங்கமாகக் கூடியதென்றும் நான்காவது செய்யுளிற் கூறுகின்றார். அன்றியும், இவ்விதத்தமாகிய வாழ்வுதானும் சுகமுள்ளதோவென்னில் அதுவுமில்லை, எத்தனையோ வியாதிகளுக்கு ஆஸ்பதமாய் அகங்காரத்தால் விளைவனவாகிய அநேக துன்பங்களுக் கிடமானது. ஆதலின் இவ்விதத்தியமான துக்கரூபமான வாழ்க்கையை நம்பி மாடு மனைகளைத் தேடி ஆசையைப் பெருக்குவது அவிவேகமென்று அதே செய்யுளிற் போதிக்கின்றார். எப்படியென்னில்:—

4. "மரைவாளிலை மேன் மணிபோன் மிளிரும்
ஒரு நீருறழுஞ் சிறுவாழ்வுதுதான்
பெருநோயொடுசாதல் பிடித்துலையத்
தருசோக மதிற்றளரும்முலகே."

அதாவது, மனிதருடைய அற்பமான உயிர் வாழ்க்கையானது தாமரையிலைமேற் றளும்பித் ததளிக்கும் நீர்த்துளிபோலச் சற்றும் நிலையில்லாததாகும். அந்நிலையற்ற சிறுவாழ்வுதானும் இன்பத்தைத் தருவதோ வென்னில் அதுவுமன்று: உலகிலுள்ள ஜனங்கள் கொடிய வியாதிகளால் பற்றப்பட்டு அபிமானம் மேற்கொண்டு மிகவும் துயரமுற்று வருந்துவார்கள் என்றபடி.

நமது யாக்கை நிலையில்லாததேயாயினும், மனைவி மக்கள் முதலான சுற்றத்தார் நமக்கு உயிர்போல விரும்பத் தக்கவரன்றோ? அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டும் அவர்கள் நமக்குப் பிற்காலம் அநுபவித்துச் சுகிக்கும் பொருட்டும் ஆஸ்தியைத் தேடிவைக்க வேண்டாமோ வென்னில், அம்மனைவி மக்கள் முதலான சுற்றத்தாருடைய தன்மை நீ அறியாய் போலும் என்று அவருடைய சுபாவத்தையெடுத்து ஐந்தாவது செய்யுளிற் கூறுகின்றார். எப்படியென்னில்:—

5. "தேடுந்திறனுள்ளளவுஞ்செறிவார்
கூடும்பிரிவாற்றமர் பின்கொடுநோய்
நீடுந்தனுவன்னுயிர்நின்றழியும்
கேடின்றிலையோ வெனவுங்கிளவார்."

அதாவது, மனைவிமக்கள் முதலான பந்துவர்க்கங்கள், உனக்குப் பொருள் சம்பாதித்து அவர்களைப் போற்றத் திறமையுள்ளமட்டுமே, மிக்க அன்போடும் உன்னைச்சூழ்ந்து நிற்பார்கள். உனக்குச் சம்பாதிக்கத் திறமை தப்பியபின், கொடிய நோயினால் அடிபட்டு வருந்தி மெலிந்த உன் தேகத்தில் உயிர் இன்னமும் விட்டு நீங்காமல் இருப்பினும்கூட உன்னை உயிருள்ள மனுஷ்யனாகப் பாவித்து லக்ஷ்யம் பண்ணி 'என்ன, இருக்கிறாயா க்ஷேமமா' என்று ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டார்கள் என்றபடி.

ஆதலின் மனைவிமக்கள் முதலான சுற்றத்தாருக்காகப் பாடுபட்டுழைத்து உன்னுடைய ஆன்மலாபத்தை யிழந்து பிறவிக்கு வித்தாகிய வினையைத் தேடிக்கொள்வதுபோல அறிவீனம் வேறில்லை என்றனர்.

பின்னும், அப்படிக்கன்றி ஒருவேளை உன்னிடத்தில் அவர்கள் விசுவாசமாயிருப்பினும்

எத்தனை நாளைக்கு அவர்கள் விசுவாசம் நிலை நிற்கப்போகிறது? உன்னுயுள் மட்டும் தானே, அதற்கு மேலும் உண்டோ? உடலைவிட்டு உயிர் குதித்ததானால் உன்னைப் பிணமென்று கைவிட்டுத் தூர விலகுவார்களே யன்றிக் கிட்ட நெருங்குவார்களா? உன்னையுயிர்போல நேசித்த மனையாள்கூட உன்சவ சரீரத்தைக் கிட்ட அஞ்சுவாளன்றோ என்று ஆறுவது செய்யுளில் கூறுகின்றார். எப்படியென்னில்:—

6. "எந்நாள்வரையெய்திடுமாவியுடல்
அந்நாள்வரையாவருமன்புறுவார்
உன்னுருயிர்போயுடல்பங்கமுறின்
துன்னுவதையஞ்சுவள்தாரமுமே."

அதாவது, ஆவியானது உடலினுள்ளே எத்தனைகாலம் தங்கியிருக்குமோ அத்தனைகாலமும் மனைவிமக்கள் முதலான உறவினரெல்லாரும் உன்னிடத்தில் அன்பு பாராட்டி உன் யோகக்ஷேமங்களை விசாரிப்பார்கள். அவ்வுயிர் தேகத்தினின்று நீங்கித் தேகத்துக்கு அபாயம் வந்தகாலத்தில், உன் மனைவிதானும் அச்சவசரீரத்தை அடுக்க அச்சமடைவாள் என்றபடி.

சிறக, நீ தேடும் பொருளினால் உனக்கு ஆயுள் பரியந்தமேனும் ஏதாவது குணமுள்ளதோ வென்னில், சிறிதும் இல்லை. நீ சம்பாதிக்கும் அர்த்தம் உனக்கே அநர்த்தமாக முடியும். பொருள் தேடிவைத்த பேர்களுக்குக் கள்வர் தாயத்தார் முதலானவர்களாலுண்டாகும் கெடுதிகளேயன்றித் தாம் விரும்பிப் பெற்று வளர்த்த பிள்ளைகளாலும் அநேகம் கெடுதிகளுண்டாகுமென்று அடுத்த செய்யுளிற் கூறுகின்றார். எப்படியென்னில்;—

7. "பொருள்கேடிதரீயறிவாய்புகல்வேன்
வருமோர்சுகமொன்றிலதான்மதியாய்
இருமாநிதிதேடியவர்க்கினிய
அருமாமகராலுமணங்குறுமே."

அதாவது, செல்வமானது எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாகும். இதனை நீ தெரிந்து கொள்வாயாக. அச்செல்வத்தினால் நமக்குண்டாகும் சுகம் சிறிதும் இல்லை. பெருஞ் செல்வத்தை வருந்திச் சம்பாதித்தவர்களுக்கு அவரது இனிய புத்திரர்களாலும் அநேக துன்பங்களுண்டாகும் என்றபடி.

இவ்வாறு மாதர்மீதும் மனைவி மக்கள் மீதும் வைத்த மயலும் காதலுமே பரத்தியானத்துக்கு முற்றும் இடையூறாயிருப்பனவாதலின் முமுக்ஷுவானவன் அவற்றை விட்டொழிதல் வேண்டுமென்று இதுகாறும் விவரித்துக்கூறிய விஷயத்தையே முடிவாகத் தொடுத்துக்கூறி மேலே பிறவிஷயங்களை உணர்த்தப்போகின்றார். ஆதலின், அவ்வாசைகள் தோன்றுதற்குரிய பருவங்களையும் எட்டாவது செய்யுளில் எடுத்துக் கூறுகின்றனர். ஒருவனுக்கு ஸ்த்ரீ சித்தனை உழலுகின்ற யௌவனகாலத்திலும், தாராபுத்திராதிகளில் மனஞ்சென்றுழலும் வார்த்தக்கிய காலத்திலும் தான் பரத்தியானத்துக்கு இடமில்லாமற் போகிறது. அவ்வாசைகள் பற்றாத பால்யப் பருவத்திலாவது பரத்தியானத்துக் கிடமுண்டோ வென்னில், அப்போதும் அந்தத்தியானம் செய்தற்குரிய அறிவும் திறமையும் இல்லாமையினாலும், அப்பருவத்துக்கேற்ற விளையாட்டின்மேல் மனம் செல்லுதலாலும், அது சாத்தியப்படுவதில்லை. ஆதலின், அறியாதகாலமாகிய பால்யத்தில் பரத்தியானம் கைகூடாமையின் அறிவு தோன்றிய பிற்காலங்களிலேனும் அத்தியானத்துக் கிடையூறாயிருக்கும் ஆசைகளையகற்றி மனத்தைப் பரத்தில் செலுத்தவேண்டுமென்று போதிக்கின்றனர். எப்படியென்னில்:—

8. "மழவாய்விளையாடலின் மேன்மனமாம்
உழைநேர்விழிமீதுறுகாளையினே
கிழமாய்மனைமக்களின்மீதுகெழும்
விழையார்பரமாவிமலன்கழலே."

அதாவது, மனிதர்கள் பால்யராயிருக்கும் போது விளையாட்டில் தமது கருத்தைச் செலுத்துவார்கள். யௌவனதசையில் யுவதிகளாகிய ஸ்த்ரீகளின்மேல் தங்கள் மனசைச் செலுத்துவார்கள். கிழத்தன்மையில் மனைவி மக்கள்மேல் மனம் பதிந்தவர்களாயிருப்பார்கள். ஆதலின் ஒருநாளும் சர்வோத்தமனாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் திருவடிகளைத் தியானிக்கமாட்டார்கள்—என்றபடி.

(இன்னும் வரும்.)



## NATURE STUDY.
## A DISCOURSE OF BIRDS.
## பிரகிருதி வித்தியாம்சம்.
## பக்ஷிகளைப்பற்றி.

### காகம்.

பக்ஷிகளைப்பற்றி ஆங்காங்கு தமிழ் நூல்களிற் கூறப்பட்டுள்ளவைகளிற் சிலவற்றை இங்கு விவரிப்போம். பக்ஷிகள் எல்லாவற்றிலும் நமக்கு நன்றாகத்தெரிந்தது காகம். இதனிடத்து அநேக நற்குணங்களுள்ளன. இது அதிகாலையிலெழுந்து கா கா வென்று கத்தி நம்மை நம் வேலைகளுக்கு எழுப்புவது யாவர்க்கும் தெரிந்த விஷயமே. இதுவன்றி தனக்குக் கிடைத்த தொன்றைப் பிறருக்குக் காட்டாமல் தானே தின்னும் கெட்ட சுபாவம் இதனிடத்தில்லை. தன்னினங்களைக் கூவியழைத்து அவற்றோடு பகிர்ந்துண்ணும் தன்மையுடையது. இவ்வுத்தமகுணத்தைத் திருவள்ளுவ நாயனார் திருக்குறளிலே சுற்றந்தழால் என்னும் அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே யுள.

எங்ஙனம் காக்கையானது தனக்குக் கிடைத்ததோர் உணவை தன் சுற்றங்களுக்கொளியாமல் அவற்றைக் கூவியழைத்து அவற்றோடு பகிர்ந்துண்கின்றதோ அதுபோல் எவரொருவர் தமக்குக் கிடைத்த செல்வத்தைத் தம் சுற்றத்தாருக்குக் கொடுத்துத் தாமும் அனுபவிக்கின்றார்களோ அவர்களுக்கே செல்வம் மேன்மேலும் விருத்தியாகும் என்று திருஷ்டாந்தமாகக் கூறியிருக்கின்றனர். இன்னம் காக்கைக்கும் கூகைக்கும் நெடுநாளாகத் தீராவயிரம் உண்டென்பதை பஞ்சதந்திரத்தில் சந்தி விக்கிரகமென்னும் பாகத்தைப் படித்தவர் பலரும் அறிவாரன்றோ. இவ்விஷயத்தையும் வள்ளுவர் தமது முப்பானூலில் காலமறித லென்னும் அதிகாரத்தில் திருஷ்டாந்தமாகக் கண்டிருக்கின்றனர்.

"பகல் வெல்லும்கூகையைக் காக்கையிகல் வெல்லும்
வேந்தர்க்குவேண்டும் பொழுது"

இராக்காலத்தில் தன்னை யெதிர்த்து வெல்லுகின்ற கூகையை எப்படிக் காகமானது அதற்குக் கண் தெரியாத பகற்காலத்தில் சமயமறிந்து கொல்லுகின்றதோ அவ்வாறே அரசர்களும் சமயமறிந்து பகைவர்களை வெல்ல வேண்டும் என்றபடி. இன்னம் இப்பக்ஷியானது எச்சில் மலம் பிணம் முதலிய துர்க்கந்தமும் அசுத்தமுமான பதார்த்தங்களை விரும்பியுண்டு நமக்கு வெகு உபகாரத்தைச்செய்வது. இதனால் நமக்கு மிக்க நன்மையேயாயினும் இக்குணம் தீக்குணமே யாதலால் இதனை ஔவையார் மூடரை மூடர் விரும்புதற்கு உதாரணமாகக் கூறியிருக்கின்றனர்.

"நற்றாமரைக் கயத்து நல்லன்னம் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கருகப்பர் முதுகாட்டிற்
காக்கையுகக்கும் பிணம்."

தாமரை வாவியை அன்னபக்ஷியானது விரும்பி யடைதல்போலக் கற்றுணர்ந்த அறிவுடையோர்களை அவர்போலும் கற்றுத்தேர்ந்த அறிவுடையார்களே விரும்புவார்கள். அன்றி எப்படி அருவருப்பான தீக்குணமுள்ள காக்கையானது அருவருப்பான பதார்த்தத்தையே இச்சிக்கின்றதோ அதுபோல கற்றறிவில்லா மூடர்கள் தம்போலும் மூடர்களையே இச்சிப்பார்கள் என்றபடி.

### கொக்கு.

இதுதவிர நூல்களில் திருஷ்டாந்தமாகச் சொல்லப்படும் இன்னொரு பக்ஷி கொக்கு. இது ஓராயால் ஏய்ப்புண்ணப்பட்டதாகச் சொல்லி யிருப்பினும் மிக்க கபடகுணமுள்ளது. இது மீன்களை வஞ்சனையால் ஏமாற்றித் தன்னிருப்பிடத்துக்குத் தனக்குணவாகும்படிக் கொண்டுபோய்ச் சேர்த்து முடிவில் அச்சூதை யறிந்த ஓர் நண்டால் மாண்ட செய்தி பஞ்சதந்திரக் கதையிற் பார்த்திருக்கலாமே. இது நீர்த்துறைகளில் ஒற்றைக் காலால் தபசுசெய்வதுபோல் நின்று கண்ணை

மூடிக்கொண்டு தூங்குதல்போலப் பாவித்துச் சமயம் நேர்ந்ததும் மீன்களை நறுக்கென்று ஒரே கொத்தாய்க் கொத்தி வாயிற் போட்டுக் கொண்டு விடும் அன்றோ? இவ்விஷயத்தை யும் நாயனார் தமது பொய்யாமொழியில் காலமறிதலென்னும் அதிகாரத்திற் கண்டிருக்கின்றனர்.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து."

அதாவது அரசர் தமக்குச் சமயம் நேராத காலத்தில் கொக்கைப்போல் அடங்கியிருந்து தகுந்தசமயம் நேர்ந்ததும் அக்கொக்கு எவ்வாறு குறிதவறாமல் கொத்தித் தன்னிரையைக் கொல்லுகின்றதோ அவ்வாறு சமயம் கண்டு பகைவரை வெல்லவேண்டும் என்றபடி. இக்கருத்தையே ஔவையாரும் கூறுகின்றனர்.

"அடக்கமுடையா ரறிவிலரென்றெண்ணிக்
கடக்கக்கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீனோட வுருமீன்வருமளவும்
வாடியிருக்குமாம் கொக்கு."

மயில், குயில்.

இனிக்காவியங்களில் சோலைவர்ணனைகளில் முதன்மையாக நிற்பவை மயிலும் குயிலும். மயில்கள் தம் அழகாகிய சிறகுகளை விரித்து நாட்டியப்பெண்கள்போல விநோதமாக ஆடுதலைப் பலரும் பார்த்திருக்கலாம். இத்தன்மையைச்சுட்டி நைடதத்தில் சோலை வர்ணனையில் அதிவீரராமபாண்டியர் வெகு இனிமையாகக் கூறுகின்றார்.

"அலையொலிமுழ வெழவளியின்கம்பலை
குலவிய சுருதியாக்குயில்கள் பாண்செய
விலவுபூந்தண்டலை யாங்கினீடிய
கலவமாமயில்களித்தாடக்கண்டனன்."

அதாவது பூந்தடத்திலெழுந்து மோதுகின்ற அலை முழக்கம் மத்தளவோசைபோலச் சத்திக்க வண்டுகளின் ரீங்காரத்தொனி சுருதி கூட்டியதுபோல ஒலிக்கக் குயில்கள் இனிமையான ராகங்களைப்பாடச் சோலையாகிய அரங்கினிடத்தே நீண்ட தோகைகளை விரித்து மயில்கள் நாட்டியப் பெண்கள்போல ஆடுவதை அரசன் கண்டான் என்றபடி. குயில் இனிய குரலுக்குப் பெயர்போனது. காக்கையும் குயிலும் ஒருவாறு உருவத்தில் ஒத்திருக்கும். ஆயினும் இரண்டினுக்கும் எத்தனை பேதம்! இவ்விஷயத்தை உருவத்தா லொத்துக் குணத்தால் வேறு படுவாருக்கு உவமையாகக் கவிகள் சொல்வது வழக்கம்.

"வாக்கு நயத்தாலன்றி மற்றவரிற் கற்றவரை
ஆக்கை நயத்தாலறியலாகாதே—காக்கையொடு
நீலச்சிறு குயிலை நீடிசையாலன்றியே
கோலத்தறிவாரோ கூறு."

இக்குயிலைக் காமநூலார் மன்மதனுக்குக் காளவாத்தியமாகக் கூறுவர்.

"தேரிளந்தென் றலாகச்செழுங்குடை மதியமாகத்
தூரியங்கடல்களாகச் சொற்குயில்காளமாக
நாரியர் சேனையாக நறைவண்டு விடுதூதாகப்[ற்றி."
பாரினில்விசயம் செய்யும்படைமதன் சரணம்போ

என்று மதனநூலில் கூறியிருக்கின்றனர். மயிலானது கார்காலத்துப் பக்ஷி, குயில் கோடைகாலத்துப் பக்ஷி. மயிலுக்கு நீருண்ட மேகத்தைக் காணின் மிக்க களிப்பும் குயிலுக்குத் துயரும் உண்டாகும். இவ்விஷயத்தை நைடதத்தின் நாட்டுப்படலத்தில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

"பூங்கரும்புடைந்ததீஞ்சாறடுபுகைபுயலென்றெண்ணி
மாங்குயிற்றெருழுதியாவும்வாய்விடாதொழிந்தமஞ்ஞை
தூங்கிசைவண்டும்தேனும் சுரும்பொடுஞிமிறும்பாடத்
தேங்கமழ் சோலைதோறும் சிறைவிரித்தாடுமாதோ."

அதாவது, ஆலையிலடித்த கருப்பஞ்சாற்றை வெல்லமாகக் காச்சும்காலையி லெழுகின்ற புகையை நோக்கி அது புகையென்றுணராது முகிலென்று மயங்கி, மாமரத்தில்விரும்பி யிரா நின்ற குயில்களெல்லாம் துயர்கொண்டு வருந்தி உல்லாசமிழந்து மௌனமாயிருக்கும். அப்புகையையே மயில்களும் கண்டு மயங்கிக் களிப்புடன் வண்டுகளின் பாடலிற்கேற்பச் சோலைகள்தோறும் நர்த்தனம் செய்யும் என்றபடி.



மேகத்தைக்கண்டு மயிலுவக்கும் என்னும் இவ்விஷயத்தைக் குறித்துப் பாரதத்தில், கிருஷ்ணன் தூதுச்சருக்கத்தில் கண்ணபிரானைக்கண்டு குந்திதேவி களித்தனள் என்னும் கட்டத்தில்

"மண்டலமதியமன்ன மாசறு முகத்தினளும் [டுகண்டு
திண்டிறன் மருமகன்றன்னைச் சென்றெதிர்கொண்
வெண்டினரமகரவேலை விரிபுனன் முகந்துதோன்றும்
கொண்டலை மகிழ்ந்துகாணும் குளிர்பசுந்தோகைபோ
[ன்றாள்."

அதாவது "பூரணசந்திரனைப்போல விளங்குகின்ற திருமுகத்தையுடைய குந்திதேவி தனது மருமகனாகிய கண்ணபிரான் வருதலைக் கேட்டு எதிர்கொண்டு சென்று கண்டு, கடல் நீரையுண்டு மேலெழுந்த கார்மேகத்தைக் கண்டு களிக்கும் அழகிய பசுந்தோகையைப் போன்றாள்" என்று வில்லிபுத்தூரார் எவ்வளவு இனிமையாகக் கூறுகின்றனர்.

குயிற்பக்ஷிகள் மாமரத்தை இச்சித்து மேவும் என்பது நூல்களிற் காணப்படும். அதனைப் பின்வரும் பாடலிற் குறிப்பிட்டுள்ளது.

"தேமிருக்கும் மாந்தளிரைச் செந்தீயமென்றும்,
பூமுருக்கையத்தீப் பொறியென்றும்—காமிருக்கும்
மாப்படுமே யென்றெண்ணிவாடி மனம்தளர்ந்து
கூப்பிடுமே யந்தக்குயில்."

குயில் தன் குஞ்சுகளைத்தானே பேணாது காக்கையின் கூட்டில் முட்டை யிடுமென்றும் அவற்றைக் காக்கை யறியாமல் தன்னவாகப் பாவித்துக் குஞ்சு பொரித்து வளர்க்குமென்றும் வளர்ந்தபின் அக்குஞ்சுகள் காக்கையின் தலையிலொரு குட்டுக்குட்டி விட்டுப்போய் விடுமென்றும் சொல்லுவர். மேனூலார் இது மற்றப் பறவைகளின் கூட்டில் உறைந்திருக்கும் என்றும் அவற்றின் முட்டைகளை யுண்டு விடுமென்றும் கூறுவர். மேனூலாரும் இதன் பாடலைப்பற்றி வெகுவாகச் சிறப்பித்துச் சொல்வர். 'வோர்ட்ஸ்வர்த்' (Wordsworth) என்னும் மகாகவி யொருவர்,

கோகிலமே யின்னையொரு புள்ளென்று கூறுகவோ
ஆகுமதுவல்லாத கல்வானில்—மோகமொடு
என்னைப்பாடித்திரியு மொருவாணியென
என்னைக்கூறுகவோவின்று.

என்று அதன் தொனியைச் சிறப்பித்துக் கூறுகின்றனர்.

**A GLANCE AT SRI KRISHNA.**

" Falseness dies, injustice and oppression in the end of every thing fade and vanish away. Greed, cruelty and selfishness and inhumanity are shortlived; the individual suffers but the race goes on. The larger view always and through all shams, all wickedness, discovereth the TRUTH that will, in the end, prevail; and all things surely, inevitably and irresistibly work together for good."

ஸ்ரீ கிருஷ்ணப் பிரபாவம்.

"மாணிக்சத்தோற்றமும் ஜோதி ப்ரவாஹமும்."*

நல்லவர்க்கெல்லாம் நடுநாயகமான வல்லவனொருவ னிருக்கின்றனன்! அவன் ஆளுக் கேற்றதுபோலும் வேளைக் கிசைந்தது போலும் வேடம் போடும் நாடகக்காரனுயினும், கெட்ட தொன்றும் பொட்டென விளைப்பதில்லை. ஆன்மாக்கள் உயர்ந்து ஆனந்த மடைவதே, என்றும் அவனுக்கு நன்றாகிறது. அவர்கள் நிலைமைக் கேற்கத் தலைமை பூண்டு, அற்புதம் புரியும் பொற்பினன் அவன். மீனாய்த்தோன்றி மீடுக்கொழித்தா னொருதரம்! கூர்ம்மாகி ஆர்வம் விளைத்தான் ஒருதரம்! பன்றியாய்ப் பாரிடந்து நன்றே விளைத்தான் பிறிதொருதடவை! பின்னர் அவனே மன்னிய சிங்கமும் மனிதனுமாகி, சிறுவனைக் காத்துக்கொடியனைக்கொன்றான்! வாமனனாகிப் பூமியும் வானும்புகழ்பெற அளந்தான்! பரசுராமனாய்ப் பிறகு அரசராமனாயினன்!

ஸ்ரீகிருஷ்ணன் அவதாரம்.

இப்பொழுது ஒருநாள் அர்த்த ராத்திரியாய்விட்டது! இரவினு லுண்டாகும் இருள் போதாது, மருளும் இணையாய்த் தோன்றின. இவ் அகாத வேளையில் தகாத கோலம் பூண்டு, சுத்த சத்துவராகும் நற்றவரொருவர், சற்று முன் சனித்த சித்திரக் குழந்தை யொன்றைக் கைத்தலத்தேந்தி அயலார்க்குத் தெரியாமல்

* ஸ்ரீ கிருஷ்ணசைதன்ய சரித்திரம் எழுதிய தி. பக்தவத்ஸலம் பிள்ளையவர்கள் இயற்றியபாயிரத்தி லிருந்தெடுக்கப்பட்டது.

வெளியே செல்ல முயலாது முயலுகின்றார்! அவரிருந்த இடமோ, அரணும் அரங்கமும் கோட்டையும்! கொத்தளமும் காவலாளரும் ஏவலாளரும் சுற்றிலும் நின்று முற்றிலும் காத்த கொற்றவர் மாளிகையா யிருந்தது! இவைகளைக் கடந்து எப்படிச் செல்வதென்று இல்லாத தெல்லாம் எண்ணி யெண்ணி இப் பெரியவர் ஏங்குகின்றார்! வாட்ட மென்பதே இவர் நாட்டந்தன்னில் ஒட்டம் பெற்றிருந்தது! தேகம் வன்மையுற்ற தாயினும், தாகம் ஏதோ இவர் மனதைத் தவிக்கச்செய்ததால் ஏகமாய் இளைத்துக் காட்டிற்று! காலிலே விலங்கும், கதவிலே தாளும்! சுற்றியும் காவல் மெத்தவும் தொந்தரை! இத்தனையும் தாண்டி எப்படிச் செல்வார் வெளியில்? இவ்வண்ணம் எண்ணியும் எண்ணுதற்குமுன், காலின் விலங்கும் நாலாய் ஒடிந்தது! கதவின் தாளும் அதமாய்ப் போயிற்று! ஊக்கங் கொண்ட காவலாளர் ஏக்கம் பெரிதாய் நோக்கம் நீங்கித் தூக்கம் தாங்கினர்! இதுதான் சமயமென்று, மெல்லப் புறப்பட்டார் நல்லவரும்! வெளியில் வந்தார், ஒளியும் கண்டார்! இருட்டையும் நோக்காது, பயமுங்கொள்ளாது, குழந்தையைத் தாங்கிச் செல்கிறார்! அந்தக் குழந்தையோ வெகு சுந்தரமானது! அதன் நிறம் நீல நிறமாயினும் ஒளியோ மெத்தவும் சுத்தமாய் விளங்கிற்று! அதனுடன் ஆகாயத்திற்குப் போட்டிபோட முடியாது. மேகமாகிற போர்வை போட்டுக் கொண்டது! அப்பொழுதே இருந்து இருந்து கையையும் காலையும் அசக்குவதாலும் ஆட்டுவதாலும், மெய்யாக அக்குழந்தை செய்யாத துடுக்குகள் செய்யுமென்பது நன்றாய் விளங்கிற்று! அது சிறிது அயர்ந்து கண்ணை மூடிக்கொண்டிருந்ததாயினும், நல்ல தூக்கமில்லையென்று சொல்லலாகும்! ஆயினும் அப்பெரியவர் அருமைக் குழந்தையை அங்கையிற்றாங்கிச் சென்றுகொண்டிருக்கிறார்! இரவும் முற்றிக்கொண்டேவர, இருளும் மிகுத்துக் கொண்டே வந்தது! உள்ள தொந்தரை போதாதென்று, ஊருக் கருகிலுள்ள ஆறு ஒன்றிலும் பூரணப் பிரவாகம் கோரமாய்ப் போய்க்கொண்டிருந்தது. இதையெண்ணி அதிகம் வருந்தின ராயினும், ஓயாத அவர் நடைவேகம் சாயவில்லை! * * *

என்ன ஆச்சரியம்! ஐயன் செல்வதற்கு ஆறும் வழிவிட்டது! அவ்வழியாகவே போய், ஆயர் பாடி யடைந்தார்! அசோதையின் பிரசவக் கிரஹத்திற் பிரவேசித்து இக்குழந்தையை அங்கே வைத்தனர்; யார்க்கும் தெரியாது திரும்பினர். இந்த சந்திரப் பிரகாச சுந்தர வடிவினனே, ஸ்ரீ கிருஷ்ணன்!

### கம்ஸன் சூழ்ச்சி.

ஏன் இவ்வாறு நடக்கவேண்டும்? மேற் சொன்னவைகளில் எத்தனை மயக்கங்கள், எத்தனை தியக்கங்கள்! இவ்வாறு நடப்பதற்கு யாது காரணம்? சொல்லுமின் சொல்லுமின் என்று மெத்த அவசரம் எத்திசையிலும் காண்கின்றது.

அரக்கர் அம்சமுடையவனும், நல்லவருக்கு ஹிம்சை விளைப்பவனும், எல்லாரையுந் தொம்ஸம் செய்பவனு மிருந்த பொல்லாத கம்ஸன் என்பவன் கண்ணனுக்கு மாமன். கண்ணனால் தனக்குத் துன்பம் உண்டாகுமென்றும், உயிருக்கே ஆபத்து உண்டாகுமென்றும் அவன்முன்னமே அறிந்திருந்ததால், எப்படியாயினும் அக்குழந்தை பிறந்தவுடனே அதைக் கொன்றுவிடல் வேண்டுமென்று இரவும் பகலும் ஓயாக் கவலை கொண்டிருந்தான். இதனாலேயேதான் கிருஷ்ணன் தந்தை தாயாகிய தேவகீ வசுதேவர் தங்கியிருந்த அறையைச் சுற்றிக்காவல் வைத்திருந்தும் இவன் செய்த இந்திரசாலத்தைத் தந்திரமாய் மாய்த்துவிட மஹேந்திரசாலம் புரிந்து மாயவனும் வேறிடம் போய்ச் சேர்ந்தான்.

கம்ஸனோ பொல்லாத காதகன், பழிபாவத்திற் கஞ்சாத பாதகன், துயரஞ்செய்து தொல்லை விளைக்கும் கோதகன்! இவன் விழிகள் மிகச் சிவந்திருப்பவை, இவனுடைய கோரத் தொழிலைக் குறிப்பாய்க் காட்டுகின்றன. இவன் தடித்த உடலும், கருத்தமேனியும், பருத்த உதடும், இவன் பயங்கரத்தை விளக்குகின்றன. மலைபோல் மூக்கு உயர்ந்திருக்கிறது; எந்நேரமும் பல்லை நறநற வென்று கடித்துக்கொண்டிருப்பான். இச்சண்டாள மிண்டாளன், பிறந்த குழந்தை மறைந்து போயிற்று என்றறிந்தவுடனே, துடித்தான் பதைத்தான், இரைந்தான் எழுந்தான்! கோபம் மீறித் தாபங்கொண்டான்! கோபாவேசம் கொழுந்துவிட் டெரிவதால், வாய்பேச வகையற்று நின்றான்; திகைப்புற்றான், அலக்கணுற்றான்; உள்ள மெரிகின்றது உதடு துடிக்கின்றது; சற்றுப் பொறுத்தான்: பூதகி, சகடாசூரன், அகாசூரன், பகாசூரன் முதலானவர்களை யேவி அக்குழந்தையைக் கொல்ல வகைதேடினான். இதனால் இவர்களெல்லோரும் நாசமாயினரே யன்றி, குழந்தைக்கொன்றும் குறையில்லை.

### கிருஷ்ணன் வளர்ச்சி.

இவ்விதமாய் எவ்வித அபாயத்திற்கும் உட்படாமல், சுக்கிலபக்ஷத்துச் சந்திரன்போல், ஸ்ரீ கிருஷ்ணன் அதிசுந்தர லாவண்யத்துடன் வளர்ந்து வருகிறான்! இவன் சுந்தரமுகமும் சுயம்பிரகாசமும், முல்லையைப்பழித்த பல்லழகும், முத்தை யிகழ்ந்த முறுவலின் வனப்பும், ஒவ்வொருவரையும் மயக்கிவிட்டது. இவனை விட்டுப் பிரிவதென்றால், எவருக்கும் வருத்தமாயே யிருந்தது. இப்பொழுது கிருஷ்ணனுக்கு வயது பதினொன்றானது. ஆயினும் தந்தை தாயாரும் ஐந்து வயது தான் மைந்தனுக்கென்று அவனிடம் இடைவிடா நேசம் பாராட்டி வந்தார்கள். அவன் சிறிது வெளியே செல்வதென்றாலும், அவர்கள் பெரிதும் வருந்தி யுருகிவிடுவார்கள். அவனுடைய நண்பரோ, தம் வயதுக்கிசைந்த இசையினனென்று அவனை எண்ணுவார்கள். பால்ய ஸ்திரீகள் தம் அழகுக்கிசைந்த வெகு சுந்தர சுகுமார யௌவன லாவண்ய மன்மதனென்று அவனிடம் மயக்கம் கொள்ளுவார்கள். ஞானிகள் அவனை ஞானஸ்வரூபியென்று நவிலுவார்கள். துஷ்டர்கள் தம் ‘வள்ளல்’ வெளியாகுமே யென்று கஷ்டங் கொள்ளுவார்கள்.

(இன்னும் வரும்)



## SHIVA AND THE SQUIRREL.

## *சிவனும் அணிலும்.

[பின்வரும் பாட்டு ‘ஸர் எட்வின் ஆர்னல்ட்’ என்னும் பேர்போன ஆங்கிலேய கவிஞர் அணிற்பிள்ளையின் முதுகிலுள்ள கோடுகளுக்குக் காரணமாகச் சொல்லும் கதையை இங்கிலீஷில் இனியபாட்டாகப் பாடியிருந்ததிலிருந்தெடுத்து மொழிபெயர்க்கப்பட்டது. இதில் கண்ட கதை சாதாரணமாகத் தென்னிந்தியாவில் வழங்கும் கதைக்கு வித்தியாசப்படுகிறது. நம்மவர் எல்லாருக்கும் தெரிந்த கதையை ஐப்பசிமாசத்து சஞ்சிகையில் 220-ம் பக்கத்தில் ராமனும் அணிலும் என்று பாட்டாகப் பிரசுரித்திருக்கிறோம்.]

யாவையும் படைத்த சிவனொரு மேனாள்
அன்றிற்† கூட்டம் அகலாது உறையும்‡
பனஞ்சோலைதனில் உலாவும் போழ்தில்,
மயிரடர் வாலும் ஒளியுறு கண்ணும்
சாம்பல் நிறமும் வாய்ந்ததோர் அணிலைக்
கண்ணிற் கண்டான் கடற்கரை தன்னில்;
கரைமோது அலைக்குக் கொஞ்சமும் அஞ்சாது
உவர்நீர் ஆழ்ந்து அது மூழ்கி மூழ்கிக்
கரையின் சேர்ந்து உடம்பினீர் சிலிர்த்துப்
பின்னும் மூழ்கிப் பின்னும் சிலிர்த்து
இவ்வாறாகப் பலமுறை செய்யப்
பார்த்துப் பரமன் மிகவும் வியந்து,
‘சின்னஞ் சிறிய மூட அணிலே!
என்ன நீ செய்வது எனக்கது இயம்பு
பெருங்கடலலையில் சிறுவால் நனைத்துக்
கருங்கடல் நீரைக் கரையிற் சிலிர்ப்பதேன்?’
எனச்சிவன் கேட்க இவ்வணில் கூறும்:—
“சிறப்புற் றோங்கும் சிவபெருமானே!
வறட்டக் கருதினன் வாரியை; ஏனெனில்
அகோர மானதோர் அரும்புயல் நேர்ந்து
பருத்த இந்தப் பனையினைச் சாய்த்து
அதில்நான் முடைந்த அருங்கூட் டினையும்
அத்துடன் வீழ்த்தி அல்லல்செய் ததுவால் §
பனைகருங் கடலின் பக்கமாய் வீழ்ந்ததால்
கூட்டில் வசிக்குமென் குஞ்சும் மனைவியும்
அலையினில் அடிபட்டு அதன்மேல் மிதக்கும்
அதனால் யானிங்கு அல்லும் பகலும்

* Translated from Sir Edwin Arnold's poem entitled "Shiva and the Squirrel." This is however quite different from the popular version, which we published in the october issue.

† அன்றில்=அணிற்பிள்ளை, ‡ உறையும்=வசிக்கும்.
§ வீழ்த்தது+ஆல் (அசை.)

சிறுவால் நனைத்துச் சிதறுவன் அதினீர்.
உறுதியாய் உழைத்தால் ஒருநாள் கடையில்
கடலை வறட்டிக் காக்கக் குஞ்சினை
எண்ணியே இவ்வாறு உழைப்பே னயினன்.
என்வால் அதனால் இற்றூ லுஞ்சரி."
என அணில் சொல்லச் சிவன்விடைசொல்வன்:
'அசந்தர்ப்ப மான அணிலே! கேளாய்
உண்மையில் அதுவோர் உதாரண மாகும்
பாரினில் வசிக்கும் பலகுடும் பத்தார்க்கு
எல்லாக் கணவரும் இதுபோல் நன்றியும்
எல்லாத் தந்தையும் இதுபோல் அன்பும்
பூண்டா ராயின் பூமியி லிருக்கும்
மனிதர் யாரும் வாழ்வர் சுகமே,
யான்சிருட் டிக்கும் ஆருயிர் அனைத்தும்
கழிக்கும் இன்பமாய்க் காலம் தனை' யெனச்
சொல்லி மகிழ்ந்து சுவர்க்க நாயகன்
பிரியமாய்க் குனிந்துதன் பெரிய கையினால்
பல்லுயிர் அனைத்தையும் படைத்த கையினால்
திராக்ஷக் குலையினை யாம்பிடிப் பதுபோல்
அண்ட மனைத்தையும் ஆட்டும் கையினால்
தடவினன் முதுகில் தயவுபுரிந்தே.
உறுதிப் பாடுடன் உழைக்கும் அணிலை,
மூக்கு முதலதன் வால்நுனி வரைக்கும்
பச்சைக் கோடுகள் படர்ந்தன முதுகில்!
நான்கு கோடுகள் நரைத்த முதுகில்
அன்பிற் கொருநல் லடையா ளமதா
தெய்வக் கையினால் செயப்பட் டனவே.
அவன்பின் உயர்த்திய அந்தக் கையினை
சுருளுங் கடற்குச் சுட்டிக் காட்டினன்
அலறும் கடற்கு ஆட்டிக் காட்டினன்
நாதனை அறியும் நாயினைப் போல
அதனால் அக்கடல் அலையற வடிந்து
கடற்பூண் டினையும் கற்குன் றினையும்
காட்டிக் கொடுத்துக் கர்த்தன் தனக்கே
அவ்வா றாக அப்பனை தன்னையும்
கண்ணிற் காட்டிக் கணத்தில் வடிந்தது.
அப்புறம் அணிற்பினை அடர்ந்த வாலினை
உயரத் தூக்கி விரையச் சுருட்டி
விரைந்தோடினது வீட்டின் அண்டை;
குலைந்து போனபுற் கூட்டினைக் கிட்டிப்
பெண்டினைக் கண்டு பிள்ளையைக் கண்டு
பிரியமுடன் கேச்சிட் டளவளாவி
சாவ தானமாய்க் கரைக்குக் கொணர்ந்தது.
அப்போ தம்கோர் அதிசயம் என்னெனில்
சிவன்தன் கையினாற் செய்த கோடுபோல்
குஞ்சின் முதுகும் கோடிட் டிருந்ததே!

## CHILDREN'S PAGE:
### (FROM GRIMM'S FAIRY TALES.)
### சிறுவர்க்கான பக்கம்:
### மேற்றிசைக் கூளிக்கதைகள்.
#### (பேதைமதியின் அதிர்ஷ்டம்.)

பேதைமதி என்பான் ஒருவன் ஏழுவருஷ காலம் ஒரு யஜமானனிடத்தில் பணிபூண்டிருந்தான். ஒருநாள் யஜமானனிடத்தில் போய் "நான் வந்து வெகு நாளாயிற்று என் வீட்டையும் தாயாரையும் பார்க்க ஆசை அதிகமாயிருக்கிறது. ஆகையால் என் சம்பளத்தைக் கணக்குப் பார்த்துக் கொடுங்கள்" என்று கேட்டான். யஜமானன் அதைக்கேட்டு "நீ மிக்க விசுவாசத்தோடும் சோம்பலின்றியும் உழைத்தாய். ஆதலால் உன் சம்பளம் யதேஷ்டமாக கணக்காகிறது" என்று சொல்லி, அவன் தலைபத்தனை பெரிதுள்ள ஒரு வெள்ளிக் கட்டியை அவனுக்குக் கூலியாகக் கொடுத்தார்.

2. பேதைமதி தன் மேல்சவுக்கத்தை விரித்து அதில் அவ்வெள்ளிக் கட்டியைவைத்து, மூட்டையாகக்கட்டித் தன்தோளில் போட்டுக்கொண்டு தன்னூரை நாடிப்போனான். மூட்டை கொஞ்சதூரம் போகவே கனத்துத் தோன்ற, வேகமாய் செல்லமுடியாமல் அடிமேலடிவைத்து நடந்துகொண்டிருக்கையில் மிக்க உற்சாகத்தோடும் ஒருவன் குதிரைசவாரி செய்துவருவதை யெதிர்கண்டான். "குதிரை சவாரிசெய்வது எவ்வளவு நேர்த்தியானது! அதோ! அவன் தன்வீட்டு நாற்காலியிலிருப்பதுபோல எவ்வளவு கம்பீரமாக வீற்றிருக்கிறான். அவன் கால்கள் கல்லில் இடரா. பாதரக்ஷையும் தேயாது. அவனும் மிக்க உற்சாகத்தோடு போகிறான்" என்று சொன்னான். குதிரைமேல் வந்தவன் அதைக்கேட்டு, "ஏன் நீ கால் கடுக்க நடக்கிறாய்"? என்றான். அதற்கிவன் "இந்த வெள்ளிக்கட்டியை நான் தூக்கிக்கொண்டு போகவேண்டியிருக்கிறது. அது



வெள்ளியானாலும் தூக்கமுடியாதபடி அவ்வளவு கனக்கிறது. தோளும் மெத்த எரிகிறது' என்றான். "நான் உனக்கிந்தக் குதிரையைக் கொடுத்து விடுகிறேன். நீ எனக்கு அந்த வெள்ளிக்கட்டியைக் கொடுக்கவேண்டும். என்ன சொல்லுகிறாய்?" என்று குதிரைமேலிருப்பவன் கேட்டான். "என் முழுமனதோடும் கொடுக்கிறேன். ஆனால் ஒன்று சொல்லுகிறேன். நீ ஒரு பெரிய மூட்டை தூக்கவேண்டிவரும் அதை யோசித்துப்பார்" என்று மறுமொழி கூறினான் பேதைமதி. உடனே குதிரைமேலிருந்தவன் கீழிழிந்து, அந்த வெள்ளியைக் கைப்பற்றிக்கொண்டு பேதைமதியைக் குதிரைமேல் சரியாய் உட்காரச்செய்து, கனைத்தைக் கையில் கொடுத்து, "உனக்கு வேகமாய்ச் செல்லவேண்டுமென்று தோற்றினால் 'ப்பப்' என்று ஒருமுறை சத்தமிட்டால் வேகமாய்ச்செல்லும்" என்றனன்.

3. குதிரைமேல் தானிருப்பதைக்கண்டு பேதைமதிக்குண்டான சந்தோஷத்துக்களவில்லை. அவன் மிகுந்த உற்சாகத்தோடும் சவாரிசெய்தான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வேகமாகப் போகவேண்டுமென்று அவனுக்குத்தோற்ற அவன் அந்தக் குதிரைக்காரன் சொன்ன மந்திரத்தை உரத்துச்சொன்னான். அக்குதிரை நாற்காற்பாய்ச்சலா யோட ஆரம்பித்தது. பேதைமதி அது செய்யப் புகுவது இன்னதென்றறியா முன்னர் ரஸ்தாவுக்கடுத்த ஒரு சகதிக்குழியில் தன்னைக்கண்டான். சமீபத்தில் வந்து கொண்டிருந்த ஓரிடையன் குதிரையைக் கடிவாளத்தாற் பிடித்திருத்திராவிட்டால் அது ஓடியே போயிருக்கும். பேதைமதிக்கு நினைவுவந்து, எழுந்தவந்தான் அவனுக்கு வருத்த மதிகமாயிற்று. அவ்விடையனை நோக்கி "ஒரு குதிரை, இம்மாதிரிக் காலிடறி, மேல் இருப்பவனை கழுத்து முறிந்து போம்படி தள்ளுகிறபோது, சவாரிசெய்வது லகுவான விளையாட்டன்று; என்றாலும் நான் இனிக் குதிரை கையில் அகப்படாதபடி தப்பித்துக்கொண்டேன். உன் பசுவினிடத்தில் எனக்கு அதிக விருப்பமிருக்கிறது. அதன்பக்கத்தில் ஒருவன் சங்கடமில்லாமல் செல்லலாம். மேலும், பசுவை வைத்துக் கொண்டிருப்பவனுக்கு பால், தயிர், வெண்ணெய் முதலியன ஒவ்வொரு நாளும்கிடைக்கும். அப்பேர்ப்பட்ட பசுவுக்கு நான் என்ன கொடுக்கவேண்டிவரும்?" என்று பேதைமதி கேட்டான். "நல்லது உனக்குப் பசுவினிடத்திலாசையிருந்தால் நாமிருவரும் பசுவையும் குதிரையையும் மாற்றிக்கொள்வோம்" என்று இடையன் சொன்னான். உடனே பேதைமதி சம்மதித்தான். இடையன் பசுவை விட்டுக் குதிரைமேலேறிக் கொண்டுபோய்விட்டான்.

4. பேதைமதி தான் ஒரு நல்லவியாபாரம் பண்ணிவிட்டதாக எண்ணிக்கொண்டு பசுவையோட்டிக்கொண்டு போனான். "ஒரு இட்டிலி மாத்திரம் கிடைக்கும்பக்ஷத்தில் (அதுவும் நிச்சயம் கிடைக்கும்) வெண்ணெயோடு சேர்த்து சாப்பிட்டுவிட்டு தாகத்துக்கு பாலும் குடிப்பேன். அதற்குப் பின்னெனக் கென்ன வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே போனான். ஒரு கள்ளுக்கடைக்கு வந்து இட்டிலி வாங்கித்தின்று மிகுந்திருந்த காசுக்கு ஒரு கோப்பை கள்ளையும் வாங்கிக் குடித்துவிட்டு பசுவை யோட்டிக்கொண்டு போனான், நடுப்பகலில் வெயில் அதிகரித்தது. அவன் ஒரு பாலையைத்தாண்டிச் செல்ல வேண்டியதாயிற்று. கால்பொரியத் தலைகொதிக்க நாவரள ஒருமணிநேரத்தி லதைக்கடந்து சென்றான். தாகத்தால் நா பின்ன ஆரம்பித்தது. பசுமாட்டைப் பக்கத்தினின்ற மரத்தடியில் கட்டி தன் தோல் குல்லாவிற் பால்கறக்க ஆரம்பித்தான். ஒரு சொட்டுப்பால் கூடவரவில்லை, இவனும் முன்பின் கறந்தறியாதலின் அதன் முலைக் காம்புகளை முறைதவறிப் பிடித்திழுக்கவே பசு

வலிபொறுக்கமாட்டாமல் விண்ணென்றுதைத்தது. இவனுடைய நல்லதிர்ஷ்டத்தால் ஒரொற்றைச் சக்கரவண்டியில் ஒரு பன்றியைக் கட்டியிழுத்துக்கொண்டு ஒரு கசாப்புக்காரன் அவ்வழியே வந்தான். "என்ன ஐயா சமாசாரம்" என்று அக்கசாப்புக்காரன் இவனைத் தூக்கிவிட்டான். பேதைமதி யுற்றதையெல்லாம் முற்றப்பகர்ந்தான். "இதோ! இதைக் குடித்துக் களைதீர்த்துக்கொள்" என்று ஒரு புட்டில் கள்ளைக்கொடுத்து "இந்தமாடு கசாப்புக் கடைக்குதவுமேயல்லாது வேறொன்றிற்கும் பயன்படாது. கிழப்பட்டுவிட்டது" என்று சொன்னான். "ஐயோ! இம்மாதிரியாகும் என்று யார் எண்ணியிருப்பார்? நான் இதைக் கொன்றால் என்னத்துக்காகும்? எனக்கு மாட்டிறைச்சியே பிடியாது: பன்னியிறைச்சியாயின் குழம்புபண்ணலாம். ரஸம் பண்ணலாம்" என்று பேதைமதி சொன்னான். "நல்லது உன் திருப்திக்காக நான் வேண்டுமானால் பசுவைக்கொண்டு பன்றியைக் கொடுக்கிறேன்" என்றான் கசாப்புக்காரன். "ஈசுவரனுன்னைக் கடாக்ஷிப்பாராக என்று சொல்லித் தன் பசுவை யவனிடத்தே கொடுத்து, பன்றியின் கட்டை அவிழ்த்து அதன் ஒருகாலில் கட்டியிருந்த கயிற்றைப்பிடித்து விரட்டிக்கொண்டு போனான்.

5. இப்படிக் கொஞ்சதூரம் சந்தோஷத்தோடு போகாமுன்னர், தன்கையில் ஓரழகிய வெள்ளை வாத்தைத்தூக்கிக் கொண்டுபோன ஓர்பட்டிக்காட்டானைச் சந்தித்தான். அவன் இவனண்டை மணிகேட்க வந்தபோது, இவன் தன்னதிர்ஷ்டங்களை யெல்லாஞ்சொல்லிக் குதூகலித்ததுமன்றி, தனக்கு அவ்வித துஷ்டமிருகங்களெல்லாம்போய், சாதுவான பன்றிகிட்டிற்றே என்று மெத்தக்களிகொண்டான். பட்டிக்காட்டானும் தான் அவ்வாத்துக்கு ஞானஸ்நானங் கொடுக்கக்கொண்டு போவதாகவும், பிறந்து எட்டுவாரமேயாயினும் எவ்வளவு ப்ாரமாயிருக்கிறது பாரென்றுங் கூறி, அதைப்பொரித்து புசிப்பவனுக்கு அதிகம் கொழுப்பு எடுக்கக்கூடுமென்றான். உடனே பேதைமதி அதைத் தூக்கிப்பார்த்து "நீ சொல்வதுசரி. ஆனால் என் பன்றி உன் வாத்துக்கு எவ்விதத்திலும் தாழ்ந்ததில்லை" என்றான். இவ்வார்த்தையைக் கேட்டதும் திகைத்துத் தலையசக்கிப் பின்வருமாறு கூறலுற்றனன்:—

"என் நண்பரே! சற்றே செவிகொடுத்து யான் சொல்வதைக்கேளும். இந்தப் பன்றி உம்மைச் சங்கடத்தில் இழுத்துவிடும். நான் வருகிற ஊரின் பெரியதனக்காரன் பன்றி இதுபோல ஒன்று கூட்டினின்றும் திருட்டுப் போயிற்று. உன்னைக் கண்டவுடன் அந்தப் பன்றியை நீதான் திருடிவந்தவனென்றெண்ணினேன். அவர்கள் உன்னைக் கண்டு பிடித்துக்கொண்டால், உடனே உன்னை பிடித்துக் குதிரைக் கொட்டகையில் அடைத்து விடுவார்கள்."

6. இதைக்கேட்டவுடன் பேதைமதி நடுநடுங்கி உடல் வியர்த்து, வாய்குழறி "அப்பா! இந்த விபத்தினின்றும் எப்படியாவது தப்புவித்துவிடு: இந்தப் பக்கங்களைப்பற்றி என்னைவிட உனக்கு நன்றாகத் தெரியும். என்பன்றியை யெடுத்துக்கொண்டு உன் வாத்தைக் கொடு" என்றான். அதற்கு அப்பட்டிக்காட்டான் "இந்த விஷயத்தில் நீ இன்னும் விசேஷ திரவியமூலமான உதவிசெய்யவேண்டும். நீ கேட்கும்போது ஆபத்தில் அகப்பட்டுத் தவிக்கிறபடியால் உன்னை அதிகம் தொந்தரிப்பது சரியன்று. உன் பன்றியைமாத்திரம் ஒப்புக்கொள்ளுகிறேன்" என்று சொல்லி பன்றியை வாங்கிக்கொண்டு, ஒரு குறுக்கு வழியாயோடிவிட்டான். பேதைமதியும் பயம் நீங்கிக் கவலையொழிந்து தன்னிச்சையே சென்றான், கடைசியாக இப்போது கிடைத்த லாபம் முன் எந்த வியாபாரத்திலும் கிடைக்கவில்லை: முதலில் நல்ல பொரியல்கிட்டும். பிறகு அதன் சதையில் ஆறுமாதத்துக்கு நிற்கும் நெய்கிடைக்கும் அப்புறம் வெள்ளைத்தூவிகள் ஏராளமாகக்கிடைக்கிறது. என் தலையணைக்குள் வைத்துத் தைத்துத் தலைக்குவைத்துப் படுத்தால் நல்ல தூக்கம் வரும். உறுத்தாது கொள்ளாது. இதைப்பார்த்து அம்மாளுக்கெவ்வளவு சந்தோஷம் உண்டாகும்" என்று தன்னுள் ஆலோசித்தேகினான்.

கடைசி ஊருக்கு அவன் வந்தபோது

7. "மலையெனவில்லை வெளியென வில்லை
கண்டவிடமெல்லாம் களிப்புடனுலவுவேன்
பணியும் மிலகு பயனும் மெத்த
ஊரகமெல்லா மென்னகமாமே!
என்போற் சுகிப்போரிருப்பரேல்வருக."

என்று பாடிக்கொண்டு கையில் ஓர் சாணைக் கல்லைத் தூக்கித்திரியும் ஒரு சாணைபிடிக்கிறவனைக் கண்டான். "நீ சுகிபோல் தோற்றுகிறாய் ஏனெனில் உன் வேலையினிடத்தில் நீ ஊக்கத்தோடும் உற்சாகத்தோடு மிருக்கிறாய்" என்று அவனை நோக்கிச்சொன்னான். "ஆம் என்னது உத்தமமானவேலை. என் சட்டைப் பையில் காசில்லாத நேரங்கிடையாது. அஃதிருக்கட்டும்; உனக்கு அந்த அழகியவாத்து எங்கேகிடைத்தது சொல்?" என்றான். பின்னவன் "நான் இவ்வாத்து விலைகொடுத்து வாங்கவில்லை. பன்றிக்கு மாற்றினேன்" என்று விடையீந்தான் பேதைமதி. "பன்றி எங்கே கிடைத்தது? அதற்காக ஓர் பசு ஈடாகக்கொடுத்தேன்" "பசுவோ?' "குதிரைக்கீடாக வாங்கினேன்" "குதிரையோ?" "என் தலையத்தனை பெரியவெள்ளிக்கட்டி கொடுத்து வாங்கினேன்" "வெள்ளிக்கட்டியோ" ஏழுவருஷம் சிரமப்பட்டு உழைத்தேன்." "இதுவரையில் நீ உலகத்தில் மெத்தச் சிரமப்பட்டிருக்கிறாய் இப்போது நீ உன் சட்டைப்பையில் கையைப் போட்டவுடன் பணமும் காசுங்கிடைக்குமானால் நீ அதிர்ஷ்டசாலிதான். பணக்காரனுங்கூட ஆவாய்" என்று சாணை பிடிக்கிறவன் சொன்னான். "மிகவும் உண்மைதான், அதெப்படிச்செய்து கொள்ளுகிறது." "நீயும் என்னைப்போல் ஒரு சாணைபிடிக்கிறவனாக வேண்டும். ஆனால் அதற்கு உனக்கு ஒரு சாணைக்கல் மாத்திரம் தான்வேண்டும் மற்றதெல்லாம் தானேவந்துவிடும். இதோ கொஞ்சம் கரடுமுரடான ஒரு கல் இருக்கிறது. இதை அந்தவாத்துக்குக் கொடுத்துவிடுகிறேன், நீ வாங்கிக் கொள்வையா? என்று கேட்டான் "நீ என்ன அப்படிக் கேட்கிறாய்? என் சட்டைப்பையில் எப்போதும் பணம் கிடைக்குமென்றால் நானே இவ்வுலகில் சுகவான். அதைவிட வேறு என்னவேணும் இந்தாவாத்து எடுத்துக்கொள்" என்று சொல்லிக்கொடுத்தான். சாணைபிடிக்கிறவன் அதை வாங்கிக்கொண்டு தன் பக்கத்தில் கிடந்த ஒரு சாமானிய கல்லை எடுத்துக் கொடுத்து, "இதுமிகச் சிறந்தகல்; கொஞ்சங்கெட்டிக்காரத்தனமாய் இதை உபயோகி. ஆணியெடுத்து இந்த மேடு பள்ளங்களை யெல்லாம் சமப்படுத்திவிடலாம்" என்றனன்.

8. பேதைமதி அக்கல்லை யெடுத்துக்கொண்டு மிக்கக் குஷாலோடும்போனான். அவன் கண்களில் மிக்க சந்தோஷத்தால் ஆநந்தபாஷ்பம் பெருகியது. நான் எவையெல்லாம் விரும்புகிறேனோ அவை தாமாய்க் கிடைக்கின்றன" என்று மனதில் நினைத்தான்.

9. இதற்கிடையில், அவன் காலைமுதல் பிரயாணம் பண்ணிக்கொண்டு வந்தவனாதலால் மெத்தக் களைத்துப்போனான். தனக்குக் காமதேனு வந்துவிட்டதென்ற உற்சாகத்தில் கையிலிருந்த கடைசிக் காசையும் செலவழித்துவிட்டான். அதற்குமேல் அவனால் நடக்கமுடியவில்லை. கல்லோ மெத்தனக்கனத்தது. என் செய்வான் பாபம்! மெள்ள அருகிலிருந்த ஒரு குளத்தண்டை தண்ணீர் குடித்துக் களைப்பாறலாமென்று நகர்ந்து சென்

ஞன். சென்று அந்தக் கல்லைச் சாக்கிரதையாய்க் கரையோரத்தில் வைத்தான். தண்ணீர் குடிக்கக் குனிந்தபோது, கல்லைமறந்து அதைக் கையால் எத்திவிட்டான். அது 'லுளக்' என்று தண்ணீருக்குள் ஓடிவிட்டது. தண்ணீர் மிகத் துல்லியமாயிருந்தபடியால் அக்கல் அடியில் போகும்வரையில் நன்றாகத் தெரிந்தது. அடியிற்சேருங்காறும் உற்று நோக்கியிருந்து ஒரு தாக்துள்ளிக்குதித்து, "எனக்குக் கோமாரி பற்றியதுபோல் என்னைப் பற்றிக்கொண்டிருந்த அந்தக்கல்லை என்னின்றும் பிரித்த தேவனுக்கு அனந்தகோடி நமஸ்காரம். இப்போது என் மடியில் கனமுமில்லை வழியில் பயமுமில்லை ; என் சுகமேசுகம்." என்று சொல்லி முழங்காலிட்டு விண்ணைப் பார்த்தான். அது நிர்மலமாய் நித்தமாய் சுத்தமாய் எங்கும் நிறைந்ததோர் ஏகரஸமாய் விளங்கக்கண்டு அதி வீடுபட்டவனாய்த் தன்னை மறந்து தனிமுதல்வன் சிந்தையேயன்றி வேறு சிந்தையில்லாதவனாய் நின்றான். நிர்மல ஆகாயத்தில் பளீரென்று ஒரு ஜோதி யுதிக்கக் கண்டு பாலோடு பால் கலந்ததுபோலும் அதிலொன்றுபட்டு ஐக்கியமானான். பிறகு தேகஸ்மரணை வந்தபோது தான் அந்த சோதிவடிவிற் கலந்த காரணத்தால் பரிசவேதிபட்ட செம்பு தங்கமாக மாறி விளங்குவதுபோல தான் முற்றும் மாறியிருக்கக் கண்டான். இவன் உலக வியவகாரங்களை யொன்றும் தெரியாத முழுமூடனானாலும், ஹிருதயம் மாசமறுபடியாது நிர்மலமாயிருந்தபடியால் ஆசைகளெல்லாம் விட்டொழியவும் பற்றுதலெல்லாம் விட்டகாரணத்தால் பற்றற்றவிடமாம் பரத்தில்போய் அவன் மனம் லயித்தது. அவன் கடவுளைத் துதித்தது உண்மையான பிரார்த்தனையாதலால் அவன் உடனே மனோலயமடைந்து "உலகெலா மறிந்தோதற்கரியானை" ஒரு நொடியில்கண்டு களித்திரவும் தன் ஸ்வரூபத்தைத் தானே யுணர்ந்தவனானான். இப்படிப்பட்ட மூடனுக்கும் இவ்விதமோக்ஷ சாம்ராஜ்யம் கிட்டுமோ என்று சந்தேகிப்பார்க்கு, கடவுள் மனிதனை ஹிருதயத்தைக்கண்டு சோதித்துப் படியளக்கிறாரேயன்றி அவன் உலக சாமர்த்தியத்தைக் கொண்டல்ல. இதனால் ஹிருதய சுத்தியே எல்லாவற்றிலும் பெரிது என்பது விளங்கும்.

"அறிவறியாமையைநீவியவனே
பொறிவாயொழிந்தெங்குந்தானானபோது
வறிவாயவற்றினுட்டானாயறிவின்
செறிவாகிநின்றவன்சிவனுமாமே," —திருமந்திரம்.

இப்படிப் பெறவரும் பெரும்பாக்கியம் பெற்ற பிறகு அவன் கவலையெல்லாம் நீங்கினவனாய் வீடுபோய்ச் சேர்ந்தான்.

---

## OUR PUZZLE CORNER.
## விடு கதைகள்.

### I. Evigenas. பிதிர்கள்.

(a) 1. எந்த மரத்துக்குக் காய்களில்லை.
2. எந்த மாலை தரிக்க முடியாது.
3. எந்தத்தாளம் எல்லாவற்றிற்கும் அடி.
4. எந்த எழுத்து எட்டிலில்லை.

(b) 1. ஊசி எப்படிப் பாம்பை யொக்கும்.
2. கரர மெப்படி மனிதரை யொக்கும்.
3. டகர மெப்படித் தீவை யொக்கும்.
4. நகர மெப்படிச் சந்திரனை யொக்கும்.
5. பழந்துணி எப்போது வேம்பை யொக்கும்.

### II. Beheaded Word. தலைவெட்டு மொழி.

ஐந்தெழுத்தாலே ஆவேன் நானே,
சிந்தையில் பறவை யொன்றுவேனே,
தலையரிந்திடினும் குலைவெனக்கில்லை,
பின்னுமோர்ப் பெயராய்ப் பெரும்படையாயுதம்
தன்னைக்குறிப்பேன் சாற்றியவிரண்டாம்
எழுத்தைத் தள்ளினும் எனக்கிலை யேதம்,
வழுத்தெழில் தந்து வயங்குவனன்றே !

### III. Riddle. விசித்திரக் கேள்வி.

யாரைப் பலவனுக்குப் பிறந்தவனென்று
பழிப்பில்லாமல் சொல்லலாம்,

---

# "INDIA'S PRAYER."

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God that sublime belief that seeing evil I yet have faith."*

*" Seek Truth wherever you can find it," But, " Make your choice and stick to it till you reach the End."*

பஞ்சவிம்சதிபாக்கியம்"] ஸத்தியம் வத—SPEAK THE TRUTH. ["Our Jubilee Year."

HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE".




28 FEB 1918

அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 25.] பிங்கள௵ தை௴, 1918௵ ஜனவரி௴. [சஞ்சிகை. 10.

### Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our " terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *At one month's credit (arrears rate)* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with the Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued† in the middle of a Vol., *nor without three months' clear notice as required.*†
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

### General Notice.

i. The *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to " fluctuations " and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months *(time being an important factor)* ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

*(By Order of the Managing Committee.)*

THE MANAGING AGENTS, " VIVEKACHINTAMANI."
*Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore.*

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.* ☜

†Notice of discontinuance to have effect must be given in writing *full three months before the current Volume ends (in March)* and *after* all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say " that every effort will be made to trace them." " If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed " continues the same high authority, " I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should invariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## "INDIA'S PRAYER"

### SIR RABINDRANATH'S ODE.

The following "India's Prayer," composed and read by Sir Rabindranath Tagore, was very effective and was appreciated by all :—

Thou hast given us to live.
Let us uphold this honour with all our strength and will.
For Thy glory rests upon the glory that we are.
Therefore in Thy name we oppose the power that would plant its banner upon our soul.
Let us know that Thy light grows dim in the heart that bears its insult of bondage,
That the life, when it becomes feeble, timidly yields Thy Throne to untruth,
For weakness is the traitor who betrays our soul.
Let this be our prayer to Thee—
Give us power to resist pleasure where it enslaves us,
To lift our sorrow up to Thee as the summer holds its midday sun,
Make us strong that our worship may flower in love and bear fruit in work.
Make us strong that we may not insult the weak and the fallen,
That we may hold our love high where all things around us are wooing the dust.
They fight and kill for self-love, giving it Thy name,
They fight for hunger that thrives on brothers' flesh,
They fight against Thy anger and die.
But let us stand firm and suffer with strength,
For the true, for the good, for the eternal in Man,
For Thy Kingdom which is the union of hearts,
For the freedom which is of the Soul.
Our voyage is begun, Captain,
We bow to Thee,
The storm howls and the waves are wicked and wild,
But we sail on.
The menace of danger waits in the way.
To yield to Thee its offerings of pain,
And a voice in the heart of the tempest cries,
Come to conquer fear!
Let us not linger to look back for the laggards,
Or benumb the quickening hours with dread and doubt.
For Thy time is our time and Thy burden is our own, and life and death are but Thy breath playing upon the eternal sea of life.
Let us not wear our hearts away in picking small help and taking slow count of friends,
Let us know more than all else, that Thou art with us and we are Thine for ever.—(*By wire.*)

---

## முக்கிய அறிக்கை.

இந்த விவேகசிந்தாமணியை வாங்கி வாசித்து வரும் உபாத்தியாயர்கள் ஒவ்வொருவரும் இப்புஸ்தகத்தை பத்திரமாகச்சேர்த்து 'பயிண்டு' செய்து வைத்துக்கொண்டு வந்தால் இதுவே ஒரு முக்கியமான கல்லறிவு புகட்டும் கல்விக் களஞ்சியமாயுதவும். அடிக்கடி பார்த்துப் படித்து மனதைத் திருத்திக் கொள்ள உபயோகப்படுவதாகும். ஆகையால் இதை வரப்பெறும் ஒவ்வொரு உபாத்தியாயரும் அதை அவர்கள் நலம்பெற உபயோகித்து வருவதற்கடையாளமாக இதைக்கொண்டு அவர்கள் பயன்படஉழைத்து வருவதைப்பற்றி அவர்களுடைய விலாஸத்திற்கண்ட கெம்பரைக் குறித்து முழுவிலாஸத்தோடும் நமக்கு எழுதித்தெரிவித்து வரவேண்டும். கவர்ன்மெண்டார் விவேகசிந்தாமணி பிரதம பாடசாலைகள் எல்லாவற்றிலும் உபயோகிக்க ஏற்றமானதென்று ஒவ்வொரு ஸ்கூலுக்கும் ஒரு காபி வாங்கியனுப்ப உத்தரவு செய்திருக்கிறார்கள். மானேஜர்.

Every elementary schoolmaster must have a copy of the *Vivekachintamani* for himself and his school. It is the best and most economical thing in the long run, as it infuses a spirit of inquiry and a desire to enlarge the mind by the constant presence of the volume being in his possession which he individually has to care for and preserve as school property. "When so kept they serve as a permanent and continuous volume of reference and useful knowledge for pupils and teachers. So, I would strongly recommend the supply of the Journal to be made to all the schools on the principle of one copy for each school." The teachers are requested to put themselves in communication with the Managing Agents of the *Vivekachintamani*, who will afford them every facility for each of them securing a copy. The annual subscription is Rs. 5 per volume payable in advance. (*Vide* "Terms.")

*Address*:—THE MANAGING AGENTS,
*Vivekachintamani*, 19, *Adam Street*,
*Mylapore, Madras, S.*

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—Sir Harold Stuart, K. C. V. O.
புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-10.
"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."



பிங்கள ஹு தை மீ. } விவேக சிந்தாமணி { January 1918.
FIRST ESTABLISHED, 1892. OUR JUBILEE YEAR, 1917.

"பெற்றோர்கள் தாமுவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## "INDIA'S PRAYER."

(*By Sir Rabindranath Tagore.*)

## "இந்தியாவின் பிரார்த்தனை."

[ஆசியாவின் கவிசக்ரவர்த்தியாகிய ஸர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் இந்தியாதேசத்தாரின் ஸ்வபாவம் விளங்க "இந்தியாவின் பிரார்த்தனை" யென்று இங்கிலீஷில் வரகவியொன்றுபாடி அதைச்சென்ற டிஸம்பரில் கல்கத்தாவிற்கூடிய 32-வது காங்கிரஸ் மஹாசபைமுன் வாசித்தார். அதை அங்கு கூடியிருந்த எல்லோரும் மிகவும் மேலாகக் கொண்டாடி இந்தியாவின் அத்யாத்மபாவத்தை நன்கு விளக்குவதாக அங்கீகரித்ததாலும், அவருடைய கவிகள் மகாகனம்பொருந்திய மிஸ்டர் இ. எஸ். மான்டேகு அவர்களாலும் மற்ற ஐரோப்பிய நிபுணர்களாலும் மிகவும் மதித்து கொண்டாடப்பட்டு வருகின்றமையாலும், அதன் கருத்தை பிரார்த்தனைபத்தாகத் தமிழ்ப்படுத்திக் கீழே பிரசுரிக்கிறோம். அதை வாசித்து அதன் உட்கருத்தை கிரகித்து எல்லாரும் மகிழவும், உண்மையாளர்கள் அந்தப்படி நடக்கவும் அது பரமசாதனமாயிருக்குமென்று நம்புகிறோம். ஒரு தேசத்தாரின் அல்லது ஜாதியாரின் அந்தர்பாவத்தை விளக்குவதொன்றேதுவாயினும் அது நன்மையே பயக்குமென்பதிற் சந்தேகமில்லை. "யத்பாவம் தத்பவதி" அல்லது "மனம்போலிருக்கும் மாங்கல்யம்" என்பது வியஷ்டியிற்போல் சமஷ்டியிலும் உண்மையே யாகும்.]

---

### பிரார்த்தனைப் பத்து.

**I**

வாழ்க வென்று வாழ்த்தி யெங்கட்கு
வாழ்வுதந் தருளினை
வாழ்கவே நாங்களும் வாழ்வை யோம்புவம்
தாழ்வுவா ராமலே
வாழ்வின் மஹிமைதா னெப்படியப்படி யுன்றன்
மஹிமையு மாதலால்
வாழ்விற் தாழ்வு வரச்செயு மெதையுமுன்
னருளினாற் றகைப்போமே!

**II**

நின்னருள் பெறவன்றி வேறொரு பொருள்பற்றி
யுள்ளம்பணி யவகேடு
நின்னருள் பெறவழி யாதழியு மென்றறிந்
துனையே பணிகுவாம்!
நின்னருட் பணியின்றி வேறொன்று பற்றியே
யுள்வலிகுறை வுறினுடனே
நின்னருட் பேறிலாப் பொய்மை வந்தணுகியெம்
முயிரையே வெளவுமால்—

**III**

எம்முள நிறைந்தனைப் பிரார்த்தனை செய்வமிவ்
வரந்தர நினைப்போற்றியே;—

எம்முளங் கவர்காம வின்பநுக ராசையை
யெதிர்த்துத்தகைக்க வலியருளுவாய் !
எம்முளஞ்சோர்வுறச்செய்துன்ப முன்னருள்வெளி
அாக்கியே நீக்கியருள்வாய் ! [சாயத்
எம்முள முன்னருள் வலியினு லுன்னன்பி
லீடுபட்டுன்பணி செய்கவே !

IV

பின்னுமுள மற்றெலாம் போராடி யழிவுற்று
மண்ணுக்கிறை யாகையிலும்
துன்னுமுன் னருளையே நம்பிவள ருயரன்பி
லீடுபட்டிருந் துய்யுவாம் !
பின்னுமுள பேர்களுன் பேர்சொல்லிப் பாதித்துச்
சுயநயஞ் சாதித்தழிவரால்
மன்னுமொரு பசிகாரணங்கொண்டு மன்னுயிர் வ
யுன்கோபத் தீதவிக்குமால்— [தைப்போரை

V

உறுதியில்லை தானறிந் தண்மைவலி மிக்கோராய்
வருவன வருகவென்
றுறுதிகொண் டுண்மைக்கு நன்மைக்கு நயமுடன்
னித்தியமாந் தன்மைக்கு
மிறுதிவரை யிசைந்துநின் றுளமொன்றி வருமுன்
ஸாம்ராஜ்ய சித்திபெறவும் [றன்
அறுதியி லாத்மசுக மளிக்குமொரு ஸ்வதந்திரப்
பேறுபெற வேண்டினோமாய்,—

VI

கதிபெற வினைத்துஜக யாத்திரை துவக்கினோம்
தலைவநீ சரணமென்றே
விதிவலி புயலெனக் கிளம்பியச் சுறுத்தவும்
தீயனவே செய்யும்அலை
கதிசேர வொட்டாது போல்மோதி யார்ப்பரிக்கவு
மிளைக்காது சளைக்காது
மதிவலியோ டுனதுவலி பெரிதெனவே கதிபெற
வலித்தோட்டி வழியேகினோம். [யாம்

VII

வழியிலே யாபத்து வலிபெற்று வதெனுமச்சம்
மிச்சமாய் நின்றெமை
.வழிமறித்துக் கொண்டதன் வருத்தத்தைக் கொடு
காத்துக்கொண் டிருக்கு'தையே ! [க்கவே
பழிவாங்கு புயல்மத்தி தனிலுறை சத்தம்வாய்
கொண்டுரை பேசுமாபோல்
இழிவின்றி யேயச்சந் தவிர்ப்பான்போ லபயக்குரல்
டைமைமூந்த வழைக்கையிலே, [கொண்

VIII

உடனுற்று வாராமல் தயங்கித் தவிப்போர்க்குத்
தரணியில்நாம் தங்கிநிற்கலாமோ !
உடனுற்ற காலத்தை யச்சம்லஜ்ஜை பற்றவிட்டுநா
மவமே கழிக்கலாமோ !
திடனுற்றுத் தெய்வசங் கல்பமே நாங்கொண்ட
சங்கல்ப மெனத்தேறியே
உடனுற்ற தலைப்பாரம் தெய்வசங் கல்பத்தா
லுன்பார மெனவகித்தே—

IX

இறப்பது மிருப்பது மூன்னருள் வெளியில்லலால்
வேறிலையென் றுறுதிகொண்டு
திறப்பது வெறுப்பது மூன்னருள் வெளிகண்டார்க்
கிலையென மனந்தேறியே
மறப்புட னினைப்புக்காளாஞ் சிற்றுயிர் பற்றிநிற்பார்
சீாபெறச் செய்நயநாடலின்றிச்
சிறப்பது தானில்லாத் தன்மைபூண் டொழுகுவார்
நயபயம் நாடாமலே—

X

"அன்றே யென்றன் ஆவியும் பொருளு
முடைமை யெல்லாமும்
"குன்றே யனையாய் ! எனையாட் கொண்ட
போதே கொண்டிலையோ !
"இன்றோ ரிடையூ றெனக்குண்டோ !" வென்றார்
வழிபற்றி யாம்நடப்போம் !
"நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நாமோவிதற்கு நாயகமே !"

ஓம் தத்ஸத்.



## ARUDRA DARISANAM.

## ஆருத்ரா தரிசனம்.

மாதங்களிலெல்லாம் ஸர்வோத்க்ருஷ்டமான மார்கழிமாதம் பகவானுக்குப் பிரீதியான மாதமென்றும் அந்த மாதத்திலேயே அவர் தம் பக்தர்களுக்கு கடாக்ஷவீக்ஷணமளித்து அவர்களைக் கரையேற்றக் கிருபைகூர்ந்த மாதமென்றும், அந்த மாதத்தில் எவனொருவன் பகவானை சுத்த ஹிருதயத்தோடு பஜிக்கிறானோ அவன் அதிசீக்கிரத்தில் ஆத்மதரிசன பாக்கியம் பெறுகிறானென்றும் பெரியோர் சொல்லியுள்ளார். ஆருத்ராதரிசன மஹோற்சவம் இந்த உண்மையையே ஐதிகமாகக் கோயில்களில் திருவிழாவாகக் கொண்டாடப் படுவதன்றி வேறல்ல. இது சிதம்பரத்தில் மிகவிலாக்கியமாகக் கொண்டாடப் படுகிறது. நடராஜமூர்த்தி தேரை விட்டிறங்கி, ராஜசபையில் ஆடம்பரமாய்க் கொலுவிருந்து அதை விட்டுப் புறப்பட்டு நடனம் செய்துகொண்டு கனகசபைக்குள் பிரவேசிக்கத் திரும்புகையில் அவர் தரிசன சேவையே ஆருத்ராதரிசனமாம். இது ஐதிக முறை. ஆத்மார்த்தமாகப் பார்க்கில் பிரபஞ்சத்தில் பாசபெந்தங்களால் கட்டப்பட்டுழன்ற ஜீவன், சற்குருவையடைந்து அவர் கடாக்ஷவீக்ஷணம் பெற்று அந்த பாக்யத்தில் திரிபுரமாகிய தேகத்திரியங்களையும் அதற்கொப்பான திரிகுணங்களையும் எரித்து, அதாவது அறநீக்கி, ஸ்வயம்பிரகாசமாயுள்ள பிரத்யகாத்மன் தானே தானாய்த், தன்மயமாய்த், தனித்திருந்து, நிர்மலனாய், நிராலம்பனாய், நிர்விகாரியாய், 'நெற்றிக்கண்' என்று சொல்லும் 'பிரக்ஞானசட்சு'ப் பெற்றவனாய், அர்ச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணபகவான் காட்டிய 'விசுவரூபதரிசனம்' போல் இந்த அண்டபிண்ட சராசரங்கள் அனைவற்றையும் தன்னுளொடுக்கி யிருக்கும் பகவானை அவரது உண்மை விளங்க உள்ளபடி பார்க்கப்பெற்று ஐயந்திரிபற அவர் மகிமையை உள்ளபடி உண்ணோக்கி யறிவதாம் 'ஆத்மதரிசனம்' என்னும் தத்ஸ்வரூபதரிசனமே ஆருத்ராதரிசனமாம். திருவாதிரையன்று பரமசிவன் தூயஹிருதயமுள்ள பக்தர்கள் ஒவ்வொருவர் ஹிருதயத்திலும் பிறந்து 'புனர்ஜன்மம்' என்று சொல்லும் பெறலரும் பெரும்பாக்கியத்தை யவர்களுக்கு அளிக்கிறார். "Unless you be born again, you cannot enter the Kingdom of Heaven" என்று யேசுகிறிஸ்து இந்த உண்மையையே யெடுத்துச் சொல்லியிருக்கிறார். செத்துப் பிழைத்தாலன்றி சாவுக்குத் தப்புவதில்லை. இந்த 'செத்துப் பிழைத்த'லாம் 'சூக்ஷ்ம அனுபவத்தையே 'புனர்ஜன்மம்' என்றும், 'பிராம்மணத்துவம்' என்றும், 'Re-birth,' 'Resurrection,' 'Birth of the Christ child,' 'Conversion' என்றும் பலவிதமாகச் சொல்லிக் கொண்டாடுகிறார்கள்.

தென்னிந்தியாவில் 'திருவாதிரைக்களி' யென்று களிகிண்டி பகவானுக்கு நைவேத்யம் செய்து, பிரசாதமாக அதைப் புசிப்பது வழக்கமாய் நடந்துவருகிறது. இதன் ஐதிகம் என்னவென்றால்: மார்கழிமாசக்குளிரில் ஒரு ஏழைப் பிச்சைக்காரன் குளிரில் விறைக்கக் களிகிண்டி அதைத்தான் உண்ணுமுன் பரனுக்கு ஒரு கவளமாவது அளித்து மிஞ்சியதையே உண்கிறதென்னும் நியமம் பூண்டவனாதலால் அந்தக் களியையளிக்க யாரும் அகப்படாமல் அதைத் தானும் புசிக்கக்கூடாமல், 'சோவென்று கொட்டும் இந்த அடைமழையில் நான் யாரை யழைப்பேன், அழைத்தாலும் இந்தக் களியைப் புசிக்கயார்வருவார்க' ளென்று மனம்புழுங்கி உள்ளமுருக, உடம்பெலாம் வியர்க்க, அந்த அடைமழைக் குளிரில் அழுதுகொண்டிருந்தான்.

"நசனிறியுமிராப் பகலுந்தன்னைப்
பாசத்துள்வைத்துப் பரிசுசெய்வார்களை"

என்றபடி, பரமசிவன் இந்த ஏழைநெஞ்சன் உள்ளங்குழைந்துருகுவதைக் கண்டு அவன் அவஸ்தை பொறுக்காதவராக ஒரு பரதேசியைப்போல் வேஷம் போட்டுவந்து அவன் கொடுத்த களியை வாங்கிப்புசித்து அதனால் அவனுக்குத் தமது ஒப்புயர்வற்ற

வரப்பிரசாதமளித்துச் சென்றாரென்பது ஐதிகம். இந்த ஐதிகத்தை யனுசரித்தே இன்றைக்கும் 'திருவாதிரை நாளில் எவ்வளவு பணக்காரர்களும் ஏழைக்கெளியவனான பரமேசுவரன் ஸ்வபாவத்தையறிந்து 'களி' கிண்டி நைவேத்யம் செய்து அதை ஈசுவரப் பிரசாதமாகப் புசிக்கிறார்கள். இப்படி ஏழைக்கிரங்கியாகிய ஈசன், தாருகாவனத்திலுள்ள இருஷிகள் தாங்கள் தபசு, யக்ஞங்களில் சிறந்தவர்களென்றும் தங்களுக்குமிஞ்சி யொருவருமில்லை யென்றும் உள்ளே கருவித்து நிற்க, அவர்கள் உள்நிலையையுணர்ந்த ஈசுவரன் பிக்ஷாடன மூர்த்தியாக வேஷம் போட்டுக்கொண்டு, விஷ்ணுவம்சத்தை மோஹினிரூபமாக்கி, அத்தவவேடர் நிறைக்குலைத்து அவர்கள் கர்வத்தையெல்லாம் அடக்கியாண்டார். தேவர்களுமிப்படி கருவிக்க அவர்கள் உதவியெல்லாம் பயன்படாமற்செய்து, பக்கத்திலிருந்த உமையவளைப் பார்த்து அவள் புன்சிரிப்பு மாத்திரத்தால் உண்டான தீயினால் திரிபுரசம்ஹாரம்செய்து தாம் ஏறியிருந்த தேரைவிட்டிறங்கி திரிபுர தகன நீற்றுச் சாம்பலில் ஆனந்த கிர்த்தனம் செய்துகொண்டு பக்தர்களைப் பரிபாலிக்க ஒற்றைக்கால் தூக்கி அம்பலத்தாடி பொன்னம்பலம் சேர்ந்து அசைவற்று ஆடி அமர்ந்தார். இதை முன்னம் பிரசுரித்த ஆருத்ராதரிசனச் சஞ்சிகையில்:—

"மார்கழிமாசந்திருவாதிரையும்
வரலாயிற்றையே
கார்குழலாள்மோகினியும்காரணப்பே
யாண்டியுமே கரைந்தவுருமாறிநின்று
பாரிலுள்ளபக்தர்கள்பரிபக்குவர்
பலருமுய்யப் பரங்கருணைமிகுதியாலே
திரிபுரமெரித்த தேஜோமயானந்தனைத்
தான்கொடுத்தான்வன், தரிசிக்கவாரீர், வாரீ
[ரே."

யென்னும் வாக்கில் இதனுண்மையை யுள்ளபடியுணர்த்தி யிருக்கிறது.

அவதார புருஷர்களில் ஒருவராகிய யேசுகிறிஸ்துவும் அவர் தம் சிஷ்யர்களுக்கு மலையுச்சியில் செய்த உத்தம உபதேசத்தில் "Blessed are the poor in spirit: for their's is the Kingdom of Heaven" என்று துவக்கி முமுக்ஷுலக்ஷணங்களை வெகு நன்றாகச் சொல்லிக்காட்டியிருக்கிறார். அவர் உபதேசப்படி மோக்ஷகைவல்யத்துக்குப் பாத்திரமானோர் குணங்கள் பின்வருவனவாம்:—

(1) 'The poor in spirit'—(உலகப்பற்றற்ற) ஏழையபரதேசிகள் *cf.* 'ஏழைக்கெளியன்.'

(2) 'They that mourn'—துன்புற்றோர், *cf.* "தொழுதகை துன்பந்துடைப்பாய். போற்றி"

"அளிபவர் உள்ளத்தமுதே போற்றி."—
திருவாசகம்.

(3) 'The meek'—பொறுமை, அடக்கம் உடையோர். *cf.* 'பொறுத்தார் பூமியாள்வார்.' 'தானடங்க வூரடங்கும்' 'அடக்கமுடையார் ஆக்கமுடையார்.'

(4) 'They which do hunger & thirst after righteousness'—*cf.* 'தன்னைத்தானறியத் தபித்தவர்கள் தான் குடிப்பார்.' 'தபித்துக்குடித்தார்க்குத் தாகமது அற்றுப்போம்'—ஆனந்தத்தாய்மொழி.

(5) 'The merciful'—கருணையுள்ளார்—*cf.* 'உள்ளங்கனிந்தாரை யுள்ளபடி போற்றுவாயே,—ஆனந்தத்தாய்மொழி.

(6) 'The pure in heart'—அகத்தூய்மையுள்ளார். *cf.* 'அத்தனருள்வேண்டில் அகந்தூயவேண்டும்.'—ஆனந்தத்தாய்மொழி.

(7) 'The peacemakers'—சாந்த ஸ்வரூபிகளான ஸாத்விகர்.

(8) 'They which are persecuted for righteousness' sake'—'சத்யத்துக்காகத் துன்பப் படுத்தப்படுவோர்' *cf.* பிரகலாதன், அரிச்சந்திரன்.

இப்படி அவர் சொல்லும் ஒவ்வொரு குணத்துக்கும் நம் சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் ஐதிகபாவமான கதைகள் அனேகமிருக்கின்றன. இக்கதைகளின் உட்கருத்தை யுணரமாட்டாதவர்கள் இவைகளை யிகழ்ந்து பேசுவார்கள். உண்மையறியவல்லோர் இவைகளையியற்றிய பெரியோர்களின் சூக்ஷ்மபுத்தியைக்கண்டு வியப்பார்கள். இப்படியாக ஸத்யம் ஒன்றாகவிருக்க, அதைக் காலதேச வர்த்தமானங்களுக்கிசையவும் அவரவர் மனோ நிலைக்கேற்கவும் இசைத்துச் சொல்லப்புகும்போது பலபல விதமாகத் தோற்றுகின்றது. ஆனால் இந்த வித்யாசமெல்லாம் தோற்றமாத்திரமேயன்றி உள்ளாய்ந்து பார்த்தால் எல்லாம் ஒரே தத்வத்தை விளக்குவதாயிருக்கும்.



## THE TRUE BASIS OF MORALS.

### "சத்தியமின்றி சன்மார்க்கமில்லை."

"சத்தியமின்றிச் சன்மார்க்கமில்லை." சத்தியம்—அழியாதது; எப்பொழுதும் உள்ளது: மாறாதது: எல்லையற்றது: இரண்டற்றது. இவை சத்தியத்தின் ஸ்வபாவங்களாம். இந்தப் பஞ்சலக்ஷணங்களு மமைந்துள்ளதெதுவோ அதுவே சத்தியமாம். இவ்வைந்தில் ஒன்று குறைபினும் மற்றவை பொருந்தாதொழியும். அழியாத்தன்மையில்லாவிடத்து மற்ற நாலும் பொருந்தியிருத்தல் கூடாமை. அழியும்வஸ்து எப்பொழுதும் உள்ளதாகாது; மாறாத் தன்மையதற்கில்லை; எல்லையற்றதென்று அதைச் சொல்லுவதற்கில்லை; இரண்டற்றதென்றும் சொல்லக்கூடாது: ஏனெனில் எப்பொழுது அழிவுண்டோ அப்பொழுதே அதற்கு உற்பத்தியுமுண்டு என்று ஏற்படுகிறது. இப்படியே நித்யத்துவமும் மற்றவையுமில்லையாம்; மற்றவையுமிப்படியே. சன்மார்க்கம்—அழியாதமார்க்கம்: நன்மார்க்கம்; நன்னடத்தை. உலகத்தார் நன்னடத்தை யவசியமென்று கொண்டாடுகிறார்கள். ஆனால் நன்னடத்தை போதிக்கும் வழியென்னவென்று விசாரிக்குமிடத்துத் தடுமாறித் தத்தளிக்கிறார்கள். ஒவ்வொரு தேசத்தாரும் ஒவ்வொரு ஜனசமூகத்தாரும் அவரவர்கள் பொதுக்ஷேமத்துக் கேற்றதென்று அவர்களில் மேலோர் மதிப்பதை ஓர் தர்மநூலாகக்கொண்டு வழிபடுகிறார்கள். ஹிந்துக்களுக்கு மனுதர்மசாஸ்திரம், பராசரஸ்மிருதி முதலிய நூல்கள் தர்மவிதியுரைக்கும் நூல்களாகின்றன. யூதர்களுக்கு மோசே யென்பவரும் மற்ற தீர்க்கதரிசிகளும் குறிப்பிட்டுவைத்தவிதிகள் நன்னடத்தைக்குரிய நல்வழிகாட்டும் தர்மசாஸ்திரங்களாகின்றன. தற்காலத்தில் புத்திவன்மையால் பிரகிருதி விதிகளாம் தத்துவங்கள் பலவற்றைக் கண்டுபிடித்த மேற்றிசை நாகரிகர்களான ஐரோப்பியர்கள் முதலானோர் சென்ற இருநூற்றாண்டுகளில் தலைப்பட்டு விளங்கிய தத்துவசாஸ்திரிகளியற்றிய சன்மார்க்க நூல்களைப் பூர்விக தர்மசாஸ்திரங்களுக்குச் சமானமாக மதிப்பவர்களாக விருக்கிறார்கள். ஆதியில் மதக்குரவர்களாயிருந்து தர்மசாஸ்திரங்களேற்படுத்தினவர்கள் தீர்க்கதரிசிகளாக விளங்கினரென்பது பிரசித்தம். அப்படியே இக்காலத்து மேற்றிசைத் தத்துவசாஸ்திரிகள் தங்களுடைய புத்திவன்மையால் ஆராய்ந்து கண்டுகொண்ட அளவே உண்மையென்றும், மனிதன் தன் புத்திவன்மையால் பிரகிருதி தத்துவங்களை யறியக்கூடியது இவ்வளவே யென்றும் வரையறுத்து; இதற்குமேல் பூர்வத்தில் தீர்க்கதரிசிகள் கண்டதாகச் சொல்வதெல்லாம் ஜனங்களை பயக்கிக் கட்டுப்படுத்துவதற்காகச் செய்த சூழ்ச்சியேயன்றி அதில் உண்மை யெவ்வளவு மில்லையென்பது தங்கள் சித்தாந்தமாக ஸ்தாபித்து; அதைப் பரவச்செய்யுமாறு வேதங்களில் தீர்க்கதரிசிகளும், கிறிஸ்து, ஸ்ரீகிருஷ்ணன் முதலான தெய்வத்தன்மை வாய்ந்தவர்களும் சொல்லியவற்றில் அவர்கள் புத்திக்குச்சரியென்று பட்ட அளவுக்கு அங்கீகரித்து மற்றவற்றை நிராகரித்துத் தள்ளி; மதாசார அனுஷ்டானங்களாகப் பண்டைக்காலமுதலேற்பட்டு வழங்கிவந்தவைகளைக் கண்மூடித் தனமாயனுசரிப்பது மனுஷனுடைய புத்திக்கும் சத்திக்கும் குறைவுண்டு பண்ணுவதாயும் அவனுடைய பெருமையையும் சுதந்தரத்தையும் குறைப்பதாயும் சொல்லிப், பிரபல புத்தகங்கள் எழுதி அவர்களது புதுமையான எண்ணங்களைப் பரவச்செய்து வந்தார்கள்.

இவர்கள் முயற்சி பலிக்கவும், இக்காலத்தில் பள்ளிப்பிள்ளைகளும் "தெய்வமுமில்லை ஒன்றுமில்லை; தெய்வமுண்டானால் அதைக் கண்டவர் யார்? முக்காலத்தில் தெய்வத்தை நேர்நேராகக் கண்டதாகச்சொல்லிய ஞானிகளெல்லாம் தலைதடுமாறிப் பிதற்றியபேதைகள். இக்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பூதபௌதிக சாஸ்திரங்களின் உண்மை அவர்களுக்குத் தெ

ரியர்"—என்று வாய்மதம் பேசி தெய்வத்தை யிகழ்ந்து உண்டுடுத் துறங்குவதும், இத்தேக முள்ளமட்டும் புலன்பொறி வழிகளால் அனுபவிக்கத்தக்க சுகமனைத்தையு மனுபவித்து ஆசைதீர்ப்பதுமே கருமமொழிய வேறு தேடத்தக்க தொன்றுமில்லையென்று வம்பு தும்பு பேசி வாதாடிப் பெரியோரை மதிக்காமல் சத்தியத்துக்குக் கட்டுப்படாமல் "கண்டதே காக்ஷி கொண்டதே கோலம்" என்று காலந் தள்ளுகிறார்கள். இவ்வகையார் இங்கிலீஷ் படிப்பு விருத்தியாக ஆக அதிகரித்தார்கள். இதனால் பொதுவில் ஜனசமூகத்துக்கு விளையுங்கேடு எல்லாருக்கும் நன்றாக புலப்படலாயிற்று. கவர்னர்களும், கவர்னர்-ஜெனரல்களும், இங்கிலீஷ் படித்தவர்களிடத்தில் இக்குறைகளைக்கண்டு இதற்குக் காரணம் காணத் தேடினார்கள். ஆங்கிலேய உத்யோகஸ்தர்களும் பத்திராசிரியர்களும் முதலில், ஹிந்துக்களுடைய சுபாவமே கெட்டது: அவர்களைப் படிப்பிப்பதினால் அவர்களுடைய கெட்ட சுபாவங்களை தலையெடுத்து விளங்குகின்றன: இது ஜாதிசுபாவம், எளிதில் நீங்காத்தன்மையது: இவர்களுக்கு அதிகமாய்ப் படிப்புப் போதித்தல் கூடாதென்று முறையிட்டுக் கூறினார்கள். பிறகு இது வீண் அபவாதமென்று கண்டு போதனாமுறையில் குற்றமிருக்கலாமென்று நினைத்து அதைச் சீர்திருத்தவேண்டுமென்று முயற்சித்தார்கள். பள்ளிப்பிள்ளைகளுக்குச் சன்மார்க்க விர்த்தியுண்டாக நீதி சாஸ்திரங்களும், நன்னெறி போதிக்கும் கட்டுரைகள், மூதுரைகள், நீதிக்கதைகள் முதலியவும் போதிக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானம்செய்து அந்தப்படியே நடந்துவர உத்தரவும் பிறப்பித்தார்கள். சீக்கிரத்திலதானே இது பிரயோசனப் படாதென்று கண்டு கொண்டார்கள்.

பள்ளிப்பிள்ளைகளுக்குச் சன்மார்க்கபோதம் செய்யவேண்டிய தவசியமென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளபட்டும், சன்மார்க்க போதமில்லாக்குறை பெருங்குறையென்று எல்லாரும் குறைகூறி முறையிட்டும், அக்குறையை நிவர்த்திக்க வழியறியாது திகைத்து வார்த்தை மட்டோடு விட்டுவருகிறார்கள். இது விஷயமாய் நாம் எழுதிய ஒரு பிரபந்தத்தில்* சன்மார்க்கத்துக்கு ஆதாரமாயுள்ளது தெய்வஞானமென்றும், ஆகையால் அந்த ஞானத்துக்கு ஏதுவான மதபோதனை எல்லா மதத்துக்கும் பொதுவாகவுள்ள உண்மைகளைக்கொண்டு எல்லா பள்ளிக்கூடங்களிலும் பால்யவயது முதல் போதிக்கப்படவேண்டுமென்றும் வற்புறுத்திக்கூறினோம்.

இதுநிற்க, சன்மார்க்கம் சன்மார்க்கமென்று எல்லாரும் சன்மார்க்கத்தை விரும்பிப் பேசுகிறார்கள். புறக்காரணங்களை முன்னிட்டு சன்மார்க்கவழியை யனுசரிக்கச்செய்வது ஒரு நூற்றாண்டு முழுவது முழைத்தபின் கூடாத காரியமென் றேற்பட்டுவிட்டது, மற்றோரிடத்தில் "பாலபோதம்" என்னும் தலைப்பின்கீழ் விவரமாய்க் கண்டெழுதியிருப்பதால் விளங்கும். ஆகவே சன்மார்க்கத்தை யனுசரிக்க ஆதாரமான சாதகங்கள் மனிதன் உள்ளத்தினுள்ளேயே யிருத்தல்வேண்டும். உள்ளத்தை யொட்டியுள்ள காரணங்களேற்படில் மனிதன் தானாகவே யந்தவழியில் நடப்பது சகஜமாகும். அதற்கு மனிதன் தன்னைப்பற்றிய உண்மையை உள்ளபடி யறியவேண்டும். "தன்னையறிந்தவன் தலைவனாவான்." தன்னையறிய ஆத்மவித்யா போதமவசியம். ஆத்மவித்யாபோதமே மதசித்தாந்தங்களின் நோக்கமும் முடிவுமாம். மூடர்கள் கெட்டுப்போகாதபடி முன்னோர் ஸ்வர்க்கநரகானுபவங்களை வர்ணித்தெழுதி வினையின் பயனைவிளக்கியிருந்தார்கள். இப்பொழுது வரவர புத்திவிர்த்தியதிகமானதால் அந்த சூக்ஷ்மம் பலிக்கத்தக்கதாயில்லை. ஆகையால் உண்மையை யுள்ளபடியெடுத்துப் போதிப்பதே மேலான மார்க்கமாம். உண்மையாவது சத்தியம்.

ஹிருதய சுத்தியும், காருண்யமும், அன்பும் நிறைந்துள்ள சீவனுக்கு அதையறிவது சுலு-

* *Vide* the paper on "Religion and Ethics."



வாம். சிந்தையைத்தூய வழியிற் செலுத்திக்கொண்டேபோனால் அது முடிவில் சத்தியத்திற் கொண்டுவிடும். தெய்வமுண்டென்றாலும் சரி, இல்லையென்றாலும் சரி,—தூயநெறிசெல்வார் கடவுளை யடைவார்—சித்தந்தெளியில் சிவனைக்காணலாம்; சத்தியத்தையறியலாம்; அகத்தூய்மையொன்றே முக்கியம். அதுவும் "வாய்மையால் அகம் தூய்மையாம்."—என்றபடி வாய்மை (உண்மை) யால் சித்திக்கத்தக்கதாம்.

கிறிஸ்துவும் "Love is the fulfilment of all laws." "அன்பிலமர்ந்துறைய எல்லா தர்மங்களும் நிறைவெய்தும்" என்றார். "God is love." "அன்பே அவன்" என்றதனாலும், அன்பின்வழியே சத்தியத்தைக் காணலாம், "அல்லது அன்புபரிபூரணமானவிடத்தே சத்தியம்" என்றதனாலும் எல்லார் போதனையும் ஒன்றேயென்பது ஸ்பஷ்டமா யேற்படுகிறது. ஆகையால் சத்தியத்தில் பற்றிலையேல் சன்மார்க்கத்திலும் பற்றில்லாதொழியும். சத்தியத்தை நேசித்தார் சன்மார்க்கத்தைத் தாமே நேசிப்பார். அவருக்கு சத்தியநேசம் தவிர வேறு தூண்டுகோல் வேண்டியதில்லை. சத்தியத்திலுள்ள நேசம் சன்மார்க்கத்தை விர்த்திசெய்யும்; சன்மார்க்கவிர்த்தி சத்தியத்தை அதிகமாக நேசிக்கச்செய்யும். இப்படி ஒன்றுக்கொன்று ஆதாரமாயிருந்து ஒன்றையொன்று வளரச்செய்யும். ஆகையால் "சத்தியமின்றிச் சன்மார்க்கமில்லை" யென்பதினுண்மையை யாவராலும் மறுக்கவொண்ணாது. ஆத்மாவின்றித்தேகமில்லை; தேகமென்பது கருவி கரணங்களமைந்த ஒரு ஆயுதம்போலாம்; அதை யுபயோகிப்பவன் ஆத்மா. அவன் அனாதியாயுள்ளவன். பிறப்பிறப்பற்றவன். ஆகையால் தேகமனோதத்துவங்களோடு ஆத்மதத்துவங்களையு மறியவேண்டியதவசியம். கருவி கரணங்களின் விர்த்தியெல்லாம் ஆத்மவிலாசம் வெளிப்பட்டு விளங்குவதற்காகவே. அதை மறந்துவிட்டால் பயிற்றும் வித்தை பயனற்றதாகிறது.

## ON PRIMARY EDUCATION.

## பாலபோதம்.

பொட்டைப் பாடமாக கெட்டுருப்போடும் கெட்டவழக்கத்தைவிட்டு, குழந்தைகளை வளர்ப்பதிலும் அவர்களுக்கு வித்தை போதிப்பதிலும் அவர்களுடைய ஆத்மவிலாசம் விளங்கும்படி முறையறிந்து நடந்துகொள்ளுவதே உண்மையான போதனாமுறையென்று நாம் வற்புறுத்தியுள்ளோம். சென்றமாதச் சஞ்சிகையில் பிரசுரமான "கிண்டர்கார்டன்" போதனாமுறை என்னும் வியாசத்தில், இம்முறையை முதல் முதல் மேற்றிசையில் கண்டு பிடித்தவரான ப்ரடெரிக் ப்ரோபல் அவர்களுடைய உண்மையான சித்தாந்தங்களை உள்ளபடி யெடுத்துரைக்கப் பட்டிருந்தது.

இதுநிற்க, அமெரிக்காவில் வித்யாபோதனா விஷயமாய்செய்த முயற்சிகளின் பயனை டாக்டர் ஹிர்ஸ்ச் என்னும் விற்பன்னர் ஒருவர் உள்ளாராய்ந்து உண்மையை வெளியிட்டிருப்பதை சுருங்கச் சொல்லுவோம். அதன் கருத்து என்னவெனில்: 18-ம் நூற்றாண்டில், பூமியில் குற்றங்களும் குறைகளும் மலிந்து நிறைந்து கிடைப்பதற்குப் பரிகாரம் படிப்பு ஒன்றே என்று நம்பினார்கள். வித்தைப்பயிற்சியினால் எல்லாக்குற்றங்களும் குறைகளும் நீங்கிவிடும் என்று அக்காலத்திலுள்ள பிரதம வித்வான்களும் விற்பன்னர்களும் எண்ணினார்கள். ஆகவே அவர்கள் எண்ணம் பரவிப்பலன்படலாயிற்று. 19-ம் நூற்றாண்டில் அவர்களுடைய எண்ணங்களெல்லாம் நிறைவெய்தலாயிற்று. எல்லாரும் எழுதிப்படிக்கக் கற்றால் பூமியிலுள்ள குற்றங்களெல்லாம் நீங்கிவிடுமென்று அவர்கள் எண்ணியெண்ணி ஏங்கிய ஏக்கம் 19-ம் நூற்றாண்டின் முடிவில் காரியசித்தியானதினால் நீங்கியது. அமெரிக்கா யுனைடெட்ஸ்டேட்ஸில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் வெகு அபூர்வம். சகலருக்கும் அக்ஷராப்பியாசம் செய்வித்து எழுதப்படிக்கப் போதிக்க வேண்டுமென்று அவர்கள் ஆசைப்பட்டது நிறைவேறியது. ஹைஸ்கூல்,

யூனிவர்ஸிடி வித்தைகள் அதாவது பிரதம வித்தையும் மத்ய உயர்தரப்படிப்பும் அதிகமாய்ப் பரவவேண்டுமென்று அவர்கள் கொண்டநோக்கமும் நிறைவேறியது. ஆனால், இவைகளினாலுண்டாகுமென்று அவர்கள் திண்ணமாய் எதிர்பார்த்த சுகிர்தங்கள் மட்டும் உண்டாகவில்லை. பூமியிலுள்ள குற்றங்குறைகளும் குறையவில்லை. புத்தி கூர்மைப்படக் கூர்மைப்பட, பொய், களவு, மோசம் முதலான பாதகஞ்செய்யும் குற்றவாளிகளும் அவர்கள் தொழிலை முன்னினும் அதிக புத்தி கூர்மையோடு செய்து வந்தார்களேயன்றி அவர்கள் குற்றத்தைவிட்டுச் சீர்திருந்தினாரில்லை. ஆகவே 19-வது நூற்றாண்டின் முடிவில் படிப்பினால் மட்டும் மனிதன் சீர்திருந்துவான் என்று எண்ணினது பொய்யென்று ஸ்பஷ்டமாகப்பட்டது. இப்பொழுது நடக்கும் 20-வது நூற்றாண்டில் அமெரிக்காவில் பொது ஜனவித்யாபோதனைப் பொறுப்புள்ளவர்கள் இதுவரையில் நடத்தப்பட்ட வித்யா போதனைமுறையில் உள்ள குற்றத்தைக்கண்டு ஒப்புக்கொண்டு, இந்த நூற்றாண்டு முதல் அக்குற்றத்தை நீக்கி உண்மையான வழியை அனுசரிக்க முயலுகிறார்கள். 19-வது நூற்றாண்டில் கற்றுக்கொண்ட உண்மை யென்னவெனில், ஆத்மவிர்த்தியைக் கவனிக்காது, மனதையும் புத்தியையும் மட்டும் படிப்பினால் கூர்மைப்படுத்தி வருவதினால் பிரயோசனமில்லை. மனிதன் அதனால் சீர்ப்பட்டு உயர்நிலையடையாமல், முன்னிருந்த நிலையிலேயேயிருந்து முன்செய்த குற்றங்குறைகளை இன்னும் சாமர்த்தியமாகச் செய்துவருகிறான். ஆகையால் இளங்குழந்தைகளுக்கு வித்யா போதனை செய்வதில் அவர்களுக்கு விஷய ஞானமுண்டாக்குவதையே பெரிதாக வெண்ணாமல் விஷயானுபவத்தால் அவர்களுடைய ஆத்மவிலாசம் வெளிப்பட்டுப் பிரகாசிக்கும்படி செய்யவேண்டு மென்பதேயாம். இதை நமது பூர்வீக ரிஷிகள் வாக்கில் சொன்னால், தெய்வசிந்தையின்றி சுத்தநாஸ்திகப் படிப்பு பொதுவாய் ஜனங்களுக்கு நன்மையைப் பயக்காது என்பதாம். இதை கிண்டர்கார்டன் முறையை யனுசரிப்போர் வாக்குப்பிரகாரம் செப்பின், விஷய ஞானத்தினும் ஸத்வகுண விர்த்தியே விசேஷபயன்தந்து மனிதனை மேலே தூக்கிவிடும் தன்மையதாகும். இந்த உண்மையை தேசப்பொதுவிலனுபவரீதியாயுணர இரண்டு நூற்றாண்டுகள் அல்லது 200-வருஷங்கள் சென்றன. இப்படியே மனிதர்கள் பிரத்தியேகமாகவும் பிழைசெய்ததின் பயனை யனுபவித்து உண்மையை யுணர்கிறார்கள். உண்மையை யுணரவும் அவர்கள் வாழ்க்கை யுடனே மாறிவிடுகிறது. இந்த இருநூறுவருஷ அனுபவத்திற் கண்டவுண்மையையே ஒருவர் ஸ்வானுபவத்திற்கண்டு பின்வரும் மூன்று வரிகளில் அழகாய்த் தீட்டியிருக்கிறார்:—

"நேற்றுத்திருவருள்வாக்கை நான்நோக்காவிட்டேன்
"பரம்பொருளதனைப்பராக்காய் விட்டான்
"பெற்றேன் பிழைத்தேன் பரம்பொருளை யினித்
தானு மசட்டை செய்வேனோ நான்."

அமெரிக்காவில் வித்யாபோதனை விஷயத்தில் முதன்மையாயுள்ளவர் எண்ணமும் கொள்கையும் இதற் கொத்ததாகவேயிருக்கிறது.

இன்றைக்கவர்கள் மனோபாவம் என்னவெனில், நேற்று (போனகாலத்தில்) ஆத்ம க்ஷேம விர்த்தியைநாடாது தேகமனோவிர்த்தியையே நாடியுழைத்தோம்; அது உத்தேசித்த பலனைக்கொடுக்காது தவறிப்போய்விட்டது: போனது போயிற்று; இனிக்கருவிகரணங்களைக் கொண்டு ஆத்மவிர்த்தியையே முதல் நோக்காக் கொண்டுழைப்போம்: இனி ஆத்மாவை அசட்டை செய்யவொண்ணாது. நாம் ஆத்ம விர்த்தியென்று சொல்வதை அவர்கள் "Character building" என்கிறார்கள்: இதை ஸத்வகுணவிர்த்தியென்று சொல்லலாம். எப்படிச்சொன்னாலென்ன! அனுபவத்தில் எல்லாமொன்றையே குறிக்கிறது.



அமெரிக்காவில் இந்த உண்மையை என்னமாகக் கண்டுபிடித்தார்களென்றால், போலிஸ், ஜெயில் முதலான குற்றவாளிகளைத் திருத்துவதற்கான இலாகாக்கள் என்னமாயுண்டாயினவென்று தீர ஆலோசித்து, காரணத்திலிருந்து காரியமுண்டானது நிச்சயமாதலால், காரியத்திலிருந்து காரணத்தை விசாரித்துக்கண்டு, காரியத்துக்குக் காரணமும், அந்தக் காரணத்தைக் காரியமாக்கி அதற்குக் காரணமுமாக இப்படியே ஒன்றைத் தொட்டொன்றாகத் தொடர்ந்து பிடித்து விசாரித்துச் சென்றார்கள். இப்படி விசாரித்துச் சென்றதில் பாலப்பருவம், வளரும் பருவத்தில் சிறுவர்களுக்குச் சரியானபடி வித்தை போதித்தல், அதாவது அவர்கள் உள்ளம் உண்மையான வழியைப்பற்றிச் செல்லும்படிச் செய்தல்—இதெல்லாம் ஆத்ம விர்த்தியையே காட்டும்—இராஜ்ஜிய க்ஷேமத்துக்கு மிகவும் அவசியமென்று கண்டார்கள். காணவும், உடனே அதை பூர்ஜிதத்துக்குக் கொண்டுவரத் துவக்கினார்கள். இப்படி எண்ணித் துணியும் ஆற்றலும் துணிந்ததைத் தொடுபிடியாய்த் தொட்டுச்செய்யும் சக்தியும் வாய்ந்த அமெரிக்கர்கள் பொதுஜன வித்யா போதனை விஷயத்தில் இம்மேலான குணங்களமைந்திருப்பதுபற்றி உலகில் தலைமை வாய்ந்து உண்மை நெறியில் வழிகாட்டிச் செல்லும் சிலாக்கியம் பெற்று விளங்குகிறார்கள். அமெரிக்கா இதரதேசத்தாருக்கு இது விஷயத்தில் போதிக்கும் நீதி யென்னவெனில், வித்யா விஷயத்தில் செய்யப்படும் எல்லாமுபற்சியும் ஸத்குண விர்த்திக்கு அனுகூலமாக விருக்கவேண்டியது. * அதாவது வித்யா இலாகா விதிகளுக்குத் தக்கபடி பிள்ளைகளைப் பழக்காமல், பிள்ளைகளின் ஜீவபாவத்திற்குத் தக்கபடி அவர்களின் ஆத்மவிலாசம் வெளிப்படுவதற்கு அனுகூலமான விதமாக முறையறிந்து அவர்களைப் பழக்கவேண்டும்.

உயர்தர (கலாசாலைப்) படிப்பைவிட, குழந்தைப் பிராயத்திலும் வளர்பிராயத்திலும் சிறுவர்களை முறையறிந்து பழக்கி அவர்களிடத்துப் பூர்வ வாசனையாலுண்டான குணக்கேடுகளை யறிந்து அவைகளைக் கூடியவரையில் ஆத்ம க்ஷேம விர்த்திக்கனுகூலமான வழியையனுசரித்துத் திருத்தி அவர்களை சன்மார்க்கத்தில் திருப்புவது இராஜ்ஜியப் பொதுவிற்கு அதிக நன்மைபயக்குவதாயும் அதிகப்பிரயோசனமுள்ளதாயு மிருக்கிற தென்பதை அமெரிக்கர்கள் உண்மையிலுள்ளபடி கண்டுபிடித்தனுசரிக்கத் துவக்கியிருக்கிறார்கள். பாலப்பருவத்தில் சிறுவர்களைச் சீர்திருத்தாது விட்டு அவர்கள் வளர்ந்தபின் அவர்களிடத்துள்ள குணக்கேடுகளைத் திருத்த போலீஸும், மாஜிஸ்திரேட்டும், ஜெயிலும் ஏற்படுத்துவது, முளையில் கையால் கிள்ளக்கூடியதை முதிரவிட்டு அனேக ஆள்களைவிட்டுக் கோடரி கொண்டு தரிப்பதுபோலாகிறது. தரித்தும் பயனென்ன? மரம் விழுந்தாலும் வேருள்ள மட்டும் அது மேலும் மேலும் கிளைத்து முளைத்துக் கொண்டேயிருக்கும். ஆகையால் இளம்பிராயத்தில் சிறுவர்களைத் தேற்றுவது பின்னால் போலீஸும், நியாயஸ்தலங்களும், ஜெயில், கொட்டடிகளும் ஏற்படுத்தி அவர்களால் இராஜ்ஜியத்துக்குத் தீங்கு நேராதபடி காப்பதிலும் மேலான காரியமென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறதல்லவா! மேற்றிசையில் இந்த உண்மையை யுணர்ந்தவர்களில் முதன்மையானவர் ப்ரெடரிக் ப்ரோபல். இவர் "செத்தபின் சுடுகாடு சென்று சடங்குகள் செய்து ஒருவனைக் கரையேற்றுவதிலும், பிறந்தவுடன் தொட்டிலையண்டி நின்று அக்குழந்தை தன்னுணர்வுண்டாகி வளர்ந்து தன்மயத்துவம் பெறவுழைப்பது மேல்" என்றுணர்ந்து அவருடைய வாழ்நாள் முழுவதையும்

* "The most essential principle...is that of making other instruction subservient to the training which makes for character in the individual. This means that the child is no longer to be bent to the unyielding code, but that the method is to be adapted to meet the demands of the developing soul."

குழந்தைகளை வளர்க்கும் வழியைக் கண்டுபிடித்து அதன் முறையை விளக்குவதில் கழித்தார். அப்படியே பருவமேறவேற மனிதனாகும் வரையில் அதை யனுசரித்துப் போதிக்கு முறை கண்டுபிடிக்கவேண்டு மென்பது இவர் கருத்து. ஆனால் இவருடைய வாழ்நாள் அதற்குப் போதவில்லை. இவர் அரைகுறையாக விட்டதை நமது ஆரிய ரிஷிகள் இவருக்கு முன்னேயே பூர்த்திசெய்துவைத்திருந்தார்கள். ஆனால் அம்முறைகள் அவர்களுடைய சந்ததியார்களின் ஆண்மைக் குறைவாலும் தாழ்மை நிலையாலும எவ்வளவு பிரசித்தி பெற்று விளங்கவேண்டுமோ அவ்வளவு விளங்கவில்லை. விளங்கவில்லையானாலும் அவை யழிந்துபோகவில்லை. ஏனெனில் அவையென்றைக்குமழியா உண்மைகள். உலகழிந்தாலும் உண்மை அழிவதில்லை. "பூமியும் ஸ்வர்க்கமுமழிந்தாலும் என்சொல்மட்டும் அழியாது."—அதாவது மாறாது என்றார் யேசுகிறிஸ்து. இவர் மனிதனுடைய உண்மையை உள்ளபடி முற்றுமறிந்து போதித்திருந்தும் இவர் போதனை, புத்தி விர்த்தியினால் அகங்காரம் துளிர்த்த மேற்றிசையாருக்கு உள்ளத்திலுறைக்கவில்லை. தேகத்தை யொட்டி மனிதனைப் பாலன், சிறுவன், பெரியவன் என்று வகுத்தல் தகுதியல்ல. உள்ளத்தின் விர்த்திக்குத் தக்கபடியே அவன் மதிக்கப்படவேண்டும். உண்மையான முறைப்படி வளர்க்கப்பட்ட ஒருவன் உள்ளும் புறமும் ஒத்து விளங்குவான். அறிவென்பதே அனுபவம். ஆகையால் உலகானுபவத்துக் காதாரமாகவே யிருக்கவேண்டும் எல்லாப் போதனையும் படிப்பும். பள்ளியிற் போதனை வெளியனுபவத்தை விளங்கச்செய்வதாக விருக்கவேண்டும். விளங்கச்செய்யுமளவுக்கே அது உண்மையான போதனையாகும். குழந்தை பிறந்தால் அது குடும்பத்துக்குள்ளிருந்து வளர்கிறது. அதன் உலகமெல்லாம் அதற்கு குடும்பத்துக்குள்ளாகவே: அப்படி வரையறுத்துச் சுருங்கப்பெற்ற சுற்றுப்புற ஞானத்தால் அதன் ஆத்மபுத்தியும் சுருங்கிப்போகாமல், வெளியுலகத்தை வியந்தறிந்து ஆத்மபுத்தி அகன்று வளர்ந்து உலகானுபவமுற்றி அதையுங்கடந்து "உலகெலாமுணர்ந்தோதற்கரியனை உண்மையனைக்" காணற்கருகனாய் அவனாத்மா வரையற்று விளங்கவேண்டும். இதுதான் உண்மையானவித்தை. இதையடையப்பெறுவதுதான் உயிர்நலம் பயக்கும். இதைக்கொண்டே மனிதன் இகம்பரம் இரண்டிலும் தேறிப்பிழைக்கவேண்டும்—இதை ஆத்மவித்தையென்று சொல்லுவர் நம்மில் முதறிஞர். குழந்தைகளுக்கு சுபாவமாகவுள்ள ஆத்மபுத்தியும், அவர்களைப் பழக்கும் முறைதப்பாக விருத்தலால் வயதுசெல்லச்செல்ல விர்த்தியாய் பிரகாசிக்காது, ஒடுங்கி மழுங்கி இருந்தவிடம் தெரியாமற் போகிறது. இந்த உண்மையை உள்ளத்தில் வைத்துழைப்பதே உண்மையான வித்யாபோதன முறையாம்—இந்த உண்மையை உள்ளபடி கிரகித்தவராதலால் ப்ரோபல் கண்டுப்பிடித்த கிண்டர்கார்டன்முறை வரவரப் பரவிவருகிறது. அவர் முறைக்குயிராயுள்ளது இந்தவுண்மையே. இந்த உண்மையை யறிந்து பற்றினவர் அவர் முறையை யெளிதிலுணர்வார். மற்றவர்கள் என்னதான் ஏட்டுப்படிப்புப் படித்தவர்களானாலும் அவர் முறையை உண்மையிலுணரார் உணராரே.

## "கல்விச் சிறப்பு"

வல்லாரே ஆயினும் வாய்த்தகலை கல்லாரேல்
மல்லோருந் தூற்றிப் பழித்திடுவர்—நல்லாய்! கேள்
கல்வியைப்போல் மேலாங் கருந்தனமொன் றில்லையெ
எல்லாரும் சொன்னார் இசைந்து. [ன்றே

எண்ணும் எழுத்துமிவை எல்லார்க்கும் கண்ணாகும்;
திண்ணம், இது நன்கறிதி சேயிழையே!—ஒண்டனத்
பெற்றார்க் கிரும்பெருமை யில்லை, இவ்வுலகில் [தைப்
கற்றார்க் கிலையே கழறு.—விவேகோதயம்.



162035

## ADVICE TO YOUNG MEN.

## மாணவர்களுக்கு புத்திபோதனை.

[1900-ம் வருஷம் சென்னை ஸர்வகலா சங்கத்தார் பட்டமளிக்கும் உற்சவம் நடந்தேறியபொழுது அந்தந்த பரீக்ஷைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட வித்தியார்கட்குப் பட்டங்களளிக்கப்பட்டபின் ஆனரபில் மிஸ்டர் எப், ஏ. நிகல்சன் கீழ்வருமாறு அவர்கட்குப் புத்திபோதனையாக பிரசங்கித்தார். அது இப்பொழுதும் வித்தியார்த்திகளுக்கு மிக அவசியமான புத்திமதிகளுடன் கூடியிருப்பதால் அப்பிரசங்கத்தின் சாராம்சத்தை விவேகசிந்தாமணி வாசிப்போருக்காகச் சுருக்கி எழுதுகிறோம்.]

"நீங்கள் எல்லாரும் இச்சர்வகலாச்சங்கத்தவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இன்று உங்கட்குச் சில உறுதிமொழிகளை உரைத்துக்களிக்க எனக்குச் சமயம் வாய்த்ததற்காக மிகச்சந்தோஷிக்கிறேன். நீங்கள் ஊக்கமும் விடாமுயற்சியும் கொண்டுழைத்து வந்ததனால் உங்கள் குணம் பலப்பட்டிருக்கின்றது. உங்கள் மனதும் பழகி விசாலித்திருக்கின்றது. இடைவிடாத, ;

"முயற்சி திருவினையாக்கும்; முயற்றின்மை யின்மை புகுத்திவிடும்."

என்பதினுண்மையையும் முயற்சியொன்றிருப்பின் ஆகாததொன்றுமில்லை என்பதையும் அறிந்துகொண்டிருக்கிறீர்கள். இவ்விதமாகப் பழகிப் பலப்பட்டிருப்பதால் நீங்கள் உங்கள் சுயவிருத்தியைக் கவனிப்பது தகுதியே. ஆனால் அதுமட்டுமல்ல, நீங்கள் உலகத்தார் பொருட்டும் உண்மை கடைப்பிடித்தும், சுயநலம் பாராது அவர்களுடைய அபிவிர்த்திக்காக உழைக்கவேண்டுமென்றும் இச்சங்கத்தார் உங்களை ஆசீர்வதிக்கிறார்கள்.

மேலும் தங்கள் வருத்தங்களைக்கவனியாமல் சந்தோஷத்தோடு உழைத்தும் பல கஷ்டங்களையும் பொறுமையுடன் அனுபவித்தும் நீங்கள் இந்தப்பட்டங்களைப்பெற்று அவற்றின் பயனைபடைதற்குக் காரணபூதர்களாயிருந்த உங்கள் தகப்பன்மார் முதலினோர்களையும் நான் மறவாமல் அவர்கள் பக்கலும் நன்றி செலுத்துகின்றேன்.

இனி நீங்கள் எந்தக் கடமைகளைச் செய்தலுக்காக இதுவரையும் பழக்[illegible] அக்கடமைகளைப்பற்றிச் சில சொல்லுகிறேன்! 'இதுவரையும்' என்று ஏன் சொன்னேனென்றால் உங்கள் பழக்கமானது இதனோடு பூரணமாகாமல் நீங்கள் பழகப்பழக அது எப்போதும் இனிச்செய்யவேண்டிய கடமைகளின் அவசியத்தையே காட்டி நிற்கின்றதாதலினால் உங்கள் வித்தையானது எவ்வளவு பூர்த்தியானதாயிருந்தபோதிலும் அது நீங்கள் வருங்காலத்திற் செய்யவேண்டிய கடமைகள் இன்னவை என்று காட்டி அவற்றைச் செய்வதில் உங்கட்குதவுவதைத் தவிர வேறொன்றும் செய்யாது, நீங்கள் உலகவாழ்க்கையிற் பிரவேசிக்கும் இப்போதுதான் உங்களுக்கு எண்ணமும் செயலும் வழிகளும் மிக முக்கியமாயிருத்தல்வேண்டும். 'ஒரு எண்ணத்திலிருந்து செயலுண்டாகும், செயலிலிருந்து வழக்கந்தோன்றும், வழக்கத்திலிருந்து குணம் விளையும், குணம் முடிவிற்கு வழிகாட்டும்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இது நிற்க, நீங்களெல்லாரும் இப்போது கூறிய உறுதிமொழிப்படி அவரவர் சக்திக்குத் தக்கபடி ஜனங்களின் ஒற்றுமையையும் அபிவிருத்தியையுங் கோரி நடக்கவேண்டும். உங்கள் கீதையிலும் 'உன் காரியங்கள் உலகத்தாரின் க்ஷேமங்கருதியதாகவும் இருக்கவேண்டும். ஏனெனில் பெரியோர் எவ்வழி நடக்கிறாரோ அவ்வழியே உலகமுஞ்செல்லும். அவர் மேன்மையாகக் கொண்டதையே உலகமுங் கொண்டாடும்' என்று உரைக்கப்பட்டிருக்கின்றது. சாதாரணமனிதர்க்கே இது ஒவ்வுமென்றால் கற்றுத்தேர்ந்து விசாலித்த எண்ணங்களுடைய உங்கள் விஷயத்தில் அதிகமாக இருக்கவேண்டும். எவனுக்கு அதிகங் கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அவனிடத்தில் அதிகம் எதிர் பார்க்கப்படுகிறது. உதாரணத்திற்காகச் சில கடமைகள் குறிக்கின்றேன். ஏனென்றால்

இவ்வித பொதுவிதிகள் செய்கைக்கு வழி காட்டுவனவல்ல. விவசாயக்குறைவு அல்லது தேசத்தவரின் தரித்திரம் ஆகிய இதுபோன்ற விஷயங்களைத் திருத்தும் முயற்சியில் நம்மில் எவ்வளவுபேர் இது நம்மாலாகாதென்று பின் வாங்குகிறார்கள். ஏனென்றால் அவற்றின் பற்பல பகுதிகளைப்பிரித்து நோக்காது முழுமையும் நோக்கி அவற்றை இராசாங்கத்தார் பெரிய உபாயங்களாலும் சீர்திருத்தங்களாலும் நிவர்த்திக்கலாமே யன்றி நம்மாற் றனித்தனி ஒன்றும் செய்யமுடியாதென்று நினைக்கிறோம். ஆனால் உண்மையில் நாமெல்லாருந் தான் தனித்தனி அதற்கு உத்தரவாதிகளாகிறோம். நாம் நம்வாழ்க்கையை மற்றவர்களின் வாழ்க்கையோடு சமப்படுத்தி நம்முயற்சிகளின் பலனை மற்றவர்களினுபயோகத்திற்குதவவேண்டும். இவ்விதமாகத் தனித்தனி அவரவர்களாலானது சிறியதேனும் சுத்தம் சக்திக்கியன்ற அளவு செய்துமுடிப்பதினாலேயே பெரிய விஷயங்களெல்லாம் நிறைவேறுகின்றன. நீங்கள் ஒரு பெரிய ராஜ்ய நிர்வாகம் பெறலாம் அல்லது பெருமனிருக்கலாம். அதன்மத்தியில் உங்கள் நகரம் அல்லது கிராமத்தின் விவகாரங்களிலுதவி புரியலாம். ஹைகோர்ட்டின் நீதிஸ்தானத்திலிருந்து நீங்கள் நீதிசெலுத்தும்படி உயர்ந்தாலும் உயராவிட்டாலும் உங்கள் சொந்த ஊரில் நேரிடும் வழக்குகளைத்தீர்த்து விரோதங்களைச் சமாதானப்படுத்தலாம். உங்கள் பக்கத்திருப்பவர்களுக்குள் நீதியும் சமாதானமும் நிலைக்கும்படி செய்யலாம். நீங்கள் வித்தியாபிவிர்த்திக்கு ஏற்ற பெரிய வழிகளைக் கண்டு பிடிக்காமலேயிருக்கலாம். ஆயினும் உங்கள் சொந்த கிராமத்தவரின் அறிவை விருத்தியாக்கலாம். கிராமப்பள்ளிக்கூடத் தினபிவிர்த்திக்கு உதவிபுரியலாம். பெண்கல்வியினபிவிர்த்திக்கு பெரியயோசனைகள் நீங்கள் சொல்லாவிட்டாலும் உங்கள் சொந்த வீட்டாருக்குப் புதிய எண்ணங்களும் அறிவும் புகட்டலாம். இதனாலேயே பல நன்மைகள் விளையும். நீங்கள் சுகாதாரவிஷயமாகப் பெரிய சீர்திருத்தங்கள் ஒன்றும் செய்யாமலிருந்தபோதிலும் உங்கள் கிராமக்கிணறு சுத்தமாயிருக்கிறதா என்றும் அதன் சுற்றுப்புறங்கள் சுககரமாயிருக்கின்றனவா என்றும் பார்த்துக்கொள்ளலாம். உங்கள் வீடு, பின்வாசல், கச்சேரி, வைத்தியசாலை முதலியன மற்றவர்கள் பார்த்துப்பழகும்படி பரிசுத்த முடையனவாயிருக்கப் பார்க்கலாம். பெரிய புத்தகங்களெழுதிப் பேர்பெறாவிட்டாலும் நீங்கள் அயலாரின் உபயோகத்திற்காகச் சிறுதுண்டுப் பத்திரிகைகள் எழுதி வெளியிடலாம். சுயபாஷையினபிவிர்த்திக்காகச் சபைசேர்த்துழைக்கலாம். நீங்கள் பத்திராசிரியராக வராவிட்டாலும் அங்கங்கே அறிவைப் பரவச்செய்து பொய், விபரீதஞானம் முதலியவற்றைப் போக்கி உண்மை புகட்டலாம்.

இவ்விதமாகப் பல வழிகளில் உங்கள் சிறிய பாகங்களை விர்த்தியாக்க முயலலாம். இப்படி நான் சொல்வதினால் உங்கட்குப் பெரிய எண்ணங்கள் வேண்டாமென்று நான் சொன்னதாக நினைக்கவேண்டாம். சிறிய ஆரம்பங்களிலிருந்துதான் பெருங்காரியங்கள் நிறைவேறுகின்றன என்பது உங்கள் மனதிலிருக்கவேண்டுமென்பதே நான் எண்ணியது. அளவற்ற நன்மைக்கேதுவாகிய இப்போதைய சேவிங்ஸ்பாங்கி என்னும் ஏற்பாடானது முன்னே ஓர் பாதிரி தன் கிராமத்தில் செய்த சிறு பிரயத்தனங்களிலிருந்து உண்டாயிற்று. இவ்விதமாகவே ஐரோப்பாவில் பெரிய விவசாய பாங்கிகள், பலபேர் சேர்ந்ததொழில் முயற்சிகள், முதலிய பிரபலமான காரியங்கள் எல்லாம் முதலில் ஒன்றிரண்டுபேரின் சிறிய முயற்சிகளிலிருந்து ஜனித்தன. ஆகையால்



சிறுவிஷயங்கள் நேரிடும்போது அவற்றை அலட்சியஞ்செய்யாமல் நன்றாக நம் சக்திக்கேற்றவாறு செய்துமுடிக்கப் பிரயத்தினப்படவேண்டும். எல்லாத் தொழில்கட்குந் தாயாகிய விவசாயத்தைக்குறித்துச் சில மொழி புகல நினைக்கின்றேன். நமது யூனிவர்சிடியானது மேற்கத்தியவற்றையும் பம்பாய் யூனிவர்ஸிடியையும் போலாது விவசாயத்திற்கென்று யாதொரு பட்டமுமளிப்பதில்லை. ஆனால் மேற்பார்வைக்கு அது அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் நீங்கள் வாழ்க்கை முழுவதும் தேசக்ஷேமத்திற்காக உழைக்கவேண்டுமென்று நேரே கருதப்படுகிறது. ஆதலின் தேசமுழுதும் விவசாயமே நிறைந்து ஜனங்களிற் பெரும்பாலார் விவசாயிகளாயுள்ள இத்தேசத்தில் இப்போது, அதுவும் கொடிய பஞ்சம் பரவி நம்மைப் பலவழியிலும் வருத்தும் இக்காலத்தில், நீங்கள் விவசாயத்தைப்பற்றிச் சிறிது நேரம் யோசிக்குமாறு நான் வேண்டுகிறது ஆச்சரியமல்ல. இவ்வாறு அடிக்கடி பஞ்சம் நேரிடுதலும் வீணிற்கா? அவையெல்லாம் கடவுளொருவர் நாமொவ்வொருவரும் தனித்தனி பஞ்சத்தையும் தரித்திரத்தையும் கொஞ்சமாவது குறைக்கக்கூடியதாக விவசாய அபிவிருத்திகள் செய்யமுடியாதா என்று எண்ணச்செய்கிறார் என்பதைப் புகட்டவில்லையா? இவ்விதமடிக்கடி நிகழும் கஷ்டத்திலிருந்து நாம் ஏதாவது நிலைத்த சுகத்தையடைய முடியாதா?

‘உழுவா ருலகத்தார்க் காணியஃதாற்றா,
தொழுவாரையெல்லாம் பொறுத்து’.
‘பலகுடை நீழலுந்தங்குடைக் கீழ்க்காண்ப,
ரலகுடை நீழலவர்’.

என்ற குறளிற்கூறியாங்கு நம் நாட்டிற் கிடைக்கக்கூடிய நற்றொழிலிதுவே.

இராஜாங்கத்தின் பலமே விவசாயிகளைப் பொறுத்திருக்கிறது. ஆதலினால் அவர்களின் க்ஷேமத்தையும் அபிவிர்த்தியையும்பற்றி கவனித்தல் கற்றறிந்தோர்க் கின்றியமையாக் கடனாகும். இராஜாங்கத்தார் எவ்வளவு பிரயத்தினஞ்செய்தாலும் புத்தகங்கள் எவ்வளவு எழுதப்பட்டாலும் பிரசங்கங்கள் எவ்வளவு செய்யப்பட்டாலும் கற்றறிந்தோர் தனித்தும் ஒன்று சேர்ந்தும் ஊக்கத்தோடு உடனிருந்து உழைத்தாலன்றி விவசாயவிர்த்திக்கு ஒன்றும் செய்யமுடியாது. மேற்கத்தியாருடைய உதாரணத்தைப்பார்த்து நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இங்கிலாந்தில் நிலங்கட்குடையவர்களாகி அவற்றை விருத்திசெய்யும் மிராசுதாரர்கள் பெரும்பான்மையும் யூனிவர்சிடிகளிற் கற்றுத்தேர்ந்தவர்களா யிருப்பார்கள். அவர்களனுமதியின்பேரில் அந்நிலங்களைச் சாகுபடிசெய்வோரும் வெகுவாய் அவ்விதமாகவே கற்றவர்களாயிருப்பார்கள். இராஜ்ய விவசாயச் சங்கத்தார் கட்டுரைப்படி இவர்கள் அறிவைப் பழக்கத்திற் செலுத்தி நடத்திவருகிறார்கள். மேலும் விவசாயத்திற் கற்றறிந்தோர் கருத்தைக் கவரக்கூடிய விஷயங்களும் பலவுள்ளன. நிலத்தின் சாராம்சம், எரு, விளைவு, வேண்டிய கருவிகள் முதலிய பல விஷயங்கள் இவர்கள் கவனித்தற்கேற்றவையா யிருக்கின்றன. இவ்விஷயத்திலும் நீங்களொவ்வொருவரும் வேறு பெரிய வழிகளொன்றுங் காணாவிட்டாலும் தத்தம் அயற்பக்கங்களி னபிவிர்த்திக்காகச் செய்யும் முயற்சி சிறிதேனும் இடைவிடாது செய்து மற்றவர்கட் குதாரணங்காட்டலாம். உங்கள் மற்ற வேலைகள் எவ்வளவு மிகுதியாயிருந்தபோதிலும் நிலமும் அதன் பலனும் எப்போதும் உங்கள் கவனத்துக்கு வந்துகொண்டேயிருக்கின்றது. அன்றியும் உங்களிற் பலர்க்கு நிலமே உங்கள் வரும்படிக்கு முக்கிய ஆஸ்பதமாயும் அதுவே உங்கள் உழைப்பிற் கிடமாயும் இருக்கும். “இப்போதுள்ளவர்களையும் பின் சந்ததியாரையும் கவலையின்றி யிருக்கச்செய்யக் கூடியதாய், உழைத்தால் நல்விளைவுதரும் ஒரு

சிறு நிலமும் ஒரு நல்ல சிறுவீடும் இருந்தால் அதுவே ஒருவன் அடையக்கூடியது. பெரிய லட்சாதிபதியாயிருப்பதிலும் நான் அதையே அடைய விரும்புவேன். அதுவே மிகக் கண்ணியமானவேலை என்பதென்கொள்கை. அது தான் கடவுள் தரக்கூடிய பெரியவரம்" என்று ஜார்ஜ் இலியட் அவர்கள் ஓரிடத்திற் கூறியிருக்கிறார். நம் நிலம் சிறியதாயிருப்பினும் நாம் உழைக்குமிடம் கிராமமாயிருப்பினும் இவ்விதமாகத்தான் கருதவேண்டும். நீங்கள் இப்போது நேரே நிலவிளைவைப்பார்ப்பதே தொழிலாகப்போனாலும் அல்லது ரிவின்யூ, பாரெஸ்டு, வைத்தியம், சுகாதாரம் அல்லது வித்தை ஆகிய எந்தப்பிரிவில் வேலையாகப் போனாலும், நீங்கள் நிலத்திற்காகவும் அதைப் பயிரிடுவோருக்காகவும் செய்ய வேண்டிய வேலை அதிகமுண்டு. விளைவை இரட்டிப்பாக்கல் முதலிய பெரிய விஷயங்களொன்றும் நீங்கள் கண்டுபிடித்துச் செய்யாவிட்டாலும் உழைத்து அதனால் விளைவின் பலனை அதிகமாக்கலாம். நீர்ப்பாய்ச்சல் நிலத்திற்கோர் பாதுகாப்பா? அப்படியாயின் உங்கள் சொந்த நிலங்களிலெல்லாம் ஒவ்வோர் கிணறுவெட்டுங்கள். உங்கள் அயலாருக்குச்சொல்லி அவர்களையும் அம்மாதிரிசெய்யச் செய்யுங்கள். கால்நடைப் பிராணிகட்கு உணவு இடம் முதலிய ஒன்றுபமையாதிருப்பின் உங்கள் சொந்த கால்நடைகளை முதலிற் கவனித்துக்கொண்டு மற்றவர்கட்கும் அவ்வாறே உபதேசியுங்கள். விளைவை அதிகரிக்கும் வழி ஏதாவது உங்கட்குத் தெரிந்திருந்தால் அதைப் பொறுமையுடன் உங்கள் நிலங்களிற் பரீட்சித்துப் பாருங்கள். பயிர்கள் நோய் முதலிய தீங்குகளால் அழிவுறுமாயின் அதை நன்றாய்க் கவனித்து அவற்றை அகற்றும் வழியைக் கண்டு பிடிக்கலாம். காடுகளும் மரங்களும் பழமரங்களும் குறைவாயிருக்கக்கண்டால் நீங்கள் ஏதாவது காலியிடத்தில் சில மரங்கள் வைக்கவாவது சிலவிடத்தை வேலியிட்டுச் சீர்படுத்தவாவது முடியுமா என்று நோக்கலாம். கிணறு வெட்டலும் மரம் வளர்த்தலும் இரண்டு பெரிய தர்மங்கள் என்று உங்கள் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இத்தாலியா தேசத்தில் ஒரு குழந்தை பிறந்தால் அதற்குச் சீதனமாகும்பொருட்டு அது பிறந்த உடனே சில பழமரங்களை வைத்தல் வழக்கமாயிருக்கின்றது. இவ்விதமாக வெல்லாம் நீங்கள் முயன்று உங்கள் சொந்த கிராமத்தையும் நகரத்தையும் விருத்திக்குக்கொண்டு வர முயலலாம். பயிரிடும் குடிகளின் க்ஷேமத்திற்கு ஏதாவது தடைகள் நேரிட்டு அவற்றைப் போக்க ஏதாவது வழிகள் உங்களுக்குத் தோன்றுமானால் அவற்றை நன்காராய்ந்து அவ்வழிகளை விளக்கமாய் அமைதியோடு எடுத்துக்காட்டுங்கள். உங்கள் அயலாரின் பிள்ளைகள் ஒழுங்கினமாய்க் கற்பிக்கப்பட்டுத் திரிவார்களேயானால் கிராமப் பள்ளிக்கூடத்தைத் தக்கபடி சீராக்க முயலுங்கள். உங்கள் கிராமத்தார் கண்டபடி எல்லாம் வீண்செலவுசெய்து தரித்திரர்களாயும் தரகர் முதலினோரால் பலவழிகளில் ஏமாற்றப்பட்டும் இருப்பார்களேயானால் அதைக் கவனித்துப் பல தக்கவழிகளாலும் அவர்களுட் பொருள்சேரும்படி செய்யலாம்.

இனி உங்களில் ராஜாங்க உத்தியோகங்களிற் பிரவேசிக்கின்றவர்களுக்குச் சிலமொழி புகல்கின்றேன். நீங்களிவ்வளவு கற்றதின் பயனாவது உங்கள் வேலைகளில் யூகத்தை யுபயோகித்து இராஜ்யபரிபாலன யந்திரத்தின் பல பாகங்களையும் நோக்கிச் சம்பூரணமாக்க முயலுதலும் இப்போது சாதாரணமாய் வழங்கும் வழக்கங்களை ஆராயாது பின்பற்றாமல் அவற்றைக் கவனித்துச் சீர்படுத்தவேதாவ.



திருந்தால் செய்வதுபேயாம். வேலைசெய்யும் வழிகளும் அவற்றின் பேற்பார்வையும் சரியாயிருக்கின்றனவா என்ற கவனத்தோடு நில்லாமல் அடிப்பட ஆராய்ந்து அவற்றின் அர்த்தமின்னதென்பதையும் அவை இன்னதற்காக ஏற்பட்டன வென்பதையும் தெரிந்துகொண்டு அவை அவ்வவ் விஷயங்கட்குபயோகமாகின்றனவா என்று பார்க்கவேண்டும். இல்லாவிடின் தக்கவாறு மாற்றமுடியுமா என்று நோக்கவேண்டும். உங்கள் வாழ்க்கையில் பெரும்பான்மையும் சிறுசிறு விஷயங்களும் கடமைகளுமே நிறைந்திருக்கும். யந்திரத்திற்கு எண்ணெயிடுவதுபோல சிறிதாகக் காணும் இவ்விஷயங்களைச் சரியாகவும் ஜாக்கிரதையாகவும் செய்து முடித்தலே வாழ்க்கையின் பயனும். நீங்கள் யாவர் மத்தியிலிருந்து வேலை செய்கிறீர்களோ அச்சனங்களின் நிலைமையில் நீங்கள் இருப்பதாக வைத்துக்கொண்டு அவர்களின் முறைப்பாடுகளையும் குறைகளையும் ஆகவேண்டுவனவற்றையும் அறிந்துகொள்ள முயலுங்கள். மற்றவர்கள் உங்களிடத் தெவ்வாறு நடந்துகொள்ள நினைக்கிறீர்களோ அவ்வாறே நீங்களும் மற்றவர்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டும். அப்படிச் செய்வீர்களானால் உங்கள் வேலைகள் எப்போதும் நன்முடிவேபெறும். முடிவாக உங்கள் நடத்தையும் செய்கையும் எப்போதும் மிக மேன்மையானவையாகவே இருத்தல்வேண்டும். உங்கள் சக்திக்கெவ்வளவு கூடுமோ அவ்வளவு பெரிய ஸ்தானங்களையே அடையமுயலுங்கள். ஜனங்களை முன்னுக்குக் கொண்டு வருவதில் உங்களுக்குப் பக்கத்திருப்பவரையே மிக எளிதில் வழிப்படுத்தலாம் என்பதை மறக்கக்கூடாது. ஆனால் தக்கசெய்கைகளில்லாமல் வெறும் கனவு காணும் எண்ணங்களில் மட்டும் அமிழ்ந்துபோகவேண்டாம். நாம் செய்யும் முயற்சிகளாலும் செய்துகாட்டும் உதாரணங்களாலுந்தான் சூழவுள்ளவர்கள் இணங்கி வழிப்படுகிறார்கள். உங்கள் காலம், முயற்சி, இன்பம், பொருள் நலம் முதலியவற்றைச் செலவிட்டுச் செய்யும் காரியங்கள்தான் உங்கள் சூழவுள்ளாரின் க்ஷேமாபிவிர்த்திக்குப் பெரும்பாலும் உபயோகமானவை."

இதுகாறும் நாம் மொழிபெயர்த்து வந்த பிரசங்கத்தினால் மிஸ்டர், எப். ஏ. நிகல்சன் அவர்களுடைய அநுபவமும் ஆழ்ந்த எண்ணங்களும் வெளியாவதன்றியும், தத்தம் படிப்பை முடித்து அப்போதுதான் உலகவாழ்க்கையிற் புகும் மாணவர்கட்குத் தக்க புத்திமதிகள்தானென்பதும் விளங்கும். அவர்கள் அன்றையதினம் பேசியது மிக நன்றாயிருந்தது. இவர் பிரசங்கத்தின் மொத்தக்கருத்து என்னவென்றால் நாம் செய்யுங்காரியம் சிறியதேனும் பெரியதேனும் திருந்தச்செய்யவேண்டும். சிறியதைச் சிறிய தென்றிகழக்கூடாது. சிறியதையிகழ்ந்தால் சிறியதும் பெரியதும் இரண்டுங்கெடும் என்பதே. இவர் பிரசங்கம் மொத்தத்தில் இந்துக்களின் புத்திப்போக்குக்கு ஒத்திருந்தது. நம்மவர்கள் எப்போதும் திருப்தியையும் மனவமைதியையுமே பெரிதாகக் கருதுபவர்கள், 'செய்வன திருந்தச்செய்' என்பது ஒளவையார் கூற்று.

---

"காரணமில்லாமல் எனக்குத் தீங்கிழைப்பவனுக்கும் என்னாலாகிய நன்மையைச் செய்வேன். ஒரு சிறிதும் அவனை வெறுக்கமாட்டேன். வெறுப்பை வெறுப்பினால் ஜயிக்கமுடியாது. அன்பினால் ஜயிக்கலாம். தீமையை நன்மையால் வெல். பேராசை பிடித்தவர்களிடம் தாராள குணத்தைக் காட்டு. பொய்யனுக்கு உண்மையின் உயர்வை உபதேசம் செய். பதிலுக்குப் பதில் தீமை புரிபவர்களுடைய குணம் எப்பொழுதும் சுத்தமாகாது. கொடியோன் புரியும் தீச்செயல்கள் விருத்தியாகாது போலவே, நாம் அவனுக்கியற்றும் நற்றொழில்கள், உபகாரங்கள் அதிகமாகவேண்டும்.—கௌதமபுத்தர்.

From " Sacred Thoughts,"

## THE FESTIVAL OF LAMPS.
## கார்த்திகை தீபம்.

(ஒரு மாது செய்த ஹிதோபதேசம்.)

"நமதரியநாட்டில் தொன்றுதொட்டு நடக்கும் அநேக காரியங்களின் பொருள் இன்னதென்று தெரியாமலே நம்மில் பலர் அவைகளை அனுசரித்து வருகிறார்கள். பழக்கவாசனையின்பேரில் பலர் செய்வதைப் பார்த்து மற்றவர்களும் செய்கிறார்களே யன்றி, செய்யுங்கருமத்தை ஏன் செய்யவேண்டும் என்கிற கேள்வி நம்மில் பிறப்பது அரிது. நெடுங்காலமாக, தேசத்தில் அனுசரிக்கப்படுவது சரியானதாகவே யிருக்குமென்கிற நம்பிக்கை, நம்மில் உமைந்து கிடக்கிறது. பெரியோர்களால் ஏற்பட்டதும், நாளதுவரை நடைபெற்று வருவதுமானவை நன்மை உண்டாக்கத்தக்கதாகவே யிருக்கலாம். ஆனால் அவைகளைப்பற்றி விசாரித்து அவைகளில் அடங்கிய பொருளைத் தெரிந்துகொள்ளாதிருப்பது, நமது குற்றமேயன்றி, அவைகளைப்பற்றி நாம் விசாரிக்கக் கூடாதென்கிற எண்ணத்துடன், அக்காரியங்களை முதியோர் செய்திருப்பார்களென்று தோன்றவில்லை. நாளதுவரை நடந்துவரும் ஒவ்வொரு காரியத்தைப்பற்றியும், நாம் விசாரித்து, ஒவ்வொன்றின் அந்தரங்கப் பொருளைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிறதே, பெரியோர் உத்தேசமாய் இருக்கவேண்டும்" என்பதை ஸ்தாபிக்க ஓர் ஹிந்து சகோதரி "கார்த்திகை தீபம்" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு ஒரு உபந்நியாசம் எழுதி வாசித்தார். அவ்வுபந்நியாசம், ஹிந்துமாதர்கள் விவேகிகளாகி அறிவாராய்ச்சியுடன் நடந்துவந்தால் நமக்குள்ளிருக்கும் கெட்ட வழக்கங்கள் எவ்வளவு நீங்கிச் சீர்படுமென்பதை விளக்குவதால் அதைக் கீழே பிரசுரிக்கிறோம். அந்த அம்மணி சொல்கிறாள்: "ஒவ்வொன்றைப்பற்றி விசாரித்துத் தெளியவேண்டுமென்கிற இச்சை என்னுள் சிலகாலமாய்த் தோன்றியிருப்பதினால் கார்த்திகை தீபத்தின் வரலாற்றைப்பற்றித் தெரிந்துகொள்ள பிரயாசைப்பட்டேன். நன்குணர்ந்த ஓர் பெரியவரைக் கேட்டேன். அவர் நீ இது விஷயமாய் கண்டதும் கேட்டதுமாகிய யாவற்றையும் சொல்வாயானால் பொருள் சொல்வேன், என்றார்.

"கார்த்திகை தீபத்தினன்று பக்தர்கள் நாள் முழுவதும் உபவாசமிருந்து, சாயரட்சை ஸ்நான முதலானவை செய்து சுத்தி செய்யப்பட்ட வீட்டின் முற்றத்தில் மாவிளக்கேற்றி, கர்ப்பூர ஆர்த்திசெய்து திருவண்ணாமலை யிருக்கும் திக்குநோக்கி நமஸ்காரம் செய்கிறார்கள். அநேகர், வீட்டில் செய்யாமல் அருகிலுள்ள ஆலயங்களுக்குப்போய் மாவிளக்கேற்றி தீப தரிசனம் செய்தவர்தபிறகு சாப்பிடுவார்கள். கோயில்களில் சொக்கப்பனை கொளுத்துவார்கள். கோபுரத்தின்மேல் அகண்டவிளக்கேற்றுவது முண்டு," என்றேன்.

ஆம், இவைகளைப்பற்றி உனக்கு என்ன தெரியவேண்டுமென்று அப்பெரியவர் கேட்டார். இச்செய்கைகள் என்ன பொருளைக் கொண்டிருக்கின்றன, தயைசெய்து சொல்லக் கோருகிறேனென்றேன். அதின்பேரில் திருவண்ணாமலை யிருக்கும் திக்குநோக்கி பார்க்கிறார்களென்றாயே, அம்மலையைப்பற்றி யாராவது, ஏதாவது, எப்போதாவது, உனக்குச் சொல்ல கேட்டதுண்டா, என்றார்.

ஆம், சுவாமி, அக்கினிமலையாய் ஒருக்கால் தோன்றினதாகவும் பிரம்மாவும், விஷ்ணுவும் முறையே அவரது முடியையும் அடியையும், காணப் பிரயாசைப்பட்டும் அவ்விருவருடைய முயற்சி வீணாய்ப்போனதாகவும், பிரம்மமாத்திரம், காணாத முடியைக் கண்டதாய்ப் பொய் சொன்னதால், பிரம்மாவுக்கு கோயிலில்லாமல் சாபம் கிடைத்ததென்று சொல்லக் கேட்டேனென்றும், சொன்னேன். ஆம் நீ சொன்னது அநேகமாய் அனுபவத்தையும் புராணத்தையும் ஒட்டியிருக்கிறது. உனக்கு உற்



றுணர்ச்சி யிருக்கிறதென்று வெளியாகிறது! ஆகையால், அதின் சகாயத்தைக்கொண்டே, நீ இன்னும் சற்று ஆழ்ந்து யோசிப்பாயானால், நீ கண்டதும் கேட்டதுமாகிய ஒவ்வொன்றிற்கும் பொருள் உனக்கே வெளியாகும். இச்செய்கைகளிலும் புராணசங்கதியிலும், கவனிக்கத்தக்கதாகிய சிறந்தபொருள்கள் என்ன விருக்கலாம் என்கிற நோக்கத்துடன் ஆலோசனைசெய் என்றார்.

அவர் அப்படிச் சொன்னபோது சற்று நேரம் எனக்கு ஒன்றும் தோன்றாதிருந்தது. பிறகு உபவாசம், ஸ்நானம், மாவிளக்கு, தீப தரிசனம் ஆகிய இவ்வமிசங்களைப்பற்றி யோசனை பிறந்தது.

உபவாசத்தால் சிலமுறை அஜீரண முதலியவை நீங்கி தேகம் நன்னிலைக்கு வரக்கூடும். மெலிந்த தேகிகளுக்கு உபவாசத்தால் தீங்கு நேரிடலாம். "நாளுங்கிழமையும் நலிந்தோர்க்கில்லை" என்றதனால் அவர்களுக்கு உபவாசமில்லையென்று ஏற்படும். "லங்கனம் பரம அவுஷதம்" என்பதினால் வலுத்ததேகிகளுக்கே சமயோசிதமாய் கையாடுவதினால், உபவாசம் நன்மை பயக்குமென்று தோன்றினது.

ஸ்நானம்—தேக சௌக்கியத்திற்கு முக்கியமான அனுகூலங்களில் ஸ்நானம் ஒன்றென்று சுகாதார விளக்கத்தில் நான் படித்திருப்பதோடு அனுபவசித்தமாயும் கண்டிருக்கிறேனாதலால் அது நல்லதென்றே தெளிந்தேன். தீபம் இருளை நீக்கி வீடுகளுக்கு சிறந்த அலங்காரத்தை உண்டுபண்ணுவதால் அது நல்லதென்றே வெளியாயிற்று. சுத்த அரிசியை ஊறவைத்து மாவாகத்திரித்து குவியலிட்டு நடுவில் சிறுபள்ளங்கோலி, நெய் வார்த்து வர்த்தியிட்டு விளக்கேற்றுவதின் இரகசியம் எனக்குத் தெரியவில்லையென்று சொன்னேன். பிறகு திருவண்ணாமலைச் சரித்திரத்தில் நீ ஏதேனும் சிறந்த பொருளைக் கண்டாயா என்றார்.

சிறிதுநேரம் யோசித்தபிறகு என்னுள் இந்த யோசனைகள் பிறந்தன.

பரம்பொருளின் ஆதியும் அந்தமும் பிரம்மா விஷ்ணு வென்கிறவர்களே காணமற்போனால் மற்றெவர்தான் தெரிந்துகொள்ளக் கூடும். எந்த விதத்திலும் முடிவில்லாதவனென்று இச்சரிதையால் தெரியவருகிறது. மேலும் தான் காணாததைக் கண்டதாய் சொன்ன பொய்க்காக பிரம்மாவுக்கு எங்கும் கோயிலில்லாமற் போயிற்றல்லவா? பொய்கெட்டது என்று தெரிந்தேன் என்றேன். ஆ, நன்றாகச் சொன்னாய், கார்த்திகை தீபத்தில் உள்ள இரகசியத்தை வெகுவாய்த் தெரிந்துகொண்டாய். இவ்வாறு நாம் காண்பதும் கேட்பதுமான விஷயங்களைப்பற்றி பொறுமையாய் சிந்திக்கத் தலைப்படுவோமானால், அவைகளிலுள்ள பொருள் நமக்கு தெரியாமற்போகாது. அறிவாளிகளைக்கொண்டு விசாரிப்பதினால் மறைவாய்க் கிடக்கும் சில பாகங்களுக்கு பொருள் விளங்கும் என்று சொல்லிவிட்டு, பிறகு ஒவ்வொரு பாகத்தைப்பற்றி, எனக்கு நன்றாய்ப்படும்படி விரிவாக எடுத்துரைத்தார். நான் தெரிந்துகொண்டதில் எனக்கு ஞாபகமிருப்பதை, இங்கு உங்களுக்கு தெரிவிக்க ஆவல்கொண்டவளா யிருக்கிறேன்.

"ஐயமிடுமி னறநெறியைக் கைப்பிடிமி
னிவ்வளவேனும் மன்னமிட்டுண்மின்—தெய்வ
மொருவனேயா மென்றுணரவல்லீரே
லிருவினைகளைந்துமறும்."

இச்செய்யுளில் நமது ஔவைபிராட்டியார் தெய்வம் ஒருவனே என்றார் அல்லவா? உலகத்தில் யாவருக்கும் இவ்வித பாவம் கிடையாது, பல தெய்வங்களுண்டென்பது அவர்களது கருத்து. ஒன்றென்று கொண்டவர்கள் தெளிந்தவர்கள், மற்றவர்களுக்கு அப்படி கொள்வது பிரயாசை என்று நமது பாட்டியார் தெரிந்தவராதலால் "ஒருவனே யென்று உணரவல்லீரேல்" என்றார். மனத்தேர்ச்சியுடையோர்க்கே அப்பாவனை பொருந்தும். சாமானியர் கொண்டிருக்கும் பல தெய்வங்களில், பிரம்மா, விஷ்ணு, சிவம் ஆகிய திருமூர்த்திகள் மேம்பட்டவர்களாதலால் சைவ

சமயத்தோர் தங்கள் தெய்வம் என்ற சிவத்தை உயர்வாகவைத்து மற்றிருவரையும் அவருக்குத் தாழ்வென்றும், விஷ்ணுவை உயர்வாக வைத்து மற்றிருவரையும் அவருக்குத் தாழ்வென்று வைஷ்ணவர்கள் சொல்வதும் வழக்கம். ஒரு பொருளுக்கு பல நாமம் அமைத்து ஒரு பெயரை உயர்த்தியும் மற்றப்பெயரை அதற்குத் தாழ்வாகவும் சொல்வதினால் பொருள் வேறுபடாதென்று சற்று யோசிப்போருக்கு எளிதில் புலப்படும். திருவண்ணாமலையைப்பற்றி ஸ்தலபுராணத்தில் சிவத்தை யுயர்த்திப் பேசியிருக்கிறது. சிவம் என்று இந்த அவசரத்தில் சொல்லப்படும் பரம்பொருள் அகண்டமானது.

நம்மைச் சுற்றிலும் மேலும் கீழும் எங்கும் பரந்திருக்கும் ஆகாசமென்ற வெறுவெளிக்கு நமது பாவனாசக்தியைக்கொண்டு அடிமுடி எங்குண்டென்று பார்ப்போமானால் ஆதி அந்தம் ஏற்படாது. இப்பெருவெளியை உடலாகக்கொண்டிருக்கும் ஞானஸ்வரூபியாகிய பரம்பொருளுக்கு ஆதியந்தமில்லை என்கிற உண்மையை அறிவிக்கும்பொருட்டு பிரம்ம விஷ்ணுக்களாலும் அடிமுடி தெரியப்படாதது என்று புராணத்தில் காட்டியிருக்கிறது. தன்னால்தான் அறியப்படுமேயன்றி மற்றவர்களால் அவரது பெருமையைக் காண்பது அசாத்தியம்.

பொய், கொலை, களவு, கள், குருநிந்தை என்னும் பஞ்சமா பாதகங்களில் பொய்யை பிரம்மா சொன்னதினால் தருமசுவரூபியாகிய கடவுள், பிரமனுக்கு கோயிலில்லாமற் செய்துவிட்டாரென்றால் மற்ற மானிடர்கள் பொய் சொல்வதினால் வருங் கதியை அவரவர் கணித்துக்கொள்ளவேண்டுமென்றும், பொய் சொல்வதாகிய இழுக்கை, ஒவ்வொருவரும் விடவேண்டுமென்பது புராணத்தின் கருத்து. உலகத்தில் உண்மை யின்னதென்று கண்டுபிடிப்பதற்குத்தான் ஞானிகள் பெரும்பாடு படுகிறார்கள். இதற்கு இடையூறாக உலகத்தில் பொய் பெருகுமானால், உண்மை வெளியாகாது, துன்பம் அதிகரிக்குமாகையால் பொய் பேசுவதை ஒவ்வொருவரும் ஒழிக்கவேண்டும். பொய் பேசப்படாதென்கிற நெறி ஒன்றை ஒவ்வொருவரும் கைக்கொள்வார்களானால், மற்றெல்லா பாதகங்களும் ஒழிந்துபோம். ஒழிக்கவேண்டிய பாபகிருத்தியங்களைவிட்டு உலகத்தில் உள்ளநாள் உள்ளமட்டும் நாம்நடத்தும் இல்லற விவகாரங்களில் தருமங்களை தப்பாமலும், எங்குமிருப்பதால் நம்முள்ளத்திலும் சாட்சியாயிருக்கும் பரம வள்ளலினது அங்கீகாரம் பெறுவதே நமது கடமையென்று சிரமேற் நடந்துவருவோமேயானால், நமதுள்ளம் தூய்மையடையும், அன்பு உண்டாகும், அறிவு ஒளிவடையும். இப்பொருளை உணர்த்துவதற்கு மாவிளக்கு. மாவின் வெண்மை மனத்தூய்மை. அதில் பெய்யும் நெய், அன்பு. எரியும் வர்த்தி, அறிவின் விளக்கம். ஆகிய இம்மூன்றும் நம்மில் உண்டாம்போது எங்கும் ஜெகதீசனை பிரகாசமாய் அறிவோம். கடவுள் ஜோதி சொரூபியென்று விளக்குவது சொக்கப்பனை. குன்றுமேலிட்ட விளக்கு நன்றாய்த் தெரிவது போல மனத்தூய்மை அன்பு முதலியவற்றை அடைந்தவர்களுக்கு மேலான சுயம்பிரகாசரூபியாகிய கடவுள் நன்றாய்த் தெரியவருமென்னும் கருத்தைக்காட்டுவது கோபுரத்தின்மேல் வைக்கும் தீபம்.

உபவாசம்—ஒருவேளை சாப்பாட்டை குறைப்பது அல்லது முற்றும் விட்டிருப்பதனால் மிகுந்த நன்மை யுண்டாகாது. ஒருக்கால் கெடுதி உண்டானாலும் உண்டாகலாம்.

அகங்காரம், லோபம், காமம், பகை, போசனப்பிரியம், கோபம், சோம்பல் ஆகிய துர்க்குணங்கள் நம்மில் வளரவொட்டாமல் அடக்கவேண்டுமென்பது உபவாசத்தின் கருத்து. இவ்வுண்மையறியாது மேற்சொன்னபடி



தேகத்திற்கு தீங்கை விளைவிக்கும் காரியமாவது அல்லது, வழக்கவுணவை மாற்றி பல ஆகாரங்களை சாப்பிடுவதனாலாவது உபவாசத்தின் பயன் நிறைவேறாது. மேற்குறித்த பாதகங்களுக்கு நம்மில் கொஞ்சமிடம் கொடுத்தோமோ, அவைகள் நம்மை அடிமையாக்கி, தீராத்துன்பங்களுக்கு உள்ளாக்குமாதலால், அவற்றை சாக்கிரதையாய் ஒழிக்கவேண்டுமென்பது உபவாசத்தின் கருத்து.

ஸ்நானம்—சுத்த ஜலத்தினால் தேகத்தைக் கழுவினால் சரீரத்திலுள்ள அழுக்கு எப்படி போமோ அதுபோல் ஆத்துமா ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியம். உள்ளத்தில் குடிகொண்டிருக்கிற வள்ளலினது மங்கள குணங்களாகிய கடலில் முழுகியிருக்கவேண்டுமென்பது ஸ்நானத்தின் கருத்து.

தீபதரிசனம்—ஞானஸ்வரூபனாகிய கடவுளை நமது அறிவினால் தெரியவேண்டுமேயன்றி மற்றெதினாலும் காணக்கூடாதென்கிற உண்மையை விளக்கும்பொருட்டு, கடைசியில் தீபதரிசனம் செய்யவேண்டுமென்கிறார் பெரியோர். எல்லாம் அறிவின் சகாயத்தால் ஆகவேண்டியிருப்பதினால் அதனை விசேஷமாய்ப் பெற பிரயாசைப்படவேண்டும்.

இத்தன்மையான உயர்ந்த கருத்துகளைக் கொண்டிருக்கிறது கார்த்திகை தீபம்.

இதைப்போல் நம் நாட்டில் வழங்கிவரும் விரதங்களைப்பற்றி அது நேருந்தோறும் விசாரணைப் புருஷர்களைக்கொண்டு அவற்றின் உட்கருத்துகளைத் தெரிந்து நலமடையவேண்டும்.

"சொல்லிற் பதர் களைந்து சொன்முடிவு காணாதார்
நெல்லிற் பதர்போல் நிற்பார் பராபரமே."

எதை நாம் படித்தபோதிலும் கேட்டபோதினும் அதிலுள்ள சாராம்சத்தை விசாரித்து தெளிந்து நன்மை படையும்பொருட்டு நமக்கு ஈசன் அருள்புரிவாராக.

**CHARACTER SKETCH:**
**PALISSY THE POTTER.**

## குணவலி விளக்கம்:
## பெயர்பெற்ற குலாலர் பலிஸ்ஸி என்பவர் சரித்திரம்.

### பொறுமையின் சிலாக்கியம்.

"மனோபலத்தின் ஓர் அங்கமாகிய பொறுமை என்பது மிக நுண்ணியது, கனம் மிக்கது, அரியது. போகம் அனைத்திற்கும் பராக்கிரமம் அனைத்திற்கும் மூலம் பொறுமை; பொறுமை இல்லாவிடில் இதயத்திற்கு இன்பம் தரும் ஆசையும் துன்பமாய்விடும்"—ஜான் ரஸ்கின் (John Ruskin.)

மட்பாண்டம் வனைதொழில் வரலாற்றில் பொறையும் கருமமுடிக்கும் துணிவும் பூர்த்தியாயுள்ள சிலருடைய சரித்திரத்தைக்காணலாம். அவர்களில் மிகவும் சிலாக்கியமானவர்களெனக் கொண்டாடத் தக்கவர்கள் மூன்று பேர்கள். அவர்களில் ஒருவர் பிரான்சியராகிய பேர்னார்ட் பலிஸ்ஸி (Bernard Palissy); மற்றொருவர் சாதியில் ஜர்மானியரான ஜோஹான் ப்ரெட்ரிக் பத்கர் (Johann Friedrich Bottgher); பின்னொருவர் அங்கிலேயராகிய ஜோஸையா வெட்ஜ்வுட் (Josiah Wedgwood.) இவர்களில் முதற்சொன்னவர் சரித்திரத்தையே இங்கு விவரிக்க எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

### மட்பாண்டம் வனைதொழிலின் புராதன நிலைமை.

சாதாரணமாய் வழங்கும் விதவிதமான பாண்டம் களிமண்ணிற் செய்யும் உபாயம் பூர்வத்தார் வெகு பெயருக்குத் தெரிந்திருந்தும், பளிங்கெனத் துலங்கும் நாணயமான மட்பாண்டம்[1] வனைதொழிலோ அபூர்வமாய் வழங்கியது. ஆனாலும் முன்னாளில் 'எட்ரஸ்கர்'[2] என்பவர்கள் அவ்வகைப் பாண்டம் வனையப் பயின்றிருந்தார்கள். அவர்கள் கையால்

1. பீங்கான்=Enamelled Earthenware.
2. Etruscans.

வனைந்த பாண்டங்கள் சிலவற்றைப் புராதன வஸ்துக்கள் வைக்கப்பட்டிருக்கும் சாலைகளில் இன்றளவும் காணலாம். பின்னிட்டு நெடுநாள்வரையில் அவ்வித்தை கைகடந்து போய் இப்பொழுது கொஞ்சக் காலத்திற்கு முன்னேதான் மீளவும் அகப்பட்டது. பூர்வ காலத்தில் எட்ரஸ்கர் செய்த பாண்டம் விலையேறப்பெற்றது. ஆகஸ்தஸ் இருந்த காலத்தில் உண்கலத்திற்கு விலை விகிதம் இருத்தல் ஒன்றுக்கு ஒரு இருத்தல் தங்கம். இந்தத் தொழிலை மூர் ஜாதியார் மறந்திடாமல் அனுசரித்துக்கொண்டு வந்ததாய்க் காண்கிறது. 1115-ம் ஆண்டு மெஜார்கா தீவைப் பைஸர்[3] பிடித்துக்கொண்டபொழுது, அந்த மூர்ஜாதியாருக்குள் இத்தொழிற் பயிற்சி இருந்தது. சூறைசெய்து கொண்டுபோன பொருள்வகையிற் சில விதவிதமான மட்பாண்டங்களைப் பகைவர் தாம் பெற்ற ஜயத்தை என்றென்றைக்கும் சிந்தையில் நிறுத்தும் சின்னங்களாகப் பைஸாவில் உள்ள சிலபூர்வதேவாலய மதில்களுக்குள் வைத்துக்கட்டினார்கள். அவைகளை அம்மதில்களில் நாளதுவரையில் காணலாம். அதன்பின் இருநூறு வருஷம் சென்று இத்தாலியர் பளிங்கு ஒப்பத் துலங்கும் அவ்வகை மட்பாண்டம் செய்யத்தொடங்கி, மூர் ஜாதியார் அவ்வினைதொழில் செய்த ஸ்தானமாகிய மெஜார்கா தீவைக் குறிப்பிக்கும்படி தாம் வனைந்த பாண்டத்திற்கு 'மேஜாலிகா' எனப் பெயர் வழங்கினார்கள்.

### இத்தலிதேசத்தில் பீங்கான்வேலை செய்வகையைப் பின்னும் கண்டுபிடித்தவர்.

இத்தாலியாவில் பளிங்குமினுக்குள்ள மட்பாண்டம் வனையும் தொழிலை எல்லாரும் மறந்திட்டபின் மீளவும் கண்டறிந்து பயின்ற ப்ளாரென்ஸ் நகரத்துச் சித்திர ஓடாவியாகிய லியூக்கா டெல்லா ரப்பியா (Luca della Robbia) என்பவன் பகல் முப்பது நாழிகையும் கைக்கொண்ட செதுக்குளி கைவிடாது உழைத்து, இரவில் வெகு நாழிகைநேரம் சித்திரம் எழுதிப் பழகிக்கொண்டுவந்த இளைப் பற்ற உற்பாதபிண்டம் என்று வஸாரி (Vasari) எழுதுகிறார். அவன் சித்திரம் எழுதும் வித்தையை மிகு பக்தி சிரத்தையோடு கற்றுக்கொண்டுவந்து ராத்திரி காலத்தில் நாழிகையேறச் சித்திரம் எழுதிக்கொண்டிருக்கும்பொழுது, பாதம் இரண்டும் கடுங்குளிரில் விறைக்காவண்ணம் ஒரு கூடையில் மரம் இழைத்த செதுக்கல் சேகரித்து அதில் பாதத்தை வைத்துச் சூடேற்றிக்கொண்டு தன் வேலையில் கண்ணாயிருப்பான். பின்னும் வஸாரி சொல்லியது:—"இதைத்தொட்டு எனக்கு இறையளவும் ஆச்சரியம் இல்லை. வெப்பம்-குளிர்-பசி-தாக முதலிய வாதைகளை இளமையிலேயே தாங்கி வழக்கப்பட்டிராதவன் எந்தத் தொழிலிலாவது தேறி நிபுணனென்று பெயரெடுக்கக்கூடாதே, நானாவிதபோகங்களும் குறைவற அனுபவித்துச் சுகித்திருந்துகொண்டு மேம்பாடு அடைவோமென்று வியர்த்தமாய் எண்ணுவோர் ஏமாறிப்போவார். எந்தத் துறையிலேனும் வரவரத் தேறித் தெளிந்து பிரக்கியாதராவோர் ஆரோக்கியமாய்ப் படுத்துத் தூங்குகிறவர்களல்ல, துயிலொழிந்து விழித்திருந்து எப்பொழுதும் ஓயாதுழைப்பவர்களே."

மேற்படி, லியூக்கா கருத்தாய் முயன்று கைத்தொழில் செய்தும், அவன் சிலையிற் சித்திரம்செய்து விற்றுத்தேறின பணம் குடும்ப சம்ரக்ஷணைக்குப் பற்றவில்லை. அப்படி இருந்தும் அவன் மனம் சலிக்கவில்லை. அவன் அதுவரையிற் சித்திரம்செதுக்கியது பாற்கல்லில். பாற்கல் மிக வைரமுள்ளது. விலை உயர்ந்தது. சற்று இளகி விலை எளிதாயுள்ள ஏதாயினும் ஒரு பொருளில் பிரதிமைகள் அச்சுகள் செய்து விற்றால் வருமானம் செலவிற்குக்

3. Pisans.



கட்டுமென்று அவன் சிந்தையிற் பட்டது. ஆனதுபற்றியே, அவன் களிமண்ணில் உருச்செய்து அது நீடித்து உருதி குன்றாதிருக்கும்படி பூச்சிட்டுச் சுடும் வகை ஏதென்று கண்டுணரப் பரிசோதனை செய்துபார்த்தான். பலவாறு பரிசோதனை செய்தபின் பூச்சிடும் பதார்த்தம் இன்னதென்று அவனுக்குத் தெரியவந்தது. அதைக் களிமண்ணிற் பூசிச் சூளையில் நன்றாக வேகவைக்க அது உரத்துப் பளிங்குபோல மினுங்கியது. பின்னிட்டு அதற்கு வர்ணம் தீரும் பக்குவத்தைக் கண்டறிந்தான். வர்ணம் தீரவே அது கண்ணுக்கு மிகவும் சிறப்பாகத் தோன்றிற்று.

லியூக்கா செய்த நாணயமான பாண்டங்களின் பிரதாபம் ஐரோப்பா எங்கும் எட்டி அப்பாண்டங்கள் வெகுதூரம் போய்ச்சேர்ந்தன. பிரான்சுக்கும் ஸ்பானியாவிற்கும் திரளாய் அனுப்பப்பட்டு அங்குள்ளவர்கள் அவைகளைப் பாராட்டி விலை ஏறக்கொடுத்து வாங்கினார்கள். அக்காலத்தில் பிரான்சிய குலாலர் வனைந்து விற்ற பாண்டவகை புகைநிறமான மட்டிச் சாடியும் வேறு சிறு மட்கலங்களுமே. பலிஸ்ஸி (Palissy) யின் காலமளவும் இருந்த சீர் சற்றேறக்குறைய இதே. அவன் தீராப் பெருஞ்சங்கடங்களைக் கண்டும் சிறிதேனும் இளைக்காமல் உழைத்து உழன்று ஒருவாறு அச்சங்கடங்களைத் தவிர்த்த சுத்தவீரன். ஆகவே, பலவித அரியகுண கிர்த்தியங்களாற் சிறந்த அவனுடைய வரலாறுகள் எல்லாம் அபூர்வமான கற்பிதகதைகளாகத் தோன்றும்.

### பெர்னார்ட் பலிஸ்ஸியின் சரித்திர வரலாறு.

பெர்னார்ட் பலிஸ்ஸி (Bernard Palissy) பிறந்தது பிரான்சுதேசத்தின் தென்பாகத்து 'ஏஜென்' அத்தியக்ஷர் கோவிற்பற்றில் 1510-ம் வருஷமென்று உத்தேசம். அவர் தகப்பன் கண்ணாடிவேலை செய்தவர்போலும். ஆதியில் அவர் பயின்ற வேலையும் அதே. அவர் தாய் தந்தையர் சிறிது காலமாயினும் அவரைப் பள்ளிக்குவைத்து எழுத வாசிக்கப் பயிற்றுவிக்க நிர்வாகமின்றிக் கடையழிந்த ஏழைகள். "யாவரும் எளிதில் வாசிக்கும்படி திறந்து வைத்திருக்கின்ற வானமும் பூமியும் தவிர வேறு புஸ்தகம் எனக்குக் கிடையாது" என அவர் பிற்காலத்தில் சொன்னார். ஆனாலும், அவர் கண்ணாடிக்கு வர்ணம் தீரும் முறையை முயற்சியாய்க் கற்றிருந்து அப்பால் சித்திரம் எழுதப் பயின்று அதன்மேல் எழுத வாசிக்கப் பழகினார்.

அவருக்கு முன்பின் பதினெட்டுப் பருவம் ஆக, கண்ணாடிவியாபாரம் சளைத்துப்போனது பற்றி அவர் தந்தையின் வீட்டை விட்டுப் புறப்பட்டு முதுகில் அடைப்பை சுமந்துகொண்டு உலகில் தமக்கு இருப்பிடம் எங்கே கிடைக்குமோ பார்க்கலாமென்று தேடித்திரியத் தலைப்பட்டார். ஆரம்பத்தில் அவர் காஸ்கனிக்கு நேர்முகமாய்ப்போய் வழியில் கண்ணாடிவேலை அகப்படும் இடங்களில் தங்கியிருந்து அதைச் செய்வதும் அப்போதப்போது சிறிது நேரம் நிலம் அளப்பதுமாய் இருந்தார். பின்பு அவர் வடக்கு முகமாய்ப் பிரயாணம்செய்து பிரான்சு, ப்லாண்டர்ஸ், ஜர்மனியின் தென்பாகம் ஆகிய இந்நாடுகளில் வெவ்வேறு இடங்களில் நெடுகக் குறுகத் தங்கிப்போனார்.

பலிஸ்ஸி மேற்சொல்லியவாறு ஏறத் தாழப் பத்துவருஷம் பிரயாணம் செய்து அதன்மேல் மணம் புரிந்து தேசாந்தரம் போவதை அம்மட்டில் நிறுத்திவிட்டு, கண்ணாடிக்கு வர்ணம் தீர்ந்தும் நிலம் அளந்தும் பிழைக்க (Charente) சாரெந்தியின் தென் பாகத்தில் ஸேர்தீஸ் (Saintes) எனும் சிற்றூரில் நிலைக்குடியாயிருந்தார். அங்கிருக்கையில் அவருக்கு மக்கட்பேறு உண்டாய் சமுசாரக் கவலையும் செலவும் பெருகி எவ்வளவோ பாடுபட்டும் வரவு செலவிற்குக் கட்டவில்லை. பின்னும் அதிகமாய் மெய்வருந்தி உழைக்காமல் தீராதெனத் தோன்றிற்று. கண்ணாடிக்குச் சாயந் தீரும் வேலை பிழைக்க உதவுமென்று நம்பியிருக்க இடம் இல்லை. அவ்வேலையில் நாய்படாத பாடுபட்டு மெய்வருந்துவதைவிட்டு மற்றேதாயினும் நயம் பெற முயற்சிசெய்து பிழைக்கத் தம்மால் ஆகுமென்று அவர் நினைந்தார் போலும். ஆனதனாலேயே மட்பாண்டங்களுக்கு வர்ணம் பூசித்தளுக்கிடும் தொழிலில் அவர்கருத்துச் சென்றது. முன் பயின்ற தொழிற்கு இனமான தொழிலெனினும் இவ்வேலை அவருக்கு எள்ளத்தனையும் தெரியாது. மட்பாண்டம் வனைந்து சுட்டதை அதற்குமுன் அவர் ஒருபொழுதும் கண்டதில்லை. இப்பொழுது அவருக்குக் கைத்துணை எவரும் இல்லை. தாமாகவே இத்தொழில் முறையைக் கண்டறிந்து பயின்றாற் பயிலலாமே தவிர

வேறு வகை இல்லை. ஆனாலும் இதை அவர் நிர்வகிக்கத்தக்க உற்பாத பிண்டந்தான். அவருக்குத் தொழிலில் ஆசை நிறைந்து தொழில் பயிலும் அவா மிகுந்து கருமமுடிக்கும் துணிவு கரைகடந்து இறைக்க இறைக்க வற்றாத நீரூற்றுப்போலப் பொறுமை என்பது சுரந்தவண்ணமாயிருந்தது.

**இத்தலிதேசத்துப் பீங்கான் பாத்திரம் ஒன்றைப் பார்க்க அவருக்கு ஆசை பொங்கியது.**

ல்யூக்கா டெல்லா ரப்பியாவின் கைவேலையெனத் தோன்றும் இத்தாலியாவில் வனைந்த சிறந்த பாத்திரம் ஒன்றை அவர் ஒரு நாள் கண்டதனாலேயே இந்நூதனத் தொழிலில் அவருக்குச் சிந்தனை ஓடிற்று. நூதனமாய் ஒரு சிறிய பாத்திரத்தைக் காண்பது அதிசயமல்லவே. சாமானிய புத்தியுள்ளவர்கள் கண்ணெதிரிற் காணும்பொழுதன்றி, கண்டபின் அதைக்குறித்து நினையார்களே. இரண்டொரு மாசம் முந்திக் காணச் சம்பவித்தால், பலிஸ்ஸி தாமும் அதை நினையார். அப்பொழுது அவர் அதைக்கூர்ந்து நினைத்துக் காலவிசேஷத்தால் நூதனமாய் ஏதாயினும் ஒரு தொழில் செய்து பிழைக்கவேண்டுமென்றிருக்கையில் அவர் அச்சிறு கலத்தைக் கண்டார். காணவும் அதைப்போலத் தாமும் செய்ய வேண்டுமெனும் ஆசை பஞ்சிற் பறக்கும் நெருப்புப் பொறிபோல, அவர் மனதிற் பற்றியெரிந்தது. அப்பாத்திரத்தைக் கண்டு அவர் மனம் நிலைகுலைந்து தடுமாறியது. அப்பாண்டத்திற்குப் பூசித் தளுக்கிட்ட திரவியத்தைக் கண்டறியும் *கடைப்பிடி, ஆசை எனும் பேய்போல் அன்றுதொட்டு அவர் நெஞ்சிற் குடிகொண்டது. அவர் பிரமசாரியாயிருந்தாரானால், அவ்வந்தரங்கத்தை தேடிக் கண்டறிய இத்தாலியா தேசத்திற்குப் பிரயாணப்படுவாரே: ஆனாலும், சமுசார சாகரத்தில் இறங்கித் தத்தளிக்கும் அவர் என்ன செய்வார். பெண்சாதி கால்கட்டு, பிள்ளை வாய்க்கட்டு. இந்தப் பந்தத்தை எளிதில் அறுத்து அவர்களைவிட்டுப் போகக்கூடாததுபற்றி, அவர் மனைவிமக்களை விட்டுப் பிரியாதிருந்து, மட்பாண்டம் செய்து தளுக்கிடும் வகையைக் கண்டறியும் ஆசை பெருகப் பெருக இருட்டில் கண் தெரியாதவர்போலத் தடவினர்.

(இன்னும் வரும்.)

* கடைப்பிடி—firm resolve.

## SOCIAL SERVICE:

**"ENJOYMENTS OF THIS WORLD NOT REAL."**

## சமஷ்டி சாதனம்.

**"லௌகிகப்பொருள்களால் உண்டாகும் இன்பம் பூரண இன்பமல்ல."**

இம்மையில் இடம், பொருள், ஏவல் முதலிய ஏதுக்களைக்கொண்டு அநுபவிக்கும் இன்பம் குறைவுள்ளது. இதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு. அவைகளை விவரமாய் எடுத்துச்சொல்லில் பெருகும். ஆதலால் அவற்றுள் விசேஷமாகத் தோன்றும் மூன்று திருஷ்டாந்தங்களை இவ்விடத்தில் சுருக்கித் தெரிவிப்போம். பூலோகத்தில் மனுஷர் சுகம் பெறக் கருதிச் சம்பாதிக்க முயலும் எவ்வகைச் செல்வமும் பொருட்செல்வம், புகழ்ச்செல்வம் என இருவகைப்படும். இவ்விருவிதச் செல்வங்களுக்கும் மூன்று நிலைமைகள் உண்டு. முதல், தேடும் நிலைமை. இரண்டு, அநுபவிக்கும் நிலைமை. மூன்று, காக்கும் நிலைமை. சிலர் தேடமுயலும் செல்வத்தைத் தாம் கருதியவாறு அடையாமல் பிரதிகூலப்படுகிறார்கள். சிலர் அடைந்தும் அதை அநுபவிக்கும்பொழுது திர்ப்தியின்றி மனக்குறைப்படுகிறார்கள். சிலர் அடைந்தும் சிலகாலம் அநுபவித்தும், அதைச் சிதைவின்றிக் காக்கலாகுமென்ற திடநம்பிக்கையில்லாமையால் சந்தேகக்கடலில் மூழ்கி வருந்துகிறார்கள்.

இவ்வாறே இம்மூன்று நிலைமைகளிலும் துன்பம் சம்பந்தப்பட்டிருப்பதினால், லௌகிகப் பொருள்களால் ஆகும் இன்பம் பூரண இன்பமல்ல. தேடமுயலும் செல்வத்தைக் கருதியவாறு அடையாமல் பிரதிகூலப்படுவதும், சர்வதேசத்தார்களும் தங்கள் தங்கள் குறைவு, நிறைவு, விருப்பு, வெறுப்புக்களுக்கு ஏற்க வெவ்வேறு அபிப்பிராயங்களைக் கொள்ளுவதும் அவரவர் யுக்திக்கு உசிதமாகத் தோன்றும் பதறாத ஊக்கம், அஞ்சாத தீரம், தந்திர சாமர்த்திய முதலிய உபாயங்களால்



அந்த அபிப்பிராயங்களை நிறைவேற்றும்படி ஓயாமல் முயற்சிசெய்வதும் இயற்கையே. ஆயினும் பிரயோசனம் என்ன? தடையின்றி யாவரும் சித்தி அடைகிறார்களா? ஏது, எந்த முயற்சியிலாவது தவறாமல் அநுகூலம் பெறுவதற்கு ஏற்ற சாதனங்களை இதுவரையில் ஊகித்தறிந்தவர் எவருமில்லை. "வேகமுள்ளவர்களுக்குப் பந்தயமில்லை. பராக்கிரமசாலிகளுக்குச் செயமில்லை. புத்திமான்களுக்குச் செல்வமில்லை."

ஒருவன் எந்தக் கருமத்தையாயினும் செய்யும்வகை ஏதுவென்று அதிசூழ்ச்சியாகத் தேர்ந்து நிச்சயித்து, சிறிதும், இடையூறு வாராதபடிக் காப்பதற்கு மிகுந்த ஜாக்கிரதையாயிருந்தபோதிலும், அவன் புத்திக்கு எவ்வளவும், தோன்றாதவிக்கினம் எப்படியோ இடையில் சம்பவித்து, அவன் எடுத்துத் தொடுத்த கருமத்தைச் சிந்திக்காமல் தடுத்து, அவன் வருந்திச்செய்த முயற்சியை முழுமையும் வியர்த்தமாக்குவது மெய்யென்று சொல்ல வேண்டியதில்லை. இது யாவருக்கும் அநுபவசித்தமாகத் தெரியுமே: இவ்வாறே தாம் விரும்பித்தேடும் விஷயங்களை அடையாமல் பிரதிகூலப்படுகிறார்கள். யார், அளவற்ற அதிகாரமும், செல்வாக்குமுடையவர்களாகும்படி அபேட்சிக்கும் அரசர் பிரபுக்கள் முதலான பெரியோர்கள் மாத்திரமா? அப்படியானால், மிகவும் சிலராகிய அவர்களுக்கு உண்டாகும் பிரதிகூலம், பிரவாகம்போலத் தேசத்தில் எங்கும் பரவியிருக்கின்ற சாதாரண ஜனங்களுக்கு என்ன? தமக்குள்ள செல்வமும், செழிப்பும், அதிகாரமும், போதாதென்று சர்வதேசத்துச் செல்வப்பொருளையும், கைக்கொண்டு சர்வாதிகாரிகளாகும்படி கர்வித்தவர்கள் காரியசித்தி பெறாமல் தலைகீழாய் விழுந்தார்கள்: ஆனால் நமக்குச்சேதம் என்ன? என்று எண்ணிச் சாதாரண ஜனங்கள் விசாரமற்று இருப்பார்கள். ஆயினும் அநுபவத்தில் அப்படியல்லவே! அரசர், பிரஜைகள், பெரியோர், சிறியோர், கற்றோர், மற்றோர், செல்வர், வறியவர், நல்லோர், தீயோர் முதலிய வகுப்புவரையறையின்றி யாவருக்கும் அவரவர் முயற்சி பலிக்காமல் அப்போதைக்கப்போது பிரதிகூலம் நேரிடுகின்றது. இதைத் தவிர்க்கும்படியான திராணி ஒருவருக்குமில்லை. மிகுந்த விரைவாய் ஓடும் வெள்ளத்திற்கு எதிர்ப்பட்ட துரும்பானது அதற்கு எதிர்முகமாய்ச் செல்லாமல் அதனால் தள்ளப்பட்டு நேர்ந்த துறையில் அடைவதுபோல, மனுஷரும், உலகவாழ்வு என்னும் சமுத்திரப்பிரவாகத்தில் தாம் எடுத்த கருமத்தைக் கருதியபடி எப்பொழுதும் தவறாமல் முடிக்கத் திராணியற்றவர்களாய், காலவியற்கை காரணகாரிய சம்பந்த முதலிய தடுக்கப்படாத அலைகளின் வழிச் சென்று யாதேனும் ஒரு துறையில் சேர்வார்கள். இந்த நிர்ப்பந்தம் எவர்களுக்கும் சாதாரணமாய் இருக்கின்றது. சிலர் தாம் தேடிய பொருளை அடைந்தும் அதை அநுபவிக்கும்பொழுது திர்ப்தியின்றி மனக்குறைவுப்படுகிறார்கள்.

ஒருவன் இடைவிடாது முயன்று எவ்வகையான இடையூறுகள் சம்பவித்தாலும், அவைகளுக்குச் சிறிதும் அஞ்சித்தளர்ந்து பின்னிடாமல், அதிக ஜாக்கிரதையாயிருந்து தன் முயற்சியின் பயனை அடைகிறான். அடைந்தும் பிரயோசனமென்ன? அவனுக்கு ரம்மியம் உண்டாகிறதா! அவன் அபேட்சித்த பொருள் அகப்பட்டதென்று திர்ப்தியடைந்து ஆறித்தேறி, இனித்தனக்கு யாதும், குறைவில்லையென்று எண்ணிப் பூரண சந்தோஷமுள்ளவனாக இருக்கிறானா? இல்லை, எந்த ஸ்திதியிலிருப்பவர்களும், தாம் தேடும் பொருள் சித்திக்குமானால் தம்மைப்போல பாக்கியவான்கள் இல்லையென்று நினைப்பதும் அது சித்தியாகாத பொழுது, தாங்கள் நினைத்த அளவு இன்பத்தை அடையாதவர்களாய் மனக்குறைகொண்டு விசாரப்படுவதும் இயற்கைதான். கருமம் சிதறினாலும் துக்கம், சித்தித்தாலும் துக்கமே. கல்விப்பொருள் பிரதாபமுடையவர்களாயிருக்கும் பெரியோர்

தமக்குப் பின்னும் பொருள் வேண்டுமென்று விரும்புவார்கள். செயலற்றுச் சோம்பி இருப்பவர்கள் தமக்கு யாதேனும் ஒரு முயற்சி வேண்டுமென்று கருதுவார்கள்.

ஓயாமல் உழைக்கிறவர்கள் தங்குவதற்கு அரிய இளைப்புத்தமக்கு உண்டாகிறதாவென்று முறையிடுவார்கள். சாதாரண ஸ்திதியிலிருப்பவர்கள் அதிக தனமும் கனமும் பெறுவதற்கு வகை தேடுவார்கள். உயர்ந்த உத்தியோகங்கள் செய்து மிகுந்த வருமானம் பெறுகிறவர்கள் ஒருவருக்குள் அடங்கியிருந்து வருந்தாமல் சுயாதீனம் பெற்றுச் சுகிப்பது எத்தனை பாக்கியமென்று எண்ணி பெருமூச்சு விடுவார்கள். இப்படியே அவரவர் ஒன்றை விரும்பித்தேடி அடைந்து பின் அதனால் உண்டாகும், இன்பத்தைத் துன்பமாய்க் கொண்டு, மற்றொன்று பூரண இன்பம் பயக்குமென்று கருதித் தேடுவதும், தேடியபின் இவ்வாறே மனக்குறைப்படுவதும் வழக்கம். உள்ளத்தில் கண்ட ஒருகுறை நீங்க மற்றொரு குறை உண்டாகின்றது.

ஒரு விருப்பத்திற்கு இடங்கொடுக்க, ஒன்றின்பின் ஒன்றாய் ஒன்பதுகோடி விருப்பங்கள் உற்பத்தியாகும். விரும்பியவாறு அநுபவம் உண்டாகுமென்று அபேக்ஷித்தவரொழிய, உள்ளபடி அனுபவித்துத்திர்ப்தி படைந்தவர் ஒருவருமில்லை. இம்மைக்குரிய விஷயங்களில் மனுஷருக்கு உண்டாகும் இன்பம் குறைதருதற்கு இரண்டு ஏதுக்கள் உண்டு. முதலாவது, அவ்வின்பத்தின் தன்மை, இரண்டாவது, அதைப் பழுதாக்குவிக்கும் சாதனங்கள். அழிவற்ற ஆத்மஜீவராகிய மனுஷரது அனுபவசக்திக்கு ஏற்க அவர்கள் நெஞ்சில் பிறக்கும் உந்நதமாகிய ஆசைகளுக்கு, லௌகிக விஷயங்களால் வரும் இன்பம் ஈடல்ல. வர்ணம் இட்ட சித்திரப் பிரதிமைபோல வசீகரசக்தியுள்ளதாகத் தூரத்தில் தோன்றும் இன்பப்பொருள் அனுபவத்தில் வரும்பொழுது அதன் அழகு குன்றி விகாரமாகி வெறுப்புத்தருகின்றது. ஒரு பொருளினிடத்து மனுஷருக்கு உண்டாகும் ஆவலானது அப்பொருளை அழகுள்ளதாகத் தோற்றுவிக்கும். நிழலைப் பொருளென்றும் நீர்க்குமிழியை நிலையென்றும் கொள்பவர்போல, மனுஷர் இந்த மாயத்தோற்றத்தை உள்ளதென்று எண்ணி தமது ஆவலின் வசத்தராகித் தம்மாலாகத்தக்க முயற்சிகள் அனைத்தையும் செய்து அந்தப்பொருளைத் தேடுவார்கள்.

அது கிட்டியவுடன், அவர்கள் ஆவலானது அந்தப் பொருளைவிட்டு, மற்றொன்றைத்தாவ, அவர்கள் தேடினபொருளை உபேட்சித்துப் பின்னும் ஆவலின் அடியைத் தொடருவார்கள். லக்ஷப்பிரபுவினிடத்தில் இருக்கின்ற திரவியமுழுதும் கிடைக்குமானால் எத்தனை பாக்கியமென்று ஆவலிக்கும் ஏழைக்கு அவன் விரும்பியவாறு திரளாகத் திரவியம் சேர்ந்தபின் சிலகாலமட்டும் அதை அநுபவிப்பார்கள். அப்புறம் பின்னும் அதிகம் வேண்டுமென்று விரும்பி மனக்குறைப்படுவார்கள். லௌகிகப்பொருள் இவ்வாறே மனுஷரை வஞ்சிக்குந் தன்மையுள்ளது. மேலும் குறைவற்ற செல்வமும் குன்றாதவாழ்வும் உடையார்களென்று பலரால் மெச்சப்படும் பெரியோர் தங்கள் செல்வத்தை அநுபவித்துச் சந்தோஷிக்கிறார்களா?

அவர்களுக்கு விசாரம் இல்லையென்று யார் சொல்லுவார்கள். பெரும்பாலும், சீமான்களே நிர்ப்பந்தப்படுகிறார்கள். ஏதாயினும் குறை அவர்களுக்கும் உண்டு. அதனால் அவர்களுக்குச் சஞ்சலம் தோன்றும். சஞ்சலமானது அவர்களுடைய மனவமைதியை வரவர அரிக்கின்ற சாவாத புழுப்போலவும், அவர்கள் ஆயுளை அன்றன்று சிதைத்துக் குறைகின்ற கூறியவாள்போலவும் இருக்கிறது. ஒருவனுக்குச் சஞ்சலம் இல்லாதிருப்பினும் உலக இன்பம் உள்ளத்தைக் கெடுக்கின்றது.



துர்க்குணத்தை வளர்க்கின்றது. தேடி அநுபவிக்கும் இன்பத்தைக் காத்துக்கொள்வது, அதாவது ஒருவன் எவ்வாறாவது தான் விரும்பியபொருளைத் தேடினாலும், மேற்சொல்லிய கெடுதிகள் இன்றி அதை அனுபவித்தாலும், அதைக் காக்கும்வல்லமை அவனுக்கில்லை. உலகம், பொருள் ஒன்றாவது நிலையுள்ளதல்ல. விஷயங்களெல்லாம் தோன்றித் துலங்கி மங்கி மறைந்து போகின்றன. அவைகளை ஒரு நிலைமையில் காத்துக்கொள்வது சுபாவத்திற்கு விரோதம்.

செல்வம் வண்டியுருளையைப்போல மாறியும், யானையுண்ட விளாங்கனிபோலச் சிதைந்தும், பட்சியைப்போல பறந்தும், மின்னலைப் போல விரைவில் மறைந்தும், வெயில் முன் பனிபோலக் கரந்தும் போகின்றது. இத்தன்மையாகிய செல்வப் பொருளாள்உண்டாகும் இன்பமும், அப்பொருள் போலமாறியும், மறைந்தும், கரந்தும் போவதால், அவ்வின்பத்தைக் காப்பதற்கு எவராலும் இசையாதே; ஒன்றைக் காக்குந் தொழில் என்ன சொற்பமா! ஒருவன் மிகுந்த திரவியம் வைத்து வியாபாரஞ்செய்து நெடுநாள் வரையில் சமைப்பித்து நிறைவேற்றும் அலங்கார மாளிகையானது சடுதியில் வீசும் சண்டமாருதம், விழும் இடி, சத்துருக்கள் முதலிய இடையூறுகளால் நொடிக்குள்ளே இடிந்து பொடியாய்த் தரைமட்டமாவது போலவே இவ்வுலகத்தில் அனுபவிக்கும் எந்த இன்பமும், எண்ணிறந்த இடையூறுகளுக்கு ஏதுவாயிருப்பதினால் அதைச் சிதைவின்றிக் காப்பது முழுமையும் அசாத்தியமாம்.

---

“ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்மீதிலே
ஆணைசெல வேநினைவ ரளகேசனிகராக
வம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக்க லைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சு புண்ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீரவுண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதுமா னானெனக்குளறியே
யொன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக்கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையையருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணா னந்தமே”—தாயுமானவர்.

## MUMUKSHUTARAKA, OR, 'THE WAY TO SALVATION.'

By

BHAGAVADH PADHA SRI SANKARACHARIA.

பகவத்பாத ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் உபதேசித்தருளிய

## முமுக்ஷு-தாரகம் அல்லது “ பஜகோவிந்தம் ”

என்னும்

ஸ்ரீ கோவிந்தமஞ்சரிகா ஸ்தோத்திரம்.

(மார்கழிமீ சஞ்சிகையின் 279-ம் பக்கத்தொடர்ச்சி.)

பின்பு பொருளாசையையும் பெண்ணாசையையும் ஒழித்தற்கான மார்க்கம் போதிக்கப்பட்டது. மனைவி மக்கள் முதலான சுற்றங்களிடத்தில் வைத்த காதலை எவ்வாறு நீக்கிக் கொள்ளுவதென்னில் அதற்கு மார்க்கமும் ஒன்பதாவது செய்யுளில் கூறுகின்றார். அதுவும் அவர்களுக்கும் உனக்குமுள்ள உண்மையான சம்பந்தத்தைப் பகுத்து நோக்கி துணியின் நீங்குமென்கிறார். இச்சுற்றத்தார் எல்லாம் நமக்கு இப்பொழுது இவ்வுடலின் கண்ணே இடையில் தோன்றிய சம்பந்திகளேயன்றி அநாதியாயுள்ள ஆன்மாவுக்கு எவ்வளவும் சம்பந்தபடமாட்டார்கள் என்றும், இடையில் தோன்றியவாறே பிரிந்துபோவார்களென்றும் ஊகித்தறிந்து அவர்கள் பொருட்டுச் சஞ்சலமடைந்து வருந்துதல் அறிவீனமென்றுணர வேண்டுமென்று கூறுகின்றனர். எப்படியென்னில்—

9. “மனையாளெவணின் மகர்தாமெவர்காண்
வினைநல்குமுனம்மெவணின்றனைநீ
புனைவாழ்விதுதான் புதுமைத்ததுவால்
இனியுண்மையறிந் தெறிவாய்மயலே.”

அதாவது, இப்போது உனக்கு மனைவியாக வாய்த்திருப்பவள் அதற்கு முன் யாவளாயிருந்தனள்? உனக்குப் புத்திரராயுற்பவித் திருப்பவர் உன் வயிற்றிற் பிறப்பதற்கு முன் யாவராயிருந்தனர்? உன்னை உன் மாதா பிதாக்கள் புத்திரனாகப்பெறுவதற்குமுன் நீதான் எங்கி

ருந்தாய்? இவற்றையெல்லாம் உட்புகுந்து ஆலோசிக்கின் இப்பிரபஞ்ச வாழ்க்கையானது அதி விசித்திரமாகத் தோன்றும். ஆதலின், இனியேனும் வேதாந்த விசாரணைசெய்து உண்மையை யுணர்ந்து அம்மனைவிமக்கள் முதலான சம்சாரத்தில் வைத்துள்ள பிராந்தியை ஒழிப்பாயாக. என்றபடி.

பின்பு இவ்வாசாபாசங்கள் எல்லாம் ஒருங்கே நீங்கி முத்தியடைதற்கு மார்க்கம் சத்ஜன சங்கமே யென்று பத்தாவது செய்யுளில் கூறுகின்றார். எப்படியென்னில்,

10. "மேலோருறவாலறும் வேறறவே
மாலேயறுமவ்வுறவின்மையினால்
தோலாவுணர்வாமயல் சோர்கையினால்
மேலாமுணர்வால் வரும்வீடதுவே."

அதாவது, வேதாந்த சிரவண மனனாதிகளாலே பரிசுத்தமடைந்த உள்ளத்தையுடைய மகாத்துமாக்களின் சகவாசத்தைப் பெறுதலினாலே மற்றப் புத்திர மித்திரகளத்திராதிகளில் வைத்த பற்று நீங்கும். அப்பற்று நீங்கலாலே தனாதிகளில் வைத்த மோகம் நீங்கும். அவ்வாறு தனாதிகளில் வைத்த மோகம் நீங்குதலாலே நிச்சலமான நிர்மலஞானமுண்டாகும். அந்த நிர்மலஞானத்தைப் பெறுதலினாலே ஜீவன் முத்தியுண்டாகும் என்றபடி.

இவ்வாறு சத்சகவாசம்பண்ணி மெய்யுணர்வைச் சாதித்துக்கொள்ளின், கயிற்றிற் றோன்றிய அரவம்போலவும், கானலிற்றோன்றிய ஜலம்போலவும், அறிவின்கட்டோன்றிய இந்தப் பிரபஞ்ச மயக்கம் தீருமென்பதை 11-வது செய்யுளில் வற்புறுத்துகின்றனர். இளமையுள்ளமட்டுமே காமவிகாரமும், நீருள்ளமட்டுமே மடுவும், கைப்பொருளுள்ளமட்டுமே சுற்றத்தார் முதலானபரிவாரங்களும் உள்ளவாய் அவை போனபின் எவ்வாறு நீங்கிவிடுகின்றனவோ அவ்வாறே அஞ்ஞானமுள்ளமட்டுமே அதன் காரியமாகிய பிரபஞ்ச முன்னின்று ஞானமுதித்தவுடனே பிரபஞ்சமயக்கம் தீர்ந்து முத்தி யுண்டாகும் என்று போதிக்கின்றனர். எப்படியென்னில்,—

11. கடிகாமமெனுமிளமைக்கழிவில்
மடுவேதுளதாம்புனல்வற்றியகால்
உடனார்பவர்கைப்பொருளோயினொனெவண்
நெடுமெய்யுணர்நெஞ் சுறினெங்குலகே.

அதாவது, இளமைப்பருவம் நீங்கிய பின்பு காமவிகாரங்கள் ஒருவரைப் பாதிக்கவல்லவாமோ? தண்ணீர் வற்றிப் போனபின்பு தடாகமென்பதுண்டாகுமோ? உருவழிந்து போகுமன்றோ? கைப்பொருளிழந்து வறுமையடைந்த காலத்தில் புத்திர மித்திரகளத்திர தாசி தாசாதி பரிசனங்கள் உன்னைத் தொடர்ந்து நிற்பார்களா? நிற்கமாட்டார்களன்றோ? அதுபோலவே பரமாத்ம பரிஜ்ஞானமானது ஒருவர்க்குச் சற்குருபதேசத்தாலே உண்டான காலத்தில் அகங்காராதிப் பிரபஞ்சங்கள் நிலைநிற்குமோ? முத்தனாதலினாலே சம்சாரநாசமுண்டாகும்—என்றபடி.

இவ்வாறு இவ்வான்மஞானத்தைச் சிறப்பித்துப் பின்னர் அதனாலடையக்கூடிய ஆன்மானந்தத்தின் பெருமையை உணர்த்துகின்றார். இளமையும் செல்வமும் பந்துவர்க்கங்களும் நிலையில்லாமல் மின்னலைப் போலத் தோன்றி யழிந்து போவன. ஆன்மானந்தமோ அழிவில்லாமல் நித்தியமாயிருப்பது ஆதலின் இப்படி அநித்தியமாய் அழிந்து போகக்கூடிய பேறுகளைப் பெற்றுள்ளோமென்று அவிவேகத்தினால் அகங்கரியாமல் நித்தியமாய் அசஞ்சலமாயுள்ள மோக்ஷானந்தத்தை மெய்யறிவினாலே பெற்றுக்கொள்கவென்று அடுத்த செய்யுளில் போதிக்கின்றார். அது எப்படியென்னில்,—

12. திருவாலுறவாலெழிலான் மகிழேல்
வருகாலமயின் றிடும்யாவையுமே
உருமாயையினுமுலகீதொருவா
அருமாபதமேயறிவாலுறவே.

அதாவது, செல்வத்தாலாயினும், புத்திரமித்திரகளத்திராதி பரிவாரஜனங்களாலாயினும், இளமையினாலாயினும் கர்வமடையாதே. அவை யொன்றேனும் நிலையுள்ளனவல்ல. அவைபனைத்தையும் காலமானது விழுங்கிவிடும். அதாவது காலவசத்தாலே அனைத்தும் அழிந்துபோகும். ஆதலால் மாயாகாரியமாகிய இந்தப் பிரபஞ்சத்தை விவேகத்தினால் தெரிந்து நீக்கிச் சர்வ வியாபகமாகிய பரமாத்ம ஸ்வரூபத்தை விசாரத்தினாலே யுணர்ந்து மோட்சானந்தத்தை யடைவாயாக.—என்றபடி.



கடைசியாக, ஆயுளானது வரவரக் குறுகின்றது. ஆசையானது நம்மை ஒருநாளும் அதற்கிணங்கும்வரையில் விடுவதில்லை. ஆதலின் இந்தச் சின்னாட் பல பிணிக்கிடனாகிய சிறுவாழ்வை வீணேபோக்கிக்கொள்ளாமல் ஆசைவேரகழ்ந்து பகவத் பத்திபண்ணி மோக்ஷத்தைப் பெற்றுக்கொள்கவென்று கூறுகின்றனர். அதெப்படியென்னில்,—

13. "பகலாயிரவாய்ப் பனியாய்வெயிலாய்
வகையாவருமால் விளையாடிடல்போல்
நகுபோழ்ததுதான மதாயுள்செலும்
அகலாதொரவா வெனுமாநகமே."

அதாவது, காலமானது பகலென்றும் இரவென்றும் பனியென்றும் வெயிலென்றும் பலபிரகாரமாகக் குழந்தைகள் விநோதமாக ராஜா மந்திரி முதலான வெறும் பெயர்களை வைத்துக்கொண்டு விளையாடுதல் போல மாறிமாறி வந்து விளையாடுகின்றது. ஆயுள் நாளுக்கு நாள் செல்லுகின்றது. மேலேசொல்லிய கால ஸ்வரூபங்களைச் செவ்வையாக ஆராய்ந்து தெரிந்துகொண்டபோதிலும் காற்றைப்போல ஸ்வரூபமில்லாமல் எங்கும் வியாபிக்கும் துராசையானது மனிதர்களைவிட்டு ஒருநாளும் நீங்காது என்றபடி,

ஆதலால், கோவிந்த நாமத்தையே பஜித்துக் கரையேறுவாய்:

"பஜகோவிந்தம், பஜகோவிந்தம்,
பஜகோவிந்தம் மூடமதே"
கோவிந்தனையே குறியாய் குறியாய்
கோவிந்தனையே குணனின் மதியாய்!

* * *

என்று ஸ்ரீமத் ஸங்கராசாரிய ஸ்வாமிகள் கருணை மிகுதியால் உய்யும்வழி உபதேசித்தருளினர்.

## ON THE GEOGRAPHICAL DISTRIBUTION OF ANIMALS.

## உலகத்தில் ஜீவஜெந்துக்கள் பரவி இருக்கும் வகை.

" உலகத்தில் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு விதமான ஜெந்துக்கள் பரவியிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். உதாரணமாக இந்துதேசத்தில் புலி, யானை முதலிய மிருகங்கள் இருக்கின்றன. இங்கிலாந்து சீமையில் அவைகள் இல்லவேயில்லை. ஆப்பிரிக்காகண்டத்தில், தீக்குருவியும், நீர்க்குதிரையும் இருக்கின்றன. அவை நமதுதேசத்திலில்லை. இதற்கு ஏதாவது காரணமுண்டா வென்பதையும் உலகத்தினது கண்டங்களுள் எவ்விதமாய் ஜெந்துக்கள் பரவியிருக்கின்றன என்பதையும் சற்று யோசித்துப் பார்ப்போம்.

எல்லா தேசங்களிலும் ஏதாவது சில விதமான ஜெந்துக்கள் இருக்கின்றன. வருஷத்தில் ஒன்பது மாதம் பனிக்கட்டிகளால் மூடப்பட்ட குளிர்ந்த தேசங்களாகிய துருவத்திற்கடுத்த சீமைகளிற்கூட உயிருள்ள ஜெந்துக்கள் உண்டு. உயிர் வாழும் ஜெந்துக்களில் முக்கியமான சிலவற்றைப் பார்த்தால், அவைகளிற் சில உலகத்தில் பற்பல இடங்களில் பரவியிருக்கின்றன. மற்றுஞ் சிலவோ சிலவிடங்களில்தான் பரவியிருக்கின்றன. உதாரணமாக, மனிதன் சற்றேறக்குறைய உலக முழுமையும் பரவியிருக்கிறான். எலியும் அப்படிதான். புலி இவ்விரண்டு ஜெந்துக்களைப் போலவ்வளவு அதிகமா யில்லாவிடினும், இந்தியா, பர்மா, மலேயா, சீனா முதலிய தேசங்களிலிருக்கிறது. சில மீன்கள் ஒரே ஒரு நதி அல்லது ஏரியில்தானிருக்கின்றன.

பெரும்பாலும், ஒரே ஜாதி ஜெந்து தொடர்ச்சியா யிருக்கும் தேசங்களில்தான் பரவியிருக்குமே யல்லாது, வெவ்வேறு மூலைகளிலிருக்காது. ஆனால் இந்த விதிக்கு விலக்கான மிருகங்கள் சில உண்டு. இவைகளுள் முக்

கியமானது 'டேபிர்' (Tapir) என்றது. இது யானையைப்போன்ற ஓர் மிருகம். இது மலேயாவிலும் தென் அமெரிக்காவில் சில பாகங்களிலும் இருக்கின்றது. இடையே எங்கேயுமில்லாமல் இவ்வளவு தூரதேசங்களில் இது இருப்பதற்கு என்ன காரணம்?

அங்கங்கே இந்த மிருகங்கள் கடவுளால் முதலில் சிருஷ்டிக்கப்பட்டன வென்றும், இவைகளுக்கு ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லை யென்றும், சிலர் சொல்வார்கள். ஆனால் அது தப்பு. இவ்வுலகம்; மனிதன் முதலில் உண்டானதற்கு வெகு காலத்துக்கு முன்னாலேயே இருந்துகொண்டிருக்கிறது. மற்ற ஜெந்துக்களைக்குறித்து யோசிக்குங்கால் மனிதன் நேற்று வந்தவன் இந்த 'டேபிர்' என்னும் மிருகம் உலக முழுதும் வெகுகாலத்துக்கு முன் பரவியிருந்தது என்பதற்குவேண்டிய சாக்ஷியமிருக்கிறது. தராசத்துக்களை வெட்டியெடுத்தால் அவைகளுக்குள் இதனுடைய எலும்புகள் அகப்படுகின்றன.

மிருகங்களும் ஜெந்துக்களும் அவையவைகள் தங்கள் வாசஸ்தலமாகிய குறிப்பிட்ட சில தேசங்களில் மாத்திரம் இருப்பானேன்? உதாரணமாய் புலி இங்கிலாந்து சீமையில் ஏன் இருக்கக்கூடாது? இதற்கு பொதுவாய் காரணம், எந்த தேசத்து சீதோஷ்ணஸ்திதி எந்த ஜெந்துவுக்கு பிடித்திருக்கிறதோ அந்த தேசத்தில்தான் அது வளரும் என்று சொல்வார்கள். இது அநேகமாய் சரிதான். ஆனால் புலி சீன தேசத்தில் ஏராளமாய் இருப்பானேன். ஏறக்குறைய அதே (Latitude) ரேகையிலிருக்கும் இங்கிலாந்தி லில்லாதிருப்பானேன். அதற்கு மற்றொரு காரணமுமுண்டு. மிருகங்கள் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்கு பரவாமலிருப்பதற்கு மலை, பாலைவனம், கடல் முதலிய தடைகளுண்டு. இக்காரணத்தால் தான் இந்தியாவில் புலி இருக்க, அருகாமையிலிருக்கும் இலங்கைத்தீவில் அது சுத்தமாயில்லை. இதே காரணத்தால்தான் ஆப்பிரிக்காவில் ஸஹாரா பாலைவனத்துக்கு தெற்கேயிருக்கும் மிருகஜாதிகளுக்கும், வடக்கேயிருப்பவைகளுக்கும் அதிக வித்தியாசமிருக்கிறது. சில ஜெந்துக்கள் எப்பேர்க்கொத்த தடைகளையும் தாண்டி பரவும் சக்தியுள்ளவைகளா யிருக்கின்றன. உதாரணமாய் மனிதன்மலை கடல் முதலியவைகளையெல்லாம் தாண்டும் சக்தியுடையவன். பறவைகளுமப்படியே. அநேக மிருகங்களுக்கு சமுத்திரத்தைக்கடக்க சக்தியில்லை. தவளைக்கு கடல்நீர் பொறுக்காது. ஆதலால் தான் அநேகம் தீபாந்தரங்களில் தவளையேயில்லை. தவிர மனிதனைப்போல மிருகங்கள் முதலான இதர ஜெந்துக்களுக்கு அந்தந்த தேசத்து சீதோஷ்ண ஸ்திதிக்குத் தகுந்தபடி உடைகளைத் தரித்துக்கொள்ளவும் அதிக உஷ்ணத்தையும் அதிக சீதளத்தையும் தாங்கவும் திறமையில்லை.

தீவுகளைக்குறித்துப் பேசுங்கால், அவைகளைக் குறித்து சில சமாசாரம் இங்கே சொல்வோம். உலகத்திலுள்ள தீவுகளையெல்லாம் பொதுவாய் இரண்டு பெரிய பிரிவுகளாய்ப் பிரிக்கலாம். அவையாவன, இயற்கையாயுண்டான தீபாந்தரங்களும் பூகம்பம் முதலிய காரணங்களால் மற்ற பூமியிலிருந்து பிரிக்கப்பட்டு தீவானவைகளுமாம். இவைகளைக் கடற்றீவுகள் (Oceanic islands) என்று சொல்லலாம். முதல்வகுப்புக்கு உதாரணமாய், லக்ஷத்தீவுகள், அந்தமான், நிகோபார் தீவுகளை யெடுத்துக் கொள்ளலாம். இவைகள் எண்ணிறந்த சிறு பூச்சிகளாகிய பவழப் பூச்சிகளால் அநேககோடி வருஷங்களாய் உண்டாக்கப்பட்டன. இன்னும் பவழப்பூச்சிகள் திடல்களுண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. இரண்டாவது வகுப்புக்கு உதாரணமாய் லங்கைத்தீவு, பிரித்தானியா தீவு முதலியவைகளை எடுத்துக்கொள்ளலாம். இவை ஒரு காலத்தில் மற்ற பூமியோடு சேர்ந்திருந்தவை. பூகம்பம் முதலிய காரணங்களால் அதினின்றும் பிரிக்கப்பட்டிருக்கவேண்டும். இதனால்தான் இந்த இரண்டாவது வகுப்புத் தீவுகளில் பெரிய மிருகங்கள் இருக்கின்றன. முதல் வகுப்புத் தீவுகளில் அவையில்லை. மேற்சொன்னவைகளில் சிங்கம், புலி, கரடி முதலிய பெரிய மிருகங்களில்லவேயில்லை. தவளையுமில்லை. அது ஏனெனில் அவை மற்ற பூமிக்கு வெகு காலத்துக்குப்பின் உண்டானவை. ஆகையால் பெரியமிருகங்கள் தாமாய் அவ்விடங்களிலுண்டாவதற்கு வேண்டிய காலமின்னு மாகவில்லை. அம்மிருகங்கள் மற்ற இடங்களிலிருந்து வருவதற்கு நடுவே சமுத்திரமிருக்கிறது.

## SELECTION: AGAINST DRINK.

### கள்ளுண்ணாமை.

கம்பராமாயணம்.

கிஷ்கிந்தா காண்டம்—கிஷ்கிந்தைப் படலம் (90—95)

ஏயின விதுவலான் மற்றேழைமைப் பாலதென்றோ
தாயிவண் மனைவி யென்னும் தெளிவன் றேற்றநம மென்னும்
தீவினையந்தி னென்றுமன்றியுந் திருக்கு நீங்கா
மாயையின மயங்குகின்று மயக்கின் மேன் மயக்குவைத்தாம்.

(கருத்து) கள்ளைக் குடிப்பதினால் தாயிவள் மனைவி இவள் என்று புத்தி தெரியாதிருக்குமானால் வேறு என்ன தருமம் இருக்கிறது? பஞ்சமா பாதகங்களில் ஒன்று இந்தக்கள்குடி. ஏற்கனவே மாயாசம்பந்தத்தால் மயங்குகின்றோம். இதையறியாது பின்னும் கள்ளைக்குடித்து மயக்கத்தின்மேல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டோம்.

தெளிந்து தீவினையைச் செற்றோர் பிறவியைத் தீர்வரென்ன
விளிந்திலா வுணர்வினோரும் வேதமும் விளம்பவேயும்
நெளிந்துறை புழுவைநீக்கி நறவுண்டு நிறைகின்றேனால்
அளிந்தகத்தெரிந் தீயை நெய்யிலைவிக்கின்றாரின்.

(கருத்து) இது நல்லது இது கெட்டது என்று அறிந்து கெட்டவினைகளை வெறுத்து நீக்குபவர் இப்பிறவித் துன்பத்திலிருந்து நீங்குவார்கள் என்று மேன்மைதங்கிய அறிஞரும் வேதமும் சொல்வதாயிருக்க இதை அறியாது நெளிந்துகொண்டிருக்கிற புழுவை நீக்கிவிட்டு கள்ளைக்குடித்து நிறைந்திருக்கிறேன். இது உள்ளே எரியும்படியான தீயை நெய்யைவிட்டு அவிக்க முயல்வதை ஒக்கும்.

தன்னைத்தானுணரத் தீருந்தகையது பிறவியென்ப
தென்னத்தான் மறையுமற்ற துறைகளுமிசைத்த வெல்லம்
முன்னைத்தான் றன்னையோரா முழுப்பிணி யழுக்கின்மேலே
பின்னைத்தான் பெறுவதம்மா நறவுண்டு திகைக்கும் பித்தோ.

(கருத்து) ஒருவன் தன்னைத்தானே உணர்வானாயின் துன்பமுள்ள பிறவியானது நீங்கும் என்று வேதமும் சாஸ்திரங்களும் சொல்லும் தன்னைத்தானே யறியாது மாயா சம்பந்தத்தில் அகப்பட்டுப் பின்னும் கள் குடித்துத் திகைப்பது பைத்தியகாரத்தனமேயன்றி வேறல்ல.

அளித்தவர் அஞ்ச நெஞ்சின் அடைந்தவர் அறிவு மழுங்கிக்
குளித்தவர் இன்பதுன்பங் குடைந்தவர் குடைந்த வேரி
ஒளித்தவர் உண்டு மீண்டிவ்வுலகெலா முணர வோடிக்
களித்தவரெய்தி நின்றநகதியொன்று கண்டதுண்டோ?

(கருத்து) கள்ளை வார்த்தவர்கூட மிகவும் பயப்படும்படி குடித்தவர் அறிவுகெட்டுத் துன்பத்தையடைந்து உலகமெல்லாம் அறியும்படி அங்கு மிங்கும் ஓடிக் களிப்படைவதல்லாமல் அவர்கள் அடையும்படியான வேறு நல்லகதி ஒன்று உண்டோ?

செற்றதும் பகைஞர் நட்டார் செய்த பேருதவிதானும்
கற்றதுங் கண்கூடாகக் கண்டதுங் கலைவலாளர்
சொற்றதுமானம் வந்து தொடர்ந்ததும் படர்ந்த துன்பம்
உற்றது முணராராயின் இறுதி வேறிதனின் உண்டோ?

(கருத்து) அதன் கெடுதியைக் குறித்துத்தான் கற்றதும் தன் கண்ணால் அக்கெடுதிகளைப் பார்வையிட்டதும் சாஸ்திர பண்டிதர்கள் சொன்னதும் மானம் வந்து தொடர்ந்ததும் அதிக துன்பம் நேர்ந்ததும் ஆகிய இவைகளை ஆராய்ந்தறியாவிட்டால் இதைவிட வேறு என்ன முடிவு இருக்கிறது?

வஞ்சமுங் களவு பொய்யும் மயக்கமும் மாயில் கொட்பும்
தஞ்ச மென்றாரை நீக்குந்தன்மையுங் களிப்புந்தாக்கும்
கஞ்ச மெல்லணங்குந் தீருங்கள்ளினால் அருந்திறை
நஞ்சமும் கொல்வதல்லால் நரகினை நல்காதன்றே.

(கருத்து) வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் சரணமடைந்தவரை நீக்கும் தன்மையும் கள்ளருந்தினவர்களிடத்தில் உண்டாகும். இலட்சுமி கடாட்சமும் நீங்கும். விஷமும் ஒருவனைக் கொல்லுமேயொழிய நரகத்திற் சேர்க்காது. கள் என்றாலோ நரகத்தையும் அடைவிக்கும்.

ஐயா நான் கள் உண்பதால் இவ்வளவு கெடுதலிருக்கிறதென்று அறிந்துகொண்டேன். இனி மனதினாலும் நினைக்கமாட்டேனென்று சுக்கிரீவன் சொன்னான்.

## CHILDREN'S PAGE.

### WORLDLY LIFE, AN OCEAN FULL OF SORROW.

### சிறுவர்க்கான பக்கம்:

"ஸம்ஸாரம் ஸாகரம் துக்கம்."

மரங்கள் நெருங்கி அடர்ந்து கரேலென்று காரிருளொப்ப இருண்டிருந்த ஒரு பெரிய அடவியில் ஒரு ஏழை மனிதன் கந்தல் துணியும், சோர்ந்தமுகமுமாய் பசியால் தள்ளாடி வரும் நடையுடன் கூடி சென்றுகொண்டிருந்தான். காற்றோ விரைக்க விரைக்க மிருபலமாய் வீசியடித்தது. இக்கோரங்கள் போதாதென்று அவ்வேழை மனிதனுக்கு பசியும் அனல்போலெழுந்தது. காட்டுமிருகங்களோ அகோர சப்தத்துடன் ஊளையிட்டன. என்செய்கிற்பான்? அவ்வேழை மனிதன்? அப்போது தனக்குள் தானே புலம்புகிறான். என்னெனில் "ஓ! சர்வஜீவதயாபரக்கடவுளே! யான் இங்ஙனம் வருந்துவதும் நீதியாமோ உன்சித்தத்திற்கு? கல்லைப்பெண்ணாக மாற்றிய நினக்கு கருணையுமிலதோ" "ஆதிமூலமேயென்ற யானையை ரக்ஷித்த சோதிபரம்பொருளே எனக்கருளே! யான் என் செய்வேன்! காசிவிஸ்வேசா இதுவும் உன்னருளோ! உன்னைச் சொல்லக் குற்றமென்ன? "ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோடே" யென்றபடி என் கஷ்டதசையை யான் அனுபவிக்கப்பிறந்ததும், யான் படாதபாடும்பட்டு எல்லாவற்றையுமிழந்து திண்டாடித் தவித்து இங்ஙனம் செல்ல வைத்ததும் நினது திருவிளையாடலன்றோ?" என்று தாபந்திரியப்பட்டுத் தயங்கினவனாய் செல்ல அங்கே ஓர் பெரும் புலியானது சர, சரவெனப் புதரினின்றும் வெளிக்கிளம்பி இவனைத் துரத்த ஆரம்பித்தது. இவன் அதைக்கண்டு உளறியடித்துக்கொண்டு தன் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள, அருகிலிருந்த மரத்திலேறி தொத்தி மேலே செல்ல, அங்கே யொரு பாம்பு இவன் காலைச்சுற்றிக் கொண்டது. இந்கஸ்திதியில் அவன் ஏறிய கிளையும் ஒடிந்து விழுகிறாற்போல விருக்கிறது. "என்ன செய்வேன் சர்வேசா! ஒரு வழியும் தோற்றவில்லையே" எனக் கண்களில் நீர் சொரிய, மேலே அண்ணாந்து நோக்கினான் அவிடம் உள்ளதேன் கூட்டிலுள்ள ஈக்கள் இவனைக் கொத்திப்பிடுங்க, இரண்டு மூன்று தேன் துளிகள் சொட்சொட்டென்று இவன் வாயில்விழுந்தது. அந்த இந்தப்பேதைமனிதன் வெகு குஷியாய்ச் சப்பிக்கொண்டிருக்கையில், காற்றும் பிரசண்டமாருதம்போல் வீசத்தலைப்பட்டது. சூரியனும் மறைந்தனன். மரக்கிளையும் படாரென முறிந்தது. பாம்பும் ஈக்களும் பறந்தோடின. புலி வாயிலடித்துக் கொண்டு சென்றது, கடைசியில் அம்மனிதனுடைய துக்கமெல்லாம் ஒரே தூக்கமாக முடிந்தது.

ஆ என் சகோதரர்களே! இப்படியேதான் இருக்கிறது இவ்வுலகமும். இக்கதையின் சாராம்சம் என்னவென ஆராய்வோம்? அப்புலி தான் நமது காலத்தைக்கணக்கிட்டு தீர்ந்தவுடன் கொண்டு செல்லும் "காலதூதன்" என்பது. அப்பாம்பு எப்படி அம்மனிதன் காலைச்சுற்றியதோ அது போலவே கர்மவினையினாலுண்டான சம்சாரம் நம்மைப் பிடிக்கிறது.

> "தந்தைதாய் தமர்தார மகவெனுமிவையெலாம்
> சந்தையிற் கூட்டமிலோ"

என்றபடி சந்தையிற் கூட்டமாகிய சம்சாரம் அந்தப் பாம்பையொத்ததே. அவ்வடர்ந்த காடுதான் மாயையாகும் இவ்வுலகம். சுற்றியுள்ள ஈக்களோ பிடுங்கித்தின்னும் பந்துமித்திரர்களாவர். மரமோ இவனிருக்கும் நிலைமையாகும், அத்தேன்துளிதான் இவன் அனுபவிக்கும் சிற்றின்பமெனப்பட்ட நிலையற்ற இன்பமாம். இத்தனை ஆபத்துள் திண்டாடி அபேக்ஷிக்கும் அந்நிலையற்ற அச்சிற்றின்பத்திற்கு ஆசைப்படுவதால் வரும் வினைகளைக் கண்டீர்களா?

> "தூங்கையிலே வாங்குகிற மூச்சு-அது
> தூங்கிவாங்கையிலே சுழிமாறிப் போனாலும் போச்சு
> பாங்கான திருநாளுண்டாச்சு
> இங்கேபல பேர்கூடியயே கதைபேசலாச்சு"

என்றபடி இன்றோ, நாளையோ, அல்லது என்றோ வாழ்நாள்முடியும், இச்சின்னாட்களுக்குள் அற்ப இன்பத்தைக் கருதாது பக்திமேற்கொண்டு "நித்தியமாய் நிர்மலமாய் நிஷ்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச் சுத்தமுமாய்" உள்ள பெறற்கரிய சாயுஜ்ஜியத்தை யடையுமாறு "புத்தியாலறி யொண்ணாப் பூரணனைப்பத்தியாம் வலையிற்படுத்து" பேரின்ப சச்சிதானந்த நிமல ஊற்றில் நீந்தி விளையாடநாமனைவோரும் முயற்சித்து சென்றடையவழி தேடுவதே நம்முடைய கடமையாகும். சுபம்.

> "அன்பே யென்னரசே திருவம்பலத்தாரமுதே
> யென்பே யுள்ளுருகக்கலந் தென்னுளிருந்தவனே
> யின்பே யென்னறிவே பரமே சிவமே யெனவே
> யுன் பேரோதுகின்றே னெனக்குண்மையுரைத்தருளே."

THE CULTIVATION OF THE EXPERIMENTAL SCIENCES BY HINDUS.

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God that sublime belief that seeing evil I yet have faith."*

*" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

"பஞ்சவிம்சதிபாரக்கியம்"] ஸத்தியம் வத—SPEAK THE TRUTH. ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE".




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 25.] பிங்களஹு மாசிமீ, 1918ஹு பிப்ரவரிமீ. [சஞ்சிகை. 11.

### Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our " terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *At one month's credit* (*arrears rate*) : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with the Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued† in the middle of a Vol., *nor without three months' clear notice as required.*†
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

### General Notice.

i. The *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to " fluctuations " and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor*) ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, " VIVEKACHINTAMANI."

*Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore.*

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.* ☜

†Notice of discontinuance to have effect must be given in writing *full three months before the current Volume ends* (*in March*) and *after* all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say " that every effort will be made to trace them." " If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed " continues the same high authority, " I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should invariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## THE CULTIVATION OF THE EXPERIMENTAL SCIENCES BY HINDUS.

"I shall endeavour to unfold before you to-day a forgotten chapter in the history of the intellectual development of the Indian people, namely, the cultivation of the experimental sciences. It is generally taken for granted that the Hindus were a dreamy, mystical people given to metaphysical speculation and spiritual contemplation. Due credit is, no doubt, assigned to them for the production of such priceless treasures, as the *Upanishads*, the six systems of Philosophy including the abstruse *Samkhaya* and the *Gita* with their transcendental teachings. But the fact that the Hindus had a very large hand in the cultivation of the experimental sciences is hardly known in these days.

Experiments and observations constitute the fundamental basis of Sciences. It is naturally a relief to come across such dicta as laid down by two standard works in Hindu Chemistry, namely, "Rasendra Chintamani" by Ramachandra and "Rasaprakasa Sudhakara" by Yasodhara both, belonging to the 18th and 14th century A. D.

Says the former :—"That which I have heard of learned men and have read in the Shastras but have not been able to verify by experiment I have discarded. On the other hand those operations which I have, according to the directions of my sage teachers been able to perform with my own hands, those alone I am committing to writing—those are to be regarded as real teachers who can verify by experiments what they teach,—those are to be regarded as laudable disciples who can perform what they have learned—teachers and pupils other than these are mere actors on the stage."

Yasodhara, the author of the latter, observes:—"All the chemical operations described in my book have been performed with my own hands—I am not writing from mere hearsay. Everythiug related is based on my own conviction and observations."—*From Dr. P. C. Ray's University Lecture on the "Pursuit of Chemistry in Ancient India."*

## முக்கிய அறிக்கை.

இந்த விவேகசிந்தாமணியை வாங்கி வாசித்து வரும் உபாத்தியாயர்கள் ஒவ்வொருவரும் இப்புஸ்தகத்தை பத்திரமாகச்சேர்த்து 'பயிண்டு' செய்து வைத்துக்கொண்டு வந்தால் இதுவே ஒரு முக்கியமான நல்லறிவு புகட்டும் கல்விக் களஞ்சியமாயுதவும். அடிக்கடி பார்த்துப் படித்து மனதைத் திருத்திக் கொள்ள உபயோகப்படுவதாகும். ஆகையால் இதை வரப்பெறும் ஒவ்வொரு உபாத்தியாயரும் அதை அவர்கள் நலம்பெற உபயோகித்து வருவதற்கடையாளமாக இதைக்கொண்டு அவர்கள் பயன்பட உழைத்து வருவதைப்பற்றி அவர்களுடைய விலாஸத்திற்கண்ட நெம்பரைக் குறித்து முழுவிலாஸத்தோடும் நமக்கு எழுதித்தெரிவித்து வரவேண்டும். கவர்ன்மெண்டார் விவேகசிந்தாமணி பிரதம பாடசாலைகள் எல்லாவற்றிலும் உபயோகிக்க ஏற்றமானதென்று ஒவ்வொரு ஸ்கூலுக்கும் ஒரு காபி வாங்கியனுப்ப உத்தரவு செய்திருக்கிறார்கள். மானேஜர்.

Every elementary schoolmaster must have a copy of the *Vivekachintamani* for himself and his school. It is the best and most economical thing in the long run, as it infuses a spirit of inquiry and a desire to enlarge the mind by the constant presence of the volume being in his possession which he individually has to care for and preserve as school property. "When so kept they serve as a permanent and continuous volume of reference and useful knowledge for pupils and teachers. So, I would strongly recommend the supply of the Journal to be made to all the schools on the principle of one copy for each school." The teachers are requested to put themselves in communication with the Managing Agents of the *Vivekachintamani*, who will afford them every facility for each of them securing a copy. The annual subscription is Rs. 5 per volume payable in advance. (*Vide* "Terms.")

*Address*:—THE MANAGING AGENTS,

*Vivekachintamani*, 19, *Adam Street*,
*Mylapore, Madras, S.*

"No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*
புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-11.
"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."
பிங்கள ஹு மாசிமீ. } விவேக  சிந்தாமணி { February-March. 1918.
FIRST ESTABLISHED, 1892. OUR JUBILEE YEAR, 1918.

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேந் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## THE CULTIVATION OF THE EXPERIMENTAL SCIENCES BY HINDUS.

### அப்பியாஸ வித்தை.

"தொட்டுக் காட்டாத வித்தை
சுட்டுப்போட்டாலும் வாராது."

டாக்டர் பி. ஸி. ரே அவர்கள் கல்கத்தா ப்ரெஸிடென்ஸி காலேஜில் ரஸாயன ப்ரொபெஸ்ஸராயிருந்து பென்ஷன் பெற்றுக் கொண்டு நீங்கியவர். அவர் ரஸாயன சாஸ்திரத்தில் பேர்போன விற்பன்னர். நமது பூர்வீக ஹிந்துக்கள் ரஸாயன சாஸ்திராப்பியாஸத்தில் கைதேர்ந்து பேர்போனவர்களாய் விளங்கினார்களென்பதைப்பற்றி அவர் பூர்வீக தந்திர நூல்களை ஆராய்ந்து ரஸாயன சாஸ்திராப்பியாச வித்தையின் பூர்வ சரித்திரத்தை வெளியிட்டு ஒரு முக்கிய நூல் எழுதியிருக்கிறார். பெங்கால் வைத்திய ரஸாயன சங்கத்திற் சம்பந்தப்பட்டவராய் அனேக அற்புத ரகஸியங்களைக் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார். இவருடைய மேற்பார்வையில் பழகித்தேர்ந்த இவருடைய சிஷர்கள் இவரினும் மேலான அற்புத ரகஸியங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தீயவிக்கும் யந்திரம் ஒன்று அமைத்து இருக்கிறார். அதை கவர்ன்மெண்டார் ஆயிரக்கணக்காக வாங்கிப் பரிசோதித்துப் பார்த்தபின் 5000 யந்திரங்கள் வாங்க உத்திரவனுப்பி யிருக்கிறார்கள். இதில் கண்டுபிடித்தவர் பங்குக்கு கிடைக்கும் கர்த்தவிய ஸ்வதந்திரபாத்தியதைக்குரிய கட்டணங்கள்மட்டும் 50 ஆயிரம் ரூபாய் ஆகிறதென்று சொன்னார். இவர் சென்னை யூனிவர்ஸிடி ஸிண்டிகேட் சபையாரால், ரஸாயன சாஸ்திராப்பியாஸ வித்தையைப்பற்றி யூனிவர்ஸிடி ஸம்பந்தமாய் தொடர்பிடியாகச் சில பிரஸங்கங்கள் செய்ய நியமிக்கப்பெற்று அதற்காகச் சென்னைக்கு வந்திருக்கிறார். அவற்றில் முதலாவது பிரஸங்கம் சென்ற ஜனவரிமீ 28உ திங்கட்கிழமையன்று ப்ரெஸிடென்ஸி காலேஜ் இங்கிலீஷ் லெக்ச்சர் ஹாலில் யூனிவர்ஸிடி வைஸ்-சான்ஸெலர் ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் அவர்கள் அக்கிராசனம் வகித்திருக்க பூர்வீகமாய் இந்தியாவில் ரஸாயன சாஸ்திரம் அப்பியஸிக்கப்பட்டு வந்ததைப் பற்றி அவரால் செய்யப்பட்டது. அதில் அவர் சொல்லியதையெல்லாம் அப்படியே எடுத்தெழுதவதென்றால் மிகவளர்ந்து விடுமென்றஞ்சி, அவருடைய கருத்தைமட்டும் எடுத்துக்கொண்டு, நமது கிராமவாஸிகளும் நாட்டுப்புற ஜனங்களுங்கூட அவர் சொல்லியதையுணரக்கூடுமாறு சாமான்ய தமிழில் எடுத்துரைத்து எழுதுவோம்.

ஹிந்துக்கள் வேதாந்த ஸித்தாந்த வாதங்களில் மூழ்கி மனப்பால் குடிக்கிறவர்கள் என்றும் அப்பியாஸ—அனுபவ சாஸ்திரங்கள் கைவந்தவர்களில்லை யென்றும் அன்னியர் நினைப்பதும் சொல்வதும் வழக்கமாய் விட்டது. ஆனால் அவர்கள் அப்படிச் சொல்வதும் நினைப்பதும் உண்மையல்ல. ரஸவாத வித்தையில் ஹிந்துக்கள் பேர்போனவர்கள். அந்த ரஸ

வாதவித்தையும் தற்கால ரஸாயன சாஸ்திரப்பியாஸ வித்தைக்குப் பின்வாங்கினதாயின்றி முன்வாங்கினதாகவே யிருந்தது. இதற்கு ஆதாரம் பல தந்திரங்களிலும் பரவியிருக்கக் காணலாம்.

“தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வாராது” என்பது இந்த ரஸவாதவித்தை சம்பந்தமாகவே விசேஷமாகச் சொல்லப்பெற்றுளது. தற்காலம் சாஸ்திரவிற்பன்னர் செய்துவரும் சாஸ்திர விசாரங்கள் பூர்வத்தில் நம்மவர்கள் கண்டனுபவித்து சித்தாந்தப்படுத்திய உண்மைகளையே ஸ்தாபிக்கின்றனவா யிருக்கின்றன.

“பார்வை யிரண்டுண்டு:—பஹிர் அஹமுகமென்பர்” என்றதனால் வஸ்து விசாரம் பஹிர்முக விசாரணையென்றும், அஹமுக விசாரணையென்றும் இருவிதப்படும். இவ்விரண்டிற்கும் அத்தாக்ஷியாயிருப்பது பார்வை (observation) அல்லது தர்சனம் (Seeing). ரஸாயன சாஸ்திராப்பியாசம் பஹிர்முக விசாரத்தில் பார்வையைச் செலுத்தி இவ்வுலகிலுள்ள வஸ்துக்களையெல்லாம் ஆராய்தலாகும். இப்படி ஆராய்ந்து தேர்ந்ததை உள்ளுணர்வில் கொண்டு அஹமுகப் பார்வையில் உட்பிரபஞ்சத்தின் உண்மைகளோடு ஒப்பிட்டு இரண்டுக்குமுள்ள ஐக்கியத்தை ஓர்ந்துணர்தல் யோகஞானம் என்று சொல்லப்பெறும்.

அப்படி அறியப்பெற்றதை மனிதன் ஆத்மதத்துவத்தோடு அமையப் பொருந்தி அமர்த்தி அவ்விரண்டிற்குமுள்ள ஐக்கியத்தை யுணர்ந்தால்தான் அந்த ஞானம் உறுதிப்பட்டு பயன்படுவதாகும். இல்லாவிடில் அது பயன்படாது வியர்த்தமாய் ஒழியும். இப்படி ஞானத்தைத் தேடி அது பயன்பட உள்ளுணர்வில் சேமித்துவைப்பதுதான் க்ஷேமம். இது “க்ஷேமலப்தஸ்ய பாலனம்” என்றதனால் நன்கு பெறப்பட்டது. இதை அப்பியாஸாதிசய வித்தையிற் பயின்றவர்கள் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்கள்:—

“பார்வையிரண்டுண்டு: பஹிரஹமுகமென்பர்
பார்வைபஹிர்முகம் பரந்தவுலகாராயில்
பார்வையஹமுகம் உள்ளுணர்வையோர்ந்துணரில்
பார்வையிரண்டுமொன்றுவதுணரார் பரிதவித்து
ழல்வாரே.”

இந்த உண்மையை டாக்டர் ரே அவர்கள் யசோதரர் நூலிலிருந்தெடுத்து மேற்கோளாகச் சொல்லியிருக்கிறார். பரிசீலனை செய்து காட்டியவற்றை அப்பியாசத்தில் தாமேசெய்து பார்த்துப் போதிக்கவல்லார் தாமே போதகராவர்:—கேள்வியினை லுணர்ந்ததைப் பரீக்ஷித்து அனுபவத்தில் கண்டு கிரகிப்பவரே மாணாக்கராவர். இவ்விருவருமல்லாத போதகரும் மாணாக்கரும் வெகு வேஷக்காரரேயன்றி உண்மையான போதகர்களும் அல்ல, மாணாக்கரும் அல்ல—என்கிறார்.

“ரஸேந்திர சிந்தாமணி”யின் கிரந்தகர்த்தாவாகிய இராமச்சந்திரரும் அவர் நூன்முகத்தில் நான் சிரவண மனனங்களால் அறிந்தவற்றை அனுபவத்தில் அப்பியசித்தறிந்த மட்டுமே இங்கு எழுதுகிறேன். என் அனுபவத்துக்கெட்டாதவைகளைப்பற்றி நான் இங்கு ஒன்றும் சொல்லவில்லையென்று எழுதியிருக்கிறார்.

பூர்விக ரஸாயன சாஸ்திரங்கள் தந்திரங்களில் விஸ்திரிக்கப்பட் டிருக்கின்றனவெல்லாம் சிவனுக்கும் பார்வதிக்கும் நடந்த சம்பாஷணை ரூபமாகவே எழுதப்பட்டிருக்கின்றன. ரஸாயனப் பொருள்களில் சிவன்= ரஸம். சக்தி=அபரேக்கு. (Mercury and Mica.)

ரஸவேகத்தால் எல்லா உலோகங்களையும் மாற்றலாம். இதற்கு வாதவித்தை யென்று பேர்.

ஸர் ஜகதீச சந்திர போஸ் அவர்கள் செடிகொடிகளை யெல்லாம் மனிதனைப் போலவே விஷமிட்டுக் கொல்லவும் உயிர்ப்பிக்கவும் கூடும் என்று கண்டுபிடித்துப் பிரத்தியக்ஷப் பிரமாணமாகச் செய்து காட்டியிருக்கிறார்.

ரஸம் லிங்கப் பொருள்களுக்கெல்லாம்



(உலோகங்களுக்கெல்லாம்) ராஜாவா யிருக்கிறது. ஏனெனில் அதற்கு உலோகங்களின் சக்தியை வேதிக்கும் குணமிருக்கிறது. அது சிவன் தேஹத்திலிருந்து ரஸமாக ஊறி வந்ததால் “ரஸம்” எனப் பேர்பெற்றது என்று சிவன் பார்வதிக்குச் சொல்லியிருக்கிறார் —என்று டாக்டர் ரே யெடுத்துச் சொன்னார். அப்படியே அபரேக்கு (Mica) கௌரி தேவியின் ரஸாம்சம்.

சிவசக்தி ஐக்கியத்தால் எல்லா உலகும் ஜீரணோத்தாரணமாய் ரக்ஷிக்கப்படுவதுபோல் ரஸம்-அபரேக்கு இவற்றின் வேகத்தினால் காயசித்தி யென்கிற தேஹதிடன் சித்திக்கிறது. காயகல்பம் என்பது தேஹத்தைத் திடனுடனிருக்கச்செய்யும் ஒரு சஞ்சீவி மருந்து. அதனால் விளைவது காயசித்தி. (திடகாத்திரப் பேறு.) அந்தக் காயகல்பம் உலோகங்களையும் வேர்களையும் வேதித்து ஒன்றோடொன்று சேரும் உண்மையான கூட்டுறவை யுணர்ந்து குணத்தைக்கொண்டு குணத்தைக் கெடுத்து வஸ்துக்களின் மணத்தை கிரஹித்து (அப்படியென்றால்:—ஸத்தை கிரஹித்து) ஸஞ்சீவியாக்கும் வித்தைக்கு வாதவித்தை யென்று பேர்.

பிருதிவி சம்பந்தமான சடதத்துவங்களின் ஸாரத்திலிருந்துண்டான ரஸத்தை கிரஹித்து செடி கொடிகள் உயிர்பெற்று வளர்கின்றன. பயிர் பச்சைகளின் ஸத்தான ஸாரத்தையுட்கொண்டு சீவராசிகள் உயிர்பெற்று வாழ்கின்றன. சடசீவ ராசிகளின் ஸத்தான ஸாராம்சத்தைக்கொண்டு ஜீவாத்மா உத்ஜீவித்து பரமாத்மாவோடு ஐக்கியபத்தியம் பெறும் பக்குவமடைகிறது. இந்த உண்மையை யுணர ரஸாயனவித்தை தேஹதர்மத்தை யுணர்த்தும் முக்கியமான வித்தையாக விருக்கிறது.

தேஹ தர்மத்தை யுணராதவன் தேஹியை உணரமாட்டான். பகவான் தனக்கு இரண்டு சக்திகள் உண்டு என்று சொன்னார். அவை: ஜடசக்தியென்றும் ஜீவசக்தியென்றும் பெயர் பெறும். ஜடவஸ்துக்களின் தர்மத்தை யுணர்த்துவது ரஸாயனவித்தை, (Physics & Chemistry). ஜீவசக்தியின் தர்மத்தை யுணர்த்துவது (Bio-physics & Bio-chemistry).

ஸர் ஜகதீச சந்திரபோஸ் அவர்கள் பம்பாய் யூனிவர்ஸிடிமுன் செய்த பிரசங்கத்தில் அறிவு-அறியாமை யென்றுள்ள இரண்டில் அறிவு வஸ்துக்களின் ஏகத்துவத்தையும் (ஒன்றுந்தன்மையும்) அறியாமை வஸ்துக்களின் பேதத்தையும் காட்டக் காரணமாகிறது என்று சொன்னபடி, பேதத்தையாராய்ந்து அந்த பேதங்களிலுள்ள அபேதத்தை யறிவது தானே உத்தமவித்தை.

மனுஷனால் இது வரையில் நிர்மிக்கப்பட்ட யந்திரங்கள் முதலான வேலைச் சாலைகள் (Laboratories, & Obsevatories) எல்லாவற்றிலும் ஈசுவர நிர்ணய யந்திரமான மானிடதேஹம் மிகவும் மேலானதாக விருக்கிறது. அந்த அபார மஹிமைபொருந்திய யந்திரமும் அதையியக்கும் இந்திரியங்களும் மனசும் (கருவி கரணங்களும்) உற்றுப் பார்க்கப்பார்க்க பரமானந்த மளிப்பவையாக விருக்கின்றன. சித்தர்களிற் சிறந்தவரான திருமூலதேவர் இந்த உடலை நான் இழுக்கென்றெண்ணியிருந்தேன்; இந்த உடலினிற்குள்ளே உற்ற பொருள் (லக்ஷியம்) கண்டேன்; காணவும், அது ஈசனுக்குக் கோயிலாக அமைந்துள்ளது பற்றி இந்த உடலிலிருந்து ஈசுவரார்ச்சனையாக உடலை ஓம்புகின்றேன் என்று சொல்லியிருக்கிறார்.

## ADVICE TO YOUNG MEN.

### மாணவர்களுக்குப் புத்திமதி.

(ராஜா ஸர். டி. மாதவராயர் வாய்மொழி.)

[பல வருஷங்களுக்குமுன், சென்னை சர்வகலா சங்கத்தார் பட்டமளிக்கும் உற்சவம் நடத்தேறியபொழுது பரீக்ஷைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட வித்தியார்த்திகட்குப் பட்டங் களிக்கப்பட்டபின் ராஜ ஸர். டி. மாதவராயரவர்கள், புத்திப்போதனையாக பிரசங்கித்ததை பலருக்கு பிரயோஜன கரமாயிருக்குமென்று சுருக்கி பிரசுரிக்கிறோம்.]

"நான் உங்களுக்கு எச்சரிக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதென்னவெனில், இனி நீங்கள் வியவகார தர்மங்களை நடத்தவேண்டிய ஸ்தானமாகிய இந்த உலகமானது எங்கும் கஷ்டமென்பது சிறிதுமில்லாமல் தேவேந்திர புவனம்போல் இன்பம் நிறைந்த திவ்யலோகமாயிருக்குமென்று ஒன்றுமறியாத உங்கள் பாலியத்தசையில் ஆசையாய் நினைத்திருந்த வண்ணமிராது, உண்மையில் அநேக வேற்றுமைகளும், கஷ்டங்களும், அபாயங்களும் விகல்பங்களும் நிறைந்திருக்கின்றதென்று நீங்கள் அறியவேண்டும். இத்தகைய கஷ்டங்கள் மிகுந்துள்ள இவ்வுலகத்தில் பிரவேசித்த பிறகு, சம்சாரம் சாகரம் என்று சொல்லும்படியான ஜீவயாத்திரை இவ்வளவு கடினமானதென்று அதன் உண்மையியல்பை அறிய வெகுகாலமாகவேண்டியதில்லை. சீக்கிரத்திலேயே கரதலாமலகம்போல் அநுபவபூர்வமாய் விளங்கும். அன்ன ஆகாராதிகளைச் சம்பாதிப்பதற்கும் நல்லதிர்ஷ்டம் பெற்று கீர்த்திமான்களாய்ப் பிரசித்தியடைவதற்கும் எங்குபார்த்தாலும் எல்லோரும் ஓய்வில்லாமல் போராடிவருவதை நீங்கள் பிரத்தியக்ஷமாய்க் காண்பீர்கள். இந்த உலகவாழ்க்கையென்னும் யுத்தகளத்தில் கூடியிருக்கும் மனிதர்களின் தொகையோ எண்ணிறந்தது. அவர்கள் பூண்டுள்ள ஆயுதங்களோ, அனந்தபேதங்கள் உள்ளனவாயிருக்கின்றன. நீங்கள் செல்லவேண்டிய வழியிலுள்ள அந்தகார தூளீபடலங்களையும், பலவிதத் தாரதம்மியங்களுள்ள ஞானாஞ்ஞானங்களையும், துரபிமானம், காமாதி தாமஸகுணங்கள், இங்கே இத்தனையென்று சொல்வதற்குக் கடினமான தப்பிதங்கள் பாபங்கள் முதலியவற்றையெல்லாம் தாண்டிக்கொண்டு போகவேண்டும்.

"False lights will often misguide you"— பொய் யொளிகள் உங்களைப் பல தடவையும் தப்பு வழிகளில் கொண்டுபோகும். அதிகமான சக்தியுள்ள பிரமேயங்கள் சேர்ந்து உங்களை வஞ்சித்துப் பாவமாகிய படுகுழியில் வீழ்த்தும். எதிர் பாராத இடையூறுகள் உங்களைத் தடுக்கும்; விதம்விதமான புதிய சிக்குகள் ஏற்பட்டு உங்கள் மதியை மயக்கும்; பொறாமை, அழுக்காறு, செருக்கு, காரணமில்லாத வீண் துவேஷங்கள் என்னும் பகைவர்கள் உங்களை எதிர்ப்பார்கள். ஆனால் இதுகாறும் நீங்கள் கற்றுவந்த கல்வியின் பயனாயுள்ள அறிவும் நற்குண புண்ணிய விசேஷங்களும், இனி உங்களுடைய சொந்த முயற்சியால் அபிவிர்த்தியடைந்து, இவ்வுலகத்தில் உங்களை க்ஷேமமாய்ப் பாதுகாத்து உங்களுக்கு விஜயப்பிரதாபத்தை யளித்து உபகரிக்கும் என்று நம்புகின்றேன்.

கனவான்களே, உங்களது கல்விப்பயிற்சி இன்னும் சமாப்தியாகவில்லை. இப்பொழுது நீங்கள் கல்விப்பட்டம் பெறுவதினாலேயே நீங்கள் கல்வி பூர்த்தியடைந்ததாய்க் கருதிவிடுவீர்களேல், அது நீங்கள் செய்யும் ஒரு பெருந்தவறாகும். உங்களது பொதுக்கல்வி முடியப்பெற்றதேயன்றி, மற்றபடி நீங்கள் சொந்தமாய் முயன்று கல்வி யபிவிர்த்தியில் பரிசிரமம் செய்ய இதுமுதல் ஆரம்பித்து, உங்கள் வாழ்நாள் முழுவதும் அதை வளர்த்துக்கொண்டே வரவேண்டும். இதுவரையில் உங்களுக்கு எவ்வளவு வித்தை லாபமாயிற்றென்று தீரத்



தெளிய அறிந்துகொள்ளுங்கள். உங்களுக்குக் கிடைத்த கல்வியினால் உண்டான அற்ப லாபங்களையே மிகச் சிறந்தவையென்று வாளாக்கருதி நாம் சர்வஜ்ஞராய் விட்டோமென மதியாதீர்கள். உங்களுக்குச் சில பெரிய விஷயங்களைக் கற்பித்திருக்கிறார்கள். அதாவது ஏதோ சிறிது அறிவு உங்களுக்குச் சொந்தமாய்க் கிடைத்திருக்கின்றது. உங்களுடைய அறிவை விர்த்திசெய்துகொள்ள உங்களுக்குச் சக்தியுண்டாகும்படி விஷயங்களை இப்படிக் கற்கவேண்டுமென்ற வழியைப் போதித்திருக்கின்றார்கள். விஷயங்களைப் பகுத்தறியும் சக்தியும் அவற்றைச் சீர்தூக்கி உண்மையைத் தெளிந்துகொள்ளும் சக்தியும் உங்களுள்ளத்தில் ஓர் அளவு வரையில் விர்த்தியடைந்திருக்கின்றன. உங்கள் மனமானது இனி வருங்காலத்தில் உங்களுக்குப் பயனுள்ள துணைக் கருவியாய் அமைந்திருக்கும் வண்ணம் அது ஓர்வித தேர்ச்சியையும் பழக்கத்தையும் அடைந்திருக்கின்றது. சில நீதிநெறித் தத்துவங்களை உங்களுக்குப் புகட்டியிருக்கிறார்கள். அவற்றை நீங்கள் அநுஷ்டிக்கும் பக்ஷத்தில் உங்கள் சீலம் மேம்பாடடைந்து பலருக்கும் பிரயோஜனகரமாயும் நிஷ்களங்கமாயும் கண்ணியமாயுமிருக்கும். இதுவரையில் நீங்கள் அடைந்த லாபம் அளவில் குறைந்ததும் குணத்தில் அபூர்ணமுமானதென்றும் உங்களுக்கே சீக்கிரத்தில் விளங்கும். இதை நீங்கள் அநுபவத்தில் கண்டுகொள்ளாமல் போய்விடுவீர்களானால் உங்களது அபிவிர்த்தி வெகுவாய்க் குறைந்து மட்டுப்பட்டுப் போய்விடும். உங்களுடைய அறிவு அதிகமாய்ப்பெருகி, உங்களது மானஸ சக்திகள் இன்னும் அதிகமாய் வலிமையுற்று சரியான சம்பிரதாயப் பழக்கத்தால் அபிவிர்த்தியடையவேண்டும். இவற்றையெல்லாம் சாதிக்க வேண்டுமானால் உழைப்பும் சிரத்தையுள்ள முயற்சியும் இன்றியமையாதவை. ஆனால் பேரும் பிரதாபமும் கண்ணியமாய் உலகத்தில் பிரசித்தியுடன் விளங்க உங்களுக்கு அவா இருக்குமாயின் மேற்கூறிய வண்ணம் அக்கறையுடன் பாடுபட்டு உழைக்கப் பின்வாங்கக்கூடாது.

வாழ்நாளில் செய்யவேண்டியவைகளோ பல: ஆனால் நமக்குள்ள வாழ்நாள்களோ சில, மனிதர்கள் காலத்தைக்கழிக்கும் விதத்திற்குத் தகுந்தவாறு அவர்களுடைய யோக்கியதைகளும் அவர்கள் அடையும் காரியசித்தியும் வேறுபடுகின்றன. மனதும் சரீரமும் ஆரோக்கிய ஸ்திதியில் இருக்கவேண்டுமாயின் பயிற்சியும், வேலையினின்று ஓய்வும், அத்தியாவசியங்களானவை. இத்தகைய உத்தேசங்களின்பொருட்டு நீங்கள் காலத்தை விநியோகிப்பீர்களேல், அது மிகவும் சரியாயிருக்கும். அங்ஙனம் செய்யாமற்போனால் நீங்கள் பெரிதும் தவறினவர்களாவீர்கள். அதி நித்திரையிலேனும், சோம்பலிலேனும், அற்பக்காரியங்களிலேனும் லக்ஷ்யமும் பயனுமற்ற பேச்சிலேனும் உங்கள் காலத்தை வியர்த்தமாக்காதேயுங்கள். உங்களுடைய வாழ்க்கையின் முக்கிய உத்தேசங்களுக்கு சம்பந்தமில்லாத விஷயங்களின் பொருட்டு அபரிமிதமான காலத்தைக் கழிக்காதேயுங்கள். உங்களுக்குப் பெரும்பாலும் காரியகாரியாயிராத பிராசீன பாஷையை யாவது கற்பதன் பொருட்டு உங்கள் காலத்தின் பெரும்பகுதியை விநியோகிக்கு முன்னர், அங்ஙனம் செய்வது தகுதியோ என்று நன்றாய் ஆலோசித்துச் செய்யுங்கள். உங்களுடைய வாணாள்களில் எவ்விதமான விருத்தியை அவலம்பிக்க உங்களுக்கிஷ்டமோ, அதற்கு உங்களுடைய படிப்புகளும் பிரயோஜனகரமாயிருக்கவேண்டும். அதமபக்ஷம் அப்படிப்புகள் மேற்சொன்ன உங்கள் வாழ்க்கை யுத்தேசங்களுக்கு அதிகமாய் வேறுபட்டுப் பிரிந்து போதல் கூடாது. நீ தாசில்தாரா யிருக்க வேண்டுமாயின், ரசாயன சாஸ்திரம் படிப்பதில் அநாவசியமான காலத்தைக் கழிக்காதே;

நியாயஸ்தலத்தில் வக்கீலாயிருக்க உத்தேசமானால், உன் காலத்தை கோளத்திரிகோண மிதி நூலிலும் (Conic Sections) என்னும் கணித சாஸ்திரத்திலும் அவலமாக்காதே. கணித சாஸ்திரப் பிரிவுகளில் காட்டிலும் நியாயசட்டப் பிரிவுகளில் நீ அதிகமாய்ப் படித்தறியவேண்டுவது அவசியம். வைத்திய விருத்தியை ஜீவனார்த்தமாகக்கொள்ள உன் மனம் நாடுமேல் வானசாஸ்திரப் பயிற்சியில் அதிஜாக்ருகனா யிருக்கவேண்டாம். உங்களுடைய ஜீவனவிருத்தியை அடிக்கடி மாற்றுவதினால் வீண் காலநஷ்டம் அதிகமாய் சம்பவிக்கின்ற தென்பதை நீங்கள் ஞாபகத்தில் உறுதியாய் வைக்கவேண்டும். உங்களுக்கு யதேஷ்டமான ஐசுவரியமும் அவகாசமுமிருந்தாலன்றி வெறும் அலங்காரமாத்திரமாயுள்ள வித்தியாசமத்கார சாமர்த்தியங்களின் பொருட்டும் அல்லது நவீனகங்களை (Novels) யும் கற்பனைக்கிரந்தங்களையும் படிப்பதிலும் அபரிமிதமான நேரத்தைப் போக்காதேயுங்கள். நீங்கள் செய்யும் "காலக்ஷேபமானது உங்களுக்கும் உங்களைச்சேர்ந்த ஜனசங்கத்துக்கும் வேண்டுமான சுகத்தையும் ஊதியத்தையும் பயக்கத்தக்கதாய் இருத்தல் வேண்டும். எந்த விஷயங்களை அறிந்துக் கொள்ளவும் நிர்வகிக்கவும் உங்களுக்கு ஆற்றலும் ஊக்கமுமில்லையோ, அவற்றில் தலையிட்டுக்கொண்டு காலத்தை வீணாக்கவேண்டாம். நிறைவேற்றுவதற்கு அசாத்தியமான காரியங்களில் காலத்தை வியர்த்தமாக்கவேண்டாம். ஆங்கிலம் அல்லது வேறு பிறநாட்டு பாஷைகளில் காவியமியற்றி அதிசயிக்கவேண்டு மென்பதன் பொருட்டு இத்தேச வாசிகள் தங்கள் காலத்தை மிதமிஞ்சிச் செலவிடுவது எனக்கு கிஞ்சித்தும் பிரியமில்லை. பதங்களைவிட கருத்துகள் மிக முக்கியமானவை யாதலால் வெறும் அர்த்த புஷ்டியில்லாத சொல்லணிகளில் வீண் காலம் செலுத்தவேண்டாம். பயனற்ற விவாதங்களிலும் விசாரங்களிலும் விருதா காலக்ஷேபம் செய்யவேண்டாம். இத்தகைய வாதங்களில் பழைய சம்பிரதாயப் பண்டிதர்கள் அதிக விருப்பங்கொள்ளா நிற்பர். ஞானத்தைக் கிரஹிக்க உங்களுக்கு இஷ்டமானால் அஃதிருக்கும் வண்ணம் அந்த ஞானத்தைக் கிரகியுங்கள். அதன் நீண்ட பிராசீன சரித்திரத்தைப்பற்றி அநாவசியமாய்த் தலையை உடைத்துக்கொள்ள வேண்டாம். தேசசரித்திர சம்பந்தமான நீண்ட சாரமற்ற சம்பவ விவரங்களைவிட சரித்திர நூற்பயற்சியால் விளையும் படிப்பினைகளும் அனுமானங்களும் சிறந்தவையானமையின், பின்சொன்னவற்றைத் தெளியக் கற்றறியும்பொருட்டே உங்கள் காலத்தை விநியோகிப்பது தகுதியுடையது. அவ்வப்பொழுது நடக்கும் விருத்தாந்தங்களைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு, உள்ளூரைச்சேர்ந்ததும் பொதுவுமான சில பத்திரிகைகளைப் பொறுக்கி நீங்கள் உங்கள் சக்தியாலானவரையில் படிப்பது வெகு அவசியம். ஆனால் மட்டுக்கதிகமாய் பத்திரிகைகளையும், வித்தியாசாமர்த்திய மற்றவர்கள் வறுமையின் மிகுதியால் பொருளீட்டும் பொருட்டுப் பிரசுரிக்கும் குப்பைப் புத்தகங்களையும் படிப்பதைத் தவிர்க்கவேண்டும்.

### எல்லா விஷயங்களைப்பற்றியும் சாரமாயும் ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி பூர்த்தியாயும் அறிக.

இஃதோர் முக்கியமான தத்துவம். ஞானத்துக்கு விஷயமான எல்லாக்கலைகளைப்பற்றியும் பொதுவாய் அறிவதன்றி, உங்களுக்கு மிகவும் விருப்பமான கலையின் இரகசியங்களைச் சிறப்பாய்க் கற்கவேண்டும்.

இவ்வாறு கற்பதற்குவேண்டிய நூல்களும் புத்திமதிகளும் அநேக மிருக்கின்றன. உங்களுடைய உத்தியோகத்துக்குச் சம்பந்தமான விஷயத்தைப்பற்றிய உங்கள் அறிவானது கேவலமாயும் மேலாராய்ச்சியாயும் இராத வண்ணம் நீங்கள் ஜாக்கிரதையாயிருக்கவேண்டிய பிரகிருதத்தில் ஜீவனோபாயத்திற்கு



அவசியமாயிருக்கும் வித்தைகளை மாத்திரம் தான் நீங்கள் கற்கவேண்டுமென யான் சொல்வதாக நீங்கள் கருதவேண்டாம். அங்ஙனம் சொல்வதற்கும் எனக்கும் வெகு தூரம். நான் வற்புறுத்துவதெல்லாங்கூடி என்னவெனில், எல்லாக் கலைகளையும் பற்றிய பொதுவான அறிவும், உங்களது பரிசிரமத்துக்குத் தக்க இன்பமும் ஊதியமும் அளிக்கத்தக்க கலையிற் சிறப்பான அறிவும் உங்களுக்கு இருக்கவேண்டுமென்பதே. சில கலைகளைக் கற்க உங்களுக்கு ஆற்றல் இல்லாமலிருக்கும். அவற்றினை நீங்கள் விட்டுவிடவேண்டும். வேறு சிலவற்றைப் படிக்க உங்களுக்கு வேண்டிய சாதனங்களும் அவகாசமும் இல்லாமலிருக்கும்; ஆகையால் அவற்றினையும் நீங்கள் தியாகம்செய்யவேண்டியதே. மற்றுஞ் சிலவற்றை அனுஷ்டானத்தில் உபயோகப்படுத்த உங்களுக்குச் சமயம் கிட்டாமலிருக்கும்; ஆதலால் அவற்றினின்றும் நீங்கள் நீங்கவேண்டியதுதான். கனவான்களே, இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள வித்தியாபட்டதாரிகள் பலரும் கல்வியின் பல துறைகளிலும் பிரவேசித்து தத்தமக்கு அபிருசியாயுள்ள துறைகளில் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் உழைத்து அவற்றில் பாரங்கதர்களாய் வெளிவந்து விளங்குவதைக் காணும்போது என்னைவிட மற்றெவரும் அதிகமாய்ச் சந்தோஷிக்கமாட்டார்களென்பதை நீங்கள் உறுதியாய் நம்புங்கள். புத்தியைப் பல வழிகளிலும் செலுத்தி அதனைக் குன்றச் செய்வதைவிட அதை ஒரே வழியில் ஏகாக்கிரமாய் நிறுத்துதல் அதிக பயனைக் கொடுக்கும் என்பதை மாத்திரம் நீங்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும். புத்தியை ஓர் நிலையில்லாமல் பல வழிகளிலும் அலையச்செய்யும் துர்வழக்கத்தைப்பற்றி நான் மிகவும் விசனப்படுகின்றேன்.

### வாழ்க்கையின் உத்தேசியங்கள்.

உலகமென்னும் வீட்டின் தலைவாயிலை நீங்கள் மிதிக்கப்போகின்றமையால், உங்கள் வாழ்க்கையில் நீங்கள் நிறைவேற்றவேண்டிய அல்லது நிறைவேற்ற முயலவேண்டிய முக்கிய காரியங்களைப்பற்றிய தெளிவான அறிவு உங்களுக்கு இருக்கவேண்டுவது அத்தியாவசியகம். முதன்முதல், திரவியத்தினாலும் ஸதா சம்சார ஸம்பத்தினாலும் உண்டாகும் சுகம், உங்களுக்கு சித்திக்குமாறு, அவற்றைத் தேடி அடைதல் வேண்டும்; இரண்டாவது, அத்தகைய சுகங்கள் ஏனையோர்களுக்கும் கைகூடுமாறு, உங்களாலியன்றவரையிலும் செய்தல் வேண்டும். இந்தப் பயன்களைப் பெறும் பொருட்டுப் பிரயோகிக்கவேண்டிய சாதனங்களை, அறிவு, நற்குணம் என்னும் இரண்டு மொழிகளுள் அடக்கலாம். இக்குணங்கள் உம்மிடம் ஒருவாறு அமைந்திருக்கின்றன வென்பது உங்களுக்களிக்கப்பட்டுள்ள வித்தியாபட்டங்களால் பெறப்படுகின்றது. கஷ்டப்பட்டுழைத்து சரியானவழியில் ஸ்வயமாய் நீங்களே வித்தியாபிவிருத்தி செய்வதனால் மேற்சொல்லிய அறிவு, நற்குணம் என்னும் சாதனத்வயத்தை வளருங்கள். உங்களாலியன்றமட்டும், ஜனங்களிடத்தும் அவற்றை அதிகமாய் விருத்திபண்ணிப் பரவச்செய்யுங்கள்.

### ஆரோக்கிய சம்பந்தமாய் அவர் பின்வருமாறு புத்திசொல்லி வற்புறுத்தினார்:—

"கனவான்களே, தேகாரோக்கியம் என்னும் சுகமானது எல்லாவித சுகங்களுக்கும் அடிப்பீடமான தென்பதை உங்களுக்கு நான் எடுத்துரைக்கவேண்டுவதில்லை. ஆரோக்கியத்திற் காதாரமான நிலைமைகளை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து, அவ்வாரோக்கியத்தைப் பேணும் கைகண்ட முறைகளைத் தவறாமல் உறுதியாய் அவலம்பித்து அனுஷ்டித்தல்

வேண்டும். அந்தரங்கமாய்ப் போதிப்பதினாலும், ஆலோசனையினாலும், அனுஷ்டானத்தினாலும் பொதுவில் ஜனங்களுக்குள் ஆரோக்கியத்தையும், சுகாதாரத்தையும் விருத்திசெய்யுங்கள். இச்சுகாதார விஷயத்தில் யாதொரு ஆடம்பரமுமின்றி பரோபகாரம் செய்யலாம். அங்ஙனம் செய்வதில் ஆரோக்கிய விர்த்தியும் வியாதிக்ஷீணமும், சுகவிர்த்தியும் துக்கக்குறைவும் உண்டாகும். சுகாதாரவிஷயத்தில் சிரத்தை உண்டாகவேண்டி உபந்யசிப்பது அநாவசியமெனத் தோற்றலாம். ஆனால் சற்றேனும் பயனற்ற லாபங்களைப் பெறும் பொருட்டு முக்கியமான சுகப்பேற்றை ஜனங்கள் பலிகொடுத்துள்ள நிதர்சனங்கள் பலவற்றை நாம் அடிக்கடி காண்கின்றோம். தேகசௌக்கியம் தப்பிப்போய்விட்டபொழுதாவது அல்லது க்ஷீணிக்க ஆரம்பிக்கும்பொழுதாவது சுகாதாரத்தைப்பற்றி கவனிக்கலாமென்று விட்டு விடுவதைவிட, இளமையிலேயே பிரதமத்தில் ஆரோக்கிய மூலதத்துவங்களைத் தெரிந்துகொள்வது உத்தமம். உங்களது தேகசௌக்கிய விசாரணையை விவேகமற்ற வைத்தியப்போலிகள் வசத்தில் விடவேண்டாம். எவ்வளவுக் கெவ்வளவு தீர்க்கமாயும் சுகமாயும் நீங்கள் ஜீவிக்கின்றீர்களோ, உங்களுக்குப் புகட்டப்பட்ட கல்வியின் பயனை அவ்வளவுக்கவ்வளவு விசேஷமாய்ச் சபலமாக்குவீர்கள்."

"This magazine is devoted to the diffusion of knowledge and to the "Children's Movement." The commendable zeal of the Editor Mr. C. V. Swaminatha Iyer, in promoting the cause of children's education, and in making them to realise their duties, rights and responsibilities, has earned for him an enviable name."—*New India.*

## PHYSICAL EXERCISE.

### தேகாப்பியாசம்.*

தேகப்பயிற்சி என்னும் விஷயத்தைப்பற்றி நான் சொல்லும்படியாக ஏவப்பட்டு, அதைப் பற்றி எழுதலானேன். உபாத்திமார்கள் சேர்ந்த சங்கத்திற்கு, இவ்விஷயம் முக்கியமானதே. ஏனென்றால் பெரிய கல்விமான்களால் படிப்பு நான்கு விதமாய் வகுக்கப்பட்டிருக்கிறது. அவைகளாவன (i) புத்தியை விருத்திசெய்யும் படிப்பு, (ii) நல் நடத்தைகளை விருத்திசெய்யும் படிப்பு, (iii) ஈச்வர பக்தியை விருத்திசெய்யும் படிப்பு, (iv) தேகப் பயிற்சிப் படிப்பு. இந்த நாலுவித வகுப்புக்களில் முதல் மூன்றும் மூளைவிருத்தி சம்பந்தமுள்ளது. ஆனபடியால், அவைகளை ஒன்றாகவே பாவிக்கலாம். அப்படிச்செய்தால், படிப்பு இரண்டு விதமாகப் பிரிக்கப்படலாம். முதலாவது மூளைவிருத்தியாகப் படிப்பு. இரண்டாவது சரீரம் விருத்தியாகப் படிப்பு.

நாம் செம்மையாக யோஜித்தால் இவ்விரண்டுவிதப் பிரிவுகளுக்கும், நிரம்பவும் சம்பந்தம் இருக்கிறதென்பது, புலப்படும். ஈச்வர சிருஷ்டியில், 'இருக்கிறது' என்பதாக எது சொல்லப்படுகிறதோ அதுகளுக்கெல்லாம், ஒரு ஆதாரமிருந்தே தீரவேண்டும், என்பது ஒரு தத்துவம். வீடு என்றால் அது நிற்க அஸ்திவாரமும், மரம் என்றால் அது வளர வேரும், கதவு என்றால் அது நகரக் கீலும் இருக்கின்றது. அவைகளின் சம்பந்தம்போலவே, மூளை விருத்திப் படிப்புக்கும் சரீரவிருத்திப் படிப்புக்கும் சம்பந்தமிருக்கிறது. மூளைவிருத்தியாக, சரீரவிருத்தி, சரீரதிடம், சரீர லாகவம், இவைகள் மிகவும் இன்றியமையாதவைகளாயிருக்கின்றன. ஆகவே, உபாத்திமார்கள் தங்கள் பையன்களின் படிப்பைப்போல, அவர்

* Read before a Teachers' Association, by a Sub-Registrar.



களின் சரீரப்பயிற்சியையும் விருத்திசெய்ய வழிதேடவேண்டியது, என்பது ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

மேலும், சரீரப்பயிற்சி அல்லது வேலைசெய்தல், சிருஷ்டியின் இயற்கை. உலகத்தில், 'இருக்கிறது' என்பதாக நாம் சொல்லும் ஒவ்வொரு வஸ்துவின் செய்கையும், வேலைசெய்வதாகவே இருக்கிறது. 'ஜீவனோடிருக்கிறது' என்னும் பதத்திற்கே, வேலைசெய்து கொண்டிருக்கிறது என்று தாத்பரியம். சுடுகாடு போனால்தான், முழு ஓய்ச்சல் என்பது உண்டாகும். ஆகையால் நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளும், எப்போதும் வேலை செய்துகொண்டேயிருக்கின்றன. ஆகையால் நாம் செய்துகொள்ளவேண்டியது எல்லாம், உடம்பின் ஒவ்வொரு பாகத்துவேலையும், மற்ற பாகங்களின் வேலைக்கு அனுகூலமாயும் உதவியாயுமிருக்கும்படி, நமது புத்திசாலித்தனத்தால் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதே. அப்படிச் செய்துகொள்ளுவதினால்தான், நாம் சுகிகளாயும் பலமுள்ளவர்களாயும் ஆகலாம். தேகத்தின் பல உறுப்புக்களும் வளர்ச்சியைப் பெறும், ஆகையால் உபாத்திமார்கள் தங்கள் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட பிள்ளைகளை, மூளை வேலையில் சமர்த்தர்களாகப் பண்ணும் நிமித்தம், அவர்கள் நல்ல காற்றில் தினம் இரண்டு மணி நேரமாவது விளையாடுகிறார்களாவென்று பார்க்கவேண்டும். விளையாட்டுகள் உடம்புக்கு அபாயத்தை விளைவிக்கும்படியானவைகளாக இருக்கக்கூடாது. தேகப்பயிற்சியின் விசேஷ மதிப்பப்பட்டுள்ள இங்கிலீஷ்ப் பள்ளிக்கூடங்களில், ஜிம்னாஷியம், ட்ரில், டென்னிஸ், க்ரிக்கெட்டு, புட்பால், கோல்ப், முதலிய விளையாட்டுக்கள் விருத்திசெய்யப்படுகின்றன. பச்சைக்குதிரை தாண்டல், கிட்டிப்புள், பிள்ளையார்பந்து, குதிரைப்பந்து, கும்மி, கோலாட்டம், கண்ணாமூச்சி, பசி, சில்லு, பாண்டி, அடலாப்புடலா, நீந்தல், முதலிய விளையாட்டுகள் நம்மதேசத்தவை: இவ்வித சுதேசவிளையாட்டுகள், இங்கிலீஷ் விளையாட்டுகளைப்போல, செலவுள்ளவைகளல்ல. அபாயகரமன்னியிலும், சந்தோஷத்தை விருத்திபண்ணும் தன்மையுள்ளனவாயுமிருக்கின்றன. ஆகையாலிவ்வித, நம்முடைய புராதனவிளையாட்டுகளையும், நம்முடைய கிராமாந்திர உபாத்திமார்கள், அவரவர்கள் பள்ளிப்பையன்களுக்குள், விருத்திபண்ணவேண்டும். சதுரங்கம், சீட்டாட்டம், முதலிய விளையாட்டுகளுக்கு மூளையின் உதவி தேவையாயிருக்கிறது. அவைகள் பிரயோஜனமற்றவைகளாயுமிருக்கின்றன. நம்மவர்களால், நிஷித்தமாக வெண்ணப்பட்டு, சூதாட்டமென்று அழைக்கப்படுகின்றன. நளன், தர்மன் போன்றவர்கள், அவைகளின் அப்பியாசத்தால் அடைந்த கஷ்டங்களை, அறியாதவருமில்லை. படிக்கும் மாணாக்கர்களுக்கு அவைகளால் மூளை ஜாஸ்தியாக பலஹீனப்படுகிறது; ஆகையால் அவைகளை விளையாடக்கூடாது.

தேகப்பயிற்சி, படிப்பின் விருத்திக்கு அத்யாவசியகம் என்று சொன்னேன். அதுமாத்திரமல்ல. தேகப்பயிற்சியினால்தான், நாம் சுகியாயும் பலத்தோடுகூடினவர்களாயும், ஆயுள்விருத்தியுள்ளவர்களாயுமிருக்கலாம். நாம் உட்கொள்ளும் அன்னபானாதிகள், விடும் மூச்சு, அயர்ந்ததூக்கம், செய்யும் ஸ்நானம், இவைகளுக்குப் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற விதிகளை அனுஸரித்து, ஒருவன் தேகப்பயிற்சியைப் பிரதிதினமும் அப்பியாஸிப்பானாகில், அப்போதுதான் அவனுக்கு தேகப்பயிற்சியின் பலன்கள் ஸித்திக்கும். ஆகையால் இவைகள் சரீரப்பயிற்சியின் உபகரணங்களென்று சொல்லப்படுகின்றன. இந்த உபகரணங்களின் விதிகளைக் கவனி

யாது, ஒருவன் சரீரப்பயிற்சியைமாத்திரம், எவ்வளவு நன்றாகப் பிரதிதினமும், அப்பியாவித்தபோதிலும், அவன் யாதொரு பலனையுமடையமாட்டான். ஆகையால் சரீரப்பயிற்சிக்கு ஸாதனமாயுள்ள உபகரணங்களின் விதிகள், நம்மால் முக்கியமாய் கவனிக்கப்பட்டு அநுஷ்டிக்கப் படவேண்டியவைகள். அவைகளை இவ்விடத்தில், சுருக்கமாய்க் கூறுவோம்.

முதலாவது, நாமுண்ணும் உணவும், அருந்தும் ஜலமும்:—வாய்முதல் அபானத்துவாரம் வரையிலுள்ள வயிறு குடல்போன்ற ஜீர்ண சக்தி யந்திரங்களினால், நாமுட்கொள்ளும் போஜனபானாதிகள், ரக்தத்துக்கு வேண்டிய வஸ்துக்களாக மாற்றப்பட்டு, அவைகள் ரக்தத்தில் கலக்கின்றனவென்றும், ரக்தமானது உடம்பின் சகல அவயவங்களுக்கும் வியாபித்துக்கொண் டோடிக்கொண்டிருக்கின்றனவென்றும், உடம்பின் சகல அவயவங்களும் அவற்றின் வளர்ச்சிக்கு வேண்டிய வஸ்துக்களை ரக்தத்திலிருந்து எடுத்துக்கொள்ளுகின்றனவென்றும், அப்படி உடம்பின் பல உறுப்புகளும் ரக்தத்தினால் தங்களுக்குக் கொண்டுவரப்பட்ட சரக்குகளால் அமையப்பெற்று வளர்ச்சிபெறும்போது, அவ்வவயவங்களின் பிரயோஜனமற்ற, நாற்றமுள்ள, பழயவஸ்துக்கள், ரக்தத்தில் தள்ளப்பட்டு, நாம் வெளிவிடும் கரியமலவாயு, வேர்வை மூத்திராதி மூலமாக வெளிப்படுகின்றனவென்றும், (Physiology) ஜீவசாஸ்திரத்தால் நமக்குத்தெரியவரும். ஆகவே, நாம் சரீரப்பயிற்சியால் புஷ்டியடைந்து பலமுள்ளவர்களாயிருக்க, நாம் ஜீர்ணிக்கும் விதமாகப் புசிக்கவேண்டும். அவசரமன்னியில், ஆற அமர, நம்முடைய போஜனாதிகளை, நாம் மென்று புசிக்கவேண்டும். வியாகூலமும், மனக்கவலையும், யாதொன்றுமில்லாமல், ஈச்வரனையே, தியானம்செய்துகொண்டு, சந்துஷ்டியாக நாம் புசிக்கவேண்டும். அப்படியிருக்க, நம்மில் பலவித வேலைத்தொந்திரவுகளையுடைய அநேகர், பாய்ச்சலில் குதிரை ஓடும் வேகமாய் போஜனாதிகளை லபக்கென்று வயிற்றில் கொட்டிக்கொள்ளுகிறார்கள். இன்னுஞ் சிலர், சமாசாரப் பத்திரிகைகள் படித்துக்கொண்டு சாப்பிடுகிறார்கள். வேறு சிலர் போஜனமானவுடனே, மூளைக்குக் கடினமான வேலையைக் கொடுக்கிறார்கள். அப்படிச்செய்வதினால் கெடுதல்கள் உண்டாகின்றன. ஏககாலத்தில், மூளைக்கும் ஜீர்ணகாரியந்திரமாகிய வயிற்றுக்கும் வேலை கொடுக்கப்பட்டு, அதினால் ரத்தம் இரண்டு இடங்களிலும் பிரிந்து பாவியிருக்கும்படி நேரிட்டு, இரண்டு காரியங்களும் தடைப்பட்டு, ஒரு காரியமும் சரியாகச் செய்யப்படாமல் போகிறது. இங்கிலாந்து தேசத்துச் சான்ஸலராயிருந்த, "தர்லோபிரபு" போஜனகாலத்தில் ரமணீயமான சம்பாஷணையும், கொஞ்சம் பாடலும் வேண்டியது என்கிறார். தற்கால சாஸ்திர நிபுணர்கள் (Scientists), போஜன காலத்திற்கு முன்பு கொஞ்சம் நடந்துவிட்டுப் பிறகு போஜனஞ்செய்வது உடம்புக்கு நல்லதென்கிறார்கள். தனியாகச் சாப்பிடுவதைவிட, பலபேராகச் சாப்பிடுவது நலம் என்றும் சொல்லுகிறார்கள். நமக்குள்ளும் பெரியோர்களின் அனுஷ்டானங்களும், அப்படியே இருக்கின்றன. காலை போஜனத்துக்கு முந்தி நதி முதலிய தீர்த்தங்களுக்கு நடந்துபோய் ஸ்னானம்செய்வதும், இரவு போஜனத்துக்கு முன் கோவிலுக்கு நடந்துபோய் ஸ்வாமிதெரிசன தேவதாப்பிரார்த்தனை செய்வதும், வீட்டிலுள்ள எல்லாரும்சேர்ந்து உட்கார்ந்து புசிப்பதும், போஜனகாலத்தில் ஸ்லோகம் சொல்லுதல்போன்ற ரமணீயமான செய்கைகளும் ஈச்வரார்ப்பணமாகப் புசிப்பதும், மனச்சந்துஷ்டியோடு ஆர அமர உண்பதும், போஜன காலத்திற்குப்பின் கொஞ்சநேரம் தாம்பூலம்



மென்று, ஆயாஸம் தீர்ப்பதும், நம்மில் சாஸ்திரக்ஞர்களின் செய்கைகள். நாம் எல்லோரும் அம்மாதிரியே செய்ய முயலவேண்டும்.

போஜன சம்பந்தவிஷயமாய், நமக்குள், மிகவும் கெடுதியான ஒரு கெட்டவழக்கம் படிந்திருக்கிறது. அதாவது வயிறு நிறைய அளவு கடந்து உண்பது. பிராம்மண சாஸ்திரிகள், கல்யாண சிரார்த்தாதிகளில், பூராவாக மிதமிஞ்சி உண்ணுமப்பியாசத்தால் அந்திகாலங்களில் பலவித அஜீர்ண வியாதிகளுக்குள்ளாகி வருந்துகிறார்கள். ஒரு சாஸ்திரி பிராம்மணார்த்தத்தில் பூராவாகப் புசித்துவிட்டு, தன் வீட்டுக்குவந்து ஏப்பம் விடக்கூட முடியாமல், கஷ்டப்பட்டு புரண்டுகொண்டிருக்க, அதைக் கண்டு அவன் மனைவி, "ஓ, பிராம்மணா, பிராம்மணார்த்தம், பூராவாகப்போலிருக்கிறதே. ஐயோ, கஷ்டப்படுகிறீரே. கொஞ்சம் விரலையாவது வாயில் விட்டுக்கொண்டு வாயிலெடுக்கமுயலலாகாதா? கொஞ்சம் சாந்தமாகுமே" என்று சொல்ல, பிராம்மணன், "அடி, போடி பைத்தியக்காரி, ஒரு விரல் கொள்ள இடமிருந்தால், இரண்டு வடை முழித்துப் போட்டிருக்கமாட்டேனா! என்று பதில் சொன்னதாக ஒரு கதை உண்டு. கணவனை இழந்த நம் மாதர்கள், ஒருதரம்தான் போஜனம் செய்யலாம் என்கிற அபிப்பிராயம் அனுஷ்டானமாயிருப்பதினால், அநேகம் பாட்டிமார்கள் பகலில் நேரம்கழித்து, சாப்பிட உட்கார்ந்து வெகு கஷ்டத்தோடு முக்கால்படி அரிசி சாதம் சாப்பிட்டு அதினால் பல அஜீர்ண வியாதிகள் வருவித்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள். சாஸ்திரிகளும், பாட்டிமார்களும், ஓடியாடி வேலைசெய்யும் பிரகிருதியுள்ளவர்களாயிருந்தும், ஒரே தடவையில் மிதமிஞ்சிப் புசிப்பதினால் வியாதிக்குள்ளாகிறார்கள். ஆகையால் ஜீர்ண அளவுகடவாமல் நாம் புசிக்கவேண்டும். சரியான காலத்திலும் புசிக்கவேண்டும். காலையிலும் இரவிலும் புசிப்பதோடுகூட, இடையிலும் ஏதாவது கொஞ்சம் ஆகாரம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

பானத்துக்கு சுத்த ஜலமும் பாலுமே மிக வுத்தமமென்றும், பலவிதச் சாராயங்களும், தேயிலையும், காப்பியும், அவசியமில்லாதவைகள் என்றும், முக்கியமாய் 'குடி' கூடாது என்றும், இக்கொள்கைகள் தற்காலத்தில் ஊர்ஜிதமாகத்தொடங்கி, பரவ ஆரம்பித்திருக்கின்றன. ஆகையால் சுத்த ஜலத்திற்குச் சமானங் கிடையாது. அதுவே நம்முடைய முக்கிய பானமாயிருக்கவேண்டும்.

சரீரப்பயிற்சியின் இரண்டாவது உபகரணம் நாம் சுவாஸிக்குங்காற்று. உடம்பின் பலவித அவயவங்களும், தங்கள் வளர்ச்சிக்குத் தேவையான பலவித வஸ்துக்களை, ரக்தத்திலிருந்து எடுத்துக்கொள்ளுகின்றனவென்றும், தங்களுக்குப் பிரயோஜனமில்லாத வஸ்துக்களை ரக்தத்தில் தள்ளிவிடுகின்றனவென்றும், ஏற்கனவே சொன்னேனல்லவா. இப்படித் தள்ளுண்ட வஸ்துக்கள் தேகத்தைவிட்டு வெளியே, மூத்திராதி வேர்வை ரூபமாயும், கரியமலவாயு ரூபமாயும் தள்ளப்படுகின்றன. நாமுட்கொள்ளும் பிராணவாயு, சுவாஸக் குழாய்களின் மூலமாய் உள்ளிற்சென்று, அங்கு சுவாஸக் குழாய்களுக்கிடையே ஓடிக்கொண்டிருக்கும் ரத்தத்தில்கலந்து, ரத்தத்தோடு எல்லா அவயவங்களுக்கும் பரவிக்கொண்டிருக்கிறது. பல அவயவங்களுக்கும் தங்களுக்கு வேண்டாத வஸ்துக்களை இரத்தத்தில் தள்ளும்போது, அப்பேர்ப்பட்ட தள்ளுண்ட நாற்றமுள்ள, பிரயோஜனமற்ற வஸ்துக்களை வெளிப்படுத்தி சுத்தப்படுத்த நாம் உட்கொள்ளும் பிராணாதாரவாயு உபயோகமுள்ளதாயிருக்கிறது. அவயவங்களால் ரத்தத்தில் தள்ளப்படும் நிஷத்தங்கள், (solid) கட்டியான வஸ்துக்கள். அவைகளை நேரில், வெளியில் தள்ளமுடியாது. அவைகள், வெளியில்

தள்ளப்படவேண்டியதோ மஹா ஆவசியம். அதற்கு யுக்தி, ஈச்வரன் என்ன செய்திருக்கிறார் என்றால், அவைகளிருக்குமிடத்துக்கெல்லாம் பிராணவாயுவை, மூச்சு மூலமாய் ரத்தத்தில் கலந்து ஓடும்படியாகப்பண்ணி, அப்பிராணவாயுவும் மேலே குறிக்கப்பட்ட தர்காற்ற (solid) கட்டி வஸ்துக்களும் ஒன்று சேர்ந்து காற்று ரூபமான கரியமலவாயுவாகிவிடும்படி அமைத்திருக்கிறார். நமக்கு விஷமான அக்கரியமலவாயு ரத்தத்தில் கலந்து, ரத்தம் ஸ்வாஸக் குழாய்களுக்கு நடுவே ஓடும்போது, அக்கரியமலவாயுவும்கூட வருகிறது. ஸ்வாஸக் குழாய்களின் நடுவே, ரத்தம் ஓடும்படியாக அமைக்கப்பட்டிருக்கிற விநோதத்தினால், நம்முடைய பிராணவாயு, வெளியிலிருந்து ரத்தத்துக்குப் போய்க்கொண்டும், ரத்தத்தில் கலந்துவரும் கரியமலவாயு வெளியில்வந்துகொண்டுமிருக்கின்றன. பிராணவாயு ரத்தத்தில் கலக்க நாம் மூச்சு உள்ளேகொள்கிறோம். கரியமலவாயு, ரத்தத்தைவிட்டு வெளியே தள்ளப்பட நாம் மூச்சு வெளியே விடுகிறோம். நாம் வெளிவிடும கரியமலவாயு, பிராணஹானியை யுண்டாக்கும் கொடுமையுள்ளது. உதாரணமாக, பாழுங்கிணத்திலும், மூடிய களஞ்சியத்திலும், வெகு நாளாகத் திறக்கப்படாத உள்ளிலும், கரியமலவாயு நிறையவிருக்கும். அப்படிப்பட்ட இடங்களில், முதலில் நல்ல காற்றின் சம்பந்தத்தையுண்டாக்கிப் பிறகுதான் நாம் நடமாடவேண்டும். கரியமலவாயு இருக்குமிடத்தில், விளக்கை ஏற்றிவைத்தால், அது அணைந்துபோவதை நாம்பார்க்கலாம. ஆகையால், அவ்வளவு விஷத்தன்மையுள்ள கரியமலவாயுவை நாம் வெளிவிட்டவுடனே, அது காற்றில் கெடுகப்பரவிடவேண்டும். மறுபடி நாம் காற்றை உள்ளிழுக்கும்போது, கரியமலவாயு உள்ளே போகாமல் பிராணவாயுவேதான் உள்ளே போகவேண்டும். ஆகையால் நாம் படிக்கும் அறையும், படுக்கும் உள்ளும், நாம் வசிக்கும் வீடும் மிகவும் காற்றோட்டமுள்ளவைகளாய் இருக்கவேண்டும். நல்ல காற்று ஓட்டமுள்ள இடங்களிலேயே, நம்முடைய எவ்வித வேலைகளையும், நாம் செய்ய அப்பியஸித்துவிட்டால், மனிதரை வருத்தும் வியாதிகளில் பெரும்பான்மை நம்மை அணுகா. ஆகையால் உபாத்திமார்கள் நல்ல காற்றோட்டமான கட்டிடங்களில், தங்கள் பிள்ளைகள் படிக்கவும், விளையாடவும் செய்யவேண்டும்.

நாம் கவனிக்கவேண்டிய தேகப்பயிற்சியின் மூன்றாவது உபகரணம் தூக்கம். தேகப்பயிற்சியால் சோர்ந்துபோகும் சரீர உறுப்புகளும், படிப்பு யோசனைகளால் அசைதி பெறும் மூளையும், அவைகளுக்கு வேண்டிய அளவு அமைதியை பிரதிதினமும் பெறவேண்டும். ஆகையால் தூங்கும் வேளையில் நாம் விசாரமற்றுத் தூங்கவேண்டும். ஆயுள் விருத்திக்கும் இது மிகவும் அவசியமானது. கெட்ட எண்ணம், மனவிசாரம், அதிக துக்கம், அதிக சந்தோஷம் இவைகளால் பாதிக்கப்படும் தன்மை பொருந்திய மனிதனுக்கு, தூங்குகையில்கூட மூளை வேலை செய்துகொண்டிருக்கும். ஆகையால், நாம் தூங்கப்போகும்போது ஒரு எண்ணமும் நம்மை பாதிக்காமல் கடவுளையே தியானம்செய்துகொண்டு தூங்கவாரம்பிக்கவேண்டும். அதினால், மூளை சம்பந்தமான கனவுமுதலிய வேலையற்று, நாம் தூங்குவோம். தினம் 5-அல்லது 6-மணிக்குக்குறையாமலும், 7-அல்லது 8-மணிக்குமேற் படாமலும் தூங்கவேண்டும். பகலில் தூங்கவே கூடாது. ஔவையார், இரவில் சாமத்துக்கும் பிறகு படுத்து இரண்டு சாமகாலம் தூங்கவேண்டு மென்கிறார். மேற்கத்தியார்களில், இரவின் முன்பாகத்தில் ரொம்பநேரம் விழித்து, படிப்பு முதலிய மூளைவேலையைச் செய்துவிட்டு, காலையில் ரொம்பநேரம் வரையில் தூங்கும் பழக்கம் நல்லது என்கிற அபிப்பிராய மிருக்கிறதாகப் புலப்படுகிறது. அது பிசகான அபிப்பிராயம். சீக்கிரம்படுத்து, உதயத்துக்குமுன் சீக்கிரம் எழுந்திருக்கும் ஒருவன் சுகியாயும், தனிகனாகவும், புத்திசாலியாகவுமாவான் என்பதுதான் ஒப்புக்கொள்ளத்தக்கது. நம்முடைய புராணாதிகளுமப்படியே முறையிடுகின்றன. ரகுவம்சத்தில், காளிதாஸர், "பிராதக்காலத்தில் தினம் எழுந்திருப்பவனுடைய புத்தி எவ்வளவு தெளிவாயிருக்குமோ அப்படிப்போல்" என்று உபமானம் கூறியிருக்கிறார். வேத பாராயணர்கள் அதிகாலையில்தான், ஸாமவேதகானம் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகையால் இரவில் முன்பாகத் தூக்கமும், பிராதக்கால விழிப்புமே சிரேஷ்டம்.

(இன்னும் வரும்.)



## REDEEMED BY LOVE: THE STORY OF PUNDAREEKA.

## புண்டரீகபக்தன் சரித்திரம்.

### அன்பு வழிப்பட்டாத்மரக்ஷை யடைந்தது.

பம்பாய் இராஜதானியில் மகாராஷ்டிர தேசத்தில் சந்திரபாகா நதிக்கும் திண்டிர வனத்திற்கும் இடையே பாண்டரி யென்கிற ஒரு நாடுண்டு. அங்கே ஒரு பிராமணன் இருந்தான். இவன் வைதிக விஷயங்களை வெறுத்து மாதாபிதாக்களை இலக்ஷியஞ்செய்யாமல் மனைவிசொல் தட்டாது காமவிகாரனாய்க் காலத்தைக் கழித்துவந்தான். இவன் மனைவி இவனைச் சீர்திருத்தப் பலவாறு முயன்றும் அவள் முயற்சியெல்லாம் பலிக்காதுபோகவும், அதனால் வருத்தமுறாது, ஸ்வாமியின்மேல் பாரத்தைப்போட்டு பதியேதனக்குத் தெய்வமென்று தன் பதிவிரதா லக்ஷணத்துக்குக் குறைவுவாராமல் நடந்துகொண்டுவந்தாள். தன் கணவன் என்ன பிழை செய்தாலும், தன்னையும் அலக்ஷியம்செய்து பரத்தையரை நாடிச்சென்றாலும் தன் முகங்கோணாமல் அவனுக்கு வேண்டிய சிஷ்ருஷைகள் செய்வதில் சிறிதும் பிசகாமல் அதிஜாக்கிரதையாக நடந்துகொண்டுவந்தாள். உள்ளத்தில் அவளுக்கு எவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தாலும் அவையெல்லாம் தன்னுடைய ப்ராரப்தவசத்தால் நேர்ந்தன வென்று தீர்மானித்து தன் புருஷன்மேல் சிறிதும் குற்றங்கூறாமல் அவனுக்கிதமாக நடந்துகொள்வதில் முன்னிலும் அதிக ஜாக்கிரதையுள்ளவளா யிருந்துவந்தாள். இப்படிச் சிலகாலம் செல்ல இவளுடைய பொறுமைக்கும் சாந்தத்துக்கும் உவந்து இவளுடைய கணவன் பரத்தையர்க்கும் பதிவிரதைக்குமுள்ள பேதத்தையுணர்ந்து தன் பத்னியிடத்தில் உள்ளன்புமிகுந்து அவள்சொல் தவறாமல் நடந்துவந்தான், தெய்வபக்தியாகத்தான் நடந்துவந்ததால் தன் மனோரதம் நிறைவேறியதை யுணர்ந்த அப்பதிவிரதாசிரோமணி, தன் கணவனுடைய குணக்கேட்டிற்கெல்லாம் காரணம் அவரிடத்தில் தெய்வ பக்தியில்லாமையே யென்று தனக்குள் உணர்ந்து எவ்விதத்தாலும் அவருக்கு தெய்வபக்தியுண்டாகச்செய்ய சமயம் பார்த்திருந்தாள். இப்படியிருக்கும் நாளில் அவ்வூருக்கு ஒரு புராணிகர்வந்து காசி காண்டத்தை வாசித்து வந்தார். அதைக்கேட்க அவ்வூரிலுள்ள எல்லாரும் மிக்க ஆவலோடு போய்வருவதைக்கண்டு, இப்புண்யவதி தன் புருஷனை அப்புராணிகர் வாசிக்குமிடத்துக்கு அழைத்துக்கொண்டுபோனால் புராண சிரவணத்தால் பக்தி யுண்டாகாதாவென்று நினைத்து, ஒருநாள் சாயந்திரம் தன் கணவன் அகங்குளிர்ந்திருக்கும் வேளைபார்த்து புராணங்கேட்கத் தானிச்சை கொண்டிருப்பதால் அவ்விடத்துக்குத் தன்னை யழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டாள்.

அதற்கு புண்டரீகன் என்னும் பேருள்ள அவள் கணவன் "அடிபோடி பைத்தியக்காரி, வீட்டில் பலவேலைகளிருக்க அதை விடுத்துப் போய்ப் புராணத்தைக் கேட்டுவருவதால் அன்னமகப்படுமா, சொர்னமகப்படுமா! கர்மிகள் புண்ணியக்கதை கேட்பதால் பிரயோசனம் ஏதுண்டு? ஒன்றைக் கேட்டால், கேட்டதைக்கிரகித்து அவ்வழியில் நிற்கவேண்டும். சிரவணஞ்செய்து அம்மார்க்கத்தில் மனதை நிலைநிறுத்தாதவனுக்கு நரகமே பிராப்தியாகும். புராணத்தையோதும் ஆதிவருணனே, ஓதினபடி சாதனம்செய்யக்கூடாமல் தடுமாற்றத்துடனிருக்க நம்மாற்கூடுமா? ஓதினபடி சாதனஞ்செய்யாப் பேதையரிலும் அதிபேதை யாருமில்லையென்னும் பழமொழி நீ கேட்டறியாயோ! கேட்டுக்கெடுவதிலும் கேளாமல் சும்மாவிருப்பது மிகநலம். அரசன் பறை

சாற்றினபடி நடக்காப் பிரஜைகளுக்கு ஆக்கினை நடப்பதுபோல், பகவானுடைய மறையென்னும் புராணநிதிகளைக்கேட்டு அந்தப்படி நடக்கத்தவறினால் கடவுளுடைய ஆக்கினைக்குட்படவேண்டும். ஆதலால் நான்வரமாட்டேன்" என்றுசொல்லி மறுத்தான். இதைக்கேட்ட அவன் பத்னி சிறிதும் மனஞ்சலிக்காமல், அவள் முகவிலாசத்தில் அகத்துண்மை விளங்க, மன உருக்கத்தோடு கடவுளைத் தியானித்துத் தன் கணவனை நோக்கி அதி விநயத்தோடு பின்வருமாறு பகரலுற்றாள்:—

"ஸ்வாமி, பரிசவேதியினால் இரும்பு சுவர்ணமாக மாறுமேயன்றி,மண்ணும் கல்லும் பொன்னுமா? அதுபோல் புராணங்கேட்கும் பலரில் ஒருவனே அதன் அர்த்தத்தைக்கிரகித்து நல்வழியில் நடந்து தீயமார்க்கத்தைக் கடந்து மோக்ஷார்த்தத்தையடைவான். மற்றவர்களிற் சிலர் நாடோறும் கேட்கக்கேட்கத் துர்க்குணங்கள் நீங்கி சத்குணத்திற் பிரவேசிப்பார்கள். சிலர் பாபகர்மங்கள் செய்ய கிஞ்சித் அச்சமுற்றுச்செய்து நாட்செல்லச்செல்ல மேற்குணத்திற் பிரவேசிப்பார்கள். சிலர் பாபங்களை முன்போற்செய்தாலும் சிரவணம் செவியும் வேளைமாத்திரம் பிரயோசனப்பட்டு மறுஜன்மத்தில் நற்குணமடைவார்கள். இப்படியிருக்க நீர் 'கேட்டபடி நடக்கச் சக்தியுள்ளவனே புராணசிரவணஞ் செய்யவேண்டு'மென்றுரைப்பது விசித்திரமே. அசிரத்தையுடன் புராணங்கேட்டாலும் புண்ணிய லோகம் கிடைக்குமென்று புராணங்கள் முறையிடுகின்றனவே. எனக்கு விவாகமாகுமுன் நாள்தோறும் புராணங்கேட்பதிலே நான்கழித்தேன். விவாகமானபின் பதியே தெய்வமாதலால் உமக்குச்செய்யும் பணிவிடையே சகல நோன்புகளுமெனப் புராணங் கேட்பதையும் விடுத்தேன். எனக்கு உம்மிஷ்டப்படியே நடக்கும் அடக்க ஒழுக்கமே மோக்ஷமளிக்கும் மார்க்கமாகும். உமக்கோ சாஸ்திரங்கள் கேட்கவும் அதின்வழியாய் நடக்கவும் சிரத்தைபூரணமாயிருக்கவேண்டும். அன்றி, நீர் புராணங் கேட்கவந்தாலொழிய நான் போகமாட்டேன். காரணம்: பதியைப் பிரிந்துபோய் பாவை புராணங்கேட்பது பகவானைப்புகழ்ந்து பரமசிவனையிகழ்ந்ததொக்கும்" என்று கல்லுங்கரையப் பேசி, சித்திரப்பாவைபோல் அவன் முன்நின்றாள். அவள் காதலன் புராணம் கேட்பதில் பிரியமில்லையாயினும் இப்படி அன்பு என்னும் கயிற்றால் அவள்கட்டியிழுக்க அதற்குத் தடைசெய்ய ஆற்றலற்றவனாகவிருந்தான். தன்னாலாகாத காரியம் விதிவசம் என்று தன் காதலியின் அன்பு வலைப்பட்ட அவன், அவள் கட்டியிழுப்பதுபோல் இழுக்க வேறுவிதியின்றி அவளுடன் புராணம் வாசிக்குமிடத்துக்குச் சென்றான்.

புராணிகர் சகரரைக்குறித்து பகீரதன் பரமசிவனை நோக்கித் தவஞ்செய்த கட்டத்தை கேட்போர் மனமுருக வாசித்துப் பிரசங்கித்து வந்தார். பகீரதிலை அவன் பூமியிற்கொண்டு வந்ததும் சகரர்மேல் கங்கை பிரவாகிக்க அந்தப்பரிசத்தால் அவர்கள் புண்ணியலோகமடைந்ததும், கோஹத்தி, சிசுஹத்தி, பிரமஹத்தி, ஸ்திரீஹத்தி, குருஹத்தி முதலானவை செய்யும் கொடும்பாவிகளானாலும் மந்தாகினியில் ஸ்நானம்செய்தால் பவனர்களாய்ப் போவார்களென்றும் அப்படி அக்கங்கை பகீரதனுக்கு வரங்கொடுத்திருக்கிறாளென்றும் இன்னும் காசியின் விசேஷத்தைப்பற்றி கல்லும் கரைந்துருகும்படி பிரசங்கித்துப் பேசினார். காசியில் மரணமடைந்தவர் வலது செவியில் ஸ்ரீ விசுவநாதர் தாரகமந்திரத்தை உபதேசஞ் செய்கிறாரென்றும் அதனால் மோக்ஷமடைகிறார்களென்றும், எப்பொழுதும் அந்த நாகதியின் தீரத்தில் முனீஸ்வரர்கள் வாசஞ்செய்கிறார்களென்றும், அவர்கள் பாதங்



களைப்பரிசித்த புண்ணியவான்கள் அநேகரிருக்கிறார்களென்றும், பிரமாதி தேவர்களெல்லாம் மாறுரூபங்கொண்டு தவஞ்செய்கிறார்களென்றும் விரதத்திற் சிறந்தோர்க்கு இப்போதும் தரிசனந் தருகிறார்களென்றும் புராணிகர் சொல்லிய வார்த்தைகள் புண்டரீகனையறியாது அவன் மனத்தில் பசுமரத்தாணிபோல் நன்றாகப் பதிந்துவிட்டன. உடனே அவனுக்கு காசிக்குப்போய் கங்காஸ்நானம் செய்து அங்குள்ள மஹான்களைத் தரிசித்து அவர்கள் அருள் சம்பாதித்து மோக்ஷ சாம்ராஜ்யத்தைத் தேடவேண்டுமென்கிற அவாவுண்டாய்விட்டது. உடனே அவன் காசிக்குப் புறப்பட்டுப்போக புறப்பட்டு விட்டான். காலதாமதம் செய்யச் சிறிதும் அவன் பொறுக்கவில்லை. அவன் தான் திடீரென்று காசி யாத்திரை போவேனென்று புறப்பட அவனுடைய பத்னி தன்னையும்கூட அழைத்துக்கொண்டு போகும்படி மிக வருந்திப் பிரார்த்தித்துக்கொண்டாள். அவள் வார்த்தையைக் கடக்கமாட்டாமல், அவளையும் கூடவே யழைத்துக்கொண்டு அவ்வளவு தூரமான தேசயாத்திரைக்கு வேண்டிய ஆயத்தங்கள் ஒன்றும் செய்யாமலே புறப்படத் துரிதப்பட்டான். பதிக்குவந்தது சதிக்கும் ஆகிறதென்று அவன் மனைவி தன்னை யழைத்துக்கொண்டுபோக உடன்பட்டதே பெரிய காரியமென்று சந்தோஷமாய் அவனோடு பிரயாண முஸ்தீப்பின்றியே யாத்திரைபோகச் சித்தமாயிருந்தாள். இப்படி தம்பதிகளிருவரும் சடுதி யாத்திரை புறப்பட, அவனைப்பெற்ற தாய் தகப்பன்மார் பிள்ளை திடீரென்று அவசரப்பட்டு இப்படி தூரயாத்திரை போகிறானே, வழியில் நேரிடும் கஷ்டங்களைத் தாங்கமாட்டாமல் வருந்துவானேயென்றாலோசித்து, தாங்கள் அவனுக்கு ஆதரவாக அவன் கூடவே போகத் தீர்மானித்து, வேண்டிய சாமக்கிரியைகளைச் சேகரஞ்செய்து தூக்கிக்கொண்டு அவன் பின்னே சென்றார்கள். பிள்ளையாண்டான் அவர்கள் பின்தொடர்ந்து வருவதை லக்ஷியம் செய்யாமற்போனாலும் பெற்றோர் தங்கள் பிள்ளை வருத்தப்படுவானென்றெண்ணி மனந்தாளாமல், அவனுக்கு உற்றவிடத் துதவியாய் வேண்டிய சகாயஞ்செய்வதே தங்களுக்குப் பெரும்பாக்கியமென்று மிகக் கஷ்டப்பட்டு வழிநடந்து மெய்வருத்தம்பாராது பசிநோக்காது அவனோடு வழிநடந்து சென்றார்கள். பிள்ளை மனம் கல்லு, பெற்றமனம்பித்து என்பதற்குப் பின்னுமோர் உதாரணமாய் இவர்கள் கடுவழி நடந்து காசி யாத்திரை சென்றார்கள். வழியில் பதிவிரதா சிரேஷ்டையான அவன் மனைவி கஷ்டங்களையெல்லாம் பொறுத்துக்கொண்டு அவளாலான மட்டும் வழிநடந்தும், மேல் நடக்கத்தாளாமல் அயர்ந்து தளர்ந்து மூர்ச்சித்துவிழுந்துபோக, புண்டரீகன் காசியாத்திரையை நிறுத்தவும் பொறுக்காது, மனைவியை அந்தஸ்திதியில்விட்டுப்போகவும் மனந்தாளாது சிறிதுநேரந்தத்தளித்து, பிறகு மனதைத் திடப்படுத்திக்கொண்டு, தான் உறபாய்க்கொண்ட தீர்மானத்தால் வலுவுற்றவனாகி, வெயிலில் வாடியசோர்ந்துபோயிருந்த தன் மனைவியைத்தோளில் தூக்கிக்கொண்டுபோகலுற்றான். அவ்வுத்தமிக்கு அது ஏலாக்காரியமாயிருந்தும், தன் கணவன் யாத்திரையைத் தடுக்கத் தனக்குச் சக்தியில்லாமையாலும், அவனைவிட்டுப் பிரிந்திருப்பதும் அசாத்தியமாயிருந்தபடி போனாள். அவனுடைய மனைவி பக்கத்திலிருந்து சைத்தியோபசாரஞ்செய்து அவன் களைதீர்த்து 'ஸ்வாமி, உங்களுக்கு நேர்ந்ததென்ன'வென்று அன்பாதரவாய்க் கேட்டபோது அவன் விழித்துக்கொண்டு, "இது என்ன? நான் கண்டது கனவோ, நனவோ? பஞ்சகன்னிகைகளும் என் முன்னிருந்தார்களே, அவர்கள் எங்கே போனார்கள்? நான் மகா பாபியானேனே" யென்று பிதற்றலுற்றான். பதிவிரதா சிரோமணியாகிய அவன் மனைவி அவனுக்குக் களைதீர உணவளித்துத் தேற்றி, அவன் மனதிலிருந்த எண்ணங்களை யுணர்ந்துகொண்டு, இவனுக்கு கர்மபந்தம் கழியுங்காலம் நெருங்கியது; நல்லெண்ணம் உதயமாகும் காலம் கிட்டியது; என்று உள்ளத்தில் ஓர்ந்து "ஸ்வாமி, பெற்றோர் பூஜை மிகவும் சிலாக்கியமானதே; அந்தப் பூஜாபலமில்லாததினால் குறைநேர்ந்ததென்றால், அவர்கள் இங்கேதானேயிருக்கிறார்களே; இந்த க்ஷணமே மாதாபிதா பூஜாவிரதமெடுக்கலாமே" யென்று இனியமொழிகூறி அவன் உள்ளத்திலிருந்த நல்லெண்ணத்தைத் தூண்டிவிட்டாள்

உடனே டவனு மூர்ச்சாகக்கொண்டு அந்த க்ஷணம்முதல் மாதாபிதாக்களைப் பூஜைசெய்வதே விரதமாகக் கொண்டுவந்தான். முன் மனைவியைத் தோளில் தூக்கி வர மாதாபிதாக்கள் வழிநடந்து கஷ்டப்பட்டதை நினைத்து மனம் வருந்தி கரைந்துருகி, அக்குறைதீர, இப்பொழுது அவர்களைக் காவடிகட்டித் தோளில் தூக்கிக்கொண்டுபோய் ஊர் சேர்த்து, அவர்கள் மன மூவக்கப் பூஜைசெய்து அவர்கள் அனுக்ரகம் பெற்றபிறகே அவர்களோடும் காசிக்குவந்து ஸ்நானம் செய்வேனென்று, காசிக்குவந்தவன், கங்காஸ்நானம்கூடச் செய்யாமல் திரும்பிவிட்டான். இவன் அந்த க்ஷணம்முதல் மாதாபிதாக்களைப் பூஜிப்பதன்றிவேறு விரதமொன்று மின்றி தானுயிரெடுத்ததற்கு அவர்களைப் பூஜிப்பதே தனக்கு ஜன்ம சாபல்யமென்று கருதி நடந்துவந்தான். இப்படி அவன் தன் மனதை யொருவழிப்படுத்தி நடந்துவந்ததால் உள்ளத்தில் அன்பு பெருகி, அழுக்காறு நீங்கி அருள்பெற்று சாக்ஷாத்காரமாய்க் கடவுளைத் தரிசிக்கும் பெரும்பாக்கியம் பெற்றான். இவன் பெற்றோரைப் பூஜிக்கும் விரதம் வகித்துவந்ததுபோல் இவனுடைய மனையாளும் இவனுக்குகந்த வாழ்க்கைத் துணையாயிருந்து இப்படிப்பட்ட மஹாத்மாவைப் பதியாகக்கொண்டு பதிபூஜை செய்து பதிவிரதா பாக்கியம் பெற்றதே பேறென்று ஒளியும் அனலும்போல், தசையும் நகமும்போல் சதிபதிதர்மம் தட்டாது அவரோடொருமனப்பட்டவளாய் வாழ்ந்துவந்தாள். இப்படி இவர் தன் பத்தினியினால் புராணங்கேட்கச்சென்று காசிக்குப்போய் அங்கு முற்றும் மாறிச் சீர்திருந்தினவராய்த் திரும்பிவந்தது முதல் இவருடைய பக்தி மேன்மேல் வளர்ந்துவரக் கடைசியில் இவர் பாண்டரபுரத்தில் பாண்டுரங்கரை ஸ்தாபிக்கும்படியான பாக்கியம்பெற்றார். அதுமுதல் இவருக்குப புண்டரீக பக்தன் என்கிற பேர் வழங்கத்தொடங்கி, இன்றைக்கும் அப்பேர் பிரசித்தமாயிருந்துவருகிறது. ஸ்ரீமகாபக்த விஜயத்தில் இவர் ஸ்ரீமந் நாராயணனைத் தன் பக்தி வலையிலிட்டு பாண்டரபுரத்தில் எப்பொழுதும் எழுந்தருளியிருக்கச்செய்த பக்த சிரோமணியென்று இவர் வரலாறு மிகச் சவிஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

## CHARACTER SKETCH: PALISSY THE POTTER.

## குணவலி விளக்கம்: பெயர்பெற்ற குலாலர் பலிஸ்ஸி என்பவர் சரித்திரம்.

(தைமீ சஞ்சிகையின் 312-ம் பக்கத் தொடர்ச்சி.)

### பளிங்குத் தளுக்கிடும் சூக்ஷமத்தைக் கண்டு பிடிக்கச்செய்த யத்தனங்கள்.

ஆரம்பத்தில் பூச்சிடும் திரவியம் ஏதென்று அவருக்கு உறுதி தெரியாது உத்தேசம் பிறந்து ஒன்றின்பின் ஒன்றாய்ப் பல திரவியங்களைப் பலவாறு பரிசோதனை செய்துபார்த்தார். பளிங்குத்தளுக்கு உண்டாக்கும்படி அவர் உத்தேசித்த திரவியம் அனைத்தையும் பொடிசெய்து கலந்து குழைத்துச் சாமானிய மட்கலங்களைக் கிரயம் கொடுத்து வாங்கிச் சிறுசிறு துண்டாய் உடைத்து அந்தச் சேர்வையைப் பூசிச் சூளைவைத்துச் சுட்டுப்பார்த்தார். இப்படி ஒன்றன்பின் ஒன்றாக வெகுவிதச் சேர்வை பூசிப் பலவாறுசெய்த பரிசோதனை ஒன்றும் பயன்படவில்லை: கிரயம் கொடுத்துப் பாண்டம் வாங்கி வீணுக்கு உடைத்துப் போக்கடித்ததும், விறகும், மருந்தும், காலமும், உழைப்பும் வீண்செலவழிந்ததுமொழிய மற்றொரு பயனும் இல்லை. இவ்வண்ணம் பிள்ளைகளுடைய வாய்ச்சோற்றையும் இடுப்புத் துணியையும் கொள்ளை கொடுப்பதன்றிப் பயன் சிறிதும் வெளிப்படையாகத் தோன்றாத பரிசோதனைகளின் அருமைபெருமை பெண்பாலர்க்குக் கொஞ்சத்தில் விண்டு மனம் ஒப்பாது. பலிஸ்ஸியுடைய மனைவி தன் கணவருக்கு முறைமைப்படி எவ்விதத்திலும் ஏற்க நடந்து செய்கடன் தவறாது முடித்தும் அவர் பணத்திற்குப் பாண்டம் வாங்கி வாங்கி. வியர்த்தமாய் உடைத்து எறிவதைக்கண்டு கண்கலித்து, இனிக் கிரயம் கொடுத்துப் பாண்டம் வாங்கவேண்டா



மென்று தடுக்க அவள் தடையை அவர் கேட்கவில்லை. • பளிங்குத்தளுக்கிடும் சூக்ஷமத்தைக் கண்டறியாது விடுவதில்லையென்று கட்டுறுதியாய்ச் சங்கற்பித்திருந்த அவரை ஒரு பெண் தன் சொல்வழிப்படுத்தமாட்டுவாளா! அவர் மன ஓர்ப்பைத் தளர்விக்கக் கூடாதென்று கண்டு அவள் தடை சொல்வதை அம்மட்டில் நிறுத்திவிட்டாள்.

### பல்லாண்டு பயனின்றிச் செய்த பரீக்ஷைகள்.

அன்று தொட்டுக் காலம் ஏறஏற அனேக மாசங்கள் வருஷங்கள்வரை அவர் அதுவிஷயமாகப் பரிசோதனை செய்துகொண்டேவந்தார். ஆதியில் அந்தரங்கத்தில் வைத்தசூளை வீணாய்ப்போக, அதன்மேல் அவர் வீட்டுக்குப் புறத்தில் நால்வரும் காணப் பகிரங்கமாய் மற்றொரு சூளைவைத்தார். அதில் அவர் எரித்துத் தீர்த்த விறகு, பாழிற் போக்கடித்த *திரவம், உடைத்துக்கெடுத்த பாண்டம், வீணிற் கழித்தகாலம் ஆகிய இவைகளே மிகுதி. இவ்வாறு கையில் மடியில் உள்ள பொருள்கள் எல்லாம் செலவழிந்துபோக, அவரையும் அவர் குடும்பத்தையும் தரித்திரம் முறைத்துப் பார்த்தது. இதைச் சுட்டி அவர், "இவ்வாறு அபுத்திபூர்வமாய்ச் சில வருஷ காலத்தைப்போக்கி, எடுத்த கருமம் எவ்விதத்திலும் முடியாததை எண்ணி எண்ணித் துக்கசாகரத்தில் மூழ்கி நெட்டுயிர்த்து எப்பொழுதும் அழுத கண்ணும் சிந்தியமூக்குமாயிருந்தேன்" என மொழிந்தார். பரீக்ஷை செய்து ஓழிந்திருக்கையில், அவர் அப்போதப்போது முன்பயின்ற இரண்டொரு தொழிலை அடுத்து ஒருவாறு ஜீவனம் பண்ணுவார். அவர் பயின்றதொழில் கண்ணாடிக்கு வர்ணம் கொடுத்தல், சித்திரம் எழுதல், நிலம் அளத்தல். இத்தொழில் வகைசெய்து தேடிய பணம் சொற்பம். செலவிற்குப் பாதிக்குப் பாதியும் காணாது. இப்படித் தட்டுக்கெட்டுத் தடுமாறும் காலத்தில் விறகு விலையுயர்ந்து அரும்பொருளாயிற்று. அப்பால் பரீக்ஷைக்கு வேண்டு மளவிற்கு விறகு வாங்கிச் சூளை வைக்க அவரால் மாளவில்லை. ஆனால் அவர் முன்னினும் அதிகம் ஓட்டாங்குச்சு வாங்கி முந்நூறு நானூறு துண்டாகத் துண்டித்துக் கூட்டுமருந்து பூசி நாலரை மைல் தூரம் எடுத்துக்கொண்டுபோய்ச் சாதாரணமாய்த் தட்டோடு சுடும் சூளையில் வைத்துச் சுடத் தலைப்பட்டார். நன்றாய் வெந்தபின் எடுப்பித்துப் பார்த்தார். செய்த பரீக்ஷை ஒன்றும் வாய்க்கவில்லை. இது கண்டு அவர் மனம் கலங்கிற்று. ஏமாறியும், அவர் இளைத்துப் பின்னிடவில்லை. அவ்விடத்திலேயே அவர் இதுவரையிற் போனதெல்லாம் போகட்டும், இனிப் புதிதாகப் பரீக்ஷைசெய்யத் தொடங்குவோம் எனத் தீர்மானித்தார்.

சிறிதுகாலம் பரீக்ஷையை நிறுத்திவிட்டு நிலம் அளக்கச் சற்றுத்தூரம் போகும்படி நேரிட்டது. நிலவரி வாங்கும்பொருட்டு, சர்க்கார் திட்டப்படி, ஸேந்தீஸ் எனும் நகரத்திற்கு அயலில் உள்ள உப்பளம் அளந்து பரப்பு அறியவேண்டியிருந்தது; அந்த வேலை பலிஸ்ஸிக்குக் கிடைக்க, உப்பளம் அளந்து பரப்புக் குறித்துப் படம் எழுதி அனுப்பி அவருக்குத் திட்டம் பிறந்தது. அவ்வேலை தொடங்கி முடியச் சிறிதுகாலம் சென்று அவர் தகுதியான சம்பளம் பெற்றார். வேலை முடித்துக் கொடுத்தபின், அங்கிங்குத் தாமதிக்காமல் முன் உள்ளதற்குப் பின்னும் ஒரு பங்கு அதிக சிரத்தையுடன் அவர் மட்பாண்டத்திற்குப் பளிங்குதளுக்கிடும் உபாயம் பரிசோதித்தறியத் தொடங்கினார். முப்பத்தாறு புது மட்கலம் வாங்கி உடைத்து, உடைந்த கலவோடு அத்தனையிலும் எத்தனையோ கூட்டு

* திரவம்=Drugs.

மருந்து பூசி, அயலில் உள்ள கண்ணாடிச் சூளையில் சுடவைத்துப் பார்த்தார். கண்ட சித்தியால் அவர் நாடிய கருமம் வாய்க்குமெனச் சிறிது நம்பிக்கைக்கு இடம் உண்டாயிற்று. கண்ணாடிச் சூளையின் அதிக அனலில் கூட்டுத் திரவியங்கள் சில உருகியிருந்தன. பலிஸ்ஸி அக்கலவோடுகளில் எதிலாவது வெண்தளுக்கு விழுந்திருக்கிறதாவென்று மிகு விழிப்புடன் பார்த்தார் : காணவில்லை பாபம்.

பின்னும் இரண்டு வருஷகாலம் பரிசோதனை செய்துகொண்டுவந்தும், அவர் மனதிற்கு இனிய சித்தி சிறிதும் இல்லை. உப்பளம் அளந்து வரப்பெற்ற சம்பளம் முக்காலே மூன்று வீசம் செலவழிந்துபோகவும், அவர் மீண்டும் தரித்திராகி வருந்தினார். வருந்தியும், கையில் மடியில் துட்டுக்குக் கட்டோடே வழி இல்லாதுபோகுமுன் பின்னும் ஒரு முறை பெருமுயற்சி செய்துபார்க்க நிர்ணயித்தார். இம்முறை அவர் கிரயம் கொடுத்து வாங்கி உடைத்த மட்கலம் அனேகம். முந்நூற்றுக்கு அதிகமான கலவோடுகளில் கூட்டு மருந்து பூசிக் கண்ணாடிச் சூளைக்கு அனுப்பினார்; அனுப்பிவிட்டு, உண்டாகும் சித்தி அசித்தியைக் கண்ணாரக் காணும்படி தாமும் சூளைக்குப்போய் நாலுமணிநேரம் பதைப்பற்றுப் பார்த்துக்கொண்டிருந்து அப்பால் சூளையைப் பிரித்துப் பார்த்தார். முந்நூறு கலவோடுகளில் ஒன்றில் பூசிய சேர்வைமாத்திரம் உருகியிருந்தது. அதை எடுத்து ஆறவைத்தார். வெந்து உருகிய சேர்வை சூடு ஆறிக் கல்லாய் இறுக இறுக வெண்ணிறம் பெயர்ந்து தளுக்கு உண்டாயிற்று—அந்த ஓட்டில் பளிங்கொளிபோலும் மினுக்குப் படிந்திருந்தது! அதன் சிறப்பிற்கு "ஒப்பு-உயர்வு இல்லை?" என்று பலிஸ்ஸி எழுதியிருக்கிறார். இத்தனை காலம் காத்துக்காத்து அலுத்துப் போயிருந்த அவர் கண்ணுக்கு அது அதந் சிறப்புள்ளதாகத் தானே இருக்கும். அவர் ஆனந்தாவேசத்தால் தம்மை மறந்து அவ்வதிசயத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு விரைந்தோடிப்போய்த் தமது பாரியாளுக்குக் காட்டினார். அவ்வேளையில் தமது ஸ்வரூபம் மாறியதாகத் தோன்றியதென்று அவரே சொன்னார். ஆனாலும் அவர் நாட்டம்வைத்துழைத்த உழைப்பு முற்றும் சபலமாக முடியவில்லையே—காரியம் கைகூட இன்னும் எத்தனை தூரமோ! ஆனாலும் பளிங்கு மினுக்கைக் கண்ணால் கண்டாரே. அவருடைய பிரயத்தனம் ஒருவாறு பலிக்கவும், இதம் கண்ட அவர் மனம் தேறிப் பின்னும் எத்தனையோ பரீக்ஷை செய்தார். செய்த பரீக்ஷை அத்தனையும் சிதறிப்போயின.

### அவர் பின்னும் பட்ட கஷ்ட நஷ்டங்கள்.

தாம் ஊகித்துச் செய்யத் தொடங்கிய புதுமை இனி விரைவிற் கைகூடுமென்று அவர் மனம் தெளிந்து, அதை அந்தரங்கத்தில் நிறைவேற்றும்படி தமது வீட்டுக்கு அயலில் கண்ணாடிச்சூளை ஒன்று கட்ட நிர்ணயித்து எவர் துணையுமின்றித் தாமாக வயலிற் செங்கல் அறுத்து உலர்த்தித் தோள் வலிக்கச் சுமந்து கொண்டுபோய்ச் சூளைக் கட்டடவேலை தொடங்கினார். கொல்லத்துக்காரன் சிற்றாள் முதலிய வெவ்வேறு தொழில் செய்வோர்க்குரிய வேலை எல்லாம் அவர் ஒருவர் கையால் நடந்தேறின. இவ்வேலை முடிந்து உபயோகத்திற்கு வரப் பின்னும் ஏழு எட்டு மாசம் சென்றது. இதன் இடையில் தளுக்கிட எத்தனமாக பலிஸ்ஸி களிமண்ணில் சில பாண்டம் வனைந்து வைத்திருந்தார். முதலில் சூளையில் அடுக்கிவைத்து வெந்தபின் பாண்டங்களைப் பிரித்துத் தளுக்குச்சேர்வை பூசி முக்கியமான * குகைப்பரீக்ஷை செய்யும்படி மீளவும் சூளையில் வைத்தார். அவர் கைப்பணம் வரவரச் செலவழிந்து போயிற்று. ஆனாலும் அவர் அஜாக்கிரதையாயிருக்கவில்லை. அறுதியிற் செய்யும் மஹாபரீக்ஷைக்கு விறகு திரளாய்த் தேடி சேகரித்துவைத்து போதுமென்று அவர் எண்ணமிட்டு எல்லாம் சித்தமானபின் சூளைக்கு நெருப்பு வைத்தார். வரவர நெருப்புப்பற்றி வளர்ந்தது. பகல் முழுதும் அவர் சூளைப்பக்கத்தில் உட்கார்ந்திருந்து எரிய எரிய விறகிட்டுக்கொண்டுவந்தார். இரா முப்பது நாழிகையும் விழித்திருந்து அதே பிரகாரம் செய்தார். தளுக்குச் சேர்வையோ உருகவில்லை : பொழுது விடிந்தது. வீட்டில் உள்ள மிதமான காலைப்போஜனத்திற் சிறிதை அவர் மனைவி அவருக்குக் கொண்டுபோனாள். சூளையின் அண்டை உட்கார்ந்து எரிய எரிய விறகிட்டுக்கொண்டிருந்த அவர் சாப்பாட்டுக்கு எழுந்துபோக வாய்க்காதே. பின்னும் ஒருதினம் சென்றது. தளுக்குச் சேர்வை உருகவில்லை. பொழுதுபட்டு மறுராத்திரி முப்பது நாழிகையும் கழிந்தது. இப்படி இரண்டு பகல் இரண்டு ராத்திரி நெருப்பு இடைவிடாமல் எரிந்தவண்ணமாயிருந்தும், பாண்டங்களிற் பூசிய தளுக்குச் சேர்வை உருகவேயில்லை. உதிரம் வற்றி முகம்வாடி உடல் மெலிந்து தலைமயிர் வளர்ந்து சடைபற்றி ஊண் உறக்கம் அற்றுத் தம்மை மறந்திருந்த பலிஸ்ஸி சேர்வை உருகும் சமயம் பார்த்துக்கொண்டு சூளையின் அண்டை இருந்த இருப்பை விட்டு எழுந்திருக்கவேயில்லை. கருமம் சிதறியும் அவர் தைரியமோ சிதையவில்லை. கருமம் வாய்க்கவில்லையென்று காலம் நிற்குமா. சரியாய் ஆறு பகல் ஆறு இரவு சென்றன. இத்தனை காலமும் அசலசித்தராகிய பலிஸ்ஸி விழித்திருந்து உழைத்து, முடியாதெனத் தோன்றியதை முடிவிக்க மல்லுக்கட்டிக்கொண்டிருந்தார். மருந்தோ உருகவில்லை.

* குகைப்பரீக்ஷை=Crucial experiment.



### எதற்கும் பின்வாங்காத உறுதிநிலை.

தளுக்குச் சேர்வைத் திரவியங்களில் ஏதேனும் குறை குற்றம் இருந்தாலும் இருக்குமென்றும், ஒருவேளை அதை உருக்கப் பின்னும் ஏதாயினும் சேர்க்கவேண்டுமென்றும் அவர் சிந்தையில் தட்டிற்று; ஆகவே, அவர் வேறு திரவியங்களை இடித்துக் கலந்து நூதன பரீக்ஷைக்கு எத்தனித்தார். இவ்வெத்தனத்தில் பின்னும் இரண்டு மூன்று வாரம் போயின: இப்பொழுது புதுப்பாண்டம் வாங்க வகை இல்லை: முதற் பரீக்ஷைக்கு அவர் தமது கையால் வனைந்த பாண்டங்கள் சூளையில் நெடுக வெந்துவெந்து நைந்து பழுதுற்றிருந்ததனால் மறு பரீக்ஷைக்கு உதவா. இருந்த ரொக்கம் எல்லாம் செலவாய்ப்போயிற்று. கடன் வாங்கினால் வாங்கலாம். அவர் தமது கைப்பொருளை வியர்த்தமான பரீக்ஷைகளில் இறைத்துச் சிதைக்கும் பேயனென்று அவர் மனைவியும் அயலாரும் மாத்திரம் எண்ணியிருந்தும், அவர் நாணயம் கெட்டுப்போகாதிருந்ததனால், கருமசித்திக்குக் குந்தகமின்றி வேண்டும் தொகை விரைவிற் கிட்டிற்று. விறகும் பாண்டமும் வாங்கப் போந்தமட்டும் ரொக்கம் இஷ்டர் ஒருவர் கடனாய்க் கொடுத்துதவ அவர் அதை வாங்கி மறு பரீக்ஷை தொடங்கினார். நூதனமாகச் செய்த தளுக்குச் சேர்வை பூசிப் புதுப்பாண்டங்கள் சூளையில் அடுக்கிவைத்து நெருப்பு மூட்டப்பட்டது.

### வீட்டுச் சாமான்களையுடைத்துச் சூளைக்கிட்டது.

இப்பொழுது தொடங்கிய பரீக்ஷையே வாய்த்தாலும் வாய்க்கட்டும், போனாலும் போகட்டும் என்று அவர் செய்த கடைசிப் பரீக்ஷையில் நெருப்புப்பற்றிப் பக்குப் பக்கென்றெரிந்தது; சூடு வரவர வளர்ந்து அதிகரித்தது. தளுக்குச் சேர்வையோ உருகவில்லை. விறகு கொஞ்சம் குறைய எல்லாம் எரிந்துபோயிற்று. அப்பால் நிறுத்திவிடாமல் எரித்துக்கொண்டுவர விறகுக்கு வழி என்னவென்று பார்த்தார். தோட்டத்தைச் சுற்றிக் கிராதியதில் இட்டிருந்தது. அந்தக் கிராதி மரங்களைப் பிடுங்கு எரித்தால் எரியுமே: பரீக்ஷையை முடிவு காணுமுன் நிறுத்திவிட அவருக்குப் பிரியமில்லையாதலால், கிராதிபோனாற் போகட்டுமென்று பிரித்துச் சூளையில் வைத்து எரித்தார். கிராதிமரங்கள்

எல்லாம் எரிந்து போயின. எரிந்தும் சேர்வை உருகவில்லை. கிராதியும் போய்விட்டது. கருமமும் சிதறியது. சூடு ஆறவிடாமல் பின்னும் பத்து நிமிஷம் எரித்தால் சேர்வை உருகலாம். என்ன கஷ்டம் வரினும் அதைப் பாராட்டாமல் விறகு தேடி எரிக்கத்தான் வேண்டும். வீட்டில் நாற்காலி பீடமுதலிய தட்டு முட்டுகளும் புத்தகத் தட்டுகளு மாத்திரம் மிஞ்சியிருந்தன. வீட்டுக்குள் ஏதோ நெறுநெறென்று ஒடிந்த சத்தம் சடுதியில் கேட்டது. பலிஸ்ஸிக்கு அறிவு கெட்டுப் பைத்தியம் வந்ததென்று அவர் மனைவியும் பிள்ளைகளும் வீரிட்டழ, அவர் பீடங்களைத் தூக்கி அடித்துடைத்துச் சூளையில் இட்டு எரித்தார். மருந்து உருகவில்லை! அப்பால் மிஞ்சியிருந்தது புஸ்தகத்தட்டு: அதையும் அவர் பெயர்த்து உடைத்துக்கொண்டுபோய் எரிக்க அவர் மனைவியும் பிள்ளைகளும் அழுதழுது வெளிப்பட்டு அந்நகரவீதிகளில் பித்தம் கொண்டவர்கள் போல ஓடித்திரிந்து, பலிஸ்ஸி உன்மத்தராகி, வீட்டுத் தட்டுகளை அடித்துடைத்துச் சூளையில் வைத்தெரிக்கிறாரென்று கூச்சலிட்டார்கள்.

### கடைசியில் ஜயம்.

சரியாய் ஒரு மாசவரையில் அவர் தரித்த அங்கி களையவில்லை: உண்டியும் இல்லை உறக்கமும் இல்லை: கவலை பெருக ஓயாமல் மெய் வருந்தி உழைத்து மெலிந்துபோனார். கடனில் முழுகித் தப்ப வகையின்றித் தத்தளித்தார். ஆனாலும் என்ன, அவர் நாடியபொருள் கைகூடியது. அவர் ஆவலோடு அறிய விரும்பின அந்தரங்கம் அறியப்பெற்றார். விறகு எல்லாம் எரிந்து தீரும் சமயத்தில் சூடேறி முதிரவேகவும் தளுக்குச்சேர்வை உருகியது. அவர் தளுக்குச்சேர்வை பூசிவைத்த பாண்டம் வீட்டில் சாதாரணமாய் வைத்து வழங்கும் ஊதாவர்ணச் சாடி. சூடு ஆறியபின் அச்சாடிகளை எடுத்துப் பார்த்தார். அவற்றின் புறம் வெளுத்துப் பளிங்குபோல மினுங்கியது. இந்தப் பெரும்பேற்றைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டபொழுது அவர் பட்ட நிந்தை கேட்ட திட்டு பழிச்சொல் இவை ஒன்றும் பொருளாய்த் தோன்றவில்லை. இனித் தமக்கு யோகதசை பெயரும்பொழுது தாம் கண்ட அரிய வித்தையைப் பிரயோகித்துச் சுகம் பெறலாமென்று அவர் ஆறித் தேறியிருந்தார்.

—*From Smiles.* (இன்னும் வரும்.)

## SOCIAL SERVICE:
## PERSEVERE IN GOODNESS.

By a Hindu Lady.

## சமஷ்டி சாதனம்:
## "நன்மைக் கடைப்பிடி"

ஒரு ஹிந்து சகோதரி எழுதியது.

நான் இன்று சொல்லப்புகுந்த சில சொற்களினால் என்னுடைய அபிப்பிராயங்களை உங்களுக்குத் தெரிவித்து அவைகளிலுள்ள குற்றம் குறைகளை நீங்கள் அன்புகூர்ந்து எடுத்துக்காட்டினால், நான் நன்மை அடையக்கூடுமென்கிற எண்ணங்கொண்டு அவைகளை வெளியிடத் துணிந்தேன். இவ்வாறு நாம் கூடுந்தோறும் நமது அபிப்பிராயங்களையும் எண்ணங்களையும் ஒருவருக்கொருவர் தெரிவிப்பதினாலேயே நமது சிந்தனை தெளிவடையுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஐரோப்பிய சகோதரிகளுக்கு பாக்கியவசமாய் இவ்வித சந்தர்ப்பங்கள் உண்டாயிருப்பதினாலே, அவர்கள் பலவிதத்திலும் நன்மை அடைந்துவருவதாய்த் தோன்றுகிறது.

நமது நாட்டில் பூர்விகத்திலிருந்த மாதுசிரோமணிகளுக்கு ஐரோப்பிய சீமாட்டிகளைப் போலவே சர்வ சிலாக்கியமான கல்வி நாகரிகங்கள் உண்டாயிருந்தன என்று காவியங்களால் தெரியவருகிறது. தமது பூத உடம்பு போய் எத்தனையோ காலமாகியும் அழியாப் புகழுடம்பைப் பெற்று விளங்காநின்ற நமது அருமைப்பாட்டியம்மாளாகிய ஔவைப் பிராட்டியாரால் பெண்பாலாராகிய நமக்கு எல்லாம் பெருஞ் சிறப்புண்டாயிருக்கிறது. அந்தம்மாள் செய்த நூல்களே இத்தென்னாட்டில் ஆண் பெண் ஆகிய சிறியவருக்கும் முதியவருக்கும் வேதவாக்கியமா யிருக்கிறது. அந்தம்மாள் கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய வித்வான்களுக்கு கல்வித் திறமையில் பின்வாங்கினவள் அல்லவென்று சொல்லப்பட்டிருப்பதுடன், தனது நீதி ஒழுக்கத்தில் அவ்வித்வான்களைவிட, மாசு, மறுவில்லா உயர்ந்த ஒழுக்கத்தைப் பெற்றிருந்ததனால் அந்தம்மாளை தெய்வப் பிறப்பென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அம்மாள் அடைந்திருந்த கல்வித்திறமையினாலும் மாசற்ற நடக்கையினாலும், பல இடங்களில் சில சகோதரிகள் எம். ஏ. முதலிய பட்டங்களைப்பெற்று ஒழுக்கத்திலும் பெருமை பெற்றிருப்பதாய் இப்பொழுது நாம் பார்ப்பதினாலும் நாமும் அம்மாது சிரோமணிகளைப்போல் ஆகத்தக்கவர்கள் என்கிற பெருமையைக் கொண்டவர்களாய் இருக்கிறோம் அல்லவா? இவ்வாறு இருந்தும் நமது பெருமை இப்படிப்பட்டதென்று சிந்திக்காதவர்கள்போல் நம்முடைய அரிய வாழ்நாளை வீணாகப்போம்படி பார்த்து வருகிறோம்.



ஔவையார் நமக்குப் புகட்டிய வாக்கியங்களில் ஒன்றாகிய "நன்மை கடைப்பிடி" என்கிறதை நாம் எவ்வளவு பயன்படுத்திக்கொண்டோமென்று சற்று கவனிப்போம். "நன்மை கடைப்பிடி" என்றால் நன்மை பயக்கத்தக்கதை உறுதியாய்ப்பிடி என்று அருத்தமாம். நல்லதென்று தேர்தற்கு ஆராய்ச்சி செய்ய வேண்டும். ஒரு காரியத்தை அல்லது வஸ்துவை நல்லதென்று தெரிந்து எடுப்பதற்கு முந்தி அதற்கு இனமான காரியங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால்தான் நல்லது வெளியாகும். இன்ன காரியத்தில் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் இன்னதில் கூடாது என்கிற நிர்ப்பந்தமில்லை. "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியம் பொதுப்பட இருப்பதினால் எக்காரியத்திலும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று ஏற்படுகிறது. இவ்வாறு ஒப்பிட்டுப் பார்ப்பதை எதில் கொள்ளுகிறோம், எதிற்கொள்ளவில்லையென்று சற்று ஆலோசித்துப் பார்ப்போம். நாம் உண்ணும் உணவிலும் உடுக்கும் உடையிலும் அணியும் ஆபரணங்களிலும் ஒப்பிட்டு நல்லதென்று தோற்றுவதை கைக்கொள்ளுகிறோம் என்பதில் ஆட்சேபனையில்லை. உடைகள் மாறின, பணிகளில் பழையனபோய் புதியன நுழைந்தன. நாவிற்கு இனிமையான உணவுகளை தேவாமிர்தமே அறுசுவையோடு கூடிய உண்டியாய் வந்ததோவென்று வியக்கும்படியாக பதார்த்தங்களைச் செய்து, அனுபவிப்பதற்கு பாகசாஸ்திரங்களைத் தெரிந்தெடுக்கிறோம். தேக சுகானுபவங்களுக்கு இன்னும் பல துறைகளில் நாகரிகம் நாளுக்குநாள் விர்த்தியாய்க்கொண்டே வருகிறது. இவ்விஷயங்களிலெல்லாம் ஒருவர் சொல்லவேண்டியதில்லை. ஆட்சேபனை செய்வாருமில்லை. ஆசாரங்களிலும் மதசம்பந்தமான காரியங்களிலுமோ வென்றால், ஏதேனுமோர் சீர்திருத்தம் செய்ய முயற்சித்தால் பலபக்கங்களிலும் போராட்டங்கள் உண்டாகின்றன. வீட்டுக்கொரு ஆசாரம் உண்டு.

பல நூற்றாண்டுகளுக்கு முன் உண்டான ஆசாரங்கள் நாளதுவரையில் யாதொரு மாறுதலுமில்லாமல் நடந்தேறி வருகின்றனவென்று சொல்லுகிறார்கள். நல்ல ஏற்பாடான சதாசாரங்கள் "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியத்திற்கிணங்க, எப்போதும் நடந்தேறி வரவேண்டும் என்பது நியாயத்திற்கு ஒத்து இருக்கின்றது. பால்குடி மறவாத குழந்தைகளுக்கு விவாகஞ் செய்கிற கொடிய வழக்கம் சில ஜாதியாருக்குள் நடந்தேறி வருகிறது. அதனால் உண்டாகும் தீமைகளோ அநந்தமென்று தெரிந்திருந்தும், மற்ற தேசங்களில் பாலிய விவாகம் அருமையென்று உணர்ந்தும் இக்கொடிய வழக்கத்தைக் கைவிட நம்மவர்கள் துணிகிறதில்லை. இதற்குக் காரணமென்னவென்று ஆலோசிப்போமாயின் "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியத்தைக் கொஞ்சமும் பாராட்டாமல், "வழக்கம்" என்கிற கொடுங்கோல் அரசனுக்கு அடிமைபூண்டு

இருக்கிறதென்று தோன்றுகிறது. இந்த பன்னுடைய கொடி இந்நாட்டில் எங்கும் பறக்கிறது. அவனுடைய கொடுங்கோல் அரசை வாழச்செய்கிறவர்கள் கல்வி கேள்விகளின் வாசனையற்ற நமது சகோதரிகளே. இவர்களும் தேவானுகூலமாக நாம் அடைந்த கல்வியினால் உண்டான சிறிது ஞானத்தை யாவது அடைவார்களானால் "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியத்தின் பெருமையை உணர்வார்கள். உணர்ந்தாலோ நாளாவட்டத்தில் "வழக்கம்" என்கிற கொடிய பாதகனது கொட்டம் அடங்கிப்போம். நான் மேற்குறித்த பாலிய விவாகத்தைப்போன்ற அவ்வளவு கொடியதாய் இல்லாமற்போனாலும் தீமையுண்டாக்கத்தக்க மற்றும் பல துராசாரங்கள் உண்டு. அவைகள் இன்னவென்றும், அவற்றால் உண்டாகும் கெடுதிகள் இன்னவையென்றும், இங்கு எடுத்துரைக்கப் புகுந்தால், பெரிய ராமாயணமாகுமாதலால் கொடிதிலும் கொடிதாகிய பாலியவிவாகம் ஒன்றைமாத்திரம் இங்கு திருஷ்டாந்தமாகக் காட்டினேன். ஆண்பாலார் துராசாரங்களைப் போக்க முயன்றாலும் அவர்கள் காரியம் சித்திபெற தடையாயிருப்பவர்கள் பெண்பாலாரென்று, நாம் பழிச்சொல் ஏற்பவர்களாய் இருப்பதினால் நாம் நமது பர்த்தாக்களுக்குத் துணையாய் நின்று அவர்கள் செய்யும் நன்முயற்சியை நம்மால் ஆனமட்டும் பலிதமாக்கவேண்டும்.

ஆசார சீர்திருத்தத்தில் "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியத்தை அனுசரிக்க வேண்டியது போலவே இன்னொரு முக்கியமான விஷயத்திலும் அவ்வாக்கியத்தை அதிகமாகக் கொண்டாடவேண்டியவர்களாய் இருக்கிறோம். அவ்விஷயம் என்னவெனில் இவ்வுடல் அழிந்தும், என்றும் அழியாததான ஆத்துமார்த்தம், நித்தியானந்த வாழ்வைப் பெறுவதற்குத்தான் பக்திசெய்ய வேண்டுமென்று யாவரும் சொல்லுகிறார்கள். அதற்குத்தான் அநந்தமான நூல்கள் உண்டாயிருக்கின்றன. இந்த வாழ்வை அடைவதற்குப் பலமார்க்கங்கள் உண்டு. ஒவ்வொரு மார்க்கமும் ஒவ்வொரு மதமாய் இருக்கிறது. இந்நாட்டில் ஒவ்வொரு மதத்திலும் பலபிரிவுகள் உண்டு. அன்றியில் ஆண்களுக்கு ஒருவழி, பெண்களுக்கு ஒருவழி. ஒரு குடும்பத்தில் ஒரு கிழ அம்மாள் இருந்தால் பலவித தேவதைகள் அந்தம்மாள் வழிபடும் தெய்வங்களாயிருக்கும் அந்தம்மாள் குமரன் சைவராகவாவது வைஷ்ணவராகவாவது இருப்பார். அம்மான் புருஷன் வேதாந்தி என்று சொல்லிக்கொண்டு வேதாந்த விசாரம் செய்வார். அவ்வொரு வீட்டிலேயே பல தேவதைகளுக்கு அந்தந்த விரத நாள்களில் பூசை புநஸ்காரங்கள் நடக்கும். வீட்டிற்குத் தலைவராயிருக்கிறவர், இவைகளெல்லாம் பெண்டுகள் காரியங்களென்று தன்னைப்போல் அவர்களும் தெளிவடைய வேண்டுமென்கிற எண்ணம் கொஞ்சமும் இல்லாமல் விரத நாள்களில் சலித்துக்கொண்டாவது பணங்கொடுத்து பண்டு பலகாரங்களை நன்றாய் சாப்பிடுவார். ஸ்திரீகள் கொண்டாடும் தேவதைகளுக்கான புண்ணிய தினங்கள் என்கிற சாக்கில் பலகாரங்களைச் செய்யும்படி பெண்டுகளை விட்டிருப்பதுடன் சிறந்த பக்தி இன்னதென்று தெரிந்துகொள்ள பெண்டுகளுக்கு ஞானம் இல்லையென்றும் சொல்லுவார்கள். நம்மை இதைக் காட்டிலும் இழிவு செய்யும்படியான விதம் என்னவோ எனக்குத் தெரியவில்லை. ஒளவைப் பிராட்டியைக் கண்டாவது நமக்கு புத்தி சிரேஷ்டம் உண்டென்று கொள்ளலாம்; தெய்வப் பிறப்பாய் வந்தவள் ஒளவை ஆதலால் மற்றப் பெண்பாலாரை அவளோடு ஒப்பிடக்கூடாதென்றால், இக்காலத்திய ஐரோப்பிய மாதுசிரோன்மணிகளைக் கண்டாவது இந்நாட்டில் பல இடங்களில் உள்ள கற்றுத் தேறிய நமது மங்கையர்களைக் கண்டாவது பெண்பாலாருக்கும் பரமார்த்த நூல்களை அறியும் சக்தி உண்டென்று தேர்ந்து நம்மிடத்தில் இழிவுகூறாது விடுவார்களாக. அவர்கள் எவ்வாறு சொல்லினும் சொல்லுக; நம்முடைய பெண்பாலர்க்குரிய சிறப்பு இருந்தேயிருக்கிறது. நாம் மாத்திரம் "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியத்தை நன்றாய் உணர்ந்து எந்த மார்க்கத்தைப் பற்றுவதினால், நமக்கு சிறந்த ஞானம், பக்தி, சிரத்தை ஆகிய இவைகள் கைவல்லியமாகி இகபரசாதனங்களை நாம் அடையக்கூடுமோ அதை நன்காராய்ந்து கடைப்பிடியாகப் பிடிக்கவேண்டும். அப்போதுதான் "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியத்தை அனுஷ்டித்தவர்கள் ஆகலாம். இதுவிஷயத்தில் நாம் செய்யும் நன்முயற்சிக்கு ஜெகதீசன் அருள்புரிவாராக.



## EXTRACT.
## POEM ; OF GRACE DIVINE.
## பாட்டு: பரசிவ வெள்ளம்.

1 உள்ளும் புறமுமா
  யுள்ளதெலாந் தானாகும்
வெள்ளமொன்றுண் டாமதனைத்
  தெய்வமென்பார் வேதியரே.

2 காணுவன நெஞ்சிற்
  கருதுவன, உட்கருத்தைப்
பேணுவன, யாவும்
  பிறப்பதந்த வெள்ளத்தே.

3 எல்லை, பிரி வற்றதுவாய்,
  யாதெனுமோர் பற்றிலதாய்
இல்லையுள தென்றறிஞ
  ரென்றுமய லெய்துவதாய்.

4 வெட்டவெளி யாயறிவாய்
  வேறுபல சக்திகளைக்
கொட்டுமுகி லாயணுக்கள்
  கூட்டிப் பிரிப்பதுவாய்.

5 தூல வணுக்களாய்ச்
  சூக்குமமாய்ச் சூக்குமத்திற்
சாலவுமே நுண்ணியதாய்த்
  தன்மையெலாந் தானாகி.

6 தன்மையொன்றி லாததுவாய்த்
  தானே யொருபொருளாய்த்
தன்மை பலவுடைத்தாய்த்
  தான்பலவாய் நிற்பதுவே.

7 எங்குமுளான் யாவும்வலான்
  யாவுமறி வானெனவே
தங்கு பலமதத்தோர்
  சாற்றுவது மிங்கிதையே.

8 வேண்டுவோர் வேட்கையாய்
  வேட்பாராய் வேட்பாருக்
கீண்டுபொரு ளாயதனை
  யீட்டுவதாய் நிற்குமிதே.

9 காண்பார்தங் காட்சியாய்க்
  காண்பாராய்க் காண்பொருளாய்
மாண்பார்ந் திருக்கும்
  வகுத்துரைக்க வொண்ணாதே.

10 எல்லாந் தானாகி
  யிருந்திடினுமிஃதறிய
வல்லார் சிலரென்பர்
  வாய்மையெலாங் கண்டவரே.

11 மற்றிதனைக் கண்டார்
  மலமற்றார் துன்பமற்றார்
பற்றிதனைக் கொண்டார்
  பயனனைத்துங் கண்டாரே.

12 இப்பொருளைக் கண்டா
  ரிடருக்கோ ரெல்லைகண்டார்
எப்பொருளுந் தாம்பெற்றி
  னின்பநிலை யெய்துவரே.

13 வேண்டுவ வெலாம்பெறுவார்
  வேண்டா ரெதனையுமற்
றீண்டுபுவி யோரவரை
  யீசரெனப் போற்றுவரே.

14 ஒன்றுமே வேண்டா
  துலகனைத்தும் ஆளுவர்காண்
என்றுமே யிப்பொருளோ
  டேகாந்தத் துள்ளவரே.

15 வெள்ளமடா தம்பி
  விரும்பியபோ தெய்தினை
துள்ளமிசைத் தானமுத
  வூற்றாய்ப் பொழியுமடா.

16 யாண்டுமிந்த, இன்பவெள்ளம்
  என் றதனுள் வீழ்வதற்கே
வேண்டு முபாய
  மிகவுமெளி தாகுமடா.

17 எண்ணமிட்டா லேபோது
  மெண்ணுவதே யிவ்வின்பத்
தண்ணமுதை யுள்ளே
  ததும்பப் புரியுமடா.

18 எங்கு நிறைந்திருந்த
  ஈசவெள்ள மென்னகத்தே
பொங்குகின்ற தென்றெண்ணிப்
  போற்றினின்றாற் போதுமடா.

19 யாதுமா மீசவெள்ள
  மென்னுவ [illegible]பிடுதென்
[illegible]
  [illegible]போதுமடா.

20 காவித் [illegible]வேண்டா
  கற்றைச் சடைவேண்டா
பாவித்தல் போதும்
  பரமநிலை யெய்துதற்கே.

21 சாத்திரங்கள் வேண்டா
  சதுர்மறைக ளேதுமில்லை
தோத்திரங்க ளில்லையுளந்
  தொட்டுநின்றாற் போதுமடா.

22 தவமொன்று மில்லையொரு
  சாதனையு மில்லையடா
சிவமொன்றே யுள்ளதெனச்
  சிந்தைசெய்தாற் போதுமடா.

23 சந்ததமு மெங்குமெல்லாந்
  தானாகி நின்றசிவம்
வந்தெனுளே பாயுதென்று
  வாய்சொன்னாற் போதுமடா.

24 நித்தசிவ வெள்ளமென்னுள்
  வீழ்ந்து நிரம்புதென்றன்
சித்தமிசைக் கொள்ளுஞ்
  சிரத்தையொன் றேபோதுமடா,

## ALFRED THE GREAT.

## ஆல்பிரட் அரசர் சரித்திரம்.

இவ்வரசர் இன்றைக்குச் சரியாக ஆயிரம் வருடங்களுக்கு முன்னே இங்கிலாந்து தேசத்தில் பெருமையோடு அரசு செலுத்தினவர். இவர்காலம் சென்று இப்போது ஆயிரம் வருடமாகின்றபடியால் அந்நாட்டார் இவரது ஞாபகார்த்தமாக அந்நாட்டுக்குப் பழைய இராஜதானியாயிருந்த வின்செஸ்டர் என்னும் நகரில் ஒரு சிலர்விக்ரகம் பிரதிஷ்டை செய்து உற்சவம் கொண்டாடி வருகின்றார்கள். இவரது சரித்திரத்தையும் குணாதிசயங்களையும் எடுத்து விவரித்தல் உசிதமாயிருக்குமென்றெண்ணி இங்கு விவரிக்கலுற்றேன்.

இவ்வரசர் பெருமான் ஒன்பதாம் நூற்றாண்டின் கடையில் அங்கிலேயருக்கு அரசராயிருந்தவர். அக்காலத்து அரசர்களுக்கெல்லாம் சிறந்தவர். இவர் சிங்காசனம் ஏறியகாலத்தில் தேசத்தில் தேனரென்னும் கொள்ளைக்காரர்களுடைய படையெடுப்பினாலும் போராட்டத்தாலும் கொள்ளைகளாலும் ஜனங்களுக்கு உயிரும் உடைமையும் சாசுவதமின்றி ஏழைகளாகிய குடிகளுக்கேயன்றி செல்வமும் வலிமையும் பெற்ற பிரபுக்களுக்கும் அரசனுக்கும் கூடத் தத்தம் பொருள்களைப் பாதுகாப்பது அரிதாயிருந்தது. அரசர் இப்பகைவரோடு பன்முறை போர்புரிந்தும் வெல்ல முடியாமல், ஒருபொழுது தம் நாடுநகரங்களைத் துறந்து சுற்றங்களையும் சேனைகளையும் பிரிந்து ஒரு நிர்மானுஷியமான காட்டினிடையே ஒன்றியாகி வருத்தமுற்றுப் பசியால் வருந்தி முடிவில் ஆங்கோர் இடையன் கீழ் மாடுமேய்க்கியாய்க் கூலிக்கமர்ந்து வயிறு வளர்க்கவேண்டியதாயிற்று. அந்தோ! அநேகம் பிரபுக்கள் சூழ சொர்ண சிம்ஹாசனத்தில் வீற்றிருந்து பெரும்புவியாண்ட அரசருக்கு வந்த, காலகதிதானென்ன! ஆயினும் அவர் 'ஊக்கமுடைமை ஆக்கத்திற்கழகு' என்றபடி ஊக்கத்தைக் கைவிடாமல் இருந்து முடிவில் கடவுளருளால் பகைவரைவென்று அரசை மீண்டு நெடுங்காலம் இரும்புவிகளிக்க வெகு நன்மையாக ஆண்டிருந்து என்றும் அழியாப் பெரும்புகழ் பெற்றனர்.

இனி இவரது குணாதிசயங்களை விவரிக்குங்கால் எவ்வளவு இனிமையாயிருக்கும். இவர் செய்துள்ள செய்கைகளில் அயோக்கியமானது ஒன்றேனும் காண்பதரிது. இவரது நிர்மலமாகிய கீர்த்தியில் ஒரு மறுவேனும் நாம் காணமுடியாது. வீரம் ஞானம் நன்மை தூய்மையென்னும் இக்குணங்களையே இவர் பெற்றிருந்தனர். தமது காலத்தை எள்ளளவேனும் வீணிற்கழிக்கமனம் பொறாதவர். அக்காலத்தில் கடியாரமாவது வேறே நாழிகை அறிந்துகொள்ளக்கூடிய கருவிகளாவது இல்லை. பகல் காலத்தில் சூரியன் கண்ணுக்குத் தெரியுமாயின் அதன் நிலையைக்கண்டு பொழுது தெரிந்து கொள்வார்கள். வானம் மப்புமூடிச் சூரியரஸ்மி காணாதபோது பொழுதை ஒருவாறு ஊகித்துக்கொள்ளவேண்டியதுதான். ஆதலால் இவர் நாழிகை நிருத்தியமாகத் தெரியும்பொருட்டு ஓர் உபாயம் செய்தனர். அதாவது விளக்கெரிக்கும் மெழுகை நிறுத்து அதில் ஒரு திரியை ஏற்றி வைத்து அது எத்தனை நாழிகை எரியுமென்று கணக்குப் படுத்திக்கொண்டு அவ்விதமாக மெழுகுவத்திகளால் பகலிலும் இரவிலும் பொழுது தெரிந்துகொண்டு அப்பொழுதில் ஒரு க்ஷணமாத்திரமாவது வீண்போக்காமல் தம் காரியங்களைச் செய்துவந்தனர். இவர் யாதேனும் ஓர் காரியத்தைச்செய்ய மேற்கொண்டால் தம்மால் கூடினவளவில் உழைத்துச்செய்வார். ஒரு காரியம் தமது சக்தியை



மீறினதாயின் அதனை முற்றும் அதைரியப்பட்டு விட்டுவிடாமல் இயன்றவளவில் செவ்வையாகச் செய்து முடிப்பார். அற்பமென்று ஒரு காரியத்தையும் இகழ்ந்துவிடார். யுத்தத்தில் பராக்கிரமும் திறமையுமுடையவர். தேனர்களோடு ஒரு வருஷத்தில் ஒன்பது பெரிய போர்புரிந்திருக்கிறார். சேனைகளைச் செலுத்துவதில் மிகவும் வல்லவர். இவரது படைகளுக்கு இவரது சாமர்த்தியக்குறைவினால் அபஜயம் நேரிடுமென்னும் சஞ்சலமேயில்லை. ஒவ்வொரு காரியமும் தமது கண்ணாரப்பார்த்துச் செவ்வையாகச் செய்விப்பது இவர் சுபாவம், அந்நாளில் ஆகாரம் தேடுதற்கின்றியமையாத வேட்டை நாய்களை வெகு சாமர்த்தியமாகப் பழக்குவித்தனர். யுத்தத்துக்குவேண்டிய ஆயுதங்களையும் பாடுதற்குரிய வீணைகளையும் படித்தற்குரிய புத்தகங்களையும் தக்க மனுஷ்யரைக்கொண்டு தம் கண்பார்வையிற்றானே செய்விப்பார். இவர் காட்டில் மாடுமேய்ப்பானாகவிருந்த காலத்தில் தம்மெஜமானன் மனைவி அடுப்பில் வேகும் அப்பங்களைக் காந்திப்போகாமல் பார்த்துக்கொள்ளென்று கட்டளையிட்டனளென்றும் இவர் ஏதோ ஆழ்ந்த ஆலோசனைமேலிருந்ததினாலே அவற்றைப்பாராது கருகவிட்டனரென்றும் எஜமானி வந்து இவரைக் கோபித்திடித்தனளென்றும் ஒரு கதையுண்டு. இக்கதை முற்றும் உண்மையென்று தோற்றவில்லை. இவர் புத்தி பூர்வமாகத் தமது அசாக்கிரதையாலே அவற்றைக் கருகவிட்டனரென்று சொல்லுதல் கூடாது. அவை தம் கண்மறைவில் இருந்ததனாலோ அல்லது அவ்விஷயம் தமக்குத் தெரியாமையினாலோ செய்திருக்கலாம்.

இவர் தமது குடும்பத்தை வெகு செம்மையாக நடத்தினவர். தமது மக்கள் ஒவ்வொருவருக்கும் தெய்வபக்தியைப் போதித்தும் இவ்வுலகத்துக்குப் பயன் தரக்கூடிய காரியங்களைக் குறைவறச்செய்து முடித்தற்குச் சாதகமானவற்றையும் போதித்தனர். இன்னம் சிறிது காலத்துக்கெல்லாம் அவர்கள் பிள்ளைப்பருவம் நீங்கிப் பெரியோர்களாவார்களென்றும் அதனால் அடிமுதலாகவே இம்மைக்கும் மறுமைக்கும் உரியவற்றைச் செய்துமுடிக்கத் திறமையுண்டாகும்படிச் செவ்வையாகக் கற்பிக்கவேண்டுமென்றும் நன்றாயறிந்தவர்.

இவர் தம் குடிகளுக்கு அநேக சட்டங்களை ஏற்படுத்தினார். அச்சட்டங்கள் முற்றிலும் இவரே உண்டு பண்ணினவைகள் அல்ல. முன்னோர்கள் ஏற்படுத்தினவற்றில் தெரிந்துகொள்ளப்பட்டவை. அச்சட்டங்களுக்குத் தலையில் கடவுளது சட்டங்களைவைத்துத் தாம்கொடுத்த சட்டங்களெல்லாம் கடவுளின் சட்டங்களினாலுண்டானவையென்பதை விளக்கினார். தாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் கடவுள் துணையை நாடிச்செய்வார்.

இவ்வளவு காரியமும் செய்த இவர் எவ்வளவு தேகபலமும் திடகாத்திரமும் பெற்றிருந்தீரோவென்று நீங்கள் மயங்கவேண்டாம். நல்லமரத்தில் புல்லுருவி முளைத்ததாமென்று இவருக்குத் தீராக் கொடியநோயொன்றிருந்தது. அதனால் இவர் சில சமயங்களில் இவ்வளவு அவ்வளவு அல்லவென்று அவஸ்தைப்படுவார். ஆயினும் அவ்வளவும் பொறுத்துத் தமக்குரிய கடமைகளைக் குறைவற நிறைவேற்றி வந்தனர்.

இவர் தெய்வபக்தியில் மிகச்சிறந்தவர். வேதபுஸ்தகத்தை விடாமல் அநுசரித்து அதில் கூறிய உபதேசங்களை மறவாது கைக்கொண்டு தமக்கு மனோவியாகுலம் வந்த காலத்தில் அவற்றையுணர்ந்து ஆறுதலடைவார். இவர் பெருமையும் அறிவும் சிறந்த அரசர் என்பதில் ஐயமில்லை. இவர் நன்மையும் உண்மையும் உடைய பெரியவர் என்பதும் விளங்குவதே. இவர்பால் இளைஞர், முதியர், செல்வர், வறிஞர், மேலோர், கீழோர் ஆகிய ஒவ்வொருவரும் அநேக நன்மைகளைக் கற்றுக் கொள்ளலாம்.

## USING THE EYES.

### உற்றுப்பார்த்தலினு லடையும் பயன்.

ஜனங்களுக்குள்ளே காணும் வேற்றுமைகளுக்குக் காரணம் அவர்கள் பொருள்களை யுற்று நோக்குதலும் நோக்காமையுமேயாகும். உற்றுப்பார்க்கும் வழக்கமில்லாதவனைப்பற்றி, அவன் மரங்கள் நெருங்கிய காட்டுவழியே சென்றாலும் விறகுக்கு ஒரு கட்டைகூடக் காணமாட்டான் என்று ருஷியர்களுக்குள்ளே ஒரு பழமொழி யுண்டு. சாலோமோன் என்னும் பேரறிவாளனும் இவ்விஷயத்தைக் குறித்து புத்திமானுக்குக் கண்கள் முகத்தில் இருக்கும், புத்திகெட்டவனோ இருட்டில் நடப்பவன்போல ஒன்றையும் உற்று நோக்கான், என்கின்றனர்.

ஜான்சனென்னும் அங்கிலேய பண்டிதர் ஒருபொழுது நெடுந்தூரம் பிரதேசங்களுக்குச் சென்று சஞ்சரித்துவந்த ஒருவரை நோக்கி, "ஐயா, சிலர் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்துக்குப்போகும் வழியில் தானே மற்றவர்கள் கண்டம் சுற்றிவந்து தெரிந்துகொள்வதிலும் அதிக விஷயங்களைத் தெரிந்துகொள்வார்கள் என்று சொன்னாராம். கண்தானுபார்ப்பது, கண்ணைப்போலவே மனமுமன்றோ பார்க்கவேண்டியது.

கலிலியோ என்னும் வானசாஸ்திரியைப் பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். இவர் துப்பிணியர்திர மென்னும் தூரதிருஷ்டிக் கண்ணாடியை நூதனமாக அமைத்துப் பிரசித்திபெற்றவர், அன்றியும் 'பெண்ட்யூலம்' என்னும் கடிகார உறுப்பின் பிரயோசனத்தை முதல் முதல் கண்டுபிடித்துக் கடிகாரங்களுக்கு உபயோகப்படுத்தினவரும் இவரே. அநேகர் மேலே நின்று தொங்கக்கட்டிவிட்டபாரமொன்று முன்னும் பின்னுமாகத் தானம் போடுதல்போல ஊசலாடுவதைக் கண்டிருப்பார்கள். ஆயினும் இவர்தான் முதலில் அதன் பிரயோசனத்தைத் தெரிந்துகொண்டவர். இவரது வாசஸ்தானமாகிய பீஸா நகரத்தில் ஒருபொழுது தேவாலயத்தில் தீபம்போடுகிறவன் முகட்டினின்று தொங்கிய ஒரு விளக்கில் நிறைய எண்ணெய்விட்டபின் அதை முன்னும் பின்னும் ஆடிக்கொண்டிருக்கவிட்டான். கலிலியோவுக்கு வயது 18. இவர் அதைப் பார்த்ததும் குறிப்பாகக் கவனித்துக் காலத்தை அளந்து நிர்ணயித்தற்குரிய தொரு கருவியை அமைப்பதற்கு அது சாதகமாகுமென்று கருதினர். ஆயினும் 50—வருஷம் சென்றது. அந்தப்பற்றிப் படித்துச் சிந்தித்துக் கடைசியில் பெண்ட்யூலம் என்னும் கடிகார உறுப்பைக் கண்டுபிடித்து அக்கருவியை முடிப்பதற்கு.

ஸர் சாமுவல் ப்ரௌன் என்னும் கணித பண்டிதரொருவர் ஸ்காத்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் மத்தியில் உள்ள ட்வீட் நதிக்கருகே வாசம்செய்துகொண்டிருக்கையில் அந்நதிமேல் அதிகப் பணச்செலவில்லாமல் சுலபமாக ஒரு பாலம் கட்டுவிக்கும் மார்க்கத்தைக் கண்டுபிடிக்கவேண்டி அது விஷயமாக ஆலோசித்துக்கொண்டிருந்தனர். அப்போது ஒரு நாட் காலையில் பனி மூடிக்கொண்டிருக்கையில் தோட்டத்தில் சென்று உலாத்தி வருகையில் சிறிய சிலந்திக் கூடொன்று வழியில் குறுக்கே தொங்கிக்கொண்டிருக்கக் கண்டார். அதைப் பார்த்ததும் அதைப்போலவே இருப்புக்கயிறு அல்லது சங்கிலிகளால் ஒரு பாலம் கட்டி முடிக்கலாமென்னும் எண்ணம் உடனே அவருக்குத்தோற்றியது. அவ்வாறே தொங்கும் பாலத்தைப் புதிதாகக் கண்டுபிடித்து நிரூபித்தார்.

ஜேம்ஸ் வாட் என்னும் சிற்பவல்லவர் ஒருவர் ஆவியந்திரங்களைக் கண்டுபிடித்துச் செவ்வைப்படுத்திப் பேர்பெற்றவர். இவரை ஸ்காத்



லாந்து தேசத்தில் க்ளைட் நதிக்கடியில் மேடுபள்ளமாயிருக்கும் அடித்தரை வழியாய்க் குழாய்வைத்து ஜலம் கொண்டுபோக வழியென்னவென்று கேட்டபோது, அது விஷயமாக ஆலோசித்துக்கொண் டிருக்கையில் ஒரு நண்டின் ஓட்டைக்கண்டு அதைக் கவனித்து நோக்கி அதேமாதிரியாக வைத்துக்கொண்டு ஒரு இருப்புக்குழாயை இயற்றுவித்து அக்காரியத்தை நிறைவேற்றினர்.

ஸர் இஸம்பார்ட் ப்ரூனல் என்பவர் இன்னொரு பேர்போன வஸ்து சாஸ்திரி. இவர் தேம்ஸ் நதிக்கீழே ரயில்வண்டிகள் செல்லச் சுரங்கவழி யமைத்தற்கு, அவ்விஷயமான ரகசியங்களைக் கப்பல் வண்டுகளின் செய்கையை ஆராய்ந்து தெரிந்துகொண்டார். இக்கப்பல் வண்டானது மரத்தைத் துளைக்கையில் முதலில் ஒருபுறத்திருந்தும் பின்பு மறுபுறத்திருந்தும் தன்னுடைய வயிரம்போன்ற கொம்புகளாற் குடைந்து முழுதும் துளைத்த பின்பு முகட்டிலும் பக்கங்களிலும் ஒருவிதமான பளபளப்பான எண்ணெயாற் பூசுவதைக் கண்டு அவ்வாறே தாமும் பெருமிதமாகச் செய்து தாம் மேற்கொண்ட சிற்பவேலையை முடிக்கலாயினர்.

கொலம்பஸ் என்பவர் பேர்போனமாலுமியொருவர். இவர் அமெரிக்கா கண்டத்தை முதல் முதல் கண்டுபிடித்தவர். இவர் யாத்திரைசெய்கையில் இவரது பரிசனர்கள் நெடுநாளாயும் கரைகாணாமையினாலே அதைரியப்பட்டு ஊருக்குத் திரும்பிவிட வேண்டுமென்று கலகித்தபோது ஒரு நீர்க்கொடியைக் கண்டு அச்சொற்ப விஷயத்தால் அவர்களுக்குத் தைரியம் உண்டுபண்ணி அக்கலகத்தை அடக்கலாயினர்.

வர்த்தகமோ, சிற்பமோ, சாஸ்திரமோ எந்தவேலை எந்தப் படிப்பானாலும் சரி. ஒவ்வொன்றிலும் நுட்பமான விஷயங்களை அசட்டைசெய்யாமல் கவனிப்பதனாலே தேர்ச்சியும் ஜயமும் அடைதற்குக் காரணமாகும். நாம் குறிப்பிட்டுத் தெரிந்துகொள்ளும் விஷயங்களில் அநேகம் முதலில் வெகு அற்பமாத் தோற்றினாலும் கடைசியில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயத்திலும் மிக்க பயன்படுவதாகும்.

—SMILES.

## CHILDREN'S PAGE:

### INFLUENCE OF ENVIRONMENT.

### சிறுவர்க்கான பக்கம்.

### சகவாசதோஷம்.

சகவாசம் என்றால் உடன் வசித்தல்; அதாவது உடனிருந்து நெருங்கிப் பழகுதல். புல்பூண்டு முதல் புல், மிருகம், மனுஷனீறாக எல்லாரும் சகவாச தோஷத்தால் பாதிக்கப்படுகிறார்கள். நிலவாசி, நீர்வாசி, காற்றுவாசியினால் செடி கொடிகள் பாதிக்கப்படுகின்றனவென்பது பிரத்தியக்ஷம். இந்த உபாயத்தால் செடிகளின் தோற்றத்தைக்கூட மாற்றி விடுகிறார்கள். பிராணிகளும் அப்படியே சகவாச தோஷத்துக்குட்பட்டனவாக விருக்கின்றன. மனுஷனது குணம் அவன் சகவாசத்தைப் பொறுத்ததென்பது பிரசித்தம். "உன் தோழனைக்காட்டு உன் குணத்தைச் சொல்கிறேன்" என்று சொல்லும் முதுமொழியில் பொதிந்து கிடக்கும் உண்மை இதுவே. குழந்தைகளை வளர்ப்பதில் கெட்டசகவாசம் கூடாமற் பாதுகாப்பது பெற்றோர் கவனிக்கவேண்டிய முதற்கடமையாக விருக்கிறது. நம்மவர்களில் புத்தியில்லாத் தாய்மார்களும் அத்தை, பாட்டி, கிழம், கட்டைகளும் குழந்தைகள் வினைத்தெரியாதவர்களென்று அவர்களை அடிக்கடி பொய் புளுகுகள் சொல்லி ஏமாற்றுகிறார்கள். குழந்தைகளைப்போல் குணத்தைக் கிரகிக்கும் சக்தி பெரியோர்களுக்குக் கிடையாது. அவர்களுடைய மனம் வெளித்தோற்றத்துக்கு விஷயங்களைக் கிரகிக்கும் சக்தியற்றவையாக விருப்பினும், விஷயவாசனைகளை முற்றும் கிரகிக்கும்படியான சக்தி விசேஷமாகவுண்டு என்னும் உண்மையை இவர்கள் அறியவேண்டும். எப்படி பாலானது காற்றிலுள்ள அசுத்தவாசனைகளைக் கிரகிக்கிறதோ அப்படி குழந்தைகளின் இளமனம் விஷய

வாசனைகளைக் கிரகிக்கின்றது. சிறுகுழந்தைகளிடத்தில் துர்க்குணங்கள் விசேஷமாகப் படிந்திருந்தால் அக்குழந்தையைச் சுற்றியிருந்தவர்கள் துர்க்குணம் நிறைந்தவர்களென்று சந்தேகமறத் தீர்மானிக்கலாம். விஷயங்களைவிட விஷய வாசனை பலமானது. கிளைகளைவிட வித்து எப்படி அதிக சக்தியையுள்ளடக்கிக் கொண்டிருக்கிறதோ அப்படி விஷயங்களைவிட விஷயவாசனை விசேஷ சக்தியுள்ளதாக விருக்கிறது. சுவரிடுக்குகளில் வித்து விழுந்தது தெரியாமல், செடிகள் முளைக்கும்பொழுது அங்கு அச்செடியின் வித்து எப்படியோ சேர்ந்திருக்கவேண்டுமென்று எங்ஙனம் தீர்மானிக்கிறோமோ அப்படியே குழந்தைகளிடத்தில் துர்குணங்கள் வெளியாகும் பொழுது கெட்ட வாசனை அவர்கள் மனதில் இதற்குமுன் சகவாசதோஷத்தால் படிந்திருக்கவேண்டுமென்று தீர்மானிக்கத் தக்கதா யிருக்கிறது. சுவரிடுக்குகளில் முளைக்கும் செடிகள் எப்படி ஜல்லி வேரோடி சுவற்றின் கற்களையெல்லாம் வெவ்வேறாகப் பிரித்துவிடுகிறதோ அப்படியே கெட்ட சகவாசத்தினாலுண்டாகும் வாசனாதோஷம்குழந்தைகள் மனதில் வேரூன்றிபடர்ந்து அவர்கள் குணத்தையெல்லாம் கெடுத்துவிடுகிறது. ஆகையால் குழந்தைகளிடத்தில் துர்க்குணம் வெளியாகும்பொழுது அவர்களுடைய சகவாசம் கெட்டதா யிருக்கவேண்டுமென்று ஆராய்ந்து கெட்ட சகவாசத்தை வாசனையற நீக்கவேண்டும். சகவாசத்தை நீக்காமல் குழந்தைகளைக் கண்டித்துச் சீர்திருத்திவிடலாமென்று எண்ணுவது, வேரிருக்கச் செடியின் கிளைகளை பொடித்துவிட்டால் அது அற்றுப் போமென்று நினைப்பதுபோலாகும். செடியை எப்படி வேரோடுகளையவேண்டுமோ, அப்படி துர்க்குணங்களை வாசனையோடு அறநீக்கவேண்டும். விஷய வாசனை இரண்டுவிதம். சகவாசதோஷத்தாலுண்டாவது ஒன்று; பூர்வஜன்மகர்மத்தால் உண்டாவது ஒன்று. சகவாசதோஷத்தாலுண்டாகும் வாசனையானது கெட்ட சகவாசமின்னதென்று ஆராய்ந்து நீக்கப்போகும். பூர்வஜன்ம கர்மத்தாலுண்டான வாசனை அப்படி நீக்கத்தக்கதல்ல. அது அந்த வாசனைக்கெதிரான நல்ல வாசனைகளைப் பழகுவதால் நிரோதிக்கப்படும்; அதாவது முளைக்காது அடக்கப்பட்டு வாசனாக்ஷயத்தால் நாசமுறும். இக்கருத்தைக்கொண்டேதான் ஞானமார்க்கத்தில் பிரவேசித்து மோக்ஷத்தை யிச்சிக்கும் முமுக்ஷுக்களுக்கு சத்சங்கம் ஒரு இன்றியமையாச் சாதனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பூர்வகர்ம வாசனையைப்பற்றிப் பேசுவது சிறுவர் மனதிற்கு எட்டாத விஷயமா யிருக்குமாதலால் அதைவிட்டு, சகவாச தோஷத்தால் விளையும் பெருந் தீங்கை விளக்கிக்காட்ட ஒரு சிறுகதை சொல்லுவோம். அதைக் கவனமாய்க் கேட்டு கெட்ட சகவாசத்தாலுண்டாகும் தீங்கையறிந்து அப்படிப்பட்ட தீமைவிளையாதபடி இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமெனக் கோருகிறோம்.

### சிங்கமும் நரிக்குட்டியும், அல்லது சகவாச தோஷத்தால் நேர்ந்தகேடு.

ஒரு காட்டிலே ஒரு சிங்கம் தன் பெண்சாதியோடும் இரண்டு பிள்ளைகளோடும் வாழ்ந்து கொண்டிருந்தது. மிருகேந்திரனாகிய அச்சிங்கம் ஒருநாள் காடு முழுமையும் சுற்றி நாலு திசையிலுந் திரிந்துபார்த்தும் இரையகப்படாமல், வாடிவதங்கிப் பசியினால் மெலிந்து தளர்ந்து வருத்தப்பட்டு இன்றைக்கு ஒரு மிருகமாவது நம் கண்ணுக்குத் தென்படவில்லையே யென்று விசனத்தோடு வீட்டுக்குத் திரும்பிவருகையில், ஒரு புதரில் நாலைந்து நாளான நரிக்குட்டி யொன்றை படுத்திருக்கக் கண்டது. கண்டு, அதை வாயிலே கௌவிக்கொண்டு தன் பெண்சாதி யிடத்தில் வந்து நரிக்குட்டியைக் கீழேவிட்டுப் பின்வருமாறு பேசலுற்றது—"பெண்ணே, இன்றைக்குநான் யார்முகத்தில் விழித்தேனோ இந்த அகன்ற காட்டில் நாலுதிக்கிலுஞ் சென்று, பூராதவிடமெல்லாம் புகுந்து தேடாத விடமெல்லாம் தேடிப்பார்த்தேன், எங்கும் ஒரு பிராணியும் அகப்படாமல், இன்றைக்குப் பட்டினியாய்க் கிடந்து மடியவேண்டுமென்று நினைத்துக்கொண்டு வருகிறபோது வழியில் இந்த நரிக்குட்டியைக் கண்டெடுத்துக் கொண்டுவந்தேன். நான் ஆண் பிறப்பாகையால், ஒரு நாள் இருநாள் பட்டினியாயிருக்க எனக்குத் தென்புண்டு. மேலும் இந்த நரிக்குட்டி என் பசிக்கு எவ்வளவு? அது வயிற்றுக்குள்ளே போகாமல் பல்லிடுக்கிலே தானே புகுந்துகொள்ளும். ஆயினும் பெண்ணே, அந்தக்குட்டியைப் பார்க்கிறபொழுது எனக்குப் பரிதாபமா யிருக்கிறது. அதன் இளஞ்சதையைப்புசிக்க எனக்கு மனங்கொள்ளவில்லை. நீயோ அப்படியல்ல; ஒரு பெண்பிறப்பு; பசிதாளமாட்டாய், மேலும் நீ இப்போது பிள்ளைபெற்று பச்சையுடம்பாயிருக்கிறாய்; பசியோடிருந்தால் பிள்ளைகள் வதங்கிச் சாகும். ஆகையால் அந்தக் குட்டியைச் சாப்பிட்டுப் பசிதீர்ந்து திருப்தியடைவாய்" என்றது. இப்படிச்சொன்ன, ஆண் சிங்கத்தைப் பார்த்துப் பெண் சிங்கம், "என் வீரகேசர மன்னவா! என்ன வார்த்தை சொல்கிறீர்! போர்களத்திற் புகுந்து பின் முதுகு காட்டாமல் மாரில் குண்டுவாங்கி மடிந்து போகிறவரையில் பொருக்கிற கல்லான மனம் உமக்கிருந்தும் இந்த நரிக்குட்டியைச் சாப்பிட உமக்கு மனங்கொள்ளவில்லையென்று சொல்லுகிறீரே! இதைச் சாப்பிட எனக்கு எப்படி மனங்கொள்ளும். நானோ இளகினமனதுடைய பெண் பிறப்பாச்சே! மேலும் பால் குடிக்கிற இரண்டு பிள்ளைகள் என் மடியில் விளையாடிக் கொண்டிருக்க அவற்றைப்போல் பால் குடிக்கிற இந்தக் குட்டியை கொன்று தின்பதற்கு எனக்கு மனங்கொள்ளவில்லை. ஆகையால் இந்தக்குட்டியை நமது பிள்ளைகளோடு வளர்த்துப் பார்ப்போம்" என்றது. ஆண் சிங்கம் "அப்படியே செய்வாய்" என்று சம்மதிக்க அன்று முதல் சிங்கக்குட்டிகளும் நரிக்குட்டியும் ஒருதாய்வயிற்றுச் சகோதரரைப்போல் ஒன்றைவிட்டொன்று பிரியாமல் வளர்ந்துவந்தன. இப்படி இணைபிரியாது வளர்ந்துவந்த சிங்கக்குட்டிகளும் நரிக்குட்டியும் ஒருநாள் வேட்டைக்குப் போனவிடத்தில் அங்கே ஒரு யானைக்குட்டி திசைதப்பி வந்துவிட்டது. அந்த யானைக்குட்டியை நரிக்குட்டி கண்டவுடனே கையும் காலும் உதரலெடுத்துக் கொண்டு இப்படிப்பட்ட காத்திரமான தேகத்தையுடைய மிருகத்தை இது பார்த்திராதபடியால் திகில்பிடித்து தன் தம்பிமாராகிய சிங்கக்குட்டிகளை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தது. ஒரு புதரிற்குள்ளிருந்த தனையிற்போய்ப் பதுங்கிக்கொண்டது. தமயனாகிய நரிக்குட்டி ஓட்டம் பிடித்ததைப் பார்த்து தம்பிகளாகிய சிங்கக்குட்டிகள் தங்கள் தாயாரிடத்திற்போய் நடந்த சங்கதிகளைச் சொல்ல, தாய் சிங்கக்குட்டிகளை நோக்கிச் சொல்லலுற்றது:—"என் வீரனுக்குப்பிறந்த சூரர்களே, நீங்கள் மூடத்தனஞ் செய்தீர்கள். இதை உங்கள் தகப்பன் கேட்டால் உங்களைத் தண்டிப்பார். ஏனென்றால் ஓடியொளித்த உங்கள் சகாவானவன் போர்க்களமறியாதவன்; யுத்தவரிசை தெரியாதவன்; மேன்குலத்திற் பிறந்தவனல்ல; வேலைசெய்து பிழைக்கிற சின்னச்சாதி. நீங்களோ அப்படிப்பட்ட சின்னச்சாதியல்ல: இராஜகுலத்திற் பிறந்தவர்களாயிற்றே. நீங்கள் என் வயிற்றிலிருந்தபோது உங்களை முக்கிப்பெற்றெடுக்க எனக்குச் சத்துவமில்லாமல் யானைக்காட்டிற் போயிருந்தேன். அங்கே யிருக்கிற யானையின் வாசனை பட்டவுடனே நீங்கள் என் வயிற்றிலிருந்தபடியே யானைமேற்பாய்ந்து மத்தகத்தைப் பிளந்து இரத்தத்தைக்குடித்து வெளிப்பட்டீர்களே. இப்பொழுது அந்த இராஜகேசரிக்குரிய வீரசூரவன்மை உங்களை விட்டெங்கேபோயிற்று? இது உங்களாலே வந்த குற்றமல்ல, என்னாலேவந்த குற்றந்தான். நான் அந்த சின்னச்சாதியை என் குடும்பத்தில் சேர்த்தபடியால் என் குடும்பத்திற்குத் தீங்கு வந்தது. அதனுடைய சகவாசத்தினாலே உங்களுடைய வீரசூரவன்மை குறைந்துபோயிற்று. நீங்களும் கையிலகப்பட்ட யானைக்குட்டியைவிட்டு வெறுங்கையோடே வந்து நின்றீர்கள். இனிமேல் அந்த சின்னசாதியினுடைய சகவாசம் உங்களுக்கிருக்கக்கூடாது அதவும் நம்முடைய வீட்டுவழி வரத்

கூடாது."—என்று சொல்லி நரிக்குட்டியை ப்பிழைத்து நன்குபடித்துத் துரத்திவிட்டது. டெண் சிங்கம் பெருந்தன்மையுள்ளதால் அந்த நரிக்குட்டியால் தன் குடும்பத்துக்குத் தீங்கு வந்த பொழுதும் அதை சின்னச்சாதி யென் றறிந்து நீக்கிவிட பட்டும் தீர்மானித்தது. அது தன் வயிற்றுப் பால் கொடுத்து வளர்த்த காரணத்தாலும் கருணைமிகுதியாலும் அதை தீங்கு விளைத்ததென்று கொன்று தின்னுமல் அடித்துத் துரத்துவதோடு திருப்தியடைந் தது. இதனால் பெரியோர் பெருந்தன்மை யும் சிறியோர் சகவாசக்கேடும் நன்றாக விளங் கியது.

---

## OUR PUZZLE CORNER.
## விடு கதைகள்.

மார்கழிமாதச் சஞ்சிகையில் 288-ம் பக்கத்தில் வெளியான பிதிர்களுக்கும் விசித்திரக் கேள்விகளுக் கும் கூட்டி அனுப்பப்பட்ட விடையை கீழ் பிரசுரிக்கி றோம்.

விடை.

I. Enigmas. பிதிர்கள்.

அ. 1. காயாமரத்தில்.
2. கண்டமாலை.
3. பாதாளம்.
4. தலையெழுத்து.

ஆ. 1. கண்ணும் காதும் ஒன்றாயிருத்தலால்
2. சுகம் துக்கம் இரண்டையும் பொருந்தியிருத்தலால்
3. கடல் நடு விருத்தலால்
4. இரவில் தோன்றுதலால்
5. காக்கும் பொழுது.

II. Beheaded word. தலைவெட்டு மொழி.

சருக்தம்-சருகு. ருக்தம்-ஒரு ஆயுதம். க்தம்-அழகு.

III. Riddle. விசித்திரக்கேள்வி.

மன்னு முகமாறும் வரைப்புயமாராறுமாய்,
என்னைத்து நீகா திருப்போனைப்—பொன்னம்,
பனையூர்க்குப்பாங்கிற் பிறந்தானென்றென்றும்
நலமுடனே செப்புவனே நான்.

---

## IMPORTANT NOTICE.

In connection with the "important notice" appearing in the second page, we invite the reader's attention to the following commendable resolution of the Panchayatdars of the Rural Credit Society of Valayankulam, Ramnad District. The President, in communicating the same, writes under date 2nd December 1917, as follows:—

Respected Sir,

"The splendid renown which your famous "Vivekachintamani" diffused throughout the world, electrified the hearts of many of the members of my society and the Panchayatdars have unanimously resolved to distribute copies of your Journal among the members. The society is resolved to store up all issues of this inestimable treasure dating from its birth, if all the books for the past years are available..."

---

The Headmaster of a Board Elementary School in Arantangi Taluk, Tanjore District, writes under date 26th Jan. 1918, as follows:—

"என் ஸ்கூலுக்கு சென்ற 1917 எப்ரல் முதல் விவேகசிந்தாமணி பத்திரிகை வருகிறது. தங்கள் சிந்தாமணியில் இது வரையில் வந்த பகுதிகளினு லேயே அநேக நூதன விஷயங்கள் என் மனதை ஆநந்தத்தில் மூழ்கச் செய்தன. தங்களுடையவும் சஞ் சிகையின் ஆயுளும் நீடூழிவாழ்க ஈசன் அருள் புரிவா ராக என்கும் நிறைந்த தடாபரனை இறைஞ்சுகிறேன்.

---

## NOTICE TO SUBSCRIBERS.

Subscribers are requested to remit their advance subscription for Volume XXVI (April 1918 to March 1919) of the "Vivekachintamani" before the close of the first week of April 1918. If not, they are requested to receive the April issue by V. P. P. for Rs. 5—2—0. Otherwise arrears rate will be charged as the price of paper is is exhorbitantly high.

## சந்தாதாரர்க்கு அறிக்கை.

காகிதவிலை அபரிமிதமாக உயர்ந்துவிட்டதால் நமது சந்தாதாரர்கள் அடுத்த 26-வது வாலியமுக் குரிய சந்தா தொகை ரூ. 5-யும் எப்ரல்மீ முதல் வாரத்தில் அனுப்பிவிடவேண்டுமாய்க் கோருகிறோம். அப்படி அனுப்பாதவர்கள் எப்ரல் மாசத்துச் சஞ் சிகையை வி-பி-போஸ்டில் ரூ. 5-2-0-க்கு பெற்றுக் கொள்ளவேண்டுகிறோம். தவறினால் ரூ. 6. கடன் விகிதம் சார்ஜ் செய்யப்படும்.

LALITALAYA, MYLAPORE. } Lalita Publishing Co., Managing Agents.

---

மரியாதை ராமன் அல்லது பாலநீதியாயதீபதி.

இது சிறுவர்க்கான கதைப் புஸ்தகங்கள் எழுதி யதில் தேர்ந்த வாசகி. திரு. அ. லக்ஷ்மணய பாரதியார் அவர்களால் எளிய நடையில் நாடகரூப மாயெழுதப்பட்டது. விலை அணா 6.

---


# "LEARN TO LIVE AND LIVE TO LEARN."

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God that sublime belief that seeing evil I yet have faith.'*

*"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

"பஞ்சவிம்சதிபாக்கியம்"] ஸத்தியம் வத—SPEAK THE TRUTH. ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE".




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம், 25.] பிங்களஹு பங்குனிமீ, 1918ஹு மார்ச்சுமீ. [சஞ்சிகை. 12.


### Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our "terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *At one month's credit* (*arrears rate*) : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with the Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued† in the middle of a Vol., *nor without three months' clear notice as required.*†
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

### General Notice.

i. The *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to "fluctuations" and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor*) ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, "VIVEKACHINTAMANI."
*Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore*.

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.* ☜

†Notice of discontinuance to have effect must be given in writing *full three months before the current Volum ends* (*in March*) and *after* all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say "that every effort will be made to trace them." "If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed" continues the same high authority, "I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should nvariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## "LEARN TO LIVE AND LIVE TO LEARN."

HUMAN WASTAGE FOR LACK OF TRAINING.

An interesting and suggestive article on Human Wastage for Lack of Training is contributed to the January issue of the *Mysore Economic Journal* by Sir Swire Smith, *Kt.*, LL.D., M.P. He appears to have made a special study of the subject, and all that he says with reference to the condition in England are applicable to the condition in India in an acute form. He recognises the vast extent of the mental and intellectual qualities of the people and says: "This stupendous foreign commerce ... owes its success to the combination of the three great forces of our country, capital, labour and ability—in a word to the general efficiency of our people. Now the sheet anchor of all this efficiency is to be found in the training of our people for their work and for their duties as citizens. He puts the problem as if it were in a nutshell when he proceeds to remark: "It is not education but ignorance and wastage that are so costly in the utilisation and development of our national resources. There is an endless variety in our industries, offering scope for the highest skill,—and demanding it—in science, technology, artistic designing, and craftsmanship, covering all the field of skilled and unskilled labour in manufacturing enterprises and in agriculture ......In these varied occupations there is work for all who will qualify for it and yet our so-called national system of education.........takes no heed of these definite requirements. The school training of the nation's children with its bookishness...ignores the training of the hands and the study of "things." He further aptly remarks: "I have seen many instances of boys who have passed through public schools with their own way to make in life—without the slightest idea of any calling or preparation for earning a living.........Vast number of boys get into "blind alleys," as telegraph boys, errand boys, minders of automatic machines, etc., all occupations leading them to unemployment at the very time when they should be efficient and independent workmen. And when unemployment comes these unskilled non-descripts rapidly drift into unemployables, and many of them approach the responsibilities of manhood as defiant and dangerous loafers with little resolution left for resisting temptation to crime. Such a wastage of human power at its best is a public calamity; unless checked, it will become a public danger......

And when I have seen a procession of the unemployed with the usual banner, "we claim to work", I have a strong desire to alter the inscription to "We claim the right to learn to work," for I have found on investigation that the overwhelming proportion of the unemployed have never learned a trade. In suggesting the remedy, the writer quotes the scathing criticism "that we manufacture everything there except men," and that we do everything "but, to brighten, to strengthen, to refine, or to form a single living spirit, never enters into our estimate of advantages," and endorses the recommendation of Mr. Ruskin, made fifty years ago "that all youths of whatever rank ought to learn some manual trade thoroughly." The writer further suggests: "Our expnditure on education forms the most direct equipment for national service of every man, woman and child...Just as it is the boy's first necessity to live, and his first duty to work, so it is the object of education to fit him for his work. The reasonable thing is that he must learn something of practical work while at school, and that his theoretical training must continue during some period of his active work afterwards. In the experience of every thoughtful person, education only ceases when life ceases."

No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-12.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

பிங்களவு பங்குனிமீ. } விவேகசிந்தாமணி { March-April. 1918.

FIRST ESTABLISHED, 1892. OUR JUBILEE YEAR, 1918.

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## "LEARN TO LIVE AND LIVE TO LEARN."
## "ஒப்புற ஒழுகு: ஓதுவதொழியேல்."

In our secondary schools, there is still need for the enforcement of the recommendation of Mr. Ruskin 50 years ago that "all youths of whatever rank ought to learn some manual labour; for, it is quite wonderful how much a man's views are cleared by the attainment of the capacity of doing any one thing well with his hands and arms."—*Sir Swire Smith, Kt., LL.D., M.P.*

"கல்வியைக் கல்: கற்றபடி நில்" என்பது மூத்தோர் வசனம். "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்." என்பது ஒரு உண்மையான பழமொழி. இந்த இரண்டின் கருத்தையும் கிரகித்து, கிரகித்தபடி சிந்தித்து, சிந்தித்தபடி அநுசரித்து, அப்பியாசத்தால் அநுபவம் முதிர்ந்தவர்கள் இதன் தலைப்பில் வரைந்துள்ள ஔவையாரின் இரண்டு முதுரைகளின் உண்மையின்னதென்பதை உள்ளபடி உணர்ந்தவர்களாவார்கள். "ஒப்புற ஒழுகு" தற்கு பழக்க வழக்கங்களால் நன்னடக்கை படிந்திருக்க வேண்டும், நன்னடக்கை படிந்துள்ளவர்களுக்குப் புதிது புதிதாய் இகவாழ்க்கையில் தர்ம சங்கடங்கள் நேரும். அந்த தர்ம சங்கடங்கள் ஒவ்வொன்றும் உண்மையாளரை நூதன உண்மைகள் விளங்க தர்ம ஸ்வபாவத்தைக்காட்டி கர்ம தர்மத்தை யுணர்த்தி மேன்மேலும் சீர்பெறச் செய்யும். பார்லிமெந்து சபை மெம்பராகிய ஸர் ஸ்வைர் ஸ்மித் அவர்கள் "மைசூர் இகானமிக் ஜர்னல்" என்னும் பத்திரிகைக்கு "சரியான தர்பீது இல்லாமையால் நேரும் மன்பதை நஷ்டம்" என்கிற தலைப் பின்கீழ் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். அதில் மனப்பழக்கத்தோடு கைப்பழக்கமும் மற்ற எல்லா இந்திரியங்களின் நற்பழக்கமும் சேர்ந்திருக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறார். கல்வியென்பது மனப்பழக்கம் ஆனாலும் அது ஏட்டுப் படிப்புமட்டும் ஆகாது. உண்மையாகப் பார்க்கில் மனம் என்பது இந்திரியங்களுக்கெல்லாம் உறைவிடமாய் அவை பழகுவதற்கு ஓர் இன்றியமையாத சமஷ்டி சாதனமாயிருக்கிறது. உதாரணமாக, தச்சு வேலை முற்றும் கைச்சாமர்த்தியத்தால் செய்யும் வேலையேயானாலும் அதற்கு வேண்டிய மனப்பழக்கம் அமைந்திராவிட்டால் தச்சன் செய்யும் வேலைசிறக்காது; பூட்டுவிட்டுப்போம். செய்யும் சாமான்களின் உறுப்புகள் ஒன்றோடொன்று உள்ளபடி சேர்ந்திசைந்து பூட்டு விடாது சிறக்க மனப்பழக்கத்தினாலுண்டான சாமர்த்தியம் வேண்டும். அந்த மனப்பழக்கம் தானும் கைப்பழக்கத்தோடு கண்பார்வையின்பழக்கமும் சேராமல் அமையாது. இப்படியாக எந்தவேலையும் இந்திரியங்களின் கூட்டுறவால் தானே நடக்கவேண்டியதா யிருப்பதால் இந்திரியங்களெல்லாம் நுட்பமாய் நோட்டமிட்டு திட்டமாய்ச் சேர்ந்துழைக்கப் பழக்கப்படுத்தப்பெறல் வேண்டும்.

ஒரு தேசத்தின் செல்வப்பெருக்கு அத்தேசத்து ஜனங்களின் புத்தி சாமர்த்தியங்களைப் பொறுத்ததாக விருக்கிறது. அந்த புத்தி

சாமர்த்தியங்கள் தானும் பாலர்களின் பள்ளிப் பழக்கத்தினால் ஏற்படவேண்டியதா யிருக்கிறது. இங்கிலாந்தைப்போன்ற சிறுதேசம் கடல் சூழ்ந்து விஸ்தீரணத்தில் குறைவுபட்டிருந்தாலும் ஜனத்தொகையில் அடர்ந்து பெருத்துவருகிறது. இப்படி சதா பெருத்துவரும் ஜனத்தொகையைப் போஷிக்க அத்தேசத்தில் தானே போதுமான வெள்ளாமை வசதி இல்லையென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆயினும் அத்தேசம் செல்வத்தில் மிகுந்து செழித்துவருகிறது வாஸ்தவம். இதற்குக் காரணம் என்னவெனில் அத்தேசத்தார் மொத்தத்தில் ஒரு பெரிய கடைக்காரர்கள் போலிருக்கிறார்கள் என்று சொல்வது வழக்கம்.

கடைக்காரன் தொழில் வாணிபம் செய்வதல்லவா! இவர்கள் விளைபொருள்கள் குன்றிய தேசத்தில் அடர்ந்து குடியிருந்துகொண்டு என்ன வியாபாரம் செய்து இப்படிச் செல்வவந்தர்களாய் விளங்குகிறார்கள் என்று யோசித்துப் பார்த்தால் அதன் உண்மை விளங்கும். "திரைகடலோடியும் திரவியந் தேடு" என்று சொன்ன வார்த்தையை இவர்கள் கைப்பிடியாகவும் கடைப்பிடியாகவும் பிடித்து அனுஷ்டித்து வருவதைப்போல் வேறு எத்தேசத்தாரும் அவ்வளவு நன்றாக அனுஷ்டித்து வருகிறதாகச் சொல்லமுடியாது. விளைபொருள்களை தூரதேசங்களுக்குச் சென்று விலைகொடுத்து வாங்கி கப்பலிற் கொண்டுவந்து அச்சரக்குகளை அவர்களுடைய தொழிற் பழக்கத்தாலும் சாமர்த்தியத்தாலும் அனேகவித சாமான்களாகச் செய்து கிரயத்துக்கு விற்று செல்வ விர்த்தியடைகிறார்கள். இந்தியாவில் எல்லா விளைபொருள்களும் கிடைத்தும் அவைகளை இங்கே தொழிற்படுத்திச் சாமான்களாக்காமல் அயல்தேசங்களுக்கு ஏற்றுமதி செய்தனுப்பிவிட்டு அவற்றையே பின்னும் ஒன்றுக்குப் பத்தாக விலைகொடுத்து வாங்கிப் பிழைக்கிறோம். இது நம் தேசத்தாருடைய அவலப் பிழைப்பாக விருக்கிறது. இதர தேசங்களிலுள்ள ஜனங்களெல்லாரும் நமது தேசத்தில் விளையும் பொருள்களைக் கையாடி ஜீவனம் செய்வதோடு செல்வவந்தர்களுமாய்க் கொண்டுவர, நாம்மட்டும் இயற்கையாய் எவ்வளவோ செல்வம் அமைந்தவர்களாயிருந்தும் செயற்கைச் சாமர்த்தியத்தால் அவைகளைச் சாமான்களாகச் செய்து பயன்பெறாமல் அயலார் நம்மையண்டிப் பிழைக்க, நம் தேசத்து ஜனங்கள் பரம ஏழைகளாகி அயலாரையண்டிக் கூலி வேலை செய்து அரைவயிற்றுக் கஞ்சி குடித்து அவதிப்படுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன?

அயல் தேசங்களில், முதலாளி, உழைப்பாளி, உழைக்கும் சாமர்த்தியம் என்கிற மூன்றும் சேர்ந்துழைப்பதினால் அவர்களுக்கு செல்வ விர்த்தியும் சம்பத்தும் மேன்மேலும் சித்திப்பதாயிருக்கிறது. இம்மூன்றும் ஒன்றுபட்டு "ஒப்புற" ஒழுகப் பழகுவதுதானே அவர்களுக்குள் தேசப்படிப்பு (national education) முறையாக இருந்துவருகிறது. அதையவர்கள் மேன்மேலும் சீர்திருத்திக்கொண்டே வருகிறார்கள். நம் தேசத்திலோ தேசப்படிப்பு என்பதே கிடையாது. மாடுகளைக் கொண்டுபோய் மேய்ச்சற்றரையில் விட்டு அவை வயிறாரவுண்டு கொழுக்கச் செய்ய முடியாமல், வரட்டுத் தரையில் அவைகளை மந்தையாக மறித்துப்போட்டு வைத்திருந்து சாயங்காலம் வீட்டுக்கோட்டிவந்து விடுவதுபோல, நமது குழந்தைகளைப் பேருக்குமட்டுமே "படிப்பிக்கிறோம்" என்று ஏட்டுப்படிப்பும் சோற்றுப்படிப்பும் சொல்லித்தருகிறார்கள். இவற்றில் "ஏட்டுப் படிப்பு" என்பது விஷயக்கிரகியமின்றி புஸ்தகத்தைப் பார்த்து நெட்டுருப்போடுவதற்குச் சொல்கிறது. அப்படியே "சோற்றுப்படிப்பு" என்பது சோறு கிடைக்கச் சொல்லிக் கொடுக்கும் படிப்பு அல்ல: ஆனால் படிப்பின் உத்தேசம் தேஹ மன இந்திரியங்களைப் பழக்கவேண்டியதாகவிருக்க அந்த உத்தம நோக்கத்தைவிட்டு சேவகத்துக்கமர்ந்து வயிறு பிழைப்பது



ஒன்றையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தப்படிப்பு படிப்போடு சேர்ந்ததல்லவென்று நாம் எடுத்துக்காட்டி ருசுப்படுத்தத் தேவையில்லை. இக்குற்றங்கள் ஆங்கிலேய தேசப் படிப்பு முறையிலிருப்பனவற்றை யெடுத்துத் தூற்றி அம்முறையைச் செம்மைப்படுத்த அவர்கள் முயற்சித்து வருகையில் நம் தேசத்தில் கஞ்சித்தொட்டியில் பஞ்சத்தினால் பிடிக்கப்பட்டவர்களுக்குக் கூழ் வார்ப்பதுபோல் கல்விப் பழக்கம் குன்றிய ஏழைகளுக்கு வெறும் ஏட்டுப்படிப்பை மட்டும் சொல்லிக்கொடுத்து அவர்கள் பாலப்பருவத்தை விருதாவாக்கி விடுகிறார்கள். படிப்பிற் செலவுசெய்யப் பணமில்லை பணமில்லையென்று இத்தேசத்து கவர்ன்மெண்டார் முறையிட்டுவர, ஆங்கிலதேசத்தில் படிப்புக்குச் செலவுசெய்ய எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செய்யலாம்: அறியாமையினாலேயே அதிக நஷ்டம் நேரிடுகிறது என்று வற்புறுத்திக்கூறி அந்தக் கொள்கையை மேற்கொண்டு படிப்பு முறையை விர்த்திசெய்து வருகிறார்கள்.

ஆங்கில தேசத்தில் வேலையற்றவர்கள் இல்லையென்று சொல்வதற்கில்லை. ஆனால் அவர்கள் எல்லாரும் ஒருவேலையும் செய்யப் பழகாத தோஷத்தால் வேலையற்றிருக்கிறார்களேயன்றி சரியானபடி கைப்பழக்கம் மனப்பழக்கம் பெற்றவர்களுக்கு வேலையில்லையென்பது இல்லை. அப்படியே இத்தேசத்திலும் எத்தேசத்திலும் உள்ள ஜனங்கள் மட்டும் உள்ளபடி உண்மையாய் உழைக்கப் பழகி அந்தப் பழக்க வழக்கம் தேசப்படிப்பு முறையாகப் படிந்துவிட்டால் அத்தேசத்து ஜனங்களுக்கு யாதொரு குறைவும் ஏற்படமாட்டாது. இந்தக் குறைவு நிறைவெய்தப் பழகுவதுதானே "உழைப்பே பிழைப்பும் பிழைப்பே உழைப்புமாய்" உழைக்கப் பழகுவதாகும். அப்படிப்பட்ட பழக்கம் பெற்றவர்கள் ஸ்வபாவமாகத்தானே "ஒப்புற வொழுகு: ஓதுவ தொழியேல்" என்னும் முதுரையை ஒட்டி நடப்பவர்களாவார்களென்பது நம்முடைய சித்தாந்தம். இதுவே ஆங்கில மஹான்களுடைய சித்தாந்தமும். மிஸ்டர் ரஸ்கின் 50 வருஷங்களுக்குமுன் தானே இதை வற்புறுத்தியிருக்கிறார்.

## "THE SOUL AS IT IS AND HOW TO DEAL WITH IT."

In the course of a highly interesting article under the above headline in the January issue of the "Hibbert Journal," Professor Gilbert Murray writes as follows:—

"Let me take a present-day instance of this battle between a soul and a Government, a very curious instance, because it is almost impossible without more knowledge than most people in England possess to say who was wrong and who was right." (He then gives the story of Mr. M. K. Gandhi and the passive resistance struggle he maintained in South Africa, *vide* "Vivekachintamani" issue for November 1913.)

"My sketch is very imperfect; but the story forms an extraordinary illustration of a contest which was won or practically won, by a policy of doing no wrong, committing no violence, but simply enduring all the punishment the other side could inflict until they became weary and ashamed of punishing. A battle of the unaided human soul against overwhelming material force, and it ends by the units of material force gradually deserting their own banners and coming round to the side of the soul.

"Persons in power should be very careful how they deal with a man who cares nothing for sensual pleasure, nothing for riches, nothing for comfort or praise or promotion, but is simply determined to do what he believes to be right. He is a dangerous and uncomfortable enemy because his body, which you can always conquer, gives you so little purchase upon his soul."

## ஆத்மசக்தியும் பலாத்காரமும்.

ஆத்மசக்தி யென்பது தேஹசக்தி யல்ல, மனோசக்தி யல்ல, தேஹ-மனோசக்தியுமல்ல. ஆனால் இந்த சக்திகளுக்கெல்லாம் மேலாயிருந்து இவைகளை ஆட்டுவிக்கும் சக்தியாகவிருக்கிறது. ஆத்மா என்றாலும் அறிவு என்

றூஹும் ஒன்றே. அந்த அறிவு விவேக விஜ்ஞானமுதிர்ச்சியினால், இந்த தேஹம் நானல்ல, இந்த மனம் நானல்ல, இந்திரியங்களும் நானல்ல, ஆனால் இவைகளெல்லாம் என்னிலிருந்து உண்டாகி, என்னையடுத்து எனக்குத்தொண்டு செய்யும் கருவிகளாயிருக்கின்றனவென்று ஐயந்திரிபற அறிந்து, அறிந்தபடி நின்று அதன் அதிகாரத்தை நிலைநிறுத்தி ஜிதேந்திரியனாய் இத்தேஹத்தை ஆண்டு வருகிறது. ஜிதேந்திரியன் என்றால் இந்திரியங்களையெல்லாம் ஜயித்தவன் என்று அருத்தம். இதற்கு ஆத்மஞானம் என்று பேர். இந்த ஆத்மசக்தியின் வன்மை அபாரமானதாயிருக்கிறது. அது எப்படியென்றால் சிற்றுளிக்கும் இருப்புப்பாரைக்கும் நெக்கு விட்டுப் பிளவுபடாத கற்பாறையானது "இளமரத்தின் வேருக்கு நெக்குவிடும்:"—அதுபோல பலாத்காரத்தினால் ஜயிக்கமுடியாத அகாதவீர சூரர்களும்கூட ஆத்மசக்தியினால் ஜயிக்கப்படுகிறார்கள். சூரபத்மன், இரணியன், இரணியாக்ஷன் முதலான அசுரர்களெல்லாரும் திரிலோகத்தையும் ஜயித்தாண்ட வீரர்கள். ஆயினும் அவர்கள் சக்தியெல்லாம் கடைசியில் அழிவுற்றது அவர்களிடத்தில் ஆத்மசக்தியில்லாத குறையொன்றினாலன்றி வேறில்லை. உண்மையிப்படியாக, இக்காலத்து கவர்ன்மெண்டை ஆத்ம சக்தியினால் ஜயிப்பது ஒரு பெரிய காரியமில்லையே. ஆனாலும் காலக்கொடுமையினால் அது பிரமாதமாகவே யெண்ணப்படுகிறது. ஏனெனில் கலிமுற்றின இக்காலத்தில் முரட்டுபலத்திலும் யந்திர சக்தியினும் நம்பிக்கையுள்ளவர்கள், எங்கும் அதிகமாய்ப் பரவியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆத்மசக்தி யின்னதென்றுகூடத் தெரியாது. கேவலம் "தேஹமே நான்" என்றுள்ள ஞானம் தடித்துள்ளவர்கள். தேஹத்தினாலேயே மனதையும் புத்தியையும் மனிதன் இச்சையையும்கூட வென்றுவிடலாமென்கிற நம்பிக்கை தடித்துள்ளவர்கள். ஸத்யம் கெட்டவர்கள், சங்கல்ப சித்தியின்னதென்றுணராதவர்கள். இப்படிப்பட்டவர்கள் செல்வாக்கு மிகுந்துள்ள இக்காலத்தில் மிஸ்டர் காந்தி தென்-ஆபிரிகாவில் அவர்களை ஆத்ம சக்தியினால் ஜயித்தது எல்லாருக்கும் ஒரு அதிசயமாகவிருக்கிறது. ஆனால் அவருடைய உண்மை விளங்கினதும் லார்ட் ஹார்டிஞ்சவர்களுடைய விவேகஞான நுட்பத்தாலன்றி வேறல்ல. மிஸ்டர் காந்தி ஒரு தர்மத்தை ஏற்படுத்த வெகு பாடுபட்டுழைத்தார். அந்த தர்மத்தை தர்மமென்று ஒப்புக்கொண்ட பின்னும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்காதவர்கள் செய்யும் அக்கிரமங்கள் இன்னும் அத்தேசத்தில் மலிந்தேதான் இருக்கிறது.

ஆயினும் ஆத்மசக்திக்கு உறைவிடமான இச்சா சக்தியினால் வெல்லப்படக்கூடாத அக்கிரமங்கள் ஒன்றுமில்லை. மண்வெட்டி, இருப்புப்பாரை, குந்தாலி, இவை மூன்றும், வலிதான ஆயுதங்கள். இம்மூன்றும் தனித்தனியாகவும் ஒன்று சேர்ந்தும் எவ்வளவு வலி பெற்றுள்ளதோ அதைவிட அதிகவலி பெற்றுள்ளது இச்சாசக்தியென்று திருமூலர் நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். தேஹத்தை ஹிம்சிப்பதினால் இச்சாசக்தியை வென்றுவிடலாமென்று நினைக்கிறவன் சுத்தநிர்மூடன். அந்த மூடாத்மா தன்னையும் அறியாமல் மஹாத்மாக்களாகவுள்ள பிறரையும் அறியாமல் கேவலம் மிருகப்பிராயமாயிருந்து கொடுமையிழைத்துக் கொடுவினைக்கு ஆளாகிறான். அவனை வழிப்படுத்த யமதர்மராஜா தர்மக்கொடி பறக்கவிட்டுக்கொண்டு ஓயாது ஒழியாது வேலைசெய்து வருகிறார். இதை யறியாது அந்தப் பூச்சி விளக்கில் விழுந்து சாவது போல் அந்த மூடாத்மா அதர்மத்தில் மோஹங்கொண்டு தர்மராஜாவின் ஆக்கினைக்குள்ளாகிறான். இதையெல்லாம் ஆங்கிலேயர் கற்றுக்கொண்டு நமக்கு உபதேசித்தால்தான் இத்தேசத்து நவநாகரிகங் கொண்டாடும் கற்றறி மூடர்களுக்கு நம்பிக்கை யுண்டாகும் போலும். கண்டு குலைக்கிற நாய்க்கு மோப்ப சக்தியுண்டு: கேட்டுக் குலைக்கிற நாய்க்கு மோப்பசக்தி யில்லை.



## PRACTICAL VEDANTA.

## அநுபவ வேதாந்தம்.

(ஸ்வாமி விவேகாநந்தர் செய்த ஓர் உபந்யாஸம்.)

வேதாந்த சாஸ்திரத்தின் அநுபவபாகத்தைப்பற்றி சிறிது ப்ரஸங்கிக்கும்படி சிலர் கேட்டுக்கொண்டமையால் அதைப்பற்றி இப்பொழுது உபந்யஸிக்கின்றேன். வேதாந்தத்தை வாக்மாத்ரமாய் வியவஹரிப்பதன்றி, அதை அநுபவத்திற்கு எங்ஙனம் அமைப்பது என்பதும் யோசிக்கற்பாலது. அநுபவத்திற்குதவா எத்தகைய ஞானமும், யாதொருபயனையும் கொடுக்கத்தக்கதன்று. ஆதலால், வேதாந்தமானது, மதமாக ஆகவேண்டுமாயின், அநுபவபாகத்தைத் தன்னில் அதிகமாய்க்கொண்டிருத்தல்வேண்டும். அது நாம் ஒவ்வொரு விஷயத்திலும் அநுஷ்டிக்கத் தக்கதாயிருக்க வேண்டும். இதுமாத்திரமேயன்றி, மதத்துக்கும் லோகாசாரத்திற்குமுள்ள மாயாகல்பிதமான பேதத்தையும் ஒழித்தல் வேண்டும். ஏனெனில் வேதாந்தமானது எங்கும் ஏகபாவத்தையே போதிக்கின்றது. மதத்தில் கூறப்பட்டுள்ள ஸகல அநுஷ்டான க்ரமங்களையும் சம்பூர்ணமாய் அநுஷ்டித்து நமது உலக வாழ்க்கை அவற்றின் மயமாகவே இருக்க முயலவேண்டும். இவ்வநுபவபாகத்தை நான் கிரமமாய் எடுத்துச்சொல்லுகின்றேன். ஆயினும் முதன் முதல் வேதாந்தத்தை நூல்வாயிலாக அறிந்து, பின்னர் அது அநுபவத்தில் எங்ஙனம் அமைகின்றதென்பதைப் பார்ப்போம். இச்சாஸ்த்ரமானது வனகுகைகளிலிருந்து படிப்படியாய் ஜனபாஹுள்யமான வீதிகளுள்ள நகரங்களுக்கு எப்படி சென்றது என்பதையும் பார்ப்போம். ஆனால் இதில் ஒரு விசேஷம் என்னவெனில் இவ்வேதாந்த விசாரங்கள் பெரும்பான்மையாய் வாநப்ரஸ்தர்களினிடமிருந்துண்டாகாமல், அநேக வியாபாரங்களையுடைய சிம்ஹாஸநாதிபதிகளாகிய சக்கிரவர்த்திகளாலும் பிரகடநம் செய்யப்பட்டிருக்கின்றன.

தபோதனராகிய ஆருணியென்னும் முனிபுங்கவருக்கு ச்வேதகேது என்றோர் புதல்வரிருந்தார். அவர் வனத்தில் வளர்ந்தவராயினும், அதை விட்டு நீங்கி பாஞ்சாலர்களின் நகரமடைந்து அங்கு அரசு புரிந்துகொண்டிருந்த ப்ரவஹணஜைவலி என்னும் மன்னனை அணுகலும், அரசனுக்கும் அவருக்கும் பின்வருமாறு ஸம்பாஷணை நடந்தது.

அரசன் :—"மரணாநந்தரம் பிராணிகள் இங்கிருந்து எங்ஙனம் செல்லுகின்றன, உனக்குத் தெரியுமா?"

"எனக்குத் தெரியாது."

அரசன் :—"இங்கே எப்படித் திரும்புகின்றன தெரியுமா ?"

"எனக்குத் தெரியாது"

"பித்ர்யாநமும் தேவயாநமும் உனக்குத் தெரியுமா ?"

அரசன் வேறு கேள்விகளும் கேட்டார். அவற்றினுக்கு விடைபகர ச்வேதகேதுவினாலாகவில்லை. ஆகையினால் அவனுக்கு ஒன்றும் தெரியாதென்று அரசன் சொல்லிவிட்டார். அச்சிறுவன் தன் பிதாவினிடம் திரும்பிவர அவரும் தனக்குத் தெரியவில்லையென்று சொன்னார். அவர் தம் குமாரனுக்கு அவற்றைக் கற்பிக்கவில்லை யென்பதன்று. மற்றென்னவெனில் அவருக்கே அவை இன்னவையெனத் தெரியா. ஆகவே ஸ்வேதகேது தன் பிதாவினுடன் அரசனிடம் திரும்பிச்சென்று, இருவரும் அவ்விரஹஸ்யத்தைத் தங்களுக்குபதேசிக்கும்படி அரசனைக் கேட்டார்கள். இந்த ரஹஸ்ய தத்வசாஸ்த்ரமானது இதுவரையில் அரசர்களுக்குள்ளேயே வழங்கிவந்ததென்றும், விப்ரர்களுக்கு அது தெரியாதென்றும் சொன்னார். ஆயினும், அவ்வரசர், அவற்றைப்பற்றித் தமக்குத் தெரிந்தவற்றை அவர்களுக்குபதேசிக்க வாரம்பித்தார். வேதாந்த சாஸ்த்ரமானது அரண்யங்களில் வசித்த தியாகயோக நிரதர்களான ரிஷிகளினால் மாத்திரம் வளர்க்கப்பட்டதன்றெனவும், அதின் வெகு சிறந்த பாகங்களெல்லாம் லோக

வ்யவஹாரங்களில் அதிகமாய்த் தலையிட்டுக் கொண்டிருந்த மேதாவிகளாலும் விர்த்திசெய்யப்பட்டு வந்ததென்றும் ஏற்படுகின்றது. கோடிக்கணக்கான ஜனங்களை நிரங்குசர்களாய் ஆளும் ஏகசக்ராதிபதியைவிட அதிகமான லோக வியவஹாரங்களுள்ள மனிதனை நம்மனதால் நினைப்பதுகடினம். ஆயினும் இச்சிம்ஹாஸநாதிபதிகள் மஹா ஆழ்ந்த விசாரணை கர்த்தர்களாகவு மிருந்திருக்கின்றனர்.

ஆகையால் எவ்விதத்திலும் இவ்வேதாந்தமானது அநுபவஸாத்யமென்றேற்படுகின்றது. மேலும் வேதாந்த சாஸ்த்ரத்திற்கு ஓர் சிறந்த வ்யாக்யானமெனத்தகும் பகவத் கீதையை நோக்குமிடத்து யாவரும் ஆர்சரியப்படும்படியாய் உபதேச ஸ்தானமானது குருக்ஷேத்திரத்தில் அமைந்துள்ளது. அவ்விடத்தில் தான் ஸ்ரீ கிருஷ்ணன் இச்சாஸ்த்ரத்தை அர்ஜுனனுக்கு உபதேசித்தார். கீதையின் ஒவ்வொரு பக்கத்திலும் ஜ்யோதிர்மயமாய்ப் பிரகாசிக்கும் கருத்தென்னவெனின் இடைவிடாது கர்மத்தைச்செய்யவேண்டுமென்பதே. ஆயினும் அங்ஙனம் சொல்லப்படுவதின் மத்தியிலேயே நித்யமான நிஷ்கர்மத்தன்மையும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதுதான் கர்மத்தின் ரஹஸ்யமென்று சொல்லப்படுவது. இதை யடைவதே வேதாந்தத்தின் முக்கிய கருத்தாம். நிஷ்கர்மத்தன்மை (நைஷ்கர்யம்) என்றால் செய்வனவற்றைச் செய்யாது சோம்பற்றனமாயிருப்பதென்று பொருளல்ல. அது வேதாந்தத்தின் கருத்துமாகாது. அஃதன்றேல், நம்மைச்சுற்றியுள்ள சுவர்கள் அறிவில் சர்வஸ்ரேஷ்டமாகும். ஏனெனில் அவைகளும் யாதொன்றும் செய்யாதிருக்கின்றமையால். மண்கட்டிகளும், மரத்தூண்களும், உலகத்தில் மஹாஞானிகளாய்விடும்: ஏனெனில் அவைகளும் தொழிலற்றிருக்கின்றமையால் காமக்ரோதாதிகளுடன் கூடிச்செய்யும் கர்மமும் நற்கருமமாகாது. அயலில் எது நடப்பினும் யாதையுங் கவனிக்காது நிச்சலமான மனதுடன் செய்யப்படும் கர்மமே வேதாந்தத்தின் பரமார்த்தமாகிய உண்மைக் கர்மமாம். இவ்வித மனச்சார்புடன் செய்யப்படும் கர்மந்தான் சிரேஷ்டமானதென்று நமக்கு அநுபவபூர்வகமாய்த் தெரிந்திருக்கின்றது.

யாதொரு கருமத்தைச் செய்வதற்கும் நமக்குப்பொதுவாய் உண்டாகக்கூடிய மனவெழுச்சி முதலியன வுண்டாகாவிடின், நாம் எங்ஙனம் எக்கருமத்தையேனும் செய்யமுடியும் என அடிக்கடி கேட்கிறார்கள். நானும் அநேக வருஷங்கள் அப்படியே நினைத்தேன். ஆனால் எனக்கு வயதும் அநுபவமும் அதிகரித்து வரவர, அது உண்மையல்லவென்று தெரிந்துகொண்டேன். காமாதி மனவெழுச்சிகள் எவ்வளவுக் கெவ்வளவு குறைகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு, செய்யப்பட்ட காரியம் சிரேஷ்டமாகின்றது. நமது மனதை இஷ்டம்போல் செல்லவிடுப்போமாகில், நமது சக்தி குன்றி, நரம்புகள் பலஹீநமுற்று, மனம் சஞ்சலமடைந்து கடைசியில் ஒரு காரியமும் ஆகாமற்போகின்றது. கர்மரூபமாய் மாற வேண்டிய சக்தியானது மனோவிகார ரூபமாய் பரிணமிக்கின்றமையால், அவ்வளவு சக்தியும் பயனற்றதாய்ப் போய்விடுகின்றது. மனது அமைதியாயும் ஒரு நிலைப்பட்டும் இருக்கும் பொழுதுதான் அவ்வளவு சக்தியும் பிரயோஜநம் பயக்கும். கருமம் செய்வதில் பயன்படும். இவ்வுலகத்தை யலங்கரித்த மஹா புருஷர்களின் சரித்திரத்தை நாம் கவனிக்கும் பக்ஷத்தில், அவர்கள் மஹாசாந்தமுள்ள மனோநிலைமை பெற்றவர்களென்று தெரியவரும். யாதொரு முகாந்தரத்தினாலும் அவர்கள் பின் வாங்குபவர் அல்லர். ஆகையினாலேதான், கோபாவேசமுள்ளவன் அதிகம் செய்யாதிருத்தலும், எப்பொழுதும் கோபங்கொள்ளாதவன் அதிகமானகாரியம் செய்யச் சக்தி உள்ளவனாயிருத்தலும் நிகழ்வது. கோபம், த்வேஷம், அல்லது வேறெவ்வித மனோவிகாரத்துக்கும் இடங்கொடுக்கிறவன் இவ்வுலகத்தில் யாதொரு பெரிய காரியத்தையும் செய்து முடிக்கச் சக்தியுள்ளவனாகான். அதிகமான



வேலையைச் செய்பவன்யாரெனில், சாந்தமும், க்ஷமையும் நிச்சலமுமுள்ள மனதையுடையவனேயாம்.

வேதாந்தமானது பரமார்த்திகத்தை முக்கியமாய் வியவஹரிக்கின்றது. ஆனால் பரமார்த்திகம் வியவஹாரிகத்தைவிட மேற்பட்டதென்பது நாம் எல்லோரும் அறிந்தது. இவ்வுலகத்திலுள்ள நமக்கு இரண்டு குணங்கள் ஸஹஜமா யமைந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று பரமார்த்திகத்தை வியவஹாரிகத்தோடு சேர்த்து ஒன்றுபடுத்துவதற்கும், மற்றொன்று வியவஹாரிகத்தை பரமார்த்திகத்துடன் சேர்த்து ஒன்றுபடுத்துவதற்கும் முயல்கின்றன. இதை அறிந்துகொள்வது மிகவும் கடினம். நான் ஏதோ ஒருவிதமான வேலையைத்தான் செய்யமுடியுமென்று நினைக்கிறேன். ஒருவேளை அவ்வேலையின் முக்கால் பங்கு கெட்டதாயிருக்கக்கூடும், அல்லது எனது கோபம் த்வேஷம், தன்நயம் முதலியவற்றின் பயனையும் இருத்தல்கூடும். ஆகவே, யாரேனும் ஒருவன் எனக்கு ஓர்வித சித்தாந்தத்தை யெடுத்துப் போதிக்கவருவானேல், அவன் முதல் முதல் சுயநயத்தை ஒழித்தவனாயிருக்க வேண்டும். அது அசாத்தியமென நான் நினைக்கின்றேன். ஆனால் ஒருவன் என் சுயநலத்துக்கும் தௌஷ்டியத்துக்கும் பொருந்தியிருக்கும் ஒரு ஸித்தாந்தத்தை யெடுத்து எனக்குச் சொல்லும் பக்ஷத்தில், உடனே எனக்கு ஆநந்தம்பொங்கி, அச்சித்தாந்தத்தை ஆமோதித்து விடுகிறேன். அதுவே எனக்கேற்ற சித்தாந்தமெனவும் கொண்டுவிடுகிறேன். இப்படியே வியவஹாரிகமும். எதை வெகு சுலபமாய்ச் செய்து முடித்துவிடலாமென்று நான் நினைக்கிறேனோ, அது உலகத்தாருக்கும் அவ்வாறேதானிருக்குமென நினைத்தல் சகஜமாயிருக்கிறது. நான்கடைக்காரனாயிருந்துவிடும் பக்ஷத்தில், இக்கடை வியாபாரமே உலகமுழுமைக்கும் சுலபமாய் அநுஷ்டிக்கக்கூடிய மதம் என்று நினைத்து விடுகிறேன். நான் திருடனாயிருக்கும் பக்ஷத்தில், திருட்டுத் தொழிலே உலகத்தில் சிரேஷ்டமானமதமென்றும், மற்றையவெல்லாம், அங்ஙனமல்லவெனவும் நினைத்துவிடுகிறேன். இதனால் நமது நிலைமைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப, எதெது சாத்தியமாயும் சுலபமாயும் நமக்குத் தோன்றுகின்றதோ, அது அதுவே சர்வசிரேஷ்டமென்றும் சர்வசாத்தியமென்றும் கொள்கின்றோமென ஏற்படுகிறது. இனி வேதாந்தக் கொள்கையினைக் கூறுவேன். அதில் அசாத்தியமான பாகமொன்றுமிலதாயினும், அதன் இயல்பு பரமார்த்திகத்தையே எப்பொழுதும் ஒட்டி நிற்பதென்றுணர்க. அது கூறும் சித்தாந்தம் எவ்வளவு உயர்ந்ததாயினும், அசாத்தியமானதன்று. சுருங்கச்சொல்லில், அது கூறும் சித்தாந்தமாவது "தத் த்வம் அஸி" "நீ அதுவாய் (கடவுளாய்) இருக்கிறாய்" என்பதே. வேதாந்த சாஸ்திரத்தின் பரமசித்தாந்தம் இதுவே. அநேக சாகோபசாகைகளாயும் வாதரூபமாயும் பிரிந்து கிடக்கும் வேதாந்தத்தின் முடிவான சித்தாந்தம் என்னவெனில் ஆத்மா தூய்மையும் முற்றுணர்வுமுடையது; அதனிடத்தில் ஜனனமரணங்கள் வெறுங் கற்பனையேயன்றி உண்மையல்ல வென்பதாம். ஆத்மா என்றும் பிறப்பிறப்பற்றது; ஆகவே நான் சாவேனென்பதும் அதற்காக நான் பயமுறுவதும் வெறும் மூடத்தனமேயாம். அவ்வாறே இதை என்னால் செய்யமுடியும், இதை என்னால் செய்யமுடியாது என்பனவும் மூடத்தனமே. நான் எல்லாவற்றையும் செய்ய வல்லேன். ஜனங்கள் தங்களிடத்திலுள்ள சக்தியை முதல் நம்பவேண்டுமென்று வேதாந்தம் கற்பிக்கின்றது. தனக்குப் புறம்பான சகுணமூர்த்தியினிடத்தில் நம்பிக்கையற்றவன் நாஸ்திகன் என சில மதங்கள் கூறுவதுபோல, தன்னில் நம்பிக்கையற்றவனை நாஸ்திகனென வேதாந்தம் சொல்லுகின்றது. உனது ஆத்ம மகிமையை நீ அறியாமலிருப்பதே நாஸ்திகமென வேதாந்தம் மொழிகின்றது. இவ்வெண்ணம் அநேகருக்கு விபரீதமெனத்

தோற்றலாம்; இது ஒருபோதும் கைகூடாது என்றும் நம்மில் பெரும்பான்மையோர் நினைக்கக்கூடும்; ஆனால் ஒவ்வொருவரும் அதைச் சாதிக்கக்கூடுமென்றே வேதாந்தம் மொழிகின்றது. ஆணென்பதும் பெண்ணென்பதும் குழந்தையென்பதும் ஜாதிபேதமென்பதும், ஆத்மசாக்ஷாத்காரத்திற்கு இடையூறாயிருக்குமெதுவும் இல்லை: அதாவது பொய்யென்பதே அதன் துணிபு. ஏனெனில் ஆத்மாவானது என்றும் இவ்வித விகாரங்களின்றி ஆநந்த ரூபமாயிருக்கின்றமையாலென்க.

பிரபஞ்சத்திலுள்ள சர்வசக்தியும் நம்முடையதே. நாம்தான் நம் கண்களுக்கு முன் கைகளால் தடவிக்கொண்டு இருட்டாயிருக்கிறதெனக் கத்துகிறோம். நம்மைச் சுற்றிலும் இருள் என்பது இல்லையென்று அறி. கைகளை எடுத்துவிடு, பிறகு ஆதிமுதல் இருக்கும் பிரகாசம் விளங்கும் இருள் என்றுமிருந்ததில்லை; துர்ப்பலம் என்றும் இருந்ததில்லை. நாம் மூடர்களாயிருக்கின்றமையால் நாம் அபலர்களென்றும் அசுத்தர்களென்றும் கரைகின்றோம். ஆகவே பாரமார்த்திக ஸத்தியமானது அநுபவசாத்தியமேயென்று வேதாந்தம் கூறுகின்றது. அதைத் தவிர மற்றவையெல்லாம் பொய்யே.

சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத்
தன்மை நாமம்
ஏதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவற
நின்றியக்கஞ் செய்யும்
சோதியைமாத் துவெளியை மனதவிழ நிறைவான
துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச்
சிந்தை செய்வாம்.

—தாயுமானவர்.

## PHYSICAL EXERCISE.

## தேகாப்பியாசம்.

மாசிமீ சஞ்சிகையின் (334-ம் பக்கத்தொடர்ச்சி.)

சரீராப்பியாஸத்திற்கு ஸாதகமான நான்காவது உபகரணம், ஸ்நானம். நாகரிகம்மேலிட்ட இக்காலத்தில், "டர்க்கிஷ்பாத்"* போன்ற அநேகவிதமான நூதன, ஆச்சரிய, பணச்செலவான ஸ்நானங்கள், தேகத்தை ஆரோக்கியம் செய்யக், கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. நமது சரீரத்தின் தோலின்மேல் கண்ணுக்குப் புலப்படாத எண்ணிறந்த அநேகமாயிரம் துவாரங்கள் அமைந்திருக்கின்றன. சரீராவயவங்களினால் தங்களுக்குத் தேவையில்லாமல் ரத்தத்தில் தள்ளப்படும் வஸ்துக்களில், கரிமலவாயு மூத்திராதிகளாக வெளியில் கழிக்கப்படுபவைகள்போக, பாக்கியிருக்கும் விஷநீர், நிணகல்மிஷம் முதலியதுகள், வேர்வை ரூபமாய் இச்சிறு துவாரங்களின் வழியாய், வெளியில் கழிக்கப்படுகின்றன. ஆகவே இத்துவாரங்களடைபடாமல் ஸ்நானத்தினால் சுத்தமாய் வைக்கப்படவேண்டும் என்று, நமக்குச் செம்மையாய் விளங்குகின்றது. போஜனத்துக்குப் பிந்தி ஸ்நானம் கூடாது என்பதும், குளிர்ந்த ஓடும் ஜலம் திடதேகஸ்தர்களுக்கு நல்லது என்பதும், ஸ்நானம்பண்ண பிராதக்காலம் சிரேஷ்டமென்பதும், எல்லாரும் அறிந்தவைகளே. நீந்துவது, சரீராப்பியாசத்தின் ஒரு பாகமாகி, சரீரத்தின் சகல அவயவங்களுக்கும், உறுதியை யுண்டாக்குவதினால், நீந்தி ஸ்நானம் செய்கிறதானது சரீராப்பியாசப் பயிற்சிக்கு ஒரு உபகரணமாக யாத்திரமன்றி, சரீரப் பயிற்சியின் ஒரு பிரிவாகவே ஆகிறது. ஸ்நானத்தினால் உடம்புக்கு உண்டாகும் பரிசுத்தத்தை, திருவள்ளுவர் குறளில், "புறந்தூய்மை நீரால் அமையும், அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்" என்று சொல்லி இருக்கிறார்.

* நீராவி நிறைந்த காற்றடக்கமான அறையில் சற்று நேரமிருந்து அதனால் உண்டாகும் வியர்வையினால் இரக்கத்திலுள்ள மஷ்டுக்களை நீக்கல்.



ஸ்நானத்தின் மஹிமை இதர ஜாதிகளைவிட நம்மவர்களால், செவ்வையாகத் தெரிந்து கொள்ளப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வருவதால் அதைப்பற்றி நான் அதிகமாக சொல்லத் தேவையில்லை.

இவ்விதம் மேலே கூறப்பட்ட அன்னபானாதி, தூக்கம், ஸ்வாஸம், ஸ்நானாதிகளின் விதிகளை அதிக்கிரமிக்காமல் சரீரப்பயிற்சியை ஒருவன் அப்பியஸிப்பானாயின் அதினால் அவனுக்கு வரும் நன்மைகளுக்கு அளவுமுண்டோ? இல்லை. இகலோக வாழ்க்கையால், நித்தியானந்த மயத்தை ஸாதித்துக் கொள்ளும்படியாக நாமடைந்திருக்கும் இச்சரீரத்தின் யந்திரமானது நாமெவ்வளவு அதின் உறுப்புகளை அலட்டுகிறோமோ, அவ்வளவும் அவைகளுக்கு நன்மைபயக்கும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது. நாம் வேலை செய்கையில் உடம்பும் அதின்உறுப்புகளும் நன்றுயசைந்து அலட்டப்படுகின்றன. அதினால், அவைகளுக்குள்ளே ஓடும் ரத்தக்குழாய்கள் அழுத்தப்பட்டு, ரத்தம் வேகமாய் உடம்பினவயவங்கள் முடிய ஓடிப் பரவுகிறது. அதினால் ரத்தாசய ஹிருதயம் விரைவாய் அடித்துக்கொண்டு ஜாஸ்தி வேலையை சீக்கிரம் செய்கிறது. வேலை செய்யுமிடம் நல்ல காற்றுள்ள விடமாயிருந்தால், ஸ்வாஸாசயமும், விரைவாய் பிராணவாயுவை ரத்தத்தில் செலுத்தி, ரத்தத்திலுள்ள கரியமலவாயுவை வெளியில்விடுகிறது. அதினால் ரத்தம் சீக்கிரமாய் சுத்திசெய்யப்பட்டு தேகத்தினவயவங்களுக்குப் பரவுவதினால், அவயவங்களெல்லாம் செவ்வையாய் ஊட்டங்கொடுக்கப்படுகின்றன. ஆகவே நல்லகாற்றில் வேலை செய்வதினால் சகல உறுப்புகளும் உறுதியையும், உற்சாகத்தையுமடைகின்றன. வயிறு குடல் முதலிய இரைப்பைகள், உண்ணுமுணவைச் செவ்வையாக ஜீர்ணித்து, ரத்தத்தில் கலக்கும்படிச் செய்கின்றன. ஆகையால் வேலை செய்யுந்தொழிலாளிக்கு எப்போதும் நல்லபசியுண்டாகிக்கொண்டிருக்கிறது. வீட்டிலடைபட்டிருக்கும் வேலைசெய்யாச் சோம்பேறியோ, ஜீர்ண சக்தியற்று, சோற்றிலாசையின்றி, அதினால் ரத்தம் கல்மஷமாகி, அதினால் அவயவங்கள் கெட்டுப்போய், தூக்கமின்றி, அநேக வியாதிகளுக்குள்ளாகிறான். வெளியில் வேலைசெய்யு முழைப்பாளியோ, பசிதாகாக்னியால் சந்தோஷத்தோடு புசித்து, சுத்தரத்தமுடையவனாய், சகல உறுப்புகளும் பலம்பெற்று, அயர்ந்த தூக்கத்தோடு பொருந்தி, நித்திய சுகியாயிருக்கிறான். ஆகையால் சுகமானது பணத்தாலுண்டாவதும் ஏழ்மைத்தனத்தால் அடையப்படாததுமல்ல. உண்மையில் ஏழை உழைப்பாளிகளே, பொதுவாகத் திடதேக சுகிகளாயிருக்கிறார்கள். மேலும், எந்த உறுப்புகள் அசைந்து வேலைசெய்து பயிற்சிசெய்கின்றனவோ அவைகள் தான் புஷ்டியடைகின்றன. ஸதா பேனாவைப் பிடித்தெழுதும் உத்தியோகஸ்தனின் கைபோலில்லாமல், ஸதாவேலைசெய்யும் கருமானின் கைகள் மிகவும் பருத்து பலமுள்ளவைகளாயிருக்கின்றன. ஸதா முடங்கிக்கிடக்கும் தையற்காரனுடைய கால்கள்போலிராமல், எப்போதும் நடமாடிக்கொண்டிருக்கும் தபால் சேவகனுடைய கால்கள் பலத்து உறுதிப்பட்டிருக்கின்றன. நீந்துதல், ஜிமனாஷியம் செய்தல் முதலிய பயிற்சிகளை அப்பியஸிப்பவர்களின் மார்பு விசாலித்தும், கல்வி சாஸ்திரக்யானிகளுடைய நெற்றி தலை அகன்று நீண்டும், கூலி மூட்டை சுமப்பவர்களின் முதுகு பலத்துமிருக்கின்றன. இவைகளினால், எவ்விதத் தொழிலில் இருப்பவர்களும், தங்களுடைய சகல அவயவங்களும் அசைந்தாடி உறுதிப்படும்படியான ஏதாவதொரு பயிற்சியை, தினந்தோறும், கொஞ்ச நேரமாவது பயிலவேண்டுமென்று சந்தேகமற நமக்குப் புலப்படுகின்றது. இவைகளையெல்லாம் தெரிந்தே, மூளை விசால சாஸ்திராதிகளில் ப்ரவர்த்தித்திருந்த நம்முடைய பிராம்மண முன்னோர்கள், பிரதிவைதீகனும், பிரதிகாலையிலும் அநேகமான சூரிய நமஸ்காரம் செய்யவேண்டுமென்றும்,

பிரதி மாலையிலும் கோவிலுக்குப்போய் முடியுமான வரையில் தோப்பிக்கரணம் போட்டுக்கொண்டு பிள்ளையாரை வணங்கி, பிறகு கூத்தாடி, கீர்த்தனம்செய்துகொண்டு நடாராஜரை ஸேவித்து, பிறகு நல்ல காற்றோட்டமும் புஷ்பச் சோலைகளுமமைந்த கோவில் பிரதக்ஷிண ஸ்தானத்திலிருக்கும், தக்ஷிணாமூர்த்திஸன்னிதியில் இளைப்பாறி ஜெபம்செய்து, மறுபடி முடிந்தவரையில் கோவிலை பிரதக்ஷிணம் பண்ணி, பிறகு வீட்டுக்குப் போகவேண்டும் என்று விதித்திருக்கிறார்கள். வேதாந்த விஷயத்தை அப்பியஸிக்கும் சாஸ்திரக்ஞர்களுக்கு, இப்பேர்ப்பட்ட விதிகள், எவ்வளவு ஜாக்கிருதையோடும் முன்யோஜனையோடும் ஏற்பட்டிருக்கின்றன பாருங்கள். படிக்கும் மாணாக்கர்கள் குளம் நதிகளில் நீந்திவிளையாடி புராதன விளையாட்டுக்களை விருத்திசெய்வதும், பலவிதத் தொழில்களிலமர்ந்த பெரியோர்கள், மேலே சொல்லப்பட்ட விதிப்படி கோவிலுக்குப் போவதும் சரீரப்பயிற்சியை மிகவும் விருத்திபண்ணும். ஆனால் அவைகளின் பிரயோஜனம் நமக்கு விளங்காமல், அவைகள் இக்காலத்திற்கேற்ற கோலமல்லவென்று நம்மால் திரஸ்கரிக்கப்பட்டு வருகின்றன. அவை பிசகானவை. தற்கால உபாத்திமார்கள், தங்கள் பையன்களுக்கு "டிரில்" "ஓட்டம்" முதலிய விளையாட்டுகளை, நல்ல காற்றுள்ள விடங்களில் பழக்கிவைக்கவேண்டும். 'டிரில்' 'ஓட்டம்' முதலியவை, மிகவும் சிலாகிக்கத்தக்க தேகப்பயிற்சிகள். இவைகளால் சரீரத்தின் சகல உறுப்புகளும் அதனின் இடங்களில் சரியாயமைந்து உறுதிப்பட்டு உருவழகும் உடம்பழகும் நமக்குண்டாகும். ஆனால், பலவித வேலைகளி லமர்ந்திருப்பவர்களும், வயதான பெரியவர்களும் அவைகளை அநுஷ்டிக்க முடியாது. அப்படி முடியாத சகலரும், ஓடுவதற்கடுத்தபடி மேலான தேகப்பயிற்சியாகிய நடத்தலைக்கொள்ளவேண்டும். தினம் பிரதி காலை மாலைகளில் சக்தியானுஸாரம் நடைச்சவாரி போகவேண்டியது அவசியம்.

தேகப்பயிற்சியின் முக்கிய மிப்படியிருக்க, நமது தேசத்தில் அநேக கனவான்கள், வீட்டிற்குள்ளேயே அடைபட்டு நல்ல காற்றற்று உடம்பை மெல்லிய வஸ்துவைப்போல் காப்பாற்றி வருகிறார்கள். ஐயோ, இவர்களுக்குச் சரீரசுகம் எவ்வண்ணம் கிடைக்கும். தஞ்சாவூர் சமஸ்தானம், நமது ராஜாக்களால் அரசுபுரியப்பட்ட காலத்தில், அதை ஆண்ட ஒரு அரசன் காற்றோட்டமில்லாத தனது அரண்மனையில் முடங்கி, யாதொரு செயலுமற்று, சிற்றின்ப வெள்ளத்தில் மூழ்கியிருந்த காரணத்தால் வியாதியால் பீடிக்கப்பட்டு ஆகாரமின்றி உற்சாகமற்று இவ்வாழ்வை வெறுத்து வருந்த, அரண்மனையின் க்யாதிபெற்ற வைத்தியர்கள் எவ்வளவோ விலையுயர்ந்த நூதன ஔஷதங்களைக் கொடுத்தும் அரசன் குணம் காணாதவனாகி, வைத்தியர்களையும் மருந்துகளையும் வெறுத்து, துக்கஸாகரத்தில் மூழ்கினவனாயிருந்தான். அரசனின் வியாதிக்குக் காரணம் தெரிந்துகொண்ட, பிராம்மணனொருவன் யோகிவேஷம் தரித்து, அரசனிடம் சென்று அவர் வியாதியின் மூலம் தனக்குச் செவ்வையாய்ப் புலப்பட்டிருக்கிறதாகவும் கூடிய சீக்கிரத்தில் அரசனை தான் சொஸ்தம்பண்ணுவது திண்ணமென்றும் உறுதிச்சொல்ல, யோகியாகக் காணப்பட்டபடியால் அவரிடத்தில அபாரசக்தியிருக்கு மென்று நம்பி அரசன் தன்னை அப்பிராம்மண யோகியிடத்தில் ஒப்புவித்துக்கொண்டான். அவ்யோகி, அரசன் தினம் காலையில் அரண்மனைப்பிராகார ராஜவீதி நான்கையும் கால் நடையாய் பிரதக்ஷிணம் செய்துவரவேண்டுமென்றும், பிறகு தெய்வத்தன்மை பொருந்திய தன் மருந்தை, பிறர்பார்க்காதபடி அரசனுக்கு அவனுடைய கண்களைக் கட்டிவிட்டு, தானேகொடுக்கவேண்டு மென்றும் கண்டிப்பாய்ச் சொல்ல, யோகியானபடி

கதைப் பூங்கொத்து.—இது, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் குமாரர் வி. சூ. நடராஜ சாஸ்திரியார் இயற்றியது. இதில் பல சிறு கதைகள் அடங்கியிருக்கின்றன. விலை அணா 0 2 6.



யால் மறுதளிக்கப்பயந்தும், தன் வியாதியின் கொடுமையினாலும், அரசன் ஒப்புக்கொள்ளும்படி நேரிட்டது. ஒருநாளும் நடந்து அறியாத அரசன், ரமணீயமான பிராதக்காலத்தில் மலர்ந்த பற்பல புஷ்பங்களின் வாஸனையோடு கூடிய ராஜப்பிராகாரங்களை பெருமூச்சுவாங்க, தேகம் வியர்க்க, மஹாப்பிரயாஸத்தோடு பிரதக்ஷிணம் செய்து வரவும், யோகி அவ்வரசனைக் கொஞ்ச மிளைப்பாறச்செய்து, பிறகு அவர் கண்களைக்கட்டிவிட்டு அவர் வாயில் பசுவந்தயிர்வார்த்து நன்றாய்ப் பிசைந்த மூளைமூளையான பழயது சாதத்தை வதக்கின சுண்டக்காய் வறுத்த கொடமிளகாய் ஊறுகாயோடு, கொஞ்சம் ஊட்டவும், அரசன் "ஓய், யோகீஸ்வரனே, இம்மருந்து தேவாமிர்தம் போலிருக்கிறதே, இது என்ன அற்புத மருந்து" என்றுகேட்டான். அதற்கு யோகி ஒருமண்டலம் (44—நாள்) அரசன் அவ்விதம் நடந்து அம்மருந்தைச் சாப்பிட்டால், அவன் முழுதும் குணமாகிவிடுவன் என்றும், பிறகு தான் அம்மருந்து இன்னதென்று அவருக்கு அறிவிக்கப்படும் என்றும் சொன்னார். அரசனும் சரியென்று உட்படவே, யோகியானவர் அரசன் நடக்கும் தூரத்தை நாளுக்குநாள் கொஞ்சங்கொஞ்சமாய் அதிகரிக்கவும், அத்தோடுகூட அவர் ஊட்டும் பழயதும் அரசனால் ஜாஸ்தி யிழுக்கப்பட்டு, சில தினங்களுக்குள்ளேயே அரசன் போஜனாதிகளை பிரியத்தோடும் ஆவலோடு முண்ணவாரம்பித்து, அயர்ந்த தூக்கமடைந்து, தேகம் திடப்பட்டு, நியாயஸ்தலத்துக்கேகி ராஜ்யபாரத்தை வஹிக்க ஆரம்பித்துவிட்டான். பிறகு தன் வியாதிக்கு மருந்தும் மூலமும் இன்னதென்று அரசன் தெரிந்து மஹா ஆச்சரிய முடையவராய், யோகிக்கு வெகுவாகப் பரிசளித்துப் பிறகு சரீரப்பயிற்சியின் முக்கியத்தைக் குறித்துத் தன் பிரஜைகளுக்கு விதிகளை ஏற்படுத்தினாராம்.

இவ்விதமாக சரீரப்பயிற்சியின் அத்யாவசியத்தை வற்புறுத்திய நான் இனி சரீரப்பயிற்சியின் (History) சரித்திரத்தை ஆதிகாலம் தொடங்கி ஆராயப் போகின்றேன். ஆதிகாலத்தில் போர்வீரர்கள் சரீராப்பியாஸத்தில் மிகவும் தேற்சிபெற்று, யானை, பாளி, புலி, ஸிம்ஹம் இவைகளின் பலமுற்றவர்களாய் அவைகளோடெதிர்த்துச் சண்டைசெய்தும், சண்டைகளில் கனத்த ஆயுதங்களை உபயோகித்தும் வந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் மிகவும் மதிக்கப்பட்டு, அரசர்களாகக் கொண்டாடப்பட்டு யாவராலும் கப்பங் கட்டப்பட்டார்கள். ஹோமர் காவ்யத்தில் சொல்லப்படும் ஹெர்க்கியூலிஸூம், பைபிளில் சொல்லப்படும் ஸாம்ஸனும் பாரதத்தில்வரும் பீமனும், மிகவுமுயர்வாகவும் பயத்தோடும் கொண்டாடப்பட்டார்கள். அவர்களைப்போல யுத்தத்தில் பலமுள்ளவர்களே அரசர்களாக நன்கு மதிக்கப்படவேண்டுமென்றும், மிக்க பலம் பொருந்திய போர் வீரர்கள் பலர் ராஜ்யத்தைக் காக்க வேற்படவேண்டும் என்றும், ராஜ்யத்தில் அவர்களுக்கே உயர்வான உன்னத பதமும் மரியாதையும் என்றும், அநுஷ்டானம் உண்டாயிற்று. ஸ்பார்ட்டா தேசத்தில் ஒவ்வொரு பிரபுவும் தேகப்பயிற்சியின் படிப்பை வெகு பிரயாஸத்தோடும் ஜாக்கிருதையோடும் பயின்றுவந்தான். தன் ராஜ்யத்துக்காக யுத்தத்தில் பெரிய காரியத்தை ஸாதித்தவனே அரசனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். யுத்தத்தில் முதுகுகாட்டித் திரும்பிய ஸ்பார்ட்டன், பெற்றோர்களால் திரஸ்கரிக்கப்பட்டு பத்தினியினால் அவமதிக்கப்பட்டு ராஜ்யத்திலிருந்து வெளியில் துரத்திவிடப்பட்டான். நமது தேசத்திலும் போர்வீரர்கள் யுத்தத்தில் மாண்டால் வீர சுவர்க்கமென்றும், பின்வாங்கினால் நரகமென்றும் விதி ஏற்பட்டது. பிறகு, நாகரிகம் விருத்தியாகவே மனிதர்களில் சிலர் மூளைவிசாலிக்கும் யுக்தி, புத்தி, விஷயப் பிரவர்த்திகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தவாரம்பித்தார்கள்.

ஐரோப்பா கண்டத்திலோ, என்றால், ரோம் ராஜ்யம் க்ஷீணித்து, அநேக தேசங்களாகப்

பிரிந்த போதிலும், சரீரப்பயிற்சியின் நன்மையும் போர்வீரத்தனமுமே ராஜாங்கத்தில் உன்னதமாகப் பிரகாசித்தது. படித்தவர்கள் மாந்திரீகர்களெனச் சந்தேகிக்கப்பட்டு, பேய், பிசாசுகளோடு சம்பந்தமுடையவர்கள்போல திரஸ்கரிக்கப்பட்டு, ராஜதண்டனைக்குள்ளானார்கள். வைதீகமார்களாகிய "போப்" "பிஷப்புக்களு"க்கு, அவர்கள் தங்களையடக்கியாளும்படியாக, ஐரோப்பிய அரசர்கள் முழுவதும் இடங்கொடுக்கவில்லை. சரீரப்பயிற்சியினனுகூலங்களை நன்குமதித்து, வாலிபர்கள் போர்வீரராகவே விருத்தி யடைந்தார்கள். "மிடில் ஏஜெஸ்", என்று சொல்லப்படும் நடு நூற்றாண்டுகளில் கூட, ஐரோப்பாவில் இரண்டு பிரபுக்களுக்குள் சச்சரவு நேரிட்டால், அவர்கள் இரண்டுபேரும் 'Duel' சண்டையை (த்வந்துவயுத்தத்தை) அதின் விதிப்படி செய்கிறது என்றும், ஜெயித்தவரின் பக்கத்தில் நியாயமிருக்கிறது என்றும் அனுஷ்டானம் அப்பியஸிக்கப்பட்டு வந்தது. இக்காலத்திலும், ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் மூளைவிசாலப் படிப்பே உயர்த்தியாக ஒப்புக்கொள்ளப்பட்டபோதிலுங் கூட, சரீரப்பயிற்சியின்படிப்பு கேவலமாக நன்குமதிக்கப்படவில்லை. ஜர்மெனிய தேசத்துப் பிரதிவாலிபனும், போர்வீரனாகப் பழக்கப்பட்டு, பலவந்தம்நேரிடும்போது, தனது தேசத்துக்காகச் சண்டைசெய்யும்படியான பக்குவத்தில் வைக்கப்பட்டிருக்கிறான். ஐரோப்பாவின் இதர தேசங்களிலும், அரசாங்கத்தார்கள் கல்விப் படிப்போடு கூட ராணுவப் படிப்பின் தேர்ச்சிக்கும் விதிகள் ஏற்படுத்தி, அதை விருத்தி செய்துவருகிறார்கள். ஆகையால் இழிவடைந்த நம்தேசத்துச் சிறுவர்களும், வாலிபர்களும் சரீரப்பயிற்சியை மிகவுமப்பியஸித்து, பட்டாளச்சிப்பாய்களாகவும், இராணுவ உத்தியோகஸ்தர்களாகவும் ஆகப் பிரயத்தனிக்க வேண்டும். அதற்கு நாம் அர்ஹர்களாக கவர்ன்மெண்டாருடைய நம்பிக்கையை நமது நன்னடக்கைகளினாலும், சன்மார்க்கங்களினாலும், விடாமுயற்சிகளினாலும் இன்னும் அதிகமாக பெறவேண்டும்.

கடைசியாக இதை நான் முடிக்குமுன் இன்னுமொரு விஷயத்தைப்பற்றி வற்புறுத்துகிறேன். அதென்னவென்றால், ஐரோப்பிய கண்டத்தார் சரீரப்பயிற்சியின் பலனினால் மாத்திரம், மற்றதேசத்தவர்களை அடக்கியாளுகிறார்கள் என்கிற வெண்ணம் தப்பு. ஏனென்றால், ஒருவனுக்குச் சரீரப்பயிற்சியும், அதினால் தேகதிடமும், தைரியமும் எவ்வளவு இருந்தபோதிலும் அவன் மனம் நல்வழிப்பட்டு அவனதின்படி நடந்து நிற்காவிடில், அவன் பிறரால் அடக்கியே ஆளப்படுவான் என்பது திண்ணம். உதாரணமாக, பல பலஹீனர்களும், சில திடஸ்தர்களான சிப்பாய்களும், சேர்ந்த ஒரு இடத்தில், ஒரு சிப்பாய் ஏதாவதொன்றைத் திருடிவிட்டானால் அதையறிய அவ்விடத்தில் எல்லோரையும் அரிசியைமெல்லச்சொன்னால், திருடின சிப்பாயின் வாயில் எச்சலூறாமல் அவன்மாத்திரம் அரிசியை மெல்ல சக்தியுள்ளவனா யிருக்கமாட்டான். அச்சிப்பாய் எவ்வளவு திடஸ்தனாயும், தைரியஸ்தனாயு மிருந்தபோதிலும் "திருடிவிட்டோம், திருடுவது பிசகு," என்கிற வெண்ணம் மனதில் குடிகொண் டிருக்கிறபடியால், மனப்பீதியால் வாயில் ஜலமூறுகிறதில்லை. அதினால் அவன் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனைக்குள்ளாவான். ஆகையால் சிருஷ்டியில் உயர்ந்த பிறவியாகிய மானிடனுக்குள் சிறந்தது அவனின் மனது (Mind). அதை மனிதன், அடக்கி அதை விசாலிப்பாய் உபயோகப்படுத்தி விருத்தி பண்ணுவதினால், தன்வேலையைச்செய்ய யானையை அடக்கவும், ஸர்க்கஸில் குதிரையை நாட்டியமாடச் செய்யவும், ஸிம்ஹத்தோடு விளையாடவும், தண்ணீருக்குள்ளாலே 'ஸப் மாரின் போட்டால்' பிரயாணிக்கவும், ஆகாயத்தில் 'பாலூனில்' சஞ்சரிக்கவும், கம்பியில்லாத் தந்தியில் பேசவும், திராணியுள்ளவனாக ஆகிறான். சரீரப்பயிற்சியும், சரீரதிடமும் எவ்வளவு இருக்கினும், மனம் விகாரமடைந்தால் அம்மனிதன் பிரயோஜனமடையான்.



## CHARACTER SKETCH: PALISSY THE POTTER.

## குணவலி விளக்கம்: பெயர்பெற்ற குலாலர் பலிஸ்ஸி என்பவர் சரித்திரம்.

மாசிமீ சஞ்சிகையின் (342-வது பக்கத்தொடர்ச்சி.)

அப்பால் பலிஸ்ஸி, குயவன் ஒருவனைச் சம்பளத்திற்கு அமர்த்தி மாதிரி கற்பித்து அம்மாதிரியாக மட்கலம் வனைவித்துத் தளுக்கிடும்பொருட்டு தாமும் களிமண்ணிற் சிறுபதக்கங்கள் செய்தார். இப்பாண்ட முதலியவைகளைப் பணிக்காய்ச்செய்து விற்குந்தனையும் அவருக்கும் குடும்பத்திற்கும் சம்ரக்ஷணைக்கு வழி என்ன? 'ஸேங்தீஸ்' நகரத்தில் பலிஸ்ஸியை நாட்பட அறிந்த சத்திரக்கான ஒருவன் இருந்தான். அவர் வெகு பணத்தை ஊதியமற்ற பரீக்ஷைகளில் வியர்த்தமாய் விரயஞ்செய்ததை அவன் அறிவான். அவர் புத்திமானல்லவென்று அவன் அபிப்பிராயத்திற் பட்டிருந்தாலும் இருக்குமாயினும் அவர் நெறிவிலகாத நிதானியென்று பூர்த்தியாய் நம்பியிருந்தான். அது அவர் அதிர்ஷ்டந்தான். அவ்வூரில் அவருக்கு அனுகூலி வேறு இல்லை. அந்தப் புண்ணியவான் ஆறு மாசகாலம் அவர் விசாரமற்றுத் தொழில் செய்துகொண்டுவர, அவருக்கு உண்ண ஆகாரமும் இருக்க வீடும் கொடுத்துதவச் சம்மதித்தான். பாண்டம் வனைய வைத்துக்கொண்ட குயவனுக்குப் பொருந்தினபடி சம்பளம் கொடுக்கவோ அவரால் மாளவில்லை. வீடு வெறித்திருந்தது. தட்டுமுட்டுகளை உடைத்துச் சூளையில்வைத்து எரித்திட்டது அறிவோமே. அவர் உடுத்த வஸ்திரம் மாத்திரம் மிஞ்சியிருந்து, அதை உரிந்துகொடுத்திட்டுத் தாம் நிர்வாணியாயிருந்தால் இருக்கலாமேதவிர மற்றப்படி அவரால் ஒன்றும் மாளாது. அறுதியில் அப்படித்தான் செய்தார். அவனுக்குச் செல்லவேண்டிய சம்பளத்தின் ஒரு பாகத்திற்குத் தாம் உடுத்த வஸ்திரங்களிற் சிலவற்றைக் கொடுத்தார்.

அதன்மேல் பலிஸ்ஸி செவ்வையாகச் சூளைக்களம்கட்டி எழுப்பினார். அதன் அகத்தில் ஓரிடத்தில் தீத்தட்டிக்கல் அடுக்கிக் கட்டியது படுமோசமென்று கைம்மேலே கண்டது. சூளையில் நெருப்புவைத்துச் சூடேறவும், தீக்கல் எல்லாம் சக்கை சக்கையாய்ப் பிளந்து தெறித்துப் பறந்து சிதறுண்ட துண்டுகள் சூளையில் வெந்த பாண்டத்தில் குத்திப் பாண்டம்எல்லாம் பழுதாய்ப்போயின. தளுக்கோ நன்றாய்ப் படிந்தது. படிந்தும் பயன் என்ன? பின்னும் ஆறுமாசம் உழைத்த உழைப்பெல்லாம் அடியோடே அவலமாய்ப்போயிற்று. பாண்டம் பழுதாகியும் தளுக்கு வாய்த்ததனால் சிலர் மித விலை கொடுத்து வாங்க விரும்பினார்கள். பழுதுற்ற பாண்டத்தை விக்கிரயஞ்செய்வது தமக்கு அபிமானபங்கமென்று பலிஸ்ஸி விற்க உடன்படாது தளுக்கேறிய பாண்டம் அனைத்தையும் சின்னாபின்னமாகச் சிதறடித்தார். இதைச் சுட்டி அவர் சொல்லியது:—"ஆனாலும் பெரிதல்ல. ஆசைபெருகப் பெருகத்தீரம் உண்டாய் எடுத்த கருமத்தைச் சித்தம் சலிக்காமல் தொடுத்துச் செய்துவந்தேன். இஷ்டர்கள் என்னைக் காணவரும் சமயங்களில் சில வேளை என் இதயம் துன்புற்று வருந்துவதுண்டெனினும், அதை நான் அவர்களுக்குச் சற்றாவது காட்டாமல் களிக்கதைசொல்லிப் பரிவுபண்ணி வருவேன். நான் பட்டபாடு ஒன்றல்ல-அனேகம். அவற்றுளெல்லாம் தீராப்பெரும்பாடு, ஊரார் அயலாராலல்ல, என் வீட்டாரால் எனக்கு நேர்ந்த நிந்தையும் இடுக்கண்ணுமே. சாகஸமின்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லையே:—இதை எண்ணாமல், அந்தத் துரோகிகள் நான் தொடங்கின கருமத்தை முடிக்காததைப்பற்றி என்னைக் குறைசொன்னார்கள். என் சூளைக்கு அனேக வருஷகாலம் ஒதுக்கு இல்லாதிருந்தது. சூளையில் பாண்டம் வேகவைத்திருக்கும்பொழுது, அடுத்துப் பல ராத்திரிகாலம் காற்றுக்கு மழைக்கு இலக்காக உறக்கமற்றுக் காவல் காத்திருந்தேன். என

க்கு ஆதரவு ஆறுதல் ஒன்றும் இல்லை. ஒரு பக்கத்தில் பூனைகள் அழும் சத்தமும் ஒரு பக்கத்தில் நாய்கள் ஊளையிடும் ஒலியும் இராமுப்பது நாழிகையும் செவி அதிரக் கேட்ட மணியமாயிருந்ததுதான் நான்பெற்ற சுகம். சில வேளை சூளையில் கடுங்காற்று பிரசண்ட வேகமாய் மோத, நான் தாங்க வசமற்று, வீட்டுக்குள்ளேபோய் ஒதுங்கியிருப்பது உண்டு. அர்த்த ராத்திரியிலும் பிற்சாமத்திலும் படுத்துக் கொள்ளப் போகும்பொழுது மழையில் நனைந்து விறைத்திருப்பேன். சேற்றில் விழுந்து வெளியே இழுத்துவிடப் பட்டவனைப்போல் என் தேகம் எல்லாம் சேறும் சகதியும் புரண்டிருக்கும். தீபமின்றிக் கஜ இருளில் திசை தெரியாமல் கள் உண்டவனைப்போலத் தள்ளாடித் தடுமாறித் தடுக்கி விழுவேன். விழித்திருந்ததுபற்றி எனக்கு அத்தனை அலுப்பும் ஆயாசமும் உண்டாயிருக்கும். இவ்வாறு நாட்பட உழைத்தும் என் உழைப்பெல்லாம் வியர்த்தமாய்ப் போனதை எண்ணி எண்ணி மிக்க மனத்துயர் அடைந்திருப்பேன். ஆனாலும், ஐயையோ! எனக்கு எங்கும் சுகம் இல்லை. தஞ்சமென்று வீடு தேடி விரைந்தோட, அது முன்பட்ட அவதியிலும் பதின்மடங்கு அதிக அவஸ்தையுள்ள எரிநரகக் குழியாய் முடிந்தது. அவ்வேளையில் என் மனம் என்ன பாடு தான்படாது. இத்தனை பெருந்துயர் அடைந்த நான் அப்பொழுதே சிரணித்து மாய்ந்து போகாமல் இன்றளவும் தப்பிப் பிழைத்திருப்பதை நினைக்கும்பொழுதெல்லாம் எனக்கு ஆச்சரியம் உண்டாகின்றது."

கருமம் இந்தப் பருவத்தில் இருக்கையில் பலிஸ்ஸிக்குக் குறவிசாரம் மேலிட்டு இனித் தான் நினைத்த கருமம் கைகூடுவது கஷ்டமெனக் கனதுயர் உண்டாய் அவர் நோயும் பாயுமாய் விழுந்து படாததொன்றொழிய மற்றொரு சுகத்தையும் அறியவில்லை. அவர் உடல் உதிரம்வற்றி உலர்ந்து வெற்றெலும்புக்கூடாகித் தரித்த வஸ்திரம் கந்தை கந்தையாய்க் கிழிந்து தொங்க, மனதிற் குடிபெரிய துக்கம் முகக்குறியால் விளங்க, ஸேந்தீஸின் அயலில் உள்ள வயல்வெளியில் திரிந்தார். அவர் எழுதிய வரலாறுகளில் விநோதமான ஒரு வாக்கியம் இருக்கிறது. அதில் அவர் தமது காலில் ஆடுசதை உலர்ந்து சுருங்கிப்போக, நாடா தொடுத்து இழுத்துக் கட்டிய பாதகோசம் நடக்கும்பொழுது தளர்ந்து குதிக்காலில் விழுந்ததென்று வெளியிட்டார். அவர் குடும்ப சம்ரக்ஷணையைத்தொட்டு நிர்விசாரமாயிருப்பதைப்பற்றி விட்டார் நித்தமும் அவரை நிந்திக்க, அண்டை அயலில் உள்ளவர்கள் சொல்லச் சொல்லக் கேளாமல் பேய்ப்புத்தி கொண்டு நடந்ததைத்தொட்டு 'இவன் யார்! லச்சைகெட்ட முட்டாள்' என்று திட்டத் தலைப்பட்டார்கள். கேட்டுக் கேட்டு அலுப்புற்று அவர் சிறிது காலம், முன் செய்த தொழிலை மீண்டும் தொடங்கி ஒரு வருஷம் சிரத்தையாய்ச் செய்துகொண்டுவந்து கையேறிய வருமானம் குடும்ப சம்ரக்ஷணைக்குக் கட்டிவந்தது. ஒருவாறு சீர்ப்பட்டாரென்று கண்டு அயலார்களும் அவரைச் சம்மானிக்கத் தொடங்கினார்கள். மீண்டும் அவர் தம் மனதிற்கு மாதுரியமாயிருந்த பரீக்ஷையைக் கைக்கொண்டார். முன்னமே தளுக்கிடும் சேர்வை கண்டறிய அவர் பரீக்ஷைசெய்த காலம்பத்து வருஷம். பின்னிட்டு அந்தச் சேர்வையைக் கஷ்டப்பட்டுச் சோதனைமேற் சோதனைசெய்து களங்கமற அறிந்து சாதிக்கப் பின்னும் எட்டு வருஷம் சென்றது. செய்யச் செய்ய அவருக்கு அனுபவம் முதிர்ந்து வியப்புருந்திறம் அமைந்தது. இன்ன பரீக்ஷைக்கு இன்ன சித்தி உண்டாமென்று அவர் எள்ளளவும் தவறாது அறிந்தார். செய்யும் பரீக்ஷைகள் சிதறச் சிதற, அவருக்கு* விர்த்திஞானம் மெத்தவும் உண்டாயிற்று. தப்பிப்போன பரீக்ஷைகள் அத்தனையும் அவருக்கு நூதனமாய்க் கற்றறியும் அத்தனை பாடங்களுக்குச் சமானமாகித் தளுக்கிடும் சேர்வையின் இயற்

* விர்த்திஞானம் (விவகாரவிவேகம்)=Practical knowledge.



கையையும், களிமண்ணின் குணத்தையும், களிமண்ணைப் பதப்படுத்தும் முறையையும், சூளைவைத்து நிர்வகிக்கும் சூக்ஷ்மத்தையும் பற்றி அவர் எத்தனையோ நுட்பங்களை அறிந்துகொண்டார்.

பதினாறு வருஷம் பாடுபட்டு உழைத்துத் தெளிந்தபின்பு தான் பலிஸ்ஸி அச்சமற்றுத் தாமும் குலாலன் என்று சொல்லத் தலைப்பட்டார். அந்தப் பதினாறு வருஷம் அவர் தொழில் பழகின காலம். அவர் ஆதியோடு அந்தம் தமக்குத் தாமே உபாத்தியாயரானார். அதன்மேல் அவர் பாண்டம் விற்றுத் தேறும் பணத்தைக்கொண்டு குடும்ப சம்ரக்ஷணை செய்து சுகித்திருக்கத்தக்க நிர்வாகி ஆனார். ஆனாலும் தாம் சாதித்தது போதுமென்று அவர் அம்மட்டில் ரமித்திருக்காமல் கூடுமளவில் பூரண நிபுணராகக் கருதித்தாம் கையிட்ட துறையில் ஓயாது உழைத்து படிப்படியாய்த் தேறிக்கொண்டுவந்தார். அவர் இயற்கைப் பொருள்களைக் கருத்துக் கூர்ந்து பார்த்து எதையும் தவறாமல் தமது பாண்டங்களில் வனையப் பயின்று இதில் அவருக்கு உண்டான அதிசய சித்தியைக்கண்டு, பெயர்பெற்ற ப்பன் பண்டிதர் அவரைச் சுட்டி "இந்தப்பதார்த்தவிஞ்ஞானிக்கு இத்தனை மகத்துவம் தெய்வத்தாலன்றி மற்றப்படி அமைவது அசாத்தியம்" என மொழிந்தார். அவர் வனைந்த சித்திரக்கிண்ணம் முதலியவைகளை வஸ்து அதிசயசாலைகளில் இப்பொழுது காண்பவர்கள் இவை கிண்ணங்களல்ல, நவமணிகளைத் தோற்கடிக்கும் அருமணிகளென்று பாராட்டுவார்கள். பாராட்டி யானைவிலை குதிரைவிலை கொடுத்து வாங்குவார்கள். *அக்கிண்ணமுதலிய பாண்டங்களுக்கு அணியாக அவர் வனைவன பெரும்பாலும் வனவிலங்கு, பல்லி, அவ்வூர் வயல்வெளியில் உள்ள பூண்டு செடி கொடி இவற்றின் பிரதிமைகளே. அவ்வுருக்களுக்கும் அவற்றால் விளங்கும் ஜீவமூல வர்க்கத்துக்கும் அணுவளவும் வேற்றுமை தோன்றாது. பலிஸ்ஸி வனைதொழிற்றுறையில் உயர்ந்துயர்ந்து உச்சத்திற்கு வந்தபோது தமக்கு இட்ட தொழிற்பெயர் "மட்கலம் வனைந்து நாட்டகத்துள்ள ஜீவ மூலவர்க்கம் சித்திரிப்போன்" என்பது.

ஆனாலும், பலிஸ்ஸி பட்ட உபத்திரவத்தை நாம் இன்னம் முற்றமுடியச் சொல்லவில்லை. இரண்டொரு வார்த்தை சொல்லி முடிப்போம். அவர் ப்ரொடெஸ்தாந்து கிறிஸ்தவர். அவர் காலத்தில் பிரான்சு தேசத்தின் தென்பாகத்தில் அவ்வர்ணத்தாருக்கு ரோமன்மதஸ்தரால் உபத்திரவம் நேர்ந்து அதிகரித்தது. அவர் பயங்காளியல்ல - அச்சமற்றுத் தமது கோட்பாடுகளை வெளியிட்டார். ஆனதுபற்றிக் கடு விஷங் கக்கும் பாஷண்டியென்று அவர்கள் அவருக்கு அஞ்சினார்கள். அவர் பகைஞர் கோட்சொல்ல, அதைக் கேட்டுச் சர்க்கார் சேவகர் ஸேந்தீஸில் உள்ள அவர் வீட்டில் நுழைந்து, தொழிற்சாலையின் கதவைப் பெயர்த்துத் திறந்துவிட, திரளாய்க் கும்புகூடிய கீழ்மக்கள் நுழைந்து அங்கிருந்த பாண்டம் அனைத்தையும் அடித்து நொறுக்கினார்கள். சேவகர் அவரை ராத்திரிகாலத்தில் 'போர்டே' நகரத்திற்குத் தீவிரமாய்ப் பிடித்துக்கொண்டுபோய், கழுவேற்றியாவது சிரம் சேதித்தாவது கொல்லும் தினம் வருந்தனையும் சிறையிருத்தினார்கள். பின்பு அவரைத் தீ வளர்த்துத் தகிக்கும்படி தீர்ப்புப் பிறந்தது. (Montmorency) மந்துமோரென்ஸி எனும் ஊரின் அதிகாரியாகிய மிக்க செல்வாக்குள்ள பிரபு ஒருவர் அவரைப் பிராண தண்டனைக்குத் தப்புவிக்கத் தலைப்பட்டார். அந்தப் பிரபுவிற்குப் பலிஸ்ஸிமீது இவ்வாறு கிருபை உண்டானது அவரில் அன்புகூர்ந்ததனாலு

*பல வருஷமுந்தி லண்டன் நகரத்தில் மிஸ்டர் பர்னல் தேடிவைத்திருந்த அரும் பொருள் வகை ஏலத்தில் விலைப்பட்டபொழுது, பலிஸ்ஸி வனைந்த சித்திரக்கிண்ணம் ஒன்றைக்கண்டு எல்லாரும் அதிசயப்பட்டார்கள். குறுக்களவு பன்னிரண்டு அங்குலமுள்ள அதன் மத்தியில் சிறு பல்லியின் பிரதிமை விந்தையாக வனைந்திருந்தது. அவ்விசித்திரக் கிண்ணம் ஆயிரத்தறுநூற்றிருபது ரூபாய்க்கு விலைப்பட்டது.

மல்ல, அவர் வழிபடும் சமயத்தை அபிமானித்ததனாலுமல்ல, தமது நயத்தை எண்ணியே. பாரீஸ்நகரத்திற்குச் சுமார் பன்னிரண்டு மைல் தூரத்தில் அஜருக்கு 'எகௌஎன்' என்று ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் அவர் அரணான அலங்கார மண்டபம் ஒன்று சமைப்பிக்கத் தொடங்கி அப்பொழுது வேலை நடந்துகொண்டிருந்தது. அதன் தளத்திற்குப் பளிங்குத் தளக்கிடத்தக்க கைத்தொழிற்றிறமையுள்ள குலாலர் பலிஸ்ஸி ஒருவர் தவிர அத்தேசத்தில் மற்றெவரும் இல்லை. அவர் இறந்தால் தமது வேலை வளம்பெற முடியாதென்று கண்டுதான் அந்தப் பிரபு அவரை மரணத்திற்குத் தப்புவிக்கத் தலையிட்டார். அவருடைய வாக்கு சகாயத்தால் பலிஸ்ஸியை அரசனுக்கும் அவருக்கும் நாட்டுப்பொருள் வகைவகையும் தொழிலாளியாக நியமித்துத் துரைத்தன சாஸனம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. ஆகவே அவர் அந்தக்ஷணமே 'போர்டு' நகராதிகார எல்லைக்கு அப்புறப்பட்ட இடம்பெற்றார். அவர் விடுதலை பெற்றுப்போய் வீடு சேர்ந்தபொழுது வீடு அங்கேது! அது பிரிந்து கலைந்து பாழ்பட்டு அலங்கோலமா யிருந்தது. தொழிற்சாலை மேற்கூரை சிதைந்துபோய் வெயிலுக்கும் மழைக்கும் இலக்காயிருந்தது. அவர் வனைந்த பொன்போன்ற பாண்ட முதலாய் அனைத்தும் தவிடுபொடியாய் நொறுங்குண்டிருந்தன. அப்பொழுது அவர் மனம் என்ன பாடுதான் படாது! அப்புறம் அவருக்கு அங்கென்ன வாஞ்சை உண்டு! இனி ஒரு நாளும் அவ்வூருக்குப் போவதில்லையென்று அடியில் ஒட்டிய தூசியை அகல உதறிவிட்டுப் பாரீஸுக்குப் போய் மேற்சொல்லிய பிரபுவும் ராக்கினியும் இட்ட வேலைகளைச் செய்துகொண்டிருந்தார். செய்துவரும் காலத்தில் அவருக்கு இருப்பிடம் 'த்யுஇலெரீஸ்.'*

பலிஸ்ஸி தம்மைந்தர் இருவரை வைத்துக்கொண்டு அவர்கள் கைத்துணைபால் குயக்கலம் வனைதொழில்செய்து வந்ததுமன்றி, வயசு பின்னிட்டதன்மேல், இத்தொழிலில் தாம் அறியாமற்செய்த பல பிழைகளைத் தம் ஊரார் தவிர்க்கவும் நன்றாய்த் தொழில் பழகவும் தக்க விதிகளை உணர்த்தும் புஸ்தகங்கள் எழுதிப் பிரசித்தம் செய்தார். மேலும், கிருஷித்தொழில், கோட்டை கொத்தளம் அமைக்கும் முறை' *சராசரநூல் இவைகளை உணர்த்தும் புஸ்தகங்களும் இயற்றினார். அவர் சராசரநூலைக் குறித்துச் சிலருக்குப் பிரசங்கமும் செய்தார். சோதிஷம், ரசவாதம், †மாரணவித்தை முதலிய ‡பேடிசவித்தைகள் அவருக்கு ஜன்மவிரோதம். அவர் அவைகளைக் கருவறுக்கக் கங்கணம் கட்டி நின்றார். இதனால் வெகுபெயர் அவருக்கு விரோதிகளானார்கள். அவர்கள் அவரைக்கண்ட இடந்தோறும் §பாஷண்டன் என்று காட்டிக்கொடுக்கப் பார்த்தார்கள். அவர்களால் அவர் மீளவும் சமயத்வேஷத்தின் பொருட்டுப் பிடித்துச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார். அப்பொழுது அவர் அற முதிர்கிழவன் - பருவம் எழுபத்தெட்டு. அது அவர் இடுகாட்டு வாசலில் நடுநடுங்கி அடிவைத்து நிற்கும் தள்ளாத பருவமாயினும் அவர் மனோதைரியம் சற்றுவது இளைக்கவில்லை. அவர் அனுசரித்த மதத்தைத் தள்ளவேண்டுமென்றும், தள்ளாவிடில் கொல்வது நிசமென்றும் சர்க்கார் அவருக்கு அச்சம் காட்டினார்கள். அந்த அசாத்திய புருஷரை அசைக்க யாரால் முடியும். முன் பளிங்குத் தளக்குச் சேர்வை கண்டன்றிப் பரீக்ஷை விடுவதில்லையென்று அவர் ஒரு பிடியாய் நின்றதுபோலவே சமய விஷயத்திலும் ஒட்டாரம் கட்டி நின்றார். மூன்றாவது ஹென்றி அரசர் அவரை ஒரு பொருளாய் எண்ணிச் சிறைச்

*பிரான்ஸதேசத்தில் ப்ரொடெஸ்டாந்து சமய பூர்வத்தைக் குறித்துப் பூராயமாய் ஆய்ந்தறியும் முயற்சியுள்ள சார்லஸ் ரீட் என்பவர் பலிஸ்ஸி வனைந்த சித்திரப்பிரதிமைகள் சுட்ட உலைக்களம் ஒன்றை இப்போது இருபதுவருஷங்களுக்குமுன் கண்டுபிடித்தார். மனுஷர் முகம், பூண்டு, செடி, விலங்குஜாதி இவற்றின் உருமாதிரியாகச் செய்த கருக்கள் சில தரையில் அகழ்ந்தெடுத்தார். அவைகள் சற்றுவது கெட்டுப்போகவில்லை. சாதாரணமாய் நால்வரும் அறிந்த அவர் முத்திரை அவைகளுக்கு இட்டிருந்தது. அவ்வுலைக்களம் இருந்தது லூவர் சித்திரகூடத்தின் கீழ்.

* சராசரநூல்=Natural History.
† மாரணவித்தை=Witchcraft.
‡ பேடிசவித்தை=Imposture.
§ பாஷண்டன்=Heretic.



சாலையத்தனை தூரம் போய் அவருக்குப் புத்தி புகட்டி மதக்கோளைத் தள்ளிவிடும்படி அவர் மனதை வசப்படுத்திப் பார்த்தார். அரசர் மொழிந்த வாக்கு இது:—"அப்பா, தாயாருக்கும் நமக்கும் நாற்பத்தைந்து வருஷகாலம் நீ தொண்டுசெய்துவருகிறாய். உன் சமயத்தாரைத் தீயிக்கு இரையாக்கியும், சர்வசங்காரம் செய்தும் வர, நீ ஒருவன் மாத்திரம் அச்சமுற்றுக் கொண்ட கொள்கையைக் கைவிடாதிருக்கிறாய். இதுவரையும் கண்சாடையாய் விட்டிருந்தோம். இப்பொழுது 'கைஸ்' பக்ஷத்தாரும் நம் பக்ஷத்தாரும் நம்மை இருக்கவிடாது நெருக்குகிறார்கள். இனி உன்னைச் சத்துருக்கள்வசம் ஒப்புவிக்காமல் தீராது. உன் மதத்தை இன்று கைவிடாதிருப்பாயானால் நாளை அக்கினிச் சூளையில் தகிக்கப்படுவாய். இது நிசமென்று அறி." இதுகேட்டு, வெல்லரிய அவ்விருத்தர் பின்வருமாறு மறுமொழி பகர்ந்தார். "ராஜசிங்கமே, தேவமகிமைக்காகப் பிராணத்தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிறேன். எனக்கு இரங்குவதாகப் பலமுறை ராஜவாக்குப் பிறந்தது. 'நம்மை இருக்க விடாமல் நெருக்குகிறார்கள்' என மொழிந்த மன்னவரைக்குறித்து இப்பொழுது பரிதபிக்கிறேன். நம்மை இருக்கவிடாமல் நெருக்குகிறார்கள் என மொழிந்தது, வேந்தனே, தங்கள் ராஜரீகத்திற்குத் தகாது. என்னை நெருக்க ஒருபொழுதும் தங்களாலும் ஆகாது, 'கைஸ்' கட்சியாராலும் மாளாது, தங்கள் பக்ஷத்தார் சமஸ்தராலும் இயலாது. இறப்பது இவ்வகையென்று எனக்குத் தெரியும்." இப்படிச் சொன்ன பலிஸ்ஸி அடுத்து விரைவில் ரத்தசாக்ஷியாய் இறந்துபோனார்; கழுவேறி அல்ல, ஒரு வருஷமளவும் சிறையிருந்து வருந்திச் சிறைச்சாலையில் அவர் இறந்தார். சத்தவீரர்க்குரிய உழைப்பும், எவர்க்கும் இல்லாத பொறையும், கோணாத நேர்மையும், வெகு அபூர்வ உசித சுகுண சுகிர்தங்களுமுள்ளவரென்று குறிக்கொள்ளப்பட்ட பலிஸ்ஸியின் வாழ்நாள் இவ்வாறு கலகமும் கலக்கமுமின்றி முடிந்தது. (முற்றிற்று.)

—*From Smiles.*

## THE STORY OF SAVITHRI.

### சாவித்திரி சரித்திரம்.

கடலாடை சூழ்ந்த விக்காசினியின்கண் நீர்வளம், நிலவளம், பயிர்வளம், குடிவளமெனும் பற்பல வளங்களும் பொலிவுற்று விளங்கா நிற்பதும், மலையரண், காட்டரண், மதிலரண், நீரரணாகிய நால்வகை யரண்களுஞ் சூழ்ந்து பூமிதேவியின் முகத்திலகமோ, திருமகளுறையுஞ் செந்தாமரை மாடமோ, கலைமகளிலங்குங் கமல வெண்பீடமோ, என்றேக்கங் கொள்ளத் தக்க யாவராலும் புகழப்பெறும் மந்திரநாடெனு மோர் நாடுளது. அதனை அசுவபதியெனு மோரரசன் செங்கோலோச்சி வருவானாயினன். அவ்வரசன் தீனதயாளனும், விஞ்சையருக் கனுகூலனும், வாய்மையினுந் தூய்மையினும் சிரேஷ்டனாகக் கருதப்பெற்றிருந்தமையின் குடிபடைகள் யாவரும், அவன் மீது அளவிறந்த பிரேமையுடையோரா யிருந்தனர். இங்ஙனம் ஒன்றிலொன்று குறைவின்றி யாவும் நிறைவுற்றிருந்தும், மகப்பேறொன்றின்றி மனமடி வெய்த வைத்தது. ஆகவே தனக்கு மக்கட்பேருண்டாக வெகுகாலம் ஈசுவரனைப் பூசித்து வருவானாயினன். ஈற்றிலே கருணையுங்கடவுளின் திருவருளின் செயலால் ஓர் பெண்மகவு உற்பத்தியாயினள். அரசன் உவகைபூத்து உள்ளம் களித்து மஹோற்சவம் கொண்டாடி அக்குமரிக்கு சாவித்திரி யெனும் நாமகரணம் சூட்டினான்.

சாவித்திரி எனும் அப்பெண்மணியும் அழகிலும், விவேகத்திலும், நற்குண நன்னடக்கைகளிலும் தேர்ச்சிபெற்றுக் கன்னிமைப்பருவம் அடைந்தனள். தன் தோழிகளோடு அரசன் உத்யானவனங்களிற் சென்று பூக்கொய்வதும், மெய்வருந்தக் கைசலிக்க, குறுவியர்வை முத்துப்போன்று முகத்தினிலங்க, சேடியரோடு அம்மானை, பந்து, கழங்கு, ஊசல் முதலிய ஆடுதலும், பக்கத்திராநின்ற ஆசிரமங்களுக்குச் சென்று அங்கு உள்ள தபோதனர்களைக்கண்டு வணங்குதலும், அவர்கள்

உபதேசிக்கும் நன்மொழிகளைச் சிரமேற்பூண்டு தெய்வ வழிபாட்டினாற்றன் காலத்தைக் கழித்து வருவாளாயினள்.

இப்படி வளர்ந்துவரும் தம் குமரிக்கு மணப்பருவமெய்தியும், இன்னும் பரிணய முடியாதிருப்பதைப்பற்றி அரசர் 'கையறு கவலைசுற்ற உள்நிறை மானந் தன்னை உமிழ்ந்தெரி யுயிர்ப்பது'போன்று விசனசாகரத்தில் ஆழ்ந்திருந்தனர். தம் குமரியின் குணத்துக்குத் தகுந்த மணவாளன் வாய்க்கவேண்டுமெனக் கோரித் தெய்வத்தின்மீது பாரத்தைப்போட்டுத் தங்கள் வாழ்நாளைக்கழித்து வருவார்களாயினர். சாவித்திரிக்கும் தன் தாய்தந்தையர் படும் துன்பம் தெரிந்திருந்தும் தான் அறிந்திருந்த அரசகுமாரர்களில் தனக்குச் சரியான நாயக னின்மையால் கன்னிமையே பூண்டு ஒழுக நேர்ந்தது.

ஆயினும் தெய்வச்செயலைக் கண்டார் யார்? பெற்றோருடைய எண்ணம் வீண்போகாது அவரது விருப்பம் நிறைவேறச் சமயம் கிட்டிற்று. என்னாளும்போல் சாவித்திரி எனும் பெண்மணி ஓர்நாள் கல்விபயிலுவான் கருதி இருடிகளின் ஆசிரமம் சென்றநாளையில், அங்கு ஓர் வாலிபன் அந்தணர் துதிசெய் சுந்தர முகமும், பெருந்தன்மையான பார்வையும், அகன்ற மார்பும், நீண்டுயர்ந்த தோட்களும், பரந்த நெற்றியும், சிறந்த குணங்களும் எழில்பெற விளங்கும் வதனச்சாயலுமுடைய ஓர் இளவல் அங்கே நின்றிருக்கக் கண்டனள். கண்டதே கால்கள் பின்வாங்கி நடக்கவொட்டாது தள்ளாடின. எங்குநோக்கினும், அவள் மனத்தின்கண் அவனது தாமரைத் தளம் போன்ற கண்களும், இனிமை பயக்கும் வதனமுமே தென்பட்டன. இவ்வாறாக இவள் அவனது வதனத்தைப் பார்த்த வண்ணமேயிருக்க, அவனது கண்களும் இவளைப் பார்க்க நேர்ந்தது.

"கண்ணொடுகண்ணினை நோக்கொக்கின் வாய்ச்
சொற்கள் என்னபயனு மில"

என்றவாறு அவனது கண்களும், அவளது கண்களும் ஒருகணப்போழ்தில் தம்மில் உறவாடின. சாவித்திரி அவ்விடத்தை விட்டு அகன்றும் அவன் வதனச்சாயலின் எழில் நீங்காது வருத்தியது. அவ்வாலிபனும் அவளது கார்முகிலொப்பக் கறுத்திருக்கும் கருங்குழலும், வேலொக்கு விழியும், வில்லொக்கு புருவமும், பல்லொக்கு முத்தும், பவளத்தைபொத்த இதழும், பொருந்திய சந்திரனையொத்த முகத்தில் தன் நாட்டத்தை வைத்து மெய்மறந்தான். இவ்வாறாக நிகழ்ந்து சத்தியவான் எனப் பெயரோடு போந்த அவ்விளவல் தனது இருப்பிடம் சென்றனன். சாவித்திரிக்கோ பாடமே ஒப்புவிக்கத் தடை நேரிட்டது. முகமோ விசனத்தால் கூம்பியிருந்தது. இதனை யுணர்ந்தே இருஷி ஆ! சாவித்திரி, இஃதென்ன இன்றிவ்வாறு பாடம் ஒப்புவிக்காதிருக்கின்றனை? உன் மனத்தின்கண் யாது துயரம் நேர்ந்தது கூறுதி? எனத் திடப்படுத்திக் கேட்க சாவித்திரி தன் காதலன் அவனே யென தன்னுள் தீர்மானித்து தனக்கு நேர்ந்த வரலாற்றைக் கூறினள். இருஷி உடனே அடி "அணங்கே! அவன் பேர் சத்தியவான். அவன் தந்தை தியுமற்சேனரென்பார். ஓர்கால் சாலவதேசத்தை ஆண்டிருந்தனர். தனது பகைவர்களால் தோல்வியடைந்து பகைவர்கள் நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளவே இவ்வனம்போந்து துறவுநிலை அநுஷ்டிப்பான் வந்தெய்தினர். அவரது மைந்தன் இச்சத்தியவான்" எனச் சொல்லினர். இச்சங்கதியை யறிந்ததே சாவித்திரியின் சந்தோஷம்செப்பத்தரமன்று. விரைவிற்றன் அன்னையாரிடமும், தந்தையாரிடமும், தனக்கு நாயகன் வாய்க்க நேர்ந்தமையைப்பற்றியும், இருஷியால் அவனது வரலாறு தெரிந்த விதத்தையும், சொல்லினள். இதைக்கேட்டதே அரசன் "குமாரியே! நமக்கு மித்திர சிரேஷ்டரான நாரதரை வினவவேண்டும். அவர் திரிகால ஞானியாதல்பற்றி அவர் கூறின் அதுவே பொருந்தும்" எனச் சொல்லினர்.



நாரத ரிஷிசிரேஷ்டர் வரவே, அவருக்கு வேண்டிய மரியாதைசெய்து தனக்கிருக்கும் எண்ணத்தின் முடிவைத் தெரிவித்தான். நாரதர் இதைக் கேட்டதே தலையைத் தொங்கவிட்டு "ஆ! மகளே!! என்ன ஒரு தப்பான எண்ணத்தைக் கொண்டனை? அவன்மீதிருக்கும் பற்றை ஒழித்துவிடுமின். இனியாராவது உனக்கிஷ்டமான வேறு நாயகன் இருப்பனேல் வரிக்கலாம்?" என விசனமுகத்துடன் மொழிந்தார். சாவித்திரி உடனே கைகூப்பி எனையனே!" காதலென்பது சாமான்யமன்று. நாம் அதற்கு அடிமை. காதலில தேல்வாழ்வுமின்று. காதலே இவ்வுலக வாழ்க்கை இன்பம் பயப்பதுவும். அப்படியிருக்க நான் ஒருவர்பால் காதல் கொண்டுவிட்டேன். அக்காதலை மாற்ற முடியுமா? காதலானது நாம் சொன்னபடி நடக்கவியலாதது. அதற்கு நாம் அடிமைகள். இக்காதலை உண்டுபண்ணிவிட்ட கடவுளை நொந்துகொள்ளவேண்டும். இவ்வாறு ஓராடவன்மீது காதல்கொண்டதை மாற்றும்படி சொன்னீரே அது கற்புடைப் பெண்டிர்க்கழகாமோ? ஏதோ சிறியாளாகிய எனது வார்த்தைகளில் குற்றங்குறைகளிருப்பினும் க்ஷமித்து என் மனோரதத்தை யீடேற்ற வேணுமென்று நாரதர் காலில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தாள். நாரதரும் ஆச்சரிய வசத்தராகி அரசனை நோக்கி மன்னவ! அவ்வாலிபனது நற்குணநன்னடக்கை, விற்பன விவேகங்களைப்பற்றி ஒன்றும் விசாரிக்க வேண்டியதில்லை. குணமே ஓருருவெடுத்துதித்தவன். ஆயினும் விதிவலியை யோஜிக்குங்கால் அவனுக்கு இன்னும் பன்னிரண்டு மாத ஆயுளே உள்ளன; இதனால் உமது பெண்ணுக்கு யாதுசுகம் சம்பவிக்கப் போகின்றது! கடைசியில் விசன சாகரத்திலழுந்திக்கிடக்கவேண்டி வருமாகையால்தான் எனக்கு வாதனையாயிருக்கிறது" எனத் திருவாய் மலர்ந்தருளினர். அதற்கு சாவித்திரி" என் முழு முதற்கடவுளே! தாங்கள் செப்பிய மொழி நன்றன்று. எப்பொழுது என்மனமானது ஒருவர்பாற் சென்றுவிட்டதோ அப்பொழுதே அவருக்கு நான் கடமைப் பட்டவளானேன். சுகமோ துக்கமோ எல்லாம் அனுபவிக்க வேண்டியதுதான். கற்புடைப் பெண்டிர்க்குக் கொழுநனை தெய்வமலாற் பிறிதொரு தெய்வமுளதோ? " என வணங்கிக்கூற," "மகளே! உன் இஷ்டப்படியே நிறைவேறுவதாக, நீ உன் கணவனோடு சுகமாய் காலங்கழிக்க கடவுள் அனுக்கிரகிப்பாராக" என வியந்தவராய் நாரதர் மொழிமாற்றம் தந்தனர். அரசனும் நாரதர் உரைத்ததைக் கேட்டு "என் குமாரத்தியும் தான் விரும்பிய கணவனையே கடிமணம்புரிந்து வாழ்வாளாக' என ஆசீர்வதித்தார். பிறகு அரசனும், குடிபடையாவரும் புடைசூழ விவாஹ மஹோற்சவத்தை நிறைவேற்ற தியுமற்சேனரெனும் அரசன் வசிக்கும் பன்னகசாலையிற் சேர்ந்தனர். சாலவதேசத்தரசனாயிருந்தவரிடம் தம் குமரியின் விவாகநிர்ணயத்தைப்பற்றிப் பேசியபோழ்து அவ்வரசன் மிகுந்த ஆனந்தங்கொண்டு அவருக்கு வேண்டிய மரியாதைபுரிந்து ஆசனத்திருத்தி "மன்னவ! என் குமாரனுக்குக் கொடுப்பதைப்பற்றி எனக்கு சந்தோஷமே! ஆயின் ஒண்டொடிகரமும், முண்டகமுகமும், வண்டகர் குழலும், தண்டை சேர் அடியுங்கொண்ட உமது குமாரத்தி இங்கு தனது அந்தஸ்துக்குச் சரியின்றி மர ஆடைகளைத் தரித்து இங்கே கிடைக்கும் காய் கனிகளைப் புசித்து வாழ்தல் தகுதியோ? செல்வவான் வீடாயினும் அவளுக்கிஷ்டமான உணவையுண்டு களிப்பெய்தி வாழலாமன்றோ? எனவே அசுவபதி எனும் மன்னன்" ஐய! "ஆறிடுமேடு மடுவும் போலாஞ்" செல்வத்தையான் கருதுபவனல்லன். தூயகுணமும், பரிசுத்தமனமும், தெய்வவழிபாடு செய்பவனுக்கே கொடுத்தல் வேண்டுமென்பதென் கோரிக்கை, அதற்குத் தகுதியாயுள்ளவன் தம்புதல்வன் ஒன்றே. ஆதலால் என் மனோரதத்தை ஈடேற்றி வைக்கவேண்டுமென, அரசனும் இணங்கினன். சாவித்திரியைக் காண்பான் கருதி அரசன் பக்கலில் நின்ற சத்தியவானும் மிக்க களிப்பெய்தினன். உடனே அவ்விடமே விவாஹம் மிக்க விமரிசையாய் நடத்தப்பட்டு சாவித்திரியைக் கணவன் வீட்டில் விட்டுவிட்டு மத்திரதேயத் தாசனும் மற்ற பரிவாரங்களும் தம் நாடடைந்தார்கள்.

சாவித்திரி குடித்தன முறையில் தேர்ந்தவளானாள். கண்ணொளிமழுங்கிய தன்மாமனாருக்கு உபசரணைகளில் யாதும் குறைவின்றி நடத்தினள். தன் மாமியின் மனதின்பிரகாரம் அவள் மனம் கோணாமல் இன்புறநடந்து மெச்சும்படியான வாழ்க்கை செய்தாள். தன் கணவனுடன் உரையாடி, நகையாடி, இன்னடிசில்பரிமாறி கனிந்தமொழிகளால் களிப்புற நடந்து தன் கணவனின்மீதே கண்ணுங் கருத்துமாய்ப் போஷிப்பவளாயினாள். ஏழை எளியவர்களைக் கண்டால் அவர்களுக்குத் தாயாய் நின்று உதவுவாள். இவ்விதமான நற்குணங்களை மேற்பூண்டு கொண்டொழுகின நல்லொழுக்கமானது யாவரும் அவள்மீது மாறாத பிரீதியை விர்த்திசெய்தது. ஆயினும் இவ்வளவு குடித்தனவாழ்க்கையில் மேம்பட்டவளாயினும், தன் கணவனுக்கு நேரப்போகும் துர்க்கதியைப்பற்றி அடிக்கடி நினைவுவரும் போழ்தில் அவள் முகமண்டலமானது மலர்ந்த ரோஜா கூம்பினதுபோன்றிருக்கும். தன் கணவனுக்கிருப்பது கொஞ்சக்காலமென்றும், தன்னுயிர்த்தலைவன் சீக்கிரத்தில் தன்னைப்பிரிந்து உயிர் துறப்பானென்றும் எண்ணம் எழும்போதெல்லாம் முத்தனைய கண்ணீர் கர, கரவெனப் பளிங்குக் கண்ணாடி போன்ற தன் கன்னங்களின் வழியாய்த் தாரை, தாரையாய்க் கீழ்விழும். உடனே மனதைத் தேற்றித் திடப்படுத்தித் தனது காதலனது முகத்தை நோக்கி விசனம் துறப்பாள். உடனே தனது மாமியார் அழைப்பதாகத் தென்படின் சட்டென வெழுந்து போய்க் காரியாதிகளைச் செய்து அவர்கள் மனம் களிகூற நடப்பாள். தன் கணவன் வர சிறிது தாமதித்தால் தலைவாயலில் வந்து நோக்கிக் கணவனைக் காணவிடத்து "வாசவார் குழன்மினை மறுகுற முசலாடும் வகையுளமொக்குமே" என்றவாறு மணம் பொருந்திய நீண்ட கூந்தலையுடைய அப்பெண்மணி வெளி வருவதும் உட்புகுவதுமான ஊஞ்சலாடும் தன்மையை யொத்த அவள் மனமானது தத்தளிக்கும். தன் கணவன் சிறிது சுகவீனமாயிருந்தால் அதனிமித்தம் ஆயிரந்தெய்வங்களைக் கைகூப்பி வணங்கித்தொழுவாள். இவ்விதமாகக் கவலையினாற் தெய்வபக்தி மேற்பூண்டு நாட்களைக் கழித்தாள். இவ்வாறு அநேக நாட்கள் கழிய, அவன் விதிமுடிவதற்கு மூன்று நாட்களே மீதியிருந்தன. அப்போது சாவித்ரி பசிதாகமுதலியவற்றைத் துறந்து சித்தவைராக்கியத்தோடு கடவுளைப் பஜித்து வந்தாள். கடைசிநாள் மாலைநேரம் தன் அன்பன் காய்கனி சேர்த்து விறகொடித்து வரச்செல்ல ஆரம்பித்தான். உடனே சாவித்திரிக்கு உண்டான மனக்கிலேசம் இத்தன்மையனவென்று யாரால் உரைக்க முடியும். அவள் பத்மம் போன்ற வதனம் வாடிக்குறுகிற்று. கண்களில் முத்துப் போன்று ஜலம் துளிர்த்தது. உடனே தன் மாமன், மாமி எவ்வளவு மன்றாடி இருக்கும்படி உபசரித்தும், பிரார்த்தித்து மிகுந்த கஷ்டத்துடன் விடைபெற்று தன் கணவனைத் தொடர்பவளாயினாள்.

சத்தியவான் தன்மனைவி தன்னைத்தொடர்ந்து வருதலை நோக்கி சிறிது தடுத்தானாயினும் அவளது வேண்டுகோளுக்கிரங்கி அழைத்துச் செல்பவனாயினான். தன் நாயகிக்கு அக்கானகத்திலுள்ள விருட்சவர்க்கங்களின் அழகையும் தன்மையையும்பற்றிக் கூறுவான். புஷ்பச் செடிகளின் ரமணீயமான நேர்த்தியைக் கண்டு வர்ணிப்பான். பெருங்குன்றுகளினின்று "தப்பினேன் பிழைத்தேன்" என்றவாறு குதித்துப் பாறைகளில் மோதுண்டு சல, சலவென காகத்தினிறக்கையைப்போன்று ஓடிவரும் சுனைநீரைக் காண்பித்துக் களிகூறுவான். "குன்றிடைப்பிறந்த தென்றற்காற்று" மரங்களின்மீதுமோத அவை சல, சலவெனக் காற்றில் சப்தித்தலைக்கேட்டு 'நாயகன் நாயகி



களின் ஸரஸஸல்லாபங்க'ளென்பான். பெரிய நதியின் கரையோரங்களி லிராநின்ற, நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ முதலியவைகளை வருணனை செய்வான். இவ்விதமாக இவன் பட்சி இனங்களைப்பற்றியும், விருட்சவகைகளைப்பற்றியும், நீரின் குணங்களையும், அவற்றின் தன்மைகளையும் வர்ணித்துக் கொண்டு உற்சாகமாய்ச்செல்ல சாவித்திரியோ ஒன்றையுங் கவனித்திலள். அவள் மனத்தின்கண் தாங்கக்கூடாத துக்கம் குடிகொண்டது முகம் கூம்பினது. கண்கள் சோர்ந்தன. தேகம் தத்தளித்தது நடைகொடுக்கவில்லை, கண்களில் நீர் பெருகினது, கணவனின் வருணனைகளையும் அவனது புத்திகோசரத்தையும் கேட்கக்கேட்க துக்கம்பெருகிற்று. ஒன்றும் பேசாது மௌனமாய் அவனது முகத்தையும், காலடியையும் நோக்கியவண்ணமே நடந்தாள். இருவரும் ஓர் காட்டை யடைந்த பின்னர், சத்தியவான் கூடையில் காய்கனிகளை நிரப்பி விட்டு, மற்றோர்மரத்தின் கிளையை வெட்டு கையில் அவன் கட்டாரி கைதவறிக்கீழே விழ்ந்தது. அவன் கண்கள் இருண்டன, நடை தள்ளாடினது, உடனே தட்டுத்தடுமாறிக்கொண்டே "என்கண்ணே! காதலியே!! என்னால் பொறுக்கமுடியாத எரிச்சலும், தலைநோயும், உபாதியும், உண்டாகின்றனவே! சிறிது உட்காருகிறாயோ? உன்மடியின்மீது சிறிது கண்வளர்கின்றேன்" எனச் சொல்லி வெடவெடவென்று நடுங்கிக்கொண்டே தனது காதலியின் மடியின்மீது படுத்தான். உடனே இருகைகளாலும் சாவித்திரி தனது நாயகனை அரவணைத்துத் தலையைத் தொங்கவிட்டு "எனது ஐயனை யாது வருத்துகிறது?" என்றனள். சிறிதுநேரம் கழித்து சத்தியவான் கவிழ்ந்தபடியே பெண்ணே! என் உபத்திரவம் கொஞ்சமன்று நான் இனி பிழைக்கமாட்டேன். சீக்கிரம் விடைகொடுப்பாய் என் அன்பைக் கொள்ளைகொண்ட ஆருயிரே" எனச் சொல்லி வாய்மூடுமுன்னரே கண்கள் மேனோக்கி மூடின தேகம் ஜில்லிட்டுக் கால்கள் வாழைத் தண்டைப்போன்று குளிர்ந்தது. அப்போது சாவித்திரி யாதும் தோன்றாமல் கண்களை எறிட்டுப் பார்த்தாள்.

அப்போது கன்னங் கறேறென்று கருத்துப் பெருத்த உருவமும், தலையில் முடியும், கையில் பாசமும், கால்தண்டமும் கொண்ட ஓருருவம் அவள் கண்களுக்கெதிர்ப்பட்டது. அதனைக் கண்டதே சாவித்திரி "ஐய! நீவிர் யார்? என்ன வேலையாக இவ்விடம் வந்தீர்" எனவினவலுற்றாள். அதற்கு அவ்வுருவம் "பெண்ணே! யான்தான் இயமன் எனப்படுவோன். எனதுபேர் யமதர்மராஜன். உன் கணவனின் ஆயுள் இன்றையோடு முடிவுற்றமையால் கொண்டுசெல்லவும், அவன் மிக்க தூயனும் பரிசுத்த குணமுடையோனுமாதல் பற்றி அவனரிய உயிரைக் கொண்டுபோகயானே இவ்விடம் வரநேர்ந்தது." எனக்கூறித் தனது கோணலான தண்டத்தினுனியில் அவனுயிரைப்பற்றிக்கொண்டு செல்லப்புறப்பட்டான். சாவித்திரி கண்கலங்கி, கலக்க மேற்பூண்டு, அவனைப் பின்தொடர்பவளாயினாள். சிறிது தூரம் சென்று அந்த கன்பின்னோக்க சாவித்திரி நடக்கக் கால் நோகும்படியான கல்லும் முள்ளும் நிறைந்தகாட்டில் விரைந்து ஓடோடியும் வருவதையறிந்து நின்று "பெண்ணே! இஃதென்ன உன்பேதமை? நின் கணவனிருப்பிடத்துக்குச் சென்று அவனுக்குச் செய்யவேண்டிய சடங்குகளை முடிப்பிப்பாய். வீணில் உன் பாதம் கொப்பளிக்க ஏன் அலைகின்றாய்?" எனக் கூறலுற்றனன். அக்கால் சாவித்திரி தலையைத்தாழ்த்தி வணங்கி "என் ஐய! இஃதுமக்கடுக்குமோ? ஏழையேன் படுந்துயரம் காண்கிலையோ? கண்டும் கேட்டும் இரங்காதிருக்கின்றனையே? உன்மனம் இரும்பினுங் கடியதோ? என் உயிரையன்றோ பற்றிக்கொண்டு போகிறாய்? என் உயிரே செல்லுங்கால் யான் வருவதடாதோ? என் கணவனை மீட்கமாட்டாயா? இயமதர்மராஜனென பெரும்புகழ் படைத்தவன் நீ அல்லனோ? உன்னால் ஆகாத சாத்தியகாரியமுளதோ?" எனக் கண்ணுங் கண்ணீருமாய்க் கதறுவதைக் கேட்ட காலாந்தகன் அவள் வசனித்த மொழிகளால் மிக்க களிப்பெய்தி "அடி அணங்கே! விதிதனைமாற்ற, உன்னாலாமோ? மஹா திரிமூர்த்திகளும், தபஸ்விகளும், விதிவலியை வெல்லமுடியாது வருந்தா நிற்ப நீ இவ்வித மொழிகளை நவின்றது நன்றன்று. சீக்கிரம் ஏதாவது உனக்கிஷ்டமான ஓர் வரத்தைப்பெற்று சடுதியில் செல்மின் "என, உரைக்க, சாவித்திரி அப்படியாயின் நயன ஒளிகெட்ட என் மாமனாருக்கு கண் பார்வை தெரியவும் அருள் புரிவதோடு அவரது இராச்சியம் மறுபடி கிடைக்கச் செய்யவும்" எனவே, இயமன்

162035

'அவ்விதமே அருளினேன்; செல்வாய். யான் சீக்கிரம் செல்லவேண்டும்' எனச்செல்ல, சாவித்திரியும் பின்தொடர, காலன் திரும்பி நோக்கி "ஐயோ! இஃதென்னகோரம்! ஏ பெண்பாவாய்! நினக்கு வரமளித்துச் செல்லப்பணித்தும், ஏன் பின்தொடருகின்றாய்" எனக்கேட்க அம்மாதர் சிரோன்மணியும் "அப்பனே சரணம்! ஐயனே சரணம்!! "எனப்போற்றி. "என் கணவனுயிரையே கொண்டு போகும்போழ்து மற்றவையாவும் எனக்குத் தேவையில்லை" எனக்கூறினள். அதற்கு இயமன் "அடி பெண்பாவாய்! நீ அந்த ஒரு வரத்தைத் தவிர மற்றியாது கேட்பினும் யான் தடை சொல்லேன்" என அப்படியாயின் "எனது மாமனுக்கு இன்னும் நூறு புத்திரர்கள் பிறக்கக் கடவதாக" வென "அவ்விதமே அருளினேன்" எனக்கூறிக் காலன் வெகு விரைவாகச் செல்வு, சாவித்திரியும் துரிதத்துடன் தொடர்ந்தாள்.

சாவித்திரி தன்னோடு கூடவே விடாது வெகு தூரம்வரை தன்னைமறந்து வருதலை யுணர்ந்து "பெண்ணே! இனிவருதல் உனக்குத் தகுதியன்று. இத்தோடு போமின். எனக்கும் நேரமில்லை" என அப்பெண்மணியும் "என் கணவன் பிராணனை விட்டுவிடு உன்னை யான் தொந்தரவு செய்யவில்லை. நீ எவ்வளவோ உத்தம குணவானாயிற்றே. மற்ற எந்த தெய்வங்களைக் காட்டினும், உன்னை யல்லவோ மிகுதியும் போற்றுகின்றனர். உன் ஆரியகுணத்தை யல்லவோ புகழ்கின்றனர். இப்பேர்ப்பட்ட பெரும் புகழ்படைத்த பிரதாபனான நினக்கு இது ஒரு பொருட்டா? என் வேண்டுகோளை நிவர்த்திப்பது சிரமமா எனப் போற்றித் துதிக்கவே காலன் "அந்த மிகு சுந்தரியே உன் வார்த்தைகள் என்னை மெழுகாக்குகின்றன. ஆயினும் பெண்ணே! இதுதான் கடைசியான முறை ஒரே வரம் மாத்திரம் பெற்றுத் திரும்புக' எனக்கூற, அப்படியாயின் "எனக்கு நூறு புத்திரர்கள் உண்டாக ஆசிர்வதி" என, அப்படியே "தீர்க்க சுமங்கலியாய். நூறு புத்திரர் உற்பத்தியாகி சுகமாய் வாழ்க" என்றான். உடனே சாவித்திரி அவனைக் கொண்டாடிய வண்ணமே என் குலக்கொழுந்தே "மறுபடி எங்கு செல்கின்றாய் நூறுபுத்திரர்களை அருளிய நீ என கணவனுயிரைக் கொண்டுசெல்லலாமோ? என் கணவனின்றி யானெவ்வாறு புத்திரர்களைப் பெற்று ஜீவிப்பது" என, காலாந்தகன் தான் வாக்குக் கொடுத்துவிட்டதை நினைந்து அவள் கணவனின் உயிரை மீட்டும் திருப்பி அவனது இதயத்தில் விடுத்துச் சென்றனன். உடனே தன்கணவன் எழவும், அவனோடு நடந்த வர்த்தமானங்களையெல்லாம் கூறி தானும் தன் கணவனும் வீடுநோக்கித் திரும்பினார்கள்.

ஆசிரமத்தில் தியுமற்சேனவரசரும், மந்திரிமாரும் மற்றுமுள்ள பரிவாரங்களும், சூழ்ந்திருந்தனர். சாலவதேசத்தை ஆண்டிருந்த பகைவனும் தன் நாட்டை மறுபடி தியுமற்சேனருக்கு அளித்தனன். கண்ணொளி கிடைக்கப்பெற்று, நாட்டையுமடைந்து, தன் குமாரனின் வரவை எதிர்நோக்கியிருக்கும் அரசனின் பக்கலில் அம்மன்னனது மனைவியும் வீற்றிருந்தனள். சாவித்திரியும் சத்தியவானும் ஆசிரமத்துட்புக்கி. அவ்விடமிருந்த அரசனின் பாதத்திலும், இராணியின் பாதத்திலும் நமஸ்கரித்தனர். அரசன் நடந்த வர்த்தமானங்களை வினவ, சத்தியவானும் சாவித்திரியின் குணநிசயங்களைப் புகழ்ந்தனன். பின்பு எல்லோரும் மிக்க களிப்பெய்தி, நாட்டையடைந்து மிகுந்த கோலாகலத்துடன் ஜெபபேரிகை முழங்க, புத்திர பௌத்திராதிகளைப்பெற்று, சுகமாய் ஐம்பத்தாறு தேசத்திலும் மன்னுபுகழ்பெற வாழ்ந்து வந்தார்கள்.

இதுவரை இக்கதையைத் தொடர்ந்துவந்த சகோதரிகளே! நீவிர் உங்கள் கணவன்மாரோடு தமக்குவமை தாமாய்த்தனியிரு சுடர் போற்றோன்றத் தரணிமீதில் அன்பு மேற்பூண்டு "காதலிருவர் கருத்தொக்க ஆதரவுப் பட்டதே இன்பம்" என்ற நீதியை நினைத்து கணவனை தெய்வமாகவும், அவனது கணவனை தெய்வமாகவும், அவனது சொல்லையே வேதவாக்கியமாகவும் மேற்கொண்டு தெய்வ பக்தியிற்சிறந்து முக்தியடைந்து வாழ்வீர்களாக. சுபம்.

Rm 211, M82